



புரொபெஸர் ஸர் ஜெகதீச் சந்திர வஸு
**Prof. Sir Jagadis Chandra Bose**

# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." — திருவள்ளுவர்

தொகுதி X | பிங்களஞூ ஆனிமீ :: 1917-ஞூ ஜூலைமீ | பகுதி 1

## திரிசிரபுரத் தாயுமானவர் பதிகம்

### துதி

அங்கம் படியத் தரைவீழ்ந் தருமேனி
யெங்கும் புளக மெழுந்தேற — வங்கையுருஞ்
சேயாமெனக் கலங்கிச் சேர்ந்தகடை தேறுமே
தாயானவன் கமலத் தாள்.

### விருத்தம்

ஆற்றானை யன்பரிடை ராற்று வானை
யம்மானைக் கைப்பிடித்த வம்மான் றன்னைக்
கூற்றனுக் கோரரிய கூற்று னானைக்
கொதிசுடலை யாடுங் கூத்தன் றன்னை
நீற்றானை நிசிகடிந்த நீள்கு முட்கு
நெடுவுருவத் தரைத்து நின்றா னை
வேற்றானை யிரவுபக லேற்று மக்க
ளினியவுயி ரிரியுங்கா லென்செய் வாரே?

கலையானைக் கனலேந்துங் கையான் கன்னிக்
காவிரிசூழ் நன்னாட்டின் கத்தன் றன்னைச்
சிலையானன் சிலையடியாற் சிதறுண் டானைச்
சிறுபிறைசேர்க் கரையடையச் செருவா னைத்
தலையானைக் குழலவளை கலவா நின்று [திக்
கரியவளை யீன்றெடுத்த கரியோன் றன்னை
யலையாது திடமனத்தோ டேற்று மக்க
ளரியவுயி ரிரியுங்கா லென்செய் வாரே?

பெண்ணவளைச் சிரபுரத்திற் பேண்டு வானைப்
பேயாகித் தாயாகும் பெருமா னைத்திக்
கண்ணானை யெனக்கறிவுக் கண்ணா னானைக்
கருதரிய புகழேற்ற கன்னிப் பொன்னித்
தண்ணானைத் தண்பழுக்கு மலையா ளங்கத்
தாரானை யெனக்கமுதத் தருவான் றன்னை
யெண்ணாது வாணாளை யெண்ணு மாந்த
ரினியவுயி ரிரியுங்கா லென்செய் வாரே?

செய்யானை யுளமுருகச் செய்வான் றன்னைச்
சேராக்கத் தாயான சித்தன் பச்சை
மெய்யானை யென்னளவில் மெய்யா னானை
விரைகுழலி தனைமருவும் விமலன் செந்திக்
கையானை யடிக்கென்றுங் கையா தானைக்
காவிரிசூழ் கன்னகரைக் கவின்செய் வானை
ஐயானைத் தையனைகள் கேற்று மக்க
ளரியவுயி ரிரியுங்கா லென்செய் வாரே?

கங்காளன் வார்குழலி பங்காள் வானைக்
கரும்பகட்டுக் காலனுட்குங் கால னானை
மங்காத புகழானை மறையோன் மாலு
மணிமுடியு மலரடியுங் காணா வண்ணஞ்
செங்காய நீண்டவனைச் செங்கை கூப்பிச்
சிரந்தாழ்த்தி யுளமுருகப் புகழ்ந்து பாடி
யெங்கோனே யெனத்துதித்தங் கேற்று மக்க
ளினியவுயி ரிரியுங்கா லென்செய் வாரே?

நீரானை மறையினமர் நிரு னானை
நீண்டகுழற் பூண்டவுட னித்தன் றன்னைப்
போரானைத் தோலுரித்துப் போர்த்தா னன்ற
புகழ்பொன்னி வளநாட்டின் புனிதன் றன்னை
வாராரும் வசியமட வார்க்குத் தாயாய்
வந்துதவி தான்புரிந்த வண்ணல் வண்மைப்
பேரானை யிரவுபகற் பேணு மக்கள்
பிரியவுயிர் பிரியுங்கா லென்செய் வாரே?

புகழானை யயன்மாலும் புகழுங் கோனைப்
பொருமதனைப் பொடியாக்கும் புனிதன் றன்னை
யிகழானைத் தன்பதத்தி னேற்று நின்றே
யிகழ்வாரைப் படுகுழியி னிறக்கு வானை
முகிழாத மலர்முகத்துக் குழலைச் சேரு
முரத்தானைச் சிரகிரிவாழ் முதலைக் கண்டு
மகிழாது வாணாளைப் போக்கு மாந்தர்
மகிழுமுயிர் மரியுங்கா லென்செய் வாரே?

கல்லானை கழைதின்னக் கற்பித் தானைக்
கற்றாரு மற்றாருங் கருது வானை
யில்லானை யுள்ளானைத் தாயாய் நின்றே
யிலங்குவானைச் சிரபுரம்வா ழெந்தை தன்னை
நல்லானைப் பொல்லானை நடுவுள் ளானை
நறும்பொன்னி வளநகரி னாதன் றன்னை
வல்லானை முப்போதும் வாழ்த்தா மக்கள்
மகிழுமுயிர் மரியுங்கா லென்செய் வாரே?

விடையானைத் தடிநிகரவ் விடையா ணீண்ட
விரைகுழலி மருவுமெழில் விமலன் பூதப்
படையானை யெனக்கமுதம் படைப்பான் [illegible]
பாரந்திருக் காவிரிசூழ் பதிக்கே யென்[illegible]
முடையானை யெனைத்தொண்டா யுடையா[illegible]
யுகந்தரிய தாயாகி யுதவும் வெள்ளை
யுடையானை யிடையின்றி யேற்று மக்க
ளுரியவுயி ரிரியுங்கா லென்செய் வாரே?

162050

# விவேக போதினி

தொ. 10] பிங்கள௵ ஆனிமீ [ப. 1

## மனச்செம்மை

### EQUANIMITY OF MIND

உத்தம நெறியைக் கைக்கொண்டவர்க்கு உடலின்மேல் உறவு கிடையாது. அவர்க்கு அன்பின் பெருக்கும், அறிவின் முதிர்ச்சியும், அடங்கா ஒழுக்கமுமே ஆண்மைதரும். எவ்வுயிரும் அவர்க்கொன்றே. அவ்வாறே பீஷ்மரும் தமது தருமவழியைக் கைவிடாது, துரியோதனாதியர்க்கும் பாண்டவர்க்கும் யுத்தம் நடந்த காலத்து, ஒருவரிடத்துப் பாசம், மற்றவர்க்குக் கெடுதி எனச் செய்யாமலிருக்கும்படியே யுழைத்தார். அவர் யுத்தம் ஆரம்பித்ததும் சேனையை அணிவகுத்து, கர்ணனைப் பல காரணங்களை முன்னிட்டு, அர்த்தரதனைக் கணக்கிட்டார். இதனால் அவன், இவர் உயிரோடிருக்கும்வரை வில்லெடுத்துச் சண்டை செய்வதில்லை எனப் பிரதிக்ஞை செய்தான். அவர் மனம் சிறிதும் இதனால் குன்றியதில்லை. தானிருந்து சேனையில் செய்த பெரும் யுத்தச் சிறப்பினால் பாண்டவரது சேனை தலையெடுக்கவொட்டாமல் செய்துவந்தனர். இதைக்கண்ட ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா, தாம் சண்டையில் ஆயுத மெடுப்பதில்லையென்று செய்திருந்த சபதத்தையும் மறந்தாற்போல, பீஷ்மனுடன் யுத்தஞ்செய்துவந்த அர்ஜுனனிடம் கோபங்கொண்டு "இனி நாம் வீணே இருப்பின் அர்ஜுனனுடைய பலங்குறைந்துவிடும்; பீஷ்மரும் ஒரே நாளில் பாண்டவ ஸேனையை அழித்துவிடுவர்; பாண்டவ ஸஹாயன் என்னும் நமது பெயர்க்குக் கெடுதிவரும்; ஆகையால் நானே பீஷ்மனைக் கொல்வேன்" என் [illegible] ந்து,

[illegible]நெறி தர்ரென வீடும னிப்படி கா[illegible] மலைத்திடவும்,
மான நினைத்திலை; சாப மெடுத்திலை; வாளி தொடுத்திலை,
[illegible]னி முமச்சு?' [illegible] மாய முரைத்து. அவனோதி ரதத்திழியா,
'ஆனை தெனைக் கொல்லாக!' [illegible] ஆழி யெடுத்தனனே.

இவ்வாறு கண்ணபிரான் பீஷ்மரது பராக்ரமத்தை நினைந்து, தனது அழகிய திருக்கரங்களில் ஆயுதமெடுத்துவருவதைக் கண்ட பீஷ்மருக்குச் சிரிப்பு வந்துவிட்டது; அவர் கையிலிருந்த பாணங்கள் கீழ்வீழ்ந்தன; அவர்க்குந் தெரியாமல் அவர் முகத்தில் மந்தஹாஸம் பூத்ததுபோல, அவர் கைகளிரண்டும் தலைமேல் குவிந்து விளங்கின. மிக்க வணக்கத்துடன், "உம் மனமே என் மனமும்; ஆனது ஆகுக. ஆயினும்,

யான் நரகிற் புகுதாமல், எனக்கு உயர் வானுலகைத் தருவாய்,
நீநினை வுற்றது; போர பிறப்பில் என் நீடு தவப்பயனே,
யானும் இனிப்பிறவாமல் அளித்தருள், ஈச!" எனப்பரவா
ஞானமனத்தொடு, ஈகுழறப் பல நாடி புகழ்ந்தனனே.

இம்மொழிகளைக் கேட்ட கண்ணன் தனது செயலை யொழித்து ஸமாதான மடைந்தனன். கண்ணனையும் வெருட்டும்படியாக, அவர் துரியோதனிடங் கொண்ட அன்பினால் தனது க்ஷத்ரிய தருமத்தை நடத்தினர். ஆயினுஞ் சிலரது மொழிகளைக் கேட்டுத் துரியோதனன் தனது பாட்டனை முந்தி 'நீ பாண்டவரிடமே பக்ஷமுற்றிருக்கின்றனை. எமக்காகச் சரியாகச் சண்டையிடுவதில்லை' என்று சொல்லக்கேட்டதும், "அப்பா! பயப்படவேண்டாம். நான் உனக்கே எனதுயிரைக் கொடுப்பேன். நானிருக்கும் வரையும் உமக்கு அபஜயம் வாராமற் பார்க்கிறேன். ஆனால் தருமவிதிப்படிதான் நான் யுத்தஞ் செய்யமுடியும்" என்று சொல்லி அவனைத் தேற்றினர். ஒன்பதுநாள் சண்டை இதற்குள் நடந்திருந்தும், பாண்டவர் பக்ஷம் ஜயமென்பது தோற்றாமலே இருந்தது. அவர்க்குப் பீஷ்மரிருப்பது பெருந் தொல்லையாகப் பட்டது; அவரை யொழிக்கும் உபாயமும் தெரியவில்லை. என் செய்வார்கள்? கண்ணனது உத்தரவை முன்னிட்டு அவர் பீஷ்மரிடம் அடைந்து, அவரை நமஸ்கரித்து, அவரது ஆசீர்வாதத்தைப் பெற்றதும், தருமர் "தாதா! நான் தவறான வழியிற் செல்வேன் அல்லன். அது விஷயப் போக்குக்கு விரோதமா யிருக்கும்; ஆனால் ராஜதந்திரமே யாகும். உங்களிடமே எனக்குப் பூர்ண நம்பிக்கை. தாங்கள் உள்ளவரையும் எங்களுக்கு ஜயமென்பது கிடையாது. எங்கள் சேனையோ வரவரக் குறைந்து வருகிறது. எங்களது க்ஷேமத்திற்கும் ஜயத்திற்கும் தகுந்த உபாயஞ் சொல்லும்படி உம்மை அண்டினேன்?" என்று கேட்டார்.

3m211.N08VB



இதைக்கேட்ட பீஷ்மர் புன்சிரிப்புச் சிரித்தார். "குழந்தாய் அப்படிக் கேட்பதற்கே நான் காத்திருந்தேன். இன்றே என் சோற்றுக்கடனுக் கிறுதிக்காலம் வந்துவிட்டது. என்னை அழித்ததும் ஜயம் உமதே! யான் யுத்தத்தில் ஆயுதமற்றவனையும், ஆயுதமில்லாதவனையும், போரில் அங்கமொழிந்தவனையும், ஓடுபவனையும், ஸ்த்ரீகளையும், ஸ்த்ரீயின் உருவங்கொண்டவனையும், சரணமடைந்தவனையும், இவர் போன்றவரையும் கண்டால் அவரோடு போரிடுவதில்லை; அவரை எதிர்ப்பதுமில்லை. அபசகுனங்களானாலும் சண்டை செய்வதில்லை. இதுவே எனது விரதம். மேலும், துருபதராஜன் மகன், சிகண்டி, முன் பெண்ணாகி இருந்தவன். அவன் சண்டையிடவந்தால் அவனது முந்திய பெண்தன்மை ஞாபகத்திற்கு வருவதால், அவனோடுநான் யுத்தஞ்செய்ய மாட்டேன். அவனை முன்வைத்துக்கொண்டு அர்ஜுனன் என்னுடன் போர்செய்தால், என் கை வில்லெடுக்க எழாது. யான் அப்போது அடிபடுவேன். இதை நீ செய்வது யுக்தமானது. உண்மை உயிரினுஞ் சிறந்தது; உனக்கு அதை உரைத்தேன். யான் சொல்லிய விதமே செய்" என்று சொல்லித் தருமரை ஆசீர்வதித்தனர்.

தருமரும் வந்தனந் தந்து, தனது பாசறையை அடைந்தனர். அடுத்த தினம் சண்டையில், பீஷ்மர் தாம் துரியோதனனிடம் ஒப்புக்கொண்ட விதம் வெகு உக்ரமாகச் சண்டை செய்தனர். பாண்டவர் சேனை நிலைகுலைந்து வருவதைக் கண்டு, கண்ணன் தூண்ட, சிகண்டியைத் தேர் மேலேற்றி முன் வைத்து, அர்ஜுனன் தனது வில்லை வளைத்து பீஷ்மர் முன் தோன்றி, அவர் உடல் முழுதும் அம்புகள் சாளரஞ்செய்து, இரத்தத்தை வெளிக் கக்கும்படி பாணமழை பெய்தான். ஆனால் அவர் சிகண்டியி னுருவத்தைக் கண்டதும், உலக வாஞ்சையை யொழித்து, முதற்பொருளாகி முன்னே நின்ற ஸ்ரீ கிருஷ்ண பரந்தாமனது திவ்ய மங்கள குணங்களில் ஈடுபட்டு, மெய்ம்மறந்து, தம் கொடியிற் பொறித்த பனையின் தலையே தமது அம்புபொதிந்த உடலுக்கு, உவமமாகும்படி செயலொழிந்து குற்றுயிராய்க் கிடந்தார்.

இவ்வாறு பீஷ்மர் தமது தரும கரும நிலையை நாடி, தமது மரணத்தின் வழியையுஞ் சொல்லி, சோற்றுக்கடனுக்குடலையும், தரும வழிக்குத் தம்முயிரையுந் தந்து விளங்கும் நிலையி லிருப்பதைக்கண்டு, இருதிறத்தாரும் சண்டையொழித்து, அவரிடம் வந்து அவர்க்குச் சைத்யோபசாரம் செய்ய விரும்பினர். ஆனால் உத்தம வீரரானபடியால் அவர் அதை எல்லாம் வெறுத்தார். அதே ஸமயத்தில் ஆகாயத்தில் நிர்மலமானகாற்று வீச, மழைத்துளிகள் பனிநீர்போலச் சிந்தின. பீஷ்மருக்குத் தமது பூர்வநிலையின் பிரஞ்ஞை ஏற்படுந்தருவாய்கள் முன் நாடிக் கொண்டிருந்தன. அவர்க்குத் தமது தேஹத்தைப் பிரிந்துவிட எண்ண முண்டானது. அப்போது ஆகாயத்தில் "பீஷ்ம! பொறு பொறு! இது தக்ஷிணாயனமல்லவா?" என்ற சப்தம் உண்டாகியது. இதைக்கேட்டதும், பீஷ்மர் உத்தராயணம் வரும்வரைத் தமது தந்தை அன்பொடு தந்த வரமாகிய ஸ்வச்சந்த மரண சக்தியை ஆள விருப்பங்கொண்டு, அம்புப் படுக்கையில் படுக்க எண்ணங்கொண்டார். அவ்வாறு செய்வதே உத்தம வீரரின் முத்தி லக்ஷணம். ஆகவே தமது [illegible]பரன்களைத் தமக்கு அப்படுக்கையின் வாய்[illegible]த தலை தொங்காதிருக்கத் தலையணை ஒன்று ச[illegible]மைக்கும்படி வேண்டினர். அதைக் கேட்டவ[illegible]ர் பலரும் மெதுவாகவும் மிருதுவாகவுமுள்ள பல தலையணைகளைக் கொணர்ந்தனர். [illegible] அவற்றைக்கண்டு 'வீரன் படுக்கைக் கேற்றதன்றவையல்ல' என்றவர் சொல்லக்கேட்ட

அர்ஜுனன் தனது வில்லை வளைத்துப் பாணங்களைத் தொடுத்து, பீஷ்மரது தலையைத் தாங்கும்படியாகச் செய்தான். அதன்மேல் தலை கொண்டவர் படுத்ததும், தமக்குத் தாஹமெடுப்பதாகச் சொல்லித் தாஹசாந்திக்கு விரும்பினர். துரியோதனாதியர் கொண்டுவந்த தீர்த்தாதிகளைக்கண்டு மனக்கலக்கத்துடனிருந்தபோது, அர்ஜுனன் தன் கையின் வில்லை வளைத்து மந்த்ரங்களைப் பிரயோகித்துப் பர்ஜன்யாஸ்திரத்தை விடுத்தான். அது பூமியைக் கிழித்து உள்சென்றது. அவ்வழியாகப் பாதாள கங்கை எழும்பிக் குதித்துப் பரமவீரராகிய பீஷ்மரது வாய்க்குள் வளைந்து விழுந்தது. அதுவல்லவா வீரரது பானம்! இவ்வாறு செய்த விஜயனை அவர் பலவிதமும் கொண்டாடினார். பின் யாவரும் அவர் விரும்பிய விதம் யோகநிலையி லிருக்கவிட்டுத் தம திருப்பிடமடைந்தனர்.

இரவு தோன்றியதும், கர்ணன் அவரிடம் வந்து கண்களில் நீர்பெருக நின்றான்; நமஸ்கரித்தான்; அவரது ஆசீர்வாதத்தைப் பெற்றான். அவனைக்கண்டதும் அவர் ஆலிங்கனஞ் செய்து "நீ மஹாவீரன். உன்னையான் கண்டித்த தெல்லாந் திருத்துவதற்கே. நீ ஸூதன் மகனல்ல; ஸூர்யன் மகன்; குந்தியின் முதற் குமாரன். உன் கெட்ட குணங்களை ஒழிக்கவே உன்னைப் பலமுறையும் ஏசினேன்; உன் பராக்ரமத்தையுங் குறைச்சலாகச் சொன்னேன். தர்மவிரோத வழியால் நீ பிறப்படைந்ததால் உனக்குக் கெட்ட சேர்க்கையே ஏற்பட்டது. நீ ஸ்ரீகிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் ஸஹோதரன். இந்நாடு முழுதும் உனதே. சண்டையை நிறுத்தி, ஸமாதானஞ்செய்து பிழைப்பதே உனக்கழகு" என்று சொன்னார். இதைக் கேட்டதும் "பெரியோய்! நீங்கள் சொன்னது எல்லாம் முன்னமேயே எனக்குத் தெரியும். பாண்டவர்க்கே ஜயமென்பதும் எனக்குத் தெரியும். தாங்கள் செஞ்சோற்றுக் கடன் ஒழித்தது போல யானும் ஒழிப்பேன். அதுவே எனது கடமை; க்ஷத்ரிய தருமம். யான் பலமுறை உம்மைத் தாழ்வாகப் பேசிய துண்டு. அவ்வாறு செய்தது உறவற்றவனைக் காத்த சோற்றின் கூலியே. ஆகையால் என்னை மன்னிக்கும்படி வேண்டுகிறேன்" என்று சொல்லி அவரது அனுமதிக்காக வணங்கி நின்றான். அவரும் தமது ஸம்மதத்தைக் காண்பித்தனர். உடனே அவன்;

"மறமும் வாகு வலியும், வல்வில் முதல்எப்
படையின்; திறமும், தேசும், வாழ்வும். சீரும்,
கேள்விச்செலவும்; நிறமும், உண்மையறிவும், நெறி
யும் புகழும், திகழ்போர்; அறமும் பொன்றும்,
உன்னோடையா! அந்தோ! அந்தோ!"

என்று சொல்லிக்கொண்டே மீண்டான். பீஷ்மரும் சராசயத்தில் யோகநிலையிலிருந்து ஸூர்ய பகவானை ஆராதித்து வந்தனர்; விரிஞ்சி நாராயண சங்கர ரூபமாகவே ஆராதித்தனர். இவற்றையெல்லாம் உணர்ந்த கங்காதேவி தன் மகனிடத் தன்பின் பெருக்கால், பெருமுனிவரை ஸத்ஸங்கமாகவிளங்க அவரிடமனுப்பினாள். உத்தராயணத்தின் வரவை ஆவலுடன் பீஷ்மர் எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தனர்.

நிற்க. கௌரவர்கள் பூண்டோடழிய, யுத்தமொழிய, தருமாதி பாண்டவர் தமது பாட்டனிடம் வந்து, உறவினர் ஒழிந்ததால் ஏற்பட்ட துயரத்தை எண்ணி எண்ணி உள்ளம் புண்ணானார். நல்பட்டமடைந்தும், கஷ்டமழியாத தருமர், ஒருநாள் ஸ்ரீகிருஷ்ணர் தமது படுக்கையில் யோக நிலையிலிருப்பதைக் கண்டு அதிசயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். இது அவர்க்கோர் அதிசயமாகத் தோன்றியது. மூல முதற்பொருளாகி விளங்கும் பொருள், மூச்சை ஒடுக்கி, மும்மல நீக்க முனிவர் செய்யும் சடங்கில் கிடப்பதேனோ என அச்சமுற்று ஒருபக்கமாக நின்று கொண்டிருந்தனர். அவர் கண்ணைத் திறந்ததும், மிக்க விநயத்துடன் 'தேவரீர் திருவுள்ள மெதனால் இந்த யோகம்?' எனக் கேட்டார். "இப்போ தென்மனம் பீஷ்மரிட மிருந்தது. தனது நிர்வாண நிலையை யுத்தேசித்தவர், உத்தராயணத்திற்காகக் காத்தவண்ணமாகவே, என்னை இடைவிடாது நினைத்தவண்ணமாக இருக்கிறார். உள்ளக் கலப்பால் அவர் யோகநிலையில் எனக்கும் யோகம் நிலக்கின்றது. அதுதான்" என்றார். இதைக்கேட்டதும் "ஹா! அவரையொழிக்கவும் பாபியாக இருந்தேனே!" என்று தரும நந்தனர் உள்ள மழிந்தனர். அதைக் கண்ட பரந்தாமன், தருமரது பித்த குணத்தை ஒழிக்க அவரைப் பீஷ்மரிடம்



அழைத்துப் போயினர். அங்கு, அவர் பலவித தருமங்களையும், உண்மைப் பொருள்களையும், குஹ்யார்த்தங்களையும், அனுபவ வழிகளையும், அவற்றிற்கெல்லா மாதாரமாகிய கண்ணபிரானது பெருமையையும் எடுத்து விவரித்தனர். அப்போதுதான் அவர் உலகின் உதவிக்காக விஷ்ணு ஸஹஸ்ரநாமமும் சிவஸஹஸ்ரநாமமும் வெளியிட்டனர். இவ்வாறு ஸத்ஸங்கக் கூட்டத்திடை தரும விசாரஞ் செய்து கொண்டிருக்கும்போது உத்தராயண வீதியில் ஸூர்ய னெழும்பினான். அதே ஸமயம் மற்றொரு ஜோதியும் ஆகாய வழியாகச்சென்றது. அப்புதுமையைக் காண யாவரும் நிமிர்ந்து விளங்கினர். அது மெல்ல மெல்ல எழும்பி ஸூர்ய பிம்பத்திடை யூடுருவும்படியாகச் சென்றது. யாவரும் மதிமயங்கி விளங்கிய போதே, பீஷ்மரது பிரமரந்திரத்தின் வழியாகப் பிராணன் மேலாதாரத்தை நாடிச் செல்வதைக் காணாது, மேற்சென்றதும், அது அந்தரத்தில் ஜோதிபோற் கிளம்பி ஸூர்ய பிம்பத்தில் மறைவதை மாத்திரம் அவர் கண்டனர். குனிந்து பார்த்ததும் என்ன அதிசயம்! ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா வெகு சாந்த மனத்துடன் வீராஸனத் தமைந்து, யோகத்தில் பதிந்து கிடந்தனர். பீஷ்மரது சரீரம் அப்பொழு தங்கிருந்ததாக எவரும் காணவில்லை. நெடுநேரமானதும் கண்ணபிரான் கண்ணை விழித்தனர். அப்போதெல்லார் மனமும் சொல்ல முடியாத்திகைப்பில் குளித்திருந்தது.

இப்போதும், பீஷ்மரை எண்ணுபவர் மனமும் அப்படியே திகைக்கும்! அவரைப்போல் விரதங்கொண்டு விளங்குதல், எல்லார்க்கு மேலானது. ஆயினும் அவர் தோன்றிய மண்ணிலே பிறந்தவர்க்கு அம்மண்ணின் ஸாரமொழியாதாகையால் அவர் வாழ்க்கையைப் பின்பற்றுதற்குப் பின்னிடார் எவருமென்பது திண்ணம்! அதுவே உண்மை மொழி! ஓம் தத்ஸத்.

---

பூவாகிப் புல்லாகிப் பொறித்தீயாகிப்
புகழரிய காலாகி மேலு மாகி
மாவாகிப் புழுவாகி மரமே யாகி
மலிசடமா யல்லதுமாய் வெளியா யுள்ளாய்க்
கோவாகிப் பேயாகித் தாயுமாகிக்
குழலேந்தி யழலேந்துங் குழகனாகித்
தேவாகித் தேவர்கடந் தேவே யாகித்
திரிசிரயா வரைமீது திகழுந்தேவே!

# ரஜபுத்திரப் பெருமை

## THE HEROISM OF RAJPUTS

நமது பாரத பூமியில் பஞ்சாப் தேசத்துக்குத் தெற்கே, பம்பாய் ராஜதானிக்கும் மகாராஷ்டிர தேசங்களுக்கும் வடக்கே ராஜஸ்தானம் என்னும் தேசம் இருக்கிறது. நமது புராண இதிகாசங்களுள் கூறப்பட்டுள்ள ஸூர்ய சந்திர வம்சங்களின் சந்ததியாரென்று கருதப்படுகின்ற அநேக ராஜ குடும்பங்கள் இத்தேசத்தில் பல நாடுகளிலும் அரசாங்கங்களை ஸ்தாபித்துக்கொண்டன. இந்த ரஜபுத்திர குடும்பங்களிலே ஆணும் பெண்ணும் அவ்வப்பொழுது காட்டியுள்ள சமர்த்தையும் சௌர்யத்தையும் நினைக்குங்கால் நமக்கு ரோமம் சிலிர்க்கின்றது; அந்நிய நாட்டினரும் கேட்டவுடனே அப்படியே பிரமித்துவிடுகின்றனர். இச்சரித்திரங்களை ஒவ்வொன்றாக எடுத்துரைக்கக் கருதி, எல்லாவற்றுக்கும் முன்னால், **பத்மினி** என்னும் மாதரசியின் சரித்திரத்தை எழுதத் துணிவோம். இப்பத்மினியின் சரித்திரம் எத்தனையோ தரம் எழுதப்பட்டதேயாயினும், தின்னத்தின்னத் தெவிட்டாத தேவாமிருதம் போன்று, எத்தனை தரம் எழுதினாலும், எத்தனை தரம் படித்தாலும், எழுதுபவர்க்கும் படிப்பவர்க்கும் என்றுமடங்கா இன்பக்கிளர்ச்சியைக் கொடுத்துக் குதூகலப்படுத்துகின்றதாகையால், அதனையே இங்கு முதலாவதாக எடுத்து எழுதினதுபற்றி எவரும் குறைகூறத் துணியார் என்பது திண்ணம்.

இந்த ரஜபுத்திர நாடுகளிலே தலைமை வாய்ந்தது மீவார் என்னும் ராஜ்யம். இந்த ராஜ்யத்தின் பிரதான நகரம் சித்தூர். இந்த நகரமானது ஒரு சமபூமியின் நடுவிலே ஒரு தனித்த பாறையின்மீது இருக்கின்றது. இடிந்து விழுந்து இப்பொழுது பாழாய்க்கிடக்கும் க்ஷேத்திரங்களாலும் அரண்மனைகளாலும் நிறைந்த அந்தத் தனித்த குன்று, சமவெளியினூடே செல்லும் ஒரு பெரிய யுத்தக் கப்பலைப்போலத் தோன்றுகிறது. இந்நகரத்தை ரட்சித்து வரும் நகர தேவதையாகிய மகா சக்தி (காளி) அக்குன்றின்மேல் வசித்துவந்தாளென்றும், அந்நகரத்தை எதிரிகளிட

மிருந்து ரட்சிப்பது அவளுடைய பாரமென்றும் அவ்வூர் வாசிகள் மனப்பூர்வமாக நம்பியிருந்தார்கள். ஆனால், மகம்மதியர்களால் மூன்று தரம் கவரப்பட்டு, மகா சக்தியினாலும் மீவார் நாட்டு ராஜ்வம்சத்தினராலும் கைவிடப்பட்டு இப்பொழுது அந்நகரத்தின் சாயை மாத்திரந்தான் விளங்குகிறது.

கோவிலும் அரண்மனையும் கோட்டையும் மண்டபங்களும் இன்னும் அப்படியே இருக்கின்றன. மாளவதேசத்து மகம்மதிய அரசனைத் தோற்கடித்ததின் ஞாபகார்த்தம் ராணு கும்போ என்னும் அரசனால் கட்டப்பட்டுள்ள ஜயஸ்தம்பமும், பலவித சித்திர வேலைப்பாடுகளுடன் இன்னும் அப்படியே பிரகாசிக்கின்றது. ஆனால், அவை எல்லாம் இப்போது கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. யுத்தக் குதிரைகளினுடைய குளம்படிகளின் சப்தம் இப்பொழுது அத்தெருக்களில் கேட்கப்படுகிறதில்லை; விநோதமான உத்தியானவனங்கள் இருந்த இடங்களெல்லாம் இப்பொழுது காடுகளாய்ப் புதர்கள் நிறைந்திருக்கின்றன. இந்நகரத்தின் ஆதிகாலத்துப் பெருமைகளெல்லாம் இப்பொழுது கதைகளாகவும் பாரம்பர்யப் பேச்சாகவுமே யிருக்கின்றன. இந்நகரத்தைப் பாழ்படுத்தியவர்கள் எப்பொழுதும் புகழுக்குட்படாதவர்களாகவே யிருக்கின்றார்கள்.

கி. பி. பதின்மூன்றாவது நூற்றாண்டின் கடைசியிலே, அந்த மீவார் தேசமானது ராணு லட்சுமண ஸிங் என்பவனுடைய ஆளுகைக்குட்பட்டது. லட்சுமண ஸிங் வயதில் மிகச் சிறியவனாயிருந்தபடியால், அவனுடைய சிற்றப்பன், மகாதீரன், அதி பராக்கிரமசாலி, பீமஸிங் என்போன் ராஜ்யபாரத்தை வகித்து வந்தான். பீமஸிங்கினுடைய சாமர்த்தியத்திற்கிசைந்தாற்போல, வனப்பெலாம் திரண்டு வடிவெடுத்து வந்ததோவென்று எல்லோரும் பிரமிக்கும்படி, அவ்வளவு அழகுவாய்ந்த பத்மினியென்னும் பெயருடைய ஒரு பாவையை அவன் மணம் புரிந்திருந்தான். இப்பெண் லங்கா நாட்டினள். "பார்யா ரூபவதீ சத்ரு:" என்னும் ஆன்றோர் வாக்கியமானது பீமஸிங் விஷயத்தில் உண்மையிலும் உண்மையாக விளங்கிவிட்டது. இந்தப் பெண் இவ்வளவு அழகு வாய்ந்திராமற் போனால், மீவார் தேசம் இப்பொழுது இவ்வளவு பாழடைந்திராது. அவளும் அவளுடைய புருஷனும் ஏகோபித்து நடத்தவேண்டிய இல்வாழ்க்கையின் இன்பத்திலும் அடிக்கடி துன்பமுண்டாவதற்கு அவளுடைய அழகே காரணமாயிருந்தது. பாரதவருஷம் முழுதிலும் பத்மினியைப்பற்றி வர்ணிக்காதார் இல்லை. பத்மனியைப்பற்றிய வர்ணனைகள் டில்லியில் அரசுபுரிந்துவந்த பாதுஷா அல்லாவுடீனுக்கும் எட்டின.

ஏற்கனவே அல்லாவுடீன் பெண் பித்துப் பிடித்தவன். இப்பொழுது பத்மனியைப்பற்றிக் கேள்விப்படவே, எப்படியாயினும் பத்மினியைத் தான் அடையவேண்டுமென்று அவன் தீர்மானித்துக் கொண்டான்; உடனே தனது சைந்நியங்களை யெல்லாம் சேர்த்துக்கொண்டு, காடுகள், வனாந்திரங்கள், மலைகள் எல்லாம் கடந்து மீவார் தேசத்தையடைந்து, சிற்றூர் நகரை முற்றுகையிட்டான். இது மாத்திரம் அன்று; பத்மினியைத் தன்வசம் ஒப்புவித்துவிடவேண்டுமென்றும், இல்லையேல், கோட்டையைத் தகர்த்துக் கொடுமைகள் பல செய்யும்படி நேரிடுமென்றும், பீம ஸிங்குக்குச் சொல்லியனுப்பினான். இந்த பொட்டை யுருட்டுக்குப் பீம ஸிங் பயப்படப்பட்டவனா? ரஜபுத்திரர்கள் அல்லாவுடீனுடைய ஆர்ப்பாட்டத்தை லட்சியமே செய்யவில்லை. தனித்த பாறையின்மீது கட்டப்பட்டிருந்த சிற்றூர்க் கோட்டையானது பீரங்கிக் குண்டுகளினாலும் தகர்க்க முடியாதபடி மிகவும் பலமான மதில்களினால் சூழப்பட்டிருந்ததினால், அல்லாவுடீனுடைய ஜபம் பலிக்கவில்லை. ஆதலால் அவனும் தனது வீரம் குன்றித் தனது அட்டகாசத்தைச் சிறிது மட்டுப்படுத்தினான்.

யுத்த முயற்சியினால் காரியம் பலிக்காது என்று கண்டுகொண்ட அல்லாவுடீன், இன்னது செய்வதென்று அறியாது வெகு நேரம் வரையில் திகைத்திருந்து, பின்பு ஒரு விதமாக மனத்தைத் தேற்றிக்கொண்டு, பீமஸிங்குக்கு மிகப் பிரியமாயுள்ள ஸ்திரீ ரத்தினத்தை அபகரித்துக்கொள்ளவேண்டுமென்ற விருப்பம் தனக்குச் சிறிதும் இல்லையென்றும், இவ்விந்தியா தேசத்திலேயே இத்தகைய அழகுவாய்ந்த ஸ்திரீ இல்லவேயில்லையென்று எல்லோரும் சொல்லிக்கொள்வது உண்மை



தானாவென்று தானே பார்த்து அறிந்துகொள்ள விரும்புகிறதாகவும், அப்படி அவளைத் தான் நேரில் பார்ப்பதற்குப் பீமஸிங் சம்மதிக்காவிடில், தான் வெகு தூரத்திலிருந்து அவளுடைய அழகுருவத்தைக் காண ஆசைமிகுந்து வந்துள்ளானாதலால், கண்ணாடியின் மூலமாக அவளுடைய பிரதிபிம்பத்தையேனும், தனக்குக் காண்பிக்கவேண்டுமென்றும், பீமஸிங்கினிடத்தில் அல்லாவுடீன் மிகவும் நயந்து கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்; பீமஸிங்கு இதற்கு இசைந்தால் இனிமேல் எப்பொழுதும் மீவார் ராஜ்ஜியத்தின்மீது படையெடுத்துத் தொந்திரவு கொடுப்பதில்லையென்றும் உறுதிமொழி கொடுத்தான் அல்லாவுடீன்.

தன்னைப்போலவே அல்லாவுடீனும் கௌரவ குணங்களுடையவனென்று பீமஸிங் நம்பி, அல்லாவுடீன் கோட்டைக்குள் வந்து பத்மினியின் சாயையைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று அநுமதியளித்தான். அல்லாவுடீன் சந்தோஷத்துடனே கோட்டைக்குள் நுழைந்து பீமஸிங்கினுடைய அரண்மனைக்குட் சென்று அங்கு ஒரு நிலைக்கண்ணாடியைப் பார்த்தான்; கண்டான் பத்மினியின் பிரதிபிம்பத்தை; அப்படியே அதனிடத்தில் லயித்து நின்றுவிட்டான். அவனுடைய கண்கள் பித்துப் பிடித்தவனுடையவைபோல வெருண்டன; அவனது மனம் காம விகாரத்தால் கலக்கமுறவே, முகமும் வெளுத்து விகாரமடைந்தது. ஆயினும், அல்லாவுடீன் தனது உள்ள நெகிழ்ச்சியை வெளியில் காட்டிக்கொள்ளாமல் பீமஸிங்குக்கு அநேக உபசார வார்த்தைகள் புகன்றுவிட்டுப் புறப்பட்டான் கோட்டைக்கு வெளியில் தனது சைந்யங்கள் இறங்கியிருக்கும் இடம் நோக்கி. பீமஸிங்கும் பெருந்தன்மையுடன் அல்லாவுடீன் இறங்கியிருக்கும் இடம் வரையில் அவனுடன் பேசிக்கொண்டே சென்றான்.

ஒரு பெரிய ஏரிக்கரையில் கட்டப்பட்டிருந்த தனது அரண்மனையில் பதிவிரதா சிரோன்மணியாகிய பத்மினி தனது புருஷனது வரவை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தாள். வெகு நேரமாய்விட்டது; அவன் வரவேயில்லை. கடைசியாக தூதர்கள் மிகவும் விசனகரமான சங்கதியொன்றை அவளிடத்தில் சென்று உரைத்தார்கள். குன்றின் அடிவாரத்தில் ஆயுதபாணிகளாய்ச் சிலரை ஒளிந்திருக்கும்படி அல்லாவுடீன் ஏற்பாடு செய்திருந்தான். பீமஸிங் அல்லாவுடீனை வழியனுப்பிவிட்டுத் திரும்பியவுடன் அங்கு ஒளிந்திருந்தவர், அவன்மீது பாய்ந்து, அவனைப் பிடித்து, அல்லாவுடீன் இருந்த இடத்துக்குக் கொண்டு சென்றார்கள். பத்மினியைத் தன் வசத்தி லொப்புவித்தாலொழிய, பீமஸிங்கைச் சிற்றூருக்கு விடுவதில்லையென்று அல்லாவுடீன் பிரதிஞ்ஞை பண்ணிக்கொண்டான்.

உடனே மீவார் தேசத்திலுள்ள பிரபுக்களும் ஜனத் தலைவர்களும் ஒரு பெரிய சபை கூடி, பீமஸிங்கைப்போன்ற பராக்கிரமசாலியான அரசனை மீவார் தேசம் இழந்திருத்தல் தகாதென்றும், அதிபால்யனாகிய ராணு லட்சுமணஸிங்கினால் தேசத்தை அந்நியர் படைகளினின்றும் ரட்சிக்க முடியாதென்றும், ஆதலால், பாதகனாகிய அல்லாவுடீன் வசம் பத்மினியை ஒப்புவித்தாவது பீமஸிங்கை மீட்டுக்கொண்டு வரவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். பத்மினியும் இவர்களுடைய தீர்மானத்துக்கு இசைந்தாள்.

சிற்றூர்க் கோட்டையின் வாசல் கதவுகள் திறக்கப்பட்டன. கோட்டையினுள்ளிருந்து வாடிய முகங்களுடன் துக்காக்கிராந்தர்களாய் ஒரு ரஜபுத்திரப் பெருங்கூட்டம் அல்லாவுடீன் இறங்கியிருக்கும் இடத்துக்குப் புறப்பட்டது. பத்மினியின் மாமனாகிய கோரஸிங், அவனுடைய மருமகன் பதுல்ஸிங் என்னும் பெயருடைய பன்னிரண்டு வயதுப் பாலகன், இவ்விருவருடைய தலைமையின்கீழ் மீவார் தேசத்துச் சில பிரபுக்களால் சூழப்பெற்று இருபக்கங்களிலும் திரைகளினால் மூடப்பெற்ற மூடு பல்லக்குகள் எழுநூறு சென்றன. அல்லாவுடீனுடைய கூடாரத்துக்குள் மேற்படி பல்லக்குகள் கொண்டுபோய் வைக்கப்பட்டவுடன், கோரஸிங் என்பவன், அல்லாவுடீன் வசமாவதற்கு முன் பத்மினி தனது புருஷனிடத்தில் சென்று விடை பெற்றுவருதற்கு அவளுக்கு அரைமணி நேரம் சாவகாசம் கொடுக்கவேண்டுமென்று அல்லாவுடீனைக் கேட்டுக்கொண்டான். அல்லாவுடீன் தனது இச்சை நிறைவேறிவிட்டதாகக்

சுருதி, ஆநந்த குதூகலத்துடன் "அப்படியே" என்று ஆஞ்ஞை செய்தான். உடனே சில சேவகர்கள் சென்று பீமஸிங்கைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அவனும் பத்மினியுடன் பேசுவதற்கென்று பத்மினி ஏறிவந்த பல்லக்குக்குள் சென்றதும், மகா பலிஷ்டர்களாயுள்ள ஆறு பெயர்கள் அப்பல்லக்கைத் தூக்கிக்கொண்டு சென்றார்கள்.

இதைப்பார்த்த அல்லாவுடீன் கோபதீபிதனாய்ப் பற்களை நறநறவென்று கடித்துப் பரிகாசமும் கோபமும் கூடியதோர் சிரிப்புச் சிரித்து "ஆ! மூடா! நீ இவ்வளவு சுலபமாகத் தப்பித்துக் கொண்டுவிடலாமென்று நினைத்தாயோ? நல்லது, நல்லது, இப்பொழுது இருவரையும் சிற்றூருக்கு விடுவதில்லை" யென்று தனக்குள் தானே முறுமுறுத்துக்கொண்டு தனது வேலையாட்களையேவி, அப்பல்லக்கைத் தடுக்கச்சொன்னான்.

ஆனால், இப்படியவன் சொன்னவுடன் மற்றப் பல்லக்குக்களின் மூடுதிரைகள் தூக்கப்பட்டன; அப்பல்லக்குகளுக்குள் இருந்தவர்கள் லங்காதேசத்து ராஜகுமாரியும் அவளுடைய சகிகளும் பணிப் பெண்களுமல்ல; மீவார்தேசத்துப் பொறுக்கியெடுத்த வீரர்களில் எழுநூறு அசகாய சூரர்களே. இவர்கள் திடீரென்று கிளம்பினார்கள்; அப்பொழுது ஒவ்வொரு பல்லக்கையும் சுமந்து சென்ற ஆறுபெயர்களும், தங்களுடைய வேஷத்தை விட்டுத் தங்களுடைய சௌர்யத்தை வெளிப்படுத்துவதற்காக, அக்கூட்டத்தில் சேர்ந்து கொண்டார்கள். மகம்மதியர்கள் பீமஸிங்குக்குச் செய்த அவமானத்தையும் படுமோசத்தையும் ரஜபுத்திரர்கள் மனத்திலுன்னிப்பழிக்குப் பழி வாங்கும்பொருட்டு ஒரேயடியாக மகம்மதியர்களின்மீது பாய்ந்தார்கள்.

ரஜபுத்திரர்கள் வெகு தைர்யத்துடனும் அதி கோரமாகவும் யுத்தம் செய்தபோதிலும், அல்லாவுடீனுடைய படைகளைச் சின்னபின்னப்படுத்தியும், அவன் இருக்குமிடத்தை நெருங்கிச் சென்று அவனைக் கொல்வதற்கு முடியவில்லை. ஒருவர்பின் ஒருவராக ரஜபுத்திரர்கள் யுத்தகளத்தில் வீழ்ந்தார்கள். அவர்களுடைய எதிரிகளும் அவர்களைச் சுற்றிலும் எண்ணற்று வீழ்ந்து கிடந்தார்கள். இதற்குள் பீமஸிங் தனது பல்லக்கினின்றும் உத்தம லட்சணங்கள் அமைந்த ஒரு குதிரையின் மீது தாவிச் சிற்றூர் நோக்கிச்சென்றான்.

மகம்மதியர்கள் பீமஸிங்கைப்பிடித்துக் கைதி செய்துவிடவேண்டுமென்று எவ்வளவோ பாடுபட்டும், பயனில்லாது போயிற்று. இன்னும்சில வருஷங்கட்கு மீவார் தேசத்தை அந்நியர்களினுடைய அக்கிரமங்களினின்றும் ரட்சிக்கும் பொருட்டு உயிர்தப்பினான் பீமஸிங். ஆனால் மீவார் தேசத்துப் பராக்கிரமசாலிகளிற் பலரும் யுத்தத்தில் வீழ்ந்து மரித்தனர். அங்ஙனம் மரித்தவர்களுள் அல்லாவுடீனை மோசம் பண்ணுவதற்குத் தந்திரம் செய்த கோரஸிங் என்பவனும் ஒருவனே. சிற்றூர் நகரத்தில் மரித்தவர்களின் விதவைகளுக்காக அக்கினி குண்டங்கள் வளர்க்கப்பட்டன. கோரஸிங்கினுடைய மனைவி அக்கினிப் பிரவேசம் செய்வதற்குத் தயாராய்விட்டாள்; அக்கினி குண்டத்தைச் சுற்றிப் பிரதட்சிணம் செய்தாள்; கிழக்கு நோக்கி வந்து நின்றாள் அக்கினி முகமாக. அவள் தனது புருஷனுடைய ஸ்வரூபத்தை மனத்தில் தியானித்து அக்கினியில் பாயப்போகும் சமயத்தில் தனது புருஷனுடன் யுத்தத்துக்குச் சென்றிருந்த மருமகனாகிய பதுல்ஸிங் அவளது கண்களில் தென்பட்டான். உடனே சிறிது தயங்கி நின்றாள்; பார்த்தாள் பதுல்ஸிங்கை. "ஆ, எனது அருமை மருமகனே! எனது நாதன், எனது ஆத்மேசன், எனது அன்பன், பகைவர்களையெல்லாம் நடுங்கச் செய்யும் பராக்கிரமசாலி, மீவார் தேசத்துக்குப் புதிய உயிரளித்த புண்ணியசீலன், பகைவர்களுடன் யுத்தம் செய்த விதமென்ன? எனது அந்திய காலத்தில், யான் அக்கினிப் பிரவேசம் செய்து அவருடன் ஒன்று சேருமுன் அவருடைய புஜபல பராக்கிரமாதிசயங்களைக் கேட்க விரும்புகிறேன்" என்றாள்.

"என் தாயே! யுத்தகளமாகிய வயலில் சத்துருக்களின் தலைகளாகிய கதிர்களையெல்லாம் அறுத்தவர் அவரே. மரித்த சத்துருக்களாலாய ரத்தின கம்பளத்தின்மீது பகை அரசனைத் தலையணையாக்கொண்டு, சுற்றிலும் ஆயிரக்கணக்கான எதிரிகளாகிய நற்குலம் பூத்த வீர மலர்கள் சிந்தி வீழ்ந்துகிடக்க, அவர்களின் மத்தியில் நமது ராஜ சிங்கமானது



படுத்துக்கொண்டது" என்று பதில் மொழி கூறினான் பதுல்.

இங்ஙனம் பதிலுரைத்த பாலகனும் அந்த யுத்தத்தில் அநேக கடூர காயங்களடைந்தவனே. அவனைப் பார்த்துப் புன்னகைபுரிந்தாள் அவ்வுத்தமி. "நல்லது, நான் விடை பெற்றுக் கொள்கிறேன். இனிமேல் இங்கிருப்பேனாகில் எனது நாதர் கோபித்துக் கொள்வார்" என்று சொன்னாள். இவ்வளவுதான், பின்னர் ஒருவரும் அவளைப் பார்க்கவேயில்லை. அக்கினியில் வீழ்ந்து சாம்பராகிவிட்டாள்.

அன்று மீவார் தேசத்துக்கு ஒரு விசனகரமான தினம்; ஆனால் மகம்மதியர் முறியடிக்கப்பட்டார்களென்றும், மீவார் தேசத்தின் கௌரதையானது காப்பாற்றப்பட்டதென்றும் ஆறுதலையடைந்திருந்தார்கள் ரஜபுத்திரர்கள். அல்லாவுடீனும் இனிமேல் ரஜபுத்திரர்களைக் குறித்துச் சிறிது ஜாக்கிரதையாகத்தானிருக்கவேண்டுமென்று அறிந்துகொண்டு சிற்றூரைவிட்டு நீங்கிச் சென்றான்.

# வான சாஸ்திரம்

## LESSONS IN ASTRONOMY

### பூமியில் விழும் நட்சத்திரங்கள்

சாதாரணமாகக் கிருஷ்ண பட்சத்தில் இராக்காலங்களில், இருண்டு, நட்சத்திர மண்டலம் ஜொலித்துக் கொண்டிருக்கும். இந்நாட்களில் ஆகாயம் தெளிவாயிருக்கும்போது திடீரென்று நட்சத்திரம் போன்ற வஸ்துக்கள் நமது பூமிக்குச் சமீபத்தில் ஓடி வந்து கீழே விழுவனவாகக் காணப்படுவதை நாம் எல்லோரும் பார்த்திருக்கிறோம். இவை என்ன ஆச்சரியத்தை விளைவிக்கின்றன! இவைகள் நட்சத்திரங்கள்தானா? நட்சத்திரங்கள் இன்னவையென்று நாம் அறிந்தபிறகு, இனி இவை நட்சத்திரங்கள் என்று நம்புவதற்கு நாம் மூடர்களல்ல!

இவை திடீரென்று கிளம்பிப் பூமி மார்க்கமாய்ப் பிரகாசத்துடன் வந்து,பிறகு அணைந்து போகின்றன, அல்லது அழிந்து போகின்றனவென்றே சொல்லலாம். இவைகள் செல்லும்போது இவைகளுக்குப் பின்னால் பிரகாசமான வால்போன்ற ஜோதி காணப்படுவதுண்டு. இந்த வாலும் அழிந்துகொண்டேவந்து கடைசியில் மறைகின்றது. எல்லாம் க்ஷணத்தில் மறைகின்றன. இவைகளுக்குத்தான் **விழும் நட்சத்திரங்கள்** அல்லது **உதிர் நட்சத்திரங்கள்** என்று பெயர். உல்கங்கள் என்றும் சொல்லுவதுண்டு. இவைகள் அழிகிறதற்கே உண்டாகின்றனபோலும்; பிறந்தவுடன் இறக்கின்றன. இவைகளைப் பார்ப்பது பாவமென்றும், தோஷமென்றும், இவைகளைப் பார்த்தவுடன் பச்சை மரங்களையும் செடிகளையும் பார்க்க வேண்டுமென்றும் சொல்லுவதுண்டு. புண்ணியம்செய்த மனிதர்களின் ஆத்மாக்கள் இப்படி ஜோதி ரூபமாய் வெளிக் கிளம்புகின்றனவென்றும் சிலர் சொல்லுவதுண்டு.

இவைகள் என்ன! எங்கிருந்து வருகின்றன? சிற்சில வால் நட்சத்திரங்கள் வெடித்துச் சிதறி, சிறிய துண்டுகளாகின்றன. இச்சிறு துண்டுகள் மிகவேகத்துடன் அந்த வால் நட்சத்திரங்களின் பாதைகளிலேயே சுற்றுகின்றன. இவைகள் ஸ்வபாவத்தில் மிகப் பிரகாசமான வஸ்துக்களல்ல. சில சமயங்களில் இவை பூமிக்குச் சமீபத்தில் வரும்போது, இவை அதிக வேகத்துடன் ஓடுவதால் பூமியின் ஆகாயமண்டலத்தில் அரைபடுகின்றன. அதாவது வாயுமண்டலத்தின் காற்றோடு மோதப் படுகின்றன. இரண்டு வஸ்துக்களை ஒன்றோடு ஒன்று தேய்த்தால் உஷ்ணமுண்டாகுமென்பது நமக்குத் தெரிந்த விஷயம். இவ்வுஷ்ணத்தால் இந்த வஸ்துக்கள் ஆவியாக மாறி எரிகின்றன. இதன் பிரகாசந்தான் நமக்குத் தெரிகின்றது. சில வஸ்துக்கள் முழுவதும் எரிய கீழே யொன்றும் விழாமலிருக்கும். சில எரிந்த பிறகு கீழேவிழும். சாம்பலில் கொஞ்சம் இரும்பும், நிக்கலும் (Nickel) கரியும் சேர்ந்திருக்கின்றன. இம்மாதிரி நட்சத்திரங்கள் ஒரு வருஷத்தில் கோடிக்கணக்காக விழுகின்றன. இவை இரவில் மாத்திரம் விழுகின்றனவென்று நினைக்கவேண்டாம். பகலிலும் விழுகின்றன. ஆனால் சூர்யப் பிரகாசத்தால் கண்ணுக்குத் தெரிவதில்லை.

சில சமயங்களில் இவை கும்பலாய் ஒன்றன்பின் ஒன்றாய் வந்து நட்சத்திர மாரியாகப்

பெய்வதுண்டு. இவை சாதாரணமாக 50 முதல் 150 மைல் உயரத்திலிருந்து நமக்குக் காணப்பட்டு, பூமிக்குச் சுமார் 20 அல்லது 25 மைல் உயரத்திலிருக்கும்போதே மறைந்து விடுகின்றன. நட்சத்திரமாரி உண்டாகும் போது, இவை ஓரிடத்திலிருந்து கிளம்புகின்றன. இம்மாதிரி நட்சத்திரங்கள் விழுவதை நாம் தினம் பார்த்தபோதிலும், ஒவ்வொரு வருஷத்திலும் சில தினங்களில் மாத்திரமே இவை விசேஷமாக விழுகின்றன. சாதாரணமாக நவம்பர் மாதம் 13-ம், 14-ம் தேதிகளிலும், ஆகஸ்டு மாதம் 10-ம்தேதிமுதல் 12 தேதி வரையிலும் இவை அதிகமாக விழுகின்றன. அப்பொழுது, இவை ஒவ்வொரு இரவிலும் நூற்றுக் கணக்காய் விழுவதைப் பார்க்கலாம். இவைகள் நமது வெறுங் கண்ணுக்குத் தெரிந்து விழும் நட்சத்திரங்கள். நாம் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்தால் இவை கணக்கில்லாமல் விழுவதைப் பார்க்கலாம். இவை அற்புதக் காட்சியே!

இவற்றுள் பெரியவை சில சமயங்களில் வெடித்துச் சிதறுவதுமுண்டு. அப்பொழுது இத்துண்டுகள் பூமியில் விழும். இம்மாதிரி பூமியில் விழுந்தவை பூமியிலுள்ள கற்கள்போல வேயிருக்கும். இப்பேர்ப்பட்ட கற்களை ஆகாசக் கற்கள் என்று சொல்லுவோம். இம்மாதிரியான கற்களைச் சென்னைப் பொருட்காட்சி சாலையில் (The Madras Museum) நாம் பார்க்கலாம். இவைகள் முதல் முதல் பூமியிலிருந்து வெகு வேகத்துடன் வெளிக்கிளம்பி, சூர்யன் சக்திக்குட்பட்டு அதைச் சுற்றிக்கொண்டு வரும்போது, மறுபடி பூமியின் சக்திக்குட்பட்டுப் பூமியில் விழுகின்றனவென்று நம்பப்படுகிறது. இக்கற்கள் எரிமலைகளாலாவது வேறு எவைகளாலாவது வெகு வேகத்துடன் மேலே எறியப்பட்டிருக்கலாம். இப்பவும் நாம் ஒரு கல்லையெடுத்து, ஒரு செகண்டுக்கு 6 அல்லது 7 மைல் வேகத்துடன் உயர எறிந்தால், அந்தக்கல் சூர்யன் சக்திக்குட்பட, பூமிக்குத் திரும்பிவராது என்று கணக்கிடுகிறார்கள். இந்த வானக்கற்கள் ஒரு சிறிய தூசி அளவு முதல், 10 அல்லது 15 மணங்கு நிறையுள்ள கற்கள் அளவுவரையில் காணப்படுகின்றன. இக்கற்கள் நமக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகின்றன என்பதற்குச் சந்தேகமில்லை.

# உளவறியும் முறைகள்

## SYSTEMS OF ESPIONAGE

### பலவிதமான உளவாளிகள்

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.
எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.—திருவள்ளுவர்.

உலகம் பலவிதம் என்று சொல்வதுபோல உளவாளிகளிலும் பல வித்தியாசங்களுண்டு. ஊரூராய்த் திரிவார் சிலர்; நிலையாக ஓரிடத்திலேயே வசித்து வருவார் சிலர்; சமாதான காலங்களில் உளவறிவார் சிலர்; சண்டைக் காலங்களில் உளவறிவார் சிலர்; இன்னும் போர்முனையிலே உளவறிகிறவர்களும், பலருண்டு. சில உளவாளிகள் குறிப்பிட்ட காரியங்களை மாத்திரம், செய்வார்கள். சிலர் பொதுவாக எல்லா விஷயங்களையுமே கவனித்து, தங்கள் ராஜாங்கத்துக்கு அறிக்கை செய்வார்கள். இன்னும் சிலர் சேனையைப் பற்றிய விவரங்களையும், சிலர் கடற்படையைப்பற்றிய விவரங்களையும், சிலர் கோட்டைகளையும், யுத்த தந்திரத்துக்குச் சௌகரியமான இடங்களையும்பற்றிய விவரங்களையும் கவனிப்பார்கள். பலர் ஆசாமிகளைப்பற்றிய விவரங்களை உளவறிந்து தங்கள் ராஜாங்கங்களுக்குத் தெரிவிப்பார்கள். ஓரிடத்திலேயே நிலையாக வசித்துவரும் உளவாளிகளும், ஆசாமிகளைப்பற்றிக் கவனிக்கும் உளவாளிகளும் ஜெர்மனியினாலேயே அதிகமாகக் கையாளப்பட்டுவருகிறார்கள். இப்படிப் பலவகைப்பட்ட உளவாளிகள் இன்னதொழில்தான் செய்வார்கள், இன்னதொழில்தான் செய்யார்கள் என்பதில்லை. எத்தொழில் செய்தாலும் அவர்களின் லக்ஷியம் உளவறிதலே. உளவாளிகளிற் பலர் அடிக்கடி வேஷம்மாறிச் செல்வதுண்டு. வேடிக்கையாக ஊர்சுற்றிப் பார்ப்பவர்கள்போலவும், கிறிஸ்தவப் பாதிரிகள்போலவும், சித்ரவேலைக்காரர்கள் போலவும், வியாபாரிகள் போலவும் வேஷந் தரித்து, பகைவர் தேசங்களில் சென்று உளவறிந்து வருகிறார்கள். இவ்வுளவாளிகளை ஒவ்வொருவராக நாம் கவனிப்போம்.

ராஜதந்த்ர யுத்த தந்த்ர உளவாளிகள்:—தங்கள் தேசத்தோடு யுத்தஞ் செய்யக் கூடிய



வேறு தேசங்களுக்குச் சமாதான காலங்களில் சென்று அந்தந்த தேசங்களின் ராஜாங்க நிலைமையையும், ராணுவங்களின் குணகுணங்களையும் கண்டறிவார்கள். இவர்களில் அநேகர் ஒரு ராஜாங்கத்துக்கும் அதன் குடிகளுக்கும் மனஸ்தாபமுண்டாக்கி, கலகம் ஏற்படும்படி தூண்டி விடுவதும், முக்கியமான சமயங்களில் தொழிற் சாலைகள், இருப்புப்பாதை முதலிய இடங்களில் வேலைசெய்யும் வேலையாட்களைக் கட்டுப்பாடு செய்துகொண்டு வேலை நிறுத்தும்படி செய்வதுமே தொழிலாக இருக்கிறார்கள். இவ்விதமான உளவாளிகள் ஜெர்மனியால் மாத்திரம் உபயோகப்படுத்தப் படுகிறார்கள்.

ஒரு தேசத்தின் போர்வீரர்கள் சண்டைக்கு "லாயக்காயும்" "தயாராயு"மிருக்கிறார்களா வென்பதைப்பற்றியும், அவர்களுக்கு வேண்டிய ஆகாரங்களும், உடை, மருந்து, குண்டு, துப்பாக்கி, பீரங்கி முதலிய யுத்த தளவாடங்களும் போதுமான அளவு இருக்கின்றனவா என்பதைப் பற்றியும் சில உளவாளிகள் கவனித்து வருகிறார்கள். வேறுசிலர் யுத்த தந்திரத்துக்குச் சௌகரியமான மலைகள், குன்றுகள், மேடுகள், பள்ளத்தாக்குகள், சமநிலங்கள், வண்டிப்பாதைகள், இருப்புப்பாதைகள், நதிகள், சிற்றாறுகள் வீடுகள் முதலியவைகளின் சாதக பாதகங்களையும், யுத்தம் ஏற்பட்டால் இன்ன இடத்தில்தான் யுத்தகளம் இயற்கையாக அமையும் என்று தங்கள் அனுபோகத்தினால் நிர்ணயித்து அதற்குப் பொருத்தமாகப் பீரங்கிகளை நிறுத்தவேண்டிய ஸ்தலங்களின் விவரங்களையும் தெளிவாகக் குறிப்பிடும் படங்களை வரைவார்கள். இன்னுஞ் சிலர் பீரங்கிகள் ஏற்றுவதற்கு இரகசியமாக மேடைகள் போடுவதிலும், பாலங் கட்டுவதற்கு வேண்டிய சாமான்களும், யுத்த தளவாடங்களும் இரகசியமாகச் சேகரஞ் செய்வதிலும் கண்ணாக விருப்பார்கள்.

ஓரிடத்திலே நிலையாக வசித்துவரும் உளவாளிகள் சந்தேகத்துக் கிடமில்லாமலிருக்கும் பொருட்டு, ஏதாவது ஒரு தொழிலில் அமர்ந்திருப்பார்கள். இவர்களில் சிலர் உயர்ந்த குடும்பங்களோடு சிநேகங்கொண்டு போக்கு வரவுள்ளவர்களா யிருக்கிறார்கள், சிலர் தாழ்ந்த தொழிலிலும் இருந்து வேலை செய்து வருகிறார்கள். ஊர் ஊராய்த் திரியும் உளவாளிகளுக்கு உளவறியு மிலாகாவின் உத்தரவுகளைத் தங்கள் மூலமாய்த் தெரிவிப்பதும், அவர்கள் அனுப்பும் அறிக்கைப் பத்திரங்களை இலாகாவுக்கு அனுப்புவதுமே இவர்களுடைய பிரதானமான வேலையாகும். இவர்களுக்குத் 'தபால் பெட்டிகள்' என்று பெயர். மேலும் இவர்கள் தங்களுக்குத் தெரிந்த எந்தச் சமாசாரமானாலும் சரி, அதையும் உளவறியு மிலாகாவுக்குத் தெரியப்படுத்தி விடுகிறார்கள். இவர்களில் அநேகர் ஜனோபகாரமான பல பொது விஷயங்களில் ஊராரோடு ஒத்து உழைத்துப் பண உதவியும் செய்து தங்களை யாவரும் நன்கு மதிக்கும்படி செய்துகொள்ளுகிறார்கள்.

சில முக்கியமான விஷயங்களை அறிந்துகொள்ள ராணுவம், கப்பற்படை இவைகளிலுள்ள அதிகாரிகளும் வேறு தேசங்களுக்கு உளவறிய அனுப்பப்படுவ துண்டு. ஆனால் ஜெர்மனியானது, அநேகமாக அதிகாரிகளை உளவறிய அனுப்புவதில்லை. சாதாரண ஜனங்களுக்கே விசேஷப் பயிற்சியும், சாஸ்திர ஞானமும் கொடுத்து அவர்களை உளவறிந்து வர அனுப்புகிறது.

மேற்குறித்த உளவாளிகளைத் தவிர ஜெர்மானியர், வியாபார முறைகளையும் தந்திரங்களையும் அறிந்து வரவும், உளவாளிகளை நியமித்திருக்கிறார்கள். இவர்கள் இங்கிலீஷ் வியாபார சாலைகளில் சம்பளமில்லாமல் வேலைக்கமர்ந்து பாஷாஞானம் அடைய விரும்புகிறவர்கள்போலப் பாவனைசெய்து இரகஸ்யங்களை அறிந்துகொண்டு அவ்வழிகளைத் தம்தேசத்தில் பிரயோகிக்கிறார்கள். அநேக ஜெர்மானியர்கள் தாங்கள் அமெரிக்கர்கள் என்று சொல்லிக்கொண்டு இலேசாக உளவறிகிறார்கள்.

இயற்கை அற்புதங்கள்
புதிய பதிப்பு: விலை அணா-6.
இப்புத்தகத்திற்குக் காலஞ்சென்ற ராவ் பகதூர் L. C. வில்லியம்ஸ் பிள்ளை ஒரு முகவுரை எழுதியிருக்கிறார் இதில், மழைக்காலங்கள்; எரிமலைகள்; பூகம்பம்; வெந்நீர் ஊற்றுகள்; கானல் நீரும் அதன் சுபாந்திரங்களும்; வால் நக்ஷத்திரங்கள்; எரி நக்ஷத்திரங்களும், பொறி நக்ஷத்திரங்களும்; வானவில்; கிழலும் கிரகணங்களும்; ஹாலிவால் நக்ஷத்திரம்; இவைகளைப்பற்றிய விவரங்கள், அநேகம் படங்களுடன் எளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றன, வேண்டுவோர், 'விவேக போதினி' மானேஜருக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

# செவி

## THE EAR

பலவிதசப்தங்களையும் நாம் உணர்வதற்குக் கருவியாகியது செவி. இவ்விந்திரியத்தை (organ)—தெளிய அறிதற்பொருட்டு (1) வெளிச்செவி, (2) நடுச்செவி, (3) உட்செவி என மூன்று பகுதிகளாக சரீரதத்துவ நூல்களில் பிரித்திருக்கிறார்கள்.




வெளிச்செவி :—இதன் வெளிப்பாகமாகிய காது தட்டையான ஒரு புனல் (Funnel) போல் வெகு வளைவுடன் அமைந்திருக்கிறது. இதன் விறைப்புக்குக் காரணம் அதிலுள்ள முருந்துதான் (Cartilage). உள்பாகம் சுமார் ஓர் அங்குல நீளமுள்ள சற்று வளைந்த குழாயாய் இருக்கின்றது. வெளிக் காதிலுள்ள மயிர், பூச்சிகளைக் காதின் துவாரத்திற்குள் செல்லாதபடி தடுக்கின்றது. குழாயிலுள்ள கோளங்கள் (Glands) கசியும் மெழுகுபோன்ற வஸ்துவை நாம் குறும்பை என்கிறோம்.

தொழில் :—ஆகாயத்தின் வழியாய் வரும் சப்த அலைகளைக் கூட்டிக் காதினுட் செலுத்துவதே காதின் தொழில்.

சில மிருகங்கள், சப்தம் வரும் திசைக்குத் தக்கவாறு தங்கள் காதுகளைத் திருப்பிக்கொள்ளுகின்றன. காதை அசைப்பதற்கு வேண்டிய தசைகள் (Muscles) மனிதனுக்கிருந்தும், அவைகளை அசைக்கும் சக்தியில்லை. அபூர்வமாய்ச் சிலருக்கு மாத்திரம் இச்சக்தி லேசாய் இருக்கின்றது.

நடுச்செவி :-இது சிறியதாயிருந்தாலும் மிகவும் முக்கியமான பாகம் இதன் முன்பின் நீளம் கால் அங்குலம் தான். இதற்கும் வெளிச்செவிக்கும் நடுவேயுள்ள, பறை அல்லது தப்பைப்போன்ற சவ்வுக்கு ஆனகம் (Tympanum or drum of Ear) என்று பெயர். உட்செவியிலிருந்து வரும் இரண்டு துவாரங்களும் சவ்வுகளால் அடைக்கப்பட்டிருக்கின்றன. இச்சவ்வுகள் உட்செவியை நடுச்செவியிலிருந்து பிரிக்கின்றன. மேலே சொன்ன துவாரங்களில் ஒன்று முட்டைவடிவாயிருப்பதுபற்றி அண்டரந்திர மென்றும் (Fenestra ovalis) மற்றொன்று வட்டவடிவு பற்றி வட்டரந்திர மென்றும் (Fenestra rotunda) சொல்வதுண்டு. நடுச்செவியின் ஊடே ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட மிக நுட்பமான மூன்று எலும்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதன் முதல் எலும்பு ஆனகத்தோடும், மூன்றாவது உட்செவியின் அண்டரந்திரச்சவ்வோடும்கட்டப்பட்டிருக்கிறது. முதல் எலும்பு கூட எலும்பென்றும் (Malleus), அடுத்தது அடை எலும்பென்றும் (Incus anvil bone) மூன்றாவது அங்கம்படி போலிருப்பதால் படிஎலும்பென்றும் (stapes) சொல்லப்படுகின்றன.

தொழில் :—சப்தம் ஆனகத்தில் பட அது அதிருகிறது. இவ்வதிர்ச்சி மேலே சொன்ன 3 எலும்புகளின் மூலமாய் உட்காதிற்கு அனுப்பப் படுகிறது. இவ்வெலும்புகள் வெகு நுட்பமாய் அமைக்கப் பட்டிருக்கிறபடியால் ஆனகத்தின் வெகு லேசான சலனங்களைக் கூட வெகு தெளிவாய் யாதொரு சப்த மாறுதலுமின்றி உட்செவிக்கு இவை கொண்டு போகின்றன. ஆனால் உரத்த சப்தம் ஆனகத்தைத் தாக்கினால் அதன் அதிர்ச்சியால் உட்செவிக்குத் தீங்கு நேரிடாதிருக்குமாறு சலனவேகத்தை, இவை குறைக்கக் கூடியவையாயுமிருக்கின்றன.

நடுச்செவியிலிருந்து மிடறு (Pharynx) என்று சொல்லப்படும் மேல் தொண்டைக்கு ஒரு துவாரம் செல்லுகிறது. இக்குழாய்க்கு நிகரணங்கி (Eustachian tube) என்று பெயர். இத்துவாரத்தின் நோக்கம் ஆனகத்தின் இருபக்கத்திலும் உள்ள காற்றை ஓரே திண்மை (Pressure) உள்ளதாய்ச்செய்வதே.

உட்செவி :—இது செவியின் அத்தியாவசியமான பாகம். இது மிகவும் சிக்குமுக்குள்ள



குடைவா யிருக்கிறது: இது பல சுழற்சி கொண்டு நிற்றலால் இதற்கு பிரமணம் (Labyrinth) என்று பெயர். இதன் பகுதிகளாவன :—

1. நடுவேயுள்ள வாரி (Vestibule)
2, நத்தையோடு போன்ற கம்பு (Cochlea)
3. மூன்று வளைந்த குழல்களாலாகிய திரிதடம். (Semicircular canals) எலும்பு பிரமணத்திற்குள் அதே வடிவமுள்ள சவ்வுப் பிரமணமிருக்கிறது. இதற்குள்ளேயும் வெளியேயும் நிணநீர்(Endolymph & Perilymph) தங்கி இருக்கிறது. மூளையின் 8 வது சோடியாகிய கேள்வி நரம்புகள் காதினுள் புகுந்து சவ்வுக்குள்ளிருக்கும் நிணநீரில்(Endolymph) படர்ந்து நிற்கின்றன.

தொழில்:—படி எலும்பினால் கொண்டுவரப்பட்ட சப்தஅலைகள் நிணநீர்வழியாய்க் கேள்வி நரம்புகளிடம் வந்துசேருகின்றன. அவை உணர்ச்சியை மூளைக்குத் தெரிவிக்கின்றன.

ஆனகம், தடித்து அல்லது வெடித்துப் போதலும், குறும்பிபடுதலும், நிகரணங்கி துவாரம் (தொண்டை வீக்க முதலிய வற்றால்) தூர்தலும் மூளையின் சிலபாகம் கெடுதலும், சாதாரணமாய் செவிடாவதற்கு ஏற்படும் காரணங்கள்.

குறும்பிவாங்கியை விட்டு குறும்பியெடுக்கையில், சற்றுக் கவனம் குறைவாயிருந்து விட்டால், ஆனகத்திற்குத் தீங்கு நேரிடும். காதிலுள்ள குறும்பியையாவது, தற்செயலாய்ச் சென்ற ஒரு பூச்சியையாவது வெளியே எடுக்க விரும்பினால், எண்ணெயைப் பொறுக்கத் தக்கதான சூடாக்கிக் காதினுள் விடலாம். பிறகு பீச்சாங்குழலால் தண்ணீர் அடித்து அசுத்தங்களை வெளியாக்கலாம்.

பேச்சு சப்தத்தாலாகியதால் அச்சப்தத்தை உணரும் கருவியில்லாத செவிடர்கள் பேச்சை உணர சக்தியற்று இருக்கிறார்கள். அவர்களுக்குத் தாங்கள் செய்யும் சப்தம்இன்னதென்றும், பிறர் செய்யும் சப்தம் இன்னதென்றும் தெரிவதில்லை. ஆகையால் அவர்கள் தங்கள் எண்ணங்களைப் பிறர் அறியும்படி சப்தத்தைச் சம இசைப்படுத்த முடியாதவர்களாயிருக்கிறார்கள். சிறுவயதிலிருந்தே செவிடாயிருப்பவர்கள் ஊமையாயும் இருப்பதற்குக் காரணம் இது ஒன்று.

# சக்திதத்வ போதினி

## ஒளிப்பிரிவும், அடக்கமும்

## DISPERSION & ABSORPTION OF LIGHT

முன்னர், ஒளியானது வஸ்துக்களில் ப்ரதிபலிப்பதையும், வஸ்துக்கள் வழி ஊடுருவிச் செல்லுவதையும்பற்றி விளக்கியாகிவிட்டது. இனிமேல், வஸ்துக்களில் ஒளி இவ்விரு வழி பொருந்துங்கால் அடையும் மாறுபாட்டை எடுத்து விவரிப்போம்.

பெரிய சரலாந்தல் கண்ணாடியில் தொங்கவிட்டிருக்கும் பல பட்டைக் கண்ணாடித் தோரணங்களில், பலவித வர்ணங்கள் தோற்றுவது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவைகளின் வழியாக ஊடுருவிப் பாய்ந்துவரும் ஸூர்ய வெளிச்சம் அல்லது விளக்கொளி ஆகிய இவைகளில் ஏற்படும் மாறுபாட்டால் காணப்படுபவை இத்தோற்றங்கள். இந்த மாறுபாட்டை நன்குணர அவைகளுள் மூன்றுபட்டைக் கண்ணாடி ஒன்றை எடுத்து, இருட்டறை ஒன்றில் சிறு ஓட்டைவழி வரும் ஸூர்ய ஒளிக்கெதிரே, பட்டை மேலாயும் கூர் கீழாயும் பிடிப்போம். மறுபுறம் வெண்மையான சுடாத மண்ணாலாகிய மட்டத் தகடொன்றைப் பிடித்து மூன்று பட்டைக் கண்ணாடியிலிருந்து வெளிவரும் ஒளியைப் பரிசோதிப்போம். இதில் வர்ணங்கள் விளங்கும் ஒளித்தண்டு நன்றாகக் காணப்படும். இதில் பொதுவாக ஊதா, நீலம், பச்சை, மஞ்சள், சிவப்பு என்ற ஐந்து வர்ணங்கள் காணப்படும். பூதக்கண்ணாடி வைத்து இதைப் பரிசோதித்தால் ஊதாவிற்கும் நீலத்திற்கும் இடையில் கரு நீலம் என்றும், மஞ்சளுக்கும் சிவப்பிற்கும் இடையில் மங்கல் மஞ்சள் என்றும் இரு வர்ணபேதங்களும் வெளிப்படும், ஆகவே, ஸூர்யனது வெண்மையான ஒளி எழுவித வர்ண ஒளியாகப் பிரிக்கப்பட்டுக் காணப்படும். இவைகளை முறையே ஓட்டையுள்ள ஒரு அட்டையால் தனித்தனி வேறு ஒரு மூன்று பட்டைக் கண்ணாடியின் வழிவிட்டு வெளிவரும் ஒளியைப் பரிசோதித்தால் விட்ட வர்ண ஒளியே வெளிவரும். ஆதலால் இவைகள் தனி ஒளிகளேயென்பதும், ஸூர்யனதுபோல சேர்க்கை ஒளி

யல்ல என்பதும் வெளிவரும். மேலும் இவ்வேழு ஒளிகளையும் மூன்று பட்டைக் கண்ணாடியின் அருகாமையில் தலைமாற்றி, கூர் மேலும் பட்டை கீழுமாக வைத்துள்ள வேறு மூன்று பட்டைக் கண்ணாடியில் விட்டுப் பார்த்தால் வெளிவரும் ஒளி முன்போல வெண்மையான ஸூர்யன் ஒளியாகக் காணப்படும். இதனால் இந்த ஏழு வர்ண ஒளிகளும் சேர்ந்த சேர்க்கையே சூர்யனது ஸாதாரணமான வெண்மை ஒளி என்பது நன்கு விளங்கிவிடும். ஆகவே சேர்க்கை ஒளி கண்ணாடி போன்ற ஊடுருவிப் போகக்கூடிய வஸ்துக்கள் வழியே போகும்பொழுது, போக்கு மாறுவதோடுங்கூட தன் பாகஒளிகளாகவும் பிரிக்கப் படும் என்று தெரிய வருகிறது. தனி ஒளியாயின் போக்கு மாற்றம் மாத்திரந்தான் காட்டும்.

முற்கூறிய ஏழுவர்ண ஒளி சேர்ந்தால் வெண்மை ஒளி உண்டாகும் என்பதை வேறு விதமாகவும் காட்டலாம். ஒரு வட்டத்தட்டை எடுத்து அதன் மையத்திலிருந்து கோடுகள் கிழித்து ஏழுஸமபாகமாகப் பிரித்து ஒவ்வொன்றில் முற்கூறிய வர்ணங்கள் ஒவ்வொன்றையும் அமைப்போம், வர்ணம் பூசியோ, வர்ணக்காகிதம் ஒட்டியோ. இந்த ஸப்த வர்ணத் தட்டை தையல்யந்திரம் முதலியவைகளில் அமைத்து வேகமாகச் சுழற்றினால், வர்ணப்பக்கம் வெண்மையாகவே காணப்படும். இது வர்ணவிஷயமாக முன்னர் தீர்மானிக்கப்பட்டதையே வற்புறுத்தும்.

தண்ணீர்த் துளிகள் வழியாக ஸூர்யன் ஒளி பாய்ந்து வரும்பொழுதும் இப்படிப்பட்ட வர்ணப் பிரிவு ஏற்படும். நடுப்பகலில் நாம் சாப்பிட்டுக் கை கழுவும்பொழுது வாய் கொப்புளிக்குங்கால் சிறு திவலையாகத் தண்ணீர் போகும்படிசிதறவிட்டால்நம்மைச்சுற்றி முன்கூறின ஸப்தவர்ண வில்லைக் காணலாம். இது நமது வாயிலிருந்து வரும் தண்ணீர்த் திவலைகளில் ஊடுருவிப்போய்ப் பிரிந்து உள்ளேயே ப்ரதிபலித்துத் திரும்பி நமது கண்ணில்படும் ஸூர்யன் ஒளியால் ஏற்படுவது. இதுபோலவேதான் ஆகாயத்தில் மழைத்துளிகள் விழும்பொழுது எதிரேயுள்ள ஸூர்ய ஒளியால் வானவில் உண்டாவதும், (இயற்கை அற்புதங்கள் என்னும் புத்தகத்தில் வானவில் என்ற பாகத்தைப்பார்க்க) மலை வீழருவிகளில் பரந்து செல்லும் தூவானத்தில் வர்ணவில் ஏற்படுவதும் சந்திரனைச்சுற்றிச் சிறு வர்ண பரிவேஷம் ஏற்படுவதும்.

இம்மாதிரி சேர்க்கை ஒளி, ஊடுருவிப்போகையில் தன் பாகங்களாகப் பிரிவானேன் என்ற கேள்வி பிறக்கலாம். இது அந்தத் தனி ஒளிகளின் போக்கு மாற்ற இயற்கையாலேயே ஏற்படுவது. ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், மங்கல்மஞ்சள், சிவப்பு ஆகிய இவை முறையே வரவரக் குறைவாக வளையும் ஆற்றலுடையவையாதலால், கண்ணாடி முதலியவைகளுள் ஊடுருவிப்போகப் புகும்பொழுது தம்மியற்கைப்படி வேற்றுமைப்பட்ட அளவு வளையப் பிரிந்துவிடுகின்றன.

இப்படி ஊடுருவிப் போகையிலேயே இடம் தரும் தன்மை உடைய வஸ்துவின் அமைப்பிற்கேற்பச் சில வர்ண ஒளிகள் தடைபட்டு வேறு சில வெளிவரலாம். ஒன்று மாத்திரம் சில வஸ்துக்கள் விஷயத்தில் வெளிவரலாம். இவ்வெளிவரும் ஒளியின் வர்ணத்தால் வெளிவிடும் கண்ணாடி முதலிய வஸ்துக்களின் வர்ணம் நிர்ணயிக்கப்படுகிறது. நீலக் கண்ணாடியில் ஸூர்யன் ஒளியில் நீலம் ஒழிந்த மற்றைய வர்ணங்கள் அடக்கப்பட்டு, நீலம் மாத்திரம் வெளிவரும் தன்மை உண்டு. இதுபோலவேதான் மற்றைய வர்ணக்கண்ணாடிகள் விஷயமும். நீலக்கண்ணாடியை நீலம் நீங்கலான சிவப்பு முதலியவையான தனி ஒளியுடைய விடங்களில் பார்த்தால், கறுப்பாகத்தான் காணப்படும். அந்த ஒளிகள் எல்லாம் நீலக் கண்ணாடியால் அடக்கப்பட நமது கண்ணில் நீலக்கண்ணாடியிலிருந்து ஒருவித ஒளியும் வந்து தாக்காதிருப்பதால் அது நிழலைப் போன்ற கரிய நிறத்துடன்தான் விளங்கும். இப்படியேதான் மற்றையக் கண்ணாடிகளும் காணப்படும் தகுந்த தருணங்களில்.

ஒளி ஊடுருவவிடாத இருண்ட வஸ்துக்களிடத்தும் இம்மாதிரியான வேற்றொளி அடக்கம் உண்டு. இவ்வாறு அடக்கிய பின்னர் வெளிவிடும் ஒளியின் வர்ணமே வஸ்து வர்ணமாக நமக்குக் காணப்படும். செடியின் இலைகள் ஸூர்யன் ஒளியின் பச்சை வர்ண ஒளியை மாத்திரம் ப்ரதிபலித்து வெளிவிட்டு மற்றைய ஆறு ஒளிகளையும் அடக்கும் சக்தியுள்ளவையாதலால் பச்சையாகக் காணப்படு



கின்றன. பழுப்பிலைகள் மஞ்சள் ஒளியை மாத்திரம் வெளிவிடும் தன்மையுடையவையாதலால் மஞ்சளாகவே காணப்படும். சுண்ணாம்பு, சூரியன் ஒளி முழுவதையும் அடக்காமலே வெளிவிடுவதால் வெண்மையாகக் காணப்படும். வாயுவின் அணுக்கள் சுத்தமாகவிருக்கையில், மற்ற வர்ண ஒளிகளை அடக்கி நீல ஒளியை மாத்திரம் ப்ரதிபலிக்குந் தன்மை உடையவையாதலால் நிர்மல ஆகாயம் நீலமாகக் காணப்படும். புழுதி முதலிய அணுக்களும் நீராவியணுக்களும் நிறைந்த ஆழமான வாயு, சிவப்பு முதலிய வர்ண பேதங்களை விதம் விதமாகப் ப்ரதிபலனம் செய்யும் இயற்கையுடையவையாதலால் ஸூர்யோதய அஸ்தமன காலங்களில் பலவித வர்ணங்கள் காணப்படுகின்றன.

மேலும் இரவில் திருவிழாக்களில் ஆகாய பாணங்கள் வர்ணப்பூக்களுடன் வெடிக்கின்றனவே அப்பொழுது இங்கு கூறப்பட்டுவரும் ஒளியடக்க விஷயம் நன்றாக வெளியாகும். ஆகாயபாணம் சிவப்புப் பூவாகச் சிதறினால், செடிகளின் இலைகள் கருப்பாகவும், சுவர்கள் சிவப்பாகவும் காணப்படும்: பச்சைப் பூவாகச் சிதறினால், செடி இலைகள் பச்சையாகவும், பழுப்புக்கள் கருப்பாகவும், சுவர்கள் பச்சையாகவும், சிவப்புக் காவியடித்த சுவர், மங்கல் கருப்பாகவும் காணப்படும். இப்படியல்லாது, அது வெள்ளைப்பூவாக வாரிச் சிதறினால் பகலில் வஸ்துக்கள் தம் தம் வர்ணத்தில் விளங்குவதுபோல அப்பொழுதும் விளங்கும். ஆகவே உலகில் நமக்குப் புலப்படும் வர்ணத்தோற்றங்களெல்லாம் வர்ண ஒளி அடக்கம், தகுந்தவர்ண ஒளி இயக்கம் ஆகிய இந்த ஒழுங்கைப் பொறுத்துள்ளவைகளே. இதை நன்குஉணர ஒளிப்பிரிவின் நுட்பத்தால் ஸூர்யன் வெண்மையான ஒளி, சேர்க்கை ஒளியே ஒழிய, தனி ஒளியல்ல என்ற உண்மை உணரப்படல் வேண்டும்.

ஆகவே ஒளி ஒரு வஸ்துவின்மேல் விழுந்தால் மறித்து ப்ரதிபலிக்கலாம். பலவேறு போக்காகச் சிதறி ப்ரதிபலிக்கலாம். ஊடுருவிப் போகலாம், பிரிந்து போகலாம், பலபாகம் அடங்கி சில அல்லது ஒரு பாகம் வெளிப்பட்டு வரலாம். ஒரு மட்டமில்லாக் கண்ணாடியை எடுத்துக்கொண்டால் அதில் முகம் தெரிவது ப்ரதிபலன ஒளியால்; நன்றாகத் தெரியாது விகாரப்பட்டுத் தெரிவது ஒளி சிதறி ப்ரதிபலிப்பதால்; மறுபுறம் வஸ்துக்கள் தெரிவது அவைகள் ஒளியில் ஊடுருவலால்; கண்ணாடியின் வர்ணம் தெரிவது ஒளி அடக்க வெளிப்பாடுகளால்; மறுபுறம் வஸ்து வில் வர்ணம் தோற்றுவது அதன் ஒளிப் பிரிவால். இப்படி ஒரு கண்ணாடித் துண்டிலேயே ஒளியின் பலவித மாறுபாடுகளையும் கண்டு உணரலாம்.

# இலைக்கள்ளி

## PRICKLY PEAR

(சப்பாத்தி, நாகதாளி)

"கள்ளியிலும் சோற்றுக் கற்றாழையிலும் சோறு." ஆம்; அமெரிக்கா ஐக்கிய பிரதேசத்தாரில் டெக்ஸாஸ் நாட்டார் சப்பாத்தியை நிலத்திற்கு எருவாக்குவதுமன்றி, மனிதர் உணவிற்கும், மாட்டின் தீனிக்கும் உபயோகப் படுத்துகின்றார்களாம். "நிலத்திற்கு வேராய்க்கிடந்து முளைத்துப் போகிறேன்"— இப்படி சப்பாத்தி சொல்லலாம். இதைச் சாமானியர் "பிசாசு" என்று திட்டுகிறார்கள். இதனுடைய உபத்திரவமும் இடைஞ்சலும் மட்டுமே மனிதர் மனதிற்கு வருகிறது. இது நமது தேசத்திற்கு உரியதல்ல. ஆதியில் இதை யாரோ ஐரோப்பியர் வேடிக்கையாகச் சட்டியில் வளர்க்கும் பூண்டாக மட்டும் கொண்டு வந்து, தங்கள் பங்களாவில் வைத்துக் காப்பாற்றி வந்தாராம். அது பலுகி எங்கும் பரவ ஆரம்பித்துவிட்டது. இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கும் தன்மை இதற்கு இருக்கிறது. நரிகள், காகங்கள், மாட்டுக்காரப் பயல்கள் முதலியோர் இதன் கனியைத்தின்று வெகு தூரம் பரவும்படி செய்துவிட்டனர். இப்போது, "இது, தொலை

யாதா!" என்று யாவரும் நொந்து கொள்ளும்படி ஊர், சேரி, நத்தம், திட்டு, திடல், எங்கும் வியாபித்து நிற்கிறது. "அரைப்பணம் கொடுத்துப் பாடச் சொன்னான்; ஒரு பணம் கொடுத்து ஓயச்சொன்னான்" என்றபடி இருக்கிறது. ஊரில் இருக்கும் பாம்பு, தேள், நட்டுவாக்கிளி, விரியன் முதலிய விஷ ஜந்துக்களெல்லாம் முட்டையிட்டுப் பலுகுவதற்கு இது ஒரு வலுவான அரணாக இருக்கிறது. தண்ணீரில் அகப்பட்டு அழுகினாலும்சரி, நெருப்புப்போட்டுக் கொளுத்தினாலும் சரி, அபாயம் நீங்கின உடனே ஒன்றுக்குப் பத்தாகக் கொழுந்துவிட்டு அபிவிர்த்தி அடைகிறது. சில ஊர்களில் சமுதாய நிலங்களை இது அதிக்கிரமித்துக்கொண்டு சாலைகள், வழி நடைகள் முதலிய பொது நடப்புக்களைக் கவர்ந்து, குறுக்கி வருகின்றது. ஜனங்கள் சோம்பல் மிகுந்தவர்களாக இருக்கும் இடத்தில் இது ஊரைத் தனதாக்கி "ஓண்ட வந்த பிடாரி ஊர் பிடாரியை விரட்டியது" போல் ஊக்கமில்லாதவரை குடைக்கிளப்பி விடுகிறது. மதில் சுவர்களின் மீது படர்ந்து செங்கல் கட்டிடங்களையும் நிலமாக்கும். "வேலிக்குப் போட்ட முள் காலுக்குக் கேடு" என்பது இதை உத்தேசித்தே ஏற்பட்டிருக்கலாம். "ஓட்டப்பார்த்து மட்ட நறுக்கினாலும்" இது அடங்குவதில்லை.

இந்த துஷ்டப்பூண்டிலும் குணம் இருக்கிறது: ஆழக்கிடங்குபறித்து, சப்பாத்தி இட்டு, மணல் வாரிப்போட்டு அதன்மேல் தென்னை வாழைமுதலியவைகளைப் பயிரிட்டால் அவை வெகுசெழிப்பாகக் கிளம்புவதைப்பார்க்கலாம். ஒரு தரம் கொளுத்தின உடன் வெந்து நின்றுகாய ஆரம்பிக்கும். அப்போ அடுத்த படியாய் நெருப்பிட்டு இரண்டு மூன்று வாரங்களுக்குக் கவனமாக இருந்தால், இதை இருந்தவிடம் தெரியாமல் அழித்துவிடலாம். கொஞ்சம் சோம்பலடைந்து பிறகு பார்த்துக்கொள்வோமென்றிருந்தால் அது இடங்கொண்டு கல்ல ஆரம்பித்து விடும்.

இப்படி நாம் வெறுக்கும் இந்த முட் பூண்டை அமெரிக்கர் பல விதங்களில் உபயோகமுள்ளதாகச் செய்து வருகின்றனராம். முள்ளெடுக்கும் கருவி ஒன்றால் முட்கொத்துக்களை நீக்கி, சதையாயிருக்கும் பாகத்தைத் துண்டாடி வேக வைத்தோ, வேக வைக்காமலோ எடுத்து, பருத்திக்கொட்டையோடும் தவிடோடும் பிசிரி கால் நடைகளுக்கு உணவிடலாம். டெக்ஸாஸ் நாட்டில் ஆயிரக்கணக்கான பல காரவைப் பசுக்களின் மந்தைகளுக்கு இதை உணவாய்க் கொடுப்பதால் பசுக்கள் சமர்த்தியாய்ப் பால் கறக்கின்றனவாம். மனிதர்களும் சான் அந்தோனியோ என்னும் இடத்தில் இதைப் பக்குவப்படுத்திப் போஜன பதார்த்த மாக்குகின்றார்களாம். இப்படிப் பல விதங்களில் உபயோகப்படுவதால், இருந்த கதிர்களெல்லாம் அறுவடையாய் விடவே, தோட்டங்களில் சப்பாத்தியைப் பயிர் செய்ய ஆரம்பித்திருக்கின்றனராம்.

மூல உபத்திரவத்தால் வருந்திய இஞ்சினியர் ஒருவர் சப்பாத்தியைக் கண்டால் மெத்த ஆச்சரியப் படுவாராம். குதிரையினின்றும் தரையில் தாவிக்குதித்து சப்பாத்திப்பழத்தை வேண்டுமட்டும் பறித்து முள்நீக்கித் தின்று கொண்டு போவது வழக்கமாம். பெருங்காலாக இருந்தால், முட்கழித்த சப்பாத்தி இலைகளை வேக வைத்து நசுக்கி, வீக்கத்தில் வைத்துக் கட்டக் குணமாம். வெட்டுக்காயங்களை ஆற்றும். வயிற்றுளைவையும் சப்பாத்திச் சாறு ஆற்றும். முப்பட்டை முள், வயிற்றில் அகப்பட்டுக் கொண்டால் சாவு. அதை இருமுறை கொளுத்திச் சாம்பலாக்கி எருவிட்டால் நில உரமாம். மாடுகள் உடம்பில் தைத்த சப்பாத்தி தானாக மெதுத்தன்மை யடைந்து வெளிப்படும்.

சப்பாத்தி முள்ளுக்கு நல்லெண்ணெய் மாற்று.

---

**நம் வெளிநாட்டுச் சந்தா நேயர்களுக்கு.**— யுத்தங்காரணமாக காகிதம் முதலிய சாமான்களின் விலை ஒன்றுக்கு நான்கு பங்கு விற்பதில், பத்திரிகையை நன்கு நடத்துவதில் நமக்கேற்படும் சிரமம் மிகவும் அதிகமென்பது ஒருவாறு தெரியவரும். பினாங், சிங்கப்பூர், நேடால் முதலான இடங்களிலுள்ள நம் சந்தாநேயர்களிற் பலர் தாங்கள் செலுத்தவேண்டிய சந்தாபாக்கியை வருஷக்கணக்காய் பாக்கி வைத்துக்கொண்டிருப்பதில், பத்திரிகையை ஒழுங்காய் நடத்த மிக சிரமப்படுகிறது, நம் நேயர்களுக்கு தனித்தனி கடிதம் எழுதுவதென்றாலும் முடிகிறதில்லை; ஒரு அணா ஆகிறது. ஆகையால் நம் நேயர்கள், இனியும் ஆலஸ்யமாயிராது, தங்கள் சந்தா பாக்கியை உடனே அனுப்பி, பத்திரிகையை எப்பவும்போல் ஆதரிக்கக்கோருகிறோம்.



# மாதவீகங்கணம்

## அத்யாயம், 6

(432-ம் பக்கத் தொடர்ச்சி.)

அந்த நாட்களில், வங்காளத்திலிருந்து காசி, மதுராபுரி இந்த ஸ்தலங்களுக்குப் போவதென்றால் வழியில் எத்தனையோ விநோதக் காட்சிகள், விசித்ரசம்பவங்கள், எத்தனையோ அபாயங்கள், ஆபத்துகள், எவ்வளவோ திருட்டுப்பயம். அக்காலத்தில் இந்த யாத்ரையைச் செய்துமுடிக்க எத்தனை நாட்கள் செல்லுமோ, அத்தனை நாட்களுள் இப்போது பூப்ரதக்ஷணமே செய்துவிடலாம். ப்ரதி நகரத்திலும் பலவித விநோதகாட்சிகள் வகைவகையான கட்டடங்கள் பாடல்பெற்ற ப்ரதி ஸ்தலத்திலுமுள்ள கோயில் குளங்களில் ஸ்நாநாதி தேவதார்ச்சனைகள்; கங்கா, யமுனா நதி தீரங்களிலுள்ள பற்பல வருஷாந்த மாதாந்த சந்தைகள்; புண்ய காலங்களில் கூடும் நானாதேசத்து ஜனங்கள், அவர்கள் தம்முளுள்ள நடையுடைபாவனை வித்தியாஸங்கள்; இவ்வித அனுபவங்களுடன் கூடிய யாத்ரைகள் எவ்வளவு விசேஷமானவை. ஒருபோதும் தங்கள் க்ராம எல்லையையே தாண்டியறியாத ஸ்திரீகள் பலர் தத்தம் அந்தஸ்துகளுக்கேற்றவாறு கால் நடையாகவோ, படகு மூலமோ, மாட்டு வண்டிகளிலேறியோ சென்று, ஒரு புண்யஸ்தலம் விடாமல் தர்சித்து வருவார்கள். ஹிந்துக்கள் யாத்ரை யென்றால் வடக்கே காசி, தெற்கே ராமேசுவரமென்று ஏறக்குறைய இப்பரதகண்ட முழுவதும் போய் வந்து விடுகிறார்கள். வட இந்தியாவிலுள்ளவர்கள் வடஇந்தியா, மேலை இந்தியா முழுவதும் ஒருதரம் சுற்றிவருகிறார்கள். பல மாதகால யாத்ரைக்குப் பின்பு தங்கள் க்ராமம் திரும்பிய பின்னர், அந்நியநாடு, அந்நிய தேசாசாரம், மதாசாரம் முதலியவற்றைப்பற்றி, ஊரார்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில்சொல்ல வாரக்கணக்காய்ப் பிடிக்கும். ப்ரதி தினமும் வீட்டுவேலைகள் முடிந்தபின்னர், ஊராரெல்லாரும் யாத்ரைபோய் வந்தவர்களுடைய வீட்டில் கூட்டமாய்க்கூடி அவர்கள் சொல்லும் கதையைக் கேட்பார்கள்.

நவகுமாரருடைய மனைவியோ இதர யாத்ரிகர்களைப்போல் ஊருக்குத் திரும்பிவர வேண்டுமென்ற கருத்துடன் மதுராபுரிக்குப் புறப்படவில்லை. மரணகாலத்துக்குள் ஒருதரமாவது போய்வரவேண்டுமென்று ஹிந்துஸ்த்ரீகள் அனைவரும் விரும்பும்படியான உத்தர இந்தியா புண்ய க்ஷேத்ரங்களுக்குப் புறப்படுங்காலையில், நவகுமாரர் மனைவி தன்னுடன் இதர ஸ்த்ரீகள் சிலரைத் தன் சொந்த செலவில் அழைத்துச் சென்றாள். ஹேமலதை, சைவலினி இவர்களுடனும் ஸ்த்ரீ துணைக்காகச் சிலரும் புறப்பட்டனர். அனைவரையும் ப்ரயாணப்படுத்தி யனுப்பிவிட்டுக் கடைசியில் தகுந்த பரிவாரம், மெய்க் காப்பாளர்கள் ஸஹிதம் ஷிரீஷனும், கோகுலதாஸனும் புறப்பட்டார்கள்.

கங்காநதி வரைக்கும் நிலமார்க்கமாய்ச் செல்லவேண்டும். தேவிபுரத்து ராஜஸ்த்ரீகள் பல்லக்குகளிலும், இதரர்கள் மாட்டுவண்டியிலோ, கால் நடையாகவோ சென்றார்கள். கங்காநதியைத் தாண்டி யாத்ரிகர்கள் ராஜமஹால் வந்து சேர்ந்தார்கள்.

ஷிரீஷனும் கோகுலதாஸனும் அவ்விடம் அநேக அலுவல்கள் பார்க்கவேண்டியிருந்தது. அவர்களுடைய கார்யங்கள் எளிதில் முடிவதாக இல்லை. கானங்கோ அவர்கள் தீர்வை வசூலாகாவிட்டால் ஜப்தி செய்யலாமேயொழிய சக்ரவர்த்தியவர்களுடைய அனுமதியின்றி அவருடைய ஏஜண்டைத் திருப்பியழைக்க எவ்வித அதிகாரமுங் கிடையாது. ஆதலால் ராஜமஹலில் அதிக தாமஸம் ஏற்பட்டது. அக்காலத்தில் வங்கநாட்டுத் தலைநகராக விளங்கிய, அந்த ராஜமஹலிலுள்ள அரண்மனை, மாடமாளிகைகள், கடைத்தெருவுகள் முதலியவைகளைப் பார்ப்பதில் காலங்கழித்துவந்தார்கள் ஷிரீஷனுடன் வந்த ஸ்த்ரீ ஜனங்கள். இந்தியாவுக்கே ப்ரதான நகராகிய ஆக்ராவுக்கும், இப்பட்டணத்துக்கும் அஜகஜாந்தரமாயிருந்தது. ஆனால் இந்நகர் ஆக்ராவைப் பார்த்து அதன் ப்ரகாரம் அமைக்கப்பட்ட நகர். எங்குபார்த்தாலும் கோயில்கள், மசூதிகள், இவைகளின் ஸ்தூபிகளும் சிகரங்களுமே மலிந்துகிடந்தன. கங்காநதிக் கரையில் அமைந்திருந்தன அழகிய அந்நகரத்துக்கோட்டைகளும் மதில்களும். பரதகண்ட

த்துப் பல பாரிசங்களினின்றுமிருந்து வர்த்தகர்கள் வந்து அங்ஙகர்க் கடைத்தெருவில் குவிந்திருந்தனர். கடைத்தெருக்களி லிருந்த நாநாதேசத்து விளைபொருள்கள், ஸாமான்கள் இவைகளையெல்லாம் தேவிபுரத்து யாத்ரிகர்கள் உல்லாசமாய்க் கண்டுகளித்துக் காலங் கழித்துக்கொண்டிருந்தனர்.

கோகுலதாஸனுக்கு ராஜமஹலிலுள்ள தன் பழைய ஸ்நேஹிதர்களைக் கண்டுபேசுவதிலேயே காலங்கழிந்துகொண்டிருந்தது. ஊரிலுள்ள ப்ரதான ப்ரபுக்கள், ப்ரதானிகள் ஒவ்வொருவரும் தேவிபுரத்து ஜமீன்தாரரான விரீஷனை வரவேற்றுபசரித்து விருந்தளித்த வண்ணமாயிருந்தனர். அவ்விருந்துகளுக்கு ராஜ ஸ்த்ரீகள்கூட அழைக்கப்பட்டனர். நவகுமாரருடைய மனைவி மாத்ரம் ஒருவர் கிருஹத்துக்கும் போவதில்லை; அவர்களுக்குத் தன் கோயிலுண்டு, குளமுண்டு, ஒழிந்த வேளைக்கு ஜபமாலை யிருந்தது. ஹேமலதைதான் அவ்விருந்துகளுக்குத் தட்டாமல் போய்வருவாள். அவளுக்கு எல்லாம் நூதனமாயிருந்தன. இது தான் முதல் தடவை அவள் பெரிய பட்டணமென்பதைப் பார்த்தது. பட்டணக் காட்சிகளில் பிதாவின் மரண துக்கம் மறைந்திருந்தது. ஹேமலதை பரமானந்தமடைந்தாள்.

ஒவ்வொரு நாளும் ஒரு விருந்து. அவ்விருந்தழைப்புகளிலொன்று அவளுக்கு அதிக ஆச்சர்யத்தை விளைவித்தது. அவ்விருந்தழைப்பை அங்கீகரிப்பதா, மறுப்பதாவென்று அவளுக்கு எளிதில் புலப்படவில்லை. ராஜமஹல் ராஜ ஸபைக்கு வந்திருந்த ஒரு முஸல்மான் ஜாகீர்தாரரின் மனைவி தான் சில தினங்களுக்கு முன்னர்தான் ஆக்ராவினின்று வந்ததாகவும் அவ்விடத்துக்குச் செல்லும் தேவிபுர ஜமீன்தாரரின் மனைவியைத் தான் பெரிதும் பார்க்கவிரும்புவதாகவும் சொல்லி, ஹேமலதையை அழைத்தனுப்பினாள். ஆக்ராவிலிருக்கும் வீரநகரத்து அதிபதியைப்பற்றிய சில ஸமாசாரங்கள் தன் மூலமாய்த் தெரிந்துகொள்ளக்கூடுமென்றும் அம்மஹம்மதிய மாது குறிப்பா யுணர்த்தினாள். ஹேமலதையின் மனம் படபடவென்று அடித்துக்கொண்டது. விட்டுப் பிரிந்து வெகு காலமாகிய அந்த நண்பன் நினைவுவர அவளது இருகண்களிலும் நீர் ததும்பியது. அம்மஹம்மதிய ராணியைப் போய்க் காணவேண்டுமென்ற ஆவல் அதிகரித்தது. உடனே கணவனது யோசனையையும் அநுமதியையும் கேட்கச் சென்றாள் ஹேமலதை.

“என் ப்ரிய கண்மணீ, அந்த மகம்மதிய ராணியை அவசியம் போய்ப் பார்த்துவா. அவள் உயர்ந்த அந்தஸ்துடையவள். வங்காளத்துள் மிகப் பெரிதான ஒரு ஜாகீரின் தலைவராவர் அவளுடைய புருஷன். அவரைப் போன்ற கம்பீர வீர புருஷன் வேறெவருங் கிடையாது. அவளைப் போய்ப்பார்த்து, கூடுமானால் நமது நரேந்த்ரனைப்பற்றி ஏதாவது ஸமாசாரம் தெரிந்துவா. கண்காணாத நமது நண்பனைப்பற்றி ஸதா துக்ககரமான செய்திகளையே சொல்லுவதைத் தொழிலாகக் கொண்டிருக்கிறார் கோகுலதாஸ். உண்மையையறிய நான் அதிக ஆவலாயிருக்கிறேன். ஹேமலதே, நமது ஸ்நேஹிதன் நரேந்த்ரன் சௌக்கியமாயிருக்கிறானென்று கேட்க நீயும் ஸந்தோஷமடையமாட்டாயோ?”

“யார்தான் ஸந்தோஷமடையமாட்டார்கள்?”

“அப்படியானால்போய் அவனைப்பற்றி விசாரித்துவா. நான்போய் வீரஸிம்ஹமாகிய ஷேர் ஆப்கனையே நேரில் பார்த்து ஆக்ராவில் ஏதாவது விசேஷமுண்டா என்றறிந்து வருகிறேன்.”

அவ்வாறே ஹேமலதை மஹம்மதிய ராணியைக் கண்டுவரச் சென்றனள். அவளுடைய பல்லக்கை ஜனானா வாயில்வரைக்கும் சுமந்து சென்றார்கள். அவ்விடத்தில் ஸர்வாலங்கார பூஷிதையாக விளங்கும் அழகிற் சிறந்த மிஹ்ருந்நிஸா தேவிபுர ஜமீன்தாரிணியை வரவேற்றுபசரித்து உள்ளே அழைத்துச் சென்றாள்.

எங்கு பார்த்தாலும் விளக்குகள் ப்ரகாசமாய் எரிந்துகொண்டிருந்தன. அறைமுழுவதும் அங்கங்கே படங்களும், அழகிய படுதாக்களும், உயர்தர நிலைக்கண்ணாடிகளும் வெகு விமர்சையாய் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பொன்மயமான ஒரு பீடத்தின்மீது ஹேமலதையை உட்காரவைத்து அம்மஹம்மதிய ஸ்த்ரீரத்னம் தான் பிறிதொரு பீடத்திலுட்கார்ந்தாள். அவளுடைய கண்கள் மந்தஹாஸ பார்வையினவா யிருந்தன. அவளுடைய கோவை நிகர்த்த அதரங்களில் புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது. பார்த்தவர்களெல்லாம் ப்ரமித்து மதிமயங்கி ஏங்கி நிற்கும்படியான ரூபலாவண்யத்தையுடைய அந்த ஸௌந்தர்யவதியின் முகத்தை ஹேமலதை சிறிது நேரம் கண் கொட்டமுடியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். ஸலவைக்கல்லை யொத்த அவளுடைய லலாடத்தில் தோன்றும் ஆழ்ந்த தீர்க்காலோசனையையும் பிறரைத் தன்கீழ் யடக்கியாளும் அறிய வல்லமையையும் கண்ட ஹேமலதைக்கு அவளிடம் ஒருவித பக்தி உண்டாயிற்று.



“எனதினிய ஸஹோதரீ, என்னையொரு பொருட்படுத்தி இவ்வளவு பெரிய மனது செய்து நீ இவ்விடம் வந்தது எனக்குப் பெருமையா யிருக்கிறது. தேவிபுரத்து ராஜ குடும்பத்தைப்பற்றியும், அதன் நூதன தலைவரின் அருமை பெருமை நற்குணம் முதலியவற்றைப்பற்றியும் நான் அதிகமாய்க் கேள்விப்பட்டிருப்பதால் அவருடைய அழகிய மனைவியைக் காணாமல் ராஜமஹலை விட்டகல மனம் வராதவளாயிருந்தேன். ஹிந்து மாதர்கள் எங்களைக் காணவருவது அதிக அபரூபம். உன்னுடைய அழகுக்கேற்ப உன்னிடம் அன்பும், நல்ல மனதும் குடிகொண்டிருக்கின்றன.”

“அப்படிக்கன்று. என் வரவால் தாங்கள் கௌரவிக்கப்பட்டீர்களென்பது தப்பு வார்த்தை. தங்களது அழைப்பு, வரவேற்றுபசரிப்பாதிகளால் பெரிதும் கௌரவிக்கப்பட்டோம் என்ற மகிழ்ச்சியை நான் கொண்டிருக்கிறேன். உமது புருஷரின் ப்ரதாபத்தைப்பற்றி எனது கணவனார் நிரம்பவும் அறிந்திருக்கிறார். உமது புருஷரைப்போன்ற சௌர்யவான் இந்தப்பக்கம் ஒருவரும் இல்லையென அவர் சொல்லுகிறார். அப்பேர்ப்பட்டவருடைய கௌரவ பட்டமகிஷியைக் காணக் கொடுத்துவைத்த எனது பாக்யமே பாக்யம்!”

“ஸஹோதரீ, உனது நேத்ரங்களைப்போலவே உனது குரலும் அதிக மனோஹரமாயிருக்கின்றது. வங்காளத்து ஸ்த்ரீகள் அதி ஸௌந்தர்யவதிகள்; கருணைபொழியும் விசாலமான கண்கள், குயிலைப் பழிக்கும்படியான இனிய குரல். ஸஹோதரீ, பட்டமஹிஷியென்று மிக்க உன்னதப் பெயரிட்டழைக்க வேண்டாம். என்னை உன் ஸஹோதரியாகப் பாவித்து ஸ்நேஹ முறையாய்ப் பேசு. அதுவே எனக்குப் பரம ஸந்தோஷம்.”

“ஸஹோதரீ, ராணியாகிய நீர் உமது உயர் குலம், உன்னத பதவி இவைகளுக்கேற்றபடி மிகவும் அமைதியாய்ப் பேசுகிறீர். அதுதான் நல்லவர்களுடைய ஸ்வபாவம்.”

“எங்களுக்கென்ன உயர்பதவி, உன்னத அந்தஸ்து? நாங்கள் இந்நாட்டுக்குப் புதிதாய் வந்தவர்கள். எனது புருஷரை அடித்துத் துரத்திவிடவேண்டுமென்று கங்கணங்கட்டியிருக்கும் விரோதிகள் சிலர் இருக்கின்றனர். ஆதலால் உனது புருஷரைப்போன்ற வல்லமையுள்ள பெரிய ஜமீன்தாரர்களுடைய ஸ்நேஹிதம் எங்களுக்கு அவசியம் வேண்டியிருக்கிறது. உங்களைப்போன்றவர்களுடைய அன்பையும் ஆதரவையும் நாங்கள் பெரிதும் நாடி நிற்கின்றோம். நான் முஸல்மானாயிருந்தாலும், உன்னைப்போன்ற நல்ல அந்தஸ்து, நற்குண நல் நடவடிக்கைகளுடைய ஹிந்து மாதர்களின் நட்பை நான் பெரிதும் பாராட்டி நிற்பவள்.”

மிஹ்ருந்நிஸாவின் உத்தம அழகையும், அவளுடைய இனிய குணங்களையும், அவள் பேசிய நயமொழிகளையும், அவள் வைத்திருந்த அந்தரங்க விசுவாஸத்தையும், அவளுடைய உண்மை பாவத்தையும் கண்ட ஹேமலதை வெகு சீக்ரத்தில் அவளுடைய சிறந்த நட்டாளாய் விட்டனள். இருவரும் பரஸ்பரம் பழய நாள் நண்பர்களைப்போல் தம்முள் ஒருவருடனொருவர் மனம் விட்டுத் தாராளமாய்ப் பேசலாயினர்.

“ஸஹோதரீ, தேவிபுரத்து அதிசயங்கள், அங்குள்ள உனது வீடுவாயில், பந்துமித்ரர்கள் முதலிய க்ஷேமஸமாசாரங்களையறிய நான் ஆவலாயிருக்கின்றேன்.”

“தேவிபுரத்துத் தலைவராயிருந்த எனது தகப்பனார் சில வாரங்களுக்கு முன் மரணமாய் விட்டபடியால், இப்போது நாங்களெல்லோரும் துக்க ஸாகரத்தில் மூழ்கினவர்களாயிருக்கின்றோம். எனது தாயார் மிகுதியான தன் வாழ்நாட்களை மதுராபுரி ஸ்தலத்தில் கழிப்பதாக உத்தேசித்து அவ்விடம் செல்கின்றாள். நாங்கள் அவளுடன் சென்று அவளுக்கு அவ்விடத்தில் தேவையான ஸௌகர்

யங்களை யமைத்துவைத்துவிட்டுத் திரும்பலாமென எண்ணியிருக்கிறோம்.”

“எனது அடிமைப் பெண்களும் அவ்வாறுதான் சொன்னார்கள். உனது தகப்பனாருக்குப் புத்ர ஸம்பத்து இல்லையாம். ஆதலால் உனது புருஷர்தான் அவருக்குப்பின் ஜமீன்தாரர் பதவியை ஏற்றனராம்.”

“ஆமாம், ஸஹோதரீ; என் புருஷர்தான் தேவிபுர ஜமீன்தாரரானார். அவர் எமக்கு நெருங்கின பந்துவல்ல; இருந்தாலும் எங்கள் தேவிபுர வம்சத்தைச் சேர்ந்தவர்தான். எங்கள் குலாசாரப்படி எனது தகப்பனார் என் புருஷரை ஸ்வீகார புத்திரனாகக் கொள்ள நினைத்தார். ஆனால் என்னிடம் வைத்திருந்த அன்பின் பெருக்கினால் எனது தாயார் அவ்வித ஏற்பாட்டுக்கு அங்கீகரிக்காமல்போகவே, அவர்கள் என்னை அவருக்கு விவாஹம் செய்வித்தனர்.”

“ஸஹோதரீ, நீ மிகவும் இனிமையாய்ப் பேசுகிறாய். நீ கள்ளங் கபடொன்றுமறியாத பரிசுத்தையெனத் தோற்றுகிறது. நீ ஸகல ஸம்பத்துகளும் பெற்று நெடுங்காலம் சீரும் சிறப்புமாய் வாழ்ந்திருக்கவேண்டும். செல்வத்திலே பிறந்து, குணத்துக்கு வாழ்க்கைப்பட்டதுபோலவே நீ ஆயுள் முழுதும் ஸுகத்திலேயே காலங்கழித்து வரும்படி ஈசுவரன் கருணைபுரிவாராக! என்னைப்போல் ஊரூராய் அலைந்து பலவித கஷ்ட நிஷ்டூரங்களுக்குட்பட்ட அபாக்யவதியல்லள் நீ.”

“ஸஹோதரீ, நானோ துக்கத்தையறியாதவள், கஷ்ட நிஷ்டூரங்களுக்கு உட்படாதவள், ஊரூராய் அலையாதவள்! எனது தகப்பனார் மொகலாய ஆப்கானிய யுத்தங்களில் தன் நாட்டை யிழந்து சிறிது காலம் தேச ப்ரஷ்டராய்த் திரிந்துவந்தார். அப்போதுதான் நான் ஜனித்தது. நான் பிறந்து இரண்டு வருஷத்துக்குப் பின்னர்தான் நாங்கள் வீரநகரம் வந்தோம்!”

“ஹா! வீரநகரமா? யாரோ என் அடிமைப் பெண்கள்தான்போலும் அந்த ஸமஸ்தானத்தைப்பற்றி என்னிடம் சில சமயங்களில் பேசியிருக்கிறார்கள். அந்த ஜமனுக்கும் தேவிபுரத்துக்கும் அதிக தூரமா?”

“இரண்டும் ஒன்றுக்கொன்று அடுத்தாற்போலிருக்கிறது. ஆனால் எத்தனையோ தலைமுறைகளாக அவை இரண்டும் விரோதம் பாராட்டி வருகின்றன. பல முறை அவைகள் ஒன்றுடனொன்று கலகமிட்டுப் போரும் செய்திருக்கின்றன.”

“அவைகள் விவாஹாதி ஸம்பந்தங்கள் செய்து ஒன்று கூடினதுகூட சில ஸமயங்கள் உண்டு. அல்லவா, ஸஹோதரீ?” எனப் புன்னகையுடன் கேட்டாள் மிஹ்ருந்நிஸா.

“ஸஹோதரீ, உனது அடிமைகள் ஸகல விஷயங்களையும் உனக்குப் அப்போதைக்கப்போது சொல்லி வருகிறார்கள் போலும். நீ சொல்வது உண்மைதான்.”

“என் ப்ரிய ஸஹோதரீ, என் அடிமைகள் முழுமூடங்கள். இங்கு வருமுன் இந்த மாகாணத்தைப்பற்றியும் இம்மாகாணத்திலுள்ள வீரசூரர்கள், ஜமீன்தாரர், ஜாகீர்தாரர்கள் இவர்களைப்பற்றியும் பொதுவாய் விஷயங்களை யறிய ப்ரயத்னப்பட்டேன். நீ ஏன் வீரநகரத்திலிருந்தனை? எவ்வளவு காலம் அங்கு இருந்தனை?”

“அந்தக் கதையை ஏன் கேட்கிறாய்! என் தகப்பனார்தான் தன் நாட்டையிழந்து அலைந்து திரிந்து கொண்டிருந்தாரென முன்னமே சொன்னேனே. அவ்வாறு அலையும்போது வீரநகரத்ததிபதி மரணமடைந்தார். பட்டத்துக்கு வரவேண்டியவன் சிறுபிள்ளை. சக்ரவர்த்தியவர்கள் என் தகப்பனாரை யழைத்து, அந்தச் சிறுபிள்ளைக்கு வயது வரும்வரையில், அந்த ஜமீன் வ்யவஹாரங்களை மேல்பார்த்து வரும்படி கட்டளையிட்டார். ஆதலால். அங்கு சென்று பத்துப் பதினோராண்டு காலம் அவ்விடம் இருந்தோம். பிறகு தேவிபுரம் திரும்பிக் கைக்குவர வீரநகரத்தை விட்டுச் சென்றோம்.”

“இப்போது எல்லாம் தெரிந்தது. வீரநகரத்து வாலிபர் இப்போது யுக்தவயதடைந்து தன் ஜமீனைத் தானே பரிபாலித்து வருகிறார் போலும்!”

“இல்லை, ஸஹோதரீ, அவர் கதை வேறு” எனக்கூறிச் சற்று நிதானித்து மறுபடியும் பேசலானாள். “அவர் ஏதோ காரணத்தால் தேசப்ரஷ்டம் செய்யப்பட்டார்; யுத்தத்துக்குச் சென்று பலத்த காயம்பட்டு ஆக்ராவுக்குக் கொண்டுபோகப்பட்டிருக்கிறார். அவரைப்பற்றி ஆக்ராவில் நீ ஏதாவது கேள்விப்



பட்டிருக்கலாமே” என்று சொல்லும்போது கண்களில் தானே நீர் பெருக ஹேமலதை அதைப் பிறரறியாதபடித் துடைத்துக்கொள்ள வீணே முயன்றனள்.

“அவர் பெயரென்ன?”

“அவர் பெயர் நரேந்த்ரநாதர்.”

அறையிலிருந்த விளக்குகள் மங்கலடைந்தன. அவைகளைத் தூண்ட இருவருக்கும் இஷ்டமில்லை. ஹேமலதையின் புருவம் சிறிது நிறம் மாறியது. பாரஸீஹ ஸ்த்ரீ தலைகுனிந்து பூமியை நோக்கலானாள். அவளுடைய முகம் சிறிது மாறுதலடைந்தது; ஆனால் அப்போது அவள் மனதிலெழுந்த எண்ணத்தை ஆராய்ந்தறிவது அஸாத்யமாயிருந்தது.

“முஸல்மான் ஸ்த்ரீகளாகிய நாங்கள் ஆக்ராவில் குகையிலடைக்கப்பட்டதுபோல் அடைபட்டிருக்கிறோம். வெளியுலக வ்யவஹாரங்களை நாங்கள் அறிவது துர்லபம். சக்ரவர்த்தியவர்களுடைய ஸமூகத்துக்கு வந்துபோகும் புருஷர்களைப்பற்றி எங்களுக்கொன்றும் தெரிவதில்லை. ஆனால் ஜோத்பாய் மஹாராணியின் வைத்யர்கள் அவருக்குச் சிஹித்ஸை செய்து வந்ததால், அவரைப்பற்றிக் கேள்விப்பட எனக்கு ஸந்தர்ப்பம் உண்டாயிற்று.”

“ஸஹோதரீ, அவர்கள் சொஸ்தப்படுத்தினார்களா? அவர் ஸௌக்ய மடைந்தாரா?” என்று கேட்கும்போது மிஹ்ருந்நிஸா ஹேமலதைக்கிருந்த ஆவலை யறிந்துகொண்டாள்.

மிஹ்ருந்நிஸா புன்னகை செய்து “ஸஹோதரீ, வீரநகரத்து ராஜகுமாரரைப்பற்றி நீ அதிக கவலைப்படுகிறாய் போலிருக்கிறது. அரண்மனை வைத்யர்கள் அவருடைய காயங்களை நன்றாய்க் குணமாக்கி விட்டார்கள். சக்ரவர்த்தியவர்கள் அவருக்கு நேரில் பேட்டிகொடுத்தார்கள். ராஜஸபைக்கு வரும் வீரப்ரதாபர்களைப்பற்றிச் சிலவேளை ஸ்த்ரீகளாகிய நாங்கள் கேள்விப்படுவதுண்டு. நரேந்த்ரநாதரை நேரில் பார்த்தவர்கள், இதுவரைக்கும் அத்தகைய ஸுந்தர புருஷனை ஆக்ரா ராஜஸபையில்கூடக் கண்டதில்லையெனச் சொல்லுகிறார்கள்.”

“ப்ரிய ஸஹோதரீ, இந்த ஸந்தோஷகரமான ஸமாசாரத்தைத் தெரிவித்ததற்காகக் காருண்யமூர்த்தியாகிய அந்தப் பரமாத்மா உன்னை யாசீர்வதிப்பாராக!” ஹேமலதையால் வேறொன்றும் பேசமுடியவில்லை. கண்களில் நீர் ததும்ப அவள் வாயெடுத்துப்பேச முடியாதவளானாள். மிஹ்ருந்நிஸா இதைப் பாராதவள்போல் ஜாடையாயிருந்துவிட்டாள். ஆனால் அவள் ஹேமலதையை அரைக்கண் பார்வையாய் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

ஹேமலதையின் நெற்றி, ரக்தம்போல் சிவக்க அவள் பட்டதும் படாததுமாய் “அவரை நான் அறிவேன்—நாங்கள் சிறுவர்களாயிருந்தபோது.”

“ஆ! அவர் இப்போது நல்ல யௌவன புருஷரா யிருக்கிறாரென்றும் சக்ரவர்த்தியவர்களுடைய நண்பர்களுள் அவரே சிறந்த ரூபவானெனவும் நான் கேள்விப்பட்டேன். அவ்வாறு அவர்கள் வர்ணிப்பது ஸரியா என்ற விஷயம் அவரை நேரில் கண்டிருக்கும் எனது தேவிபுர ஸஹோதரிக்கு நன்றாய்த் தெரிந்திருக்கலாம்.”

“அவர் வாலிப தசையில் நல்ல அழகுடையவராய்த்தானிருந்தார். ஆனால் அந்நாள்தொட்டு நான் அவரை இதுவரைக்கும் ஒரு முறைகூடக் கண்டதில்லை.”

“அவர் அப்போதே சற்றுப் படபடப்பும் ஆத்ரமும் சௌர்யமும் பொருந்தியவராகத் தோற்றவில்லையா?”

“என்னமோ, அப்படித்தான் சொல்லிக்கொண்டார்கள்.”

“மஹா கம்பீரமானதோர் உயர்குலத்தில்வதரித்த வள்ளலுக்கேற்ப அவர் பெருந்தன்மையும், நல்ல தாராள மனதுமுடையவரல்லவா?”

“ஆம். அப்படித்தான் நானும் நினைக்கிறேன்.” அறையில் சற்று உஷ்ணம் அதிகரிக்கவே ஹேமலதை புருவத்தைத் துடைத்துக்கொண்டாள்.

“அவர் பால்யம் முதல் உன்னை யறிவாரன்றோ? நீ சிறு பெண்ணாயிருக்கும்போதே அவர் போர்வீரன் தொழிலை நாடி உன்னை விட்டுப் போயினரல்லவா? என்மீது கோபித்துக்கொள்ளக்கூடாது. ஸாதாரணமாக ஸ்த்ரீகள் இவ்விதக் கேள்விகள் கேட்பது ஸகஜந்தானே.”

இக்கேள்விகள் ஸ்த்ரீகள் ஸகஜமாய்க் கேட்கும் கேள்விகளல்ல. சற்று அநாவசியமான

கேள்விகளேயென ஹேமலதைக்கு மனதில் பட்டது. அவைகளுக்குப் பதில் சொல்ல அவளுக்கு இஷ்டமில்லை.

"ஸஹோதரீ, யுத்தப்பயிற்சி அவருடைய குலதர்மம்; ராஜா மான்ஸிங் ப்ரபுவும் கட்டளையிட்டனர். ஆதலால் அவர் போர்த்தொழிலை நாடிச் சென்றார்" எனக் கூறும்போது ஹேமலதைக்குப் புத்தி தடுமாற்றமாயிருந்தது.

அப்பாரஸீகப்பெண் கொல்லென்று சிரித்தாள். ஹேமலதையின் தடுமாற்றம் அதிகரித்தது. "ராஜாவின் கட்டளையாயினும் ஸரி, சக்கரவர்த்தியவர்களுடைய ஆக்கினையேயாயினும் ஸரி. அதற்காக உன்னைப்போன்ற இனிய நட்டாளைவிட்டுப் பிரிந்து சென்ற அவருடைய சௌர்யமும் ஒரு சௌர்யமா?" என்றனள் மிஹ்ருந்நிஸா.

ஹேமலதை அதிக பொறுமைசாலி; மஹா சாந்தகுணமுடையவள். இருந்தாலும் அவளுக்குக் கோபமுண்டாயிற்று. இக்கேள்விகள் அவளுக்கு மனோ வருத்தத்தை யுண்டு பண்ணின. அவள் தன் புருவத்தை நெறித்துக்கொண்டாள். வ்யாதியஸ்தனுடைய வருத்தத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல் தன் கத்தியைப் பரபரவென்று ப்ரயோகிக்கும் ரணவைத்யனை யொப்ப, ஹேமலதையின் மனோநிலையைத் தான் அறியாததுபோல் அம் மஹம்மதிய மாது பின்னும் அதிக க்ரூரமான கேள்விகளைக் கேட்கலாயினள்.

"என்னன்பான ஸஹோதரீ, நான் அவரைப்பற்றி அவ்வாறு அபிப்பிராயப்படுவது தப்பாயிருக்கலாம். அவர் மஹா தைர்யசாலியெனவும் நம்பினோரைக் கைவிடாத உத்தமரெனவும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு வேளை அவர் இன்னும் தன் பால்ய ஸ்நேஹிதையை மறந்துவிடவில்லை போலும்! அவர் இன்னும் கல்யாணம் செய்துகொள்ளவில்லையாமே."

ஹேமலதை இனிப் பொறுக்கமுடியாதவளாய்த் தன்னிடத்தை விட்டெழுந்தாள். அவளுக்கு மயக்கமாயிருந்தது; அவ்வறையும் அங்கு நடந்த ஸம்பாஷணையும் அவளுக்குப் பெரிதும் கஷ்டமாயிருந்தன. மிஹ்ருந்நிஸாவுக்கு வந்தனம் புரிந்து நடுங்கிய குரலாய்ப் பேசலானாள்.

"ராணிஸாஹிபா, நாழிகைக்குப் போய்வர விடையளிக்கவே... ...கள் வழக்கங்களை நீர் அறியாதவ... எங்களுள் புருஷர்கள் தம் நாயகிக... பெண்மணிகள் தமது புருஷர்களைய... ஸ்வயமாய் நாடுவதில்லை. எங்கள் பெற்றோர் எங்களுக்குப் புருஷர் பெண்சாதிகளை நிச்சயம் செய்வார்கள். அவர்கள் நிச்சயித்த புருஷருக்குத் தர்மபத்னியாக ஒழுகவேண்டுவது எங்கள் கடமை. எங்கள் மதம் போதிப்பதும் அவ்வாறே. பெற்றோர்கள் நிச்சயித்த புருஷரைத் தலைவராகக்கொண்டு அவர் மனங்கோணாமல் நடந்து, நல்ல பதிவ்ரதா ஸ்த்ரீக்கேற்ப நடந்துகொள்ளும் பெண்மணிகள் என்றைக்கும் பகவானுடைய க்ருபைக்குப் பாத்ரராகிறார்கள்."

ஹேமலதையின் மனோநிலைமையை நன்குணர்ந்தும் மிஹ்ருந்நிஸா மனமிரங்கவில்லை. ஹேமலதை கடைசியாய்க் கூறிய மொழிகளின் பொருளை நன்றாய் க்ரஹித்தும் மரணாவஸ்தையிலிருக்கும் ஒரு சிறிய பக்ஷியை வேடிக்கையாகப் பின்னுமதிகமாய்த் துன்புறுத்தும் பூனையைப்போல் மிஹ்ருந்நிஸா தன் அன்பான ஸஹோதரியை இன்னும் விடவில்லை.

"தேவிப்ரத்து ஸுந்தரியே, உட்கார். இன்னும் சற்று நேரம் இருந்துவிட்டுப் போகலாம். இவ்வளவு சிரமப்பட்டு வந்து, இத்தனை சீக்ரம் போய்விடுவதா. உனது மதபோதனைகள் அனைத்தையும் நான் அறிவேன். எங்கள் மதம் சொல்வதற்கும் அதற்கும் அதிக வித்யாஸமில்லை; ஆனால் எங்கள் முல்லாக்கள் புருஷர்கள் தங்களிஷ்டமானவர்களை மணம் புரிந்து தங்கள் மனப்போக்கின்படி போவதைத் தடைசெய்வதில்லையல்லவா, ஸஹோதரீ?"

"அவ்வாறு மனம்போன போக்கெல்லாம் போவது அதர்மமான கார்யம்; பாபத்துக்கிடமானது. பிறர் மனைவியைப்பற்றி நினைப்பது கூட தர்மவிரோதமான கார்யம்."

"ஸஹோதரீ, மனிதர்கள் பாப ஸ்வபாவமுடையவர்கள் அன்றோ? தம் கையை விட்டகன்று பிறர்வசப்பட்ட நாரீமணிகளைப்பற்றி அவர்கள் நினைக்காமலிருப்பார்களா? நான் சொல்வது ஆச்சர்யமாயிருக்கலாம், அவ்வாறு



விவாஹமான பெண்மணிகள்கூட சில வேளைகளில் தங்களுடைய உருவத்தையும் ஸௌந்தர்யத்தையும் மறவாது சிந்தனைசெய்யும் பழய நண்பர்களை மன்னிக்கிறார்கள். இது உண்மையன்றோ?"

இம்மொழிகள் ஹேமலதைக்குக் கர்ணகடோரமாயிருந்தன. ப்ரதி வார்த்தையும் அவள் மனதில் அம்புபோல் பாய்ந்தது. ஒரு வேளை மிஹ்ருந்நிஸா சொன்னது உண்மைதானோ, என்னமோ. ஹேமலதைக்குக் கோபமும் ரோஷமும் அஸாத்யமாய் வந்துவிட்டது. "நீர் இவ்வாறு பேசுவீர்களென்று நான் சிறிதும் எண்ணியிருக்கவில்லை. நீர் தெரிவித்த ஸந்தோஷ க்ஷேமஸமாசாரத்துக்காக நான் வந்தனம் புரிகிறேன். இப்போது போக விடைகொடும்" என்றாள் ஹேமலதை.

மிஹ்ருந்நிஸா தன் விளையாட்டை யொழித்துவிட்டு "ஸஹோதரீ, உட்கார். ஒரு வார்த்தை கேட்டுவிட்டுப் போகலாம். நான் நேரில் நரேந்த்ரநாதரை இக்கண்களால் பார்த்துள்ளேன். எங்கு கண்டேன், எவ்வாறு கண்டேன் அதைப்பற்றி அவசியமில்லை. நான் இதுவரைக்கும் எத்தனையோ அரசிளங்குமரர்களையும் ப்ரபுக்களையும் பார்த்திருக்கிறேன். ஆனால் உனது பால்ய நண்பரைப் போன்ற யதார்த்தவாதியையும் வீரபுருஷனையும் கண்டதில்லை. ப்ரிய ஸஹோதரீ, எனக்குத் தெரிந்த மட்டில் நான் தீரமாய்ச் சொல்வேன், அவர் இன்னும் தன் பால்ய ஸ்நேகிதையான பெண்மணியை மறக்கவில்லை."

ஹேமலதை உடல் முழுவதும் நடுங்கினாள்; அவளுக்கு மூர்ச்சையாகும்போலிருந்தது. பதில் சொல்ல நாவெழவில்லை.

"உனது பூர்வ சரிதையையும், நரேந்த்ரநாதருடைய பூர்வ வ்ருத்தாந்தத்தையும் அறிய மனங்கொண்டு கேட்ட கேள்விகளால் உன் மனம் வருந்தியதுபோலும். அவ்வாறு செய்திருந்தால் மன்னிக்கவேண்டும். அவைகள் கேவலம் ஸ்த்ரீ ஜாதியின் நச்சுஸ்வபாவத்தால் பிறந்த கேள்விகளுமன்று; அல்லது உன் மனதைத் துன்புறுத்த வேண்டுமென்று கேட்டவையுமல்ல; உன் அந்தரங்கங்களைக் கண்டறிய வேண்டுமென்ற துர் அவா கொண்டவளுமல்லள். நான் அறிந்த ஒரு ஸ்த்ரீயின் சரித்ரமும் உன்னுடைய சரித்ரமும் விதிவசத்தால் பல அம்சங்களில் ஒத்திருக்கின்றன."

சற்றுநேரம் இருவரும் வாய்திறக்கவில்லை. விளக்குகள் அதிக மங்கலாயிருந்தன. அவ்வாறு அதிசயமாகப் பேசும் அந்த ஸ்த்ரீயின் முகம் ஹேமலதைக்கு நன்றாய்ப் புலப்படவில்லை.

"இந்த ஹிந்துஸ்தானத்திலேயே இணையில்லாத உன்னத பதவியோனாகிய ஒருவரால் காதலிக்கப்பட்ட ஒரு ஸ்த்ரீயை நான் அறிவேன். அவள் இப்போது இன்னொருவரை மணம் புரிந்திருக்கிறாள். ஆனால் அவளுடைய காதலர் இன்றைக்கும் அவளது ஞாபகமாகவே யிருக்கிறார்."

ஹேமலதை புறப்பட எழுந்தாள்.

"எனது ஹிந்து ஸஹோதரியே, ஹிந்துக்களுள்ளும் மஹம்மதியர்களுள்ளும் இதற்கு முன் இவ்வித ஸம்பவங்கள் நடந்திருக்கின்றன. இன்னும் உன் அந்தரங்கங்களையறிய நான் நாடவில்லை. என்னால் உண்டான மனவருத்தத்துக்காக நீ என்னை மன்னிக்கவேண்டும். ஆனால் உன் சரித்திரத்தில் எனக்கு ஒருவித அக்கறை ஏற்பட்டிருக்கிறது. உன் சரித்ரமும்—நான் சொன்னேனே அந்த ஸ்த்ரீயின் சரித்ரமும்—அநேகமாய் ஒத்திருக்கின்றது. அவள் தான் இப்போது மணம்புரிந்திருக்கும் நாயகனிடம் அதிக ஆசைகொண்டு அவர் மனதுக்கிசைந்த தர்மபத்னியாய் விளங்குகின்றாள். ஆனால் அவள் கொஞ்சத்தில் இழந்தாள் இப்பூவலகில் ஸரிஸமானமற்ற நவரத்ன ஸிம்ஹாஸனமொன்றை!"

ஷேர் ஆப்கனை மனப்பூர்வமாய் உள்ளன்புடன் நேசித்து அவருடைய தர்ம பத்னியாயிருந்தும் தனக்குக் கிடைத்திருக்கக்கூடிய அந்தஸ்தை அடிக்கடி நினைத்துக் கொண்டிருந்த மிஹ்ருந்நிஸா இவ்வாறு தன் மனதிலுள்ளதை வெளிக்குச் சொல்லி முடித்தாள். தன் விருந்தாளி தன்னை விட்டகன்ற பின்னர், அவ்வறையின் மங்கிய ஒளியில் ஏகாந்தமாய் உட்கார்ந்து அம்மாது சிரோமணி இன்னும் தான் ஆசியா கண்டத்து ப்ரபலமான பாரதவர்ஷ ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருக்கக்கூடுமென்று கனவு கண்டனளா?

மாதவீகங்கணம்

மூன்றாம் பாகம் முற்றிற்று.

# மாணவர் பக்கங்கள்
## STUDENTS' PAGES
## S. S. L. C. 1913

*III. Translate*:—

The spot where she left me was a very deep valley encompassed on all sides by mountains, that seemed to reach above the clouds, and so steep, that there was no possibility of climbing them. As I walked through this valley, I perceived it was strewn with diamonds, some of which were of a surprising size. I took pleasure in looking upon them; but shortly saw at a distance such objects as greatly diminished my satisfaction, and which I could not view without terror, namely, a great number of serpents, so monstrous that the least of them would have swallowed an elephant with ease. They retired in the day-time to their dens and came out only in the night.

I spent the day in walking about in the valley resting myself at times in such places as I thought most convenient. When night came on, I went into a small cave, where I thought I might repose in safety. I secured the entrance which was low and narrow with a stone large enough, to protect me from the serpents, but which yet allowed a little light to pass into the cave. I supped on a part of my provisions, but the serpents, which began hissing round me, put me into such extreme fear that I did not sleep. When day appeared, the serpents retired and I came out of the cave trembling. I can justly say that I walked upon diamonds, without feeling the least desire to possess them. At last I sat down and, notwithstanding my apprehensions, after making another meal off my provisions, I fell asleep, for I had not once closed my eyes during all the previous night.

என்னை அவள் விட்டுப்போன இடம் மேகமண்டலத்தைத் தாண்டி அப்பாற்பட்டு உயர்ந்துள்ளதுபோலத் தோற்றும் மலைகளால் சூழப்பட்ட மிகுந்த ஆழமான பள்ளத்தாக்காகவிருந்தது. மலைகளும் மிகச் செங்குத்தாகவிருந்தன. ஆதலால் அவைகளை ஏறித்தாண்டமுடியும் என்ற எண்ணத்திற்கு இடமேயில்லை. இப்பள்ளத்தாக்கின்வழி உலாவிப்பார்க்கையில் வைரக்கற்கள் அங்கு ஏராளமாக இறைந்து கிடந்ததைக் கண்ணுற்றேன். அவைகளில் சில வியப்புண்டாக்கத்தக்க பருமனுடனிருந்தன. அவைகளைக் கண்ணாரக் காணுவதிலேயே எனக்கு மிகக் களிப்புண்டாயிற்று. ஆனால் உடனே இந்த திருப்தியைமிகக் குறைத்துவிடக்கூடியவை கொஞ்ச தூரத்தில் என் கண்முன் தோன்றின. அவைகளைக் கண்டதும் மிகுந்த பயமும் நடுக்கமும் உண்டாய்விட்டன. அவை கூட்டமாகக் காணப்பட்ட பல பாம்புகளே. அவைகள் மிகப் பெரியவைகளாகவும் காணப்பட்டன! அவைகளுள் மிகச் சிறியவையாகக் காணப்பட்டவைகள் ஒரு யானையை வெகு எளிதாக விழுங்கிவிடும் தன்மையுடனிருந்தன. அவைகள் பகற்பொழுதில் தமது குகைகளில் சென்று அடைந்திருந்து இரவில் மாத்திரம் வெளிப்பட்டுலாவின.

அப்பள்ளத்தாக்கில் நாற்புறமும் உலாவிக்கொண்டு, இடையிடையே எனக்கு இசைந்தனவாகக் காணப்பட்ட விடங்களில் இளைப்பாறி அந்தப் பகல் முழுவதையும் கழித்தேன். இரவு வந்து மூடிக்கொண்டதும் அச்சமின்றி உறங்கக்கூடியது என்று எனக்குத் தோன்றிய சிறு குகையுள் புகுந்துகொண்டேன். தாழ்ந்தும் குறுகலுமாக அமைந்திருந்த குகையின் வாயைப் பாம்புகள் நுழையவொட்டாதபடி தகுந்த பருமனுடைய கல்லால் அடைத்துவிட்டேன். ஆனால் வெளிச்சம் குகையுள் வந்து தாக்கவேண்டிய இடுக்குக்கள் அந்த கற் கதவில் காணப்பட்டன. நான் கொண்டுவந்த உணவில் கொஞ்சம் உட்கொண்டேன். ஆனால் என்னைச் சுற்றிப் பாம்புகள் சீறத் தொடங்கிவிட்டபடியால் பயத்தால் எனக்கு அன்றிரவு உறக்கமே பிடிக்கவில்லை. பொழுது விடிந்ததும் பாம்புகள் ஒதுங்கிவிட நடுநடுங்கிக்கொண்டு நான் குகையை விட்டு வெளியேறினேன். வைரங்களை எடுத்துக் கொண்டுவிடவேண்டுமென்ற ஆவல் கொஞ்சங்கூட இல்லாமலே நான் அப்பொழுது அவைகள் மேலேயே நடந்து உலாவி வந்தேன் என்று நன்றாகக் கூறிவிடலாம். முடிவில் ஓரிடத்தில் வந்து உட்கார்ந்து, இன்னொரு முறை என் உணவு மூட்டையிலிருந்து கொஞ்சம் எடுத்து உண்டேன். முன்னிரவில் ஒருதரம்கூடக் கண்கொட்டாமலே இருந்துவிட்டபடியால், எவ்வளவு அச்சமிருந்தபோதிலும் தூக்கத்தில் மூழ்கிவிட்டேன்.



# சிறுவர்களுக்கான பக்கங்கள்
## CHILDREN'S PAGES
### நகுஷன் சரித்திரம்
### 3. திண்டாடி நல்லுணர் வுற்றது.

நகுஷனுக்கு, முன் காட்டியபடி, கோதானச் சிறப்பு விளங்கியதும், முன்னைவிடப் பல மடங்கு வைதிக கர்மாக்களை ஒழுங்காக விடாது பின்பற்றப்பேராவல் உண்டாயிற்று. ஆனால் விஷய ஸுகப்பற்று மாத்திரம் அவனை விட்டு விலகிய பாடில்லை. இதை முன்னிட்டு ஸ்வர்க்கத்தில் சிறந்த ஸுகம் வந்தமையவேண்டியதற்கு பல வைதிக கர்மாக்களைத் திடமான விஷயஇச்சையுடன் அவன் செய்து வந்தான். இதனால் இவன் கர்மப்பிடிப்பும் ஒழுங்குமீறாச் சிறப்பும் பலவிதமான தேவவர்க்கங்களுக்கும் நன்றாகத் தெரிந்திருந்தது.

இப்படியிருக்கையில், இந்திரனுக்கு விருத்ராஸுரவதத்தால் ப்ரஹ்மஹத்தித்தாக்கு ஏற்பட, அவன் தன்னிலையை விட்டுவிலகிப் பயந்து ஒரு பெரிய குளத்தில் தாமரைத்தண்டுள் மறைந்து வாழும்படி நேரிட்டது. அக்காலத்தில் தேவதைகள் தமக்கு ராஜனில்லாது வருந்தி, நகுஷன் பெருமையில் ஈடுபட்டு அவனையே தமக்கு இந்திரனாக இருந்து பழைய இந்திரன் வந்து சேருமளவும் அரசாளும்படி வேண்டிக் கொண்டனர். அதற்கு நகுஷன் தனக்கு அந்தப் பெரிய பதவியைத் தாங்கும் ஆற்றல் இல்லை யென்று தயங்கி நிற்க, தேவதைகள் எல்லோரும் தமது தபோபலத்தால் நகுஷனுக்கு அவசியமான சீரும் சிறப்பும் ஆற்றலும் ஏற்படும்படி அனுக்ரஹித்து அவனையே இந்திரனாக்கினர்.

இம்மாதிரியான கிடைப்பதற்கரிய மேலான பதவி வந்ததும், அவனிடமிருந்த விஷயப்பற்று வரம்பு மீறி, அவனைக் கெடுக்கத்தொடங்கியது. ஏதோ சிறுகாலம் தேவதைகள் பலத்தால் அவன் இந்திரபதவிக்கு வந்தும், இந்திரன் கடமைகளை ஸரிவரச் செய்து முடித்து வரம்புள் நின்று சிறப்புற்று விளங்கி மேல் போகவேண்டிய வழிக்குத் தகுந்தவைகளைத் தேடிக்கொள்ளாது, 'நான் முன் செய்துள்ள ஸத்கர்மாக்களின் பல காலம் இதுதான். இப்பொழுதே எல்லா ஸுகங்களையும் அனுபவித்துவிடவேண்டும். இத்தருணம் தப்பினால் எத்தருணம் வாய்க்குமோ' என்று அவன் எண்ணமிடத் தொடங்கிவிட்டான். இப்படியிருக்கையில், இந்திரன் பெண்சாதி இந்திராணி அவன் முன் தென்பட, தான் அவளை மனைவியாக்கிக்கொள்ள வேண்டும் என்ற பேராசை அவனுக்கு வந்துவிட்டது. அப்படிச் செய்துகொள்வதுதான் தன் முயற்சிகளுக்கெல்லாம் தக்கபலனென்று அவனுக்கப்பொழுது பட்டது. உடனே அச்சசீதேவியைத் தன்னிடம் கொண்டு விடும்படி தேவதைகளுக்குக் கட்டளையிட்டான்.

தேவதைகள், அவன் அப்படிச் செய்யலாகாது, என்று பலவாறாக, அவன் நிலை, இந்திரன் கஷ்டகாலம், இந்திராணியின் கற்பு இவைகளை எடுத்துக் கூறிப் பார்த்தனர். நகுஷனுக்கு அந்தத் தொழிலால் சிறப்பொன்றும் வாராமலிருப்பதோடுங் கூட, பிறன் மனைவியைக் கைப்பற்றிய கொடிய பாபம்கூட வரும் என்ற புத்திமதியும் கூறினர் தேவதைகள். என்ன சொல்லியும் நகுஷனுக்குத் தன் கெடுமதி விளங்கவே இல்லை. அவன் பலவிதமாகத் துர்க்கக்ஷிகள் பேசி எப்படியாவது இந்திராணியைத் தன் மனைவியாக்கிவிடத்தான் வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தான்.

என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றாமல் இந்திராணியையே தேடிச் சென்றனர் தேவதைகள். அவள் தேவ குருவான ப்ருஹஸ்பதியிடம் போய்ச் சரணம் புகுந்திருந்தாள். ஆசார்யன் வீட்டிற்குத் தேவர்கள் போய் நகுஷன் பிடிவாதத்தை எடுத்துக் கூறி, இந்திராணியை நகுஷன் முன் கொண்டு போகாமல் எப்படியிருப்பது என்று ஆலோசிக்கலாயினர். ப்ருஹஸ்பதியும், இப்படிக் கற்புக் குலையும் ஆபத்து வேளையில் தம்மிடம் வந்து சரணம் புகுந்த சிஷ்யவதியைத் தாம் கைவிட முடியாது என்று தடுத்துவிட்டனர். இவர்கள் எல்லோரும் கூடி வாதாடியதில் இந்திராணியை நகுஷனிடம் அழைத்துச் சென்று ஒரு வருஷம் தவணை கேட்கும்படி செய்தால் நலமாக இருக்கும் என்ற தீர்மானம் பிறந்தது. ப்ருஹஸ்பதியும் இதற்கு முடிவில் இணங்கினார்.

இந்திராணியும் குரு உத்தரவைத் தலைமேல் கொண்டு நகுஷனிடம் சென்று, 'ஐயா!

உமது கருத்திற்கிசைய எனக்கு ஒரு தடையுள்ளது. என் புருஷன் இருக்குமிடம் தேடியுணர முயற்சிக்க ஒரு வருஷம் இடைவெளி தரவேண்டும். அதற்குள் அவரைப்பற்றி ஒன்றும் தெரியவரவில்லையாகில் உமக்கு மனைவியாகத் தடையொன்று மிராது. சற்றுப்பொறும்' என்று மிகுந்த மினுக்குடன் பேசி முடித்தாள். இவள் குரலைக் கேட்டதுமே நகுஷன் மயங்கிவிட்டான்; இவளைக் கண்கொண்டு நன்றாகக் கண்டதும் மெய்ம்மறந்திட்டான். 'உன் கருத்துக்கிணங்கத் தடையில்லை' என்ற மொழி அவன் காதில் விழுந்ததும் ஆனந்தக் கடலில் மூழ்கிவிட்டான்' அப்படியே செய்யலாம்' என்று இசையாதிருக்க அவனால் எப்படிமுடியும்!

அன்று முதல் இந்திராணி விரதானுஷ்டானம் தொடங்கி, அதில் முன்தோன்றிய தேவதை உதவியால் பரிசுத்தமடைந்து, காலத்தை எதிர்பார்த்துத் தாமரைத் தண்டுள் ஒளித்திருந்த தன் கணவனை நேரிடக்கண்டு, வெளிவந்து தன்னைக் காக்கும்படி வேண்டினாள். அதற்கு அவன் 'காலம் எனக்கு இப்பொழுது இசைந்ததாயில்லை. நகுஷன் எப்பொழுது உன்னை விரும்பித் தன்தொழில் கருதாதிருக்கத் தொடங்கி விட்டானோ, அப்பொழுதே அவனுக்குக் கெடுங்காலம் வந்துவிட்டது. அவன் விலகினால்தான் நான் வெளிவர முடியும். தேவதைகளே பார்த்துப் பதவி தந்துள்ள நகுஷனை நானாகத் திடீரென்று எப்படி நீக்குவது? அவர்களேதான் அதைச் செய்யவேண்டும்' என்று கூறித் தன் மனைவியைத் தேற்றினான். 'இப்படிநீரும் இப்பொழுதுகைவிட்டால் என்கதி என்ன?' என்று மன்றாடினாள் இந்திராணி. அப்பொழுது இந்திரன், 'நான் உன்னிடம் வருகையில் அதிகார தோரணையில் பல்லக்கேறி பெரிய தேவதைகள் ரிஷிகள் முதலியவர்களால் சுமக்கப்பட்டுவருவதுபோல அவனையும் உன்னிடம் வரச்சொல்லிஇணங்கிவிடு. அவன் கொடுமை அவனையே மாய்த்துவிடும், பின்னர் நான் வந்துவிடுகிறேன்' என்று யுக்தி சொல்லிக்கொடுத்தான்.

இதைக்கேட்டு மகிழ்ந்து இந்திராணி நகுஷனிடம் வந்து 'எங்கு தேடியும் என் காரியம் கைகூடவில்லை. இனி உமக்கு நான் மனைவியாக வேண்டியதுதான், நீர் பழைய இந்திரன் தேவதைகளாலும் ரிஷிகளாலும் சுமக்கப்பட்ட பல்லக்கில் என்னிடவரும் அதிகார தோரணையில் கூடிய சீக்கிரம் வரலாம்' என்று கூறிவிட்டுத் தன் இருப்பிடம் சென்றாள். உடனே நகுஷன் இந்திரனை இந்த மாப்பிள்ளைக் கோலத்தில் மிஞ்சிவிட எண்ணி, ஸப்த ப்ரஹ்மருஷிகளையே தன் மணப்பல்லக்கைச் சுமக்க ஏற்பாடுசெய்து புறப்பட்டான், இந்திராணியைப் பெண்டாள. அதிகாரச் சிறப்பைத் தாமாக ஏற்றிவைத்த ரிஷிகளும் இதற்கிணங்கினர். போகும் வழியில் ரிஷிகள் கேட்ட வைதிககேள்விகளுக்கு இறுமாப்பான அவைதிகப்பதில் நகுஷன்கூற, அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. அகஸ்தியர் மெதுவாக நடந்ததையும் அதிகமாகப் பேசியதையுமுணர்ந்த நகுஷன் வேகமாகப் போ என்று பொருள்பட, 'ஸர்ப்ப, ஸர்ப்ப' என்று கூறி அவர் தோளில் தன் காலையும் வைத்துவிட்டான். நகுஷன் செய்த புண்யங்கள் எல்லாம் இதனால் ஓய்ந்ததைக் கண்ட அகஸ்தியர் அவனுக்குச் சாபரூபமான அனுக்ரஹம் செய்யக்கருதி 'நீ பெரும் மலைப்பாம்பாகக் கடவாய்' என்று கூறிவிட்டார். அங்கிருந்தே நகுஷன் மலைப்பாம்பாக பூமியைநோக்கி விழத்தொடங்கினான் உடனே அவனுக்கு. விஷயானுபவப்பற்றுக் கழன்றது. 'எனக்கென்ன கதி?' என்று கதறினான் அகஸ்தியரை நோக்கி. அதற்கவர், 'போகலாம் ஹிமாலயத்தை நோக்கி விழு. உனக்குப் பகலில் மூன்றும் ஜாமத்திற்குமேல் கிடைக்கும் இரையை உண்டு காலங்கழி. அந்தக் காலத்தில் என்ன பலமுடைய ப்ராணியும் உன்னிடம் அகப்பட்டால் சக்தியிழந்து உனக்குட்படும். அப்படி வெகுகால மிருந்தபின்னர், ஜீவேச்வரப் பொருத்தமுணர்ந்த ஒருவன் உன் கேள்விகளுக்குப் பதிலுரைக்க ஐயம் தீர்ந்து ஈடேறக் கடவாய். பட்டுத்தான் தீரவேண்டும் உன் பாப வேகம்' என்று கூறினர் அகஸ்தியர்.

இதனால் விஷயஸுகப்பற்றின் கொடுமை விளங்கிவிட்டது நகுஷனுக்கு. மேலும், பல ஸத்கர்ம பலத்தால் ஸ்வர்க்கம் புகுந்தும், தன்னை விஷய ஆசை கழுதையாக்கி விட்டதே என்று நன்றாக அவனுக்குத் தோன்றிவிட்டது, இந்தக் கஷ்ட ஸமயத்தில். ஸ்யூமரச்மி வேதநுட்பம் கூறியது, நன்றாக ஞாபகம்



வந்தது அப்பொழுது அவனுக்கு. உலகிலுள்ள ஸுகங்கள் எல்லாம் ஒரு வரம்புக்குட்பட்டு அடிக்கடி துக்கங்களுடன் கலந்து வருவதால் அவனுக்கு உலக விஷயங்களில் தன் விஷயப்பற்றின் பலம் வெளிப்படவில்லை. அவைகளை அவனால் தகுந்த முகாந்தரத்தால் துக்கமென நீக்க முடிந்தது. துக்கக்கலப்பே இல்லாத ஸ்வர்க்க ஸுகங்களைக்கண்டதும் அவனுக்கு இந்த விஷயப்பற்று முழுபலத்தோடுவெளிப்பட்டு அவனுக்கதன் கொடுமை விளங்கும்படி செய்துவிட்டது. சிறு லஞ்சங்கள் வாங்காது காலம் தள்ளிய சில உத்யோகஸ்தர் லக்ஷக் கணக்கான தொகைக்கு ஈடுபட்டுக்கெடுவதுபோல ஆயிற்று நகுஷன் கதி. ஸ்யூமரச்மியும் கபிலரும் வெகுகாலம் வாதாடியதின் நுட்பம் இப்பொழுதுதான் நன்கு விளங்கியது இவனுக்கு—"வீணாக அரிய வைதிக கர்மாக்களை அனுஷ்டித்தும் அவைகளின் சிறந்த பலனை அடைய முடியாமற்போயிற்றே! குங்குமம் சுமந்த கழுதைக்கும் நமக்கும் என்ன பேதம்? குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டு விட்டோமே! ஸ்வர்க்க விஷய ஸுகத்திற்கும் உலக ஸுகத்திற்கும் அதிக பேதம் காணோமே! ஸ்வர்க்கத்தில் ஸுகம் அதிகம் என்றால் அதன் முடிவில் ஏற்படும் துக்கமும் உலக துக்கத்தைவிட அதிகமாகத்தானே உள்ளது. இவ்வளவு திடீரென்றும் இவ்வளவு கொடுமையுடனும் உலகில் துக்கங்கள் வருமா? உலக விஷயங்களை வெறுத்துத் தள்ளிவிட்டபடியால் நமக்கு மேல். நீங்கா ஸுகம் வந்துவிடும் என்றல்லவா, மதிமோசம் போனோம். ஸ்வர்க்கம் சென்றும், அங்கிருந்து நழுவாது மேலே உயரப்போவதற்கு வேண்டிய, ஸ்வர்க்க விஷயப்பற்றையும் வைதிக கர்மாக்களால் அறுக்க முயலாது நமது வாணாளை வீணாக்கி, கொடிய பிராணியின் பிறவியை அடைந்துவிட்டோமே! இனியாவது எவ்வித விஷயப்பற்றுக்கும் இடங்கொடாது, நம்மை இதிலிருந்து 'ஜீவேச்வரப் பொருள் உணர்ந்தவன் நம் கேள்விகளுக்கு பதிலுரைத்து ஈடேற்ற எப்பொழுது வருவான்' என்று எதிர்பார்த்திருப்பேன், உயிரைப் பிடித்துக்கொண்டு" எனத் தீர்மானித்து இமயமலைச் சாரலில் நாளெண்ணி வருந்திவந்தான் மலைப்பாம்பான நகுஷன்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES PAGES

### தமயந்தி : (7) பொறாமை

'விண்ணரசர் நிற்க வெறுத்தேன் மணமாலை
மண்ணரசர்க் கீந்த மடமாதின்—எண்ணங் [மை
கெடுக்கின்றேன் மற்றவடன் கேள்வனுக்குங் கீழ்
கொடுக்கின்றேன்' என்றான் கொதித்து.

தமயந்தி நளனை மாலையிட்டதும், அவளது ஸ்வயம்வரத்திற்கு வந்திருந்த இந்திரன் முதலிய தேவர்கள் தமது இருப்பிடத்திற்குப் போய்க் கொண்டிருக்கும்போது, அவர் வழியில் கலிபுருஷன் துவாபரனுடன் எதிர்வரக் கண்டனர். அவனை அவர் யாது காரணத்தால் பூலோகஞ் செல்வதாகக் கேட்டனர். அதற்கு 'அங்கு விதர்ப்ப தேசத்து அரசன் வீமனது மகளாகிய தமயந்திக்கு ஸ்வயம்வரம் நடப்பதாகக் கேள்வி, அவள் அழகிற்கு அழகு செய்பவளாம், அவளை வரிக்க நான் செல்கின்றேன்' என்று கலி பதில் கூறினன். இதைக்கேட்ட இந்திரன், "நாங்களும் அங்கேதான் சென்றிருந்தோம். தமயந்தி, நளனென்னும் உத்தமகுணம் வாய்ந்த நிஷதநாட்டிற்கரசனைக் கணவனாக வரித்தனள், ஸ்வயம்வரம் முடிந்துவிட்டது. ஆகையால் நாங்கள் எங்களது இருப்பிடம் அடையப்போகிறோம்" என்று சொல்லித் தம்முடன் வரும்படி கலியையழைத்தான்.

கலிக்குக் கோபம் வந்துவிட்டது. "பலே பலே! எந்தப் பெண், தேவர்கள் தனது கரத்தை விரும்பியிருக்க, அவர் முன்னேயே, சிறிதும் வணக்கம் பயம் இல்லாது, மனிதனைத் தனது கணவனாக வரிப்பவள்?. அப்பேர்ப்பட்டவளைச் சும்மா விடலாகாது; தண்டித்தல் பரம நியாயம். என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கலி ஆத்திரத்துடன் கேட்டான்.

"கலிபுருஷ! உனது கோபமடாது. அந்தத் தமயந்தியும் நளனும் ஒவ்வொருவரும் உத்தம குணத்தினர். அவர்மேல் கோபித்தல் இம்மூவுலகும் தாங்காது. நளனோ

வாய்மையும், செங்கோல் வளனும், மனத்தின்கண்
தூய்மையும், கொற்றமும், தோள்வலியும்,—

பொருந்தியவன். தமயந்தியோ இம்மியுங் கற்புத் தவறாதவள்; அவள் எங்கள் முன்புதான் நளனை

வரித்தனள்; எங்களது உத்தரவின்மேல்தான் வரித்தாள். நளனை நாங்கள் பரீட்சித்திருக்கிறோம். அவன் மகா ஸத்தியஸந்தன்; நடுநிலை தவறாதவன். அவனது மணத்தைக் காண நாங்கள் களிப்புற்றோம்; ஒவ்வொருவரும் அவனது குணத்திற்கு வியந்து பலவரங்களைக் கொடுத்திருக்கிறோம். நளனைக் கண்டால் கல்லுங் கனியும்; அவனது பெருமை அத்தகையது. அவனிடம் வெறுப்புக் கொள்வது உமது பெருமைக்குக் குறைவன்றோ? எவன் தரும வழியில் நடந்து, நியாயமுணர்ந்து, சாஸ்திரங்களின் உட்கருத்தை ஆராய்ந்து, பொதுஜன ஸௌகத்தை நாடி, ஜீவஹிம்ஸை தவிர்த்து, பொய்யுரை தெரியாது, தீயதொழித்து, இன்பமளித்து, நன்மை ஓங்க, நிச்சய மனத்துடன், விடாமுயற்சி, பொறுமை, சாந்தம், சீலம், செம்மை, ஆசாரம், பெரியோர் வழிபாடு முதலிய அநந்த நற்குணங்களுடன், மன்னுயிரைத் தன்னுயிர்போலக் காப்பாற்றி உலகை ஆள்கிறானோ, அவனிடத்துப் பெருமையும் அன்பும் பாராட்டாது, வெறுப்பும், கோபமும், பொறாமையுங் கொள்வது தகுமா? அது தேவரிடத் திருத்தலும் ஆமா? மேலும், தமயந்தியோ தேவர்களை விரும்பினும் பெறக்கூடிய நிலையிலிருந்தும், —தான் மனத்தால் வரித்த கணவனை விட்டு அவரை அடைவது பாதிவிரத்யமாகாதெனப் பல்விதமும் எங்களைத் துதித்து நளனை மாலையிட்டவள். அவளிடம் பகைகொள்வது தகாது; உமது செயலை யொழியும். மேலும்,

அருந்ததிக் கற்பி னல்லாள்
அரசிளங் குமரன் தன்னைப்
பிரிந்திட வியற்றிப் பின்னர்ப்
பெறுவது தீமை யன்றோ
விரிந்த நூற் கேள்வி என்னாம்?
பிறர் மனை விழைய உள்ளம்
பொருந்திய தேவன்கொல்? கல்லாப்
புல்லரின் புகழின் மிககாய்!

ஆகையால் பிறன்மனைவியையடையவிரும்பும் கெட்ட எண்ணத்தை விட்டுவிடு. வினையை நினைப்பின், நினைத்தவர்க்கே வினைவரும் அன்றோ? அவ்வாறு செய்பவன் தானே அழிகிறான் அல்லவா? நளனுக்கும், அவன் கற்பின் மனைவிக்கும் கெடுதி செய்ய நினைப்பவர் நரகவேதனைக்குட்படச் சித்தமாயிருக்கவேண்டும். கண்டாய்! ஆதலால், கலிராஜனே! உனது எண்ணத்தை விட்டொழியும்" என்று இந்திரன் வெகு தூரம் அவனுக்குச் சொன்னான்; பின் தன்னுடன் வந்த தேவருடன் தேவலோகஞ் சென்றான்.

அவர் சென்றதும் துவாபரனுடன்,

'செருக்கதிர்வேல் கண்ணியுடன் தேர்வேந்தன் கூட
விருக்கத் தரியேன்; இவரைப்—பிரிக்க
உடனாக!' என்றான் உடனே பிறந்த
விடநாகம் அன்னான் வெகுண்டு.

இவ்விதம் அடக்கமுடியாக் கோபத்துடன், கண் சிவந்து தீப்பொறி பறக்க, மனங்கொதித்து, மேலும் "எனக்கு ஆத்திரம் பொறுக்க முடியவில்லை. அந்நளனை நாட்டைவிட்டு ஓட்டுவேன். அக்காதலர் இருவரும் கனவிலும் சுகமறியாத விதம் காற்றில் பறக்கச் செய்வேன். உம்மால் ஓர் உதவி எனக்கு வேண்டும்" என்று சொன்னான்.

தீய சிந்தையில் ஒன்றுபட்ட துவாபரனும், கலிராஜன் கேட்டவிதம் சொக்கட்டான் காயில் புகுந்து அவனுக்கு உதவிசெய்ய ஒப்பினான். இவ்விதம் இவன் ஒப்பியதும், தனது எண்ணத்தை முடிக்க வெகு கவலையாக வேலை செய்ய வாரம்பித்தான். புஷ்கரனென்னும் அரசனைக்கண்டு அவனை நளனுடன் சூதாடத் தூண்டினான். இவன் நளனது பங்காளி. இவனைக் கண்டதும் "புஷ்கரமன்னவ! நான் கலி, உனக்கு என் நிமித்தம் உதவிசெய்ய விரும்புகிறேன். நளனுடன் சூதாடி அவன் நாட்டை முற்றுங் கவரும்படி உனக்குதவி செய்வேன். இதோ என்னோடிருப்பது துவாபரர். இவர் சொக்கட்டான் காயில் மறைந்திருந்து உனக்கு உதவிபுரிவர். நான் நளன்மேல் மயங்கி உனக்கு ஜயமேற்படும்படி செய்வேன். உடனே இதற்கு இணங்குவாயாக!" என்று சொன்னான். புஷ்கரனும் அதற்கிணங்கினான். இவ்வாறு தனது வினையை நடத்த, வேண்டிய ஸாதனங்களை ஏற்படுத்திக்கொண்டு, யந்திரப் பொறிவைத்து வீரவிலங்கைப் பிடிக்க ஆத்திரத்துடன் காத்திருக்கும் வேட்டுவன்போல, நளனைப் பற்றக் கலி நிஷததேச மடைந்து தக்க ஸமயத்திற்காக நெடு நாள் காத்திருந்தான். குற்றமொன்றுங் காணாது கலி எப்படி நளனைப் பற்றுவது?



# பிரபஞ்ச வர்த்தமானம்

## THE NEWS OF THE WORLD.

*புதிய இந்தியா மந்திரி*

இப்போது நடந்துவரும் ஐரோப்பிய மஹா யுத்தத்தையொட்டி, சென்ற வருஷத்தில் நிகழ்ந்த மெஸொபொடோமியாப் படையெழுச்சி விசாரணைக் கமிடியாருடைய ரிபோர்ட்டு வெளிவந்ததும், சில உத்தியோக மாறுதல்கள் ஏற்பட்டன. நமது நாடு சம்மந்தப்பட்ட மட்டில், இதுவரையில் இந்தியா மந்திரி ஸ்தானத்தை வகித்துவந்த ஸ்ரீமான் ஆஸ்டின் சேம்பெர்லின் அவர்கள் அந்தப் பதவியை ராஜி வைத்துவிட்டார்கள். ராணுவ விஷயமாக வெளியிடப்பட்ட உத்தரவுகளின் பொறுப்பு, யாரைச் சேர்ந்ததென்னும் விவாதமே இதற்குக் காரணமாயிற்று. இது நிற்க, இந்த மேலான பதவியை இனி வகிக்க ஸ்ரீமான் மாண்டேகு அவர்கள் முன்வந்திருக்கின்றனர். இவர் 1910 ௵ முதல் 1914 ௵ வரையில் இந்திய உபகாரியதரிசியாகவிருந்தவர். மகுடாபிஷேகக் கொண்டாட்டத்தின்போது, இந்தியாவுக்குவந்து இந்திய விஷயங்களை நேருக்கு நேரே தெரிந்துகொண்டுபோனவர். பொதுவாக, தாராளமான சிந்தனையும், பிரத்யேகமாக இந்தியர்களிடத்துப் பூர்ண அநுதாபமும் கொண்டவர். ஆகவே இவர் நிர்வாக காலத்தில் நமக்கெல்லாம் விசேஷ நன்மையுண்டாகுமென்று நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். ஐரோப்பிய யுத்தம் முடிந்தபின் நடைபெறப் போகும் ராஜீய நடவடிக்கைகளில், இந்திய நாட்டின் பிரதிநிதியாக ஸ்ரீமான் மாண்டேகு துரையவர்கள் இருக்கக் கூடுமாதலால், அவரால் நமக்குப் பரமோபகாரம் உண்டாகுமென்பதில் தடையில்லை. ஸ்ரீமானவர்களுக்கு ஈச்வரன் தீர்க்காயுளையும் ஆரோக்கியத்தையும் கொடுத்தருளவேண்டும்.

* * *

*சென்னைப் பொருட்காட்சி*

அடுத்துவரும் கிறிஸ்துமஸ் வைபவங்களையொட்டிச் சென்னையில் ஒரு பொருட்காட்சி ஏற்படுத்தப் போகின்றனர். அதுவிஷயமாக, வேண்டிய முன்னேற்பாடுகளெல்லாம், இரண்டு வாரங்களுக்கு முன்பு, கனம் கவர்னர் அவர்களுடைய தலைமையின்கீழ்க் கூடிய ஒரு சபையில் தீர்மானமாகிவிட்டன. இங்கிலாந்திலிருந்து உணவுப்பொருள்களை ஏற்றுமதி செய்யக்கூடாதென்று ஒரு சட்டம் உண்டாகியிருக்கிறபடியால், இனிமேல் இந்தியாவுக்கு வேண்டிய பொருள்களை நமது நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடுமா என்பதைக் கண்டறிவதே இந்தப் பொருட்காட்சியின் முக்கிய நோக்கம். உணவுப்பொருள்களோடு மட்டும் நில்லாமல், மற்றுமுள்ள கைத்தொழில் முதலியவற்றையும் இந்தப் பொருட்காட்சியில் சேர்க்கலாமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (1) பலவிதமான உணவுப்பொருள்கள், பானவகைகள், பழவகைகள், புகைச்சுருட்டு முதலியன, ஊறுகாய்வகைகள், மரப்பொருள்கள். (2) பலவித ஆடைகள் பட்டு பருத்திகளாலான உடைகள் கம்பளங்கள், மெழுகுவர்த்தி, சவர்க்காரம், கண்ணாடி பீங்கான் சாமான்கள், சீப்பு, கத்தி தட்டுமுட்டுச் சாமான்கள், பாதரக்ஷை வகையரா. (3) பலவித யந்திரங்கள், வர்ணங்கள் முதலியன. (4) மருந்துகள், சிகித்ஸை ஆயுதங்கள் (5) கடிதாசு, பேனா, கயிறு, பாய், கூடை முதலியன. இப்படி ஐந்து வகைக்காட்சி நடைபெறும். விலைபொருள்களும் விஸ்தாரமும் ஏராளமான நமது சென்னை ராஜதானியிலுள்ளவர்கள் தங்களால் செய்யக்கூடியவை இன்னின்னவையென்பதைக் காட்டக்கூடிய இந்த நல்ல தருணத்தைக் கைவிட மாட்டார்களென நம்புகிறோம். இப்பொருட்காட்சியால் நமக்கு இனி உண்டாகக்கூடிய நன்மைகளை அளவிடமுடியாது. ஆதலால் ஒவ்வொருவரும் இதற்குப் பாடுபடவேண்டியது அவசியம்.

* * *

*சென்னை ஹைகோர்ட்டு நியமனங்கள்*

சென்னை ஹைகோர்ட்டில், காயமாக எட்டு ஜட்ஜிகளும், தாற்காலிகமாக நான்கு ஜட்ஜிகளும் இருக்கும் துர்த்தசையை நிராகரிக்கவேண்டி, காயமாகப் பத்து ஜட்ஜிகள் நியமிக்கப்பட்ப் போவதாகச் சமாச்சாரம் எட்டுகிறது. வழக்குகளைச் சீக்கிரத்தில் விசாரித்து முடிவு செய்வதற்கான இந்த ஏற்பாடு நமக்கெல்லாம் சந்தோஷத்தைக் கொடுக்கும். என்றாலும், இதில் நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு.

காயம் ஜட்ஜிகளில் மூன்றிலொரு பங்கு பாரிஸ்டர்களுக்கும், மூன்றிலொரு பங்கு இந்தியன் ஸிவில் ஸர்வீஸ்காரருக்கும் கொடுபட வேண்டுமென்று சட்ட மேற்பட்டுள்ளது. இதன்படி, ஆறு ஜட்ஜிகளிருந்தால், இருவர் பாரிஸ்டர்களாயும் இருவர் ஐ. ஸி. எஸ்காரராகவும் இருக்கலாம். பாக்கி இருக்கும் இரண்டு ஸ்தானங்கள் வக்கீல்களுக்குக் கிடைக்கும். ஆனால் எட்டு, அல்லது பத்து ஜட்ஜிகளிருக்கும் பக்ஷத்தில், வக்கீல்களுக்குக் கிடைக்கக்கூடிய ஸ்தானங்கள் இரண்டுக்கு அதிகமாவதில்லை. ஒன்பது ஜட்ஜிகளிருந்தால், வக்கீல்களுக்கு மூன்று ஸ்தானங்கள் கிடைக்கும். ஆகவே, நாம் கோருவது என்னவென்றால், மூன்று ஸ்தானங்கள் வக்கீல்களுக்குக் கிடைக்கும்படி, ஒன்பது ஜட்ஜிகளை நியமிக்கவேண்டும். இல்லையேல், பத்து ஜட்ஜிகள் நியமிக்கும் விஷயத்தில், மூன்று ஸ்தானங்கள் வக்கீல்களுக்கு வரும்படி, சட்டத்தின் விதியை மாற்றவேண்டுமென்பதேயாம். கவர்ன்மெண்டார் இவ்விஷயமாகத் தீர்க்காலோசனைசெய்து, நமக்கு அனுகூலமான உத்திரவிடுவார்களென நாம் நம்புகிறோம்.

* * *

**கிராமக் கோர்ட்டுகள்**

இச்சென்னை ராஜதானியில் சுமார் ஒரு நூற்றாண்டளவுக்கு மேலாகவே, சட்ட சம்மதம்பெற்ற கிராமக் கோர்ட்டுகள் இருந்து வருகின்றன. 1888-ம் வருஷத்தில் செலாவணியான சட்டமொன்றால் அக்கோர்ட்டுகள் கிராம முனிசீபு கோர்ட்டென்றும், பஞ்சாயத்தார் கோர்ட்டென்றும் இருவகையாகப் பகுக்கப்பட்டன. முன்னதில், கிராம முனிசீபே நியாயாதிபதியாக இருந்து வழக்குகளை விசாரிப்பார். பின்னதில், கிராம முனிசீபும், வாதியால் ஒருவரும் பிரதிவாதியால் ஒருவரும் தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களும் கூடியிருந்து வழக்குகளை விசாரிப்பார்கள். இந்தப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளை நம்மவர்கள் அதிகமாக அபிமானிக்காமல், வீண் பணச்செலவு செய்து டிஸ்டிரிக்டு முன்சீபு கோர்ட்டுகளுக்கு அலைந்து சிரமப்படுவதை நிவர்த்திக்கக் கருதிய கவர்ன்மெண்டார், மேற்படி ஆக்டில் சிற்சில மாறுதல்களை உண்டாக்க உத்தேசித்திருக்கின்றனர். இவைகளின்படி, பஞ்சாயத்துக் கோர்ட்டில் வீற்றிருக்கக்கூடிய நபர்கள் ஜில்லா கலெக்டரால் நியமிக்கப்பெறுவார்கள். அதமபக்ஷம் மூன்று பேர்கள் சேர்ந்துதான் கோர்ட்டு கூடவேண்டும். நபர்களைத் தெரிந்தெடுப்பதில் கலெக்டர் ஜனங்களுடைய இஷ்டத்துக்கு விரோதமாகப் போகமாட்டார்கள். ஸிவில் வழக்குகளில் இந்தக் கோர்ட்டுகளின் அதிகார வரம்பு 20 ரூபாயிலிருந்து 50 ரூபா வரைக்கும் உயர்த்தப்பட்டிருப்பதால் இனிமேல் நம்மவர்கள் டிஸ்டிரிக்டு முன்சீபு கோர்ட்டு வாசல்களில் கார்த்துக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. இதை மீறி, டிஸ்டிரிக்டு முன்சீபு கோர்ட்டுக்குப் போகிறவர்களுக்குச் சில நிர்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன. வாதி ஜயித்தால் அவனுக்குச் செலவு தொகை கொடுபடமாட்டாது. பிரதிவாதிக்கு ஜயமுண்டானால் அவனுக்குச் செலவு தொகையும், வக்கீல் பீசும் கொடுபடும்.

கிரிமினல் தரப்பில் இந்தக் கிராமக் கோர்ட்டார், அவதூறு, விஷமம், துராக்கிருதமாக நுழைதல், காயம் முதலிய அற்பக் குற்றங்களை விசாரிப்பார்கள். கிராம முனிசீபுகள் இதுவரையில் செலுத்திவந்த “தொழிற் கட்டை” தண்டனை எடுபட்டுப் போயிற்று. ஏழை ஜனங்கள், நியாயம் பெறும்பொருட்டு, வீண் பணச்செலவு செய்து நெடுந்தூரம் சென்று டிஸ்டிரிக்டு முன்சீபுக் கோர்ட்டுகளில் கார்த்திருக்கும் துர்த்தசையை நிவர்த்திக்கவே இந்தப் புதுக் கோர்ட்டுகள் நியமிக்கப்படுகின்றனவாதலால் நம்மவர்களுக்கு இது ஓர் நற்கால ஸூசகமெனத் தடையில்லை. இந்தக் கோர்ட்டுகளில் வக்கீல்கள் வந்து பேசவேண்டிய அவசியம் இராதபடியால், அவ்விஷயமாகவும் கக்ஷிக்காரர்களுக்குப் பணச் செலவு குறையக்கூடும். இப்படி எவ்வாறு நோக்கினும் நன்மையையே தருகிற இந்தக் கிராமக் கோர்ட்டு மசோதா, சீக்கிரத்தில் சட்டமாகிச் செலாவணிக்கு வருமென வெகு ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

* * *

மனிதர்களைப் பீடிக்கக்கூடிய பிணிகளில் வெகு கஷ்டமானதும் தலையைக் காட்டாமல் உயிரை உறிஞ்சுவதுமான க்ஷய ரோகத்தில் அகால மிருத்யுவுக்குள்ளாகிறவர் பலர். நாகரீகம் முதிர முதிர, இந்தக் கொடிய வியாதியும் அதிகரிப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இவ்வியாதியைத் தடுக்கவோ, இவ்வியாதியால் வருந்துவோருக்குத் தகுந்த சிகித்சை செய்யவோ, எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கையிலும் நமக்குப் பூர்ண அனுதாபமுண்டு. ஆதலால் நாளது மாதத்தில் இவ்வியாதியைத் தடுக்கவென்று அஸ்திவாரம் நாட்டப்பெற்ற ஆஸ்பத்திரி விஷயமாக இரண்டொரு வார்த்தை சொல்வது மிகையாகாது. நமது மாஜி சக்கரவர்த்தி ஏழாம் எட்வர்டு மகுடவர்த்தனர் தேகவியோகமானபோது, அவருடைய ஞாபகார்த்தமாக ஏதேனுமொரு நற்காரியம் செய்யவேண்டுமென்று சென்னைப் பிரமுகர்கள் கூடியாலோசித்துப் பணம் சேகரித்தனர்.

**க்ஷயரோக ஆஸ்பத்திரி**

தமது பிரஜைகளின் க்ஷேமலாபங்களைத் தம்முடையதாகவே கருதிய மேற்படி மகுடவர்த்தனர்க்கேற்ற ஞாபகச் சின்னம் இப்படிப்பட்ட சிகித்ஸாலயந்தான் என்பதை உணர்ந்த பிரமுகர்கள், ஸ்திரமான கட்டிடம் கட்டி முடிப்பதற்கு முன்னும், தாற்காலிகக் கட்டிடங்களில் வேலை தொடங்கினர். அவ்வேலை சாசுவதமாக நடப்பதற்கு இப்போது கட்டிடம் கட்டுவதற்கு, நமது கவர்னரவர்கள் அஸ்திவாரம் நாட்டியிருக்கின்றனர். புதிய ஜெனரல் ஆஸ்பத்திரிக்காக இடம் பார்த்திருக்கும் ஸ்பர்டாங்க் (Spur Tank) பக்கத்தில் இந்த ஆஸ்பத்திரி கட்டப்படுகிறது.

இவ்விஷயமாக, நோயாளிகள் தங்குவதற்கென்று கட்டிடங்கள் வேண்டுமென்று விண்ணப்பம் செய்ததையொட்டி, ஸ்ரீமான் ராவ் ஸாஹிப் மு. சித. முத்தையா செட்டியார் அவர்கள், 50,000 ரூபா செலவு செய்து, 32 நோயாளிகளுக்கு இடவசதியுள்ளதான கட்டிடமொன்றைக்கட்டி, தமது பிதாவின் ஞாபகார்த்தமாகக் கொடுத்துதவ முன்வந்திருக்கின்றனர் என்பது அபிமானிகள் அனைவருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும். ஸ்ரீமான் செட்டியாரவர்களுடைய காருண்ய குணத்தைப் பலர் பின்பற்றுவார்களென்றும், அதனால் நோயாளிகளுக்குச் சவுகரியங்கள் நிரம்ப ஏற்படுமென்றும் கருதுகிறோம்.

* * *



**கிராமப் புஸ்தக சாலைகள்**

இந்தியாவைக் காட்டிலும் இங்கிலாந்தில் கல்வி யபிவிருத்தி வெகு அதிகம். அப்படியிருந்தும் அங்கு கிராமாந்தரங்களில் உள்ளவர்களுடைய உபயோகத்திற்காகப் புஸ்தக சாலைகள் ஏற்பாடாவதென்றால் நமக்கு அது வியப்பைத் தரக்கூடும். சுகாதாரம், கிருஷி, தோட்டப் பயிர் முதலிய விஷயங்களைப்பற்றிய பிரதம நூல்கள் அடங்கிய புஸ்தகப் பெட்டிகளைக் கிராமங்கள் தோறும் அனுப்பி, அங்குள்ளோருக்குப் படிக்கக் கொடுத்து, அவர்களுக்கு அறிவூட்டுவதில் சில வித்தியா விஷயக் கமிட்டிகள் கவலை யெடுத்துவருகின்றன. இதேமாதிரி ஏற்பாடு நமது நாட்டில் பரோடா சமஸ்தானத்தில் நடைபெறுவதாயும் அதனால் ஜனங்களுக்கு விசேஷ நன்மை யுண்டாவதாயும் கேள்விப் படுகிறோம். புதியதாகத் தனி மாகாணம் வேண்டுமென்கிற ஆந்திரர்களும் இப்படிக் கிராமப் புஸ்தக சாலைகள் ஏற்படுத்தி யிருக்கின்றனர் என்பதை நாமறிவோம். நமது பிரமுகர்களும், வித்யாவிஷய இலாகாக்காரர்களும் மேற்கூறிய விதமாக, எளிதான நடையில் எழுதப்பட்ட புஸ்தகங்களைக் கிராமத்தார்களுக்கு அனுப்பி, அவர்களுக்கு அறிவூட்டுவார்களானால் அதுவே அவர்கள் நமது நாட்டுக்குச் செய்யும் பரமோபகாரமாகும். கிராமம் ஒன்றுக்கு, ஆரம்பத்தில் முப்பது புஸ்தகங்கள் போதுமானவை. புஸ்தகக் கிரயத்தையும், அவைகளை ஊருக்கூர் கொண்டுபோகும் செலவையும் தவிர வேறு செலவு ஏற்படாது. எடுக்கும் காரியத்துக்கெல்லாம் கவர்ன்மெண்டார் உதவியை எதிர்பார்க்கும் நமக்கு இது சுலபமாகத்தான் தோன்றுகிறது.

---

**டிராம் வண்டிகள்.**—கிளாஸ்கோ பட்டணந்தான் “டிராம்வே”யில் பிரதானமானதெனப் பேர்பெற்றிருந்தது. அங்கு 650 வண்டிகளும், 100 மைல் இரட்டைப் பாதையும், 1,000,000 ஜனத் தொகையும் 1,570,000 பவுன் வருஷ வரும்படியும் இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது. இப்போது, இவ்விஷயத்தில் முதன்மை ஸ்தானத்தை ‘பியூனஸ் அயர்ஸ்’ என்னும் நகரம் பெற்றுவிட்டது. அவ்விடத்தில் 2000 டிராம் வண்டிகளும், 330 மைல் டிராம் பாதையுமுள்ளன. ஜனத்தொகை 1,500000, வருஷ வருமானம் பவுன் 2,000,000.

# நமது சிறு கதை

## OUR SHORT STORY

### மனித தர்மம்

அது ஒரு சிறு வீடு. கடுகூரிலிருந்து மலையூருக்குச் செல்லும் பெரிய ரஸ்தாவின் தென்புறம் ஒற்றை வீடாக இருந்தது. தாழ்ந்த தான நிலைப்படியில் இடித்துக்கொள்ளாமல் ஜாக்ரதையாக உள்ளே நுழைந்தால், ஒரு சிறு நடையும், பிறகு இரு கூடமும் நடுவில் சிறு முற்றமும் அதன் முடிவில் சற்று அகன்ற முற்றத்தோடு கூடிய ஒரு சமையலறையுமே அவ்வீட்டின் முக்ய பாகங்கள். கொல்லையில் ஒரு கிணறும், அதன் கரையில் தண்ணீர் எடுக்கப்பாத்திரமும் கயிறும் இருந்தன. ஒரு அவரைப் பந்தல் நன்றாகப் பூத்துக்காய்த்து விளங்கிற்று. உள்ளே கூடத்தில் மூங்கில்களும், பிரம்பும், அடுக்கிவைக்கப்பட்டும், சில பிளக்கப் பட்டபடியும், சில கயிற்றில் பின்னினபடியும் அங்குமிங்குமாகக் கிடந்தன. சமையலறையின் முற்றத்தோரமாக, ஒரு பித்தளைச் செம்பு கால்பாகம் ஜலத்தோடு வைக்கப்பட்டிருந்தது. சுவரோரமாக உட்கார்ந்து, இடது கையை யூன்றியும், வலது காலை மடித்தும் ஒரு ஸ்த்ரீ சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

மத்யாந்ந போஜனம்முடிந்த ச்யவனன் தட்டி கட்டி மறைக்கப்பட்ட வாசற் திண்ணையில் உட்கார்ந்து ஒரு சுருட்டைப் பிடித்துக்கொண்டும், யோசனையால் இடையிடையே தலையையசைத்துக்கொண்டு மிருந்தான். ச்யவனன் ஒரு எளிய கூலி வேலைக்காரன். மூங்கில், பிரம்புத் தட்டிகள், புஷ்பப் பல்லக்குகள் முதலிய வேலைகள் சுத்தமாகச் செய்யக்கூடியவன். சில ஸமயங்களில் ஸமீபத்திலுள்ள மறைக்குடியில் ஏதாவது மரணம் நேர்ந்தால், ப்ரேதத்தை எடுத்துப்போவதற்கு வேண்டிய பாடையோ பல்லக்கோ கட்டிக் கொடுப்பான். இந்த வேலையிலே ஒருவனுக்கு ஜீவனம் நடப்பது கஷ்ட ஸாத்யந்தானே? விசேஷமாக, அன்றாடகம் ஜீவனந்தான் செய்ய முடியும். ஆனால் ச்யவனன் நல்லவன். பொறுமை யுள்ளவன். கடவுள்மேல் பாரத்தைப்போட்டு தன் வேலையைப் பார்த்து வருவான். தன்னாலியன்ற விதங்களில் பிறருக்கு ஒத்தாசையும் செய்வான்: அவனுக்கு மரகதம் என்று ஒரு மனைவியும் (உள்ளே போஜனம் பண்ணிக்கொண்டிருந்த ஸ்த்ரீதான் மரகதம் என்று நீங்கள் ஊஹித்துவிட்டீர்கள் என்பது உங்கள் முக மலர்ச்சியினால் தெரிகிற படியால், நான் அதைச் சொல்லவேண்டியதில்லை) இரண்டு ஆண் குழந்தைகளும் இருந்தன.

மார்கழி மாதமாதலால் சூர்யனைக் காண்பது அருமை. வெயில் விட்டுவிட்டு எரித்தது. 'ஜில்' என்று குளிர்ந்த காற்று வீசி ப்ராணிகளுக்குத் துன்பத்தை யுண்டு பண்ணிற்று. ச்யவனன் யோசனைக் கிடையில் ஒரு பெருங் காற்று வீசவும், "அப்பா, என்ன குளிரு!" என்று சொல்லி, மேல் வஸ்த்ரத்தை யிழுத்துப் போர்த்துக் கொண்டான். அப்பொழுதுதான் போஜனம் முடித்த மரகதம்மாள் கையிலுள்ள ஈரத்தை, புடவை மேல் சுற்றில் துடைத்துக்கொண்டே,

"எல்லாருக்கும் அப்படித்தானே குளிரும்? அதிலும் கந்தலையும், கழிந்ததையும், உடுத்தியிருக்கும் எனக்கு எவ்வளவு குளிரும்? மறுபுடவையில்லாமல் ஒரு ஸ்த்ரீ எவ்வளவு நாள் காலக்ஷேபம் பண்ணமுடியும்? சொல்லச் சொல்லக் காதிலேயே போட்டுக் கொள்ளாதிருந்தால், என்னதான் பண்ணித் துலைக்கிறது? என் தலையிலெழுத்து" என்று கேள்விகளாகவே ஆரம்பித்து நிஷ்டூரமாக முடித்து தலையிலும் இடது கையால் மெள்ள (நோகாமல்) அடித்துக்கொண்டாள்.

அதற்கு ச்யவனன்:—"என்னடீ என்ன! அரை நிமிஷத்துக்குள், வாயைத்திறக்க ஸாவகாசமில்லாமல் ப்ரமாதமாய் புராணந்தொடுக்கிறாயே? நான் என்ன வாங்கவேண்டாம்' என்றிருக்கிறேனா!—

"இன்னம் வாங்கவேண்டாம் என்றிருக்கிறது வேறே யிருக்கா?"

"மறுபடியும் பாரேன். கையில் 3ரூ. தானே பாக்கியிருக்கு. இன்னம் வரவேண்டிய 4 ரூபாயும் வந்தால் செவ்வாய்க்கிழமை சந்தை கரகூருக்குப்போய் ஒரு புடவை எடுத்து வரலாமென்றிருந்தேன். நீ நிஷ்டூரத்திற் காரம்பித்துவிட்டாய். இனி நிற்கப் போகிறதில்லை. இப்பொழுது மணிஒன்றிருக்கும். நான் புறப்பட்டு வழியிலேயே கடுகூர் சுப்பய்யா கொடுக்கவேண்டிய மூணு ரூபாய், அநந்தன் ஒரு ரூபாய், இவை



களை வாங்கிக் கொண்டு, கரகூர்போய் உனக்கு ஒருசேலை வாங்கிவந்துவிட்டு மறுவேலை பார்க்கணும். விளக்கு வைத்ததும் சாப்பிட்டுவிட்டுக் குழந்தைகளையும் தூங்கப்பண்ணிவிடு; நான் வரக் கொஞ்சம் முன்பின் தாமதமானாலும் ஆகலாம். எங்கே உள்ளேயிருந்த அந்த மூணு ரூபாயையும் கொண்டுவா" என்று சொல்லவே, மலர்ந்த முகத்துடன்போய் மரகதம் ஒரு துணியில் முடியிட்டிருந்த ரூ. 3-யும் கொண்டு வந்து புருஷனிடம் ஸமர்ப்பித்தாள்.

ச்யவனன்எழுந்திருந்து குளிருக்காக வைத்திருக்கும் ஒரு பழைய சட்டையை மாட்டிக் கொண்டான்; காலில் பாதரக்ஷைக் கட்டைகளைத் தரித்து அங்கவஸ்த்ரத்தைத் தலையில் ஓர் வித 'குஷால்' கட்டாக, காதுவரை மறையும்படி, குளிருக்காகக் கட்டினான். நேராக நடந்தான் கரகூரைநோக்கி. சுப்பய்யா வீடு போய் விசாரிக்க, அவன் ஊரிலில்லையென்றும் திரும்பிவர நாலு நாள் பிடிக்குமென்றும், வந்தவுடன் விஷயத்தைச் சொல்லி, கொடுக்கச் சொல்வதாயும் அவன் ஸம்ஸாரம் சொன்னாள். "ஸரி, நம்மதிர்ஷ்டம்போலத் தான் இருக்கு" என்று முணுமுணுத்துக் கொண்டே அடைந்தான் அநந்தன் வீடு. அவனைக் கொடுக்கவேண்டிய, ஒரு ரூபாயைக் கேட்க, ஆரம்பித்தான் அநந்தன் தன்னுடைய ப்ரலாபங்களை. கையில் ஒருபைஸா இல்லாமல் படுங் கஷ்டத்தையும், மனைவிக்கு மசக்கையாயிருந்து அவள் படுத்தும் பாட்டையும், மூத்தாள் குழந்தைக்கு உடம்பு ஸரியா யில்லாததால் இரவெல்லாம் தூக்கமில்லாததையும், இவைபோன்ற பல ஆநந்தாநுபவங்களைச் சரமாரியாகப்பொழிந்தான் ச்யவனன் காதில். ஸ்வபாவத்திலேயே இரங்கின மனமுடையவனான ச்யவனனுக்குப் பரிதாபமாயிருந்தது. "ஸரி, அப்படியானால் நீதான் என்ன பண்ணுவாய், பாபம், கூடியசீக்கிரம் அகப்பட்டதும் கொடுத்து விடு, நான் போய்வருகிறேன்" என்று விடைகொண்டு புறப்பட்டான். கரகூருக்குப் போக வேண்டிய அவச்யமே இல்லாமற் போய்விட்டதால் திரும்பி வீடுநோக்கி வாடிய முகத்தோடு கிளம்பினான். "புடவையில்லாமல் வீடு போனால், நம்முடைய ப்ராணனை இன்று எடுத்துவிடப் போகிறாள். க்ருஹசாரம் நாம் என்ன செய்யலாம். அதை வாங்கியழுதுவிடலாம் என்றால் தெய்வ ஸம்மதமில்லை; சொன்னால் அவள் கேட்கப் போகிறதில்லை. ஸரி அதைப்பற்றி யோசித்துப் பயனில்லை; கடவுளிருக்கிறார். இருந்தாலும், பிறருக்கு வேண்டும்போது ஸாமான்கள் கொடுப்பதோ,வேலை செய்வதோ,எல்லாம் கடனாகவே நாம் மட்டும் செய்வது, நமக்கு வேண்டிய ஸமயங்களில், வரவேண்டிய பணம் மட்டில் வருவதில்லை என்றால் கொஞ்சம் மனதுக்கு ஸமாதானமில்லை. ஸரி, இருக்கட்டும்" என்று இப்படி யோசித்துவிட்டுக் காடுங்கரையும். ... என்னும் பாட்டை அநுபவித்து ஸ்வாரஸ்யமாகப் பாடிக்கொண்டு வருகிறான் வீடுநோக்கி. வீட்டுக்கு ஒரு கால்மைல்தானிருக்கும். மறையூர்ப் பிள்ளையார் கோயிலண்டை வந்து விட்டான். மணி 7½ தான் என்றாலும், க்ராமவாஸமாகையால், வெளிச்சமே கிடையாது. அநேகமாக ஊரடங்கி விட்டது. ஒரு சுற்றுப் ப்ராகாரத்தோடு கூடிய அந்தக் கோயில் உள்புறத்தில் மட்டும் மினுக்கு மினுக்கென்று, ஒரு தீபம் எரிந்துகொண்டிருந்தது. பிள்ளையார் கோயில் வாசல் நேராக வரும்போது, கை குவித்து நமஸ்கரித்து,அப்பக்கமாகத் திரும்பினான். வாசற்கதவுக்கு வெளிப்புறம் ஏதோ ஒரு உருவம் சாய்ந்து நிற்பதுபோலத் தோன்றிற்று. "என்ன வாசற்படியண்டை? ஏதாவது கோவில் பசு வந்து படுத்திருக்குமோ? பசுவாயிருந்தால் இன்னும் வெண்மையாயிருக்குமே? ஏதோ மனித உருவமாக வல்லவா தோன்றுகிறது, அதோ தலைகூட கொஞ்சம் ஆடுகிறதே" என்று நெஞ்சும் மார்பும் படபடவென்று அடித்துக்கொள்ள கொஞ்சம் ஸமீபம் சென்று பார்த்தான்.

அரையில் ஒரு சிறு துணிமட்டுமே கட்டிய ஒரு மனித உருவந்தான் கதவின்மேல் சாய்ந்து, குளிரினால் விரைத்து, பசியினால் மெலிந்து, மூர்ச்சையாய்க் கண்களை மூடிக்கிடப்பது போலத் தோன்றிற்று. பார்த்தான் ச்யவனன், "இது என்னவோ தெரியவில்லை, இந்தக் குளிரில் இங்கே எப்படி வந்தான் இவன். ஒருக்கால் இது மனுஷ்யவேஷங் கொண்ட பிசாசமோ? இல்லாவிட்டால் கிட்டவந்ததும் நம்மைப் பிடித்துக் கழுத்தைத்திருகி, நம்மிடமுள்ளதை அபகரிப்பதற்கு ஓர் திருடன் செய்யும் தந்திரமோ? இல்லாவிடில் யாராவது

திருடர்கள், பொருளை யபகரித்துவிட்டு இவனையுங் கொன்று இங்கே போட்டுப் போய்விட்டார்களோ? எந்தச் சனியானுலென்ன? நாமிதில் தலையிடாமல் அகன்றுவிடுவதே உத்தமம்'' என்ற ஸித்தாந்தத்திற்கு வரவும் மனதில் பாதி திகிலும், பாதி இதென்ன வென்றறிய ஆவலும் போராட, வேகமாய் மேற்கு நோக்கி நடந்தான். 15 அடி தூரம் போனதும், மெள்ளத் திரும்பிப்பார்த்தான். அந்த உருவம் முன்னிருந்த நிலையிலில்லை. தெற்கு நோக்கியிருந்த முகம் ப்ரயாஸையோடு திருப்பப்பட்டு மேற்குத்திக்கில் ச்யவனன் போவதை மிகுந்த தைர்யமாகப் பார்ப்பதுபோல் புலப்பட்டது. மனதிலுண்டான திகில் ஜாஸ்தியாகவே, நடையைத்துரிதப்படுத்த ஆரம்பித்தான். திடீரென்று ஒரு யோசனையுதித்தது ச்யவனனுக்கு. "ஒருக்கால் இப்பக்கங்களுக்கே புதிதான யாராவது ப்ரயாணி, களைப்பினாலும், குளிரினாலும், மரணாவஸ்தையடைகிறானோ என்னவோ? கொஞ்சம் உதவிசெய்தால் பிழைக்கவும் கூடும். திரும்பிப்போய்ப் பார்க்கலாமா? கடவுளை நம்பினோரைப்பேய் பிசாசுகள் என்ன செய்யக்கூடும்? கள்வனாயிருந்தால் இந்த 3-ரூ தானே போகும்? அதுவும் நமக்கு வலுவில்லையா? ஒரு கை பார்க்காமலா விட்டுவிடுவோம்? எதற்கும் போய்ப் பார்க்கலாம். ஒரு ஜீவஜெந்து பசிதாகத்தால் வருந்த அதைப்பார்த்து, குடிக்கத் தண்ணீராவது கொடுக்காதவர்களுக்குப் பகவத்கிருபை கிடைக்காதல்லவா?'' என்று அன்பால் கனிந்துருகும் மனதுடன் அவ்வுருவத்தினருகில்சென்று, கையால் தாங்கி, விளக்குவெளிச்சத்தில் நிதானித்தான்.

அவன் இருபது இருபத்திரண்டு வயதுள்ள ஓர் வாலிபனென்று ச்யவனன் அறிந்தான். பரந்தோடிய நெற்றியும், ஒளிவிட்டு ப்ரகாசிக்கும் கண்களும், கூரியமூக்கும், விரிந்தகன்ற மார்பும், திரண்டுருண்டுள்ள புஜங்களும், அவ்வாலிபனின் யௌவநத்தையும், கூரிய புத்தியையும், பலத்தையும் காட்டிநின்றன. எவ்வளவு கவனித்தும் தேகத்தில், ஒரு காயமாவது, மற்றெவ்வித அங்கஹீனமாவது ச்யவனனுக்குப் புலப்படவில்லை. பசி, தாகம், குளிர் இவைகளால் அவஸ்தையடைந்து மூர்ச்சித்தவன்போலும், இதுவரை இம்மாதிரி ப்ரதேசங்களையே பார்த்திராதவன் அடையும் ப்ரமையை அடைந்தவன்போலக் காணப்பட்டான்.

அவ்வாலிபனை எடுத்துத் தாங்கிய ச்யவனன் தன் தலையில் கட்டியிருந்த வஸ்திரத்தை எடுத்துப் போர்த்து, கை, கால்களை சூடுபரக்கத் தேய்த்தான் கொஞ்சம் சூடுண்டாகவே, விசாலமான நயனங்களை மெள்ளத் திறந்து ச்யவனனைக் கவனித்தான். அந்த அருள்விலாஸமான நோக்கமொன்றே ச்யவனனுக்கு அத்யந்த ஆநந்தத்தை விளைத்தது. தான் மடியில் வைத்திருந்த சில பலகாரத் துண்டுகளையும் கொடுத்து, கோயிலின் பின்புறமிருக்கும் குளத்திலிருந்து கொஞ்சம் ஜலமும் பானம்பண்ணுவிக்கவே, அவ்விளைஞனுக்குக் கொஞ்சம் சக்தி யுண்டாகி எழுந்துட்கார்ந்தான்.

"ஏனப்பா, மெள்ள என் வீடுவரையில் வா, கொஞ்சம் சுடச்சுட ஏதேனும் ஆகாரம் சாப்பிட்டு, படுத்துரங்கி ச்ரமபரிகாரம் பண்ணிக்கொள்ளலாம். உன்னால் நடக்கமுடியுமா?'' என்றான் ச்யவனன். அதற்கு அவ்வாலிபன் பதிலொன்றும் கூறாது, குளிர்ந்த பார்வையுடன் ச்யவனனை நோக்கிவிட்டு, எழுந்து நடக்க வாரம்பித்தான். "பேஷ், வா, போகலாம்'' என்று ச்யவனன் சொல்லிக்கொண்டே கொஞ்சதூரம் நடந்துதும், "நீ எந்த ஊர், அப்பா?'' என்றான்.

"நான் இந்த ப்ரதேசவாஸியேயல்ல.''

"அதுதான் தெரிகிறதே. இவ்விடத்திய ஆளாயிருந்தால், எனக்குத் தெரியாதா? நீ இங்கே எப்படி வந்துசேர்ந்தாய்.''

"நானதைச் சொல்லமுடியாதிப்பொழுது''

"யாராவது உன்னை அடித்துப் பிடுங்கி, ஏதாவது தொந்திரவு செய்தார்களா?''

"இல்லை. அதெல்லாம் ஒன்றுமில்லை. ஈசுவராஜ்ஞையாக நடந்ததேயொழிய வேறில்லை.''

"ஆகா ஸந்தேகமில்லை. அவனன்றி ஓர் அணுவும் அசையாதல்லவா?''

சற்று நேரம் மௌனம்.

"உனக்கு எந்த ஊர்போக விருப்பம்?''

"எனக்கு எங்குபோனாலும் ஒன்றுதான். நீ இட்டுப்போனால்உன்னோடேயேவருவேன்.''

ச்யவனனுக்கு ஆச்சர்யம் பதின்மடங்காயிற்று. ஆனால் வீடுநெருங்கவே, தன்மனைவி மரகதம் என்ன சொல்லுவாளோ என்ற பயம் ஏற்பட வாரம்பித்தது. வீட்டிலோ, அன்றுடம் ஜீவனம்; அதிதி ஸத்காரத்திற்கு விசேஷமாகச் சக்தில்லை; ஸம்ஸாரத்திற்குப் புடவை வாங்கிவருவதாகச் சொல்லிப் போனவன், தன் மேல்வஸ்த்ரத்தை யுடுத்தி ஒரு அந்நியனை அழைத்துவந்தால் என்ன சொல்லுவாளோ?'' என்றுகவலையோடு உள்ளேநுழைந்தான் அவ்வாலிபனுடன். உள்ளேநுழைந்து நடைக்கதவைத்தட்ட, புடவை வந்துவிட்டது என்ற ஸந்தோஷத்தால் ஓட்டமாக வந்து கதவைத் திறந்தாள் மரகதத்தம்மாள். திறந்ததும் வெளிச்சத்தில் மூட்டை யொன்றுமே யில்லாமல், வெருங்கையோடு வந்த தன் புருஷனையும், அவன் அங்கவஸ்த்ரத்தை அரையில் உடுத்தியிருந்த ஓர் இளைஞனையும் கண்டதும், அவளுக்குத் திகிலும் கோபமும் அளவின்றி யுண்டாயிற்று. அவ்வளவையும் அடக்கிக்கொண்டு, "ஏன், போனகார்யம் என்ன வாச்சு'' என்றாள். "ஸரி, அதெல்லாம் ஸாவகாசமாய் சொல்லுகிறேன்; முதலில் அடுப்புமூட்டி, ஒரு அரைப்படி அரிசியாவது சமையல் செய்; நாங்களிருவரும் சாப்பிடவேண்டும்'' என்று சொல்லவே, அடக்கியிருந்த கோபம், மடைதிறந்த வெள்ளம்போல் பொங்கிவிட்டது. அடுப்பு மூட்டிச் சுடச்சுடச் சமையல் செய்து போடுவேன் சாப்பிடலாம் இருங்கள். போனகார்யம் ஒன்றையுங்காணோம். யாரோ ஒரு சோற்றானை வேறே கூட்டிவந்து சமையல் பண்ணவாம் பாதி ராத்திரியில், இருந்திருந்தும் இதைத்தான் கண்டது. நான் என் பிறந்த வீட்டில் இருக்கும்போது—'' என்று சொல்லி விம்மி விம்மி அழுதுகொண்டும், தாரையாக ஓடும் கண்ணீரைப் புடைவையால் துடைத்துக்கொண்டும் ஸாகஸத்துக்கு ஆரம்பித்துவிட்டாள்.

ச்யவனன், "இதென்ன தர்ம ஸங்கடம், வீண் ஹிம்ஸை'' யென்று முணுமுணுத்துக்கொண்டு, "மரகதம்! சொல்வதைக் கேள். வீணுக்கு வீம்பு பிடிக்காதே'' இந்த விளைஞன் யாரு, என்ன ஸ்திதியில் இருக்கிறான்''— என்று சொல்லும்போதே,

"எல்லாம் தெரிந்து தானிருக்கு, புடவைக்கென்று கொண்டுபோன பணத்தைக் குடித்தோ, சூதாடியோ பறி கொடுத்துவிட்டு; உங்கள் கூட்டாளி, யாரோ ஒரு 'காவாலி'யை விருந்துக் கழைத்து வந்திருக்கிறீர்கள். இதற்கு ஜோஸ்யம் தெரிய வேண்டுமா?'' என்று சொல்லிக்கொண்டே அவ்விளைஞன் முகத்தை நோக்கினாள். அவன் குனிந்ததலை நிமிராமலும், கைகளிரண்டையும் மார்பில் சேர்த்துக் கட்டியபடியும் நின்றிருந்தான். கண்கள் முக்கால் பங்கு மூடப்பட்டிருந்தது, நெற்றி மிகவும் சுருங்கியிருந்தது. கவனித்துப் பார்ப்பவர்களுக்கு அவன் அஸாத்யமான மனோவேதனையால் பீடிக்கப்பட்டிருந்ததாகத் தெரியும்.

ச்யவனனும் விடாமல், "மரகதம், நான் சொல்வதைக் கேள், நான் கொண்டு போன ரூ. 3 இதோ இருக்கிறது. சுப்பய்யாவும், அநந்தனும் பணமில்லை யென்றதால், நான் வெருங்கையோடு திரும்பிவிட நேரிட்டது. வழியில் இவ்வாலிபன் குளிரில் விரைத்து, பசிக்களைப்பு மேலிட்டு, நம்மூர் பிள்ளையார் கோயிலண்டை கிடந்தான்; பாபம் நான் பார்த்து அழைத்துக் கொண்டு வந்திராவிட்டால், சூர்யோதயத்துக்குள் ப்ராணன் போயிருக்கும். கடவுளல்லவா இருக்கிறார். கண்ணே, மூர்க்கத்தனமாயிராதே. நாம் பிள்ளை குட்டிக்காரரல்லவா? நம்முடைய குழந்தைகள் நல்ல கதி யடையவேண்டுமல்லவா? கஞ்சியோ கூழோ, இருப்பதை 'தேகி' என்றவர்க்கிட்டால் கடவுள் நமக்கு அநுக்ரஹிப்பார்'' என்று பக்திரஸ வர்ஷமாகப் பொழிந்தான்.

தன்னுடைய குழந்தைகளைப்பற்றிக் கூறும்பொழுதே, மரகதத்தின் மனம் இளகிவிட்டது. அவ்வாலிபனை யொருதரம் பார்த்தாள். அவள் மனம் பரிசுத்தமான அன்பால் நிறைந்தது. உடனே இனிமையான குரலில் "நாதா மன்னிக்கவேண்டும். ஏதோ கோபத்தால் உளறிவிட்டேன், ஸ்த்ரீதானே. இதோ ஒரு க்ஷணம், அரைப்படி அரிசி வடித்து ஒரு ரஸம் வைக்க எந்நேரம் பிடிக்கும்?'' என்று சமையலுக்குப் பிரயத்நம் பண்ணினாள்.

மரகதம் மகா சதுரை. சமையல் நளபாகந்தான். கொஞ்ச நாழிகைக்குள் சமையல் செய்து முடித்து, இலை[தைய இலைதான்-வாழையிலைக்குப் பணமேது] போட்டு, தண்ணீர் வைத்து, இருவருக்கும் போஜனம் வட்டித்தாள். சாப்பிடும்பொழுது அந்த இளைஞனைக் கூர்ந்து பார்க்கப் பார்க்க அவனிடம் இரக்கமும், ஒருபுத்ரனிடமுண்டாகும் வாத்ஸல்யமும் உண்டாயின.

(இன்னும் வரும்.)

## ஹாஸ்யத் துணுக்குகள்

### WIT AND HUMOUR

ஸப் அஸிஸ்டண்டு இன்ஸ்பெக்டர் :— அடேபையா, உன் பெயரென்ன ?

பையன் :— எங்க அம்மா வச்சபேரா, அப்பா வச்சபேரா, இல்லாட்டா பாட்டி வச்ச பேரா ?

ஸ. அ. இ. :—உன்னைப் பள்ளிக்கூடத்தில் எல்லாரும் கூப்பிடுகிற பெயர்.

பையன் :—ரெட்டை வால்.

ஸ.அ.இ.:--அப்படியா! பேஷ்! ஆனால் இந்தக் கணக்கைப்போடுபார்க்கலாம். பழமார்நேரிக்கும் திருவையாத்துக்கும் 18 மைல். ஒருவன் சாயந்திரம் 5 மணி சுமாருக்குப் பழமார் நேரியிலிருந்து புறப்பட்டு; மணிக்கு 5 மைல் வீதம் நடந்து திருவையாத்துக்குப் போகிறான். திருக்காட்டுப்பள்ளிக்குப் போனவுடன் இருட்டிக்கொண்டு மழைபெய்ய ஆரம்பித்துவிட்டது. பிறகு லாந்தர் ஒன்று ஏற்றிக்கொண்டு மணிக்கு 3 மைல் வீதம் நடக்கிறான். அப்படியானால் திருவையாத்துக்கு எத்தனை மணிக்குப் போய்ச் செருவான் ?

பையன்:—இவ்வளவு பெரிய கணக்கு எங்க வாத்தியார் எனக்கு சொல்லிக் கொடுத்ததே கிடையாது. கத்தாரிக்கா கணக்குத்தான் போடுகிற வழக்கம். இருந்தாலும் சொல்லுகிறேன். முதலில் திருவையாத்துக்கும் பழமார்நேரிக்கும் பத்துமைல்தான். குதிரையே மணிக்கு ஐந்து மைல்தான் போகும். மனிதன் எப்படி ஐந்து மைல் நடக்கமுடியும்? அப்படியே நடந்தாலும், மழைபேயும்போது ஒரு மடையனும் போகமாட்டான். தூம்பலில் புறப்பட்டாலும் தூத்தலில் புறப்படக் கூடாதென்று பாட்டியம்மா எல்லாரும் சொல்லுவாள். அதுவுமில்லாதே, விளக்கும் அணைந்துவிடும். அப்பிடியேபோனாலும், கோணச்சாலையில் கள்ளன் பிடித்துக்கொண்டு ஓதைத்து ஊருக்குத் திருப்பிவிடுவான். ஆகையால் திருவையாத்துக்குப் போயிருக்கவே மாட்டான். திருக்காட்டுப்பள்ளியிலேயே தானிருப்பான். ஆகையால் கணக்குத் தப்பு.

* * *

ஜட்ஜ் :—ஓய்! இது உமது கையெழுத்துத்தானா ?

சாக்ஷி:—நான் எழுதினால் அநேகமாய் இப்படித்தான் இருக்குமென்று நினைக்கிறேன்.

ஜட்ஜ் :—கேட்டகேள்விக்குப் பதில் சொல்லும். இது உம்முடைய கையெழுத்தா, அல்லவா ?

சாக்ஷி :—இல்லவேயில்லை.

ஜட்ஜ்:--அதென்ன் அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்லுகிறீர் ? கையெழுத்துப் போட்டுவிட்டு மறந்து போயிருக்கக்கூடாதோ !

சாக்ஷி :—பத்திரமொண்ணில் கைநாட்டிவிட்டு மறந்தாபோகும் அது. அதைப்பற்றி எனக்கென்ன ? எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. தெரிஞ்சான்னா வழக்கு.

* * *

ராமு :—ஏண்டா கிட்டு, நானும் எல்லா நியூஸ் பேபரிலேயும் பார்க்கிறேன். எங்கேயானும் ஒரு பக்கத்திலே, அலக்கா ஒன்றும் அச்சடிக்காமல் விட்டிருக்கானே. அது என்னத்துக்கடா ?

கிட்டு :—ஐயோ, ! நோக்கு இதுகூடத் தெரியல்லையே. படிக்கத் தெரிஞ்சவாளுக்கு அச்சடிச்ச இடம். நம்பளைப்போல் படிக்கத் தெரியாதவாளுக்கு அலக்காவிட்ட எடம். இதுகூடத் தெரியாதோ. ப்ரமாதமாய்க் கேக்கரயே !

* * *

நாகு அம்மாள் :—ஏண்டா கரப்பா. ஒங்கிட்டே மேச்சத்தரை யிருக்காமே ! எங்காத்திலே ஒரு எரும மாடு இருக்கு. அது ரொம்ப எளச்சிருக்கு. அதெ மேச்சாத் தாவேலெ. ஒரு மாஸம் மேஞ்சா என்ன குடுக்கணும் ?

கருப்பன் :—ஹூம் ! தெரியாதா அம்மா ! வாலறந்த மாட்டுக்கு மாஸம் மூணு ரூபா. நீள வாலா இருக்கிற மாட்டுக்கு மாஸம் ஆறு ரூபா.

நாகு அம்மாள் :— இதென்னடா. நோக்கு வாலிருந்தா என்ன இல்லாட்டா என்ன ?

கருப்பன் :—அதுலேதான் அம்மா ! இருக்கு எல்லாம். வால்நீளமாயிருந்தா மேலே ஒக்காரர ஈயை யோட்டிக்கிண்டு நரையாபில்லு திங்கும். வால் இல்லாட்டா. ஈ புடுங்கறத்ரியம் பொறுக்காதே கொஞுசந்தான் திங்கும். ஓம் மாட்டை வாலே அறுத்துக்கிட்டு, கொண்டுக்கிட்டுவா. மாஸம் ரெண்டு ரூபா கொடு போறும். அப்பாலே என்ன! போயே ! ஹூம்,

...THE REGISTRAR OF ...
REGISTERED
23 OCT 191

# விவேக போதினி

“எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெம்ப்பொருள் காண்ப தறிவு.”—திருவள்ளுவர்

தொகுதி X || பிங்களஹு ஆடிமீ :: 1917-ஹு ஆக்ஸ்ட்மீ || பகுதி 2

## மெய்க்குலம்

### THE HERITAGE OF TRUTH

மெய்ம்மை வேதியன் விரதத் தூய்மையன்
விபுல வாண்மையன் நெறிவி லோதனன்
பொய்யில் நீதியன் புனித ஞானியன்
புகழ்க லேக்கெலாம் புகுமி டம்படர்
மையுள் ஐந்தொரீஇ முதலை வாழ்த்துறீஇ
மோட்ச லட்சணத் துருவ மாயெழீஇப்
பொய்யு மன்பினன் புகலும் வன்பினன்
புலத்தி யப்பெயர்ப் போத காதிபன்.

வேறு

சீலந் தயைசிறப்புச் சிந்தையுட ளுண்டு
ஞாலந் தழைக்க நலம்பயக்கச்—சால
அறிவூட்டும் ஐயன் அடிபணிந்தான் அன்பு
செறியுஞ் சிறுவன் சிறந்து.

வேறு

“குவிந்த கைதலை மீதுறக் கூட்டி,
பவந்தொலை ஞானம் பயந்திடக் கேட்டி!
தவழ்ந்திடும் பால! நின் தாய்தந்தை யூர்பெயர்
குலநல மிவைதமைக் குறித்துண ராது,
தலக்கம ரிர்டெயும் பாலெனப் பயனிலா
தலைவுற ஞான மளித்தல் தகாது” எனத்
திகைத்தச் சிறுவன் சிற்றூர் உற்றுரீஇ,
“அன்னாய்! என்குலம், அதன்நலம், தந்தை
தன்பெயர் முதலா உரை” எனத் தண்கணீர்
உகுத்தரு அருவி உடைநனை தரமனந்
தகித்திட அலண்டு தம்பித்துப்
பதைத்தவள் தனை “அம்ம! அம்ம! என்னம்ம!
என்னிது?” எனக்கலங் கலறுறூஉம்
மைந்தனை மனந்தெளிந் தெடுத்து மார்பிற்
றழுவின ளாட்டினள் கெழுங்கண் ணெழுக்கினன்,
அழிந்துளங் கிழிந்திட விழ்பிதுங் கிடவுரை
குழம்பிட விழ்குரல் மொழிந்தன ளிற்றே:—

வேறு

“சொல்லுந் திறத்ததோ தோகையர் சூழ்ச்சிக்கு
வெல்லுந் திறத்தோ வினை, மைந்த!—சொல்லுந்
தகைத்தன் றெதற்”கென்றாள் தன்கீழ்மையுள்ளம்
துகைத்த துயரிற் சுழன்று,

“ஞானப் பெருந்தீபம் நாடி யுளமவிக்க
மானப் புலத்தியனை மன்னினேன்—ஊனமிலான்
கேட்ட மொழிக்குமொழி கூறக் கிழமையினாய்!,
மூட்டமின் றுண்மை மொழி.”

“கொண்டானை யற்றேன் கொடுவினையிற் பாய்ந்தி[ருந்தேன்
உண்டான சுற்ற முறவற்றேன்—வண்டார்
மலர்க்குமுத மொத்த மகவ! நினைப் பெற்ற
வலர்க்கு முத லெத்தனைபேர் ஆற?”

என்றாள்; பதைத்தாள்; இழிமனம் புண்ணுக
நின்றானை வாழ்த்திட்டு நீங்கினான்—கன்றானைக்
காணுங் கண்ணானைக் கண்டான் புலத்தியனும்
பூணுங் கருத்தன்பு பூண்டு.

வேறு

“தாயுண்டு; தந்தையிலை; தாசிகுலத் துதித்துமி[லேன்!
நோயுண்டு நிற்கும்எற்கு நுண்ணறிவும்பெருமற்றே
நீயுண்டு நின்பாதம் நெடிதுமுள தெனதகத்தே
சேயுண்டு நானுனக்கென் செல்வழிக்குஞ் செல்வ
[முண்டே?”

வேறு

எனச்சிறு வன்சொலும் மனச்செறி வுணர்ந்து
மகிழ்ச்சியின் பொங்கி மடைதிறந் தென்ன,
புகழ்ச்சியின் வெள்ளப் புதுநீ ராட்டி
இகழ்ச்சியில் சிறுவனை இருகரத் தணைந்து,
“இன்ப வாரியின் எய்தின் செல்வ!
முற்பவ மொழிக்கு மூதுணர் வதுதான்
மறையவர் குலக்கே மாண்புடைத் தெனினும்,
குறையிற் குலர்க்கே கூடிடு மெனினும்,
புரையறு மனத்தின் புனித வாய்மை
திரைதறு மோதச் செழுங்கடற் குலத்துச்
சிறுவ! நிற்கலால் செல்லுமற் றியார்க்கே!”
எனப்புலத் தியன் சொலத் தனைமறந் தவசமாய்க்
குவிதரக் கரமவை குறையரக் கனவின்
“உண்மை யினுங்குல முளதே” என்னும்
திண்மைஆரியன் வாய்மையிற் செறிந்தெனம்
பாய்ந்த சிறுவனைப் பார்த்ததூஉம்,
வாய்ந்த மனனர் மதிப்ப துயாமே

விவேக போதினி

தொ. 10] பிங்களஹு ஆடிமீ [ப. 2

# வினைத் தூய்மை

## THE IDEAL LIFE

துஉய்மை யென்ப தவாவின்மை மற்று
வாஅய்மை வேண்ட வரும்—திருக்குறள்

இது மனிதவாழ்க்கைக்கும் பொருந்தும். சேதனாசேதன முணர்ந்துயர்வதே பிறப்பின் பெருமையாகும். இதற்கு அறிவின் முதிற்சியே ஆதாரம். அறிவும், நல்வினை, ஒழுக்கம், ஊக்கம், உண்மையி னுழைத்தல் இவைகளால் பெருமை பெறும். அவ்வாறு அறிவைத் தமது இச்சைகளின் செல்லவிடாது, அடக்கி, படாத்தினால் மறைக்கப்பட்ட குதிரை ராஜபாடையில் நேரே செல்வதுபோல, இருபக்கங்களிலும் இருக்கும் அதப்பாதாளங்களில் விழாது, யோகவழியிற் செலுத்துவதே மனிதப் பிறப்பின் திறமையாகும். ஆயினும் அவ்வாறு செய்வதற்குத் தனியாக விளங்கிக் காட்டிற் தவித்துக் கதிபெற வேண்டியதில்லை. சாதாரணமான லோக வியவஹாரங்களிலுமிருந்து, பற்றினால் ஏற்படும் ஆசைகளின் மயக்கங்களில் மயங்காது, செய்யும் வினைகளை நிஷ்பக்ஷமாகத் தருமவழியிற்செய்துஉண்மையிலீடுபட்டு, நிலைதவறாது நிற்குங் காலத்துஞ் செய்வதாகும். "நடந்தாலு மிருந்தாலும் நவின்றாலுந் துயின்றாலு...மெஞ்ஞானி கமலவிலைப் புனல்போல்வான்" என்ற ஆன்றோர் வாக்கு அவர்க்கே பொருந்தும். உலகிலிருந்தும் அதிற் சம்பந்தப்படாது வினைத்தூய்மையுடன் விளங்குவதே எப்பிறவிக்கும் தப்பற முத்தி நிலையாகும். நிலையை யடைவதற்கு மனமே ஆதாரமானதால், மனத்தின் பெருமையாலேயே முத்தி நிலைக்க நம் முன்னோர் நடந்த வழி நன்கறிவது நமக்கு இன்றியமையாததாகும்.

அவ்வாறு நடந்தவருள் தரும கர்மத்தைச் சற்றும் இடைவிடாது கைப்பற்றியவர் விதுரர். அவர் சந்திரகுலத் துதித்த சந்தனுவின் மனைவியாகிய சத்தியவதியின் விருப்பத்தின்படி தாதியாகிய அம்பையிடம் ஸ்ரீவேதவியாசரது அனுக்கிரஹத்தினால் பிறந்தவர். ஆகவே அவர் பிராமணரும் அல்லர்; க்ஷத்ரியரும் அல்லர்; சங்கர சாதியிற் சேர்ந்தவர். ஆயினும் திருதராஷ்டிரன், பாண்டு ஆகிய இருவருடன் தம்பியாக வளர்ந்தவர். சிறுபொழுது முதலே, இயற்கை யறிவில் இவர் மிகச் சிறந்து விளங்கினர்; மற்றுத் தனுர்வேதம் கற்றுச் சிறந்து, வில்லிற்கு விதுரர் என்று ஒப்பிடும்படியான பெருமையையும் அடைந்தனர். மயக்கமற்ற ஞான முணர்த்தும் பீஷ்மர், திருதராஷ்டிரனைக் குருநாட்டு அரசனாக்கிப் பாண்டுவைச் சேனாபதியாக்கி விதுரரை அவரது அபாரபுத்தியை நோக்கி மந்திரியாக விளங்க வைத்தனர்.

நிற்க, மனிதர்கள் தமது வாழ்க்கையிலே மெய்யறிவடைய முயலும் சத்புருஷ லக்ஷணத்தை முன் சொன்னோம். இவ்வுலகத்திலிருந்து மோக்ஷ ஸாம்பிராச்சியத்தை, இருந்த இடத்திலிருந்தே யடையச்செய்யும் பிரயத்தனத்தின் லக்ஷ்யமே விதுரர் வாழ்க்கையை வெளியிடுவதாகும். அதற்கொப்ப அவர் வாழ்க்கை வழியை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். பிராமணராகிய வியாசர்க்குச் சூத்திர ஸ்த்ரீயாகிய அம்பையிடம் தோன்றியதால் அவர்க்குப் பிராமணரது அறிவும் சூத்திரரது வணக்கமும் கலந்து விளங்கின. அறிவும் வணக்கமும் பிணைக்கப்பட்டால் கருவம் தழைக்க இடமிருக்காதென்பது எல்லோர்க்கும் வெளிப்படையே! அதனாலேயே அவரது வாழ்க்கையானது படிப்படியாக ஏறும் தன்மை வாய்ந்ததாகியதென்பதற்குச் சந்தேகமில்லை.

முதற் பருவத்தில் அவரை லோக வியவகாரங்களிலேதான் காணலாம். இவர் மந்திரியாக இருந்த பொழுது ஸாதாரணமாகிய யோசனை முதலியவைகளை எடுத்துரைப்பதே கடமையானபடியால்இவர் பாண்டுவைப்போல உலக விபரீதங்களில். அதிகமாகத் தலையிடவில்லை. இக்காலத்தில் அவர் கற்றவர்களைக் கொண்டு சாஸ்திர பரிசீலனஞ் செய்து வந்தனராயினும், தான் சூத்திர அணங்கிடம் தோன்றியதை நன்குணர்ந்து, விதிவிலக்கைக் கையாண்டு, வேதமோதாது விடுத்தனர். இதற்குள் பாண்டுவுக்கும் திருதராஷ்டிரனுக்கும் குழந்தைகள் பிறந்தன. முறையே பாண்டவர் கௌரவர் எனப் பெயர்கொண்ட அம்மக்கள் தினே தினே வளர்ந்துவருவதில் மிக்க அன்பு கொண்டு விளங்கிய விதுரர், சிறு பொழுதிலேயே தரும வழியிற் பதிந்த பாண்டவரிடமன்பும், கொடுவழியிற் பாய்ந்து விளங்கிய கௌரவரிடம் அனுதாபமும் கொண்டு விளங்கினர். கௌரவ பாண்டவர்கள் துரோணரிடம் கல்வியும் தனுர்வேதமும் கற்க அமைக்கப்பட்டபொழுதும், பாண்டவரது நற்குணமே லீட்டினால், விதுரர்க்கு அவரிடம் பேரன்புண்டாகியது. ஆயினும் கௌரவரிடம் வெறுப்பாவது பகையாவதுகொள்ளாது, அவரது இளம் பிள்ளைத்தனத்தாற் செய்த குற்றங்களைக் களையும்படியான வழியையே செய்து வந்தனர். பாம்புக்குப் பால்வார்த்து வளர்த்தாலும் அதன் கொடும் விஷமொழியாதென்பதற்கொப்ப, அவருக்குச் சொன்ன நல்லபுத்தியெல்லாம் செவிடன் காதிலூதிய சங்குபோல் வீண் சிரமமாகவே முடிந்தன. ஆயினும் விதுரர் அவரிடம் வெறுக்காது விளங்கினர்.



பாண்டவரிடம் விதுரர் அன்புகொண்டதற்கு, அவரது நல்ல குணமொன்றே காரணமல்ல; அவர் சிறுநாளிலேயே, தமது தந்தையிறக்க, அநாதைகளானபடியால், அவர்களைச் சரிவரக் காத்தல் தமது கடமை என அவர் கொண்ட உண்மை நிலையும் அதற்குக் காரணமாகும். மரத்தைத் தழுவி வளரும் கொடிபோல் தனது மனக்கொள்கைகளை நன்கு மதித்து வளர்ந்த பாண்டவரை, விதுரர் நிஷ்பக்ஷபாதத்துடன் காக்கக் கங்கணங்கட்டினரென்பதில் சிறிதுந்தவறுமா? பாண்டவரது குணமும், பெருமையும், கல்விச் சிறப்பும் துரியோதனாதியாகிய கௌரவர் மனத்துப் பொறாமை யுண்டாக்கின. போதாக்குறைக்கு அவர்க்கு அம்மான் ஆகிய சகுனி அவரைக் குரோதமென்னும் வீதியில் பவனிவரும்படி செய்வதிலேயே ஆவலாய் இருந்தான். "தானே யாடும் பேய், பறை பெற்றால் ஆடாதோ?" ஆகையால் கௌரவர், பாண்டவரைக் கொன்றுவிடுவதெனப் பல சூழ்ச்சி செய்தனர். முக்கியமாகப் பாண்டவருள் வீமனிடமே துரியோதனனுக்குப் பகை. அவனைப் பலவழியிலும் கொல்ல யத்தனித்தான். இவற்றையெல்லாம் விதுரர் கவனித்தே வந்தனர். ஆயினும் பிள்ளை வழக்குகளில் பிரவேசித்தல் தகாதென்று சும்மா இருந்தனர். பின் துரோணரிடம் படித்ததும் அவரது விருப்பப்படி பாண்டவருள் ஒருவனாகிய வில்லில் வல்ல விஜயன் குருதக்ஷிணை கொடுத்ததும், கௌரவரதுவயிற்றிலிருந்த நெருப்புத் தழலிடவாரம்பித்தது. இவற்றைக் கண்ட விதுரர், திருதராஷ்டிரனை நோக்கி "அண்ணா நீங்கள் அறியாதவர் அல்லர்; பாண்டவருள் மூத்தவனாகிய தருமனே நாட்டிற்கு முறைமையால் இளவரசாக இருக்கவேண்டியவன். குணத்திலும் ஒழுக்கத்திலும் மற்றெவ்விதத்திலும் உயர்ந்தவன் அவனே"எனக்கூறினர். பீஷ்மரும் அப்பொழுது "அதுவே முறை; உடனே தருமனை இளவரசாக்குவதே முறைமை" என்றார். திருதராஷ்டிரனும் அதற்கொருவாறு ஒப்பினான்.

ஆனால் ஆசைவெள்ளத்தில் அடித்துக்கொண்டு, சகுனி யென்னும் தனது அம்மானது துர்க்குணச் சேற்றில் புரண்டு செல்லும் துரியோதனாதியர், தமது தந்தையை அணுகி "எங்களுக்கில்லாது இந்நாட்டைப் பாண்டவர்களுக்குக் கொடுத்து, எங்களைப் பரதேசியாக்குதல் உமக்கழகோ?" எனக் கண்ணீர் விட்டுச் சாகசஞ்செய்து நாட்டைத் தமக்கே தரும்படி விரும்பினர். இவற்றைக் கேட்ட திருதராஷ்டிரன் மனஞ் சிந்தித்து, என்ன செய்வதெனத் தெரியாது, அவர் சொல்லிய முறைப்படி செய்ய ஒப்புக்கொண்டனன்.

பின், பீஷ்மரும் "நீ செய்வதடாது ; ஒருநாளும் பொருந்தாது. இனி பிரிவுறுங்காலம் வந்துவிட்டது. இவ் விருதிறத்தாரும் இங்கிருந்தால் இனி பகையே யுண்டாகும். ஆதலால், அவர்களைப் பிரித்து வெவ்வேறிடத்தில் வைப்பதேநீதியும்நியாயமுமாகும்;காலஞ் செல்லச்செல்ல, பகையுமாற மனமிடந்தரும். உமது தம்பியின் மக்களைக் காத்தல் உமது கடமை; மைந்தரிடத் தாசையால் அதர்மஞ் செய்வது அவதியே தரும்" என்றனர். இவற்றைக் கேட்

டதும், திருதராஷ்டிரன் பாண்டவரை வாரணவதம் என்னும் பட்டணத்தில் தனியரசாள அமைப்பதாக நிச்சயித்தான். தந்தையின் எண்ணத்தை யுணர்ந்த கௌரவர், அந்நகரில் பாண்டவர்க்கெனக் கட்டப்படும் அரண்மனைகளைச் சமைக்குஞ் சிற்பியைத் தம் கைக்குள் போட்டுக்கொண்டனர்; அம்மாளிகையை அரக்கினால் செய்துவிடும்படி செய்தனர்; அதனுள் பாண்டவர் இருந்து நித்திரை செய்யும்போது நெருப்புவைத்துக் கொளுத்திவிடும்படியாகவும் ஏற்பாடுகள்செய்திருந்தனர்.

துரியோதனாதியருடைய சூழ்ச்சிகளையெல்லாம் உணர்ந்தாராயினும், விதுரர் வெளியே தான் ஒன்றையும் காட்டிக்கொள்ளவில்லை. 'சிறு பிள்ளைகள்; சிலநாள் சென்றதும் சரியாய் விடுவரென்று அவர் எண்ணினர் போலும்! ஆயினும் அவ்வரக்கு மாளிகையைக்கட்டும் சிற்பியைக் கூவி, அதில் ஓர் கள்ளவழியும் அதன் வழியாகக் கங்கையாற்றுக்குப் போகும்படியான ஒரு சுரங்கமும் யாரு முணராதிருக்குப்படி சமைப்பித்தார். இதுவன்றோ நிஷ்பக்ஷபாத நிலைமை? மற்று, துரியோதனாதியரின் கொடுமையைத் தான் எடுத்துரைப்பினும் திருதராஷ்டிரன் கேளான்; அவை தாமே வெளிவந்தால், தானே அறிவன் என்றே விதுரர் திருதராஷ்டிரனிடம் உண்மையை விளக்காமலே இருந்தனர்; ஆயினும் பாண்டுமைந்தர் பிழைக்கும் வழியையுந் தேடினர்.

நிற்க, பாண்டவர்கள் விமரிசையாக வாரணவதத்திற்குப் புறப்பட்டனர். வழியில் வீமனைத் தனியாக அழைத்து, விதுரரிடமிருந்து வந்த ஒரு ஒற்றன், அரக்குமாளிகையின் இயற்கையையும், துரியோதனனுடைய எண்ணத்தையும் வெளியிட்டு, பாண்டவர் தப்பிப் பிழைப்பதற்குச் செய்திருக்கும் தந்திரத்தையும் மறைவாகச் சொல்லி, வீமனை எச்சரித்துச் சென்றான். அரக்குமாளிகை தீப்பற்றி எரிந்துவிட்டது. ஊர்முழுதும் பாண்டவர் மடிந்தனரெனவே புகார் கிளம்பியது. ஆயினும் விதுரரது ஜாக்கிரதையினால் அவர் வீமனால் காக்கப்பட்டுக் கங்கையாற்றங் கரைக்குச் சுரங்கத்தின் வாயிலாகக் கொண்டுவரப் பெற்றனர். அக்கால் பாண்டவரும் அவரது தாயும் கங்கையைக் கடந்து இடும்பவனத்தில் வசிக்கவேண்டி வந்தது. பின் அவர் உபப்பிலாவியமென்னும் வனத்தைக் கடந்து, வேதவியாசரது அனுமதியின்பேரில் பிராஹ்மண வேஷத்துடன் ஏகசக்ர நகரத்தில் வாழ்ந்து வந்தனர்.

அச்சமயம் பாஞ்சாலதேசத்தரசன் மகளாகிய திரௌபதியின் ஸ்வயம்வரம் நடப்பதாக வதந்தி வரவே, பாண்டவர்கள் தாமும் அங்குச் செல்ல விருப்பங்கொண்டனர். அன்னையின் உத்தரவைப் பெற்று, அங்குச் செல்லும் பிராஹ்மணக் கூட்டத்துடன் பாண்டவரும் நடந்து, அவ்விடம் அடைந்தனர். துருபதராஜன் திரௌபதியைப் பாண்டவருள் ஒருவனாகிய விஜயனுக்கே மணஞ் செய்விக்கப் பெரும் யாகஞ்செய்து பெற்றனன்; ஆனால், அவன் இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டதன் பேரில், மச்சயந்திரம் ஒன்றமைத்து, அதில் இருக்கும் இலக்கை எய்தவனுக்கே, தன் மகளைக் கொடுப்பதாக வெளியிடச்செய்தான். இதனால் விஜயனைக் காணலாம் என்று திரௌபதி செய்த சூழ்ச்சியே இது. அவ்வியந்திரத்தை, வந்த அரசர் யாவராலும் இலக்கு வைத்தடிக்க முடியவில்லை. பின் துக்கமேலிட்டுத் துருபதன் விளங்கும்போது, பிராஹ்மணனாக விளங்கிய அருச்சுனன் 'பிராமணர்கள் இலக்கை அடிக்கலாமா?' எனக்கேட்டதும், அதற்குத் துருபதன் ஒப்பவே அருச்சுனன் மீன் பொறியை எய்தனன். கவலைகொண்ட துருபதனை, வியாசர் உண்மை விவரஞ் சொல்லித் தேற்றினர். பிறகு தம் தாயின் வாக்கை நிறைவேற்றும் பொருட்டுப்பாண்டவர் ஐவரும் திரௌபதியை மணந்தனர். இதை உணர்ந்த விதுரரும் திருதராஷ்டிரனிடம் நடந்தவற்றைச் சொல்லிப் பாண்டவரைக் காக்கும் கடமையை வற்புறுத்தினர். பலவிதமும் தரும விஷயங்களைச் சொல்லிச்சொல்லி யூட்டிய ஞான வுணர்ச்சியால் திருதராஷ்டிரனும், இந்திரப்பிரஸ்தமென்னும் பட்டணத்தில் தருமர் முதலிய பாண்டவரைவரும் பாஞ்சாலியுடன் அரசாளும்படி அமைத்தனன். உறவினர்க்குப் பக்ஷபாதத்திற்குட்படாது நடத்தவேண்டிய கடமையை விதுரர் நடத்தியவிதம் நடப்பதரிதன்றோ?

"விருப்பறாச் சுற்றமியையின் அருப்பறா
ஆக்கம் பலவுந் தரும்'—திருக்குறள்.



23 OCT 1917

# ரஜபுத்திரப் பெருமை

## THE HEROISM OF RAJPUTS

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பல வருஷங்கள் சென்றன; சிறிய பையனாயிருந்தவன் பெரிய மனிதனாய்விட்டான்; அவனுக்குப் பன்னிரண்டு குழந்தைகளும் பிறந்துவிட்டன. பீமஸிங்கும் அவனுடைய மனைவியும் ஏரிக்கரையில் இப்பொழுது அழிந்து கிடக்கின்ற அவர்களுடைய அரண்மனையில் கௌரதையுடன் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். அல்லாவுடீனோ கிழட்டு மாமனாகிய டில்லியரசன் தனது மருமகனை ஆசையுடன் அணைத்துக்கொள்ளக் குனிந்தபொழுது, அக்கிழவனைத் தந்திரமாகக் கொல்லும்படி ஏற்பாடுசெய்து, இப்பொழுது டில்லி சிம்மாசனத்தில் வீற்றிருந்தான். சிம்ஹாசனம் ஏறிய நாள்முதல், அல்லாவுடீன் மிகப் பயங்கரமாக அரசாட்சி செய்துவந்தான். அவனுடைய குடிகளுக்குள் சிறிது செல்வாக்கையுடைய எவரேனும் அவனுடைய அதிருப்திக்குக் காரணமாய்விட்டால், அவன் அவர்களைக் கொலைசெய்துவிடுவான்! கண்களைப் பிடுங்கிவிடுவான்; சிறையில் அடைத்து விடுவான்; அவர்களுடையசொத்துக்களைத் தன்னதுடன் சேர்த்துக்கொண்டு அவர்களுடைய பெண்டு பிள்ளைகளைத் திண்டாட விட்டுவிடுவான். தான் டில்லிமாநகரம் ப்ரவேசிக்கும் சமயம் வேடிக்கை பார்க்க வந்திருக்கும் ஜனக்கும்பல்களினிடையில் பொன்னை வாரியிறைத்துச் சாதாரண ஜனங்களைத் தன் கைக்குள் போட்டுக் கொள்வான்; எல்லோரையும் அவன் பகைத்துக் கொண்டபோதிலும், எல்லோரும் அவனைக்கண்டு பயப்பட்டபோதிலும், அவன் சந்தோஷமாகவே ராஜ்யபாரம் செய்துவந்தான். ஒரு படையெடுப்பைத் தடுப்பதிலோ, ஒரு கலகத்தை யடக்குவதிலோ, ஒரு பகைவனது தேசத்திற்குள் படையெடுத்துச் செல்வதிலோ இவன் அதிசமர்த்தன்; ஆதலால் நாளுக்குநாள் இவன் பெருமை பெருகியது. இவனுடைய கொடூரத் தன்மைக்கு ஒரு அளவேயில்லை; குற்றம் செய்தவர்களிடத்தில் மாத்திரம் அன்று, அவர்களுடைய பெண்டு பிள்ளைகளிடத்தும் தனது கொடூரத் தன்மையைக் காட்டுவான். இவனுடைய காலத்திற்கு முன்பு, புருஷர்கள் செய்த குற்றங்கட்காக அவர்களுடைய பெண்டுபிள்ளைகள் தண்டிக்கப்பட்டதேயில்லை. அவனுடைய மகம்மதியக் குடிகளுள் ஒருவர் மற்றவரது வீட்டிற்குச் செல்வதில்லை; இரண்டு மூன்றுபேர் சேர்ந்து கூடுவதில்லை; விருந்துகளோ, வேடிக்கைகளோ கிடையா; ஹிந்துக்களோ, எடுத்ததற்கெல்லாம் வரி விதிக்கப்பட்டு, மிகவும் பரதவித்துக்கொண்டிருந்தார்கள்.

சக்கரவர்த்தியாகிய அல்லாவுடீனோ, ஜயம், சதியாலோசனைகள், குடிவெறி, கணக்கற்ற கொலைகள் இவற்றிற்கெல்லாம் மத்தியிலும் பத்மினியினுடைய பரமசௌந்தர்ய முகத்தை மறந்திருக்கவில்லை. தன் குடிகளுக்குச் சகிக்கமுடியாத புதிய புதிய வரிகளெல்லாம் விதித்துத் தனவந்தர்களையும் தரித்திரர்களாக்கி மிகுந்தபணஞ் சேர்த்து ஒருபெரும் சைந்நியத்தைக் கிளப்பிக்கொண்டு புறப்பட்டு வந்து, சிற்றூரைச் சூழ்ந்துகொண்டான். பாறையாகிய சிம்ஹாசனத்தின்மீது வீற்றிருக்கப்பட்ட சிற்றூர்க்கோட்டையானது இதற்குமுன் எந்த எதிரியையும் லட்சியம் செய்ததில்லையாதலால் ரஜபுத்திரர்கள் முதலில் அல்லாவுடீனை இகழ்ந்து பரிகசித்தார்கள். கோட்டையின் கீழ்வாசலுக்கு எதிரே தரை சிறிது உயர்ந்திருந்தது. அங்கு மண்ணைக் கொண்டுவந்து கொட்டி, அந்த இடத்தை உயர்த்தும்படி அல்லாவுடீன் கட்டளையிட்டான். முதலில் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு கூடை மண்ணுக்கும் அவன் ஒரு செம்பு நாணயம் வீதம் கூலியளித்தான். அங்கு அப்படி உயர்த்தப்பட்ட குன்றானது இப்பொழுது காணப்படும் அளவு உயரமாவதற்குமுன், ஒவ்வொரு கூடைமண்ணும் ஒரு தங்க நாணயம் விலைபெற்றதாம். இந்தக் குன்றின்மீது அல்லாவுடீன் தனது ஆட்களை நிறுத்தி, கோட்டைக்குள்ளேயுள்ள ஜனங்களின்மீது கற்களையும் சிறு கத்திகளையும் இன்னும் அபாயத்தை உண்டாக்கத்தக்க பல வஸ்துக்களையும் எறியும்படி அவர்களுக்கு உத்தரவு செய்தான்.

சிற்றூர்க் கோட்டைக்குள்ளேயிருந்த ரஜபுத்திரர்கள், மகம்மதியர்கள் தங்களை நெருங்கிச் சூழ்ந்துவிட்டதையும் தாங்கள் அவர்களை எதிர்ப்பதற்குப் போதுமான சக்தியில்லா

திருப்பதையும் அறிந்து கொண்டார்கள். வீண் புஜபலம் மாத்திரம் பயனில்லாது போயிற்று. ஏனென்றால் புஜபலத்தினால் மாத்திரம் கார்யம் நடக்கிறதாயிருந்தால், ரஜபுத்திரர்கள் மகம்மதியர்களைச் சின்னாபின்னப்படுத்தித் துரத்தியடித்திருப்பார்கள். மழைகாலம் ஆரம்பித்து விட்டது; காரிருள் சூழ்ந்து, நிச்சப்தமான, பயங்கரமான நீண்ட இரவுகாலங்களில் மீவார்தேசத்து ராணா சிற்றூர்க் கோட்டைக்கு நேரிடப்போகிற ஆபத்தைக் குறித்து நினைந்து நினைந்து நித்திரையின்றித் தனது பஞ்சணை மெத்தையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தான். ஒரு நாள் இரவு ராணா தனது படுக்கையில் படுத்துக் கண்ணீர் ஆறுவிட்டுப் புலம்பிக் கொண்டிருந்தபொழுது "எனக்குப் பசிக்கிறது; எனக்குப் பசிக்கிறது" என்று ஒரு சப்தம் வெகு தூரத்திலிருந்து கேட்டது.

உடனே எழுந்திருந்தான் ராணா, சுற்றிப் பார்த்தான்; ஜகஜ்ஜோதியாய் ஒரு திவ்ய ப்ரகாசம் தோன்றிற்று; மத்தியில் பெரியதோர் உருவமும் தோன்றிற்று. அவ்வுருவம் சிற்றூர் நகரத்தைப் பற்பல ஆபத்துக்களினின்றும் ரட்சித்துவருகிற நகர தேவதையென்று ராணா அறிந்துகொண்டு, உடல் நடுங்க, ரோமங்கள் சிலிர்க்க, மிகுந்த பயத்துடன் அந்தத் தேவதையைப் பார்த்து "இன்னும் உனக்கு வேண்டியதென்ன? இதுவரை நீ குடித்துள்ள ரஜபுத்திர ரத்தம் போதாதோ?" என்று கேட்டான். "எனக்கு வேண்டியது அரசர்களுடைய ரத்தம்தான்; நான் இந்த நகரத்தில் இருக்கவேண்டுமானால் கிரீடாதிபதிகளாயுள்ள பன்னிரண்டு அரசர்கள் தங்களுடைய ரத்தத்தை எனக்குக் கொடுக்கவேண்டும்" என்று அவ்வுருவம் கூறி மறைந்துவிட்டது. எப்பொழுது விடியுமென்று ராணா நித்திரையின்றிக் காத்துக்கொண்டிருந்தான். பொழுது விடிந்ததும், ராணா அதிகாலையிலேயே தனது சபையோரனைவரையும் வரவழைத்து, தான் இரவில்கண்ட சங்கதியை அவர்களிடத்தில் உரைத்தான். ஆனால் ஒருவரும் இதை நம்பவில்லை.

தான் கண்டது உண்மையேயென்று ராணா எவ்வளவு தூரம் உறுதிபுகன்றும் சபையோர் நம்பாததினால், ராணா அவர்களைநோக்கி "எனது வார்த்தையை நீங்கள் நம்பாவிடில், இன்றிரவு என்னுடன் இங்கேயேயிருந்து கவனியுங்கள். ஒருவேளை அந்தத்தேவதை இன்றைக்கும் வந்தாலும் வரும்" என்றான். அப்படியே அவர்கள் அன்றிரவு அரசனது அருகில் உட்கார்ந்து விழித்துக்கொண்டிருக்க, நடுநிசியில் "எனக்குப் பசிக்கிறது. அந்நிய மதத்தினருடைய ஆயிரக்கணக்கான பிணங்கள் எனது நகரைச் சுற்றி வீழ்ந்துகிடந்ததினால் எனக்கு யாது பிரயோசனம்? எனக்கு ராஜ ரத்தம் வேண்டும். ராணாவின் குமாரர்கள் பன்னிருவரையும் தயார் செய்யுங்கள். ஒவ்வொருவனைச் சிம்ஹாசனத்திலேற்றுவித்து ராஜரீகக் குடை பிடித்து, வெண்சாமரம் வீசுங்கள். ஒவ்வொருவனும் மீவார்தேசத்துக்கு மூன்றுநாள் அரசனாயிருக்கட்டும். நான்காவது தினத்தன்று பகைவனையெதிர்த்துப் பலனை யடையட்டும். இப்படி நீங்கள் செய்வீர்களாயின், நான் சிற்றூரில் இருப்பேன்" என்று சொல்லி தேவதை மறைந்துவிட்டது.

நகர தேவதை ஆஞ்ஞையிட்ட பின்னர், யோசனைக்கிடமேது? ஏக்கத்திற் கிடமேது? தேசத்தைப் பகைவர்களிடமிருந்து பாதுகாக்கும்பொருட்டு உயிர் துறப்பதற்கு நானே முன் செல்வேன் என்று ராணாவின் புத்திரர்கள் ஒருவருக்கொருவர் போட்டிபோட்டுக் கொண்டனர். கடைசியில் மூத்தவன், தானே முதலாவது பட்டத்திற்குரியவனென்றும் ஆதலால் யுத்தத்துக்குச் செல்வதில் தனக்கே முன் பாத்தியதை யுண்டென்றும் நியாயம் கூற, எல்லோரும் சம்மதித்தனர். மூத்தவன் மூன்று நாட்களுக்கு அரசாண்டு, நான்காவது நாள் கையில்கத்தியுடன் பகைவர் சைந்நியத்தில் வீழ்ந்து இறந்தான்.

இவனுக்குப் பின்னவனான அஜித்ஸிங்கினுடைய முறை வந்தது; இந்த அஜித்ஸிங்கினிடத்தில் ராணாவுக்கு மற்றப் புத்திரர்களினும் பிரியம் அதிகமாகையால் ராணா அவனை நோக்கி "உன்னுடைய மற்றச் சகோதரர்கள் மரிக்கும் வரையிலாவது, நீ என் பக்கல் இரு" என்று அவனைக் கட்டியணைத்துக் கொண்டான். அரசனது இஷ்டப்படியே அஜித்ஸிங் ஒதுங்கி நிற்க, மற்றவர்கள் முறையே சிம்ஹாசனத்தில் வீற்று மூன்று நாட்களுக்கு ராஜ்யபாரம் செய்து யுத்தத்திற்குச் சென்று உயிர்



துறந்தார்கள். பதினொரு புத்திரர்களும் சந்தோஷமாகச் சண்டைக்குச் சென்று சிற்றூர் நகரத்தின் பொருட்டுத் தயாராயினர்; அஜித்ஸிங் ஒருவனே ராணாவினுடைய புத்திரர்களுள் உயிருடனிருப்பவன்.

பின்னர் ராணா தனது கொலுமண்டபத்தில் சபையோர்களுடன் வீற்றிருந்து நெடுநேரம் ஆலோசனை செய்து, கடைசியில் "நேரமாய் விட்டது; நான் இந்த நகரத்துக்காக இறக்கத் தயாராயிருக்கிறேன். எனது புத்திரன் தப்பித்துக் கொள்ளட்டும். நம்மால் ரட்சிக்க முடியாமலிருக்கிற இந்த ராஜ்யத்தை ஒருவேளை எப்பொழுதாவது எனது புத்திரன் அரசாளலாம்" என்றான். உடனே அங்கு பெருங்குழப்பமாய் விட்டது; எல்லா ரஜபுத்திரர்களும் "நாங்களும் வருகின்றோம்; தாங்கள் தனியே இறத்தல் தகாது; நாம் எல்லோரும் மஞ்சள் உடையுடுத்து மணக்கோலம் பூண்டு சிற்றூர் மாநகரின் க்ஷேமத்தைக் கோரி யுத்தத்தில் மரிப்போம்" என்று ஏகோபித்துக் கூறினார்கள்.

ராணா "நல்லது, அப்படியே யாகட்டும். நமது ஸ்திரீகளை முதலாவது பத்திரப்படுத்துவோம்; பின்னர் வெளியிற் சென்று பகைவர்களை எதிர்ப்போம்" என்றான். ராணாவினுடைய அரண்மனையைச் சுற்றிலும் பெருங்குழிகள் வெட்டப்பட்டன; காட்டுமரங்கள் கட்டை கட்டைகளாகக் கொண்டுவந்து போடப்பட்டன; எண்ணெய், குடம் குடமாகக் கொட்டப்பட்டது; அக்கினி குண்டங்கள் மூட்டப்பட்டு வளர்க்கப்பட்டன. எண்ணற்ற ஸ்திரீகள் ஊர்வலம் வந்து அக்கினி குண்டங்கட்குச் சென்றார்கள். ரஜபுத்திர ஸ்திரீகள் பட்டுப்பீதாம்பரங்களுடுத்து, பற்பல ஆபரணங்களணிந்து உற்சாக பூரிதர்களாய் அக்கினி குண்டங்களை யடைந்தார்கள். இவர்களின் மத்தியில் இவற்றிற்கெல்லாம் காரணமாய், அழகு வாய்ந்த அங்கனை பத்மினியும் இருந்தாள். எல்லோரும் அக்கினி குண்டங்களை வலம் வந்தார்கள், தங்கள் தங்களுடைய புருஷர்களைத் தியானித்து ஒருவர்பின் ஒருவராகப் பாய்ந்தார்கள் அக்கினியில். பத்மினி தன் புருஷன் பீமஸிங்கினுடைய பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாகப் பணிந்து எழுந்து "நான் முன்னர் சென்று, தங்களுக்கு வீரஸ்வர்க்கத்தில் உத்தமமான பதவி யொன்றைத் தயார் செய்கிறேன். தங்களை விட்டு வெகு நேரம் பிரிந்திருக்க என்னால் முடியாது. ஆகையால் காலம் தாழ்த்தாது மீவார் தேசத்தை எதிர்க்கத் துணிந்த பகைவர்களைக் கண்டதுண்டம் செய்து காலனுக்கிரையாக்கி விட்டுத் தாங்கள் ஸ்வர்க்கம் வந்து சேர்வீர்களாக" என்று தன்னுடைய புருஷனிடத்தில் கூறிவிட்டுக் குபீரென்று பாய்ந்தாள் அக்கினியில். பீமஸிங் தனக்குள் பத்மினியின் பயங்கரமான பத்தினிச் சக்தி புகுந்துகொண்டது போல வீரகர்ச்சனை செய்தான்.

பின்னர் புருஷர்கள் எல்லோரும் மஞ்சள் உடையுடுத்து மணக்கோலம் பூண்டு புறப்பட்டார்கள் யுத்தகோஷத்துடன். ராணாவினுடைய இரண்டாவது புதல்வனாகிய அஜித்ஸிங், சைந்நியத்திற்குத் தலைமை வகிக்கத் தயாராயிருந்தான். ஆனால் ராணா அவனைத்தடுத்து "என் அருமைக்கண்மணியே, நீ தப்பித்துவிடு. என் குடும்பம் நசிக்கலாகாது" என்று சொல்லிச் சில யுத்தவீரர்களுடைய பந்தோபஸ்தில் அவனைச் சிற்றூருக்கு வெளியே அனுப்பித் தப்புவிக்கும்படி செய்தான். பிறகு ராணாவும் மற்ற ரஜபுத்திரர்களும் கோட்டைக் கதவுகளைத் திறந்துகொண்டு, வீராவேசம் கொண்டவர்களாய் வெளியில் புறப்பட்டார்கள். அதிகோரமான யுத்தம் நடந்தது. பீமஸிங்கும், லட்சுமண ஸிங்கும், பதல்ஸிங்கும் இவர்கள் மூவரும், திரிமூர்த்திகளும் சேர்ந்துயுத்தகளத்தில்வந்துஇறங்கியதுபோல மகம்மதியர்களை வெகு ஆத்ரத்துடன் எதிர்த்துத் தயை தாக்ஷண்யமில்லாமல் அவரைச் சின்னாபின்னமாக்கி யெறிந்தார்கள். மகம்மதியப் பிணங்கள் எண்ணிக்கையில்லாது ஆயிரக் கணக்காய் எங்கும் விழுந்திருக்க, ரஜபுத்திரர்களும் அங்கு ஒன்று, இங்கு ஒன்றாக விழுந்து கிடந்தார்கள். ஆயினும், மகம்மதியர்களுடைய கையே ஓங்கி நின்றது. ரஜபுத்திரர்கள் அனைவரும் விழுந்து வீரஸ்வர்க்கம் சென்றார்கள். மகம்மதியர்கள் அளவற்ற சேதத்துடனும் கஷ்டத்துடனும் ஈற்றில் ஜயமடைந்தபோதிலும், அல்லாவுடீனுடைய ஆசை நிறைவேறாது போயிற்று; பத்மினியும் பரலோகம் பறந்துவிட்டாள்.

பதிவிரதா தர்ம சக்தியே பராசக்தி.

# இந்திய தேசபக்த சிரோமணியாகிய ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜியார்மீது இரங்கற்பாக்கள்

# Dadabhai Naoroji—an In Memoriam

[ஸ்ரீமான், வே. முத்துசாமி ஐயர், எம். ஏ., எல். டி.]

தாதாவாய் 1 தனில்விளங்கும் தண்ணியல்சேர் புண்ணியநம் தாய்நாட் டிற்குத்
தாதாவாய் நௌரோஜிச் சான்றோய் நீ தேசபத்திதான மீந்த
தாதாவாய்ப் 2 பன்னாளும் தலைமைபூண் டிந்தியரில் "தகை மூதாளத்
தாதா" வாய்ச் 3 செல்வப்பேர் தாங்கினை; நின் பிரிவெங்ஙன் தரிப்போமையா?

பொருள் சேர்க்குங் கலைப்புலமைப் பார்ஸியர்தம் புகழ்மாபிற் போந்தும் நீயே
தெருள் சேரும் சிந்தையொடும் திரவியசே காம் விடுத்து, தேச சேவைக்
கருள் கூர்ந்து பாடுபட்டே, ஆயுள்நாள் முழுதுமதற் கருப்பித் திட்டாய்;
மருள் தீர்ந்த வள்ளல்! உனை மாயோகி எனவழுத்தல் வாய்மையாமே

வேதாவே 4யனையாய்! சீர் மேவுலண்டன் நகரின்கண் விளங்கும் நீதிக்
காதாரப் பார்லிமேண்டின் அங்கத்துக் காங்கிலராய்ந் தனுப்பிப் பெற்றே,
"யாதானும் நாடாமால் ஊராமால்" எனுமுரைக்கோர் 5 இலக்காய்ப் பின்னோர்
நீதானே "சாந்துணையுங் கற்"றற்குந் தகுகாட்டாய் நிலவு கின்றாய்.

நம் நாட்டிற் காங்கிலராட் சியில்வினையும் நலம்பலவும் நயந்தா யேனும்,
இந்நாட்டில் தொடக்கமுதல் இவர்தமர சியல் முறையால் எய்தும் செல்வப்
பின்னீட்டைப் பலதுறையிற் பிறழ்ந்து வளர் தொகைவகைகள் பெரிதும் ஆய்ந்து
கன்னாட்டுங் குறியென்னக் கட்டுரை நூ லிற்பொறித்தாய் 6 காமர் தோன்றால்!

தேசவுணர் விங்குன்னால், தேசவுணர் வின்பயனுத் திகழுங் காங்க்ரஸ்
மாசடையு முன்னால் அம்மாசபையின் முழுநோக்கும் வருங்கா லத்தில்
தேசுறுமாங் கிலக்குடைக்கீழ்ச் சுயஆட்சிப் பேறென்னும் திட்டம் உன்னால்
நேசவிசு வாசமொடு தேசவுழைப் பென்பதெலாம் நின்னால் தானே.

உத்தமமாம் தேசாபி மானமுரு வெடுத்ததனை ஒப்போய்! நாளும்
வித்தகமேம் பாட்டோடுன் மெய்ம்மைநிறை பொறையூக்கம் மேன்மை யன்பு
இத்தகைய குணங்களையாம் எண்ணுதொறும் உனதான்மா இருள் சேர் எந்தம்
சித்தத்துட் சுத்தமுறு சத்துவநற் சுடர் விளக்காய்த் திகழ்ந்து வாழி

[1 தாது ஆ வாய்தனில்-பசுவின் வாயில் மகரந்தப்பொடி; 2. தாதா-கொடையாளி; 3. தகை மூதாளத்தாதா-பெருமையும் முதுமையுமுடைய தாத்தா (Grand old man)]
[4 வேதா-பிரமதேவன்; 5 "யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன், சாந்துணையும் கல்லாதவாறு"—திருக்குறள். காட்டு-உதாரணம்]
[6பொறித்தாய்-எழுதி வைத்தாய்]



## ஜகதீச் சந்திர வஸு

## PROF. J. C. BOSE

சாஸ்திர ஆராய்ச்சியில் மிகச் சிறந்தவரென்று பெயர் படைத்து, உலக மெங்கும் கொண்டாடப்படுபவரில் ஜகதீச் சந்திர வஸு ஒருவர். அவர் வங்கதேசத்தவர். சகல சாஸ்திரங்களிலும் சிறந்தவர். பலர் விளங்கின நம் நாட்டிலே, பூர்வீக கீர்த்தியை இப்பொழுதும் நிலைநிறுத்துகின்றவர் சிலர் உளர். அதற்கு அத்தாட்சி தற்கால இந்தியாவில் சிறந்து விளங்கும் நம் ஸஹோதரர்கள்தாம். முக்யமாய் வங்கதேசம் புத்தி தீக்ஷண்யம் பொருந்திய பலரை அடைந்திருக்கின்றது. இந்தியப் பத்ரிகைகளிற் சிறந்த ஒன்றை நடத்தி, பத்ரிகையை விருத்திசெய்த கிரிஸ்டோதாஸ் பாலர் வங்கதேசத்தவரே; கற்பனுசிரியர் பங்கிம் சந்திர சட்டர்ஜி அந்நாட்டிற் பிறந்தவரே. ஹிந்துமத கோஷம் உலகமெங்கும் பரவ, ஜய பேரிகை முழக்கிவந்த விவேகாநந்தர் வங்காளத்திலேயே பிறந்தவர். கவிச்சக்ரவர்த்தி ரவீந்த்ரநாத் டாகூரும், ஸுரேந்திர நாத் பானர்ஜியும், வங்காளிகளே. இவ்வித செல்வக்குழந்தைகள் பலரைப் பெற்ற நம்மன்னை, அறிவிலும், அடக்கத்திலும், ஆழ்ந்த ஞானத்திலும் மேன்மையடைந்துள்ள ஜகதீச் சந்திரரைப் பெற்றெடுத்து, நமக்குப் பெருமையளித்தது நம் பூர்வ புண்யத்தின் பலனேயாகும்.

சென்ற 1915-ம் வருஷத்து டிஸம்பர்மாதத்துச் சஞ்சிகையில் வஸுவவர்கள் செடிகளின் உணர்ச்சியைப்பற்றி அறிந்த விஷயங்களைச் சுருக்கமாகக் கூறியிருக்கின்றோம். வஸுவவர்கள் கொண்ட வழி புதியது; மேற்றிசை நிபுணர்கள் எதிர்பாராதது; ஜர்மானிய பிராணிதத்வசாஸ்திரிகள் சிலருடைய தீர்க்கமுடிவிற்கு நேர்விரோதமானது. ஜடப்பொருள்களெனக் கருதப்படும் உலோகங்கள்முதலியவைகளுக்கு உணர்ச்சி சிறிதுண்டென்பதைப் போஸவர்கள் அறிந்தார். இதற்கு முன்னமே, மின்சாரத்தைப்பற்றின பல புதிய விஷயங்களையும், வழிகளையும் அவர் கண்டுபிடித்திருந்தார். இவைகளிற் பல, மேனாட்டு நிபுணர்களால் மிகவும் சிறந்தவைகளாகக் கொண்டாடப்பட்டு வந்தன. உலோகங்களுக்கே உணர்ச்சியுண்டாயின், அவற்றினும் ஒருபடியாவது உயர்ந்த தாவர வஸ்துக்களாகிய செடி கொடிகளுக்கு உணர்ச்சியுண்டா என்பதை கவனித்த ஜகதீசர், தம்முறைகளால் எல்லாச் செடிகளுக்கும், உணரும் சக்தியுண்டென்பதை அறிந்தனர். அவ்வுணர்ச்சி, மின்சார சக்தியால் வெளிப்படுத்தப்பட்டபிறகு, விவரிக்கும் விளக்கின் (Magic lantern) உதவியால் ஓர் திரையின்மீது காட்டப்பட்டது.

### போஸவர்களது இளமைப்பருவம்

இயற்கையிற்றோன்றும் பொருள்களாகிய செடிகளின்மீது போஸவர்களுக்கு மிகுந்த சிரத்தையுண்டானதற்கு அவரது இளமைப் பருவத்துப் பழக்கங்களே காரணமாகும். போஸவர்களின் தகப்பனார், ஸர்க்கார் உத்யோகஸ்தராயிருந்தபோது, கொள்ளைக்கூட்டமொன்றின் தலைவனைப்பிடித்துச் சிறையிலடைத்தார். காவல் கடந்தபின்பு, அத்தலைவன் போஸவர்களின் தந்தையை யணுகி தனக்குப் பிழைப்பிற்கு ஏதாவது வழியேற்படுத்தும்படிக் கூற, அவர் அவனைத் தம் வீட்டு வேலைக்காரனு யமர்த்தினர். போஸ் சிறு குழந்தையாயிருக்கும்போது, பள்ளிக்கூடத்திற்கு இக்கொள்ளைக்கூட்டத் தலைவனால் எடுத்துக்கொண்டுபோகப்பட்டு, அவனுடனே திரும்பிவருவது வழக்கம். போகும்போதும் வரும்போதும் தன்னுடைய பூர்வச்செயல்களையெல்லாம் அச்சேவகன் சொல்லிக்கொண்டே போவான். போஸ் இருந்த ஊரில், ஆங்கில பாடசாலையொன்று இருந்தபோதிலும், தெருப் பள்ளிக்கூடத்திற்கே போஸவர்கள் போய் வந்தார். செருக்கும், டம்பமும், நாட்டு ஜனங்களுடன் கலந்துவந்தால் மாத்திரமே, வேரற்றுப்போக, உண்மைக்குணம் படியுமென்பது போஸவர்களின் தகப்பனாரின் கொள்கை.

தெருப்பள்ளிக்கூடத்தில் செம்படவன் மகனொருவனும் படித்துவர, அவனிடமிருந்து மீன், முதலிய ஜந்துக்களைப்பற்றிப் போஸவர்கள் அறிந்தார். ஆற்றில் வெள்ளம் வந்த பிறகு, கரைகளில் பல சிறு பிராணிகள் விடப்படுவதைக்கண்ட போஸ், அவைகளைப்பற்றித் தம் தகப்பனாரிடம் வினவித் தெரிந்துகொள்வார். பாலகன் மொழியைப் பிதற்றலெனக் கொள்ளும் புத்தியையுடையவரல்லர் போஸவர்களின் தந்தை. பொறுமையுடன் கேட்டுத் தம்மாலானவரை தன் செல்வக்குமரனுக்குப்

பதிற் சொல்லிவந்தார். இவ்விதம், 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்னும் பழமொழிப்படி, போஸவர்கள் பால்யம் முதற்கொண்டே இயற்கையினழகையும், அதன் செயல்களையும் பார்த்து ஆனந்தமடைந்தார். அவர் பெரியவரான பிறகும், இயற்கையழகைக்கண்டு அனுபவிக்கக்கருதி, மத்ய இந்தியாவிலும், மற்றும் வேறு இடங்களிலும் தனியாகவே காலங்கழித்தனராம். வடக்கே ஹிமாசலம் முதற்கொண்டு, தெற்கே ராமேச்வரம் வரைக்குமுள்ள பல சித்ரங்களும், கட்டடங்களும், ஸஞ்சியிலுள்ள ஸ்தூபியும், தக்ஷசிலா நகரத்தைத் தோண்டியெடுக்குமிடமும் ராஜகிருஹத்தின் பாழடைந்த இடங்களும், அவருக்கு அடங்கா மகிழ்ச்சியைத் தந்தன.

கட்டடங்கள் மட்டோ! பூர்வ சரித்ரங்களும் போஸவர்களின் மனதைக் கவர்ந்தன. கட்டுக்கதைகளென நம் சிறுவருக்குச் சிலரால் போதிக்கப்படும் ஸ்ரீமத்ராமாயணமும், மஹாபாரதமும் போஸவர்களுக்கு முற்றும் சிறு வயதிலேயே தெரிந்தவையாம். தம்முயிரினும் கோடையே (கேட்டோர்க்கு இல்லையென்னாது கொடுத்தல்) பெரிதென்று நினைத்த கர்ணனே போஸவர்களின் மனதில் ஓர் லக்ஷியமாகத் தோன்றினன்.

## ஆராய்ச்சி ஆரம்பம்

போஸவர்கள் இந்தியாவிற் படித்தபிறகு, இங்கிலாந்திற்குச் சென்று, அங்கிருந்து 1885-ம் ௵ திரும்பிவர, கல்கத்தா ஸர்வகலாசாலையில் சாஸ்திர ஆராய்ச்சி நிபுணராக அமைக்கப்பட்டார். ஆசிரியராயமர்ந்த பிறகு, உலகிலுள்ள பற்பல தேசத்தாரும் சாஸ்திர ஆராய்ச்சிக்கு எவ்வளவு உதவி புரிந்திருக்கின்றனர் என்பதை அறிந்தார். புண்ய பூமியெனக் கொண்டாடப்படும் இப்பரதகண்டம் பூர்வீகத்தில் மற்ற நாடுகளினும் சிறந்திருந்தது. ஆனால் காலமாறுபாடுகளினால் பல நூற்றாண்டுகளாகச் சிறந்த சாஸ்திர நிபுணர்கள் இல்லாதிருந்தது. புராதன நாகரீகமே சிறந்ததென்று கூறி, தற்கால நடவடிக்கைகளை இகழ்ந்து, முன் நோக்காது, பின்னோக்கி வாளாவிருக்கும் சில போலித் தேசாபிமானிகளைப்போன்று இருக்க, போஸ் அவர்களுக்குச் சிறிதும் இஷ்டமில்லை. தம் அன்னையை, கூடியவரையில் முன்னைய நிலைமைக்குக் கொண்டுவர முயற்சிசெய்ய, அதன் பலனாகவே மின்சார சக்தியைப்பற்றியும், உலோகங்களின் உணர்ச்சியைப்பற்றியும், உலோகங்களுக்கும் ப்ராணிகளுக்கும் நடுநிலையில் இருக்கும் செடிகளின் உணர்ச்சியைப்பற்றியும் சென்ற 20 வருஷமாகக் கண்டுபிடித்து வருகின்றனர்.

தக்க ஆதாரங்களோடு போஸவர்கள் கண்டுபிடித்த புதிய விஷயங்களில் பலருக்கு முதலில் நம்பிக்கையில்லாதிருந்தபோதிலும், நேரிற் கண்டபொழுது, அவர் கூறுவது முற்றிலும் உண்மையேயென்று யாவருக்கும் எளிதில் விளங்கிற்று. தாம் அறிந்தவற்றைப் பிற தேசங்களுக்குத் தெரிவிக்கும்படி ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களுக்கு இந்திய துரைத்தனத்தார் போஸவர்களை அனுப்பினார்கள். இம்மாதிரி அவர் இரண்டு மூன்று முறை சென்றிருக்கிறார். ஜர்மனிக்கும் இங்கிலாந்திற்கும் யுத்தம் ஆரம்பிக்கும்போது முற்கூறிய நாட்டிற்குச் செல்லவிருந்த ஜகதீசர், அவ்வாறு யுத்தகாரணத்தால் செல்ல முடியாமல் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிற்குச் சென்றார்.

ஐக்கிய மாகாணங்களின் சரித்ரம் மிகவும் ஆச்சர்யமானது. 17-ம் நூற்றாண்டில், தம் மனச்சாக்ஷிக்குத்தக்கபடி, மதத்தை அவலம்பிக்க ஆங்கில அரசன் இடங்கொடாததால், பக்தி மிகுந்த கிறிஸ்தவர் சிலர், இங்கிலாந்தை விட்டு, அமெரிக்காவுக்குச் சென்றனர். அவர்கள் குடி ஏறி, சீக்கிரம் விருத்தியடைந்த பிறகு, தம் ஜன்ம தேசத்திலிருந்து மற்றும் பலர் குடிவர, அமெரிக்க நாடு ஐரோப்பியரால் குடியிருக்கப்பெற்றது. ஆனால் வெகுகாலம் இங்கிலாந்திற்கும், அமெரிக்க குடியேற்ற நாடுகளுக்கும் நெருங்கின துரைத்தன லௌகிக சம்பந்தமிருந்தது. ஆனால் மூன்றாம் ஜார்ஜ் அரசனின் காலத்தில், அமெரிக்காது அநுமதியின்றி, அவர்கள்மீது வரிபோட்டுக் கஷ்டப்படுத்த, யுத்தம் உண்டாய், பிறகு அந்நாடுகள் ஸ்வய ஆட்சியடைந்தன. பல நூற்றாண்டுகளாக அரசர்களுடனும் ப்ரபுக்களுடனும் சண்டைசெய்து, வரிகொடுப்பதற்கு நாட்டாரின் ஸம்மதி வேண்டுமென்றும், ராஜ்யத்திற்குத் தலைமை வகிப்பது ஜனஸபையேயன்றி அரசனல்லன் என்றும்,



ஆங்கிலேயர் என்றும் அழியா வண்ணம் விளக்கினர். அவர்கள் ஸந்ததியிற் பிறந்த அமெரிக்கர், தம் ஸ்வதந்திரத்தை விடுவார்களோ? இங்கிலாந்தினின்றும் நீங்கின பிறகு, ஐக்கிய நாடுகள் தினைதினை விருத்தியடைந்தன. உலகத்திலுள்ள நாடுகளில் அதுவே செல்வத்திற் சிறந்தது என்று சொல்லலாம். ஜன ஆட்சிக்குட்பட்ட அந்நாடு, சாஸ்திரப் பயிற்சியில் மிகச் சிறந்திருக்கின்றது. க்ராமபோன் யந்திரமும், டெலிபோனும், டைப்ரைட்டரும் முதன்முதலில் அங்கேயே செய்யப்பட்டன. பணத்திற் பெரிய அந்நாடு, சாஸ்திர ஆராய்ச்சிக்காக எண்ணிறந்த கல்லூரிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் நன்கு இடந்தந்திருக்கின்றது.

சாஸ்திர நிபுணர்கள் பலர் நிறைந்த அந்நாட்டிலும் இந்தியரொருவருடைய 'நூதன' ஆராய்ச்சியைக் கேட்டறிய வந்தது அங்குள்ள பல ஸர்வ கலாசங்கங்கள், தம்மூருக்கு வரும்படி யழைத்ததும் சிற்சில வேளைகளில், ஜன நெருக்கத்தினால், நேரங்கழித்து வந்து ஸபையின் உள்ளே நுழைய முடியாத சிலர், தனிமையில் அவரிடங்கண்டு பேசிக் களித்ததுமே போஸவர்களுடைய திறமையை வெளிப்படுத்தும். போஸவர்களுடைய புதிய ஆராய்ச்சி ஒன்றைப்பற்றி, 'சாஸ்திரீய அமெரிக்கன்' (Scientific American) என்னும் பத்திரிகையின் அதிபர், தாமே நேராகப் பார்த்து எழுதுவதே போஸவர்களின் கார்யத்தை விளக்கும்.

செடிகளுக்கு நரம்பு மண்டலமுண்டென்பதை, மனோபாவத்திற்கடங்காத நுண்ணிய ஆயுதங்களைக்கொண்டு செய்யப்படும் சில ஆராய்ச்சிகளால் நன்கு விளக்குகிறார். ஜீவ ஜந்துக்களைப்போலவே, வெளியதிர்ச்சிகளால், கீரையும், முள்ளங்கியும், தாக்கப்படுகின்றனவாம். ஓர் அடி விழுந்தால், உடல் நடுங்கியும் சரீர முயற்சியால் களைப்படைந்தும், லாகிரி வஸ்துக்களால் மயக்கமடைந்தும், மயக்க மருந்தால் ஸ்மரணையற்றும், தமோகுணம் அதிகப்படுவதால் க்ஷீணமடைந்தும் போகின்றன. செடிகளின் அமைப்பைப்பற்றிய விஷயங்களில் புதிய மாறுபாடுகளை யுண்டாக்குவதோடு, வைத்திய சாஸ்திரத்திலும், சாஸ்திரீய வியவஸாயத்திலும் புது விஷயங்களை மேற்கூறுபவைகள் சேர்க்கின்றன.

பல குணங்கள் பொருந்திய மனிதனும், ஒரு சிறிய இரும்புக் கட்டியுமிருப்பினும், ப்ரபஞ்சத்திலுள்ள இவையெல்லாம் ஒன்றே என்னும் எண்ணமே, செடிகளின்மீது, பலவித வாயுக்களும், விஷங்களும், மருந்துகளும் உள்ள சக்தியை அறியத்தூண்டியது. ஜடபதார்த்தங்களில் ஆரம்பித்து, ஜீவனுள்ள பிராணிக்கும் அதன் பல தோற்றங்களுக்குமுள்ள நிலைமையோடு முடியும் சக்தியைப் பெற்ற விஷயத்தில், மனது திகைத்துநிற்கும் பல பொருள்களிலுமுள்ள ஐக்யத்தை அறியவே இவ்விந்திய நிபுணர் நாடி நின்றார்.

உணர்ச்சியுண்டாவென்றறிய, பொருட்களெல்லாவற்றையும் ஆராய்ச்சி செய்ய, உண்டேயென்றும், அவ்வுணர்ச்சி யாதொரு மாறுபாடும் உடையதில்லையென்றும் அறிந்தார். பொறுமையுடன், விஷயங்களையெல்லாம் ஒன்று சேர்க்க, உயிருள்ளவைக்கும் இல்லாதவைக்குமுள்ள வித்யாஸம் குறைவதைக் காண அவருக்கு ஆச்சர்ய முண்டாயிற்று. கடைசியாக, நம் காலின் கீழிருக்கும் புழுதியும், குட்டையினடியிலிருக்கும் சேறும், மனிதனும், எல்லாம் ஒரு மாதிரியானவர்களே என்னும் எண்ணம் அவருக்குத் தோன்றியது.

போஸவர்களுடைய ஆராய்ச்சியில் நாம் கவனிக்கவேண்டிய தொன்றுண்டு. அவர்கள் கல்கத்தா கலாசாலையில் ஆசிரியராக அமர்ந்தபோது யந்திர சாதனங்கள் பல இல. தம் கீழிருந்தவர்களுக்கு உத்தரவிட்டு வேண்டிய யந்திரங்களெல்லாவற்றையும் இந்தியாவிலேயே இந்தியர்களாலேயே செய்துகொண்டார். யந்திர நிபுணர்களாகிய அமெரிக்கர்களாலேயே அவருடைய யந்திரங்களைப் போன்றவை செய்ய முடியவில்லையென்பதையும், அம்மாதிரிக் கருவிகள் செய்தனுப்பும்படி கடிதங்கள் பல வருகின்றதென்பதையும் நோக்கின், போஸவர்களது பொறுமையும், முயற்சியும் நன்கு விளங்கும்.

துரைத்தனத்தார், இன்னமும் ஆராய்ச்சி செய்யும்படி அவருக்கு, பண உதவி செய்திருக்கிறார்கள். சிறந்த தேசாபிமானியாகிய அவரும், ஸ்திரீரத்னங்களில் ஒருவரான அவரது மனைவியும், வெகு காலம் வாழ்ந்து, பாரத மாதாவின் கீர்த்தியைப் பரவச்செய்வார்களாக.

# வான சாஸ்திரம்

## LESSONS IN ASTRONOMY

### நட்சத்திரங்கள்

[ஸ்ரீமான் எம. ஆர். சுப்பிரமணிய ஐயரவர்கள், பீ. ஏ., எல். டி.,]

கோடைகாலத்துக் கிருஷ்ண பட்சங்களாகிய இருட்டுத் தினங்களில் ஆகாயம் சுத்தமாயிருக்கும்போது வானத்தில் ஜ்வலிக்கும் வஜ்ர வைடூர்யங்களாகிய நட்சத்திரக் கூட்டங்களைப் பார்த்து ஆனந்திக்காதவர்கள் நம்மில் எவருமில்லை. இவைகள் ஜ்வலிக்கின்றன அல்லது மின்னுகின்றன என்றுதான் நாம் சொல்ல வேண்டும். நம்முடைய கிரஹங்களைப்போல் இவை ஓரே பிரகாசமாகக் காணப்படவில்லை. இடைவிட்டு இடைவிட்டுப் பிரகாசிப்பவை போல் காணப்படுகின்றன. எவ்வளவுவித வர்ணங்களுடன் இவை மின்னுகின்றன. இவைகளை நம்மால் கணக்கிடக்கூடுமா? எவ்வளவோ கோடிகள் கணக்காயிருப்பனபோல் காணப்படுகின்றன அல்லவா ? நமது வெறுங் கண்ணுக்குத் தெரிகிற நட்சத்திரங்களை நாம் ஒரு சுமாராகக் கணக்கிடலாம். ஏறக்குறைய ஏழாயிரம் நட்சத்திரங்கள்தான் நமது வெறுங் கண்ணுக்குத் தெரிகின்றன, இப்படிக் கணக்கிடுவதற்கு வேண்டிய உதவிகள் இருக்கின்றன. எல்லா நட்சத்திரங்களும் ஓரே அளவாயும், ஓரே பிரகாசத்துடனும் காணப்படவில்லை. அளவுகளில் வித்தியாசமிருக்கின்றது. அல்லாமலும், இவை ஜ்வலிக்கும்போது சில நீலவர்ணத்தோடும், சில சிவப்பு நிறத்தோடும், மற்றும் சில பலவித வர்ணங்களோடும் மின்னுகின்றன. இந்த அடையாளங்களைக் கொண்டு, நாம் தவருமல் இவைகளைக் கணக்கிடலாம். இம்மாதிரியேதான் இவைகளை வானசாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிருர்கள்.

இவைகளின் அளவைக்கொண்டு, நமது வெறுங் கண்ணுக்குப் புலப்படும் நட்சத்திரங்களை ஆறு வகுப்புகளாகப் பிரிக்கலாம். மிகப் பெரிய நட்சத்திரங்களை முதல் வகுப்பில் சேர்த்து, பிறகு வரவரச் சிறிய நட்சத்திரங்களை அளவுக்குத் தகுந்தபடி மற்றைய ஐந்து வகுப்புகளாகப் பிரிக்கலாம். உதாரணமாக, புனர்பூசத்திற்குப் பக்கத்திலிருக்கும் லுப்தகன் (Sirius), அகஸ்தியர், ரோகிணி, திருவாதிரை, சித்திரை, ஸ்வாதி, கேட்டை, சிரவணம் ஆகிய எட்டு நட்சத்திரங்களும் முதல் வகுப்பைச் சேர்ந்தவை. இம்மாதிரியே மிகப்பெரிதான முதல் வகுப்பைச் சேர்ந்த நட்சத்திரங்கள் இன்னும் பதினொன்று இருக்கின்றன. இவைகளை நாம் கவனித்துப் பார்த்தால் தெரியும். ஆகையால் முதல் வகுப்பைச் சேர்ந்தவை மொத்தம் 19 நட்சத்திரங்கள்தான். மற்றைய 5 வகுப்புகளிலடங்கிய நட்சத்திரங்களின் தொகையைப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| முதல் வகுப்பு | ... | 19 |
| இரண்டாவது வகுப்பு | ... | 59 |
| மூன்ருவது வகுப்பு | ... | 182 |
| நான்காவது வகுப்பு | ... | 530 |
| ஐந்தாவது வகுப்பு | ... | 1600 |
| ஆருவது வகுப்பு | ... | 4800 |
| ஆக மொத்தம்... | | 7190 |

இவ்வளவு நட்சத்திரங்கள்தான் நமது கண்ணுக்குத் தெரிகின்றன. இக்கணக்கைக் கவனித்தால் ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள நட்சத்திரங்களின் தொகை, அதற்கு மூந்தின வகுப்பின் தொகையைப்போல் மூன்று மடங்குள்ளதாகத் தெரிகிறது. நாம் நட்சத்திர மண்டலத்தைப் பார்க்கும்போது, கணக்கில்லாத கோடி நட்சத்திரங்கள் காணப்படுவனபோல் நமக்குத் தோன்றுகிறது. ஆனல் உண்மையில் ஆருவது வகுப்பைச்சேர்ந்த 4800 நட்சத்திரங்கள்கூட நமக்கு நன்ருகத் தெரிவதில்லை. ஆகையால் நமது கண்ணுக்குத் தெரிபவை இக்கணக்கிட்ட நட்சத்திரங்களே. இந்த சுமார் 7200 நட்சத்திரங்களிலும், ஓர் இரவில் ஒரு பாதிதான் தெரியும். மற்றைய பாதி, பகலில் காணப்படுவனவாகையால், நாம் ஓரே சமயத்தில் சுமார் 3500 நட்சத்திரங்களைத்தான் பார்க்கக்கூடும்.

ஆனல் ஆகாய மண்டலம் அளவற்றது, இது கரையற்ற ஒரு சாகரம். இதில் அநேக மீன்கள்போல் இந்த நட்சத்திரங்கள் காணப்படுகின்றன. இந்த வான் மீன்கள் இருண்ட இரவுகளில் நமக்குக் கொஞ்சம் வெளிச்சத்தைத் தருகின்றன. இம்மண்டலத்தை நாம் தூரதிருஷ்டிக் கண்ணுடியால் பார்க்கும்போது, நாம் முன்பார்த்த ஏழாயிர நட்சத்திரங்களைத் தவிர, இன்னும் லட்சக் கணக்காக இவை காணப்படுகின்றன. இக்காலத்திலோ, சாஸ்திரங்கள் மேன்மேலும் விருத்தியடைகின்றன. ஆகையால் நமக்கு வேண்டிய உபகருவிகளும் விருத்தியடைகின்றன. இப்படியே வரவர அதிக சக்தியுள்ள தூரதிருஷ்டிக் கண்ணுடிகளும் செய்யப்படுகின்றன. நமக்குக் கிடைக்கக்கூடிய அதிக சக்தியுள்ள கண்ணுடியால் பார்க்கும்போது, சுமார் 12 கோடி நட்சத்திரங்கள் காணப்படுகின்றன். இவைகளையும் அளவுக்குத் தகுந்தபடியும் பிரகாசத்திற்குத் தகுந்தபடியும் 9 வகுப்புகளாகப் பிரித்திருக்கிருர்கள். ஆக எல்லா நட்சத்திரங்களையும் 15 வகுப்புகளாகப் பிரித்திருக்கிருர்கள். இன்னும் இந்த இருண்ட மண்டலத்தில் நமக்குத் தெரியாமல் எவ்வளவு இருக்கின்றனவோ, யாரறிவார்கள் ?



இவைகள் எம்மாதிரியான வஸ்துக்கள் என்று முன்னமேயே பார்த்தோம். நமது குடும்பத் தலைவனுன வாயுருபத்துடன் கூடின சூர்யன் போன்ற வஸ்துக்கள். இவை இவ்வளவு சிறிய வஸ்துக்களாகக் காணப்படுகின்றனவே! சூர்யனைவிடச் சிறியவைகளா ? அல்ல. சூர்யனைவிட வெகு தூரத்திலிருப்பதால் இவை இப்படிக் காணப்படுகின்றன. நம்மிடத்திலிருந்து எவ்வளவு தூரத்திலிருக்கின்றனவோ ! எவ்வளவு உஷ்ணமாயும், பிரகாசமாயும் இருக்கின்றனவோ ! இவைகளில் மனிதர்கள் இருக்கமாட்டார்கள் என்பது நிச்சயம். ஆனல் அவைகளின் கிரஹங்களில் யாரிருக்கின்ருர்களோ! அவர்களுக்குப் பூமியே தெரியாதல்லவா! சூர்யன் ஒரு நட்சத்திரம் போலும்! நாம் நினைக்கிறதுபோல் அவர்களும் நம்மைப்பற்றி ஆலோசித்துக் கொண்டேயிருப்பார்கள் என்றே நம்பலாம்!

மிகப்பொடியான நட்சத்திரங்கள் ஆகாய மண்டலத்தின் ஒரு பக்கத்தில் மிகுந்திருப்பதை நாம் பார்க்கலாம். ஏறக்குறைய நமது தலைக்கு நேராக ஒரு வெண்மையான் பாதை போன்ற பாகம் தெரிகிறது. இந்தப் பாகத்தில் தான் நட்சத்திரங்கள் கூட்டம் கூட்டமாக நெருங்கி விசேஷித்திருக்கின்றன. ஆகாயத்தின் மற்றைய பாகங்களில் இவை விசேஷித்திருக்கவில்லை, மிகச் சிறு நட்சத்திரக் கூட்டங்களின் தொகுதியாலேயே இப்பாதை பிரகாசமாகக் காணப்படுகிறது. நமக்குக் காணப்படும் 12 கோடி நட்சத்திரங்களில் சுமார் 10 கோடி இப்பாதையிலேயே இருக்கின்றன.

நமது வான் மீன்களாகிய இந்நட்சத்திரங்களின் தூரத்தைப்பற்றிக் கொஞ்சம் கவனிப்போம். இந்தத் தூரத்தை ஒரு மாதிரியாகக் கணக்கிட்டாலும், இதை எழுத்தால் எழுதுவதாவது, அல்லது மனதில் பதிப்பதாவது அசாத்தியம். எல்லா நட்சத்திரங்களும் ஓரே தூரத்திலிருக்கவில்லை. மிகச் சமீபத்திலுள்ளவை, நமக்கும் சூர்யனுக்குமுள்ள தூரத்தைப் போல், சுமார் ஐந்து லட்சம் மடங்கு தூரத்திலிருக்கின்றன. இதை நமது மனதில் பதிக்க முடியுமா? கேவலம் அற்ப மனதையுடைய நம்மால் இதைக் கொஞ்சமும் பாவிக்கக்கூட முடியவில்லை! ஆனல் வேறு உதாரணங்களால் இதைப் பாவனை செய்யலாம்.

இவைகளுள் மிகச் சமீபத்திலுள்ளது தென் துருவத்திற்கு நேருள்ள ஐயன் (A Centauri) என்னும் நட்சத்திரம். வெளிச்சம் ஒரு வஸ்துவிலிருந்து மற்றொரு இடத்திற்கு வெகுவேகத்துடன் செல்லுகிறது. ஒரு ஸெகண்டுக்குச் சுமார் 186,000 மைல் தூரம் செல்லுகின்றது என்று கணக்கிடப்படுகிறது. அதாவது, ஒரு மணிக்கு சுமார் 67 கோடி மைல் தூரம் செல்லும். வெளிச்சம் இவ்வித மனோ வேகத்துடன் வர, நமக்குச் சமீபத்திலுள்ள முதல் வகுப்பு நட்சத்திரமாகிய ஐயனிடத்திலிருந்து வெளிச்சம் நமக்கு வர, சுமார் நான்கு வருஷங்கள் ஆகின்றன! மற்றைய நட்சத்திரங்களிருக்கும் தூரத்தோடு ஒப்பிடுகையில் இது சமீபமே! எல்லாருக்கும் தெரிந்த வடதுருவ நட்சத்திரத்தினின்று வெளிச்சம் வர சுமார் 36½ வருஷங்கள் ஆகின்றன! நாம் பார்க்கும் தருணத்தில் அதினின்று வரும் வெளிச்சம் அல்லது ஒளிகிரணங்கள், அப்போதைக்கு 36½ வருஷங்களுக்குமுன் கிளம்பியவை. என்ன ஆச்சரியம்! எவ்வளவு தூரம்! என்ன அற்புத சிருஷ்டி!

---

முதலவள் :—(வீட்டிற்குச் செலவு பெற்றுக் கொண்டுபோகும்போது) "நான் போயிட்டுவரேன்"

இரண்டாவதவள் : ஆஹா ! வரும்போது மாத்ரம் தனியாக வாருங்கோ; பேயை யிட்டுவரவேண்டாம்.

# இந்திய பூர்வ அரசியல்

## ANCIENT HINDU POLITY

[ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள், எம். ஏ.,]

நமது இந்தியாவின் பூர்வசரித்திரமானது கீழ்நாடுகளிலுள்ளவர்களை நாகரிகமற்ற காட்டுமனிதர்களாகப் பாவித்து இகழ்ந்து, மதம், வழக்கம், மனோபாவம் இவைகளைப்பற்றிய விஷயங்களில் அவர்களிடத்துச் சிறிதும் அனுதாபமிருக்கவியலா இயல்புடைய ஐரோப்பிய நூலாசிரியர்களாலேயே பெரும்பான்மையும் எழுதிவரப்பெற்றதனால், நமது தேசத்தின் சரித்திரத்தை இதுகாறும் எழுதப்பட்டுள்ள நூல்களிலிருந்து கற்றுணர்ந்தவர்கள் அதைப்பற்றித் தவறானவைகளாயும், நமது நாட்டை இகழ்ச்செய்யத்தக்கவைகளுமான சில அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் நமது தேசத்தின் உண்மையான சரிதத்தை நன்றாய் ஆராய்ந்தறிந்து, அதை நமது நாட்டவர்கள் மனத்திற் பதியுமாறு தெளிவாய் எடுத்துரைத்து, அதைப்பற்றி அவர்கள் கொண்டுள்ள பிசகான அபிப்பிராயங்களை வேருடன் களைந்தெறிய வேண்டியது நமது இந்திய தேசாபிமானிகள் ஒவ்வொருவரும் தமது நாட்டுக்கும் தமது நாட்டவர்கட்கும் செலுத்த வேண்டிய கடமையாக விருக்கிறது.

ஆனால் அக்கடமை எளிதில் நிறைவேற்றக் கூடிய கடமையன்று. ஒருவர் தமது வாணாள் முழுவதையும் செலவழித்தாலும் நமது தேச சரித்திர முழுவதையும் தனியாக முடிப்பது அசாத்தியம். ஆகையினால், ஒவ்வொருவரும் அச்சரித்திரத்தின் யாதாயினுமொரு பாகத்தை ஊக்கத்துடன் நன்றாய் ஆராய்ச்சிசெய்து, தாம் அறிந்துகொள்வதைப் பத்திரிகைகள், புத்தகங்கள் முதலியனமூலமாய் வெளியிட்டுக் கொண்டுவரின், நமது தேசத்தின் உண்மையான பூர்வ சரித்திர முழுவதும் வெகு சீக்கிரத்தில் வெளியாகிவிடுமென்பதற்கையமில்லை. ஆதலால் நமது தேசசரித்திரத்தை ஆராய்ச்சி செய்வதில் தங்கள் முயற்சி முழுவதையும் சிலகாலம் செலுத்திவரும்படி எனது சகோதரர்களையும் சகோதரிகளையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எத்தேசத்தின் பூர்வ சரித்திரத்தை யறிய வேண்டியிருந்தாலும், அத்தேசத்தில் தொன்றுதொட்டுக் கர்ணபரம்பரையாய்ப் பரவிவரும் கதைகளையும் எழுதிவைக்கப்பட்டுள்ளபழைய புராண இதிகாசங்களையும் பூர்வீகத்தில் சாஸ்திர நிபுணர்கள் வரைந்துள்ள நீதி நூல்களையுமே ஆதாரங்களாக வைத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. பழைய புராணங்கள், இதிகாசங்கள் முதலானவைகளில் வரையப்பட்டுள்ள விஷயங்கள் ஒரு தேசத்தின் உண்மையான சரித்திரத்தை யுணர்த்துமாவென்ற சந்தேகம் பிறக்கக்கூடும். ஏனெனில், பௌராணிகர்களும் கவிஞர்களும் விசேஷமாய்த் தங்கள் காலத்துக்கு முன்பு நடந்த சம்பவங்களைப் பற்றியே எழுதுவது வழக்கமாதலால், அவர்களியற்றிய நூல்களில் கூறப்பட்டுள்ளவைகள் அவர்கள் காலத்தின் வழக்கங்களைத் தெரிவிக்கக்கூடிய சாக்ஷியமாகா. அன்றியும், புராணாசிரியர்களும் கவிவாணர்களும் தேசத்தின் புராதன சரித்திரத்தைத் தகுந்த சாக்ஷியங்களைக்கொண்டு ஆராய்ந்தறியும் வல்லமையையுடைத்தா யிருப்பரென்று எண்ணுவதற்கு மிடமில்லை. ஆனால் புராணங்களிலும் காவியங்களிலும் அவைகளின் வீரர்களது பராக்கிரமம், ஈகை, கீர்த்தி முதலானவைகளை வர்ணித்து நூலாசிரியர்கள் கூறும் விஷயங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் மேற்கூறியவாறு சந்தேகமேற்படுவது நியாயமேயெனினும், அவர்கள் வேறு விஷயங்களை வர்ணிக்குங்கால், இடையிடையே இராஜாங்க ஏற்பாடுகள், ஜனசமூக ஆசாரங்கள், கைத்தொழிற்றிறங்கள் முதலானவைகளைக் குறித்துச் சொல்லும் விஷயங்கள், அவைகள் கதையினிரசத்தை அதிகரிப்பதற்காகச் சொல்லப்படவில்லையென்று தெளிவாய் விளங்கும்பக்ஷத்தில், அவர்கள் காலத்திலுள்ள வழக்கங்களையே உணர்த்துகின்றனவென்பதைச் சந்தேகிக்கச் சிறிதும் இடமில்லை. இராஜாங்க நீதி சாஸ்திர நிபுணர்களான பல ஐரோப்பிய நூலாசிரியர்கள் இவ்வாறே அபிப்பிராயப்படுகின்றனர்.

இதிப்படியிருக்க, நீதிநூல்கள் அவைகளின் ஆசிரியர்கள் நீதிகளென வெண்ணியவைகளை யுணர்த்துமேயன்றி, அவர்களிருந்த காலத்தில் அவர்களது தேசத்திலுள்ள யாவரும் நீதிகளெனவெண்ணி யனுஷ்டித்து வந்தவைகளை



யுணர்த்தமாட்டாவென்று கூறுவோருமுளர். ஆனால் கீர்த்திபெற்ற மனிதர்களால் அவர்கள் காலத்தின் வழக்கங்களும் எண்ணங்களும் மாறுபடுமென்றும், அவர்களது அபிப்பிராயங்களும் மனோபாவங்களும் அவர்களுடைய காலத்தின் வழக்கங்களினாலும் எண்ணங்களினாலும் மாறுதலடையுமென்றும் பலதத்துவ சாஸ்திரிகளும், தேச சரிதாசிரியர்களும் மற்றும் பல பெரியோர்களும் அபிப்பிராயப் படுகிறார்களாகையால், நீதி நூல்கள் சற்றேறக்குறைய அவைகளெழுதப்பட்ட காலங்களின் ஆசாரங்களையே தெரிவிக்குமென நம்பவேண்டியதா யிருக்கிறது. ஆகையினால், நாம் நமது நாட்டின் பூர்வ சரித்திரத்தை நமது புராணங்கள், இதிகாசங்கள், காவியங்கள், நீதி நூல்கள் முதலான எண்ணிறந்த நூல்களினால் அறிந்து கொள்ளலா மென்பதற்கையமில்லை.

தேச சரிதாசிரியரான ஐரோப்பியரொருவர் நமது நாட்டைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்:—"கீழ்நாடுகளிலுள்ள பெரிய இராஜ்யங்கள், பிரதானமாய் வரிவசூல் செய்வதற்காக ஏற்பட்ட சங்கங்களாக விருந்தன. அவ்விராஜாங்கத்தார்கள், சிற்சில காலங்களில் சிற்சில காரியங்களுக்காகத் தங்கள் குடிகளை மிகவும் கொடுமையாய் அல்லற்படுத்தி வந்தனரேயொழிய, இடைவிட்டு இடும் விசேஷக் கட்டளைகளல்லாத சட்டங்களை விதிக்கவேயில்லை. தொன்றுதொட்டு வழங்கிவந்த சட்டங்களையும் அவர்கள் நியாயசபைகளின் மூலமாய்ப்பரிபாலித்துச் செலுத்தவில்லை. அவர்களது குடிகள் வழக்கமாய் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்தார்களென்று ஒருவாறாய்ச் சொல்லலாம். எவ்வாறெனில், வரிகளுக்காகவும் சேனைக்கு ஆட்களுக்காகவும் இராஜ்யாதிகாரிகள் அவர்களிடஞ் சென்ற காலங்களில் அவர்கள் வழக்கமாய் அவ்வதிகாரிகளிட்ட கட்டளைகளின்படி நடந்து வந்தனர். ஆனால் சாதாரணமாய் அவர்கள் தமது வாணாளிற் செய்தனவும், செய்யாது விடுத்தனவும் இராஜ்யாதிகாரிகளை யல்லாது, ஏனைய அதிகாரிகளையே பொறுத்திருந்தன. அவ்வதிகாரிகள் விஷயத்தில் இராஜ்யாதிகாரிகள் பிரவேசித்ததுமில்லை; அவ்வாறு பிரவேசித்திருந்தால் இராஜ்யமே நாசமடைந்திருக்கவும் கூடும்."

அவர் எழுதியதின் உண்மையைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

கிரிஸ்து பிறப்பதற்குச் சுமார் 300 வருஷங்களுக்குமுன், அதாவது, இப்போதைக்குச் சுமார் 2200 வருஷங்களுக்கு முன், மகததேசத்தில் சந்திரகுப்த மௌரியன் என்னும் அரசன் ஆண்டு வந்தகாலத்திலிருந்த மிகுந்த கீர்த்திபெற்ற இராஜதந்திரநிபுணரானகௌடில்யர் அல்லது சாணக்யர் என்ற ஒருவர் தாம் வரைந்த அர்த்தசாஸ்திர மென்ற இராஜதர்ம சாஸ்திரத்தில் அரசர்களின் கடமையைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார் :—

"மன்னவனுக்குத் தனது வேலைகளைச் செய்யத் தயாராயிருப்பதே மத சம்பந்தமான நோன்பு. தனது கடமைகளைத் தாழ்வின்றிச்செய்வதேயாகம். யாவரையும் சமமாகக் கவனிப்பதே முடிசூட்டுதற்பொருட்டுப் பெரியோர்க்கு அளிக்கும் தக்ஷிணை அர்க்கிய மாத்திய ஆசமநீயம். அவனது குடிகளின் சந்தோஷந்தான் அவனுக்குச்சந்தோஷத்தை விளைவிக்கும். அவன் தன் மனத்துக்குத் திருப்தியைத் தருவதை நல்லதென் றெண்ணக்கூடாது. அவன் தனது குடிகளுடைய மனங்களுக்குத் திருப்தியைத் தருவதையே நல்லதெனத் தேரவேண்டும்."

—அர்த்த சாஸ்திரம்

இராஜாங்கத்தை நடத்துவதற்குப் பொருள் அவசியமாதலால், நமது பூர்வீக மன்னர்கள் ஆறிலொருகடமை வாங்கி வந்தார்களேயன்றி தங்கள் சௌகரியத்துக்காக வாங்கிவந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் இராஜாங்கத்திலேயே நடத்திவந்த நெசவு, சாயந்தோய்த்தல், சுரங்கங்களினின்று உலோகங்களை வெட்டியெடுத்துச் சுத்திசெய்தல் முதலான கைத்தொழில்களினாலும் வியாபாரத்தினாலும், ஏராளமான வருமானங்களை யடைந்ததாகவும், இராஜாங்கத்தைச் சேர்ந்த பூமிகளிலும் காடுகளிலும் உண்டான மாசூல்களிற் பாதியைமட்டும் இராஜாங்கத்துக்காகச் செலவழித்துக் கொண்டு, மீதமுள்ள பாதியைப் பஞ்சம் முதலான ஆபத்துக்கள் நேரிடுங்காலங்களில் குடிகளுக்கு உதவிபுரிவதற்காக எப்போதும் வைத்திருந்ததாகவும் மேற்கூறிய அர்த்த சாஸ்திரத்தினால் வெளியாகிறது.

அரசர்கள் தங்களது குடிகளுக்கு நன்மை புரிவதற்காகப் பலவாறாய் முயற்சிசெய்து வந்ததாகவும், குடிகளுக்குள் ஏற்பட்ட விவாதங்களைப்பற்றி நியாயசபையில் விசாரணைசெய்து

நீதிசெலுத்தி, நேரில் தர்மபரிபாலனஞ்செய்து வந்ததாகவும், எளியோரும் எளிதில் தங்களைக் காணும்படி ஏற்பாடு செய்வதே அரசர்களின் முதன்மையான கடமை யென்ற கொள்கை அக்காலத்தில் வழங்கிவந்ததாகவும், அரசர்களுக்கும் குடிகளுக்குமுள்ள சம்பந்தம் தந்தைக்கும் குழந்தைகளுக்குமுள்ள சம்பந்தமாகக் கருதப்பட்டு வந்ததாகவும், கீழே கூறியுள்ள சாக்ஷியங்களினால் விளங்குகிறது.

"அரசன் தான் சபையிலிருக்குங்கால் தன்னிடம் விண்ணப்பஞ்செய்துகொள்ள வருபவர்களைத் தனது சபையின் வாயிலண்டை ஒருபோதும் காத்திருக்கும்படி செய்யக்கூடாது. ஏனெனில், ஓர் அரசன் தன் குடிகள் தன்னை யணுகவொட்டாமல், தனது வேலைகளைத் தனது அதிகாரிகளிடத்தில் ஒப்புவிப்பானேயாகில், இராஜாங்க வேலையிற் குழப்ப முண்டாவதுமன்றி, குடிகளுக்கு அவன் மீதுள்ள பிரியம் குன்றி அவன் தனது சத்துருக்களுக்கு இரையாவான்."

—அர்த்த சாஸ்திரம்

"காட்சிக்கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்னன் நிலம்." —(திருக்குறள்)

வலியோரால் துன்புறுத்தப்பட்டு, அதைக் குறித்து அரசனிடம் முறையிட்டுக்கொள்ள வருவோருக்கும், வறுமையினால் துன்புற்று, தங்கள் குறைகளைத் தீர்க்கும்படி அரசனை வேண்டிக்கொள்ள வருவோருக்கும், காண்பதற்கெளியனும் எவரிடத்திலும் கடுஞ்சொல் மொழியாதவனும் ஒரு அரசனிருப்பானேல், அவனது நாட்டை எல்லா நாடுகளினும் சிறந்ததென உலகத்தார் கூறுவர்.

"ஓர்ந்து கண்ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை" (திருக்குறள்)

தனது குடிகள் செய்த குற்றத்தை ஆராய்ந்து யாரிடத்தும் தாட்சிணியப் படாமல், நடுவுநிலைமையை விரும்பி, அக்குற்றத்துக்குச் சொல்லிய தண்டனையைக் கற்றோரிடமிருந்து தெரிந்துகொண்டு அத்தண்டனையை விதிப்பதே அரசரது நீதியாம்.

"அரசன் கால் நடைகளை அபிவிருத்தி செய்வதற்கும், வியாபாரஞ் செய்வதற்கும், தனது குடிகளுக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து. வியாபார சாமான்களை வியாபார ஸ்தலங்களுக்குக் கொண்டுபோக, சாலைகளையும் கால்வாய்களையும் உண்டுபண்ணி, வியாபாரத்துக்காகப் பட்டணங்களையும் கட்டவேண்டும்."

—அர்த்த சாஸ்திரம்

"வற்றாத ஊற்றுக்களினாலோ வேறு ஜலாதாரங்களினாலோ நிரப்பப்பெற்ற நீர் நிலைகளை அரசன் கட்டவேண்டும். அல்லாது, தாங்களாகவே நீர் நிலைகளைக் கட்டிக்கொள்ளுவோர்கட்கு அவைகளைக் கட்டுவதற்கு அவசியமான இடங்கள், வழிகள் முதலியவைகளை அவன் கொடுத்துதவலாம்."

—அர்த்த சாஸ்திரம்

"அநாதையான குழந்தைகள், வயது முதிர்ந்தவர்கள், பலஹீன மடைந்தவர்கள், கொடிய நோய்களினால் பீடிக்கப்பெற்றவர்கள், கதியற்றவர்கள் இவர்களுக்கு அரசன் ஜீவனாம்சம் கொடுக்கவேண்டும். அவன் கதியற்ற கர்ப்பிணிகளுக்குக் கர்ப்பகாலத்தில் அன்னமளிப்பதுமன்றி அவர்கள் பெறுங் குழந்தைகளுக்கும் உணவளிக்கவேண்டும்."

—அர்த்த சாஸ்திரம்

தற்காலத்தில் மேல் நாடுகளில் மிகுந்த நாகரிகமடைந்தனவாகச் சொல்லிக்கொள்ளும் நாடுகளிற் சிலநாடுகள்தாம், இப்போது சிலகாலமாக, தங்கள் ஜீவனத்துக்கு வேண்டும் பொருளைச் சம்பாதித்துக் கொள்ளும் வலியற்றவர்களான அநாதைச் சிறுவர்கள், பெண்பிள்ளைகள், பிணியுற்றவர்கள். கிழவர்கள் முதலானவர்களுக்கு உதவி செய்யவேண்டியது இராஜாங்கத்தாருடைய கடமை யென்பதையே அறிந்து கொண்டிருக்கின்றன. அந்நாடுகளைச் சேர்ந்த ஒருவரே மேற்கூறியவாறு நமது பூர்வீக அரசர்களின் இராஜாங்கத்தைப்பற்றி இகழ்ச்சியாய் எழுதியிருக்கிறார். அவர்மீது குற்றங் கூறுவது நியாயமன்று. ஏனெனில், நமது தேசசரித்திரத்தை நன்காராய்ந்து திருத்தமாய் எழுதாததனாலன்றோ பிறர் மேற்கூறியவாறு நமது நாட்டை இகழும்படி நேர்ந்தது? இது நிற்க.

மேலெழுதிய சாக்ஷியங்களால் நமது பூர்வீக மன்னர்கள் குடிகளிடமிருந்து வரி வசூலிப்பதையே தங்களது முக்கியமான கடமையாக எண்ணவில்லையென்றும், குடிகளுக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து தங்கள் குழந்தைகளாக அவர்களைப் பாவித்து வந்தார்களென்றும், நியாயசபையின் மூலமாய் தர்மபரிபாலனஞ் செய்துவந்தார்களென்றும் வெளியாகிறது.

அரசர்கள் பொதுவாய்ப் புதிய சட்டங்களை விதிக்கவில்லை யென்பது பிசகென்று காளிதாசன் எழுதிய "சகுந்தலை" என்னும் நாடகத்தினால் வெளியாகிறது. (இன்னும் வரும்.)



# நமது சிறு கதை

## OUR SHORT STORY

### மனித தர்மம்

(35-ம் பக்கத் தொடர்ச்சி.)

சாப்பிட்டு முடிந்ததும், இருவரும் கூடத்தில் போய், விரித்திருக்கும் பாயில் உட்கார்ந்தார்கள். இதுவரை கவலையும், துக்கமுமே காட்டிக் குனிந்திருந்த அவ்விளைஞன், முகத்தை நிமிர்ந்து திருப்தி விளங்க, மரகதத்தம்மாளைப் பார்த்து "அம்மா, நீ நல்ல மஹாராஜியாயிருக்கவேண்டும்" என்று ஒருவித மந்தஹாஸத்தோடு ஆசீர்வதித்தான். அந்தப் புன்முறுவலில் ஏதோ விசேஷ மிருப்பதாகத் தோன்றிற்று ஸதிபதிகளிருவருக்கும்.

களை தீர்ந்ததென்று கண்ட அப்பெண்மணியும் குசல ப்ரச்னத்துக்கு ஆரம்பித்தாள்.

"நீ எந்த வூரப்பா?"

"நான் இந்த ப்ராந்த்யமேயல்ல."

"ஆனால் இந்தக்கோயிலில் எப்படிவந்தாய்?"

"அது இப்பொழுது சொல்லக்கூடாது."

"யாராவது உன்னை அடித்துப் பறித்தார்களா?"

"இல்லை இல்லை, எனக்கு ஈசுவர தண்டனை."

"ஐயோ! பாவம். குளிரில் கிடந்து பசியோடு வருந்தினையாக்கும்."

"ஆமாம்: உங்கள் புருஷர் இரக்கமுற்று என்னை யிட்டுவந்தார். நீங்கள் உங்கள் பிள்ளையைப்போல் உபசரித்தீர்கள்; இவ்வுபகாரம் ஒரு நாளும் வீண் போகாது." "ஸரி, நாழிகையாகிறது, அலுப்புத்தீரத் தூங்குங்கள், நான் மீதி வேலையைச் செய்கிறேன்" என்று சொல்லி, அவனுக்கு ஒரு ஸன்னப்பிரம்புப் பாயும், தலையணையும் கொடுத்து, போர்த்துக் கொள்ளத் தான்வைத்திருந்த ஒரு பழைய துப்பட்டியையுங் கொடுத்து, வாசற்றிண்ணையில் படுக்க அனுப்பிவிட்டு, புருஷனிடம் வந்து "இந்தப் பிள்ளையைப் பார்த்தால் யோக்யனாகத்தான் தோணுகிறது. அவன் யாரு, ஏன் இங்கே வந்திருக்கிறான் என்பதைச் சொல்லாததுதான் ஸந்தேகத்துக்கிடங் கொடுக்கிறது" என்றாள். ச்யவனனும் "அதெல்லாம் நமக்கேன்? நம்மாலான தர்மத்தைச் செய்தால் கடவுள் இருக்கிறார்" என்றான்.

"நாளைக்குச் சமையலுக்கு அரிசியில்லையே"

"இந்த 3 ரூபாயில் ஒரு ரூபாய்க்கு வாங்க வேண்டியதுதான். அதற்கென்ன காலையில் பேசிக் கொள்ளலாம், தூக்கம் கண்ணைச் சுற்றுகிறது" என்று பாயைவிரித்துப் படுத்துக் கொண்டான்.

மறுநாள் காலை சூர்யோதயமாயிற்று. இவ்வளவு நாள் போலல்லாமல், சூர்யன் நன்றாக வீசி ஜ்வலித்தான். காற்றும் அவ்வளவு குளிர்ந்ததாக வில்லை. பக்ஷிகள் சில அங்குமிங்கும், கலகலப்பாக, சப்தமிட்டு இரைபொறுக்கிக் கொண்டிருந்தன. அன்றுதினமே கொஞ்சம் ஸந்தோஷமாக விருந்தது.

ச்யவனன் காலையில் எழுந்திருந்து, மறையூர் போய், அரிசி வாங்கிவந்து மனைவியிடங் கொடுத்துவிட்டு வெளியில் வரும்போது, வாலிபன் தூங்கி யெழுந்திருந்து படுக்கையைச் சுருட்டிவைத்துவிட்டுத், திண்ணையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். முதல் நாளைவிட அவன் முகத்தில் அதிக தேஜஸ் ஜ்வலித்துக் கொண்டிருந்தது. எதிர்த்திண்ணையில் ச்யவனனும் உட்காரவே, அடியில் வருமாறு ஸம்பாஷணை நிகழ்ந்தது.

"என்னப்பா? நன்றாகத் தூங்கினாயா? கொஞ்சம் உடம்பு ச்ரமம் தீர்ந்திருக்கா?"

"ஆகா, ஏதோ நீங்கள் கட்டிக்கொண்ட புண்யம்."

"நம்மாலென்ன விருக்கு? எல்லாம் ஈசன் செயல்; இருந்தாலும், நாமும் நம்மாலானதைச் செய்யவேண்டுமல்லவா? நீ என்னோடு கூடவே யிருப்பதானால், ஏதாவது வேலைசெய்தால்தான் ஸாத்யமாகும். உனக்கு என்ன வேலை செய்யத் தெரியும்?"

"எனக்கு ஒருவித வேலையும் தெரியாது."

"ஆனால் ஏதாவது தொழில் கற்றுக்கொள்ளேன்."

"நீங்கள் சொல்லுகிறபடி செய்ய ஆக்ஷேபணை கிடையாது."

"உன் பெயரென்ன?"

"என் பெயரா? மதங்கன்."

"நான் சொல்வதைக்கேள். எனக்கு ஸகாயமாக இன்னொருவனிருந்தால் கரகூரிலிருந்து கூட ரொம்பவேலை கிடைக்கும். நீ என் தொழிலைக் கற்றுக்கொண்டு, என்னோடேயே இருந்துவிட ஸம்மதமா?"

"என்னிடம் நீங்கள் காட்டும் ப்ரியத்திற்கு உங்களுக்குக் கடவுள் அருள்புரிவார்" என்றதும், கயிறு பின்னுவதுமுதல், மூங்கில், பிரம்புகளைப் பிளந்து விசித்ரமான வேலைப்பாடுகள் செய்யும் விதமெல்லாம் கற்பித்தான். எவ்வித வேலையும் ச்யவனன் சொல்லவேண்டியதுதான் தாமஸம். உடனே, ஏகஸந்தக்ராஹியாய் அதை நன்றாய்ப் பிடித்துக்கொள்வான் மதங்கன். ஒரு வாரத்துக்குள் ச்யவனனைவிட அழகாகவும் உறுதியாகவும் வேலை செய்பவன் என்றும், அந்தத் தொழிலில் மதங்கனைவிட ஸமர்த்தன் கிடையாது என்றும் பெயரெடுத்தான். சுற்றிலுமுள்ள எல்லாவூர்களிலுமிருந்துவேலை யதேஷ்டமாக வந்து குவிந்தது. மதங்கன் ச்யவனனோடேயே இருந்துவர, சிலகாலத்தில் நல்ல ஸௌகர்ய மேற்பட்டது. மதங்கனோ வெகு நேரம் வேலை செய்வான். வேலை முடிந்து ஸாமான்களைக் கட்டிவைத்ததும், கைகளைக் கட்டிக்கொண்டு மேனோக்கின பார்வையோடு ஏதோ யோசிப்பவனைப்போல் உட்கார்ந்திருப்பான். விசேஷமாகப் பேசுவதே கிடையாது. வீண்வம்புகளுக்குப் போவதே யில்லை. அவன் பரிஹாஸமாகப் பேசியாவது, சிரித்தாவது ஒருவருமே பார்த்ததில்லை.

## இரண்டாம் பாகம்

காலசக்ரம் சுழன்று சுழன்று, நாட்களை வாரங்களாகவும், வாரங்களை மாதங்களாகவும், மாதங்களை வருஷங்களாகவும் மாற்றியது. மதங்கன் மறையூருக்கு வந்து ஏறக்குறைய 5 வருஷங்களாய்விட்டன. கையில் கொஞ்சம் பணம் மிஞ்சின படியால், வீட்டையும் சற்றுப் பெரிதாய்க் கட்டி, ஒரு தோட்டமும் உண்டாக்கியிருந்தார்கள். மரகதத்தம்மாளுக்கு ஒரு சீலைக்கு 10 தடவை சொல்லவேண்டிய அவசியமில்லை. மதங்கனும், அவர்கள் வீட்டுக்குழந்தைபோலவே, அன்புடனும், மரியாதையுடனும் நடத்தப்பட்டுவந்தான்.

ஒரு நாட்காலை ஸுமார் 8 மணியிருக்கும். யஜமானனும், வேலையாளும், காலைக் கஞ்சி குடித்துவிட்டு அன்று வேலைக்கு ஆரம்பஞ் செய்து கொண்டிருந்தார்கள். ரஸ்தாவில் இரண்டுகுதிரை பூட்டிய ஒரு "கோச்" வந்து நின்றதும், பெட்டியிலிருந்து இறங்கி ஒரு ஸேவகன் வண்டியின் கதவைத் திறந்தான். உள்ளிருந்து ஸுமார் 40 வயதுள்ள ஒரு புருஷன் இறங்கினான். அரையில் தரித்திருந்த உயர்ந்த ஜரிகை வஸ்த்ரத்தாலும், மேலுள்ள பட்டுச்சட்டையாலும், அதில் பளபளவென்று ஜ்வலிக்கும் தங்கக் கடியாரச் சங்கிலியாலும், கையிலணிந்திருக்கும் வைரமோதிரங்களாலும், அவர் மிக்க தனிகர் என்று, நம்மைப் போலவே, ச்யவனனும் எளிதில் அறிந்துகொண்டான். அவர் வாசற்படியண்டை வந்ததும், பலமான கும்பிடுபோட்டு "யஜமானே வரணும், என்ன உத்தரவு?" என்றான் ச்யவனன். அவர் தன் ஸேவகனைக் கூவி, "அடே, அந்த மூட்டையைக் கொண்டுவா" என, அதைக் கையில் வாங்கிக்கொண்டு "அடே, பின்னல் மேஸ்திரி யார்?" என, ச்யவனன் "யஜமானே, நான்தான்" என்றான்.

"அடே இந்த மூங்கிற்கழிகளைப் பார்த்தாயா?"

"ஆமா, யஜமானே, உயர்ந்த ஜாதி மூங்கில்."

"உயர்ந்ததா, அதுமாதிரி நீ எங்கேயாவது கண்டதுண்டா? கணுவில்லாமல் வேணுமென்று வளர்க்கப்படும் ஓர் ஜாதி. இந்தக் கட்டுமட்டில் 32 ரூபாய். தெரியுமா?"

"ஆமா, யஜமானே!"

"இதோ இந்தப் பட்டுத்துணிகளைப் பார்த்தாயா? மிகவுமுயர்ந்த தினுஸு. இவைகளைக் கொண்டு நீ ஒரு பல்லக்குத் தயார் செய்யவேண்டும். தெரியுமா? அடுத்த வெள்ளிக்கிழமை முதல், எங்கள் குலகுரு எனக்கு உபதேசத்திற்காக வந்து, ஒரு மாஸம் தங்கப் போகிறார். அந்த 30 நாளும் நித்யோற்சவம். அவருக்கு வாகனார்த்தம் இந்தப் பல்லக்கு வேண்டும். தெரியுமா? அதனால், மிகுந்த அலங்காரமாயும் உறுதியாயும் கட்டவேண்டும். பிணப்பல்லக்கு மாதிரி கட்டிவிடாதே. ஜாக்ரதை; ஏதாவது ஒரு விஷயத்திலாவது அதிருப்தி ஏற்பட்டால், உன் உயிரை நம்பாதே, தெரியுமா? உன்னால் முடியாதென்றால், இப்பொழுதே சொல்லிவிடு. என்ன?" என்றார்.

பார்த்தான் ச்யவனன். நல்ல கூலி கிடைக்கும் என்ற ஆசை ஒரு பக்கம். ஏதாவது தவறு நேர்ந்துவிடுமோ என்ற பயம் ஒரு பக்கம். மெள்ள மதங்கனை ஜாடையாகப் பார்த்தான். அவனும் ஸங்கேதமாகவே தலையசைத்ததும்,



"ஆஹா, யஜமாங்களே. உத்தரவு" என்றான். அந்தக் கனவானும் "ஸரி, இவைகளை ஜாக்ரதையாய் வை, நான் போய் வருகிறேன்" என்று திரும்பினார். இடதுபுறம் நின்றிருந்த மதங்கன் கண்ணில் பட்டான். ச்யவனன் பக்கந்திரும்பி, "அது யாரு, அங்கே நிற்பவன்?" எனலும்! "ஸ்வாமி, அவன்தான் மதங்கன் என்னும் என் வேலையாள், தங்கள் வேலை கூட அவனேதான் செய்வான்" என்றான்.

"அடே, குறைந்த பக்ஷம் 30 நாளாவது உபயோகப்படவேண்டும், தெரியுமா? உறுதியாகச் செய்வாயா?" என்று அவனை நிமிர்ந்து பார்த்தார். ச்யவனனும், அந்தப் பக்கம் நோக்குவனோ, என்ன வாச்சரியம்! மதங்கன் அந்தக் கனவானைப் பார்க்காது, அவர் பின்னால் நிற்கும் ஏதோவொன்றைக் கவனமாகப் பார்ப்பவன்போல் இருந்தான். திடீரென்று அவன் முகத்தில் மலர்ந்த புன்னகையுண்டாயிற்று. கண்களில் ஸந்தோஷம் ஜ்வலித்தது. ச்யவனனுக்குண்டான ஆச்சர்யம் அடங்குவதற்குள் மதங்கன் முகத்தில் தவழ்ந்த மந்தஹாஸத்தைக் கவனித்த அந்தத் தனிகரும்,

"என்னடா, மடையா, என்ன சிரிக்கிறாய்? எங்கள் குரு, வரும் வெள்ளிக்கிழமை வருகிறார். ஆகவே, பல்லக்கு வியாழக்கிழமை தயாராயிருக்கவேண்டும். இல்லாவிட்டால், உன் சிரிப்பெல்லாம், நெருப்பாய்விடப் பண்ணுவேன். தெரியுமா?" என்னலும்,

"ஸ்வாமி, வேண்டிய காலத்திற்குத் தயாராயிருக்கும். நீங்கள் கவலை யொழிக்கலாம்" என்றான் மதங்கன். கனவானும் உடனே புறப்பட்டு, வண்டியிலேறிக்கொண்டு போய்விட்டார். இங்கே ச்யவனனும், "அப்பா என்ன ஆளப்பா! கல்லு மாதிரியல்லவா இருக்கிறான்" என்றான். மரகதமும் "அடித்துக்கொன்றால்கூட ஆறுமாதம் பிடிக்கும்போலிருக்கிறது. ஆளையடித்தால் நாலாள் செய்யலாம்!" என்று இப்படிப் பலவிதமாய் மனம்போனபடி பேசிக்கொண்டிருந்தார்கள்.

மறுநாள் காலை, ச்யவனன் மதங்கனை யழைத்து "அந்தப் பல்லக்கு வேலையை யாரம்பித்து ஜாக்ரதையாய்ச் செய். நான் மறையூர் வரையில் போய்வருகிறேன்" என்று எச்சரித்துவிட்டுப் போய்விட்டான். மதங்கனும் வேலையை யாரம்பித்து விரைவாகச் செய்துகொண்டிருந்தான். வேலை முக்கால் பாகம் முடிந்து, உருவமேற்படும்போது மரகதம் வெளியில்வர நேர்ந்தது அதைப் பார்க்கவும் "என்னப்பா! பிணப்பல்லக்கு மாதிரி செய்கிறாயே. ஸவாரிப் பல்லக்கு இப்படித்தான் செய்வதோ?" என்று சொல்லியும், அது காதில் படாதவன்போல் முன்மாதிரியே வேலை செய்துகொண்டிருந்தான். கடைசியில் வேலையும் முடிந்தது. அதைத் திண்ணையோரமாக வைத்து மூடிவிட்டு உட்கார்ந்திருந்தான் மதங்கன். அஸ்தமனத்துக்கு ச்யவனன் வீடுவந்ததும், மதங்கன் அவனை யிட்டுக்கொண்டுபோய், தான் செய்த பல்லக்கைக் காண்பித்தான். ச்யவனன் அதைப் பார்த்ததும், வயிற்றிலும், வாயிலும் அடித்துக்கொண்டு "அப்பா, மதங்கா, வாயில் மண் போட்டாயே. அவர் பயந்தபடியே, பிணப் பல்லக்காக ஜோடித்து விட்டாயே! என்ன செய்வேன்? கோபத்தில் அவர் என்ன செய்வாரோ? வேறொன்று செய்யலாம் என்றாலும், அம்மாதிரி மூங்கிற் கழிகளுக்கு நாம் எங்கேபோவது? நீ ஒருநாளும் தவறு செய்ததே கிடையாதே. ஏது நீ கூட இப்படி ஞாபகமின்றிச் செய்துவிட்டாய். வேளையின் பலம்" என்று புலம்பும்போதே, மிகுந்த வேகத்துடன் முதல் நாள் வந்த கனவான் ஸேவகன், மூச்சுவாங்க ஓடிவந்ததைக் கண்டான். அந்த ஸேவகன் முகத்தில் துக்கமும், பயமும் பூர்ணமாக விருந்தது. அவன் மிரள மிரள விழிப்பதையும், வாய்பேசாது நிற்பதையும் பார்த்து, ச்யவனன்

"ஏனப்பா, என்ன ஸமாசாரம்" என்றான்.

"ஐயா, நேற்று யஜமான் செய்யச்சொன்ன பல்லக்கு ஆயிற்றா? அதைப்பற்றியே வந்தேன்."

"ஏன் அதற்கென்ன? இன்னும் ஏதாவது சேர்க்கவேண்டுமோ?"

"இல்லை, ஐயா, யஜமான் காலை 10 மணிக்குத் தேகவ்யோகமாய்விட்டார். உபதேசமுமில்லை, ஒன்றுமில்லை. ஆகவே, அவர் ஆஸ்தையாக வாங்கிய அம்மூங்கிலினாலேயே, அவரை ஸ்மசாநங்கொண்டுபோக ஒரு பல்லக்குச் செய்துவிடும்படி சின்ன யஜமான் சொன்னதைக் கூறவந்தேன். நாளைக்காலை ப்ரேதமெடுக்கப் போகிறார்கள்" என்றான். ச்யவனனும், மரகதமும், ஒருவரையொருவர் பார்த்து விழி

த்து, “மனுஷ்யகாயம் எவ்வளவு அநித்யம்! இப்படியிருக்கையிலேயே ஒருவருக்கொருவர் கோபமும், தாபமும், சண்டையும் கொண்டாடுவது எவ்வளவு மதியீனம்” என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, மதங்கன் அந்த ஸேவகனை விளித்து “அப்பா, ப்ரேதப்பல்லக்குத் தயாராகி, வாசலில் வைத்திருக்கிறது. ஆள்களைக்கொண்டு நீ எடுத்துப்போகலாம்” என்றான். திக்ப்ரமையடைந்து, வந்த ஸேவகனும், ஸரியென்று வீடுபோய்ச் சேர்ந்தான்.

### மூன்றாம் பாகம்

முற்சொன்ன ஸம்பவங்கள் நடந்து ஒரு வருஷமாயிற்று. கார்யங்கள் முன்போலவே நடந்து வந்தன. மதங்கன் முதன் முதலில், மரகதம் சாப்பாடளித்த ஸமயமும், பல்லக்குத்தரவு செய்த கனவான் வந்த மற்றொரு ஸமயமும் செய்த மந்தஹாஸத்தைத் தவிர வேறு ஸமயங்களில் சிரித்ததேயில்லை. இதில் ஏதோ ஸூக்ஷ்மமிருக்கிறதென்று நினைத்தாலும், அவன் சொல்ல இஷ்டப்படாததை வற்புறுத்திக் கேட்கலாகாதென்று இருந்துவிட்டான் ச்யவனன்.

ஒரு நாள் காலையில், அவரவர் வேலையிலிருந்தார்கள். மரகதம், ஏதோ காய்கறி நறுக்கிக் கொண்டிருந்தாள். ச்யவனன் மூங்கில்களைப் பிளந்து சீவிக்கொண்டிருந்தான். மதங்கன் ஒரு பிரம்புப்பாய் பின்னிக்கொண்டிருந்தான். ச்யவனன் குழந்தைகள் ஓடி விளையாடிக் கொண்டிருந்தன. திடீரென்று மூத்த குழந்தை ஓடிவந்து மதங்கனைப் பிடித்திழுத்து “மாமா, மாமா, நம் வீட்டிற்கு யாரோ ஒரு அம்மா வருகிறாள். அவள்கூட, இரண்டு சிறு பெண்கள் வருவதைப் பார்த்தேன். ஐயோ பாபம், ஒரு பெண்ணுக்குக் காலில் ஏதோ ஊனம்போலிருக்கிறது; நொண்டி நொண்டி நடக்கிறது, அவர்கள் யார் மாமா?” என்று கேட்டதுதான் தாமஸம், கையிலிருந்த வேலையைக் கீழே வைத்துவிட்டு வெளியிற் சென்று மதங்கன், அந்த ஸ்த்ரீயையும் குழந்தைகளையும் மிகுந்த கவனத்துடன் பார்க்கவாரம்பித்தான். ச்யவனனுக்குண்டான ஆச்சர்யம் இவ்வள வவ்வளவல்ல. இதுவரை ஒரு விஷயத்திலும் மதங்கன் இவ்வளவு ஆவல்காட்டியதே யில்லை. இது எதனாலிருக்கலாமென்று எண்ணமிட்டுக்கொண்டே, வாசலில் வர, அந்த ஸ்த்ரீயும் அங்கு வந்து சேர்ந்தாள்.

அரையில் 120 ‘அடுக்’குள்ள ஒரு சிவப்புத்தண்டவாளப் புடவையுடுத்து நாகரிகமான ஆபரணங்கள் மட்டுமே யணிந்து, ஓரேவிதமான முகஜாடையோடுகூடிய இரு சிறுபெண்களை இருகையிலும் பிடித்துக்கொண்டு வந்த ஸ்த்ரீக்கு வந்தனம் செய்து ச்யவனன், “அம்மணி, தங்களுக்கு என்ன தேவை” என்றான்.

“அப்பா, மிகவும் ஸந்நமான பிரம்புப்பாய் இக்குழந்தைகளுக்குப் படுப்பதற்குவேண்டும், உன்னால் செய்யமுடியுமா?”

“ஆஹா, அம்மணி, இதோவிருக்கும் மதங்கனைவிடப் பாய் பின்னுவதில் ஸமர்த்தன் கிடையாது என்று நீங்கள் கேட்டிருக்கலாம்” என்று அவன் பக்கம் திரும்பினான். மதங்கன் அப்பெண்கள் இரண்டையும், ஏதோ முன்னே அறிமுகமாயிருந்து மறந்தவன்போல், கூர்ந்து நோக்குவதைக்கண்டு ஆச்சர்யத்தோடு, “அம்மணி, இன்னும் இரண்டு நாளில் முடித்துத்தருகிறேன். இக்குழந்தைகள் இரட்டையோ? இக்குழந்தைக்குக் கால் ஒரு மாதிரியாயிருப்பது, பிறவியா, ஏதாவது பின்னால் ஸம்பவித்ததா” என்று கேட்கவும், அந்த ஸ்த்ரீயும்,

“இரட்டைகள்தான், இக்குழந்தையின் தாயார் மரணமடையும்போது இதன் கால்மேல் புரண்டு விழவே, கால் ஊனமாய் விட்டது” என்றாள். மரகதம், “உங்கள் குழந்தைகள் அல்லவா இவைகள்?” எனக்கேட்டாள்.

“எனக்கும் இக்குழந்தைகட்கும் எவ்வித பாந்தவ்யமும் இல்லை. எடுத்து வளர்த்த பாசத்தால், இறந்துபோன என் குழந்தையைக் காட்டிலும் பதின் மடங்கு வாத்ஸல்யம் உண்டாகிவிட்டது.”

“ஆனால் இவை யார் குழந்தைகள் அம்மா? நீங்கள் வளர்க்கும்படி ஏன் நேர்ந்தது சொல்லலாமோ?”

“சொன்னாலென்ன? இரகஸ்ய மொன்றுமில்லை” என்று சொல்லிவிட்டு, குழந்தையின் முன் நெற்றி மயிரை, கையால் ம்ருதுவாய் ஒதுக்கிக்கொண்டே பின் வருமாறு ஆரம்பித்தாள்:—

“ஸுமார் ஆறு வருஷமிருக்கும் இக்குழந்தைகள் பிறந்து. இவைகள் தாயார் ப்ரஸவ வேதனைப் படும்போதே, காட்டுக்குப் போய் ஒருவித மூலிகை பிடுங்கிவரப்போன அவள் புருஷன் ஏதோ விஷந்தீண்டி ப்ரேதமாக வீடு சேர்க்கப்பட்டான். இரண்டு நாளைக்கெல்லாம் அவன் மனைவி ப்ரஸவித்து, மிகுந்த அபாய ஸ்திதியிலிருக்கிறாள் என்று தெரிந்ததும், ‘ஐயோ, பாபம், குழந்தைகள் அதிர்ஷ்டம், தாயாரையும் பறிகொடுத்துவிடுமோ?’ என்று பயந்துகொண்டே போனேன். நான் போவதற்குள் அவளுக்கு ஜன்னி கண்டு பிராணன் போய்விட்டது. ஆவி நீங்கும் ஸமயம், புரண்டு கொடுக்கும்போது அகஸ்மாத்தாக இக்குழந்தையின்மேல் விழுந்து விறைத்துவிட்டாள். நான் போகும்போது, ப்ரேதத்தின்கீழ் கால் அகப்பட்டு, கணைக்கால் விழி பிசகிக் கிடந்தது. அதை எடுப்பதே பெரிய ப்ரயாஸையாய் விட்டது. அவர்கள் பரம ஏழை. உற்றார் உறவினர் ஒருவருமில்லை. ஏதோ அங்கே வந்திருந்த நாலுபேராகச் சேர்ந்து, கோவிந்தக் கொள்ளியாகப் போட்டுவிட்டு வந்தோம். என்னுடைய குழந்தை யொன்று, ஒரு வயஸு வளர்ந்து மண்ணுக்கிரையாய் அப்பொழுதுதான் ஒரு மாதமிருக்கும். ஆகவே, எனக்கு இந்தத் திக்கற்ற இருகுழந்தைகளையும் பார்க்கும்போது, நிரம்பப் பரிதாபமாயிருந்தது. ஏதோ, இப்பொழுதுபோல் ஸௌகர்யமான ஸ்திதியி லில்லாவிட்டாலும், இந்தக் குழந்தைகளுக்குப் பாலூட்டி வளர்க்க முடியாதா என்றெண்ணி எடுத்துப்போய் வளர்த்து வந்தேன். அதுகளும் நோய் நொடியில்லாமல், புத்திசாலியாய் வளர்ந்து வருகின்றன. எனக்கும் கடவுள் க்ருபையால் கொஞ்சம் நல்ல பதவியுண்டாயிருக்கிறது. இப்பொழுது இந்தக் கண்மணிகள் இல்லாவிட்டால் வீடு காடுதான்” என்று, கண்களினின்றும் முத்துப்போல் ஜலம் பெருக, அக்குழந்தைகளை எடுத்து உச்சி முகர்ந்து கன்னங்குழைய முத்தமிட்டு நெட்டி முறித்து “அம்மா, பின் வா போகலாம். ஏன் அப்பா! திங்கட்கிழமை வந்தால் பாய் தயாராயிருக்குமா” என்று கேட்டு, ச்யவனன் “தடையில்லாமல்” என்று பதிற்சொல்ல, இரு குழந்தைகளையும் அழைத்து வீடு போய்விட்டாள்.

இங்கே வீட்டில் மூவரும், அவர்கள் கண் மறைவாகும் வரையில் பார்த்திருந்தார்கள். அவர்கள் மறைந்ததும் மரகதம், “ஆஹா, அனாதைகளைக் காப்பாற்ற கடவுளல்லவோ இருக்கிறார். யாரோ ஒரு அந்யஸ்த்ரீ இக்குழந்தைகளை ரக்ஷிக்கும்படி அவள் மனதில் அன்புப்பால் புகட்டியது கடவுளைத் தவிர வேறு யார்? எல்லோரும் பகவான் செல்வக் குழந்தைகளல்லவா?” என்றாள்.

என்று சொல்லும்போதே, அவ்வீடு முழுவதும் பரவினதான, ஒரு பெரிய தேஜஸ் உண்டாயிற்று. அது எங்கிருந்து வருகிறது என்று பார்ப்பார்களோ! மதங்கனைச் சுற்றி ஸூர்ய வெளிச்சம்போன்ற ஜ்யோதி சூழ்ந்திருப்பதைக் கண்டார்கள். அவனும் முன்போலில்லை. தேக மாத்யந்தம் பளபளவென்று கண் கூசும்படி ப்ரகாச முண்டாயிருந்தது. அவன் கைகளிரண்டையும் சிரமேற்குவித்துக் கண்ணிலிருந்து ஆநந்த பாஷ்பம் பெருக, ஸந்தோஷத்தால் விகஸித்த முகத்தோடு பக்தி பரவசமாக நின்றுகொண்டிருந்தான்.

அதைக்கண்ட ச்யவனனும் அவன் மனைவியும், அவனை நமஸ்கரித்து “ஸ்வாமி, நீங்கள் யாரோ தேவதையென்று தெரிகிறது. என்னிடம் வேலை செய்திருந்தீர்கள். அபராதம், அபராதம். ஆனால் நீங்கள் போகுமுன், உங்களுடைய சரித்ரத்தையும், என் மனைவி முதலில் உங்களுக்கு அந்நமிட்டபோதும், கனவான் பல்லக்குக்கு உத்தரவிட்டபோதும், இப்பொழுதும், ஏன் மந்தஹாஸம் பண்ணினீர்கள் என்ற ரகஸ்யத்தையும் அறிய ஆவலுள்ளவர்களா யிருக்கிறோம்” என்று விநயமாகக் கூறினான்.

மதங்கனும், புன்னகைதவழும் முகத்துடன், “அப்பா ச்யவனா, தர்மராஜாவின் வாக்குக்கெதிராக நடந்ததற்காகச் சாபமடைந்தேன். என்னுடைய அஞ்ஞானத்தால் அபராதம் செய்தேனாகையால், அவ்வஞ்ஞானம் நீங்க, பூமியில் மனுஷ்யதேக மெடுத்து, மூன்று தத்வங்களையறிய வேண்டுமென்றும், அப்படியறிந்தவுடன் சாபவிமோசனமாகி, பழையபடி தேவசரீரம் வருமென்றும் உத்தரவாயிற்று. ஆணையைச் சிரஸால்வஹித்துப் பூலோகத்தில் வந்துவிழுந்தேன். நீயும் உன் மனைவியும், என்னை ஸம்ரக்ஷணை செய்து புண்யத்தைக் கட்டிக்கொண்டீர்கள். உன் மனைவி அன்னமிட்ட பொழு

தொன்றும்,கனவான் பல்லக்குக்குத்தரவிட்டபொழுது மற்றொன்றும், குழந்தைகளோடு இந்த ஸ்த்ரீ வந்தபொழுது மீதியொன்றுமாக 3 தத்வங்களையும் அறிந்துகொண்டேன். கடவுள் க்ருபையால் நான் செய்த அபராதம் க்ஷமிக்கப்பட்டுச் சாபவிமோசன காலம் வந்துவிட்டது" என்று சொல்லும்போது, மரகதம் "ஸ்வாமி, நீங்கள் செய்த அபராதம் எத்தன்மைத்து என்றும், நீங்கள் அறிந்த தத்வங்கள் எவையென்றும், எங்களுக்கு விளக்கலாமோ?" என்று பக்தியோடு வினவினாள்.

" ஆகா அதற்கென்ன. நான் ஒரு காலதூதன். அப்பொழுதப்பொழுது வியோகமாகும் தேகங்களை யமபுரி கொண்டுசேர்ப்பதே வேலை. ஒரு நாள் வழக்கம்போல் ஒரு பெண்ணின் காலம் முடிந்துவிட்டபடியால், அவளைக் கொண்டு வரும்படி ஆஞ்ஞாபிக்கப்பட்டு, அங்குச் சென்றேன். அங்கே அப்பொழுது தான் ப்ரஸவித்த இரண்டு பெண்குழந்தைகளோடு படுத்திருக்கும் ஸ்த்ரீயைப் பார்த்துக் கொண்டு நிற்கும்போதே, நான் வந்ததையுணர்ந்த அந்த ஸ்த்ரீயும் அஞ்சலி பண்ணி, "ஹே, தேவதூத, நான் இப்பொழுதுதான் ப்ரஸவித்திருக்கிறேன். குழந்தைகளை எடுத்தணைத்து முத்தியிடக்கூட பலமில்லை. என் புருஷனோ விஷந்தீண்டி முந்திய நாள்பரலோகமடைந்துவிட்டார். இப்பொழுது என்னையும் கொண்டுபோவீர்களானால், இக்குழந்தைகள் கதி என்னவாகும்? அதை எடுத்துவளர்ப்பார் யார்? ஒரு பாபமுமறியாத இந்தச் சிசுக்கள் மரிப்பது ந்யாயமா? இவைகளுக்கு ஒரு கதி ஏற்படும் வரையிலாவது, என்னை உயிரோடு விடவேண்டும்" என்று கெஞ்சினாள். இங்கே மதங்கன் சற்று நின்று மூச்சுவாங்கிவிட்டு, மறுபடி யாரம்பித்தான். " எனக்கே நிரம்பப் பரிதாபமாயிருந்தது. ஆகையால் அக்குழந்தைகளை யெடுத்துத் தாயின்மேல் வளர்த்திவிட்டுத் தர்மராஜனிடம்போய், நடந்ததையுள்ளபடி சொன்னேன். சொல்லவும், அவர் இழிவும், கோபமுங் காட்டிய ஓர்வித நகையுடன் " ஹே, மூடா! நீ தேவனாயிருந்தும், உனக்கேன் இவ்வளவு அஞ்ஞானம்? இந்தத் தாய்தான் காப்பாற்றப் போகிறாளோ குழந்தைகளை? உலகத்தில் அன்பும், இரக்கமும், இல்லாமலே போய்விட்டதோ? அவைகளை ரக்ஷிக்கக் கடவுளுக்கு வழி தெரியாதோ? இவ்விதம் அஞ்ஞானத்தால் நீ என் கட்டளையை அசட்டை செய்தபடியால், பிடி சாபம்; பூலோகத்தில், மனுஷ்ய தேகமெடுத்து———" என்று சொல்லும்போதே நான் வணங்கி "ப்ரபோ, சித்தம் பாக்யம், ஆனால் க்ருபைசெய்து எனக்குச் சாப விமோசனமாகும் ஸமயத்தையருளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டேன். யமதர்மனும் கொஞ்சம் தயவுடன் "மதங்கா, அஞ்ஞானம் நீங்கி "மனிதனுடைய ஆத்மா அன்பினுருவே" என்றும், "மனிதன் அறிவு சிற்றறிவு" என்றும், "பரஸ்பர அன்பினாலேயே, உலகம் நடைபெறுகிறது" என்றும் மூன்று தத்வங்களை அநுபவ பூர்வமா யுணர்ந்ததும், நீ தெய்வசரீரம் பெற்றுப் பழையபடி வரக்கடவாய்" என்று ப்ரஸாதித்தார். அவ்வளவுதான்! உடனே ஒரு பெருஞ் சுழற்காற்றடித்தது. நான் மூர்ச்சையானேன். பிறகு உன்னைப் பிள்ளையார் கோயிலண்டை பார்க்கும் வரை நடந்தது ஒன்றுமே எனக்குத் தெரியாது. நான் மந்தஹாஸம் பண்ணிய மூன்று ஸமயங்களிலும், மூன்று தத்வங்களை யறிந்தேனாகையால் சாபவிமோசன காலம் நெருங்கிற்று என்ற எண்ணத்தாலேயே ஸந்தோஷமுண்டாயது" என்று சொல்லி முடித்தான்.

கதையை, திறந்தவாயும், மலர்ந்த கண்ணுமாகக்கேட்டுவந்த மரகதம், "இன்னும் எங்களுக்கு விளங்கவில்லையே! இந்த மூன்று ஸமயங்களிலும், என்னென்ன தத்வத்தை எப்படி யறிந்தீர்கள்" என்று ப்ரச்னித்தாள்.

" அதுவா? சொல்லுகிறேன் கேளுங்கள். முதலில் நான் இங்கே வந்ததும், கடுத்தமுகத்தோடும், வெறுத்த மனத்தோடும் நீங்கள் சொன்ன கொடுஞ்சொற்கள், எனக்கு மிகுந்த துக்கத்தை விளைத்தன. நாம் பிள்ளை குட்டிக்காரர் இல்லையா? என்று உங்கள் புருஷன் சொன்னதும், மனங்கசிந்து நீங்கள் எனக்கு அன்னதானஞ் செய்ததும், என் மனது ஸந்தோஷ மடைந்தது. தர்மராஜன் சொன்ன தத்வங்களில் முதலாவது ஞாபகம் வந்தது. நிஜத்தில் உங்கள் ஆத்மா அன்பின் ஸ்வரூபமாகையாலேதான், உங்களையும் அறியாமல் என்னிடம் இரக்கமுண்டாயிற்று. 'ஒன்றாயிற்று' என்று தோன்றவே, மந்தஹாஸம் செய்தேன்,"



"அப்புறம் மற்ற விரண்டு " என்றாள் மரகதம். "வந்துவிட்டேன். அந்தக் கனவான் வந்து பல்லக்குக்கு உத்தரவிடும்போது,நான் சற்றுக் கவனிக்கவே, அவன்பின் ஒரு காலதூதன் —என் ஸ்நேகிதன்தான்—நிற்பதைப் பார்க்கவே, அக்கனவான் மறுநாள் மரணமடைவது நிச்சயமென்று அறிந்துகொண்டேன். அவரோ அதையறியாமல், கோபத்தோடும், டம்பத்தோடும், ஒரு மாதம் நித்யோத்ஸவம் என்றும் உபதேசமென்றும் இன்னும் பல மனோராஜ்யங்களையும் விவரித்துக் கொண்டிருந்தார். கொஞ்சம் நிதானிக்கவே, 'மனுஷ்யன் அறிவு எவ்வளவு எளிமையானது' என்று இரண்டாவது தத்வத்தை யறிந்துவிட்டபடியால் மறுபடியும் ஸந்தோஷித்தேன்" என்றான். " மூன்றாவது" என்று மறுபடியும் வினவினாள் மரகதம்.

" பொறு. அவஸரப்படாதே, சொல்லுகிறேன். இரண்டு குழந்தைகளோடு அந்த ஸ்த்ரீ வந்து அவைகளின் சரித்ரத்தைச் சொன்னதும், மூன்றாவது தத்வமும் எனக்கு விளங்கிவிட்டது. அக்குழந்தைகளைப்பாதுகாக்கவேண்டும் என்று மனங்கொண்ட தாயினாலேயே, ஒரு குழந்தைக்கு கால் ஊனமாய்விட்டது. கடைசியில், குழந்தைகள் வளர்ந்தது அந்தத் தாயின் மனோராஜ்யத்தால் அல்ல. பின் எதனால்? யாரோ வொரு அந்ய ஸ்த்ரீ மனஸில் அன்பும், பரோபகார சிந்தையும் இருந்ததால் அல்லவா? அப்படி யொருவருக்கொருவர் அன்பில்லாவிட்டால், இவ்வுலகம் நரகத்துக்கு ஸமானமாய் விடும். ஹே மரகத ச்யவனர்களே ! நான் அறிந்தது இம்மட்டிலு மல்ல. இன்னொரு ரகஸ்யமு முணர்ந்தேன். பகவானுடைய ஸம்மதமே, அவரவர் தங்கள் கார்யத்தை மட்டுங் கவனிப்பதல்ல. பிறருக்கு வேண்டிய கார்யங்களையும் செய்யவேண்டு மென்பதே. அதனால்தான் அவரவர்களுக்கு என்னென்ன வேண்டியது என்றறிய சக்தி கடவுள் மனிதனுக்களிக்க வில்லை. அக்கனவானுக்கு, தன் உபதேசத்திற்குப் புஷ்பப் பல்லக்கு வேண்டுமா, தன் ப்ரேதவாகனமாக பிணப் பல்லக்கு வேண்டுமா என்றறிய முடிந்ததோ? இல்லை. கோயிலண்டை நான் மூர்ச்சையாய்க் கிடந்து பிறகு பிழைத்தது என்னாலான கார்யமோ? எனக்கு வேண்டியது என்னவென்று கடவுள் ச்யவனன் மனதில் தோற்றுவித்ததாலல்லவோ? ஆகவே, முடிவில் நான் அறிந்த உண்மை இதுதான். ஜீவப்பிராணிகள் ஒருவருக்கொருவர் உதவியும், அன்புபாராட்டியும் வாழ்வதே மேலானதர்மம். நீங்கள் இந்தத் தர்மத்தை விடாது பற்றி நல்ல கதியடைவீர்கள் என்று நான் நன்றியோடு ஆசீர்வதிக்கிறேன். கால தாமதமாகிறது. விடைகொடுங்கள், நான் போய் வருகிறேன் " என்று சொல்லிக்கொண்டே ஆகாசமார்க்கமாகக் கிளம்பி, கண்ணுக்கு மறைந்துவிட்டான்.

கொஞ்ச நாழிகை, ஸதிபதிகள் இருவரும் மௌனமாகவே சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். பிறகு ச்யவனன்,

" மரகதம்! பார்த்தாயா ? ஒரு தேவ புருஷனை வீட்டில் வைத்து ஆறுவருஷம் அன்னமிடும்படியான பாக்யம் நமக்கு லபித்தது. நீ மனது முரண்டி, முதலில் பண்ணினது போல், பிடிவாதமே செய்து, அன்னமிடாமல் மதங்கனைத் துரத்தியிருந்தால், நம்முடைய கதி என்னவாயிருக்கும்? நாம் இவ்வளவு நல்ல ஸ்திதியிலிருப்போமா? ஆகவே, ஸத்ரங் கட்டி, ஸகஸ்ரபோஜநஞ் செய்விக்க முடியாவிட்டாலும், கூடியமட்டும் எளிய ஸ்திதியிலிருப்பவர்களுக்கு உதவிபுரிவதே இகபர ஸாதகம். அதிலும், பசியென்றவனுக் கன்னமிட்டு, தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுப்பதைவிடச் சிறந்த தர்மம் இல்லவேயில்லை" என்று தீர்மானமாக உபதேசத்தை முடித்தான். **ஓம் தத்ஸத்.**

---

**பையன்** :—ஏன் அப்பா, நீ என்னமோ, இஸ்காட்டு, தாக்கரே, ப்ளாக்ஸ்மித்து, இவாளெல்லாம் ரொம்ப, ரொம்ப, கதை இழிதூட்டா இங்கரயே ! நேக்கு ஒத்தரைத் தெரியும் : அவர் எழுதியிருக்கிற பொஸ்தகத்துக்குக் கணக்கேயில்லை. அடே அப்பா ! எந்த பொஸ்தகத்தைப்பாத்தாலும் கடைசிலே அவர் கையெழுத்துத்தான். என்னமாத்தான் அத்தனை பொஸ்தகம் எழுதினாரோ, என்னமோ ?

**தகப்பனார்**:—என்னடா ப்ரமாதமாய் சொல்லரே. அவர் ஆருடா ?

**பையன்**:—பூ, இவ்வளவுதானா. நீங்கள் பொஸ்தகம் வாயிச்சது-தெரியாதா, நம்ப முற்றிற்று என்பவரை. அவர்தான்; வேறே யாரு !

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி : (8) கவறு

காரேயுங் கூந்தலார் காரிகைமேல் காதலித்த
தாரேயுந் தோளான் தனிமனம் போல்—நேரே
தவறுய்ப் புரண்ட தமையனொடுங் கூடிக்
கவறுய்ப் புரண்டான் கலி.

உள்ளங் கொதித்த வண்ணமாகவே யிருந்தான் கலி ; பலநாள் காத்திருந்தும் நளனைப் பற்றத்தக்க காரணமில்லாமல் அலைந்தான் ; மனமிளைத்தான். என் செய்வது ? பெரியாரையும் பெருங்குணங்களுடையவரையும் எளிதில் பகைத்தழிக்க முடியுமா ? பன்னிரண்டு வருஷகாலம் காத்திருந்தும் நல்ல ஸமயம் கிடைக்காமையை எண்ணிக் கலிராஜன் வருந்தி மனம் வெதும்பிக்கிடந்தபோது, இருந்தாற்போலிருந்து உள்ள மகிழ்ச்சியடைந்தான். சோழியன் குடுமி சும்மா ஆடுமா ? காரண மில்லாமல் அவனுக்கிருந்தாற்போல விருந்து ஸந்தோஷ முதிக்குமா ? ஸந்தோஷமிருந்தால் எதனாலோ ? [கண்டு

சந்திசெயத் தாள்விளக்கத் தாளின்மறுத் தான்
புந்தி மகிழப் புகுந்துகலி—சிந்தையெலாம்
தன்வயமே யாக்கித் தமைய னுடனிருந்தான்
பொன்னசல மார்பிற் புகைந்து.

நளன் ஒருநாள் சந்திசெய்யக் கால்கழுவியபோது, காலில் சற்றே நீர்படாதிருந்த சிறு குற்றத்தைக் கண்டதும், கலிராஜன் பேரானந்தங்கொண்டு, 'ஊசி நுழைய இடங்கிடைத்தால் உலக்கை நுழைக்க இடம்பார்ப்பது அஸாத்யமா ?' என்று எண்ணி நளனது உடலில் புகுந்து தன் இஷ்டப்படி அவனை ஆட்ட ஆவேசித்தான். தனக்குப் பலமேற்பட்டதும் தனது வேலைகளைச் செய்யப் பரபரப்புக்கொண்டு புஷ்கரனை நோக்கி,

"நன்னெறியில் சூதால் நளனைக் களவியற்றித்
தன்னரசு வாங்கித் தருகின்றேன்—மன்னவனே
போதுவாய் என்னுடனே" என்றான் புலைநரகுக்
கேதுவாய் நின்றான் எடுத்து.

இவ்விதம் கலிதூண்டியதும் புஷ்கரன் உள்ளம் கிளைத்தான் ; தக்கவிதம் அலங்கரித்துக்கொண்டு நளனை நாடிச்சென்றான். அதே ஸமயம் கலி சொக்கட்டான் தாய்க்காயில் பதுங்கினான். உதவிசெய்ய ஒப்புக்கொண்ட துவாபரனும் வேலைசெய்யாமலிருப்பானா ? நிற்க, புஷ்கரன் நளனது ஊரை அடைந்து அவன் முன்தோன்றினான். நிஷ்களங்கமான மனத்துடன் அவனை நளன் வரவேற்றான். தம்பி போன்ற முறைக்குச் செய்யவேண்டிய கடமைகளை எல்லாஞ் செய்தான். புஷ்கரன் மாத்திரம் தனது காரியத்தின்மேலே கண்ணாய் நளனைப்பலமுறையும் சூதாடக் கூப்பிட்டான். ஆனால் நளன் பேசாது சும்மா இருந்தான். அங்கு தமயந்தி எதிரில் இருக்கும் ஸமயம் பார்த்து, மீண்டும் மீண்டும் புஷ்கரன் நளனைக் கவறாடத் தூண்டினான்; சொக்கட்டானால் சூதாட வேண்டினான். பலமுறையும் கூப்பிட்டதை நளனால் பொறுக்கமுடியவில்லை. அன்றியும், தன் மனைவி எதிரிலிருக்கும்போதே உறுத்தி யுறுத்திப் பல முறையும் அவன் தன்னைக் கூப்பிட்டது நளனுக்குக் கொஞ்சம் மனக்கலக்க முண்டாக்கியது. அவனுக்கு ரோஷ முண்டானபடியால் சூதாட ஒப்புக்கொண்டான். விதியின் வசத்தால் சிக்கினவன்போல், கலியாலாட்டப்பட்ட நளன் தன் இயற்கை அறிவொழிந்து, பொன், வெள்ளி, தேர்கள், குதிரைகள், ஆடைமுதல் எவ்விதப் பொருளையும் பந்தயமாக வைத்து வைத்துத் தோற்றுக்கொண்டே வந்தான். இவ்வாறு நளன் தாழ்வதைக்கண்ட மந்திரிகள் அங்குவந்து [ழிதல்

"காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொ
ஈதன் மறுத்தல் இவைகண்டாய்—போதிற்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி. [மைத்

உருவழிக்கும், உண்மை யுயர்வழிக்கும் ; வன்
திருவழிக்கும், மானஞ் சிதைக்கும்,—மருவும்
ஒருவரோ டன்பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து ?

எள்ளுக சூதினை ; இகலி வென்றதூஉங்
கள்ளமேற் கொடு, வலை கரந்து, வேட்டுவர்
உள்ளுற அமைத்திடும் உணவை ஓர்கிலாப்
புள்ளினம் அருந்தின போலும் என்பவே."

எனப் பலவிதமாகக் கவறுடுவதின் தீமையையும் நெறியின்மையையும் எடுத்து விளக்கினும், யாவற்றையுமறிந்த நளனும் கலியின் வேகத்தால் ஆட்டப்பட்டவனாகிச் சொல்வது இன்னவெனக் கேளாதிருந்தான். கூச்சம் கடந்து தமயந்தியும் தனக்கும் தெரியாது, தனது கணவன் ஆவேசத்துடன் ஆடும் சூதை



விடும்படி சொன்னாள்; மந்திரிகள் மூலமாகத் தனது கணவனுக்குச் சொல்லும்படியும் செய்தாள். அவருரையைக் கேட்டதும்,

"தீது வருக; நலம்வருக; சிந்தையால்
சூதுபொர இசைந்து சொல்லினோம்—யாதும்
விலக்கலிர் நீர்" என்றான் வரால் ஏற மேதி
கலக்கலைநீர் நாடன் கனன்று.

நளனது உரையைக் கேட்ட மந்திரிகள் மனம் வருந்தினர். இதற்குள் நகரத்து ஜனங்கள் தோல்வியடைந்துவரும் விஷயங்களைக் கேட்டதும், தமதரசனைத் தவறான வழியிலிருந்து மீட்பிக்கவேண்டியது தமது கவலையெனத் தேர்ந்து, தமதரசனிடஞ்சென்று அவனை அவன் கொண்டிருந்த தீயசெயலை ஒழிக்கும்படி வேண்டினர்; மன்றாடினர். சூதில் மூழ்கிய மன்னனது செயலைப் பொறுக்காது, ஊர் ஜனங்கள் சொல்லிய மொழிகளையும் கேளாத தனது தலைவனது செயலைக் கண்ட தமயந்தி கலங்கினள்; மனமயர்ந்தனள்; தண்ணீர் தொண்டையில் அடைத்துக்கொள்ளச் சொல்லமுடியாமல் விக்கினள் ; வெதும்பினள்;வாய் உலரக் கண்களில் நீர்வளரச் சோகம் வளர மனங் குமுறினள். ஜூதமாடிடும் அரங்கினில் தன் இயற்கை நாணத்தையும் விட்டுக் கணவனது நன்மையை முன்னிட்டு, நெற்றியின் வெயர்வைநீரும், கண்களிலிருந்து கொட்டும் நீரும் சொட்டச் சொட்ட, பேசமுடியாது தொண்டை யுலர, கவலையுடன், தன்னிரு கரத்தையும் குவித்து, சூதாட்டத்தை ஒழிக்கும்படி தன்னால் செய்யக்கூடிய வழிகளிலெல்லாம் ஜாடை செய்தனள். பல தடவை அவ்வாறு செய்தும் கணவன் அறியாததை எண்ணி எண்ணிப் பரிதபித்தனள் ; வெட்கமுற்று ஈதேதோ விபரீத காலத்தின் குறி என்று சிந்தித்து மனம் புண்ணானாள். இதற்குள் பலநாள்கள் இவ்வாட்டத்திலேயே கடந்தன; தமயந்தியின் நாட்களும் வாட்டத்திலேயே கடந்தன ; செல்வம், நாடு, நகரம் ஆக ஒவ்வொன்றும் பந்தயமாக வைக்கப்பட்டு நளனிடமிருந்து ஓட்டத்திலேயே இருந்தன. மலையிலிருந்து விழும் பெரும் பாறை, கனவேகமாகத் தடுப்பவரைக் கணிசியாது தன் வழியே செல்வதுபோல, நளனது சிந்தை நல்லொழுக்க மலையினுச்சியிலிருந்து, சூதென்னும் பெரும்பாஷாணமூட்டமாய், துயராகிய படுகுழியிற்படக் கனவேகத்துடன் வீழ்ந்து கொண்டிருந்தது. விதியின் வேகத்தைத் தடுக்க, நாடிப் பரீட்சை எதற்குதவும் ?

நிற்க, தமயந்தி யோசித்தாள்; பயமும் திகிலும் அடைந்து, தனது கணவனைக் காக்க வழி ஏதேனும் உண்டோ என்று சிந்தித்தாள் ; அவருக்குக்கேடேவரும் என அஞ்சினாள். ஆக அவனது நன்மையை நாடி மந்திரிகளுக்குச் சொல்லியனுப்பிச் சபைகூடிச் சூதில் கழியாது பாக்கி என்ன இருக்கிறது என்று கணக்குப் பார்க்கச் சொன்னாள். அவரும் சொல்லாமலே நளன் நிர்க்கதியானதைச் சொல்லியனுப்பினர். இதற்குள் நகரத்து ஜனங்கள் மீண்டும் அரசனை யடைந்து பாழுஞ் சூதை விட்டொழிக்கச் சொல்ல வந்தனர். அவரது வரவைத் தமயந்தி நளனுக்குத் தெரிவித்தாள். ஆனால் அதை அவன் கவனிக்கவே இல்லை. மறுபடியும் தன் சொல்லைத் தன் கணவன்கேளாததை எண்ணி அவள் வெட்கமடைந்து துயருற்றாள். வேறு வழியில்லை என்று சிந்தித்தவளாய்த் தனது பாங்கியைக் கூப்பிட்டு "விருஷஸேனே ! அரசர்க்கு ஜயம் வருமென எனக்குத் தோன்றவில்லை. 'ஆனைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்று சொல்வதற்கேற்ப, அவரது கெட்டகாலம் யான் சொல்லும் நயமொழிகளைக்கூட அவர் கவனியாதபடி செய்துவிட்டது. ஆகையால் உன்னால் எனக்கொரு பெரும் காரியமாகவேண்டி யிருக்கிறது; அதற்குனக்கென்றும் நான் நன்மை பாராட்டுவேன். நீ நமது தேர்ப்பாகன் வார்ஷ்ணேயனை அழைத்து வரவேண்டும்" என்றாள்; அவளும் அவ்வாறே செய்யச் சென்றாள்.

வார்ஷ்ணேயன் வந்தனன். "உம்மிடம் அரசர் எப்பொழுதும் அன்போடு விளங்கினர் அல்லவா? அவர்செய்த ஒரு நன்றியிருப்பினும் அதற்காகவாவது அவர்க்கு உதவி செய்ய வேண்டுவதில்லையா? அவர் உங்களுக்கும் ம றெவர்க்கும் நன்மையே புரிந்தவர். அ பொழுது கொடுத்த வாய்மொழியைத் எண்ண மில்லாதவராய்ச் சூதில் ம முற்று, நாட்டையே இழக்குந் த இருக்கின்றனர். ஆகையால் எமது தைகளிரண்டையும் தேரில் ஏற் குண்டினபுரத்தில் விட்டுவிடு

கோளைத் தடுக்கக்கூடாது. உம்மை நான் சரணமடைகிறேன். என் மொழியைத் தடுக்காது ஒப்புக்கொள்ளப் பிரார்த்திக்கின்றேன்" என்று தமயந்தி அவனிடம் மிகுந்த வணக்கத்துடன், கண்ணீர் பெருகி மார்பை நனைக்க, உள்ளம் புகைய, நாகுழறச் சொன்னாள். இம்மொழிகளைக்கேட்ட வார்ஷ்ணேயன் உடனே சென்று, அவற்றை மந்திரியிடம் சொன்னான்; அவரும் அதற்கொப்பினர். உடனே தலைமேல் வைத்த கையோடு தமயந்தியிடம் அடைந்து குழந்தை இருவரையும் நளனது தேரிலேற்றிக்கொண்டு, அவரைத் தேர், குதிரையுடன் குண்டினபுரத்தில் ஒப்புவித்துச் சிந்தாக்ராந்தனாய் அலைந்துகொண்டிருந்தான். நளனது நினைவு மனத்தைத் துளைக்க, ஒன்றுந்தோன்றாது மயங்கி, ஊர்தோறும் அலைந்து, அயோத்தி அடைந்து ருதுபர்ணனென்னும் அந்நகரத்தரசனிடம் வேலைக்கமர்ந்தனன்.

நிற்க, நளனுக்கும் புஷ்கரனுக்கும் இன்னும் பொழுது விடியவே இல்லை; சூதாட்டமும் ஒழியவில்லை; நளனது தோல்வியும் ஒழிந்தபாடில்லை. நளன் தனது நகர முதலிய யாவற்றையுந் தோற்று விளங்கினான். அப்போது, புஷ்கரன் "உனக்கு வேறென்ன பொருள் இருக்கிறது? தமயந்தியைப் பந்தயமாக வைக்கலாம் அல்லவா?" என்று கேட்டான். இதைக் கேட்டதும் நளன் கண்களில் தீப்பொறிபறக்கப் பார்த்தான். ஆயினும் தனதாபரணங்களையும் தன் மனைவியின் ஆபரணங்களையும் வைத்து வைத்து எல்லாவற்றையும் தோற்றான்.

இவ்வாறானதும் நளன் மேல்போட்டிருந்த வஸ்திரத்துடன் ஊரைவிட்டுப் போகத் தனது அரண்மனை வாயிலை யடைந்தான். அவனது நிழல்போலவே தமயந்தியும் சிறிதும் மனங்கோணாது, நாணாது, பின்னே தொடர்ந்தாள். இதைக்கண்ட நகரவாசிகள் கண்களில் நீர் ...தும்பக் கலங்கிப் பின் பற்றினர். ஆனால் ...ரஜ்ய புஷ்கரன் இதற்குள் "நளனிடம் ...பு காட்டுபவர் கொல்லப்படுவர்" எனப் ... சாற்றுவித்தான். அதனால் ஜனங்கள் ... தாபத்தை வெளிக்காட்ட முடியாது ...ந்தனர். நளனிடம் பெருந்தேவி திரு...ரிய மனங்கொண்டுவிட்டாள்!

# மாணவர் பக்கங்கள்
## STUDENTS' PAGES
## S. S. L. C.—1913

I. Write an essay on (one of) the following:—
(a) A wise son maketh a glad father.

### I (a) தநயன் திறம் தந்தையின் திருப்தி

*பொருள் விளக்கம்—இதன் காரணம்—நல்லொழுக்கத்தின் ஆவசியகம்—பிள்ளைகளின் சிறப்பு—விஷய முயற்சிகள்.*

இந்த நன்மொழிக்கு, ஒருவன் நன்றாக நடந்துகொண்டானாகில், அதனால் அவன் தகப்பனுக்கு மிகுந்த களிப்பை யுண்டாக்குவான் என்பதே பொருள். ஒருவனுடைய நற்குணத்தால் மகிழ்வடைபவர்கள் உலகில் பலரிருப்பினும், அவன் தந்தைக்கு அது மகிழ்ச்சியை உண்டாக்கும் அளவு, மாதிரி, ஆகிய இவைகளுக்கு நிகர் வேறு எவரிடத்தும் ஏற்படாது. இதற்கேற்பவே உலகில் ஒருவன் நன்றாக நடந்துகொண்டானாகில் எல்லோரும் அவன் தகப்பனைச் சிறப்பித்துக் கூறுவதும் பழக்கமாகிவிட்டது. திருவள்ளுவரும்.

'மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்'

என்றார். அதாவது ஒவ்வொருவனும் தான் நடந்துகொள்ளும் வகையால், உலகில் எல்லோரும் 'இவன் தகப்பன், என்ன அருந்தவம் புரிந்து இந்தஸத்புத்ரனைப் பெற்றானோ' என்று வியந்து கூறும்படிச் செய்யவேண்டும்: இதுதான் ஒவ்வொருவனும் தன் தகப்பனாருக்குச் செய்யவேண்டிய பேருதவி' என்பதே. சீனம் முதலிய தேசங்களில் எவன் நற்செய்கைகள் முதலிய அரிய தொழில்களைச் செய்தாலும் அவன் தந்தைக்கே பட்டப்பெயர் முதலியவைகளைக் கொடுப்பது என்பதும் பழக்கத்திலேயே இருக்கிறது. ஒருவன் நன்றாகப் புத்தியுடன் உலகில் ஒழுகவேண்டும் என்ற விஷயத்தில் மிகுந்த கவலை தகப்பனுக்குத்தான் இருக்கும். ஆதலால் ஒருவன் நல்லொழுக்கத்தால் சிறப்பும் களிப்பும் முழு ஆற்றலுடன் பெறத்தகுந்தவன் அவன் தகப்பனே.

முற்கூறியபடி, தகப்பனுக்குப் பிள்ளையின் நடவடிக்கை விஷய முழு திருப்தி இருப்பானேன் என்பதைப்பற்றிச் சற்று ஆராய்வோம். ஒரு குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளின் நன்மைக்காக அக்குடும்பத்தார் ஒவ்வொருவரும் வெவ்வேறுவிதமாகப் பாடுபடவேண்டும் என்றே அமைந்துள்ளது. தாய் எப்படிக் குழந்தைகளின் உடற்சிறப்புக்கே முக்யமாயும் மற்றவைகளுக்குப் பொதுவாயும் முயலக் கடமைப்பட்டவளோ, அதுபோலத் தந்தையும், குழந்தைகளது கல்வி முதலிய நடத்தைகளைச் சீர்திருத்தும் வழியில் முக்யமாக முயலக் கடமைப்பட்டவன். இது பற்றியே திருவள்ளுவனாரும்,

தந்தை மகற் காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

என்றார். ஆகவே ஸ்ரிவர இல்லறம் நடத்தும் ஆண் பிள்ளை ஒருவன், நேராகத் தன் பிள்ளைகளுக்கு நன்னடக்கை விஷயங்களைக் கல்வி வழியாகவும் புகட்டவேண்டும்: அவ்வாறு புகட்ட முடியாதவைகளைத் தன் நடத்தை வழியாகவும் புகட்டவேண்டும். ஒவ்வொரு இல்லறத்தானும், தான் ஒழுகும் வழி, சாஸ்திரத்திற்கு இசைந்தனவாயும், தன்னைக்கண்டு பின்பற்றக்கூடிய குழந்தைகளை நல்வழியில் நிறுத்தத் தக்கனவாயும் உள்ளனவா என்று மிகுந்த கவனத்துடன் இடைவிடாது நடக்கவேண்டும். இப்படியெல்லாம் ஒரு தகப்பன் நடக்கும்படியாக இருப்பதால்தான் பிள்ளையின் ஒழுக்கச்சிறப்பு தந்தைக்கே மிகுந்த களிப்பை உண்டாக்குகிறது. உலகத்தவரும் தந்தையின் சிறப்பையே மகனது நடத்தைச் சிறப்பில்கண்டு நன்கு மதிப்பர்.

இதுவரையிலும் கூறிவந்ததிலிருந்து ஒவ்வொருவனும் நல்லொழுக்கத்தை விட்டு, நீங்கவே கூடாது என்பதற்கு ஏற்பட்டுள்ள காரணங்களுள் ஒன்று வெளியாகியிருக்கும். நல்லொழுக்கத்தில் ஒழுகுபவன், கடவுள் ஆணைப்படி நடந்த சிறப்பு, தன் மனச் சமாதானம் முதலியவைகளைப் பெறுவதோடுங்கூட மற்றவர்கள் பின்பற்றுவதற்குத் தகுந்த உதாரணமும் ஆகிறான்: ஒருவன் தனக்காகவேண்டிச் சிற்சில நல்வழிகளில் நடவாமலிருந்து விடமுடியுமாயினும், அவனைவிட வயதில் சிறியவர்கள் நல்வழி நின்று சிறப்படைய வேண்டும் என்ற கருத்துடனாவது அந்நல்வழி நடந்தே தீரவேண்டும். ஒரு குடும்பத்தில் தகப்பனார் நிலையில் இல்லாதவனும் தன் தம்பிக்குத் தமயனாக இருக்கலாம் அல்லது தன்னைவிட வயதிற் சிறியவர்களை உடையவர்களாக இருக்கலாம். இவைகளைக் கருதியாவது, புத்திமானான பிள்ளை நல்வழியில் நடக்கவேண்டும் என்பதை எடுத்து விளக்குகிறது இந்த ஆராய்ச்சி.

நம் பரதகண்ட வைதிகநூல்களில், பிள்ளைகளது நன்மை விஷயத்தில் தகப்பன் முயற்சிக்கக்கூடிய அளவுகள், மற்றைய நாட்டார் நூல்களைவிட, வெகு நுட்பமாகக் காட்டப்பட்டுள்ளன. நம்முள்ளுள்ள கல்யாணமே தர்மப்ரஜைகளின் பிறவியின்பொருட்டே, வெறும் ஸுகத்திற்கு மாத்திரமல்ல. நம் உணவு விஷயமான கட்டுப்பாடுகள், ஸ்திரீ புருஷர்கள் நடந்துகொள்ளவேண்டிய வழிகளின் விஷயமான கோட்பாடுகள் எல்லாம் நற்பிள்ளைகளைப் பெற்று, உலகம் செழிப்படைவதற்கே. கல்யாணம் முதலிய இல்லறவிஷய கர்மாக்கள் எல்லாம் இக்கருத்தையே உள்ளடக்கியுள்ளவை. நமது சாஸ்திரங்களில் வெகு நுட்பமாகக் கூறியுள்ள ப்ரஹ்மசரிய ப்ரதிஷ்டைக்கும் நற்பிள்ளைகளை உலகில் பிறப்பிப்பதே முக்ய நோக்கம். நம் புராணங்களில் பெரியோர்களாகக் காணப்படும்படியான வ்யாஸ வஸிஷ்டாதிகள் எல்லோரும் இந்த ப்ரஹ்மசரிய ப்ரதிஷ்டையுடைய மஹரிஷிகளின் சிறப்பால் வெளிவந்தவர்களே. ஸத்புத்திரர்களை அடைய, நம் முன்னோர்கள் செய்துள்ள தவங்களுக்கும், பட்ட பாடுகளுக்கும் கணக்கேது? ம்ருகண்டு மஹருஷி அல்பாயுஸ்ஸான ஸத்புத்திரனைக் கோரினாரே ஒழிய, தீர்காயுஸ்ஸுடைய மூடப்பிள்ளையை வேண்டவில்லை. முற்காலத்திய மஹா ராஜாக்கள், தமக்கு நேரிடப்பிறந்த பிள்ளைகளின் ஆற்றல் குறைவைக் கண்டு காதி (விச்வாமித்ரர் தகப்பனார்) யைப்போல மஹருஷியின் ப்ரஹ்மசரிய ப்ரதிஷ்டையால் நற்பிள்ளைகளைத் தேடிக்கொண்டார்கள். நல்லபிள்ளை உண்டாக்குவதையும், கெட்டபிள்ளை தம்வழி வெ... வர வொட்டாமல் தடுப்பதையும் ஒரு நுட்... தொழிலாகக்கொண்டு பழகித்தேர்ந்தவர்... நம்முன்னோர்கள். எப்படிப் பெற்ற...க தெரியுமோ பிள்ளையின் அருமை, ... லத்தான் தகுந்த முழுமுயற்சி... பிள்ளைகளைப் பெறும் தகப்... தெரியும் பிள்ளைகள் நடத்... உண்டாகக்கூடிய மகிழ்ச்சி.

...T., Inspector
...structive mon-
...ue, Education
useful to teachers

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS OF THE WORLD

**ஐரோப்பிய மஹாயுத்தம்**

நாளது மாதத்தோடு இந்தக் கொடிய யுத்தத்தின் மூன்றாவது ஆண்டு நிறைந்து, நான்காவது ஆண்டு ஆரம்பமாகின்றது. இதுவரையில் கோடிக் கணக்காக ஜனங்கள் இறந்து போயினர் என்றாலும், யுத்தம் எப்போது முடிவடையும் என்பதைச் சொல்ல ஏதுவில்லாமலிருக்கிறது. மேற்கரங்கத்தில் நேசப்பான்மையார் கடும்போர் புரிந்து, ஜர்மானியர் வசமிருந்து கொஞ்சம் கொஞ்சமாகப் பிரதேசங்களைக் கவர்ந்து கொண்டிருக்கின்றனர். கிழக்கரங்கத்தில் ஜர்மானியருக்குச் சற்று சவுகரியம் ஏற்பட்டதற்கு ருஷியாவில் உண்டான ராஜகீய மாறுபாடுதான் காரணம். ஏற்கனவே அங்கு, கட்சிப் பிரதிகட்சிகள் இருந்தனவென்றும், அதன் காரணமாகச் சக்கரவர்த்தியை ராஜ்யத்தை விட்டகற்றினரென்றும் முன்பொரு விசை கூறினோம். அப்பால் நேர்ந்த சில துர்த்தசைகள் காரணமாக, போர்வீரர்களில் சிலர் சீர்கேடடைந்தவர்களாக, எதிரியோடு போர்புரியாமல் பின்னடைந்து ஓடுவாராயினர். அப்படித் துரோகம் புரிந்தவர்களைக் கடுமையாகத் தண்டித்தும், சர்வாதிகாரத்தையும் ஸ்ரீமான் கரேன்ஸ்கி என்னும் தேசாபிமானியிடம் ஒப்புவித்தும், மேற்கூறிய துர்த்தசைகளை ஒருவாறு பரிஹரித்திருக்கின்றனராதலால், இனிப்போர்வீரர்கள் முன்போலப் பலங்கொண்டு, சத்துருவை எதிர்த்து, அவர்கள் புதிதாகக் கவர்ந்துகொண்ட பிரதேசங்களை மீண்டும் பெற்று, அவர்களை முறியடிக்கக்கூடுமென எதிர்பார்க்கிறோம்.

* * *

**...ளிக்கூடங் ...ல் இங்கி ...டிப்பு**

நமது நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களில் மாணாக்கர்களுக்குப் போதிக்கப்படும் எல்லா விஷயங்களையும் தேச பாஷைகளிலேயே போதிக்கப்படவேண்டுமென்று ஒரு சாராரும், இங்கிலீஷ் மூலமாகவே போதிக்கப்பட வேண்டுமென்று ... சாராரும் நெடுநாளாக வாதித்து ...ம் அறிவோம். தேசபாஷை மூல...களைச் சொல்வதனால், மாணாக்கர்கள் அவைகளை எளிதில் கிரகிக்கக்கூடுமென்பதே முதல் கட்சியாருடைய கொள்கை. நிற்க, கீழ்த்தரப் பள்ளிக்கூடங்களில் இங்கிலீஷ் போதிக்கப்படும் விதத்தைப்பற்றி ஆலோசனை செய்ய ஒரு கமிடி நாளது மாதம் 20-ம் தேதி ஸிம்லாவில் கூடும். பிள்ளைகள் எந்த வயதில் இங்கிலீஷ் கற்கிறார்கள், எந்த வயதில் அதைக் கற்பிக்கவேண்டும், அதைக் கற்பிப்பதன் மூலமாக பிள்ளைகளுக்கு எப்படிப்பட்ட சிரமம் உண்டாகிறது, அதனால் தேச பாஷைகளுக்கு எப்படிப்பட்ட மலினமேற்படுகிறது என்பனபோன்ற விஷயங்களை மேற்படி கமிடியார் ஆலோசித்து ஒருவித முடிவு செய்வார்கள். தேச பாஷைக்கு மலினம் வாராமலும், ராஜபாஷைக்குப் பிரத்யேகமான உயர்த்தியைக்கொடாமலும், கல்வி கற்பித்துவந்தால் போதுமானதாக விருக்குமென்பது நமது கொள்கை. என்றாலும், கற்ற கல்வியைக் கொண்டு ஜீவனோபாயம் செய்யவேண்டியவர்களுக்குத் தேசபாஷைகள் மூலமாகவே கல்வி கற்பிப்பதுதான் சிலாக்யம். அதனுடன் இங்கிலீஷ்பாஷையும் தெரிந்திருந்தால், பொன் மலர் நாற்றமுடைத்ததாம்.

* * *

**தமிழ் கல்விச் சங்கம்**

சாதாரண ஜனங்களுக்கு, எளிய நடையில் எழுதப்பட்ட புஸ்தகங்கள் மூலமாயும் பத்திரிகைகள் மூலமாயும், கல்வியைப் போதிக்கிறதற்காக இதுவரையில் நடந்த பிரயத்னங்கள் அவ்வளவாகப் பயனைக் கொடுக்கவில்லையென்று கருதிய சில ஸ்ரீமான்கள், மேற்கூறிய பெயருடன் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி யிருக்கின்றனர். தமிழ் அபிவிருத்தியிலும், தமிழரின் ஞானாபிவிருத்தியிலும் மிகுந்த சிரத்தையெடுத்துக்கொண்டு வரும் நமக்கு இப்படிப்பட்ட சங்கஸ்தாபனம் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. சென்ற பத்து வருஷங்களாக நமது "போதினி"யை ஆதரித்துவரும் அபிமானிகளுக்கு நமது சிரத்தை நன்கு தெரிந்திருக்கும்.

இச்சங்க நிர்வாகர்களுடைய நோக்கம் மேலானதேயாம். என்றாலும், செய்யவேண்டிய காரியம் இன்னது, பிரசுரிக்கவேண்டிய புஸ்தகங்கள் இன்ன மாதிரியானவை என்பனபோன்ற பல விஷயங்களை ஆராய்ச்சி



செய்து தீர்மானிக்க ஒரு மஹா நாடு முதலில் கூடவேண்டியது அவசியம். அதற்கு இப்போதுள்ள பத்ரிகாசிரியர்கள், ஏற்கனவே ஆங்காங்கு உழைக்கும் சங்கங்களின் நிர்வாககர்கள், பொதுவாக தமிழின் அபிவிருத்தியில் அபிலாஷை கொண்ட அனைவரும் அழைக்கப்படவேண்டும். நமது தமிழைத் தவிர மற்றைய தேச பாஷைகள் எல்லாம், வரவரத் தழைத்து வளருகின்றன. அவைகள் ஒவ்வொன்றுக்கும் மஹா நாடு ஏற்பட்டுள்ளது. கன்னடத்தில் எளிய நடையில் கதைப் புத்தகங்கள் எழுதியனுப்புவோர்க்கு ரூ. 500 முதல் 1000 வரை ஸன்மானம் செய்வதாக மைஸூர் யூனிவர்ஸிடியார் வெளியிட்டிருக்கின்றனர். தெலுங்கு விக்ஞானசந்திரிகையின் ஊக்கமும் நாமறிந்ததேயாம். வங்கீய ஸாஹித்ய பரிஷத் என்னும் வங்காளபாஷைச் சங்கத்தின் வேலைகள் வெகு ஆச்சரியத்தைத் தரத்தக்கன. மேற்கூறிய சங்கங்களின் நடைகளைப் பின்பற்றி, நமது தமிழ்ச் சங்கத்தாரும் ஜனோபகாரமான காரியங்களைச் செய்வாரென நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

* * *

**ஆகாய வழி**

இந்த ஐரோப்பிய யுத்தம் காரணமாக ஆகாய விமானங்களின் சங்கியையும் உபயோகமும் அதிகமானபடியால், யுத்தம் நின்ற பிறகும், அவ்விமானங்களை ஜனஸமூகத்துக்கு உதவியுள்ளனவாக்கலாமென்ற அபிப்பிராயம் முதிர்ந்து வருகிறது. இதற்கிணங்க, இங்கிலாந்தில் ஸ்ரீமான் மாண்டேகு அவர்கள் செய்த ஒரு உபன்யாசத்தில், ஆகாயமார்க்கமாக இந்தியாவுக்கு நான்கு நாளில் வரலாமென்று சொல்கின்றனர். அதில் ஒன்றரை நாளே விமானத்தில் இருக்கவேண்டிய காலம். பாக்கி, இடைவழியில் இராப்போதைக் கழிக்கவேண்டிய காலமாம். நமது புராதன தர்ம சாஸ்திரக்ஞர்கள் சமுத்திரத்தைத் தாண்டக்கூடாதென்று விதித்ததே நமது ஜனஸமூகம் முன்னடையாததற்குக் காரணம் என்று பலர் கூறுகின்றனர். ஸ்ரீமான் மாண்டேகு கூறுவதுபோ... இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் ஆகா...ர்க்கமாகப் போக்குவரவுச் சவுகரியம் ஏற்...ல் அப்போது நமது ஜனஸமூகம் முன...யுமா என்பது போகப் போகத்தான் தெரியவேண்டும். என்றாலும், கேவலம் ஐரோப்பியரோடு ஸஹவாஸம் செய்வதினால் மட்டும், ஜனஸமூகாபிவிருத்தி யுண்டாகுமென்பது ஒரு தலையாக நம்பக்கூடியதன்று.

* * *

**நமது சக்ரவர்த்தினியும், அவர் இந்திய வீரரின் குடும்பத்தினர்க்குக் காட்டும் அநுதாபக் கடிதமும்**

இவ்விஷயமாய் நமக்கு கவர்ன்மெண்டாரிடமிருந்து விசேஷ அறிக்கைப் பிரசுரம் ஒன்று சமீபத்தில் கிடைத்தது. அதன் விவரம் வருமாறு :—"இம்மஹா யுத்தத்தில் போர்முனையில் கொல்லப்பட்டோ, காயத்தினால் உயிர் துறந்தோ, நோயினால் மரணமடைந்தோபோயுள்ள இந்தியச் சேனையி... உத்தியோகஸ்தர்கள், இந்தியப்படைவீரர் ஆ..ய இவர்களின் சுற்றத்தார்க்குச் சக்கரவர்த்தி...ர் உருவப்படமொன்று அளிக்கப்படுமென்று ...சென்ற ஏப்ரல் மாதத்தில் லாகூரில், ஸ்திரீக... கூட்டத்தில் லேடி செம்ஸ்போர்ட் சொன்னார். அப்படியே, சக்கரவர்த்தினியின் உருவப்படத்தின் பிரதிகள் ஏராளமாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகள் கூடிய சீக்கிரம் விநியோகம் செய்யப்படும். போர் முனையில் தீரங்காட்டி உயிர் துறந்தவர்களின் குடும்பத்தார்க்கு சக்கரவர்த்தினியார் காட்டும் அனுதாபச் செய்தியானது அவரது கையாலேயே எழுதப்பட்டுள்ளது. நமது சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் இந்தியப் பிரஜைகளிடம் கொண்டுள்ள ...பிரியத்துக்கும் அபிமானத்துக்கும் அது மற்றோர் உதாரணமாகும். அவ்வுருவப்படத்தின் பிரதியொன்று நமக்குக் கிடைத்தது. சக்கரவர்த்தினியைப்போலவே ...ருவப்படம் வெகு அழகாய் அமைந்திருக்கிறது. அப்படம், யுத்தத்தில் உயிர் துறந்தவர்களின் குடும்பத்தார்க்கு இனாமாய் அனுப்பப்படும். இப்படத்துக்கு ஆப்டோன் பிளாக்கு இன்னும் தயாராகததால், அடுத்த சஞ்சிகையில் அச்சிட்டனுப்புவோம்.

---

**M. Ramaswami Ayyangar Esq, B.A.,L.T.,** *Inspector of Schools.*—Viveka Bodhini is a *very instructive monthly* dealing with Nature—Study, Hygiene, Education and other useful subjects *and will be useful to teachers in Elementary Schools.*

# ஹாஸ்யத் துணுக்குகள்

## WIT AND HUMOUR

சுக்குச்செட்டியான ஒரு மார்வாடி கிருபண சிரோமணி என்ற பேர் பெற்றிருந்தான். ஒரு நாள் அவனுடைய ஒரேமகன் பக்கிங்ஹாம் வாய்க்காலில் விழுந்து முழுகிப்போகும் தருணத்திலிருக்கையில், ஒரு கூலிக்காரன் கண்டு குதித்து, பையனைக் கரையேற்றினான். மற்றும் நாட்காலையில் மார்வாடி அந்தக் கூலிக்காரனைக் கண்டு, "நீதானே நேற்று என்னுடைய பையனை வாய்க்காலிலிருந்து கறையேற்றினாய்?"

ஏதாவது இனாம் கிடைக்குமென்று எண்ணிய கூலிக்காரன் "ஆமாம், நான்தான்" என்றான்.

"அப்படியானால் அந்தப் பையனுடைய குல்லாய் எங்கே?" என்று கேட்டான்.

கூலிக்காரன் மார்வாடியைப் பார்த்து "உனக்குக் கிருபண சிரோமணி என்ற பேர் பொருந்தும்" என்று சொல்லி விட்டுப் போனான்.

* * *

புதிதாகக் கட்டப்பட்ட சிறைச்சாலையைச் சுற்றிப் பார்த்து வந்த கலெக்டர், அதனுடைய அமைப்பைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். இரண்டொரு நாள் கழித்து, கலெக்டர் தமது சிறு பையனுடன் ரயிலுக்குப் போகும்போது அப்பையன் அங்கு ஒரு பெரிய கட்டிடம் தெரிவதைச் சுட்டிக்காட்டி "அப்பா, இது என்ன கட்டிடம்?" என்றான்.

"இதுதான் ஜெயில்" என்றார் கலெக்டர்..

"நீ போய் இருந்தாயே அந்த ஜெயிலா இது?" என்று பையன் கேட்டான். கலெக்டர் திடுக்கிட்டுப்போயினர்.

* * *

சேண்பகம்.—ஏண்டி! முத்தமிட்டுக்கொண்டால் ஒட்டுவாரொட்டி வியாதி வருகிறதாமே!

கோமளம்.—அது என்னவோ எனக்குத் தெரியாது. பணத்தினால்தான் அந்த வியாதி வருகிறதென்று என் அகத்துக்காரர் சொல்கிறார். ஆதலால்தான் அவர் என்னிடம் ஒரு போதும் பணம் கொடுப்பதில்லை.

* * *

குறிக்காரன்.—ஐயா! நீர் ஒரு வருஷத்தில் இறந்துவிடுவீர், கையில் உள்ள கோடு அப்படித்தான் இருக்கிறது.

குறிகேட்பவன். — நிஜமாகவா? அதற்கு ஏதாவது பரிகாரம் கிடையாது?

குறிக்காரன்.—அதற்குப் பரிகாரமே கிடையாது. இன்னொருதரம் வேண்டுமானாலும் சொல்கிறேன். நீர் ஒரு வருஷத்தில் இறந்துவிடுவீர். ஆனால் எந்த வருஷம் என்பது மட்டும் தெரியாது.

* * *

பிரபல வக்கீலான சரவணப் பிள்ளை, புதிதாக வக்கீலாக அமர்ந்த தமது மகனுக்குச் சில வியாஜ்யங்களின் கட்டுகளைக் கொடுத்து, பிரத்யேகமாகப் 'பிராக்டிஸ்' செய்யச்சொன்னார். சில நாள் கழித்ததும், சந்தோஷமுகத்துடன் மகன் உள்ளே நுழைந்து, பிதாவைப் பார்த்து "நா.ச.மூ.ல. சடையன் செட்டியார் கேசில் நீர் பன்னிரண்டு வருஷங்களாகப் பாடுபட்டீரே, ஞாபகம் இருக்கிறதா?" என்றான்.

"ஆமாம்; அதற்கென்ன?"

"நான் அந்தக் கேஸை ராஜி பண்ணிவிட்டேன்."

"ராஜி பண்ணிவிட்டாயா? அடே! முழு முட்டாள்! உனக்குச் சாசுவதமான வரும்படி வருவதற்கல்லவா அதை உன்னிடம் கொடுத்திருந்தேன்."

* * *

பாலவைத்தியன்.—"நீர் ஒரு போதும் நோயைத் தெரிந்துகொள்வதில் தவறிப்போனதில்லையா?"

பிரபல வைத்தியர்.—"ஒரே ஒருதரம் தவறிப்போயிருக்கிறேன். அழுக்கடைந்த வேஷ்டியை உடுத்துக்கொண்டு ஒருவன் வந்தான். அவனுடைய நோய் அஜீர்ணம் என்று சொல்லிப் போகச்சொன்னேன். பிற்பாடு, அவனுடைய வாஸ்தவமான அந்தஸ்து தெரியவந்ததும், அவனுக்கு மஹோதர வியாதி இருக்கிறதென்று சொல்லியிருக்க வேண்டும் என நினைத்தேன்.

---

**T. Y Sivakumara Sastri Esq, B. A., L. T, Vice Principal, Teachers' College, Saidapet**—"The articles are *very instructive and embrace a variety of useful topics*. You deserve to be specially complimented upon the articles on scientific subjects that you are making available to the general public.

4 - FEB 1913

Supplement to the "Viveka Bodhini"

["விவேக போதினி" அனுபந்தம்.]



அதிமேன்மைதங்கிய ஸ்ரீமான் மாண்டேகு
நமது இந்தியா மந்திரி



கனம் செம்ஸ்போர்ட் பிரபு
நமது ராஜப்பிரதிநிதி

# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி X. | பிங்களஹு ஆவணி-புரட்டாசி :: 1917-ஹு செப்டம்பர்-அக்டோபர்மீ | ப. 3-4

## கோயிற் கோபுரம்

### THE TEMPLE TOWER

படிப்படி யாயுயர்ந் தாய்ந்துணர்ந் தோங்கியிப்
பொடியுடை யிடம்விடுத் துடுபத முடியூர்ந்து,
அடங்கி அம்பரத் தாருயிர் பாய்தரத்
தொடங்கிப் பரத்துட் டோன்றி ஒன்றிடச்
சோதி முடியில் தூயொளி பராஅய்

ஏத இருள்பட் டிரிய, கெழீஇய
காதற் கடலலை மோதிச் சன்ம
ஊதற் சுழன்றயர்ந் தாருயிர்த் தோணி
சாதல் நோத லாதி ஓதலாக்
கேத முறுஅ போதப் பாய்விரீஇ

அனுபவக் காற்றலைசத் தானந் தமெனும்
மனவுயர் நாட்டு வந்த தடைந்து
நிலக்கரை காண்டிடக் கலங்கரை விளக்காய்
முளைத்தெழு முருவே! முதலவன் றனைக்காண்
உள்த்தெழு முத்தர்க் குள்வழிக் காட்டுந்

தெளிவரு நிலையே! தெய்விக மரும்பும்
பளிர் றுமாறே! பக்குவ வழியே
நிலைநிலை யுயர்ந்து நெட்டுயிர் தழைத்துத்
தலைக்கலை தாங்கொளிர் தற்பரப் படியே!
மாய உலகிடை மயங்கிக்கண் மூடியாம்

பேயா யிராது, பிறங்கிடம் பெயர்ந்துயர்ந்து,
உம்பர் ஊஉர்ந் துலைவில் ஞேய
அம்பர மளாஅய், ஐஅறும் ஆன்ம
பிம்ப மெங்கும் பேள துருது,
கல்லும் மரனும் புல்லும் பூடும்

எரும்பி எறும்பீ ருதியும் புள்ளரும்
குறும்பருங் குணத்தருங் குரையிற் றேவர்மற்
றெவரூஉம் ஒருயி ருருவே எனவாங்கு
நவையறு காட்சி நடுநிலை காண்டு
பிரம கபாலஞ் சிரமிடைப் பெறீஇ,

பரம ஞான நிலையுத் பவிக்கும்
உரந்தருங் குறியா உண்மைக் கொடியெழீஇ,

கொடுமையு மினிமையு மடிவுற் றபேதத்
தடநா தமூலாய்த் தருநாத் திகரூஉம்
திடவாத் திகராக் கிடுன்வா யிலின், நா

யொடுமோ னுமியான் நடமா டுநாள்,
மனமோ டியவா வினனுய்க் கண்கண்விண்
டனவாய் நினைவற் றழிவுற் றெதிர்வாய்ப்
பொருள்யா வுமிருந் துமிராப் புலன்வாய்ந்
தருள்வான் கனவுற் றறிவற் றவசத்
துருப்பின் னுருவா யுருதோன் றிடலாய்க்

கருத்துற் றனன்கற் பனைத் தன்றுசொல:—
திரிசூலம் படைக் கரனார், புரிசங்
கருநே மிபடைக் கரனார், கமலத்
தவிசார், உருவேற் பவனத் தவனார்,
அவதிக் கவையோ டடிபட் டியைவார்,

சிவல்போற் பறவை செவிசுற் றிடுவார்
பரங்காட் டிடுமெய் எரிபந் துடையார்
புரையில் இவர்போல் புனையா யிரனா
யிறுபோ லுருவார் உருவின் உருவாய்
ஒருதோற் றமதே மறுதோற் றமதாய்,

வருதோற் றமெலாம் ஒருதோற் றமதாய்,
நடமா டிடவே, நயனா னமிலா
தடியேன் மனம்விண் டிடமா லுறவே,
புரிவே தியனார் உருமா னிடமாய்
வருமோ ருருவார் கரங்கொண் டுதழீஇ,

"அறியாச் சிறுவா! உறுமா னிடமேத்
துறுமா தியெல்லாம் உணர் ஓர் நதியாம்;
துறைவா யிடந்தோய்ந் திடுமா றெனச்சின்,
முறைகாண் ஸமயத் துறுஞா னமதைக்
கருத்துற் றபேத அறிவின் அந்நதி

யுருமுற் றமுணர்ந் துறுவா யெனை நீ"
எனச்சொற் றிசையின் னிசைகன் னமுறீஇ
மனமற் றவசத் தனனு கியபோ
தெனைத்தட் டியெழுப் பியபோல் கண்பிசைந்
தறிவுற் றுலகின் திறம்பெற் றனனே!

விவேக போதினி

தொ.10] பிங்களஹு ஆடி, ஆவணிமீ [ப.3-4

# விவேகத்தூய்மை

## THE IDEAL LIFE

"சினமிறக்கக் கற்றாலும்,
சித்தியெல்லாம்பெற்றாலும்
மனமிறக்கங் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

என வாய்விட்டு அலறிய தாயுமானவர் மனமடக்கும் பெருமையையே எடுத்துரைத்தார். அருளிலார்க்கு அவ்வுலகமில்லை என்றார் வள்ளுவனாரும். ஆகவே நல்வழியில் நடக்க முயலும் ஆத்மாவுக்கும் அனுதாபமென்பதில்லாவிடில் அதன் எழுச்சி யின்றாய் விடும். ஆயினும் லோக வியவஹாரங்களிடையிலிருந்தே தன்னிலையைத் தான் உணர உழைக்குஞ் சீவனுக்குப் பல தர்மஸங்கடங்களிலும், பிறர்க்குத் துன்பமூட்டாது, தன்வழியுங்கெடாது, நிலையுங் கோணாது நடப்பது இன்றியமையாததாகும். விதுரரும் தம் வாழ்க்கை முதற்பாகமாகிய பிரயத்தனகாலத்தில் லோக வியவஹாரங்களுக்குக் கட்டுப்பட்டுக் கீழ்மை மேன்மை என்னும் இரண்டு குணங்களின் ரூபங்கள்போலத் தோன்றிய கௌரவ பாண்டவரிடத்து, ஒரே தன்மையுடைய அன்பைக் காட்டிவரினும், மனமிறக்கமென்னும் அருளின் பிரபாவத்தை வளர்த்து, மனத்தைத் திடமாக்கிக்கொண்டதால் கௌரவரை வெறுக்காதும், பாண்டவரிடம் அன்பு வீணே அதிகரிக்காமலும் நடந்து வந்தனர். இவ்வாறு அவர் தர்மகர்மத்திலிருந்து ஸன்யாஸ வழியில் செல்லவேண்டிய குணங்கள் ஏற்பட்டதும் அதை அநுபவத்திற்குக் கொண்டுவர முயற்சித்ததே அவர் ஜீவியத்தின் இரண்டாம் நிலை என்று வரையறுக்கலாம்.

இந்த இரண்டாவது நிலையில், ஸந்யாஸ வழிக்குத் தன்னை உட்படுத்திக்கொள்ளவேண்டிய குணங்களையெல்லாம் அவர் மனமுணர்ந்து பயிற்சிசெய்தது நன்கு புலப்படும். இக்காலத்தில் அவரிடம் மனோதைர்யம், பக்தி, அமைதி முதலிய குணங்களே முன்னிலையில் ததும்பி விளங்கின. உலகப்பற்றிடைப்படாது, தாமரையிலை நீர்போலத் தத்தளித்து, தன் பரமாத்ம நீரில் கலந்து உருவற்று விளங்கவே ஆவல்கொண்டு துடித்தனர். பீஷ்மர், துரோணர் இவர்களைக் காட்டிலும் இந்நிலையில் இவர் சிறந்து விளங்கினவர் என்றால் இழுக்காகாது. அவர் அரசனது கொடுமையைக் கண்ணுறக் கண்டும் சோற்றுக்காக மனத்தை விற்று மயங்கிக் கிடந்தனர். விதுரர் அவ்வாறில்லாது, சூதாடிய கௌரவர், தருமர் முதலியவரை ஏளனஞ் செய்து, திரௌபதியைச் சபை நடு இழுத்து வந்ததும், அந்த ராஜஸபையை நோக்கி அவள்,

"மன்தோற் றனன்வெம் சூதாகில் வழக்கால்
கொண்மின்; மன்னவையின்
முன்தோற் றனனோ? என்னையுந்தான் முன்னே
இசைந்து தனைத்தோற்ற
பின்தோற் றனனோ? கரியாகப் பெரியோ
ருண்மை பேசுகென"க்

கதறியபோது பீஷ்மரும் துரோணரும் உண்மை தெரியாமலா சும்மா இருந்தனர்? ஒரு வேளை பீஷ்மருக்குத் தரும நுட்பத்தின் திறந்தெரிய மயக்கமானால், துரோணர் ஏன் சும்மா இருக்கவேண்டும்? அது மயக்கமோ பயமோ? எதுவானாலும், உண்மைக் கொடியைப் பரப்பி, உலகெங்கும் தருமத்தையே, நயபயங்களுக் குட்படாது, தாக்ஷிண்யமில்லாமற் சொல்லவேண்டிய பிரம்ம குலத்துதித்தவர், அவ்வாறொழுகாதது அவர் குணத்துக்கோர் களங்கமேயாகும். அவ்வாறில்லாமல் சங்கரகுல மணியாகிய விதுரர், தருமத்தை எடுத்துரைத்துக் கௌரவாதியர்களையும் அவர் தந்தை முதலியோரையும் கண்டித்துக் கூறியது தெய்விக குணமல்லவா? அது அவரது ஞான உயர்வையும், நியாய உண்மையையும், மனோ தைர்யத்தையும், அடங்கா வன்மையையும் எடுத்துக் காட்டும். இவ்வாறெல்லாம் எடுத்துக் காட்டியிருந்தும், திரௌபதியின் மானத்தைக் கெடுக்க துச்சாதனன் முயற்சித்தபோது விளைந்த விபரீதத்தைக் கண்ணில்லாக் கபோதி யரசன் திருதராஷ்டிரன்,

" யாமென்றும் அவனென்று மிரண்டில்லை
விளையாட்டென் றிருந்தேம், இவ்வா
றாமென்ப தெனக்கொருவ ருரைத்திலரால்
யாமுமுதல் அறிந்தி லேமே"

எனப் பொய்யழுகை அழுததையும் இங்கு கவனித்தல் வீணாகாது. அதப்புக் கறிவேதென்பதற்கு அவனே சாக்ஷி. ஆனால் பின் பாண்டவரையும் திரௌபதியையும் காட்டிற்குப் போகும்படி அவன் மகன் சொன்னபோது, விதுரர் முதலானோர்,

"மன்முறை தவறின் இன்மீற வசையும் வந்தி
சையும்"

என்றாரே அப்போது ஏன் ஸரியாக நடக்கக் கூடாது? ஊருக்கு மாரடிப்பதால் என்னப்பிரயோஜனம், உள்ளன்பில்லாதபோது? ஆனால் இவ்வியவஹாரங்களிலும் விதுரர் தாமாகவே தலை நுழைத்துக்கொள்ளவில்லை. தாமரையிலையில் அசைவினால் நீர் அலைவதுபோலத் திரௌபதியும் திருதராஷ்டிரனும் கேட்டபோதுதான் பதில் கூறினர். உண்மையான அபிப்பிராயங்களைக் கேட்கும்போது விவேகிகள் மௌனமாக இருத்தல் பெருந்தவறன்றோ? இதுவே அவரது அமைதி வழியை எடுத்துக்காட்டும்.

நிற்க, தமது ஒழுக்கத்தாலும் விழுப்பத்தாலும் விதுரரிடம் யாவருக்கும் பிரேமை அதிகரித்தது. குருட்டரசனும் அவரிடம் ஆசையுடன் விளங்கினான். ஞானபண்டிதராகிய விதுரர் பல ஆத்மபோதகர்களுடைய ஆசங்கையைத் தீர்க்க அருமருந்தாயிருந்தனர். இந்நிலையில் விதுரர்க்கு ராஜ்யத்தின் மந்திரியாக இருப்பது பெரும் பந்தமாகவே இருந்தது. அது அவர் ஸந்யாஸ தர்மத்தை ஆளப் பெருந்தடையாக வெளிப்பட்டதனால், அதனிலிருந்து விடுபடுங் காலத்திற்காகக் காத்திருந்தனர். தமது தந்தைக்குச் சமானமான பீஷ்மர், தம்மை அப்பதவியில் வைத்ததால் லோக தர்மத்தை அவலம்பித்து அப்பதவியிலே இருந்தனர். இல்லாவிடில் தன் வழிநாடத் தனிவழி பார்த்திருப்பார். அது ஸந்யாஸ மார்க்கத்தின் பூர்ணாபிப்பிராயம் போலும். ஸந்யாஸநிலை முதிரும் வரையும் கர்மத்தை விடுவது தகாதென்பதை யுட்கொண்டே அவர் நடந்திருக்கக்கூடுமென நாம் சொல்வது பிசகாகாது. இந்நிலையில் அவர் ஜனக மஹாராஜனைப் போல் கண்திறந்து கண்மூடியாய்த் தூங்காமற் றூங்கிச் சுகம் பெற்றாரென்றே அறிய வேண்டும். எவ்விடத்தும் எக்காலத்தும் எத்தொழிலிலும், தன் செயல் முற்றும் தனதாக்காமல் நிஷ்காம நிலையில் பதிந்து, முத்திசோபான மூர்த்தமாகவே விளங்கினர். ஆயினும் ஸந்யாஸநிலை முற்றும் கைகூடுந் தறுவாயில் வராமையால்தான் தன் தருமகருமத்தைக் கையாண்டே வந்தனர். வனவாஸமும் அஞ்ஞாத வாஸமும் கடந்ததும், தருமர் உலூகனைத் தூதனுப்பியபோது திருதராஷ்ரனை நோக்கி முதன் முதன் விதுரரே அல்லவா துரியோதனன் மறுமொழியைக் கண்டித்து,

"இவ்வேதியன் மொழிப்படி மேதினி வழங்காமல்
புல்விதுரடகரினும் உணர் விலாதவர் புகலும்
வாசகங்கேட்கில்
செல்வி தூரிய ளாய்விடுஞ் சுற்றமும் சேனையும்
கெடும்"

என்றார்? ஆனால் குருடனுக்கோ கண்ணில்லை. அவன் மகனுக்குப் பார்வை தோஷம். எப்படி இம்மொழிகள் ஏறும்? இதுகிடக்க, மற்றுக் கண்ணனைத் தூதாகத் தருமர் அனுப்பியபோது திருதராஷ்டிரனுடைய பரிவாரம் கண்ணனை எதிர் கொண்டபோதிலும் ஸத்தியத்தில் நிலையாத 'அரசனில் புகாமல், புந்திகூர் அருள் விதுரன் வாழ்வள மனையைப் புகுந்த' தேதனால்? இதற்குக் கடவுள் காட்சிதரும் மாட்சியே சாட்சியாகும். அன்பில்லானிட்ட உணவு புன் வேம்பெனக்கொண்ட எண்ணத்தாலன்று அது. அவ்வாறு செய்வது தெய்விகத் தன்மையன்றே! உள்ளன்பூடு உழைக்கும் உத்தம ஞானிய ருள்ளத்தே நடிக்குந் தன்மை வாய்ந்தவரானபடியால்தான், முத்திநிலை கைகூடச் சமயம் பார்த்திருந்த விதுரரிடம் சென்று, பரம பக்த சிகாமணியாகிய அவரது உணவை உட்கொண்டு, அவரது செயல் முற்றையுந் தானே பெற்று, ஸன்யாஸமார்க்கத்திற்கு ஹேதுவாகிய ஸத்ஸங்கமும் கருணை கடாட்சமும் தரவே சென்றதாகும். இதை முற்று முணர்ந்தே உவகை மிகுதியால் விதுரன்,

உள்ளி ஞானுணர்ந் துள்ளமு முருகிநொ னெழுந்து
துள்ளி ஞன், விழுந் திணையடி சூடினன்;
 துயரைத்
தள்ளி ஞன்மலர்த் தடக்கையால் தத்துவ
 அமுதை
அள்ளி ஞனெனக் கண்கலால் அருந்தினன்
 அளியோன்.

இவ்வாறு ஆனந்தபரவசனாய்த் தன்வீட்டில் தன் நாதன் வரப்பெற்றது, இனித் தான் வீட்டைப்பெறும் பேறுக் குருவகமாகவே சித்தாந்தங்கொண்டு மனஞ் செழித்து அன்பு அரும்பி ஸங்யாஸமார்க்கத்திற் செல்லச் சமயங்கிட்டாதலையும் தனது சிறுமையையும், கண்ணபிரானது பெருந்தெய்விகப் பிரபாவத்தையும் மனம் வாங்கி,

"முன்ன மேதுயின் றருளிய முதுபயோ
 ததியோ?
பன்ன காதிபப் பாயலோ? பச்சையா லிலையோ?
சொன்ன நால்வகைச் சுருதியோ? கருதிநீ
 யெய்தற்
கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடி!" என்றான்.

தானுண்டு உலகை உண்பிக்கும் உத்தமராகிய பகவான்ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா, ஆத்ம ஸந்துஷ்டிக்காகவே அங்குண்டார். அக்காலத்து ஆத்மலட்சணத்தை யுணர்ந்த யாவரும் ஆனந்தமடைந்தனர்.

இதனால் விதுரர்க்குத் தமக்கு ஸங்யாஸ மார்க்க மேற்படக் காலம் கிட்டிவிட்ட தென்னுஞ் ஸூசனை தானாகவே உதித்துவிட்டது. தெய்விகம் வரும்போது ஜாதிபேத மேற்படாதென்பது திண்ணம். நந்தனை ஏளனஞ் செய்த நான்மறை வேதியன், அவனுடைய பெருமையையும் ஆத்ம லக்ஷணத்தையுமுணர்ந்ததும் அவனையே தனக்குக் குருவாக இருந்து உபதேசஞ் செய்யுமாறு வேண்டவில்லையா? வருண தருமமெல்லாம் உலகப் பற்றுள்ள அளவே ஆகும். "அற்றது பற்றெனில் உற்றது வீடு." அத்துறவு மார்க்கத்திற்குத் தனக்குப் பக்குவ காலம் வந்ததால் தான், பூதங்கள் தோறும் தோன்றும் புனிதமா மூர்த்தியான ஆதிநாயகன்தான் சிறிதும் வெறுப்பென்பதில்லாமல், சங்கர வருணத்துள் வந்தவனாயிருந்த தன் கை அன்னத்தையுண்டா னென்பதே விதுரரது எண்ணமாயிருக்கலாம் அன்றோ? அவ்வாறு தமக்கு ஸன்யாஸ மார்க்கம் கிட்டிவிட்டதென்ற நம்பிக்கை வந்தும் அவர் தமது தர்மகர்ம நிலையை ஏன் விடவில்லை? கைகூடிய பிறகன்றோ விடவேண்டும்?

அதனால் தாமும் கண்ணனுடனேயே திருதராஷ்டிரன் சபைக்குப் போனார். ஆனால் கண்ணபிரான் வந்து கேட்ட விஷயத்திற்கு

'மயிர்முனைக்கும் 'மண்கொடேன்'-என்றான்**
செயிர்நிலைக்க நின்றான் செறுத்து.

இவ்வாறு துரியோதனன் கூறிய மொழிகள் விதுரர்க்குத் தவறாகப்பட்டன. ஆயினும், தமது அமைதியைக் காப்பாற்றியே வந்தனர். தான் வந்த காரியம் பலியாததனால் கண்ணபிரான் விதுரர் வீட்டிற் கேகினார். இதைக் கண்டதும் துரியோதனன் ராஜஸபையில் விதுரரை வாயில் வந்த வண்ணம் கண்ணனுக்கு அமுதிட்டதற்காக வைது, மேலும்

'வன்பினா லவனி வெளவவென்று கொல் என்
 மனையில் உண்டியை மறுத்தவன்
தன்பதாகினி யொடினி தருந்தும் வகை தன்னில்
 இன்னமு தியற்றினன்
என் பிதாவொடு பிறந்து மின்றிளவு மென்கை
 யோர்தன மருந்தியும்
அன்புதானுடைய னல்லன் என்பகை தனக்கு
 முற்ற பகையல்லவோ?

இவைபோன்ற பலவசை மொழிகள் கூறினான். இச்சமயம் விதுரர் எப்படி நடந்துகொண்டாரென்பது யாவரும் கவனிக்கவேண்டிய விஷயம். அவர் பீஷ்மர் துரோணர் போலச் செஞ்சோற்றுக் கடன் கழிப்பதுதான் தமது கடமை என்று எண்ணாமை வியக்கத் தக்கதல்லவா?

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்
'செய்ந்நன்றி கொன்ற மகற்கு" [வில்லை.

என்ற வேதவாக்கையும் தவிர்க்க மனங்கொள்ளவில்லை. துரியோதனனிடம் க்ஷாத்ரங்கொண்டு அவனை அவன் குலத்தோடு வேர் அறுக்கவேண்டும் என்னும் பொதுஜன அபிப்பிராயத்தையும் கைப்பற்றவில்லை. பீஷ்மர் துரோணர் இவர்களைக் காட்டிலுஞ் சிறந்த ஞானமுடையவரானபடியால் பகை நட்பு இரண்டையும் பாராட்டாத வழியையே அவர் நாடினார். அது அவர் மனநிலையின் நடுநிலையையும் வன்மையையுமே குன்றின்மேலிட்ட விளக்கெனக் குறிப்பிக்கும். மனத்துணிவுடன் அவர்,

"சொல்லிரண்டு புகலேனினிச் சமரின் நின்று
 வெங்கணை தொடேன் என
வில்லிரண்டினு முயர்ந்த வில்லதனை வேறிரண்டு
 பட வெட்டினார்,"

அச்சபையில் விஷ்ணுதனுஸ் சிவதனுஸ் என்னுமிரண்டு வில்லினுமுயர்ந்த தமது வில்லை முறித்தபோது உண்டாகிய சப்தம், சபையிலிருந்தோர் யாரும் திடுக்கிடும்படி யிருந்தது. ஆயினும், அவருக்கு மூலாதாரப் ப்ரணவாதாரமான நாதமாகவே காதிற்பட்டது. ஸங்யாஸ மார்க்கத்தில் ஏறுவதற்கு அது முதற்படியாக அவர்க்குத் தோன்றியது. அது ஸத்யம். பாண்டவரிடத்தன்பினால் அவர்பக்கமும் சேரவில்லை; கௌரவரிடத்து வெறுப்பினால் அவரோடு பகைக்கவுமில்லை — ஆக இருவருக்கும் கெடுதிசெய்ய முயலவில்லை. இவர்க்கிணையாக நடப்பது அரிதன்றோ? மனநிலையினுயர்ந்த விபீஷணர், பீஷ்மர் முதலியோரால் இவ்வாறு நடந்துகொள்ள முடியாமற்போனது இங்கு கவனித்தல் தகும். வெறுப்பும் விருப்பும் அற்று எவர்க்கும் துன்பஞ்செய்யாதிருத்தலே மோட்சமார்க்கத்தின் முதல்வழி. இதனையே தெய்வத் திருக்குறளிலும் வெளியிட்டனர்:

அந்தண ரென்போ ரறவோர்—மற் றெவ்வுயிர்க்
செந்தண்மை பூண்டொழுக லான். [குஞ்

---

# ஐரோப்பிய மஹா யுத்தம்

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)

சென்ற சில வருஷங்களாகக் கோரமாய் நடைபெற்றுவரும் ஐரோப்பிய மஹா யுத்தத்திற்கு ஏற்பட்ட காரணங்கள், ஐரோப்பிய தேச சரித்திர ஸம்பந்தமான பல விஷயங்கள். இந்த யுத்தத்தில் ஸம்பந்தப்பட்ட மன்னர்கள், ஸேனாதிபதிகள், பயங்கரமான யுத்தாயுதங்கள் முதலியவைகளின் விவரங்கள், சித்திரப்படங்களுடன் தெளிவாயும் கதைப்போக்காயும் ஸாமான்ய ஜனங்களும் எளிதில் படித்தறிந்துகொள்ளும்படி எழுதப்பெற்றிருக்கிறது.

256-பக்கங்கள் : : 58 ஆப்டோன் படங்கள்
கண்ணைக் கவரும்விதம் அச்சிடப்பெற்றது.

மிகவும் சிறந்த பதிப்பு. விலை ரூ. 1—4
போதினிச் சந்தாதார்க்கு ,, ,, 0-15

மானேஜர், விவேக போதினி,
மயிலாப்பூர், சென்னை.

---



# சேரமான் பெருமாள்

## திருமூலத் திருநாள்

## THE SRIMULAM DAY

(By a Travancorean)



சேரநாடாகிய மலைநாட்டில் வஸிக்கும் மஹாஜனங்களுக்குப் பிரஜைகளிடம் பக்ஷத்துடன் செங்கோல் செலுத்திவரும் மன்னரின் பிறந்த நாளை விசேஷத் திருநாளாகக் கொண்டாடுவது தொன்றுதொட்டு வழங்கி வரும் ஓர் அனுஷ்டானமாயுள்ளது. ஆண்டு தோறும் அரசர்களின் பிறந்த நாளையும் ஓர் புண்ணிய தினமாகக் கருதி நகரத்தாரெல்லோரும் அன்று மிகுந்த உத்ஸாகத்துடன் மகிழ்ந்து விளையாடிக் காலங்கழிப்பதென்பது பண்டைத் தமிழ் நூல்களில் வெளிப்படையான விஷயம். இந்நாளைப் பெருநாளென்றும் பெருமங்கலமென்றும் அழைப்பார்கள். பண்டிகைநாள் அல்லது உத்ஸவநாள் என்பது இதன் பொருள். மணிமேகலை வஞ்சி நகரத்திற்குள் புகுந்தபொழுது சேரராஜனான செங்குட்டுவனின் பிறந்தநாள் வெகு விமரிசையுடன் உத்ஸவ நாளாகக் கொண்டாடப்பட்டதென்று மணிமேகலையில் கூறியுள்ளது. இவ்வரசன் கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகளுக்குள் ஜீவித்திருந்தவன். அக்காலங்களி

லேயே இவ்வழக்கம் நடப்பிலிருந்ததென்று முன் கூறியதிலிருந்து வெளியாகிறது. தவிரவும், தேவாலயங்களில் ஏழுநாளல்லது பத்துநாள் நீடிக்கும் திருவிழாக்களை ராஜாக்களின் பிறந்த நாளன்று ஆறாட்டு நேரும்படி நடத்துவதும் ஓர் பழைய ஸம்பிரதாயம். இம்மாதிரியாக ராஜராஜனென்னும் சோழ சக்ரவர்த்தி, தென் திருவிதாங்கூரில் திருநந்திக்கரையிலுள்ள தெய்வத்திற்குத் தன் பிறந்தநாளன்று ஆறாட்டு வரும்படியாக ஏழு நாள் உத்ஸவத்தை ஏற்படுத்தியிருந்தார். முடிமன்னரின் ஜன்ம நக்ஷத்திரத்தை இவ்விதம் பலவாறாகக் கொண்டாடுவது நமது பூர்வீக வழக்கம். ஜனஸமுதாயத்தில் ராகத்வேஷாதிகள் மிகுந்து 'பலவான் கார்யம் ஜயம்' என்று அநீதியாய் மாத்ஸ்யநியாயம் பரவாமல் தடுப்பதற்காக, அஷ்டதிக்பாலர்களின் அம்சங்களால் ஸர்வேசுவரன் அரசனைச் சிருஷ்டித்திருப்பதாக நமது சாஸ்திரங்களின் கொள்கை. அரசன் இந்திரனைப் போல் தனது பாகத்தைப் பெற்றுச் சரிவரப் பரிபாலனம் நடத்தி வருவதாலும், காற்றானது மணத்தைப் பிரேரிப்பதுபோல், அரசனும் நற்செயல் தீச்செயல்களை நடப்பிப்பதாலும், சூரியன் ஒளியைப் பரப்பி இருளைப் போக்குவதுபோல் தர்மத்தைத் தழைப்பித்து அதர்மத்தை அழிப்பதாலும், யமனைப்போல் கொடியவரைச் சிட்சிப்பதாலும், அக்கினியைப்போல் பரிசுத்தமாயிருந்து ரட்சார்த்தமாகப் பாகத்தைப் பெறுவதாலும், வருணன் நீரால் எல்லாவற்றையும் போஷிப்பதுபோல் பணத்தால் எல்லோரையும் காப்பாற்றுவதாலும், சந்திரன் கிரணங்களால் ஜனங்கட்கு மகிழ்ச்சியை விளைவிப்பதுபோல் அரசனும் தனது நற்குணம் நன்னடையிவற்றால் எல்லோரையும் ஆநந்தப்படுத்துவதாலும், அரசியல் செலுத்தும் வேந்தரிடம் அஷ்டதிக் பாலர்களின் அம்சங்களும் பொருத்தமாயுள்ளனவென்று நம் பழைய நூல்கள் கூறுகின்றன. இக்கொள்கையைப் பின்பற்றியேதான் ஸ்மிருதிகர்த்தாவான மனுவும்:—

"बालोऽपि नावमन्तव्यो मनुष्य इति भूमिपः ।
महती देवता ह्येषा नररूपेण तिष्ठति ॥"

என்றெழுதியிருக்கிறார். பண்டைக் காலங்களில் ஹிந்துராஜர்க்கள் பிரஜா யோகக்ஷேமங்களிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து செங்கோலை நீதியாய் நடத்தி,

"स्वभागभृत्या दासत्वे प्रजानां च नृपः कृतः ।
ब्रह्मणा स्वामिरूपस्तु पालनार्थं हि सर्वदा ॥"

என்றபடி தமது உத்தியோகத்திற்குச் சம்பளமாகக் கப்பத்தைப் பெற்றுப் பிரஜைகளின் தாஸர்களாய் அரசாட்சி நடத்திவந்ததுடன், அரசியலைச் சுதந்திரமாய்ச் செலுத்த அதிகாரம் தமக்கிருந்தாலுங்கூட, ஆலோசனை ஸபையில் மற்றவரின் கொள்கையோடு தனது நோக்கத்தையும் ஆராய்ந்து பஹுஜன ஸம்மதமான விஷயங்களையே நடத்திவந்ததால் பிரஜைகளின் க்ஷேமத்தில் எவ்விதக் குறைவும் உண்டாகவில்லை. ஆதலின் அக்காலங்களில் ஜனங்கள் சற்றும் ராஜபக்தி குறையாமல் மன்னர்களிடம் தெய்வ விச்வாஸத்தை வஹித்து வந்திருப்பது முற்றிலும் ஸம்பாவிதம். ஆனதுபற்றியேதான் ஹிந்து மன்னர்கள் அரசாண்டுவந்த நாட்களில் ஜனங்களுக்குப் பொதுவாய்ச் சுவாதந்தர்யத்தில் விருப்பமோ ராஜாக்களிடம் பக்திக்குறைவோ ஜனித்ததாகச் சரித்திரங்கள் வாயிலாகத் தெரியவரவில்லை. நம்மையரசாளும் அரசர்களிடம் தெய்வ விசுவாஸத்துடன் அன்னாரின் திருநாளை ஒரு பெருநாளாகக் கொண்டாடும் ஹிந்துக்களான நாம் இம்மாதிரி வெகுகாலத்திற் கிடையில் நேரும் மஹாராஜாவின் ஷஷ்டியப்தபூர்த்தி தினத்தை மிகக் சிறப்பான மஹோத்ஸவமாகக் கருதி ஆனந்தப்படுவதில் யாது தடை? நம் மன்னர்பிரானுக்கு ஹிந்து மதத்திலுள்ள பூர்ணவிசுவாஸமும், ஸர்வேச்வரனான பத்மநாபரிடமுள்ள விசேஷபக்தியும், ஜனோபகார சிந்தையும், ஆடம்பரமில்லாமல் அமைதியாயிருக்கும் ஸ்வபாவமும், ஆழ்ந்த யோசனையுடன் ராஜ்யதந்திரங்களை வெகு புத்திசாலித்தனமாயும் அழகாயும் நடத்துவதற்குத் தக்க ஸாமர்த்தியமும் நம் ஒவ்வொருவரின் மனதையுங் கவருமென்பதில் சந்தேகமில்லை. பொது ஜனங்களின் பாஷையையே பாஷையாகவும், பொதுஜனங்களின் மதத்தையே மதமாகவுங் கொண்ட நம் மஹாராஜாவும் அவ்வம்சத்தினரும் பிரஜைகளுடன் ஒன்றுபட்டு அவர்களின் யோக



க்ஷேமங்களை நெருங்கின பழக்கத்துடன் நடத்தி வருவதைச் சொல்லவும் வேண்டுமோ? நம் மஹாராஜாவின் அரசாட்சியில் ஜனங்களுக்கு நேர்ந்த குணங்களில் சிலவற்றைச் சுருக்கமாய் நான் இவ்விடத்தில் எடுத்துக் கூறுகிறேன். நாட்டில் விவஸாயம், வியாபாரம், கோரக்ஷை இம்மூன்றும் செழித்து வளராதவரை, பணம் பெருகி ஜனங்கள் சுகமாய் வாழவும், ஸர்க்காருக்குத் தீர்வையாகப் பணம் வந்து குவியவும் நியாயமிராது. விவஸாய விஷயத்தில் ஜனங்களுக்கு மஹாராஜா செய்திருக்கும் பேருதவிக்குச் சில நிதர்சனங்களைப் பார்க்கலாம். மஹாராஜாவின் அரசாட்சிக்காலத்தில் புதிதாய் வெட்டப்பட்ட கோதையாற்றுக் கால்வாயானது விவசாயத்திற்கு மிகுந்த விருத்தியைச் செய்திருக்கிறது. இச்சாசுவதமான தர்மத்தால் முன்பு நானூறு ஐந்நூறு ரூபாய்கூட விலைபெறாத நிலங்களெல்லாம் நாற்பதினாயிரம் ஐம்பதினாயிரம் என்று மதிக்கப்படுகின்றன. இவ்விதமாயின், கால்வாய் வெட்டப்படுவதற்குமுன் ஸ்வல்ப விலைக்கு நிலங்கள் வாங்கியிருக்கும் எவ்வளவு குடும்பங்கள் இப்பொழுது பெரிய தனிகர்களாயிருக்கவேண்டும்? பண்டைக்காலத்து ராஜாக்களைப்போல் வீடு, நிலம் முதலியவை கொடுத்து வெகு குடும்பங்களைப் பிரதிஷ்டிப்பது இந்நாள் அரசாட்சி முறையை அனுசரித்துச் சாத்தியமில்லையாயினும், நம் மஹாராஜா வெகு குடும்பங்களை நிலைநிறுத்தியதற்குத் துல்யமான புண்ணியத்தைப் பெற்றிருக்கிறார். கோதையாற்றுக் கால்வாயும் மஹாராஜாவின் பெயரும் கூடவே நீடூழிகாலம் விளங்குமென்பதில் சந்தேகமில்லை. புதிதாய்க் கண்டுபிடிக்கப்படும் விவஸாயத்தின் நவீநமுறைகளை ஜனங்களுக்குப் போதிப்பிக்க விவஸாய டிபார்ட்மெண்டையேற்படுத்தியிருப்பதும், நெல்லாகக் கொடுத்துவந்த கரத்தைப் பணமாக மாற்றியதும் விவசாயிகளுக்குச் செய்திருக்கும் மஹோபகாரங்களாகின்றன. இன்னும் கொஞ்சநாளில் திறக்கப்படும், கொல்லம்-திருவனந்தபுரம் ரயில்வண்டிப் பாதையானது ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு மிகுந்த ஸௌகரியமானதால் இது வியாபாரிகளுக்கு மஹாராஜா செய்திருக்கும் ஒரு பெரிய ஸகாயம். மஹாராஜாவின் பூர்வ புருஷர்களில் ஒருவர் போர்த்துகேசிய வியாபாரிகள், முதன்முதல் மலையாளத்தில் வந்து தங்குவதற்குச் சுமார் 675 வருஷங்கட்கு முன்னமேயே "ஸபீரோ" முதலிய கிருஸ்தவ வியாபாரிகளுக்குக் கொல்லமென்னு மூரை இனாமளித்து மற்றுமுள்ள ஸௌகரியங்களையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தார். கொல்ல மாண்டென்று வழங்கிவரும் வருஷமானது இந்நிகழ்ச்சியை ஞாபகப்படுத்தவே வந்திருக்கவேண்டுமென்று சரித்திரவாராய்ச்சியில் கியாதிபெற்ற ம-ா-ா-ஸ்ரீ கோபிநாதராவ் அவர்கள் தகுந்த நியாயங்களுடன் தீர்மானித்திருக்கிறார்.

கீழ்நாட்டு வழக்கங்களிற் சில மேல்நாட்டு நாகரீகத்தின் நிர்ப்பந்தத்திற்கு முடிவணங்கி விலகியிருக்க வேண்டும் இந்நாளில், மஹாராஜா தமது ராஜதானியில் தொன்றுதொட்டு நடந்துவரும் அன்னதானத்தை நடத்திவருவது பெரிதும் புகழவேண்டியதோர் தர்ம சிரத்தையைக் காண்பிக்கிறது. இம்மாதிரி தர்மத்தை இந்தியாவின் எப்பாகத்திலும் காணமுடியாது. சேரநாட்டரசர்கள் மட்டுமே அன்னதானத்தில் பெயர் பெற்றிருப்பவர்கள். இவர்கள் செய்யும் அன்னதானத்தின் மஹிமையைத் தமிழ்நூல்கள் பலவாறாகப் புகழ்கின்றன. பாரத யுத்ததில்கூட பாண்டவ ஸைன்னியங்களுக்கு அன்னங்கொடுக்கும் பொறுப்பைப் "பெருஞ் சோற்றுதியன் சேரலாதன்" என்னும் சேரராஜனே ஏற்றுக்கொண்டதாகக் கூறியிருக்கிறது.

அன்னதானத்தால் சேரநாட்டரசர்களுக்கு வளர்ந்துவரும் கீர்த்தியைச் சகியாமல் சோழ சக்கரவர்த்தியான ராஜராஜனானவன் தென்குமரியிலிருந்த ஸ்ரீ வல்லபப் பெருஞ்சாலை யென்னும் உணவளிக்கும் சாலையின் பழைய பெயரைமாற்றித் தன்பெயரால் ராஜராஜப் பெருஞ்சாலையென்று விவஹரிக்கும்படி செய்தான். அத்துடன் நிற்காமல், பண்டைக் காலத்தில் காந்தளூரென்று விவஹரிக்கப்பட்டுவந்த திருவனந்தபுரம் சாலைத்தெரு உள்ளிட்ட வட்டாரத்தில், முன்னாளில் தென்னிந்தியா முழுவதும் பெயர் பெற்றிருந்த காந்தளூர்ச்சாலையை நடைபெறாமல் நிறுத்தவோ அல்லது தன் பெயரால் நடத்தவோ

செய்திருந்தான். இச்சாலைகளெல்லாம் இந்நாள் 'போர்டிங்ஹௌஸ்' களின் நிலைமையில், கல்விகற்கும் சட்டர்களுக்கு உணவு முதலியன அளித்து மற்றும் உதவிபுரிந்துவந்தனவென்று தெரிகிறது. ஏனெனில், நம் மன்னனின் மூதாதைகளில் ஒருவராகிய 'ஸ்ரீ வல்லபன்' அல்லது 'கருநந்த டக்கன்' என்னும் முடிவேந்தன் (A. D. 855) காந்தளூர் மர்யாதையைப் பின்பற்றித் தென்திருவிதாங்கூரிலுள்ள பார்த்திவசேகரபுரத்தில் தொண்ணூற்றைந்து சட்டாகளுக்குச் சாலையொன்றை ஏற்படுத்தியதாகச் சாஸனத்தில் கூறியிருக்கிறது. தென் குமரியில் நடைபெற்றுவந்த சாலையும் முன்கூறிய ராஜனால் ஸ்தாபிக்கப்பட்டு அன்னோன் பெயரால் 'ஸ்ரீவல்லபப் பெருஞ் சாலை' யென்று விவஹரிக்கப்பட்டிருக்கவேண்டும். இதைத்தான் சோழ சக்ரவர்த்தியான ராஜராஜன் (985) ராஜராஜப் பெருஞ்சாலையென்று மாற்றியது. இது நிற்க, காந்தளூர்ச்சாலையை ராஜராஜன் நிறுத்தியதாகக் கூறிக்கொண்டாலும், அவன் எண்ணம் கைகூடியதாகத் தெரியவில்லை. சேரராஜர்கள் அடிக்கடி இச்சாலைக்கு நேரும் இடையூறுகளை அந்தந்தச் சமயங்களுக்குத் தக்கபடி விலக்கிக்கொண்டு பிடிவாதமாய் இச்சாலையை நடத்தி வந்திருக்கிறார்கள். ராஜராஜனைப்போல் அவன் பெயரனான ராஜாதிராஜனும் (A.D. 1018), முதலாவது குலோத்துங்கனும் (A.D. 1070-1118) கூட அவர்களின் காலங்களில் இச்சாலையை நிறுத்தியதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள்; இவர்களைப்போலவே பராந்தகனென்னும் பாண்டியராஜனும் நிறுத்தியதாகச் சொல்லிக் கொள்ளுகிறான். முன் பிரஸ்தாபித்த விஷயத்திலிருந்து நம்நாட்டு மன்னர்களுக்கு அன்னதானத்திலுள்ள சிரத்தையும் அதனிமித்தம் அன்னோர்க்கு ஓங்கிவளரும் கீர்த்தியில் சோழபாண்டியர்களுக்குள்ள அஸூயையும் நன்றாய் விளங்கலாம். மேல் நாட்டு நாகரீகமானது கீழ்நாட்டு வழக்கங்களுடன் பலமாய்ச் சண்டை செய்யும் இந்நாளில் முன்னைப்போல் காரியங்கள் இலகுவாய் நடந்துவருவது ஸாத்தியமில்லையாயினும் நம் மஹாராஜா பூர்வ ராஜாக்களைப் போலவே நாடோறும் பல்லாயிரம் வேதியருக்குச் சிரத்தையாய் அன்னமளித்து வருவதை ஒவ்வொரு ஹிந்துவும் பெருமை பாராட்டாமலிருக்க முடியாது.

வித்தியா விஷயத்தில் நம்மஹாராஜா காட்டிவரும் ஊக்கமும் அபிமானமும் யாவரும் அறிந்தவிஷயம். கீழ்த்தரப்படிப்பை இலவசமாக்கியிருப்பதையும், தேசபாஷையை முன்னுக்குக் கொண்டுவரத்தக்க முயற்சிகளெடுத்து வருவதையும் பிரஜைகளெல்லாம் அடங்காமகிழ்ச்சியுடன் புகழ்ந்துவருகிறார்கள்.

ஹிந்துக்களின் பழமையான நாகரிகங்களும், மதமும், மற்றுமுள்ள பெருமைகளும் வடமொழியிலேயே அடங்கியிருக்கின்றன. இம்மொழியைக் கற்றுக்கொள்வதற்காக ஸம்ஸ்கிருத கலாசாலையை ஸ்தாபித்திருக்கிறார். ஒப்பற்ற திறமையுடன் மஹாபுத்திசாலிகளாய் விளங்கி நம் பூர்வீகர்கள் கண்டுபிடித்துவந்த தத்வங்களெல்லாம் இன்றோ நாளையோ அழியும்படியான நிலைமையில் ஜீர்ணமான ஏடுகளில் புதைந்து கிடக்கின்றன. இவை ஹிந்து சமுதாயத்திற்கே விலையுயர்ந்த குடும்ப பொக்கிஷமாகப் பாவிக்கப்படவேண்டியவை. இவ்வேடுகளைப் பாணங்கள் அரித்துப் பாழாக்கிவிடுவதற்குள் அவற்றைச் சேகரிக்கவும் அச்சிட்டு வெளியிடவும் வித்வான்களை நியமித்திருப்பது நன்றியறிவுடன் பெரிதும் பாராட்டத்தக்கது. இம்மாதிரி நன்மைகளிலிருந்து நம் மஹாராஜா ஸம்ஸ்கிருத பாஷையில் வைத்திருக்கும் ஆதரவும் அபிமானமும் வெளியாகலாம். மஹாராஜாவின் மூதாதைகளில் பலர் வடமொழியில் கரைகண்டவர்கள். சுமார் 1375-ல் ஜீவித்திருந்த ஆதித்திய வர்மரென்னும் அரசர், சிட்சை வியாகரணம் முதலிய ஸர்வாங்கங்களையும் கற்றுத் தேர்ந்து ஸர்வாங்கநாதரென்று பெயர் பெற்றிருந்தார். "ரவிவர்மன் ஸங்கிராமதீரன்" என்னும் மற்றொரு அரசர் (1315-16) வடமொழியில் "பிரத்தியும்நாப்யுதயம்" என்னும் இனிமையான நாடகமொன்றை இயற்றியிருப்பதுடன் "தக்ஷிணபோஜன்" என்று பட்டமும் பெற்றிருந்தார். இவ்வரசர் இந்நாட்டிற்கு வெளியே தொண்டைமண்டலத்தில் காஞ்சீபுரம் வரை படையெடுத்துச் சென்றவர். இவரது சாஸனங்களிற் சில அவ்விடங்களிலும் காணப்படுகின்றன.

இங்ஙனம் தம் வம்சத்தில் ஜனித்த பூர்வ



ராஜாக்கள் படித்துப் பலவிதத்திலும் அபிமானித்துவந்த வடமொழியை நமது மஹாராஜா அவர்களும் உசிதம்போல் ஆதரித்துவருவது முற்றிலும் பொருத்தமாயிருக்கிறது. இந்தியாவில் இப்பொழுது பரவிவரும் கிரிஸ்துவமதத்தை ஸ்தாபித்த இயேசு கிரிஸ்து ஜனிப்பதற்கு 250 வருஷங்கட்கு முன்னமேயே புத்தமதத்தின் மேலான கொள்கைகளை மேல்நாடுகளில் பரவச்செய்வதற்கு ஸிரியா, ஈஜிப்ட், ஈப்ரஸ், மாஸிடோனியா, ஸைரீன், இவ்வைந்து ராஜ்யங்களுக்கும் அசோக சக்கிரவர்த்தி புத்த ஸன்னியாஸிகளை யனுப்பியிருந்தார். அசோக சக்கிரவர்த்தியைப்போலவே நம் மஹாராஜாவும், திருவிதாங்கூரில் அவதரித்து ஒப்பற்ற திறமையுடன் நுட்பமான தத்வங்களைக்கண்டுபிடித்து வெளியிட்ட ஸ்ரீசங்கராசாரியாரின் அத்வைத மதத்தைத் தேசாந்தரங்களில் பரவச்செய்வதற்காக சிகாகோ முதலிய விடங்கட்கு ஸ்வாமி விவேகானந்தரை யனுப்பி உதவியிருக்கிறார்.

முன்னாளிலிருந்த பஞ்சாயத்து முறைகளை இந்நாளில் நடப்புக்குக் கொண்டு வந்திருப்பதும், தொழிலபிவிருத்திக்காகச் சிறுவர்களுக்குப் பணவுதவி செய்து தேசாந்திரத்திற்கனுப்பி, அதைக் கற்றுவரச் செய்வதும் இன்னும் இம்மாதிரி எத்தனையோ நன்மைகள் நம் மஹாராஜாவின் அரசாட்சி சமயத்தில் ஏற்பட்டிருக்கின்றன. எந்த ராஜனின் அதிகாரத்திற்குட்பட்ட பூமியில், நாடுகளிலோ, காடுகளிலோ திருடர் பயமே கிடையாதோ, அவ்வரசனே க்ஷேமகிருத்தான ராஜனென்று ஆபஸ்தம்ப மஹரிஷி கூறியிருக்கிறார். இம்மாதிரி க்ஷேமகிருத்தான ராஜனென்று நம் மஹாராஜாவைச் சொல்வதிலென்ன தடை?

சுருங்கக்கூறுமிடத்து, நமது அரசர் சிம்மாசனமமர்ந்து அரசு செலுத்திய ஒரு தலைமுறைக்குள் திருவாங்கூர் நாட்டின் நிலைமை எவ்வாறு இருக்கிறது? விவசாயம் விருத்திபெற்றது; நாடு முழுதும் சிறந்த கட்டிடங்கள் கிளம்பி லக்ஷ்மி தாண்டவமாடும்படி விளங்குகின்றன. பள்ளிக்கூடங்கள் கிராமங்கள் தோறும் தவழ்கின்றன; மேனாட்டு உணர்ச்சியும், கீழ் நாட்டு அறிவும் குலாவி விளங்க, பட்டணங்கள் எங்கும் ஆங்கிலப் பள்ளிகள் அமர்ந்து கிடக்கின்றன. போக்குவரவுக்கேற்ற சௌகரியங்கள் கிடைக்குமாறு ராஜபாதைகள் நாடு முழுதும் போடப்பட்டிருக்கின்றன. பல விடங்களில் ரயில் வண்டிகள் போகும்படியான வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. வியாபாரம் வலுத்து ஏற்றுமதியிலும் இறக்குமதி அதிகரிக்கும்படியாகப் பணம் குவிந்துகொண்டேயிருக்கிறது. ஸுபிக்ஷ நிலையால் ஜனங்கள் அறிவுமிகுந்து இந்தியாவில் மற்றெந்த பாகத்தைக்காட்டிலும் இங்கு ஆங்கில அறிவு விளங்குகிறது. ஜாதி வித்தியாசமில்லாமல் ராஜாங்கம் நடைபெற்று வருகிறது. இவையெல்லாம் ஆகாயத்திலிருந்துவிழும் மழையானது நதிகளாக ஓடி கடலில் சேருவதுபோல ஜனங்கள் மனத்தில் ஊறித் ததும்பும் அன்பானது அரசனிடம் செல்லுமாறு செய்கிறது.

இம்மஹாராஜன் நோயற்றவாழ்வுடன் இன்னும் பல்லாண்டு ஜனோபகார சிந்தையுடன் தமது ஸாமர்த்தியமான அரசாட்சியைச் செலுத்திவர வேண்டுமென்று ஸர்வேசுவரான பத்மநாபரின் மலரடியில் சென்னி சாய்த்து வேண்டிக்கொள்ளுவோம்.

---

# அசையும் படங்கள்

## MOTION PICTURES

[ஸ்ரீமான் ஏ. வரதாச்சாரியரவர்கள், பீ.ஏ., எல்.டி.]

முன்னொரு ஸஞ்சிகையில் அசையும் படங்களின் பற்பல உபயோகங்களைப் பற்றிச் சொல்லி யிருக்கிறோம். இவ்விதப் படங்களின் காட்சிக்கு ஆதாரமான விஷயத்தையும், ஆதிமுதல் இதுவரைக்கும் மேற்கண்ட படங்கள் எவ்வாறு அமைக்கப்பட்டு வருகின்றனவென்பதைப் பற்றியும் விவரிப்போம்.

இவ்விதக் காட்சி ஸாத்தியமாவதற்கு முக்கிய ஸாதனம் நம் கண்ணினுடைய ஓர் சக்தி விசேஷமே. நமது கண்ணின் அமைப்பும், அதன் செயலும் வெகு விசித்திரம். ஜனங்கள், ஊர்த்தோற்றம் முதலியவைகளின் சாயலை

(Image) காகித விசேஷத்தில் பிடித்துக்காட்டக்கூடிய போடோக்ராபிக் கமிரா (Photographic camera) என்னும் யந்திரம் போல், (ஆனால் சிற்றுருவாய்) நமது கண்ணும் அமைக்கப்பட்டிருக்கிறது. கண்விழியின் (Eye-ball) முக்கிய அம்சங்கள், முன்புறமுள்ள க்ரிஸ்டலைன் லேன்ஸ் (Crystalline lens) என்னும் புறங்கவிந்த கண்ணுடியும், பின்பக்கத்தில் ரேடினு (Retina) எனப்படும் பார்வை நரம்புச் சாலமுமே. ரேடினு என்பது உணர்ச்சியுள்ள ஒரு திரை போலாகும். ஓர் எரியும் மெழுகு வத்தியை (அல்லது இதர தீபத்தை) ஒரு புறங்கவிந்த கண்ணுடி முன் (Convex lens) வைத்து அக்கண்ணுடியின் மற்றொரு பக்கத்தில் தடித்த காகிதம் முதலியவற்றாலுண்டான ஒரு வெண்மையான திரையைத் தகுந்த இடத்தில் வைத்துப்பிடித்தால், அம்மெழுகுவத்தியின் ஜ்வாலையின் பிரதிரூபம் (Image) அத்திரையில் தோன்றும். இப்பிரதிரூபம் தோன்றுமிடமும், அதன் பரிமாணமும், இதரகுணவிசேஷங்களும் அக்கண்ணுடியின் புறக்கவிவு, மெழுகுவத்தியின் ஸ்தானம் இவைகளைப்பொறுத்திருக்குமென்பதை சுலபமான பரீக்ஷணத்தால் (Experiment) தெரிந்துகொள்ளலாம். ஒளியுள்ள ஒவ்வொரு வஸ்துவையும் நமது கண்யந்திரத்தால் நாம் பார்த்து அறிந்துகொள்வது இம்மாதிரிதான். காந்தியுள்ள ஒவ்வொரு பொருளிடமிருந்து (Luminous objct) வெளிப் புறப்படும் கிரணங்கள் (Rays of light) கண்ணின் லேன்ஸ் வழியாய்ச் சென்று ஒன்றோடொன்று சமீபித்து,(Converging) மேற்சொன்ன ரேடினு என்னும் திரையில் சந்தித்தால், அவ்வஸ்துவின் ப்ரதிரூப முண்டாகிறது. இப்ரதிரூபத்தின் உணர்வு அங்குள்ள பார்வைக்குரிய நரம்புகள் (Optic Nerves) வழியாய் மூளைக்கு (Brain) ஏற்பட, நாம் வஸ்துக்களை யதாவஸ்திதமாய் பார்க்கிறோம். சாதாரணமாய், வஸ்துவின் ஸ்தானம் வேறுபட்டால் கண்ணுடிக்குப் பின்வைக்கப்படும் திரையின் இடமும் அதற்குத்தக்கபடி மாறினுல்தான், சரியான பிரதி ரூபம் அதில் தெரியும். நமதுகண் விஷயத்திலோ ரேடினுவானது க்ரிஸ்டலைன் லென்ஸுக்கு ஒரே தூரத்திலிருக்கிறது. அப்படியிருந்தும் நமது கண்முன்பாக பற்பல தூரங்களிலுள்ள பொருள்களின் பிரதிரூபங்கள் ரேடினுவிலேயே ஏற்பட்டு அப்பொருள்கள் நமது கண்ணுக்குப் புலப்படுகின்றன. இப்படி நேரிடுவது மேற்சொன்ன லேன்ஸின் அமைப்பு விசேஷத்தால்தான். இந்த லென்ஸானது தசைநார்களால் (Muscles) விளிம்பில் சுற்றிக் கட்டப்பட்டிருக்கிறது. இந்தத் தசை நார்கள் சுருங்கி லென்ஸை நெருக்கும்போது அதன் புறக்கவிவு அதிகரிக்கவும், தசை நார்கள் நீண்டு, இறுக்கம் குறைந்தால் அதன் குவிகை குன்றவும் லென்ஸுக்கு இயல்பான சக்தி உண்டு. இச்சக்திக்கு பவர் ஆப் அகாமடேஷன் (Power of accommodation) என்று பெயர். இச்சக்தியால்தான் வெகுதூரத்திலும், சமீபத்திலுமுள்ள வஸ்துக்களை நாம் பார்க்கும் தன்மை ஏற்படுகிறது. இம்மாதிரி வஸ்துக்களை உணர்வதில் நமது கண்ணுக்கு பலவகை விசித்திர சாமார்த்தியமுண்டு. அவைகளுள் அசையும் படங்கள் காட்சியின் மூலதத்துவத்தை அறிவதற்கு உபயோகமான கண்ணின் ஒரு வித இயற்கையை இங்கு ஒருவாறு தெரிந்து கொள்ளல் அவசியம். ரெடினுவில் ஏற்படும் ஒவ்வொரு வஸ்துவின் ப்ரதிரூபம் சுமார் 1/10 செகண்டு (க்ஷணிகம்) காலம் பதிந்து, பிறகு மறைவுபடும். இந்த ஸ்வல்பகாலத்தில் மற்றப்பொருள்களின் ப்ரதிரூபமும் அவ்விடத்தில் பதியுமேயானுல் நமது கண்ணனது அப்பொருள்களை பிரத்தியேகமாய் கிரஹிக்காமல், அவைகள் ஒன்றோடொன்று தொடர்ந்திருப்பதாகவோ மிச்ரகுணத்துடையவைகளாகவோ த்ருஷ்டிஞ்ஞானம் ஏற்படும்.

இதற்கு நிதர்சனங்களாக நமது அனுபவத்தில் பல காட்சிகளைப் பார்க்கலாம்:—(1) மரக்கோலின் ஒருநுனியைக் கொளுத்தி அக்கோலை நம்முடைய கண் பார்வைக்குக் குறுக்காய்வெகுவிரைவாய் இங்குமங்கும் ஆட்டினுல், அது தொடர்ச்சியான அக்கினிக்கோடுபோல் தோன்றும். அக்கோலை ஒரு செகண்டுக்கு 6 தடவைக்குக் குறையாமல் சுற்றினுல் அதுவே வட்டவடிவான தீயை (Circle of fire) ப்போல் விளங்கும். (2) எஃகு முதலிய நெகிழ்ச்சியுள்ள (Elastic) கம்பியின் ஒரு முனையில் பளபளப்பான ஒரு சிறு உண்டையை (Ball) வைத்து, மற்றொரு நுனியை



ஒரு மரக்கட்டையில் பதித்து அக்கம்பியை இங்குமங்கும் அசையும்படி ஆட்டிவிட்டால், நேர்கோடு அல்லது வடிவு ரூபமாகப் பிரகாசம் ஏற்படுவதைப் பார்க்கலாம். (3) வீணை வாசிக்கும்போது அசையும் வீணைக்கம்பியானது ஸ்வச்சமான (Transparent) நாடாப்போலத் தொடர்ச்சியாய் அகன்று காணப்படுவது அனுபவ சித்தமே.(4) மின்னல் (Lightning), வால் நக்ஷத்திரமென்று சொல்லப்படும் வீழ்க்கோள்ளிகள் (Meteors etc.) இவைகள் ஆகாயத்தில் பிரகாசிக்கும்போது, வாஸ்தவத்தில் ஒவ்வொன்றும் ஒற்றையான பிரகாசப்புள்ளிகளாயினும் நீண்ட கோடு ரூபமாகவே தோன்றுகின்றன. (5) ஆகாயபாணம் (Sky rockets) வெகு விரைவாய் உயரப் போகுந் தருணத்தில் உண்டாகும் தோற்றமும் அநேகமாய் இத்தன்மையுள்ளதே. (6) கடித அட்டையின் (Cardboard) ஒரு பக்கத்தில் ஒரு சிறு பக்ஷியின் உருவத்தை வரைந்து, மற்றொரு பக்கத்தில் சரியான இடத்தில் ஒரு கூடின் (cage) படம் எழுதி, அவ்வட்டையின், எதிர்முகமான ஓரங்களில் கட்டிய நூல்களை கைவிரல்கள், கட்டைவிரல் இவைகளில் மாட்டி, வெகுவேகமாய்ச் சுழற்றினுல், பக்ஷியும் கூடும் சமகாலத்தில் கண்ணுக்குப் புலப்பட்டு, பக்ஷி கூட்டிற்குள்ளிருப்பதுபோல் தோன்றும். (7) சக்கிரவடிவமுள்ள ஓர் அட்டையில் பல வர்ணங்களை ஒன்றோடொன்று கலக்காமல் எழுதி, அதை அதிக வேகமாய்ச் சுழலும்படி செய்தால், பார்வைக்குக் கலந்தவர்ணமாகத்தோன்றும். இவ்வண்ணம் வானவில்லில் (Rainbow) காணக்கூடிய ஏழு வர்ணங்களையும் அளவுப்பிரகாரம் ஒரு அட்டை உருளையில் வரைந்து, அதை வெகு சீக்கிரமாய்ச் சுற்றினுல் சூரிய ஒளிபோல் வர்ணமற்ற பிரகாசம் (White Light) ஏற்படும். இவ்விதகருவிக்கு கலர் டிஸ்க் அல்லது ந்யூடன்ஸ் டிஸ்க் (Colour Disc or Newton's Disc) எனப் பெயருண்டு.

மேற்சொன்னவைகள் போல் இன்னும் பற்பல உதாரணங்கள் சொல்லக்கூடும். ஆகையால் கண் விழியின் ரெடினு என்னும் ப்ரதேசத்தில் ஏற்படும் வஸ்துவின் ப்ரதிரூபம் கொஞ்சகாலம் (சுமார் 1/10 செகண்டு. 1/6 அல்லது $\frac{1}{8}$ செகண்டு என்றும் சிலர் சொல்வார்) அதில் பதிந்து அதற்குள் அவ்விடத்தில் வேறொரு ப்ரதி ரூபம் ஏற்பட்டால் அதனுடன் தொடர்ந்து இரண்டும் ஒன்றையொன்று சார்ந்ததாகப் பார்வைக்குத் தோன்றும். இதுதான் பயாஸ்கோப் முதலிய சலிக்கும் படங்களின் காட்சிக்கு ஆதாரபூதமான தத்துவம் (Principle) என்றறியவேண்டும். இவவித ஆதார தத்துவத்தைக்கொண்டு வெகு விசித்திரமான காட்சிகளை ஒரே காலத்தில் ஆயிரக் கணக்கானபேர்கள் பார்த்து வியக்கும்படிசெய்திருப்பது கொஞ்ச காலமாயுண்டாயிருக்கும் பௌதிகசாஸ்திரப்பயிற்சியால் தான்.

இக்காட்சிகள் ஆரம்ப தசையில் மிகவும் சாதாரண கருவிகள் மூலமாய் காண்பிக்கப்பட்டன. சுமார் 1833௵த்தில் இவ்விதக் காட்சி ஆரம்பித்ததாய்ச் சொல்லுகிறார்கள். இப்போதைய விநோதங்களைப்பார்க்கில், ஆரம்பத்திலுள்ளது மிகக்கேவலமாய் நினைக்கப்படுமேயாயினும், அக்காலத்தில் வெகு வியப்பையுண்டுபண்ணியிருக்குமென்பதற்கு ஐயமில்லை. முதல் முதல் ஏற்பட்டுள்ளது ஸொட்ரோப் அல்லது ஜீவ சக்கிரம் (Zoetrope or the Wheel of life) என்னும் ஓர் சூழ்ச்சி விசேஷமென்று தெரியவருகிறது. இதன் அமைப்பை சுருக்கிச்சொல்வோம். குழாய் ரூபமான ஒரு ஸ்தம்பமானது (Hollow Cylinder) ஓர் செங்குத்தான உருவாணியின் (Vertical axis) மூலமாய்வெகுவிரைவாய்சுழலக்கூடியதாயுள்ளது. இந்த ஸ்தம்பத்தில் 12 அல்லது அதிகமான மானடிச்சுவடுபோன்ற துவாரங்கள் (Slots) ஸ்தம்பத்தின் உயரத்திற்கு அரைப் பங்கு உயர அளவில் செய்யப்பட்டுள்ளன. ஸ்தம்பத்தின் உள் பாகத்தில் கடிதம் ஒட்டப்பட்டு அதில் சலிப்பதாய்த் தோற்றவேண்டிய வஸ்துவின்படங்கள் (Pictures) ஸ்தம்பத்தில் எவ்வளவு துவாரங்களுண்டோ அவ்வளவு வெவ்வேறு நிலைகளில் (Attitudes) சலனக் கிரமத்தை யனுசரித்து வரிசையாய் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்விதம் குதிரை பாய்ந்தோடுவதையும், ஓர் மனிதன்நாற்காலியிருந்து எழுந்திருப்பதையும், ஒரு பந்தைஉயர எறிந்து பிடிப்பதையும், குட்டிக்கரணம் போடுவதையும் இதுபோல பற்பல சலனங்களையும் காட்டுவதற்குரிய பல தசைகளில் படரூபமாய் வரைந்து ஒட்டி, மேற்கண்ட ஸ்தம்பத்தை வேகமாய்ச்

சுழற்றினால் ஒவ்வொரு துவாரம் வழியாய் நாம் பார்க்கும் படத்தின் பிரதி ரூபம் ரெடினாவில் விழுந்து முன்னுளுண்டான் பிரதி ரூபத்துடன் தொடர்ச்சியாய்க் காணப்பட்டு பிரஸ்தாப வஸ்து தானே நேரில் அசைவதுபோல் தோற்றமுண்டாகும். இதெல்லாம் ஏற்கனவே மேலேசொல்லப்பட்ட பேர்ஸிஸ்டன்ஸ் ஆப் இம்ப்ரேஷன் (Presistence of Impression) என்று சொல்லப்படும் கண்ணுக்குரிய ஓர் சக்தி விசேஷத்தால் ஏற்படுகிறது.

# சொற் காத்தல்

## KEEPING UP ONE'S WORD

[பண்டிதை ஸ்ரீ அசலாம்பிகை அம்மாள்.]

சொற்காத்தலென்னு மிவ்வரிய குணமானது ஒவ்வொருவரையும் தற்காக்குந் தன்மையுடையதாம்.

குலமகளுக்குக் கற்பு எவ்வாறு சிறந்ததோ அப்படியே குலமகனுக்கும் சொற்காத்தல் இன்றியமையாததாகும்.

நாணம், வாய்மை, ஒழுக்கம், தவம், புகழ் இவைகள் கற்பிலா மகளிரிடத்துச் சிறவாதவாறே, சொற்காக்கும் மனநிலையில்லாரிடத்தும் அவை சிறவாதென்றுணரல் வேண்டும். என்னே? கற்பிலா மனைவியும் கற்புடையவளாகத் தன் கள்ள மறியாது நம்பியிருக்கும் கணவனிடம் நம்பிக்கை துரோகம் செய்தவளாகின்றனள். தன்னை எதிர்பார்ப்போர்களுக்குச் செய்வதாகவோ, செய்விப்பதாகவோ, வாக்காற்கூறிப் பின்னர் எக்காரணம் பற்றியாயினும், சொற்சோர்வுபட்டுத் தமது சொல்லைக் காவாதொழிவோரும், நம்பிக்கைத் துரோகம் செய்தவராவார். இதனை,

"யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்காற்
சோகாப்பர் சொல் லிழுக்குப் பட்டு"

என்ற திருக்குறளே விளக்குவதாகும்.

இவ்வகைக் கேட்டிற் குள்ளாவோர்களிற் பலர் "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவ மென்ப திழுக்கு" என்ற ஆன்ற மொழியை யறியாதாராய், அதாவது முன்பின் தீரயோசியாமலும், சொற் சோர்வுபட நேருவதால் விளையும் தீங்கின்னதெனக் குறியாமலும், புகழ்ச்சி விருப்பினால், தன்னால் முடிக்க வியலாக் கருமங்களிலும், முடிக்க வியலினும், அவ்வாறு முடிக்கும் ஊக்கமும், சிரத்தையும், மனதிலில்லா நிலைமையிலும், அவசரபுத்தியால் வாக்களிப்பர். சிலர் தம் சுயநலங்கருதிப் பிறர்க்கொரு உதவி செய்ய முந்துவர்.

சிலர் கூறுங்கால் அச்சுயநலம் காரணமாக விருந்து பின்னர் அக்காரணம், தவறுமேல் தமது சொற் காத்தலினும் நழுகத்துணிவர். சிலர், தம்மின் மிக்கார்பாலின் சொற்காக்கும் தன்மையை மேற்கொண்டொழுகி, தம்மினும் எளியார்பால் சொற்சோர் வுறுவதில் சோர்வுபடா தொழுகுகின்றனர். சொற் காக்குங் குணமே நம்மையாளும் அரசர்க்கரசர்முதல் அடிமைக்கடிமைகள் இறுதியாக ஒவ்வொருவர்கட்கும், அவரவர்களின் தரத்திற்குத்தக்க தன்மதிப்பைக் காத்து மேன்மைப் படுத்துவதாகும்.

அரும்பொருள் விளக்கநூலாரும், "சொல்" என்னும் பதத்திற்குப் "புகழ்" என மறுபொருள், அதுவே புகழை விளைவிக்கும் ஆற்றலுடைய தென்பது விளங்கக் கூறினர் போலும்.

ஆரியர்க்குப் பண்டைக்காலத்தில் சொற்காத்தல் எனும் உயர்குணமன்றோ மதிப்பில்லாப் பெருஞ்செல்வமாய் விளங்கியது? அரிச்சந்திரன் எனும் ஸத்தியதேவதைக்கொப்பான அரசன் சொற்காத்ததனாலன்றோ இன்றும் என்றும் அழியாத புகழுடம் பெய்தினன்?

இராமன் தந்தையாகிய தசரத சக்கிரவர்த்தி தன் சொற்காத்தலின்கண், எத்தகைய உறுதியுடையவராய் சிறப்புற்றனர்? மகாபாரதத்தில் பாண்டவரின் அம்மானாகிய சல்லியன் தன் மாட்டன்புடைய மருமக்களுக்கு விரோதியாகப் போர்புரிய முன்வந்த துரியோதன மன்னனுக்குப் படைத்துணைவனாக அமர்ந்து, தேர்ப்பாகன் மகனாய்க் கருதப்பட்டு வந்த கர்ணராஜனுக்கும் தேர் விட இணங்கியதும், இச்சொற்காத்தலின்கண் வைத்த மாற்றவொண்ணா மதிப்பினாலன்றோ? தமது சத்துருவாகிய துரியோதனனுக்குத் தம்மை வெல்லத் தக்க கிரகவலிமை பொருந்தும்முகூர்த்தநாளை அப்பாண்டவரின் பின்பிறந்த ஸகாதேவனே மனமிசைந்து குறிப்பிட்டுக் கொடுத்ததும், அச்சகாதேவன் எதிரியென்று தெரிந்திருந்தும் அவனையே கொல்ல அவன் நாள் வைத்துக்கொடுக்க இத் துரியோதனன் வேண்டியதும், அவன் சொற்படியே நம்பி அம்முகூர்த்தத்தில்போர்முனை குறித்ததும் இச்சொற்காக்கும் உயர்குணத்தின் கண்ணுள்ள திடபுத்தியினாலன்றோ? இதனினும் அரிய உதாரணமும் வேண்டற்பாலதோ?

அத்தகைய சொற்காக்கும் குணத்தினைத் தற்காலத்தில் நன்னிலையிலுள்ள பலரும் கூடக் கைவிடுகின்றனர் என்றே கூறலாம்.

இதற்குப் பிரபல பிரமாணங்கள் வேண்டியதில்லை. தற்காலத்தில் நம் நாட்டில் ஏற்படும் பல நற்சாதனங்களும் நன்முயற்சிகளும் தோன்றி விரைவில் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துபோவதே சான்றாகும்.

வாக்கினால் ஒவ்வொருவரும் சபைகளிற் புகழ்படப்பேசி, கையாறும் சந்தா கையொப்பமிட்டு இரண்டையுமே மறப்பது மிகச் சாதாரணமன்றோ!

எவரும் இக்குணத்தைத் தகுதியுடையார் மாட்டே மிகுதியும் எதிர் பார்த்து நிற்பர். எளியோரால் பிறர்க்கு நேரக்கூடிய நன்மை பெரிதும் இராதாதலின் அவ்வெளியோர்பாலிக் குணத்தை நாடிநிற்பதுமரிதே. தகுதியுடையோர் தன்னலத்தையோ தன்மதிப்பையோ கருதித் தன்னிற் றக்கார்பாலில் மட்டும் சொற்சோர்வுபடாது எச்சரிக்கையா யொழுகுவது போலத் தன்னினெளியோராய்த் தன்னை நாடி நிற்போர்பாலும் சொற்சோர்வன்றி யொழுகுவரேயாயின் அவரினும் சிறந்தோர் எவர்? இத்தகையார் புறத்தே புகழ்பெறினும் எளியோரின் அகத்தேயாவது இகழப் பெறுவர். தன்னெஞ்சமும் தன்னை எண்ணிப்பார்க்குங்கால் இகழாதொழியுமோ?

"தன்னெஞ் சறிவது பொய்யற்க, பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்."

என்றநல்லோர்மொழி பொய்க்குமோ?

கம்பராமாயணம் தாடகை வதைப்படலத்தில் "சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம்" என்று இராமபாணத்தைத் சொல்லிற்கு உவமித்தனர் கவிச்சக்கிரவர்த்தி. என்னே! சொல்லிய சொல் குறிபிழையாதவாறுபோல அக்கணையும் இலட்சியம் தவறாமல் தாடகையின் நெஞ்சில் ஊடுருவிச்சென்றதென்றார்.

அச்சொல் என்னும் மொழி தவத்தோரால் சொல்லப்படும் சொல் எனவும், ஈண்டு போர்முனையில் பாணத்தைப் பிரயோகித்த அவ்விராமனது சொல், எனவும் இருபொருள் தரும். இதில் முந்தியதினும் பிந்திய பொருளே சிறப்புடையதாகும். இராமன் இளங்குமரனாய் உலக அனுபவமெய்தப் பெறானாயிருந்தும் இயற்கையாய் உத்தமகுணத்தினாற் சொல்லிற்றவரான். அவன் வாக்கு பிழையாததென்பதெத்துணையுறுதியோ, அத்துணை அவன் கரத்திற் பற்றித் தொடுக்கும் சரமும் பிழையாதென்று பொருள் தருதலனென்க.

இவைகளினாற் சொல்லிற் சோர்வு படாத குணமே எக்காலத்தினும் மாந்தரி னுயர்ச்சியைக் காட்டுவதா மென்பதை எளிதினுணரலாம்.

நாம் நமதிளமை தொட்டே ஒன்றைச் செய்வோமென்று எண்ணுவதற்கு முன்னதாகவே, அச்செயல் தன்னால், செய்யத் தகுவதா, செய்ய இயல்வதா, என்பவைகளை நன்காராய்ந்து பின்னரே வெளியிடுவ தென்கிற உறுதியை ஒவ்வொரு விஷயங்களிலும் சிந்திக்கப் பழகிவரல் வேண்டும்.

இவ்வாறு சிந்தித்துச் செய்யுமுன் கூறுவதினும் சொல்லிற் கூறாது செய்கையினாலேயே தமது கருத்தை வெளிப்படுத்துவோர் பின்னும் பன்மடங்கு அறிவின் திட்பமுடையோராவர்.

ஆராயுங்கால் இவ்வித சொற் காத்தல் பெரும்பாலும் பொருள் என்னும் அளவு கருவியினால் சோதிக்க நேருங்கால் நிறை குன்றுவதுதான் மிகுதி. மனத்தை இப்பொருள் விஷயத்தில் வரம்பில் நிறுத்தமாட்டாதவர்க்கு ஒருபோதும் சொற்காக்க முடியாததே.

இது மூவாசைகளிலும் ஒக்கும். நளமகாராஜன்தன்னையே விரும்பி நிற்கும் தமயந்தியெனும் தேவமாதரும் வியக்கும் பொற்புடைய இராஜ கன்னிகையின் சுயம்வரத்திற்காகப் போந்து அங்கு சந்தித்த இந்திராதி திக்குப்பாலகரின் கோருதலை மறுக்கமாட்டாமல் அக்கன்னிகைபால் அவர்கட்காகத் தூது சென்று, அத்தேவருள் ஒருவரை மணக்கும்

படி பலவாறு வற்புறுத்தியும், தன் மனத்திலவன்பால் குடிகொண்டிருந்த கரையிலா விருப்பத்தைத் தனது சொற்காக்கும் உருதியால் எழவொட்டாமல் அடக்கியு மொழுகிய தன்மையே பெருஞ் கட்டமன்றோ? இஃது தற்காலத்தில் வாலிபரால் சாதிக்கலாமென எண்ணவும் கூடியதோ? புகழ்க்குரியோராய் முன்னோரெவரும் வாழ்க்கைநலம், பொருளீட்டல், வெற்றிவிரும்பல் யாவும் சொற்காத்தலின் பின்னே துணிந்து கொண்டனரன்றி வேறிலை.

கர்ணன் அர்ச்சுனன் மீது ஒரு முறைகுறி பிழைக்கின், மறுமுறை தொடுப்பதில்லையென்று தாயாகிய குந்திதேவிக்கு வாக்களித்தமையாலன்றோ தன்னுயிர்க்கிறுதி வருமென உணர்ந்தும், அப்போர் பெருஞ்சீற்றத்தினும் மீட்டுந் தொடுக்க மறுத்தனன்.

- இதனை மாகாபாரதத்தில்

> "திரியவும் வந்தெனையேவு கென்றலறவும்,
> உறவொடு குந்திவழாவரம் பெருதலினுரை வழுவும்
> பெரிதாகுலம் புரியினும்
> மறுகணை யொன்று தொடேன்முனிந் திவியென
> வரிகழ லங்கர் குலாதிபன் புகலவே"

என்றுகூறிய செய்யுளால் நன்கறியலாம். என்னே! உயிரையும் பெரிதா யெண்ணிலர் உயர்குண முடையோர்.

ஆதலின் நறுமணமுள்ள பற்பொடிகளினால் நாவைத் தூய்மையாக்குவதுதான் வாக்கின் நலமெனக் கருதாது, சொற்காத்தலென்னும் ஸுகந்த ஔஷதியை மறந்திடாது வாக்கிலடக்கி இம்மையிற்புகழும், மறுமையிலின்பமும் பெற ஒவ்வொருவரும் முந்துதல் கடமையாம்.

துடங்குங்கால் சொற்காத்தலென்பது கற்பைக் காத்தலுக்கிணையெனக் கூறியதும், "கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை" என்னும் ஔவையாரின் அருமொழி கொண்டேயாம். இதனால் சொற்காத்தலென்னும் காரணம்பற்றியே கற்பெனும் காரியம் நிகழ்வதெனவும் நன்குணரலாம்.

சொற்காப்பவரே எவ்வகையினும் தற்காப்பவராவா ரென்றால் எஞ்ஞான்றும் சோர்வு படுவதன்றாம்.

## முகம்மதியர் பஞ்சாங்கமும் முகரம் பண்டிகையும்.

## The Muharrum and Muhammadan Calendar.

முகம்மதியமதம்பரவியஇந்தியா, பார்ஸீகம், அராபியா, துருக்கி முதலிய நாடுகளில் நடைபெறும் ஹிஜரி என்ற முகம்மதிய வருஷமானது மெக்காநகரத்திலிருந்து மெதினாவுக்கு முகம்மது நபி ஓடிய நாளாகிய கி. பி. 622 ஆு ஜூலைமீ 15உ வியாழக்கிழமைக்கு முந்திய மாதத்தின் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட்டு அடுத்த நாள் ஆரம்பமாகியது. ஹிஜரி வருஷங்கள், இந்துக்களுடைய சாந்திர வருஷங்களைப்போல் சந்திரனுடைய சலனத்தைப் பொருத்தவை. அமாவாசை தினம் முதல், அவை ஆரம்பமாகுமானாலும் சூரிய சலனத்தை ஒட்டிவரும்படியான அதிகமாதம் அவ்வருஷங்களில் கிடையாது. ஆகவே ஒவ்வொரு வருஷாரம்பமும் முந்திய வருஷத்தைவிட சிலநாட்கள் முன்னதாகவே தொடங்கும். இப்படிப் பிந்திப்போகும் மாதங்கள் வருஷமுழுவதிலும் பின்னடைந்து முதலில் ஆரம்பமான காலத்தில் மறுபடியும் ஆரம்பிப்பதற்குச் சுமார் 32½ வருஷங்களாகின்றன. ஹிஜரி மாதங்களில் முறையே 30 நாள்களும் 29 நாள்களும் அடுத்தடுத்து வரும். ஸம்வத்ஸரங்களை முப்பதுமுப்பதாக வகுத்திருக்கின்றனர். அம்முப்பதுவருஷங்களில் 19 வருஷங்கள் 354 நாள்கள்கொண்ட சாதாரண வருஷங்களாகவும் மற்றைய 11 வருஷங்கள் கடைசி மாதத்தில் ஒரு நாள் அதிகமாகச் சேர்க்கப்படும் வருஷங்களாகவும் உள்ளன. ஆதலால் ஒரு வருஷத்தின் சராசரி அளவு காலமானது 354 நாள், 8 மணி, 48 விநாடியாகிறது. அதேமாதிரி ஒரு மாதத்தின் அளவு 29 நாள் 12 மணி 44 விநாடியாகும். இந்த அளவுக்கும் வானசாஸ்திர அளவுக்குமுள்ள வித்தியாசம் சுமார் 3 விநாடி தான். இந்தப்படி பார்த்தால் சுமார் 2,400 வருஷங்களில்தான் ஒருநாள் வித்தியாசம் ஏற்படும்.

மேலே கூறியதிலிருந்து ஹிஜரி வருஷமானதுஒவ்வொரு வருஷத்திலும் 10 அல்லது 11 நாள்பிந்திப்போகிறதென்பது தெரியவரும். இந்துக்களுடைய வருஷமோ எப்போதும்



ஒரே இங்கிலீஷ் மாதத்தில் ஆரம்பமாகிறது. உதாரணமாக ஹிஜரி 133 ஆுத்து முகரத்தின் முதல் நாள் கி. பி. 1915 ஆு நவம்பர்மீ 9உ செவ்வாய்க்கிழமை வந்தது. 1335 ஆுத்து முகரம் கி. பி. 1916 ஆு அக்டோபர்மீ 28உ சனிக்கிழமை ஆரம்பித்தது. அடுத்த 1336 வருஷத்து முகரம் 1917 ஆு அக்டோபர்மீ 17உ புதன்கிழமையிலும் 1337 ஆு முகரம் 1918 ஆு அக்டோபர்மீ 7உ திங்கள் கிழமையிலும் தொடங்கும். ஒரே இங்கிலீஷ் வருஷத்தில் இரண்டு முகரம் வருவதுமுண்டு. உதாரணமாக 1845 ஆு ஜனவரிமீ 10உ வெள்ளிக்கிழமையிலும் அதே வருஷம் டிசம்பர்மீ 30உ செவ்வாய்க் கிழமையிலும் முறையே 1261, 1262 ஆுத்துமுகரம் தொடங்கியது.

இனி இந்த முகரம் பண்டிகையில் வேறெங்கு மில்லாது நமது சென்னப்பட்டணத்தில் மட்டும் விசேஷித்துக் காணும் "மாரடி" கொண்டாட்டம் எப்படி உண்டாயிற்றென்பதை விசாரிப்போம்.

முகம்மது நபியின் அவதாரத்துக்கு முன்னால் மத்திய அராபியாவிலிருந்த அரபியர்கள், சண்டைசச்சரவையுங்கொள்ளையடிப்பதையும் தொழிலாகக்கொண்டிருந்தனர் நாகரீகம் அவர்களிடம் தோன்றவில்லை. விக்ரஹ ஆராதனை ஆசார அனுஷ்டானமின்மை பழிபாவங்களுக்கு அஞ்சாமை முதலியன அவர்களிடத்து நிலைத்திருக்கின்றன. இவர்களை நல்வழிக்குக் கொண்டுவருவதற்கு முகம்மது நபி பட்டபாடு கொஞ்சமல்ல. பண்டைக் காலந்தொட்டுவரும் பழக்க வழக்கங்களையும் குல தெய்வங்களையும் அரபியர்கள் விடுவதற்கு எளிதில் பிரியப்படவில்லை. ஆதலால்தான் முகம்மதியமார்க்கம் ஆரம்பத்தில் மெதுவாகப் பரவியது.

முகம்மது நபியின் பிரதிநிதி (காலிப்) யாக கி. பி. 632 ஆு ஜூன் மாதத்தில் அபுபக்கர் வந்தார். முதல் கி. பி. 1258ல் பாக்தாத் நகரைச் சூறையிட்ட மங்கோலியர்களால் அப்போதிருந்த காலிப், முஸாவிம்பில்லா என்னுமிடத்தில் கொலை செய்யப்பட்டது வரையில் "காலிபேட்" என்னும் பிரதிநிதித்வகாலம் நடைபெற்றது. அப்பால் முந்நூறு வருஷம் வரையில், 'காலிப்' என்ற பட்டம் மட்டும், எகிப்து நாட்டில் வசித்த பதினெட்டு அரசர்களால் வகிக்கப்பட்டது. கி. பி. 1517ல், துருக்கதேசத்துச் சுல்தான், முதலாம் ஸெலிம் என்பவர், அப்போதிருந்த "பொம்மை" காலிப்பை ஜெயித்து அவரிடமிருந்த ராஜசின்னங்களாகிய கொடி, வாள், நபியின் ஆடைகளைக் கவர்ந்து கொண்டனர். அது முதல், துருக்கிய சுல்தான்கள் தாம், நபியின் பிரதிநிதியாகவும், முகம்மதியர்கள் அனைவருக்கும் தலைவராகவும் விளங்குகின்றனர்.

முதலில் அரசுசெலுத்திய நான்கு "உண்மைக்" காலிப்களில் முதலாவதும் இரண்டாவதுமான அபூபக்கரும், உம்மரும், முகம்மது நபியின் மாமனாராகவும், மூன்றாவதும் நான்காவதுமான உதுமானும் அலியும், நபியவர்களுடைய மாப்பிள்ளைகளாகவு மிருந்தனர். அலி, நபிக்கு ஒன்றுவிட்ட தம்பியுமாவார்.

முகம்மதியர்கள் அனைவருள்ளும் சகோதரபாவம் உண்டாகவேண்டுமென்று முகம்மது நபி பாடுபட்டார். ஆனால், உதுமான் காலத்தில் பழைய அந்யபாவம் ஏற்பட்டது. அவருடைய எண்ணப்படியெல்லாம் புதிது புதிதாக ஏற்பாடுகள் உண்டாயின. இவை காரணமாக அவர் ஜன ரஞ்சகத்தை யிழந்தார். மெதினா நகரில் அவருடைய அரண்மனை அந்தப்புரத்திலேயே அவர் கி. பி. 656ல் ஜூன்மீ 17உயில் சில துரோகிகளால் கொலைசெய்யப்பட்டு இறந்தனர். இக்கொலை, முகம்மதியர்களுக்குள் கொஞ்சம் கொஞ்சமிருந்த ஐக்கியத்தை வேரறுக்க ஒருவர்க்கொருவர் விரோதம் பாராட்டத் தொடங்கினர். அத்தருணத்தில் அலி, காலிபாகத் தேர்ந்தெடுக்கப் பிட்டனர். ஆனால் உதுமானின் உறவினனான முவாவியா என்ற ஸிரியா நாட்டு அதிபதி அலிக்கு அடிக்கடி தொந்திரவு கொடுத்துக் கொண்டிருந்ததால், அவன் ஸிரியா எகிப்து நாடுகளை சர்வ சுதந்தரமாக ஆளலாமென்று அலி, அவனுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். கி. பி. 661ல் ஜனவரி மாதத்தில் கூபாமசூதியில் அலி கொலைசெய்யப்பட்டனர். அவருடைய மூத்த மகனான ஹஸன் பட்டத்துக்கு வந்த சில நாள்களுக்கெல்லாம் ராஜ்ய பதவியை வேண்டாமென்று விட்டு விட்டதனால், முவாவியாவே முகம்மதிய ஸார்வபௌமம் முழுவதுக்கும் அதிபதியானான். அலியின் இரண்டாவது மகனான ஹுஸேன் என்பவர், முவாவியாவின் மகனுக்குக் கீழ்ப்

படிய மறுத்து, அவனோடு சேர்ந்த கூபா நகரத்து ஜனங்களைத் தண்டிக்கும் பொருட்டு மெக்கா நகரத்திலிருந்து புறப்பட்டுத் தம்மைச் சேர்ந்தவர்களோடு ஒன்று கூடுவதற்கு வந்தனர். யூப்ரடீஸ் நதிக்கரையிலுள்ள கெர்பலா என்ற நகரத்துக்கு அவர் வந்ததும் சத்துருக்கள் அவரை வளைத்துக் கொண்டனர். அங்கு நடந்த சண்டையில் அம்புகள் எய்யப்பட ஹுஸேன் இறந்தனர். அவருடைய மகனும் மருமகனும் அவருடைய கைகளிலேயே கொலை செய்யப்பட்டனர். இறப்பதற்கு முன்னால், ஹுஸேன் தமது ரத்தம் சிந்திய கைகளை உயரத்தூக்கி, இறந்தோர்க்கும் இருப்போர்க்குமாகச் சரமப்பிரார்த்தனையொன்றைச் செய்தனர். கூபியர் தலைவன் முன்னால், ஹுஸேனுடைய சகோதரி ஓடிவந்து, இப்படிப் பெரும் பாவத்தைக் கட்டிக் கொள்ளக் கூடாதென மன்றாடினாள். உடனே அவனுடைய நெஞ்சம் இளகிற்று. அத்தருணத்தில் அஞ்சா நெஞ்சினன் ஒருவன், கூபியர் தலைவனுடைய கோழைத்தனத்தைக் கண்டித்துப் பேசவும், அனேகர் ஓடிவந்து ஹுஸேனைக் கொன்றுவிட்டார்கள். அவரது சரீரத்தில் ஈட்டிகளாலும் கத்திகளாலும் 33 காயங்கள் உண்டாயினவாம்.

பாரஸீகர்கள் கொண்டாடும் பண்டிகை, வருஷாவருஷம் முகரம் காலத்தில் அலியின் குடும்பத்தார் கொலை செய்யப்பட்ட இக்கதையைப் படிப்பதிலிருந்து உண்டாயிற்று. கெர்பலா நகரத்தில் கொலை செய்யப்பட்ட ஹுஸேனின் சரித்திரம் நாடகம், பாரஸீக ஷேக் வகுப்பார்க்கு அத்தியந்த துக்கத்தையும் கோபத்தையும் கொடுக்கிறது. அதைப் பார்க்கும்போது, அரபிய ஸுன்னி வகுப்பார், பாரஸீகர்களுக்குச் செய்த துன்பங்கள் அவர்களுடைய ஞாபகத்துக்கு வருகின்றன. பாரஸீக ஷியா வகுப்பாரே நமது சென்னையில் மாரடிக் கொண்டாட்டத்தில் சேருகின்றனர். பாரஸீக தேசத்தில் இக்கொண்டாட்டத்தின்போது, வழியில் அகப்பட்டுக் கொள்ளும் ஸுன்னியான் பாடு வெகு மோசமாகும். ஹுஸேனைக் கொலைசெய்ததாக நடிக்கும் ஜனங்கள் கூட சில வேளைகளில் கல்லெறிபடுவார்களாதலால், இதற்குச் சிறையிலடைபட்டிருக்கும் குற்றவாளிகளை நியமிப்பதுமுண்டு.

## மதிப்புரை

## REVIEW OF BOOKS

ஷண்முக ஸுந்தரம். (ஆசிரியர் ஸ்ரீமான் P. S. ஸுப்ரமணிய அய்யர் அவர்கள், B.A.)

இப்புத்தகம் சிலகாலமாக நம்மிடமிருந்தும் அதைப்பற்றி ஒன்றும் எழுதாததைப்பற்றி மிகவும் விசனிக்கிறோம். “துப்பறியும் நாவல்’களும், ‘ஆசார சீர்திருத்த நாவல்’களும் பரவிவரும் இக்காலத்தில், யாவரும் ‘நாவல்’ எழுதத் தொடங்கி விட்டனர். ஆனால் நாவலின் இலக்கண மறிந்து படிப்பவர்க்குக் காலப்போக்கோடு புத்தியும் புகட்டிவரும் நாவல்களை எழுதுபவர் வெகு சிலரேயாயினும், ஸ்ரீமான் ஸுப்ரமண்ய அய்யர் உயர்தர ஆசிரியர்களில் ஒருவராக மதிக்கலாம்.

ஷண்முக ஸுந்தர மென்னும் சிறுவன் கலாசாலையில் படிக்கும்போது வீண்பழி சுமத்தப்பட்டு அதை பொறுக்காது, மாறு வேஷம் பூண்டு துப்பறிவனாகிறான். அவனது இளமனைவி, தன் கணவனது பிரிவையும், அண்ணியின் கொடுமையையும் தாளாது, ஆண் வேஷம் தரித்து, தன் மாமனாரிடம் வேலைக்கமர்கிறாள். பர்மாவிலிருந்த கொள்ளைக்காரர்களைப்பிடிக்க ஷண்முகசுந்தரம் வந்தபொழுது மிகவும் சாமார்த்தியமாய் அவன் மனைவி கணவனைக் கண்டுபிடித்துவிடுகிறாள். கடைசியில் அனைவரும் இன்பமுடன் வாழ்ந்திருக்கின்றனர்.

படிப்பவரது மனதைக் கவர்ந்து, மேலும்மேலும், படித்து ஆனந்திக்கச் செய்யும் புஸ்தகங்களில் இது ஒன்றாகும். மிகவும் எளிய நடையில் எழுதப் பட்டிருப்பது சிலாகிக்கத் தக்கது. தற்கால வழக்கத்தை அனுசரித்துச் சில சித்திரப் படங்கள் சேர்க்கப்பட்டிருந்தால், மிகவும் திருப்திகரமாயிருக்கும் என்று சொல்லலாம்.

விலை ரூ. 1. வேண்டியவர்கள் போதினி ஆபீஸுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

தமிழர் நேசன்—நம் தாய் மொழியை முன்னுக்குக் கொண்டுவர ஏற்பட்டிருக்கும் தமிழ்க் கல்விச்சங்கத்தாரால் இப்பத்திரிகை பிரசுரிக்கப்படுகிறது. இந்தப் பத்திரிகை செவ்வனே தன் தொழிலை நடத்துமென்று நம்புகிறோம். வருடச்சந்தா ரூ 3 என்பது கவனிக்கத்தக்கது.



## வான சாஸ்திரம்

## LESSONS IN ASTRONOMY

### நட்சத்திரங்கள்

[ஸ்ரீமான் எம். ஆர். சுப்பிரமணிய ஐயரவர்கள், பீ. ஏ., எல். டி.]

இந்நட்சத்திரங்களில் முதல் வகுப்பு நட்சத்திரங்களெல்லாம் நமக்குச் சமீபமானவையல்ல. முதல் வகுப்பு நட்சத்திரங்களாகிய ரோகிணி, சிரவணம், லுப்தகன் முதலிய நட்சத்திரங்கள் துருவநட்சத்திரத்தைக் காட்டிலும் தூரத்தி லிருக்கின்றன. ஆகையால் இவ்வளவு தூரத்திலிருந்தும் இவை இப்படிப் பெரியனவாகக் காணப்படுவதால், இவைகளின் அளவைப்பற்றி நாமே அறிந்துகொள்ளலாம். எவ்வளவோ கோடி சூர்யன் அளவாயிருக்கவேண்டும்! இவைகளைப்பற்றி விவரிப்பதற்கு முடிவே யிராது. ஆகையால் இங்கு இவ்விஷயங்களை நிறுத்தி, இவைகளைப்பற்றின வேறு விஷயங்களைக் கவனிப்போம்.

இவைகள் ஸ்திரமா யிருப்பவைபோல் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் இவைகளின் கணக்கில்லாத தூரமே. மிக சூட்சுமமான தூரக்கண்ணாடி முதலிய கருவிகளைக்கொண்டு, வெகுகாலமாய் அசைவதாகக் காணப்படாத நட்சத்திரங்களில் சில நகர்வனவாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் இவைகள் நகர்வதைத் தெளிவாகக் கண்டறிவது கஷ்டம். இவை வெகு தூரத்திலிருப்பதால், நமக்குக் கொஞ்சதூரம் நகர்ந்து காணப்பட நூற்றுக் கணக்கான வருஷங்கள் ஆகின்றன. இம்மாதிரியே நமது நட்சத்திரமான சூர்யனும், தன்னுடைய கிரஹங்களுடன் நகர்ந்துகொண்டே யிருக்கிறான் என்றும், சிரவண நட்சித்திரத்திற்கு வடமேற்கேயுள்ள பீமன் என்னும் நட்சத்திரத்திற்குச் சமீபமாகப் போய்க்கொண்டே யிருக்கிறான் என்றும் கணக்கிடப்படுகிறது. இச்சூர்யன் ஒரு மணிக்குச் சுமார் 43.500 மைல் தூரம் நகர்ந்துகொண்டே யிருக்கிறான்.

இந்த நட்சத்திரங்களில் சில, இரட்டையாகக் காணப்படுகின்றன. தூரதிருஷ்டிக் கண்ணாடியால் இரட்டை நட்சத்திரங்களின் சேர்க்கையை நாம் நன்றாய் அறியலாம். இம்மாதிரி இரட்டை நட்சத்திரம் ஒன்று ஸப்தரிஷி மண்டலத்தி லிருப்பது நமக்குத் தெரியும். இந்த ஸப்தரிஷிகளில் ஆறாவதாகிய வஸிஷ்டர் என்னும் நட்சத்திரத்திற்குச் சமீபத்தில் அவர்பத்நியாகிய அருந்ததி என்னும் சிறிய நட்சத்திரமிருப்பதை நாம் வெறுங்கண்ணால் கூட நன்றாகப் பார்க்கலாம். அருந்ததி மஹா பதிவிருதையென்றும், ஆகையால் தன் கணவனைவிட்டு ஒருபோதும் பிரியாமலிருக்கிறாளென்றும் சிலர் சொல்லுவதுண்டு. ஹிந்துக்களின் கல்யாணகாலத்தில்கூட, கலியாணப் பெண்ணைப்பார்த்து, “பெண்ணே, ஆகாய மண்டலத்தில் சிரஞ்சீவிகளாக நட்சத்திர ரூபமாகக் காணப்படுகிற அருந்ததியைப்பார். அருந்ததியைப்போலவே நீயும் எப்பொழுதும் கணவனிடம் பக்தியாயும், அவனைவிட்டுப் பிரியாமலுமிருக்கவேண்டும்” என்று சொல்லுவதுண்டு. இந்த அருந்ததி நட்சத்திரம் ஒரு இரட்டை நட்சத்திரம். இதைத் தூரக்கண்ணாடியால் பார்த்தால், இரண்டு சிறிய நட்சத்திரங்களாகக் காணப்படும்.

இந்த இரட்டை நட்சத்திரங்கள் ஒன்றையொன்று சுற்றிவருவனவாகக் காணப்படுகின்றன. இம்மாதிரியான இரட்டை நட்சத்திரம் புனர்பூசத்தில் ஒன்று இருக்கிறது. இன்னும் அநேகம் இரட்டை நட்சத்திரங்களிருக்கின்றன. சில மூன்று சேர்ந்த கொத்துகளாகவும், சில நான்கு சேர்ந்த கொத்துகளாகவும் காணப்படுகின்றன. இவைகளில் ஒவ்வொன்றும் அநேக சூர்யன்கள் அளவிருக்கலாம். ஓரிரட்டை நட்சத்திரத்தில் ஒன்று சிவப்பாயும், மற்றொன்று நீலமாயு மிருக்கும்; ஒரு கொத்தின் நட்சத்திரங்கள் பலவித வர்ணங்களுடனும் ஜ்வலிக்கின்றன. என்ன ஆச்சரியம்! இந்த நட்சத்திரங்களைச் சுற்றிவரும் கிரஹங்களுண்டென்று பார்த்தோம். அக்கிரஹங்கள் இரண்டு நட்சத்திரங்களுக்கு நடுவில் இருந்தால், அவைகளுக்குப் பகலிரவு ஏது? ஒரு சமயம் பச்சை வெளிச்சமும், ஒருசமயம் நீலமும் அல்லது சிவப்புமாயிருக்கு மல்லவா? அம்மாதிரியான உலகங்களில் நாம் எக்காலத்தில் வசிப்போம்!

இவைகளைத் தவிர, அநேக நட்சத்திரங்கள் சேர்ந்த கொத்துகளுமுண்டு. இம்மாதிரியான கொத்துகளில் ஆயிரக்கணக்கான சிறிய நட்சத்திரங்கள் சேர்ந்திருக்கின்றன. இம்மாதிரி

யான கொத்துகளில் ஒன்றை நாம் வெறுங்கண்ணால் பார்க்கும்போது, ஒரு சாதாரண நட்சத்திரத்தைப் போலாவது, சுற்றிலும் பிரகாசமாயும் நடுவில் சற்று மங்கலான ஒரு சிறு புள்ளிபோலாவது காணப்படும். ஆனால் கண்ணாடியால் பார்த்தால் அநேக சிறு நட்சத்திரங்கள் சேர்ந்திருப்பதைக் காணலாம். இம்மாதிரியான கொத்துக்கு நட்சத்ரக்குலை என்று சொல்லலாம்.

இவ்வித கொத்துகளைத்தவிர, எவ்வளவு சூட்சமமான தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்தாலும் தனித்தனி நட்சத்திரங்களாகக் காணப்படாமல், ஒருபுகைபோன்ற சேர்க்கையாகக் காணப்படும் கொத்துக்கள் அநேகமிருக்கின்றன. மிக உஷ்ணமான சூர்யன்களாகிய நட்சத்திரங்கள் காடின்ய ஸ்திதியை அடையாமல், ஆவிரூபத்துடன் இருக்கும்போதே இம்மாதிரி சேர்ந்திருப்பதால், நமக்கு இவை ஆவிப் படலங்களாகக் காணப்படுகின்றன. இவை வரவரக் குளிர்ந்து இறுகி அளவு சுருங்க நட்சத்திரங்களாக மாறும் என்று வானசாஸ்திரிகள் நம்புகிறார்கள். இம்மாதிரியே நமது சூர்யனும், அதன் கிரஹங்களும் கணக்கில்லாத வருஷங்களுக்கு முன் ஆவிரூபத்துடன் இருந்திருக்க வேண்டுமென்று அவர் நம்பிக்கை.

சில நட்சத்திரங்கள் எல்லாக்காலங்களிலும் ஒரேமாதிரியாகக் காணப்படாமல், அடிக்கடி பிரகாசத்தில் வித்தியாசப்படுகின்றன; அதாவது சிலசமயங்களில் பிரகாசம் வரவரக்குறைந்துகொண்டும் மறுபடி வரவர அதிகரித்துக்கொண்டும் விளங்கும். இதன் காரணத்தை அறிவது சுலபம். இந்த நட்சத்திரங்களைச் சுற்றி வரும் கிரஹங்கள், இவைகளை மறைக்கும்போது பிரகாசம் குறையவும், இவை ஒதுங்கிப் போகும்போது, பிரகாசம் வரவர அதிகரிக்கவும் காணப்படுகின்றன.

சில நட்சத்திரங்கள் நமக்குக் கொஞ்சகாலம் தோன்றி, மறுபடி முழுவதும் மறைந்தும் போவதுண்டு. சில வாரக்கணக்கிலும், சில மாதக்கணக்கிலும் அழிகின்றன. 1901-ம் வருஷத்தில்கூட கிருத்திகா நட்சத்திரத்திற்கு வடமேற்கில், ஒரு நட்சத்திரம் திடீரெனத்தோன்றிக் கொஞ்சமாதங்கள் வாழ்ந்து மறைந்தது. இம்மாதிரியான அநித்திய நட்சத்திரங்கள் எப்படி உண்டாகின்றனவென்று ஒன்றும் நிச்சயமாகச் சொல்லமுடியவில்லை. நட்சத்திரங்கள் ஒன்றுக்கொன்று மோதுவதால் உண்டாகும் அக்னிப் பிரளயத்தின் காட்சியென்று வானசாஸ்திரிகள் ஊகிக்கிறார்கள். இம்மாதிரி சம்பவங்கள் அடிக்கடி உண்டாகுமென்று தோன்றவில்லை; அப்படி நமது பூமியோடு ஏதாவது மோதினால் அதே இதன் பிரளயகாலமாயிருக்கலாம் அல்லவா? யுகப் பிரளயத்தில் அக்னி மழைபெய்யுமென்பதினாலேயோ?

# இந்திய பூர்வ அரசியல்

## ANCIENT HINDU POLITY

[ஸ்ரீமான் பி.எஸ்.சுப்பிரமணிய ஐயரவர்கள், எம்.ஏ.]

"எனது இக்கட்டளைகளைக் கேட்டபின் அவைகளுக்கு விரோதமாய் நடப்பவர்களைக் கடுந்தண்டனைகளினால் நிச்சயமாய் அழித்துவிடுவேன் என்று அரசன் சொல்லவேண்டும்".

"அரசன் எப்போதும் இராஜாங்கத்தாரால் வரையப்பட்டுள்ள விதிகளைக் குடிகளுக்குத் தெரிவிப்பதுமன்றி, அவைகளைக் காட்டும் விளம்பரங்களை இராஜபாட்டைகளில் வைக்கவேண்டும்." (சகுந்தலா—காளிதாஸன்)

மேற்கூறியவைகளினால் அரசன் தனது குடிகளுக்குப் பொதுவான விதிகளை விதிப்பதுண்டென்று ஏற்படுகிறது. ஆனால் அரசர்கள் புதிய சட்டங்களை விதிக்க அதிகாரமுடையவராயிருந்தாரே யாயினும், தர்மம் என்பது வேதத்திலிருந்தே அறிந்துகொள்ளக் கூடியதாகக் கருதப்பட்டு வந்ததாலும், தர்ம பரிபாலனம் செய்யவேண்டியதே தங்கள் முக்கியமான கடமையென்று இராஜாங்கத்தார் ஒப்புக்கொண்டதாலும், அவர்கள் தங்கள் சட்டங்களை நிர்மாணஞ் செய்யுங்கால், வேதத்திலுள்ள தர்மத்தையே தாங்கள் அடையவேண்டிய மனோபாவமாக வைத்துக்கொண்டதாலும், அரசர்கள் பெரும்பான்மையும் தமது முன்னோர்கள் தங்கள் தங்கள் அரசாட்சியில் செலுத்தப்போவதாகச் சொன்ன சட்டங்களையே தாமும் நிறைவேற்றப்போவதாக விளம்பரஞ் செய்வது வழக்கமாய்ப் போயிற்று.



தற்காலத்தில் மிகவும் நாகரிகம்பெற்றனவாகச்சொல்லப்படும் மேல்நாடுகளெல்லாவற்றிலும் இருவித நியாய சபைகளிருக்கின்றன. ஒருவிதமான நியாயசபைகளில், குடிகளுக்குள்ளுண்டாகும் விவாதங்கள், இராஜாங்கத்தார் விதித்த சட்டங்களையும், தொன்றுதொட்டு அனுசரித்து வரப்படும் வழக்கங்களையும் தர்மத்தையும் அனுசரித்துத், தீர்மானிக்கப்படுகின்றன. மற்றொரு விதமான நியாய சபைகளில், குடிகளுக்கும் இராஜாங்க அதிகாரிகள் முறைமையில் இராஜாங்க அதிகாரிகளுக்கும் ஏற்படும் விவாதங்கள் விசேஷச் சட்டங்களையனுசரித்துத் தீர்மானிக்கப்படுகின்றன. அம்மாதிரியே நமது பூர்வீக இராஜ்யங்களிலும் இரண்டுவிதமான நியாய சபைகளிருந்ததாக அர்த்த சாஸ்திரத்தினால் வெளியாகிறது.

பூர்வத்தில் இராஜ்யங்கள் குறைந்த விஸ்தீரணமுள்ளவைகளாயிருந்தவரை, அரசர்களே நியாய சபையில் உட்கார்ந்து நேரில் நீதி செலுத்திவந்தனர். பிறகு அரசர்கள் பொருது ஜயித்து அபஜயமடைந்தவர்களது நாடுகளைக் கட்டிக் கொண்டதனாலேயோ, அரசர்களுக்குள் உண்டான விவாக சம்பந்தத்தினால் நாடுடன் நாடு சேர்ந்ததனாலேயோ, குடியேறாத விடங்களிற் குடியேறினதனாலேயோ, வேறு காரணத்தினாலேயோ, இராஜ்யங்களின் விஸ்தீரணங்கள் மிகவும் அதிகரித்தபின்னர், அரசர்கள் நேரில் தமது குடிகளனைவருக்கும் நீதியளிப்பது அசாத்தியமான காரியமாய்ப் போயிற்று. ஆதலால், அரசர் தமது நியாய சபைகளில் தமக்குப்பிரதிநிதியாக வீற்றிருந்து விவாதங்களை விசாரித்துத் தீர்மானித்து நீதி செலுத்துவதற்குப் பிறரை நியமித்துவந்தனர்.

அரசன் தனது இராஜ்ய பரிபாலனத்தின் பலனை யறிந்துகொள்ளுவதற்காக, தனது இராஜ்ய முழுவதையும் வருஷத்துக் கொருமுறையேனும் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று சுக்கிரநீதி சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும், அர்த்த சாஸ்திரத்தில் இராஜ்ய பரிபாலனம் சரியாய் நடப்பதற்கு எவ்வாறு அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்து நியமிக்கவேண்டுமென்றும், அவ்வதிகாரிகள் எவ்வெவ்விதமாய்க் குடிகள் விஷயத்தில் நடந்து வரவேண்டுமென்றும், எவ்வாறு இராஜாங்கத்தார் பலவிதமான கைத்தொழில்களைத் தாங்களே நடத்திவந்து, அத்தொழில்களைச் செய்யத் தமது குடிகளைக் கூலியாட்களாக நியமித்து அவர்களுக்குப் பிழைக்கும் வழியொன்று உண்டுபண்ணியும், தங்கள் குடிகளும் அத்தொழில்களைச் சொந்தமாக நடத்தும்பொருட்டு தங்கள் தொழிற்சாலைகளின் மூலம் அவர்களுக்கு வழி தெரிவித்தும், நாட்டுக்கு நன்மை புரியவேண்டுமென்றும், இராஜாங்கத்தார் தமது குடிகளுக்குச் சாகுபடி செய்வதற்கு ஜலாதாரம், பாதை முதலியன விஷயமாய் எவ்வித உதவிபுரியவேண்டுமென்றும்; அதற்காக எவ்வளவு வரி விதிக்கலாமென்றும் விவரமாய்ச் சொல்லியிருக்கிறது. இவைகள் நமது தேசப் பூர்வீக இராஜாங்கத்தார் தமது குடிகளுடன் எப்போதும் எவ்வளவு நெருக்கமாய்ப் பழகிவந்தனர் என்பதை விளக்கி, மேற்கூறிய ஐரோப்பிய நூலாசிரியர் எழுதியிருப்பது சரியல்லவென்பதை நன்குணர்த்துகின்றன.

மேற்கூறிய விஷயங்கள், நமது தேசப் பூர்வீக இராஜங்கத்தார்கள் ஜனங்களின் நன்மையையே பிரதானமாகக் கருதினார்களென்றும், நியாயசபைகளில் சட்டங்களையும் ஆதிகால வழக்கங்களையும் தர்மத்தையும் அனுசரித்து நீதிசெலுத்திவந்தனரென்றும், குடிகளது நன்மையைக்கருதியே வரிகளை விதித்தார்களென்றும், குடிகளுடன் நெருங்கிப்பழகி அவர்களை நல்வழிப்படுத்தி, தீயநெறியிற் செல்லாது தடுத்து வந்தனரென்றும் தெரிவிக்கின்றன. இனி நமது தேசப்பூர்வீக இராஜாங்கங்கள் எவ்வாறு நடைபெற்றுவந்தனவென்பதை விவரமாய்த் தெரிந்துகொள்ள முயலுவோம்.

### அரசிளங்குமரனது கல்விப்பழக்கம்

"தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்னும் முதுமொழியின் உண்மையை நன்கறிந்த நமது பெரியோர்கள், நமது தேசமன்னர்கள் தருமநெறி வழுவாது நடந்து புகழுடன் இராஜ்ய பரிபாலனம் செய்துவரும் பொருட்டு, அவர்களுக்குச் சிறுவயதிலேயே கல்வியை யூட்டி, அவர்களை நன்னெறியிற் பழக்கவேண்டியதற்கு விவரமாகப் பல விதிகளை விதித்தனர். அவ்விதிகள் பல புராணங்களிலிருந்தும், மனுதர்ம சாஸ்திரத்திலிருந்

தும், அர்த்த சாஸ்திரத்திலிருந்தும், திருக்குறளிலிருந்தும், மற்றும் பல புராதனநூல்களிலிருந்தும் வெளியாகின்றன இவ்விஷயமாய் அர்த்தசாஸ்திரத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது :—

ஓர் அரசிளங்குமரனுக்கு மூன்றாவது வயதில் முடியிறக்கினவுடன், மனிதர்களுக்கு இருகண்களைப்போற் சிறந்த எண், எழுத்து இரண்டையும் அவனுக்குக் கற்பிக்கவேண்டும். பதினோராவது வயதில் உபநயனமானவுடன், அவன் மூன்றுவேதங்களையும் ஓதுவதுமன்றி, சிஷ்டர்களான உபாத்தியாயர்களிடம் சாங்கியதத்துவம், யோகம், லோகாயதம் என்பவையடங்கிய ஆன்வீக்ஷகியென்ற சாஸ்திரத்தையும், இராஜாங்கத்தைச் சேர்ந்த தலைமை உத்தியோகஸ்தர்களிடம் வர்த்த சாஸ்திரத்தையும், இராஜநீதி சாஸ்திரத்தை நன்கு கற்றுணர்ந்தவர்களிடத்திலும் அனுஷ்டித்து வருபவர்களிடத்திலும் தண்டநீதி சாஸ்திரத்தையும் கற்றுக்கொள்ளவேண்டும். ஏனெனில், மூன்று வேதங்களினின்றும் தர்மாதர்மங்களைத் தெரிந்து கொள்ளக்கூடும். உலகமானது மூன்று வேதங்களிலுமுள்ள விதிகளின்படி நடத்தப்பட்டுவரின், மேன்மேலும் விருத்தியடைந்து என்றும் அழியாமலிருக்குமென்பது நிச்சயம். ஏனைய சாஸ்திரங்களுடன் ஒத்துப்பார்க்குமிடத்து, ஆன்வீக்ஷகியென்னும் சாஸ்திரமே உலகத்துக்கு மிகுந்த நன்மையைப் பயக்கக்கூடியதாகக் காணப்படுகிறது. ஏனென்றால் அது சுகதுக்கங்களில் மனிதனது மனத்தைச் சலனமற்றதாயும் நிதானமுள்ளதாயுமாக்குவதுமன்றி, வருபயனறிதல், சொல்வன்மை, செய்வன்மை இவைகளில் மனிதனைச் சிறந்தவனாக்குகிறது.

வார்த்த சாஸ்திரமென்பது விவசாயம், கால்நடைகள் அபிவிருத்தி, வியாபாரம் இவைகளைப்பற்றிய சாஸ்திரம். தானியங்கள், கால்நடைகள், தங்கம், காட்டுப்பலன்கள், சுயாதீனமுள்ள தொழிலாளிகள் இவைகளை அடையும் வழியைக் கற்பிக்கிற இச்சாஸ்திரம் மன்னவனுக்கு மிகவும் உபயோகமுள்ளது. ஏனென்றால், வார்த்தசாஸ்திரத்தின் உதவியினால் மட்டுமே அடையத்தக்கவைகளான பொக்கிஷம், சேனை இவைகளினாற்றான் அரசன் தனது திறத்தாரையும் தனது சத்துருவின் திறத்தாரையும் தன் வருதிக்குட்பட்டவராகவேயிருக்கும்படி செய்துகொள்ளமுடியும்.

தண்டநீதி சாஸ்திரமே மேற்கூறியவைகளைவிட மேலானதென்று சொல்லலாம். எவ்வாறெனில், ஆன்வீக்ஷகி சாஸ்திரம், மூன்று வேதங்கள், வார்த்த சாஸ்திரம் இவைகள் நல்ல ஸ்திதியிலிருப்பதற்கும் அபிவிருத்தியடைவதற்கும் அத்தியாவசியமானது தண்டமே (தண்டனை). அத்தண்டத்தைப்பற்றிப் போதிக்கும் சாஸ்திரமே தண்டநீதி (தண்டனைச் சட்டம்) எனப்படும் சாஸ்திரம். சம்பாதிப்பதற்கும், சம்பாதித்ததைப் பத்திரமாய் வைத்துக்கொள்வதற்கும், அதை அபிவிருத்தி செய்வதற்கும், அபிவிருத்தியினாலுண்டாகும் லாபத்தைத் தக்கோர்க்கு அளிப்பதற்கும் இச்சாஸ்திரமே வழியுண்டுபண்ணுகிறது. உலகம் மேம்பாடடைவது முற்றிலும் இத்தண்ட நீதி சாஸ்திரத்தையே பொறுத்ததாயிருக்கிறது. ஆகையால் தண்ட நீதிசாஸ்திரம் அரசனுக்கு இன்றியமையாதது.

அரசிளங்குமரன் மேற்கூறிய வேத சாஸ்திரங்களை ஓதுங்காலத்தில், அதாவது பதினாறு வயதடையும்வரை, விவாகமில்லாமலிருக்க வேண்டும். பிறகுதான் அவன் விவாகம் செய்துகொள்ளலாம்.

அரசிளங்குமரன் தகுந்த ஆசிரியர்களிடம் மேற்கூறிய சாஸ்திரங்களையோதி, சிட்சையிலிருப்பதனாலுண்டாகும் நல்ல பழக்கங்கள் சிறிதும் பலங்குன்றாது நல்ல பலனைத் தரத்தக்கனவாகவேயிருக்கும்பொருட்டு, அவன் சதாகாலமும் சிட்சைப்பழக்கத்தின் உறைவிடமான சகலசாஸ்திர ஞானமுள்ள முதியோர்களுடன் கூடவே காலத்தைக் கழிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் அவன் பின்வருமாறு பயிற்சி செய்யவேண்டும். முன்பகலில் அவன் யானைகள், குதிரைகள், இரதங்கள், படைக்கருவிகள் இவைகள் சம்பந்தமான போர்வித்தைகளைக் கற்றுக்கொள்ளவேண்டும். பின்பகலில் அவன் இதிகாசங்களைக் கேட்டுக்கொண்டிருக்கவேண்டும்.

இங்கு, இதிகாசங்கள் என்ற பதமானது புராணங்கள், மெய்ச்சரித்திரங்கள், கட்டுக்கதைகள், உதாரணமாயுள்ள நீதிக்கதைகள், தர்ம சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம் இவைகளையுணர்த்துகிறது.



இரவிலும் பகலிலுமுள்ள பாக்கிப் பொழுதை அவன் புதியபாடங்களைக் கற்றுக்கொள்ளுவதிலும், பழையபாடங்களைத் திருப்பிப் படிப்பதிலும், நன்றாய் விளங்காதவைகளைப் பலமுறை கேட்பதிலும் கழிக்கவேண்டும்.

இவ்வாறு பழக்கப்பெற்ற அரசிளங்குமரன் தருமநெறி பிறழாது இராஜ்ய பரிபாலனஞ் செய்து பெருங்கீர்த்தி பெறுவது முற்றிலும் திண்ணமென்றே சொல்லலாம். ஆனால் ஆலோசனையிற் சிறந்த பெரியோர்கள், சகல ஆசைகளையும் எளிதில் நிறைவேற்றிக் கொள்ளக்கூடும்படி செய்யும் அரசனது உயர்ந்த பதவியினாலும் அளவற்ற செல்வத்தினாலும் பேரதிகாரத்தினாலும் உண்டாகக்கூடிய அபாயங்களுக்குப் பயந்து, அரசிளங்குமரன் சிம்மாசனத்திலேறி முடிசூட்டப் பெற்ற பிறகும் அனுஷ்டிக்கவேண்டிய சில விதிகளை விதித்திருக்கிறார்கள். அவை அவன் தருமநெறியைக் கடைப்பிடித்தொழுகுவதற்கு உயர்ந்த சாதனங்களாக விருக்கின்றன. இனி அவைகளை ஆராய்ந்து பார்ப்போம்.

## அரசனது கடமைகள்

அரசன் பகலிரவு இரண்டையும் எட்டெட்டுப்பாகங்களாகப் பிரித்து அப்பாகங்களைப் பின்வருமாறு செலவழிக்கவேண்டும்.

### பகல்

முதற் பாகம்—6மணிமுதல் $7\frac{1}{2}$மணிவரை—காவற்காரர்களை நியமித்து, வரவு செலவு கணக்குகளைப் பரீக்ஷிக்கவேண்டும்.

இரண்டாம் பாகம்—$7\frac{1}{2}$ மணிமுதல் 9மணிவரை.-நகரவாசிகள் நாட்டுப்புறத்தவர்கள் இவர்களுடைய சங்கதிகளைக் கவனிக்கவேண்டும்.

மூன்றாவது பாகம்—9மணிமுதல் $10\frac{1}{2}$மணிவரை.— நீராடி, போஜனம் செய்து, பிறகு படிக்கவேண்டும்.

நான்காவது பாகம்—$10\frac{1}{2}$ மணிமுதல் 12 மணிவரை.—தங்கரூபமான இறையைப் பெற்றுக்கொள்வதுமன்றி, இராஜாங்கத் தலைமை உத்தியோகஸ்தர்களது நியமனங்களையும் கவனிக்கவேண்டும்.

ஐந்தாவது பாகம்—12மணிமுதல் $1\frac{1}{2}$மணிவரை.—தூரத்திலுள்ள மந்திரிகளுடைய கடிதங்களைப் படித்து அவர்களுக்குக் கடிதங்களெழுதவேண்டும்.

ஆறாவது பாகம்—$1\frac{1}{2}$மணிமுதல் 3மணிவரை.—தன்னிஷ்டத்துக்கிசைந்த ஆடல்களிற் களிக்கலாம்; அல்லது தனக்குள் தானே யோசனை செய்துகொண்டிருக்கலாம்.

ஏழாவது பாகம்—3மணி முதல் $4\frac{1}{2}$ மணி வரை.—யானைகள், குதிரைகள், தேர்கள், காலாட்படைகள் இவைகளைப் பார்வையிட வேண்டும்.

எட்டாவது பாகம்—$4\frac{1}{2}$மணி முதல் 6மணி வரை.—இராணுவ வேலைகளுக்குரிய பலவிதமான ஏற்பாடுகளைப்பற்றித் தனது சேனாதிபதியுடன் கலந்து யோசனை செய்யவேண்டும்.

பொழுதிறங்கினவுடன், சந்தியாவந்தனம் செய்யவேண்டும்.

### இரவு

முதற் பாகம்—6 மணி முதல் $7\frac{1}{2}$மணி வரை.—இரகசியமாய் அனுப்பப்பட்ட தூதர்களை வரவேற்கவேண்டும்.

இரண்டாம் பாகம்—$7\frac{1}{2}$மணி முதல் 9மணி வரை.—நீராடிப் போஜனம் செய்யவேண்டும்.

மூன்றாவது பாகம்—9 மணி முதல் $10\frac{1}{2}$ மணிவரை.—வாத்தியங்கள் கோஷிக்க பள்ளியறைக்குட் செல்லவேண்டும்.

நான்காவது ஐந்தாவது பாகங்கள்—$10\frac{1}{2}$ மணி முதல் $1\frac{1}{2}$ மணிவரை.—உறங்கவேண்டும்.

ஆறாவது பாகம்—$1\frac{1}{2}$மணி முதல் 3 மணி வரை.—வாத்தியங்களின் ஒலியினால் எழுப்பப்பெற்று, சாஸ்திரங்களில் தனக்கு விதித்துள்ள விதிகளையும், தனது தினக் கடமைகளையும் ஞாபகத்துக்கு வருவித்துக்கொள்ள வேண்டும்.

ஏழாவது பாகம்—3மணி முதல் $4\frac{1}{2}$மணி வரை.—இராஜ்யபரிபாலன சம்பந்தமான நடவடிக்கைகளைப்பற்றிச் சிந்திப்பதுடன் ஒற்றர்களையும் (உளவர்களையும்) விடுக்கவேண்டும்.

எட்டாவது பாகம்—$4\frac{1}{2}$மணி முதல் 6மணி வரை.—தீக்ஷிதர்கள், உபாத்தியாயர்கள், பிரதான குரு இவர்களுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு, வைத்தியன், தலைமைச் சமையற்காரன், ஜோதிடசாஸ்திரி இவர்களைக் கண்டு பேசிவிட்டு, கன்றுடன் கூடிய பசுவையும் காளையையும் சுற்றி வலம் வந்து நமஸ்கரித்து, பிறகு தனது சபாமண்டபத்துக்குட் செல்லவேண்டும்.

# நமது சிறு கதை

## A SHORT STORY FROM TOLSTOY

[ஸ்ரீமதி சீதம்மாள்.]

ஒரு கிராமத்தில் ‘ஸோமன்’ என்னும் பெயரையுடைய ஒரு சக்கிலியன் இருந்தான். அவனுக்கு வீடு, நிலம் முதலிய பூஸ்திதிகள் ஒன்றுமே கிடையா. அவன் தன் மனைவி மக்களோடு, ஒரு குடியானவனின் குடிசையில் வசித்துக்கொண்டு, தன் வேலையினால் கிடைக்கும் வரும்படியைக்கொண்டு ஜீவனம் செய்துகொண்டிருந்தான். அவனுக்கு வரும் வரும்படி, அவர்களின் சாப்பாட்டிற்குச் சரியாகப் போய்க் கொண்டிருந்தது. அக்கிராமத்தில் குளிர் ஜாஸ்தியானதால் தானும், தன் மனைவியும் குளிர் காலத்தில் தரித்துக்கொள்வதற்கு ஒரே ஒரு படித்த கம்பளிச்சட்டை வைத்துக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது அச்சட்டையும் கந்தல் கந்தலாகப் போய்விட்டது. வேறு சட்டை ஒன்று வாங்கவேண்டுமென்று அவர்கள் எண்ணி ஒன்றரை வருஷத்திற்கு மேலாய்விட்டது. அதனால் ஸோமன் குளிர்காலத்திற்குமுன் கொஞ்சம் பணம் மீத்து (ஐந்து ரூபாய்) நோட்டாகத் தன் மனைவியினுடைய பெட்டியில் வைத்திருந்தான். அவன் வேலைசெய்யும் வாடிக்கைக்காரர்களிடமிருந்து எட்டு ரூபாய் அவனுக்கு வரவேண்டியிருந்தது. அதனால் ஒரு நாட் காலையில் சட்டைக்குத் தடித்த கம்பளி வாங்குவதற்காக கிராமத்திற்குப் போக நினைத்து, தன் உட்சட்டையின்மேல் ஒரு தடித்த துணியினாற் செய்த தன் மனைவியின் சட்டையையணிந்து, அதன்மேற் தன் துணிச்சட்டையைப் போட்டுக்கொண்டு, தான் மீத்துவைத்திருந்த ஐந்து ரூபாய் நோட்டைத் தன் சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு, காலைப்போசன மருந்திவிட்டு, ஊன்றுகோலாக ஒரு குச்சியை வெட்டியெடுத்துக்கொண்டு புறப்பட்டான். போகும் வழியில் தனக்குத் தானே பின்வருமாறு எண்ணமிட்டுக்கொண்டு போனான். அப்போதவன் ‘நான் வேலை செய்துகொடுத்தவர்களிடமிருந்து எனக்குச் சேரவேண்டிய எட்டு ரூபாய்களையும் வசூலிப்பேன். நான் வைத்துக்கொண்டிருக்கிற ஐந்து ரூபாய் சட்டைக்குத் தடித்த கம்பளித்துணி வாங்கப்போதுமான’ என்று நினைத்தான். அவன் கிராமத்தையடைந்து ஒரு குடியானவன் வீட்டையணுகி அவனைக் கூப்பிட்டபொழுது அக்குடியானவன் வீட்டிலில்லை. அவனுடைய மனைவி அடுத்த வாரத்தில் பணத்தை நிச்சயமாய்க் கொடுத்துவிடுவதாகச் சொன்னாள். பிறகு ஸோமன் மற்றொரு குடியானவனைக் கூப்பிட்டுக் கேட்டான். ஆனால் இந்த மனிதன் தன் கையில் பணமில்லையென்று சத்தியம் செய்து, ஒரு ஜோடி ஜோடு சீர்படுத்தினதற்குக் கொடுக்கவேண்டிய ஐந்தணாவை மாத்திரம் கொடுத்தான். அதனால் ஸோமன் கம்பளித் துணியைக் கடனாக வாங்கிக்கொண்டு, பிறகு பணம் கொடுத்துவிடலாமென்று எண்ணினான். ஆனால் கடைக்காரன் அவனை நம்பாமல், ‘பணத்தைக்கொண்டுவந்து கொடுத்துவிட்டு, உனக்கு இஷ்டமான துணிகளைப்பார்த்துப் பொறுக்கிக்கொள். எங்களுக்குக் கடன் கொடுத்து வாங்குவது கஷ்டமாயிருக்கிறது’ என்று சொல்லிவிட்டான். அதனால் அச்சக்கிலியன் காலை முதல் அலைந்ததின் பலன், தான் ஜோடு திருத்திக்கொடுத்ததற்காக அடைந்த ஐந்தணாவும், ஒரு குடியானவன் தோலால் ஜோட்டிற்கு அடி தைக்கும்படி அவனிடம் கொடுத்த ஒரு ஜோடி ஜோடுகளைத் தவிர, வேறு அவன் எண்ணிவந்த காரியம் ஒன்றும் முடியவில்லை. அதனால் ஸோமன் நிரம்பவும் மனவருத்தத்தை யடைந்தான். தான் அடைந்த ஐந்தணாவுக்கும் சாராயம் வாங்கிக்குடித்துவிட்டு, கம்பளித் துணியொன்றும் வாங்காமல், வீட்டிற்குத் திரும்பிப் போகப் புறப்பட்டான். காலையில் அவனுக்கு நிரம்பவும் குளிராயிருந்தது. இப்பொழுது அவன் சாராயம் குடித்திருப்பதினால், கம்பளிச் சட்டையில்லாமலிருந்துங்கூட அவனுக்குக் குளிர் தெரியவில்லை. அவன் ஜோடுகளை மூட்டையாகக் கட்டி ஒரு கையில் தொங்கவிட்டுக்கொண்டு, மற்றொரு கையால் பூமியின் மேலுள்ள பனிக்கட்டிகளைத் தன் குச்சியால் விலக்கிக்கொண்டு தளர் நடையாக நடந்துகொண்டு, போகும் வழியில் தனக்குத் தானே பேசிக்கொண்டே போனான். அதென்னவெனில்:—“கம்பளிச்சட்டை யொன்றும் நான் போட்டுக் கொள்ளாமலிருந்துங்கூட எனக்கு இப்பொழுது குளிர் தெரியவில்லை. நான்



கொஞ்சம் குடித்திருக்கிறேன். அது என் ரத்தம் முழுவதும் வியாபித்திருக்கிறது. எனக்கு இனிமேல் கம்பளிச்சட்டை தேவையில்லை. நான் ஒன்றைப்பற்றியும் கவலையெடுத்துக்கொள்ளப்போவதில்லை. நான் ஏன் கவலையெடுத்துக்கொள்ளவேண்டும்? நான் கம்பளிச் சட்டையில்லாமலே வசிக்கக்கூடும். ஆனால் என் மனைவி இதற்குச் சம்மதிக்கமாட்டாள். நான் நாள் முழுவதும் வேலை செய்கிறேன். அப்படி வேலை செய்த கூலியை ஒரே தடவையில் சீக்கிரம் கொடுக்கமாட்டேனென்கிறார்கள். இதென்ன கஷ்டம்! நிஜமாகவே இது எனக்கு நிரம்பவும் கஷ்டமாயிருக்கிறது. இப்படி நான் ஒன்றும் வாங்காமல் வெறுங்கையோடு திரும்பிப்போவதற்கு என் மனைவி நிச்சயமாய் நிந்திப்பாள். நான் என்ன செய்யலாம்? கூலி கொடுக்கவேண்டியவர்கள் ஒரு தடவையில் கொடுர்காமல், 4 அணா, 8 அணா இப்படியாகக்கொடுத்தால் நான் அதையென்ன செய்யமுடியும்? இப்பொழுது அக்குடியானவன் கொடுத்த ஐந்தணாவில் நான் என்ன செய்யலாம்? அதற்குச்சாராயம் வாங்கிக் குடித்தேன். அதுதான் எல்லாரும் செய்வார்கள். பணம் கொடுக்க வேண்டியவர்களோ, கையில் பணமில்லை, நிரம்பவும் கஷ்டமாயிருக்கிறதென்று பஞ்சப்பாட்டுப் பாடுகிறார்கள். அவர்களுக்கு அப்படியிருக்கலாம். ஆனால், என்னைப்பற்றி எண்ணினாலோ, சொல்லவேண்டியதேயில்லை. அவர்கள், வீடு, நிலம், ஆடு, மாடு முதலிய யாவற்றையும் உடைத்தாயிருக்கிறார்கள். எனக்கோ, என் தேகத்திலிருப்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. அவர்கள் சொந்த நிலங்களிலிருந்து, தானியங்களை யடைகிறார்கள். நானோ ஒவ்வொரு தானியத்தையும் வாங்கவேண்டியிருக்கிறது. நானென்ன செய்வேன்? சாப்பாட்டிற்கு மாத்திரம், எனக்கு வாரமொன்றுக்கு ஐந்து ரூபாய் செலவு செய்யவேண்டியிருக்கிறது. அதனால் பணம் கொடுக்க வேண்டியவர்கள் ஒரே தடவையில் கொடுத்துவிட்டாலல்லவோ நலமாயிருக்கும்? அப்படியில்லாமல் என்னை என்னபாடு படுத்துகிறார்கள்?”

இதற்குள், ஸோமன் ரஸ்தாவின் வளைவிலுள்ள ஓர் ஆலயத்தினருகில் வந்து சேர்ந்தான். அவ்வாலயத்தின் பின்புறத்தில் ஏதோ ஒரு வெண்மையான வஸ்து விருப்பதைக் கண்ணுற்றான். பகற்பொழுது மந்தாரமாகவிருந்ததனால், அப்பொருள் ஏதாயிருக்குமென்று, ஊகித்துப் பார்த்து எண்ணமிடலானான்:—

‘இது ஓர் வெண்மையான கல்லாயிருக்கலாமோ?—ஆனால் முன்னாடி இவ்விடத்தில் வெண்மையான கல் இல்லையே! இது ஒரு எருதாயிருக்குமோ? இல்லை, எருதுமில்லை. அதற்கு மனிதனைப்போல தலையிருக்கிறதே! ஆனால் அவ்வுருவம் மிகவும் வெண்மையாயிருக்கிறது. அதையும் தவிர மனிதன் யாது காரணம்பற்றி, இங்கு வந்திருக்கவேண்டும்?’

இவ்வாறு எண்ணிக்கொண்டே, சமீபத்தில் வரவர அவ்வுருவம் ஸ்பஷ்டமாக அவனுடைய கண்களுக்குத் தெரியலாயிற்று. அவ்வுருவம் உண்மையான மனிதனுடையதென்று தோன்றவே, ஸோமன் மிகுந்த ஆச்சர்யத்தை யடைந்தான். அம்மனிதன் உயிர்த்திருக்கிறானோ அல்லவோ என்று ஐயுறும்படி, அவ்வாலயத்தின் பின்புறத்தில், வஸ்திரம் முதலியன ஒன்றுமில்லாமல், ஸ்மரணையற்றுச் சாய்ந்து கொண்டிருந்தான். அதைக்கண்டதும் சக்கிலியன் பயத்தால் வெடவெடத்துப் போய், “யாரோ ஒருவர் இம்மனிதனைக் கொன்று, வஸ்திரம் முதலிய யாவற்றையும் அபகரித்துக்கொண்டு, இப்படி அலங்கோலமாகப் போட்டுவிட்டுப் போயிருக்க வேண்டும். நான் இதில் ப்ரவேசித்தால் நிச்சயயாய் துன்பத்திற்குள்ளாவேன்” என்று எண்ணிக்கொண்டே கொஞ்சதூரம் போனான். அவ்வாலயத்தைத் தாண்டினதும், அம்மனிதன் பின்னால் விடப்பட்டான். சிறிதுதூரம் போனதும் ஸோமன் பின்னால் திரும்பிப்பார்த்தான். அப்பொழுது அம்மனிதன் சுவரில் சாய்ந்து கொண்டிருக்காமல், தலையை நிமிர்ந்து தன்னைப் பார்ப்பதைக் கண்டான். உடனே அச்சக்கிலியனுக்குப் பயம் முன்னிலும் அதிகரித்துத் தனக்குத்தானே எண்ணமிடலானான்:—

‘நான் அவனிடம் திரும்பிப் போகட்டுமா? அல்லது நான் என் வழியே போகட்டுமா? நான் அம்மனிதனின் சமீபம் போனால், ஏதாவது அபாயம் நேர்ந்தாலும் நேரலாம். அம்மனிதன் யாரோ? யார் அறிவார்கள்? ஏதாவது நல்லத்திற்காக இங்கு வந்திருக்கமாட்டான்.

நான் அவன் கிட்டப்போனால் என்மேல் விழுந்து குறவளையைப் பிடித்தால், நான் எப்படித் தப்பித்துக்கொள்வேன்? அப்படியில்லாவிட்டாலும், அவன் ஓர் எளிய பரதேசியாகவிருக்கலாம். இப்படித் திகம்பரமாயிருக்கிற மனிதனுக்கு என்னால் என்ன செய்யமுடியும்? நான் உடுத்துக்கொண்டிருக்கிற துணியை அவனுக்கு என்னால் கொடுக்க முடியாது. இங்கிருந்து போக எனக்கு ஈச்வரன் ஒத்தாசை செய்யட்டும்!".

இவ்விதம் சொல்லிக்கொண்டு வீட்டுக்குப் போவதற்குத் துரிதமாக நடந்தான். சிறிது தூரம் சென்றதும், சடேரென்று அவனுடைய 'மனசாக்ஷி' அவனை மேலே போகவொட்டாமதடுத்து வாதித்தது. 'ஸோமா, நீ என்ன காரியம் செய்கிறாய்? ஒரு மனிதன் சாகுந் தருவாயிலிருக்கும்பொழுது, நீ பயத்தினால் 'நழுவிப்போகிறாயே! திருடனாயிருப்பானென்று பயப்படுவதற்கு உன்னிடம் என்னவிருக்கிறது? நீ அவ்வளவு பணக்காரன் ஆய்விட்டாயா? ஓ ஸோமா உனக்கு வெட்கம் இல்லையா?' என்று அவனை மனசாக்ஷி எழுப்பினது. அதனால்ஸோமன் திரும்பி அம்மனிதனிடம் போனான்.

II

அப்புதிய மனிதனை யணுகினதும், ஸோமன், அவனை உற்று நோக்கினான். அவன் ஒரு யௌவன புருஷனாயிருந்தான். குளிரினால் விறைத்து நடுக்கலெடுத்துப் போயிருந்தானே தவிர, தேகத்தில் காயமொன்றுமில்லை. அம்மனிதன் கண்களைத் திறப்பதற்குக்கூடச் சக்தியற்றுக் களைத்துப்போயிருந்தான். ஸோமன் அவன் கிட்டப்போனதும், அம்மனிதன் விழித்துக்கொண்டிருப்பதாகத் தெரிந்தது. அம்மனிதன் தலையை நிமிர்ந்து, கண்களைத் திறந்து ஸோமனுடைய முகத்தைப் பார்த்தான். அந்த ஓரே பார்வையில் ஸோமனுக்கு அம்மனிதனிடம் மிகுந்த அன்புண்டாய்விட்டது. உடனே, தன் கையிலிருந்த ஜோட்டைக் கீழே வைத்துவிட்டு, தன் இடைக்கச்சையையும், மேற்சட்டையையும் கழற்றி வைத்துவிட்டு, அம்மனிதனைப் பார்த்து 'அப்பா, பேசுவதற்கு இது சமயமில்லை, இச்சட்டையை உடனே அணிந்துகொள்' என்று சொல்லி, அம்மனிதனை மெதுவாகப் பிடித்து எழுந்திருக்க ஒத்தாசை செய்தான். அவனுடைய தேகம் சுத்தமாயும், நல்ல நிலைமையிலிருப்பதையும், கைகளும், கால்களும் நல்ல ஆகிருதியோடிருப்பதையும், அவனுடைய முகம் அன்போடு கூடி அழகாக இருப்பதையும் பார்த்தான். தன் சட்டையை அணியச் சொல்லி அவன் தோளின்மேற் போட்டான். ஆனால் அம்மனிதனுக்குச் சட்டைக்கை எவ்விடமிருக்கிறதென்று தெரியவில்லை. உடனே ஸோமன் சட்டையை அவனுக்குப் போட்டுவிட்டு, தன் இடைக்கச்சையையெடுத்து, அம்மனிதனுடைய இடுப்பைச்சுற்றிக் கட்டினான். தன் கிழிந்த குல்லாவைக்கூட அம்மனிதனுக்குக் கொடுப்பதற்காக யெடுத்தான். ஆனால் அவன் தலை, குல்லாயெடுத்ததும் மிகவும் குளிர்ந்தது. அதனால் தன் தலை வழுக்கையாயிருப்பதால் நிரம்பவும் குளிருகிறதென்றும், அம்மனிதனுடைய தலையில் சுருட்டை சுருட்டையாக மயிர்கள் அடர்ந்திருப்பதால், அவனுக்கு அவ்வளவு குளிராதென்றும் எண்ணி, தன் தலையிலேயே குல்லாவைப் போட்டுக்கொண்டான். அவனுடைய காலுக்கு அணிய ஏதாவது கொடுத்தால் நலமாயிருக்குமென்று எண்ணி, அவனை உட்காரச்செய்து தன்னிடமிருந்த ஜோட்டை அவனுடைய கால்களில் போட்டுவிட்டு, 'ஓ! சினேகிதா! இவ்விடமிருந்து போனால் நீ கொஞ்சம் உடம்பைச் சூடாக்கிக்கொள்ளலலாம். மற்ற சமாசாரம் பிறகு பேசிக்கொள்வோம். உன்னால் இப்பொழுது நடக்கமுடியுமா?' என்று கேட்டான். அதற்கு அம்மனிதன் எழுந்து சோமனை அன்போடு உற்றுநோக்கினானே தவிர ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

"உனக்குப் பேசமுடியவில்லையா?" என்று ஸோமன் கேட்டான். பின்னும் ஸோமன் 'இவ்விடம் நின்று கொண்டிருக்கிறதினால் குளிர் அதிகரிக்கிறது. நாம் வீட்டிற்குப் போகலாம் வா' என்று சொன்னான். இதோ! இந்த குச்சியை வாங்கிக்கொள். நீ நிரம்பவும் களைத்திருப்பதால் இக்குச்சியை ஊன்றிக்கொண்டு நடந்தால் உனக்கு இலகுவாக இருக்கும் என்றான்.

—:o:—

(இன்னும் வரும்.)



# மாதவீகங்கணம்

## நான்காம் பாகம்

### முதல் அத்யாயம்.

(23-ம் பக்கத் தொடர்ச்சி.)

### ராஜஸ்தானம் : க்ஷத்ரிய வீரன்

"மஹாகவி, அத்புதவீரதீரர், பிகானீர் ப்ரபூ வரவேண்டும், வரவேண்டும். ப்ருத்வீ ராஜரே, தங்களைப்போன்ற உத்தம புருஷர்களுடைய வருகையால் அடியேன் அதிக கௌரவிக்கப்பட்டவனாகிறேன்."

"நரேந்த்ரநாத், என்னிடமுள்ள அன்பால் தாங்கள் என்னை அழைப்பித்தது எனக்கு ஒரு பெரிய கௌரவம். சற்று நேரம் இந்தக் கற்பாறையின்மீது உட்காரலாம். காற்றுச் சுகமாய் வீசுகிறது. மத்யாஹ்னமெல்லாம் ஒழிவேயில்லை. இன்றைக்கெல்லாம் மூச்சு விடக்கூட அவகாசமில்லாமல் போயிற்று. இருந்தாலும், நாம் உத்தேசித்த கார்யம் கைகூடியது பெரும் ஸந்தோஷம். இவ்வளவு சிரமப்பட்டு, விஷயங்களை யெல்லாம் த்ருப்திகரமாய் முடித்துவிட்டவராகிய உம்மை, நமது சக்ரவர்த்தியவர்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்."

"இளவரசே, நான் என்ன முடிவு செய்தேன்! அவ்விஷயமாய் ஸகலவிதமான மர்யாதைகளுக்கும் நீரே பாத்ரர். நீர் இருந்து அப்போதைக்கப்போது ஸமயோசித புத்தி கூறி உதவி புரிந்திராவிட்டால், ஹிந்துஸ்தானத்துக்குக் கேவலம் அந்நியனாகும் நான், என்ன செய்திருக்க முடியும்? நீர் நமது பக்கம் ஸாதகமான விஷயங்களை வெகு திறமையுடன் விவரமாய் எடுத்துரைத்து அனைவருக்கும் புத்தியில் படும்படி செய்தீர். ஸபையோரெல்லோரும் மூடத்தனமாய் 'யுத்தம்' 'யுத்தம்' என்று பதறிக் கத்தும்போது நீர் ஸமாதானத்தைப்பற்றியே பிடிவாதமாய்ப் பேசினீர். ஒருவரொருவராகக் கத்தியடங்கிக் கடைசியில் அனைவரும் உமது வழிக்கே வந்தனர்."

"ஆம், நரேந்த்ரநாத், ப்ரதாபஸிங்கைப் போன்ற ஆண்மகனுமுண்டோ? ராணாவின் தகப்பனாரை எனக்கு நன்றாய்த் தெரியும். ராஜபுத்ர ஸ்வதந்த்ரம், ப்ரதாபம், மர்யாதை, மானம் இவற்றிற்குக் கேடு ஸம்பவிக்கக் கூடுமென்ற பயமுள்ளமட்டும் நான் ஸமாதானத்தைப்பற்றிக் கனவிலும் கருதவில்லை. அக்பர் மகிபரவர்களே ராணாவின் சௌர்யத்தை மெச்சினர். தேவிபுர யுத்தம் நடந்த பின்னர் அம்ராக்களும் மன்ஸாப்தார்களும் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்று ஓரே மனதினராய்க் கங்கணம் கட்டிக்கொண்டு பிடிவாதம் பிடித்ததைக்கூட அலக்ஷியஞ் செய்து, சுத்தவீரராம் அக்பர்வள்ளல் யுத்தத்தை நிறுத்திவிட்டனர். ப்ரதாபஸிங் ஸ்வதந்த்ரபங்கம் கிஞ்சித்துமில்லாமல் மனஸ்ஸந்துஷ்டியுடன் நிம்மதியாய்த் தம் கடைசி நாட்களைக் கழித்தனர். ராஜபுத்ர கீர்த்திக்கும், ஸ்வதந்த்ரத்துக்கும் ஒருவித ஹானியுமுண்டாகாது என்ற நம்பிக்கையிருக்க அவருடைய மகன் ஸமாதானத்தை விரும்பாது; சச்சரவை நாடுவது மஹா மௌட்யமான கார்யம்."

"அப்படியிருந்தும், மொகலாய திலகமாகிய அக்பர் பெருமானது அபிப்ராயத்தை ராணாவுக்கு நாம் தெரிவித்தபோது ராஜஸபையிலுள்ளோர் நம்மை எவ்வளவு கேவலமாக எண்ணி ஏசினார்கள்? தைர்யமென்றால் ஸமயம் ஸந்தர்ப்பம் தெரியாமல் முன் வைத்த காலைப் பின் வைக்கமாட்டேனென்று பிடிவாதம் செய்வதன்று. ஸமயமறிந்து சமருக்கெழுந்து வீரதீரமாய்ப் போர்புரிந்து, காலமறிந்து கத்தியை உரையிலிட்டுப் பகைவனுடன் கைகுலுக்கி நட்பாடுவதே உண்மையான தைர்யம். அதுதான் ராஜதந்திரத்தில் கைதேர்ந்த வீரர்களுக்கு அடையாளம்."

"அவர்களுடைய தைர்யத்தைப்பற்றி லவலேசமும் ஸந்தேஹம் வேண்டாம். இந்த இருபது வருஷ காலமாய் நடந்துவந்த ஹடாஹட யுத்தத்தில் காயம்படாத வீரர் ஒருவர் கூடக் கிடையாது. மீவார் ஆக்ரா ராஜ்யங்கள் ஒரு வருஷ இரண்டு வருஷ காலமாகவா போர்புரிந்து வருகின்றன? எத்தனையாண்டுகளாக—எத்தனை நூற்றாண்டுகளாக—அவைகள் இவ்வாறு பொருது வருகின்றன. ஒன்றின்மேலொன்றுக்கு எவ்வளவு பகை உண்டாயிருக்கும்? அவைகளெல்லாம் ஒரு நாள் இரண்டு நாட்காலத்துக்குள் மறக்கற்பாலனவா? சிற்றூர் ராஜ்யம் ராஜபுத்ரர் கைவிட்டகன்றதை அவர்கள் எளிதில் மறந்துவிடுவார்களா?"

"ஆனால் அக்பர் பிடி உடும்புப்பிடி; அவர்

பிடித்ததை எளிதில் கைசோரவிடும் தன்மையரல்லரென்பதை அவ்வீரர்கள் அறியார்களா? அக்பரை யுத்தத்தில் வென்று, சிற்றூரைக் கைப்பற்றுவதென்பது மனுஷ்ய யத்தனத்தில் நடக்கக்கூடிய கார்யமன்றென்பது அவர்களுக்குத் தெரியாதா?"

"முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் முஸல்மான்கள் சிற்றூரைக் கைப்பற்றியபோது அவர்களுடன் கோரயுத்தம் புரிந்து தமது ராஜ்யத்தை க்ஷத்ரியர்கள் திரும்பப் பிடித்துக் கொள்ளவில்லையா? அப்போதிருந்த செளர்யமும் சக்தியும் இப்போது எங்கே போய் விட்டது? அவ்வீரர்களுடைய ஸந்ததியார்கள் தானே இப்போதிருக்கும் ராஜபுத்ர வீரர்களும்? அப்போது விடாமுயற்சியால் பிடித்துக் கொண்ட சிற்றூரை இப்போது ஏன் நாம் மறுபடியும் பிடித்துக்கொள்ளக் கூடாதென்ற நம்பிக்கை மீவார் வாஸிகளுக்கு இராமற் போய்விடுமோ?"

"ராணா புத்திசாலி. சிற்றூரைப் பிடிப்பது அஸாத்யமென உணர்ந்து அவர் ஸமாதானத்துக்கு ஒத்துக்கொண்டார்."

"ஆஹா! ராணா எளிதில் ஸம்மதித்தாரோ? அவ்விஷயம் பரம ரஹஸ்யம். உம்மிடத்தில் தைர்யமாய்ச் சொல்லலாமா?"

"இதற்கு முன் ஒரு விஷயமாய் நான் பரம ரஹஸ்யம் பாராட்டி வருகிறேன். இதுவரைக்கும் அதைப்பற்றி ஓரிடத்திலும் மூச்சு விட்டதில்லை. இப்போதும் அவ்வாறே தாங்கள் கூறும் ரஹஸ்யத்தைப் பத்ரமாய்ப் பாதுகாப்பேன் என்று நான் உறுதியாய்ச் சொல்லக்கூடும்."

"அதை அப்படிப்பட்ட பரமரஹஸ்யமென்று சொல்வதற்கிடமில்லை. அவ்விஷயத்தை யறியாத ராஜபுத்ரர்கள் வெகு சிலரே. ராணா அமார்ஸிங் வேணுமட்டும் யுத்தங்கள் புரிந்திருக்கிறார். அப்பா! என்ன வேளையில் பிறந்தாரோ! ஜனனகாலம் முதல் போர் போரென்று, போரிலேயே ஆயுட்காலமுழுதும் கழிந்து வந்தது. அவருக்கும் சலித்துப் போய்விட்டது, ஆதலால் இன்னும் போர் நடத்த வேண்டுமென அவருக்கு அபிப்ராயமில்லை. அந்தரங்கத்தில் அவர் எப்போது இந்த யுத்தம் ஒழிந்து அமைதியா யிருக்கப் போகிறோமென்று காத்திருந்தார். சக்ரவர்த்தியவர்கள் யாதொரு நிபந்தனையுமின்றி ஸமாதானமளிக்கும்போது அவர் மஹா த்ருப்தி யடைந்தார். ஆனால் ஒரு தடங்கல் ஏற்பட்டது."

"என்ன தடங்கல்? தனது தந்தையாரின் பழய துணைவர்கள் மந்த்ரிகள் முதலியோர் மனஸ்தாபப்படுவார்க ளென்பதா?"

"இல்லை, பித்ருவாக்ய பரிபாலன விஷயமாய்த் தொந்தரவேற்படாது, தகப்பனார் சாந்தருவாயி லிருக்குங்கால், தான் அவருக்கு உறுதி கூறியுள்ள ப்ரதிஜ்ஞைக்குப் பங்கம் ஏற்படுமே என்று அவர் சிந்தித்தார்."

"ஹா?"

"சிறிதும் பொய்யில்லை. சிற்றூரைத் திரும்பப் பெறுமல் உடன்படிக்கைக்கு ஸம்மதிப்பதென்பது, நூறு யுத்தங்களில் வாகைமாலை சூடியவரான ப்ரதாபஸிங்குக்குக் கர்ண கடோரமா யிருந்தது."

"அவ்வாறேதான் நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்."

"மரணாவஸ்தையில்கூட அவர் அதுவே கவலையா யிருந்தார். மீவார் ராஜ்யத்துச் சிறந்த வீரர்கள், ப்ரதானிகளனைவரும் அங்கு கூடியிருந்தனர். தமது மகனை யழைத்துச் சிற்றூரைக் கைப்பற்றும் அவர்களுடைய உத்தேசத்தை யொழிப்பதில்லையெனச் சபதஞ் செய்யச் சொன்னார். இளவரசாகிய அமார்ஸிங் அவ்வாறே செய்வதாக உறுதிமொழி கொடுத்த பின்னர்தான் ப்ரதாபஸிங் நிச்சிந்தையாய் வீரஸ்வர்க்கஞ் சென்றனர்."

"அப்படியானால் இளவரசர் ப்ரதிக்ஞைக்கு இப்போது பங்கம் ஏற்பட்டதே?"

"க்ஷத்ரிய தர்மம் அறியீரோ நீர்? ஒருதரம் கொடுத்த வாக்கை எப்போதும் தட்டாதவர்கள் ராஜபுத்ரர்கள். ஸமயம் வாய்த்தபோது சிற்றூரைத் தான் கைப்பற்றிக் கொள்வதற்குச் சக்ரவர்த்தியவர்கள் ஸம்மதித்ததின் பேரில் தான் அமார்ஸிங் ஸமாதானத்துக்கு வந்தார்."

"நமது சக்ரவர்த்தியவர்களா அவ்வித நிபந்தனைக்குட்பட்டார்!"

"மொகலாய ஸாம்ராஜ்யம் உள்ளளவும் அவ்வித ஸந்தர்ப்பம் ஏற்படாதென்ற தைர்யத்தின்பேரில் அவர் ஒத்துக்கொண்டார்."



இருவரும் யோசனையிலாழ்ந்து சற்றுநேரம் சும்மா விருந்தனர்.

"நரேந்த்ரநாத், நாளை ஸூர்யோதயத்துக்கு முன்னரே நான் என்னூர் பிகாநீருக்குப் புறப்படப் போகிறேன். இதர க்ஷத்ரிய குலத் தலைவர்கள் பலரைப்போல் நானும் அக்பர் ஊழியத்தில் நெடுங்காலம் கழித்துவிட்டேன். இனி என் ஸ்வதேசம் சென்று எனது ப்ரஜைகளைப் பரிபாலிக்க வேண்டியது என் தர்மம். சக்ரவர்த்தியவர்களுடைய ஸபையும் ஸமூகமும் ஆனந்தமாய்த்தா னிருக்கின்றன. அவரும் அன்பும் ஆதரவுமாய்த்தா னிருக்கிறார். ஆனால் ஆக்ராவின் அளவிறந்த ஆட்டம் பாட்டங்கள், வேடிக்கை விநோதங்களைவிட ராஜபுத்ரனுக்குப் பதின்மடங்கதிக பாந்தவ்யமுள்ளது ராஜஸ்தானம். 'ஜநநீ ஜந்ம பூமிஸ்ச ஸ்வர்க்காதபி கரீயஸீ' என்னும் வாக்கியம் என்றைக்காவது பொய்க்குமா?"

"அரசிளங்குமாரரே, எவ்வளவோ ஸந்தோஷகரமான ராஜஸபையின் கேளிக்கை விநோதங்களுக் கிடையிலும் தம் ஸ்வதேச, ஸ்வஜனங்களை மறக்காமல் உண்மையான க்ஷத்ரிய தர்மத்தை யவலம்பிக்கும் உம்மைப் போன்ற தேசாபிமானிகள் வெகு சிலரே."

"நான் பிறந்து வளர்ந்த நாடு, எனது உற்றுருறவினர்கள், ஸேனாவீரர்கள், அன்பார்ந்த எனது கண்மணிகளாம் குடிகள் இவர்களையே மறந்து விடுவேனானால் க்ஷத்ரியரெனச் சொல்லிக்கொள்ளச் சற்றும் அருகனாவேனோ யான்? நரேந்த்ரநாத், உமது பந்துமித்ரர்களையும், ராஜ்யத்தையும் இவ்வளவு காலமாய் விட்டுப் பிரிந்திருப்பதை நினைத்து நீர் அடிக்கடி வ்யஸனமுறுவதில்லையா?"

நரேந்த்ரன் பெரு மூச்செறிந்தான்; முகவிலாஸம் மாறியது. வாய்விட்டுப்பேச முயன்றான். குரல் வெளிக் கெழும்பவில்லை. "என் ராஜ்யமா! எனது ப்ரஜைகளா! நான் இப்புவியில் கேவலம் ஒரு நாடோடியாய்த் திரிகின்றேன். எனது பாட்டனார் ராஜ்யம் இன்னும் என்னுரிமையி லிருக்கிறதா, இல்லையா என்பதுகூட எனக்குத் தெரியாது."

"அப்படி யொருவேளை உமது பித்ரார்ஜ்ஜித ராஜ்யம் போய்விட்டிருந்தால்தா னென்ன? சக்ரவர்த்தியவர்களிடம் உமக்களிக்க ஜாகீர்களில்லாமல் போய்விட்டனவா? கீழ்த்திசையில் வங்காளக்கடலைச் சார்ந்த ஓரிஸ்ஸா மாகாணம் முதற்கொண்டு மேற்கே இமயமலைக்கப்பாலுள்ள ஆப்கானிஸ்தானம் வரைக்கும் இடையிலுள்ள ப்ராந்த்யங்களொவ்வொன்றிலும் அவருக்காகப் பல்வேறு ஸமயங்களில் பொருது வீரக்கழல் புனைந்துள்ள விஜயவீர சிகாமணியாகிய உமக்கன்றி வேறெவருக்குச் சக்ரவர்த்தியவர்கள் ஸந்மானமளிக்கப்போகிறார்?"

"இந்த முந்நூறு வருஷகாலமாக எனது முன்னோர்கள் அனுபவித்து வருவதும், நான் பிறந்து வளர்ந்ததுமாகிய அந்த ஜாகீருக்குப் பதிலாகப் பத்து ஜாகீர்கள் ஒருங்கே அளித்தாலும் நான் அங்கீகரிக்கமாட்டேன். இப்போது தான் சொன்னீரே, அந்த வாக்யத்தை மறந்துவிட்டீரோ? நானும் உம்மைப்போன்ற மனிதஜன்மந்தானே. எனக்கு மாத்ரம் ஜன்மபூமியென்ற பற்று இராமற்போய்விடுமோ? ஏகாந்தமாயிருக்கும் வேளைகளிலும், உலக வ்யாபாரமெல்லாமடங்கி நிச்சப்தமாயிருக்கும் நல்ல நிசி வேளைகளிலும் பால்யத்தில் என்னுடன் அதிக அந்யோந்யமாயிருந்த நண்பர்கள் சிலரின் ஞாபகம் எனக்கு அடிக்கடி வந்துகொண்டிருக்கிறது."

"அந்த ஞாபகந்தான் தேசப்ரஷ்டனுக்கு அருந்துணையாவது. நல்ல கவிச்ரேஷ்டர்களுடைய அரிய ஸாமர்த்யங்களை உலகத்தாருக்கு வெளிப்படுத்தற்பொருட்டுத் தோன்றுகிற்கும் வரப்ரஸாதமும் அந்நினைவேதான்."

"ராஜகுமாரரே, உம்மைப்போல் வரப்ரஸாதம் எனக்கொன்றுமில்லை. கவிபாடி நான் கனவிலும் அறியேன். அவ்வித பழய நினைவுகளால் வாய்திறவாமல் மனமழுந்தி ஏங்கி நிற்பதுதான் நான் கண்ட பலன். அதிருக்கட்டும், இப்போது கவிச்ரேஷ்டரென்னவே ஞாபகம் வந்தது. நீர் இப்போது புதிதா யியற்றிருக்கின்றீராமே ப்ரதாபஸிங் சரித்ரம்? அரண்மனையிலெல்லாம் அதைப்பற்றி அதிக ப்ரபலமாய்ச் சொல்லிக்கொண்டார்களே. சக்ரவர்த்தியவர்கள்கூடச் செவிசாய்த்துக் கேட்டனராமே."

"நரேந்த்ரநாத், நானென்ன அல்பன்! என் பாடலுக்கென்ன அவ்வளவு ப்ராபல்யமும் சிறப்பும்? ஸரஸ்வதீ தேவியின் கடாக்ஷம் பெற்று அத்தேவியின் ப்ரஸாத மகிமையால் நதீப்ரவாஹம்போல் தங்கு தடையின்றி

பாடும் திறனுள்ள கவீச்வரர்கள் பலரிருக்க என் கவிகள் எம்மூலை? ஏதோ என் மனம் அவ்வழிச் செல்வதால் நான் இரண்டொரு பாடல்களைப் பிதற்றுகின்றேன். சக்ரவர்த்தியவர்கள் தம் ஊழியனை உற்சாகப்படுத்தவேண்டுமென அவ்வாறு மெச்சிப்பேசுகிறார்.”

“இளவரசரே, தேவி தங்களுக்கு அளித்திருக்கும் அரிய சக்தியைப்பற்றித் தாங்கள் அதிகத் தாழ்வாகப் பேசிக்கொள்கிறீர்கள்.”

“நான் ஆக்ராவிலிருந்தபோதும் கேள்வியுற்றிருக்கிறேன்; ஆப்கானிஸ்தானம் சென்றேன், அங்கும் கேள்விப்பட்டேன். எங்கு சென்றாலும் தங்கள் நாமதேயத்தை யறியாதவர்களே கிடையாது. அனைவரும் உம்மையொரு மஹா கவியெனப் பாராட்டிக்கொண்டிருக்க நீர் ஏன் இவ்வாறு உங்கள் ஸாமர்த்யத்தைக் குறைத்துப் பேசிக்கொள்ளவேண்டும்?”

“ஜனங்கள் சொல்வதை யொரு பெரிதாகக் கொள்ளவேண்டாம். ராஜவம்சத்தி லுதித்தவன் பாடல்கள் பாடுகிறானென்றால் அப்பாடல்கள் எவ்வளவு இனிமையற்றனவா யிருப்பினும் ஸரி, ஜனங்கள் மெச்சித்தான் பேசுவார்கள். ஆதலால் அவர்கள் சொல்வதைக் கவனிக்கக்கூடாது. நரேந்த்ரநாத், உண்மையில் ரஸமான பாடல்களைக் கேட்கவேண்டுமென்றிருந்தால், அப்போதைக்கப்போது ஜனங்கள் மனதிலுதிக்கும் அவாக்கள், எண்ணங்கள், நோக்கங்கள் இவற்றைத்தலைமுறை தலைமுறையாகப் பாடியவற்றை, என்றும் சிரஞ்சீவியாக நிலைநிறுத்தவேண்டுமென்ற கருத்துடன், ஈசுவரனுடைய திருவருட் ப்ரஸாதத்தால் உலக ரக்ஷணார்த்தம் சிருஷ்டிக்கப்பட்டு, ஊரூராய்த் திரிந்து நாடு முழுவதும் அப்பாடல்களைப் பரவச் செய்யும் எளிய பாடகர்கள் பாடுவதைக் கேட்கவேண்டும். அவைதான் ரஸமான பாடல்கள். என்றும் சிரஞ்சீவியாயிருப்பனவும் அவைகள்தான். அப்பேர்ப்பட்ட கவிசிரேஷ்டர்களைத் தர்சித்து அவர்களுடைய வாயினின்று அப்பாடல்களைக் காதுக்கினிமையாய்க் கேட்டுக் களிக்கவேண்டும். ராஜஸ்தானத்திலிருந்த பூர்வகால சாரணர்கள் பாடல்களை அன்னஹார மின்றி நாளெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கலாம். கபீர்தாஸ் என்னும் புண்ய புருஷரியற்றிய பாடல்களும் துளஸீதாஸ் மஹர்ஷியவர்களின் கவிகளும் இப்பாருள்ளமட்டும் ஜீவித்திருக்கும் தன்மையனவாகும்.”

“இருந்தாலும் தாங்களியற்றிய அந்த ப்ரதாபஸிங் சரிதையைக் கேட்கவேணுமென்று எனக்கு அதிக ஆவலாயிருக்கிறது. ப்ரதாபஸிங்கின் வீரச் செய்கைகளைக் கண்ணுற்றிருக்கும் இப்பர்வதங்களும் இனிமையாய்க் கேட்கும். இப்போது வீசும் இளங்காற்றும் அப்பாடலை வெகு தூரம் ரமணீயமாய்க் கேட்கச் செய்யும். தயவுசெய்து ஒரு தரம் பாடிக் காண்பிக்கவேண்டும்.”

“நரேந்த்ரநாத், நீர் சாதாரணமாய்ப் பேசுவதே கவிமயமா யிருக்கிறது. நீர் வெகு சீக்ரத்தில் அத்துறையில் பாண்டித்யமும் கீர்த்தியும் பெற்று விளங்குவீர். நீர் இவ்வளவு தூரம் நிர்ப்பந்திப்பதால் நான் பாடுகிறேன். என்னுடன் ஊரூராய் ஒரு சிறு வாலிபன் திரிந்துகொண்டிருக்கிறான். அவனுக்கு வீணையில் நல்ல ஞானம் உண்டு. நான் பாடும்போது அவன் வீணை வாசித்து வருவான்.—ஜம்ஷீத், இங்கேவா.”

ப்ருத்விராஜருடன் நரேந்த்ரநாதருடைய பாசறைக்கு வந்த அந்த வாலிபன் உள்ளே வந்து நமஸ்கரித்து நின்றான்.

“போய் வீணையை யெடுத்துக்கொண்டுவா. நமது நண்பர், ப்ரதாபஸிங் சரிதையைப் பாடிக் கேட்கவேண்டுமென்கிறார்.”

அவ்வாலிபன் மறுபடியும் வந்தனம் புரிந்துவிட்டு வெளியே சென்றான்.

“அச்சிறு பையனுக்கு வீடு கிடையாது, வாசல் கிடையாது; தாய் கிடையாது, தகப்பன் கிடையாது; பரமதரித்ரம். இருந்தாலும் ஸங்கீத ஞானமோ அபாரம். ராஜபுத்ரபாஷை இன்னும் அவனுக்கு ஸரியாய்த் தெரியாது. இருந்தாலும் ஏகாந்தமாய் உட்கார்ந்து அவனுக்கே உல்லாஸம் பிறந்து வீணையை யெடுத்து வாசிக்கத் தொடங்கிவிட்டால், கல்லும் கசிந்துருகும். எப்பேர்ப்பட்ட சாரணரும் அவனுக்கு இணையாக மாட்டார்கள்.”

சுற்று ப்ரதேசமெல்லாம் காட்டாந்தகாரம். நாலாபக்கமும் மலைகள். எங்கும் நிச்சப்தம். மந்தமாருதம் மெதுவாய் வீசிக்கொண்டிருக்க ப்ருத்விஸிங் பாட்டுக்கிணைய ஜம்ஷீத் வீணையை யெடுத்து ஆனந்தமாய் வாசிக்க ஆரம்பித்தான்.



இரண்டாம் அத்தியாயம்

## பாலபாடகன்

கூடாரத்துக்குள் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. ஸங்கீதக் கச்சேரி முடிந்தவுடன் போர்வீரர்களிருவரும் உள்ளே வந்து இன்சுவையுள்ள சிற்றுண்டியை உட்கொண்டு வெற்றிலைப்பாக்குப் போட்டுக்கொண்டார்கள். சமையல்காரன் சுத்தி செய்துவிட்டுப் போய்விட்டான். நரேந்த்ரநாத், ப்ருத்விராஜர் இருவருமே கூடாரத்துக்குள் அமர்ந்திருந்தனர். ஜம்ஷீத் வெளியே உட்கார்ந்திருந்தான்.

ப்ருத்வி ராஜர் ஷெர்பத் ஆநந்தத்தில் மூழ்கித் தன் நண்பருடன் அதிக உல்லாசமாகக் காலங்கழித்துக் கொண்டிருந்தார். அவருக்கு மிதமீறிக் குதூஹலம் உண்டாய் விட்டது. தூண்டுதல் வேண்டுதலொன்றுமின்றித் தாமாகவே பலபாடல்கள் பாடலானார். தேர் நிலையைவிட்டுப் பெயர்வதுதான் கஷ்டம்; பெயர்ந்துவிட்டாலோ பரபரவென்று ஓடும். அவ்வாறேயாகும் பாடகர்களுடைய ஸமாசாரமும். முதல் ஒன்றிரண்டு பாடல்கள் பாடச்சொல்வது அதிக கடினம். அப்புறம் அவர்களுக்கே உத்ஸாஹம் உண்டாய்விட அவர்கள் தங்களையறியாமலேயே பாடிக்கொண்டு போவார்கள்.

“நரேந்த்ரநாத், எங்களுடைய ராஜபுத்ரப் பாடல்களின் குணகுணங்களைக் கண்டறிவதில் நீர் அதிக சதுரராயிருக்கிறீரே? க்ஷத்ரிய குலத்திலேயே பிறந்தவர்கள் கூட உம்மைப் போல் அவ்வளவு சீக்ரமாய் அக்குணகுணங்களைக் கண்டறியமாட்டார்கள். நமது சக்ரவர்த்தியவர்கள் அதிகமாய்ப் புகழ்ந்து பேசிய அதே அடிகளையே நீரும் மெச்சுகின்றீர். வங்காளத்தில் ராஜா மான்ஸிங் ஸபையில் ஒருவேளை நீர் என் பாடல்களில் இரண்டொன்றைக் கேட்டிருக்கலாம். ஒரு முறை கேட்கும்போதே உமக்கு அப்பாடல்களின் உண்மையான யோக்யதை விளங்கிவிடுகிறது.”

“ஆஹா! ராஜாமான்ஸிங் ப்ரபுவுக்கு வங்காளத்தில் ஸங்கீதம் கேட்டாநந்திக்கத்தானே அவகாசமிருந்தது. ஆப்கானியர்கள் பாடின பாட்டே போதுமே!”

“அப்படியானால் பாடல்கள் உமக்குத் தாமாகவே வருகின்றன போலும்! கீழ்நாட்டாரே பாடல்கள், காதல் முதலிய துறைகளில் அதிக ஸாமர்த்யவான்களெனக் கேள்விப்பட்டிருக்கிறேன். அது உண்மைதானே? பாடல்களில்தான் உம்மை வெல்பவர்கள் கிடையாதென்பது தெளிவாகிறது. காதல் துறையில்கூட அவ்வாறு அநுபவமுண்டோ?”

பிகாநீர் ப்ரபுவுக்குக் குதூஹலம் அதிகரித்து விட்டது. ஷெர்பத் ஒரு கோப்பையாயிற்று; இரண்டு கோப்பையாயிற்று; மூன்றாயிற்று;—அவர் த்ருப்தியடைய வில்லை. ஷெர்பத் அதிகரிக்கக் குதூஹலம் அதிகரிப்பதும், குதூஹலம் அதிகரிக்க ஷெர்பத் அதிகரிப்பதுமாயிருந்தது. நரேந்த்ரன் தன் விருந்தினருக்குத் தன் முகத்தைக் காட்டக் கூடாதென்று வீணே பலவாறாக ப்ரயத்னப்பட்டான். ப்ருத்விராஜரோ அவரை அவ்வளவு எளிதில் விடுவதாய்த் தோற்றவில்லை.

“நண்பரே, இந்த வ்ருதா முயற்சிகளேன்? உமது நிஷ்களங்கமான வதனத்தில் தோன்றும் வ்யஸனக்குறி அவ்வளவு எளிதில் மறைத்துக் கொள்ளக் கூடியதல்ல: யுத்தப் பயிற்சியில்போலவே, காதற்பயிற்சியிலும் தாங்கள் பெற்ற ஜயங்களைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் என் செவிகளில் விழுந்திருக்கக் கூடும்.”

“ப்ருதவி ராஜ், சொல்வாருக்கென்ன, உலகம் சொல்வதெல்லாம் நிஜமாய் விடுமா? காதல் விஷயமாய்ப் பெருமை கூறிக்கொள்ள எனக்கு எவ்வித ஹேதுவுமில்லை. ஆக்ரா அரண்மனை ரமணீமணிகள் அரசிளங்குமாரர்களைக் காதலிப்பரோ அல்லது என்னைப்போல் திக்கற்றுத் திரியும் நாடோடிகளின்மீது தங்கள் நோக்கங்களைச் செலுத்துவார்களோ?”

“அரண்மனை ஜனனவுக்குள் செல்லும் பாக்யமுடைய யௌவன ஸுந்தர புருஷனுடைய அதிர்ஷ்டம் அரசிளங்குமாரர்களுக்கேது?”

“நான் ப்ரஞ்ஞையற்றுப் படுகிடையிலிருந்த நிலையில் ஆம்பர் விருந்தாளி மந்திரத்துக்குக் கொண்டு போகப்பட்டேன். அவ்விஷயம் மறந்து விட்டதோ? நீர் நல்ல அதிர்ஷ்டசாலி, உலக வதந்தி உண்மையாயின் பிகாநீர் ராஜகுலக் கவிஸ்ரேஷ்டரைக் கண்டு புன்முறுவல் செய்யாத ஸௌந்தர்யவதியே ஆக்ரா அரண்மனையில் கிடையாதாமே?”

ப்ருத்விராஜருக்கு அதைக் கேட்டவுடன் ஆநந்த பரிபூர்ணமாயிற்று. தம்மைப்பற்றித் தமது நண்பர் இவ்வளவு புகழ்ச்சியாய்ப் பேசியதைக் கண்டு ஒருவித பெருமையடைந்தவராய் "இருந்தாலும் இருக்கலாம். ஆனால் என் கேள்விக்கு அது உத்தரமாக வில்லையே. அரண்மனை வாஸிகள் அனைவருக்குள் அழகிற் சிறந்தவர்கள் அவ்விடத்திய அடிமைப் பெண்களாமே; அவ்வடிமைப் பெண்களிலொருத்தி—அவள் அதிரூப வதியாம், அதிக கம்பீர ஸௌந்தர்ய நாரீமணியாம், தார்த்தரி நாட்டினளாம்;—அப்பேர்ப்பட்டவள் ஒரு யௌவன வீரபுருஷனுக்குச் சுசுரூஷை செய்து வரும்போது நாளடைவில் அவனிடம் மோகபரவசமாயினளாம். எனக்கென்ன தெரியும்? அரண்மனை வதந்தி; ஊரார் சொல்லிக்கொள்வது தான்! ஹா, உமது முகம் ஏன் மாறுதலடைகின்றது? என் வார்த்தைகள் அத்தனையும் வாஸ்தவந்தான் போலும்!"

"இளவரசரே, இதுவரைக்கும் எவர் மனதையும் நாடியாவது என் வசப்படுத்தியாவது அறியேன் யான். அந்நியர்கள் அரண்மனைக்குள் ப்ரவேசிப்பது ஆபத்துக் கிடமான விஷயம்: உடம்பு சிறிது குணப்பட்டவுடன் தலை தப்பியது தம்பிரான் புண்யமென்று நான் வெளியேவந்து விட்டேன்."

"ஆபத்தா, அபாயமா? அரண்மனை வாஸிகளுடைய தர்சனம், அவர்களுடைய நட்பு முதலியவை கிடைப்பதென்றால் பயம் கூட மனதில் தோன்றுமா? ராணிமார், பீகங்கள் இவர்களுக்குப் பணிவிடை செய்யும் கருவிழியாளர்களைப்பற்றிய அந்தரங்கங்கள் எனது நண்பருக்குத் தெரிந்திருக்கலாம்."

"வ்யாதியஸ்தனுக்கு அடிமைப் பெண்களைக் காணும் ஸந்தர்ப்பமேது?"

"அடிமைப்பெண்கள் எல்லாரையும் பார்க்க முடியுமா? எப்போதும் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? ஏதாவது சில ஸமயங்களில் எவளாவது நவயௌவன ஸ்த்ரீகளிலொருத்தியை—இவையெல்லாம் வெளிக்குச் சொல்லிக்கொள்ளும் விஷயங்களா? இலைமறைவு காய் மறைவாயிருக்கும். அரண்மனை அடிமைப் பெண்களுள் அதிரூப ஸௌந்தர்யவதியா மொருத்தி, சில மாஸங்களாகக் காணவில்லையாம். ஜோத்பாய் ராணியாருக்கு அப்பேர்ப்பட்ட பெண் கிடைப்பது வெகு அரிதாம், போனவளைத் திரும்பப் பிடித்துவருவது எளிதில் நடக்கக்கூடிய கார்யமன்றாம். ஊரார் வாய் சும்மாவிருக்கிறதா? இதை வெளியில் சொல்லலாம், இதைச் சொல்லக் கூடாது என்பது அவர்களுக்குத் தெரிகிறதா?"

நரேந்த்ரருக்கு மனதில் பயம் தோன்றியது. சிறிது கஷ்டப்பட்டுப் புன்னகை புரிந்து அப்பயத்தை மறைத்துக் கொள்ள முயன்றார்.

"அம்மஹாராணியார் காணமற் போன தமது அடிமைப் பெண்களைப் பற்றி அநேகமாய்த் தம் நண்பர் பிகாநீர் இளவரசரையழைப்பித்துச் சில கேள்விகள் கேட்டாலும் கேட்கலாம். அவரைவிட இவ்விஷயத்தை நன்கறிந்தவர் வேறெவ ரிருக்கின்றனர்?"

இவ்வாறு தன் காதல் விஷயங்களைப்பற்றி ப்ரஸ்தாபித்ததைக் கேட்டுக் களிப்புற்று அதிக பெருமையடைந்தவராய்ப் பிகாநீர் ப்ரபு "கேட்டாலும் கேட்கலாம். நாம் அதற்குப் பதில் சொன்னாலும் சொல்லலாம். அதைப் பற்றி யென்ன? இப்படி யெல்லாம் பேசி மெள்ள மெள்ள என்னிடமிருந்து தப்பித்துக் கொண்டு விடலாமென்று பார்க்கிறீரா? உயர்ந்து வளர்ந்த உருவமும் கயலைப்போன்ற கண்களுமுடைய தார்த்தரிப்பெண் ஒருத்தி அரண்மனையிலிருந்தனளாமே? அவள் இப்போது எங்கேயிருக்கிறாள்? அகப்பட்டுக் கொண்டீரா பேர்வழி? பார்வையைப்பார். தார்த்தரிப் பெண்ணென்னும்போதே அந்தத் திருட்டு விழி எங்கிருந்தோ வந்துவிடுகிறதே?"

"இளவரசரே, சற்றுப் பெரிய மனது செய்ய வேண்டும். அரண்மனையை விட்டோடிப் போகும் அடிமைப் பெண்கள் ஒவ்வொருத்திக்கும்—அவள் ராஜபுத்ர, பாரஸீஹ, ஹிந்துஸ்தானி, தார்த்தரி எத்தேசத்தினளாயினும் ஸரி—ஆக்ராவில் வந்திருக்கும் அயல் தேயத்தான்தான் உத்தரவாதியா?"

"நல்ல நிசியில், ஒரு பெண்ணைத் தூக்கிக் குதிரைமீது போட்டுக்கொண்டு மணிக்கு நாற்பது மைலென ஆக்ராவை விட்டுப் பறந்தோடும் பேர்வழி விஷயமாய் என்ன பெரிய மனது செய்வது? தூக்கிக்கொண்டுதான் போனானே, நல்ல நிசியிலா? அதுவும் அமாவாஸ்யைக் கறுக்கல்; அவனுக்கு நல்ல வெண்ணிலவு தினம் அகப்படவில்லையா? நண்பரே, இந்த ஸமாசாரம் ஒன்றும் உங்கள் செவியில் விழவில்லையா?"

ஒரு விசித்ர சப்தம்—கீச்சென்ற கதறல், ஒரு விசித்ர சிரிப்பு—கூடாரத்தின் வெளியினின்று கேட்டது.

"ஜம்ஷீத், அடே ஜம்ஷீத், அது என்ன சந்தடி?" ஜம்ஷீத் கூடாரத்துக்குள் வந்து யஜமானரை வணங்கி நின்றான்.

"இப்போது கேட்டதே அது என்ன சப்தம்? யாராவது மனிதர்கள் கூடாரத்துக்கருகே இருக்கிறார்களா என்ன? மனிதர் குரல்மாதிரிதான் இருந்தது?"

"ப்ரபு, ஒருவரையுங் காணோமே?"

"ஸரி, ஜாக்ரதையாய்ப் பார்த்துக் கொண்டிரு. கூடாரத்துக்கு ஸமீபமாய் ஒருவரையும் வரவொட்டாதே. நரேந்த்ரநாதருடைய காவற்காரனையும் ஜாக்ரதையாயிருக்கச் சொல்."



# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

# Ladies' Pages

## தமயந்தி : (9) பாழ் மண்டபம்

*எங்காம் புகலிடமென் றெண்ணி யிருள்வழிபோய்*
*வெங்கா னகந்திரியும் வேலைதனில்—அங்கேயோர்*
*பாழ்மண் டபங்கண்டான் பால்வெண் குடைநிழற்*
*வாழ்மண் டபங்கண்டான் வந்து.* [கீழ்

தனது நாட்டு மக்களுடைய கண்கள் தொடர, நளன் புறப்பட்டு ஊருக்கு வெளியானான். மதிமயங்கி நடந்த கணவனைப் பின்தொடர்ந்தே தமயந்தியும் அவனோடு வந்தாள். சீலமும் குணமும் நிறைந்த அவ்விருவரும் அற்றதும், நளனது நகரம் அழகு குன்றஆரம்பித்து விட்டது; அது தருமநிலையமா யிருப்பதொழிந்து கொடும் புலிவாழுங் காடாகவே ஆகிவிட்டதென்றே சொல்லலாம். வரம்புமீறி அக்கிரமத்தில் பாய்ந்து, தருமமென்னும் வேலியைக் கடந்து, ஸத்யநிலை தவறி, குடிகளைப் பலவிதத்திலும் துன்புறுத்த ஆரம்பித்து விட்டான் புஷ்கரன். அவனது ஆணைக்கு உட்பட்டு, நளனிடங்கொண்ட அனுதாபத்தையுங் காட்டமுடியாது, தம் மனத்தை விற்று அவர் மதி மயங்கியிருந்தனர்; நளன் காட்டுக்குப்போகும்போது தமக்குந் தெரியாது கண்களில் நீரை ஆறாகப் பெருகவிட்டு மன மழிந்தனர்; வெதும்பினர்; சொல்லமுடியாத் துக்கத்திற்காளாயினர். தனது சொந்த நாயகனையும் நாயகியையும் இழந்த அந்நகரத்தில்,

*வான்மறந் தனதுளி வழங்க லின்னிசைத்*
*தேன்மறந் தனமட மகளிர் தேங்குழல்*
*பான்மறந் தனபசுங் குழவி பாய்கவுட்*
*கான்மத மறந்தன களிநல் யானையே.*

அவ்வூரில் ஆண், பெண், பெரியோர், சிறியோர், அடங்கலும் தமது உத்ஸாகம் ஒழிந்தனர்; மிருகங்கள்கூட தமது செயல் அழிந்தன; மாதர்கள் தமது நகையாகிய நகையை இழந்தனர்; மாடங்களிலெல்லாம் என்றும் உலாவிய வாசனை வீசும் புகை ஒழிந்தது; பிராமணர்கள் தமது நிலைமாறித் தாம் செய்யும் யாகத்தை மறந்தனர்; பண்டிதப் பிரவீணர்கள் தாம் பெறும் தியாகத்தைத் துறந்தனர். மொத்தத்தில் அவ்வூர், லக்ஷ்மீ கடாட்சமற்று விளங்கியதென்றே சொல்லலாம். நளனை அந்நகரம் பிரிந்ததும்.

*அறந்தலை மயங்கின; பொய்ம்மை யார்ந்தன;*
*மறந்தலை யெடுத்தன; தீமை மல்கின;*
*திறம்பின மனுநெறி; தவங்கள் தீர்ந்தன;*
*நிறைந்தன வஞ்சனை நேமி யெங்குமே.*

நிற்க, வீமராஜனது மகளுடன் நளன் காட்டின் வழியாக நடக்க ஆரம்பித்தான். மணியாம் பருக்கைகள் நிறைந்த வழிகளில், சிறிதும் மனஞ் சுளிக்காது தனது மனைவி தன்னுயிர் போல அவனுடன் வரும் ஸந்தோஷத்திலீடுபட்டு, கஷ்டமறியாமல் அவன் நடந்தான். கற்களும், முட்களும் நிறைந்த பாதைகளின் வழியாக நடந்து, சிறுகுன்றுகளையும் கடந்து, பாலைவனங்களில் சூரியனுடைய வெப்பத்திலயர்ந்து, நளதமயந்திக ளிருவரும் நடந்தனர். கலியரசன் அவருக்குப் பலவித கஷ்டங்களை யுண்டாக்குவதற்கே எண்ணிய போதிலும், நளனுடைய நல்லெண்ணத்தின் மகிமையாலும், நடுநிலைத்தன்மையின் பிரபா

வத்தாலும், அவனுடைய மனைவியின் கற்
பின் தெய்விகத்தாலும்

களிமயில் குனித்திடக் கால மன்றியும்
துளிமுகில் பிலிற்றின; துணர்த்த பூங்கொடி
முளிசினை தளிர்த்தன; முகைத்த பைந்தரு;--
நளிகடற் றுனையான் நடந்த கானமே.

மனத்தையடக்கி நாட்டையுங் காட்டையும்
ஒன்றாகக் கருதி நளன்நடந்தான்; ஆனால் அய
லாரிடஞ் செல்ல மனங்கொள்ளாது செல்லும்
இடத்தை எண்ணாது நடந்துகொண்டே இருந்
தான். அவன் மனைவியும் தன் நாதனேதனது
கதியென நன்குணர்ந்து, இன்பத்திலும் துன்
பத்திலும் இடைவிடாது அவனுக்கு உதவி
யாகி, இன்னமுதாகி விளங்கினாள். தனது
மனைவியின் அழகிலும் குணத்திலும் ஈடு
பட்டு நளன் தன் துயரத்தைச் சற்றே மறந்
தானாயினும், தனக்காகத் தமயந்தி படும்படி
நேர்ந்த துயரத்தை எண்ண எண்ண, அவ்வீ
ரனது கண்களிலும் நீர்த்துளிகள் ததும்பி
அரும்பின; ஆயினும் அவை வெளிவர மன
மிடந்தராமையால் தோன்றிய விதமே மறைந்
தன. ஒரு விதமாகத் தனது மனத்தைச்
சமாதானப்படுத்திக்கொண்டு அக்காட்டின்
அழகில் ஈடுபட்டுத் தமயந்தியும் தானுமாக
நடந்தான்.

வழிநடந்த இளைப்பாலும், சிரமத்தாலும்
நளன் மனம் வெதும்பி நெட்டுயிர்ப்பு விடுவ
தைக்கண்ட தமயந்தி, தனது கண்களில்
கண்ணீர் வடித்தாள்; தனது நாதனது துய
ரத்தைக் கண்டதும், சின்னநாள் முதல் ஸல
வைக் கல்லல்லாத வழியில் நடவாதிருந்து,
தான் இப்போது பரல்கல் நிறைந்த காட்டில்
நடக்கமுடியாது தத்தளிக்கும் துயரத்தையும்
மறந்து, நெஞ்சம் புண்ணானாள்; அவனது
கஷ்டத்தைப் போக்க யாதும் வழி தோன்
றாது மனம் அயர்ந்தாள். இவ்வாறு அநேக
நாள்கள் ஆயின. இவ்விருவர்க்கும் உண்ப
தற்குக் காட்டில் என்ன ஆகாரம் கிடைக்கும்?
ஸுகமாக வாழ்ந்து வந்த அவ்விருவரும்,
கந்த மூலாதிகளைத் தின்று, எத்தனை நாள்
பசிப்பிணியைப் போக்கமுடியும்? அவரது
பசிப்பிணிக்குக் காட்டில்வேறு என்ன கிடைக்
கும்? இவ்வாறு பசியால் வருந்தி, நிற்க இட
மில்லாமல் பதசாரிகளாகி அவ்விருவரும்
நடக்கமுடியாமல் நடந்து கொண்டிருந்தனர்.
விதியின் பயனை நொந்தால்தான் அவரது
கஷ்டந் தொலையுமா?

பலநாள் கடந்தன. கந்த மூலாதிகளைத்
தின்ற விதமே இருவரும் காட்டில் இரவும்
பகலும் ஓயாதலைந்து கொண்டிருந்தனர். பசி
யென்னும் பாந்தள்வாய்ப்பட்டுப் பரதவிக்கு
மதிபோன்ற முகத்துடன் விளங்கும் தனது
உண்மை மனைவியின் தளர்ச்சியைப் போக்க
வழிதெரியாது ஏக்கங்கொண்டிருந்த நளனு
டைய கண்களுக்கெதிரில் பொன்மேனியுடன்
விளங்கிய பறவைகள் சில தோன்றின. அவற்
றைக்கவர்ந்து தமது பசிப்பிணியை ஒருவாறு
ஒழிக்கலாம் என்னும் எண்ணங்கொண்டான்.
உடனே இடையில் அணிந்திருந்த உடை
யால் அப்பறவைகளை மூடினான். ஆனால்
அப்பறவைகள் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து,
மேல்மூடிய வஸ்திரத்தையும் இழுத்துக்
கொண்டே ஆகாயத்திற் கிளம்பின. அங்கு
தமது இறகுகளை விரித்துக்கொண்டு அவை
நளனை நோக்கிப் பின்வருமாறு கூறின:—

மதியற்றவனே! உனது நிலையை யுணராது
என்ன வேலை செய்தாய்? உனக்கு ஐயகால
மில்லாமையை யுணர்ந்தும் எங்களைக் கவர
வேண்டும் என்று இச்சை ஏன் கொண்டாய்?
நாங்களோ உனது ஆடையைக் கவரவேண்டு
மென்ற நோக்கத்துடன் வந்தவர்களே யன்றி
வேறன்று. முன்னம் கவறாய் இருந்து உன்
நாட்டைக் கவர்ந்தோம். இன்று பறவையாய்
வந்து உன் ஆடையைப் பற்றினோம். நீ
ஆடையுடன் செல்வதில் எள்ளளவும் எங்க
ளுக்கு இஷ்டமில்லை; திகம்பரனாக விளங்கு
வதைக் காண்பதே எங்கள் கலிராஜனுக்கின்
பம் தரும். இனி உன் பிரதாபம் எங்கு செல்
லும்? பார்ப்போம்!

இதைக்கேட்டதும் அணியுந்துணியுமற்று
அவதியுற்று மதிமயங்கித் திகம்பரனாகி விளங்
கியவன், செய்வதின்னதென்று தோன்றாது
அயர்ந்து அவ்விடத்திலேயே உட்கார்ந்து சிந்
தாக்கிராந்தனானான். தனது கணவனது பரி
தாப நிலையைக் கண்ட தமயந்தி 'இதுவும்
சோதனையோ' என்று மனம் நொந்து, தனது
ஆடையிற் பாதியால் தனது காதலனது
மானத்தைக் காத்துக் கண்ணீர் வடித்தாள்.
நளனும் வேறு வழியில்லையெனத் தமயந்தின்
சேலையிற் பாதியைத்தானணிந்தான். அப்போது



162050

காவிபோல் கண்ணிக்குங் கண்ணியதோட்காளைக்
ஆவிபோலாடையுமொன்றனதே—பூவிரியக்[கும்
கள் வேட்டு வண்டுழலும் கானத் திடைக்னகப்
புள்வேட்டை யாதரித்த போது.

பின் நளன் ஒருவாறு சாந்தமடைந்து தன்
மனைவியை நோக்கிக் கருத்துடன் சில வார்த்
தைகள் சொன்னான்:—

"குற்றமற்றவளே! கடவுளே என்பக்கம்
இல்லைபோலும்! நாடுநகர மிழந்தேன், காட்
டை அடைந்தேன். பசியுந்துக்கமு முற்றேன்;
உயிர்வாழ உபாயமற்று நிற்கிறேன்; நிஷத
தேசத்து ஜனங்கள் மரியாதை செய்யாமை
யைக் கண்டும் யான் வருந்தவில்லை. காட்டில்
வந்தாலும் கஷ்டம் தொடரும் என்று நான்
ஒருபோதும் நினைக்கவேயில்லை; பறவைகள்
ஆடையைக் கவர்ந்தோடிப் பறந்தன; உன்
னுடைய அன்பினாலும் ஆதரவாலுமே மானந்
தப்பினேன். 'இல்லாளை இல்லாளும் வேண்
டாள்' என்பர்; அவ்வாறிருந்தும், ஒன்றும்
இல்லானை மதியாதிராது காத்த உத்தமியாகிய
உனது குணத்தை என்னால் விவரித்தல் முடி
யாது. நான் கஷ்டத்திற்காளாய் விட்டேன்.
இனி 'பட்டகாலிலே படும், கெட்டகுடியே
கெடும்' என்றவாறு எனக்கோ ஆபத்துகள்
மேன்மேலும் வருமென்பதிற் கையமில்லை.
யானோ வருத்தமுற்று மதியிழந்திருக்கிறேன்.
நான் சொல்வதைக் கவனத்துடன் கேள்.
அது உனக்கு நன்மையே தரும். கோபம்
வேண்டாம். எளியேனானேன் என்று ஏள
னஞ் செய்யாது கேள். அதோ எதிரிலிருப்
பன அநேக வழிகள். அவ்வழிகள் முழுதும்
முனிவரது ஆச்ரமங்கள் நிறைந்திருக்கின்றன.
என்மேல் வருத்தமடையாது சொல்வதைக்
கேள். எதிர்மொழி விளம்பேல்'! நடுவில்
தெரிவதுதான் விதர்ப்ப நாட்டுக்கேகும் வழி."

இம்மொழிகள் முழுதும் வெளிவருவதற்
குள்ளேயே தமயந்தியின் கண்கள் சிவந்
தன; ஆயினும் அவளுற்ற துயரத்தின் வேகத்
தால் மூர்ச்சியடைந்து விட்டாள். பன்முறை
யும் தன் நாதன் பன்னிபன்னிச் சொன்ன
மொழிகளின் உண்மை நோக்கத்தை முற்
றுமுணர்ந்த தமயந்தி கண்ணீர்விடுத்து,
தொண்டை நீர் துயரில் வரண்டிட "உமதெண்
ணம் எனக்குத் தெரிகிறது. அதை எண்
ணும்போதே என் உடல் ஆவி எல்லாம்
பதறுகின்றன; நடுங்குகின்றன; நெருப்பி
விட்டாற்போல் வேகின்றன. ஆ! நாடிழந்தா
லென்ன? உடையும் நிதியும் அற்றுப் பசி
யுற்று விளங்கும் உம்மைத் தனியே வனத்
தில் விட்டு விட்டுக் கீழ்மை கொண்ட மகள்
போல யான் சுகமும் பெறவேண்டுமோ?
நன்று நன்று! அவ்வெண்ணத்தை ஒழியும்.
கஞ்சி கூழ் குடித்தாலும் கனவிலும் அம்
மொழிகள் என் காதிற் படாதிருக்குமாக!
என் ஐயனே! உம்மைப் பிரிந்தும் எனது
உயிர் நிலைக்குமா? என் உடலாகிய அலகில்
உமது உயிரை யன்றோ விளக்காக ஏற்றி வைத்
துள்ளேன். அச்சோதியிற்றானே என்னுயிருங்
கூடிக் குலாவுகின்றது. ஈதறியீரா? எக்கஷ்
டம் வரினும் வருக! ஆயினும், உம்மைப் பிரி
யும்படியான கஷ்டம் யான் ஒருநாளும் விரும்
பேன். உமக்கு ஆதரவாக இருப்பதாக, அக்னி
ஸாக்ஷியாக யான் வாக்களித்துவிட்டுத் தாங்
கள் காட்டில் அலைய, மனமலைய, துயர்
உழந்து விளங்கக் கண்டும், நான் சுகமாகத் தந்
தையூர் உற்று நலம் பெறவேண்டுமென்றோ?
சீ! அதுவா எனக்குப் பெருமை? இராமனி
ருக்குமிடமன்றோ அயோத்தி? கோபங்கூடாது;
நான் இங்கேயேஇருப்பேன்; உமது தாபத்தை
யெல்லாம் தீர்ப்பேன்; நீர் மனம் வருந்தும்
போது உம்முடனிருந்து உமது துக்கத்தை
யும் பாகங் கொள்வேன். சுகதுக்க மிரண்டிற்
கும் யான் உடன்பட்டவளல்லவா? உமது
பயத்தை ஒழியும்; சிந்தனையையும் விட்டு
விடும். எத்துயருழந்து தாங்கள் விளங்கினும்,
யானும் உம்முடன் ஒத்து விளங்குவன். அது
வே எனது கடமை; அதுவே எனது மன
மும். மனமொத்து உம்மை வரித்தேன்; மன
மொத்தே இப்போதும் எப்போதும் உம்மு
டன் விளங்குவேன். சுகம் துக்கம் என்பன
மனத்தால் தோன்றுவனவன்றோ? புண்ணில்
வேலிட்டாற்போல மீண்டுமீண்டும் அம்
மொழிகளை என் காதில்படும்படி செய்யாதி
ரும்" என நளனது பாதாரவிந்தங்களில் பதி
ந்து கெஞ்சினாள்.

தமயந்தியின் அமுதமொத்த மொழிகளைக்
கேட்டு ஆனந்தமடையினும், அவளது கஷ்
டத்தைப் போக்க வேண்டுமென்றே நளன்
பேராவல் கொண்டான். ஆயினும் தனது
எண்ணத்தை வெளியிட்டுத் தனது அன்பு



JL
Zmm 211, NOE VR
NOS-10

டையாளைத் துன்பப்படுத்த இஷ்டங்கொள்ளானாகி "என்னுயிர்க் குயிராகியிருக்கும் உன்னை ஒரு நாளும் விட்டு நான் வாழமுடியுமா? உன்னை யான் கைவிட ஒருநாளும் எண்ணங் கொள்ளவில்லை. ஏன் நீ பயங்காளியாகி என்னைச் சங்கிக்கிறாய்? என்னையே ஒருவேளை மறக்கினும் மறப்பேன்! உன்னை ஒரு நாளும் மறக்கேன்.

செயிரறு மதிமுகம் பசப்பச் சிந்தைநொந்
தயர்வொடு கண்பனித் தவலங் கோடலை,
மயிலியற் பேதைநிற் பிரிந்து வாழ்வனே
உயிர்பிரிந் தாலுட லுய்யுமோ?" வென்றான்.

இதைக் கேட்ட தமயந்தி சற்று மனந் தெளிந்து "என்னைக் கைவிட எண்ணமில்லையானால் விதர்ப்ப நாட்டு வழியைப் பற்றிப் பேசவேண்டியதேதற்கு? உமது எண்ணம் தெரிந்து விட்டது. என் ஐயனே! என்னைக் கைவிடலாகாது. என் கஷ்டத்தைப் பார்த்துத் தாங்கள் கூறும் மொழிகள் என் மனத்தில் துக்கத்தைத்தான் கிளப்புகின்றன. ஒருவேளை நான் என் உற்றவரை அடைய விரும்பினீர்போலும்! ஆனால் தாங்களே எனக்குற்றவர், உறவினர் எவரும்; நீரே எனது மூலபுருஷர், முதல் தெய்வம். என்னைக் கைவிடாதிரும். ஒருக்கால் யான் விதர்ப்பையை யடைய வேண்டுமென உமக் கெண்ணமிருந்தால், நாமிருவருமே போகலாம் வாரும்; உமக்கு வேண்டிய உபசாரம் யான் செய்வேன், என் தந்தை உமக்கு நல்ல மரியாதை செய்வார்; அவரது நாட்டை உமதாகவே எண்ணும்" என்று சொன்னாள்.

நளனும் சில நாழிகையோசனை செய்தான். பின் "நலமுடையாய்! நீ சொல்லியதில் தவறொன்றுமில்லை. உன் தந்தை நாடு எனது என்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும் கஷ்டதசையிலிருக்கும் இந்தச் சமயத்தில் யான் அங்கு செல்வது தகாது. முன் அங்கு வந்த காலத்து, நாடும் நகரும் நிறைந்து உனக்குச் சந்தோஷ மூட்டும்படி வந்தேன். இப்போது பொன் பொருள் எவற்றையுந் துறந்து, ஒரு காசுக்கும் வழியில்லாது, உனக்குத் துக்கமே மனங்குடிகொண்டு விளங்கச் செல்வது மதி நலமாகாது? அவ்வாறு செய்வது பிறரது ஏளனத்திற்கே இடந்தரும்" என்று சொல்லினான். தமயந்தியும் "தெய்வங்கெடுத்தால் செயவில்லை" என்று ஒருவாறு தனது நாதனைத் தேற்றினாள்.

பின் இருவரும் ஒரே துணியைக் கட்டிக்கொண்டு அவ்விடம் புறப்பட்டு, அங்குமிங்கும் அலைந்தனர். பசியுந்தாகமும் மேலிட்டு, தங்க இடமில்லாது, வரும் வழியில் ஓர் பாழ் மண்டபத்தைக் கண்டனர். அங்கு வந்ததும் சிரம மேலிட்டு இருவரும் தரைமேல் உட்கார்ந்து, ஈதேனும் இடங்கிடைத்ததே என்று கடவுளை வாழ்த்தித் தமது சிரமத்தைப் பரிகாரஞ் செய்ய எண்ணங்கொண்டனர். சற்றே அவரிருவரும் மனவமைதி பெறும்படி விடுவோமாக! அது முற்று முடியுமா என்பதே ஸந்தேகம்! நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்; இது நிஜமல்லவா?

# மாணவர் பக்கங்கள்

## STUDENT'S PAGES

## S. S. L. C. 1913.

II, Write a short account of (one of) the following:—

(1) The Innkeeper's villainy in Charles Reader's Tale *of the Cloister and the Hearth.*

### II. (a) சாப்பாட்டு விடுதிக்காரன் செய்த சதிமோசம்

டெனிஸ் என்ற போர்வீரனும், கீரார்ட் என்ற வாழ்க்கையில் மிகப்பாடுபட்டு வருந்திய பாதிரியும், முன்னரே தமக்கு ஏற்பட்டிருந்த நேசத்தால் பல ஊர்களில் திரிந்து வருகையில் ஒரு ஊர் சாப்பாட்டு விடுதிக்கு ஓரிரவில் வந்து சேர்ந்தார்கள். அங்கு வாயிலில் நின்றிருந்த மானான் என்ற கொழுத்த பணிப்பெண்ணைக் கண்டு, அவள் வழிகாட்ட, சாப்பாட்டு உள்ளே வந்து அமர்ந்தார்கள். உடனே தமக்கு வேண்டிய உணவுகளைக் கொண்டுவரும்படி விடுதிக்காரனுக்கு டெனிஸ் உத்தரவளிக்க, அவன் 'காசை முதலில் எடும்' என்றான். 'இதற்கென்ன தடை? இது விடுதிகளில் வாடிக்கைதானே. நான் மோசம் பண்ண மாட்டேன். ஒருவேளை விடுதிக்காரர் வேண்டுமாகில் தாறுமாறாக இருப்பர்' என்று அதை ஒப்புக்கொண்டு பேசி, டெனிஸ் தன் பணப்பையை எடுத்து முன்னிருந்த மேஜையில் கவிழ்த்து ஒரு பொற் காசை எடுத்துக்



கொடுத்து மிகுதிப்பணத்தையும் உணவையும் எடுத்துவரும்படி கட்டளையிட்டான்.

உள்ளே சாப்பாடு தயாராகிக் கொண்டிருக்கையில் மானான் தண்ணீர் இழுத்துக்கொண்டிருந்த முற்றத்தில் டெனிஸ் சென்று அவளுக்கு உதவிபுரிந்திருந்ததைக் கண்ணுற்றான் கீரார்ட். உடனே நாகரீகமாக அவன் ஒதுங்கி சாப்பாட்டறை சேர்ந்தான். கொஞ்ச நாழிகை வரையில் டெனிஸ் திரும்பிவந்த பாடில்லை. அவன் வந்ததும் பாதிரியார் போர்வீரரை நோக்கிப் 'பெண்சாதி பிடிக்க முயன்றாற்போலிருக்கிறது' என்று கேலிபண்ணினார். மேல் நடந்த சாப்பாட்டிற்கு இடையில் வேலையாக வருவதுபோல மானான் என்ற பணிப்பெண் போக்குவரத்தாகவிருந்து கண்கொட்டாது இவ்விருவரையும் பார்த்துவந்தாள். சாப்பாட்டு முடிவில் கலங்களை எடுக்கவருகையில் டெனிஸ் காதில் தன்னை வந்து உடனே வெளியில் ஸந்திக்கும்படி மறைவான மொழியையும் அவள் கூறிவிட்டாள். சாப்பாடு முடிந்ததும் கீரார்ட் தனக்காக அமைக்கப்பட்ட உள்ளில் சென்று படுத்தான். டெனிஸ் வெளியே மானானைத் தேடி வந்தான்.

முன்னர் தண்ணீரிழுத்த கிணற்றிற்கு அருகில் மானான் என்பவள் அழுதுகொண்டிருந்ததை டெனிஸ் கண்டான். அவள் அவனுடன் பேசவே இல்லை. வரும்படி அழைத்துவிட்டு இப்படி அனாதரவு செய்கிறாளே என்ற குழப்பம் அப்பொழுது அவனுக்கு உண்டாயிற்று. இதை ஒருவாறு அடக்கிக்கொண்டு, அவளுடன் கொஞ்சி விளையாடத் தொடங்கினான். அதையும் அவள் உதறி எறிந்துவிட்டு 'உனக்குப் பேராபத்து வந்துள்ளது. நீயேதான் அதை இழுத்துவிட்டுக் கொண்டாய்! எந்த மடையனாவது தன்பணப்பையை விடுதிக்காரனுக்காகட்டும் வேறு யாருக்காகட்டும் அவிழ்த்துக்காட்டுவானா?' என்று முன்னினும் அதிகம் விக்கியழத் தொடங்கிவிட்டாள். டெனிஸ் என்ன முயன்றும் கொஞ்ச நாழிகை வரையிலும் இப்பெண் மேல்விஷயங்களைக் கூறாது தத்தளித்துக் கொண்டிருந்தாள். முடிவில் அவள் கடவுள்மேல் பாரத்தைப்போட்டுத் தன் ஆசை நேசன் ஆபத்தை, தன் ஆபத்தைவிடப் பெரிதாகக் கருதி, 'விடுதிக்காரன் வெளியே போய்விட்டான். இந்தப் புயல்காற்று மழையைக்கூடக் கவனியாது, தன் கள்ளர் கூட்டத்தை அழைத்து வரவே போயுள்ளான். அவர்கள் உன்னைக் கொன்று இன்றிரவு உன் பணத்தைப்பிடுங்கிக்கொள்ளப் போகிறார்கள், பணப்பையை ஏன் விடுதிக்காரனிடம் அவிழ்த்துக் காட்டினாய்? படுபாவி!' என்று உள்ளதை மறையாது கூறிவிட்டாள். இன்ன செய்வதென்று தெரியாது விழித்தான் டெனிஸ், அதற்கு அவள் 'என்ன சும்மா இருக்கிறாய்? உன் தோழனைக் கூட்டிக்கொண்டு அடுத்த பட்டணத்திற்கு ஓடிவிடு. என்னை அவர்கள் கொன்று விடுவார்கள் உனக்கு உள்ளதை வெளியிட்டதற்கு. சீக்கிரம் போ!' என்று யுக்தி சொல்லிக் கொடுத்தாள். 'உன்னையும் கூடவே அழைத்துப் போய் விடுகிறேன். இப் பேருபகாரம் செய்த உன்னைப் பரிகொடுக்க எனக்கு மனம் எப்படி வரும்?'' என்று தன் அறையை நோக்கிப் போகப் புறப்பட்டான் டெனிஸ்.

விடுதிக்காரன் அழைக்கப்போன எழுவர் கொலைகாரர் இதற்குள் வந்துவிட்டனர். ஓடிவிடவும் முடியாது என்று பட்டது டென்னிஸ்ஸுக்கு. உடனே பெண்ணை நோக்கி 'நாம் உயிருடன் பிழைக்க ஒரே வழிதான் உண்டு. நானும் என் தோழனும் அறையுள்ளிருந்து இவர்களுடன் போர் புரிந்துகொண்டிருக்கிறோம். நீ மாத்திரம் மறைவாய் ஓடிப்போய் அடுத்த விடுதியிலுள்ள போர் வீரர்களிடம் எங்கள் பேரபாயத்தைக் கூறி தங்கள் இனத்தாரைக் காக்க அவர்களைச் சீக்கிரம் வர ஏற்பாடு செய்துவிட்டுப் பட்டண அதிகாரியிடம் இதைக் கூறி அவனையும் தகுந்த பந்தோபஸ்துடன் இங்கு சீக்கிரம் வரச் செய். தாமதியாதே! உன் வேகத்தையே எங்கள் உயிர் எதிர்பார்த்திருக்கும். நாம் மூவரும் இப்பொழுது வெளியேறினால் நம்மெல்லோரையும் அவர்கள் கொன்றுவடுவார்கள்! போ சீக்கிரம்' என்று டெனிஸ் உத்தரவு செய்து அவளை ஒருவருமறியாது வெளியாக்கிவிட்டு விடுதியுள் புகுந்தான். தன் வில்லைச் சண்டைக்குத் தயார்செய்துகொண்டு சமையலறைக்குள் புகுந்தான் டெனிஸ்.

அங்கிருந்த கூட்டத்தைக் கண்டு அவர்களுடன் ஸாதாரணமாக வார்த்தையாடிவிட்டுத் தன் படுக்கையுள்ளோ தன் உயிரைக் கையில்

பிடித்துக்கொண்டு நுழைந்தான். ‘ஒருவேளை நம் தோழன் வேலையை இவர்கள் முடித்திருந்தால் என்ன செய்வது?’ என்ற எண்ணம் இவனை மிக வருத்தியது. நல்ல வேளை தோழன் தன் ஓசையால் தூங்கி எழுந்ததைக் கண்டான். அவனுக்குத் தம் ஆபத்தை நன்கு தெரிவித்தான். பாட்டுப் பாடுவது போலப் பாசாங்கு பண்ணி. அவர்கள் இருவரும் தலையணை கால் சோடு இவைகளைக் கொண்டு படுக்கையிலேயே யாரோ படுத்திருப்பதுபோலத் தோன்றும்படி ஏற்பாடு செய்துவிட்டு உள்ளே வெவ்வேறு இடங்களில் பதுங்கிப் பாயத் தயாராயினர்: தூங்குவதுபோல குறட்டையும்விட்டு வந்தனர். வெகு நாழிகைக்குப் பின்னர் அவர்கள் அறைக்கதவு ஓசையின்றித் திறக்க ஒரு மனிதன் உள்ளே நுழைந்தான். அங்கு ஏற்பட்டிருந்த மாறுபாடுகளால் அவனுக்கு ஸந்தேஹம் உண்டாகக் கீழேகுனிந்து என்னமாகத் தரையில் இருக்கிறது எல்லாம் என்று பார்த்தான். உடனே அருகில் ஒளிந்திருந்த கீராட் ஓசைப்படாது அவனை அமுக்கிப் பிடித்துப் பல குத்துக்கள் தன் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டான். போனவன் திரும்பாதது கண்டு வேறொருவன் வெகு நாழிகைக்குப் பின்னர் கதவைத் திறந்தான். டெனிஸ் அவன் கையைத் தன் அம்பால் கதவில் தைக்கும்படி செய்ய, உடனே கீராட் தன் கத்தியால் அவன் கையை வெட்டித் தள்ளினான். தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று இரண்டாமவன் ஓடிப்போய் கீழிருந்தவர்களுக்கு ஸங்கதி சொன்னான். கொஞ்சநாழிகைக்கெல்லாம் அவர்களுள் மிகக் கொழுத்த பாதிரி ஒருவன் கத்தியும் கையுமாக உள்ளே நுழைந்தான். டெனிஸும் கீராடும் அவனுடன் போர்புரிந்துக் கொண்டிருக்கையில் ஓடிப்போன பெண்ணால் அனுப்பப்பட்ட போர்வீரர்கள் தீவட்டியும் கையுமாக வந்து வெளியே சூழ்ந்துகொள்ள ஊரதிகாரியும் வந்து எல்லோரையும் சிறைப்படுத்தினர். பாதிரி அவர்களுக்கு இடையில், உள்ளிருந்த இரண்டு போர்வீரர்களுடைய கொடிய குத்துக்களால் உயிரிழந்து, பிணமாக உருண்டு விழுந்தான். பின்னர் டெனிஸும் கீராடும் கீழே வந்து ஒரு பிணம், ஒரு கை போனவன், நான்கு கொழுத்த பேர்வழிகள் ஆகிய அறுவரையும் ஊரதிகாரியிடம் ஒப்புவித்துவிட்டு எழாவதவன் தம்முள்ளே மாண்டு கிடப்பதையும் கூறினான்.

இதற்குள் உதவிக்கு வந்த போர்வீரர்கள் குடிக்கச் சாராயம் வேண்டும் இவ்வெற்றியைச் ‘சிறப்பிக்க’ என்று கேட்க, ஊரதிகாரியின் அனுமதியின் பேரில், ஒரு வேலைக்காரன் தீவட்டி பிடித்து வழிகாட்ட விடுதியின் கீழ்க் குழி அறைகளுள் இவர்கள் நுழைந்தனர். அங்கு ஒரு சாராயப் பீப்பாய்க் கருகில் ஒன்றும் அறியாது உறங்குவது போலக் கிடந்தான் விடுதிக்காரன். அவனை இவர்கள் தட்டிக்கிளப்ப, எழுந்து அவன் என்னவேண்டுமென்று கேட்டான். போர்வீரர்கள் தமது கோரிக்கையைக் கூற, ‘பணம் தந்துவிட வேண்டும்’ என்று எச்சரிக்கை செய்துகொண்டே அவன் சாராய உள்ளிற்குள் புகுந்தான். டெனிஸ் இதற்குள் போர்வீரர்களை நோக்கி ‘இவனைப் பிடித்துக் கட்டிவிடுங்கள். இவன்தான் இவ்வெழுவரையும் தூண்டினவன்’ என்றான். ‘அவன் விஷயத்தில் ருசு ஒன்றும் இல்லையே!’ என்றனர் புதிய வீரர்கள். ‘என்ன நடந்தது!’ என்று ஒன்றுமறியாதவன்போல ஆவலுடன் கேட்டான் விடுதிக்காரன். அப்பொழுது நடந்த வாக்குவாதத்தின் முடிவில் ‘எதற்கும் இவனைச் சிறைப்படுத்தி வைப்போம்’ என்ற தீர்மானம் பிறந்தது. விடுதிக்காரனுக்கு தன் பணிப்பெண் ஸாக்ஷி பலமாகத் தனக்கெதிரிலுள்ளது என்ற பயம் உண்டாயிற்று. ஆயினும் நல்லவன் போலவே அவன் வேஷம் போட்டான்.

இப்படிப்போர்வீரர்கள் சாராய உள்ளண்டை போகையில் அதனருகில் குப்பைக் குவியல் ஒன்றிருந்தது. அதை மிகுந்த ஆவலுடன் டெனிஸ் கிளறத் தொடங்கினான். விடுதிக்காரன் அது வெறும் குப்பை என்று அவர்களைத்தடுத்து உள்ளே புகும்படி செய்ய முயன்றான், இதற்குள் டெனிஸுக்கு ஒரு எலும்புத் துண்டு கிடைத்தது. அதை ஆடு கோழி எலும்பு, வேலைக்காரி வீசிப் போட்டது வெளியிலிருந்து என்று தட்டிக் கழித்துவிட்டான் விடுதிக்காரன். டெனிஸ் விடாது கிளறிப்பார்த்ததில் முறையே கைஎலும்பு காலெலும்பு அகப்பட்டு முடிவில் ஒருமண்டை ஓடும் அகப்பட்டது. ‘இதுகூட ஆடுகோழி எலும்



போ’ என்று கூறிக்கொண்டு டெனிஸ் விடுதிக்காரன் முகத்தை அந்தக் குப்பையுள் அழுத்தித் தேய்த்துவிட்டு, ஒரு கயிற்றில் அந்த மண்டை ஓட்டைக் கோத்து; விடுதிக்காரன் கழுத்தில் தொங்கவிட்டான். அவன் சதி மோசம் இதனால் நன்கு விளங்கி விட்டது எல்லோருக்கும். பின்னர் ஒரு குத்து மயிர் அகப்பட்டது அந்தக்குவியலில். இதெல்லாம் அந்த விடுதிக்காரன் தன் கொடிய எழுவர் வழி அவனிடம் சாப்பிட வருபவர்களை எப்படி வெட்டிக் கொள்ளையடித்தான் என்பதை நன்றாக ருசுப்படுத்தியது. வேண்டியளவு சாராயத்தை அவர்கள் எடுத்துக்கொண்டு விடுதிக்காரக் கைதியையும் அழைத்து வந்து ஊரதிகாரி முன்விட்டு, தாம் கண்டதையும் டெனிஸ் பணிப்பெண்ணினிட மிருந்து தெரிந்துகொண்டதையும் தெரிவிக்க, அந்த விடுதிக்காரனே அந்தக் கொலை விஷய நடவடிக்கைகளில் முக்ய குற்றவாளியாக்கப்பட்டான். மறு நாட்காலை எல்லாம் நியாதிபதியின் முன்பு போய்ச் சேரத் தகுந்த தண்டனைகள் எல்லோருக்கும் விதிக்கப்பட்டன.

---

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

# Children's Pages

## குரு பக்தி

குருபக்தியிற் சிறந்தோரிலெல்லாம் முதன்மையாக பாரதகதை ஸம்பந்தமாய் உள்ள வேடர் தலைவன் மகன் ஏகலவ்யனைச் சொல்வது வழக்கம். ஆனால் குருபக்தியிற் சிறந்தமற்றொரு ஏகலவ்யன் உளன். அவனது சரிதம் நம்மவர்களுக்குப் பெரிதும் பயன்தரத்தக்கதாதலின் இதை ஒருவாறு சுருக்கி எழுதத் துணிந்தோம். வரலாறு :—

முன்னொருகாலத்து நமது பரததேசத்தின் உத்தரபாகத்தில் **ஸமர்த்தர் ராமதாஸ் ஸ்வாமி**கள் என்று ஒரு மஹான் இருந்தனர். அவர் பரம பாகவத சிரோன்மணி. வேத சாஸ்திர புராணாதி கலைகள் யாவும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்தவர். ஸத்குணமே ஓர் உருவெடுத்தாற் போன்றவர். அனுஷ்டானத்திலும் ஈச்வர பக்தியிலும் சாஸ்திரத் தேர்ச்சியிலும் ஞானத்திலும் அவர் யாரினும் ஸமர்த்தராய் விளங்கிவந்தமையால், அந்த மஹானுக்கு **ஸமர்த்த ராமதாஸ்** என்றபெயருண்டாயிற்று. அக்காலத்து அந்த ப்ரதேசத்திலுள்ளாரனைவரும் அவரைத் தெய்வீகத் தன்மை வாய்ந்த மஹா புருஷரென மதித்து வழிபட்டு வந்தனர். வித்தையையும் ஞானத்தையும் அடைய விரும்பி அநேக சிறுவர்கள் வித்யார்த்திகளாக அவரையடைந்து கலைபயின்று வந்தனர். ஸமர்த்தரோ மூப்பின்மிகுந்து தளர்ந்த சரீரத்தோடு இருந்தவர். உலக வாழ்க்கையில் கமலநீர்போலுள்ள அம்மஹான் வெகு காலமாக அடிக்கடி தாம்பூலம் தரித்துக்கொள்வதில் அதிக அபிமான முள்ளவராக இருந்தனர். வயோதிகமானபடியால் தாம்பூலத்தைக் கடித்து மெல்ல முடியாமல் கலுவத்திலிட்டு இடித்து விழுதாகத் தரித்துக்கொள்வது வழக்கம். அவரிடம் பயிலும் மாணாக்கருள் **பலராமன்** என்னுஞ் சிறுவன் ஸ்வாமிகள் ஸமயமறிந்து கலுவத்திற் பக்குவமாய்த் தாம்பூலம் இடித்துத் தயார் செய்து ஸமர்ப்பிப்பது வழக்கம், மேலும் பலராமனே மற்றைய வித்யார்த்திகளைவிடக் கல்வியிலும் ஆசார்யபக்தியிலும் நல்லொழுக்கத்திலும் மேம்பட்டவனாக விளங்கினான். ஆதலின் ஸ்வாமிகள் அவனது அருமைக் குணத்திற்கும் அறிவுக்கும் மெச்சி மற்றையோரினும் அவனிடம் அதிகஅன்பு பாராட்டி வந்தனர். இது மற்றைய மாணவர்களுக்குப் பொருமையை உண்டாக்கிற்று. அவர்கள் பலராமனிடத்தில் ஸ்வாமிகளுக்கு மனவருத்தத்தை உண்டுபண்ண சமயம் பார்த்திருந்தனர். ஸ்வாமிகளுக்குப் பலராமன் தாம்பூலந் தயார்செய்து கொடுப்பதால் அவனிடம் அதிக ப்ரீதி பாராட்டுகின்றாரென்று எண்ணி ஒரு சமயம் தாம்பூலந் தயார் செய்யும் கலுவத்தை எடுத்து ஒளித்து வைத்து விட்டனர். ஸ்வாமிகளுக்குத் தாம்பூலந் தயார் செய்து கொடுக்கவேண்டிய ஸமயத்தில் பலராமன் பார்த்தான் கலுவத்தை. எங்கிலுந் தேடினான்

காணேம். ஐயோ! குருபெருமானின் சிச்ருஷைக்கு பங்கம் நேரிட்டதே என்று ஏங்கி வாடினன். இன்னுஞ் சற்று நேரத்திற்கெல்லாம் ஸ்வாமிகள் தாம்பூலம் கேட்பாரே என்ன செய்வது என்று பிரமித்து மனந் தளர்ந்து நின்றான். இதற்குள் ஸ்வாமிகளும் ஓர் மாணவனை விளித்துப் "பலராமன் உள்ளே தாம்பூலந் தயார் செய்துகொண்டிருப்பான்; கேட்டு வாங்கிக்கொண்டுவா" என்று அனுப்பினர். அவன் முன் நடந்த கள்ளத்தனத்தில் பங்குடையவனுதலால் பலராமனது நிலைமையை நினைத்து ஸந்தோஷித்து இன்று முதல் ஸ்வாமிகளின் ப்ரீதியின் குறைவுக்குக் காரணமானன் என்று உள்ளுக்குள்ளே நிச்சயஞ் செய்துகொண்டு பூரித்த மனத்துடன் பலராமனை யணுகி, ஸ்வாமிகள் தாம்பூலம்வாங்கிவரச் சொன்னதைத்தெரிவிக்க, இன்னசெய்வதென்று தெரியாது தத்தளித்துக்கொண்டிருந்த பலராமன், ஒருவாறு மனத்தைத்திடஞ் செய்துகொண்டு வந்த சிறுவனைச் சற்று இருக்கச் செய்து தனது பரமாசார்யரான ஸ்வாமிகளுடைய திவ்ய சரணங்களில் ஆழ்ந்த மனத்துடன் குருசிச்ருஷையே முக்ய தருமமாக எண்ணி, தனது வாயையே ஓர் கலுவமாய்க் கொண்டு பக்குவமாய்த் தாம்பூலங்களை மென்று விழுதாக எடுத்து, வந்த அம்மாணவனிடங்கொடுத்து ஸ்வாமிகளுக்கு அர்ப்பணஞ் செய்ய அனுப்பினன். பலராமனிடமுள்ள பகைமையால் இதுவே நல்ல ஸமய மெனக் கொண்டுபோய் அம்மாணவனும் ஸ்வாமிகளிடம் கொடுக்க, அவர் அதை ஆனந்தத்துடன் மென்று ஒருநாளு மில்லாதபடி வெகு ருசியாயும் பரிமளமாயு மிருக்கக் கண்டு ஞானதிருஷ்டியால் நடந்தவற்றை யுணர்ந்து பலராமனது பக்திவிசேஷத்தையும் மற்றமாணவர்களது மடமையையும் வெளிப்படுத்தி நற்புத்தி புகட்ட வேண்டி அங்கிருந்த மாணவனைக் கூப்பிட்டு, "நீ பலராமனிடஞ் சென்று இன்று தாம்பூலந் தயார் செய்தது மிக நன்றாய் இருக்கிறது. இது என்று மில்லாத புது கலுவத்தில் தயார் செய்யப்பட்டது போலிருப்பதால் இன்று தயார் செய்த கலுவத்தை யாம் பார்க்க வேண்டும். அதை வாங்கிவா" என்று ஆக்ஞாபித்தனர். மாணவனும் உண்மை வெளியாகுமென்ற ஸந்தோஷ சித்தத்தோடு பலராமனிடஞ் சென்று "ஸ்வாமிகள் இன்று நீ தாம்பூலந் தயார்செய்த கலுவத்தைப் பார்க்க வேண்டுமாம். என்னை எடுத்துக்கொண்டு வரும்படி அனுப்பியிருக்கிறார். சீக்கிரம் கொடு" என்று முடுக்கினன், பலராமன் அந்த ஸமயத்தில் திகைத்தானே! இல்லை "ஸ்வாமிகள் கலுவத்தைக்கேட்டார்களா அவர்கள் பார்க்கவேண்டுமா!" என்றுசொல்லி அந்நிலையிலேயே சற்றும் ஆலோசியாது ஆசிரியர் கட்டளையைநிறைவேற்றுவதே பெரிய தர்மமெனக்கொண்டு, "இன்று என் வாய்தான் கலுவமாக இருந்தது. இதைக்கொண்டுபோய் ஸ்வாமிகளிடம் ஸமர்ப்பி" என்று ஓர் கத்தியை யெடுத்து வீசித்தன் கழுத்தை யறுத்துத் தலையைக் கீழேதள்ளினன். வந்த மாணவனும் ஒன்றுஞ் செய்யத் தெரியாமல் பிரமித்துப் பலராமனது சிரஸைக் கையிலேந்தி ஸ்வாமிகள் முன்னர்வைத்து நடந்த ஸங்கதிகளை வெளியிட்டனன். ஸ்வாமிகளோ பலராமனது பக்தியில் ஆனந்த மடைந்தவராய்க் கண்ணீர் பெருக "இக்கலுவம் மிகப் பரிசுத்தமானது, விலைமதிப்பற்றது, நம்மனத்திற்குப் பெரிதும் உவப்பானது; ஆதலின் இது வீணாய் அழிய நமக்கு விருப்ப மில்லை. இதைக் கொண்டுபோய் முன்னிருந்த இடத்தில் வைத்து விடு" என்று ஆக்ஞாபிக்க மாணவனும் சிரஸை எடுத்துக்கொண்டு உடலுடன் பொருத்திவைக்க துயில் நீத்து எழுபவன்போல் எழுந்தனன் பலராமன். மற்ற மாணவர்கள் பலராமனது அபார பக்தியையும் ஸ்வாமிகளது மஹிமையையுங் கண்டு அகங்காரம் முதலிய துர்க்குணங்களை விட்டுப் பலராமனை வாழ்த்தி அவனிடம் பக்தியும் அன்புஞ் செலுத்தத் தொடங்கினர். குருபக்தியின்பெருமை இதனுல் விளங்கவில்லையா?

---

## ஸ்ரீ ராமாயண ஸாரம்

எளிய நடையில் எழுதப்பெற்றது. சிறுவர்களும் உத்ஸாகத்துடன் படிக்கத்தத்தக்கது. புதியவழியில் எழுதிய முகவுரை உடையது. இதில் சரித்ராதி விமர்சனமும், ராமாயண பாத்திரங்களின் குணதோஷங்களும், பெருமையும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அழகிய சித்திரப்படங்களுடன்- விலை ரூ. 1-0-0

விவேக போதினி சந்தாதார்க்கு மாத்திரமே விலை அணு 12.



# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS & NOTES

**வங்காளத்தில் கட்டாயப் படிப்பு**

வங்காள மாகாணத்தில் கீழ்த்தரப்படிப்பைக் கட்டாய மாக்கவேண்டுமென்ற ஓர் மசோதா அந்த மாகாணச் சட்ட சபையில் கனம் ஸுரேந்திரநாத ராய் அவர்களால் கொண்டுவரப்படுகிறதாக அறிகிறோம். பம்பாய், சென்னை மாகாணங்களில்கொண்டுவரப்பட்ட மசோதாக்களின் போக்கையே இம்மசோதாவும் அனுசரிக்கு மாயினும் அவைகளில் காணப்படாத அம்சம் ஒன்று இதில் உண்டு. சென்னை பம்பாய் மசோதாக்கள் லோகல்,போர்டுகளைப்பற்றி ஒன்றும் கவனிக்கவில்லை. வங்காள மசோதாவிலோ, கவர்ன்மெண்டு விளம்பரத்தினுல் இச்சட்டம் ஜில்லா போர்டுகளின் அதிகாரத்துக்குட்பட்ட சில விடங்களிலும் செலாவணியாவதற்குச் சௌகரியம் செய்யப்பட்டுள்ளது. என்றாலும், இவ்விஷயங்களிலெல்லாம் பஞ்சாப் கவர்ன்மெண்டார் கொண்டுவர உத்தேசித்திருக்கும் மசோதா வெகு சிலாக்கியமானதாகத் தோற்றுகிறது. அதன்படி, கட்டாயப் படிப்பை முனிஸிபாலிடிகளும் லோகல் போர்டுகளும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டியவை யாகின்றன. இப்படிப்பட்ட முக்கிய சங்கதியில் மாகாண கவர்ன்மெண்டாருடைய இஷ்டப்படி காரியங்களைச் செய்யவிடாமல், இந்தியா கவர்ன்மெண்டாரே இவ்விஷயமாக ஒரு சட்டம் கொணர்ந்து, தங்களுடைய நோக்கமும் முறைமையும் இன்னவென்பதையும், அவைகளை மாகாணக் கவர்ன்மெண்டார் நிறைவேற்றவேண்டிய விதம் இன்னதென்பதையும் வெளியிடுவாராஞல் அதுதான் கீழ்த்தரப்படிப்பை விருத்தியாக்குவதற்கு ஏற்ற சாதனமாகும். காலமும் இடமும் இதற்கு ஏற்றவையாகவே அமைந்துள்ளன. இந்திய கவர்ன்மெண்டார் கூடிய சீக்கிரத்தில் நல்ல ஏற்பாடு செய்வாரென்றே நாம் வெகு ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமாக விருக்கிறோம்.

* * *

**ஜில்லா போர்டு பிரஸிடெண்டுகள்**

ஜில்லா போர்டுகளில், உத்தியோகஸ்தர்கள் அல்லாதவரைப் பிரஸிடெண்டாக நியமிக்க வேண்டுமென்று நம்மவர்கள் பன்முறை கேட்டு வந்ததை அபிமானிகள் அறிந்திருக்கக் கூடும். இதையொட்டி, இப்போது சென்னை கவர்ன்மெண்டார் செய்திருக்கும் உத்தரவைக் கேட்டு நாம் சந்தோஷிக்கிறோம். தேசமும் வர்த்தமானங்களும் வேறுபட்ட நான்கு ஜில்லாக்களில் பரீக்ஷார்த்தமாக, உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்களைப் பிரஸிடெண்டாக நியமித்திருக்கின்றனர். அவர்களுக்குப் பொதுவாக மேல்விசாரணையும் பரிசோதனையுமே காரியமாக விருக்குமாதலால், ஆபீஸ் நடவடிக்கைகளையும் கிரமங்களையும் கவனிப்பதற்கு அனுபவம் நிறைந்த சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் உப-பிரஸிடெண்டாக நியமிக்கப்படுவார்கள். இவ்வேற்பாட்டினுல் ஏற்படும் நன்மையையும் சௌகரியத்தையும் கண்டு, காலக்கிரமத்தில் ராஜதானி முழுவதிலுமே உத்தியோகஸ்தரல்லாத பிரஸிடெண்டுகள் நியமிக்கப்படுவார்களென நாம் நம்புகிறோம்.

* * *

**கலப்பட நெய்யைப் பற்றிய சட்டம்.**

கல்கத்தாவில் விற்றுவந்த நெய்யானது அருவெருப்புள்ள வேறு சில பொருள்களுடன் கலப்புள்ளதாக விருந்ததுபற்றி அங்கு ஜனுபிப்பிராயம் வரவர முதிர்ந்தது. அதன் காரணமாகச் சில பிரமுகர்கள், கனம் கவர்னரவர்களைக் கண்டு பேசியதன் பயனுக அம்மாகாணத்தில் வெகு அவஸரமாக ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டுச் செலாவணிக்கு வந்துள்ளது. நெய்யில் வேறு வஸ்துக்களைக் கலப்பது தண்டனைக் குள்ளாக்கும் என்பதே இதன் முக்கிய அம்சம். இதனுல் கலப்பு நெய் கடைகளில் விற்கப்படாமல் போகுமாயினும், நல்ல நெய்யின் விலை அதிகமாவது நிச்சயம். பால் குறைவதினுலேயே நெய்குறைகின்றதாகையால்,பாற்பசுக்களையும், எருமைகளையும் விருத்தி செய்யவேண்டுவது முதற்கடமையாகும். கிராமங்கள் தோறும் போதுமான மேய்ச்சல் தரைகளுக்குச் சௌகரியம் செய்வதினுலும், கால் நடைகளுக்கு வரும் வியாதிகளைக் குணப்படுத்த மிருக வைத்திய சாலைகளை அதிகப் படுத்துவதாலும், பொதுவாகவே பாற்பசுக்கள், விருத்தி

யடைவதற்கு வேண்டிய மற்றை முறைகளைத் தேடுவதினாலும், இந்த துர்த்தசைகள் நீங்கும். இவ்விஷயமாக, ஜனங்களிடம் அற்பமாக வரிவசூலிப்பதில் ஆக்ஷேபணையிராதென நம்புகிறோம். கோவாபரேடிவ் இலாகாக்காரர்களுடைய பேருதவியால், மற்றை நாடுகளில், உதாரணமாக டென்மார்க்கு நாட்டில் ஏற்பட்டுள்ள சௌகரியங்களைப்போல நாமும் செய்துகொள்ளலாம்.

* * *

**திருவாங்கூர் மகாராஜாவின் சஷ்டியப்த பூர்த்தி**

சென்ற செப்டம்பர் மாதத்தில் திருவாங்கூர் மஹாராஜா சத்திரபதி ஸ்ரீ ராமவர்ம மஹாராஜா அவர்களுடைய சஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவம் வெகுசிறப்பாகவும் சம்பிரமமாகவும் நடந்தேறியதைக்கேட்டு சந்தோஷிக்கிறோம். நமது நாட்டில் இந்தியனாக வுள்ளவன் ஒவ்வொருவனும் அத்தியந்த பெருமையோடும் ஆவலோடும் எதிர் பார்க்கக்கூடிய ஸமஸ்காரங்களில் சஷ்டியப்த பூர்த்தி ஒன்றென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. 'தர்ம ராஜ்யம்' என்று பேர்பெற்ற திருவாங்கூர் ராஜ்யத்தின் அருமை பெருமைகளையும், 1885-ம் வருஷத்தில் சத்திரபதி ராமராஜா அவர்கள் சிங்காதன மேறியதுமுதல் நாளது வரையில் அவர்கள் மன்னுயிரைத் தன்னுயிரெனக் காப்பாற்றி வரும் சிறப்புகளையும் நாம் இங்கு விஸ்தரிக்க வேண்டியதில்லை. தேசத்தின் க்ஷேமமே தமது க்ஷேமமெனக் கருதி, அவர்கள் செய்திருக்கும் சீர்திருத்தங்களும் அபிவிருத்திகளும் அனந்தம். தயாளகுணம், சீலம், எல்லோரிடத்தும் அன்பு, தர்மசிந்தனை முதலிய நற்குணங்களே அவர்களை எல்லாரும் கொண்டாடும்படி செய்யும் குணவிசேஷங்களாம். திருவாங்கூர் வாசிகள் அனைவரும் அத்தியந்த ராஜவிசுவாசத்துடன் "ஸ்ரீமூலம் மஹாராஜா நெடுங்காலம் வாழ்வாராக!" என்று பிரார்த்திக்கும் பிரார்த்தனையோடு நாமும் கலந்து அவர்களுக்கு அரோக திடகாத்திரத்தையும் மேன்மேலும் பெருங்கீர்த்தியையும் தந்தருள வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

* * *

**இங்கிலாந்தில் சிறுவர்களுடைய துர்த்தசை**

இப்போது நடந்துவரும் ஐரோப்பிய யுத்தங்காரணமாக உண்டான துர்த்தசைகளில் இளஞ்சிறுவர்கள் செய்யும் குற்றங்கள் இங்கிலாந்தில் அதிகமாவது ஒன்றெனத் தெரிகின்றது. பொதுவாக, அவர்களுடைய பிதாக்கள் ரணகளத்துக்குச் சென்றிருப்பது இதற்கு ஒரு காரணமாக விருப்பினும், அஸ்தமித்த பின் தெருக்களில் விளக்கேற்றாம லிருப்பது, சினிமா என்னும் அசையும் படங்களைக் காண்பது, அதிகக் கூலி பெறுவது இவைகளும் மேற்கூறிய துர்த்தசைக்குக் காரண மாகின்றனவாம். குற்றங்களில் நூற்றுக்கு ஐம்பது இருட்டுத்தெருவினால் நேர்கின்றதென்பது வெளியாகின்றன. இவைகளைப் பரிகரிக்கும்பொருட்டு கல்வியிலாகா அதிகாரிகள் சில ஏற்பாடுகள் செய்ய முன்வந்திருக்கின்றனர். சிறுவர்களும் சிறுமிகளும் ஏதாவதொரு நல்ல வேலையில் பிரவர்த்திக்கப்படவேண்டு மென்பதும், சன்மார்க்காபிவிருத்திக்கு இடையூறான வீடுகளையுடைய பிள்ளைகள் சாயங்காலங்களில் பள்ளிக்கூடங்களிலேயோ, வேறு இடங்களிலேயோ கூடி விளையாட்டுக்களிலோ வேறு பொழுது போக்குக்களிலோ காலங்கழிக்கச் சௌகரியம் செய்யப்படவேண்டு மென்பதும் மேற் கூறிய ஏற்பாட்டின் அம்சங்களாம். இவற்றை நாம் வெகுவாகச் சிலாகிக்கிறோம். நமது நாட்டிலும் இம்மாதிரி அசட்டை செய்யப்பட்டபிள்ளைகள் இருக்கின்றனர் என்பதை நாம் அடிக்கடி கவனித்திருக்கிறோம். இங்கிலாந்துப் பிள்ளைகளைப்போல அவர்களுக்கு, விமோசனம் ஆவதெப்போதோ?

* * *

**இங்கிலாந்தில் கல்வி மசோதா**

இங்கிலாந்தில் இப்போது கற்பிக்கப்படும் கல்வியால் அதிக பயனுண்டாவதில்லை யென்பதை யுணர்ந்த பிரமுகர்களின் நன் முயற்சி காரணமாக, அங்கு நடைபெறும் போதனாமுறை முழுவதுமே மாறும்படியான மசோதா ஒன்று சாமான்யர் சபையில், கல்வியிலாகா மந்திரியான பிஷர் (Fisher) என்பவரால் கொண்டுவரப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழந்தையும், முக்கியமாக ஒவ்வொரு ஏழைக் குழந்தையும், பயன்படும்படியான கல்வியைக்கற்று அதனால் தனக்கும் தன் தேசத்துக்கும் நன்மையைத் தேடிக்கொள்ள வேண்டுமென்ற பிரதான நோக்கமே இந்த மசோதாவின் முக்கிய அம்சமாகும். இப்போதுள்ள பள்ளிக்கூடப் பிள்ளைகள் தேக திடன் குன்றியவர்களாக விருக்கும் துர்த்தசையையும் இந்த மசோதா மாற்றும். ஒவ்வொரு மாகாண அதிகாரிகளும், தங்கள் தங்களுடைய எல்லை வரம்புக்குட்பட்ட பிரதேசங்களில் பிரதமக் கல்வியைக் கட்டாயமாக்கவேண்டு மென்பதும், பிரதமக் கல்வி கற்றதனோடு நின்றுவிடாமல் மேன்மேலும் கல்வி கற்கவேண்டிய சௌகரியங்கள் செய்யப்படவேண்டு மென்பதும் இம்மசோதாவில் கண்ட நிபந்தனைகளாம். ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு (Nursery) செவிலிப் பள்ளிக்கூடங்கள் நியமிக்கப்படும். ஐந்து வயதுக்கு மேலும், பதினான்கு வயதுக்கு உட்பட்டுமுள்ள பிள்ளைகள் கட்டாயம் பள்ளிக்கூடத்துக்கு வந்தே தீரவேண்டும். பதினான்கு வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் 18-வயது வரைக்கும் வருஷம் ஒன்றுக்கு 320 மணி நேரம், தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்களில் (Continuation Schools) படிக்கவேண்டும். பன்னிரண்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகளை, லாபத்தை யுத்தேசித்த ஒருவித தொழிலிலும் புகும்படி செய்யக்கூடாது. இவைகள்தாம் இந்த மசோதாவில் கண்ட முக்கிய நிபந்தனைகள். இந்த மசோதாவை கல்வி விஷயமான மஹாசாஸனம் என்றே நாம் சொல்வோம். முன்னேற்ற மடையக்கூடிய பிள்ளைகளின் விஷயத்தில் பணச் செலவைப் பாராமல் சீர்திருத்தங்களைச் செய்யவேண்டியது ராஜ்யத்தின் பிரதான கடமைகளில் ஒன்றுஎன்பதை பிஷர் ஸ்ரீமான் பன்முறை எடுத்துக் காட்டியிருக்கிறார். சாதாரணமாகவே இந்தியாவைக் காட்டிலும் இங்கிலாந்தில் கல்வியபிவிருத்தி வெகு அதிகம், அப்படி யிருந்தும், அங்கு வித்யா விஷயமாக இப்படிப்பட்ட மேலான நோக்கமும் கவனமும் உண்டாகுமானால் நமது நாட்டின் ஸ்திதியை இங்கிலாந்தின் ஸ்திதியோடு எப்படி ஒப்பிட முடியும்? நமக்குப் பிரிடிஷார் துரைத்தனத்தில் அளவற்ற நன்மைகள் உண்டாகுமென்பது நம்முடைய பூர்ணமான நம்பிக்கையாதலால், காலக்கிரமத்தில் அங்கு நடைபெறுவது இங்கும் நடைபெறலாம் என்ற விசுவாஸம் தானே உண்டாகின்றது.





* * *

**காங்கிரஸ் தலைமை.**

இவ்வருஷக் கடைசியில் கல்தத்தா நகரத்தில் நடைபெறப் போகும் காங்கிரஸில் யாரைத் தலைவராக நியமிப்ப தென்பதில் சிற்சில விவாதங்கள் ஏற்பட்டன. அதன் காரணமாகக் கட்சிப்பிரதி கட்சிகளும் உண்டானதைக் கண்டு இந்திய ஜன ஸமூக ஒற்றுமைக்கு ஏதேனும் விபரீதம் வருமோ என்று பயப்படும்படியான நிலைமையும் நேர்ந்திருந்தது. தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் பொறுமை வகித்தவர்களெல்லாரும் தங்கள் தங்களுடைய மனத்தாங்கல்களை ஒருங்கே அகற்றிவிட்டு ஒரே மனதாய் அனிபெஸண்டு அம்மாளைக் காங்கிரஸுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத் திருக்கின்றனர். அந்த ஸ்ரீமதியின் தலைமையின் கீழ், இவ்வருஷ மஹாநாடு வெகு சம்பிரமமாயும் ஒழுங்காயும் நடந்தேறு மென்று நாம் எதிர்பார்க்கிறோம். நன்றாய் முடிவது எல்லாம் நன்றல்லவா?

---

நமது சக்ரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் அவர்களுக்கு பிரதிதினம் கிடைக்கும் தபால்கள்.—சக்ரவர்த்திக்குத் தினந்தோறும் வரும் தபால்களுக்கு அளவில்லை. உலகம் என்றைக்கு முடிவடையப் போகிறதென்பதைத் தெரிவிக்கும் நிருபர்கள், மேலுலகத்தில் நடக்கும் விஷயங்களைத் தெரிந்துக்கொள்பவர்கள், புதிய மார்க்கக்கொள்கைகளை அவலம்பிக்கும்படி சக்ரவர்த்திக்கு எழுதும் பித்தர்கள், ராஜ்யக்கடன்களை எளிதில் அடைத்துவிடக்கூடிய மார்க்கங்களைச் சொல்லக்கூடிய நிபுணர்கள், சக்ரவர்த்தியிடம் நேருக்குநேராய்த் தங்கள் தங்களுடைய குறைகளைச் சொல்லிக்கொள்ள வேண்டுமென்றிருப்பவர்கள், பண உதவியை வேண்டும் யாசகர்கள், இத்தன்மையோர் எழுதும் கடிதங்கள் அனந்தம். அத்தியந்த வேடிக்கையைத் தருவனவாயிருந்தாலன்றி, இக்கடிதங்கள் மகாராஜாவின் பார்வைக்கு அனுப்பப்படுவதில்லை. காரியதரிசிகளே இவைகளைப் "பைசல்" செய்துவிடுகின்றனர். பிரபுக்களுக்குச் சாமர்த்தியமுள்ள காரியதரிசிகள் வெகு அவசியமென்பதைச் சொல்லவேண்டியதில்லை. நமது சக்ரவர்த்தியின் காரியதரிசிகள் வெகு சாமர்த்தியம் வாய்ந்தவர்களாகவே இருக்கின்றனர்.

# சிறு குறிப்புகள்

## TIT-BITS

எழுதுவதற்காக உபயோகித்து வந்த கடிதாசியை இப்போது பலவிதமாக உபயோகிக்கின்றனர். கொஞ்ச நாள்களுக்கு முன் கடிதாசியால் கைக்குட்டை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இதைவிட விசேஷமான சங்கதி இப்போது வெளி வந்துள்ளது. டேனிஷ் வைத்தியரான ஸ்வின்ட் என்பவர் கடிதாசியால் செயற்கைக் கால்கள் செய்கின்றனராம். யுத்தத்தில் கால்களையிழந்த சிப்பாய்கள் மலிவாய்க் கிடைக்கும் இக்கடிதாசுக் கால்களை உபயோகப்படுத்துகின்றனராம்.

* * *

அதிகமாகச் சர்க்கரை சாப்பிடுவது பிழையென்று சொல்வதை நாம் கேட்டதுண்டு. ஆனால் இப்போதைய வைத்தியர்கள், எவ்வளவு சர்க்கரையைத் தின்றாலும் அதனால் யாதொரு கெடுதியும் பல்லுக்கு நேருவதில்லை என்கின்றனர். இவ்விஷயம் இனிப்பான தின்பண்டங்களில் ஆவலுள்ள சிறுவர்களுக்கு அத்தியந்த சந்தோஷத்தைத் தரும்.

* * *

அதிருஷ்டம் எப்படி வரும் என்பதைச் சொல்வது சாத்யமன்று. கேவலம் தாழ்ந்த ஸ்திதியில் இருந்தவர்கள் மிக உயர்ந்த பதவிக்கு வந்திருக்கின்றனர். நமது நாட்டில் ஐகோர்ட்டு ஜட்ஜியாக விருந்த ஸ்ரீமான் ஸர். முத்துஸாமிஅய்யர் முதலில் ஒருரூபா சம்பளத்தில் நாட்டுக் கணக்கராக இருந்ததை அபிமானிகள் அறிவார்கள். இங்கிலாந்தில் மந்திரிச் சபையில் உள்ளவர்களில் சிலரும் இப்படியே தாழ்பதவியிலிருந்து மேல்வந்தவர்கள். ஆர்தர் ஹெண்டர்ஸன் என்பவர் 40 வருஷங்களுக்கு முன்னால் கிளாஸ்கோ நகரத்தில் வாரமொன்றுக்கு ஐந்துஷிலிங் சம்பளத்தில் கையாளாக அமர்ந்திருந்தனர். இப்போது அவருக்கு மாதமொன்றுக்கு 6250. ரூபா சம்பளம். பென்ஷன் மந்திரியான பார்னஸ் என்பவர் சணல் ஆலையில் வேலை செய்தவர். வியாபார இலாகாவின் காரியதரிசியான ராபர்ட்ஸ் அச்சுக்கோர்க்கும் "கம்பாஸிடராக" விருந்தனர். பிரேஸ் என்பவர் நிலக்கரிச் சுரங்கத்திலும் ஷேகிள்டன் என்பவர் பருத்தி ஆலையிலும் வேலை செய்தவர்கள் உவில் குருக்ஸ்என்பவர் மாதமொன்றுக்கு 10 ரூபா சம்பளத்தில் பால் வியாபாரம் செய்யுந் தொழிலிலிருந்தனர்.

* * *

இலந்தைப்பழம் தேகாரோக்கியத்துக்கு வெகு சிலாக்கியமானது. அஜீரணத்தை அது குணப்படுத்தும். சரீரத்துக்குப் புஷ்டியையும், தாதுபலத்தையும் தரவல்லது. தொண்டைக்கட்டை நிவர்த்திக்கும்; பித்தத்தைத் தணிக்கும்; வாதம் முதலியவற்றில் வெகு பிரயோஜனத்தைத் தரும். உருளைக் கிழங்குக்குள்ள சத்துக்கள் முழுவதும் இலந்தைப்பழத்தில் இனிய பாகத்தில் அமைந்துள்ளன.

* * *

போர்ட்சுகல் தேசத்திய மாஜி ராணிக்குப் புகைச் சுருட்டுப் பிடிப்பதில் அதிக விருப்பமாம். ஸ்வீடன் தேசத்து ராணி, ருஷியா தேசத்து மாஜி சக்கரவர்த்தினிகள், ருமேனியா தேசத்தரசி, ஸர்பியா தேசத்து மாஜி ராணி ஆகிய இவர்களும் சுருட்டில் அத்தியந்த பிரியங் கொண்டவர்களாம். ஒவ்வொருவருக்கும் மனதுக்குப் பிடித்த சுருட்டுத் தினுசுகள் இருந்தன வென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

* * *

மனிதனுக்கு ஆயுட்காலம் நூறு வயதென்று கூறப்பட்டிருக்கிறது. என்றாலும், அவ்வளவு காலம்வரையில் அரோக திடகாத்திரர்களாக இருப்பவர் அருமை. இது நிற்க. சில பிராணிகளின் ஆயுட்காலத்தைக் கவனிப்போம். திமிங்கலம் அநேக நூற்றாண்டுகள் உயிருடனிருக்கின்றனவாம். யானைகள் நூறு வருஷங்கள் வரையில் ஜீவித்திருக்கும். குதிரை, நாய், சிங்கம், புலி, மாடுகள் பன்றி இவைகள் 20 முதல் 30 வரை வருஷங்கள் பிழைத்திருக்கும். அடுத்து வருவது ஆடு. அப்பால் எலி சுண்டெலி முதலியன. மீன்கள் நெடுநாள் ஜீவித்திருக்கின்றன. 'ஸால்மன்' நூறு வருஷமும், 'ஈல்' 60 அல்லது 70 வருஷமும் 'பைக்' இருநூறு வருஷமும் இருக்குமாம். முதலைகளும் ஆமைகளும் இன்னும் வெகுகாலம் ஜீவித்திருக்கும். பக்ஷிவகையிலும் சிரஜீவி

(இதன் தொடர்ச்சி 111-ம் பக்கம்.)



# ஹாஸ்யத் துணுக்குகள்

## WIT AND HUMOUR.

**பிதா:**—நான் குழந்தையாக விருந்தபோது பொய் சொன்னதே கிடையாது.

**குழந்தை:**—ஆனால், அப்பா நீ பொய் சொல்லத் தொடங்கியது எப்போது?

* * *

**மனைவி:**—எல்லாம் என் பணம் வந்தபிறகுதான் இந்த ஜம்பமும் டம்பமும். நான் பணங் கொண்டு வராவிட்டால் என்ன செய்திருப்பீர்கள்?

**புருஷன்:**—கல்யாணமே பண்ணிக் கொண்டிருக்கமாட்டேன்.

* * *

**மனைவி:**—ஏதாவது கொஞ்சம் பணம் கொடுக்கிறீர்களா? கடைக்குப்போய் வர வேண்டும்.

**புருஷன்.**—ஆகட்டும், எவ்வளவு கொஞ்சமாகவிருந்தால் போதும்என்பதைச் சொல்லு: உடனே தருகிறேன்.

* * *

**பிதா.**—உபாத்தியாயரே! நம்முடைய பையன் பள்ளிக்கூடத்தில் பாடமே படிக்கிறதில்லையோ?

**உபாத்தியாயர்.**—பாடம் படிக்காமல் போனாலும் அவன் படுத்துகிற பாடு கணக்கு வழக்கில்லை.

* * *

**பண்டிதர்.**—அடே, நீ நிரம்பப் படித்திருக்கிறாயே! நாலடியார் யாரால் செய்யப்பட்டது சொல்லு.

**கிராமத்தான்.**—வாஸ்தவமாகச் சொல்லுகிறேன், 'நாலடியார்' யாரால் செய்யப்பட்டதென்பது தெரியாது. "கம்பராமாயணம்" என்பதுகூட எவரால் செய்யப்பட்டதென்று எனக்குத் தெரியாது.

* * *

**கடைக்காரன்:**—இந்த உருமால் வெகு நேர்த்தியானது; ஒன்று எடுத்துக்கொள்ளுங்கள். இந்த வருஷம் நூற்றுக் கணக்காக அவைகளை விற்றிருக்கிறேன்.

**வாடிக்கைக்காரன்:**—அப்படியானால் நீ வெகு சாமர்த்யசாலிதான்.

* * *

**புருஷன்.**—என்னிடம் ஒரு லக்ஷரூபா இருந்தால் நான் என்ன செய்வேன் தெரியுமா?

**மனைவி.**—தெரியாது, ஆனால் அது இரண்டு லக்ஷமாக இல்லையே யென்று துக்கப்பட்டுக் கொண்டிருப்பீர்களே யொழிய நான் கேட்ட சீட்டிப் புடவையைக்கூட வாங்கித்தரமாட்டீர்கள்.

* * *

ஒருவக்கீல் ஒரு சாக்ஷியைக் குறுக்கு விசாரணை செய்துகொண்டிருந்தார். கன்னக்களவு நடந்த வீட்டின் கதவுகள், ஜன்னல் இவைகளின் அமைப்பைப்பற்றிக் கேள்விகள் கேட்ட பின்பு, "நல்லது அந்தவீட்டின் மாடிப்படிகள் எப்படிப் போய்க்கொண்டிருந்தன?" என்று கேட்டார்.

**சாக்ஷி:**—மாடிப்படியா? நான் கீழே யிருந்த போது மேலேயும், மேலேயிருந்த போது கீழேயும் போய்க்கொண்டிருந்தது.

* * *

**மாஜிஸ்ட்ரேட்.**—நாம் இப்போது தண்டனை விதிக்கப்போகிறோம். ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் உடனே சொல்லு.

**குற்றவாளி.**—துரையே! நான் திருடும்போதெல்லாம் சுவர் மூலையில் ஒளிந்து கொண்டிருந்தவன் சாக்ஷியத்தைக் கொண்டு என்னைத் தண்டிப்பதுமட்டுந்தான் நியாயமாகத் தோன்றவில்லை.

* * *

**பையன்.**—அப்பா! நம்மைக் காட்டிலும் வயதில் சிறியவர்களை ஒரு போதும் அடிக்கக் கூடாதென்று நீ சொல்ல வில்லையா?

**பிதா.**—ஆமாம்.

**பையன்.**—அப்படியானால், அந்த மாதிரி ஒரு கடிதாசியில் எழுதிக் கொடு. என் உபாத்தியாயருக்குக் கொண்டு கொடுக்கிறேன். அவருக்கு இந்த விஷயமே தெரியாது போலிருக்கிறது.

---

(110-ம் பக்கத் தொடர்ச்சி.)

களாகச் சில இருக்கின்றன. ஒரு கிளி 90 வருஷங்கள் இருந்ததாம்; அண்டங்காக்கைகள் ஒரு நூற்றாண்டளவும் ஜீவித்திருக்குமாம். வாத்துக்கள் சுமார் 40 வருஷங்கள் உயிருடனிருக்கும்.

# புத்த விஜயம்

## நாடக பாத்திரங்கள்

சுத்தோதனன்—உத்தரகோசல தேசத்தரசன்.

ஸித்தார்த்தன்—சுத்தோதனன் புத்திரன். கதாநாயகன். (கௌதமர், புத்தர், ததாகதர், போதிசத்துவர்) என்பன இவரது மறு பெயர்கள்.

ராகுலன்—ஸித்தார்த்தனின் புதல்வன்.

தேவதத்தன்—ஸித்தார்த்தனின் தாயாதி.

பிம்பஸாரன்— மகத நாட்டரசன்.

சந்தகன்—குதிரைப்பாகன்.

நந்தன், அர்ச்சுனன்—ஸித்தார்த்தன் தோழர்.

உதாயி—ஸித்தார்த்தனின் சகபாடி.

மித்திரன்—உதாயியின் சிநேகன்.

திர்புஷன், பாலுகன்—வர்த்தகர்கள்.

சாரீபுத்திரன்—ஸித்தார்த்தனின் சிஷ்யன்.

மாரன்—மன்மதன்.

கௌதமி—சுத்தோதனன் பத்தினி.

யசோதரை—ஸித்தார்த்தரின் பத்தினி.

லோகினி, புஷ்பாங்கி, நளந்தை—பாடகர்கள்.

ஸுஜாதை—ஓர் நங்கை.

ராதா—ஸுஜாதையின் தோழி.

காமம், வெகுளி, மயக்கம்—மாரனின் புத்திரிகள்.

(நடனமாதர், பாங்கியர், தோழர், பெண்கள், மந்திரிகள், நிமித்திகர், புரோகிதர், பிராமணர், மஹான், துறவோர், நோயாளி, கிழவன், ஜனங்கள், மாயா யசோதரை, இடையர், சேவகர் முதலோர்.)

## உபநாடக பாத்திரங்கள்

பத்மாமுணி—ஓர் ராஜபுத்திரி.

பக்தவல்லி—ஓர் மந்திரி குமாரி.

தீர்த்தன்—பக்தவல்லியின் தந்தை.

சற்குணப்பிரியன்—ஓர் ராஜகுமான்.

சுசீலன்—ஓர் மந்திரி குமாரன்.

சீனபதி—சற்குணப்பிரியனின் பிதா.

மலையன், குமரன், வேலன், மூக்கன் } வேடர்கள்.

இருளன், மாடன் } திருடர்கள்.

## நாடகம் நிகழ் விடம்

உத்திரகோசல தேசத்திலும், மகத நாட்டிலும், அவைகளை யடுத்த வனங்களிலும்.

முதல் அங்கம்

முதற் காட்சி.

இடம் : சோலை

காலம் : பகல்

பாத்திரங்கள் : துறவி, சுத்தோதனன்.

சுத்தோதனன்.—வேட்டையாடிக் களைப்புற்ற வருத்தம் எங்கேயோ போய்விட்டது. சிரமமே தெரியவில்லை. தேகத்தில் பூரிப்பும் உள்ளத்தில் உவகையும் மேலிடுகிறது. சுகமாய் நித்திரையும் வருகிறது. ஹா! ஹா! என்ன குதூகலம் எல்லாம் இம்மலர்க்காவின் மாட்சிமை யல்லவோ? ஆ! ஆ! பலவகை மரங்களும், புஷ்பவர்க்கங்களும் பரமானந்தம் உண்டுபண்ணும்படியாகச் சூழ்ந்துள்ள இப்பூம் பொழிலைப் பார்க்கப் பதினாயிரங் கண்ணல்லவோ வேண்டும்? இனிமையான காற்றும், குயிலின் பாட்டும், மயிலின் ஆட்டமும், நன்றே இசைந்திருக்கின்றன. இவ்வசோகத் தருவின் நிழலே நமக்கு மேலான சையாக்கிரகம். சற்று களை தீர்ந்து சாந்தியடைவோம்.

(இளைப்பாறுகிறான்.)

(துறவி பிரவேசம்)

துறவி.—இதுதான் லும்பினி வனமோ? புத்த ஞாயிறு உதித்த புண்ணியக்ஷேத்திரமிதுதானோ? இருள்மாண்டு, அருள்மீண்டு உலகம் ஒளிபெற அறவாழி அந்தணன், அருளாழி வேந்தன், மன்னுயிர்க் காவலன், உலகரக்ஷகன் ஜனனமான ஸ்தலமிஃதோ? அஸிதமாமுனிக்குத் தரிசன மளித்தது இவ்விடத்தில் தானோ? உலகெலாம் ஞானசுகந்தம் பரவி மகிழ்விக்கப் புத்தமலர் விரிந்தது இச்சோலையில்தானோ? தெரியவில்லையே

சு.—(எழுந்து) ஏதோ தொனி கேட்கிறதே. இவ்விடத்தில் யார் வருவார் பார்ப்போம். (துறவியைக் கண்டு வணங்கி) அடிகேள். தேவரீர் இங்கு பிராப்தமானது அடியேனது பூஜாபலமே.

து.—உத்தம! யார் நீ?

சு.—உத்தரகோசல தேசத்தை யாண்டுவரும் ராஜன் நான். என்பெயர் சுத்தோதனன், கொடிய விலங்கினம் உயிரையும் பயிரையும் பாழாக்கி வருவதுகண்டு, என் பிரஜைகள் பரிதபித்து முறையிட, இக் கானகத்தில் வேட்டையாடப் புறப்பட்டேன். வேட்டையாடிக் களைப்புற்று வருத்தந்திர இங்கு இளைப்பாற வந்தேன். வந்தவன், பாக்கியத்தால் தங்களைக் கண்டு மேன்மை யடைந்தேன்.

து.—நான் கருதியது கை கூடுகிறது. பார்த்திபா! கௌதமஸித்தார்த்தர் உமது புதல்வன்தானோ?

சு.—ஆம் தாயோய்!

து.—ஸர்வரக்ஷகா! உமது கருணைக்கோர் அளவுண்டோ? என்னை ஈடேற்றினீர் வள்ளலே! நான் என்னென்று துதிக்கட்டும்? ஹே! பரமாநிதே! ஆதித்த வம்சத்தில் புத்தாவதாரத்தைக் காணுமாறு நின் சங்கல்பமோ? (அரசனை நோக்கி) புத்தோதயங்கண்ட சுத்தோதன மன்ன! நான் ஓர் சன்னியாசி, ஆரண்யவாசஞ்செய்யும் துறவோரையும், மெய்த்தவத்தோரையும், மஹான்களையும் கண்டுசேவித்துப் பேறுபெற்றுனந்திக்கும் பேறுவாவுடையோனாய்க் கானிடை திரியலானேன். இப்பக்கம் சஞ்சரிக்குங்கால் இதன் விசேஷம் வினவியபோது இதற்கணித்தாயுள்ள கபிலையம்பதியைக் காவல் புரியும் இறைவனுக்கு அற்புதமான இளந்தோன்றல் பிறந்து தேவரும் யாவரும் போற்றத் திகழ்கிறுனென்று கேள்வியுற்று, ஆச்சர்யமான நன்னிமித்தங்கள் தோன்றத் தோன்றின தோன்றலின் தூயதோர் பூமிக்குயாத்திரிகனாய் வந்திருக்கிறேன். ஆதலால் மன்னவ! நடந்ததை விஸ்தாரமாகக் கூறுவீர்.

சு.—நற்றவத்தோய்! கேட்பீர். என் முதல் மனைவி, மாயாதேவி கருத்தரித்துப் பன்மதியுங் கழியுங்காலை அவளைத்தன் தாயகத்திற் கனுப்பவேண்டி ஸகல பரிவாரங்களுடன் சூழ்ந்துவருங்கால், லும்பினி வனமாகிற இச்சோலையை யடைந்ததும், எனது பட்டமகிஷி கருவுயிர்த்தாள். புத்திரனும் தோன்றினுன். அப்பொழுது அற்புதமான நிமித்தங்கள் பலநிகழ்ந்தன. ஆகாயம் மேகங்களின்றித் தூயதாய் விளங்கிற்று. நாக அரசர்கள் மலர்மாரி பொழிந்தார்கள். தேவர்களும் கானஞ்செய்து துதி செய்தார்கள். நாலாபக்கமும் சந்தோஷகரமானவைகளே நிறைபெற்றிருந்தன. என் மனமும் சாந்தியடைந்திருந்தது. இவைகளின் பொருளோ எனக்கு விளங்கவில்லை. உடனே அருகாமையிலுள்ள அஸிதரின் ஆச்சிரமமுற்று. அவரை யழைத்துவரச் சொன்னேன். நேர்ந்த குறிகளால் என்ன நேரிடுமோவென்று மனம் சஞ்சலித்துக் கொண்டிருக்கும் என்னிடம் அம்முனி வரவே, வணங்கினேன். அவரும் குழந்தையைப் பார்த்துப் பெருமூச்செறிந்து ஹா! என்றதும் கண்ணீர் விட்டார். எனக்கோ துக்கம் வந்துவிட்டது. உடனே அஸிதர், "இக்குழந்தையைத் தெய்வமாக வணங்குகிறேன். இவரைப்பற்றி யாதொரு கவலையாவது சங்கையாவது உண்டாக வேண்டியதேயில்லை. நிகழ்ந்த நிமித்தங்கள் யாவும் இவர் உலகத்திற்கு இரக்ஷிப்பு உண்டாக்குவாரென்பதை அறிவிக்கின்றன. எனக்கோ அந்திம தசை நெருங்குகிறது. எல்லா உயிர்களுக்கும் கருணையையும், பரிசுத்தத்தையும் இவர் அளித்திலங்கும் பொழுது நான் ஜீவித்திருக்க வியலாதென்பதை யுணர்ந்து கண்ணீர் விடுகிறேன்" என்றார்.

து.—அஸிதான்றோ பாக்கியசாலி. ஆ! ஆ! என்ன சந்தோஷம்! அப்புறம் என்ன நடந்தது?

சு.—சொல்லுகிறேன். பின்பு, அவர் "இவருடைய போதனைகள் வனாந்தரத்தில் கொடிய உஷ்ணத்தினால் வருந்தும் பிரயாணிக்குக் குளிர்ந்தசோலையிலுள்ள நீரூற்றைப் போலவும், திசை தப்பி அலையும் மாலுமிக்கு ஓர் துறைபோலவும், நெறி தப்பித்தியங்கும் குருடனுக்குக்கோல்வாங்கி வழி நடத்துவோனைப்போலவும், வேடர் கையில் அகப்பட்டுழந்தும் பறவைகளுக்குப் பணங் கொடுத்து சிறைமீட்டின இரக்ஷகனைப் போலவும், கொலை செய்யப்பட வேண்டுமென்றவனுக்கு "விடுதலை, விடுதலை" என்ற சத்தம் போலவுமிருந்துகொண்டு எல்லாவற்றிற்கும் அடைக்கலம் போன்றுள்ளன. மாரியின்றி வறண்டு போயிருக்கும் கழனிகளாகிய உயிர்களுக்கு இவருடைய அருளாகியமேகம் மழை தந்து, குளிரச் செய்யும்" என்று கூறி, குழந்தைக்கு ஸாமுத்திரிகா லக்ஷணங்கள் யாவும் பூர்ணமாயுள்ளன. என்ன பாக்கியம் என்ன செல்வம்! என்ன பெருமை! என்று குழந்தையை நோக்கி "இதோ தொழுகிறேன் நீர்தான் புத்தர். உமது ஒளியைப் பார்க்கிறேன். நீர் தருமத்தைப் போதிப்பீர், அதனால் மனிதர் உஜ்ஜீவன மடைவார்கள் என் அறநெறியே!' என்று தீர்க்க தரிசனங் கூறினார். பிறகு புத்தமலர் விரியுங்கால் எனக்கு எண்ணிலாக் கவலைகள் நேரிடுமென்றார். அதை யறிவிக்குமாறு கேட்க, இவர் துறவு பூண்டு உலக ரக்ஷகராயிருப்பாரென்றார். துறவு கொள்ளுங்காலமெப்பொழுதோ வென்று வினவ, இப்பொழுது தெரிவிக்கத் தக்கதன்றெனக் கூறிப்போய்விட்டார். பின்னர் குழந்தைக்கு ஸித்தார்த்த னென்று நாமதேயமிட்டேன். மாயாதேவியும் எனது இரண்டாம் பத்தினியாகிற கௌதமியிடம் தான் இப்பேர்ப்பட்ட குழந்தையைப் பெற்றபின்பு வேறொரு மகவைக் கருவுயிர்த்தல் சிறந்ததன்று, இனி நெடுங்காலம் உயிர் தரியேனென்றும்; தனக்குப் பின் அவளே தாயாக இருந்து குழந்தையைக் காப்பாற்றி வரவேண்டுமென்றும் செப்பவே, கௌதமியும் அதற்கு உண்மையுரைத்தாள், பின்பு மாயாதேவியும் மாண்டு போனாள். கௌதம சித்தார்த்தனும் அரண்மனையில் வளர்ந்து வாலிபனாய் விளங்குகிறான். இதுதான் விருத்தாந்தம்.

து.—அண்ணலே! தருமசக்கரப் பிரவர்த்தகரின் சரிதம் கேட்டதும் என் மனம் குளிர்ந்தது. நானும் நற்கதி யடைந்தேன். ஸகல மங்களமும் உண்டாவதாக. நான் போய் வருகிறேன்.

சு.—அமலோய் வந்தனம், நானும் சென்று வருகிறேன்.

(போகிறார்கள்.)

முதற்காட்சி முற்றிற்று.

முதலங்கம்

இரண்டாங்காட்சி

இடம் : உத்தியானம்

காலம் : பிற்பகல்

பாத்திரங்கள்: கௌதமர், தேவதத்தன், சேவகன்

**கௌதமர்.**—என்ன விநோதம்! அன்னப்புள்ளினம் குழாங்களுடன் பறப்பதும், வசந்தகால இன்பமான காற்றும், இந்த அழகான பூந்தோட்டமும், இத்தாமரைத் தடாகமும், ஆ! ஆ! என்ன சொல்லட்டும். அவைகளின் வெண்ணிறச்சிறகுகள் எவ்வளவு தூயதாயும், பளபளப்பாயும் விளங்குகின்றன? இமயகிரிச் சாரலை நோக்கிச் செல்லுகின்றனவோ? அதுதான் அவைகளின் உறைவிடமோ?

—ஓர் அன்னம் அம்புதைத்து விழுகின்றது.

**கௌதமர்**—ஐயோ! எவன் அம்பு விட்டானோ? இது என்ன தீங்கு செய்ததோ? தீங்கின்மையல்லவோ இதனிடம் நிறைந்து விளங்குகின்றது. பாவி மனம், இதை நோக்கி அம்பெய்யத் துணிந்ததெங்ஙனம்? இரக்கமென்பது அணுவளவேனும் அவன் நெஞ்சில் இருந்திருக்குமாயின் இக்காரியம் செய்திரான். (அதை எடுக்கிறார்)

ஹா! வெண்ணிறச் சிறகெலாம் செந்நிறமானதே! இதை எவ்வாறு சகிக்கும்? ஐயோ? என்ன தீச்செயல்! இதுதான் விளையாட்டோ? வேடிக்கைக்காக உயிரை வருத்தல் ஆகுமோ? பிராணிகளை மாய்த்தல் எவ்வளவு கொடியது? தங்கள் உடம்பில் சிறிது நோவு நேரிட்டால் துன்பம் அதிகமாயடைகிறார்களே, ஓர் அம்பு ஊடுருவிப்பாய வேண்டுமென்றால் எவ்வளவு வருத்தம் உண்டாயிருக்கும்? இதைச் சிறிதேனும் உணர்கிறார்களில்லையே.

(உட்கார்ந்து பாய்ந்த அம்பை எடுக்கிறார்.)

மடவனமே! அஞ்சேல். உனக்கு யாதொரு கெடுதியுமிழைக்கேன். வருந்தேல், ஆருயிர்த் துணைவ நின்னெஞ்சு பதைபதைக்கிறதே. அமைதி பெருவாய். இதோ புண்ணைக் குணமடையுமாறு செய்விக்கிறேன். ஔஷதப்பூண்டை யிடுகிறேன் ஆறுதலடைவாய். நிஷ்கபடனே! உன் வருத்தத்தை பார்த்து என்னுள்ளம் வருந்துகின்றது. மன்னுயிரைத் தன்னுயிரை யொப்ப நினைத்து ஓம்புதலன்றோ விதிமுறை வழுவா நெறியாகும். எனது கையில் இந்த அம்பின் முனை பட்டதில் பொறுக்க வொண்ணாத வருத்தம் இருக்கிறது. ஐயோ! நீ உனது கூட்டத்துடன் ஆனந்தமாய்ப் போய்க்கொண்டிருக்கையில் அந்த சுகத்தையிழந்தாய். இத்துன்பத்திலும் அழுத்தப்பட்டாயே! அந்தோ? என்ன பரிதாபம்! ஹா!

(சேவகனொருவன் வருகிறான்.)

**சேவகன்.**—மகிப! எங்கள் அரசகுமாரன் எய்து வீழ்த்திய பறவையிது. அதைக் கொண்டுவர இங்கே என்னை அனுப்பியிருக்கிறார். அதைக் கொடுக்கப் பிரார்த்திக்கிறேன்.

**கௌ.**—சேவகா! நன்று கூறினாய். கொடுக்க மாட்டேனென்று சொன்னதாகப்போய்ச் சொல்.

**சே.**—குரிசிலே! பூஞ்செடியில் இங்கே விழுந்தது மெய்தான். வேந்தன் ஆணையை வேண்டிவந்தேன். இதுதான் அடியேன் வார்த்தை.

**கௌ.**—இல்லை; நான் கொடுக்க மாட்டேன்.

(தேவதத்தன் வருகிறான்.)

**தேவதத்தன்.**—ஸித்தார்த்தா! தொகுதியாய்ச் சென்று கொண்டிருந்த அன்னப்பறவைகளின்மேல் இலக்குவைத்து அம்பெய்தேன். எல்லாவற்றிற்கும் முன்னதாகப் பறந்த அன்னத்தின் பரந்த கன்ற சிறகிற்றைத்ததினால் வியசனத்துடன் இவ்விடம் விழுந்திருக்கிறதென்று தெரிந்து வந்தேன்.

**கௌ.**—இங்கேதானிருக்கிறது. தைத்ததைப் பிடுங்கிக் குளிர்ந்த பச்சிலைகளால் அந்தப் புண்ணிற்கு வேண்டிய சௌஸ்தகரமானவைகளைச் செய்திருக்கிறேன்.

**தே.**—அது என்னுடையது; கொடுக்கவேண்டும்.

**கௌ.**—பறவை உயிரோடிருக்கிறது? செத்து விட்டதென்றால் உன்னிடம் கொடுத்தல் உத்தமம். நீ அம்பெய்ய மாத்திரம் செய்திருக்கிறாய்.

**தே.**—இறந்தாலும் உயிரிருந்தாலும் அது எய்து வீழ்த்தியவனுக்கே உரியது. என் கையே பட்டிருப்பதனால்.

**கௌ.**—ஆகாயத்திலிருக்கும்பொழுது உன்கைபட்டிருந்ததனால் உன்னுடையது. இது வாஸ்தவம். பூமிக்கு வந்தபின் என் கை பட்டிருப்பதினாலே என்னுடையதே யாகும்.

**தே.**—இவ்விடம் அது இருப்பதற்கு மூலகாரணம் நானானதால் அது எனதுடைமை.

**கௌ.**—தேவதத்தா! அம்பெய்தலென்னும் பாத்தியம் உனது; அருள்சுரத்தல் போன்ற சுதந்தரம் எனது, உன் பாத்தியதையால் நீ அனுபவித்தாய் விட்டது; இனி என் சுதந்தரத்தினால் நான் இதை உரிமை கொண்டாடவேண்டும்.

**தே.**—எவ்விதத்தாலும் பறவைக்கு நானே உரித்தாளி. நான் எவருக்கும் கொடுக்கமாட்டேன்.

**கௌ;**—இவ்விதம் விவாதம் பண்ணுகிறதானால் ஒழுங்குப்படி நடத்திக்கொள்வோம்.

**தே.**—சரி (தேவதத்தன் போகிறான்.)

**கௌ.**—பெரியோர் இது விஷயமாக என்ன தீர்மானம் செய்கிறார்களோ அதின் பிரகாரம் இணங்கச் சித்தமா யிருக்கின்றேன்.

(விரைந்து நடக்கிறார்கள்.)

இரண்டாம் காட்சி முற்றிற்று



முதலங்கம்

மூன்றாங் காட்சி

இடம் : நீதிஸ்தலம்

காலம் : முற்பகல்

பாத்திரங்கள் : சுத்தோதனன், மந்திரிகள், கௌதமர், தேவதத்தன், சேவகன், மஹான்.

**சுத்தோதனன்.**—அமைச்சர்காள்! தேவதத்த கௌதமரிருவர்கள் சொல்லிய விவாதங்களையும் அவர்களில் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய வார்த்தைகளின் ஸ்தாபகார்த்தமாகப் பேசிய விஷயங்களையும் கேட்டுக்கொண்டோம். இனி நமது காரியம் முடியவேண்டும்.

**1, வது மந்திரி.**—அரசே! ஆமாம். நியாயத்திற்காகக் காத்திருக்கின்றார்கள்.

**சு.**—உங்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்க விரும்புகிறேன்.

**1-வது ம.**—தருமமே உருக்கொண்டு வந்த வேந்தே! இதுவோ நியாயஸ்தலம். பொய்மை யென்பது அழியவேண்டும், மெய்மை பொழியவேண்டும். ஓரமென்பது வேரொடு மாளவேண்டும்.

**2 வது ம.**—எல்லோரும் வேண்டுவது நீதியே.

**1-வது ம.**—உயிரை மாய்த்தல் எளிது; அதனை ஈதலோ அரிது. முன் கூறியது செய்பவனுக்கு சுய நய இன்பத்தை மாத்திரம் கொடுக்கும்; பின்னதோ ஈந்தார் தமக்கும், அடைந்தார் தமக்கும் அதைப் பார்த்தோர் தமக்கும் அளவிலா ஆனந்ததை யளிக்கும். ஒன்று, கர்த்தாவுக்கு பிரதி பலனான தீமையே நேரும்படி செய்யும், மற்றொன்று நன்மையைப் பொறுக்கும். ஆதலால் கௌதமருடைய நடத்தையே உத்தமமானது. எது நன்மையோ அதுவே சத்தியம், சத்திய மெதுவோ அதுவே நீதிபாற் சாரும், ஆகையினால் நன்மையும் நீதியும் மாறுபாடின்றி கைகோர்த்துலாவும்; இவ்வாறிருப்பின், கௌதமர் பக்ஷமே நீதி சாரும்.

**2-வது ம.**—க்ஷத்திரிய முறைப்பிரகாரம் வேட்டை முதலியவைகள் அவர்கள் வழக்கமாகும்; இராஜ வம்சத்தைச் சார்ந்த நமது தேவதத்தன் இளங்குரிசில் போன்று திறமை வாய்ந்து தன் தனுர் வித்தையைக்கண்டு மகிழுமாறு ஏதோ சந்தோஷ நிலைமையில் அம்பெய்து இலக்குத் தவறுமலிருந்ததைக் கேட்க நாமெல்லாரும் இன்பமடைய வேண்டும். தேவதத்தனால் விழுந்தது யதார்த்தம். கௌதமருக்கு அப்பொழுது அதில் யாதொரு சம்பந்த மில்லை யென்பது சொல்லாமலே விளங்கும். பிறகுதான் கௌதமர் எடுத்தார். ஆதலால் உரிமை தேவத்தனுடையது. உத்தியானம் வழி; வழியில் விழுந்து கிடந்த பொருள் அன்னப்பறவை; எடுத்தவர் கௌதமர்; இத்தால் உடையவன் கேட்டால் எடுத்தவன் கொடுப்பது நியாயத்திற்கு விரோதமல்ல வென்று நீதியில் எனது அபிப்பிராயம் கூறுகிறது.

**சு.**—காரியம் அற்பமேனும் இதிற் பிரவேசிக்கிறதற்கு ஆழ்ந்த அறிவு வேண்டியதா யிருக்கிறது.

**மஹான்.**—(தோன்றி எழுந்து) உயிரை யொரு பொருட்டாக மதிக்கிறதானால் அதற்குச் சுதந்தரஸ்தன் அதைக் காப்பாற்றினவனேயன்றி கொல்லப்பார்த்தவனாவது கொன்றவனாவது ஆகான்; கொன்றவன் நாசத்தை யுண்டு பண்ணுகிறான், காப்பாற்றினவனோ விருத்தியை யுண்டு பண்ணுகிறான்; இவனுக்கே பறவையைக் கொடுங்கள். மனுக்குலத்தில் கௌதமனே உத்தமன்.

(மறைகிறார்.)

**தேவதத்தன்.**—(தனக்குள்) நாம் சொன்னதோ பலிக்க வில்லை. கௌதமனோ அனுகூல மடைந்தான். இனி இவனுடைய இஷ்டம் நமக்கு வேண்டியதேயில்லை. எப்படியும் அந்தத் தாயாதியின் குணத்தைக் காட்டி விட்டான். எவனோ மஹானும், ஏதோ சொன்னானும். அதற்கு மந்திரி ராஜா எல்லாரும் இணங்கினார்கள். நமக்கிங்கென்ன காரியம்? சிச்சீ! நியாயஸ்தல மிதுதானோ? என்ன யோக்கியதை? (போகிறான்.)

**சு.**—சேவகா! அம்மஹானை யழைத்துவா, சீக்கிரம் போ. அவருக்கு உபசரணை யொன்றும் செய்யவில்லையே. (சேவகன் போய் வருகிறான்.)

**சேவகன்.**—ஸ்வாமீ! போய்ப்பார்த்ததில் அவரைக் காணவில்லை. சிலரிடத்திலும் விசாரித்தேன். ஒருவன் தலைமூடியிட்ட பாம்பொன்றை நகரக் கண்டேனென்றான்.

**சு.**—இதென்ன விசித்திரம்! அரிது அரிது, இத்தகைய தெய்வீகத்துவமுடைய மஹானைக் காண்பதரிது. (போகிறார்கள்.)

---

முதலங்கம்

நான்காம் காட்சி

இடம் : விளையாட்டிடம்

காலம் : மாலை

பாத்திரங்கள் : கௌதமர், தோழர், சனங்கள், அரசன், நந்தன், அர்ச்சுனன்,

**கௌதமர்.**—வில்வித்தை, வாள்வீசல், தேரூர்தல், யானைகுதிரை யேற்றங்கள் முதலிய பயிற்சிகளில்

எனக்குத் திறமையில்லையென்று எவர்சொன்னார்? தந்தையே! இதோ பாரும். உமது முன்னிலையில் யானே வல்லவனென்று காட்டுகிறேன்.

**சுத்தோதனன்.**—சரி. ஸித்தார்த்தா! உங்கள் ஆட்டங்களை ஆரம்பியுங்கள்.

**சனங்கள்**—(ஒருவருக்கொருவர்) இராஜ புத்திரன் இவைகளில் சாமர்த்தியம் வாய்ந்ததென்பதை இதுபரியந்தம் வெளிக்குக் காட்டவில்லை.

**கௌ.**—முதலில் வில்லில் சோதனை பார்க்கலாம். வெகு தூரத்தில் பறை யொன்றை வையுங்கள். சேவகர்களே! அதுதான் நமது குறி. இலக்கு வைத்து விடுங்கள்.

**நந்தன்.**—இதோ நான் அதைத் துளைக்கிறேன். (நாணேற்றி அம்பெய்கிறான்.)

**அர்ச்சுனன்.**—எனக்கொரு பறையை வையுங்கள். (வில்லெடுத்து) அம்பு ஊடுறவிப் பாய்வதைப் பாருங்கள் (விடுகிறான்.)

**ச.**—ஆ! ஆ! (கைகொட்டுகிறார்கள்.)

**கௌ.**—என்னுடைய வில்லை எவராவது வளைக்கக் கூடுமா? (நந்தன் முதலானோர் தங்களாலியன்ற வரை பார்த்தும் முடியவில்லை.)

**ச.**—இது பண்டைக்காலத்துத் தனுஸ். இதை வளைக்கப் பலமதிகம் வேண்டும். சாதாரணமானவர்கள் இதை உபயோகிக்கமுடியாது.

**கௌ.**—நான் இதோ நாணேற்றுகிறேன்.

**எல்லோரும்.**—ஆச்சரியம்! எல்லாவற்றிலும் இதுவே சிறந்தது.

[கௌதமர் அம்பு அதிக தூரத்திலுள்ள பறையைத் துளைத்து கண்ணுக் கெட்டாமற் போயிற்று.]

**தோழர்.**—என்ன திறமை! என்ன பலம்!

**அ.**—இந்த மரத்தை என் வாளால் துணிக்கிறேன். (வாள் சிறிது தூரந்தான் சென்றது.)

**ந.**—என் வல்லமையைப் பாருங்கள்.

(அர்ச்சுனனைக் காட்டிலும் சிறிது அதிகம் செலுத்தினான்.)

**கௌ.**—சேர்ந்து வளர்ந்திருக்கும் இந்த இரண்டு அடி மரங்களையும் ஒரே வெட்டில் துண்டாக்குகிறேன்.

(அப்படியே செய்ததில் துண்டுகள் கீழே விழாமல் நேராகவே நின்றன.

**எ.**—அற்புதம்! விசித்திரம்)

(கைகொட்டுகிறார்கள்.)

**கௌ.**—தோழர்களே! குதிரைகளைக்கொண்டு வாருங்கள். இப்பந்தயத்தில் யார் ஜெயிக்கிறாரென்று பார்ப்போம்.

[பந்தயத்தில் எல்லோரையும் தள்ளி அடங்காமலிருந்த குதிரையைக் கௌதமர் பிடித்துக் கொள்ளுகிறார்]

**கௌ.**—நான் சவாரிசெய்து பார்க்கட்டும்: (அவரிடம் அது அடங்கியிருக்கிறது.)

**சு.**—ஸித்தார்த்தா; போதுமானது. நீயே எல்லாரிலும் வலிமை யுடையவன்.

**தோ.**—நீதான் எல்லாவற்றிலும் கெலித்தாய். உன்னைவிடப் பலசாலி இங்கொருவருமில்லை. (கௌதமரைக் கனப்படுத்துகிறார்கள்)

---

முதலங்கம்

ஐந்தாங்காட்சி

இடம்: தர்பார் மண்டபம்

காலம்: பின்காலை

பாத்திரங்கள்: அரசன், மந்திரிகள், சேவகர்.

**1-வது சேவகன்.**—ராஜாதி ராஜ ராஜ ராஜேந்திர பூபதே!

**2-வது சே.**—ஜே.

**1-வது சே.**—ராஜாதி ராஜ ராஜ ராஜேந்திரபூபதே!

**2-வது சே.**—ஜே. (சுத்தோதனன் வருகிறார்.)

**2-வது சே.**—விஜய லக்ஷண பிரதாபசீல மகிபதே!

**1-வது சே.**—ஜெய, ஜெய, ஜெய, ஜெய.

**2-வது சே.**—விஜய லக்ஷண பிரதாபசீல மகிபதே!

**1-வது சே.**—ஜெய, ஜெய, ஜெய, ஜெய.

**இருவரும்**—ஜே, ஜே, ஜே.
ஜே, ஜே, ஜே.

**சுத்தோதனன்.**—மந்திரி பிரதானிகாள்! இரவியின் ஒளியை மறைக்கும் இராகு கேதுக்களைப் போல நமது இளவரசன் சந்தோஷத்தைக் கெடுக்க ஓர் எண்ணம் பிறந்திருக்கிறதுபோலத் தோன்றுகிறது.

**1-வது ம.**—காவல! யௌவன தசையை அடைந்த நமது இளங்கோவிற்கு எந்தக் காரணத்தாலும் அமங்களக் காட்சி யென்பது கனவிலுந்தோன்றக் கூடாதென்பதை உறுதிப்படுத்த நாம் அழகு வாய்ந்த அரண்மனைகளைக் கட்டிக் கொடுத்தோமே.

**சு.**—அந்த விஷயத்தில் யாதொரு குறையும்வைக்கவில்லை, மேலும் நமது நாட்டின் சீர்வள நிலவளங்களையும் பிரஜைகள் இன்புற்று வாழ்வதைக் காட்டியதுபோலவே அவைகளைப்பற்றியும் நன்றாய் விவரித்துரைத்தேன். உபவனங்களையும் காண்பித்தேன். ஒவ்வொரு காலத்துக்கும் அவனது இருக்கை இனிதிருக்குமாறு வேண்டியவைகள் செய்தும் பயனிலாவாயின,


# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி X || பிங்கள ௵ ஐப்பசி :: 1917-௵ நவம்பர்௴ || பகுதி 5


**To The Right Hon'ble Mr. E. S. Montagu!**



அதிமேன்மைதங்கிய ஸ்ரீமான் மாண்டேகு
நமது இந்தியா மந்திரி

## நல்வரவு

வாழ்த்துக! வாழ்த்துக! வையமெலாம் ஒன்றி;
டாழ்த்துகத் தூக்கம், வான் பராய்வருஞ் செஞ்சுடர்
கீழ்த்திசைத் தோன்றுமாக் கிளர்ப்ர தானியன்,
சூழ்ச்சியிற் சீரியன், தோன்றலுக் கேற்றவன்,
மாண்டகு மாண்டகு மானவாபரணன்
காண்டகு மிந்தியைக் காதற் கிசைந்தவன்,
நீண்டகு மனைநல நெறியவட் கேதரப்
பூண்டகு ணத்தனைப் போந்தவற் கெங்குமே
வாயது வாழ்த்தி மணங்கி ளைத்திட
நேயவோர் வீழ்த்து நெறிக்கொடி படருறீஇ
'உனையலால் உறவார்?' எனச்சரண் சுற்றிட
அகமது மலர்ந்துயர் முகமணியம்பி
அனவர தமுமறு அன்பெழீஇ
நினைவுறக் கூறுப நெடுநன் வரவே!

விவேக போதினி

தொ. 10] பிங்கள௵ ஐப்பசி௴ [ப. 5

# விவேகத் தூய்மை

## THE IDEAL LIFE

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் திருவாய்மலர்ந்தருளிய பேரின்ப வழியின்படி, யாவற்றுள்ளுங் கலந்தும் கலவாது விளங்கும் பரம்பொருளை மனத்துள்காடி அறியும் ஸந்யாஸமார்க்கத்தைப் பற்றுதற்கு, விடாது பற்றும் உலகப்பற்றையற்று, பிறப்பை யறுப்பதற்கு, உபாயம், தியானம், ஸமாதி என்னும் முவ்வழிகளே ஸாதனமாகும். அவற்றுள் உபாயத்தால்தான் முதல்முதல் மனத்தைச் சீர்ப்படுத்தல்வேண்டும்; அதற்கு

"அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை; விடல்
வேண்டிய வெல்லா மொருங்கு" [வேண்டும்

அதாவது ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னு மிவைகளுக்குரிய ஐம்புலன்களைப் பிறவெளியில் செல்லாது அவற்றின் வியாபாரத்தைக் கெடுத்தலாகும்; இவ்வாறு செய்வது இன்றியமையாதது. ஏனெனில், அவ்வாறு செய்யாவிடில், அப்புலன்கள் தம்வழியே மனத்தையிழுத்து, புலன்களின் வியாபாரத்தை அதிகப்படுத்துமே யல்லாது குறைக்கா. ஆகையினாலே ஒருவன் ஸந்யாஸமார்க்கத்திற் காயத்தமாகவேண்டு மென்றால், லோக வியவஹார அபஸ்மாரங்களில் பாய்த்து மனத்தைக்கெடுக்கும் ஐம்புலன்களை அவிக்கவேண்டும். அதற்கு விஷய ஆசையை ஒருங்கே ஓரே ஸமயத்தில் விடும்படியான நிலையையடைவதே வழியாகும். அப்போது உலக வியாபாரமற்ற மனம், தியானத்திற் பதிந்து உள்ளத்து உறவனை அறிந்து, ஸமாதி நிலையடைய முடியும். விதுரரும் அரச சபையிலிருந்தாலும், நடந்த விஷயங்களைக் கண்டுகொண்டேயிருந்தாலும், தன்னைக் கேட்டாலொழிய மறுமொழி கூறாது, மௌனமாக விதுரர் விளங்கியதன் காரணம் இதுதான். அவர் "வேண்டியவெல்லாம் ஒருங்கே" விடுவதற்கான உபாயங்களையேஅப்போதுதேடிக்கொண்டிருந்தார். தமக்குப் பெரியோர், தமது நிலையை நம்பி லோக ஹிதார்த்தமாக மந்திரிப் பதவியில் வைத்ததைத் தமது ஆத்ம அனுபவத்தையே முன்னிட்டு விட்டு ஜனங்களைத் தத்தளிக்கச் செய்வது ஞாயமன்று, தருமமுமன்று; தாம் உயர்வதற்கு அது வழியுமன்று. ஆகவே அவர் ஸமயங்கள் வாய்க்குங் காலங்களை ஆவலாய் நாடிவந்தனர். அரச சபையில் துரியோதனன் பழிமொழி கூறினதும், தமது வில்லை முறித்து ஒடித்து எறிந்தது, அவர்க்கு முதல் வழியாகியது. அதனால் யுத்தங்கள் நடக்கும்போது அவற்றுள் தாம் கலவாதுவிளங்கும்படியான நிலை அவர்க்கு உண்டானதேயொழிய, அவர் மேலும் மந்திரி வேலையிலிருந்து வந்ததால் முற்றும் விஷய ஆசையை ஒருங்கே விடமுடியாதாயிற்று. ஏனென்றால்,

அறிகொன் றறியா னெனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.

ஆகையினால், வரும்பொருளறிந்து கூறுதலை மதிக்காதிருந்தாலும், மன்னவனை அதைக் காரணமாகக் கொண்டு வெறுக்காது உறுதிமொழி கூறுதல் மந்திரியின் கடமையாகும். தர்ம ஸங்கடமான நிலையிலிருந்தாலும் விதுரர் அந்நிலையில் முள்மேல் நிற்பவன்போல இருந்தனர். இங்கு ஒன்று கவனிக்கவேண்டியது. அதாவது "விதுரர் வில்லை ஒடித்து எறிந்தது கோழை மனத்தாலன்றோ?" என்பதேயாம். அதிலும் அவர் க்ஷத்ரிய தருமம் மேற்பூண்டு அவ்வாறு செய்தது அதர்மமன்றோ என்றும் கேட்கலாம். க்ஷத்ரியனுக்கே யுத்த நிலையில் உறவு பகை பாராட்டாது உறுதியுடன் விளங்கவேண்டுமென்பது கடமை. விதுரர் பிராமணருக்குச் சூத்ர ஸ்த்ரீயிடம் பிறந்தவரானபடியினாலே க்ஷத்ரியரல்லர். இதை யுணர்ந்தே பீஷ்மர் அவரை அவரது ஞான நிலையை மதித்து மந்திரிபதவியில் வைத்தனர். ஆதலால், அவர் தாமே அப்பதவியிலிருந்து விலகுவதஸாத்யம். அவ்வாறில்லாமல் விலகினால் தரும விரோதம். ஆக இருதலைக் கொள்ளி எறும்பதுபோல மனமானது நிலையுற்றிருந்தாலும், அதனை அலைபாயவிடாது, பொறையாண்டு, தக்க பருவகாலத்திற்காகக் காத்திருந்தனராகையால், வில்லை முறித்தெறிந்தது, தரும ஸங்கடத்திற் கிடந்தராது, க்ஷத்ரியனல்லாத தான் அந்தத் தருமத்தை மேற்கொள்ளாதிருக்கும்படி செய்து, தனது ஸந்யாஸ மார்க்கத்துக்கு நல்வழி காணும்பொருட்டு, விஷய ஆசைக்கு மூலாதாரமான சண்டை சச்சரவை ஒழித்தனர். ஆயினுமவர்க்கும் பற்றுமுற்றும் ஒருங்கே விலக்க முடியாமையால் அவ்வாறு செய்வதற்குத் தருணம் எப்போது வாய்க்குமென்று ஆத்திரமும் பரபரப்பும் வாய்ந்து விளங்கினர்.

திருதராஷ்டிரன் செய்த அதரும வியவஹாரத்தினால் கௌரவ குலத்திற்கு வரும் ஹானியையும், அவன் கௌரவ பாண்டவ கட்சியாரை ஸமரஸப்படுத்தி, நியாயமான வழிப்படி அரசியல் செய்யுமாறு செய்தாலொழிய, கௌரவ குலம் அதோகதி அடைந்து வேரற்று விடும் என்றும், அவனுக்குச் சஞ்சயனென்ற முனிபுங்கவன் எடுத்துரைத்தான். அக்காலம் கண்ணிருண்டவன் மனமும் பயத்தா லிருண்டது. என் செய்வது? மனத்தில் கவலை ஊற ஊற, மென்மேலும் பீதி தோன்ற, தூக்கங்கடந்து, இரவு முழுதும் மனந்தடுமாறி, செய்வதின்னதென அறியாது மயங்கிப் படுக்கையிற் புறண்டுருண்டு, வெருண்டு, அவலமடைந்து, தன்னெஞ்சு தன்னைச் சுடச் சுட, வெறுப்புத் தீவாட்ட மெலிந்து அயர்ந்து கிடந்த ராஜ திருதராஷ்டிரன் எண்ணமிட்டுக்கொண்டே யிருந்தான். அப்போது தான் சாந்த நிலைமையிலேயே விளங்கிய விதுரரது நிலைமையின் பெருமை அவனுக்குக் கனவுபோலக் கண்ணெதிரில் தோன்றியது. பாழும் மக்களாசை என்னும் மாயச் சுழலில் பட்டுத் தடுமாறுந் தனக்கு நல்ல ஸமயத்தில் யோசனை கூறும்படி அப்போது விதுரரைத் தருவித்தான். விதுரர் வந்ததும் "அண்ணா! உமதாணையின் பெருமையைத் தலைமேற்கொண்டு அடியேன் சொல்வதைக் கேளும். சொல்ல வேண்டியதென் கடமை; நீர் கேட்பினுங் கேட்காவிடினும் சொல்ல வேண்டியதென் கடமை. பொன் கத்தியா மென்று கழுத்தறுத்த லாகுமோ? பிள்ளைகளென்னும் ஆசையிலுட்பட்டு, அவர்களை அடக்கியாளாமலே விடலாமோ? அடக்கியாளாத பிள்ளையும், முறுக்கிவளர்க்காத மீசையும் வாயில் ஏய்க்கும் அன்றோ? அந்நிலைக்குப் பழியாரோ? உலகில் உன்னைப்பழியாரோ? அடியேன் சொல்வதைக் கேட்டு மயங்கியிருத்தலும் ஆமோ? குற்றமே கொண்டு முற்றும் விளங்க, நீவிர் பெற்ற சிறுவர்களைச் சற்று அடக்கி, பற்றும் பெரும் போரைப் பற்றவிடாது, பாண்டுமக்களும் பாராண்டிடச் செய்தாலன்றி, கூண்டோடு உன் குலம் பூண்டோடற்று மாண்டிடும் அல்லவா? அடியேன் சொன்னதற்காக வருத்தப்படலாகாது. உள்ளதையும், வருவதையும் உண்மையுடன் கண்டு கூறவேண்டிய தென் கடமையானதால் சொல்ல வேண்டியதாயிற்று" என்று கண்டிப்பான மொழிகளைச் சொல்லித் திருதராஷ்டிரனுடைய ஊழல் குணத்தை எடுத்துக் காட்டி நல்லுபதேச மொழிகள் கூறினார்.

இதைக்கேட்ட அந்தக் குருட்டரசன் தன்னிலையை ஒருவாறு உணர்ந்து, தனது தாழ்ந்த நிலைமையை எண்ணித் தனக்கு ஞானோபதேசஞ் செய்யும்படி விதுரரை வேண்டினான். ஆனால் விதுரர் அதற்குத் தமக்கு யோக்யதை இல்லை என்று சொல்லி மறுத்தனர். விதுரர் தமது வருணசங்கரத்தை எண்ணி ஞானோபதேசஞ் செய்யும் அதிகாரம் தமக்கு இல்லையென்று வெகு வணக்கத்துடன் சொன்னது இங்கு கவனிக்கத் தக்கது. இது அவரது மனோபாவத்தின் பெருமையையே விளக்கும். இச்சையை வளர்க்கவரும் பொருளை எதிரிலேயே கண்டிருந்தும் அவற்றைத் திரணமாக மதிப்பதல்லவா மனத்தின் பெருமையாகும்? இந்நிலையில் இராமருடன் தோன்றிய பரதனை விதுரருடன் ஒப்பிடலாம். இல்லாமலா அவனைக் கொல்லும் எண்ணத்துடன் சென்ற குஹன்,

"தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே ளாவரோ தெரியி லம்மா."

என்று வியந்தது? நிற்க, விதுரர் தமது அதிகாரத்தை நினைந்தாராயினும், தன் முன்னவனுக்கு நன்மை செய்யவேண்டிய தனது கடமையை எண்ணி, தம்மைச் சமாதியிலிருத்தி அதன் மூலமாக ஸநத் குமாரரென்னும் அந்தணர்க் கந்தணராகிய பரமஞான ஆசிரியரை வரவழைத்துத் தன் தமையனுக்கு அனுக்ரஹம் செய்யும்படி செய்தனர்.

(இவ்விஷயங்களை விஸ்தாரமாக ஸ்ரீ வேதவியாஸரது பாரதத்தில் உத்யோக பருவத்தின் உட்பிரிவுகளாகிய விதுரப்பிரஜாகர, ஸனத்ஸுஜாதிய பருவங்களில் காணலாம்.)

நிற்க, ஸ்ரீ கண்ணபிரான் தூதாக வந்து பாண்டவரது விருப்பத்தைச் சொல்லியதும், மறுத்து,

"மதித்த அரக்கரையும் மல்லரையு முள்ளாற்
பதித்த படுகுழியிற் பாய்ச்சிக்—கொதித்தார்
குலங்கோடல் வல்லானைக் குங்குமத் தோள்பற்றி
வில்கோடல் எண்ணினான் வேந்து."

இதனை அறியாதவர்போலவே பரந்தாமன் புன்சிரிப்புடன் விசுவரூப மெடுத்து, யாவரையும் திக்ப்ரமையுட்படுத்த, திருதராஷ்டிரனும் அம்மேனி வைபவத்தைக் காணும் பொருட்டுக் "கண்ணினை யாளெனக், கதுமென விழித்தது காவலன் கண்ணும்." பின் அக்கண்கள் தாமே இருண்டன. அப்போதே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி மெதுவாகப் பாண்டவரிருக்கும் ஊர்க்குப் புறப்பட்டனர். அன்றிரவு விதுரர் திருதராஷ்டிரனிடம் அவனுடைய மக்களின் நடத்தை தவறென்றும், வீணே யுத்தத்தைமூட்டி உலகெங்கும் ரக்த அலைவீசும்படிசெய்வது லோகஹிதமல்ல வென்றும், கௌரவபாண்டவர் இவர்களை ஸமரஸப் படுத்துவதே அவன் கடமையென்றும், அவ்வாறு செய்யாவிட்டால் இருதிறத்தார்க்கும் நாசமேற்படுமென்றும் எவ்வளவோ சொன்னார். அப்படிப் பேசும்போது துர்க்குணபுஞ்சமாக விளங்கிய துரியோதனன் இம்மொழிகளை மறைவாகக் கேட்டுக்கொண்டிருந்தவன், கோபக்கனல் வீச, கற கறவென்று பற்களைக் கடித்து, மீசையை முறுக்கிக்கொண்டு, பரபரவென்றங்கோடிவந்து, "பேடிப்பயல்! முகத்தில் மீசையில்லாதவன் பேசும் பேச்சைக் கேட்பதா அழகு? ஹா? பளபளா! என்ன? வஞ்சனையே உருவெடுத்து, அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாகா தென்பதை அறிந்திருந்தும், சிறிதும் தயங்காது, பாண்டவரிடமே அன்பு பூண்டு, என் ராஜாங்கத்திற்கே வேர்ப்புழுவாக இருந்து செய்தவினை போதாதென்று, இன்னும் துர்ப்போதனை ஒழிந்தபாடில்லை வில்லை ஒடித்துப்போட்ட பிறகு உனக்கென்ன வேலை? உனது வேலையை நானே பார்த்துக்கொள்வேன். உன் நயவஞ்சகமும், சூதும் வாதும் வேறெங்கேனும் வேதனை செய்யட்டும். இனி அரை க்ஷணமும் என்னிடமிருத்தல் ஆகாது! வேண்டாம்! சீ சீ! குலத்தைக் கெடுக்கும் கோடரிக்காம்பு போல் வந்து, இந்தக் குலத்தையே கெடுக்க வழியை எண்ணமிடும் நீ இல்லாவிட்டால் எனக்கொன்றும் கெட்டுப்போகாது. உன் வேலையைப் பார்க்கலாம். நல்ல வயிற்றில் பிறந்திருந்தால் வல்லமையுள்ள குணம் வரும். தாதிகள் வயிற்றுப்பிறந்தால் வேதனை தானே வரும். போதும் போதும் உமது மதி. இனி நிறுத்தலாம் என் தந்தைக்குக் கண்பொட்டை; உனக்கு மனம்பொட்டை. நீ இனி மதியுரைக்கும் மந்திரிப்பதவியில் இருப்பது உலகத்திற்கிசையாது. இனி அப்பதவியை என்னிடம் ஒப்புவித்து விட்டுப் போகலாம். நீ என் பகைவன்தான்; என் நாட்டைவிட்டுப் போவதே நலம்" என்று படபடவென்று கோபாவேசத்தில் கொதிகொதித்துக் கூறினான்.

இம்மொழிகளைக் கேட்ட விதுரர், தமக்கு நல்லகாலம் வந்ததென எண்ணி மனம்புளகித்துப் புன்சிரிப்பு சிரித்தார். இந்தச் சமயத்தையே அவர் பலநாளாக எதிர்பார்த்திருந்தார். தன் அபீஷ்டம் பலித்ததென்று அவர் குதூஹலமடைந்தார். ஸர்வஸங்கபரித்யாகஞ் செய்து, விஷயபோகத்தை யொழித்து ஸந்யாஸமார்க்கத்தில் ஒழுக காலம் ஏற்பட்டுவிட்டதென்று நிச்சயித்துக்கொண்டு "அப்பா! துரியோதனா! உன்வாக்கு உத்தமவாக்கு. நான் இதுவரை உனக்கும் பகையாயிருந்ததல்லாமல் எனக்கும் பகையாயிருந்தேன். இனி எனக்கும் பகையிராது என்பது நிச்சயம். அப்படியே உனக்கும் இருக்கும்படி விரும்புகிறேன்" என்று சொல்லிக்கொண்டே ஸபையிலிருந்து வெளிவந்துவிட்டனர். அப்பொழுதே அவர்



ஸந்யாஸ தருமத்தையும் மேலேற்றுக் கொண்டனர்.

இந்நடத்தையில் அருமையான சூக்ஷ்ம விஷயமொன்றிருப்பதைக் கவனித்தல் தகும். பீஷ்மர், துரோணர், கிருபர் முதலிய பெரியோர்கள் எல்லாம் வாளாவிருந்த காலத்து, இவர் மாத்திரம் ஏன் இப்படிச் செய்யவேண்டும்? அவர்கள் எல்லாம் இவரைக்காட்டிலும் படித்தறிந்த பெரியோரல்லவா? ஆமாம் அவர்படித்தவர்தான்; ஆனால், ஐயமறத்தெளிந்த ஞானமுடையவரல்ல வென்றே சொல்லவேண்டும். சேற்றில் செந்தாமரை முளைத்ததென்னும்படி கௌரவராகிய நூற்றுவருள் தோன்றிய விகர்ணனே இவர்களைக் காட்டிலும் பெரியவனென்று சொல்லவேண்டியிருக்க, விதுரர் இவர்களைக்காட்டிலும் சிறந்தவரென்று சொல்வது தவறாகாது. மற்றொன்று, "விதுரரைப் பீஷ்மர் மந்திரிப் பதவியில் வைத்திருக்க, துரியோதனன் போவென்றால் போதல் தகுதியா? அப்படியானால் வில்லை ஒடித்தபோதே ஏன் போயிருக்கக் கூடாது?" என்ற சங்கை ஏற்படலாம். உண்மைதான். பீஷ்மர் மந்திரிப்பதவியில் வைத்தபோது அவரே ராஜ்யபாரத்தை நிர்வஹித்து வந்தார். விதுரர்க்கும் லோகவியவஹாரங்களை ஒடுக்கவேண்டு மென்கிற எண்ணம் குடிகொண்டிருந்தாலும், இராஜாங்கம் தருமவழியில் நடைபெறும்போது தாம் அதன் தலைமையிலிருந்து நடத்தும் தருமத்தை, ராஜ உத்தரவன்னியில் விடுவது பெரும் பழியாகும்; அதனால் அதர்மத்திற்கே இடமுண்டாகும். ஆகையால் லோகஹிதத்தை நாடி அப்பதவியைக் கையாண்டு வந்தனர். பாண்டவரைக் காட்டுக்கனுப்பிய ஒருதப்பிதத்திற்காகவே அரசனை வெறுப்பது மந்திரியின் தருமமல்ல; ஆனைக்கும் அடி சறுக்கும். மேலும், மற்றைய வழிகளில் அரசன் தவறாக நடந்ததாகத் தெரியவில்லை. விஷயமும் பங்காளிக்காய்ச்சலின் வழியாதலாலும் ஜனங்களுடைய ராஜாங்கம் தவறாதபடியாலும் அவர் சும்மாயிருந்தனர்போலும். ஆனால் தருமவழிப்படி பாண்டவர், சொன்னமொழி தவறாது காடாண்டு வந்ததும், "மயிர் முனைக்கும் மண் கோடேன்" என்று துரியோதனன் சொன்னது அநீதமானதால், அதர்மத்திற்கு உடந்தையாகாத வண்ணம், தமது வில்லை முறிக்க நல்ல ஸமயங்கிட்டியதைக் கையாண்டனர். மேல்வழியை நாட முயல்பவனெவனும் அவ்வாறே செய்வன். அதிலும் நடு நிலை பாராட்டி இருபுறமும் சோர்ந்திருப்பதாகவும் சபதஞ்செய்தார். ஆகையால் அவர்க்கு மந்திரிப் பதவியிலிருந்து பொதுஜன ஊழியஞ் செய்வதாயிருந்தாலும் ஸந்தேகத்தில் மூழ்கிய துரியோதனன் நம்பான்; அதனால் அவர் சொல்வதிலிருந்து நன்மை ஏற்படுவது சாத்யமாகும் என்று சொல்லமுடியாது. இதையும் விதுரர் அறிவர். ஆகவே தாம் அரசாங்க வழிக்கிடையூறாக இராமலிருக்க விலகவேண்டிய து அவருக்கு அவசியமாயிற்று. ஆனால் எப்படி விலகுவது? பீஷ்மர் பதவி அளித்தனர், அப்போதவரதே ஆணை. இப்போதவர் கதியே அதோகதி. உலகத்தை ஆண்டு வந்தது துரியோதனன்தான், திருதராஷ்டிரனல்ல. அவ்வக்காலத்தில் ராஜ்யபாரத்தை வஹிப்பவரது உத்தரவைத்தான் ராஜ உத்தரவாக மதிக்க வேண்டும். அதனால்தான் விதுரர் துரியோதனன் தம்மை மந்திரிப் பதவியிலிருந்து விலக வேண்டு மென்றதும், விலகினர் என்பது அறியத்தக்கது. மற்று, அப்படிக்கில்லாமல், பீஷ்மரே தம்மைப் பதவியிலிருந்து நீக்கச் சுதந்தரமுடையவரென்று வாதமிட்டிருந்தால், தமக்கு நேர்ந்த விபரீதங்களை, அவர்களுக்கும் நேரும்படி செய்திருப்பாரல்லவா? அவ்வாறு செய்வதால் விதுரர்க்கென்ன லாபம்? பிறரைத் துன்பப்படுத்தாது நன்மை செய்ய முயல்வதுதானே ஸந்யாஸவழியின் முதற்படி?

'அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்'—திருக்குறள்.

## ஸ்ரீராமாயண ஸாரம்

எளிய நடையில் எழுதப்பெற்றது. சிறுவர்களும் உத்ஸாகத்துடன் படிக்கத்தத்தக்கது. புதியவழியில் எழுதிய முகவுரை உடையது. இதில் சரித்ராதி விமர்சனமும், ராமாயண பாத்திரங்களின் குணதோஷங்களும், பெருமையும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அழகிய சித்திரப்படங்களுடன். விலை ரூ. 1-0-0. "விவேக போதினி" சந்தாதார்க்கு மாத்திரமே விலை அணா 12.

# தேச பாஷையும் அதன் அலக்ஷியமும்

## VERNACULARS AND THEIR NEGLECT

அருமையான இந்தியாவின் குழந்தைகளாகிய நாம் எல்லோரும் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற திராவிட பாஷைகளுள் ஒன்றைத் தாய்ப்பாஷையாகப் பேசி வருகிறோமல்லவா? அந்தப் பாஷைதான் நம் பரந்த நாட்டில் பிறந்து வளர்ந்து தாலாட்டப் பெற்ற அருமையான பாஷை. அந்தப் பாஷையே நம்முடைய ஜாதி உயர்வையும், நாம் எந்த வகுப்பார், எந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்ற தன்மையையும் எடுத்துக் காட்டுவதாம். நாம் இந்த மண்ணுலகில் பிறந்த அந்நாள் முதற்கொண்டு, நம் அரிய. தாயின் மடியில் தாலாட்டப் பெற்றிருந்தபோது நம் அழகிய கருவிழிகளை உயரத்தூக்கி அவள் முகத்தைப் பார்த்து, "அம்மா" என்றது எந்தப் பாஷையில்? குழந்தைப் பருவத்தில் விஷமத்தனமே நிரம்பப்பெற்ற ஸமயத்தில் நம் தோழர்களுடன் குதித்து விளையாடி ஓடிப்பாடிக் களித்துப் பேசியது எந்தப் பாஷையில்? இப்போதும் நாம் உலகத்துடன் ஒத்து வாழக் காளைப்பருவம் அடைந்த ஸமயத்தும் ராஜ பார்வையுடனும் கம்பீர நடையுடனும் வாழும்போது டாம்பீகமாகப் பேசுவது எந்தப் பாஷையில்? அதுதான் நம் தெய்வீகத் தாய்ப் பாஷை. பெரியோரால் எழுதிப் புகழ்பெற்ற காவியங்களைப் பழுதறப் பரிசோதித்த நல் இசைப் புலவரிடத்தும், நம் மூத்தோரிடத்தும், மழலைச் சொல்லால் நம்மைக் களிப்பிக்கும் குழந்தைகளிடத்தும் அன்பாய்ப் பேசும் பாஷை நம் தாய்ப் பாஷையேயன்றி வேறு எப்பாஷையும் அல்ல என்பதை யாவரே மறுப்பர்? வெள்ளிக் கம்பிபோன்ற நரைத்த தலைமயிரை யடைந்த நம் அந்திக் காலத்தும் பேசுவது தாய்ப்பாஷையேயாம். அப்பாஷையே நாம் சாகுந் தருணத்தில் ஒரு கிண்ணம் பாலும் ஜலமும் கொண்டுவந்து கொடுப்பதாம். நம்மை எவ்விதத்தும் மேன்மைப் படுத்திய இந்தத் தாய்ப்பாஷையைத் தற்போது விட்டிருக்கிற கேவல ஸ்திதியில் இனியும் விடுவதா? பண்டைக்காலத்தில் இந்தப்பாஷையால் நாம் அடைந்த உன்னத பதவிக்கு இனியேனும் சிறுகச் சிறுக ஊர்ந்து சென்று அதனை மறுபடியும் சேர்ந்து நமக்கும் நம்தேசத்திற்கும் என்றும் அழியா நற்பெயரைச் சம்பாதிப்பதுவே நமது இன்றியமையாத கடனாக வேண்டும்.

நாம் எல்லோரும் அதிகமாகவோ அல்லது சிறிதளவோ ஏதோ தாய்ப் பாஷையைக் கற்றிருக்கிறோம். நம்முட் சிலர், தமக்கு எழுதப்படிக்கப் போதுமான அளவே அதை அறிந்து கொண்டிருக்கின்றனர். மற்றுஞ் சிலர், தங்கள் தனிப்பாடமாக நம் தாய்ப் பாஷையை பீ. ஏ, பரீட்சைக்குக் காலேஜ்களில் படித்து, அதில் தாங்கள் முதலாவதாகவோ இரண்டாவதாகவோ அல்லது மூன்றாவதாகவோ தேறியுள்ளதாக மேலதிகாரிகளால் ஸர்டிபிகேட்டுகள் கொடுக்கப் பெற்றிருக்கின்றார்கள். அவர்கள் அவைகளை ஒருபுறத்தில் எடுத்து வைத்துவிட்டுத் தங்களுடைய அறிவைத் தாங்கள் எவ்வளவு விருத்தி செய்திருக்கின்றார்கள் என்றும், இப்படிப் பார்த்தது தங்கள் மனத்திருப்தியை யுண்டாக்குகிறதா என்றும் தயைசெய்து சற்று யோசித்துப் பார்க்கட்டும். இதனால் ஒரு குற்றத்தை மறைக்க ஒரு பொய் சொல்லாமாட்டார்களென்றே நான் நினைக்கிறேன். விருத்தி செய்யப்பட வேண்டிய தங்கள் அறிவு எவ்வளவு சிறுமைப் பட்டுக் குறுகி வெட்கப்படும்படியாய்ச் சரிதப்பிப் போய்விட்டது என்பதைத் தங்கள் மனமே தங்களுக்குச் சாட்சியாய்ச் சொல்கின்றதன்றோ? என்ன அவமானம்? படித்தவர்களுக்கும் முதலில் படிப்புக் கற்றுக்கொடுத்தவர்களுக்குமன்றோ என்றும் அழியாத அவமானம் வந்து சம்பவிக்கிறது?

எவர்க்கும் மனவருத்தத்தைக் கொடுக்கக் கூடிய இப்பேர்ப்பட்ட சீரற்ற கேடுகள் உண்டானதற்குக் காரணங்கள் பலவாம். அவைகளைத் தனித்தனி யெடுத்து விளக்குவோமானால் விரியும்; அவைகளின் முடிவைமட்டும் நமது ஞாபகத்தில வைத்துக்கொண்டால் போதுமானது. ஸெனட் ஹாலில். வருஷா வருஷம் தேறித் தங்கள் புஜங்களில் கவுன்கள் துலங்க வெளிப்போந்த நூற்றுக் கணக்கான இளைஞர்களில் சிலரே தங்கள் தாய்ப்பாஷையை மறவாது அறிந்துகொண்டவர்கள் என்பதுவே இப்போது குறிப்பிடத் தக்கதாம். அவர்களைப் போன்ற மற்றையவர்கள் தங்கள் தாய்ப்பாஷைகளைக் கற்பதென்றாலோ, விஷஜ்வரத்தை நீக்கக் கசப்பு மாத்திரைகளை விழுங்குவதற்கு ஒப்பாக எண்ணுகின்றனர்.



நம் முன்னோர்கள் அலக்ஷியஞ் செய்து தாய்ப் பாஷையைக் கல்லாததுபோலவே நாமும் நடந்து வருகிறோம். இப்படி வளரப்பெற்ற நாம் நம்முடைய ஸந்ததியையும் நம்மைப் போலவே வளரவிடுவது முறையாகுமா? நாகரீகமுள்ளவர்கள் என்று கருதப்பட்ட நாம் நம்முடைய முக்கியக் கடமைகளைச் செய்ய எவ்வாறு தவறிவிட்டோம் என்பதை இப்பொழுதேனும் உணருகிறோமா? இல்லை. மற்று "ஏனோ வீணாக நம்முடைய சொந்தபாஷையிடம் அதிக கவனம் செலுத்தாது போயினோம்" என்று இப்பொழுதாகிலும் கவலைப்படுகிறோமா? அதுவும் இல்லை. முன்னம் நாம் இந்தப் பாஷையில் பயின்றிருந்தால் நம்முடைய முன்னோர் பழக்க வழக்கங்களையும், பாரம்பர்யத்தையும், தேச சரித்திரத்தையும், எவ்விதம் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம். நம்முடைய ஸ்திரீகளை எவ்வித முன்னேற்றத்திற்குக் கொணர்ந்திருக்கலாம்? அந்தோ! தாழ்ந்த குலத்தவர் எனக்கருதப்படும் ஒரு ஜாதியாருக்கு யூனிவர்ஸிடிப்படிப்பில் நாம் கற்றுணர்ந்தவற்றையும், அதன் உண்மையையும் போதிக்கத் தக்கதோர் வழி தேடியிருக்கலாமே. அவர்கள் நல்ல ஸ்திதிக்கு வாராது அழுந்திப்போவதும் நம்முடைய குற்றத்தினாலேயாம். இம்மட்டோ? நம் தேசத்தாருடனும், அந்நிய தேசத்தாருடனும் ஒழுகவேண்டிய விதத்தையும் நம்தேசத்திற்காக நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கின்றோம் என்பதையும் எளிதில் தெரிந்துகொள்ளாதிருப்பதுவும் நாம் ஆதியில் தேசபாஷையைச் சரிவரக் கல்லாத குற்றத்தினாலேயாம். ஆதலின், நம்மால் கூடியவரைக்கும் அதைப் பழுதறப் படித்து நற்பெயரடைவதுவே நம் இன்றியமையாத கடமையென்று இப்பொழுதேனும் புலப்படவில்லையா?

ஐரோப்பிய மஹாயுத்தம்.—நமது பதிப்பு. மிகவும் அழகாயும், விரிவாயும் எழுதப் பெற்றது, 58 ஆப்டோன் படங்களுடன் கூடியது விலை ரூ. 1-4-0 'போதினி' சந்தாதார்களுக்கு மாத்திரமே அணா 15.

# கோபாத க்ஷேத்திரம்

## KOVVUR : ITS LEGEND

[ஸ்ரீமான் எஸ். கோபாலன், பீ. ஏ., எல். டி.]

அகண்ட கோதாவரியைப் பாராதவர்கள் பலர் இருக்கலாம். அதைப்பற்றிக் கேட்காதவர்கள் யாராயினுமிருக்கலாமா? சென்னை இராஜதானியிலுள்ள ஆறுகளிலெல்லாம் இது மிகப்பெரிய ஆறு. இது மேற்புறத்திலுள்ள நாசிகாத்ரயம்பக மென்னுமிடத்தில் கிளம்பிக் கிழக்குப் புறமாய் வரவர அகன்று, கம்பீரமாகப் பிரவஹிக்கும். இராஜமஹேந்த்ரம் என்னும் நகரத்திற்குத் தெற்கில், மூன்று மைல் தூரத்திலுள்ள தவளேச்வர மென்னுமிடத்தில் இந்தப் பெரிய ஆறு, பல கிளைகளாகப் பிரிகிறது. இவைகளெல்லாம், கீழ்க் கடலில்போய்ச் சேர்கின்றன. முற்காலத்தினின்று இராஜமஹேந்த்ரநகரம் மிகவும் அருமையும் பெருமையும் பெற்றது. இந்தப்பட்டினம் அகண்ட கோதாவரியின் வடகரைக்கும், கோவூர் கிராமம் தென்கரைக்கும் மூன்று மைல் தூரத்திலிருக்கின்றது. இவ்விரண்டு ஊர்களுக்கும் நடுவே அகண்ட கோதாவரியின் மேல், உறுதியான சிறந்த பாலம் ஒன்று போடப்பட்டிருக்கிறது.

அகண்ட கோதாவரி மிகப்புனிதமும் தெய்வீகமும் வாய்ந்த ஆறென்று யாவராலும் கௌரவிக்கப் படுகிறது. ஆகையால், வெகு தூரத்திலிருந்து யாத்திரிகர் பலர் வந்து, அந்த சுத்தமான தீர்த்தத்தில் ஸ்நாநமாடிப்போவது இன்றும் நம்மவரது வைதிக வழக்கமாக விளங்கி வருகிறது. அகண்ட கோதாவரியின் வடகரையில், கோடிலிங்க க்ஷேத்திரமும், தென்கரையில் கோபாத க்ஷேத்திரமும் இருக்கின்றன. கோபாத க்ஷேத்திரத்திற்குத்தான் கோவூரென்று மற்றொரு பெயர். இது மிக ரமணீயமான இடம்; மிகவும் ஸௌக்யந்தரக் கூடியது. இராஜமஹேந்த்ரம்போல் வெயிற்காலத்தில் மிக உஷ்ணமாகவும், குளிர்காலத்தில் வெகு குளிராகவும் இராமல், ஸமஉஷ்ண சீதலமாக எப்பொழுதுமிருக்கும். மிகப்பெருமைபெற்ற கோவூரைப்பற்றிப் பெரியோர்கள், பின்வருமாறு விசேஷமாகச் சொல்கிறார்கள். முன்னொருகாலத்தில் பன்னிரண்டு வருஷம் மழை பொழியாதிருந்ததாம். அந்தக் காரணத்

தால் எல்லாச்செடிகளும் சூரிய வெப்பத்தின் கொடுமையால் காந்தி, உலர்ந்து, எரிந்தன; குடிகளுக்குக் குடிப்பதற்குக் குளங்களிலும் ஆறுகளிலும் நீரென்பதில்லாமற் போயிற்று; எல்லாப் பிராணிகளும் பெரு நோயடைந்தன; எந்த இடத்தைப்பார்த்தாலும், உண்பதற்கு உணவும் குடிப்பதற்குத் தண்ணீருமில்லை. நிற்க, கௌதம முனிவர் தமது மகிமையால் கமண்டலத்திலுள்ள சிறிது நீரை டதமதாச்சிரமத்தில் ஓரிடத்தில் பாய்த்து அங்கே நெற்பயிர் செய்து, தவம் முடிந்தவுடனே வளர்ந்த பயிரை அறுத்து, தானியத்தைச் சேகரித்து, உமி நீக்கி, பண்டமெடுத்துச் சமைத்து உணவையுட்கொண்டு பிழைத்து வந்தனர். தேவர்கள் இவ்விரஹஸ்யத்தையறிந்துகொண்டு குடிகளுக்கெல்லாம் உதவ ஒரு உபாயம் பண்ணினார்கள். அவரது வேண்டுகோளுக்கிணங்கி விநாயகக் கடவுள் ஒரு பசு உருவமெடுத்துக் கொண்டு, கௌதம முனிவருடைய வயலில் மேய்ந்து, அதற்குள்ளே புகுந்தனர். முனிவர், இதைப் பார்த்துச் சிறிய நெற்றுளை யெடுத்துக்கொண்டு அதனோடு பசுவை யடித்தார். உடனே பசு உயிர் துறந்து நிலத்தில் உருண்டு விழுந்தது. முனிவர் இதைப் பார்த்து, கோஹத்தி பாவம் தன்னைச் சூழ்ந்த தென்று, வெகு பரிதபித்தனர். இந்தப் பாவத்தை ஒழிப்பதற்கு, அவர் பரமசிவனைப்பற்றிக் கோர தவம் புரிந்தனர். அதற்குப் பரமசிவன் அகமகிழ்ந்து, தமது ஜடையிலுள்ள கங்கை நதியிலிருந்து ஒரு தாரையை, உயிரிழந்து விழுந்திருந்த பசுவின்மேல் செல்லும்படி அனுக்கிரஹித்தார். இந்த தாரைதான் கோதவாரி. கௌதம முனிவரால் கொண்டுவரப்பட்ட தாரையால் கௌதமி யென்றும் மற்றொரு பெயர்பெற்றது. இராஜமஹேந்திர நகரத்திற்குத் தெற்கில் மூன்று மைல் வரையிலும் பூரணமாகவும் பின்பு சாகையாகவும் இந்நதி ஓடுகிறது. இந்தக் காரணத்தால் இது அகண்ட கோதாவரி யென்றும் அகண்ட கௌதமி யென்றும் சொல்லப்படும்.

கோபாத க்ஷேத்திரத்தை (ஆற்றின் கரையிலுள்ள நிலத்தை) வெகு நிதானமாகப் பார்க்கும் பொழுது, இங்குமங்கும் பசுவினுடைய பாதங்கள் மாதிரி பள்ளங்கள் காணப்படுகின்றன. அந்தப் பள்ளங்களை ஆயுதங்களால் தோண்டினாலும் அங்கிலேயிலும் கோபாதம் மாதிரி பள்ளங்களே காணப்படுகின்றன. இதுதான் இவ்விடத்து விசேஷம். மழை காலத்தில் அகண்ட கோதாவரியில் ஜலம் பூர்ணமாக ஓடுகிறது. அந்த வெள்ளம் அடங்கிய பின்பும் இப்பள்ளங்களில் வெள்ளத்தால் சேர்கப்பட்ட மண்ணுங்கூட கோபாதம் மாதிரி உருவத்தையே காட்டும், இது பிரக்ருதியின் வைபவப்பெருக்கோ, தெய்வீகமோ? ஏதுவோ மனித மூளையின் சிறுமையால் அறிதல் மாத்திரம் அஸாத்யம்!

---

# ஸர் ஐஸக் நியூடன்

## SIR ISAAC NEWTON

ஏறக்குறைய இருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னே இங்கிலாந்தில் லிங்கன் ஷயர் என்னும் மாகாணத்தில் பண்டிதர் ஒருவர் இருந்தார். சிறு பிராயத்திலேயே, அவருடைய தோற்றம் யாவரும் பார்த்து விரும்பத்தக்கதாக வெகு கம்பீரமாயிருந்தது. அவருக்குத் தேக வலிமை அதிகமாய் இல்லையானாலும், புத்திவலிமை அதிகம். ஆயினும், அவர் பள்ளிக்கூடத்தில் மிகவும் சோம்பேறியாய்த் தனக்குச் சமவயதானபிள்ளைகளுக்குக் கீழ்ப்பட்டவராகவே யிருந்தார். அவர் பெயர் ஐஸக் நியூடன். அவருக்குப் பன்னிரண்டு வயதானவுடன், கிராந்தன் என்னுமிடத்திலுள்ள பெரிய பாடசாலையில் படிப்பிக்கப்பட்டார். அப்பொழுது அவர், ஒரு மருந்துக் கடைக்காரன் வீட்டில் குடியிருந்தார். அச்சமயம் அவரை அறிந்தவர்கள் எல்லோரும், 'இவன் முழுமூடன்; இவனுக்கு ஒன்றும் தெரியாது' என்று இகழ்ந்து பேசினார்கள். அவரை ஒருநாள் கூடப் பாடசாலையில் புத்திசாலி யென்று எவரும் புகழ்ந்து பேசினதேயில்லை. ஆதலால் கூடப்படித்த பிள்ளைகளுங்கூட அவரை இகழ்ந்து பேசி நிந்திக்கத் தலைப்பட்டார்கள்.



ஒருநாள் அவருக்கு மேலேயிருந்த மாணாக்கன் ஒருவன், அவரை நன்றாய் உதைத்தான். அவனை அப்படி உதைக்கவொட்டாமல் தன்னைக் காத்துக்கொள்ளத்தக்க தேகவலிமை அவருக்கு இல்லை. அப்படி அவருக்கு வலிமையில்லாமற் போனதே, அவருக்கும் உலகிற்கும் மிகுந்த நன்மையாயிற்று. இல்லாவிட்டால், தன்னை உதைத்தவனைத் தாமும் எதிரே உதைத்துவிட்டு அவர் அவ்வளவோடு திருப்தியடைந்திருப்பார்; உலகமே அவருடைய ஆராய்ச்சித்திறத்தால் உண்டான நன்மையையெல்லாம் இழந்திருக்கும். தன்னை அவமதித்தவனை, தன் தேக வலிமையினால் ஒன்றும் செய்யக் கூடாமற்போகவே, தன்னை மானபங்கப்படுத்தின சிறுவனைக்காட்டிலும் படிப்பில் சிறந்து அவனுக்கு மேலேபோய் அவன் கொழுப்பை யடக்க அவர் உறுதியாய்த் தீர்மானித்தார்.

தன்னைக்கண்டு பிறர் அதிசயிக்கவேண்டுமென்று முயல்வது நியாயந்தான்; பிறரை மானபங்கப்படுத்திக் களிப்படைய வேண்டுமென நினைப்பது மிகவும் பிசகு. பள்ளிக்கூடத்தில் தன்னை உதைத்த சிறுவனை திருப்பி உதைக்கும்படியான வலிமை நியூடனுக்கு இருந்திருக்குமானால், அவருக்கும் அதே மாதிரியான எண்ணமே உண்டாயிருக்கும்.

ஆனால் நியூடன் வெகு கருத்தாய்ப் படித்துச் சீக்கிரத்திலேயே அப்பாடசாலைப் பிள்ளைகளுக்கெல்லாம் தாமே தலைவரானார். அவ்வளவு பெருமை பெற்றபொழுதும், தனக்குக் கீழிருந்த பிள்ளைகளுக்கு இகழ்ச்சியான செய்கையொன்றும் அவர் செய்யவில்லை; அவர்களுக்குக் களிப்புண்டாக்கத்தக்க காரியங்களையே செய்வார்; தன் சாமர்த்தியத்திற்கு இசைந்தமட்டும் வெகு நன்றாய்க் காற்றாடிகள் செய்து அவர்களுக்குக் கொடுத்துக் களிப்பூட்டுவர்.

காகிதத்தினால் விளக்குக்கூடு செய்து, விளக்கேற்றி அதைப் பனி காலத்துக் காலைவேளைகளில், நியூடன் கையில் பிடித்துக் கொண்டு போவார். இராக் காலங்களில், அந்த விளக்குக் கூடுகளைக் காற்றாடிகளின் வாலிலே கட்டிப் பறக்க விடுவார். அதைக் கண்ட ஜனங்கள் அநேகர், இதென்ன தூமகேது நக்ஷத்திரம்போலக் காணப்படுகிறதே யென்று பயந்தார்கள். விளையாடுகிற காலங்களில் அவர், மற்றப் பிள்ளைகள் விளையாடுவதுபோலச் சாதாரணமாய் விளையாடுகிறதில்லை. வாள், செம்மட்டி, கோடரி முதலிய ஆயுதங்கள் வாங்கி அவைகளைத் தகுந்தபடி கையாள வெகு சீக்கிரத்தில் கற்றுக்கொண்டார்; ஒரு மனிதன் உள்ளே உட்கார்ந்து அவன் தானே ஓட்டிக்கொள்ளும்படியான ஒரு வண்டி பண்ணினார்; தண்ணீர் வீழ்ந்து அதனால் கால அளவு சரியாய் ஏற்படும்படியாகக் கடிகாரமொன்று செய்தார். வழியோரத்தில் சில வேலைக்காரர்கள் ஒருவகை விசித்திரமான காற்று யந்திரம் செய்துகொண்டிருக்கக்கண்டு தாமும் அதேமாதிரி சிறிதாக ஒரு யந்திரஞ் செய்து அதைத் தான் குடியிருந்த வீட்டின்மேல் கட்டி வைத்தார். அந்த யந்திரத்தை ஓட்டும்படி அதற்குள் ஒரு எலியையும் பிடித்துவிட்டு அதற்கு உணவாக மாவையும் போட்டு வந்தார். அந்த எலிக்கு, "யந்திரம் ஓட்டி" யென்றும் பெயரிட்டார்.

அவர் இருந்த அறைச்சுவரில், எங்கு பார்த்தாலும் கணித விஷயங்களே எழுதப்பட்டிருக்கும். நமது கண்ணுக்குத் தோன்றுகிறபடி சூரியனுடைய கதியையும் நன்றாய்க் குறித்துக் காட்டினார். அங்கங்கே நடுவில் ஆணிகளைக் கொண்டு அரைமணி ஒரு மணிகளின் தூரத்தைக்கூடத் தெளிவாகக் குறித்தார்.

இங்கு நாம் குறித்துச் சொல்லவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. கணக்கிட்டுப் பார்த்துச் செய்யவேண்டிய காரியங்கள் பலவும் கணித சாஸ்திரத்தினாலேயே ஏற்படுகின்றன. ககோளமென்று சொல்லப்பட்ட இந்தப் பிரம்மாண்டத்திற்குச் சூரியனே மையமாம். இந்தப் பூமி சூரியனைச்சுற்றி ஒருவருஷத்திற் கொருதரம் ஓடுகின்றது. மேலும் அதேகாலத்தில் பூமி மேற்கிலிருந்து கிழக்குமுகமாய் 24-மணி நேரத்திற்கொருதரம் தனக்குத்தானே உருளுகின்றது. சூரியன் ஓடுவதில்லையாயினும், சூரியன் ஓடுவதாக நமது கண்ணுக்குத் தோன்றுவது ஏனெனில், நாம் ரயில்வண்டியில் ஏறிப் போகும்போது பக்கத்திலிருக்கும் தந்திக் கம்பி, செடி, மரம் முதலியவைவெல்லாம் நமக்கு எதிர் முகமாய் ஓடுவதாய்த் தோன்று

வதுபோல, நாம் வசிக்கிற பூமி மேற்கிலிருந்து கிழக்கே ஓடுவதனால் சூரியன் நக்ஷத்திரம் முதலியவை யெல்லாம் கிழக்கிலிருந்து மேற்கே ஓடுவதாய்த் தோன்றுகின்றன.

நியூடனுக்குப் பதினைந்து வயதானபோது அவருடைய தாய் அவரைத் தன் வீட்டுவேலைகளுக்கு உதவியாய் அவரைப் பாடசாலைக்குப் போகவொட்டாமல் வீட்டிலேயே வைத்துக்கொண்டாள். பயிர்த்தொழில் முதலிய குடியானவன் வேலைக்கு அவர் சிறிதும் தகாதவர். அப்படிப்பட்ட வேலைகளில் அவருடைய புத்தி நுழைவதேயில்லை. கிராந்தன் என்ற ஊரிலே அவள், நாள்தப்பாமல் நியூடனைத் தன் வீட்டு விளைவுகளை விற்று, வீட்டுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிவரும்படி கடைக்கு அனுப்புவாள். அப்பொழுது நம்பிக்கையுள்ள வேலைக்காரன் ஒருவன் அவரோடு கூடப் போவான். அவர் அந்த வேலைக்காரனையே கடையிலுள்ள வேலைகளையெல்லாம் பார்த்துவரும்படி விட்டு, தான் தனக்கு வழக்கமான ஒரு வீட்டில்போய் உட்கார்ந்து, பொழுதுபோமளவும் படித்துக்கொண்டிருப்பார். ஒவ்வொருவேளையில் ஒரு வீட்டுக்கும் போகாமல் எங்கேயாவது ஒரு வேலியோரத்தில் உட்கார்ந்து படித்துக்கொண்டு கடைக்குப்போன வேலைக்காரன் திரும்பி வருமளவும் அங்கேயே காத்திருப்பது முண்டு. புலங்களில் இருந்தாலும் அவர் செய்கிற காரியம் இப்படித்தான். யாதேனும் ஒருபுத்தகம் படிப்பதும், ஏதாவது ஒரு புதுமாதிரி யோசனை செய்வதும், தான் ஏற்படுத்திய ஜலயந்திரத்தை உற்றுப்பார்த்துக்கொண்டிருப்பதும், சமீபத்தில் எங்கேயாவது ஆற்றோரங்களில் உள்ள நுரைகளை எடுத்துக் காற்றில் விடுவதும் ஆகிய இப்படிப்பட்ட காரியங்களே அவருடைய புத்தியைக் கவர்ந்தன. ஒரு ஆடு ஒரு மூலையில் ஓடினாலும், ஒரு மாடுவந்து பயிரை மேய்ந்தாலும் தான்யத்தை தின்றாலும் ஒன்றும் அவர் கண்களுக்குத் தோன்றுவதில்லை.

நியூடனுடைய மனப்போக்கைப் பார்த்து அவருடைய தாய், வீட்டு வேலைகளுக்காக அவரை வைத்துக்கொண்டிருப்பது தகுதியல்லவென்று தெரிந்து, தன்னால் கூடியவரையில் அவருக்குப் படிப்பு சொல்லிவைக்க வேண்டி, முன் அவர் படித்துக்கொண்டிருந்த கிராந்தன்பாடசாலைக்கே மறுபடியும் அவரையனுப்பினாள். சிலகாலம் அங்கேயிருந்த பிறகு உபாத்தியாயரா யிருந்த அவருடைய சிற்றப்பன், கேம்பிரிட்ஜ் நகரிலுள்ள வித்தியா சாலையிற்போய்ப் படிக்கும்படி அவரைத்தூண்ட, நியூடன் தமது இருபதாவது வயதான 1661-ம் வருஷத்தில் அக்கலாசாலையைச் சேர்ந்தார்.

கேம்பிரிட்ஜ் பாடசாலைக்குப் போய்ச் சேர்ந்த சின்னாட்களுக்குள் நியூடன், சந்திரனைச் சுற்றியிருக்கிற பளபளப்பான இரண்டு வட்டங்களைப் பரிசோதித்தறிந்தார். கண்ணாடிகளைத் தூரதிருஷ்டிக்கு உபயோகமாகும்படி தீட்டினார்; ஒளி, நிறம், இவைகளுடைய தன்மையைக்கண்டறிவதற்கு உபயோகமான பல பரிசோதனைகளையும் செய்துவந்தார்.

அப்படியிருக்க, கேம்பிரிட்ஜ் நகரத்தில் மிகக் கொடியதான கொள்ளை நோயொன்று உண்டாகவே, இனி அங்கிருப்பது தகுதியல்லவென்று உடனே சொந்த ஊருக்குத் திரும்பிவந்து, அவ்விடத்தில் எந்த வஸ்துவும் அந்தரத்தில் எறிந்தால், அங்கேயே நில்லாது பூமியில் வந்து விழவேண்டிய விஷயத்தைப் பற்றி ஆலோசிக்கத் தொடங்கினார். அப்படிச் சிந்தித்துக்கொண்டே ஒரு நாள் அவர் ஒரு தோட்டத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கையில், ஒரு மரத்திலிருந்து நாவற்பழமொன்று கீழேவிழ, அதைப்பார்த்தவுடனே, எந்த நியாயத்தால் இப்பழம் மரத்தின்மேலிருந்து பூமியில் வந்து விழுந்ததோ அதே நியாயத்தால் ஆகாயத்திலுள்ள கிரகங்கள்கூடப் பூமியில் வந்து விழவேண்டும் என்கிற கருத்து அவர் மனதில் தோன்றிற்றாம். அதையே காரணமாகக்கொண்டு அவர் ஆகர்ஷணசக்தி அதாவது இழுப்புக் கவர்ச்சியைப்பற்றிச் சிறந்த புத்தகமொன்று எழுதினார். அந்தப் புத்தகத்தின் அருமையைப் பார்த்து பிரான்ஸ் தேசத்துச் சோதிடசாஸ்திரி யொருவர் இப்படிப்பட்ட அருமையிலும் அருமையான புத்தகம் எழுதுகிறவர் உலகில் இவர்தவிர வேறொருவர் உண்டோவென்று சொல்லி அதிசயித்தார்.

நியூடனுக்கு ரஸாயனசாஸ்திரத்தில் விருப்பம் அதிகம். அதனால் அவர் உறையுந் தருணமான நீரிலுள்ள சூடுமுதற்கொண்டு, எரிகிற தணலிலுள்ள சூடுவரையிலுமுள்ள



உஷ்ண நிலைகளின் பேதங்களை யெல்லாம் வரிசையாகக் கண்டெழுதினர். அக்கினி, அக்கினிச் சுவாலை இவைகளுடைய தன்மையைப் பற்றியும் ஒரு சிறு நூலும் எழுதினார்; தூரதிருஷ்டிக்கு உபயோகமான கருவிகளையும் விருத்தி பண்ணினார். இப்படியே இன்னும் பல காரியங்கள் செய்தார். அவர் ஒரு நிமிஷமேனும் ஒன்றுஞ் செய்யாமலிருந்ததில்லை. அவர் எப்போதும் ஆலோசனையிலேயே மூழ்கிக் கிடப்பர். அதனால் அவர் அநேகவிதமான சாஸ்திர சர்ச்சைகள்செய்து, அவற்றின் மூலமாகப் பெருமை பெற்றனர். ஆக, அவருக்கு ஒன்றின்மேலொன்றாய்ப் பல கௌரதைகள் ஏற்பட்டுக் கடைசியில், ஸர் என்கிற பட்டப் பெயரும் கிடைத்தது.

அவர் தம்முடைய வாழ்நாளில் மூக்குக்கண்ணாடி ஒரு நாளும் தரித்துக்கொண்டதில்லை.

"கண்ணளவாய் நின்றதோ காணும்
கதிரொளிதான்
விண்ணள வாயிற்றே விளம்பு." என்றவாறு

பார்வைக்குக் குட்டையாக இருப்பினும், அவர் எப்போதும் அரிய விஷயங்களைப் பற்றி சிந்தித்த பாவனையாக இருப்பர். எதிரில் ஏதாவது ஒரு புத்தகமும், கையில் பேனாவுமில்லாமல் அவர் ஒரு நிமிஷங்கூட இரார். வேலையில் வெகு சிரத்தையும், நடத்தையில் சிறந்த ஒழுக்கமும் உடையவர்; ஏழைகளிடத்தில் அவருக்கு அதி பக்ஷம். அவர் ஒரு நாளாவது கூட்டங்களிற்சென்று வீண்பேச்சுப்பேசி வம்பளந்ததே இல்லை. எப்போதும் ஏதாவது ஒரு நன்மையைக்கோரி ஏதாவதொரு காரியம் செய்துகொண்டே யிருப்பார். இவ்வளவிருந்தும், அவர் தன்னுடைய பெருமையை ஒருபெருமையாக நினைத்ததேயில்லை.

இப்படிச் சிறந்த விஷயங்களைக் கண்டுபிடிக்கும்படி வல்லமை உங்களுக்கு எப்படி உண்டாயிற்றென்று யாராவது கேட்டால், அவர், எல்லாம் ஓயாமல் ஆலோசிப்பதனாலேதான் உண்டாயிற்று; இப்போது நான் லோகோபகாரமான காரியம் ஏதாவது ஒன்று செய்திருப்பேனானால் அது, வருந்தி உழைத்ததனாலும், நிதானித்துச் சிந்தித்ததனாலும் உண்டானதேயன்றி வேறல்லவென்று சொல்வார். அவருடைய நேயர்கள் வந்து உம்முடைய சாமர்த்தியத்தை உலகத்தில் யாவரும் என்ன புகழ்கிறார்கள்! இப்படிப்பட்ட கீர்த்தி உமக்குத் தவிர மற்றெவர்க்கு உண்டாகுமென்று சொன்னால், அதற்கு அவர் என்னுடைய பிரயாசத்தைப்பற்றி உலகத்தில் என்ன நினைக்கிறார்களோ? எல்லாக் காரியமும் எனக்குக் குழந்தை விளையாட்டாய்த் தோன்றுகின்றனவே யொழிய, அதில் யாதொரு வருத்தமும் தோன்றவில்லை. வாலிபத்தில் கடற்கரையில் ஓடுகளையும் கூழாங்கற்களையும் பொறுக்கிக்கொண்டு விளையாடுவதுபோல, இப்போது நான், இந்தப் பிரபஞ்சமாகிற கடற்கரையில் இன்னும் கொஞ்சம் சித்திர விசித்திரமான ஓடுகளையும் பளபளப்பான கற்களையும் பொறுக்கிவைத்துக்கொண்டு விளையாடுகிறேனே யொழிய வேறில்லை என்பார். இப்படியாக அவர், ஈசுவர சிருஷ்டியின் பெருமைகளைக் காணக்காண தன்னுடைய செய்கைகளெல்லாம் மிகவும் அற்பமாக அவர் கண்ணுக்குத் தோன்றின. இவ்வாறு சிறந்த காரியங்களிலேயே தம்முடைய காலத்தைப் போக்கிக் கடவுளுடைய மகிமைகளை யெல்லாம் கண்டு வியந்து தம்முடைய எண்பத்தாறுவது வயதான 1727-ம் வருஷத்தில் மரண முற்றனர். இங்கிலாந்தில் சிறந்த புருஷர்களைப் புதைக்கு மிடமான வெஸ்ட்மினிஸ்டர் ஆபி என்னும் இடத்திலேயே புதைக்கப்பட்டார். கேம்பிரிட்ஜ் வித்தியாசாலையின் துவாரத்தில் அவருடைய உருவச்சிலை யொன்று அவர் ஞாபகச் சின்னமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதன் பீடத்தில் அடியிற்கண்ட கருத்துள்ள வரிகள் செதுக்கப்பெற்றிருக்கின்றன.

நவமாய் வானூர் கதிரவன் றன்
கதிரை நன்கு கண்டறிந்து
தவறில் சீர்த்தி பெற்றவராம்
நியூட னென்பார் தாமிவரே
அவமில் பளிங்கைக் கையேந்தி
யகல்வானேக்கா யொருபொருளைக்
கவலை யின்றிக் கருதிநிற்குங்
கணித நூலார் காணீரே.

நாம் செய்யும் ஆராய்ச்சிகளும் நியூடனுடைய ஆராய்ச்சிபோலவே யிருக்க வேண்டும். பண்டிதரென்றால் அவர்க்கே தகும். இந்த விஷயம் இப்படியிருக்கவேண்டுமென்று அவர் ஒரு நாளும் சொன்னதில்லை. இது இப்படித்தானென்று கண்டறிந்தார். ஆராய்ச்சி

யென்றால் அப்படியல்லவா யிருக்கவேண்டும். இப்படிப்பட்ட காரியமெல்லாம் விளையாட்டிலாவதில்லை; பிரயாசத்தினாலேயே ஆகத்தக்கது; கண்டபடி ஊகிப்பதனால் ஆவதில்லை. நல்ல பாண்டித்தயதினாலேயே ஆகத்தக்கது. நாம் எதைப்பற்றி ஆலோசனை செய்தாலும், இதே நியாயத்தை அனுசரிக்கவேண்டும். அதன் காரணத்தை நிதானமாய் ஆராய்ந்து பெருமையுடன் விசாரித்து உண்மையைக் கண்டறிவோமானால் அப்போதுதான் நாம் விஷயங்களை ஆராயுந் திறமையுடையவரென்று சொல்வதற்கு உரியவர்களாவோம்.

---

# வானசாஸ்திரம்

## LESSONS IN ASTRONOMY

[ஸ்ரீமான் எம். ஆர் சுப்பிரமணிய ஐயரவர்கள், பி.ஏ., எல்.டி.]

### நட்சத்திர ராசிகள்

எள்ளை வீசித்தெளித்தாற்போல் ஆகாயத்தில் தெளிக்கப்பட்டிருக்கிற இந்த நட்சத்திரங்களை நாம் எவ்வாறு அடையாளம் வைத்துக்கண்டறிவது? எல்லாம் ஒரே மாதிரியாயிருக்கின்றனவே? என்னும் இம்மாதிரியான சந்தேகங்களும், அதைரியங்களும் முதன் முதல் உண்டாகலாம். ஆனால் சிலதினங்களில், தெரிந்தவர்களின் உதவியால் இவைகளை மிகச் சுலபமாய்க் கண்டறியலாம். நாம் இரவில் ஆகாயத்தில் பார்த்து, "இது ஸப்தரிஷி மண்டலம்; அது கிருத்திகை, அதற்கடுத்தாற் போலுள்ள சிவந்த நட்சத்திரம் ரோகிணி" என்று நமக்குள் சொல்லும்போது நமக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது! இவைகளைக் குறிப்பிடுவதற்கு, முதல் முதல் தெரிந்தவர்கள் காண்பித்தால்தான் நல்லது. பிறகு ஒரு நாளும் மறக்கமாட்டோம்.

ஐரோப்பியர்கள், வானத்தில் காணப்படும் முக்கியமான நட்சத்திர ராசிகளை யெல்லாம் குறிப்பிட்டு அவைகளுக்கு வெவ்வேறு பெயரும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஹிந்துக்கள், சூர்ய சந்திரர்கள் ஆகாயத்தில் போவதாகக்காணப்படும் வீதியிலுள்ள நட்சத்திர ராசிகளையே முக்கியமாகக் கவனித்திருக்கிறார்கள். ஆகாயத்தின் நடுபாகமாகிய இந்த வீதியிலுள்ள நட்சத்திரங்களை 12 ராசிகளாகவும், இந்த ராசிகளை 27 நட்சத்திரங்களாகவும் பிரித்திருக்கிறார்கள்.

சூர்யனும் சந்திரனும் ஆகாயத்தில் நகர்வனவாகக் காணப்படுவது, பூமி தன்னைத் தானே சுற்றுவதால் உண்டாகும் தோற்றமென்று நமக்குத்தெரியும். இவை நட்சத்திரக் கூட்டங்களின் வழியாக நகர்கின்றன. இவைகளுடன் நட்சத்திரங்களும் இக்காரணத்தாலேயே நகர்கின்றன. இப்படிச் சூர்ய சந்திரர்கள் நகரும்போது இவைகளுக்கு நேராயுள்ள நட்சத்திரங்களும் இவைகளுடன் நகர்கின்றன. பூமி தன்னைத்தானே சுற்றுவதோடு, இருந்த விடம் விட்டு பெயர்ந்துகொண்டே சூர்யனை ஒரு வருஷத்திற்கு ஒருதரம் சுற்றிவருகிறது. ஆகையால் சூர்யன் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு ராசியை விட்டு மறுராசிக்கு நேராகக் காணப்படும். அதாவது ஒவ்வொரு ராசியிலும் சூர்யன் கொஞ்ச காலம் வசிப்பதாகக் காணப்படும். இப்படிச் சூர்யபாதையிலுள்ள 12 ராசிகளுக்கும் நேராகச் சூர்யன் காணப்பட்டு, மறுபடி முதல் ராசிக்கு வர, பூமி சூர்யனை ஒரு தரம் சுற்றப் பிடிக்கும் காலமாகுமல்லவா? அதாவது முதல் ராசியிலிருந்து கிளம்பி 12 ராசிகளிலும் வசித்து, அவைகளைக் கடந்து மறுபடி முதல் ராசிக்கு வர ஒரு வருஷம் பிடிக்கும். இப்படி சூர்யன் ஒவ்வொரு ராசியிலும் ஒருமாதம் வசிப்பான். இப்படிச் சூர்யன் வசிக்கும் ராசிகளின் பெயரையே மாதங்களுக்கும் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பன்னிரண்டு ராசிகளாவன :

| | | |
|---|---|---|
| 1 மேஷம் | 5 சிம்மம் | 9 தனுசு |
| 2 ரிஷபம் | 6 கன்னி | 10 மகரம் |
| 3 மிதுனம் | 7 துலாம் | 11 கும்பம் |
| 4 கடகம் | 8 விருச்சிகம் | 12 மீனம் |

இந்த ராசிகளிலிருந்து பஞ்சாங்க கணிதங்களுக்கு வேண்டிய லக்னம் முதலியவைகளைக் கணக்கிடுகிறார்கள்.

சந்திரனும் இம்மாதிரியே நட்சத்திர ராசிகளுடன் உதித்து அஸ்தமிக்கக் காணப்படுகிறதல்லவா? ஆனால் சந்திரன் பூமியை ஒரு தரம் சுற்றிவரச் சுமார் 27 தினங்கள் பிடிப்பதாகப் பார்த்தோம். அதாவது இந்த 12 ராசிகளுக்கும் நேராக சந்திரன் உதித்து, மறுபடி முதல் ராசிக்கு நேராய் உதிக்க இந்த 27 தினங்கள்தான் பிடிக்குமல்லவா? ஒவ்வொரு ராசியிலும் சுமார் $2\frac{1}{4}$ தினங்கள் சந்திரன் வசிப்பான். இவன் ஒவ்வொரு தினமும் வசிக்கும் பாகத்தைக் குறிப்பிடும்படி, இந்த 12 ராசிகளையும் 27 பாகங்களாகச் செய்து, இவைகளை 27 சின்ன ராசிகளாகச் செய்திருக்கிறார்கள். இந்த ஒவ்வொரு சிறிய ராசியுடனும் சந்திரன் ஒவ்வொரு நாள்தான் காணப்படுவான். இதைத்தான் சந்திரனுக்கு 27 மனைவிகளென்றும், அம்மனைவிகள் இந்த 27 நட்சத்திரங்கள் என்றும், அவன் ஒவ்வொரு மனைவியுடனும் ஒவ்வொருதினம் முறையே வசிக்கிறானென்றும் சிலர் சொல்வதுண்டு. அந்த நட்சத்திரங்களாவன:—

| | | |
|---|---|---|
| 1 அசுவனி | 10 மகம் | 19 மூலம் |
| 2 பரணி | 11 பூரம் | 20 பூராடம் |
| 3 கிருத்திகை | 12 உத்திரம் | 21 உத்திராடம் |
| 4 ரோகிணி | 13 ஹஸ்தம் | 22 சிரவணம் |
| 5 மிருகசீரிஷம் | 14 சித்திரை | 23 அவிட்டம் |
| 6 திருவாதிரை | 15 ஸ்வாதி | 24 சதயம் |
| 7 புனர்பூசம் | 16 விசாகம் | 25 பூரட்டாதி |
| 8 பூசம் | 17 அனுஷம் | 26 உத்திரட்டாதி |
| 9 ஆயில்யம் | 18 கேட்டை | 27 ரேவதி |

சூர்யனிருக்கும் உயரத்திலிருந்து பகலில் மணி கண்டுபிடிப்பதுபோல், இந்த நட்சத்திரங்களிருக்கும் இடத்திலிருந்து அல்லது அப்பொழுது உச்சத்திலிருந்து நட்சத்திரத்திலிருந்தாவது இரவு நாழிகையைக் கண்டுபிடிக்கலாம். ஆகாயத்தில் தோன்றும் ஒரு நட்சத்திரத்திற்கும் நமக்குமுள்ள சாய்வின் கோணத்தின் அளவை ஒரு சுமாராய் அறிந்தால், அப்பொழுது அந்த நட்சத்திரம் உதித்து எவ்வளவு காலமாயிருக்க வேண்டுமென்று ஒரு சுமாராகக் கண்டுபிடிக்கலாம். ஏனென்றால் அந்த நட்சத்திரம் உதிக்கும் காலத்தை, அந்த மாதத்தில் சூர்யன் வசிக்கும் ராசியிலிருந்து கண்டுபிடிக்கலாம். இந்த நட்சத்திரங்கள் உதித்து 180 கலைகள் நகர்ந்து அஸ்தமிக்க சுமார் 12 மணி நேரமாகும். ஆகையால் ஏதாவது ஒரு நட்சத்திரம் நமக்குக்காணப்படும் கோண அளவிலிருந்தாவது, அல்லது அப்போது நமது தலைக்கு நேராக உச்சத்திலிருக்கும் நட்சத்திரத்திலிருந்தாவது, நாம் கவனிக்கும்போது சூர்யன் அஸ்தமித்து எவ்வளவு நேரமாயிற்று என்று உத்தேசமாகக் கண்டுபிடிக்கலாம்.

இந்த நட்சத்திரங்களை, தெரிந்தவர்களின் உதவியைக் கொண்டு அறிவது மிகச்சுலபமென்று முன்னமேயே சொன்னோம். அல்லது நட்சத்திரமண்டலத்தின் நல்ல படங்களை யெடுத்துக்கொண்டு, ஸப்தரிஷி மண்டலம் (The great Bear), கால புருஷ மண்டலம் (Orion) முதலிய மிகத்தெளிவாகத் தெரியக்கூடிய நட்சத்திரக் கூட்டங்களிலிருந்து தொடர்ந்துகொண்டே அறியலாம். உதாரணமாக, கால புருஷ மண்டலத்தின் வடகிழக்கு நட்சத்திரமாகிய சிவந்த முதல் வகுப்பு நட்சத்திரம் திருவாதிரை. இதற்கு வடமேற்கே சிறு நட்சத்திரக் கூட்டமொன்று இருக்கிறது. இது 6 சிறு நட்சத்திரங்களாலாகியது. ஒரு தீபத்தட்டு அல்லது சிறு கரண்டியைப் போலிருக்கும். இதுதான் கிருத்திகை. இதற்கும் திருவாதிரைக்கும் இடையில் கொஞ்சம் கிழக்குப் புறமாக ஒதுங்கி, ஒரு பெரிய கொத்து காணப்படுகிறது. நான்கு சிறிய நட்சத்திரங்களாலும், கொஞ்சம் சிவந்த ஒரு பெரிய நட்சத்திரத்தாலும் ஆகிய கொத்து இது. இதில் காணப்படும் பெரிய நட்சத்திரந்தான் ரோகிணி. இம்மாதிரியாக இந்தக் கால புருஷ மண்டலத்திலிருந்தாவது, அல்லது ஸப்தரிஷி மண்டலத்திலிருந்தாவது ஆரம்பித்து, எல்லா நட்சத்திரங்களையும் கண்டுபிடிக்கலாம். சில இரவுகளில் முற்பாதியிலும், சில இரவுகளில் பிற்பாதியிலும் எழுந்து கவனித்தால் நட்சத்திரங்களை யெல்லாம் கண்டறியலாம்.

இன்னும் கிரஹ நட்சத்திரங்களைப்பற்றிய மற்றைய விஷயங்களாகிய கிரஹ பாதசாரங்கள், கிரஹ நட்சத்திர சமாகமங்கள் முதலியவைகளை, ஒரு சாதாரணப் பஞ்சாங்கப் புஸ்தகத்திலிருந்து எளிதில் தெரிந்துகொள்ளலாம். இந்தப் பஞ்சாங்கப் புஸ்தகத்தில் கிரஹ நட்சத்திரங்களைப்பற்றின அநேக விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. ஆகையால் இதிலுள்ள விஷயங்களை நாம் படித்தறிவது அவசியம்.

# நமது சிறு கதை

## A SHORT STORY FROM TOLSTOY.

[ஸ்ரீமதி சீதம்மாள்.]

(92-ம் பக்கத் தொடர்ச்சி.)

அக்குச்சியின் உதவியால் அம்மனிதன் எழுந்து நடக்க ஆரம்பித்தான். பின்தங்காமல் ஸோமனுக்குச் சரியாக நடந்து வந்தான். அவர்கள் நடந்துகொண்டு போகிறபொழுது அம்மனிதனை ஸோமன் "உனக்கு சொந்த ஊர் எது" என்று கேட்டான்.

"நான் இந்தப் பக்கங்களில் வசிப்பவனல்ல'—

'நானும் அப்படித்தான் எண்ணினேன். ஏனெனில், இப்பக்கத்து ஜனங்களை நான் நன்றாக அறிவேன். ஆனால் அவ்வாலயத்தின் பக்கத்திற்கு நீ எப்படி வந்தாய்?'

'என்னால் சொல்ல முடியவில்லை.

'யாராவது உன்னைக் கடுமையாக நடத்தினார்களா?'

'என்னை ஒருவரும் கடுமையாக நடத்தவில்லை. கடவுள்தான் என்னை தண்டித்திருக்கிறார்?'

'எப்படியானாலும் சரி. கடவுள் நம்மையெல்லாம் ஆளுகிறார். நீ எங்கேயாவது தங்கி போஜனம் செய்யவேண்டுமே. நீ எங்கே போக இஷ்டப்படுகிறாய்?'

'எனக்கு எங்குபோனாலும் சரியே. எல்லாம் ஒன்றுதான்.' இதைக் கேட்டதும் ஸோமன் மிகுந்த ஆச்சர்யத்தை யடைந்தான். 'இம்மனிதன் ஓர் பித்தனாக விருக்கலாமோ வென்றால் அப்படியுமில்லை. மிகவும் பெருந்தன்மையாகப் பேசுகிறான். ஆனால் தன்னைப் பற்றிய விஷயம் ஒன்றுமே சொல்லமாட்டேனென்கிறான். என்ன நடந்திருக்கிறதோ? யார் அறிவார்?' என்று ஸோமன் எண்ணிக்கொண்டு அப்புதுமனிதனைப் பார்த்து, 'நல்லது இப்பொழுது என் வீட்டிற்கு வா. அவ்விடம் கொஞ்சம் குளிர்காய்ந்துவிட்டுப் போ' என்று அவனைத் தன்னோடு கூட்டிக்கொண்டு வீட்டிற்குப் போனான். காற்று பலமாக வீசினதினாலும், ஸோமன் உட்சட்டையை மாத்திரம் தரித்திருந்ததினாலும், குடியினாற்கொண்ட மபக்கமெல்லாம் இப்பொழுது தெளிந்து விட்டபடியினாலும் அவனுக்கு குளிர் ரொம்பவும் ஜாஸ்தியாகவிருந்தது. அதிக அவஸ்தைப்பட்டு, பெருமூச்சுவிட்டுக்கொண்டே, தன் மனைவியினுடைய சட்டையைத் தன்னை இழுத்துச்சுற்றிப் போர்த்துக்கொண்டு தனக்குத்தானே எண்ணமிட்டுக்கொண்டுபோனான். என்னவெனில், "நான் சட்டைக்காக கம்பளித்துணி வாங்குவதற்குப் புறப்பட்டு வந்தேன். ஆனால் நான் போட்டுக் கொண்டிருந்த சட்டையையுங்கூடத் தவிர்த்துவிட்டு, வீட்டிற்குத் திருப்பிப் போகிறேன். அது மாத்திரமா! வஸ்திரமொன்றுமில்லாமல் திகம்பரமாயிருந்த ஒரு மனிதனைக்கூட் கூட்டிக் கொண்டு போகிறேன். இதற்கு என் மனைவி மித்ரியானா சம்மதிக்கமாட்டாள்" என்று தன் மனைவியின் நினைவு வரும்பொழுது அவனுக்கு ரொம்பவும் வருத்தமாயிருந்தது. ஆனால் அப்புதிய மனிதன், ஆலயத்தில் தன்னைப் பார்த்த பார்வை ஞாபகத்திற்குவர, அவனுடைய ஹிருதயம் சந்தோஷித்தது.

### III

அன்று காலை ஸோமனுடைய மனைவி சீக்கிரம் எழுந்து விறகு வெட்டிக்கொண்டு வந்து, தண்ணீர் நிரப்பி, குழந்தைகளுக்கு ஆகாரம் முதலியவையளித்து, தானும் சாப்பிட்டு, எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு உட்கார்ந்து யோசிக்கலானாள்: 'ரொட்டி இன்று செய்வதா! அல்லது நாளை செய்வதா? என்று சந்தேகத்துடன், இன்னும் ரொட்டித் துண்டு ஒன்று பாக்கியிருக்கிறது. ஸோமன் பட்டணத்தில் பகற் போசனம் செய்திருந்தால், இராச்சாப்பாடு அதிகம் சாப்பிடமாட்டான், பாக்கியிருக்கும் ரொட்டி நாளைக்காகும்' என்று நினைத்துக்கொண்டு, அந்த ரொட்டியைத் தன் கையில் வைத்து, இரண்டு மூன்று தரம் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு, நான் இன்று ரொட்டி ஒன்றும் செய்யப் போவதில்லையென்று தீர்மானித்து ரொட்டியை வைத்து மூடிவிட்டு, இன்னும் ஒரு தடவை ரொட்டி சுடுவதற்கு மாவு இருக்கிறது; இவைகளை வைத்துக்கொண்டு வெள்ளிக்கிழமை வரையில் போக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டு, மேஜையின் பக்கம் உட்கார்ந்து தன் புருஷனின் கிழிந்த உட்சட்டையை எடுத்துகொண்டு ஒட்டுப் போட்டுத் தைத்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது தன் புருஷன் குளிர்காலத்திற்காக கம்பளித்துணி வாங்கப்போயிருக்கிறானே. நன்றாக வாங்கி வரவேண்டுமே யென்று அதைப்பற்றி எண்ணலானாள். அது வருமாறு:—"என் புருஷன் கொஞ்சங்கூட கபடற்றவன். வர்த்தகர்கள் அவனை மோசம் செய்யாம லிருக்கவேண்டும். அவர் ஒருவரையும் ஏமாற்ற மாட்டார். ஆனால் அவரை ஓர் குழந்தைகூட ஏமாற்றிவிட முடியும். அவரிடமிருக்கும் 13 ரூபாய் கம்பளித்துணி வாங்குவதற்கு யதேஷ்டம்

அவ்விலைக்கு நல்ல துணியாக வாங்கலாம். கிழிசலொன்றுமில்லாமல் நல்லதாகப் பார்த்து வாங்கவேண்டும். போனவருஷம் குளிர்காலத்திற்கு ஒரு கம்பளிச் சட்டையில்லாமல் எவ்வளவு கஷ்டமாயிருந்தது. நதியில் ஜலமெடுக்கவோ, அல்லது வேறு வேலையாய் வெளியில் போகவோ ஒன்றுக்கும் முடியாமலிருந்தது. அவர் வெளியில் போகும்பொழுது, என்னுடைய சட்டை, தன் சட்டை முதலிய எல்லாவற்றையும் போட்டுக்கொண்டு போய் விடுவார். எனக்கு ஒன்றுமே யிருக்காது. 'இன்று காலையில் அவர் சீக்கிரம் புறப்படவில்லை. ஆனாலும், அவர் திரும்பி வரும் சமயந்தான். சாராயம் குடிக்கப் போகாமலிருக்கவேண்டும்' என்று இவ்விதம் மித்ரியானா எண்ணிக் கொண்டிருக்கும்பொழுது யாரோ வாசற்படியண்டை வருகிறாப்போல காலடி சப்தம் கேட்டது. உடனே தைத்துக் கொண்டிருந்த சட்டையிலேயே ஊசியை வைத்துவிட்டு, வாசலுக்குப்போனாள். அங்கே ஸோமனும், அவன் பின்னோடு ஒருவன் தலையில் குல்லா ஒன்றுமில்லாமல், காலில் ஜோடு மாத்திரம் போட்டுக்கொண்டு வருவதையும் பார்த்தாள்.

தன் புருஷனிடம் சாராயவாசனை வருவதை மோப்பத்தால் அறிந்தாள். இப்பொழுது அவன் குடித்திருக்கவேண்டுமென்று நிச்சயித்தாள். அவன் மேல்சட்டை இல்லாமல், தன்னுடைய சட்டை மாத்திரம் தரித்திருப்பதையும், ஸாமான் ஒன்றும் வாங்கி வராமலுமிருப்பதைப் பார்த்தபொழுது மௌனமாய் நின்றாள். அவள் முகத்தில் கோபக்குறிதோன்ற, அவள் மனது 'அஸந்துஷ்டியினால் வெறுப் படைந்தது. அவன் கொண்டுபோன பணத்தையெல்லாம் செலவு செய்து குடித்துவிட்டானென்றும், அவனோடு கூட்டி வந்திருக்கிற மனிதன், ஓர் 'தத்தாரி' என்றும் எண்ணிக்கொண்டே, அவர்களின் பின்னாலேயே தானும் வீட்டிற்குள் போனாள். 'அப்புதிய மனிதன் வாலிபனாயும், நல்ல சுந்தரமாயிருப்பதையும், தலையில் குல்லா இல்லாமல், தன் புருஷனின் சட்டையைத் தரித்திருப்பதையும், சட்டையின்கீழ் உட்சட்டை இல்லாம லிருப்பதையும் பார்த்தாள். அவர்கள் உட் சென்றதும், அம்மனிதன் கண்களைக் கொட்டாமலும், அசையாமலும் நிற்பதை மித்ரியானா பார்த்து, இவன் ஒரு கெட்ட மனிதனாகவிருக்கவேண்டும், இப்பொழுது ஏதோ பயப்பட்டுக்கொண்டு பேசாமலிருக்கிறானென்று எண்ணி முகத்தைச் சுளித்துக்கொண்டு, அவர்கள் என்ன செய்கிறார்களோ அவைகளையெல்லாம் உற்று நோக்கிக்கொண்டு அடுப்பின் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். ஸோமன் எல்லாம் சரியாக முடிந்து வந்திருக்கிறதுபோல, பெஞ்சியின்மேல் உட்கார்ந்துகொண்டு, 'மித்ரியானா வா, இராப்போசனம் தயாராகவிருந்தால் எங்களுக்குப் போடு' வென்று சொன்னான். மித்ரியானா ஏதோ வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டு அசையாமல் நின்றவிடத்திலேயே யிருந்துகொண்டு, ஒருவரை மாற்றி யொருவரைப் பார்த்த வண்ணமாவிருந்தாள். அவன் சொன்னவைகளுக்கெல்லாம் தலையை யசைத்தது தவிர இருந்த இடத்தைவிட்டு நகரவேயில்லை.

ஸோமன் தன் மனைவி கோபித்துக்கொண்டிருப்பதை அறிந்தும், அறியாதவன்போற் பாசாங்கு செய்து, புது மனிதனுடைய கையைப் பிடித்துக் கொண்டு 'நண்பா உட்காரு நாம் இராப்போசனம் செய்வோம் என்று சொன்னான்.'

ஸோமன் மித்ரியானாவைப்பார்த்து 'எங்களுக்கு ஏதாகிலும் சமயல் செய்திருக்கிறாயா?' என்று கேட்டான்.

இவ்வளவில் மித்ரியானாவுக்குக் கோபம் பொங்கிவிட்டது. "நான் சமயல் செய்திருக்கிறேன், ஆனால் உங்களுக்கொன்றும் செய்யவில்லை, நீ அஸாத்யமாகக் குடித்திருப்பதால் உன் புத்தி ஸ்வாதீனத்திலில்லையென்று எனக்

குத்தோன்றுகிறது ; நீ கம்பளித்துணி வாங்குவதற்காகப் போனாய், ஆனால் நீமேல் போட்டுக்கொண்டிருந்த சட்டையைக்கூடத் தவிர்த்து, ஒரு திகம்பரமான நாடோடியை வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறாய். உங்களைப்போன்ற குடிகாரர்களுக்கு நான் சமையல் செய்து வைக்கவில்லை'' யென்றாள்.

'மித்ரியானா, அவ்வளவு போதும். காரணமில்லாமல் உளருகிற உன் நாக்கை யுள்ளடக்கிக்கொள்! இம்மனிதன் யாரென்று முன்னால் அறிந்துகொள்வது நலம்' என்றான்.

'நீ கொண்டுபோன பணத்தை யெல்லாம் என்ன செய்தாய்! அதை எனக்குச் சொல்லு' என்றாள்.

உடனே ஸோமன் தன் சட்டைப்பைக்குள்ளிருந்த ஐந்து ரூபாய்நோட்டையெடுத்து வெளியில் வைத்து 'இதோ பணம் இருக்கிறது. ஆனால் கொடுக்க வேண்டியவர்கள் ஒருவரும் பணம் கொடுக்கவில்லை, கூடிய சீக்கிரத்தில் கொடுத்து விடுவதாகச் சொன்னார்கள்.' என்றாள்.

இதைக் கேட்கவே, மித்ரியானாவுக்குக் கோபம் இன்னும் அதிகரித்தது. ஏனெனில், அவன் கம்பிளித்துணிகளொன்றும் வாங்காமல், போட்டுக்கொண்டிருந்த சட்டையையும், ஓர் கௌபீனதாரிக்குக் கொடுத்துவிட்டு வந்ததும் தவிர, வீட்டுக்குக் கூட அவனைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டானே யென்ற கோபம் மேன்மேலுமெழுந்து அப்பணத்தை யெடுத்து பத்திரமாக வைக்க மேஜையிலிருந்து அதைக் கையி லெடுத்துக்கொண்டு, ஸோமனைப் பார்த்து, 'நான் உங்களுக்கொன்றும் சமைக்கவில்லை,நாம் உலகத்தில் உள்ள திகம்பரமான குடியர்களுக் கெல்லாம் சாப்பாடு போடமுடியாது'—

'மித்ரியானா, போதும், உன் வாயை மூடிக்கொண்டு, நான் சொல்வதைக் கேள்'—

'ஒருகுடிகாரப் பயலிடமிருந்து நான்என்ன ஆச்சர்யம் கேட்கவேண்டும்.' குடிகாரனை உன்னை நான் விவாகம் செய்துகொள்ள இஷ்டப்படவேயில்லை, என் தாயார் உனக்கு விவாகம் செய்துவைத்துவிட்டாள். அவள் எனக்குக்கொடுத்த சீதனத்தையெல்லாம் நீ குடியில் செலவழித்துவிட்டாய்! நீ இப்பொழுது துணி வாங்குவதற்காகப் போய், எல்லாவற்றையும் குடித்துவிட்டு வந்திருக்கிறாய்...

ஸோமன் ஐந்தரை அணாவுக்கு மாத்திரம் தான் சாராயம் வாங்கிக் குடித்ததாகவும், அம்மனிதனைக் கண்டவிதத்தையும் விவரமாகச் சொல்ல முயன்றான். ஆனால் மித்ரியானா அவனை ஒருவார்த்தைகூட சொல்லவிடாமல், ஒன்றின்மே லொன்றாய், பத்து வருடங்களுக்குமுன் நடந்த சமாசாரங்க ளெல்லாவற்றையும் சொல்லலானாள். மித்ரியானா மேன்மேலும் பேசிக்கொண்டேயிருந்தாள். கடைசியில் ஸோமனிடம் ஓடிவந்து, அவன் போட்டுக்கொண்டிருந்த தன் சட்டையைப் பிடித்திழுத்து, 'என் சட்டையைக் கொடு, எனக்கு இந்த ஓர் சட்டைதான் இருக்கிறது, எனக்குப் போட்டுக்கொள்ளவேண்டும், நீ எதையாவது போட்டுக்கொள். என்னுடையதை என்னிடம் கொடுத்துவிடு, நீ ஒரு அற்பன், நீ எக்கேடாகிலும் கெட்டுப்போ' என்றாள். உடனே ஸோமன் சட்டையை அவிழ்த்தான். மித்ரியானா சட்டையைத் தையலெல்லாம் பிரிந்து போகும்போல வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு, அதைத் தன் தோளின்மேற் போட்டுக்கொண்டு, வாசற் பக்கம் போக ஆரம்பித்தாள். ஆனால் அவளுக்கு, அவ்வளவு நேரம் இரைந்ததினால் பாதிக் கோபம் தணிந்திருந்தது. அதனால், அப் புது மனிதன் யாராக விருக்க வேண்டுமென்பதை அறிய ஆவல்கொண்டாள்.

---


## முரளீதரன்

### (ஓர் இந்திய மாதால் எழுதப்பெற்றது.)

மிகவும் ஆனந்தத்துடன் எல்லோரும் கருதக்கூடிய மாசற்ற இளம் பருவத்து இன்பத்தையும், நம்மதத்திற்குரிய விவாக விமர்சைகளையும், ஸர்வஜீவ தயாபரியாய், ஜகன்மாதாவாய் விளங்கும் ஈசுவரியின் சிறப்பையும் அவளது பக்தியிலீடுபட்டு நிற்கும் பக்த கோடிகளின் உயர்வையும், இக்காலத்துள்ள சில மாமியர்களின் அழுலையும், கடற்கரை காட்சியையும், ஆலய வழிபாட்டில் ஏற்படும் ஆவாரங்களையும் மனோஹரமாய் வர்ணித் திருக்கிறது. அழகிய படங்களுடன் விலை அணா 10.

"விவேக போதினி" ஆபீஸ், மயிலாப்பூர்.




# மாதவீகங்கணம்

[ஸ்ரீமான் வெ. கா. ராமநாதன், பீ.ஏ., பி.எல்.]

நான்காம் பாகம்

அத்யாயம். 2

(99-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஜம்ஷீத் நமஸ்கரித்துவிட்டு வெளியே சென்றான்.

இடையில் ஏற்பட்ட அவகாசம் நரேந்த்ரனுக்கு நல்லதாயிற்று. அவனுக்குத் தன் எண்ணங்களை ஸ்திரப்படுத்திக்கொள்ளத் தருணம் வாய்த்தது.

"நண்பரே, நீர் கேள்விப்பட்டது யாவும் உண்மைதான். நான் அவற்றை மறுக்கப்போகிறதில்லை. அரண்மனையில் அவ்வடிமைப் பெண் கூண்டிலடைபட்ட கழுகைப்போல் அலைந்துகொண் டிருந்தனள். அந்நிலைமையில் அவள் நாடியது காதலன்று. தான் எப்போது ஸ்வதந்த்ர நிலை பெற்று, ஸ்வேச்சையாய்த் திரியப்போகிறோமென்ற எண்ணம் அவள் மனதை வருத்தியது. அவள் ஜனனா விதிகளை மீறிநடந்தனள். பேடிகளும் காவற்காரர்களும் எதிர்க்க, அவர்களைப் பலமாய்க் காயப்படுத்தினள். கடைசியாக முஸ்ரூர் என்னும் ப்ரதான பேடிஸேவகனையே அடித்துக் கீழே வீழ்த்திவிட, அரண்மனை முழுவதும் தடபுடல்பட்டது. அவள் உயிர் எமன் கைப்பட்டதுபோ லாயிற்று. வேடனிட்ட வலையில் சிக்கித் தவிக்கும் பக்ஷியெனக் கருதி, நான் அவளை அவ்வபாயகரமான நிலைமையினின்றும் தப்புவித்தேன். ஜோத்பாய் மஹாராணியாரவர்களுக்கு ஏராளமான அடிமைகளும் தாதிப்பெண்களு மிருக்கின்றனர். நல்லெண்ணத்துடன் நான் செய்த காரியத்தை, அது தப்பியிருந்தாலுங்கூட அம்மாதரசி பெரிய மனது செய்து க்ஷமித்தருள்வார்களெனவே நான் நம்பியிருக்கிறேன்."

"ஜோத்பாய் சீமாட்டி முன்னரே மன்னித்துவிட்டனள். இரண்டொரு தினங்களுக்கு முன்னர்தான்,அவர்களுடைய மன்னிப்புக்கடிதம் எனக்கு எட்டியது. அவ்வடிமைப்பெண், தான் உழைத்து வந்த அரண்மனையைத் தன் சிறையெனக் கருதி அச்சிறையினின்றும் விடுபட்டுத் தன் ஸ்வதேசஞ்செல்லும் நாள் என்றைக்கோவென வெகுகாலமாய் ஏங்கிக்கொண்டிருந்த விஷயம் தமக்குத் தெரியுமெனவும், அப்பெண்ணை நான் ஸந்திப்பேனாயின் அவளிடம் மஹாராணியார் அவள் குற்றத்தை மன்னித்து அவளுக்கு ஸ்வதந்தரப்பேறு அளித்துவிட்டதாகவும் கூறும்படி எனக்கு ஆஞ்ஞாபித்திருக்கிறார்கள். நண்பரே, அக்கட்டழகி, கேவலம் குளிரால் விறைத்துக்கிடக்கும் தார்த்தரி நாட்டைவிட மனதுக்கு ரம்யமான வேறு நாடொன்றினைச் சேர்ந்திருப்பாளெனவே எனக்குத் தோன்றுகிறது."

"ராஜகுமாரரே, இருந்தாலு மிருக்கலாம். அல்லது, தார்த்தரிக்கே போயிருந்தாலும் இருக்கக்கூடும்."

"வாஸ்தவந்தான், மனிதரென்றால், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரஹஸ்யம் இருக்கும். எனக்கு எத்தனையோ ரஹஸ்யங்களுண்டு; அவற்றை யெல்லாம் நான் உம்மிடம் சொல்லுகிறேனா? அவ்வாறே நீரும் உமது அந்தரங்கத்தை வெளியிடவேண்டாம். என்ன இருந்தாலும் எனது நண்பர் தம் கருத்துக்கினிய காதலியுடன்கூடி உல்லாஸமாயிருக்க, நான் மாத்ரம் இந்த வனாந்தரத்தில் கூடாரத்தில் தனிமையாய் உட்கார்ந்து எண்ணமிட்டுக்கொண்டிருப்பதென்பது என் மனதுக்குச் சிறிது வருத்தமாய்த்தா னிருக்கிறது. இந்த இனிய அர்த்தாஸ்தமன வேளையில், இந்த ஷெர்பத் ஸுகத்துடன் யாராவதொரு பருவமடந்தை தன் குயிலினுமினிய குரலில் கர்ணாம்ருதமான கீதங்கள் பாடக்கேட்பது தேசப்ரஷ்டனாய்ச் சஞ்சல சித்தனாய்த் திரியும் நாடோடியின் மனதுக்கு என்ன ஆனந்தத்தை உண்டுபண்ணும்!"

'நண்பரே! என்னுடையதெனப்படுவது அனைத்தும் உமக்கு உரியவையே. ஆனால் நீர் இப்போது பேசுவது அந்த தார்த்தரிப் பெண், ஜெலிகாவைப் பற்றியிருந்தால், நீர் உண்மையை யறியாமல் பேசுகின்றீர். அப்பெண் ஆட்டம் பாட்டங்களில் விருப்பங்கொண்டவளல்லள். ராஜஸபையி லிருந்தகாலத்துங்கூட அவளுக்குஅவ்வித மனப்போக்கு கிடையாது. அடிமைப்பெண்ணே யாயினும், அவள் பாரியோசனையும், கம்பீர லக்ஷ்யங்களுமுள்ள உத்தம ஸ்த்ரீயாவள். தப்பித்தோடிய அன்றிரவே என்னுடன்வந்துகொண்டிருந்தவள் திடீரென

மாயாவியாய்த் தேவலோகக் கன்னிகையைப் போல் நொடிப்பொழுதில் மறைந்துவிட்டாள். சிற்சில சமயங்களில்அவளுடைய நடவடிக்கைகளை உற்றுநோக்குங்கால் அவளுக்கு மாந்த்ரிக சக்தியுண்டோ என்னமோவென ஸந்தேஹிக்க வேண்டியதாயிருக்கிறது."

இளவரசர் இக்கதையைச் சிறிதும் நம்பாதவராய்க் கொல்லெனச் சிரித்தார்.

"ஆமாம். மாந்த்ரிக சக்தியுமிருக்கும். அம்மாந்த்ரிக சக்தியை மானிடப் பிறவியொன்றின்மீது ப்ரயோஹித்திருப்பாளே யொழிய அதை வ்யர்த்தமாக்கி யிருக்கமாட்டாள். தேவகன்னிகைகள் மாயமாய் மறைவதுமுண்டு; மாயமாகவே வந்து எதிர்க் குதிப்பதுமுண்டு, அல்லவா? நள்ளிருளில் நாற்பது மைல் வேகமாய்க் குதிரையைத் துரத்திச் செல்லும் யுத்தவீரன் பக்கத்திலிருக்கும் காதலியைப் போனவிடந் தெரியாமல் கைசோரவிட்டானும்! நன்றாய்நம்பலாம் இக்கதையை!"

நரேந்த்ரன் சற்றுக் கோபக்குறியாய்,

"ராஜகுமாரரே, உள்ளதை ஒளிக்காமல் எனக்குத் தெரிந்ததைச் சொல்லிவிட்டேன். நீர் நம்புவதை நம்பும்" என்று பதில் கூறினான்.

இளவரசர் சிரித்த வண்ணமாய் "நாங்களெல்லாம் காலங்காலமாய்க் காத்துப் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்க, நேற்று வந்தவன் நீ, ஆக்ரா அழகியை அடித்துக்கொண்டு போவதென்றால் என்ன அந்யாயம்?"

"நண்பரே, நீர் கொள்வது வீண்ஸந்தேஹம். என் வார்த்தைகளை நம்பும். வீண் தோஷம் கற்பிக்கவேண்டாம். அப்பெண் மஹா பரிசுத்தை. இவ்விஷயங்களில் அவள் நெருப்புக்கு ஸமானம்."

நரேந்த்ரன் சொல்வதையும் அவனுடைய முகக்குறியையும் மனோநிலைமையையும் கவனியாதவரைப்போல் இளவரசர் தான்பாட்டுக்குத் தான் பேசிக்கொண்டே யிருந்தார்.

"ராஜஸ்தானத்துப் பாடகன் பாடிப்பாடி நெஞ்சு வறண்டுபோகும்படி வருந்தி யழைத்துக்கொண்டிருக்கத் தார்த்தரி மலைமகள், வங்கவீரன் வலையில் அகப்பட்டு அவன்பின் செல்வதென்றால், ஹா! அது என்ன சப்தம்!"

மறுபடியும் ஒரு விசித்ரசப்தம். கீச்சென்ற குரல், ஒரு துப்பாக்கிச் சிரிப்பு—சுற்றுப்பக்கமெல்லாம் நள்ளிருள். நிச்சப்தம். இருவரும் திடுக்கிட்டார்கள்.

இன்னும் தன் ஹாஸ்யத்தையும் புன்னகையையும் விடாத பிகாநீர் இளவரசர் "உனக்கும் உன் மலைவளர் காதலிக்கும் இடையில் வந்து தோன்றி, நான் வீண் காலஹரணம் செய்வது தப்பு என்னும் எச்சரிக்கைபோலும் அக்குரல்; நல்ல நிசியாய்விட்டது. இனி நான் தாமதிப்பது தர்மமன்றென ஆகாயவாணி சொல்லுகிறது. இதுதான் தேவகன்னிகைகள் தம் மண்ணுலகுக் காதலர்களை நாடி வரும் ஸமயம்."

நரேந்த்ரனுக்குக் கோபம் அதிகரித்தது. அவனுக்குச் செய்வதின்னதென்று தோற்றவில்லை. வந்திருப்பவர் விருந்தாளி, மர்யாதைமனிதன், அவரோ தம் மனம் போனபடிக்கெல்லாம் பேசுகிறார். நரேந்த்ரனுக்குத் தர்மஸங்கடமாயிருந்தது. கடைசியாய் வேறு வழியின்றி தன் கோபத்வனியும், வந்தவருக்குரிய மர்யாதை த்வனியும் ஒருவாறு கலந்தவண்ணமாய் நரேந்த்ரன் பேசலுற்றான்:

"இம்முகமறியாக்காட்டில் நம் கார்யங்களையும் ஸம்பாஷணையையும் விண்ணுலக வாஸிகளோ, மண்ணுலகவாஸிகளோ, யாரோ தெரியாது, கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் நாம் விடைபெற்றுச் செல்லுமுன், நான் உம்மிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டுப்போக விரும்புகிறேன். நானோ இவ்வுலகில் எவ்விதப் பற்றுமில்லாத போர்வீரன். பூர்வ கர்மபலன் இவ்வாறு பாபியாய் அலைந்து திரிகிறேன். என்னைப்பற்றி யார் எவ்வித அநுமானங் கொண்டாலும் அதனால் எனக்குப் பாதகமில்லை. எம்மட்டும் அவைகளைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் அப்பெண் ஜெலிகாவோ நான் காயம்பட்டு மரணாவஸ்தையிலிருந்தபோது எனக்குப் பலவித உபசாரங்கள்செய்து என் உயிரைக்காப்பாற்றி. என்னைப் பலவித ஆபத்துகள் அபாயங்களினின்று தப்புவித்த நிகரில்லாப் புண்யவதியாவள். அப்புனிதையின் நாமதேயத்தைப் பிறர் கேவலம் இழிவாய்க் கூறி, அவ்ள் விஷயமாய் அகாரணமான ஸந்தேஹ வார்த்தைகள் பேசுவதென்றால் நான் சற்றும் தரித்திருக்கமாட்டேன். ஈசுவர ஸாக்ஷியாய்ச் சொல்வேன். அவள் மஹா பரிசுத்தமானவள். எனக்கு



உயிர்ப்பிச்சை கொடுத்து ரக்ஷித்த அந்த ஸ்த்ரீ ரத்னத்தைப்பற்றி அடாத வார்த்தை ஏதாவது சொல்வீராகில், உம்மை நான் என் பரம சத்ருவாய்க் கருதி, பழிக்குப்பழி வாங்கவேண்டிவரும். இது உறுதி."

நரேந்த்ரனுடைய மனோபாவத்தை இப்போதுகூட அறிந்துகொள்ளாமலிருக்க முடியாது. ப்ருத்விராஜர் நல்ல உயர்குலத்துதித்த க்ஷத்ரிய வீரசிகாமணியன்றோ? அவர் உடனே தம் வேடிக்கைப் பேச்சை யொழித்துப் பின்வருமாறு பேசலானார்.

"நரேந்த்ரநாத், மன்னிக்கவேண்டும். நான் உமக்கு வ்ருதா மனவருத்தம் உண்டுபண்ணினேன். ஆனால் எவ்வித துர் எண்ணமும் கொண்டு, நான் அவ்வாறு செய்தவனல்லேன். போர்வீரர்களுக்குள் இவ்வித விஷயங்களைப் பற்றிச் சற்று வேடிக்கையாய்ப் பேசிக்கொள்வது ஸஹஜந்தானே. நான் உமது மனதைப் புண்படுத்த வேண்டுமென எண்ணியவனல்லன். உமது ரஹஸ்யத்தை வெளியிடவேண்டாம். என்றைக்கும் தமது நண்பரை மறவாத க்ஷத்ரிய குலத்தவனான நான் ஒருபோதும் இவ்வார்த்தை தவறுவதில்லை" என்று ப்ருதிவிராஜர் தன் கரத்தை நீட்டினார்.

நீட்டிய கரத்தைத் இறுகத் தழுவிக்கொண்டு, நரேந்த்ரன் ஸ்நேஹபாவமாய்ப் பேசலானான்:

"நானும் ஏதோ சிறிது ஆத்ரமாய்ப் பேசிவிட்டேன்; மன்னிக்கவேண்டும். இனி நான் அப்பெண்ணை அநேகமாய்ப் பார்க்க மாட்டேன். ஆனால் அம்முஸல்மான் ஸ்த்ரீ மஹா நெறியானவள். திக்கற்றுக்கிடந்த காலத்தில் எனக்குற்ற துணையாயிருந்து நான் சாந்தருவாயி லிருக்குங்கால், என்னை ரக்ஷித்தருளி, எனக்குக் குலதெய்வமாய் விளங்கிய அக்கன்னிகையை நான் உயிர்போனபின்பும் மறவேன். அவள் என் விஷயத்தில் காட்டிய அன்புக்கேற்ற கைம்மாறு புரிய, எனக்கு எப்போது ஸமயம் கிடைக்குமோ? இதைத்தவிர அவளிடம் நான் வேறெவ்வகையான மனோபாவமும் கொண்டவனில்லை. நண்பரே, பெண்ணாசை என்பது என்னைப் பாதிக்கும் காலம் கடந்து, வெகு நாளாய்விட்டது."

"நரேந்த்ரா, உனது வாலிபமென்ன? நீ பேசும் வார்த்தையென்ன? உனக்கேன் இவ்வளவு விரக்தி யுண்டாகிவிட்டது? நாழியாகிறது: மறுபடியும் உன் மனதை ஏன் நான் சோதித்துத் துன்புறுத்தவேண்டும்? நாம் இன்றுதினம் ஒருவரை விட்டொருவர் பிரிகிறோம். நான் பிகாநீர் செல்கிறேன்; நீர் வங்காளத்துக்கு ப்ரயாணமாகிறீர். இனி எப்போது நாம் ஸந்திக்கப்போகிறோமோ? உம்மைப்பற்றி அதிக கண்யமாயும் மர்யாதையாயும் நினைத்திருக்கும் உமது நண்பன் ஞாபகம் உமக்கிருக்கவேண்டும். போய்வருகிறேன்."

நரேந்த்ரன் தன் விருந்தாளியுடன் அவர் கூடாரமட்டும் சென்று அவரை வழிவிட்டுவிட்டு, தன் கூடாரம் திரும்பினான். ஜம்ஷீத் முன்னர் வெளிச்சம் தெரிய, ஒரு விளக்கு எடுத்து வந்துகொண்டிருந்தான்.

"ஜம்ஷீத், நீ ஸரஸ்வதி அநுக்ரஹம் பூர்த்தியாய்ப் பெற்றவன். இத்தனை தினங்களாக நீ ராஜஸ்தானமெல்லாம் என்னுடன் சுற்றித் திரிந்துவருகிறாய். ஒருபோதும் இன்றவ்வளவு மாதுர்யமாய் நீ பாடியதில்லை. இன்றிரவு கேட்ட வீணாகானம் என்றைக்கும் எளிதில் மறக்கக்கூடியதன்று. இந்தா இந்த மோஹராவைப் பெற்றுக்கொள். நீ தினேதினே உனது தொழிலில் அபிவ்ருத்தி யடைந்து வருவாயாக."

"நான் என்ன ஊரூராய்த் திரிந்து பாட்டுப் பாடிக் காலங் கழிப்பவன். அதிக ரஸமாய் நான் கேட்டானந்தித்த எனது ராஜபுத்ர யஜமானரிடமிருந்துகூட நான் ஒரு காசு பெற்றுக் கொண்டதில்லை. அப்படியிருக்க உம்மிடமிருந்து மாத்ரம் பெற்றுக்கொள்வேனோ?"

"ஸங்கீத ஆனந்தமே உனக்குக் கூலியாயின் ஸங்கீதப் பைத்யம் உனக்கு அதிகமாய்ப் பிடித்திருக்கவேண்டும். அப்படியானால் உள்ளேவந்து இரண்டொரு பாட்டுகள் வாசி; கேட்போம். இளவரசர் கூப்பிடுவாரோ? நானும் எங்கள் நாட்டுப் பாட்டுகள் இரண்டொன்றை உனக்குப் பாடிக் காண்பிக்கிறேன்."

"இளவரசர் இனி என்னை அழைக்கமாட்டார். அவருடன் நான் பிகாநீர் போகப் போவதில்லை. யஜமானரவர்கள் தங்கள் நாட்டுப் பாட்டுகளைப் பாடத் தொடங்கினால் நான் இரவெல்லாம் தூங்காமல் கேட்டுக்கொண் டிருப்பேன்."

அத்யாயம். 3—ஸ்திரீயின் குரல்

நரேந்த்ரநாதருக்கும் அன்றிரவு தூக்கம் பிடிக்கவில்லை. ப்ருத்வி ராஜர் கூறிய மொழிகளோ, அல்லது தான் அவருக்கு அளித்த பதிலோ, ஏதோ ஒன்று அவர் மனதில் ஆழப் பதிந்து ஒன்றின்மேலொன்றாகப் பல யோசனைகளைத் தூண்டியது. ஜெலிகாவின் உருவமும், காட்டு ஜாதிக்குரிய தங்குதடையற்ற அவளுடைய ஸ்வேச்சை குணமும், விசித்ர மனோபாவமும், அவருடைய மனதின் முன் அடிக்கடி வந்து தோன்றின. தாம் தம் ஸ்வதேச கீதங்களைப் பாடிவர, ஜம்ஷீத் வீணையை வாசித்துக்கொண்டிருக்க அவருடைய மனம் அடிக்கடி பூர்வகால ஸம்பவங்களையும் அநுபவங்களையும் நாடிச் சென்றுகொண்டிருந்தது.

"அப்பா குழந்தாய், நீ என்ன இவ்வளவு பால்யத்திலேயே இந்த ஸந்யாஸி கோலம் கொண்டு திரிகிறாயே! உனக்கு வீடில்லையா, வாசலில்லையா? உற்றாருறவினர்கள் ஒருவருமில்லையா?"

"எனக்கேது வீடும் வாசலும்?"

"தாய் தந்தையர்கூடக் கிடையாதா?"

"பால்யத்திலேயே அவர்களிருவரையும் பறிகொடுத்துவிட்டேன்."

"அது முதற்கொண்டு உனக்கு எங்கே ஜீவனம், எவ்விதம் ஜீவனம்?"

"என்னைப் போன்றவர்களுடன் கூடி, நானும் அந்த ஆக்ரா நகரத்து அரண்மனையைச் சுற்றித் திரிந்து வயிறு வளர்த்துவந்தேன்."

"குழந்தாய், என்ன கஷ்டம்! உனக்கு இந்த பால்யத்தில்!"

"என்ன கஷ்டம், ஒரு கஷ்டமுமில்லையே. சிற்சில ஸமயங்களில் அம்ராக்களும் மன்ஸாப்தாரர்களுமே என் வீணாகானத்தைச் செவிசாய்த்துக் கேட்பதுண்டு. ப்ருத்வி ராஜர் என் விஷயத்தில் அதிக அன்புபாராட்டி எனக்குத் தர்ம ப்ரபுவாக விளங்கினர்."

"அப்படியானால் ப்ருத்விராஜர் உன்னைத் தம் ஊழியத்தில் அமர்த்திக் கொண்டிருந்தனரா என்ன?"

"என்க்கு ஊழியம், ஸேவகமென்பதொன்றும் பிடிக்காது. நான் பணத்தையும் சம்பளத்தையும் கோருபவனல்லன். ஒருவர்கீழ் கைகட்டித் தொண்டு புரிய, நான் ப்ரியப்படேன். எனக்கு இஷ்டம்போல் வருவதும் இஷ்டம்போல் போவதுமாய் இருக்கவேண்டும். ஆக்ராவை விட்டு அவருடன் நானும் புறப்பட்டேன். இதுவரைக்கும் அவர் கூடாரத்தில்தான் என் சாப்பாடும்."

"ஆக்ரா அரண்மனையில் நீ எப்போதாவது உன் வீணையையெடுத்து வாசித்திருக்கிறாயா?"

"எத்தனையோ முறை வாசித்திருக்கிறேன். அரண்மனையில்தானே எனக்கு ஜீவனம்."

"ராஜவம்சத்தைச் சேர்ந்த ராஜகுமாரர்கள் முன்கூட, வாசித்ததுண்டோ?"

"ப்ரபூ! ராஜகுமாரர்களேயன்று; ராஜகுமாரிகள் ஸமூகத்தில்கூடப் பலமுறைப் பாடியிருக்கிறேன். ராணிமார்களும் பீகங்களும் என்னை அடிக்கடி அழைப்பித்துத் தம்முன் பாடச்சொல்வார்கள்."

"அப்படியானால் நீ நல்ல அதிர்ஷ்டம் செய்தவன்தான். எந்த மஹாராணிகளும் பீகங்களும் உன்னை யழைப்பித்தார்கள்?"

"எனக்குப் பேர் ஊர் ஒன்றும் தெரியாது. ஆனால் ஒரு ராஜபுத்ர மஹா ராணியார்—சக்ரவர்த்தியவர்களுடைய தர்மபத்னியாம்; மூத்த இளவரசர் அன்னையாராம்—அவர்கள் என்னிடம் அதிக பக்ஷம் வைத்து என்னைப் பலமுறையும் அன்பாய்க் கூப்பிட்டு வெகுமதிகள் அளிப்பார்கள். அவருடைய பேர் மாத்திரம் எனக்குத் தெரியாது. தெரிந்தால் என் ஆயுள் உள்ளளவும் அவரை வாழ்த்திக்கொண்டிருப்பேன்."

"நீர் பேசும் மஹாராணியார் ஜோத்பாய் சீமாட்டி. அவர்களுக்கு எப்போதுமே ஸகல மனிதர்களிடமும் அதிக வாஞ்சை."

"இருக்கலாம். இன்னும் நான் ப்ரதமராணியார் முன்னிலையிலும் பாடியிருக்கிறேன். அவர்கள் அரண்மனையில் விருந்தாளியாய்த் தங்கியிருந்த ஒரு பாரஸீஹப் பெருமாட்டியும் என்னை விளித்துப் பாடச்சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பாரஸீஹச் சீமாட்டியைப்போல் அழகுவாய்ந்தவரை நான் ஒருபோதும் கண்டதில்லை."

"ஹா! அவர் பேர் உனக்குத் தெரியுமா?"

"ப்ரபூ, இந்த ராஜகுடும்பத்தார் பெயர்கள் எனக்குச் சிறிதும் ஞாபகமிருப்பதில்லை. ஆனால் சக்ரவர்த்தியவர்களில் மூத்த திருமகனார், அம்மாதைக் காதலித்தனராம்."

"அச்சீமாட்டிதான். அவள் பெயர் மிஹ்ருந்நிஸா: அவரைப்போன்ற அழகும் பெருமையும், கம்பீரமும் வாய்ந்த ஸ்திரீரத்னம் வேறு எங்காவது நீ கண்டதுண்டோ? அப்பா, அந்தக் கண்களில் என்ன அதிகார தோரணை?"

"அப்படியானால் யஜமானரவர்கள்கூட அவர்களைப்பார்த்திருக்கிறார்போலிருக்கிறது."

"குழந்தாய், வாயை மூடிக்கொள். உரக்கப் பேசாதே. நீ பார்ப்பதற்கு ஒன்றுந்தெரியாத ஸாதுபோலிருக்கிறாய். பேர்வழி லேசில்லை. அதுபோகட்டும். நீ அந்த ஸ்த்ரீயின் ஸமூகம் போனவிதமெப்படி?"

"அரண்மனையில் ஒருநாள் அடிமைப்பெண்களும் பேடிகளும் என்னைப் பாடும்படி நிர்ப்பந்திக்க, நானும் குதூஹலமாய்ப் பாடத்தொடங்கினேன். அவர்கள் அதைக்கேட்டு என்னை அழைத்துவரும்படி ஆஞ்ஞாபித்தார்கள்."

"ஸரி, நீ இந்த ஸங்கீதத்தின்மீது இவ்வளவு பற்றுவைத்திருப்பதின் காரணம் இப்போது விளங்கிற்று. அதன் மஹிமையால் ராணிமார், பீகங்கள் இவர்களுடைய தர்சனங்களும் தயவும் கிடைப்பதென்றால் அத்தொழிலை விரும்புவதற்குத் தடையென்ன? அரண்மனையில் அடிமைப்பெண்கள் உன்னைப் பாடச் சொன்னார்கள் என்றனையே, அவர்களுள் அநேகர் உனக்குப் பரிசயமுண்டோ?"

"ப்ரபூ, அடிமைப்பெண்களா! அப்பா அவர்களா? பாழாய்ப்போக—அவர்களுடைய அந்த ரங்க நேசங்களும், ரஹஸ்யங்களும், பொறாமைக் குணங்களும்! அவர்களைக் கண்டால் எனக்கு எப்போதும் பயந்தான்."

"அவர்களுள் ஜோத்பாய் ராணியாரிடம் வேலையிலிருந்தாளே ஜெலிகா என்றொரு தார்த்தாரிப் பெண், அவளை நீ அறிவாயா?"

"அப்பா, அவளா? அவளைக்கண்டால் என் பாடு நடுக்கந்தான். அவள் எதிர்ப்பட்டால் எனக்குப் பாதி ப்ராணன் போய்விடும். அவளைப் பைத்யக்காரி யென்றும், சூந்யக்காரியென்றும் அவளைப் பிடித்து இரும்புச்சங்கிலிகளால் குண்டுகட்டாய்க் கட்டி சிறையில் போட்டு விடவேண்டுமென்றும் பலவாறாகச் சொல்லிக் கொள்வார்கள்."

"ஜெலிகாவையாவது சிறையில் போடவாவது? அவளை ஒருவரும் பிடிக்கமுடியாது. அவள் காற்றைப்போல் ஸ்வேச்சையாயிருக்கிறாள். அவளையா இவர்கள் பிடிப்பது? என்ன ஸாஹஸம்! இருக்கட்டும். அவளையேன் பைத்யமென்றும் சூந்யக்காரியென்றும் சொன்னார்கள்?"

"ப்ரபூ, அது ஏன் அவளைப் பைத்யக்காரியென்று அழைத்தார்களோ நான் அறியேன். ஆனால் ஒன்றுமட்டும் சொல்லிக் கொண்டார்கள். அவள் நரஜாதியைச் சேர்ந்தவளில்லையாம்; பேய், பிசாசு வர்க்கத்தைச் சேர்ந்தவளாம். எவ்வகையான பேய்களும், பிசாசுகளும், முனிகளும் அவளுக்கு அடங்கிக் கைகட்டிக் காத்துக்கொண்டிருக்குமாம்; வேண்டும்போது அவைகளை யழைப்பதும், அவைகளுடன் உரையாடுவதுமா யிருப்பாளாம்; இராக்காலங்களில் திடீர் திடீரென அவளுடைய அறையினின்று கோரமான நகைப்புச் சப்தமும் அதிசயமான சந்தடிகளும் கேட்பதுண்டாம். அவ்வித விசித்திர த்வனிகள் யஜமானர் காதில் எப்போதாவது விழுந்திருக்கிறதா?"

"குழந்தாய், அவ்வித விசித்ர சப்தங்களை ஆக்ராவில் அடிக்கடி கேட்டிருக்கிறேன். இன்றிரவும் அவ்விதமான அதிசய சப்தங்கள் உண்டாயின. பேய், பிசாசுகளைவிடப் பதின்மடங்கு அதிக விசித்ரமான ஜீவன்கள் பல இவ்வுலகிலேயே இருக்கின்றன. அது ஒன்றும் ப்ரமாதமில்லை. உன் கதையை ஏன் நிறுத்திவிட்டாய்? அதைச் சொல்லிமுடி. ஜெலிகாவைப்பற்றி இன்னும் என்னென்ன நீ கேள்விப்பட்டனை?"

"அடிக்கடி அவள், பேய் பிசாசு முதலியவற்றுடன் பேசிக் கொண்டிருப்பது வழக்கமாம். மாந்த்ரிகம், சூந்யம் இவைகளில் கைதேர்ந்தவளாம். ஒரு முறை அவ்விதப் பேய் ஒன்றுடன் அவள் நடந்துசென்றதை அரண்மனை வாஸிகள் நேராய்த் தம் கண்களால் பார்த்தனராம்?"

"நேரில் பார்த்தார்கள்! இருக்கட்டும், அப்பேய் என்ன உருவங் கொண்டிருந்ததாம்?"

---


இந்திய ஸ்திரீ ரத்னங்கள்

1. திரௌபதி ... அணா 8
2. ருக்மிணி ... ,, 6
3. சகுந்தலை ... ,, 4

மானேஜர், "விவேக போதினி"
மயிலாப்பூர், சென்னை.

# புத்த விஜயம்

(116-ம் பக்கத் தொடர்ச்சி)

**2-வது மந்திரி**—யாது காரணம்பற்றி ஸித்தார்த்தருக்குத் துக்கம் நேரிட்டதோ? இது சம்பந்தமாக நுண்ணிய விசாரணை செய்யவேண்டும்.

**3-வது மந்திரி**—எந்தையே! தாங்கள் உரைத்தபடியே கௌதமருக்கு விபரீதமானவை தோன்றியிருக்கவேண்டும். இதை முன்னமேயே அவரது முகக்குறியா லறிந்தேன். இதுகாறும் வெளியிடவில்லை; ஆனால் அதிக ஆராய்ச்சி இதிலே செய்ததில் ஒன்று மாத்திரம் வெளிவந்தது.

**சுத்தோதனன்**—ஒரு நாள் கௌதமன் உத்தியானவனத்தில், மத்தியான காலத்திற்கு மேலுங்கூட மாளிகைக்கு வராமல் இருந்ததை யறிந்து, விதேயன் என்பவனை விடுத்தேன். மந்திரீ!—

**3-வது ம.**—அவனிடமிருந்துதான் நானும் சிலவற்றை அரைகுறையாக அறிந்தேன்.

**1-வது ம.**—சேவகா! விரைவிற்போய் இங்கு அழைத்துவா அந்த விதேயனை.

[சேவகன்போக அதன்பின் விதேயன் வருகிறான்.]

**2-வது ம.**—எல்லாம் ஐயமற விசாரித்தறிவோம்.

**1-வது ம.**—விதேயா! நீபோய்ப் பார்த்தபொழுது ஸித்தார்த்தர் என்ன செய்துகொண்டிருந்தார்?

**விதேயன்.**—ஒரு நாவன்மரத்துக்குக்கீழே கண்ணை மூடிக்கொண்டிருந்தார்.

**1-வது ம.**—அதன்பிறகு.

**வி.**—சத்தமொன்று கேட்டது.

**1-வது ம.**—அதென்ன சத்தம்?

**வி.**—"அரசகுமாரன் இவ்வா றிருக்கட்டும்; அவனுடைய நெஞ்சிலிருந்து இருள்போகும்வரை என் நிழல் அசையாது."

**சு.**—இதனடியாகத்தான் ஸித்தார்த்தனுக்குத் துக்கம் வந்திருக்கவேண்டும்.

**1-வது ம.**—அந்தச்சத்தம் மனிதனிடமிருந்து உண்டாயிருக்காது; தேவகணங்களோ அவருக்குத் தரிசனம் அளித்திருக்கவேண்டும்.

(சேவகரும் விதேயனும் போகிறார்கள்.)

**சு.**—இதற்கு என்ன பரிகாரம் செய்யலாம்? எனதருமைச் செல்வன் சக்கரவர்த்தியாய்ச் சிற்றரசர் புடைசூழவும் யாவரும் நீடிய ஆயுளைக் கொடுக்குமாறு ஜனங்கள் கடவுளை வேண்டிக்கொண்டே யிருக்கவும், இவ்வாறு எல்லோர் மனதுக்கு முகந்து செங்கோலோச்சுவது எனது விருப்பம்; அல்லது முன்பு முனி கூறியவாறு இராஜபோகங்களை நீத்துத் துறவுபூண்டு அற்பரைப்போல அலைந்து திரியவும் செய்வானோ? நடக்கும் காரியாதிகளைப் பார்க்கில் அவ்விதமே செய்வான்போலத் தோன்றுகின்றதே! அறிவுடைய அமைச்சர்காள்! இவனை லோகவிஷயத்தில் ஈடுபடுமாறு செய்ய உபாயங் கூறுவீர்.

**1-வது ம**—ஏந்தலே! இம்மாறுபாடுகளுக்கு மருந்து காமம். வனப்புவாய்ந்த மகளிரை இவர்பால் விடுத்தால், நமது காரியம் நிறைவேறும். அந்த இன்பத்தைக் கௌதமரறியார். எதையும் காந்தம்போலக் கவர்ந்து செல்லும் விழியின் வலையிற் படுவார். இந்த மந்தாரத்தைச் செய்தோமோ உடனே கௌதமர் நமது கைவசம். இது நிச்சயம்.

**மற்ற மந்திரிகள்.**—இது நல்ல தந்திரம். இதை நழுவவிடக்கூடாது.

**சு.**—நாம் மங்கையரைத் தெரிந்தெடுப்போமானால் அவனுடைய நோக்கம் எப்படியிருக்குமோ? இதை யறியாதவனான என் புத்திரன் ஒருவேளை தவிர்த்தாலும் தவிர்ப்பான். இதற்கென்ன செய்யலாம்?

**3-வது ம.**—பலபேரைக் காட்டுவதானால் அவர்களில் ஒரு பெண்ணாவது அவர் மனதிற்கிசைந்தவளாயிருக்கமாட்டாளா? நிச்சயமாய் ஏதாவதொரு முகம் அவரை வசீகரிக்கும். ஆதலால், புரவல! பண்டிகை மாதிரி, ஓர் நாளைக் குறிப்பிட்டு அத்தினம் சாக்கியமடந்தையர், அழகு முதலியவற்றில் ஒவ்வொருவரும் மற்றவர்களை வெல்லுமாறு அலங்கரித்து வரவேண்டுமென்று பறையறைவிக்க வேண்டும். கௌதமரைப் பரிசளிக்குமாறு செய்ய வேண்டும், அப்பொழுதுதான் நமது எண்ணம் நிறைவுபெறும். இங்ஙனமே அவரது வேறுபாடுகளெல்லாம் நீங்கிப்போய்விடும்.

**சு.**—இதுதான் தகுந்த சூழ்ச்சி. இப்படியே செய்வோம்.

(மறைகிறார்கள்.)

---

முதலங்கம்

ஆறுங்காட்சி

இடம்: கல்யாண மண்டபம்.

காலம்: முற்பகல்.

பாத்திரங்கள்: கௌதமர், பெண்கள், ஜனங்கள், சேவகன், சுத்தோதனன், மந்திரிகள்.

**சேவகன்.**—விலகியிருங்கள். இராஜகுமாருடைய வெகுமதியைப் பெறுதற்குப் பெண்கள் வருகிறார்கள்.

(மங்கையொருத்தி வருகிறாள்.)

**கௌ.**—அம்மணி! இதை எடுத்துக்கொள்.

(ஒருவர்பின் ஒருவராக நடந்து வெகுமானத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.)



**ஜனங்கள்.**—பேஷ்! பெண்மணி இவளே.

**1-வது பெண்.**—(ஓரத்தில்) ஆ! ஆ! இராஜபுத்திரர் எவ்வளவு சாந்தத்துடன் வீற்றிருக்கிறார்?

**2-வது பெண்.**—நீ தலை நிமிர்ந்தா பார்த்தாய்?

**1-வது பெண்.**—இல்லை, நான் மண்டபத்திற்குள் நுழைந்தவுடன் கொஞ்சம் இந்தப் பக்கம் பார்வையிட்டேன். மேலும் நமக்கும் அவருக்கும் நடுவில் அநேகர் இருக்கிறார்கள்.

**2-வது பெண்.**—நான் மற்றவர்களைப்போல் கீழே பார்த்துக்கொண்டுதான் போவேன்.

**1-வது பெண்.**—நானும் அப்படியேதான் செய்வேன்.

**2-வது பெண்.**—வா, அநேகம் பேர் போய்விட்டார்கள்; இன்னும் சிலரே இருக்கிறார்கள்.

**1 வது பெண்.**—நாம் தனியே இருப்பது சரியல்ல. வேடிக்கைபார்க்கவா வந்தோம்?

**ஜனங்கள்.**—மன்மதன் பாரியோ! என்ன நடை! என்ன உடை!

(கடைசியில் யசோதரை செல்லுகிறாள்.)

**கௌ.**—(எழுந்து) ஹா!

**யசோதரை.**—எனக்கோர் இனி முண்டோ?

**கௌ.**—அம்மணி! அவ்வளவும் செலவாகிவிட்டது; இருந்தாலும் உனது ரூபத்தைப் பார்த்தபின் உன்னை வெறுங்கையுடன் போகவிடேன். கபிலையின் திலகமே! என் மரகதமணி மாலையை இதோ எடுத்துக்கொள்.

(அம்மாலையைக் கழற்றி யசோதரையின் கழுத்தில் இடுகிறார்.) சிகாமணியே! மனோன்மணியே!

(எல்லோரும் போகிறார்கள்.)

(அரசனும் மந்திரிகளும் வருகிறார்கள்).

**சுத்.**—சரி, கல்லூரியம் முடிவுபெறக் கண்டோம்.

**1-வது மந்திரி.**—ஆனால் ஒரு காரியம்.

**சுத்.**—அஃதென்ன இயம்புவாய்?

**1-வது ம.**—கல்யாணம்......

**சுத்.**—நிச்சயம் யசோதரையையே மணம்புரிவான்.

**1-வது ம.**—அது சரிதான்.

**சுத்.**—பின்னையென்?

**1-வது ம.**—கௌதமரின் நோக்கத்தைப்பற்றியே.

**சுத்.**—அதற்கு நான் இருக்கிறேன்.

**2-வது ம.**—தோன்றலே! அதைப்பற்றி வெகுஜாக்கிரதையாயிருக்க வேண்டுமேயொழிய புறக்கணிப்பதென்பது அடாது.

**சு.**—எங்கும் சுகமே தோன்றுமாறு செய்விப்பேன், மந்தாரம், பாரிஜாதம் முதலிய தேவலோக புஷ்பதருக்களைத் தோற்கச்செய்யும் பலவகைச் செடிகளையுடைய பூந்தோட்டங்களையும், சுற்றேவல்புரிய மகளிரையும், சந்தோஷகரமானவைகளையும், மற்றும் யாதொரு துக்கக்குறி சம்பந்தமானவைகளை நெருங்கவிடாமலிருக்கச் செய்யவேண்டிய பிரயத்தனங்களையும் குறைவுறாது பூர்த்தி செய்கிறேன்.

**2-வது ம.**—அதுதான் வேண்டியது.

**1-வது ம.**—இவ்வாறு செய்தால்தான் ஸித்தார்த்தருக்கு உலகவழியில் விருப்பும், துறவறநெறியில் வெறுப்பும் நேரிடக்கூடும். (போகிறார்கள்.)

---

இரண்டாம் அங்கம்

முதற்காட்சி

இடம்: அந்தப்புரம்.

காலம்: இரவு.

பாத்திரங்கள்: கௌதமர், யசோதரை, லோகினி, புஷ்பாங்கி, நளந்தை.

**லோகினி.**—பிரதாபசீலா! யசோதரை அம்மணி வருகிறார்கள்.

**கௌதமர்.**—நல்லது.

(யசோதரை வருகிறாள்.)

**யசோதரை.**—நாதா! இன்று எல்லாம் மகிழ்ச்சியை உண்டாக்குகிறது.

**கௌ.**—ஆமாம், எல்லாமே.

**ய.**—என்ன, தங்களுக்குக் கொஞ்சம் சிரமமாயிருக்கிறதுபோலக் காண்கிறது.

**கௌ.**—சிறிது களைப்பாறுகிறேன்.

**ய.**—லோகினீ! விசிறி அதோ இருக்கிறது, எடுத்து வா.

**லோ.**—அம்மா! இம்மயில் விசிறியை வைத்துக் கொள்ளுங்கள்.

**ய.**—என தன்பே! காற்று நன்றாய் வருகிறதோ.

**கௌ.**—ஆம்; கண்மணீ!

**ய.**—பாங்கீ! கோமகனுக்கு இளைப்பாருவிப்போம்.

**லோ.**—தாயே! ஸித்தமாயிருக்கிறேன்.

**ய.**—தோழீ! வீணாகானம் செய்வாயானால் எனதாருயிர்த்துணைவனுக்கு ஆற்றல் உண்டாகும். அவர் மனத்துளிருக்கும் கவலைகள் யாவும் ஒழியும். நமது கடமையாவது, கொழுநன் வீட்டிற்குள் புகுந்தவுடன் நன்மொழிகளால் வரவேற்றுக்கொண்டு அவரை எவ்வளவு துக்கத்திலிருந்த போதிலும் நம்முடைய நடத்தையால் உடனே இன்பசாகரத்தில் ஆழ்த்திவிட வேண்டியதே.

கணவன் தன் வீட்டிற்கு எப்பொழுது செல்வோமென்றிருக்க வேண்டுமேயொழிய, எப்பொழுது வெளியே போவோமென்ற எண்ணம் பிறக்குமாறு நாம் நடந்துகொள்ளல் குலமகட்குரியதன்று.

கௌ.—பிராணநாயகீ ! சங்கீதம்.

ய.—என்ன ! இன்னும் தொடங்காமலிருக்கிறாய் ?

லோ.—அரசி ; இதோ.

(வீணைவாசிக்கிறாள்.)

ய.—மன்னா சங்கீதம் செவிக்கினிமை எவ்வளவு அளிக்கின்றது !

கௌ.—மனத்தையும் உற்சாகப்படுத்தி வாழ்வையும் சுகமாக்குகிறது. கிலேசமென்பது இதன் முன் பறக்கும்.

லோ.—ஆதலினாலேயே முன்னோர்கள் சங்கீதத்தைப் புகழ்ந்திருக்கிறார்கள்.

ய.—ஒரே விதத்திலா ? நானாவிதத்திலும். ஆகையால், வீணைக்குப்பின் புல்லாங்குழல் ஆரம்பிப்போம்.

லோ.—செல்வீ! குழலூதல் எனக்குத் தெரியாது.

ய.—உனது கூட்டாளியாகிய புஷ்பாங்கியை அழைத்து இங்கு வரச்சொல்.

(லோகினி போனபின், புஷ்பாங்கி வருகிறாள்.)

புஷ்பாங்கி.—வந்தனம்.

ய.—வீணாகானம் வாணியும் வேணுகானம் வாசுதேவனும் செய்ததால் இவ்விரண்டு கருவிகளும் தொன்றுதொட்டு விசேஷ மதிப்புடையன ; புஷ்பாங்கீ! வீணாகானஞ் செய்ததை லோகினி உன்னிடம் கூறியிருப்பாள் ; இப்பொழுது நீ திறமையுடையவளாதலால், நம்மரசிளஞ்சிங்கத்தை வேணுகானத்தால் மகிழ்விப்பாய்.

புஷ்.—அப்படியே யாகட்டும்.

(புல்லாங்குழல் வாசிக்கிறாள்.)

கௌ.—என்ன ஆனந்தம் !

ய.—ஆயர் தங்குல விளக்கின் வாய்வழிவந்த வேய்ங்குழலோசையின் மாட்சிமை பொய்யாகுமோ ? புஷ்பாங்கீ ! நீ போய் நளந்தையை இங்கு அனுப்புவாய்.

புஷ்.—அவ்விதமே செய்கிறேன்.

(போகிறாள், பின்பு நளந்தை வருகிறாள்.)

ய.—நளந்தா! இப்பொழுது உன்னுடைய முறை, உனது சங்கீதத் தேர்ச்சியைக் கொஞ்சம் காணபிப்பாய்.

கௌ.—யசோதரா !

ய.—ஸ்வாமி !

கௌ.—தூக்கம்.

ய.—நளந்தா !

(நளந்தை புராதன கதையொன்றைப் பாடுகிறாள்.)

கௌ.—பெண்ணே ! நீ சொன்ன இடங்களையும் அங்குள்ள மனிதர்களையும் பார்க்க எவ்வளவு விசித்திரமாயிருக்கும் ! ஆஹா ! நான் பார்க்கவில்லையே ! இந்த மாளிகைக்கு வெளிப்புறம் என்னென்ன உண்டு ?

நளந்தை.—நூபேந்திரா ! இதற்கு வெளியில் நகரம், ஆலயங்கள், தோட்டங்கள், மைதானம், சோலைகள் முதலியவைகள் இருக்கின்றன.

கௌ.—பின்னர் என்னவிருக்கிறது ?

ந.—வனமும் அதன்பின் பிம்பஸாரனின் இராச்சியமுமுள்ளது.

கௌ.—இன்னும் என்ன ?

ந.—விஸ்தீரணமுள்ள உலகமும் அதில் வசிக்கும் ஜனங்களுமே.

கௌ.—ஆ ! ஆ! இவைகளெல்லாம் எவ்விதமாயிருக்குமோ ? நான் பார்க்க வேண்டாமா ? என்னென்ன காட்சிகள் ! இவைகளைப் பார்த்தே தீரவேணடும்.

ய.—நளந்தா ! காலமாகிறது.

ந.—ஆமாம்.

ய.—என் தலைவனுக்குத் தூக்கம் வந்துவிட்டது. நீ சென்றுவா.

(நளந்தை போகிறாள்.)

கௌ.—(திடுக்கிட்டெழுந்து) ஹா ! உலகமே ! என் உலகமே ! இதோ கேட்கிறேன், கேட்கிறேன், அறிகிறேன். இதோ வருகிறேன், வருகிறேன.

ய.—நாதா நாதா ! இதென்ன ! உங்களுக்கு என்னசெய்கிறது சொல்லுங்கள்.என்ன துன்பம்?

கௌ.—ஒன்றுமில்லை, காதலீ ! ஏன் அழுகிறாய் ? வேண்டாம்.

ய.—ஐயையோ ! பிராணேசா !

கௌ.—எனக்கொருவருத்தமுமில்லை, என் மாதே ! நீ வருத்தப்படவேண்டாம். இங்கிருந்தால் உனக்கு கிலேசம் உண்டாகும், நீ போய் வருவாய்.

ய.—இப்பொழுதா தங்களை விட்டுப்போகவேண்டும் ?

கௌ.—நிச்சயமாய் எனக்கொரு கெடுதியுமில்லை ; நீ போய் வருவாய், எனதன்பார்ந்த உயிரே !

(போகிறாள்.)

தேவர்களின் பாட்டு, அதன் சுருக்கம் பின்வருமாறு ;



"நாங்கள் இளைப்பாறுதலில் பசிதாகமுள்ளவர்கள், அலைந்து திரிந்தும் அகப்படவில்லை; வாழ்நாள் சொற்பம், உலகம் சத்திரம், மனிதர் பிரயாணிகள்."

"எங்களுக்குள்ள வருத்தத்தில் இன்பம் உளதோ? உமக்குள்ள சுகத்தில் நீர் சிறிதேனும் அனுபவித்தீரோ? இந்த மனோரதங்கள் அநித்தியம்."

"மாயா தேவியின் புதல்வ! எங்களுக்கு ஆனந்தமே கிடையாது, உலகத்திலும் சந்தோஷமில்லை; எங்கும் துக்கமும் துன்பமும் நிறைந்திருக்கின்றன."

"உலகத்திற்கு ரம்மியமானவைகளெல்லாம் வெறுமையானவை; இவைகளும், இளமை, யாக்கை, செல்வம் முதலியவற்றைப்போல் நிலைத்ததன்று ; நீயே இரக்ஷகன், எழுந்திரு, இவற்றைத் துற."

(கௌதமர் சிந்தித்து நிற்கிறார்.)

---

இரண்டாம் அங்கம்

இரண்டாங்காட்சி

இடம் : வீதி

காலம் முற்பகல்

பாத்திரங்கள் : கௌதமர், சந்தகன், வயோதிகன், பிணியாளன், பிணத்துடன் நடக்கும் மனிதர், துறவி, சனங்கள்.

கௌதமர்.—உலகம் எவ்வளவு அலங்காரமாயிருக்கிறது! எங்கும் வளப்பமும் சந்தோஷமும் பொருந்தியுள்ளன; பிராமணர்களின் வேதகோஷமும், க்ஷத்ரியரின் வீரகோஷமும், வர்த்தகர்களின் நாணயகோஷமும், சிறுவர்களின் பாட்டுக்களும், சதுரங்க பலமும், ஆ! ஆ! என்ன அற்புதம்! சந்தகா! உலகம் எவ்வளவு மகிழ்ச்சியையுண்டு பண்ணுகிறது !

சந்தகன்.—என்னரசே! இன்னும் இருக்கிறது.

கௌ.—இவைகளைத் தவிர வேறென்ன?

ச.—இவைகளைத் தவிரப் பார்க்கவேண்டியவைகள் உலகத்தில் அநந்தம்.

(ஓர் வயோதிகன் வருகிறான்.)

வயோதிகன்.—மஹாராஜா! தருமம்.

ஜனங்கள்.—அடே! விலகு,விலகு, இவன் யாரடா? கிழட்டுப்பயலே போடா, போடா. இதுதான் சமயமோ? உனக்கென்ன உதை தேவையா? ஓடு, ஓடு. இளவரசர் வருகிறது தெரியவில்லையோ?

கௌ.—ஹா! இருக்கட்டும், இருக்கட்டும். இவன் யார்? சந்தகா! ஏன் இப்படியிருக்கவேண்டும் ! என்ன கேவலம்! என்ன பயங்கரம்! என்ன சோகம் இதென்ன ? சந்தகா ! இதென்ன? "ஐயா சாகப் போகிறேன்" என்கிறானே, இதன் அர்த்தமென்ன? மனிதர் இம்மாதிரியே பிறக்கிறார்களோ ? பரிதாபம் ! பரிதாபம் !

ச.—அரசிளவலே! இவன் விருத்தாப்பியன், இவனுக்கு வயது சென்றாய்விட்டது. இவனுடைய கௌமார தசையில் பலசாலியாயிருந்தான், அப்பொழுது பாதாதிகேசம் வரையுள்ள அங்கங்கள் யாவும் நேராகவேயிருந்துள்ளன, மூப்பினால் தளர்ந்து கண்ணிடுங்கிக் கூனடைந்து கையில் கோலூன்றிப் போவானாயினான்.

கௌ.—ஐயோ பரிதாபம்! என்ன துன்பம்.

ச.—இதை நீங்கள் கவனிக்க வேண்டியதெதற்கு? போவோம்.

கௌ.—இவ்வருத்தம் இவனுக்கு மட்டுமா, அல்லது எல்லோருக்குமா, அல்லது இது காண்பது அரியதோ?

ச.—இவர்களும் அந்திமதசை பரியந்தம் நீடித்திருப்பார்களானால் இவ்விதமே யாவது ஸகசந்தான்.

கௌ.—நானும் அந்திம காலத்தில் இங்ஙனமாவிருப்பேன்? என் யசோதரைக்கும் நேருமா?

ச.—ஆமாம், அரசே நாம் செல்வோம்.

(ஜனங்கள் போகிறார்கள்)

(சிறிது தூரம் போனபின் ஓர் பக்கத்தில் பிணியாளன்.)

பிணியாளன்.—இரக்கமுள்ள ராசாக்களே ; உங்களுக்குப் புண்ணியமுண்டு. தருமவான்களே கொஞ்சம் தூக்கிவிடுங்கள். ஐயோ ! அப்பா! ஐயா! வருந்துகிறேன்.

கௌ.—ஆ! (போய் அவனைக் கையால் தூக்குகிறார்.) உனக்கென்ன செய்கிறது? வருந்தாதே, அப்பா, வருந்தாதே, என்ன கெடுதி உனக்கு? ஏன் எழுந்திருக்க முடியவில்லை? சந்தகா! எதற்காகப் பெருமூச்செறிந்து கதறுகிறான்? ஏன் வார்த்தை தடுமாறுகிறது?

ச.—இவன் நோயாளி, இவனது தைரியம் போய்விட்டது ; பலமே கிடையாது; வியாதி அழகையழித்து விட்டது; சந்தோஷத்தை யொழித்துவிட்டது ; நல்லதைப் போக்கினது, அல்லதை ஆக்கினது. இராஜபுத்திரா! அதோ அவன் துடிக்கிறான், அவனாலிருக்க முடியவில்லை. இத்துயரங்கொடிது இந்த உபாதி அவனைத் தன்னாலியன்றவளவு வாதித்தே தீரும், அவனைத் தீண்டக்கூடாது, அது தொற்று நோய், உம்மைச் சார்ந்துவிடும்.

கௌ.—வருந்தாதே. உனக்கென்ன உதவிசெய்ய வேண்டும்? (சந்தகனைப்பார்த்து) இந்த ரோகம் மற்றவர்களுக்குமுண்டோ? இப்படி அநேகரிருக்கின்றார்களா?

ச.—ஆமாம்.

கௌ.—எனக்கும் இம்மாதிரி வருமோ?

ச.—நோயிற் பலவிதமுண்டு, காயம், வாதம் காய்ச்சல், வலி, குட்டம், கழிச்சல் இன்னும் அநேகக் கற்ற வகையுளது.

கௌ.—பிணி எவருக்கும் தெரியாமலா வருகின்றது?

ச.—நம்மேற்சார ஆயத்தமாயிருக்கிறது.

கௌ.—நாமெல்லோரும் பயத்தோடல்லவோ இருக்கவேண்டும்?

ச.—ஆமாம்.

கௌ.—அவ்விதமானால் நமது முடிவு உடம்புமெலிவதும், வியாதியால் வருந்துவதும், மூப்பினால் அசக்தியுந்தானே?

ச.—அதுவரையிலும் ஜீவனோடிருப்போமானால்.

கௌ.—இவ்விதமாக வருந்தி, பேசவும் நடக்கவும் முடியாமல் மிகத் துயரடைந்தால் கடைசியில் என்ன ஆகும்?

ச.—மரணமே. இதுதான் அந்தம்.

கௌ.—மரணமா?

ச.—ஆமாம். அதோபாரும், [தூரத்தில் பிணமொன்றும், மனிதரும் போகிறார்கள்.]

மனிதர்.—கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா!

கௌ.—இதென்ன அழுகிறார்களே?

ச.—இதுதான் மரணமடைந்தோனைக் கொண்டு போவது,

ம.—ராமா! ராமா! ராமா! ராமா!

கௌ.—எங்கே?

ச.—உருத்திரபூமிக்கு.

கௌ.—எதற்கோ?

ச.—அங்கே அவனைக் காஷ்டத்திலிட்டுத் தகனம் செய்து விடுவார்கள்.

கௌ.—ஜீவனோடிருக்கிறவர்களெல்லாரும் அப்படித்தான் போவார்களோ?

ச.—இதுதான் முடிவு, இது யாவர்க்கு முண்டு.

கௌ.—(திமிர்ந்த பார்வையுடன்) உலகம் வருந்துகின்றதே. இது பரியந்தம் இராஜ போகங்களையனுபவித்துக் கொண்டிருந்ததனால் உலகமும் அப்படியே யிருக்குமென்று நினைத்தேன். உலகத்தில் எவ்வளவு துன்பம்! மனிதரும் இதில் மாய்ந்து, மாய்ந்து வாழ்வுறுகிறார்கள். எவ்வளவு கத்தினாலும் பயனொன்று மிலதாகின்றது. மனிதர்களால் துன்பநிவர்த்தி செய்யமுடியுமானால் எதற்கு வீணுக்கழிக்கிறார்கள்? என்னால் கூடுமானால் நான் ஒருவரையும் வருத்தப்பார்க்கேன். எவ்விதத்தாலும் துன்ப நிவாரணத்திற்கு வழிதேடவேண்டியது நமது கடமை. ........

சந்தகா! பார்த்தது போதும், போவோம்.

ச.—செல்லலாம்.

(கொஞ்சதூரம் போகவே, துறவி யொருவர் உட்கார்ந்திருக்கிறார்).

கௌ.—இவர் யார்?

ச.—இவர் துறவி.

கௌ.—இந்த ஆடை ஏன் உடுத்தவேண்டும்?

ச.—சந்நியாசிகள் இந்த உடையைத்தான் கொள்வார்கள்.

(கௌதமர் அவரிடஞ் சென்று)

கௌ.—உத்தமரே! இவ்வித மிருப்பானேன்?

து.—பிள்ளாய்! உலகின் துயரங்களைப் பார்த்துப் பார்த்து எனக்கு வருத்தம் உண்டாய்விட்டது. அவைகளைச் சகியாதவனாகி நான் எல்லாவற்றையும் நீத்து இந்த நிலைமைகொண்டு பிச்சை வாங்கி உண்டு வாழ்பவனா யிருக்கிறேன்.

கௌ.—(சிந்தித்து) இவ்விதமே நாமும் செய்ய வேண்டும். பிறப்பு, மூப்பு, பிணி, மரணமாகிய இவைகளி லாராய்ச்சி செய்து நீக்குமார்க்கத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும். இது சத்தியம்.

ச.—(தனக்குள்) போதும், இளவரசை நகர் காணக் கூட்டிக் கொண்டுவந்தது போதும், போதும். ஐயோ! முதலில் நல்லவைகளைக் கண்டபின் இத் தோற்றங்களையா காண்டல் வேண்டும்? நெருப்பிற்குக் காற்றும் நெய்யும் போலாய் விட்டது. இனி அரை நிமிஷமேனும் இங்கு தாமதம் பண்ணலாகாது.

(கௌதமர் துறவியுடன் பேசியபின் வருகிறார்.)

ச.—காலமாய் விட்டது. போகலாம், அரசே! போவோம் சீக்கிரம்.

(போகிறார்கள்).

---

இரண்டாம் அங்கம்

மூன்றாங் காட்சி

இடம்: ஆலோசனை மண்டபம்

காலம்: காலை

பாத்திரங்கள்: சுத்தோதனன், கௌதமி, மந்திரிகள், நிமித்திகர், சந்நியாசி, சேவகன்.

1-வது மந்திரி.—அண்ணலே! இந்த ஏழு கனவுகள் என்னென்ன பொருளை யடைத்தாயிருக்கின்றனவோ?



2-வது மந்திரி.—நிமித்திக ரிருவர் வந்திருக்கிறார்களே. அவர்கள்மாட் டறியலாம்.

கௌதமி.—மன்னா! அவரிடம் கேளுங்கள். அவர்கள் சொல்வார்கள். ஐயோ! அமங்களகரமானதாயிருக்கின்றனவே!

சுத்தோதனன்.—நிமித்தகரே! இந்த ஏழையும் சொல்லக் கேட்டுக்கொண்டிருந்தீர். இனி எனக்குத் தேற்றரவு செய்வீர்.

1-வது. நிமித்திகன்.—எங்கோவே! இதுவரையிலும் நிமித்தங்களின் அர்த்தத்தைத் தெரிந்து கூறுவதில் தவறினதேயில்லை. இன்றைதனோ சொல்ல முடியாமற் போயிருக்கிறது.

2 வது நிமித்திகன்.—யாது காரணம் பற்றியோ எல்லாம் மறைபட்டிருக்கின்றன. இதென்ன! விசித்திரமா யிருக்கிறது. ஒன்றுந்தோன்றவில்லை. இப்படி யொருகாலுமிருந்ததில்லை. இச்சொப்பனங்கள் எதையும் கடந்திருக்கின்றன.

சு.—ஹா! நீங்கள் அறிவிப்பீரென்றிருந்தேன், ஐயோ! அநுகூல மில்லையே!

கௌதமி.—துயரப் படவேண்டாம், கனவுகளால் நேர்ந்த கவலை போதாதா? இதிலும் சோகம் வேண்டாம். தேற்றிக் கொள்ளுங்கள்.

(சந்நியாசி யொருவர் வருகிறார்).

1-வது மந்திரி.—வரவேண்டும் பெரியோரே!

2-வது மந்திரி.—இதோ ஆசனம்.

சு.—பரிசுத்தரே! உங்கள் வரவால் சுபமடைய வேண்டுகிறேன்.

சந்நியாசி.—என்ன விஷயம்?

சு.—சென்ற இரவில் ஏழு கனாக்கண்டேன்.

ச.—சரி.

சு.—தூயோய்! அவைகள் பயங்கரமானவைகளா யிருக்கின்றனவே.

ச.—அவைகளைக் கூறுவாய்.

சு.—முதலாவது. பரந்த சிறந்த துவசமொன்று சண்டமாருதத்தால் கிழிந்துபோனது. பிறகு சாயை நிறம் வாய்ந்த ஜனங்கள் வந்து, கிழிந்துபட்டுப்போன துண்டுகளை எடுத்துக்கொண்டு கிழக்கு நோக்கிச் சென்றார்கள்.

இரண்டாவது. வெள்ளித் தந்தங்களை யுடைய பத்து யானைகள் பூமி அதிர்ந்து போகும்படியாகத் தென்பாதையில் நடந்தன; முன்னேபோன கஜத்தின்மேல் சித்தார்த்தனிருந்தான், மற்றவர்கள் பின் தொடர்ந்து சென்றார்கள்.

மூன்றாவது. நான்கு குதிரைகள் பூட்டப்பட்டும் கண் கூச்சமடையச் செய்யும் பிரகாசத்தோடு மிருந்த இரதத்தில் கௌதமன் வீற்றிருந்தான்.

அப்புரவிகள் வெளுத்த புகையை மூச்சாலெறிந்து கொண்டும் வாயில் நுரையுடன் இருக்கக்கண்டேன்.

நான்காவது, சக்கரமொன்று சுழன்று சுழன்று சென்றது; அதன் குடம் ஜொலிக்கும் பொன்னாற் செய்தது, சகடக்கால்களோ இரத்தின மிழைத்தவைகள்; அதன்பட்டையில் ஒளிபொருந்தியன எழுதப்பட்டுள்ளன, அது சுற்றுகையில் பாடுகிறதைப் போன்றிருந்தது.

ஐந்தாவது. ஓர்பறை நகரத்திற்கும், மலைக்கும் நடுவே வைக்கப்பட்டிருந்தது; என் புதல்வன் இரும்பு முத்திரைக்கோலா லடித்தான், இடிமுழக்கம்போலப் பேரொலி உண்டாயிற்று.

ஆறுவது. ஆகாயத்தை யளாவி உச்சியில் மலைக்கும் மேகந்தங்குமாறு உயர்ந்துகொண்டே செல்லும் கோபுரத்தின்மேல் கௌதமனிருந்து பதுமராகக் கற்களை மழை பெய்தாற்போல் இருகரங்களாலும் சிதறினதாகவும் உலகமுழுவதும் இந்தச் செல்வத்தை யெடுத்துக்கொள்ள வந்ததாகவும் கண்டேன்.

ஏழாவது, அழுகைத்தொனி வந்தது; ஆறு மனிதர் கண்ணீர் வார்த்து, வாய்களிற் கையுடன் துக்கத்தோடு நடக்கப் பார்த்தேன்.

ச.—காரணனே! உமது குடும்பத்தை வாழ்த்துகிறேன்.

இங்கிருந்து சூரிய காந்தியிலும் மேம்பாடுடைய வெளிச்சம் தோன்றும். ஏழும் சந்தோஷகரமானவைகளே. பூமியைப் புரக்கும் புரவல! சற்றே செவியைச் சாய்ப்பாய்.

துவசம் கிழிபட்டது பழைய கோட்பாடுகளின் முடிவையும், புதிய மதத்தின் ஆரம்பத்தையும் குறிக்கும். மனிதரில் மாறுதலிருக்கிறது போலவே தேவ கணங்களிலும் மாறுதலுண்டு. நாட்கள் செல்லச்செல்லக் கற்பங்களுங் கழிந்து போகின்றன.

பத்து கஜங்களும் பத்து ஞானப் பேறுகள், இவைகளின் வல்லமையைக்கொண்டு உலகத்தை உண்மைவழியால் துறந்தபின் குலுங்கச் செய்வார் இளவரசர்.

நான்கு குதிரைகளும் நான்கு சீலங்கள்; இவைகள்தான் உமது மைந்தனை ஐயம் இருளிவற்றிலிருந்து மகிழ்ச்சியுடைய வெளிச்சத்திற்குக் கொண்டுவரும்.

சக்கரமானது பரிபூர்ண நீதி சக்கரம்; இதை உமது அரசன் அகிலத்திற்கு முன் உருட்டுவார்.

## சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S & LADIES' PAGES

### அறஞ்செய விரும்பு

தெய்வத்தன்மை வாய்ந்த, ஔவையார் அருளிச்செய்த ஆத்திச்சூடி யென்னும் சிறுவர்களின் ஆரம்ப வித்யாபோதனமான, இச்சிறுநூலின் சிறு வாக்கியங்கள், பாலர்களின் களங்கமற்ற ஹிருதயத்திலே நன்றாய்ப் பதியும் வண்ணம், நம் வேதஸாரங்களையே அனுசரித்து, நீதியாகிற க்ஷீரஸாகரத்தில் கடைந்தெடுத்த நவநீதமாகி, சமஸ்த தர்மத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது. மனுஷ்யர்கள் ஈடேறுவதற்கான ஸத்யம், தர்மம் இவைகளின் சிறப்பும், காம, குரோத, லோப, மோக, மத, மாத்சரியாதி குணங்களை யடக்குவதால் ஏற்படும் நன்மையையும், தெய்வபக்தியால் வரும் உன்னதபதவியையும், இளைஞர்களுக்கு வெகு சுலபமாய்ப் போதிக்கின்றது. கதாப் பிரியர்களான சிறுவர்களுக்கு அதிற் சில வாக்கியங்களுக்கேற்ப திருஷ்டாந்தமாக சிறு கதைகள் எழுதினால் அவர்களுக்கு நலமாயிருக்குமென்பதை யெண்ணியே இவைகளை எழுதியது.

கொஞ்சகாலத்திற்கு முன், ருஷியா தேசத்தை கிரேட் பீடர் என்னும் சக்ரவர்த்தி, மன்னுயிரைத் தன்னுயிர்போலெண்ணி செங்கோல் முறைதவறாது அரசாண்டு வந்தார். சில அரசர்களைப்போல் அவர் ராஜபோகத்தில் ஆழ்ந்து குடிகளைக் கவனியாதிருக்கவில்லை. ஆனால் அடிக்கடி அவர் மாறுவேடம் பூண்டு, குடிகளின் குணங்களையும் குறைகளையும் தாமே நேரில்போய்ச் சுற்றிப்பார்த்து வருவது வழக்கம். அவ்வண்ணமே ஓர் நாளிரவு ஒரு எளிய விருத்தாப்பியமான குடியானவனைப்போல் வேடம்பூண்டு, மாஸ்கோ நகரத்துத் தெருவழியே வரும்பொழுது பலமான மழையும் காற்றும் ஆரம்பித்துவிட்டது. மின்னலும் இடியுமோ சொல்லும் தரமல்ல. அரசனுடைய தேகமுழுவதும் நனைந்து குளிரால் நடுக்கமெடுக்கவே, சற்றுநேரம் யார்வீட்டிலாவது மழைக்குத் தங்கிக் குளிர்காய்ந்து செல்வோமென்று எண்ணி ஒவ்வொரு வீட்டின் கதவையும் தட்டிச் "சற்றே இக்கிழவனுக்கு மழைக்குத் தங்க இடம் தருவீர்களா?' என்று பரிதாபமாய்க் கேட்டுக்கொண்டேவந்தார். ஒவ்வொரு வீட்டின் ஜனங்களும் சற்றேனும் ஈவிரக்கம் அற்றவர்களாய்க் கடுஞ்சொற்கள் வழங்கி இவரை வாயிற்படியண்டை கூட நிற்கவொட்டாது விரட்டிவிட்டார்கள். எளியவர்களிடம் கருணையும் தர்மசிந்தனையுமற்ற தன் குடிகளின் ஸ்திதியையுணர்ந்த சக்கரவர்த்தியின் மனம் புண்ணாகி நொந்து தெருக்கோடியில் வரும்பொழுது சற்றுத்தூரத்தில் ஓர் சிறு வைக்கோர் குடிசையொன்று கண்ணிற்குத் தென்படவே அவ்விடமும் சென்று பார்த்து வருவோமென்று எண்ணி அங்கு போய், கதவு முதலில்லாது முள் வேலியே மறைவாய் இடப்பட்டிருந்த அக்குடிசைக்கு வெளியே நின்று, வீட்டினுள்ளிருப்பவர்களைக் கூவியழைத்தார். அக் குடிலோ மிகு எளியவனும் சமுசாரியுமான ஓர் குடியானவனுடையது. மேலும் அப்பொழுது அவன் ஸ்திதியோ மிகவும் பரிதாப நிலைமையில் இருந்தது. வீடு முழுவதும் மழை தாங்காது, ஒழுகி ஓதமெடுத்திருந்தது. சுமார் 10 வயதும் 8 வயதுமுள்ள இரு குழந்தைகள் சுரத்தினாலும் ஆகாரமின்மையாலும் வைக்கோர் படுக்கையிற் புரண்டு முனுகிக்கொண்டிருந்தன. 6 வயதும் 4 வயதுமுள்ள இரு குழந்தைகள் குளிர்தாங்காது ஆடைக்காகவும் ஆகாரத்திற்காகவும் தகப்பனை அலட்டிக்கொண்டிருந்தன. பொறுமையிலும் கற்பிலும் சிறந்த அவன் மனைவியோ, நிறை மாதமாகி பிரசவ வேதனைப் பட்டுக்கொண்டும் உதவியற்று மிருந்தாள். ஒன்றரை வயதுள்ள ஓர் குழந்தை சவலையினாலும் பசியாலும், இரத்தப்பசை முதலற்றுப்போயிருந்த அவள் மாரை உறிஞ்சித் தொந்திரவு செய்துகொண்டிருந்தது. இவ்வித நிலைமையில் அவன் மனம் எவ்வாறிருக்கலாமென்பதை இதைப்படிப்பவரே யறியலாம். ஆனால் எவ்வித துன்ப நிலைமையையும் மாற்றும் மருந்தாய த்ருடமான தெய்வபக்தியும், தருமசிந்தனையுமுள்ளவனாதலால், கேவலமும் அநித்யமுமான இவ்வுலக சுகதுக்கங்களை ஓர் பொருட்டாய் எண்ணிக் கலக்கமடையாது, 'எல்லாம் ஈசன் செயல்' என்று ஸர்வபாரத்தையும் அவன் பொறுப்பாய்த் தள்ளி, பகவானைத் தியானித்துக்கொண்டிருக்கும் பொழுது, வெளியில் யாரோ அழைக்கும் குரல் கேட்டு, இந்நள்ளிரவிலும் மழையிலும் இவ்வளவு தீனமாயழைப்பது யார்' என்று ஓடிவந்து படலைத் திறந்து அழுக்கேறிய கந்தல் உடையும் நனைந்து குளிரால் உடம்பு முழுவதும் நடுங்கிக்கொண்டிருக்கும் கிழவனுடைய பரிதாப நிலைமையையும் நோக்கி, 'சிறுமையு நீங்கிய வின்சொல் மறுமையும் இம்மையும் இன்பந்தரும்' என்பதற்கிணங்க, தன் சிறுமையு மறந்து அன்புடன் இன்சொல்லால் "ஐயாவே இம்மழையில் நில்லாதேயும். மூப்படைந்த உமது உடல் இம்மழை, தாங்காது மிகவும் நடுக்குகிறது. உள்ளே வாரும் யான். சிறுவயதில் சொல்பம் படித்திருந்தபொழுது அப்பொழுது படித்த பாடங்கள் என்மனதில் நன்றாய்ப் பதிந்திருக்கின்றன. இயல்வது கரவேல் என்னும் நீதிவாக்கை யான் மறந்தவனல்லன். ஏதோ கடவுளால் எனக்குக் கிடைத்திருக்கும் சுகத்தில் நீரும் பங்கிட்டுக்கொள்ள எனக்கு யாதொரு தடையுமில்லை" யென்று. அழைத்துப்போய் அங்கு கிடந்த வைக்கோல்களைப் பொறுக்கி எரியவிட்டு, அவரைக் குளிர்காயும்படி சொல்லி, அவதிப்படும் தன் மனைவியைப் பார்க்க உள்ளே சென்றான். இவன் உட்சென்ற சமயமும் அவன் மனைவி ஓராண் குழந்தையை ஈன்றதும் சரியாயிருந்தது. இதைக் கண்ட அவன் களிப்படைந்து, மனைவியை நோக்கி "பெண்ணே இப்பொழுதுதான் நம் வீட்டு வாசலில் ஓர் விருத்தாப்பியர் மழையினாலும் இருட்டினாலும் அவதியடைந்து சற்றுத் தங்குவதற்கு இடம் கேட்டார். பரிதாபப்படத்தக்க அம்முதியோரை உள் அழைத்துவந்து குளிர்காயும்படி சொல்லிவந்தேன். பெரியோர்கள் வரவினால்நன்மையுண்டாகுமென்பதில் தடையுளதா? அவர் வந்ததும் நீ சவுகரியமாய்ப் பிரசவித்ததே அதற்குச்சாட்சி. களிப்பற்று அழுதுகொண்டிருந்த நம்குழந்தைகளும் அவரைச் சுற்றி உட்கார்ந்து, குளிர்காய்ந்துகொண்டும் கதை பேசிக்கொண்டும் சந்தோஷமாயிருக்கின்றார்கள்" என்றுரைத்தான். உத்தம குணம் வாய்ந்த அம்மாது, தன் புருஷனை நோக்கி "என்னன்பனே! இம்மாயாமயமான பிரபஞ்சமென்னும் பெரிய நாடகசாலையில் நடர்களைப்போல் நாம் செய்தவினைக்கேற்பத் தொழிலைச் செய்யக் கடமைப்பட்டு வந்திருக்கின்றோம். இதில் நம் தேகத்தாலும், பிள்ளைகுட்டியினாலும், மாடி வீடுகளினாலும், செல்வச் சீர்களாலும் நமக்காம் பயனென்ன? நீர்க்குமிழிபோலும், மின்னலின் ஒளிபோலும் ஸ்திரமற்ற நம்முடிவில், நம்மைப் பின்பற்றி வருவது நம்மிருவினைப் பயன்களல்லாது மற்றவை தொடருமா? நம்மாலியன்றளவு பிறர்க்குபகாரம் செய்வதே நமக்குப் பெரிய தனம். தாங்கள் செய்த காரியம் மிகவும் உத்தமமானது. சத்புருஷராகிய தங்களை நான் அடைந்தபிறகும் எனக்குத் துன்பமுண்டா? எல்லாம் ஆனந்தமயமே. அறஞ்செய விரும்பு என்னும் வாக்யத்திற்கிணங்கத் தாங்கள் தர்மச்செயலை எண்ணி நடத்த ஆரம்பித்தபொழுதே நமக்கு நன்மை கிட்டியது அனுபவமாகிறது. ஆகையால் நற்குணங்களாலும் தெய்வபக்தியாலும் ஸ்படிகம்போல நிர்மலமான தங்கள் ஹிருதயத்தில் குடும்பக் கவலையென்னும் மாசு படியவிடாது, தெய்வம்போல் வந்திருக்கும் விருத்தரைப்போய் இயன்றளவு உபசரியுங்கள்" என்றுரைத்தாள். இவர்கள் இருந்த இடத்திற்கும் சக்ரவர்த்தி இருந்த இடத்திற்கும் நடுவில் ஒருதட்டியின்மறைவே இருந்தபடியால் இவர்களின் சம்பாஷணைகள் யாவும், அரசன் செவியில் நன்றாய்க்கேட்டது. மேலும் நற்குணமும் கபடமுமற்ற சிறு குழந்தைகள், தங்கள் வீட்டுச் செய்திகளைக் கதைபோல் அவரிடம் சொல்லிக்கொண்டிருந்தன. இவை எல்லாம் கேட்ட மன்னன் மனதில் மட்டற்ற ஆனந்தங்கொண்டு "இத்தம்பதிகளன்றோ தப்பதிகள்? சென்ற நாளைச் சிறுமையில் செலவிடாதும், வருநாளின் வழியுணர்ந்தும், இல்வாழ்வென்னும் நல்வண்டியை நடத்துபவர்கள். இவர்கள் ஒருவராலேயே நம் நாட்டிற்கு மழைபெய்கிறது" என்று எண்ணி மகிழ்ந்துகொண்டிருக்கையில், வீட்டுக்காரனும் தன் மனைவிக்குக் கொஞ்சம் வென்னீரும் ரொட்டியும்கொடுத்துவிட்டு மீதியிருந்த சில ரொட்டித் துண்டுகளையும் கொஞ்சம் வென்னீரையும் எடுத்துவந்து கிழவரைப்பார்த்து "ஐயாவே! தாங்கள்வந்த ஓர் நல்வேளையானது என்மனைவி சுகமாய்ப் பிரசவித்து ஓராண் குழந்தையை ஈன்றாள். அந்தச் சந்தோஷத்திற்காக நீரும் எங்களுடன் இச்சொல்ப ஆகாரத்தை ஏற்றுக்கொள்ளவேணும்" என்று சொல்லி உபசரித்து, எல்லோரும் சந்தோஷமாகப்புசித்துச் சற்றுச் சிரமபரி

காரமாகப் படுத்தார்கள். பொழுது விடியும் சமயத்தில், சக்கரவர்த்தி எழுந்து வீட்டுக்காரனை எழுப்பி அவனுக்கு ஆசி கூறி, தான் ஊர் செல்ல விடைபெற்றுக்கொண்டு தன் அரண்மனை சேர்ந்து மறுநாட்காலை சபைகூட்டி மந்திரியை அழைத்து "இன்று சமஸ்த ராஜ பிருது பரிவாரங்களுடன் நாம் மாஸ்கோநகர தெருக்கோடியிலுள்ள ஓர் குடியானவன் குடிசைக்குச் செல்லவேண்டும்" என்று ஆக்ஞாபித்தார். ராஜாக்ஞையை சிரசில் வகித்து, மந்திரியானவர் தக்ஷணமே அதிவிமரிசையுடன் சகல பரிவாரங்களையும் கொண்டு வந்துநிறுத்தி, அரசனை ரதத்திலேற்றி அழைத்துச்சென்றான். நகரவாசிகளனைவரும் ஆச்சரியத்தினால் திக்பிரமையடைந்து "ஈதென்ன வதிசயம்! திடீரென்று அரசன் இவ்விதம் பவனிவரக் காரணம் என்ன" என்று பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அவர்கள் ஆச்சரியம் இன்னும் அதிகமாகும்படி ரதமானது எளிய குடிசை வாயிலிற்சென்று நின்றது. உடனே ஜனங்களெல்லாரும் அக்குடிசையைச் சூழ்ந்து நின்று,வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கையிலேயே,அரசன் ரதத்தைவிட்டிறங்கி அக்குடிசைக்குள் வரவே அவ்வீட்டுக் குடியானவன் ஆச்சரியத்தினால் மெய்ம்மறந்து உடல் சிலிர்த்து, சக்கரவர்த்தியின் பாதங்களில் விழுந்து "எங்களையாளும் தெய்வமே! தேச மன்னர்கள் வணங்கும் தங்கள் திருவடியானது, பரம ஏழையாகிய என் சிறு குடிலில் வைப்பதற்கு என்ன தவமிழைத்தேனோ, இதன் காரண மெதுவோ" என்றுரைத்து, ஒன்றும் தோன்றாது மெய்மறந்து நின்றான். அவன் சிறு குழந்தைகளோவெனில் சக்ரவர்த்தியைச் சூழ்ந்துநின்று வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்தன. பின் அரசனும் குடியானவனை நோக்கி "சகோதரனே! நீ நேற்று இரவு உன் கஷ்டத்தையும் பாராட்டாது, எனக்குச்செய்த உபகாரத்தை ஒருபோதும் மறக்கமாட்டேன். அதற்குப் பிரதி உன்னைப் பார்ப்பதற்காகவே வந்தேன்.நான்நேற்றுஇரவு மழையினால் மிகக்கஷ்டப்பட்டு வருந்தி ஒவ்வொருதெருவிலும் ஒவ்வொரு வீட்டிலும் தங்கிச்செல்ல ஒரு சாண் இடம் யாசிக்கும்பொழுது, இப்பொழுது என் ராஜவேஷத்திற்குச் சூழ்ந்து கைகட்டி நிற்கும் ஜனங்கள், அப்பொழுது என் பஞ்சைவேஷத்தைக்கண்டு பரிதாபமின்றி விரட்டிவிடவே நம் குடிகளின் மனம் இவ்வாறு கல்லாயிருப்பதையும் நாட்டில் தர்மமற்றுப் போனதையும் எண்ணி மனநொந்து, குளிரால் அவஸ்தைப்பட்டு வந்த சமயம் நீயும் உன் குடும்பத்தார்களும் மனமொத்துத் தர்மசிந்தனையுள்ளவர்களாய், வறியோர்க்கழகு வறுமையிற்செம்மை என்றபடி உங்கள் கஷ்டத்தையும் மறந்து என்னை உபசரித்தது எனக்கு மட்டடங்கா மகிழ்ச்சியை விளைத்தது. உன்னாலன்றோ என் தேசத்தில் தர்ம தேவதை கொஞ்சம் வசிக்கிறது. நீ ஒருவனே இகத்தில் இல்வாழ்வென்னும் நல் தருமத்திற்கும், ராஜனுக்கும், பரத்தில் கடவுளுக்கும் பிரியமானவன். ஈரப் பசையற்ற மனமும், அகம் பாவமும் அடைந்த இந்த ஜனங்கள் இகத்தில் என்னாலும் பரத்தில் கடவுளாலும் தண்டிக்கத் தகுந்தவர்கள். இன்றோடு உன் கஷ்டம் நிவர்த்தியாய் விட்டது. நான் நேற்று வந்த சமயம் உனக்குப் பிறந்த குழந்தையை என்னிடம் கொடுத்துவிடு. அதை நான் வளர்த்து அதற்கு பிரிய தகப்பனா யிருக்கிறேன். மேலும் அரண்மனைக்கு பக்கத்திலேயே உனக்கு ஓர் பெரிய மாளிகையும் நிலபலமும் விட்டிருக்கிறேன். அதை இனி நீ உன் தலைமுறை வழியே அனுபவித்துக்கொண்டிரு. இப்பொழுதே நீங்களும் என் பின்னோடு புறப்பட்டு வாருங்கள். இனி நீ வறுமையால் வருந்தினால் நான் சகியேன், புறப்படு" என்றுரைத்தார். இதைக் கேட்ட குடியானவன் நேற்றுத் தான் உபசரித்த ஏழைக் கிழக்குடியானவன் இச்சக்ரவர்த்தியா என்று திகிலும் ஆச்சரியமும் அடைந்து, கடவுளின் கருணையை வியந்து உள் ஓடிவந்து தன்மனைவிக்கு நடந்த செய்தியுரைத்து அவர்களெல்லாரையும் அழைத்துக்கொண்டு அச்சிசுவையும் தன் கையிலேந்தி வந்து அரசனின்பாதத்தில் கிடத்தினான். அவரும் அப்பாலகனை உடனேஅன்புடன் எடுத்து உச்சி முகந்து அவர்களையும் அழைத்துக்கொண்டு அம்மாளிகைக் கேகி அவர்களை அதில் இறக்கிவிட்டு, தான் குழந்தையை யெடுத்து அரண்மனை சென்று குழந்தைக்குப்பால் கொடுக்கதாதியர்களை நியமித்து நாளொரு மேனியும்பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார். பிறகு அவ்வூரிலுள்ள குடிகள் யாராயினும் இனி எளியவர்களுக்குதவி செய்யாவிடில் சிரச்சேதம் செய்வதாக தண்டோரா போடும்படி ஆக்ஞாபித்தார். ஆனால் அச்சனங்களோ "ஐயோ நேற்றிரவு வந்தவர் ராஜனென்றறியாது மதிமோசம் போனோமே" யென்றும் தாங்கள் வழங்கிய கடுஞ்சொற்களையெண்ணி வெட்கித் துக்கித்தும் அக்குடியானவனுக்குக் கிடைத்த பாக்கியத்தைப் பார்க்கப் பார்க்க வயிறெரிந்தும் சிரசாக்கினைக்குமேல் மனம்நொந்து புண்ணாகிப் புழுங்கிக் கிடந்தார்கள். ஆகையால் தெய்வ மாதான ஔவை கூறியபடி நம் இளமையில் கல்வி பயிலும் பொழுதேவரும் வாக்கியமான (அறஞ்செய விரும்பு) என்பதை பசுமரத் தாணிபோல் நம் ஹிருதயத்திலேயே வேரூன்றிவிட்டால் மற்றும் பல நீதிமார்க்கங்களும் ஈசுவர கிருபையும் உண்டாகும் என்பது சந்தேகமற இக்கதையால் விளங்கும்.



---

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS AND NOTES

**சென்னைச் சர்வ கலாசாலை வித்யார்த்திகளின் கோஷ்டி**

ஒவ்வொரு ஸர்வகலாசாலையாலும் நடத்தப்படும் உயர்தரப்பரீக்ஷைகளில் தேறிய வித்யார்த்திகளுக்கு யோக்கியதா பத்திரங்களும் ஸன்மானங்களும் அளிக்கும் "கான்வகேஷன்" என்னும் கோஷ்டி, நமது சென்னை ஸர்வகலாசாலை சம்மந்தப்பட்டமட்டில் பதிவுபோல, நாளது மாதம் 22-ந்தேதியன்று அக்கலாசாலை மண்டபத்தில், நமது மாகாணக் கவர்னர் அவர்களுடைய அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. வித்யார்த்திகளுக்குச் செய்யப்படும் 'உபதேசம்' இவ்வருஷம், இந்தியாவிலுள்ளபிரான்சிய ஸ்தலங்களின் கவர்னரான கனம் மார்ட்டினோ ஸ்ரீமானால் செய்யப்பட்டதுதான் விசேஷமாகும். பிரிடிஷ் பிரஜை அல்லாத ஒருவர் இந்த உயர்ந்த அந்தஸ்தை வகித்தது இதுதான் முதல் தடவையாகும். ஸ்ரீமான் மார்ட்டினோவின் பிரசங்கம் முழுவதும் பூர்வீக இந்திய சரித்திரப் போக்கைச் சுருக்கிக் கூறியவோர் வியாசமாகும். தேச சரித்திரத்தை எழுதுவதற்கு ஆராய்ச்சி அத்தியாவசியம் என்பதை அவர் வற்புறுத்திப் பேசியிருக்கிறார். நாம் எதிர்பார்த்தபடி, இந்தப் பிரசங்கத்தில் வித்யார்த்திகள் இனிமேல் நடந்து கொள்ளவேண்டிய முறைமையைப் பற்றிய உபதேசங்களோ, புத்திமதிகளோ இல்லாதது கவனிக்கற்பாலது.

பிரஞ்சு பாஷையில் எழுதப்பட்ட இப்பிரசங்கம் இங்கிலீஷில் மொழி பெயர்க்கப்பட்டு வித்யா இலாகாத் தலைவரான கனம் ஸ்டோன் ஸ்ரீமானால் படிக்கப்பட்டது. இவ்வருஷத்தில் இன்னொரு விசேஷம் என்னவெனில், மேற்கூறிய பிரசங்கம் அடங்கிய கைப்புத்தகம் ஒன்று ஒவ்வொரு வித்யார்த்திக்கும் அளிக்கப்பட்டதாம். "கான்வகேஷன் பிரசங்கம்" காதில் விழவில்லை என்று சில வித்யார்த்திகள் குறைகூறுவதை நிவர்த்திக்க இப்புதிய ஏற்பாடு உண்டாயதுபோலும்.

*   *   *

**சென்னையில் மாகாண ஸிவில் உத்யோக நியமன முறைமை.**

ஸிவில் உத்யோகங்களில், தாசில்தார் முதலிய சில உயர்ந்த உத்யோகங்களுக்கு நபர்களைத் தெரிந்தெடுப்பதில் ஏற்பட்ட சில துர்த்தசைகளை நிவர்த்திக்க நமதுகவர்ன்மெண்டார் அடிக்கடி பிரயத்னம் செய்துவருகின்றன ரென்பதை அபிமானிகள் தெரிந்திருக்கக்கூடும். "ஸ்டாருடரி ஸிவில் ஸர்விஸ்" என்பது முதல் முதலில் உண்டான ஏற்பாடு. அதன்படி, இந்தியாவில் நியமனம் பெற்ற இந்தியர்களுக்கும் இங்கிலாந்தில் நியமனம் பெற்ற ஐரோப்பியர்களுக்கும் சம்பளத்தில் தவிர மற்றைய விஷயங்களில் பேதமிருந்ததில்லை. இவ்வேற்பாடு, திருப்திகரமானதாக விருந்தாலும், ஏதோ காரணத்தால் நின்றொழிந்தது. அதன் ஸ்தானத்தில், "போட்டிப் பரீக்ஷை"களில் தேறும் யோக்யதையின் பேரில் நியமிக்கப்பட்ட "புரோவின்ஷியல் ஸிவில் ஸர்விஸ்" டிபுடி கலெக்டர்களுடைய

ஏற்பாடு அமுலுக்கு வந்தது. சில வருஷங்களுக்கப்பால் இதுவும் நின்றொழிய, 1906-ம் வருஷ வாக்கில், டிபுடி தாசில்தார் உத்தியோகங்களுக்கு நபர்களை நேராகத் தேர்ந்தெடுக்கும் அனுஷ்டானம் தலையெடுத்தது. இது திருப்திகரமாக விருந்ததென்றாலும், தகுந்த யோக்யதை யுடையவர்களுக்கு ஆசை காட்டக்கூடிய சம்பளமில்லாதிருந்தது. இதை நிவர்த்திக்கக்கருதி, கவர்மெண்டார் இப்போது ஒரு புதிய முறையை அனுஷ்டிக்க முன் வந்திருக்கின்றனர். வருஷ மொன்றுக்கு ஆறு பேர் நியமனம் பெறுவார்கள். பிரதமத்தில், அதாவது வேலை பழகும்போது. அவர்களுக்கு மாதம் ரூ. 100 சம்பளமும், காயமாகும் போது ரூ 125 சம்பளமும் கொடுக்கப்படும். மூன்று வருஷம் வேலை பழக வேண்டுமென்றும், அதற்குள் வேலை வேண்டாமென்று நிராகரித்து விடும் நபர்கள், தாங்கள் பெற்ற தொகையில் பாதித்தொகையைத்திருப்பிக் கொடுத்து விடுவதற்கு ஜாமீன் கொடுக்க வேண்டுமென்றும் நிபந்தனைகள் ஏற்பட்டுள்ளன. இம்முறை பொதுவாக நமக்குத் திருப்தியைக் கொடுக்கிற தென்றாலும், "ஜாமீன்" அம்சத்தை நாம் அங்கீகரிக்கவில்லை. உத்யோகங்களில் ஆசைகொண்டு நபர்கள் முன்வர வேண்டுமென்பதே கவர்ன்மெண்டாரின் நோக்கமாகத் தோன்றுகிறபடியால், அதற்கு இந்த "ஜாமீன்" துர்த்தசை சற்று இடையூறாக விருக்குமென்பது நமது அபிப்பிராயம். என்றாலும், இதனுடைய பலாபலன்கள் காலக்கிரமத்தில்தான் தெரியவேண்டும்.

* * *

ஜப்பானில் கல்வி விஷயம்

ஏராளமாகச் சேதத்தை விளைவிக்கும் ஐரோப்பிய மஹா யுத்தத்தினிடையே ஜன சமூகத்தின் முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் உத்தேசித்து, அந்தந்த தேசத்து நிர்வாகர்கள் கல்விவிஷயமாகச் செய்துவரும் ஏற்பாடுகள் மிகவும் வியப்பைத் தருகின்றன. சென்ற மாதத்துச் சஞ்சிகையில் கல்வி விஷயமாக இங்கிலாந்தில் செய்துவரும் பிரயத்தனங்களை வெளியிட்டோம். இப்போது, ஜப்பான் தேசத்திலும் வித்யாவிஷயமான கிளர்ச்சிதோன்றியுள்ளது. அதன் காரணமாக கல்வி சம்மந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் பரியாலோசனை செய்ய முடிவு சொல்வதற்கு ஒரு மஹாஸபை ஏற்படுத்தப்பட்டுள்ளது. நற்கால விருப்பங்களுக்கும், ஜாதீய முன்னேற்றத்துக்கும் ஏற்றதான முறைகளைக் கல்வி விஷயத்தில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர மிகவும் சிரத்தை கொண்டிருக்கிற ஜப்பானிய சக்ரவர்த்தியின் அபிப்பிராயத்துக்கு இணங்கவே இந்த மஹாஸபை உண்டாயிருக்கிறதென்றும், நற்குணம், புத்திவன்மை, தேகநிடன், இவைகள் ஒவ்வொரு குழந்தைக்கும் லபிக்கவேண்டியதே இனிச்செய்ய உத்தேசிக்கும் சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கமென்றும், தேசக்ஷேமத்துக்கு முதற்காரணம் தொழிற்கல்வியாதலால் அதை விருத்திசெய்வதில் சிரத்தை யெடுத்து கொள்ளப்படுமென்றும், ஜப்பானிய பிரதம மந்திரியான கவுண்ட் டிரவுசி பேசினார். ஐரோப்பிய முறைகளை அப்படியே பெயர்த்து நடப்பது ஜப்பானிய ஸார்வபௌமத்தின் அத்விதீயமான குண விசேஷத்தை மற்றிவிடுகிற தென்றும், வித்யா விஷயத்தில் செலவிடப்படும் பணத்தொகை ஜன ஸமூகத்தின் செல்வத்துக்கு ஏற்றவாறு, அதாவது ஏழைகளின்மீது கடுமையான வரி விதிக்கப்படாமலிருக்க வேண்டுமென்றும், கவுண்ட் டிரவுசி வற்புறுத்திப் பேசியிருக்கிறார். இம்மாதிரியான நற்காலம் நமது நாட்டுக்கு எப்போது வரும் என்பதைச் சொல்லமுடியாதாயினும் அதற்கு முன்னாக வேண்டிய காரியங்கள் கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேறி வருகின்றனவாதலால், காலக்கிரமத்தில் நமது தேசக்ஷேமத்துக்கேற்ற கல்வி விளக்கும் ஏற்பட்டுப் பிரகாசத்துடன் எரியும் என்பது நமது முழு நம்பிக்கை.

---

## சந்தாநார்களுக்கு.

ஒன்பதாம் தொகுதியில் 1, 2, 3, 4, 5, 6, 7, 12 பகுதிகளில் சில சஞ்சிகைகளே கைவசமிருக்கின்றன. பயின்டு செய்துகொள்ள விரும்புவோர், டை சஞ்சிகைகளில் ஏதேனும் தேவையாயிருந்தால் உடனே எழுதிக் கொண்டால் மாத்திரமே காப்பிகள் கிடைக்கும். ஒவ்வொரு சஞ்சிகையின் விலை அணா 5.

# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி X | பிங்களவூ கார்த்திகை :: 1917-வூ டிசம்பர்மீ | பகுதி 6

"நமது நாள்"



"Our Day"

## அரச வாழ்த்து.

### நிலைமண்டில வாசிரியப்பா

திருவளர் தாமரைக் கிறையொளி பரப்பும்
பெருவள நிலங்க ளுருவக மெவனுந்
தன்னர செய்தித் தனிக்குடை புரக்கு
மன்னரி துயரிய மாண்பவி ராங்கிலச்
செங்கோ லோச்சித் திகழ்தரு நீணெறிப்
பங்கோர் பொருண்மொழிப் பகர்விடை ஞான
மன்பரு ளடக்க மாய்ப்பொறை யீகை
யின்பெறுங் கல்வி யெழினல மேன்மை
நடுநிலை திறம்பா நாயக மாகிக்
கொடுவினை புலனிலக் கோண்மிகு தெவ்வர்
படைவலி முழுதூஉம் பாத்தடற் செருக்க
வடைவுறு மிந்திய வரசருக் கேறு
வந்தா தரஞ்செய் மாம தவனு
மைந்தாந் ஜார்ஜ்ஜென் னதிபதி யாயனை
மேரிப் பெயர்புனை மேதகை குணத்தின்
கூறிய அற்பு குலவிடு மெய்கோ
ளாகிக் குடிகட் கமைதரப் பன்னலம்
பாகித் தளிக்கும் பண்புடைக் குரிசல்!
நன்னர் நலத்தர் தொன்முது குரவர்
இன்னலஞ் சான்ற வெழிலன்மிகு விளைஞ்சரி
னன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கிச்
சென்ற காலமும் பின்றுறு மம்யமு
முயர்நிலை யுலகமு மிவணின் றெய்து
மறநெறி பிறழா தாண்மையிற் கவினி
நின்றெறி னேமி நிகழ்த்தியம் மவர்க்கா
வன்றிறற் கவலை மிகைபடக் கொள்ளுமோர்
பொல்லா மாற்றப் போக்கழிந் தேர்ங்கி
நல்லார் மனத்தக நாடும் வெற்றியை
மென்மே லடைந்து மேம்பட நாளும்
நீடிய ஆயுளுங் கேடில் செல்வமும்
நோயில் வாழ்க்கையு மேபும் பெற்றியுங்
கந்தழி தெய்வகின் கட்கடை கொண்டெம்
மென்தையைக் காத்தினி தெழினல முவந்தீங்
தெல்லாரும் ஞான்று மிருந்தா செய்தி
பல்லூழி வாழ்கம் பண்ணுதல் நன்றே!

### வேறு

திருவிளங்கச் செங்கோல் செயல்விளங்கக் கல்விக்
கருவிளங்க ஞானக் கலையி—னுருவிளங்கத்
தெய்வநெறி மேவுந் தெளிவிளங்க மெய்மைநனி
யுய்வநெறி கொண்டிங் குவந்து.
சீர்வாழ்கவாழ்க சேகமெலாம் காக்குமருட்
பேர்வாழ்க ஜார்ஜமன்னன் பெற்றிவாழ்க—நேர்வாழ்க
இந்தியதேசத்தெவனு மேய்ந்தெழிலி பெய்துவளந்
தந்தங்குடிவாழ்கவே தான்.

விவேக போதினி

தொ. 10] பிங்கள௵ கார்த்திகை௴ [ப. 6

# விதுரத் தூய்மை

## THE IDEAL LIFE

உண்மையில் ஈடுபட்டு உத்தமமாக உழைப்பவர்க்கு இத்தலத்து ஆசைவிட்டு, முக்தி வழி தேடுவதற்கு ஆசாபாசங்களைத் தொலைத்து, மனத்தைத் தன் வழி நிறுத்தி,பெரும் துறவியாகி, பகை நட்பு என்னும் இரண்டினுள் சம்பந்தப்படாது, உலகம் முழுவதும் கேவலம் பரம்பொருளின் உருவமென்றே உள்ளூறத் ததும்பும் உணர்ச்சியில் ஈடுபட்டு நிற்பதே பேரின்ப நிலையாகும். அந்நிலையை அடையவே விதுரரும் உழைத்தார். அவர் வில்லை ஒடித்து ஸன்யாஸ மார்க்கத்தில் ஈடுபட அங்குரார்ப்பணம் செய்தனர்போலும்!

"ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அனுபூதி பிறந் ததுவே"

என்றுஅருணகிரிநாதர் அனுபவித்தவண்ணம், விதுரரும் தமது நிலையை உணர்வதன் பொருட்டு ஸன்யாஸ மார்க்கத்தை மனமுவந்து வெளிப்படையாகப் பேரவாவுடன் ஏற்றுக்கொண்டனர். அப்பொழுதே அவர் வாழ்க்கையின் மூன்றாவது பிரிவு ஏற்பட்டதென்று சொல்லலாம். இரண்டு வருஷங்கள்வரை அவர் இந்திய நாடு முழுவதும் அலைந்தனர்; திவ்ய க்ஷேத்திரங்களை யெல்லாம் தரிசித்தனர் ; தெய்வீகத் தீர்த்தங்களி லெல்லாம் ஆடினர்; மனமாற எம்பெருமானது உருவை எப்பொருளிலும் கண்டு ஆனந்தத்தில் ஆழ்ந்தனர்; உலக சம்பந்தமென்னும் தடையற்று உலாவினர் ; காற்றைப்போல் எதிர்ப்பாரற்று ஸூக்ஷ்ம நிலையில் அலைந்தும் தன் மனமென்னும் குதிரைகளை அறிவென்னும் கயிற்றால் கட்டி, தன் அன்பென்னும் தேரில் அளவிடவொண்ணா அரும் பெரும் பொருளாகிய அப்பரம்பொருளை ஏற்றி ஆனந்தமாகத் தமது ஞானரதத்தை ஓட்டிக்கொண்டிருந்தனர்.

இவ்வாறு இரண்டு வருஷங்கள் கடந்தன. ஆயினும் தமது உறவினர்களைப்பற்றியாவது பகைவர்களைப்பற்றியாவது நினைத்தவரல்லர். தம் உயிர்க்கு உயிராக விளங்கும் உத்தம மூர்த்தியான ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை மறந்தனர் அல்லர். கௌரவ பாண்டவரது யுத்தம் முற்றும் நடந்துவிட்டதென்றே சொல்லலாம். துரியோதனன் தவிர்த்து மற்றெல்லா கௌரவ வீரரும் அவரது சேனையும் பூண்டோடு அழிந்துவிட்டன. பலராமருடன் தீர்த்த யாத்திரையாக அப்போது அங்கு வந்திருந்த விதுரர் குருக்ஷேத்திரத்தில் இவ்வாறு பாண்டவர் தவிர்த்துக் கௌரவருள் துரியோதனன் ஒருவனே உயிரோடிருப்பதாகக் கேட்டதும், அவர் மனம் துன்புற்றதாயினும், அது பெருங்கடல்மீது வீசும் சிறு அலைபோலத் தோன்றியதும் அடங்கியது.உலக வியவஹாரங்களில் சம்பந்தப்படும் மாயா அபஸ்மாரங்களைத்தொலைக்க வேண்டியதற்கு இக்கோபதாபங்கள் எதற்குதவும்? ஆக மீண்டும் தம் வழியே நோக்கிச் சென்றனர். இடையே பிரபாஸ தீர்த்தத்தில் அவர் ஸ்நான மாடிக்கொண்டிருக்கும்போது பாரத யுத்தத்தில் பாண்டவரும் திருதராஷ்டிரரும் தவிர்த்து மற்றைய வீரர்களெல்லாம் மடிந்தனரென்றும், தருமரே தரும ராஜாங்கம் நடத்தி வந்தனரென்றும் கேட்டதும், அவருக்கு ஒருவித ஆனந்தமுண்டாகியது. அதுவும் பெருங்கடல்மீது தோற்றும் சிற்றலைபோலவே தோன்றினதும் மங்கியது.இதன் பிறகு விதுரர் கங்காநதியோரமாக யாத்திரைசெய்து வரும்போது, கண்ணபிரானது உயிர்த் தோழரான உத்தவரென்னும் உத்தமரை எதிருற்றனர்.அவரைக் கண்டதும் கண்ணபிரானது திவ்யமங்கள விக்ரஹம் அவர் கண்முன் நிற்பதுபோலவே தோன்றியது. ஆனால் அவர் உள்ளத் தெழும்பிய பேரானந்தப் பெருக்கு, தானே ததும்பி வெளிவருமுன் உத்தமர் ஸ்ரீ கண்ணபிரான் தேகத்தைநீத்து ஸ்வயம்ஜோதியாகத்தம்மிடம் சேர்ந்த விஷயத்தைச் சொல்ல, விதுரருக்குத் தோன்றிய சோகத்துக்கு அளவேயில்லை.அவர் உயிரே தன் உயிர் என்று எண்ணியிருந்த



அவர்க்கு இந்தச் சமாசாரத்தைக் கேட்க, ஈயத்தை உருக்கிக் காதில் ஊற்றினாற்போலயிருந்தது. கண்ணபிரான் தேகத்தை நழுவிய காலத்தில், அவர் பக்கத்திருந்து அவரது தெய்வீக மேலேற்றத்தைக் கண்குளிரக் கண்டு அக்காலத்து அவரிடத்திருந்து நேர்மொழியாக மிகவுயர்ந்த உத்தம ஞானத்தைத் தாம் பெறுவதற்குக் கொடுத்துவைக்கவில்லையென்று மிகவும் வருந்தினர் ; தாம் அந்தச் சமயம் அவருடனிருந்து தொண்டு செய்யப் பாக்கியம் பெறாததை எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணானார். உண்மைத் தோழனை அற்றுத் தாம் விளங்கிய பரிதாப நிலைமையை நினைக்க நினைக்க அவர் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது. செயலற்றவராகி, ஒன்றும் தோன்றாது "ஹா ! கிருஷ்ணா ! இதுவும் உன் செயலா?" என்றெண்ணிக்கொண்டே மயங்கினர். அவர் கண்கள் இருண்டன; மார்பு துடித்தது; ஐம்பொறிகள் செயலற்றன; மூச்சு தாமே வரவரக் குறைந்தது ; ஜடப்பொருள்போல் அவர் உடல் உணர்வற்று விளங்கியது. உண்மையில் விதுரருக்கு அப்பொழுது உலக அறிவே இல்லை. அவரது மனம் குவிந்து மூலப் பொருளாகிய கண்ணனுடனே கலந்து நின்றது. இந்நிலையைக் கண்டதும் உத்தவர் அவரை இறுகத் தழுவி ஆனந்த பாஷ்பம் வெளித்தோன்ற விதுரரை நோக்கி பின்வருமாறு சொன்னார்:

"ஐயா, உன் துயரம் எனது துயரேயாகும். உனது நிலை முற்றும் நான் அறிவேன். கவலையுறேல் ; தீனசரண்யனான கண்ணன் உம்மை ஒரு நாளும் மறந்ததில்லை, மறப்பதுமில்லை. வீணில் மனம் அயர்ந்து துன்பமுறேல். கவலையும் துக்கமும் நமக்கன்று. மூவாமுதல்வன் நம்மை மறந்தானல்லன். உம்மையும் என்னையுமே எம்பெருமான் ஸ்வயம் ஜோதியாக மேலேறிய காலத்து ஞாபகத்திலிருத்தியிருந்தனர். ஆக உமது கவலையை ஒழியும். எனக்கு அவர் உபதேசித்த தெய்வீகப் பொருள்கள் உமக்கு உபதேசிக்கவென்றே உபதேசித்தனர். அவற்றைக் கற்றலே உமக்கு முறை. ஞானத்திலுயர்ந்த தாங்கள் எம்பெருமானது விருப்பத்தின்படி அவற்றைக் காப்பது ஞாயமாகும் ; தலைவன் வழிபாடுமாகும்."

இம்மொழிகளைக் கேட்டதும் விதுரர்க்கு ஒருவாறு மனந் தெளிந்தது. தம்மைப் பற்றிக் கண்ணபிரான் தேகம் நழுவிய காலத்திலும் ஞாபகம் வைத்திருந்ததை எண்ண எண்ண அவர்க்குச் சந்தோஷம்அளவுகடந்து தோன்றியது. எம்பெருமானது கிருபையின் பெருமையும் அருட்பிரபாவத்தின் வைபவமும் மேன்மேலுந் தோன்ற அவர் ஆனந்தக் கூத்தாடினர்.

"போதெலாம்போது கொண்டுன் பொன்னடி புனைய
மாட்டேன் ; தீதிலா மொழிகள் கொண்டுன் திருக்
குணம் செப்ப மாட்டேன் ; காதலால் நெஞ்சமன்
புகலந்திலேன் அதுதன் னாலே ; ஏதிலேன் அரங்
கர்க் கல்லேன் என் செய்வான் தோன்றி னேனே."

என்று தொண்டரடிப்பொடி யாழ்வார் தமது தாழ்ந்த நிலைமையையும் பரந்தாமனது பெரும் பதவியையும் நினைந்து மனமுருகிய வண்ணம் நெஞ்சம் நெக்குருகினர்.உத்தவரும் தம் உயிர் நண்பன் ஆணையிட்ட வண்ணம் விதுரர்க்குஉபதேசஞ்செய்தனர். பின் அவரை ஹரித்வாரம் சென்று மைத்திரேயரைக் கண்டு ஞான முற்றும் பெறும்படி ஆணையிட்டதாகவும், மைத்ரேயரிடம் அவரே விதுரர்க்குப் பரமஞான ரஹஸ்யங்களையும் 'அங்கை நெல்லிக்கனி போல்' ஐயமற விளக்கும்படியாகச் சொல்லியிருப்பதாகவுஞ் சொன்னார். பிறகு உத்தரவு பெற்று உத்தவர் தமது காலத்தைத் தவத்திலும் யோகத்திலும் ஞானத்திலும் செலுத்த பதரிகாச்ரமம் சென்றனர்.

"எல்லாம் அவன் செயலே யென்றிருக்கும் வல்
லார்க்கு இல்லைகாண் ஆசாத திறையே பராபரமே"

என்றவாறு அவன்மேல் ஆணையிட்டுச் செய்ய வேண்டிய கருமங்களில் தடையற்று விருப்பு வெறுப்பு இல்லாது அவனையே எப்பொழுதுமாக நினைத்து உழைப்பவர்க்கு நன்மை செய்யவேண்டுவது தனது கடமையென்று கடவுள் தன்மேல் ஏற்றுக்கொள்ளும் பொறுப்பை விதுரரிடம் கண்ணபிரான் வைத்திருந்த ஞாபகமே காட்டுமல்லவா ? விதுரரிடம் கண்ணபிரான் காட்டிய அன்பும் அவரது மேலேற்றத்திற்காக உழைத்த பெருமையும் விதுரரது ஞானவைபவத்தையே எடுத்துக் காட்டும். ஆகவே ஞானகஞ்சுக விதுரன் என்றே தமிழ்க்கவியும் திருவாய் மலர்ந்தனர். ஒவ்வொருவரும் இந்நிலைமையிலே உழைத்து பரந்தாமனது அருளுக்குப் பாத்திரமாவதே பெருமையிற் பெருமை, அவர்க்கு ஒரு நாளும் துன்பம் வராது.

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை இல." —திருக்குறள்.

## ஸர் ஜேம்ஸெட்ஜீ ஜிஜீபாய்
## SIR JAMSETJI JIJIBHAI, BART.



ஸர் ஜேம்ஸெட்ஜீ ஜிஜீபாய்

"முயற்சி திருவினை யாக்கும்" முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"— திருக்குறள்.

மனிதனை மனிதனுக்குவது முயற்சியே. காலத்தை வீணே போக்காது, கண்ணுங் கருத்துமாக உழைப்பார்க்குக் கூலி கிடைக்காது போகாது. நரிவாலைக் கொண்டு கடலாழம் பார்ப்பது போல, எவனும் உழைக்காது பலனடைய முடியாது. விதை விதைத்தாலன்றி வினை யுண்டாகா தென்பதை ஒவ்வொருவனும் நன்குணர வேண்டும். அவ்வாறின்றி உழைக்காமல் பெருமை விரும்புவன் வித்தைக்கள்ளி விளையாட்டுக் கள்ளி பாகற்காய் விற்றப் பழங்கள்ளி போலப் பதைபதைக்கத்தான் வேண்டும். விதிபோகிற வழியே மதிபோகுமென்று கனவு கண்டு கொண்டிருப்பவர் கதியுமதுவே. இவரெல்லாம் உழைப்பின் பெருமை யறியாதாரேயன்றோ? களர் நிலங்களும் கட்டாந்தரையும் முட்பொந்தும் புதரும் கள்ளியும் எருக்கும் நிறைந்து கிடக்கும் மனித ஸஞ்சாரத்திற்கு உபயோகமற்ற அபஸ்மார களன்களும் மனிதனுடைய சிரமத்தின் பெருமையால் புஞ்சை நிலங்களாகிப் பசுமை படர்ந்த பயிர் தவழ்ந்து, பக்கத்து ஜனங்கள் பல்லாயிரமாகச் சேர்ந்து வாழக்கூடிய வாஸயோக்கியமான நகரும் நகர்ப்புறமுமாக மாறுகின்றன; மேலும் மனிதனது மூளையின் உதவியால் மாடமாளிகையாதி வைசித்ரிக நிலைகளும் தவழ்ந்து அதி ரமணீயமாக விளங்கும்; மற்று, பொருள் பெருவதற்கும் முயற்சிபெருஞ்சாதனமாகும். 'திரைகடலோடியுந் திரவியந்தேடென்றாள் ஔவை. முயற்சியிலீடுபட்ட நமது முன்னோர் செல்வந் தழைத்துப் பெருந்தனிகர்களாகவும் பிரபுக்களாகவும்விளங்கினர். நமக்குப் பொருள் சம்பாதிக்கும் முறைகளெல்லாம் ஒருவாறு ஒழிந்ததென்றே சொல்லும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆயினும் நம்மவருள்ளும் திறமைமிக்க சிலர் இவ்வகௌரதையை நீக்க உழைத்துள்ளார் என்பது நமக்கு நமது துன்பத்துள் இன்பந்தருவதாகும்; அவராலேயே நமது நாட்டு மானம் சற்றே நிலைத்ததுபோலும்! அத்தகையாருள் ஸர் ஜேம்ஸெட்ஜீ ஜிஜீபாய் ஒருவர் ஆவர்.

இம்மஹான் 1783-ம் ஸ்ரீ ஜூலை மீ 5உ பம்பாய் நகரத்தில் பிறந்தவர்; பாரஸீகர். இவர் தாய்தந்தையர்கள் வறுமையினால் தளர்ந்திருந்தாலும் கீழ்மையில் பாயாதிருந்தவர்; மதக் கோட்பாடிற்கும் மனஸ்ஸாக்ஷிக்கும் பாடுபட்டு வந்தவர். இவர் தமது சிறுவன் வயது முதிர்ந்து, திறமை யோங்கி வளர்ந்து, புகழென்னும் பெருங்குடியில் வாழும் வைபவத்தைக் காணப்பெறாது, அவரது இளம்பருவத்திலேயே இகசுகத்தைத் துறந்து, பேரின்பப் பேற்றைப் பெறுவதாயினர். ஆயினும், சிறுவனாகவிருந்த காலத்திலேயே ஜிஜீபாய் நல்லவம்சத்தில் தோன்றிய உத்தம மனைவியை யடைந்தனர். அவரிடம் அன்புகொண்ட மாமனார், தம்மால் கூடியவரை அவர்க்குக் கணக்கு வழக்குச் சிறிது கற்றுக்கொடுத்தனர். மற்று ஜிஜீபாய் அப்பொழுது உயர்ந்த கல்விப் பயிற்சி எதுவும் பெறவில்லை. ஆனால் உலக வியவஹாரங்களில் தேர்ச்சி பெறவேண்டிய முக்கியமான அம்சங்களைக் கற்றுக்கொள்வதில் அவர் பின்வாங்கவில்லை. பம்பாயில் அக்காலத்தில் வர்த்தகர்கள் வழக்கமாய் உபயோகப்படுத்திய வர்த்தக பரிபாஷைகளைச் செம்மையாக எழுதவும் படிக்கவும் அறிந்தனர்; இங்கிலீஷ்பாஷையையும் இடையிடையே சிறிது சிறிது அப்யஸித்து வந்தனர். மாமனாரது சிறு வர்த்தகத்தினால் ஒருவாறு வர்த்தகத்



தொழிலின் உண்மை நிலையையும் ஊகித்தறிந்தனர்.

அக்காலம் ஜிஜீபாயின் நிலைமையை நம்மாற் சொல்லத்தரமன்று. தாய்தந்தையரற்று, பொருளென்பது இல்லையென்றே சொல்லும்படியாய் உதவிக்குத் தகுந்தவரைக் கண்டறியத் தெரியாது, உத்தம வழியில் ஈடுபட்டு உழைக்க வேண்டுமென்னும் பேராவலில் உழன்று, வழிதெரியாமல் அவர் மயங்கி நின்றனர். ஆனால் ஊக்கமிருக்கும் இடத்தில் உண்மை உழைப்புத் தானாகவே ஊறும் என்பதை நாம் அறிவோமல்லவா? ஆக இளம் ஜிஜீபாய்—அவர்க்கு அப்போது 14 அல்லது 15 பிராயமிருக்கலாம்—இவர் தன் தந்தை வைத்திருந்த பழைய சாராயப் புட்டிகள் இரண்டை விற்றுக் கிடைத்த பொருளைக் கொண்டு புட்டிகளில் வியாபாரஞ் செய்ய ஆரம்பித்தார். "எறும்பு ஊறக் கல்லுந் தேயும்" என்றபடி தனது இடைவிடா ஊக்கத்தினால் உண்மை வியாபார வழியில் ஈடுபட்டுக் கிட்டத்தட்ட இவ்வியாபாரத்தின் மூலமாக ரூ. 120 இலாபமாக அடைந்தனர். இக்கைப்பொருளை மேலும் விருத்தி செய்யக் கல்கத்தாவுக்குச் சென்று அல்ப வியாபாரங்கள் சிலவற்றைச் செய்து அதை ரூ. 180 ஆக விருத்திசெய்தனர். இதற்குள் இவரை அவர் தோழர்கள் 'புட்டி ஆஸாமி' என்று வேடிக்கையாக அழைப்பது வழக்கமாயிற்று. அதற்கு அவர் செய்த வியாபாரமே காரணம். நிற்க, ஜிஜீபாயின் உண்மை உழைப்பைக் கண்ட தனிகர்கள் அவரிடம் மதிப்பும் நம்பிக்கையும் கொள்ள ஆரம்பித்தனர்; சிறிது சிறிதாக அவர்க்கு வேண்டிய முதலைக் கொடுத்து உதவியுஞ் செய்ய ஆரம்பித்தனர். இவர்களின் உதவியின் ஆதரவால் அவர் தமது 16-ம் வருஷத்தில் அயல் நாட்டு வியாபாரங்களில் தலையிட்டு, தமது உறவினரோடு ஒரு முறை சீனதேசத்திற்குச் சென்று, 'திரைகடலோடியுந் திரவியந் தேடு' என ஔவை சொன்ன வாக்கைப் பரிபாலித்தனர். தம் ஊரை மீண்டும் அடைந்ததும் தாமாகவே தமது அன்பர்களிடமிருந்து கைமாற்றாக ரூ. 35,000 முதல்கொண்டு மறுபடியும் சீனதேசத்திற்கு வியாபார யாத்திரைசெய்தனர். அக்கால் அவருக்கு நல்ல லாபங் கிடைத்தது. ஆக இம்மாதிரி அவர் அத்தேசத்திற்கே நான்கு முறை யாத்திரை செய்தனர். அச்சமயமெல்லாம் அவருக்கு சுக்கிரதசை யடித்ததென்றே சொல்வோம்; எல்லாம் அவர் எண்ணப்படி அனுகூலமாகவே முடிந்தன.

ஆனால், நான்காவது முறை, அதாவது, 1806-ம் வருஷத்தில், சரக்கை யேற்றிக் கொண்டு வரும்போது, அவருடைய கப்பல் பிரஞ்சு தேசத்துப் படைகளால் மறிக்கப்பட்டது; அவர் சாமான்களும் பறிமுதல் செய்யப்பட்டன; அவர் கைதி செய்யப்பட்டனர். அக்கால் நடந்த விஷயத்தைப்பற்றி அவர் எழுதியவற்றை நாம் சிறிது இங்கு சுருக்கிச் சொல்வது இழுக்காகாது:—

"கப்பல் தலைவனை எங்களை இறக்கும்படியாகக் கேட்டோம். ஆனால் அவன் சேனாபதியின் உத்தரவில்லையென்று மறுத்தான். இரவு முழுதும் நாங்கள் கண்ணீரும் கம்பலையுமாக இருந்தோம். ஆனால் எங்களை இலங்கையோரம் சிறைபிடித்த காலத்தில், அந்தப் பிரஞ்சுதேசத்தின் கப்பற்றலைவன் எங்களை மோரீசு தீவில் இறங்கவிடுவதாகவும், அங்கு பொன், பொருள்யாவற்றையும் யாத்திரிகர்களுக்குத் திருப்புவதாகவும் எங்கள் மனத்தில் நம்பிக்கை உண்டுபண்ணியிருந்தான். அடுத்தநாள் சேனாதிபதியை நாங்கள் கண்டதும் எங்கள் சாமான்களைக் கொடுக்கும்படி கேட்டோம்; கெஞ்சினோம்; மன்றாடினோம். அப்பெரும் ஹோதாவிலிருந்தவர், வியாபாரப் பொருள் தவிர்த்த மற்றைப் பொருள்களைத் திருப்பும்படி உத்தரவிட்டனர். நாவாய்த் தலைவனும் எனது சிறு பெட்டியைத் திருப்பிக்கொடுத்து மற்றைப் பொருள் யாவற்றையும் பறிமுதல் செய்தான். எனது அரிசி மூட்டையைத் திருப்பி விடும்படி மன்றாடினேன்; அவன் கவனித்தானில்லை. பெட்டியுடன் நான் கரையிலிறக்கப்பட்டேன். அங்கு காப்டன் கிராண்ட் என்பவரை நாங்கள் கண்டு எங்களது கஷ்டநிஷ்டூரங்களைச் சொன்னோம், அவர் எம்மீது அனுதாபங்கொண்டு நல்ல வார்த்தைகள் உரைத்தனர். காவலிலிருந்து காப்பாற்றிய கடவுளை மனமாரத் துதித்து, சிறிதுநேரம் மயங்கி யிருந்தோம். நிற்க எம்முடன் டர்னர் என்னும் ஓர் ஆங்கிலர் இருந்தனர். அவர்க்கு ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் கணக்கில் மூவாயிரம் டாலர் (ரூ.12,000) மூலதனம் ஒரு அமெரிக்கா தேசத்துப் படகின் நிமித்தமாகப் போட்டிருந்தனர். இவரிடம் நாங்கள் அனுப்பப் பெற்றோம். காப்டன் கிராண்டினுடைய சிபார்சின்மேல் நான் டர்னருடைய வீட்டிற்கு அழைத்துப் போகப்பட்டேன். அப்போது அரிசிப் பஞ்சம் பெரும் பஞ்சமாக இருந்தது. ஒரு மூட்டை ரூ.120 கொடுத்தாலும் கிடைப்பது கஷ்டமாயிருந்தது. நாங்கள் கால் வயிறுக்குமேல் சோறு காண முடி

யாதபடி கப்பல்களில் உத்தரவுகள் இருந்தன. மடகாஸ்கர் தீவிற்குக் கடல் வழியே கொண்டு போனபோது, லஸ்கர்கள் எங்களை என்ன பாடு படுத்தினர்! அது கடவுளுக்கே தெரியும். அந்த நாவாய்த் தலைவனிடம் ஒரு பார்ஸியும் ஒரு முஸல்மானும் நான்கு ஆங்கிலருமாகச் சேர்ந்து அவனைக் கொலை செய்யச் சதி செய்வதாகச்சமாசாரம் எட்டவிட்டனர். எங்களை அதற்காகச் கைதிசெய்து கடுமையாகக் கவனிப்பதாகவும் வெருட்டினர். தெய்வாதீனம்! ஆங்கிலர் நால்வரில் ஒருவர்க்குப் பிரஞ்சுபரிபாஷை தெரிந்திருந்ததால் அவர் விஷயங்களைச் சொல்லி நாங்கள் கொலைக்காரர்களல்ல என்பதை ருசுப்படுத்த நாவாய்த் தலைவன் எமது ஸ்வாதந்திரியத்தை எமக்கு அளிக்க இஷ்டங்கொண்டான். இவ்விஷயத்தில், நாங்கள் பட்டபாடு நாயும் படாது. நாங்கள் ஸேஸ்ஸண்டில்ஜ் என்னும் இடத்திற்கு வந்ததும் ஒரு டச்சுப் படகு வங்காளத்திற்குச் செல்லவிருப்பதாக காப்டன் கிராண்ட் தெரிவித்து, அதன் மூலமாக எங்களை வங்காளம் செல்லும்படி சொன்னார். எனக்கோ அப்போது சந்தோஷம் தலை தெரியவில்லை. ஆனால் ராமேசுவரம் போனாலும் சனீசுவரன் விடவில்லையென்றாற்போல அக்கப்பலோட்டி இடமில்லையென்று தடை செய்தான். அப்போது என்னை ஏதாவது ஒரு மூலையில் மூட்டைபோல் பதுங்கியிருக்கும்படி இடங்கொடுத்தால் அதுவே பேருதவியென்று நான் மன்றாடினேன். அம்மானுமி, எனக்கும் முஸல்மானியற்குமாக ரூபாய் 1,600 கேட்டான். ஆனால் மஹானுபாவன் காப்டன் கிராண்டும் அந்தப்பேராசைப் படகுக்காரனுக்கு எங்களுடைய திக்கற்ற நிலைமையைச் சொல்லி அனுதாபங்காட்டுமாறு வேண்டினார். ஆனால் அப்படுபாவி நெஞ்சம், இரும்பினும் இரும்பாகவே யிருந்தது. வேறு விதியில்லையென்று நாங்கள் அப்படகில் ஏறினோம். கல்கத்தாவுக்கு வந்ததும் எங்கள் எல்லோர்க்குமாக நான் ஸிக்கா ரூபாயில் 100, உடனே கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு ஆகியது. ஆனால் அந்த மாயமானுமி அத்தனைரூபாய் கட்டணம் பெற்றும் எமக்குக் கொடுத்த கஷ்டம் இவ்வளவவ்வளவல்ல. என் செய்வது? காலத்திற்கேற்ற கோல மல்லவா கொள்ள வேண்டும்? ஆக இலங்கையைவிட்டு 15 நாள் பட்டினிகிடந்து வாடி வதங்கிக் குளிரில் வடவடத்து மனந் தடுமாறி எழுதமுடியாத வண்ணம் மெதுவாகக் காளிகட்டத்தை அடைந்தோம். அப்போதுதான் என் மனத்தில் எனக்கும் தெரியாது ஒரு குதூஹலம் உண்டாகியது.

இத்தகைய நிலைமையைக் கடந்து கல்கத்தாவை யடைந்ததும், தம்மைச் சுகமே வீடு சேர்த்த மூவாமுதல்வனை முதலில் துதித்து, சின்னாள் ஆனதும் பம்பாய்க்குத் திரும்பினர், இப்படி யெல்லாம் கஷ்டப்பட்டதால் அவர் மனம் சிறிதும் குன்றவில்லை. சிறிது நாளிலேயே மீண்டும் அவர் சீனதேசத்துக்கு யாத்திரை செய்துவந்ததும் பம்பாயிலேயே நிலைத்திருந்தார். இதற்குள் அவரது மதியூகமும், வியாபாரத் தந்திரமும், சுறுசுறுப்பும், வியவஹார ஒழுக்கமும், வியாபாரிகளைத் தேன் மேல் மொய்க்கும் ஈக்களைப்போல் அவரிடம் வரும்படி செய்தன. சின்னாட்குள்ளாகவே கூட்டுறவை முன்னிட்டு அவர் ஒரு வியாபாரம் ஆரம்பித்து பலவித வர்த்தகங்களை நடத்தி எல்லாக் காரியங்களையும் தாமே நேரில் பார்த்துத் தமது நாணயத்திற்குச் சிறிதும் தாழ்வு ஏற்படாதிருக்கும்படியாக உழைத்தனர். அவருடைய சத்திய நிலைமையும், நாணயத்தின் ஒழுங்கும் அவருக்கு மேன்மேலும் புகழ் உண்டாக்கின. பல துளி பெரும் வெள்ளம் என்பதுபோல் அவர் சிறிது சிறிதாகச் செய்த வியாபாரங்களெல்லாம் பலப்பட்டுப் பெரும் பலனைத்தர அவர் பம்பாய் நகரத்துத் தனிகர்களுள் முதல்வராகி வர்த்தகர்களுக்கெல்லாம் திலகமாய் விளங்கா நின்றனர்.

ஜிஜீபாய் கேவலம் செல்வத்தில் ஈடுப்பட்டவரல்ல; அவர் அநியாயத்தில் ஒருநாளும் தலையிட்டதில்லை; அளவுகடந்த வியாபாரங்களை நடத்தியும், கோர்ட் கச்சேரிகள் என்பவைகளை ஒருநாளும் கண்டறியார்; பிறர்க்குச் சாமாதானஞ் செய்யத் தான் செல்வதல்லாமல் தமக்கு ஒருவர் மத்யஸ்தம் செய்யும்படியான நிலைமையில் அவர் ஒரு நாளும் இருந்ததில்லை; இவ்வளவிருந்தும், பொன்மலர் நாற்றமுடைத்து என்று பெரியோர் படித்தவிதம் தாம்பிறரது சுகதுக்கத்திற்கும் தமது நாட்டின் நன்மைக்கும் தம்மாலியன்ற உதவி செய்ய அவர் ஈடுபட்டிருந்தனர்.

"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு."

என்ற வள்ளுவர் வாக்கிற் கொப்பத் தமது பொருள் எவையும் பொது ஜன சவுக்கியத்திற்கே செலவிட அவர் எண்ணங்கொண்டார். அவரது தாளாண்மையின் சிறப்பை, பம்பாய் சூரத்து, நவஸாரி இவையன்றி, குஜராத்திலுள்ள பலவிடங்கள், கண்டாலா, பூனா இந்நாகங்களும் செவ்வனே வெளியிடும். ஆஸ்பத்திரிகளும்



பள்ளிக்கூடங்களும், குளங்களும், வித்யார்சாலைகளும், தர்மசத்திரங்களும், நீர் நிலைகளும், ரஸ்தாக்களும், பொதுக் கிணறுகளும் இவை முதலிய பல்லாயிரம் பொது நலத்துக்குரிய சுகாதாரங்கள் இப்பார்ஸீ மஹானுபாவரது உத்தம் ஔதார்யத்தின் பெருமையை வெள்ளிடைமலைபோல் வெளியிடும். ஜாதி மத பேதமில்லாமல் மேல் கீழ் என்னும் வித்தியாசம் பாராட்டாது, இவர் ஜனங்களுக்குச் செய்த நன்மைகள் அளவற்றன. இவரது பெரும் பிரபாவத்தைக் கேட்டுணர்ந்த மஹாராணி சக்ரவர்த்தினி மஹாகனம் பொருந்திய விக்டோரியா அரசி 1842-ம் வருஷத்தில் இவருக்கு நைட் என்னும் சிறந்தபட்டத்தை அளித்தனர். அப்பட்டத்தைப் பெற்ற முதல் இந்தியர் இவர்தாம். அடுத்த வருஷம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் அவர்க்கு அவர் கொடையை உத்தேசித்து பொன்பதக்க மொன்று ஸன்மானிக்கப்பட்டது. அதன் ஒரு புறத்தில் சுற்றோரத்தில் வைரமணிகள் இழைத்தும் மத்தியில் மஹாராணியாரது உருவம் பதித்தும் மற்றோரிடத்தில் ஸர் ஜேம்ஸெட்ஜீ ஜிஜீபாய் அவர்களின் ஔதார்யம், தேசாபிமானம் இவைகள் பாராட்டப் பெற்றிருந்தன, இதற்குள் இடையே இவருக்கு பாரனட் என்னும் பட்டமும் அளிக்கப்பட்டது, 1885-ம் வருஷத்தில் "பிரீடம் ஆப் தி ஸிடி ஆப் லண்டன்" (Freedom of the City of London) அதாவது லண்டன் நகரத்து ஸ்வாதந்தரியப் பெருமை என்னும் உபசார மரியாதை அவருக்கு அந்நகரத்தின் பட்டண அதிகாரியால் (Mayor) ஸன்மானிக்கப்பட்டது.

ஜிஜீபாய் ஜாதி மதம் பாராட்டாது உதவி செய்பவரென்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம். ஆப்கன் சண்டையில் மலையிடையிலிருக்கும் காபூல் கணவாயிடத்திலிருந்து கணக்கற்ற ஐரோப்பியர்களும் சிப்பாய்களும் உடலும் உயிரும் தத்தம் செய்துகொண்டிருக்கும்போது காப்பாரற்றுத் திக்கற்றுக் கிடந்த இறந்த வீரர்களது மனைவிகளையும் குழந்தைகளையும் காப்பாற்ற ஜிஜீபாய்போல உதவி செய்தவர் எவருமில்லை. 1856-ம் வருஷம் பிரான்ஸ் தேசத்தில் ஸீன் என்னும் நதி, பெருவெள்ளம் எடுத்து, ஊரைப் பாழ் செய்தபோதும் ஜிஜீபாயின் உதாரம் உதவாதிருக்க வில்லை. அவர் அப்போது செய்த உதவியை பிரான்ஸ் தேசத்தில் கொண்டாடாதவர் எவருமில்லை.

அப்புகழே உருவெடுத்ததெனச் சொல்லும்படியாக அப்போதைய பம்பாய் கவர்னர் ஸ்ரீமான் எல்பின்ஸ்டன் பிரபு அவர்களின் தலைமையின்கீழ் 1856-ம் வருஷம் நமது கீர்த்தி வாய்ந்த பாரஸீகரது உருவச்சிலையை அவரது ஔதார ஞாபகார்த்தமாக அமைக்க ஒரு மஹாநாடு கூடியது. ஜனங்களின் விருப்பத்திற்கிசைய ரூபாய் 60,000 செலவிட்டு எழுப்பிய அவ்வுருவச்சிலை இன்றும் அச்சிறந்த பம்பாயின் நகர மண்டபத்திற்கு அழகு செய்து கொண்டிருக்கிறது.

நிற்க, உலக இயற்கையில் தாம்பத்ய ஸுகமும் மற்றைய சுகங்களும் ஒருங்கே அமைவது அருமையினும் அருமை. என்னை?

"இல்லதென் இல்லவள் மாண்பானால்—உள்ளதேன்
இல்லவள் மாணாக்கடை"

அன்றோ? ஆனால் ஜிஜீபாய் மற்றைய விஷயங்களிற் போலவே இவ்விஷயத்திலும் பெரும் பாக்கியசாலியாகவே யிருந்தனர். கண் இரண்டும் ஒன்றையே பார்ப்பதுபோல ஜிஜீபாயும் அவரது மனைவியும் உடலிலன்றி மற்றைய விஷயங்களில் சிறிதும் பேதப்படாது ஒத்து விளங்கினர். யாம் சொல்வது பொய்யன்று, பம்பாய்க்கும் ஸால்ஸட்டுக்கும் போக்குவரத்துக்குத் தகுந்த வழியில்லாமல் ஜனங்கள் படும்பாட்டையும் அந்த இடைவழியே சரியான வாராவதி யில்லாமல் மழைக்காலங்களில் மஹீம் நதியைத் தாண்டமுடியாமல் படகுகள் கவிழ்வதனால் உண்டான உயிர்ச் சேதங்களையும் கண்டு மனம் நொந்து துன்புற்ற அவ்வம்மையார் ஸர்க்காரார் இவ்விதத் தொந்தரவுகளை நீக்குவதற்கு முன்வராமையை விசாரித்தும், அக்காலம் மேற்படி வேலையை ஸர்க்காரார் தொடங்க மனங் கொள்ளாமையையும் உணர்ந்து, தாமே தமது சொந்தச் செலவில் அவ்வாராவதியைக் கட்ட அவ்வம்மையார் முன்வந்தால் யாரே அவரைப் புகழார்? வாராவதிக்கு முதலில் ரூ. 67,000 போதுமென்று மதிக்கப்பட்டது. ஆனால் இத்தொகை செலவிட்டதும் வேலையில் மூன்றில் ஒருபங்கு கூட நடக்கவில்லை. பிறகு லட்சம் வரையும் தொகையை செலவிட்டும் அவ்வாராவதி கட்டி ஆகவில்லை. அந்தச்சமயத்தில் இருந்த ஸர்க்கார்

தலைவர்கள் சீமையிலிருந்த ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் அதிகாரிகளிடமிருந்து ஷை வேலைக்கு வேண்டிய பாக்கித் தொகையைச் செலவிடும்படி தெரிவித்திருந்தனர். ஆனால் அவர்களிட மிருந்து உத்தரவு வருவதற்குத் தாமதம் ஆகுமென்பதை உத்தேசித்து அவ்வம்மையார் மேலும் தமது தொகையை அதிகப்படுத்தி அந்த வாராவதி வேலையைப்பூர்த்தி செய்தனர். லோக ஜனங்களது சுகத்தைத் தமது சுகமாக எண்ணி அவ்வம்மையார் மேற்சொன்ன வாராவதிக்காகப்பணம்தடைபட்ட காலங்களில் தாமணிந்திருந்த ஆபரணங்களையும் களைந்து கொடுத்து உதவியிருக்கும்போது அவ்வம்மையாரது உதார விசேஷத்தைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? மேற்படி வாராவதியைப் பொது ஜனங்களுக்காக ஸர் ஜார்ஜ் ஆர்தர் என்பவர் திறந்த பொழுது மேற்கண்ட விஷயங்களை விவரித்துச் சொல்லிப் புகழ்ந்தது ஒரு பெருமையாகுமா? அன்பு என்கின்ற ஆற்றில் மிதந்தோடும் உயிர்க்கு கைம்மாறு என்னும் ஓடம் அல்ல வேண்டுவது. தானே பிறர்க்கு உதவிசெய்ய ஓடமாய் விளங்கவேண்டு மென்பதல்லவா அதன் அவா?

இவ்விடத்தில் ஸர் ஜேம்ஸெட்ஜீ ஜிஜீபாயின் உதாரத்தைப்பற்றி உயர்ந்த உத்தியோகத்திலிருந்தவர் கூறிய கூற்றிடைக்கேட்ட கேள்வியை கவனிப்பது பொருத்த முடைத்து. அதாவது:—

"நான் உமது மனைவியின் உதாரத்தைக் கவனிக்கும்போது, தெரியாமற் செய்யும் தருமத்தின் பெருமையைக் கண்டேன்; தங்களது பெருமையையும் கண்டேன். நான் இரண்டு வருஷங்களுக்குமுன் மறைந்து பொதிந்து விளங்கும் உமது தருமத்தின் விரிவைக் கணக்கிட நேர்ந்தபோது, 15 லக்ஷத்திற்குக் குறையாமல் தாங்களும் தமது தர்மபத்தினியுமாகப் பொதுஜன ஸேவையின் பொருட்டுச் செலவிட்டதைக் காணும்படி நேர்ந்தது. அப்போது ஓர் எண்ணம் எனக்கு உண்டாயது. உமது தருமத்தையும் ஆங்கில வியாபாரிகள் செய்த தருமத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது,யான் பம்பாய் வியாபாரி ஒருவனை விரும்புவனே யன்றி, வேறு யாரை விரும்புவன்?"

இப்புகழ் வரம்பு கடந்ததன்று என்றே நாம் திடமாகச் சொல்லக்கூடும். நிற்க, 1858-ம் ஹூத்தில் மஹா கனம்பொருந்திய விக்டோரியா மஹாராணியார் ஸர் ஜேம்ஸெட்ஜிக்கு ஆங்கில ஐக்கிய நாட்டுப் பாரோனட் என்னும் பட்டத்தை அளித்தனர். இப்பட்டம் இதுகாறும் ஸ்வதேச ஸமஸ்தான மன்னருக்குங்கூட இந்நாட்டில் அளிக்கப்படவில்லை. ஆக, இகத்தில் அடையக்கூடிய சுகமனைத்தும் பெற்றதும் இத்தரை அவாவிட்டதுபோல அவர் அடுத்த வருஷம் பரலோக சுகத்தை நாடி பரமபதம் அடைந்தனர். அவரது ஆத்மா, அவர் போற்றிவந்த பிரகிருதியின் அவியாச் சுடராகிய அந்த சூர்யனுடைய பிம்பமென்ன இந்திய மனத்துள் விளங்கும் தாழ்மை முதலிய நீசகுணங்களின் இருட்டைக் கழிக்க ஒளிவீசிப் பிரகாசிக்கும் என்பதற்கு என்ன தடை?

வசையொழிய வாழ்வாரே வாழ்வார்; இசையொழிய வாழ்வாரே வாழாதவர்.
—திருக்குறள்.

# கந்தபுராணக் குறிப்புகள்

## GLEANINGS FROM KANDAPURANAM

ஸ்ரீமான் வா. சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள், எம். ஏ.,]

ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிச் செய்த கந்தபுராணம் வாக்கு விசேஷம் பெரிதும் நிரம்பப் பெற்ற தனிநூல் என்பது தமிழ் மக்கள் யாவரும் அறிந்ததே. அந்நூலில் உள்ள இலக்கிய இலக்கண விசேடங்கள் எல்லாம் குருமுகமாகக் கேட்பின் நன்கு புலப்படும். ஆயினும், அதில் முதற்பகுதியில் உள்ள விசேடவாக்கியங்களையும் ஏனைய குறிப்புக்களையும் எளியேன் சிற்றறிவுக் கெட்டின மட்டும் "விவேக போதினி" வாயிலாக வெளிப்படுத்தினல் நலமாயிருக்குமெனக் கருதி எழுதத் துணிந்தேன். பிழையுளதேல் ஆன்றோர் பொறுப்பாராக:

### I. பழமொழிகளும் நீதி வாக்கியங்களும்

1. பேசிடிற் சிறுமை யெல்லாம் பெருமையாலடங்கு [மன்றே.
2. வேறு கொள் புலனை வென்றோர்
மேலைநன் னெறியுய்த்தாலும்
தேறிய உணர்வி லாதோர்
செல்வுழிச்செல்வரன்றே.
3. களிப்பவர் தமக்குமோர் கதி உண்டாகுமோ?
4. எல்லார் செயலும் இறைவன் இயற்றுவதே.



5. என்னுனும் ஒருதவி யாதொருவன் யார்க்கெனினும்
தன்னுன் முடிவதெனில் தானே முடித்தல் நலை;
சொன்னுல் முடித்தல் இடை யாகும்; சொல்லு [இனும்
பனனுண் மறுத்துப்புரிதல்கடைப்பான்மையதே.
6. பொல்லாத பேர்க்கு நன்றி செய்வது தம்முயிர்
போகும் பொருட்டேயன்றோ?
7. வாழ்வும் பொய்யாகிக் கனவுகண்ட கதையா [யிற்றே.
8. மதலை யிற்றுழி நாய்கர் போற்றுயர்க்கடன்மறி [கின்றார்.
9. தஞ்ச மாருளர் தாதையேயல்லது தனயர்க்கே.
10. உருக் கரக்கென மெய்தளர்ந்து.
11. குற்ற முண்டாயினன்றே பொறுப்பது.
12. பெண்ணறி வென்பதேனும் பேதைமை வழி [யன்றோ?
13. அவன்றுள் போற்றி யடையின் நன் கனைத்து [மாகும்
தீயன அகலும் ஈது திண்ணம்.
14. உற்றுழி யுதவி செய்வோர் உலப்புறு தெவை [யும் ஈவோர்
அற்றமில் தவத்தா றுற்றோர் அமர்புரி வீர ராவோர்
மற்றொரு பொருளும் வெஃகார் வருத்தமும் ஓரார் [ஆவி
யிற்றிட. வரினும் எண்ணுர் இனிதென மகிழ்வர் [அன்றே.
15 பெற்றிடுங் குரவரே பிழைத்த மைந்தரைச்
செற்றிடின் எவருள் செய்யற் பாலினோர்?
16. மின்மினி தனையடல் விசய மாகுமே?
17. யாரொடு கூறுவன் ஆரை நோகுவன்
நீருடை முடியினுய் நினது முன்னலால்?
18. சீகர மறிகடற்சென் றுநவ்விசேர் காகமதென்ன
19. தீதினையகற்றவும் திருவை நல்கவும்
தாதைய ரல்லது தனயர்க் காருளர்?
20. உழூந்துருள் கின்ற முன்னர்.
21. காருடங் கண்ட பாந்தட் கணமென. [திற்
22. வீரமும் வலியு மிக்கோ ராயினும் விதிவந் தெய்
பாரிடை வலியி லோரும் படுத்திடப் படுவர்.
23. வலியரு மொருகா லத்தில் வன்மையை யிழப் [பர் ஆற்ற
மெலியருமொருகா லத்தில் வீரராய்த் திகழ்வர் [அன்றே?
24. பட்டவர் தம்மையும் படுப்பரோ.
25. களத்துள், இரிந்துளோரையுந் தொடர்வரோ
சுரர்தம் இனத்தோர்.
26. தீமை யுள்ளன யாவையுந் தந்திடும்; சிறப்புந்
தோமில் செல்வமுங் கெடுக்கும்; நல்லுணர்
வினைத் தொலைக்கும்;
ஏம நன்னெறி தடுத்திருளுய்த்திடும்; இதனுற்
காமமன்றியே ஒரு பகை உண்டுகொல்கருதில்?
27. விளக்கழலுறு பறவையிற் புலர்ந்தார்.
28. சேமத்திரு நிதி பெற்றிடும் இரவோனென.
29. தந்தைசொல் மறுப்பவர்கள்தாயுரை தடுப்போர்
அந்தமறு தேசிகர்தம் ஆணையை யிகந்தோர்
வந்தனைசெய் வேதநெறி மாற்றினர்கள் மாருச்
செந்தழல வாயநிர யத்திடை சேர்வார்.
30. தன்னுரை கொளாத மனை வாழ்க்கையது தன்
வெந்நிரயம்வீழும்வகைபோவிழுமிதம்மா [னின்
அன்னரொடு மேவியமர் ஆடவர் தமக்குப்
பின்னுமொருகூற்றுமுளதோபிணியுமுண்டோ?
31. முதிர்தரு தவமுடை முனிவராயினும்
பொதுவறு திருவொடு பொலிவராயினும்
மதியினராயினும் வலியராயினும்
விதியினை யாவரே வெல்லு நீர்மையார்?
32. தீங்காய் நின்ற செய்வினை யாளர் சிதைவாகிப்
போங்காலத்திற்சேர்ந்தவர்தாமும்போகாரோ?
33. வெருவரு முறை புரி வேந்தை விட்டகல்
திருவொடு பெயர்வதோர் செல்வம் போலவே.
34. உள்ளினுஞ் சுட்டிடும்; உணருங் கேள்வியிற்
கொள்ளினுஞ் சுட்டிடும்; குறுகி மற்றதைத்
தள்ளினுஞ் சுட்டிடும்; தன்மை யீதினுற்
கள்ளினுங் கொடியது காமத் தீயதே.
35. திருவுறு கின்றுழி மகிழ்ந்துந் தீர்வுழி
பருவரல் எய்தியும் பாசந் தன்னிடை
யரிதுணர் கேள்விய ரழுங்கு வார்கொலோ
வருவதுவருமதுமறுக்கலாகுமோ? [டெல்லாம்
36. தந்தைதன் மெலிவுகாணிற் றங்குடித் தலைமை
மைந்தர்கள் பரித்துக் கோடல் வழக்கதாம்
அறனும் அஃதே
37. இன்பம தடைந்தகாலை இனிதென மகிழ்ச்சி
எய்தார்
துன்பம துற்றபோதுந் துன்னெனத் துளங்
கிச்சோரார்
இன்பமுந் துன்பந் தானும் இவ்வுடற் கியை
ந்ததென்றே
முன்புறு தொடர்வை யோர்வார் முழுவதும்
உணர்ந்த நீரார்.
38. வறியவர் செல்வ ராவர்.செல்வர் பின் வறிய
ராவர்
சிறியவர் உயர்ந்தோ ராவர் உயர்ந்துளோர்
சிறியராவர்
முறை முறை நிகழு மீது முன்னையூழ் வினை
யே கண்டாய்
எறிகதிர் வழங்கு ஞாலத்தியற்கையும் இனைய
தன்றோ?
39. தீங்குவந் தடையு மாறும் நன்மைதான் சேரு
மாறும்
தாங்கள் செய் வினையினுலே தத்தமக் காய
அல்லால்
ஆங்கவை பிறரால் வாரா. அமுதநஞ் சிரண்டி
னுக்கும்
ஓங்கிய சுவையின் பேதம் உதவினுர் சிலரு
முண்டோ?

40. பெண்ணுமை நீங்கல் எளிதோ பெரியோர் தமக் கும் ?

41. தாதையர வரளித்த மைந்தர்களை விருப்புறு வர்; தாயர்பெற்ற மாதரார்பாலுவகை செய்திடு வர்; ஈதுலக வழக்கம் என்பார்.

42. யார்க்கும் உள்ளூற்ற பகை யுண்டேற் கேடுள தென் றுரைப்பர்.

43. சார்ந்திடின் உலகமேற் றவத்தினுல் வரம் பேற்றினும் உளதுகொல் பெருமைத் தானதே.

44. யாரும் வாழிய செல்வர்தன்னை நிலையென மதிக்கலாமோ?

45. எம்பிரான் நல்கும் வீடதேயலாற் றுன்பறு மார்க்கம் வேறுண்டோ?

46. பிறப்புறு வைகலைத் தொட்டுப் பின்னரே
பிறப்புறு நாள்வரை யாவர்க் காயினும்
உறப்படு துய்ப்பெலாம் ஊழின் ஊற்றமால்.

47. துய்த்திடுந் திருவினில் வலியிற் சூழ்ச்சியில்
எத்துணைப் பெரியர்தாம் எனினு மேலையோர்
கைத்தொரு வினைசெயக் கருதிற் றம்முடை
மெய்த் துணையோரைமுன் வினவிச்செய்வரால்.

48. தீயழல் வறியதே யெனினும் சீரியோர்
ஒயிது சிறிதென எள்ளற் பாலரோ ?

49. கழிந்திடு பிழையினைக் கருதிச் சாலவுள்
ளழிந்திட லியற்கையன் றறிஞர்க்கு.

50. கீள் கொடு நகங்கொடு கின்றுமொன் றினை
வாள் கொடு தடியுமோ?

51. அறிவிலர்க் குரைப்பவர் அவரிற் பேதையோர்.

52. ஆவது விதியெனின் அனைத்துமாயிடும்
போவது விதியெனின் எவையும் போகுமால்.

53. தேன்மழை யுதவிப் போற்றினும்
கைத்திடல் தவிருமோ காஞ்சிரங்கனி.

54. கொல்லாது சீற்றம் இலதா யிகல் கொன் டுறுதேல்
வெல்லாது கொல்லோ அரிதன்னையும் வேழமெ ல்லாம்.

55. மெய்க்கின்ற இன்பு மறனும் விளையாது வாளா
பொய்க்கின்றவன்கைப் பொருள்வல்லையிற் பேர் வதே போல்

56. மகிழ்ச்சி யீற்றினிற் றுன்புவந் தடைவதோ. வழக்கன்றோ?

57. முற்பகலோர்பழி முடிக்கின் மற்றது
பிற்பகல் தமக்குறும் பெற்றி என்னவே.

58. மாரிநாட், புற்றுறை யரவெனப் புழுங்கு நெஞ்

59. ஆசறு போனகத் தட்டில் சூடுறு [சினன்.
பூசைய தாமென வுடைந்து போயினர்.

60. மேலையின் விதியை யார் வெல்லு நீர்மையார் ?

61. புன்றொழிலாகிய பொய்யும் வாய்மையாம்
ஒன்றொரு பெரும்பயன் உதவுமாயிடின்.

62. குற்றந் தெரிக லைதே குண னென்று கொள்
சுற்றம் மொடுவெற் கெவனுண்டு ? [ளிற்

---

2. இக்கந்தபுராணம் இலக்கண இலக்கிய நுண்மைகளுக்கும் பிரயோகங்களுக்கும் மேற்கோளாகக் காட்டக்கூடிய சிறந்த நூலாதலின், விநாயகர் முதலிய கடவுளைக் குறிக்கும் சொற் றொடர்புகளிற் சில அடியிற்கூறுவாம்:

## I. விநாயகர் திருநாமங்கள்

இபமாமுகப் பிள்ளை
இபமா முகவன்
ஐங்கரக் கடவுள்
கயமுக அவுணற்செற்
கரிமுகத் தேவு [றோன்
கரிமுகவன்
கோட்டிப முகன்
தந்தக்களிற்றுடை முக
த்துப்பிள்ளை
தந்திமா முகன்
தந்திமுக மாமதலை
தந்தியின் முகத்து வள்
ளல்
தாரகப் பிரமமான மாக்
கயமுகத்து வள்ளல்
பிறைசேர் சென்னிமா
கயானனத்து வள்ளல்
மைவரை யனைய மேனி
மதகரி முகத்துத்
தோன்றல்
வேழமா முகனை வென்
றோன்.

## II. முருகர் திருநாமங்கள்

அம்பொன்மால்வரைத் தோகை
அரன்மகன் [மைந்தன்
அயிலேந்து நம்பி
அறுமுக ஐயன்
அறுமுகத் தமலன்
அறுமுகத் தேவதேவன்
அறுமுகத் தேவு
அறுமுகத் தொல்லோன்
அறுமுகப் பண்ணவன்
அறுமுகப் பிள்ளை
அறுமுகம் படைத்த அண்ணல்
அறுமுகமுடைய தேவு
அறுமுகன்
அறுமுகேசன்
ஆடலூற்ற வேற்பண்ணவன்
ஆதியங் கடவுள் மைந்தன்
ஆறிருகையுடைய முருகன்
ஆறுமா முகத்தெம்மையன்
ஆறுமா முகவள்ளல்
ஆறுமுக அண்ணல்
இராறுதோள் படைத்துளான்
இராறு தோளுடைய அண்ணல்
இலையயின் முருகன்
இலைகுலாமயிலுடைப்பகை
இளையன்
இளையவன்
இளையோன்
இறைகண்ணில் வரும் அண்ண
ஈசன் மைந்தன்
ஈராறுபுயத்தன்
ஈருடேவன் முருகன்
உடம்பிடித் தடக்கையோன்
உமை குமாரன்
உமை மகன்
உமையாள் மகன்
எஃகவேற்கைத்தலைத் துக்கடவுள்
எஃகுடையண்ணல்
என்று நல்லிளைஞன்
ஏடுறு நீபத்தண்டா ரிளையவன்



கண்ணில வமிழும் வேலோன்
ஓங்கார மேலைப்பொருண் மைந்
கண்ணுதல் குமரன் [தன்
கதிர்வேலண்ணல்
கந்தக் கடவுள்
கந்தவேள்
கந்தன்
கார்த்திகை காதலன்
குகன்
குமரச் செம்மல்
குமரப் புத்தேள்
குமர மூர்த்தி
குமர வள்ளல்
குவரவேள்
குமரன்
குமரேசன்.
குருதிவேலுடைப் பண்ணவன்
குளகன்
குன்றெறிந்த முருகன்
குன்றெறிபடைக் குரிசில் [யோன்
சூரியவேற்படைகொண்டுடை
கொற்றவேலுடை யண்ணல்
கோக்குமரன்
கோதைவேலுடைக் குமரன்
சண்முகத்தவன்
சண்முகத்தெந்தை
சண்முகன்
சரவணமிசை வருதனயன்
சிவனருண் மதலை
சிவனுமைக்கினிய மைந்தன்
சிவன் மகன் [குமரேசன்
சுடரும் வேற்படைத் தொல்
செங்கதிரயில் வேன்மைந்தன்
செங்கதிர் வேலண்ணல்
செங்கை வேலவன்
செச்சைமொய்ம் புடையசேய்
செய்யவன்
செய்ய வேலுடைச் சேவகன்
செவ்வேள்
செவ்வேற் சேய்
சென்னியா றுடைத் தேவன்
சென்னியா றுடைப் பண்ணவன்
சேய்
சேயோன்
சோதி வேலுடைய வள்ளல்
ஞமலியெம் மடிகள்
ஞமலிஞர்தி
ஞான நாயகன்
தந்தி முகவற்கிளவல்
தனிவேலுடைப் புனிதன்
தாரகற் கடந்த வேற்றடக்கை
திருக்கைவேற் பெருமான் [வீரன்
நாமவேனம்பி
நீடியவேற்படை நிமலன்
நெடுவேலண்ணல்
நெடுவேள் முருகன்
பரசிவன்றனது மைந்தன்
பரஞ்சுடர் குமரன்
பரமன் கான்முளை
பரமன் மைந்தன்
பரம்பொருள் மகன்
பன்னிரு கைத்தல முடையவன்
பன்னிரு செங்கை படைத்துள
பாரி மைந்தன் [சேயோன்
பூழிபுனைந்தவர் பாலகன்
மாலினுக்கரிதா மண்ணல் மாம
முருகவேள் [கன்
முருகன்
முருகேசன்
முன்னோன் மதலை
மூவிரண்டு முகன்
மூவிரு முகத்தவன்
மைந்தன் [ந்தன்
மையுறழ் கண்டத் தண்ணல் மை
வன்னி விழியுடையான் மைந்தன்
விசாகன்
வேலோன்
வேழமாமுகற் கிளவல்
வேற்கை யெம்பிரான்
வேற்படை மொய்ம்பன்
வேற்படை விண்ணவன்

## III. சிவபிரான் திருநாமங்கள் (இனி வரும்.)

---

# நமது சிறு கதை

## OUR SHORT STORY

[ஸ்ரீமதி சீதம்மாள்]

(132-ம் பக்கத் தொடர்ச்சி)

மித்ரியாளு கொஞ்சம் கோபத்தைத் தணித்துக்கொண்டு பேச ஆரம்பித்தாள். ஸோமனை நோக்கி 'அவன் ஒரு நல்ல மனிதனு யிருந்தால் நிர்வாணமாக இருந்திருக்க மாட்டான். என்ன அதிசயம்! உடம்பில் ஒரு உட்சட்டைகூடவா இல்லாமலிருப்பான்? அப்படி அவன் நல்ல மனிதானு யிருந்தால், எங்கேயிருந்து வந்தான் சொல்லு' என்று கேட்டாள்.

உடனே ஸோமன் 'நான் அதை உனக்குச் சொல்வதற்குத்தான் இவ்வளவு நேரம் முயன்றேன். நான் ஆலயத்தின் சமீபம் வரும்பொழுது, இம்மனிதன் நிர்வாணமாய்ப் பனியினுல் விறைத்து நடுக்கிக்கொண்டு உட்கார்ந்துகொண்டிருப்பதைப் பார்த்தேன். கஷ்டகால மிருந்தாலொழிய இக்குளிரில் துணி மணியில்லாமல் எப்படி உட்கார்ந்திருக்க முடியும்? கடவுள் என்னிடம் அவனை அனுப்பியிருக்கிறுர். அல்லது அவன் அழிந்துபோயிருக்கவேண்டும். நான் என்ன செய்வேன்? அவனுக்கு என்ன சம்பவித்ததென்று நாம் எப்படி அறியமுடியும்? நான் அவனுக்கு வஸ்திரங்கொடுத்து, கூடக் கூட்டிக்கொண்டு வந்தேன். மித்ரியாளு! நீ அவ்வளவு கோபித்துக் கொள்ளாதே. பாவம்! பூமியில் பிறக்கும், அல்லது பிறந்திருக்கும், ஜனங்கள் எல்லோருக்

கும் ஒருநாள் சாவு வருமென்பதை ஞாபகத்தில் வை' என்றான்.

இதைக் கேட்டவளவில் மித்ரியானாவுக்குக் கோப வார்த்தைகள் வாயிலிருந்து எழுந்தன. உடனே அப்புதிய மனிதனைப் பார்த்ததும் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்துவிட்டாள். அம்மனிதன் பெஞ்சியின்மேல் ஓர் ஓரத்தில் ஸ்மரணையற்று, கைகளால் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனுடைய கண்கள் மூடியிருந்தன. புருவங்கள் வலியினால் நெரிப்பதுபோலிருந்தன. இவற்றையெல்லாம் பார்த்ததும் மித்ரியானா மௌனமாய் நின்றுவிட்டாள்.

உடனே ஸோமன் 'மித்ரியானா உனக்குக் கடவுள்மேல் அன்பு இல்லையா?' என்று கேட்டான்.

மித்ரியானா இவ்வார்த்தைகளைக் கேட்டவளவில் அப்புதிய மனிதனைப் பார்த்தாள். சடேரென்று அவளுக்கு அம்மனிதனிடம் இரக்கம் உண்டாய்விட்டது. வாசற் பக்கம் போனவள் திரும்பிவந்து அடுப்பண்டைபோய்ப் போசன பதார்த்தங்களைக் கொண்டுவந்து அவர்களிருவருக்கும் வட்டித்தாள். மீதிவைத்திருந்த ரொட்டியையும் கொண்டுவந்து போட்டுவிட்டு, 'உங்களுக்கு வேண்டியவற்றைச் சாப்பிடுங்கள்' என்று சொன்னாள்.

ஸோமன் அம்மனிதனை மேஜையின் பக்கம் கூட்டிக்கொண்டு வந்து 'வாலிபனே நீ ஓரிடத்தில் உட்காரு' என்று சொன்னான். உடனே அவர்கள் போஜனம் செய்யத் தொடங்கினார்கள். மித்ரியானா மேஜையின் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு அப்புதிய மனிதனையே உற்று நோக்கிக்கொண்டிருந்தாள். மித்ரியானாவுக்கு அப்புதிய மனிதனிடம் இரக்கம் பிறந்துவிட்டது. அவனிடம் பக்ஷம் காட்ட ஆரம்பித்தாள்; உடனே அப்புதிய மனிதனுடைய முகம் பிரகாசித்தது. அவனுடைய புருவங்கள் அதற்குமேல் சுருங்கியிருக்கவில்லை. அவன் கண்களைத் திறந்து பிரசன்ன முகத்தோடு மித்ரியானாவைப் பார்த்துச் சிரித்தான். அவர்கள் சாப்பிட்டு முடிந்ததும் அவ்விடத்தையெல்லாம் மித்ரியானா சுத்தி செய்துவிட்டு, அப்புதிய மனிதனைக் கேள்வி கேட்க ஆரம்பித்தாள்.

'நீ எங்கிருந்து வருகிறாய்?'

'நான் இந்தப் பக்கங்களிலிருந்து வந்தவனல்ல?'

'ஆனால் நீ பாதையில் எப்படி வந்திருந்தாய்?'

'நான் அதைப்பற்றிச் சொல்லமுடியாது.'

'யாராவது உன்னிடமிருந்த பொருள்களையெல்லாம் அபகரித்துவிட்டார்களா?'

'அல்ல, கடவுள் என்னை தண்டித்தார்?'

'நீ நிர்வாணமாகவா அவ்விடத்தில் கிடந்தாய்?'

'ஆம், நிர்வாணத்தோடு குளிரால் விறைத்துக்கொண்டு கிடந்தேன். ஸோமன் என்மேல் கருணை கூர்ந்து தன் சட்டையைக் கழற்றி, என்னைப் போட்டுக்கொள்ளச் செய்து இங்கே கூட்டிக்கொண்டு வந்தார். நீங்கள் எனக்கு அன்னபானம் அளித்து இரக்கங் காட்டினீர்கள். உங்களுக்குக் கடவுள் அனுக்ரஹிப்பார்.'

மித்ரியானா எழுந்து, தான் ஒட்டுப்போட்டுத் தைத்துக்கொண்டிருந்த ஸோமனின் உட்சட்டையையும், ஒரு கால்சட்டையையும் கொண்டு வந்து அப்புதிய மனிதனிடம் கொடுத்து, 'அப்பா நீ உட்சட்டை யில்லாமலிருப்பதை நான் பார்த்தேன். அதனால் இவைகளை வாங்கி அணிந்து கொண்டு, சமையலறையிலோ, அல்லது மச்சுள்ளுக்குள்ளோ உனக்கு இஷ்டமான இடத்தில் படுத்துக்கொள்' என்று சொன்னாள். புதியமனிதன் மேல் சட்டையை அவிழ்த்துவிட்டு, உட்சட்டையைப் போட்டுக்கொண்டு மச்சுள்ளுக்குள் போய் படுத்துக்கொண்டான்.

மித்ரியானாவும் எல்லாவற்றையும் சரியாக வைத்து, விளக்கை யணைத்துவிட்டுப் படுத்துக் கொண்டாள். ஆனால் அவளுக்குத் தூக்கம் பிடிக்கவேயில்லை அப்புதிய மனிதனைப் பற்றிய எண்ணம் அவள் மனதைவிட் டகலவில்லை. தான் வைத்திருந்த கடைசிரொட்டித் துண்டு முதலிய ஆகாரமெல்லாம் செலவழிந்து போனதும், பொழுதுவிடிந்தால் சாப்பாட்டிற்கு ஒன்றுமில்லாமலிருப்பதும் அவளுடைய ஞாபகத்தில் வந்தது. இன்னும் உட்சட்டை, கால்சட்டை போயினவேயென்று எண்ணி ரொம்பவும் வருத்தப்பட்டாள்.

ஆனால் அப்புதிய மனிதனுடைய முகம், தான் அவனுக்குப் பரிமாறும்பொழுது எவ்வளவு பிரசன்னமானதென்பது ஞாபகத்திற்கு வர அவளுடைய மனம் சந்தோஷித்தது.



இப்படி இவள் தூக்கம்பிடிக்காமல் புரண்டு கொண்டிருக்கும்பொழுது, ஸோமனும் விழித்திருப்பதைப் பார்த்தாள். அவர்களுக்குள் பின் வருமாறு சம்பாஷணை நடந்தது:—

'ஸோமா.'

'ஏன்?'

'மீந்திருந்த ரொட்டிகளை நீங்கள் சாப்பிட்டுவிட்டீர்கள். அரிசியும் கொஞ்சங்கூட இல்லை. நாளைச் சாப்பாட்டிற்கு நாம் என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. பக்கத்து வீட்டுக்காரரண்டை கடன்வாங்கத்தான் போகவேண்டும்'.

'நாமெல்லோரும் பிழைத்திருந்தால் நாளைச் சாப்பாட்டிற்கு ஏதாவது தேடிக்கொள்ளலாம்' என்று ஸோமன் பதில்சொன்னான். அந்த ஸ்திரீ சற்றுநேரம் பேசாமலிருந்துவிட்டு 'அப்புதிய மனிதன் நல்லவனாயிருப்பானென்றுதான் தோன்றுகிறது. ஆனால், தான் இன்னான் என்பதையாவது எவ்விடமிருந்து வருகிறானென்பதையாவது நமக்கு ஏன் சொல்ல மாட்டேனென்கிறான்?" என்று கேட்டாள்.

'அதற்கு ஏதாவது காரணமிருக்க வேண்டுமென்றுதான் எனக்குத் தோன்றுகிறது.'

'ஸோமா.'

'ஏன்?'

'நாம் தானம் செய்கிறோம். ஆனால் நமக்கு ஏன் ஒருவரும் ஒன்றும் கொடுக்க மாட்டேனென்கிறார்களே?'

இதற்குப் பதில் என்னசொல்லுவதென்பது ஸோமனுக்குத் தெரியாமல், 'பிறகு பேசிக்கொள்வோம். பேச்சை இத்துடன் நிறுத்து. தூக்கம் வருகிறது' என்று சொல்லிவிட்டுத் தூங்க ஆரம்பித்தான்.

## V

காலையில் ஸோமன் எழுந்திருந்தான். குழந்தைகள் நித்திரை செய்துகொண்டிருந்தன. மித்ரியானா கொஞ்சம் ரொட்டிகடன்வாங்குவதற்காகப் பக்கத்துவீட்டிற்குப் போயிருந்தாள். புதிய மனிதன் மித்ரியானா கொடுத்த பழைய கால்சட்டை, உட்சட்டைகளைத் தரித்துக் கொண்டு, பெஞ்சியின்மேல் உட்கார்ந்து உயரப் பார்த்துக்கொண்டே யிருந்தான். அவன் முகம் முந்தின நாளையைவிட பிரசன்னமாகவிருந்தது.

ஸோமன் அவனைப்பார்த்து 'அன்பா! நல்லது; வயிறுக்கு ஆகாரம் வேண்டியிருக்கிறது. தேகத்திற்கோ வஸ்திரம்வேண்டி யிருக்கிறது. அதனால் ஒவ்வொருவரும் ஜீவனத்தின்பொருட்டு வேலைசெய்ய வேண்டியிருக்கிறது; உனக்கு என்ன வேலைதெரியும்' என்று கேட்டான்.

'ஒருவேலையும் எனக்கு செய்யத்தெரியாது.' இதைக் கேட்டதும் ஸோமன் மிகுந்த ஆச்சரியத்தை யடைந்தான். பின்னும் அம்மனிதனைப்பார்த்து, 'மனிதர்கள் ஏதாவது வேலை கற்றுக்கொள்ள இஷ்டப்பட்டால் கற்றுக்கொண்டு விடலாம்' என்றான்.

உடனே அவன், 'மனிதர்களெல்லாரும் வேலை செய்கிறார்கள்; அதனால் நானும் வேலை செய்வேன்' என்றான்.

'உன்னுடைய பெயரென்ன?'

'மைக்கேல்!'

'நல்லது, மைக்கேல்! உன்னைப்பற்றிய சமாசாரம் பேசுவதற்கு நீ இஷ்டப்படா விட்டால், அப்படியேயிரு. அது உன் இஷ்டம். ஆனால் உன் சாப்பாட்டிற்கு வேண்டிய பொருளை நீ சம்பாதிக்க வேண்டும். நான் உனக்குச் சொல்லிக்கொடுக்கும் வேலைகளைக் கற்றுக்கொண்டு செய்தால், நீ இவ்விடத்திலேயே போஜனம் செய்துகொண்டு வசிக்கலாம்.'

'உனக்குக் கடவுள் வெகுமதி யளிக்கட்டும்! நீ கற்றுக்கொடுக்கும் வேலைகளைச் செய்வேன். எப்படிச்செய்வதென்பதை எனக்குக் கற்றுக்கொடு' என்று கேட்டான்.

ஸோமன் நூல் இழையை யெடுத்துத் தன் கட்டை விரலில் சுற்றிக்கொண்டு அதைத் திரிக்க ஆரம்பித்து, 'இது சுலபந்தான், பார்' என்றான்.

மைக்கேல் அவன் செய்வதைப் பார்த்துக் கொண்டேயிருந்து, அதேமாதிரி தானுமிழையெடுத்து நூலை முறுக்க ஆரம்பித்தான். ஸோமன் நூல் திரிக்கிற விதத்தைக் காண்பித்தான். மைக்கேல், அதை நன்றாகக் கற்றுக் கொண்டான். ஸோமன் எந்த வேலையைக் காண்பித்தாலும் உடனே அவைகளை யெல்லாம் கற்றுக் கொண்டான். இரண்டு மூன்று நாட்களில், வாழ்நாட்முழுவதும் ஜோடு தைத்திருந்தவனைப்போலத் தைக்க ஆரம்பித்துவிட்டான். அவன் வேலைசெய்வதை நிறுத்து

வதேயில்லை. சாப்பாடு மிகவும் குறைச்சலாய்ச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். வேலைகளெல்லாம் முடிந்தபிறகு மௌனமாய் ஆகாயத்தையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருப்பான். வீதிக்குள் அவன் போவது மிகவும் அரிது. அவசியமாயிருக்கும்பொழுதுதான் பேசுவான். தமாஷாகளோ, அல்லது சிரிப்போ, இடையிலே கிடையாது. அவன் வந்த தினத்தன்று மாலை, மித்ரியானா அவர்களுக்குச் சாப்பாடு போட்டபொழுது, அவன் நகைத்து முகம் பிரசன்னமானதைத்தவிர வேறு ஒரு நாளும் அவன் சிரித்ததேயில்லை.

## VI

நாள், வாரம், மாதம் இப்படி ஒரு வருஷம் ஆயிற்று. மைக்கேல் ஸோமனிடம் வேலை செய்து வசித்துக் கொண்டிருந்தான். அவனுடைய கீர்த்தி ஊரெங்கும் பரவியது. ஜனங்களெல்லாரும் ஸோமனுடைய வேலைக்காரன் மைக்கேலைப்போல், சுத்தமாயும், அழகாயும், பலமாயும் வேறு ஒருவரும் ஜோடுதைக்க முடியாதென்று சொல்ல ஆரம்பித்தார்கள். அக்கிராமத்தின் சுற்றுப் பக்கங்களிலுள்ள ஜனங்களெல்லோரும் ஸோமனிடத்திலேயே ஜோடு தைக்கக் கொடுக்க வந்தார்கள். அதனால் ஸோமன் கொஞ்ச நாளைக்குள் நல்லஸ்திதிக்கு வர ஆரம்பித்தான். குளிர்காலத்தில் ஒரு நாள் ஸோமனும் மைக்கேலும் ஜோடு தைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்த பொழுது, மணிகளோடுகூடிய மூன்று குதிரைகள் பூட்டப்பட்ட ஓர் அழகிய வில்வண்டி அக்குடிசையண்டை வந்தது. அவர்கள் ஜன்னலின் வழியாக எட்டிப்பார்த்தார்கள். அவர்களுடைய வாசலண்டை வண்டி நின்றது. நல்ல சுத்தமான உடை தரித்துக்கொண்டிருந்த ஓர் வேலைக்காரன் வண்டிப் பெட்டியிலிருந்து கீழே குதித்து வண்டியின் கதவைத் திறந்தான். மிகவும் உயர்ந்த உடைகள் தரித்துக்கொண்டிருந்த ஒரு ப்ரபு வண்டிக்குள்ளிருந்து கீழிறங்கி ஸோமனுடைய வீட்டிற்குள் நடந்துவந்தான் உடனே. மித்ரியானா ஓடிவந்து கதவை நன்றாகத் திறந்தாள். அப்பிரபு, உடம்பை வளைத்து நன்றாகக் குனிந்து அக்குடிசைக்குட் பிரவேசித்தான். உட்சென்றதும் தலையை நிமிர்ந்தான். அவன் தலை கிட்டத்தட்ட உத்திரத்தை எட்டும்போலிருந்தது. அவ்வறை அவனுக்குத்தான் சரியாயிருக்கும் போல் தோன்றிற்று. ஸோமன் எழுந்து ஆச்சரியத்தோடு அப்பிரபுவினண்டைபோய்த் தலை வணங்கினான்; ஏனென்றால் அப்பிரபுவைப்போல ஒருவரையும் இதற்கு முன்னால் அவன் பார்த்ததேயில்லை. ஸோமன் இளைத்த உடம்புடனிருந்தான். மைக்கேலோ மிகவும் ஒல்லியாகவிருந்தான். மித்ரியானாவோ எலும்புந் தோலுமாக விருந்தாள். இப்பிரபுவோவெனில் வேறொரு உலகத்து மனிதனோ வென்று யாவரும் ஐயுறும்படி இருந்தான்.

அப்பிரபு சிவந்த முகத்தையும் மிகுந்த ஸ்தூலசரீரத்தை யுடையவராயும் ஓர் காளைமாட்டின் கழுத்தைப் போன்ற கழுத்தும், எல்லாம் சேர்ந்து இரும்பினாற் செய்த தேகத்தைப்போல் அவ்வளவு திடமான சரீரத்தையும் பெற்றிருந்தான்.

அவன் தன் மேலங்கியைக் கழற்றிவிட்டுப் பெஞ்சியின் மேல் உட்கார்ந்துகொண்டு, "இங்கே ஜோடு தைக்கிறவர்களுடைய எஜமானன் யார்?" என்று கேட்டான்.

உடனே ஸோமன், 'நான் தான், உங்களுடைய ஊழியன்' என்று சொல்லிக்கொண்டு பக்கத்தில் வந்து நின்றான்.

அப்பொழுது அப்பிரபு 'ஏ முருகா' என்று தன் வேலையாளைக் கூப்பிட்டு 'அந்தத் தோலை எடுத்துக் கொண்டுவா' என்று சொன்னான். வேலையாள் ஓடிப்போய் வண்டியிலிருந்த தோலைக் கொண்டுவந்து கொடுத்தான். அப்பிரபு அம்மூட்டையை வாங்கி மேசையின் மேல் வைத்துவிட்டு 'அதைப் பிரி' என்றான். உடனே வேலையாள் அம்மூட்டையை அவிழ்த்தான். அப்பிரபு அந்தத் தோலைக் காண்பித்துக்கொண்டு 'இதோ பார் சக்கிலியனே' இத்தோலைப் பார்த்தாயா?' என்று கேட்டான்.

'ஆம் தங்கள் உத்தரவின்படியே.'

'ஆனால் இந்தத் தோல் எந்த மாதிரியானதென்று உனக்குத் தெரியுமா?'

ஸோமன் அத்தோலைத் தொட்டுப் பார்த்துவிட்டு, இது ரொம்பவும் நல்ல தோலாயிருக்கிறது' என்று சொன்னான்.

'நல்லதென்று மாத்திரம் சொல்லுகிறாயா? ஏன்? நீ மடையன். உன் வாழ்நாட்களில் இதற்குமுன் இம்மாதிரியான தோலை எப்பொழுதாவது பார்த்திருக்கிறாயா? இதுவெளிநாட்டி



லிருந்து வந்திருக்கிறது. இதனுடைய விலை 35 ரூபாய்' என்றான்.

ஸோமன் பயத்துடன் 'நான் இந்த மாதிரித் தோலை எங்கும் பார்த்ததில்லை' என்று சொன்னான்.

'அப்படிச் சொல்' இப்பொழுது எனக்கு நீ ஒரு ஜோடி ஜோடுகள் செய்ய முடியுமா?'

'ஆ ஹா! உங்களுடைய ஊழியனாகிய நான் செய்யமுடியும்'.

அப்பொழுது அப்பிரபு மறுபடியும் அவனைப் பார்த்து 'உனக்கு முடியுமா? நல்லது நீ யாருக்காக ஜோடு செய்கிறாயென்பதும், தோல் எந்த விதத்தைச் சேர்ந்தது என்பதும் ஞாபகத்திலிருக்கட்டும். ஜோடு அழுத்தமாயும், ஒருவருஷம் வரையில் பழுதாகாமலும், உருக் குலையாமலும் தையல் விடாமலுமிருக்க வேண்டும். உன்னால் அப்படிச் செய்வதற்கு முடியுமானால், தோலை வாங்கிக்கொண்டு செய். அப்படி முடியாத பக்ஷத்தில் ஏற்றுக்கொள்ளாமல், சொல்லிவிடு. இப்பொழுதே உனக்கு எச்சரிக்கை செய்கிறேன். ஒரு வருஷத்திற்குள் ஜோடு தையல் பிரிந்தோ, அல்லது உருவங் குலைந்தோபோனால் உன்னைத் தண்டிப்பேன். நீ அவைகளைத் திருத்தமாகச் செய்திருந்தால் உன் வேலைக்கு மாத்திரம் 15-ரூபாய் கொடுப்பேன்" என்றான்.

ஸோமனுக்குப் பயத்தினால் என்னசொல்லுவதென்று தெரியவில்லை. அவன் மைக்கேலைப் பார்த்து, மெதுவாக சைகையினால் 'நான் வேலை ஏற்றுக்கொள்ளலாமா?' என்று கேட்டான். 'சரி, அதை எடுத்துக்கொள்' என்று தலையை யசைத்தான்.

மைக்கேல் சொன்னதின்பேரில் ஸோமன் ஜோடுகளைச் நன்றாகச் செய்வதாகவும் ஒரு வருஷம் அவைகள் அப்படியே யிருக்கும்படி செய்வதாகவும் ஒப்புக்கொண்டான். உடனே அப்பிரபு வேலையாளைக் கூப்பிட்டுத் தன் கால்களின் ஜோடுகளைக் கழற்றச் சொன்னான். அவன் அப்படியே செய்தான்.

அப்பிரபு ஸோமனை நோக்கி 'என் அளவையெடுத்துக்கொள்' என்று சொன்னான். ஸோமன் ஓர் காகிதத்துண்டைக் கொண்டுவந்து அளக்க ஆரம்பித்தான். 17 அங்குல நீளமும், குதிக்கால் முதலிய எல்லாவற்றையும் அளந்துவிட்டு, கணுக்கால் சதையை அளக்க ஆரம்பித்தான். அவன் வைத்திருந்த கடிதம் அளவுக்குப் போறவில்லை; கணுக்கால் சதை உத்தரம் போன்றிருந்தது.

'காலுக்குப் போறாமல் பிடித்தமாயிருக்கப் போகிறது ஜாக்கிரதை' என்றான் பிரபு.

ஸோமன் வேறு கடிதம் கொண்டுவந்து அளவை யெடுத்துக்கொண்டான்.

பிறகு அப்பிரபு, மேல் ஜோட்டைச்சரியாக இழுத்துப்போட்டுக் கொண்டே அவ்வறையைச் சுற்றிப்பார்த்தான்.

'மைக்கேலைப் பார்த்துவிட்டு அங்கேயிருப்பது யார்?' என்று ஸோமனைக் கேட்டான்.

'அவன் ஜோடுகள் தைப்பதில் நன்றாகத் தேர்ந்த என்னுடைய வேலைக்காரன்' என்றான்.

'அப்பிரபு மைக்கேலைப் பார்த்து, எனக்கு ஒரு வருஷம் வரையில் போட்டுக்கொள்ளுவதற்குச் சரியாக வரவேண்டுமென்பதை ஞாபகத்தில் வை' என்றான். ஸோமனும் மைக்கேலைப் பார்த்தான். மைக்கேல் அப்பிரபுவைப் பார்க்கவில்லை; ஆனால் அப்பிரபுவின் பின் பக்கம் யாராவது இருந்தால் பார்ப்பது போல ஒரு மூலையைப் பார்த்துக்கொண்டிருந்தான்; மைக்கேல் மென்மேலும் பார்த்துக்கொண்டே சடேரென்று சிரித்தான். உடனே அவனுடையமுகத்தில் ஓர் ஒளி உண்டாயிற்று.

உடனே பிரபு 'என்ன பல்லை இளிக்கிறாய்? மடையா. சொன்ன சமயத்தில் ஜோடுகளை நன்றாக தைத்துக் கொடுக்கவேண்டும்' என்று இடி இடித்ததுபோல் சொன்னான்.

'சரியான சமயத்தில் ஜோடுகள் தயாராகும்' என்று மைக்கேல் பதில் சொன்னான்.

'அது நினைவிலிருக்கட்டும்' என்று சொல்லிவிட்டு, ஜோடுகளையும், மேல் சட்டைகளையும் வேலையாள் கொடுக்கத் தரித்துக்கொண்டு, வாசற்படியண்டை போனான். ஆனால் குனிந்துபோக மறந்து போய்விட்டான். நிலைவாசற்படி அவனுடைய தலையில் இடித்தது. அவன் திட்டிக்கொண்டே தலையைத் தடவிக்கொண்டு வண்டியிற்போய் உட்கார்ந்தான். வண்டியும் உடனே ஓடத்தொடங்கிற்று.

அப்பிரபு போனதும், ஸோமன் 'அம்மனிதனுடைய ஆகிருதியைப்பார்த்தாயா? இரும்புச் சம்மட்டியால் அடித்தால்கூட அவனைக்

கொல்லமுடியாது அவன் கிட்டத்தட்ட வாசற் படியைத் தள்ளிவிட இருந்தான். ஆனால் அந்த அடி அவனுக்கு ஒரு பொருட்டாயிருக்காது' என்றான்.

மித்ரியானா, 'அவன் நின்று, உண்டு, சுகஜீவியாக இருக்கும்பொழுது அவ்வளவு பலமாக ஏன் இருக்கக்கூடாது? சாவு அப்படிப்பட்ட மலையை எப்படி அசைக்கமுடியும்' என்றாள்.

## VII

அப்பொழுது ஸோமன் மைக்கேலைப் பார்த்து, நல்லது நாம் வேலை செய்ய ஆரம்பிக்கவேண்டும். வேலை செய்யும் பொழுது ரொம்பவும் ஜாக்ரதையாக இருக்கவேண்டும். இல்லா விட்டால் கஷ்டத்திற்குள்ளாவோம். தோல் மிகவும் அருமையானது. அப்பிரபுவோ பொறுமையில்லாதவன். நாம் தப்புவிழாமல் சரியாகச் செய்யவேண்டும். என் கண்களைவிட உன் கண்கள் சுத்தமாயும், உன்னுடைய கைகள் சலனமற்றுச் சுறுசுறுப்பாயுமிருப்பதால் இந்த அளவை / வாங்கிக்கொண்டு, தோலைச் சரியாக முழு ஜோடுக்கு வெட்டு. நான் செவ்வையாகத் தைத்து முடிக்கிறேன்' என்றான். மைக்கேல் 'சரி' என்று சொல்லி அத்தோலை வாங்கி மேசையின்மேல் நன்றாக விரித்து, அதை இரண்டாக மடித்து, ஓர் கத்தியையெடுத்துக்கொண்டு வெட்டுகிறதற்கு ஆரம்பித்தான். மித்ரியானா அவன் வெட்டுவதையெல்லாம் பார்த்துக்கொண்டேயிருந்தாள். அவன் வெட்டுவதைப் பார்த்ததும் ஆச்சரியப் பட்டாள். ஜோடுகள் தைக்கும் பொழுது, வெட்டும் பொழுதெல்லாம் அவள் பார்த்துக்கொண்டிருப்பது வழக்கம்.

மைக்கேல், ஜோடுக்குத் தோலை வெட்டாமல் வட்டமாக வெட்டுவதை மிகுந்த ஆச்சரியத்துடன் உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். அவள் ஏதோ சொல்வதற்கு இஷ்டப்பட்டாள். ஆனால் தனக்குத்தானே அவள் 'அப்பிரபுவினுடைய ஜோடு எந்த விதமோ அது எனக்குத் தெரியாமலிருக்கலாம். இன்னும் என்னைவிட மைக்கேல் நன்றாக அறிந்தவன். அதனால் நான் அதில் பிரவேசிக்கக் கூடாது' என்று பேசாமலிருந்துவிட்டாள். மைக்கேல் அத்தோலை வெட்டின பிறகு, நூலையெடுத்துக்கொண்டு தைக்க ஆரம்பித்தான். ஜோடுக்குத் தைப்பது போல இரு பக்கங்களையும் சேர்த்துத் தைக்காமல் மெதுவான பாதரட்சைக்குத் தைப்பது போல ஒரு பக்கத்தை மாத்திரம் தைத்தான். இதைப் பார்த்ததும், மித்ரியானா மறுபடியும் மிகுந்த ஆச்சரியத்தை யடைந்தாள். ஆனால் அவனுக்குத் தெரியாதது நமக்கு என்ன தெரியுமென்று பேசாமலிருந்து விட்டாள். மைக்கேல் மத்தியான வேளைவரையில் எழாமல் தைத்து முடித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது ஸோமன் பகற் போஜனத்துக்கு எழுந்தான். சுற்றிப் பார்த்தபொழுது மைக்கேல், பிரபுவினுடைய தோலில் மெதுவான பாதரட்சை செய்துக்கொண்டிருப்பதைப் பார்த்தான். ஆ! ஐயோ! என்று மனவருத்தமுற்று தனக்குள்ளேயே பின்வருமாறு எண்ணலானான்:—

ஒரு வருஷம் முழுவதும் என்னோடு வேலை செய்துகொண்டு ஒரு தப்புக்கூட செய்யாமருந்தவன் இப்படிச் செய்துவிட்டானே! இதற்கு முன் ஒரு தப்புக்கூட ஒரு போதும் செய்ததில்லையே. இப்பொழுது ஆபத்துக்கிடமான தப்பு செய்துவிட்டானே. அப்பிரபு நல்ல கெட்டி முழுஜோடாகவும், முன்புறம் முழுவதும் விளிம்புகட்டி, கெட்டியாக விருக்கும்படி உத்தரவு செய்தானே. அதற்கு நேர் விரோதமாக மைக்கேல் ஒரே தோலால் மெதுவான பாதரட்சையாகத் தைத்துவிட்டானே; தோலெல்லாம் வீணாயினவே' என்று எண்ணித் துயருற்றான். மைக்கேலைப் பார்த்து, 'சினேகிதா! என்ன காரியம் செய்துவிட்டாய்? நீ என்னை நாசமாக்கினாயே! அப்பிரபுவினுடைய உத்தரவு முழுஜோடுகளுக்கென்று நீ அறிவாயே; அறிந்திருந்தும், நீ என்ன இப்படிச் செய்துவிட்டாய்!'

இப்படி ஸோமன் மைக்கேலை நிந்தித்துக்கொண்டிருக்கிறபொழுது, 'டிங், டிங்' என்ற மணிச்சப்தமும், யாரோ வாசற்கதவைத் தட்டுகிற சப்தமும் கேட்டது. அவர்கள் ஜன்னலின் வழியாகக் கவனித்தார்கள். ஒரு மனிதன் குதிரையிலிருந்து இறங்கி, குதிரையைக் கட்டுவதைப் பார்த்தார்கள். அவர்கள் கதவைத்திறந்ததும், ஜோடு தைக்கக்கொடுத்த பிரபுவுடன் வந்த வேலைக்காரன் உள்ளே நுழைந்தான்.

(தொடரும்.)



# மாதவீகங்கணம்

[ஸ்ரீமான் வெ. கா. ராமநாதன், பீ.ஏ., பி.எல்.]

(137-ம் பக்கத் தொடர்ச்சி.)

“என்ன உருவமா! அவளுடைய தங்கையைப் போலிருந்ததாம். அப்போது அரண்மனையில் ப்ரதான பேடி இருக்கிறானே, அவன்தான் அதை முதல் முதல் பார்த்தானாம். உடனே கோரான் க்ரந்தத்திலிருந்து சில வாக்யங்கள் எடுத்து வரையப்பட்டுள்ள ஒரு பட்டாக்கத்தியை எடுத்து வீசவே, அப்பேய் புகையாக மாறி மறைந்துவிட்டதாம்.”

அவ்வாலிபன் சொல்லும் பாட்டிக்கதைகளையெல்லாம் நரேந்த்ரன் இமை கொட்டாமல் கவனித்துக் கேட்டு வந்தான். இந்தக் கதையைக் கேட்டவுடன், அவனையும் அறியாமலே அவன் பலமாய் நகைக்க, உட்கார்ந்திருந்த கட்டில் குலுங்கலாயிற்று. அவனுடைய சிரிப்பு அடங்கி ஸ்வயநிலைமை வரச் சிறிது நேரமாயிற்று.

யஜமானர் ஒருவாறு தம் சிரிப்பையெல்லாம் அடக்கிப் பழைய நிலைமைக்கு வந்தவுடன், அவ்வாலிபன் மறுபடியும் பேசத் தொடங்னான். “ப்ரபூ கதையை முற்ற முடியக் கேளும். அப்புறம் சொல்வீர்கள், சிரிப்பதா அல்லது வேறு என்ன செய்வது என்னும் விஷயம். உடன் வந்த பேய் மாயமாய் மறைந்துவிட ஜெலிகா தனித்து உள்ளே சென்றாள். உள்ளே பாரஸீஹமாதின் க்ருஹத்தை யடைந்ததும்”

“பாரஸீஹமாது யார்? பீகம் மிஹ்ருந்நிஸாவா?”

“ஆம், ஜெலிகா பீகத்தின் அறைக்குட்புகுந்ததும் அப்பேய் மறுபடியும் இம்முறை ஒரு கீழ் நாட்டு யௌவன வீரதீர புருஷனுடைய ரூபங்கொண்டு அவள் பக்கத்தில் வந்து நின்றது.”

இப்போது சிரிப்பதற்கே ஹேதுவில்லை. அரண்மனை ஜனானவுக்குள் ஓர் அந்நியபுருஷன் ப்ரவேசித்தானென்ற வதந்தி அரண்மனைப் புறங்களிலிருந்து பிறந்து உலவத் தலைப்பட்டால் ராஜஸ்தானத்திலாயினும் ஸரி, வங்காளத்திலாயினும் ஸரி, எங்கிருந்தாலும் அது நரேந்த்ரன் தலைக்கு உலைதான். இந்த பயம் அதிகரிக்க நரேந்த்ரன் குரலெழும்பாதவனாய், “அப்புறம் மேலே” என்று ஹீனஸ்வரமாய்த் தலையை அசைத்தான்.

சற்றும் முகமாவது குரலாவது மாறுபடாமல் அச்சிறுவன் ஒன்றையும் கவனியாதவன்போல் சொல்லிக்கொண்டே போனான். “ப்ரபூ, அந்தக் கீழ்நாட்டு வீரபுருஷனுடைய முகத்தில் என்ன கம்பீரம்! என்ன முகத்தோற்றம்! அந்தப் பெருந்தன்மையை யாரால் எடுத்துரைக்க முடியும்! என்ன நிஜ ஸ்வரூபம்! நிஷ்களங்கமான ஹ்ருதயம்! அந்தத் திடசித்தம் யாருக்குண்டு? அப்பேர்ப்பட்ட யௌவன புருஷன் ஜெலிகாவின் கரத்தை அன்பாய்ப் பற்றி ஆதரவாய்ப் பேசலுற்றான்.

“ஆனால் அந்தப் பாரஸீஹ ஸ்த்ரீயோ ஸாமான்யமானவளல்லள். மஹா ஸாமர்த்யக்காரி, தன்முன் நிற்பவர்கள் நரராயிருந்தாலும் சுரராயிருந்தாலும் ஸரி, அவர்களுடைய மனக்கிளர்ச்சியையும் உள்ளத்தினழகையும் நொடிப்பொழுதில் கண்டறியும் ஆற்றலுடையவள். அவ்வீரனைக் கண்ணுற்றவுடன் அவள், 'அப்பா. நீ சுத்தவீரன், மெய்க்காதலன், தற்காலம் உன் மனது ஸ்வதேசம் சென்றிருக்கிறதுபோலும்' என்று கேட்டாள்.”

தன் கால்மாட்டில் கைகட்டிப் பணிவாய் உட்கார்ந்திருக்கும் அந்தச் சிறுபையன் இவ்வாறெல்லாம் பேசுவதைக் கேட்டு நரேந்த்ரனுக்கு அதிசயமும், மனதில் ஒரு திகிலுமுண்டாயிற்று. மங்கிய விளக்கொளியில் அவ்வாலிபனுடைய முகத்தை உற்றுவுற்றுப் பார்க்கலானான். உண்மையில் அவன் பிச்சைக்காரப் பையன்தானா? ஒன்றுமறியாத இளம் பிள்ளையைப்போல் தோற்றுகிறானே! நிஜந்தானா? என்று இப்பேர்ப்பட்ட ஸந்தேஹங்கள் உண்டாயின. இவனுக்கு இவ்வளவு மட்டுந்தான் தெரியுமா? இன்னும் ஏதாவது விசேஷமாய்த் தெரிந்திருக்குமா? இப்போது கூறிய விஷயங்கள் இவனுக்கு எவ்வாறு தெரியும்? ஆகாயவாணி வந்து சொல்லிற்றா? அல்லது ஜெலிகாவினிடமிருந்து தெரிந்துகொண்டானா?

சிறுவன் முகத்தில் ஒருவித மாறுதலுமில்லை; சிலைபோல் ஒரேவிதத் தோற்றத்துடனிருந்தது. அவனது உள்ள மாறுபாடுகளை வெளியில் தெரிந்து கொள்வதற்கு ஸாத்யமாயில்லை. அவன் யாதுமறியாதவனாய்ப் பரம

யோக்யனைப்போல் குனிந்த தலை குனிந்தபடி வீணையை மீட்டிக்கொண்டிருந்தான்.

"ஜம்ஷீத், ஆகட்டும். அப்புறம் என்னென்ன நடந்தது சொல்? நீ எடுத்த கதையைப் பூர்த்தியாய்ச் சொல்லிவிடு. இவ்வளவு தூரஞ் சொல்லிய பின்னர் கடைசிவரையில் கேட்டுவிட்டுத்தான் போகவேண்டும்."

"ப்ரபூ, இன்னும் ஒன்றும் அதிகமாயில்லை. அவ்வீரன் மறுபடியும் வெண்புகை ரூபமாய் மறைந்து விட்டான். அன்றிரவே ஜெலிகாவும் அரண்மனையினின்று ஓட்டம்பிடித்தாள். மறுநாட்காலையில் பார்க்கும்போது ப்ரதானபேடி நல்ல காயம்பட்டு உடம்பெல்லாம் ரக்தக் களறியாய் விழுந்து கிடந்தான்."

நரேந்த்ரனுக்கு உடம்பெல்லாம் வியர்த்தது, முகத்தில் ஈயாடவில்லை. அவன் எழுந்து வெளியே சென்றான்.

சுற்றுப்பக்கம் மரஞ்செடிகள் விசேஷமாய்க் கிடையாது. எங்கு பார்த்தாலும் பர்வத சிகரங்களும் கற்பாறைகளுந்தான் நிறைந்திருந்தன. நடுநடுவே இரண்டொரு வேலமரங்கள் ஆங்காங்கு பரவிக் கிடந்தன. இம்மலைப்ரதேசத்தில் அச்சமயம் ஓவென்ற சப்தத்துடன் காற்று பலமாய் வீசிக்கொண்டிருந்தது; ஆகாயத்தில் நக்ஷத்ரங்கள் மாத்திரமே ப்ரகாசித்துக் கொண்டிருந்தன. நிலவு வெளிச்சம் கிடையாது. காடாந்தகாரம். பார்ப்பதற்குப் பயங்கரமாயிருந்தது. கூடாரத்திற்குச் சிறிது தூரத்தில் காவற்காரர்கள் நின்றிருந்தார்கள். கூடாரத்துள்ளிருந்து நரேந்த்ரன் என்றைக்கும் கேட்டனுபவித்திராத அவ்வளவு கர்ணாம்ருதமான வீணாகானம் எழும்பியது.

அந்நள்ளிருள் நிசியின் நிச்சப்தத்தால் சற்று மனவமைதி யடைந்து மனதைத் தைர்யப்படுத்திக்கொண்டு நரேந்த்ரன் கூடாரத்திற்குட் சென்று, அச்சிறுவனை யழைத்துத் தன் பக்கம் உட்காரவைத்து, "குழந்தாய், நீ சொல்லியதொன்றும் எனக்கு ஸரியாய்ப் பொருட்படவில்லை. உன் பேய்களும் பிசாசுகளும் ஆகாயவாணிக் கதைகளும் ஒன்றும் என்னால் எளிதில் அர்த்தம் செய்து கொள்ளக் கூடவில்லை, அவற்றைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்றும் எனக்குக் கவலையில்லை. ஆனால் நான் சொல்வது ஒன்றைமாத்ரம் நீ கவனித்து அதன்படி ஜாக்ரதையாய் நடந்துகொள்ளவேண்டும்.

"குழந்தாய், நீ நெருப்புடன் விளையாடுகிறாய். அதன் ஸ்வபாவம் இன்னும் உனக்குப் புலப்படவில்லை, இளங்கன்று பயமறியாதென நீ பேசுகிறாய். இன்றிரவு நீ என்னிடம் கூறிய விஷயங்களைப் பிறரெவருடனாவது சொல்லியிருப்பாயானால் உன் தலை மாத்ரமில்லாமல், உடன் யாராவது இன்னொருவர் தலையும் உருண்டு போயிருக்கும். அரண்மனை அந்தப்புரத்திற்குள் கீழ்த்திசை வீரன் புகுந்தானென்ற கட்டுக்கதையை அடியோடு மறந்துவிடு. சக்ரவர்த்தியவர்களும் அவருடைய மக்களும் தவிர்த்துப் பிறிதெவரும் ஜனானாவுக்குள் கால்வைக்க அநுமதி கிடையாது. ஆகாயவாணி மாயமாய்ப் போயிற்றென்ற கதையையெல்லாம் விட்டுவிடு. இப்படி யுக்தாயுக்தம் தெரியாமல் வாய்க்கு வந்தபடி பேசிப் பலர் இதற்குமுன் தம் ப்ராணனைப் பறிகொடுத்திருக்கின்றனர்; கவனமிருக்கட்டும்.

"யுத்தகளத்தில் அடிபட்டு கீழ்த்திசை வீரனொருவன் அரண்மனை வெளிப்ராகாரத்துள் கொண்டுவரப்பட்டான். நீ கூறிய அந்தத் தார்த்தரி அடிமைப் பெண்தான் அவனுக்குச் சுச்ரூஷை செய்துவந்தாள். அவள் 'நிர்த்தோஷி, ஸத்யவதி. அவளைப்பற்றி அரண்மனை அடிமைப் பெண்கள் கூறுவதனைத்தும் வெறும் பொய் வார்த்தை. சிறிதும் நம்பக் கூடியவையல்ல, அப்பழிவார்த்தைகளை யெல்லாம் மறந்துவிடு.

"அந்தத் தார்த்தரிப்பெண் அடிமை நீங்குவது எக்காலமென ஏங்கித் திகைத்தனள். அவள் நிலைமையைக் கண்டு மனம்பொறாத அவ்வீரன் அவளை அப்பந்தத்தினின்றும் விடுவித்தான். இதிலொன்றும் அதிசயமில்லை. பெண்ணென்றால் பேயுமிரங்கு மென்று சொல்வதில்லையா? நடந்தது இவ்வளவுதான். மற்றதெல்லாம் சுத்தப் பொய்வார்த்தை. கடைசியாய் ஒரு விஷயம், அந்த ரஹஸ்யம் பலருக்குந் தெரிந்ததாகையால் உன்னிடம் சொல்வதில் பாதக மொன்றுமில்லை — நான்தான் ஜெலிகாவுக்கு உதவிபுரிந்த அந்த வங்கவீரன்" என்று கூறினான்.

நரேந்த்ரன் பேசிய ப்ரதி வார்த்தையையும் இமை கொட்டாமல் அதே கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த அவ்வாலிபன் அந்தரங்க பரிசுத்தமாய் "ப்ரபூ, நீர் மஹா ஸத்யவான். உமது வாயினின்று ஓர் அக்ஷரங்கூடப் பொய் வார்த்தை வராது. நீர் சொல்வது அனைத்தையும் நான் பூர்ணமாய் நம்புகிறேன். உம்மை நம்பினோர்—புருஷராயினும் ஸத்ரீகளாயினும் ஸரி, அவர்களை நீர் ஒருபோதும் கைவிடமாட்டீர். உம்மை ஸத்ய ஹரிச்சந்த்ரரென்றே நான் பாவிக்கிறேன்."

"என் குழந்தாய், நீ உனக்குப் பொருள் படாத விஷயங்களைப்பற்றியெல்லாம் பேசுகிறாய். ஆனால் உன் வாயினின்று வெளிவரும் மொழிகளனைத்தும் என் செவிக்கு இனிமையாயிருக்கின்றன. என் மனதிற்கும் ஆனந்தத்தை உண்டு பண்ணுகின்றன. ஜம்ஷீத், நான் கேவலம் கேடுகெட்ட மானிடப் பதர்தான். மலையளவு பாவங்களுக் கிடையில், கடுகளவு புண்யம் செய்திருக்கிறேன். இதுவரைக்கும் நான் என்னை நம்பினவர்களை ஸமயத்தில் காட்டிக் கொடுத்த தோஷத்திற்குப் போனதில்லை. அதுவும் என்னிடம் நம்பிக்கை வைத்துத் தம் அந்தரங்கங்களைக் கூறிய ஸ்த்ரீகளை ஒருபோதும் நான் மனதால்கூட மோசம் செய்ததில்லை. என்னிடம் இவ்வொரு நற்குணமிருப்பதற்குக் காரணம், ஒருவேளை நான் என் வாலிபப் பர்வத்தில் நேசித்த ஒரு பெண்ணின் ஞாபகந்தானோ என்னமோ!" என்று வரவர ஹீனத்வனியாய் நரேந்த்ரன் புன்சிரிப்புடன் சொல்லலானான். "உன் வாலிபம் நீங்கி யௌவனதசை வரும்போது உனக்கு இவற்றின் உண்மைப் பொருள் வெளிப்படும். என்ன பாவம் செய்தாலும் நம்பினோரை மாத்திரம் கைவிடாதே. இந்தப் புத்திமதியைத் திடமாய்க் கைப்பற்றிவா"

நரேந்த்ரன் கூறிய மொழிகளைக் கேட்டு அதிசயமுற்றவனைப் போல் அவ்வாலிபன் அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்து, "ப்ரபூ! இவ்விஷயங்களெல்லாம் எனக்கு நன்றாய்ப் பொருள் படுகின்றன. புருஷர்கள் தாம் காதலித்த நாரீமணிகளைத் தப்பாமல் மணம் புரிகின்றார்களன்றோ? அப்படியிருக்க, தாங்கள் மாத்திரம் அவ்வாறு நீர் காதலித்த பெண்ணை மணம்புரியாத காரண மென்னமோ?"

நரேந்த்ரன் இன்னும் நகை முகங்கொண்டவனாய், "ஜம்ஷீத், நீகேள்விமேல் கேள்விகேட்டவண்ணமாகவே இருக்கின்றாய். நான் நேசித்த காலத்தில் அப்பெண் இளங்குழந்தை; யாதும் அறியாத பேதை; அப்போது என் உள்ளக் கிளர்ச்சி அவளுக்குத் தெரியக்கூடிய ப்ராயம் வரவில்லை. ஒருவேளை இப்போது அவள் என்னிலும் சிறந்தவனும் தன் மனதிற்கு இயைந்தவனுமாகிய ஒரு புருஷனை நாடி மாலையிட்டிருக்கலாம்; ஆனால் நான் மாத்ரம் அவளையன்றி இப்பூவுலகில் வேறெந்த மாதினையும் காதலித்தவனல்லேன்."

விளக்கு, மங்கலாய் எரிந்துக் கொண்டிருந்தது. சிறுவன் எழுந்து அதைத் தூண்டினான். உடனே அது அவிந்துபோய் கூடாரமுழுதும் இருள் மூடிக்கொண்டது.

வெகு நேரம் வரைக்கும் கூடாரம் நிச்சப்தமாயிருந்தது. ஒருவராவது வாய் திறக்கவில்லை. கடைசியில் அச்சிறுவன் மெதுவாய், "நிசிக்கு மேலாயிற்று, உத்திரவளித்தால் அடியேன்போய்ப் படுத்துக்கொள்ளுகிறேன்" என்றான்.

"குழந்தாய் போய்வா, நீதான் ஒருவித வெகுமதியும் வேண்டாமென்று விட்டனை. என் ஆசீர்வாதத்தையாவது பெற்றுக்கொள். எவ்வித மனோவ்யாகுலமு மின்றி என்றைக்கும் ஸுகபரிபூர்ணமாய் வாழ்ந்திருப்பாயாக. தீர்க்காயுஷ்மான் பவ."

"ப்ரபூ என்னைப் போன்ற நாடோடிகளுக்கு மனோவ்யாகுலம் என்ன ஏற்படும்? எனக்கு ஸுகத்திற்குக் குறைவேது? நான் பல்வேறு ஊர்கள் சென்று பல்வேறு மனிதர்களை ஸந்திப்பவன். நான் பாராத ஸ்தலமும், பார்க்காத மனிதர்களும் கிடையாது. ப்ரபு, அவர்கள் யாருக்காவது ஏதாவது செய்தி சொல்லியனுப்ப விரும்புகிறார்களா?"

"ஒருவருக்கு மொன்றுமில்லை, அப்பா!"

"பிகாநீர் ப்ரபு சீக்கிரத்தில் ஆக்ராவுக்குத் திரும்பிவருவார். அவருக்காவது அல்லது அரண்மனையில் யாருக்காவது செய்திகளுண்டா?"

"ஒன்றுமில்லை. குழந்தாய் எனக்கு அரண்மனையில் தெரிந்தவர்கள் யாரிருக்கிறார்கள், நான் வியாதியாய்ப் படுத்துக் கிடந்தேன்? யாருடன் பேசிப் பரிசயமானேன்? இருந்தாலும் என்னை அவ்வளவு அன்பாய் ஆதரித்

துக் காப்பாற்றிக் கடைசியில் என்னை விட்டு அதிசயமாய்ப் பறந்தோடிய அப்புனிதையைப் பற்றிய ஸமாசாரம் ஏதாவது அறியவேண்டு மென்று என் மனம் துடிக்கிறது. தார்த்தரிப் பெண் ஜெலிகா ஸ்வதந்த்ர ஆனந்த ஸுகத்தை யனுபவித்துக்கொண்டு க்ஷேமமாயும் ஸந்தோஷமாயு மிருக்கிறாளென்ற மட்டும் தெரிந்தால் போதும்."

"தாங்கள் மனப்பூர்வமாய்க் கோரினால் தங்கள் அபிலாஷை ஸித்திக்காமற்போகாது."

"எனக்கொன்றும் விளங்கவில்லையே?"

"நம்மைவிட்டுப் பல காதமைலுக்கு அப்பாலிருந்தாலும், அவர்களை மாத்ரம் நாம் மறக்காமலிருந்தால் அவர்களுடைய க்ஷேமாதிசயங்கள் நமக்கு அவசியம் தெரியக் கூடும்."

"குழந்தாய் எனக்கு பேசுவ தொன்றும் பொருட் படவில்லையே?"

"மஹா பெரிய கஷ்டத்தினின்று போர் வீரரொருவரால் மீட்கப்பட்ட ஒரு ஸ்த்ரீயை நான் அறிவேன். அவ்வீரர் எப்போதும் அவள் ஸ்மரணையாகவே யிருந்து வந்தார். ஒருநாள் அவர் ஏகாந்தமாயிருக்கையில் அம்மாது அவர் முன்வந்து, காதுக் கினிமையாய்ப் பலகீதங்களைப் பாடி அவரை மகிழ்வித்தாள். மனப்பூர்த்தியாய் விரும்பினால் ஒன்றும் கிடைக்காமற் போகாது."

"ஜம்ஷீத், இது என்ன உன் பிசாசுக் கதைகளில் மற்றொன்று போலும். நம்மை விட்டுக் காதங்களுக் கப்பால். இருப்பவர்களையாவது நாமாவது பார்ப்பதாவது!"

"தேகம் செயலற்று நித்ரிக்கும்போது மனம் மாயமாய்ப் பறந்து ஊரூராய்த் தேசந் தேசமாய்த் திரிந்து காட்சிகள் கண்டு கொண்டிருக்கும்."

"நீ இன்னும் மறைபொருளாகவே பேசிக் கொண்டிருக்கிறாய். நான் சற்று மந்தபுத்தியுடையவன். எனக்கு எதையும் விடுத்துச் சொன்னால்தான் தெரியும். குழந்தாய்! நீ ஸுகமாய்ப் போய்வா. என்றைக்கும் நீ இவ்வாறே ஸந்தோஷ முற்றிருக்கவேண்டும். எப்போதாவது நீ ஜெலிகாவை ஸந்திப்பாயானால் வ்யாதிகாலத்தில் உபசரணை செய்து, ஆபத்தில் உற்ற துணையாய் விளங்கி, அபாயகாலத்தில் ப்ராணனைக் காப்பாற்றியருளிய தர்ம ஸ்வரூபியாம் அந்தத் தேவ கன்னிகையை நரேந்த்ரன் கனவிலாயினும் நினைவிலாயினும் ஒருபோதும் மறந்து உயிர்தரித்திருக்க மாட்டானென்று சொன்னதாக அவளிடஞ் சொல்லவேண்டும். அவளை இம்மண்ணுலகில் இனி நான் ஸந்திப்பது துர்லபம். ஆனால் அவளுடைய அன்புமாத்ரம் என்றைக்கும் எனக்கு ஞாபகமிருக்கும்."

வெகு நாழிகை பர்யந்தம் இருவரும் மௌனமாயிருந்தனர்.

"அவளும் தங்களை மறக்கவில்லை, விளக்கைப் பின்பற்றிப் பறந்து செல்லும் விளக்குப் பூச்சியைப் போல் அவளும் நீர் அறியாமல் நாடு, நகரம், காடு, மலையென உம்மைப் பின்பற்றி வந்துக்கொண்டிருக்கிறாள். அடிமையென்றாலும் பெண்மை எங்கே போய்விடும்? அவளும் இதர ஸத்ரீகளைப் போன்ற ஸ்த்ரீ ஜன்மந் தானே. அவள் தங்களைப்பற்றிய முழு வரலாற்றையும் அறிய ஆவல்கொண்டிருந்தாள். இன்றையதினம் அந்தக் கோரிக்கை நிறைவேறியது. இப்போது ஊழ்வினையால் பிரிவினை ஏற்படுகிறது. ஊழினும் வலிது பிறிதொன்று மில்லை. அவ்வூழ்வினைதான் நீர் நாடிய பொருளினின்று உம்மைப் பிரித்து வைத்தது. அதனை வெல்பவர் யாவர்? நீர் இத்தனை நாட்களாக நாடியவளை அடுத்த பௌர்ணமி தினத்தன்று மதுராபுரியில் ஸ்வர்ணாலயத்தில் காண்பீர். அவள் ஞாபகந் தவிர்த்து வேறொன்றையும் அதிகமாய் ஆசைகொள்ளாதேயும். அதேப்ரகாரம் ஜெலிகாவும் உம்மை என்றைக்கும் நினைவில் வைத்திருப்பாள். அவள் இன்றைய தினம் உம்மைவிட்டுப் பிரிகிறாள். ஆனால் தார்த்தரிப் பெண்கள் செய்ந்நன்றியை ஒருபோதும் மறவாதவர்கள். அதிலும் ஜெலிகா தன் மித்ரரைக்கனவிலும் மறந்திருக்க மாட்டாள். போய்வருகிறேன், ஞாபகமிருக்கட்டும்" என்று ஜம்ஷீத் ஏக்கமுற்றவனைப்போல் ஒரு நூதனக் குரலாய்ப் பேசிமுடித்தான். அக்குரல் இதற்குமுன் தான் கேட்டுள்ள ஒரு ஸ்த்ரீயின் குரலைப் போலிருப்பதைக் கண்டு நரேந்த்ரன் திடுக்கிட்டான். ஆனால் கூடாரம் மாத்ரம் மறுபடியும் அந்தகாரம்; மறுபடியும் நிச்சப்தம், ஜம்ஷீத் போய் விட்டான்.



# புத்த விஜயம்

(143-ம் பக்கத் தொடர்ச்சி.)

பெரிய பறையின் பேரொலியானது, இராஜ குமாரன் தன்னுடைய உண்மையைப் போதிக்கையில் நிகழும் பிரசங்கமாரியை யுணர்த்தும்.

இந்தப் புத்தருடைய சுவிசேஷ விருத்தி,கோபுரம் வளர்வதைப்போ லிருக்கின்றது; நாற்றிசைகளிலும் சிந்தப்பட்ட மணிகள் நன்மையைப் பயக்கும் நீதிக்களஞ்சியங்கள். இவை தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் கொடுக்கப் படுபவை.

கடைசியாக, அந்த ஆறு மனிதர் முக்கியமான ஆறு மதபோதகர்கள்; தன்னுடைய ஜோதியுள்ள உண்மையாலும் நிகரற்ற வாக்கினாலும் அவர்களை யடக்கி அவர்கள் அறிவீனரென்று உமது குமாரர் நிரூபிப்பார்.

ஆதலால், வேந்தே! துயரப்படேல். எல்லோரும் சுகமாயிருப்பீர்கள்; எனது தேசிகனான இராஜ குமாரர் இராஜ்யங்களிலும் மேம்பட்டவர்; அவரது கந்தைகளில் ஆயிரத்திலொருபங்கின்மேன்மைக்குப் பொன்னுடைகளேனும் நிகராமோ? ஆகா. இன்னும் ஏழு நாட்களுக்குள் இது சம்பவிக்கும். இதுதான் உமது கனப்பொருள்.

(மரியாதை செய்து போகிறார்.)

**கௌ.**—நன்றே சொன்னார். ஆனால்......

**சு.**—ஆஹா! சரி இருக்கட்டும்.

**1-வது மந்**—இனி நமது முயற்சியிலேயே காரியானுகூலம் பெறவேண்டும்.

**சு.**—அந்த மேலோனை அழைத்துவா சேவகா!

(சேவகன் போகிறான்.)

**2-வது மந்**—இப்போதிருப்பதைக் காட்டிலும் விநோதங்களும் போகங்களும் மிகுதியாயிருக்க வேண்டும். இது சந்தர்ப்பம் விடக்கூடாது. இது தான் நடைபெறவேண்டிய உபாயம். இந்த நேரம் தவறலாகாது. தவறினால் மோசம். நம்மால் கௌதமரை எவ்வளவு தூரம் லோகவழியிற் செலுத்திவிடலாமோ அதுவரையில் அதற்குரிய யத்தனங்களைச் செய்து முடிப்பதிற் சலிக்கவே கூடாது.

(சேவகன் வருகிறான்.)

**கௌ.**—என்ன! இருக்கிறாரா! எந்த இடத்தில்!

**சேவகன்.**—அவர் எங்கேயோ மறைந்து விட்டார், இந்த சங்கதியைப் பற்றி விசாரித்ததிலும் எங்களுக் கொன்றுந் தெரியாது. தெரியாதென்றும் நாங்கள் பார்க்க வில்லையென்றும் சொல்லி விட்டார்கள்.

**கௌ.**—இதென்ன!

**சு.**—இதென்ன! வியப்பாயிருக்கிறது, பார்ப்போம்.

(சபையோர்கள் விடைபெற்றுப் போகிறார்கள்.)

---

இரண்டாம் அங்கம்.

நான்காம் காட்சி.

இடம்: அரண்மனை.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: பெண்கள், உதாயி, மித்திரன், கௌதமர்.

**உதாயி.**—என்ன, சொன்ன தெல்லாம் அறிந்து கொண்டீர்களா?

**1-வது பெண்.**—எங்களுக்கு அதெல்லாம் தெரியும்.

**மித்திரன்.**—தெரியுந்தெரியுமென்று எதையாவது விட்டு விடக்கூடாது.

**2-வது பெண்**—நாங்களா? நல்லது! நாங்களாவது தவறுவதாவது!

**உ.**—சரி.

**மித்.**—நீ போய் ஸித்தார்த்தனைக் கூட்டிக்கொண்டுவா.

**உ.**—உங்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. எப்படியோ எனக்குத் தெரியாது. காரியம் நிறைவேறுவது உங்கள் பொறுப்பு.

**1-வது பெண்.**—அதெற்கெல்லாம் நீங்களேன் சந்தேகப் படுகிறீர்கள்? அது எங்களுடைய பாரம்.

**உ.**—எல்லாம் சரியாயிருக்கிறதோ?

**2-வது பெண்**—ஆமாம்.

**மித்.**—நீ போ சீக்கிரம்.

**உ.**—நான் போகிறேன் இதோ.

**இருபெண்களும்.**—நீங்கள் போகலாம். தயாராயிருக்கிறோம். (உதாயி போகிறான்.)

**1-வது பெண்.**—நம்முடைய படிப்பை இன்றே காட்டவேண்டும்.

**2-வது பெண்.**—இப்பொழுது நம்முள் ஒவ்வொருவருக்குமுள்ள வேலையோ தீர்மானஞ் செய்யப் பட்டிருக்கிறது.

**1-வது பெண்.**—அந்தப்படி வேண்டாம்.

**2-வது பெண்.**—பின் எம்மாதிரி?

**1-வது பெண்.**—முதலில் நீ பாடவேண்டும்.

**2-வது பெண்.**—இல்லை நீதான்.

**1-வது பெண்.**—ஏன் நீதான் பாடினால்?

**2-வது பெண்.**—நல்லதம்மா. ஆனால் நீ—?

**1-வது பெண்.**—நான் வேண்டுமானால்—

**2-வது பெண்.**—அதென்ன வேண்டுமானால்—என்கிறாய்? வேண்டியதில்லையானால் நாமேன் இங்கு—?

**1-வது பெண்.**—அது சரி,

**2-வது பெண்.**—இந்த வார்த்தை எதற்கு ?

**1-வது பெண்.**—அடி ! அப்படியானல் முன்னம் நான் படிப்பைக் காட்டவேண்டுமென்று சொல்லியிருப்பேனே ? ஒருவேளை எப்படி யெப்படியோ ?

**2-வது பெண்.**—எப்படி யெப்படியோவென்ருல் ?

**1-வது பெண்.**—இளவரசன் கடைசி வரையிலும் இருக்கிறதானல் நாமெல்லாரும் ஒரு கைபார்க்கலாம்.

**2-வது பெண்.**—ஏன் இருக்கமாட்டாரோ ? பாதியில் போகவிடுவார்களா ?

**1-வது பெண்.**—இருந்தால் நல்லதுதான்.

**2-வது பெண்.**—என்ன! நீ முதலில் உற்சாக வார்த்தை பேசினுய். பிறகு கொஞ்சம் ஊக்கமில்லாததுபோல் பேசுகிருயே.

**1-வது பெண்.**—ஒன்றுமில்லை பயப்படாதே, நானிருக்கிறேன். ஒரு வேளை உன்னுடைய பாகம் முடிந்துபோகு முன்னமே இராஜ புத்திரன் நம்முடைய வலையில் அகப்பட்டுக் கொண்டாரானல் அதிக சிரமம், இன்னும் எதற்கு என்பதுதான் என்னுடைய கருத்து. இதற்கா சோர்வடைவது?

**2-வது பெண்.**—இப்பொழுதுதான் தைரியமடைந்தேன்.உன் மனத்து ளிருப்பது எனக்கெவ்விதம் தெரியும்? சொல்லித்தாருகவேண்டும்.

**மித்.**—பாட்டு ஆரம்பியுங்கள்; அவர்களும் வருவார்கள். எதற்கும் முன்னே யத்தனம் செய்வது நல்லதுதானே. அவர்கள் வந்தபின் துவக்குவது உசிதமல்ல.

**இருவரும்.**—அவ்விதமே செய்கிரேம்.

**1-வது பெண்.**—முதல் முதல் நீ பாடு. அந்நேரம் அவருடைய நிலைமைகளையும் நோக்கங்களையும் பார்வையாலறிந்து கொள்ளுகிறேன் ; பிற்பாடு சமயோசிதம்போல் நடந்துகொள்ளுகிறேன்.

**2-வது பெண்**—சரி, சரி.

**மித்.**—சுருதி சேர்த்துக்கொள்ளுங்கள்.

[உதாயி, கௌதமர் முதலானவர்கள் வருதல்]

**2-வது பெண்.**— (வந்தனம்பண்ணிப் பாட வாரம்பிக்கிருள்.)

**மித்.**—ஆ ! ஆ ! என்ன இனிமை !

(பாடி முடிக்கிருள்.)

**உ.**—சரி.

**1-வது பெண்.**—(வணங்கிய பின்னர் தொடங்கிப் பாடி முடிக்கிருள்.)

**உ.**—வெகு விநோதம் !

**மித்.**—செவிக்கு இன்று விருந்து—

**உ.**—(பெண்களைப் பார்த்து) இருவரும்—

(இரண்டு பேர்களும் கானம் செய்கிருர்கள்.)

**கௌ.**—முடிந்துவிட்டதல்லவா ?

**உ.**—இல்லை, இல்லை.

**மித்.**—பரத நாட்டிய முண்டு.

(உதாயி மங்கையரைப் பார்க்கிருன்.)

(இரண்டுமாதரும் அபிநயம் பிடித்தாடுகிருர்கள்.)

**கௌ.**— (முடிந்தவுடன்) கடைசி யாய்விட்டதல்லவா?

(ஒருவரும் பேசவில்லை.கௌதமர் போகிருர்.)

**மி.**—என்ன ?

**உ.**—சரி, இருக்கட்டும், விட்வா ? (போகிருர்கள்.)

---

இரண்டாம் அங்கம்.

ஐந்தாம் காட்சி.

முதற்களம்.

இடம் : காராக்கிருகம்.

காலம் : இரவு.

பாத்திரங்கள் : பத்மாமணி, பக்தவல்லி,
கள்வர், போர்ச்சேவகன்.

(சுத்தோதனன், கௌதமர், உதாயி முதலியோர் முன்னிலையில் நாடகம் நடக்கிறது.)

**பத்மாமணி.**—என்ன ! இந்த இரவில் அரவம் கேட்கிறதே ! அதோ ! கதவைத் தட்டுகிறது யார் ? —இன்னுந் தட்டுகிருர்களே ! யார் அது ? —பதிலொன்று மில்லையே—ஹா ! மறுபடியும் தட்டுகிற சப்தமே காதிற்படுகிறதே யொழிய வாயாலொரு மறுமொழியும் காணேம். இருந்தாலும் திறப்போம், (கதவைத் திறந்ததும் பக்தவல்லி வருகிருள்.)

**பக்தவல்லி.**—அம்மணி !

**பத்.**—பக்தவல்லி! என்ன சங்கதி? நான்தான் இருக்கிறது போதாதா ? உன்னையும் உனது தகப்பன் சிறைதாகக் கேள்விப்பட்டேன், திடீரென்று வந்தாயே.

**பக்.**—வருகிறபொழுது எல்லாம் சேர்ந்து வரும்: நன்மையோ தீமையோ.

**பத்.**—என்ன ! சுற்றிலும் பார்க்கிருயே ? புதிய சமாசாரம் ஏதேனு முண்டோ ?

(பக்தவல்லி ஓர் கடிதத்தைக் கொடுக்கிருள்.)

**பக்.**—பார்த்தாயா ?

**பத்.**—(அதை வீசி யெறிகிருள்.)

**பக்.**—அரைகுறையாக வாசித்தாயே முழுவதும் கேள். (வாசிக்கிருள்.) எனது அருமையான பக்தவல்லீ ! உனக்கு நான் தேர்ந்தெடுத்த மணாளனுக்குப் பழுதொன்றேனு முண்டோ ? இல்லையே, அவன் வல்லமை, சம்பத்து, அழகு இவை



போன்றவைகளில் சம்பூர்ணனென்பது நான் சொல்லியாக வேண்டியதில்லை. உன் கீழ்ப்படியாமைக்குக் காரணம் யாது? இராஜ குமாரியினுடன் கூடினதின் வாசனுபலமோ ? நன்ருய் ஆராய்ந்துசெய். ஒரு நாட் சாவகாசம் கொடுக்கிறேன். அதற்குள் எனது நோக்கத்திற் கிணங்காவிடின் என்ன சம்பவிக்குமோ இப்பொழுது தெரியாது.

இப்படிக்கு,

உன் அன்பிற்சிறந்த தந்தை,

தீர்த்தன்.'

**பத்.**—நல்லது, நல்லது.

**பக்.**—ஐசுவரியம் லக்ஷணம் இவையெல்லா வற்றையுங் கூறிவிட்டார் ; ஒன்று மாத்திரம் எழுதத் தவறிவிட்டார் போலும். குணத்தையும் ஒழுக்கத்தையும் பற்றிக் கவனித்தாரில்லை.

**பத்.**—அங்ஙனம் பார்த்தால் இக்கதி நமக்கேன் ? சரி , வெகு நேரம் சம்பாஷணை செய்தால் ஒரு வேளை எவராவது கேட்க நேரிடும்.

**பக்.**—நாளைய தினம் கடைசி முடிவைத் தீர்மானஞ் செய்து கொள்வோம். (போகிருள்.)

**பத்.**—அவளுக்கும் இப்பொழுது கஷ்டகாலமோ ? அரசனுக்குத்தான் இப்புத்தி தோன்றினது, அமைச்சனுக்குமா இவ்விதமான கலக்கம் நிகழவேண்டும் ? இதுவும் ஓர் வேடிக்கைதான். வருகிறதெல்லாம் பார்க்கலாம்—பக்தவல்லி போய் விட்டாளே இன்னுமேன் ஓசை—ஹா ! இதென்ன ! போர்ச் சேவகன் வருகிருனே !

(உள்ளே வருகிருன்.)

**போர்ச்சேவகன்.**—பத்மாமணி !

**பத்.**—நல்லமணி யாரடா நீ? (அவன் சுற்றிச்சுற்றி வர, அவளும் பின்னே வாளுடன் செல்ல உடனே திரும்புகிருன். வாள் தரையில் விழுகிறது.)

**பத்.**—இம்மன்மதனையா கொல்ல வெண்ணினேன் ? ஐயோ ! இவர் வதனத்தைக்காண வருத்தம் பறக்குமே! என்ன கம்பீரம் ! என்ன ஒய்யாரம் ! இத்தகைய சிலருக்கல்லவோ உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் பண்ணவேண்டும்.

(அவனும் வர்ணித்து அவளுடைய அழகில் ஈடுபடுகிருன்.)

**போ.**—அம்மணி ! உன் இரகசியக் கடிதத்தைப் பற்றியும் இவ்வேஷத்தைப்பற்றியும் பின் விரித்துரைக்கிறேன், அகாலமாக விழித்திருந்ததனல் கண் மயங்குகிறது.

**பத்.**—நானும் இதுவரையில் துயிலொழிந்தேன், என்னுயிர்த்துணைவ !—

(நித்திரை செய்கிருர்கள். கள்வர் வருகிருர்கள்.)

**கள்வர்தலைவன்.**—டே ! யப்பா ! பணத்துக்கல்லா வந்தோம். அதெப்போடுங்கே வேண்டா, இது பணத்தெலெ உண்டெனருக்குடா கட்டுலோடெ தூக் உரக்க,

(இருவரையுங் கட்டிலுடன் கொண்டு போகிருர்கள்.)

இரண்டாம் களம்.

இடம் : கானகமும் வேடர் பரண்களும்

காலம் : நடுப்பகல்

பாத்திரங்கள்: மூக்கன், வேலன், குமரன், மலையன்,
போர்ச்சேவகன்.

**மூக்கன்.**—வேலா ! எந்த ஊர்க்காரர் ? கட்டிலின் மேலிருந்தவள் யார் ?

**வேலன்.**—எந்த வூர்க்காரரோ எனக்குத் தெரியாது. போகிற பொழுது கேட்கலா மென்ருல் எனக்குச் சந்தேகமா யிருந்தது; ஒருவேளை திருடர்களாயிருந்து ஒரு போடு போட்டால் என்ன செய்வேனென்பதுதான் என்னைத் தடுத்தது.

(குமரனும் மலையனும் பரணிலிருந்து இறங்குகிருர்கள்)

(போர்ச்சேவகன் வருதல்)

**போர்ச்சேவகன்.**—ஹா ! பத்மாமணி !

**குமரன்.**—மலையா ! இதென்னடா ?

**மலையன்.**—சேவகர் வருகிருர். பேசாதே.

**போர்.**—ஹா ! பத்மாமணி ! என் மரகதமணியே ! எங்கு சென்ருய்.

**வே.**—ஐயா ! யாரைத் தேடுகிறீர்கள் ?

**போர்.**—இவ்வழியாக மங்கை யொருத்தியை எவராவது கூட்டிக்கொண்டு போகவாவது அல்லது தனியே போகவாவது கண்டீர்களா ? கொஞ்சம் என்மேல் தயவுபுரியுங்கள்.

**மலை.**—ஆமாம், ஆமாம்.

**வே.**—அடே! நீ பேசாதே. ஐயா இன்னரென்று சரியாய்ச் சொல்லுங்கள்.

**போ.**—நல்ல ஆடையாபரண மணிந்தவள்; கூந்தல் மிகுதி; குரல் இனிமை;மேலும் ஓர் அடையாளம்; முகம் முழுமதி.

**வே.**—இதெல்லாம் நாங்கள் அறியோம்.கட்டிலில்—

**போர்.**—ஆ! அவள்தான், அவள்தான்.

**வே.**—போகிறபொழுது கொலைக் குகையென்று சொல்லிக்கொண்டு போனர்கள்.

**போர்.**—ஐயோ ! ஹா ! கொலையா ?

**வே.**—கொலையில்லை. அந்த குகையின் பேர்.

**மலை.**—நீங்கள் யார் அப்பெண்ணுக்கு ?

போர்.—நீங்கள்தான் எனக்குச் சகோதரர். இந்தப் பணத்தை யெடுத்துக் கொள்ளுங்கள். என்னை அங்கே கொண்டுபோய் விடுங்கள்.

வே.—ஏ மலையா! சும்மா அதை எடு.

மலை.—ஐயா! நீங்கள் இந்தக் கோலத்துடன் போகக்கூடாது.

வே.—கேளுங்கள். அங்கே பெண்வேஷத்தோடு தான் போகவேண்டும். அவர்களுடைய பேச்சும் கூத்துக்களும் கொலைக்குகையின் சமீபங்களில் வசிக்கும் கள்ளர்களென்றே சொல்லுகின்றன. ஆண்பிள்ளைகள் போனால் மறுபடியும் திரும்புவது கஷ்டம்.

போர்.—எப்படியும் என்னை அங்கே கொண்டுபோய் விடுங்கள்.

(வேலனும் மலையனும் சேவகனை யிட்டுக் கொண்டு போகிறார்கள்.)

மூக்கன்.—குமரா! இராசமாதிரியல்லா இருக்கிறார்?

குமான்.—ஆமாம், பேச்செல்லாம் அப்படியேதான் இருக்கிறது.

(வேலனும் மலையனும் சேவகனுக்குப் பெண் வேஷம்போட்டுக்கொண்டு வருதல்.)

வே.—மூக்கா! மலையா! நீங்கள் இரண்டுபேரும் கொலைக்குகையைக் கொஞ்சந் தூரத்திலிருந்து காட்டிவிட்டு வாருங்கள்.

(மூக்கன், மலையன், சேவகன் மூவரும் போதல்)

கு.—இவர் எவரோ?

வே.—இவர் ராஜாவின் மகன். இவரும் அந்தப் பெண்ணும் நேசர்கள். இவர்கள் உறங்கும் பொழுது திருடர் கட்டிலோடு தூக்கினதும் காட்டில் இவரைத் தூக்கத்தில் விட்டுவிட்டு அவளை மாத்திரம் தூக்கிக்கொண்டு போனதும் நாம் கண்டதிலிருந்தும் அவர் என்னிடம் அந்தரங்கமாய்ச் சொன்னதிலிருந்தும் வெளியாகிறது.

குமான்.—சரி, போவோம். (போகிறார்கள்.)

---

மூன்றாங்களம்.

இடம்: கொலைக்குகை.

காலம்: பின் மாலை.

பாத்திரங்கள்: ஞானானந்தசுவாமி, வேஷை, வீரகேசரி, இருளன், மாடன்

மாடன்.—சாமீ!

ஞானாநந்த.—என்னடா அப்பா?

மாடன்.—வயிறு பசிக்குது.

ஞா.—நான் என்ன செய்வேன்?

மா.—சாப்பாடில்லையா?

ஞா.—ஒன்றுமில்லை. நானும் பட்டினிதானப்பா.

(இருளன் வருகிறான்.)

இருளன்.—ஏ மாடா! என்ன?

மா.—ஊரிலெல்லாரும் சௌக்கியமா?

இரு.—இங்கே நீ இரு. நா, மாரி, குப்பன் எல்லாரையும் பார்க்கப் போயிட்டு வாரே,

மா.—வேண்டா. அவுக போனடம் உனக்குத் தெரியாது சாமியிட்ட இரு.

இரு.—சாமி! யாரப்பா?

மா.—சாமியோ!

ஞா.—(வெளியில் வந்து) எதற்கு?

மா.—இவனுக்கு அயலூரு. எங்களைப் பாக்க வந்திருக்கான். எல்லாரையுங் கூட்டியாரே. இவனிருப்பா ஒங்ககூடெ. நா போரே.

(மாடன் போகிறான்.)

ஞா.—ஐயோ! இவ்விதமும் நடக்கவேண்டுமோ? ஹா! ஸ்வாமி!

(வேஷை வருகிறாள்.)

வேஷை.—நாதா! இந்தக் காட்டில் என்னைத் தனியே விட்டுவிட்டுப் போகலாமா! ஹா! என்ன செய்வேன். துணை யொருவரு மில்லையே. மரங்காள்! என் கண்ணாளனைக் கண்டீரோ? என்னை விட்டுத் தமியளைப் பிரிந்துபோக உமக்கு எவ்வாறு மனந்துணிந்ததோ? ஹே! விலங்குகாள்! எனது கொண்டானைக் கண்டீரோ? நீங்கள் மிருகஜாதியிற் பிறந்திருப்பினும் என்பாலருள் சுரந்து காதலன் போனவழி காட்டீரோ? வானுறையும் மேகங்காள்! என் மன்மதன்பாற் றூதுசென்று யான் அவஸ்தைப்படுதலையும் மனத்திலுள்ள மையலையு முரைத்தழைத்து வாரீரோ? சுகங்காள்! என் மணவாளனிடம் போய் இத்துயரங்களைப்பற்றிச் சொல்லீரோ! நாரைகாள்! என் காரணனைக் கண்டு நீவிர் இந்த நிராதார நிலைமையை நவிலீரோ?

இரு.—யாரம்மா?

ஞா.—அப்பா! அனாதையாய் இக்கொடிய வரண்யத்தில் சஞ்சரித்துவருவது யாரென்று சற்றே பார்.

இரு.—அம்மா! இவடம்.

வே.—இந்நிர்மானுஷ்யமான கானகத்தில் பதறித் தயங்க நேரிட்டதே! ஸ்வாமீ! கருணாநிதியே! என் பெருஞ் செல்வமே! ஆபத்பாந்தவா! உமது கிருபாகடாக்ஷத்தை என்னென்று சொல்லட்டும்? நீர் தான் துவராடையணிந்து துறவறம் பூண்டு வந்தீரோ! உமது மகிமையை எவ்வாறுரைப்பேன்? (ஞானானந்தரைப் பார்த்து) நிர்மலநிதியே! உம்மையே யடைக்கலமாக அடைந்தேன்,



# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

முன்னொரு காலத்தில் ஒரு தேசத்தில் நெடுநாளாய் மாரியற்றுப் பயிர்களெல்லாம் பாழாய்ப் போயின. ஆடுமாடுகள் உணவின்றி கூட்டங் கூட்டமாய் மாண்டுபோயின. குளம் குட்டைகளெல்லாம் வரண்டுபோய்க் குடிக்கவும் தண்ணீரில்லாமல் அவதிப்பட்ட ஜனங்கள், ஒருநாள் ஒன்றுசேர்ந்து மழைக்கரசாகிய இந்திரனை வருந்தி வேண்டினர்.

இவர்களுடைய விண்ணப்பம் மண்ணுலகிலிருந்து விண்ணுலகுக் கேறியது; தன் மனைவியுடன் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டிருந்த இந்திரன் காதிற்பட்டது. அவர் அதைச் சற்றேனும் கவனிக்கவில்லை. அருகிலிருந்த இந்திராணி, "பிராணநாதா! ஜனங்களின் கூக்குரலைக் கேட்டும் தாங்களிவ்வாறு கவனமற்றிருப்பதழகோ? இதுவரையிலும் அவர்கள் பட்ட கஷ்டங்கள் போதும். இனிமேலாவது அத்தேயத்தில் மழை பொழியும்படி உத்திரவளிக்கவேண்டும்" என்று வருந்தி வேண்டினள்.

அவர் "பெண்ணே! உனக்குத் தெரியாத விஷயங்களில் நீ தலையிட்டுக் கொள்ளாதே. பெண்களெல்லோரும் பேதைகளே. யாராவது கண்ணீர் விட்டழுதாலும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாலும் உங்களுக்கு இரக்கம் உண்டாவது சகஜம். கெஞ்சுவதும் கூத்தாடுவதும் வாஸ்தவந்தானா? அவர்களின் வேண்டுகோள்களை யெல்லாம் அளித்தல் அவசியமா, என்று யோசனைசெய்து உண்மையறியுந் திறமை உங்களுக்கேது? நீங்களெல்—" என்று சொல்லிக்கொண்டே இருந்தார்.

"என்ன அப்படிச் சொல்லுகிறீர்களே. இந்த ஜனங்கள் மழைவேண்டுமென்று கேட்பது உண்மையன்றோ? அங்ஙனமாயின், ஏன் இவ்வளவு பேர் ஒன்றுசேர்ந்து 'மழைவேண்டும் மழைவேண்டும்' என்று கதறிக்கொண்டே இருக்கிறார்கள்? மழையை வேண்டாமென்று சொல்லும் மானிடரு முண்டோ?" என்று இந்திராணி தடுத்தாள்.

"ஆஹா! உண்டு. வீண்பேச்சுகள் பேசுவதாற் பயனென்ன? இதோ பார். அத்தேயத்தின்கண் மழைபொழியச் சொல்லி மேகங்களை அனுப்புகிறேன். சற்றுநேரத்தில் என்ன நடக்கப் போகிறதென்று நீயே கண்டுகொள்வாய்" என்று சொல்லிக்கொண்டே மேகங்களை அழைத்து அத்தேசத்துக் கனுப்பினார்.

மேகங்களும் சரேலென்று சென்று தங்களுக் கிட்ட கட்டளையை நிறைவேற்றத் தொடங்கின. இந்திரனும் இந்திராணியும் தேவலோக விஷயங்களைப்பற்றி பேசத் தொடங்கினர். உடனே கடலொலிபோன்ற ஒருபிரண்ட ஓசை அவர்கள் காதில்பட்டது. சற்று நிதானித்துப் பார்க்கையில் அவ்வொலி பூலோகத்திலிருந்தே வந்ததாக ஏற்பட்டது. பலர்கூடிப் பேசிய மொழிகளாதலால் ஒன்றோடொன்று கலந்து மெலிந்து விண்ணுலகுக் கெட்டாமலே நசித்துப் போயின; அவற்றுள் சிலவே நன்கு விளங்கின.

"ஐயோ! இந்தப் பாழும் மழை இன்றைக்குத்தானா வரவேண்டும். நாளைவரையிலும் மன்னிக்கக்கூடாதா. என் சட்டி பானைகளெல்லாம் துலைந்து போயினவே" என்றான் குயவன்.

"காய்ந்த வேஷ்டிகளெல்லாம் மண்ணாய் விட்டனவே. இம்மழையால் எனக்கு ஒரு வேலைக்கு இருவேலை ஏற்பட்டதே. என்செய்வேன்" என்றழுதான் வண்ணான்.

வாணியனோ, "இன்னம் ஒரு செக்கு எண்ணெய் ஆடியபின் வரலாகாதா" என்றான். பள்ளிப்பிள்ளைகளும், உத்தியோகஸ்தர்களும் "இப்போதுதானா மழைக்கு லக்னம். நாம் இன்றைக்கு வீட்டைவிட்டு எங்ஙனம் போவது" என்று திகைத்து நின்றார்கள்.

ஓர் பார்ப்பிணி "தரித்திரன் தலைகழுவப் போனால் வந்தது மழை என்னும் பழமொழி என்விஷயத்தில் பலித்தது. எவ்வளவோ கஷ்டப்பட்டு இன்றையதினம் அப்பளமும் வடாமும் இடப் பிரயத்தினம் செய்தேன். ஆறு மாத காலமாய் வராதமழைக்கு இப்போதென்ன ஆத்திரம்" என்று இரைந்தாள்.

சந்தைக்கடைகள் கலைந்தன; சாக்கடைகளெல்லாம் கலந்தன; கூலிக்காரன் பாடு திண்டாட்டமாய்விட்டது. ஆனால் வண்டிக்காரர்கள் பாடும், விறகுவெட்டிகள் பாடும் வெகு கொண்டாட்டம். மழையால் பிழைப்பற்ற அம்பட்டன், ஆப்பக்காரி முதலானோர் இந்திரனை வாய்க்கு வந்தபடி வைதனர்.

நாடகம் நடிப்பவர்களும், ஓட்டைவீட்டுக்காரர்களும் "இம்மட்டும் பகலிலேயே வந்துவிட்டதேமழை, நமக்கதிர்ஷ்டந்தான்" என்று களித்தனர். எலும்பும் தோலுமாக பிராணனை வைத்திருந்த சில ஆடுமாடுகள் மாத்திரம் எல்லாம் வல்ல இறைவனைத் துதிப்பதுபோல் துள்ளிக் குதித்து விளையாடின; பட்சிகள் பாடின. புற்பூண்டு முதலியன தெய்வத்தை வணங்குவதுபோல் தலைகுனிந்து நின்றன; மனிதனொருவனே நன்றி யறிவற்று மதிமயங்கி வாய்க்கு வந்தபடி பிதற்றிக்கொண்டிருந்தான்.

இவ்விந்தை மொழிகளையும், நிந்தைமொழிகளையும் செவியுற்றுக் கேட்ட இந்திராணி "நாதா! தாங்கள் சொல்லியதில் எள்ளளவேனும் பிசகில்லை, நான் பேதைதான். 'மழை வேண்டும் மழைவேண்டும்' என்று கேட்டவர்கள், வந்தபோது வேண்டாமென்று சொல்வது என்ன ஆச்சரியம்!" என்றாள். "ஆச்சரியமா! கொஞ்சமேனும் ஆச்சரியமே இல்லை. மனிதர் சுபாவமிப்படித்தானிருக்கும். சகல ஜீவராசிகளுக்கும் நலந்தரக்கூடிய மழையையும் வேண்டாமென்று சொல்வதற்குக் கூறுங் காரணங்கள் சுய நலத்தையே பாராட்டும் இழி குணத்தை யன்றோ காட்டுகின்றன? இன்றிப்படிச் செய்தார்களே யென்று கோபித்து நான் மழையை நிறுத்தி விடலாமா? ஆதலாற்றான் நான் மனிதர் துதியையாவது நிந்தையையாவது கவனியாமல் எச்சமயத்தில் வேண்டுமோ அச்சமயத்தைத் தெரிந்து மழையை அனுப்புகிறேன். தாம் செய்யுங்கருமத்தைத் தாமே யோசித்துப் பிறர் புகழை எதிர்பாராமற் செய்தலே எக்காலத்திலும் உத்தமம்."

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு?"—திருக்குறள்.

---

விவேக போதினியைப்பற்றி "தேசபக்தன்" எழுதுவது:—சென்னை மயிலாப்பூரில் வெளியாகும் விவேக போதினி 9-வது தொகுதி நமது பார்வைக்கு வந்தது. அதில் ஆண்பாலார், பெண்பாலார், சிறுர் முதலிய எல்லாருக்கும் எளிதில் பயன்படக்கூடிய பலவிஷயங்கள் இனிய எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. மேனாட்டு விஷயங்கள் பல, மிக இனிமையாக விளக்கப்படுதல் இதனைப் படிப்போர் எல்லோருக்கும் இனிது விளங்கும். இது தமிழ் மக்கள் ஒவ்வொருவர் இல்லத்திலும் இருப்பது இன்றியமையாததாகும். இதன் விலை ரூபா 5.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி: (10) பிரிவு

"நீக்கா ஏகத்துமையும் தெய்வங்காள் வீமன்றன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின் — நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதிலன்போல் போகின்றேன் யான்".

அப்பொழுது நல்ல அந்தகாரம்; அமாவாஸ்யை இருட்டும் அதைக் கண்டு நடுங்கும். அக்காலம் கலங்கிய காற்றும் அடங்கி வெருண்டு கிடந்தது. ஆகாயத்தில் பளபளத்துத் தளதளத்து ஒளிவிடும் தாரகாக் கூட்டங்களும்ஒளிமங்கி மேகங்களில் பதுங்கிப் பதுங்கி ஒளிந்தன. இடையிடையே ஒளிதரும்படி பறக்கும் மின்மினிகளும் தம்மிட மடைந்து உறங்கிக் கிடந்தன. எங்கும் நிச்சப்தமே அப்போது குடிகொண்டிருந்தது. ஆயினும் கர்ஜனையிடும் மிருகங்களின் இரைச்சலும், தனித்து மரத்தில் உறந்துச் சத்தமிடும் கோட்டான் ஒலியும், கேட்டார் மனத்தைக் கிடுகிடுத்திடச் செய்யும்; அவர் வயிற்றில் கலநெருப்பிட்டாற்போல அவர் உடலை அலட்டும். அப்பாழ் மண்டபத்தில் இருந்த நளனுக்கு அப்பொழுதுதான், தான் முன்னிருந்த மேன்மைக்கும் இப்பொழுது தான் அடைந்திருக்குந் தாழ்மைக்கும் இருந்த தாரதம்யம் நன்றாகப் பட்டது. ஆனால் அயர்ந்து தளர்ந்து கிடந்த தமயந்திக்குத் தன் உடம்பின்மேல் ஸ்மரணையே இருக்கவில்லை. தனது மெல்லிய கால்கள் முட்களிலும் கற்களிலும் பட்டுச் செவந்து வீங்கி வலிக்கவும், கணவன் தன்னிடம் பேசிய மொழிகள் தாமாகவே அவள் மனத்தை வாட்டவும், அவையெல்லாம் அறியாதவள் போல நடந்தலைந்த களைப்புத் தாங்காது மயங்கி உடம்பு தெரியாமல் பூமிமேல் படுத்தாள். அப்பொழுதுதான் அவளுக்குத் தான் படுத்தவிடம் தரையென்று தெரிந்தது. படுக்கப்பாயில்லாமல் தூசியில் படிந்து விளங்கிய தனது நிலையை நினைக்க நினைக்க அவள் மனம் புண்ணாகி வருந்தினாள். அதுவரையும் அவள் காதில் கேட்டிராத கொசுக்களின் 'நொய்' என்னும் ஸ்வரம் அவள் காதில் விழவேயில்லை; ஆனால் அவற்றின் பாடலைக் கேட்டதும், அவளுக்குத் தான் வீணையின் மேல் விரல் மீட்டி



வியக்கும் இசைக் கூட்டித் தன் கணவனது திருச்செவியில் ஊட்டிய சங்கீத இன்னிசையின் பெருமுழக்கு, தெரியாமல் அவள் காதினுள் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. என் செய்வாள்? தாமாகவே வடிந்துவந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருக்கும் பொழுது வானத்தைக் கிழித்து வெளிவந்த மின்னற்கொடி அவளது முகத்தைத் தடவிச் சென்றது. அப்போது நளனும். தமயந்தியின் துயரை நோக்கி,

"பண்டை வினைப்பயனைப் பாரிடத்தில் ஆர்கடப்பார்?
கொண்டல் நிழலில் குழைதடவும்—கெண்டை
விழியளீ ரென்றான் மனநடுங்கி வெய்துற்
றழியலீ பென்றான்" அரசு.

தன் நாதன் கூறியமொழியால் சற்றே தேர்ந்தாள்; ஆயினும் பரிசனங்களுடன் வாழ்ந்துவந்த அவளுக்குத் தூக்கம் வரவில்லை. எனினும், இதுவரையும் கஷ்ட மென்பதைக் கண்டிராது சௌக்யமாயிருந்தவளாகையால் அவள் தனக்குத் தெரியாது தூக்கம் மேலிட, அப்பாழ் மண்டபத்தின் புழுதித் தரையிலேயே படுத்துறங்கினாள். கஷ்டத்திலும் தன்னையே தெய்வம்போல எண்ணி நடந்த தனது மனைவியை அணைந்து அன்போடு அவள் பக்கத்திலேயே நளனும் படுத்திருந்தான். ஆயினும் தான்செய்த வினையால் நடந்த காரியங்களின் ஞாபகங்கள் மேன்மேலும் தோன்ற அவனுக்குத் தாங்கமுடியாத துயரமேலிட்டது. தான் இந்நாட்டை இழக்கச் சூதாடியதும்,பிறர் புத்திசொன்னதும்,மனைவி வேண்டியதும், ஜனங்கள் மதிப்புரை புகன்றதும், தான் பரிபவத்துடன் வெளிவந்ததும்—இவையெல்லாம் புண்ணிலிட்ட வேல்போல அவன் மனதைக் குடைந்து கொண்டேயிருந்தன.தான் தனது ஜனங்களால் கைவிடப்பட்டும் திறமையற்றும் காட்டில் பதசாரியாக நடந்து துயர் உழந்து தவித்ததும் உடுக்கும் உடையற்று விளங்கியதும்—இவற்றை யெல்லாம் எண்ணி எண்ணி அவன் மனங் கவலையுற்றது. இவ்வுலகில் இருப்பதா அல்லது இதைவிட்டுத் துறப்பதா வென்னும் பெருங் கவலையே அவனை அப்பொழுது மயக்கி அவலத்துள் பாய்த்தது. எதுசெய்தால் எப்படி முடியும் என்பதையே அவன் எண்ணிமிட்டுக் கொண்டிருந்தான். பலராலும் வெறுக்கப்பட்டும் பரிபவமுற்றும் மதிப்பாரற்றுக் கிடந்த நிலையிலும் தன்னைத் தெய்வமாக எண்ணிப் பதிபக்தி தவறாது காட்டிலிருக்கும் கல்லையும் முள்ளையுங் கவனியாது லக்ஷயஞ் செய்யாது, வருகின்ற கஷ்டங்களை யெல்லாம் மதிக்காது, நன்மையேனும் அது அல்லதேனும் எதற்கேனும், தன்னையே பரம்பொருளாகப் பாவித்து நம்பிவழிபட்டு வரும் தமயந்தியைக் கைவிடுவது தகுமா அது தர்மமாகுமா என்று எண்ணி மேலும் இவ்வாறாகச் சிந்திக்கலானான் :—

"இவள் பேதை; என்னையே உயிராகக் கொண்ட மடந்தை; எனக்காகத் தன் உயிரையும் கொடுக்க உட்பட்டு நடக்கும் உத்தமி; அத்தகையவளை நான் துன்பத்திலாழ்த்துவது தகுமா? பிறரால் அவமதிக்கப்பட்டு, இருக்க இடமின்றிப் பாழும் பவனமுற்றுப் பரதேசியாகப் பரிதவிக்கும் என்னோடு இவள் இருத்தலால் என்ன நலம் உண்டு? துக்கமும், துயரமும் கஷ்டமுமே அல்லவா மேலிடும்?

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு

என்றவாறு இளமைமுதல் என்னிடம் அன்பு கொண்டு கடவுளரையும் கவனியாது, அவர் முன்னிலையிலேயே என்னை மாலையிட்டு, என் ஐம்பொறிகளுக்கும்இன்பந்தந்து,என்மனதிற் கியைந்தவாறு நடந்து, என் துன்பமெவற்றையும் தனதென் மதித்து,அவற்றை யொழித்து, எவ்விதத்திலும் என் நன்மைக்கே உழைத்துத் தன் நன்மையைப் பின் நாடிய எனதன்பிற்குரிய இந்தத்தமயந்தியை,இக்கொடும் கானகத்தில், துஷ்ட மிருகங்கள் நிறைந்து கிடக்கும் இந்த இடத்தில், வேறுதுணையின்றி இவ்வாறு அலட்டுவது எனக்குத் தகுமா? அபலையான ஒரு ஸ்திரீயை, கேவலம் மெல்லிய சரீரம் கொண்ட ஒருவளை, கஷ்டமென்பது இன்னதென அறியாத இவ்வழகியை, இவ்வாறு துன்பப்படுத்துவது எனக்குத் தகுமா? மதி புகட்டியுங் கேளாது கட்குடித்தவன்போல மதிமயங்கி யான் செய்த தவறுக்காக தவறொன்றும் அறியாது, குற்றமொன்றுஞ் செய்யாது, என் நன்மையையே நாடிய இவளுக்குத் துன்பமே நேரிடும்படியாக நடப்பது எனக்கென்ன ஆண்மையா? அல்லது பெருமையா?

என் நடத்தை எவ்வாறு பொருந்தும்? குற்றமொன்றும் அறியாரைச் சிறுமைசெய்யாதிருத்தலல்லவா அழகு? இக்காட்டில் இவள் அலையும்படியாக வைப்பது எனக்கு ஒரு பெருமையா? அல்லது வீரமா? சீ! பாழும் நெஞ்சமே! உனக்கு அறிவு என்பது இல்லை போலும்! உயிர்க்கு உசாத்துணையாய் உன்னுடன் ஸுகதுக்கம் எவற்றையும் கவனியாது உழன்றுவரும் மெல்லியலைக் கல், முள், மேடு, பள்ளம் முதலிய விடங்களில் இழுத்துச் சென்று, பசிப்பிணியிலாழ்த்தி, பார்க்கமுடியா ஹிம்ஸைக் காளாக்குதல்—வெகு நன்று! இனி அவளது ஸுகத்தை நாடுவதே உன் வழி. எவ்வாறு அவள் துன்பம் ஒழியுமோ அவ்வாறு நடத்தலே உனக்குப் பெருமை. அன்றேல் ஆடவனென்னும் பெயர் உனக்குச் சிறிதும் தகுதியன்று. நீ புன் மானிடக் கூட்டத்தில் சேரத்தக்கவன். உன் தர்மம் முற்றும் அழியாது தர்மத்தைக் கடைப்பிடிப்பதே வழி."

இம்மாதிரியாக நளன் எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் போது,

"வஞ்சக் கலிவலியான் மாகத் தராவனைக்கும்
செஞ்சுடரின் வந்த கருஞ்சுடர்போல்—வின்ச
மதிக்க தேர்த்தானை வயவேந்த நெஞ்சத்
துதித்ததே வேறோ ருணர்வு."

கருமேகம் நிறைந்த வானத்தில் பளீரென மின்னியதுபோல, பலவிதமாக எண்ணமிட்டுக் கொண்டிருந்த நளனது மனத்தில் ஓர் யோசனை யுதித்தது. அது "இவளைவிட்டுப் பிரிவதா? அல்லதா?" என்பதேயாம். இந்த யோசனை மனத்தில் ஊன்ற வூன்ற அவனுக்கு ஒருவித சந்தோஷமும் கிளர்ச்சியும் உண்டாயின. எவ்விதத்திலும் அவளுக்கு நன்மையுண்டாகு மென்றே பின்வருமாறு சிந்தித்தான்: "இவள் எனக்காகக் கஷ்டப்படுகிறாள். நான் இவளைவிட்டுப் பிரிந்தால் பந்துக்களிடமே போய்ச் சேருவாள். என்னைத் தொடரத் தொடர இவளுக்குத் துக்கமேயன்றிச் சுகமில்லை. என்னை விடுவதே இவளுக்கு நலம். உத்தமியாகிய இவளுக்குச் சிறிது சுகமுண்டானாலும் உண்டாகலாம். இவளுக்கு நன்மையே உண்டாகு மென்பது திண்ணம். வழியில் யாரேனும் இவளை ஹிம்ஸிப்பரோ? வேறு ஏதேனும் தொந்தரவு செய்யுமோ? எவையேனும் கொடிய விலங்குகள் தீங்கு செய்யுமோ—அவை எவ்வாறு முடியும்? இவள் வெகு உத்தமி; சீலை; சாந்தை; பரமகல்யாணி; எவர்க்கும் நன்மையே எண்ணுபவள்; என்னிடம் இடையறா அன்புடையாள்; மஹா பதிவிரதை. இவளுக்குத் தீங்கு எவ்வாறு உண்டாகும்? ஒருநாளும் உண்டாகாது. நல்ல வேளை! இப்போதவள் அயர்ந்து நித்திரை செய்கிறாள். அவள் தூங்கும் போதே நான் தனியே விட்டுப்போவது உசிதமாகும். அந்தோ! எம்மிருவருக்கும் எங்கள் மனம்போலவே ஆடை ஒன்றாகவே யிருக்கின்றதே! அவள் துணியல்லவா என் மானத்தையும் காப்பாற்றி வருகிறது! இதை எவ்வாறு கிழிக்க முடியும்? அவள் தூக்கம் கெடாதபடி இதை எப்படிக் கிழிப்பது?"

இவ்வண்ணம் நளன் எண்ணிச் சிந்தையுடன் தன் கையை அத்தரையின்மேல் தடவிக் கொண்டிருந்தான். அப்போது,

"எண்ணிய எண்ணம் முடிப்ப இகல்வேந்தன் [குக்
கண்ணி யதையறிந்து கூர்கலியும்—பண்ணிறுக்
கேளான தேமொழியை நீக்கக் கிளர்ஒளிசேர்
வாளாய் மருங்கிருந்தான் வந்து."

அந்தப் பாழும் கலியும் நளனது மனதை மயக்கித் தமயந்தியை விட்டுப் பிரியும்படியான எண்ணங்கள் அவன் மனதில் ஊன்றும்படிச் செய்ததல்லாமல், நளன் கையில் ஓர் கூரான கத்தியாகவும் கிடைத்தான். அந்தோ! பரிதாபம். அக்கத்தியைக்கொண்டு அவளையும் தன்னையும் ஒன்று படுத்தியிருந்த துணியை அரிந்தான். இது அரைக்ஷணம் வேலைகூட வல்ல. ஆனால் அவ்வாறு கிழித்ததும் அவன், கூட்டிலடைபட்ட பெரும் ஸிம்மமானது அதை உடைத்துக்கொண்டு ஓடுவதுபோலக் கனவேகமாக ஓடினான். சற்றுச் சென்றதும் மனச் சமாதானமற்றுத் திரும்புவன். அவன் மனம் அப்போது அலைபாய்ந்து தத்தளித்தது.

"போயொருகால் மீளும் புகுந்தொருகால் மீண்
ஆயர் கொணர்ந்த அடுபாலின்—தோயல் [டேகு
கடைவார்தம் கைபோல ஆயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம்."

என் செய்வது? வீரரையும் மல்லரையும் விண்ணவர்க்கு விருந்தாக்கித் தாரணியும்வேல் வேந்தன் தயங்கித் தயங்கிப் புத்தி மயங்கி ஒன்றும் தெரியாது உன்மத்தன் போல ஓடுவான். இடையிடையே தன் கண்ணீர் சிந்த



அழுவான்—காற்றும் காணாத வண்ணம் கிளி போல் வளர்ந்து வந்த தன் காதற்பொருளை, புழுதியிலடைந்து பாழ்மண்டபத்தில் கிடந்து அநாதையாய்க்கிடக்க விட்டுவிட்டு அவன் நெடுந்தூரம் சென்றிட்டான். அவனுடைய மனத்திற்கும் கலியால் உண்டாகிய மயக்கத்திற்கும் இடைவிடாப் போர் நடந்துக்கொண்டேயிருந்தது. இல்லற தர்மத்தின் ஒழுக்கப் பெருமையில் உதித்த காதல் பெருஞ் சக்தி தூண்டத் தூண்ட அவன் மனம் தாங்காது

"செல்லும் வெந் துயரொடுஞ் செல்லக் காலெழா
தொல்லையின் மீளும் வெய் துயிர்க்கும் ஒண்ணுத
கல்லத ரிடைத்தனி ஏகில் பேய்க்கணம்
கொல்லுமென் றுருயிர் குறைந்து சாம்புமால்."

இவ்வாறு துயரம் தூண்ட அவன் தேவதைகளையெல்லாம் தொழுதான். "தேவர்காள்! வனதேவதைகாள்! மரங்காள்! என் மனைவி பரிசுத்தை! நீங்களே அவளைப் பாதுகாக்கக்கடவீர். அவள் மஹா பதிவிரதை, கற்பிலுயர்ந்தாள், அழகிற் சிறந்தாள். யானே அவளைவிட்டுத் திருடன்போல் அகல்கிறேன். எங் நெஞ்சம் உங்களையே தஞ்ச மடைகிறது" என்று சொல்லிக்கொண்டு மீண்டும் வந்து தமயந்தியைக்கண்டு உள்ளம் புண்ணானான்; அவளது உருவையும் எழிலையும் கண்டு நெஞ்சம் அழிந்தான். ஆயினும் அவன்அன்பு காதலியைநாட நாட கலி அவனது உள்ளத்தைப் பிரித்திடவே வேலைசெய்து வந்தான். ஆக,இரு தலைக் கொள்ளி எறும்புபோலச் சங்கடமுற்று அவன் மனம் ஊசலாடிற்று. ஆனால் கலியின் வேகத்தைத் தாங்கமுடியாது கடைசிமுறையாகத் தனது காதலியைத் தழுவிக்கொண்டு கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருக அவன் வெகு பரிதாபமாக ஓடலானான். எண்ணாததெல்லாம் எண்ணியெண்ணி மனம்புண்ணாகி அவன் ஓடியவண்ணமே யிருந்தான்.

பாழ் மண்டபத்திலோ ஒருநாளும் துயருறாத உத்தமி, அரைத்துணி யணிந்து சிரித்த முகத்துடன், அந்த நள்ளிரவில் காதலனென்னுங் கடவுளைநாடிக் கருத்தொருமித்து கஷ்டமென்பதறியாதவள்போல அயர்ந்து தனக்கு வரும் துயரத்தைச் சிறிதும் அறியாது நித்திரையில் கிடந்தாள். ஒருவேளை அவள் தனது நாதன் தன்னைவிட்டுப் பிரிவதை அப்போது கனவிலாவது கண்டிருக்கக் கூடுமோ? அவள் சுகமே இருக்க! வருவது தானே வரும்.

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS AND NOTES

சிறுவர்க்கான சட்டம்

யுக்த வயது வராக் குற்றவாளிகளைக் கன்மனமுடைய குற்றவாளிகளோடு சேர்த்து வைப்பதில் நேரிடுகிற துர்த்தசைகள் பல. சிறுவர்களுக்கு, ஸகவாஸதோஷத்தால் மனம் வலிமை யுறுகின்றதேயொழிய, சிறையில் அடைபட்டதன் நற்பயன் உண்டாகிறது துர்லபமாக விருக்கிறது. இதையும் இதுபோன்ற வேறு சில சீர் கேடுகளையும் நீக்கக்கருதி, நமது சென்னைக் கவர்ன்மெண்டார் ஒரு சட்டங்கொண்டுவருவதற்கான மசோதா ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர். அதன் முக்கிய அம்சங்களானவன:— (1) குற்றவாளிகள், பதினான்கு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களாகவும், பதினான்கு வயதிற்கு மேலும் பதினாறு வயதிற்குக் கீழுமான வாலிபர்களாகவும் இருவகை யாக்கப்படுவார்கள். (2) இவர்களுக்கென்று, சீர்திருத்தப் பள்ளிக்கூடங்களும் தொழிற் பள்ளிக்கூடங்களும் ஸ்தாபிக்கப்படும். (3) வாலிபக் குற்றவாளிகளை விசாரிப்பதற்கென்றே பிரத்யேகமாகச் சில கோர்ட்டுகள் ஏற்படுத்தப்படும். அதில் நடவடிக்கைகள் சாதாரணமாகப் பகிரங்கமாக விரா. (4) குற்றவாளிகளை ஜாமீன்பேரில் விடுவது. (5) சிறைத்தண்டனையும் தீபாந்தர தண்டனையும் சிறுவர்களுக்கு விதிக்காமலிருப்பது. (6) 12 வயதிற்கு மேற்பட்டவர்களைச் சீர்திருத்தப் பள்ளிக்கூடங்களுக்கும், 12 வயதிற்குக் குறைந்தவர்களைத் தொழிற் பள்ளிக்கூடங்களுக்கும் அனுப்புவது. (7) பெற்றோர்களையோ போஷகர்களையோ சிறுவர்க்காக ஜாமீன் கொடுக்கும்படி கேட்பது, அல்லது அவர்களுக்கு அபராதம் விதிப்பது. (8) அநாதைக் குழந்தைகளையும் கைவிடப்பட்ட குழந்தைகளையும் பாதுகாக்க ஏற்பாடுகள் செய்வது.

இந்த மாதிரியான கோர்ட்டுகளும் சட்டமும் மற்றைய நாடுகளில் நடந்து வருகின்றன. நமது இந்தியாவிலும் இனி இதனால் நன்மையுண்டாகுமென நம்ப இடமுண்டு. இப்போது வெளியிட்டிருக்கும் மசோதாவில் கசையடியும் ஒருவித தண்டனையாகக் கண்டிருக்கிறது. மசோதா, சட்டமாகும்போது

இது எடுபட்டுவிடுமென எதிர்பார்க்கிறோம். ஆஸ்திரேலியா, கனடா முதலிய மாகாணங்களில் உள்ளதுபோல இங்கும் வேறு சில ஏற்பாடுகளையும் செய்யலாம். அவையாவன:— அற்ப குற்றங்களைச் செய்வோருக்கும், வாலிபக் குற்றவாளிகளுக்கும் தொழில் கல்விப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பது; சிறையிலிருப்போர்களுடைய குழந்தைகளை நல்வழிக்குக் கொண்டுவர முயற்சிகள் எடுத்துக் கொள்வது; ஸர்க்காருத்யோகஸ்தரல்லாதவர்களுடைய கூட்டுறவையும் பெறுவது;—முதலியனவாம். இந்தச் சட்டமே நமது நாட்டுக்குப் புதிதாகையால், மேலே காட்டிய விஷயங்கள் காலக்கிரமத்தில் அதனுள் சேர்க்கப்படுமென நம்புகிறோம். இன்றைக்கு வாலிபர்களாக விருப்பவர்கள் நாளைக்குப் பெரியவர்களாக ஆவார்களாதலால், அவர்கள் விஷயத்தில் எவ்வளவு சிரத்தையெடுத்துக்கொண்டாலும் தகும்.

* * *

ஒரு ரூபாய் நோட்டு

நமது நாட்டில் ஏற்கெனவே செலாவணியாகும் நோட்டுக்கள் கோஷ்டியில் ஒருரூபாய் நோட்டுக்களும் இரண்டரை ரூபாய் நோட்டுக்களும் சேர்க்கப்பட வேண்டியதற்காகச் சென்ற சில காலமாகப் பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. அவைகளின் பயனாக நாளது மாதம் முதல் தேதியன்று ஒரு ரூபா நோட்டுக்கள் வெளியிடப்பட்டன. இரண்டரை ரூபா நோட்டுக்கள் இன்னும் வேண்டிய அளவு வந்து சேராதபடியால் அவைகள் வந்தவுடன் வெளியிடப்படுமாம். வெளிவந்துள்ள ஒரு ரூபாய் நோட்டு வெகுஅழகாக அச்சடிக்கப்படுள்ளது. $2\frac{1}{2}$அங்குலம் அகலமும் $5\frac{1}{2}$அங்குல நீளமுமுள்ளதாய் (அதாவது இப்போதுள்ள 10-ரூ. நோட்டை அகலவாக்கில் மூன்றாக மடித்தால் உள்ள அளவினதாய்) இருமூலைகளில் "1ரூ." என்ற அடையாளமுள்ளதாய், கெட்டியான கடிதாசியில் அது அமைந்துள்ளது. முன்பக்கத்தில் வெள்ளி ரூபாயிலிருக்கும் உருவம் போன்ற சித்திரமும், எந்த ஆபீஸில் வேண்டுமானாலும் அதை மாற்றிக்கொள்ளக்கூடிய "வாக்குத்தத்தமும்" கீழே அக்கவுண்டாண்டு ஜனரலுடைய கையெழுத்தும் உள்ளன. பின்பக்கத்தில் வெள்ளி ரூபாயின் பின்புற உருவச் சித்திரமும் "ஒரு ரூபாய்" என்பது எட்டுப் பாஷைகளில் அடங்கியுள்ளன. இவை வெளியான தேதியிலேயே லக்ஷம் நோட்டுக்கள் செலவாயினவென்று தெரிகின்றது. இது ஒன்றே அவைகள் ஜனங்கீகாரமாகின்றனவென்பதைக் காட்டும். கூடியசீக்கிரத்தில் இவை அழுக்காகக் கூடியன வாதலால், ஒருதரம் கஜானாவுக்குப் போனதும், திரும்பவும் அவைகளை வெளியிற் செலாவணிக்கு விடாமலிருந்தால், எப்போதும் புதிய நோட்டுக்களே உலாவிவரும். இந்த ஒரு ரூபாய் நோட்டுகள் இந்தியா முழுவதிலும் எங்கு வேண்டுமானாலும் செலாவணியாகுமென்பது பெரிய சவுகரியமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

* * *

கல்கத்தா காங்கிரஸ்

முன்னொரு ஸஞ்சிகையில் கூறியபடியே இவ்வருஷத்திய இந்திய ஜாதிய மஹாநாடு நாளது மாதக் கடைசியில் கல்கத்தாவில் ஸ்ரீமதி அனி பெஸண்டின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் கூடியது. சுமார் ஐயாயிரம் பிரதிநிதிகள் இவ்வருஷம் வந்து சேர்ந்தது காங்கிரஸ் சரித்திரத்தில் இதற்கு முன்னர் நடவாத வோர் விஷயம். பற்பல விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்து முயற்சியைச் சிதறவடிப்பதை நிறுத்தி முக்கியமான விஷயங்களை மட்டும் பற்றியே ஆலோசனை செய்து தீர்மானித்தது இன்னொரு அம்சம்.

ஸ்ரீமான் வைகுந்தநாதஸேனர் வரவேற்புக் கமிடியின் தலைவராகவிருந்து செய்த அரிய பிரசங்கமும், ஸ்ரீமதி அனிபெஸண்டு அம்மாள் செய்த நீண்டபிரசங்கமும், ராஜகீய விஷயங்களில் கவனமுள்ளவர்க்கு அத்தியந்த இன்பத்தைக் கொடுக்குமென்பதற்கு ஐயமில்லை. சாதாரணமாகக் காங்கிரஸ் மஹா ஸபையில் தீர்மானிக்கப்படும் விஷயங்கள் ராஜகீய சம்பந்தமாகவே இருக்கும். இதற்கனுகுணமாகப் பற்பல தீர்மானங்கள் செய்யப்பட்டனவென்றாலும் முக்கியமான தீர்மானமென்னவென்றில், காங்கிரஸ் சங்கத்தார் வேண்டிக்கொண்ட சீர்திருத்தங்களை முதன் முதலில் இந்தியர்களுக்குக் கொடுபடவேண்டுமென்பதும், சீக்கிரத்தில் சுய அரசாட்சி இந்தியாவுக்குக் கொடுக்கப்படவேண்டுமென்பதற்கான பார்லிமெண்டு சட்டமொன்று உண்டாக வேண்டுமென்று வேண்டிக்கொள்ளப்பட்டதுமே. பிரபல வாக்மிகளான ஸ்ரீமதி அனி பெஸண்டம்மை, ஸுரேந்திரநாத பானர்ஜி, மதனமோஹன் மாலவியா முதலியவர்களின் பிரசங்கங்கள் காங்கிரஸ் பந்தலில் கூடியிருந்தவர்களுக்கு அபூர்வமான சுரோத்ரானந்தத்தைக் கொடுத்திருக்கும்.



காங்கிரஸ் சந்தர்ப்பத்தில், பதிவுபோல நடக்கும் மற்றைய மஹாநாடுகள், சிறியவையும் பெரியவையுமாக, முப்பதிற்குமேல் நடந்தன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விஷயத்தையோ, தனித்தனி ஸமூஹத்தையோ பற்றியதாகவிருந்தாலும், பசுக்களின் விருத்தி, சம்ரக்ஷணம், க்ஷேம லாபங்களைப்பற்றி கனம் நியாயமூர்த்தி வுட்ராப் (Woodroffe) அவர்களின் தலைமையின்கீழ் நடந்த மஹாநாடு வெகு முக்கியமானதாம். பசுக்களைக் காப்பாற்ற வேண்டியதின் முக்கியம், அதனால் தேசத்திற்கு உண்டாகக்கூடிய அளவில்லாத நன்மை, அதற்காகச் செய்யவேண்டிய முறைகள் முதலியவற்றைப் பற்றி ஸ்ரீமான் வுட்ராப் அவர்கள்செய்த பிரசங்கம் வெகு அழகாகவும் முற்றிலும் பயன்படக் கூடியதாகவும் இருந்தது. ஜாதிவித்யாஸம் பாராட்டாமலும், எளியவன் தனவான் என்ற பேதமில்லாமலும் எல்லாருக்கும் ஒருங்கே பயன்படத்தக்க விஷயங்களை இந்தப் "பசு மஹாஸபை" யின்கண் ஆலோசனைசெய்ய முன்வந்த ஸ்ரீமானவர்களுக்கு நமது நாடுமுழுவதும் கடமைப்பட்டுள்ளதாகும்.

* * *

இந்தியா மந்திரியின் விஜயம்.

ராஜகீய விஷயத்தில் இந்தியர்க்கு வரவர அதிகமாகத் தோன்றும் உணர்ச்சி காரணமாக, நமது பிரமுகர்களில் சிலர் கவர்ன்மெண்டாருக்கு எழுதிக்கொண்ட விண்ணப்பமொன்றில் சிற்சில சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டிருந்தனர். அதையொட்டி, இராஜப்பிரதிநிதியவர்கள் இந்தியா மந்திரிக்கு எழுதிய கடிதமொன்றில் மேற்படி மந்திரியவர்கள் இந்தியாவுக்கு விஜயஞ்செய்து நேராக விஷயங்களைத் தெரிந்துகொண்டுபோனால் நலமாயிருக்குமெனத் தெரிவித்ததை இந்தியா மந்திரியான ஸ்ரீமான் மாண்டேகு அவர்கள் அங்கீகரித்து, கஷ்டநஷ்டங்களைப் பாராது நம் நாட்டுக்கு விஜயம் செய்திருக்கின்றனர். அவர்கள், ராஜப்பிரதிநிதியுடன் நமது சென்னைநகரில் எட்டுநாள்கள் தங்கியிருந்து, ஜனஸமூகத் தலைவர்களுக்குப் பேட்டிகொடுத்தும், மஹாநாடுகள் செய்துகொண்ட விண்ணப்பங்களை அங்கீகரித்தும் திரும்பிச்சென்றனர். ராஜகீய விஷயமாக யாதொரு அபிப்பிராயத்தையும் வெளியிடுவதில்லையென்ற ஸங்கல்பத்துடன் ஸ்ரீமான் மாண்டேகு வந்தவராதலால், இந்தியாவில் அவர் அவ்விஷயமாக ஒரு பிரசங்கமாவது செய்யவில்லை. என்றாலும் ஜனப்பிரதிநிதிகள் செய்துகொண்ட விண்ணப்பங்களின் தோரணையையும், பொதுவாக ஜனங்களுக்கு ராஜகீய விஷயத்தில் உண்டாயிருக்கும் உணர்ச்சியையும் அவர் நன்கறிந்திருப்பாரெனவே நம்புகிறோம். சுயராஜ்யம் வேண்டுமென்று ஒரு சாராரும், அதைக் கொடுக்கக் கூடாதென்று மற்றொரு சாராரும், ஜனஸமூகங்களுக்குத் தனித்தனி பிரதிநிதித்வம் வேண்டுமென்று சிலரும் சொன்னதைப் பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. பொதுவாக தாராள சிந்தனையும், சிறப்பாக இந்தியர்களிடத்து அனுதாபமுங்கொண்ட ஸ்ரீமான் மாண்டேகு அவர்கள், தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல், இந்தியரது நன்மதிப்பைப் பெற்றுப் புகழடைவாரென நம்ப இடமுண்டு.

---


## இயற்கை அற்புதங்கள்

**புதிய பதிப்பு : : விலை அணா-8**

இப்புத்தகத்திற்குக் காலஞ்சென்ற ராவ் பகதூர் L C. வில்லியம்ஸ் பிள்ளையவர்கள் ஒரு முகவுரை எழுதியிருக்கிறார். இதில், மலைக்கால்கள்; எரிமலைகள்; பூகம்பம்; வெந்நீர் ஊற்றுகள்; கானல் நீரும் அதன் ரூபாந்திரங்களும்; வால் நக்ஷத்திரங்கள்; எரி நக்ஷத்திரங்களும், பொறி நக்ஷத்திரங்களும்; வானவில்; கிழலும் கிரகணங்களும்; மாலிவால் நக்ஷத்திரம்; இவைகளைப்பற்றிய விவரங்கள், ஆங்கம் படங்களுடன் எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன. வேண்டுவோர், 'விவேக போதினி' மானேஜருக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

# ஹாஸ்யத் துணுக்குகள்

## WIT AND HUMOUR

நியாயாதிபதி.— நீ குற்றவாளி யென்று ருஜு வாகிறது. என்ன சமாதானம் சொல்லுகிறாய்?

குற்றவாளி.— பிரபுவே! என்னுடைய வழக்கை முற்றிலும் விசாரித்துத் தீர்ப்புச் சொல்வீரானால் நான் செய்தது நியாய மென்றே தீர்மானிப்பீர்.

* * *

மனைவி.— இன்றைய தினம் அம்மாவுக்குத் தலைவலியாம். ஆதலால் நாடகத்துக்கு வர வில்லையாம்.

புருஷன்.—அப்படியா? ஏற்கெனவே மூன்று டிக்கட்டுகள் வாங்கிவிட்டேனே. பாக்கி யிருப்பதை யாருக்குக் கொடுக்கலாம்?

மனைவி.— ஏன்? யாரையோ பார்க்கப் போவதாகச் சொல்லி அடிக்கடி எழுந்திருந்து போய் விடுகிறீர்களே. அவருக்கு அந்த டிக்கட்டைக் கொடுத்துவிட்டால் அவர் உங்கள் பக்கத்திலேயே வந்து உட்கார்ந்திருப்பாரே.

* * *

புதிதாக வந்த பாட்டி.— ஏண்டி, கண்ணு, சவுக்கியமாக விருக்கிறாயாடி?

குழந்தை கண்ணு.— இந்த நாளி லெல்லாம் காரியம் ஆகிற வரையில் காலைப் பிடிக்கிறதுதான். நான் குழந்தையாக விருந்தபோது எல்லாரும், என்னைக்கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்தார்கள். இப்போது தம்பி பிறந்து விட்டான். என்னை ஏனென்று கேட்பாரே கிடையாது.

* * *

புருஷன்.— உனக்காக நான் பிராணனைக்கூட விட்டுவிடுவேன்.

மனைவி.— நிச்சயமாகவா?

புருஷன்.— நிச்சயந்தான். பதினாயிரம் ரூபாவுக்கு நான் இன்ஷியூர் செய்து கொண்டிருக்கிறேன்.

மனைவி.— அப்படியானால் நீர் பிராணனை விடும் வரையில் நான் உம்மைச்சேர்ந்தவள்தான்.

* * *

உபாத்தியாயர்.—உனக்கு என்ன வயசு?

மாணாக்கன்.— எட்டு.

உபாத்தியாயர்.— எப்போது எட்டு வயதாயிற்று?

மாணாக்கன்.— எனது பிறந்த நாளன்றைக்கு.

* * *

மாஜிஸ்ட்ரேட்.— இவனைக் கைது செய்த போது இவன் என்ன செய்து கொண்டிருந்தான்?

கான்ஸ்டேபில்.— ஜட்கா வண்டிக்காரனுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தான்.

மாஜிஸ்.— ஜட்கா வண்டிக்காரனுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்ததினின்றும் அவன் குடித்திருந்தா னென்று எப்படி நிச்சயிக்க முடியும்? குடிவெறியில் இல்லாதவர்கள்கூட ஜட்கா வண்டிக்காரர்களுடன் சண்டை போடுவதுண்டே.

கான்ஸ்.— எஜமானே உண்டு. ஆனால் இவன் விஷயத்தில் அங்கே ஜட்கா வண்டிக்காரனே இருந்ததில்லை.

* * *

"அடே, இரும்பைப் பொன்னாக்க முடியுமா, உன்னால்?"

"முடியும்! இரும்புச் சாமான்கள் கிராக்கியாக விற்கும் காலத்தில்."

* * *

ஜெயிலர்.— உன்னை நாளையதினம் தூக்கில் போடப் போகிறார்கள். உனக்கு ஏதாவது விருப்ப மிருந்தால் சொல்லலாம்.

குற்றவாளி.— ஒரு அற்பமான ஆசைதான் உண்டு.

ஜே.— தைரியமாகக் கேள்.

குற்ற.— இரண்டு மாம்பழம் வேண்டும்.

ஜே.— அடே! இது மாம்பழத்துக்குக் காலம் இல்லையே. இன்னும் நான்கு மாதம் செல்லும், பழம் கிடைக்கிறதற்கு.

குற்ற.— பாதகமில்லை. நான் அதுவரையில் காத்துக்கொண் டிருக்கிறேன்.

* * *



காலஞ்சென்ற
ஸர். வில்லியம் வெட்டர்பர்ன்.
The late Sir William Wedderburn.

# விவேகபோதினி


"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி X } பிங்களஞு மார்கழி :: 1918-ஞு ஜனவரிமீ { பகுதி 7


## பலவற்றி லொற்றுமை

## UNITY IN DIVERSITY

1. உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய்க் குகனே.
—கந்தரனுபூதி.

2. மூவா முதலா வுலகமொரு மூன்று மேத்தத்
தாவாத வின்பந் தலையாயது தன்னி னெய்தி
ஓவாது நின்ற குணத்தொள்ளிதிச் செல்வ னென்ப
தேவாதி தேவ னவன்சேவடி சேர்து மன்றே.
—சீவகசிந்தாமணி.

3. மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாத
மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனி னிப்பிற
வாததன் மைவந்தெய் தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்கறை
யூரிற் பாண்டிக்கொடிமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லு நா நமச்சிவாயவே. —தேவாரம்.

4. நீர்பா யுலகிற் குயிரோய்நீ
நிழீர்வீட் டுலகிற் குயிரோய் நீ
சீர்பாய்ப் பாவிற் குரையோய் நீ
திறன்கொண் டாள்வாய்க் கடலோய் நீ
ஏர்பா யிரவிக் கொளியோய்நீ
எம்மே லிரங்கிப் பிறந்தனை நாஞ்
சூர்பாய்த் துகளாற் றாய்வதற்குன்
துணைத்தா டொழும்பன் புரையாயோ.
—தேம்பாவணி.

5. போதேலாம் போது கொண்டுன்
பொன்னடி புனைய மாட்டேன்
தீதிலா மொழிகள் கொண்டுன்
திருக்குணஞ் செப்ப மாட்டேன்
காதலால் நெஞ்ச மன்பு
கலந்திலேன் அதுதன் னாலே
ஏதிலேன் அரங்கற் கல்லேன்
என்செய்வான் தோன்றினேனே.
—திருவாய்மொழி.

6. பாரிரோ வென்னை யென் னன்னையே யென்முகம்
பார்த்தருள் பழுத்திடீரோ
பாவிகள் னெஞ்ச வஞ் சஞ்சிந்த வந்துமது
பாதத்தி ழுத்திடீரோ
வாரீரோ வென்னெதிரில் வந்தெனக்கொருமுத்
வாய் கொண்டளித்திடீரோ [தம்
மகிழிரோபுகழிரோ கருணைகூர்ந்தெனையாள
வாவென் றழைத்திடீரோ
சேரிரோவென்னையுஞ் சேர்ந்தோர்க்கும் உமதருட்
டேறற்றெளித்திடீரோ
சிந்தைநொந் திடையுமடி யேனுமுமை நம்பினேன்
சித்தம்வைத் தாளுதற்கே
வாரோமெனச் சொன்ன துள்ள நீர் பின்றொடா !
வள்ளலிற ருல்வருகவே
வளருமருள்நிறைகுணங்குடிவாழுமென் னிருகண்
மணியே முகியுதீனே
—மஸ்தான் சாயப்பு பாடல்.

7. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். —திருக்குறள்.

8. வேண்டுதல் வேண்டாமை யிலா னடிசேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில. —திருக்குறள்.

விவேக போதினி

தொ. 10] பிங்களஞு மார்கழிமீ [ப. 7

## விவேகத் தாய்மை

## THE IDEAL LIFE

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்; மற்று
நிலையாமை காணப் படும்"

என்ற பொய்யாமொழியின் உண்மையை முற்று முணர்ந்த விதுரர், விஷய ஆசையை ஒழிக்க எண்ணங்கொண்டிருந்தார். ஆக அவர்க்குப் பரமஞான மூர்த்தியாகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி திருவாய்மலர்ந்து ஆணையிட்டபடி அவர் மைத்ரேயரிடம் அடைந்தனர்; அவரடிதாழ்ந்து தனது எம்பெருமானிட்ட கட்டளையைத் தெரிவித்தனர்; உத்தவர் தமக்குக் கற்றுக்கொடுத்த ஞானத்தினும் உயர்ந்தவற்றைப் பயில்விக்கும்படி வேண்டினர். அவரிடம், தான் ஸன்யாஸமார்க்கத்தில் ஈடுபடும்படியான அதிகாரம்' கிடைக்கும்படி கற்றுணர்ந்து, பரமஞான ரகஸ்யங்களில் தேர்ந்து, முமுக்ஷு மார்க்கத்தில் ஈடுபட உள்ளங்களித்தனர். ஆயினும் இதற்கு முன்னமே இவ்வாறு நிச்சயித்திருந்தனர். அதற்காகத் தாம் அக்கால் செய்த சில விஷயங்களை சொல்லாமலிருத்தல் இழுக்காகும்.

'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'

அல்லவா? ஆகத் தாம் துறவறம் மேற்கொள்வதன்முன்பு, ஹஸ்தினபுரஞ் சென்று திருதராஷ்டிரனைக் கண்டு அவனை நல்வழிப் படுத்த எண்ணங்கொண்டு அங்கு சென்றனர்; திருதராஷ்டிரனைக் கண்டனர்; அவனை மோக்ஷமார்க்கத்தில் ஈடுபடச்செய்ய மனங் கொண்டனர்; பின்வருமாறு பேசினர்:—

"என் முன்னோய்! அந்த நாளிலும் வாழ்க்கையை வீணுக்கினீர்; துஷ்டர்களுடைய வலையில் வீழ்ந்து சுகமற்று விளங்கினீர்; முன் ஆலோசனையற்றுப் பெற்ற பிள்ளைகளை எல்லாம் துறந்தீர்; வைராக்ய மென்பதோ உமக்குச் சிறிதும் இருந்ததில்லை. மற்றவர்களோ, அத்தனை பிள்ளைகள் இறந்தபின்னர் உயிரோடிருக்க மனமொப்பார்; தாங்களோ விஷய ஞானங்களில்ஈடுபட்டுக் கேவலம் ஈஷணையால் அலைப்புண்டு விளங்குகிறீரே! உமக்கு மானம் வெட்கம் இரண்டும் இல்லை; இகத்திலும் இல்லை, பரத்திலும் இராதுபோலும்! தன் பிள்ளைகளைக் கொன்றவன் வீட்டில் எந்த மனிதன் இருப்பான்?—மானங்கொண்டவன் எவனிருப்பான்? அதிலும் எந்த க்ஷத்ரியன் இருப்பான்? சின்ன நாள் முதல் பாண்டவரை வெறுத்து அவர்க்குக் கெடுதியே செய்து வந்த உமது மக்களை அவர் வென்று உம்மிடம் அன்புபூண்டு ஆதரிப்பது உமக்கு வெட்கமூட்டவில்லையா? இவற்றையெல்லாம் தாங்கள் சிந்திக்கவில்லைபோலும்! உமக்குக் கற்றுக்கொடுத்த ஞானம் ஒரு காதால் வந்து மறுகாதால் போய்விட்டது போலும். உம்மக்கள் உம்மோடு வரவில்லை. இப்பாண்டு மக்களும் உம்மோடு வருபவரல்ல. அவர்க்கும் உமக்கும் என்ன உறவுண்டு? "தந்தை தாய் தமர் தாரம் மகவென்றுமிவை எலாம் சந்தையிற் கூட்டம்" அல்லவா? அப்படித் தெரிந்திருந்தும் கேவலம் விஷயாதிகளில்வீழ்ந்து, லோக அபஸ்மாரங்களில் பாய்ந்து, சிந்தை தெளியாது சுழலும் வகை எதனுலோ? ஆசையால் வருங்கேட்டைத் தாங்கள் அறியாதவர் அல்லவே. அப்படியிருந்தும் பகை நட்பு என்னும் இரண்டு பாசக் கயிற்ருல் அலைப்புண்டு, அகங்காரத்தின் கோளாற்றினுல், செய்வது தெரியாதவர் போலப் பொருமையால் தூண்டப்பட்டு உம்மை நல்ல பதவியில் வைத்துப் பக்தி வினயத்துடன் பாராட்டிவரும் தருமனிடமும் உள்ளூறப் பகைகொண்டு விளங்குவது வயது முதிர்ந்த உமக்கு அழகா? அல்லது தகுமா? இதை அடியேன் எடுத்துச் சொல்லும்படியாக வைத்துக்கொண்டு விட்டீரே! அந்தோ! ஆசையும் அகந்தையும் பகையும் நட்பும் கேட்டிற்கே மூலமன்ருே?

"யான் எனதென்னும் அவாவறுப்போன் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்"



என்பதை முற்று மறிந்தும், அதனை வழிபடாதது எதனுலோ? தாங்கள் கற்றறிமோழையல்லவே! மற்று எதனுலோ? காலங்கடந்து, உடல் தளர்ந்து, மனந்திரண்டு விளங்கு மிந்த நாட்களிலும், ஆசையில் உழன்று அவதிப்படுவதேனே? கேவலம் உடலைப்போற்றி உயிரைத் துறப்பது நீதமா? யான் சொல்லும்வரைக்கும் தாங்கள் வைத்துக்கொண் டிராதிருந்திருக்கவேண்டுமல்லவா? இம்மாயா வாஞ்சைகளை ஒழித்துத் தாங்கள் வனஞ்சென்று, தவத்தில் கிடந்து, பேரின்பவழியில் தவழ்ந்து, பக்குவம் பெற்று, விதேஹ முத்திதரும் வீட்டையடைய உழைப்பதே உமக்கு உற்ற தர்மமாகும். அதனைக்கைவிடுவதுமுற்றும் அடாது. மாயாந்தகாரத்தி லிருந்து வெளிப்படுத்தும் ஞானவெளியில் உலாவி ஸர்வம் பிரஹ்மமயம் என்னும் அறிவில் வாழப் புறப்படும். அதற்குச் சீக்கிரம் ஆயத்தமாக வேண்டியது உமது கடமை; அதைக் கைக்கொள்ளாதிருப்பதே மடமை; இவற்றை யெல்லாம் எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ இந்த அடிமை?"

இம்மொழிகளைக் கேட்டதும் திருதராஷ்டிரனது மனமும் சற்றுக் கலங்கியது. அவன் கண்ணிற்கு முன் அவனது சிறுமையும் அவன் நடந்துவந்த நடத்தையின் தாழ்மையும் வெட்ட வெளிபோலத் தோன்றின. தான் வீணே கழித்த நாளை எண்ணி, அவன் அப்போது கவலையுற்ருன். பின், காடே சரண் புகுந்துக் கடுந்தவமியற்றி மேல்வழி நாடும்படி விதுரர் சொல்லிய நல்ல புத்தியை வழிபட எண்ணினுன். இவ்வாறு திருதராஷ்டிரனைத் தன் வழிபடுத்தியதும், விதுரர் குந்தியிடஞ்சென்று அவளுக்கும் நல்ல உபதேச மொழிகள் கூறிக் காட்டிற் சென்று மூவா முதல்வனைப்பற்றிச் சிந்தனை செய்து விளங்கும்படி தூண்டினுர். இவ்வாறு அவர் திருதராஷ்டிரனையும் குந்தியையும் வைராக்யங் கொள்ளுமாறு செய்து, அவரைக் கங்கையாற்றங்கரையோரம் ஆச்ரமவாஸஞ் செய்யும்படி அமைத்துத் தனக்கு முன்தோன்றியவர்க்குச் செய்யவேண்டிய தருமநெறியை நடத்திவிட்டு அவதூதஸந்யாஸமேற்கொண்டு மரமடர்ந்த கடுமரண்யத்துள் நுழைந்துவிட்டார்.

இப்பொழுதுதான் விதுரர் தன்னுண்மை நிலையைக் காண முற்றுந்துறந்து விளங்கினர். அவர்க்கு அப்பொழுது உலக ஆசை என்பதே கிடையாது. ஆக அவர் தேக நிலையையும் சிறிதும் கவனியாது காட்டில் யதேச்சையாக அலைந்தனர்; கவலையற்றுப் பித்தன்போலத் திரிந்தனர்; குடித்தவன்போலத் துள்ளித் துள்ளிக் குதித்தனர்; நடித்தனர்; எண்ணமற்றுச் சிரித்துச் சிரித்து கூக்குரலிட்டுக் கொக்கரித்து விளையாடினர். அவர் சில சமயங்களில் ஸமாதியில் நிலைத்துவிடுவர்; அப்பொழுது அவர்க்குத் தம்மைச்சுற்றி என்ன நடக்கிறதென்பதே தெரியாது. அப்போது அவரது ஐம்பொறிகளும் வேலையற்று, ஐம்புலன்களும் வியாபாரமற்று விளங்கும். நெடுநேரம் இப்படி ஸமாதிகலையாமலே அவர் இருந்துவிடுவர். அவர் இரு கண்களிலும் தாரை தாரையாக நீர் வழிந்துகொண்டே விளங்கும்; அவர் மயிர்கள் கூச்செரிந்து நிற்கும். ஆயினும் அவர்க்கு உலகப் பிரஞ்ஞையே இராது. காற்றும் அவரைக்கண்டு அசையாமல் ஸ்தப்தமாகி நின்றுவிடும். உச்சுவாஸ நிச்சுவாஸங்களை அடக்கி, உள்ளூற விளங்கும் நாடிகளின் வழியே அவர் மனதை ஆண்டு, தன்னுளேதாஞய் ஊறும் ஆனந்தத்தேனையுண்டு களிக்கும்போது, உலகத்திலுள்ள உயிர்கள் முழுதுமே கிளைத்துக் கிளுகிளுக்கும். மாயா விகாரங்களைத் தொலைக்கும் மருந்தாகி விளங்கும் ஸமாதியில் விதுரர் நிலைத்துப் பலநாளாய் விட்டன.

சூரியனுதயமாகித் தன் கதிர் எரித்து முதலவன் ஒளியையே அப்பொழுது விளக்கித் தான் தொட்டதெல்லாம் தங்கமாகும்படி விளங்கினுன். காலைக்காற்றில் பறந்தெழும்பிய தேனீக்களும் அந்தப் பிரணவ ஒலியின் வைபவத்தையே பாடிவந்தன. உலகமுழுதும் மங்கி அடங்கியிருந்த ஜீவகோடிகள் கிளம்பி விராடபுருஷனது வைபவத்தையே வெளியிட்டன. ஆயினும் அப்பொழுது எழுந்த தருமருக்குத் தமக்குந்தெரியாது ஆனந்த குதூஹலம் மேலிட்டது. அதற்குக் காரணம் என்னவென்று அவர்க்குத் தெரியவே யில்லை; பலபேர்களைக் கேட்டனர். அவர்கள் தாங்களும் அவ்வாறு ஆனந்த மடைந்ததாகவும் அதற்குக் காரணமறியாததாகவும் கூறினர். தருமர் திகைத்தனர். அப்பொழுது அவர்க்கு இருந்தாற்போலவிருந்து தமது தாயையும்

விதுரரையும் காணவேண்டுமென்ற ஆவல் உண்டாகியது. உடனே அவர் தமது உடன் பிறந்தவர்களுடன் திருதராஷ்டிரன் தவம் செய்துகொண்டிருந்த ஆச்ரமத்தை அடைந்தனர். அங்கு சிறிது காலந்தங்கியதும், விதுரரைப்பற்றி விசாரித்தனர். அவர் கேவலம் ஸன்யாஸ மார்க்கத்தில் நிலைத்துத் தெய்வீகத்துடன் விளங்குவதாக அறிந்தனர். இதைக் கேட்டதும் தருமருக்கு விதுரரைக் காணவேண்டுமென்ற அவா அதிகமாகி விட்டது. ஆகவே அவரைப்பற்றியே கருத்தொருமித்து நினைத்துக்கொண்டிருந்தனர்.

இம்மாதிரி தருமர் விதுரரைப்பற்றி ஆழ்ந்து நினைத்துக்கொண்டிருக்கையில், எதிரில் ஆச்ரமத்தின் முன்பாக விதுரரைக் கண்டதாக நினைத்தனர். நினைக்கவே, அவரை இருகத் தழுவிக்கொள்ளவேண்டுமென்று எதிர்கொண்டு ஆவலுடன் ஓடினர். ஆனால் அவ்வுருவம் அவர் கைக்குள் அகப்படவில்லை. திகம்பர உருவத்துடன் அது ஓடத் தலைப்பட்டுப் பின்வாங்கிக்கொண்டே இருந்தது. தருமரும் தனியே ஒருவராய் அவ்வுருவை நாடி முன்னேக்கி நடந்துகொண்டே இருந்தனர். கடைசியாக அவ்வுருவம் கடுமரண்யத்துள் புகுந்து ஒரு மரத்தடியில் யோக நிலையில் அமர்ந்து, இரு கண்களையும் மூடிக்கொண்டது. "உமது திருவடி சரணன்றி தவம் வேறெதுவும் எனக்கில்லை" என்று சொல்லி அதன் முன் முடி சாய்ந்து வணங்கி நின்றார்; அதன் வாயைத் திறந்து தன்னைக் கரையேற்றும்படி ஆசி கூறும்படி வேண்டினர். அவ்வாறு செய்யும்போது தருமரது திருஷ்டி அவ்விதுரரது ஸூக்ஷ்ம உருவத்திலேயே நிலைத்தது. அவ்வாறு நிலைக்க நிலைக்கத் தருமரது தேகம் ஸ்தம்பித்துவிட்டது; அவரது ஐம்புல வியாபாரங்களும் விதுரரது உருவத்திலேயே நிலைத்துவிட்டன. அப்பொழுது ஸூர்ய உருவத்தைக்கண்ட பயிர்கள் கிளுகிளுத்துப் புளகம் அரும்புவபோல் அவர் மனம் கிளைத்தது. அதேசமயம் விதுரரிடத்திலிருந்து ஒரு சுடர் போன்ற ஒளி கிளம்பித் தம்மை நாடி வருவதாகக் கண்டார்; ஆனால் தம்முள் அது நுழைந்து மயங்கியதைத் தருமர் அறியவில்லை. ஒன்று மாத்திரம் அவருக்குத் தெரிந்தது. முன்னிலும் தாம் மனோதைர்யத்திலும், வீர்யத்திலும், ஞானத்திலும் சிறந்து விளங்குவதாக அவர் உணர்ந்தார். புரை நீங்கிய கண்போல அவர் அறிவு மயக்க மொழிந்து விளங்குவதாக எண்ணினர். உலகமே வேறாக அவர்க்குப் பட்டது. அப்போது விதுரர் தேகம் நழுவிவிட்டதாகக்கண்டு அவர் அதிசயித்தனர்.

# ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்

## SIR WILLIAM WEDDERBURN

'தாமின்புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'

என்றார் வள்ளுவர்; அதான்றி பெத்லஹேம் நகரத்தில் தோன்றிய போத மூர்த்தியான ஜீஸஸ் க்ரைஸ்ட் என்பவரும் அயல் வீட்டானையும் தன்னைப்போலவே பாவித்து நடத்தும்படி உபதேசித்துள்ள அவரது மதக் கொள்கைகளைத் தழுவியவர் மேற்சொன்ன ஒழுக்கத்தைக் கொண்டு நடந்தாலன்றி உண்மை கிறிஸ்துவர்கள் என்று சொல்லிக்கொள்ள அருகராகமாட்டார். ஏனெனின், தன் நயம் பாராட்டிப் பிறரது சுகதுக்கங்களைக் கவனியாது தமது சுகத்தையே எவ்வழியிலேனும் அதிகப்படுத்த முயலுபவர் உண்மை ஒழுக்கங்கொண்டவராகமாட்டார். ஒழுக்கமே எவர்க்கும் பெருமை தருவது; அதுவும் குற்றமற்றதெனின் பெருமையிற் பெருமை; அதிலும் உண்மை வழியினீடுபட்டுத் தமது பொதுஜன சுகத்துக்காக உழைத்தல் உத்தமத்தில் உத்தமம்; தமது ஜாதியிற் சேராத அந்நியரது சுகதுக்கங்களை நாடி அவற்றை ஒழிக்கத் தமது வாழ்நாள் முழுவதும் செலவிட்டு மனச்சமாதானத்துடனும் உண்மை ஊக்கத்துடனும் உழைப்பது பொன்மலர் நாற்றமுடைத்தாம். அவ்வாறு உழைப்பதில் தமது ஜாதியாரது ஏளனத்திற்கும் அவதூற்றுக்கும் இன்னும் பலவித துன்பங்களுக்கும் இடந்தரும். ஆயினும் நன்னெறியில் நடப்பதே நலமென்று கங்கணங்கட்டிக்கொண்டு நடப்பவரது ஒழுக்கத்தினாலேயே உலக ஸுகம் நிலைத்திருக்கிறதென்பது திண்ணம். இம்மாதிரி உழைத்தவருள் சின்னாள்முன் காலஞ்சென்ற ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் என்பவர் ஒருவராவர்.

இப்போதைக்கு எண்பது வருஷங்களுக்கு முன்பு 1838-ம் வருஷம் மார்ச்மீ 22உ எடின்பரோ என்னும் நகரத்தில் அவர் ஜனனித்தனர். அவரது வம்சம் நெடுநாளாகக் கீர்த்தி வாய்ந்த வம்சம்; புராதனமானது; அதிற் பிறந்தவரெவரும் இராஜ ஸேவையில் உண்மை ஒழுக்கங் கொண்டு உழைத்தவர். அதில் வெட்டர்பர்ன் தோன்றியது அதிசயமாகாது. அவரது தந்தை பதினெட்டாம் நூற்றாண்டு ஆரம்பத்திலேயே ஸிவில் ஸர்விஸ் உத்தியோகத்தில் வேலை பார்த்துவந்தனர். ஆக, வெட்டர்பர்ன் பிறக்கும்போது அவர் கிட்டதட்ட 30 வருஷம் இராஜஸேவை செய்துள்ளார். அவரது தமையனும் 1844-ம் வருஷம் கல்கத்தா ஸிவில் ஸர்விஸில் அமர்ந்து, அவ்வேலைக்கே உயிரை அளித்தார். வெட்டர்பர்னும் இளமையிலேயே நன்கு கற்று 1859-ம் வருஷம் ஸிவில் ஸர்விஸ் பரிக்ஷைக்குச் சென்று பரிக்ஷைப் பட்டியில் மூன்றாவதாக நின்றார். பம்பாய் ஸிவில் ஸர்விஸ் வேலையிலமர்ந்து 25 வருஷம் உண்மை ஊக்கத்துடனும் பொது ஜனங்களிடம் அனுதாபத்துடனும் விளங்கி வந்தனர். அவ்விராஜதானியில் வரிசைக் கிரமமாக முதலில் கலெக்டர் ஸ்தானத்தை வகித்தார். பிறகு பம்பாய் கவர்ன்மெண்டின் உதவி காரியதரிசியாக இருந்து ஹைகோர்ட் ரிஜிஸ்ட்ராராக நியமிக்கப் பெற்றனர். அதன் பிறகு ஸிந்துப் பிரதேசத்தின் தலைமை அதிகாரியாயிருந்தனர். பின்னர், பம்பாய் கவர்ன்மெண்டில் காரியதரிசியாவதற்கு அவர் திறமை இடங்கொடுத்தது. இப்பதவியிலிருந்து அவர் ஹைகோர்ட் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டுப் பொது ஜன திருப்திக்குப் பாத்திரரானார். கடைசியாக அவர் அவ்விராஜதானியின் நிர்வாக ஸபையின் அங்கத்தினராக விருந்து தமது ஊக்கமுழுவதும் பொதுஜனத்திற்கும் இராஜாங்கத்திற்கும் நலத்தையே செய்யும்படியாக உபயோகித்தனர். 1887-ம் வருஷம் அவர் இராஜஸேவையை விட்டு விலகினார்.

இராஜாங்க ஸேவையிலிருந்து விலகியதும், அவர் பொதுஜன ஸேவையைக் கைக்கொண்டனரென்பது இங்கு இழுக்காகாது. அக்காலம் இந்திய நாட்டிற்கு வந்த ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்கள் தமது வாழ்க்கையின் பொறுப்பை உத்தேசித்தே வந்தவரல்லர். ஸிவில் ஸர்விஸ் கமிஷன்களின் முன்பு கொடுத்த ஸாக்ஷியங்களைக் கவனிக்குமிடத்துச் சென்ற 350 வருஷங்கட்கு முன்பு வந்த உத்தியோகஸ்தர்கள் இந்தியாவுக்காக உண்மையில் பாடுபட்டு உழைக்கவேண்டுமென்றும், இந்தியரைப் படிப்படியாக உயர்த்தவேண்டுமென்றும், இந்திய நாட்டை தர்ம ஸம்ரக்ஷணார்த்தமாக ஆங்கில மன்னர் ஆள்வதாகவும், அதைத் தாம் நிறைவேற்ற உழைத்ததாகவுமே வெளிப்படும். ஆகவே, அவர் பொது ஜனங்களின் அவாக்களைக் கவனித்து, அவற்றைப் பூர்த்திசெய்ய எவ்வாறு ஒழுகவேண்டுமென்பதைப்பற்றிக் கவலைகொண்டது பொருத்த முடைத்தாகும். வெட்டர்பர்னும் நூற்றாண்டு காலமாகத் தம் வம்சத்தார் உழைத்து வந்த ஸிவில் ஸர்விஸில் உழைத்து, மேற்படி அபிப்பிராயங் கொண்டிருந்தா ரென்பது அதிசயமாகாது. ஆகவே அவர் மனம் இந்திய நாட்டின் துன்பங்களெல்லாம் நீங்க என்னென்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றியே கவலை கொண்டிருந்தது.

அக்காலம் மிஸ்டர் ஏ. ஓ. ஹ்யூம், ஸர் ஹென்ரி காட்டன் இவர்களுடனும் இந்தியப் பொது ஜனங்களுடனும் கலந்து இந்திய ஜாதீய மஹாநாடு என்னும் மஹா ஸபையின் ஸ்தாபனத்திற்கு உழைத்தனர். அம்மஹாநாடு 1889-ம் வருஷத்தில் பம்பாய் நகரத்தில் ஐந்தாம் முறை கூடியகாலத்து—அக்காலம் வெட்டர்பர்ன் தமது வேலையை விட்டு இரண்டு வருஷங்கள்கூட ஆகவில்லை—அம்மஹா நாட்டின் அக்கிராஸனாதிபதியாகக் கீழ்வருமாறு கூறினர்:—

"நான் உமதிடையே இருபத்தைந்து வருஷங்களாக வாழ்ந்துவருகிறேன். ஆயினும் என்னிடம் இந்தியரெவரும் சிறிதும் அன்பற்ற செயல் எதுவும் செய்தாரென்று சொல்ல எனக்குத் தெரிந்தவரையில் எதுவுமில்லை. ஆனால் அக்காலம் முழுவதும் இந்திய ஜனங்களின் ஸேவையிலேயே இருந்தேன்; அவர்களுடைய உப்பையே தின்றேன். என் வாழ்க்கையில் எஞ்சிய பாகத்தை அவர்க்கே முழுவதும் அர்ப்பணஞ் செய்ய நான் எண்ணியிருக்கிறேன்."

இம்மாதிரி இக்காலத்தில் எந்த ஸிவிலியனாவது சொல்வனென்பது எண்ணவும்படுமா? வெட்டர்பர்ன் போன்றவர்தான் அப்படிப் பேசவும் முடியும்; அதற்கிசைய நடக்கவும் முடியும். அவர் எப்பொழுதும்,

'எண்ணித் துணிக கருமம்; எண்ணியபின்
எண்ணுவ மென்ப திழுக்கு'

என்னும் பொய்யாமொழியையே தமது வாய்மொழியாகக் கொண்டிருந்தனர். ஆகவே அவர் தாம் நினைத்தவண்ணம் செய்யக் கங்கணங் கட்டிவிட்டனர். அவர்க்கு இந்நாட்டைத் தவிர்த்து வேறொன்றும் ஆசைக்குகந்த பொருளாய் இருக்கவில்லை. மேற்சொன்ன மஹா நாட்டை ஸ்தாபிக்க அவர் வெகுவாக உழைத்தார். அவர் இராஜஸேவையிலிருக்கும்போதே அம்மஹா நாட்டிடம் அனுதாபங் காட்டிவந்தனர். 1885-ம் வருஷந், தான் முதன் முதல் காங்கிரஸ் என்னும் அம்மஹாநாடு பம்பாயில் கூடியது. அதன் அக்கிராஸனத்தை அவ்விராஜதானியின் தலைவ்ரான கனம் லார்ட் ரே என்பவர் வஹிக்கவேண்டுமென்று அவர் பெருமுயற்சி செய்தார். இதை இக்காலத்திலும் காணலாமன்று ? அக்காலம் இந்தியநாட்டு கவர்னர் ஜனரலாக இருந்த லார்ட் டபரின்கூட அம்மஹா நாட்டின் விஷயமாகப் பெரும் அபிமானங்காட்டினூர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. இவரது தூண்டுதலினாலேயே இச்சபை ஏற்பட்டதென்றும் சொல்லலாம். நிற்க, அதிகாரிகளை அச்சபையின் தலைவராக நியமிப்பதால் ஏதேனும் ஸங்கடங்கள் ஏற்படும் என்பதை உத்தேசித்து மேற்படி ஆலோசனை கைவிடப்பட்டது.

ராஜ ஸேவையிலிருந்து விலகியதும் நெடுநாளாக விட்டுப் பிரிந்திருந்த தம் தாய் நாட்டிற்குச் சென்று, அங்கு காங்கிரஸ் கமிட்டியின் பிரதிநிதியாக விளங்கி 'இந்தியா' என்னும் வாரப் பத்திரிகையைத் தமது முழு ஊக்கத்துடனும் நடத்தி, இந்திய ஜனங்களது அவாக்களையும், ஆசைகளையும், அவர்க்கு பிரிடிஷ் பொதுஜனங்கள் செய்யவேண்டிய கடமைகளையும், மேற்படி ராஜாங்கத்தார் இந்தியாவுக்குச் செய்யக் கடமைப்பட்டுள்ள ஒழுங்குகளையும் விளக்கிவந்தனர். 1889-ம் வருஷத்தில் அவர் காங்கிரஸ் ஸபையின் அக்கிராஸனம் வகிக்க இந்தியாவுக்கு வந்திருந்தனரேனும், உண்மையில் அவர்க்கு இந்தியாவைக் காணவேண்டுமென்னும் ஆசையானது உள்ளூறத் ததும்பிக்கொண்டே யிருந்தது. ஏனெனில் 1904-ம் வருஷத்தில் அச்சபையின் தலைவராக ஸர் ஹென்ரி காட்டன் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கிலாந்திலிருந்து அப்பதவியை வகிக்க வரும்போதும், வெட்டர்பர்னும் அவருடன் விஜயமானூர். இந்தியாவுக்கு நன்மை யுண்டாகுமென்று தோன்றும் பக்ஷத்தில், அவர் தம்மால் முடிந்தவரை எல்லாவற்றையும் செய்யத் தயாராயிருந்தனர். ஆங்கிலர்களுக்கே ஸ்வாதந்தர்ய உணர்ச்சி அதிகமுண்டு. அதிலும் அதில்லாதவர்க்கு அதைக்கிடைக்கும்படி செய்ய ஆவலும் உண்டு. இந்த ஆவல் வெட்டர்பர்னிடம் அளவுக்கு மிஞ்சி யிருந்தது. ஆக, இந்தியரது கஷ்ட நிவாரணத்தின் பொருட்டும், நன்மை யேற்படுவதின் நிமித்தமும் ஊக்கங்கொண்ட அவர், இந்தியாவின் நன்மையை உத்தேசித்தே பார்லிமெண்ட் மஹா ஸபையின் அங்கதினராய்த் தேர்ந்தெடுக்க அபேக்ஷகராக நின்றனர். 1893-ம் வருஷம் முதல் 1900-ம் வருஷம் வரை அவர் மெம்பராக விருந்து, தாராளக் கக்ஷியில் உழைத்து, இந்தியாவினது நலத்தை உத்தேசித்துப் பலமுறையும் உத்ஸாஹத்துடனும் உத்வேகத்துடனும் யாவரும் வியக்குமாறு இடைவிடாது பேரிடி முழக்கென எவரும் மறுக்காதவிதம் பேசியுள்ளார். அவர் பேசும்போதெல்லாம் வெகு கவனத்துடன் அவர் வாய்மொழிகள் கவனிக்கப்பட்டன. அதற்கு அவரது உத்தம நோக்கமும் நன்னடக்கையும் உண்மை நெறியுமே காரணங்களாகும்.

1895-ம் வருஷத்தில் அவர் இந்திய செலவைப்பற்றிய கமிஷன் அங்கத்தினராக இருந்து இந்திய தேசத்திற்குச் சிறந்த தொண்டு செய்துள்ளார். மேலும் தமது சொந்த சிரமத்தினால் ஏற்படுத்திய இந்தியாவைப்பற்றிய பார்லிமேண்டரி கமிட்டியின் தலைவராக அவர் விளங்கிய காலத்து அவர் காட்டிய சாமர்த்தியமும், உத்ஸாகமும் உலகப் பிரஸித்தம். எப்படியேனும் இந்தியாவுக்கு உதவவேண்டுமென்பதே அவரது சிறந்த விருப்பம். அதற்காக எது தடையா யிருந்தாலும் அதைத் திரணமாக மதிப்பது அவரது இயற்கையாகிவிட்டது. 1908-ம் வருஷத்தில் அவர் நோயினால் அதிகமாகப் பிடிக்கப்பட்டனர்; அவருடம்பு இளைத்து பலம் குறைந்து வேகம் குன்றியது. ஆயினும் 1910-ம் வருஷத்தில் அலகாபாத்தில் நடந்த காங்கிரஸ் மஹாஸபைக்கு அக்கிராஸனாதிபதியாக இந்திய ஜனங்களால் நியமிக்கப்பட்டபோது பிரயாணம் தகாதென்று பெரிய வைத்ய சாஸ்திரிகள் தடுத்தபோதும், தமது தேக நிலைமையையும் கவனியாது, இந்தியாவுக்கு அவர் வந்தது மிகவும் வியக்கத்தக்கதல்லவா ? இதுபற்றிக் காலஞ்சென்ற கோகலேஅவர்கள் தமது பிரசங்கத்தில் இவரைப்பற்றிக் கூறிய மொழிகள் கவனிக்கத்தக்கன:

"நமக்கென்றே அவர் பார்லிமெண்ட் ஸபையின் அங்கத்தினராயினர்; நமக்கென்றே அப்பதவியை விடுத்தனர்; நமக்கென்றே அவர் தக்க நேயர்களை விரும்பினர்; நமக்கென்றே பலரது பகைக்கும் பாத்திரரானூர்; நமக்கென்றே கீழ்மையிலும் கீழ்மையான விருத்தியைக் கைக்கொண்டனர்; நமக்கென்றே அழியா வேலையைச் செய்ய ஆத்திரங் கொண்டார்;ஒன்றுதான்—இந்தியாவுக்கு நன்மைமாத்திரம் உண்டாகும் பக்ஷத்தில் எதுவும் அவர்க்குப் பெரிதல்ல; செய்வதற்கு எதுவும் அவர்க்குக் கஷ்டமல்ல."

பார்லிமெண்ட் மஹா ஸபையை விட்டுவிட்டு அவர் இந்தியா பத்திரிகையை நடத்திய காலத்தில் அவர் தமது அனுபவத்தையும் ஞானத்தையும் முற்றும் உபயோகித்தனர். அவர்க்குத் தூரதிருஷ்டியும் தாராள சிந்தையும் அதிகம் என்பதைக்கொண்டே நம்மவர் அவரையே அபத்திரிகையை நடத்த விரும்பினர். அவர் அப்பத்திரிகையின் வாயிலாக ஆங்கில பொது ஜனங்களை இந்தியாவைப் பற்றி உணரும்படி செய்தனர்; இந்தியாவின் இராஜாங்க அமைப்பைச் சரியான அஸ்திவாரத்தின்மேல் கட்டவேண்டுமென்று வற்புறுத்தினர்; தேச நிர்வாக ஸபை இந்திய சட்ட ஸபைக்கு அடங்கி நடக்கவேண்டுமென்று எடுத்துக்காட்டினர் ; அவ்வாறின்றேல்,அது ஆள்பவர்க்கும் ஆளப்படுபவர்க்கும் சுகத்தைத் தர முடியாதென்று எச்சரித்தனர். கடைசி முறையாக அவர், இந்தியர்க்குச் சொல்லிய மொழிகள் கவனிக்கத்தக்கன. அவை வருமாறு:—

"நான் சொல்வதைப்பற்றி நீங்கள் கோபிக்கமாட்டீர்களென்று நம்புகிறேன், ஆங்கில நாட்டிற்குச்சென்று இந்தியாவின் தேவைகளைப்பற்றிப் பிரிடிஷ் பொது ஜனங்கள் அறியுமாறு செய்யவேண்டிய மிகவும் முக்கியமான வேலையின் ஆரம்பத்தைப் பற்றியும், உங்களது பொறுப்பைப்பற்றியும், சரிவர நீங்கள் உணராததைப்பற்றி நான் வருந்துகிறேன். உங்களது காரியம் கைகூட ஆங்கில பொது ஜனங்களின் உதவியும், ஒத்தாசையுமே சிறந்த வலிமை. அதைக் கைநழுவவிடுவது தகுமா? நான் இதைப் பற்றிப் பல முறையும் இங்கு வந்தபோதெல்லாம் வற்புறுத்தி யிருக்கிறேன். மறுபடியும் நான் வேண்டிக் கொள்ளுகிறேன். உயிரினும் சிறந்த இவ்விஷயத்திற்கு உமது கவனத்தைச் செலுத்துமாறு நான் வேண்டிக்கொள்ளுகிறேன். இது தான் செய்ய வேண்டியது;—அதாவது இந்திய விஷயங்களைப் பற்றி இந்திய அபிப்பிராயத்தை ஆங்கிலப் பொது ஜனங்கள் அறியுமாறு ஒழுங்காகவும், அமரிக்கையாகவும், இடைவிடாதும் முயற்சிக்க வேண்டியதே."

இம்மொழிகளை நமது ஜனங்கள் முற்றும் கவனித்தன ரில்லை. அது பரிதாபமே யாயினும், தற்காலம் அம்மொழிகளைச் சிறிதேனும் வழிப்பட்டு, இந்தியர் சிலர் சென்று ஆங்கில நாட்டில் பொது ஜனக் கூட்டங்களின் முன் இந்திய தேவைகளையும், விருப்பங்களையும் வெளியிட்டு உழைப்பதைக்கண்டு அவர் சற்றே சந்தோஷப்பட்டிருக்கலாம். ஆனால் அவர் முற்றும் அறிவதற்குள் நல்லவர், அல்லவர் என்னாது சிறிதும் தாக்ஷண்ய மற்று வேலைசெய்யும் அக்கொடும் கூற்றன் அவரைத் தன் வாய்க்கொண்டு விட்டனன். என் செய்வது ? வருவன தாமே வரும்.

மொத்தத்தில் வெட்டர்பர்ன் தன்நயத்தைச் சிறிதும் கவனியாதவர். எவ்வேலையைக்கொண்டாலும் உண்மையாக உழைப்பதே அவர் ஸ்வபாவம்—இதற்கு அவர் இராஜஸேவையை விட்டு விலகிய காலத்து, அவர் ஊழியத்தைக் கவர்ன்மெண்டார் மெச்சிய அறிக்கையே சான்ருகும். அவ்வறிக்கையில் அவர் இந்தியர்களது நிலைமையை உயர்த்துவதற்கு எப்போதும் ஆவலாய் இருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. இந்திய ஜனங்கள், அவரது பொது நலத்தன்மையை உத்தேசித்து, பண முடிப்பு ஒன்றை அளித்தனர். அதை அவர் பம்பாய் இராஜாங்கச் சங்கமெனும் பொதுஜன ஸங்கத்துக்கு ஸமர்ப்பித்துவிட்டனர். இவர்க்கு நண்பர்கள் அநந்தம். இந்தியதேச ஸேவகர் முற்றும் அவர்க்கு வேண்டியவர். ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தராக விருந்தகாலத்து நேர்மை, அனுதாபம், நியாயவிருப்பம் இவற்றையே முக்குணங்களாகக் கொண்டு விளங்கினர். அதனால் இந்தியர் அவரைக் கௌரவித்தனரெனினும், அவரது சொந்த ஸமூகத்தினரும் வெறுக்கவில்லை; அதற்கு இவரது சிறந்த ஒழுக்கமும், மிக்க வணக்கமும் சாமர்த்தியமுமே காரணம். இந்தியர்கள் அவரைத்

தமது உரிமைகளைப்பெறப் பெரிய ஆதரவாக நம்பியிருந்தனர். அவரும் தமது வாழ்நாள் முழுதும் அவரது நன்மைக்காகவே உழைத்தனர். மொத்தத்தில் அவர் இல்லாமை, நம்மவர்க்குப் பெருந்துக்கத்தை விளைக்காதிருக்காதென்பது திண்ணம். தற்காலம் இந்தியத் தலைவர்கள் இங்கிலாந்து சென்று இந்நாட்டு விஷயங்களை நேரில் சொல்வதற்கு அவர் இருந்திருந்தால் மிகவும் ஸாதகமாயிருக்கும். ஆனால், காலத்தின் தெய்வீகத்தால் அவர் நம்மவருடன் கூடி உழைக்கும்படி யில்லாமற் போனது வியஸனிக்கத் தக்கதே. அதைப் பற்றி எண்ணுவதில் யாதும் பிரயோஜனமொன்றுமில்லை. அவர் சொல்லிய விதம் நடப்பதே நமக்கு முறைமை. அதையே நாம் கடைப்பிடிப்போமாக! அதற்கு அவரது வாழ்க்கையே வழிகாட்டும் என்பது திண்ணம். அவரைப்பற்றிக் காலஞ்சென்ற கோகலேயின் மொழிகளைக்கொண்டு இதை முடிப்போம்:—

"இந்நவீன காலத்தில் நமக்கென்று உதவி புரிந்த இச்சிறந்த மஹாநுபாவரது தன்மை விசித்ர சித்ரம், அதன் அமைப்பைச்சொல்லக் கட்டுக்கடங்காது. அவ்வளவு பெருந்தன்மையும் அழகும் தெய்வீகமும் வாய்ந்தது; அது அன்பு, ஆதரவு, அச்சம் இவற்றுடன் வழிபடத்தக்கது; போனது, நியாயத்தில் கருதத் தகுந்தது."

வெட்டர்பர்ன் தமது கல்லறைமீது வரைய வேறு மொழிகளும் வேண்டுமென்று விரும்புவாரா? அந்தோ! என்றைக்கு நாம் வேறொரு வெட்டர்பர்னைப் பெறுவோம்?

"எல்லா முன்னுடைய செயலே".

---

# தாவர நூல்

## BOTANY

### பிரவேசம்

சிறுவர்களே! என்ன ஸந்தோஷகமான காலமிது! இந்த வஸந்த காலம், நமக்கு எப்பொழுதும் ஸௌக்கியத்தைத் தருவதல்லவா? நம்மைச் சுற்றிப் பல புற்பூண்டுகளும் கொடிகளும், செடிகளும் மரங்களும் செழித்துப்படர்ந்தும் வளர்ந்தும் நமது கண்ணைப் பறிக்கின்றன. இதுதான், நாம் உற்று நோக்கிக் கவனித்து மரங்கள் செடிகள் கொடிகள் இவற்றின் வளர்ச்சி கிளர்ச்சி ஆதாரம் வாழ்க்கை இவற்றைப் பற்றிப் பரீக்ஷித்து உணர நல்ல காலமாகும். நாம் முன்னமே விதைத்த விதைகள் எல்லாம் முளைவிட்டுத் தழைகளுடன் பொலிகின்றன. இவற்றையெல்லாம் காணும்பொழுது உங்களுக்கு ஒரு குதூஹலமுண்டாகவில்லையா? பச்சைப் பசேலென்று படர்ந்து அடர்ந்து நம் கண்ணைத் தொடர்ந்து பறிக்கும் காட்சியுடன் விளங்கி அவை நமது மனத்திற்கு எவ்வளவு ஸந்தோஷத்தையும் ஆநந்தத்தையும் கொடுக்கின்றன!

வாரும்! நமது தோட்டத்தைச் சுற்று முற்றும் பார்ப்பதுடன் இச்செடி கொடி மரங்களைப்பற்றி உமக்குச் சில விஷயங்களைத் தெரிவிக்கிறேன். சற்றுக் கேளுங்கள்; கவனித்துப் பாருங்கள்; முதலில் உங்களுக்குச் சில பொது விஷயங்கள் சொல்லுகிறேன்.

நமக்கும் இந்த மரம் முதலியவைகட்கும் என்ன பேதம்? நேற்றுச் சிறிய குழந்தையாயிருந்தவன் வளர்ந்து பெரியவனாகிப் பெரிய ஸம்ஸாரத்தைத் தாங்கும் ஆளாகிவிடுகிறான். அதோ தெரியும் அந்த ஆலமரத்தின் விழுதிகள்கூட ஒவ்வொன்றாக சிறு சிறு நூல்போல முதலில் தோன்றியவை வரவர வளர்ந்து பூமியுள் பாய்ந்து தாய்மரத்தைத் தாங்குகின்றன. இதன் உண்மையையே

'மைந்தடி யற்ற வாலம் நடுங்கிவீழ்கின்ற தென்று வந்த வீழ் ஊன்றிவீழாவகை நிலை தெரிக்கும்'

என்று வர்ணித்திருக்கிறார்கள். ஆனால் மரத்திற்கும் நமக்கும் பேதம் சில உண்டு. நாம் வேறு இடங்களுக்குப் போக முடியும்; நாம் வேண்டியவற்றை நாடி அடையமுடியும்; நமது எண்ணங்களை நன்கு வெளியிடமுடியும்; தகாத காரியங்களைத் தடுக்க மனத்தை அடக்க முடியும். ஆனால் மரம் முதலியன ஐம்புலன்களால் ஆட்டப்படுவன வென்று பார்ப்பவரால் சொல்லமுடியாது. அவற்றிற்கு வளர்தல், தழைத்தல், பூத்தல், காத்தல், அழிதலாகிய தொழில்களன்றி வேறு கிடையா. ஆனால் அவை ஜீவராசிகள்போல நாள் தோறும் வளர்கின்றன என்பது மாத்திரம் யாவருமறிவர். அவை மனிதர்கள்போலத் தமது எண்ணத்தை வெளியிடவும் நோயினால் வருந்தவும் தமது கஷ்டங்களைக் காட்டவும் முடியும் என்று எவரும் நினைக்கவில்லை. சில சாஸ்திர ஆராய்ச்சியில் தேர்ந்த நிபுணர்கள், உடம்பின்மேல் பட்டால் அந்த ஸ்பர்சத்தை நாம் அறிவதுபோல அறியும் ஞானமாத்திரம் மரங்களுக்கு உண்டென்று வெளியிட்டிருக்கிறார்கள். இவ்வுண்மையைத் தொட்டாற் சிணுங்கி என்னும் பூண்டு நன்கு புலப்படுத்தும். நாம் அதன்மேல் கையால் தடவினால் கூச்சமடைந்தாற்போலச் சுருண்டு இலைகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்கின்றன. உணர்ச்சி மாத்திரமல்லாமல் வேறுசில பொறிகள் மிகக் குறைந்த வலிவுடன் விளங்குகின்றன வென்றும் சிலர் அபிப்பிராயப்பட்டிருந்தார்கள். சாஸ்திரங்களில் விசாரஞ் செய்த நமது பெரியோர் எவரும், கல் முதல் மனிதன் வரையுள்ள வஸ்துக்களின் உள்ளிருந்து வேலை செய்யும் உணர்ச்சிகள் ஒன்றே என்று ஊகிக்கும்படியாக நமது ஜன்ம விசேஷங்களின் மாற்றத்தைப்பற்றி

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்

என முறையிட்டிருக்கிறார்கள். அம்மொழிகள்

"பித்தர் சொன்னவு பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ"

என்னும் ஆசாரவழக்கிலேதான் பலபேரால் மரியாதை செய்யப்பட்டன. அவற்றின் உண்மை நமது மதத்தில் ஊன்றிய நிலையைக் கவனித்தவர்க்குத்தான் அறிய முடியும்படியாக இருந்தது. ஆனால் தற்காலம் பரம ஞானியாக எங்கும் கொண்டாடும்படி அறிவிற் செழித்த தாவரவஸ்து சாஸ்திர பரிசீலன சிகாமணியாகிய ஜகதீச சந்திர வஸு (போஸ்) அவர்கள் நூதனமாக ஏற்படுத்திய அத்யத்புதக் கருவிகளால் பெரியோர் வாக்குக் கெல்லாம் பெரும் ஆதாரம் ஏற்பட்டுவிட்டது. அவரல்லவா இந்தியச் செல்வியின் செல்வக் குமாரராவார்? அவரது யந்திரங்களின் மூலமாக இலைகள் முதலியன அழுவதும், விஷமுண்டதால் மயங்குவதும், கஷ்டத்தைப் பொறுக்க முடியாது அலறுவதும், இருந்தாற் போலவிருந்து படும் அதிர்ச்சியைத் தாங்கமுடியாது வாடுவதும்—இவைமுதலாகிய செயல்கள் நம் கண்ணாரக் காணும்படி காட்டப்படுகின்றன. நீங்கள் எப்பொழுதாவது செடியிலிருக்கும் இலையைப் பறித்தால், அது அவ்வலி தாங்கமுடியாது அழுமென்று நினைத்திருப்பீர்களா? உம்மிடம் அது வெறுப்புக் கொள்கிறதென்றாவது நினைத்திருப்பீர்களா? ஆனால் அது அவ்வாறு செய்வதை ஜகதீச சந்திரரது கருவி, அங்கை நெல்லிக்கனிபோலக் கண்ணெதிரே நன்கு புலப்படுத்தும்.

ஆகையால் மரம் முதலியவைகளும் நம்மைப்போலவே உயிருள்ள பிராணி என்பது உங்களுக்குத் தெரிகிறதல்லவா? அவைகளுக்கும் உம்மைப்போலவே உச்சுவாஸ நிச்சுவாஸம் உண்டு. அவைகளால் ஒன்றுதான் முடியாது; அதாவது தம்மிருப்பிடத்தைவிட்டு நடந்து வேறிடம் போகமுடியாது. அதனாலே அவற்றிற்குத் தாவரமெனப் பெயர் ஏற்பட்டிருக்கிறது. தாவரம் என்பது வடமொழி; ஸ்தாவரம் என்னும் பதத்தின் சிதைவு. அது அசையாதபொருள் எனப் பொருள்படும். கல், மரமுதலியவற்றிற்கெல்லாம் அதுபொருந்துமாயினும், இங்கு நாம் எழுதும் விஷயத்தில் மரம் செடி கொடி எனப் பிரிவடைந்து விளங்கும் மரப் பொதுப்பெயராகப் பாவித்துக்கொண்டு, இவற்றின் வளர்ச்சி முதலிய விஷயங்களைக் கவனித்துப் பார்ப்போம்.

அப்படிச் செய்யும்போது உலக சிருஷ்டியின் அமைப்பின் அற்புதமும், அதை அமைத்த எம்பெருமானது அளவிட முடியா அறிவும், அவரிடம் நாம் எவ்வளவு அன்புடன் ஒழுகவேண்டுமென்னும் தர்மமும் நன்கு விளங்கும். இந்தியர்கள் பரமார்த்த விஷயக்கனவு காண்பவரல்ல; அவர், உலகத்தில் உள்ள ஸர்வ வஸ்துக்களும் அந்தர்ப் பூதமாக உயிர் வாய்ந்திருப்பனவே என அனுபவரீதியாக அறிந்தே ஸர்வம் பிரஹ்ம மயம் என்று வெளியிட்டு, விஷயப்போரில் தத்தளித்து தற்காலம் அனர்த்தப்படும் லோகாயத ஞானிகள்போலப் பித்துப் பிடித்தவரல்லர்;—என்பதும் அப்பொழுது நன்கு புலப்படும். மேலும் இந்தியர்கள் மற்ற ஜாதியர்க்குப் போதிக்க மேலேற்றுக் கொண்டுள்ள விசேஷ தர்மமும் வெளியாகும்.

# தற்கால ஸ்திரீகளின் அநுபவங்கள்

## EXPERIENCES OF MODERN WOMEN

(ஸ்ரீமதி சுந்தரம்மாள்.)

நானும் என் ஸகோதரியும் கஷ்டமான நிலைமையிலுள்ள ஸ்திரீகளைப் பார்த்துப் பரிதாபப்படுவது வழக்கம். எங்களிடம் வருகிறவர்களைத்தவிர, அக்கம்பக்கத்திலுள்ள வீடுகளில், ஏதாவது கஷ்டமிருந்தால் போய்ப்பார்த்து, அங்கு அசௌக்கியமோ, தரித்திரமோ, பிரஸவமோ எதுவானாலும், ஏதாவது எங்களால் செய்யக்கூடிய உதவியிருந்தால் செய்து அவர்களைக் கஷ்டத்திலிருந்து விடுவித்துக் காப்பாற்றுவது எங்கள் கடமைபோல் பாவிப்போம். சிறிய பெண்குழந்தைகள் படிப்பதற்காக ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தி யிருக்கிறோம். குடும்ப ஸ்திரீகளுக்குப் பகலில் படிப்பு, ஸங்கீதம் சொல்லிக்கொடுப்பதுடன், குடும்பத்திற்கு வேண்டிய துணிமணிகளைத் தைக்கவும், குழந்தைகளைத் தற்காலத்துக் கேற்றவாறு வளர்க்கவும், சில்லரை வியாதிகளுக்கு ஸாமான்ய மருந்துகள் செய்யவும், வீட்டைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளவும் கற்றுக்கொடுப்பதுடன், ஸ்திரீகளுக்குச் சரீர அப்பியாஸம் அத்யாவசியமென்று எடுத்துக் காட்டப்படுகின்றது. மேலும் ஏழை ஸ்திரீகளுக்குப் பல விதமான கைத்தொழில்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. பரோபகார சிந்தையும், ஸ்திரீகள் முன்னேற்றமடையவேண்டு மென்கிற ஆவலும் தூண்டுதலினால் செய்வதே தவிர, இப்பள்ளிக்கூடத்திற்குச் சர்க்கார் கிராண்டாவது, வசதியான இடமாவது, சம்பளம் கொடுக்கிறவர்களாவது அல்லது பணம் வாங்கிக்கொண்டு கற்றுக்கொடுக்கும் உபாத்திமாராவது கிடையாது. எங்கள் காரியம் எப்படி நடக்கிறதோ என்று சிலபேர் ஐயமுறலாம். ஆனால் மனித முயற்சியால் நிறைவேறாதவை சிலவே. ஒவ்வொரு மஹானும் கஷ்டப்பட்டு இந்தியாவுக்கு உழைத்திருக்கிறார். இன்னும் உழைக்க வேண்டியது அபாரமாயிருக்கிறது. அப்படியிருக்க, நம் ஸகோதரிகளும் நாமும் முன்னேற்றமடைய ஏன் உழைக்கக் கூடாது? வீட்டு வேலைகள் முடிந்ததும் பகற் பொழுதில், எல்லா ஸகோதரிகளும் ஓரிடத்தில் சேர்ந்து, நமக்குத் தெரிந்ததைக் கீழுள்ளவர்களுக்குக் கற்றுக்கொடுத்து, நன்றாய்ப் படித்தவர்களிடமிருந்து நாமும் அநேக மறிந்து, அறிவைப் பெருக்கவேண்டுமென்கிற ஆவலினால், நானும் என் வங்க ஸகோதரியும் சேர்ந்து கூடிய உதவியைச் செய்துகொண்டிருந்தோம்.

ஒருநாள் எங்கள் வீட்டிற்கு ஒரு ஸ்திரீ வந்தாள். அவளுக்குச் சுமார் முப்பத்தைந்து வயதிருக்கலாம். ஏதோ கவலையில் ஆழ்ந்திருப்பவள்போல் அவள்முகம் தோன்றிற்று. ஆனால் அவளுடைய பார்வையானது, தபஸிகளின் பார்வையைப்போ லிருந்தது. அவள் எங்களைப்பார்த்து "நீங்கள் ஸ்திரீகளின் முன்னேற்றத்தில் கவலை எடுத்துக் கொள்ளுகிறதாகக் கேள்வியுற்று, என் கஷ்டங்களை உங்களிடம் சொல்லி ஏதாவது வழி தேடலாமென்று வந்திருக்கிறேன். என் விருத்தாந்தம் முழுதும் உங்களுக்குக் கேட்க அவகாசம் இப்பொழு தில்லாமற்போனால், பிற்பாடு சொல்லுகிறேன். எனக்குப் பகற்பொழுதிற்கு ஏதாவது வேலை கொடுங்கள். பிரதிதினமும் வந்து செய்கிறேன்" என்று சொல்லவே, அச்சமயம் எனக்கு யோசனை ஒன்றும் விஸ்தாரமாய்த் தோன்றவில்லை. ஆனால் நான் கொடுக்கும் தையல் வேலையைச் செய்யும்படி ஏற்பாடு செய்திருந்தேன். அவ்வேலையில் அம்மாது ஊக்கம் காட்டினதுடன், சிலநாளிற்குள்ளாகவே குழந்தைகள் உடுப்புகளைத் தானே கத்திரிக்கவும் அழகாய்த் தைக்கவும் கற்றுக்கொண்டாள். நான் அத்தெருவிலுள்ள என் நண்பர்களிடம் போய், "என் எளிய ஸகோதரி உங்கள் வீட்டிற்குவேண்டிய துணி மணிகளைத் தைத்துக் கொடுப்பள். நீங்கள் தையற்காரனுக்குக் கொடுக்கும் கூலியில் நாலிலொரு பாகம் கொடுத்தால் போதும்" என்று சொன்னேன். சிலபேர் இதை வேடிக்கையாக எண்ணினார்கள்; சிலபேர் கொடுத்து உதவினார்கள். நானும் என் ஸகோதரி பவானியும் வேண்டிய உதவியை அம்மாதுக்குச் செய்துகொண்டிருந்தோம். மாதம் மூன்றாயிற்று. ஒருநாள் அவ்வெளிய மாது எங்களிடம் வந்து "நான் புருஷன் வீட்டிற்குப் போகிறேன். எனக்கே ஒரு மிஷினிருந்தால் நன்றாயிருக்கும்; வாங்க எனக்குச் சக்தி இன்னும் வரவில்லை. உங்களுடையதைப் பத்து நாளைக்கு என்னிடம் கொடுப்பீர்களென்று நம்புகிறேன்" என்று சொல்ல, நாங்களும் அப்படியே செய்தோம்.



அம்மாதின் பெயர், மீனா. அவள் புருஷன்வீட்டிற்குப் போய் ஒரு வாரமாகிறது. நானும் பவானியும் ஒருநாள் ஸாயங்காலம் வண்டியில்போய்க்கொண்டிருக்கும்பொழுது, திடீரென்று மீனா ஞாபகம்வர, பவானியிடம் சொன்னேன். இத்தெருவில்தான் தன் புருஷன் வீடிருப்பதாகப் மீனா சொன்னதும் ஞாபகமிருந்தது. வீட்டின் இலக்கத்தைச் சொல்லி நிரம்பநேரம் அலைந்தோம். தெருவிலுள்ளவர்களைக் கேட்டாலோ, வீட்டுப்புருஷரின் பெயர் கேட்கிறார்கள். அதுவோ எங்களுக்குத் தெரியாது. இம்மாதிரி பெரிய பட்டணங்களில், ஒரேதெருவில் ஒரே நம்பருள்ள வீடுகள் அநேகமிருக்கின்றன. கடைசியில் 52-ம் நம்பருள்ள ஒரு சிறிய பழைய வீட்டின் வாசலில் வண்டியை நிறுத்தி, இங்கில்லாவிட்டால் ஆசை, ஒழித்து, வீடு திரும்புவதென்ற எண்ணத்துடன், அவ்வழியேபோகும் வேலைக்காரியைக் கூப்பிட்டு, இவ்வீட்டில் யாரிருக்கிறார்களென்று கேட்க, அவள் தனக்குத் தெரியாதென்று சொல்லிக்கொண்டு வேகமாய் நடந்தாள். எங்கள் குரலைக் கேட்ட மீனா, மாடியிலிருந்து எட்டிப்பார்த்தாள். அவளைப் பார்த்த பிறகு ஒருவாறு மனந்தேறி வீட்டிற்குள் நுழைந்தோம்.

வீட்டினுள் புறங்கால் வைத்ததும், கீழிருக்கும் குளிர்ச்சி தலைக்கேறிற்று. பத்தடிபோனதும் இருட்டு எங்களுக்குக் கண்ணே தெரியவில்லை. நவாப் ஆண்ட நாட்களில் அழகுள்ள தருமபத்தினிகள் ஒளிந்திருக்கக் கட்டின இடமோ, அல்லது இருட்டறையோவென்று அச்சமுறவேண்டி யிருந்தது. எங்களால் முன் நடக்க முடியவேயில்லை. இதற்குள் இரண்டுதரம் மீனா மாடிக்குப்போய் வந்துவிட்டாள். அவ்விருட்டில் படி யிருப்பதாகவும் எங்களைத் தன் கையைப் பிடித்துக்கொண்டு ஏறிவரும்படி சொன்னாள். கொஞ்சதூரம்போனால் வெளிச்சம் தெரியுமென்று சொல்லியும், எங்களால் இரண்டடிக்குமேல் நடக்க முடியவில்லை. பிறகு மீனா, தன் புத்திரனைக் கூப்பிட்டு ஒரு நெருப்புப்பெட்டி கொண்டுவரச்சொல்லி ஒருவர்த்தியை ஏற்றி வெளிச்சம் காட்டி, எங்களை ஏறச் சொன்னாள். ஒருதடவை ஒருவர்தான் ஏறலாம். இரண்டு பக்கமும் கைபிடிக்க ஆதாரமே கிடையாது. தவறினால் கீழே இருட்டில் எங்கே விழுவோமோ வென்கிற பயம். கால் நடுங்க, எப்படியோ கஷ்டப்பட்டு மாடிபோய்ச் சேர்ந்தோம். அங்கு இரண்டே சிறிய அறைகளிருந்தன. ஒன்றில் மீனா மிஷினைவைத்துத் தைத்துக்கொண்டிருந்ததாகத் தெரிந்தது. ஒரு மூலையில் கொஞ்சம் கறிகாயும் ஒரு கூடையில் அரிசி பருப்பு ஸாமானும் கடிதாசிப்பையில் ரொட்டிமாவும் இன்னும் சில ஸாமான்களும் ஒரு கரியடுப்பு மிருந்தன. பக்கத்து அறையில் ஒரு மூலையில் சிறிய மேஜையும் நாற்காலியும், எதிர் மூலையில் எழுத்தே தெரியாமல் அழிந்து போன பழைய நோட்டுபுக்குகளும் அலமாரியில் நிறைந்திருந்தன. அவற்றில் எழுதியிருக்கும் விஷயம் தாத்தா கதையோ, பாட்டிக் கதையோ, கணக்கோ, ராமாயணமோ எனக்குத் தெரியாது. பாக்கி இரண்டு மூலைகளிலும், கிழிந்த துணிகளும் வண்ணானையேபார்த்திராத படுக்கையுமிருந்தன. அவ்வறையிலுட்கார்ந்து கொண்டு பார்த்ததில் கீழே ஒரு இருட்டான முற்றம் தெரிந்தது. அதில் மக்கினமரத்துண்டுகளும் பழைய இரும்புகளு மிருந்தன; அநேக புறாக்கூடுகளு மிருந்தன. அவ்வடைசலையும் துர்கந்தத்தையும் பார்த்தால் அநேக ஸர்ப்பங்களிருக்குமென்று தோன்றிற்று. மீனா எங்களை உட்காரச்சொல்லி, நாங்கள் அவளைத் தேடிப்போனதற்கு அளவில்லாத ஸந்தோஷமடைந்தாள்.

"நீ வரும்பொழுது வீட்டில் நாங்கள் எல்லோர் மத்தியிலும் உட்கார்ந்திருப்பதால் உன் விருத்தாந்தத்தை அறிய அவகாசமில்லாமலே போய்க் கொண்டிருக்கிறது" என்று பவானி சொல்ல, மீனா சொல்லுகின்றாள்.—

"என் அதிர்ஷ்டமே நீங்கள் என்னைத் தேடிவந்தீர்கள். இரவிற் சாப்பிட ரொட்டியும் செய்தாயிற்று. நீங்களனுப்பியிருந்த தையலும் முடிந்தது. என் புருஷரும் இன்று இரவு ஒன்பது மணிக்குத்தான் வருவர். நீங்களும் எட்டு மணிவரையிலிருக்கப் பிரியப்படுவதால் என் கதையைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். நான் உங்களிடம் முதலில் தையல் கற்றுக் கொள்ளவந்தபொழுது நீங்கள் என்னை ஒரு

ஏழை ஸ்திரீ என்று எண்ணியிருக்கலாம். இப்பொழுது. என் நிலைமை உண்மையில் ஏழ்மைதான். உங்களுடைய மேன்மையான குணத்தைக் கேள்வியுற்று, எனக்குத் தயை புரியக்கூடுமென்று நம்பிவந்தேன். அதிலும் மேன்மையாய் நீங்கள் என்னை நடத்தி உதவி புரிந்ததற்குப் பகவான் உங்களைக் காப்பாற்றட்டும்.

"நாங்கள் தட்டாரஜாதியைச் சேர்ந்தவர்கள். என் தகப்பனார் ஒரு ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர்; அந்நாளில் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவர்; பி.ஏ. பட்டதாரி. முதலில் பள்ளிக்கூட உபாத்தியாயர் வேலையிலமர்ந்தார். அவருக்கு முப்பது வயதில் முதல் மனைவி ஐந்து குழந்தைகளை விட்டு இறந்துபோனாள். பிறகு என்தாயாரை விவாகம் செய்துகொண்டார். என் தாய், முதல் மனைவியின் குழந்தைகளை வெகு பக்ஷமாய் நடத்தி முன்னுக்குக் கொண்டுவந்தாள். என் தாயாருக்கு நாங்கள் எட்டுக் குழந்தைகள். ஐந்து ஸகோதரிகளும், மூன்று ஸகோதரர்களு மாவார்கள். நான் என் தாய்க்கு மூன்றாவது குழந்தை. நான் பிறக்கும்பொழுது என் பிதா பள்ளிக்கூடங்களுக்கு இன்ஸ்பெக்டரென்னும் பெரிய பதவியிலிருந்தார். இப்பொழுது என் பிதா தொண்ணூற்றாறு வயதாகியும் ஜீவியதசையி லிருக்கிறார். அவருக்கு வரும் இருநூற்றைம்பது ரூபாய் பென்ஷனைக்கொண்டு எங்கள் குடும்பம் இன்றுவரை நடக்கிறது. ஆனால் அவருக்கு இப்பொழுது பார்வை மங்கிவிட்டது; காதும் கேட்கவில்லை. அவர் இப்பொழுது தள்ளாத கிழவர். அவர் இறந்துவிடுவரானால் எங்கள் குடும்பம் தவிக்கும். என் ஸகோதரிகளெல்லாரையும் கூடியமட்டில் நல்ல இடங்களில்தான் விவாகம் செய்துகொடுத்திருக்கிறார். இரண்டு ஸகோதரர்கள் ஸாதாரணமாய்ப் படித்து வியாபாரத்திலிருந்தார்கள். இந்த யுத்த நாளில் அவர்களுக்கு அதிக வரும்படியில்லாமலிருக்கிறது. கடைசி ஸகோதரன் வக்கீலாயிருக்கிறான். இந்நாளில் வக்கீலுக்குப் பஞ்சமா? வரும்படியோ கேட்கவே வேண்டாம். என் தகப்பனார், ஏழுபெண்களையும் தலைக்கு ஆறாயிரம் ரூபாய் வீதம் செலவுசெய்து கலியாணம் பண்ணினார். முதல் தாரவழியில் ஸகோதரர் மூன்றுபேரில் ஒருவர் சிறுவயதிலேயே இறந்துபோனார். மற்ற இருவருள் ஒருவர் இஞ்சினீராகவும், மற்றவர் டாக்டராகவுமிருக்கிறார். இரண்டுபேரும் நல்ல ஸ்திதியிலிருந்தும் எங்களையாவது பிதாவையாவது பார்க்கிறதேயில்லை. என் பிதா காருண்யமுள்ளவர்; உறவில் அநேக ஏழைப்பிள்ளைகளுக்கு உதவி செய்து முன்னுக்குக் கொண்டுவந்திருக்கிறார். தனக்கு வேலைசெய்த ஊழியர்கள் கிழவராயுங்கூட அவர்களுக்கு இப்பொழுதும் சாப்பாடு போட்டுக் காப்பாற்றுகிறார். என் தாயும் அவருக்கேற்ற தருமபத்தினி. அவர்களிருவரும் கோபங்கொண்டதை நான் கண்டதேயில்லை.

"என்னைக் கலியாணம் செய்துகொடுக்கும்பொழுது என் மாமனார் பெரிய ஜெமீன்தாராயிருந்தார். இப்பட்டணத்தில் 17 மெத்தை வீடுகள் அவருக்கு இருந்தன; ஏராளமாய் வாடகையே வந்துகொண்டிருந்தது. என் கலியாணமானபொழுது அவர்களிருந்த வீடு ஒரு அரண்மனைபோ லிருக்கும். அப்பொழுது ஸாதாரண உபயோகத்தில் மோட்டாரில்லாததனால், அதொழிந்த வாஹனங்கள் யாவும் என் புருஷர் வீட்டிலிருந்தன. என் விவாகமான ஏழாவதுவருஷம் என் மாமனார் பரகதியடைந்தார். அவர்க்கு நான்கு புத்திரர்கள். அவர் கண்ணுள்ளபோதே நாலு பேருக்கும் விவாகம் முடித்துப் பார்த்துவிட்டார். என் புருஷரைத் தவிர பாக்கி மூன்று ஸகோதரர்களுக்கும் குழந்தை கிடையாது. ஆகவே மாமனாருக்குப் பிற்காலம் அவரவர்கள் மனைவி பேரில் இரஹஸ்யமாய்ப் பணம் சேர்க்கத் தலைப்பட்டார்கள். ஸாயங்கால ஸவாரிக்காக அநேக ஆயிரம் செலவிட்டு மோட்டார் வாங்கினார்கள். ஒருவராவது முழுப்படிப்பில்லாதவர்களாதலால் நாலாபக்கமும் பணத்தை வீண்செலவு செய்வதே தொழிலாகக் கொண்டு மனம் போனபடியிருக்கும் நாளில், தரித்திரமும் தலைகாட்டத் தொடங்கிற்று. ஸகோதரருக்குள் சிறுசச்சரவுகளேற்பட, குடித்தனத்தைச் சிறியவீட்டிற்கு மாற்றிக் கொண்டார்கள். அப்பொழுது எனக்குக் கலியாணமாய்ப் பன்னிரண்டு ஆண்டுகளாயின. முதல் கர்ப்பமாயிருக்கிறேன். என்வயது இருபத்திரண்டு ஆனால் எனக்குப் பத்துவயதில் கலியாணம்; பால்யவிவாகம்தா னென்று சொல்லவேண்டாம்.

(தொடரும்.)



# எருக்களின் உபயோகம்

## USES OF MANURING

நம்முடைய இராஜதானியில் பலவித நஞ்சை முதலிய பயிர்கள் சாகுபடியாகின்றன. இவைகளின் விளைவை விருத்திசெய்யவேண்டியது அவசியம் என்று எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

முற் காலங்களில் இராஜாங்கத்தில் மாடுகளை மேய்க்க, புறம்போக்குகளும், காடுகளும் விடப்பட்டிருந்தன. இப்பொழுது அவைகளெல்லாம் குறைந்துவிட்டன. ஆகையால் ஆடுமாடுகளை விசேஷமாக வைத்துக்கொள்ள முடியவில்லை. நாகரீகம் அதிகமாகவே, படிப்பும் அதிகரித்து விட்டது. விவஸாயிகள் தங்கள் கிராமத்திலிருக்கும் நிலங்களைக் குத்தகைக்கோ அல்லது வாரத்துக்கோ விட்டுவிட்டு, உத்தியோகத்தின் நிமித்தமாகவோ வியாபாரத்தை உத்தேசித்தோ அல்லது ஸௌகரியத்தை உத்தேசித்தோ பட்டணங்களில் குடியேறுகிறார்கள். இப்படிச் செய்வதனால் நிலங்களைச் சுற்றிப்பார்க்க, போதுமான மனிதர்கள் கிடைப்பதில்லை. நிலத்தை அடிக்கடி சுற்றிப் பார்த்தாலொழிய அதற்குச் செய்யவேண்டிய வேலைகள் கண்ணுக்குப் புலப்படா. குத்தகைக்காரர்கள் அல்லது வார சாகுபடி செய்கிறவர்கள் தங்கள் சொந்த நிலங்களை அதிகமாகக் கவனிப்பார்களே யொழிய, குத்தகை நிலங்களையும் வார நிலங்களையும் கவனிக்க அவர்களுக்கு இஷ்டம் இருக்காது. அப்படிக் கவனித்தாலும், அவற்றைச் சரியான விளைவுக்குக் கொண்டுவருவதற்குச் சிரத்தையும் உண்டாகாது. எருப்போட்டாலும், சரியானபடி உழாமலும் காலாகாலத்தில் பயிர்செய்யாமலும் இருப்பதால் நிலங்கள் க்ஷீணதசை அடைந்து விடுகின்றன. இந்த விஷயம் அந்தந்த வருஷம் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. நாளடைவில் பூமியின் ஸாரம் குறைந்து விளைவு குறைவுபட்டுப் போகிறது. சில வருஷங்கள் சென்ற பிறகுதான் பூமியின்ஸாரம் குன்றிவிட்டதாகத் தெரிந்துகொள்ளுகிறார்கள். இப்படி வெகு காலம் கவனிக்காமல் விடுவதினால் உண்டாகும் அதிக நஷ்டத்தை நிவர்த்தி செய்யவேண்டிய வழிகளைத்தேட ஆரம்பிப்பது வெகு பிரயாசை ஆகிவிடுகிறது ஆகையால் எல்லாக் குடியானவர்களும் இப்பொழுதே விழித்துக் கொண்டு சிறந்த விளைவு உண்டாகும்படியான வழிகளைத் தேடவேண்டியது அவசியமாய் இருக்கிறது.

எந்தப்பயிர் செய்தாலும் பயிருக்கு வேண்டிய ஆகாரத்தைக் கண்டுபிடித்துப் போதுமான அளவு கொடுத்தாலொழிய பூமி பலஹீனமடையும்.

ஜப்பான், இட்டலி, ஸ்பெயின் முதலான தேசங்களில் எல்லா நிலங்களுக்கும் போதுமான எருப்போட்டு அதிலிருந்து விளையக்கூடிய பலனை அறுவடை செய்கிறார்கள். நம்முடைய தேசத்திலோ இவ்விஷயத்தில் ஊக்கமும் கவனமும் இல்லை. சர்க்காரில் இதற்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்திருந்தும், அதன் ஸாராம்சங்களைக் கிரஹிக்கப் போதுமான வழிகளை நாம் தேடிக்கொள்ளவில்லை. நம்முடைய இராஜதானியில் பலஹீனங்களாக அதிக செலவில்லாமல் சாண எருவினாலும் ஆட்டுக்கிடைகளாலும் நிலத்தை எருவிட்டுக் கொண்டுவந்தார்கள். இந்த எருக்கள் போதுமான அளவு கிடைக்காமையால் பயிருணவுக்கு வேண்டிய வேறு சாதனங்கள் தேடவேண்டியதவசியம். குடியானவர்களுக்குப் புண்ணாக்கு, எலும்பு, மீன் முதலிய எருக்களை விலைக்கு வாங்கிப்போடுவது அனாவசியமென்றும் கட்டாதென்றும் அபிப்பிராயப் படுகிறார்கள்.

காப்பி, தேயிலை, ரப்பர் முதலான தோட்டங்களில் ஐரோப்பியர் இந்த எருக்களின் உபயோகங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டு விலை அதிகமானாலும் கொடுத்து வாங்கி, எருவிட்டு அதிக லாபத்தை அடைகிறார்கள். ஆட்டு எருவும் மாட்டு எருவும் மேற்கூறிய எருக்களைவிட குறைவென்று அர்த்தம் இல்லை. அவைகள் வேண்டிய அளவு கிடைக்காமையால் வேறுவழிகள் தேட வேண்டியதாயிருக்கிறது. சர்க்கார்ப் பண்ணைகளில் இந்த எருக்களின் உபயோகங்களைப் பல வருஷங்களாக நன்றாய் ஆராய்ந்தறிந்து எது விசேஷபலனைத் தரக்கூடியதோ அதை மாத்திரம் வாங்கி உபயோகிக்கும்படியாகச் சொல்லுகிறார்கள்.

நம்முடைய இந்தியா தேசத்திலிருந்து விசேஷமாக எலும்புகள் வேறு தேசங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. வேறு தேசத்தார் நம

முடைய தேசத்தில் உற்பத்தியாகும் எருவுக்கு விலையைத் தவிர கப்பல் சார்ஜ், வண்டிசார்ஜ் முதலான செலவுகள் செய்து எரு இடும் பொழுது, நம்முடைய தேசத்தார்கள் தெரிந்துகொள்ளாதது ஆச்சரியமாகத் தோன்றவில்லையா? இதில் பயிருக்கு வேண்டிய உணவுகள் போதுமான அளவில் இருக்கின்றன. ஆனால் அதேவருஷத்தில் அவற்றின் உபயோகம் தெரியாது. அதற்கடுத்தவருஷத்தில்தான் தெரியும். இப்படிமுதல் வருஷத்திலேயே லாபமடைய முடியாமையாலும், அடுத்தவருடம் வரைக் காத்திருக்கும்படி அவர் தரித்ரதசை இடம் கொடாமையாலும் குடியானவர்களுக்குப் பொறுமை யிருப்பதில்லை.

## மீன் எரு

மேற்கு சமுத்திரக்கரையில் அக்டோபர் மாதம் முதல் பிப்ரவரிமாதம் வரையில் சிறு மீன்கள் ஒதுங்குகின்றன. இவற்றைச் செம்படவர் பிடித்து வியாபாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இம் மீன்கள் சமுத்திரக் கரையில் காயப்போட்டு மூட்டைகளில் கட்டி இதர தேசங்களுக்கு ஏற்றுமதி யாகின்றன. இந்த மீன்களிலிருந்து எண்ணெயை எடுத்து விற்பனை செய்கிறார்கள். எண்ணெய் எடுத்த மீன்எருவானது, நாற்றமில்லாம லிருப்பதுமல்லாமல் உயர்ந்த எருவாகவு மிருக்கிறது. இதற்கு மீன் புண்ணாக்கு என்று பெயர். இப்படி ஏராளமாக ஏற்றுமதியாகிற விஷயம் பலபேர்களுக்குத் தெரிந்திருந்தும், அதை வாங்கி உபயோகிக்கும் வழிகளைத் தேடிக் கொள்ளவில்லை. சென்றவருஷத்தில் ஒருடன் மீன் எரு விலை ரூ. 60 அல்லது ரூ. 70-ஆயிருந்தது; மீன்புண்ணாக்குவிலை ரூ. 90. இந்தவருஷத்தில் மீன்எருவு சுமார் ரூ. 40-க்கும் மீன் புண்ணாக்குச் சுமார் ரூ. 75-க்கும் மலையாள தேசத்தில் கண்ணனூரில் விற்பனை செய்கிறார்கள். ஐரோப்பிய யுத்தம் நடந்துகொண்டிருப்பதால் வெளிதேசங்களுக்குப் கப்பல்கள் போகாததாலும் ரயில்களில் வாகன்கள் அகப்படாததாலும் விலை குறைந்துவிட்டது. ஆகையால் நிலக்காரர்களெல்லாரும் காலதாமதம் செய்யாமல் விழித்துக்கொண்டு நம்முடைய தேசத்திலிருக்கும் எருக்களை வேறு தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யாமல் நம்முடைய தேசத்திலேயே உபயோகப்படுத்தவேண்டிய வழியைத் தேடுவது அவசியமாகிறது. நஞ்சை நிலங்களுக்கு ஒருடன் எருவை 6 ஏக்கராவுக்கு உபயோகப்படுத்தலாம்; மீன்புண்ணாக்கு 10 ஏக்ராவுக்கு உபயோகப்படுத்தலாம். சராசரி ஒரு ஏக்ராவுக்கு 8 ரூபாய் எருவிடுவது அதிகமில்லை. இந்த மீன் எருக்களைச் சகலவிதமான தோட்டங்களுக்கும், பல விருக்ஷங்களுக்கும் உபயோகிக்கலாம்.

## எலும்பு

நம்முடைய தேசத்தில் சில தனவான்கள் சேர்ந்து இந்த எலும்புகளைப் பொருக்கும்படியான ஏற்பாடுசெய்து பொடி பண்ணி விற்பனை செய்தால் விலை மிகக் குறைந்துவிடும். இதில் பிரயத்தனம் செய்தால் நம்முடைய தேசத்து நிலவளமை விருத்தியாகும்; ஜனங்களும் மேல் நிலைமை அடைவார்கள். ஒருடன் எலும்புத்தூளை ரூ. 40 அல்லது ரூ. 50-க்குள் அடங்கும்படி செய்யலாம். இப்பொழுது பாரி, ஸ்டேன்ஸ் முதலிய கம்பெனிக்காரர்கள் ரூ. 80-க்கு விற்கிறார்கள். இதைத் தவிர வேறு எருக்களைப்பற்றி இப்பொழுது விவரிக்க இடமில்லை. மேற்கூறிய எருக்களை உபயோகப் படுத்துவதால் இப்படிச் செலவிட்ட பணத்தை எடுப்பதுமல்லாமல் மற்றொரு பங்கு லாபமும் எடுத்துவிடலாமென்பதற்குச் சந்தேகமே யில்லை. இவைகளில் தழைசாரமும் தானியசத்தும், அடங்கியிருப்பதால் பயிருக்குவேண்டிய பூரா உணவும் கிடைக்கிறது.


சந்தாதாரர்க்கு மாத்திரமே குறைந்த விலை

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| ஸ்ரீராமாயண ஸாரம் (படங்களுடன்)... | | 1 | 0 |
| ஐரோப்பிய மஹாயுத்தம் | ,, | 1 | 4 |
| வியாபார விதானம் | ,, | 0 | 12 |
| முரளீதரன் | ,, | 0 | 10 |
| திரௌபதி | ,, | 0 | 8 |
| ருக்மிணி | ,, | 0 | 6 |
| சகுந்தலை | ,, | 0 | 4 |
| இயற்கை அற்புதங்கள் | ,, | 0 | 8 |
| பூதத்வ போதினி | ,, | 0 | 8 |
| கமலலோசனி | ,, | 0 | 12 |
| சற்குண சந்திரன் | ,, | 0 | 10 |
| தேடாத செல்வம் | ,, | 0! | 3 |

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர்




# பூர்வீக இந்தியரும் ரஸாயனமும்

## CHEMISTRY IN ANCIENT INDIA

ஸ்ரீமான் ப்ரபுல்லசந்திர ரே அவர்களின் உபந்யாஸம்.

ஸ்ரீமான் போஸ் அவர்களின் தாவர சாஸ்திர ஞானத்தைப்பற்றி முன்னமேயே நம் போதினியில் கூறியிருக்கின்றோம். இப்பொழுது போஸவர்களைப்போலவே வங்காளத்தில் பிறந்து, ரஸாயன சாஸ்திரத்தில் நிபுணரெனப் பேரெடுத்த ஸ்ரீமான் பிரபுல்ல சந்திர ரே அவர்கள் சென்னை ஸர்வகலா சங்கத்து ஆதரவின்கீழ்ச் செய்த உபந்யாஸத்தின் ஸாராம்சத்தைக் கீழே கூறுகிறோம். அவர், தம் ஆயுள் முழுதையுஞ் செலவிட்டுப்பூர்வ இந்திய ரது ரஸாயன ஞானத்தின் பெருக்கைப்பற்றிக் கூறிய மொழிகள் இந்தியனெவனுக்கும் உத்ஸாக முண்டாக்குமென்பது திண்ணம். அவ்வுபன்யாஸத்தின் ஸாரம் வருமாறு:—

### மூலையிலுள்ளதை முன்னே நிறுத்துதல்

ஹிந்துக்கள் ஆத்ம விசாரணையிலேயே ஆழ்ந்திருந்தவர்கள் என்று பலர் கூறுகின்றனர். அவ்வாறிருப்பது நல்லதென்றும், அவ்வாத்ம விசாரணையில் வீழ்ந்திருந்த நம்மவர்கள் கணக்கண்டார்போலும், பார்வைக்கு அகப்படாத பரம்பொருளை நினைத்தவர்கள் என்றும் புகழாதவரிலர். ஆயினும், அனுபவபூர்வமாய்ச் சாஸ்திர ஆராய்ச்சிசெய்து ரஸாயனம் முதலிய சாஸ்திரங்களில் மிகத் தேர்ச்சி பெற்றிருந்தனர் ஹிந்துக்கள் என்பது இப்போது பலருக்குத் தெரியாத விஷயம். அதைப் பற்றியே உங்களுக்கு நான் கூறவிரும்புவது.

### அனுபவத்தில் கண்டவைகளையே ஆசிரியர்கள் கூறுவது

சாஸ்திர ஆராய்ச்சி செய்து அனுபவத்தில் கண்டவையே உண்மையெனக் கொள்ள வேண்டுமென்னும்எண்ணம் புதிது. ஆராய்ச்சி செய்வதும் பழையதன்று. ஐரோப்பாவிலும் இவ்வாறேயன்றி வேறெல்ல. ஐரோப்பிய தேசசரித்ரம் அறிந்தவர் எவரும் ஒரு விஷயத்தைப்பற்றி, ஆரியர்கள் தர்க்கஞ்செய்தனரேயன்றி, பிரத்யக்ஷானுபவமாய்ப் பரிக்ஷித்ததில்லை என்பதை ஒப்புக்கொள்வர். உயிருள்ள மீனானது இறந்ததைவிட கனமுள்ளதா அல்லவா என்பதைப்பற்றித் தர்க்கம் உண்டாயிற்றேயன்றி உயிருள்ளதையும், உயிர் நீங்கினதையும் நிறுத்துப்பார்த்தால் உண்மை வெளியாகுமென்று ஒருவருக்கும் தோன்றவில்லை. இங்கிலாந்தில்கூட, 17-ம் நூற்றாண்டில் பரீக்ஷிக்க எண்ணங் கொண்டவர்களை ஹாப்ஸ் என்னும் தத்வஞானி ஏளனஞ் செய்துள்ளார்.

ஒரு விஷயத்தைப்பற்றி உண்மை தெரியவேண்டுமாயின், அதைப் பரீக்ஷித்துப் பார்த்துத் தோன்றுபவைகளைக் கவனித்துவருவதே சாஸ்திர ஸம்மதமாகும். இவ்விதியைக் கூறும் நூல்கள் கி. பி. 13, 14-ம் நூற்றாண்டில் நம் தேசத்தில் இருக்கின்றன என்பது அனைவருக்கும் ஸந்தோஷ முண்டாக்கும்.

ரஸேந்திர சிந்தாமணியின் ஆசிரியர் ராமசந்திரர் கூறுவது பின்வருமாறு:— "பெரியோரிடம் கேட்டிருந்தபோதிலும், நூல்களில் படித்திருந்தபோதிலும், என்னால் பிரத்யக்ஷமாய்க் காணமுடியாதவைகளைத் தீர்மானங்களாகமாட்டாவென நான் நீக்கிவிட்டேன். ஆனால் என் ஆசிரியர்கள் கூறியபடியே, நானே செய்தவைகளை மாத்திரமே இங்கு குறிப்பிட்டுக் கூறியிருக்கிறேன். தாங்கள் கூறுபவைகளைப் பிரத்யக்ஷமாகச் செய்து, உண்மையை நிரூபிப்பவர்களே உத்தம ஆசிரியர்கள். கற்றவைகளைத் தாமேசெய்து அனுபவத்தில் பரீக்ஷித்துத் தேர்ந்து அறிந்தவர்களே நற்சீடர்கள். மற்றவர் நாடகமேடையில் நடிப்பவர்களேயாம்."

'ரஸப்ரகாச ஸுதாகா' என்னும் நூலை இயற்றிய யசோதரரும் தாம் கூறியவைகளெல்லாம் தாமே செய்து அறிந்தவை என்று கூறுகிறார்.

### பூர்வீக ரஸாயனமும் ரேயவர்களும்

நான் 35-வருஷங்களுக்கு முன்னே எடின்பரோ நகரத்தில் படித்திருந்தபோது, டாம்ஸன், ஹாவர், காப் என்னும் சாஸ்திர நிபுணர்களியற்றிய நூல்கள் என் அத்யந்த நண்பர்கள். அவற்றைப் படிக்கும்போது, ரஸாயன ஆராய்ச்சியில் நம் நாட்டின் சரியான நிலைமை எதுவென்று அறிய விரும்பினேன். இவ்வெண்ணத்துடனே சரகம் ஸுச்ருதம்முதலிய வைத்ய நூல்களைப் படிக்க ஆரம்பித்தேன். இப்படியிருக்கும் வேளையில், பேர்த்தலோடே

என்னும் ப்ரெஞ்சுரஸாயனசாஸ்திரியின் ஸ்நேகம் எனக்குக் கிடைத்தது. அவர் நம் நாட்டின் சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் அறியமிகவும் ஆவல்கொண்டார். அவரிஷ்டப்படியே 1898 ஸு த்தில் ரஸேந்திர ஸார ஸங்கிரகத்தை ஆதாரமாகக்கொண்டு ஆங்கிலத்தில் புத்தகம் ஒன்று எழுதி அவருக்கனுப்ப, அவர் அதை பத்திரிகைகளில் மிகவும் அன்புடன் மதிப்பிட்டார். அராபி,ஸிரியன் வைத்ய நூல்களைப்பற்றி அவர் எழுதியிருந்த பெரும்(3 வால்யூம் அடங்கிய)புத்தகம்ஒன்றையும்எனக்கு அனுப்பினார். அதைவாசிக்க,அம்மாதிரியேநம்நாட்டின்ரஸாயனத்தைப்பற்றிப் புத்தகம் ஒன்று எழுதவேண்டுமென்று பேரவா எனக்குண்டாயிற்று.

அம்மாதிரி நான் ஆரம்பித்தபோது எனக்குக் கிடைக்கும் நூல்கள் மிகக் கொஞ்சமோ என்னமோவென்று பயந்தேன். நான் ஆரம்பித்ததும் சென்னை, தஞ்சாவூர், காச்மீரம், காசி,நேபாளம், திபேத்து முதலிய இடங்களிலிருந்து சிதலெரிந்த ஏடுகளும் நூல்களும் வந்துசேர ஆரம்பித்தன. இம்மாதிரி எனக்குண்டான அளவிடமுடியாத ஆனந்தமே 12 வருஷம் எனக்கு உற்சாகம் கொடுத்தது. அப்பொழுதும் எவ்வளவு படிப்பது, எவ்வளவு ஆராய்ச்சி செய்வது என்று தீர்மானிப்பது கஷ்டமாயிருந்தது.

இம்மாதிரிக் கிடைத்த நூல்களைப் படித்ததில் எனக்குத் தோன்றின சிலவற்றை இங்கே கூறுகிறேன். பூர்வீக இந்தியாவில், பலவகை சாஸ்திரங்களோடு வைத்ய சாஸ்திரமும் மிகவும் அக்கரையாய்க் கற்கப்பட்டு வந்தது. 2,500 வருஷங்களுக்குமுன்னே தக்ஷசிலா என்னுமிடத்திலிருந்த கலாசாலையில் ஜீவககுமார வத்சர் என்பவர் வைத்தியம் படித்து வந்ததாகத் தெரியவந்தது. ஸமஸ்கிருதத்திலுள்ள கௌமாரப்ருத்யம்(குழந்தைகளின் நோய்க்குச் சிகித்ஸை) என்னும் நூலின் பெயர் குமாரவத்ச எனப் பாலி என்னும் ப்ராக்ருத பாஷையில் திரிந்தது. இந்த ஜீவகன் பிறகு மகதராஜனான பிம்பஸாரனின் ராஜ வைத்யனானதாகத் தெரியவருகிறது. ஆகவே கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகள் முன்னமேயே ஆயுர்வேதம் அபிவிருத்தியடைந்து வந்தது என்பது நன்குவிளங்கும்.

நான் இப்போது பரிசீலனை செய்யும் சாஸ்திரமான ரஸாயனம் அவ்வளவு பூர்வத்திலேயே உண்டானதன்று. ரஸாயனம் என்பதற்கு முதற்பொருள் ஆயுள்விர்த்தி செய்யும் மருந்து என்பதாம். மற்றொரு நூலின் ஆரம்பத்தில் 27 ரஸ ஸித்தர்களுக்கு வந்தனம் செய்துவிட்டு ஆசிரியர் நூலை ஆரம்பிக்கிறார். சரகம் ஸுச்ருதம் முதலிய நூல்களில் (பாத) ரஸத்தைப்பற்றிக் கூறுவது மிகவும் அபூர்வம் என்று நாம் அறியவேண்டும்.

ஐரோப்பாவில் வைத்திய சாஸ்திரத்திற்கு அநுகுணமாக ரஸாயனம் உதவிவந்தது; நம் தேசத்தில் மேற்கூறிய மாதிரி விருத்தியடைந்ததோடு, யோகசாஸ்திரத்தோடும் சம்பந்தப்பட்டு வெகு சீக்கிரம் விர்த்தியடைந்தது. ஞானம், பூர்ணமாவதற்கு முன் 7 நிலைகளைத் தாண்டிச் செல்லவேண்டுமென்பது நாமெல்லோரும் அறிந்தவிஷயம். இந்தச் சாஸ்திரம் ரஸாயனத்தோடு சேரவே, தாந்திர நூல்கள் (முக்யமாக வங்காளத்தில்) எழுதுவதற்குப் பெரும் ஸாதகமாயிற்று.

மற்று 'ரஸார்ணவம்' என்னும் நூலில், ரஸத்தைப்பற்றியுள்ள ஸ்தோத்ரத்தைக் கூறுகிறேன், அந்நூலில்கூறியதாவது:

ரஸமானது ஆயுள் விருத்திக்கு அநுகுணமாக இருக்கிறது; மற்றும் ரஸம் சேர்க்கப்பட்ட மருந்தை யுண்பதனால் சரீரம் அழியாமலிருக்கும்; அவ்விதம் இருக்கும் யோகியானவன் இச்சரீரத்திலேயே மோக்ஷம் அடைகிறான்; ஆகையால் இந்த ஜன்மத்திலேயே முக்தியடைய விரும்பும்யோகி, தனக்கு ஜோதிஸ்வரூபமான சரீரமொன்றை ஸ்தாபித்துக் கொள்ளவேண்டும்;...மஹேசர் முதலிய சில தேவர்களும்,காவ்யர் (சுக்ராசாரியார்) போன்ற சிலதைத்யர்களும்,வாலகில்யர் முதலிய சில ருஷிகளும், சில ந்ருபதிகளும் (ஸோமேச்வரர் முதலியோர்), கோவிந்த பாகவதர்,கபிலர் முதலியவர்களும் ரஸாயன சாஸ்திரத்தினால் ரஸமயமான தேஹங்கள்பெற்று, அதனால் இந்த ஜன்மத்திலேயே முக்தியடைந்திருக்கிறார்கள்.

(தொடரும்)

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை

இயற்கை அற்புதங்கள் ... அணா 8

பூதத்வ போதினி ... ,, 8

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை



# மாதவீகங்கணம்

[ஸ்ரீமான் வெ. கா. ராமநாதன், பீ.ஏ., பி.எல்.]

(168-ம் பக்கத் தொடர்ச்சி.)

நான்காம் பாகம்—அத்யாயம் 4

## ஜனன கடைத்தெரு

நவ்ரோஸ் பண்டிகை தினம். ஆக்ராமுழுதும் அன்றிரவு வருஷப்பிறப்பு தினங்கொண்டாட்டம். அரண்மனைகள், ப்ரபுக்களுடைய இல்லங்கள், மஹால்கள் முதலியன நானாவர்ண தீபங்களால் அலங்கரிக்கப்பட்டுப் பார்ப்போர் கண்களைப் பறிப்பதாய்ச் சோபித்துக்கொண்டிருந்தன. அழகுக்கு அழகு செய்வார்போல் சலவைக்கல் ஸ்தூபிகளின்மீதும் பளிங்கு மண்டபங்களின்மீதும் வெண்ணிலா அதிக மனோஹரமாய் ப்ரகாசித்துக்கொண்டிருந்தது. வீதிகள்தோறும் வீடுகள்தோறும் புஷ்பத் தோரணங்களும் வாழை கமுகு முதலிய மரங்களும் அதி விமர்சையாகக் கட்டப்பட்டிருந்தன: ப்ரதிவீட்டு வாசல் ஸ்தம்பங்களிலும் சுற்றிச் சுற்றி வெகு அழகாய்ப் படர்ந்திருந்த புஷ்பக்கொடிகள்; ஆங்காங்கு உத்யானவனங்களில் இடையிடையே துவ்வான மடிப்பன போல் ஆகாயம் நோக்கி எழும்பிக் கீழே செடிகளின்மீது சிறு சிறு துளிகளாய் விழுந்து கொண்டிருந்த நீரூற்றுக்கள்; வீட்டுமாடிகளிலும் மரக்கிளைகளுக்கிடையிலும் அங்குமிங்குமுள்ள செடிப்புதர்களுக்கிடையிலும், பந்தர்க்கொடிகளின் நடுவிலும் மறைந்து மறைந்து ப்ரகாசித்துக் கொண்டிருந்த லக்ஷக்கணக்கான சிறு தீபங்கள்; கோட்டை வாயில்களிலும் அரண்மனை வீதிகளிலும், எரியும் விளக்குகளிலுள்ள தைலவகைகளின் நறுமணம்;—இவ்விதப் பரம உத்ஸாஹக் காட்சிகளைக் கண்ணுற்று ஆனந்திக்கும்பொருட்டு அங்கு கூடிக் குலாவி ஆர்ப்பரித்துக்கொண்டிருந்த ராஜகன்னிகைகள் அணிந்திருக்கும் மரகத மாணிக்க வைடூரிய வைரவகை யாபரணங்கள்; அவர்கள் தரித்திருந்த பலவர்ணப் பட்டுப்புடைவைகள்; யாதொரு கவலையுமின்றி அச்சமயம் அவர்கள் குழந்தைகளைப்போல் தம்மிஷ்டப்ரகாரம் செய்த ஆரவாரங்கள்;—இத்தகைய காட்சி அக்காலத்து மொகலாய ராஜஸ்தானத்தில் தவிர்த்து வேறு எக்காலத்தில் எத்தேசத்தில் காணமுடியும்?

மொகலாய அந்தப்புர வழக்கப்படி அன்றிரவு அரண்மனை உட்ப்ராகாரத்தில் விநோதார்த்தமாய் ஒரு பெரிய சந்தை கூடும். ஆம்ராக்கள் மனைவிமார்களும் மன்ஸப்தாரர்கள், சிற்றரசர்களிவர்களுடைய குடும்பப் பெண்மணிகளும் அன்றையதினம் சற்று வ்யாபார வர்த்தகங்களில் புத்தியைச் செலுத்திப் பணம் பறிக்க வழிதேடுவார்கள். பெரியமனுஷர் வீட்டுப் பெண்கள் கூட்டிய சந்தையில் அரண்மனை ராணிமார்களும் பீகங்களுந்தான் சரக்குக் கொள்ள வருபவர்கள். ஒவ்வொரு ஸ்த்ரீயின் கழுத்திலும் கரங்களிலும் அணிந்திருக்கும் நகைகளைக்கொண்டு ஒவ்வொரு ராஜ்யம் வாங்கலாம். அப்பேர்ப்பட்ட தனவந்தர்கள் கேவலம் ஸாமாந்ய ஜனங்களைப்போல் ப்ரதி ஸாமானுக்கும் பேரம் பேசத் தலைப்படுவார்கள். பேரமென்றால் நீங்களும் நாமும் செய்யும் பேரங்களைப் போன்றதா? அப்பா! ஒவ்வொரு ஸாமானுக்கும் விலைதீர அரைமணியாகும். காலணாவுக்கும் தம்பிடிக்கும் கால்மணிநேரம்போராடுவார்கள். அப்போதாவது பேரம் முடிந்து ஸாமான் வாங்கிய பாடா? ஸாமானைக் கையிலெடுத்துக்கொள்கிறது, 'இந்தத் துணிக்கு இவ்வளவு விலையா? உனக்கு இந்தக் காசு தக்குமா? துணியைப் பார், கோணிப்பட்டையைப்போல்! சாயமாவது நன்றாயிருக்கிறதா? ஜரிகையாம் ஒரு ஜரிகை. கால் காசு பொறுமா?' என்று வரம்பில்லாமல் வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசுவார்கள். இதற்குள் கடைக்காரி! 'வாங்குகிற பெரிய மனுஷியைப் பார். ஏதோ, கேட்டமாம் எடுத்துக்கொண்டமாம் என்றில்லாமல் அரைக்காசுக்கு அரைநாழி மல்லாடுகிறாள்! அம்மா உங்களுக்கு இதெல்லாம் ஸரிப்படாது. அதோ எதிர்க்கடையிருக்கிறதே, அங்கே போனால் நீங்கள் கேட்கிற விலைக்கும் அவர்கள் கொடுக்கிற ஸாமானுக்கும் ஏர்வையாயிருக்கும்' என்று ஏசுவாள். இவ்விதமாக இந்தப் பரமோத்கமமான—அதுவும் ஸ்த்ரீகளுக்கு மஹா இஷ்டமான—இந்தப் பேரம் செய்யும் அலுவல் முடிவதற்குள் ஒருவருக்கொருவர் எத்தனை ஏளனம், எவ்வளவு பரிஹாஸம்? வேடிக்கை வார்த்தைகளெத்தனை? அப்புறம் கடைசியில் ஒரு மாதிரி விலை முடிந்தவுடன் விலையென்றால், காணி பைசா—ஏறுது குறையாது—வாங்குகிறவர்கள் ஏதோ கவனிக்

காதது போல் ஸரியான க்ரயத்துக்குமேல் சிறிது அதிகமாய்ப் பொன் நாணயங்களை நழுவ விட்டு விட்டுச் சாமான்களை யெடுத்துக் கொண்டு வெகுகுதூஹலமாய்ச்செல்வார்கள்.

இந்தப் பண்டிகை அக்காலத்தில் ஹிந்துஸ்தானமுழுவதும் அதிக ப்ரபலமாயிருந்தது. மொகலாய ராஜ்யத்தில் பேரும் ப்ரக்யாதியும் பெற்று விளங்கும் சிற்றரசர்கள், ப்ரபுக்கள், ப்ரதானிகள்,ஜமீன்தாரர்கள்,மந்த்ரிமார்களிவர்களுடைய ஸத்ரீஜனங்கள் அந்தப்புரங்களுக்குச் சென்று அங்கு வஸிக்கும் ராணிமார் பீகங்களுடன் கூடிக்குலாவிப் பரிசயஞ்செய்து கொள்ள இப்பண்டிகையன்று ஸந்தர்ப்ப மேற்பட்டது. முஸ்லிம் ப்ரபுக்களும் உத்யோகஸ்தர்களும் தத்தம் வீட்டுப் பெண்டுகளை நவ்ரோஸ் சந்தைக்கு அனுப்பினார்கள். ராஜகுடும்பத்தினரைப் பரிசயம் செய்து கொள்வதற்கும்,அவர்களுடைய தயவைப்பெறுதற்கும் இதுவே ஸரியான மார்க்கம். மகம்மதிய ராணிகளையும் சீமாட்டிகளையும் கண்டு அவர்களுடைய நடையுடைபாவனைகளை அறிவதற்கும்,அவர்களுடன் நட்பாடுவதற்கும் இப்பண்டிகையே ஏற்ற ஸமயமென்றுணர்ந்து ஹிந்து ரமணீமணிகள் பலர் அங்கு வந்து கூடியிருந்தனர். மொத்தத்தில் ஹிந்து, மகம்மதிய வேற்றுமை யுணர்ச்சியொழிந்து இருமதத்தினரும் ஸஹோதரப் பான்மை பாராட்டி, ஒருவரையொருவர் அன்புடன் விசாரித்துபசரித்து வாழப் பயிலும் தினங்களுள் முக்யமானது அன்றிரவு, சக்ரவர்த்தியவர்களுடைய குடும்பத்தினரும் ப்ரபுக்கள் சிற்றரசர்கள் முதலியோருடைய மனைவிமார்களும் தம்முள் ஏற்றத் தாழ்வெனும் உணர்ச்சிக் கிஞ்சித்தேனுமின்றி ஒருவருடனொருவர் ஸமத்வமாகக் கூடிக் குலாவுவார்கள். அச்சமயந்தான் ஆண்டாண்டாகத் தீராதபகையும் பரஸ்பர வைரமும் மறந்து உபயகக்ஷியாரும் சமரொழித்துத் தம்முள் ஸமாதானமடைந்து நட்புகொள்ளத் தொடங்குவதும். அன்றிரவு நடைபெறும் அச்சந்தைக்குள் சக்ரவர்த்தியவர்களைத் தவிர்த்து வேறு புருஷரெவரும் வருவதற்கு அநுமதி கிடையாது. இதரகாலங்களில் தேசாசார, மதாசார, குலாசார முதலிய கோட்பாடுகளினால் தாம் பார்க்கவொண்ணாத உயர்குலப் பெண்மணிகளையும் ஸத்ரீரத்னங்களையும் சக்ரவர்த்தியவர்கள் பார்க்கக்கூடிய தருணமும் அதுதான்.

அப்போதுகூடச் சில ஸ்த்ரீகள் அயல் புருஷர் எவர் கண்ணுக்கும் தென்படக் கூடாதென்று சக்ரவர்த்தியவர்கள் கிட்ட வரும்போது தங்கள் கடைகளைவிட்டு ஓடி யொளித்துக் கொள்வார்கள். ஸ்த்ரீ ஜனங்களுடன் பேசுவதில் அதிக ப்ரியங்கொண்டவரான அக்பர், தம் யௌவனபர்வத்தில் அவ்வாறு ஒரு ஸௌந்தராங்கியும் தம் காட்சியினின்றும் தப்பி யோடாதபடிக்குச் செய்த பல உபாயங்களைப்பற்றி அரண்மனையில் கதையாகச் சொல்லிக் கொள்வார்கள். ஆனால் இப்போது அவருக்கு வயதாகிவிட்டது. முன்மாதிரி அவ்விதக் குறும்புத்தனங்களில் இப்போது அவர் புத்தி செல்வதில்லை. கவிரத்னமும் தமது தர்மபத்னியுமாகிய ஸலிமாபீகம் உடன்வரச் சக்ரவர்த்தியவர்கள் இவ்வகண்ட ஹிந்துஸ்தானஸம்ரக்ஷணத்தொல்லைகளைச் சிறிதுகாலம் மறந்து, கடைகடையாய்ச் சுற்றித்திரிந்து வேடிக்கை வார்த்தைகளாடிக் கொண்டு விநோதார்த்தமாய் அவ்வானந்த ஸாகரத்தில் மூழ்கியிருப்பார். அதிமேதாவியான,ஸலிம் பீகமவர்களுடைய ஹாஸ்ய வார்த்தைகளும்,பொருள் நிறைந்த கீர்த்தனைகளும் கேட்போருக்கு அம்ருத வர்ஷமாயிருக்கும். ஒழிந்த வேளைகளிலெல்லாம் அக்பர்பெருமான் தம் ராணியார் பாடும் பாடல்களைக் கேட்டு ஆனந்தித்துக் கொண்டிருப்பார். அம்மாது சிரோமணிக்கு ஏற்பட்டுள்ள கீர்த்திப்ரதாபம், சக்ரவர்த்தியவர்களுடைய தர்மபத்னியென்பது காரணமாக ஏற்பட்டதன்று; அவளியற்றிய நவரஸ கவிகளின் காரணமாகவே கிடைத்தாகும் அக்கீர்த்தி. அப்பாடல்கள் ஸம்பந்தமாய் அவளுக்கு உண்டான நாமதேயம் 'மக்பீ' அதாவது 'பேர்தெரியாதவள்'. இப் புனைபெயர்கொண்ட அப்பட்ட மகிஷி அன்றிரவு அக்பருடன் வந்துகொண்டிருக்கையில்,அருகாமையில் ஆம்பர் நாட்டுப்பெண்மணி யொருத்தி விற்கும் ஸாமான்களின்மீது விருப்பங்கொண்டு, தம் நாதரைச் சற்றுநேரம் தனியேவிட்டுவிட்டு அங்குசென்று ஒரு ஜதை பொன்வளையல்களை யெடுத்துப் பேரம்பேசத் தொடங்கினாள்.

"நானும் எத்தனையோ கடைக்காரர்களைப்



பார்த்திருக்கிறேன். அம்மா, உன்னைப்போல் பேராசைபிடித்தவளைக் கண்டதேயில்லை. இந்தக் கில்ட் வளையலுக்கா முப்பதுபொன் வேண்டும்? ரொம்ப கெட்டிக்காரியாயிருக்கிறாயே! பத்துப்பொன்னுக்குக் கேட்பாரற்றுக் கிடக்கிறது. அதுவும் இப்போது ராஜஸ்தானத்துடன் ஸமாதானமானபிறகு ஆம்பர் வளையல்கள் தெருவெல்லாம் மிதிபடுகிறதே."

"மஹாராணீ, ஸமாதானமென்றா சொன்னீர்கள்? நன்றாய்ச் சொன்னீர்கள்! ஆம்பருக்கும் மீவாருக்கும் உள்ள பகையை ஈச்வரனாலும் தீர்க்கமுடியாது. கொஞ்சம் பொறுங்கள். வங்காளம் சென்ற ராஜாமான்ஸிங் திரும்பிவரட்டும். அப்புறம் சொல்கிறேன் உங்கள் ஸமாதானத்தை. ஆம்பர் வளையல்களையும் கில்ட்வளையலென்று எண்ணிக் கொண்டீர்களோ? ஆனால் இரண்டுக்கும் உங்களுக்கு எப்படி வித்யாஸம் தெரியும். கில்ட் வளையல்கள்தான் நீங்கள் கண்டிருப்பது. ஸரி, வாங்கினது போதும்: வளையல்களைக் கீழேவைத்துவிட்டுப் பக்கத்துக் கடைக்குப்போங்கள். அங்கே உங்கள் மனம்போலக் கொள்ளலாம்."

"கானமயிலைக் கண்டிராத வான்கோழி தனக்கு நிகர் எவருமில்லையென்றுதான் எண்ணிக்கொள்ளும். அப்படித்தான் இந்த ஆம்பர் நாட்டு ஜனங்களும் ஆக்ராவிலிருந்துவரும் தங்க நகைகளைக் காணாதமட்டும் தங்கள் கில்ட் நகைகளைப்பற்றி ப்ரமாதமாய் எண்ணிக்கொள்கிறார்கள். ஆனால் ஆக்ராவும் ஆம்பரும் தம்முள் மனமொத்த நண்பர்கள்தாம். ஆம்பர் நாட்டு ராஜா மான்ஸிங் ப்ரபுவைப்போன்ற நம்பிக்கையான ஊழியர் மொகலாய ராஜ்யத்திலேயே கிடையாது. ஸரி, போனால் போகிறது பன்னிரண்டு பொன்தான் வைத்துக்கொள்."

"தமது முன்னோர்கள் வழக்கம்போலப் புதிய ராணாவும் யுத்த ஸந்நத்தராய்ச் சிற்றூர் நோக்கி வரும்போது மறுபடியும் நீங்கள் ஆம்பர் அரசருடைய துணையைக் கோரவேண்டிய காலம் ஏற்படும். பீகானீர் அரசரும் வங்கவிஜயரும் தம்முள் ஒன்றுபட்டுவிட்டபோதிலும், ஆம்பர் மீவார் பகைமை மாத்ரம் என்றும்போலவே மும்முரமாயிருக்கிறது. அம்மா, மஹாராணியாரே, கையில் இருபத்தைந்து பொன் இருந்தால் பாரும். இல்லாவிட்டால் இந்த வளையல் ஆசையை ஒழித்துவிடுங்கள்... ............ஏன் சும்மா விழிக்கிறீர்கள்? உங்களைப் பார்த்தால் அவ்வளவு தொகை கையிலில்லைபோலிருக்கிறது. புறப்பட்டுப்போங்கள். இருபத்தைந்து பொன்னுக்கு விற்றால் எனக்கு லாபம் புரண்டுபோகவில்லை. அரைப் பொன் கிடைக்கும் எனக்கு."

"என்ன ஸாஹஸம்! அரைப்பொன்னா உனக்குக் கிடைக்கும்! எவளாவது பைத்யக்காரி ஏமாந்து நீ சொல்கிற விலைக்கு இந்தக் கில்ட் நகையை வாங்கிக்கொண்டால் உனக்கு அரைப் பொன்தானா கிடைக்கும்? குறைந்தபக்ஷம் இருபதுபொன் கிடைக்குமே! ஏ, ஸௌந்தராங்கீ, விலையை ஒன்றுக்குப் பத்தாய்ச் சொல்லாதே. ஒரேநாளில் கோட்டைகட்டப் பார்த்துவிடலாமா? அதுகூடப் பரவாயில்லை. நீ ஒரு நிமிஷத்திலேயே கட்டிவிடப் பார்க்கிறாயே! அந்த வார்த்தையெல்லாம் வேண்டாம். ஏதாவது ந்யாயமான விலை யொன்று சொல். ஆம்பர்நாட்டுப்பெண்களெல்லாம் மோசநாசமில்லாமல் எப்போதும் கறார்விலை சொல்பவர்களாயிற்றே. அவர்களைக் கண்டால் அத்யந்த ப்ரியம் எனக்கு. ராஜாமான்ஸிங் அவர்களின் அத்தையாகிய ஆம்பர் ராணிக்கு என்னிடம் அதிகநேசம். வங்கவீரன் ரணகளத்தில் காயப்பட்டு ஸ்மரணை தப்பி வந்தபோது அவனுடைய வைத்யர்கள்தான் அவனுக்கு சொஸ்தப்படுத்தினார்களாமே? நல்ல பெண்ணாயிற்றே நீ! ஒன்றும் தடை சொல்லாமல் பதினைந்துபொன் வாங்கிக்கொள். சீக்ரம் சொல். எனக்கு நாழிகையாகிறது. இந்தக் கில்ட் நகைக் கடையண்டையே இவ்வளவு நேரம் நிற்பதென்றால் எனக்கு வேறுகடைகளுக்குப் போகவேண்டாமா?"

"ஆஹா, வங்கவீரனும் ஸரியான ப்ரத்யுபகாரந்தான் செய்தான்! அன்னமிட்டவீட்டிலேயே கன்னமிடுவதுபோல் அவன் அந்த ராணியாரின் அடிமைப்பெண்ணையே தூக்கிக்கொண்டு போய்விட்டனனாமே? அதுவும் அப்பெண் தார்த்தரிப்பெண்; இவனோ ஹிந்து குலத்துதித்தவன். என்னவென்றாலும், இந்த வங்கதேசத்து ஹிந்துக்கள் மாத்திரம் விசித்ரமானவர்கள்தாம். அந்நாட்டு ஸ்த்ரீகள் நம்மைப்போல் பாவாடை கட்டாமல் சேலைகள் தரிக்கிறார்கள். புருஷர்களும் தலைக்குத் தலைப்பாகை யொன்றும் கட்டுவதில்லை. அம்மா, நான்தான் முன்

னமே சொன்னேனே. இருபத்தைந்து பொன் உங்களிடத்திலிருந்தால் பார்க்கலாம். இல்லாவிட்டால் ஸுகமாய்ப் போய்வரலாம்."

"ஸரி. போகவேண்டியதுதான் போலும்! ஆனாலும் இவ்வளவு அந்யாயம் அடிக்கக்கூடாது. அதோ வங்காளத்துப் பெண் ஒருத்தி கடைவைத்திருக்கிறாள். அவள் ஏதாவது வங்க நாட்டு நகைகள் கொண்டுவந்திருக்கிறாளா? போய்ப் பார்க்கவேண்டும்."

"ஆஹா, வங்காளப் பெண்ணின் கடைக்குப் போனால் சடைபோல் லேசான வெள்ளி நகைகள் அகப்படும். வங்காளத்தில் செய்யப்படும் வெள்ளி நகைகளும் மஸ்லின் துணிகளும், மிகவும் மேலானவைதான். நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் கைக்குக் கனமாய்ச் சுத்தமான பொன்னாபரணங்கள் வேண்டுமானால் ஆம்பர் நாட்டு வேலைப்பாட்டுக்கு இணை எதுவும் வராது. அம்மா! ஒரே வார்த்தையாய்ச் சொல்லுகிறேன். இருபது பொன்னுக்குக் காசு குறையாது. தங்கள் கையில் அவ்வளவு பெரிய தொகையிராவிட்டால் இதோ தங்கள் புருஷர் வருகிறார். அவரைக் கேளும்" என்று சொல்லிக்கொண்டே முகத்தை மூடிக்கொண்டாள்.

"ஹா! ஹா! எனது பட்டமஹிஷிகூடத் தனது வரப்ரஸாதத்தை மறந்து, கேவலம் உலக வ்யாபாரங்களில் மனதைச் செலுத்துகிறாளா? ஆம்பர் நாட்டுப் பெண்போலிருக்கிறதே இவள். இவளுடன் பேசி ஜயிக்க வல்லமையுண்டா உனக்கு? ஆம்பர் நாட்டார் ஆக்ரா கஜானாவைக் காலிசெய்வதில் கைதேர்ந்தவர்களாயிற்றே!"

"ஆம், அப்படிக்குத்தான் தோன்றுகிறது, நாதா! ஆம்பர் நாட்டுப்புருஷர்கள் கைதேர்ந்த வீரர்கள் என்பதற்கேற்ப அவர்களுடைய பெண்மணிகளும் பேச்சில் மஹா வல்லவர்கள். பத்துக்காசு பொருத இந்த கில்ட் வளையலுக்கு இருபது பொன் கேட்கிறாள். நானும், பைத்தியக்காரி, பதினைந்து பொன் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டேன். நாதரே, இந்த ஆம்பர் நாட்டுப் பெண்களுடன் அதிக ஜாக்ரதையாயிருக்கவேண்டும். ரொம்ப பேச்சுக் கற்றவர்கள், அவர்கள் கண்பார்வையைப் பாருங்கள். ஏமாந்தால் உங்கள் ராஜ்யத்தை வாங்கிக்கொண்டு போய்விடுவார்கள்."

"ஹே, ராஜபுத்ர கன்னிகையே, அதற்குப் பதில் என்ன சொல்லுகிறாய்?" எனச் சக்ரவர்த்தியவர்கள் கேட்டார்கள்.

"ப்ரபூ, ஆக்ரா கஜானாவினின்று பணம் அடிக்கடி ஆம்பர்நோக்கிச் செல்கிறதென்றால் அதைவிட அதிகமாய் ஆம்பர் நாட்டுப் போர் வீரர்கள் சக்ரவர்த்தியவர்களுக்காகத் தம் உயிரைக் கொடுக்கின்றனரே. நாங்கள் பேச்சுக் கற்றவர்களாயிருந்தால் எங்களுடைய புருஷர்கள் கத்திகேடயங்களை உபயோகிப்பதில் அதிக சதுரர்களாயிருக்கிறார்கள். ஒன்றும் அதிசயமில்லையே" என்று அம்மாது கம்பீரமாய்த் தாழ்ந்த த்வனியுடன் கண்கள் கால்கட்டைவிரலைப் பார்த்தவண்ணமாய் விடை பகர்ந்தாள்.

"ராஜபுத்ர நாரீமணீ, உண்மையே! ஏகாதிபத்ய அபிவ்ருத்திக்காக ராஜபுத்ரர்கள் செய்துவரும் ஒத்தாசையை நான் ஒருபோதும் மறவேன். ஏதோ, இதன் முடிவானவிலையென்ன? ராஜஸ்தானத்துக் கட்டழகிகள் தான் அடிக்கடி எங்கள் மனதைக் கொள்ளைகொண்டு செல்கின்றனரே. எங்கள் பணத்தையாவது அபஹரிக்காமலிருக்கலாகாதா, பெண்ணே?"

முன்போலவே பூமியைப் பார்த்த வண்ணமாய் அப்பெண்மணி சொல்லலுற்றாள்: "ப்ரபூ! அரண்மனையைச் சுற்றிலும் போர்வீரர்கள் ஜாக்ரதையாய்க் காவல்புரிந்து கொண்டிருக்கின்றனர். மந்த்ரக்காரனாவது தந்த்ரக்காரனாவது ஒருவனும் ஒரு காசு திருடிக்கொண்டு போவானென்ற பயமில்லை. ஆனால்........."

"ஆனால்...........என்ன? பயப்படாதே, மனதிலுள்ளதைத் தைர்யமாய்ச் சொல்".

ராஜபுத்ரப் பெண்மணி, முகத்தில் ஒரு கபட மந்தஹாஸக் குறியுடன், "சில வேளைகளில் ரத்னாதிபரான சக்ரவர்த்தியவர்கள் கேவலம் பேதை புத்தியுடையவர்களாகிய ஸ்த்ரீகளைத் தம் ரத்னபலத்தால் மோசஞ்செய்கிறதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்" என்றாள்.

"பெண்ணே, உன் காப்புக்கு இன்னும் ஐந்து பொன். பேஷ், நன்றாய்ச் சொன்னாய்! நன்றாய்ச் சொன்னாய்!" என்று ஸலீமா பீகம் ஆனந்த பரவசமானாள். "உண்மையை நன்றாய்க் கண்டறிந்து சொன்னாய் நீ, ராஜபுத்



ரப் பெண்மணீ, உன் காப்புக்கு இருபது பொன் தருகிறேன். ப்ரபுக்களும் ப்ரதானிகளும்கூடச் சொல்ல அஞ்சும்படியான உண்மையை நீ பயப்படாமல் சக்ரவர்த்தியவர்கள் முன்னிலையில் தைர்யமாய்ச் சொன்னதற்காக நான் பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன்."

"ராணீ, இதென்ன விபரீதம்! அரண்மனைக்குள்ளேயே சதியோசனை!" என்று அக்பர் சிரித்துக்கொண்டே கூறலானார்.

"நம்முடன் நட்பாடும் அயல் நாட்டுப்பெண் ஒருத்தி அரண்மனைக்குள் ப்ரவேசித்துச் சக்ரவர்த்தியவர்களுக்கே ராஜ த்ரோஹம் நினைப்பது" நமது பட்டமஹிஷியே அவளுடன் கூடிக்கொள்வது, என்ன ஆச்சர்யம்! ஸரஸ்வதியின் திருவருட் ப்ரஸாதம் பெற்று விளங்கும் நாரீமணியே, தாங்கள் காதலித்த கட்டழகியின் பொருட்டு யாவற்றையும் அர்ப்பணஞ்செய்து தமது ப்ராணனைக்கூட த்யாகம் புரியும்படியான ஆடவர்கள்பால் நீ பரிந்து ஒரு மொழிகூடப் பேசமாட்டாயோ, என் ப்ரிய ஸகியே?"

மஹாராணியார் புன்முறுவல் செய்து தலைநிமிர்ந்து தம் பர்த்தாவைக் கடைக்கண்ணால் பார்த்து ஆம்பர் நாட்டுப் பெண் பேசியதற்கு முற்றிலும் அநுகூலமாய்ப் பொருள் படும்படி ஒரு பாட்டு பாடினாள்.

மஹாராணி தம் இனிய குரலுடன் பாடுவதைக் கண்டு ஸ்த்ரீகள் பலர் ராஜ தம்பதிகளைச் சுற்றிக்கொண்டனர். பாட்டு முடிந்தவுடன் அக்பர் முகத்தில் தோன்றிய தோல்விக் குறியைக் கண்டு யாவரும் கொல்லென்று சிரித்தார்கள்.

சக்ரவர்த்தியவர்களும் அவர்களுடன் சேர்ந்து நகைக்கலாயினர். "மொகலாயரும் ராஜபுத்ரர்களும் சேர்ந்துகொண்டு எதிர்க்கத் தலைப்பட்டால் யாரால் ஸஹிக்கமுடியும்? ப்ரதாபஸிங்குக்கு இவ்வித விபத்து ஹால்டிகட் யுத்தபூமியில் நேரிட்டது. எனக்கோ என் அந்தப்புரத்திலேயே இவ்வித விபத்து ஸம்பவித்திருக்கிறது. என்னை ரக்ஷிப்போர் ஒருவருமில்லையா?" என்று சொல்லிக்கொண்டே ஜயப்ரதாபரான அக்பர் பெருமான் அந்த ஸ்தலத்தைவிட்டு அகன்றனர்.

"ஆம்பர் குலத்துதித்த வீரசிகாமணியே, இதுவரைக்கும் பகைவருக்குப் புறங்காட்டியோடியறியாத மகிபனை நாம் இன்றைக்கு விரட்டிவிட்டோம். இந்தா, இருபது பொன், காப்பைக் கொடு" என்று சொல்லிக்கொண்டே இருபது பொன்னைக் கொடுத்துவிட்டு ஸலீமா பீகம் காப்பை எடுத்துக்கொள்ள மறந்து தன் கணவனைத் தேடிப் போய்விட்டாள்.

"நாதரே, நீர் அங்குவிட்டு இங்குதான் வந்திருப்பீர் என்று யூகித்தேன்" என்று ஒருவித திருட்டுப் புன்னகையுடன் பேசலுற்றாள் ஸாலிமா பீகம். "உம்மைத் தேடுமிடந்தான் எனக்குத் தெரியுமே. இக்கடையண்டைக் கீழ் நாட்டு ஸுந்தரியொருத்தி இருப்பதை முன்னமே கண்டேன். ஆகையால்தான் நேரே இங்கே வந்தேன். வங்கநாட்டு ஸாமான்களைத் தானே என் நாதர் ரொம்ப கவனமாய்க் கண்ணுற்றுக்கொண்டிருக்கிறார், வங்கநாட்டு ஸுந்தரப் பெண்மணியை யன்றே!"

"உச்! உச்! கொஞ்சங்கூட வேளைஸமயந் தெரிகிறதில்லை. அயலார்கள் எதிரேயெல்லாம் இப்படியா என் மானத்தைக் கெடுக்கிறது! சக்ரவர்த்தியவர்களுக்குத் தம் சொந்த அரண்மனையிலே மரியாதை யென்பதே இராமல் போய்விட்டாலுங்கூட, கீழ்த்திசையார்கள் இன்னும் சக்ரவர்த்தியென்றால் சிறிது மதிப்பு வைத்திருக்கிறார்கள். ஆப்காநியநாட்டுபுத்ரியே, நீ யார்? நீ மறைத்துக்கொண்டு நிற்கும் அந்த அயல் நாட்டுப்பெண் யார்?"

அவ்வாப்காநியப் பெண் குனிந்து ஸலாம் செய்து சக்ரவர்த்தியவர்களைப் பார்த்து சொல்லலுற்றாள்: "இவ்வரண்மனையில் அடிக்கடி வந்திருக்கும் தங்களுடைய வேலைக்காரியைத் தாங்கள் இன்னும் ஞாபகம் வைத்துக்கொண்டிருப்பது அடியேனுடைய பாக்யந்தான். ப்ரபுவின் தயவால்தான் எங்கள் குடும்பம் தழைத்திருக்கிறது. தாங்கள் பெரிய மனது செய்து அளித்தருளிய வங்காளத்து ஜாகீரை என் ஸஹோதரர் ஷெர்ஆப்கன் சீராய்ப் பரிபாலித்து வருகிறார். அவரும் அவருடைய மனைவி மிஹ்ருந்நிஸாவும் ஸதா தங்களுடைய நற்குணத்தைப் போற்றித் தங்களுடைய க்ஷேமத்துக்காகப் பகவானை ப்ரார்த்திக்கிறார்கள்."

"ஷெர் ஆப்கன் அத்புத வீரதீரர். அவருக்கு எத்தனை ஜாகீர்கள் அளித்தாலும் அவர் செய்துள்ள பேருபகாரத்துக்கு ஈடாகாது. ஆனால்

பகவான் அநுக்ரஹத்தால் அவருக்கு அழகிற் சிறந்த தர்மபத்னி வாய்த்திருப்பதே ஸர்வந்துக்கும் மேலான பரிசாகும்."

மஹா புத்திசாலியாகிய அந்த ஆப்காநிய ஸ்த்ரீ தனக்குள் பேசிக்கொள்வதுபோல் "அக்கட்டழகிகளின் நேத்ரங்களில் அபாயக்குறி பெரிதும் அதிகமாயிருக்கிறது. அதைக்கண்டு நல்லவேளையாய் அல்லா அவளை ஆக்ராவினின்றும் அப்புறப்படுத்திவிட்டார்" என்று மெது வாய்ச் சொல்லிக்கொண்டாள்.

"உச்! உச்! அதிகப்ரஸங்கி, இந்த இடத்திலா அவ்வித விஷயங்களைப்பற்றிப் பேசுகிறது? உன்னுடைய துஷ்டக்கண்களில்கூட ஒருவித அபாயக்குறி இருப்பதாக எனக்குத் தென்படுகிறது. உன்னையும் ஒரு நல்ல ஸுந்தர யௌவன புருஷன்வசம் ஒப்புவித்துத் தூரதேசம் அனுப்பாவிட்டால் அரண்மனையில் பெருங்கலகம் ஏற்படும். மேற்கில் பாரஸீகப் போர்வீரர்களையும், கிழக்கில் ஆப்காநியரையும் நான் என் ஸைந்யபலத்தால் தோற்கடித்துவிடுவேன். ஆனால் என் அந்தப்புரத்துக்குள் அடிக்கடி நுழைந்துவிடும் பாரஸீக ஆப்காநிய ஸ்த்ரீ ஸைந்யங்களினின்றும் என்னைக் காபாற்றக்கூடியவர்கள் இன்னாரென்று எனக்குத் தெரியவில்லை."

இதைக்கேட்டு அவ்வாப்காநிய மடந்தை தலைகுனிந்து கண்களை மூடிக்கொண்டாள். அக்பர் புன்முறுவல் செய்து "அதிருக்கட்டும், உன்னுடன் வந்திருக்கும் அப்பெண் யார்?" எனக் கேட்டார்.

"அவள் வங்கதேசத்துச் சீமாட்டி, என் ஸஹோதரி மிஹ்ருந்நிஸா இவளைப்பற்றி அதிகமாய்ச் சிலாகித்துப் பேசுகிறாள். ஆக்ரா நகரக் காட்சிகளையெல்லாம் இவளுக்குக் காண்பித்தேன். ஊருக்குத் திரும்பப் போவதற்குள் அரண்மனை அந்தப்புரத்து வழக்கங்களையும், நடையுடைபாவனைகளையும், அங்கு வஸிப்பவர்களையும் அறிந்துகொள்ளட்டுமென்று நான் அவளை நிர்ப்பந்தித்து இன்றிரவு இவ்விடம் அழைத்து வந்தேன்."

"எனக்கு ரொம்பவும் ஸந்தோஷம். தன் ப்ரஜைகளனைவரையும் த்ருப்திசெய்து அவர்களை ஸந்தோஷிப்பித்து அவர்களுடைய நல்லபிப்ராயத்தைப் பெறுவதையே தனது செங்கோலின் லக்ஷ்யமாகக் கொண்டவரை நேரில் பார்த்துத் தன் ஊர் சென்றபின் அவரை நேசித்து அவரைப்பற்றி விசுவாஸமாய்ப் பேச ஸந்தர்ப்ப மேற்படுமென்று நம்புகிறேன்" எனக்கூறினார், சக்ரவர்த்திப் பெருமான்.

"ஸஹோதரீ, பயப்படாதே; இங்கேவா; சக்ரவர்த்தியவர்களுக்கு வந்தனஞ் செய்" என்று அவ்வாப்காநிய ஸ்த்ரீ தனது ஸ்நேஹிதையை அழைத்தாள்.

ஹிந்துஸ்தானத்துச் சக்ரவர்த்தியென்றால் அவர் இதர மனுஷர்களைப் போன்றவரல்லர் எனவும், நம்மைப்போல் அவர் ரக்தம் சதை முதலியன உடையவரல்லரெனவும், அவர் ஏதோ தெய்வம் தேவாதி வகுப்பைச் சேர்ந்தவரென்றும், அவர் ஸாமாந்ய ஜனங்களால் பார்க்கக் கூடியவரல்லரென்றும் இவ்வகையான பாட்டிக்கதைகள்தான் ஹேமலதை கேட்டிருக்கிறாளாதலால், க்ரீடம் புனைந்தவரும், இவ்வகண்ட இந்தியராஜ்யத்தைத் தர்மபரிபாலனம் செய்பவருமாகிய அம்மஹாபுருஷரைத் தான் இப்போது நேரில் பார்க்கிறோமென்பதை அவளால் சிறிதும் நம்பக்கூடவில்லை. அந்த விசாலமான நெற்றியையும், வெண்சாம்பல் நிறமான மீசையையும், ஊடுருவிப்பாயும் இருண்ட கண்களையும், அன்பும் ஆர்வமும் தவழும் அந்த ப்ரகாசமான முகமண்டலத்தையும் கண்டு ஹேமலதையின் மனதில் ஒருவித பக்தி ஜனித்தது. இப்பண்டிகைக் காலத்தில் சக்ரவர்த்தியவர்களும் அங்கு கூடியுள்ள ஸ்த்ரீஜனங்களும் தம்முள் ஒருவருடனொருவர் ஸமமாய்ப் பாவித்து நடந்துகொள்ளும் வழக்கத்தை மறந்தவளாய் அங்கு வரும்போது தன் கருத்தில் கொண்டிருந்த ஒரு கோரிக்கையால் தூண்டப்பட்டவளாய் ஹேமலதை சரேலென்று இந்திய ஸாம்ராஜ்ய அதிபதியாம் அந்த ராஜாதிராஜர் முன் நமஸ்காரம் செய்யலானாள். ஸலிமா ராணியார் புன்னகை செய்தனர். சக்ரவர்த்தியவர்கள் அன்பார்ந்த ஹ்ருதயத்தினராய்ப் பேசலுற்றார்!

"கீழ்நாட்டு நாரீரத்னமே, எழுந்திரு. ஸஹோதரீ, இன்று நாம் இங்கு கூடியிருப்பது அரசன் குடியென்னும் முறையிலன்று. நாம் அனைவரும் இப்போது ஸஹோதரபாவமாய் ஸந்தித்திருக்கிறோம். உனது பக்தி விசுவாஸத்தைக்கண்டு நான் பெரிதும் அகமகிழ்ந்தேன். ஹிந்துக்களுக்கும் முஹம்மதியர்களுக்கும்



பொதுவான தலைவராகிய அந்த ஸர்வேச்வரருடைய க்ருபையால் அடியேன்—அவருடைய ஊழியனும் அடிக்கடி நெறிதப்பிநெறிசெல்லும் இயல்பினராகிய மனுஷஜன்மத்தைச் சேர்ந்தவனுமாகிய அடியேன்—அவர் என்மீது சுமத்தியிருக்கும் பாரத்தை ஸரிவர வஹித்து, என் ப்ரஜைகளுடைய நல்லபிப்ராயத்தையும் விசுவாஸத்தையும் பெற்றிருப்பேனாக!"

இம்மொழிகளைக் கேட்டு ஆனந்தமடைந்தவளாய் ஸலீமா பீகம் தன் கொழுநனைப் பார்த்து "நாதரே, நீர் இப்போது பேசியது உத்தம கவியைச் சேர்ந்ததுதான். உமது அதரங்களினின்று ஸ்வயமாய்ப் பிறக்கும் பாடல்களுக்கும் என்னுடைய கவிக்கும் அஜகஜாந்தரம். என்னுடைய கவியில் அந்த இனிமைக்குத் திருடப் போகவேண்டியதுதான்" என்றனள்.

"எனது கருத்துக்கிசைந்த கண்மணீ! எனக்கென்ன தெரியும்? ஏதோ என் மனதில் தோன்றியதை வாயால் வெளியிடப் பார்க்கிறேன்."

"அதைத் தவிரக் கவிகள் செய்வது வேறென்ன? மனதிலெழும் உணர்ச்சிகளைத்தான் அவர்களும் வாயால் தெரிவிக்கிறார்கள்."

"இந்த வங்க நாட்டுப் பெண்மணியை அவளுடைய ஊர் பேர் குலம் கோத்ரம் என்னவென்று விசாரி."

"ப்ரபூ! இவள் தேவிபுரத்தினின்றும் வருகிறாள். தங்களுடைய வங்க நாட்டில், தொன்று தொட்டு ப்ரபலமுற்றிருக்கும் புராதன ஜமீனாகிய தேவிபுரத்து அதிபதியாவர், இவளுடைய புருஷர்" என்று உடனே பதில் கூறினாள் அவ்வாப்காநிய ஸ்த்ரீ.

"தேவிபுரமா! ஆம், அப்பெயர் இதற்குமுன் கேள்விப்பட்டதாய்த்தானிருக்கிறது. அந்த ஜமீன் அடிக்கடி சண்டை செய்துகொண்டிருக்கவில்லையா பக்கத்து ஜமீன் ஒன்றுடன், அதன் பேரென்ன?"

"வீரநகர ஸமஸ்தானத்துடன்" என்று ஆப்காநிய ஸ்த்ரீ கூறினாள். ஹேமலதைக்கு மொகலாயருடைய பாஷை சிறிது தெரியுமாயினும் அப்பாஷையில் பேசுவதற்கு அவளுக்கு வழக்கம் போதாது; கூடச் சக்ரவர்த்தியவர்களுடன் உரையாட அவள் லஜ்ஜைப்பட்டாள். ஆதலால் அடிக்கடி அவளைக் கேட்டுக் கேட்டு அந்த ஆப்காநிய ஸ்த்ரீ அவளுக்காகச் சக்ரவர்த்தியவர்கள் கேள்விகளுக்கு விடை கூறிவந்தாள். "வீரநகரத்துக்கும் தேவிபுரத்துக்கும் பழையநாட்சண்டை அது. இப்போது அச்சண்டையெல்லாம் ஒழிந்து இரண்டு ஸமஸ்தானங்களும் ஸமாதானமுற்றிருக்கின்றன. இந்த ஸ்த்ரீயின் புருஷர், அதாவது தேவி புரத்து அதிபதி இப்போது வீரநகர ஜமீன்தாரருக்கு ப்ராண ஸ்நேஹிதர்."

"வீரநகர ஜமீன்தாரரா? அந்த யௌவன புருஷரை நான் அறிவேன். அவர் அரண்மனையில் ஏதோ கலஹம் செய்தார். அதற்காக அவரை நாம் ராஜஸ்தானம் அனுப்பிவிடவில்லையா?" என்று சிரித்தவண்ணமாய்க் கேட்டார் அக்பர்வள்ளல்.

தனது அந்தரங்க உத்தேசத்தை ஞாபகமூட்டிய அம்மொழிகளைக்கேட்டு ஹேமலதை திகிலடைந்தாள். அவள் ஆப்காநிய மாதினைப் பார்த்து நடுங்கிய குரலாய் ஏதோ சில வார்த்தைகளுரைத்தாள்.

அதற்கு அந்த ஆப்காநிய மாது "ஸகோதரி! எங்கள் பாஷை உனக்குச் சிறிது தெரியுமே. நீ சொல்லிக்கொள்ள வேண்டியதைச் சக்ரவர்த்தியவர்களுக்கு நீயே நேரில் விண்ணப்பஞ் செய்துகொள். வார்த்தைகள் சிறிது தப்புத் தவறாயிருந்தாலும் பாதகமில்லை. சக்ரவர்த்தியவர்கள் உனது கோரிக்கையை அநுக்ரஹிப்பார்"—என்றாள். மஹா தயாளுவாகிய அக்பர் மகிபரும் அவளுக்குத் தைர்யம் வருமாறு இரண்டொரு வார்த்தைகள் சொல்லலாயினர்: "பயப்படாதே. ஸஹோதரீ, மனதில் உள்ளதைத் தைர்யமாய்ச் சொல். உன் முகத்தைப் பார்த்தால் ஏதோ ஒரு விஷயம் உன் மனதை வருத்துவதாகத் தோற்றுகிறது. குறை ஏதாவதிருந்தால் சொல். என்னால் ஸாத்தியமான வரையில் அதைத் தீர்த்து உன்னை ஸந்தோஷமுறச் செய்கிறேன்."

இத்தருணம் தப்பினால் மறுஸமயம் வாய்க்காதென்று ஹேமலதை தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு கண்களினின்றும் நீர்த்துளிகளைத் துடைத்துக்கொண்டாள். அப்போது அவள் முகம் வெள்ளைவெளேரென்று வெளுத்திருந்தது. வார்த்தைகள் தப்புந் தவறுமாயிருந்தாலும் குரல் மாத்ரம் நடுக்கமுறாமல் அவள் தன் குறையைப் பரிதாபமாய்த் தெரிவிக்கலானாள்.

"ப்ரபூ, தம் நாட்டை யிழந்து உற்ருருறவினரைவிட்டு ஊகமற்றுத் தேசாந்த்ரியாய்த் திரியும் நிர்பாக்ய புருஷரொருவருக்காகப் பரிந்து நான் பேசுவதை மன்னித்தருள வேண்டும். அவர்—அந்நரேந்த்ரநாதர்—தங்களுக்காக எத்தனை முறையோ போர்புரிந்திருக்கிருர். அந்த யுத்தங்களில் பலமுறை காயம் பட்டுச் சாந்தருவாயிலிருந்திருக்கிருர். அவரைவிட ராஜபக்தியிலும், ஊழியத்திலும் தைர்யத்திலும், சிறந்தவர் இம்மண்டல மெங்கும் கிடையாதென்றே சொல்வேன். அவர் அறியாமையால் புரிந்துள்ள குற்றங்களை க்ஷமித்துத் தாங்கள் பெரிய மனது செய்து அவருடைய முன்னோர் ஸமஸ்தானத்தை அவருக்கு அளித்தருளினல், தங்களை வங்காளத்தில் கோடானுகோடி ஜனங்கள் ப்ரதிதினமும் வாழ்த்திக்கொண்டிருப்பார்கள். ஸ்வாமி! கேவலம் பெண்ஜாதியாகிய நான் அவருக்காகப் பரிந்து பேசியதைப் பொறுத்தருளவேண்டும், அவர் என் பால்ய ஸ்நேஹர். இருவரும் ஒரு வயிற்று மக்களைப்போல் வளர்ந்து வந்தோம்" எனக் கூறும்போது அவளுடைய கன்னங்கள் சிவந்து பார்ப்பதற்குப் பரிதாபமாயிருந்தன. கண்களில் ததும்பிய நீரைத் துடைத்துத் தலைகுனிந்து சக்கரவர்த்தியாரின் திருவுள்ளத்தை எதிர்ப்பார்த்து நின்ருள்.

"என் கண்மணி, இந்த கவிக்கு என்ன சொல்கிருய்? உன் பாடல்களெல்லாம்சேர்ந்து இப்பெண்மணியின் கண்ணீருக்கு இணையாகுமா?" என்று அக்பர் தம் ராணியைப் பார்த்து மெதுவாய்ச் சொன்னர்.

இன்னும் முழந்தாளிட்டு நமஸ்கரித்த வண்ணமாயிருக்கும் ஹேமலதை பக்கம் திரும்பி அக்பர் வள்ளல் பின்வருமாறு சொல்லலுற்ருர்:—

"ஹேமலதா, எழுந்திரு. நரேந்த்ரநாதர் குணத்தைப்பற்றி என்னிடம் இவ்வளவு தூரம் சொல்லவேண்டுமா? அவர் குணத்தையும் சௌர்யத்தையும் நான் அறியேனே? அவரைப்போன்ற சுத்தவீரரும் ராஜவிசுவாஸமுடையவரும் ஒருவருங் கிடையாது. அவர் நமக்குப் புரிந்துள்ள பேருபகாரத்தை நான் நன்கறிவேன். கொஞ்சகாலமாக அவர் ராஜஸ்தானத்தில் செய்துவரும் கார்யங்களுக்காக நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். பெண்மணி! நீ நல்ல ஸமயத்தில்தான் வந்தாய். சீக்ரத்தில் நாம் தக்க மர்யாதைகளுடன், அவரை வீரநகர ஸமஸ்தானத்துக்கு அனுப்புவதாய் உத்தேசித்திருக்கிறோம். ராஜசாஸனமும் சிறிது காலத்தில் அனுப்பிவிடுவோம். உன்னைப்போன்ற ஸத்யசீலையும், உன்னைப் போன்ற சாந்தகுணமுடையவளும், உன்னைப் போன்ற ம்ருதுபாஷியும் அவருக்காகப் பரிந்து பேசவிருக்க அவருக்கென்ன குறை! நீ அவரை ஸந்திக்கும்போது ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருக்கும் சக்ரவர்த்தியவர்கள்கூட இப்பேர்பட்ட புண்ணியவதியைத் தமது நட்பினளாய்ப் பெற்றிருக்கும் போர்வீரனுடைய பாக்யத்தைக் கண்டு பொருமை கொள்ளுகிருரென அவரிடம் சொல்."

இம்மொழிகளைக் கேட்டு ஹேமலதை புன்னகை செய்தனள். மறுபடியு மொருமுறை சக்ரவர்த்தியவர்களை நமஸ்கரித்தாள். இதற்குள் அக்பர் பெருமான் போய்விட்டார்.

---

# சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S & LADIES' PAGES

### தமயந்தி: 11.—மறம்.

நீக்கல் புலிதொடாச் செல்வம் பெறாம்போல்
ஆக்கை தளர அமைந்து—போக்கற்றுக்
ஓரு விழித்தாள் சிலேசுடன் அவ்வளவில்
நீருய் விழுந்தாள் நிலத்து.

நளன் கனவேகமாக நடந்துகொண்டேயிருந்தான்; மலையிலிருந்து விசையுடன் விழும் பெரிய பாறைபோல அடங்காதோங்கும் வேகத்துடன் காட்டினுள்ளே அந்த நள்ளிருளில் போய்க்கொண்டேயிருந்தான். உலகைமுழுதுங் கவிந்து விளங்கிய பனிக்கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு நெடுமூச்சு விட்டுக்கொண்டே ஆவேசம் பிடித்தவன் போலத் தனது ஞாபகமில்லாது ஓடிக்கொண்டேயிருந்தான். என்செய்வது?

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தாமுந் துறும்"

அல்லவா? நிற்க. நளன் விட்டுவிட்டுப்போன சிறிதுநேரத்திற்கெல்லாம் தமயந்திக்குச் சற்று மயக்கம் ஒழிந்தது; களைப்பும் ஒருவிதமாகமாறியது. அந் நள்ளிரவில் கண்விழிப்புக்கொடுத்ததும் அவள் நாலாபக்கங்களிலும் பார்த்தாள். அச்சோவென்று அங்கு இருள் மூடியிருந்ததே யொழிய, அவள் கண்முன் என்ன தெரியும்? பூமியின் அந்தர்க்கர்ப்பத்திலும் அவ்வித அந்தகாரம் இருக்குமோ என எண்ணுவதுகூடத் தவருகும். ஆயினும், தமயந்தி தன் கையை நாலாபக்கங்களிலும் தடவிப் பார்த்தாள்; நளனை அவள் காணவில்லை. கெட்டுப் போன பொருளை இருளில் தேடுவதைப்போல அவள் பூமிமுழுதும் தடவித்தடவித் தேடிப் பார்த்தாள். தேடத்தேட அவளுக்கு அச்சம் ஏற்பட்டது; அது அதிகமாகிக்கொண்டேயிருந்தது. அந்தோ! அவள் உடம்பு பதைத்தது, நடுங்கியது; மார்பு துடித்தது; தலை சுழன்றது; ஒருவித ஏக்கம் மனத்தில் குடிகொண்டு அவளை அலட்டியது; கவலையுந் துக்கமும் மேவிட்டன; கண்களிலிருந்து தாரைதாரையாக நீர் வழிந்தது. அவளுக் கப்போது நெஞ்சில் வந்து ஏதோ அடைத்துக்கொண்டாற்போலப் பட்டது; அவள் மூச்சுத் திணறியது. பக்கத்திலிருந்த நாதனைக் காணுது அவள் பரிதபித்தாள்; பிள்ளையைப் பலிகொடுத்த தாயைப் போலத் தன்வயிற்றில் கையை வைத்தழுத்திக் கொண்டு அடியற்ற மரம்போல அப்படியே பூமிமேல் அசைவற்று விழுந்தாள். தன் நினைப்புச் சரிதானே என்று சங்கித்து அவள் மீண்டும் அந்தப் புழுதித்தரையைத் தடவித் தடவிப் பார்த்தாள். நளன் மாத்திரம் அவள் கையில் அகப்படவில்லை. "ஹா! கெட்டேன்! என் நாதா! என் தலைவா! எனதுயிரே! என் தலையில் கல்வந்து விழுந்துவிட்டதே! என்செய்கேன்! இனி நான் அழிந்தேன். உம்மைக்கண்டல்லவா நான் உயிர் தரித்திருந்தேன்? உமக்குச் சிறிதும் கெடுதிசெய்ய நான் எண்ணவில்லையே! என்னிடம் தாங்கள் கோபித்ததே இல்லையே!—அல்லது உமக்கிது ஒருவேளை விளையாட்டா? இத்தகைய விளையாடல் உமக்குச் சிறிதுந் தெரியாதே! ஆர்யா! தாங்கள் தர்மாத்மா வாச்சுதே! ஒருபொழுதும் பொய்சொல்லாத புண்ணிய சீலரல்லவா? அப்படியிருக்க என்னைவிட்டுப் பிரிவதில்லையென்று சொல்லிவிட்டு, இப்படி நான் தூங்கும்போது என்னைத் தனியேவிட்டுநீங்கள்





போவது உமக்கு அழகாமா? அல்லது உமது உண்மைக்கும் வன்மைக்கும் வரம்பாமா? உங்களை அன்றி வேறு யார் இந்த ஏழையிடம் அன்புகொள்ளத் தக்கவர்? உம்மிடம் அடைக்கலம்புகுந்துவிளங்கும்நிரபராதியான மனைவியை நடுக்காட்டில் நள்ளிரவில் விட்டுவிட்டுச் சொல்லாமல் நடப்பது பொருந்துமா? மற்றவர் செய்த துன்பத்திற்காகக் குற்றமொன்றுஞ்செய்யாத என்மேல்கோபங்கொள்ளல் ஆகுமா? என்னை வெறுக்கலாமா? அல்லது, அரசர்க்கரசே! அந்நாள் தேவதைகள் முன்பாகச் சொன்னமொழியை மறந்துவிட்டீரோ? அதை நீங்கள் மறப்பினும் நான் ஒருநாளும் உம்மை மறக்கேன். தாங்கள் என்னை ஒருநாளும் கைவிடமாட்டீர் என்பது எனது திடமான நம்பிக்கை.—ஆனல் என்னை விட்டுவிட்டு ஏன் தாங்கள் போகவேண்டும்? உம்மை விட்டு ஒருக்ஷணமுமிருக்க நான் பொறுக்கேன். ஆண்சிங்கமே! உம்மைக் கண்டல்லவா நான் உலகில் உயிர்தரித்திருந்தேன்; எல்லாக் கஷ்டங்களையும் தாங்கிநின்றேன்.—சீ? என்ன நினைத்தேன். உம்மை விட்டுமோ நான் இருப்பது!—காலம்வராது மரணம் வராது. அகால மரணம் அஸம்பாவிதம். தற்கொலை தவறு; பெரும் அவதூற்றுக் கிடந்தரும். இன்றேல் அப்பொழுதே உயிரை ஒழித்திருப்பேன்—ஒருவேளை என்னோடு விளையாடுகிறீரா? அதற்கு இதுவல்லவே தக்க சமயம். ஐயனே! நான் பெரிதும் பயப்படுகிறேன்; துணையற்றுத் துயரடைகிறேன். இதுவல்ல விளையாடச் சமயம். எனது நிலை உமக்குத் தெரியாதா? அறியாதார்போல் செய்வதிப்பொழுதடாது. ராஜாதிராஜ! என்னுயிர்த் தலைவ!

'தெளித்தபூம் பள்ளியில் சிறிது நீங்கினும்,
அளப்பரும் துயரொடு அவலம் எய்துவேன்;
தளிப்பெயல் கங்குலில் தமியள் மாழ்குற
ஒளித்து நீ தனிவிளை யாடில் உய்வனே?'

ஆக என்னைத் தனியே விடாதிரும். மனைவியரைத் தனியேவிட்டுச் செல்வதாகுமோ? நீங்களோ எவ்விதத் துன்பத்திற்கும் அஞ்சா நெஞ்சு படைத்தவர்; உத்தம வீரர்; எனதுயிர்க்கு உசாத்துணை யானவர்; யான் பணிந்தேத்தும் கடவுளர். நானே பயந்துவிட்டேன். இருக்கும் இடமோ பெருங்காடு. துணை என்பது சிறிதுமில்லை. எங்கு பார்த்தாலும் பாழும்

அந்தகாரம். அதிலும் நான் கேவலம் பெண், வெருண்ட கண்ணாள்; துன்புற்று விளங்குகிறேன். கருணை நிதியான தாங்கள் விளையாடினால் நான் வேறு யாரிடஞ்சொல்ல முடியும்? கட்டிய கணவன் கைவிட்டால்—? சீ! அவ்விதமாக உம்மைப்பற்றி யான் ஒருநாளும் சொல்லேன்;சொல்லவும் என் நா எழாது. நீங்களோ கருணை நிறைந்தவர் ஆச்சுதே. அப்படியிருந்தும் என்னிடம் அதில்லாமல் எங்கு போச்சுதோ? உண்மையில் தாங்கள் என்னுடன் விளையாட வென்றே இப்படிச் செய்தீர்போலும்! ஏன்? உங்கள் காதில் நான் கதறும்மொழிகள் படவில்லையோ? சீக்கிரம் வந்தென்னைக் காப்பாற்றும்; அது உமது பாரம். நான் ஒருத்தி; சிறுபெண்; கேவலம் அபலை. என் நிலையை உணர்ந்ததும் வாராதிருக்கமாட்டீர். அதோ, உமது முகம் எனக்கு நன்றாகத் தெரிகிறதே! ஏன் அந்தமரத்தின்பின் புதரில் மறைந்து நிற்கிறீர்? இதோ நான் இங்கு உங்களை ஆவலுடன் எதிர்கொள்ள இருக்கிறேன். நீங்கள் ஒளித்துக்கொண்டாலென்ன? இதோ நான் உங்களைக் காண்கிறேன்; நன்றாகக் கண்டுவிட்டேன். இன்னுமா பேசாமல் அங்கு ஒளித்திருக்க வேண்டும்? எதற்கும் ஓர் அளவுண்டு. அளவுக்குமிஞ்சினால் அமுதும் விஷமாகுமன்றோ? விளையாட்டுப்போதும்; விட்டுவிடும். என்பால் அடைந்தென் பயத்தைப்போக்கும். உங்களுக்கென்ன? நான் சொன்னது காதில் விழவில்லையா? அல்லது உங்கள் நெஞ்சம் கல்லா? வைரமா? என்ன? நான் கஷ்டப்படுவதைக் கண்டும் என்னைக் கவனியாதவர்போலத் தாங்கள் இருக்கலாமா? ஆனால் நான் எனக்காக வருந்தவே இல்லை; வருந்துவதுமில்லை. ஐயோ! நீங்கள் துணையற்று எங்கு அலைகிறீர்களோ! இப்போது என்கண்முன்னே இருந்தவர் எங்கு போய்விட்டீர்? உமக்கேன் மனம் இப்படியாய் விட்டது? எங்காவது தனியாய்ப் போய்விட்டீரோ? என்ன அவஸ்தைப் படுகிறீரோ? பசிதாகத்தால் வருந்துகிறீரோ? அம்மரத்தின் கீழிருக்கிறீரே என்னக் கஷ்டப்படுகிறீரோ என்னவோ? ஹா! என் நாதா! உம்மை நினைக்கும்போது என் வயிற்றில் கலநெருப்பிட்டாற்போலக் கபீல் என்கிறதே! என்னைக் காணாது என்ன வருந்துவீரோ? என்ன வருந்துகிறீரோ?—"

இவ்வாறு தமயந்தி சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தைநொந்தாள். அந்நள்ளிரவில் தன்நாதனை எதிரில் கண்டதாகப் பாவித்து எதிர்கொள்ளப் போய் அழைப்பாள். ஆனால் வெறுங்காற்றைத் தவிர்த்து வேறங்கில்லை; அவளுடைய நினைவால் ஏற்பட்ட உருவன்றி வேறு ஓர் உருவமும் அங்கில்லை. ஆக எண்ணமிட எண்ணமிடத் தமயந்திக்குத் துயரமேலிட்டது; கொழுந்திட்டுப் படர்ந்தெரியும் நெருப்பைப்போல் அது வேகமும் பெருக்கமுங்கொண்டு அவள் மனத்தை வாட்டியது. பாபம்! ஏழை! அபலை! அவள் என்னசெய்வள்? துயரம் தாங்காது அழுதனள்; அலறினள்; பித்துப் பிடித்தவள்போல ஆடினள்;மொழிகுழறினள்; உடல் பதறினள்; மனம்நொந்து நொந்து ஓடினள்; இடையிடையே கூவினள்;கத்தினள்; கதறினள்; தன்னிலையை நினைத்து நினைத்துப் புலம்பினள்; உள்ளங் கலங்கினள்; அடியற்ற மரம்போலக். கீழே விழுந்தனள்; புழுதியில் புரண்டனள்; பயந்து கண்விண்டனள்; நடுநடுங்கினள்; வார்த்தை எழும்பாது தொண்டையுலர விக்கினள்; வெதும்பினள்; வெயர்த்தனள்; மனம் வாடிவாடி வதங்கினள். அவள் நிலையைக் கண்டால் பேயும் அப்போது மனங்கனியும்; கன்னெஞ்சுடைய வன்நெஞ்சரும் நன்மொழிபுகன்று நயஞ்செய்வர். என் செய்வது? விதி வலிது; வருவன தாமே வரும். இரண்டுகண்களிலிருந்தும் பெய்யும் நீர் புழுதிபுரண்ட மேனியைப் புனிதமாக்க, அழுது, அலமந்து, விழிபிதுங்கி, நிலைகலங்கி நின்ற அவ்வுத்தமி, அந்நரோத்திரியில் தன் கணவன் மீதுள்ள காதல் என்னும் அன்பின் வேகத்தால் சிறிதும் பயமென்பது அறியாது, அக்காட்டிடை அவனைத் தேட ஆரம்பித்தாள். இடையே தன்னாதனை யாராவது சபித்திருந்தாலன்றி அவர் தன்னைத் தனியே விட்டுப்போகாரென்றே எண்ணினாள்.

அவ்வாறு எண்ணியதும்—"ஒரு பாவமும் அறியாத என் நாதனை, உலகுக்கெல்லாம் நன்மையே புரிந்துவந்த என் தலைவனை, தீயசிந்தை யென்றுங்கண்டறியா என் உயிர்த்தோழனை, என் ஐயனை, உண்மைக்கும்,வண்மைக்கும் உறவாகிய வள்ளலை, நிருபரேறாகிய நளமன்னவனை எவன் சபித்தானோ அவன் அழிவானாக! என் ஐயன் இப்போது படும் சங்கடம்



கஷ்டம் இவற்றைப் பன்மடங்கதிகமாகப் பெறுவானாக! எங்களைப்பிரித்து எங்களுக்கு உண்டாக்கிய துன்பத்தை ஆயிரமடங்காக அவன் அடைவனாக! என் தலைவன், குற்றமொன்றுமறியா குணாளன், நளமஹீபதி படும் துயரத்தைக் காட்டிலும் அதிகம் அவனைச் சேருமாக! சுகமென்பதற்றுப் போவனாக! அப்பாவி துயரமே உருவெடுப்பனாக! —" என்று சாபச்சொல் இசைத்துக்கொண்டே நளனையும் தேடிக்கொண்டே யிருந்தாள். ஆனால் இடையிடையே "ஹா" என்றலறிவிழுவள்; என் நாதா என்று ஏத்திக்கொண்டே தொழுவள்; கதறுவள். ஆயினும் உடம்பு தெரியாது அவள் அலைந்த வண்ணமாகவே இருந்தனள்; புலம்பிக்கொண்டே நடந்தனள்; சிறிதும் பயமற்று ஒவ்வொரு பொந்திலும் புதரிலும் அவள் நுழைந்து நுழைந்து தேடித் தன் நாதனைக் கூவிக் கூவியழைப்பள்; பதிலற்றுத் திகைப்பள்; பயமுற்றுப் பதைபதைப்பள்; ஆயினும், கணவனைக்காணும் ஆவலில் மயங்கிக் கனவேகமாக நடப்பள்.

தமயந்தி சிறிதும் வாட்டமில்லாமலே தேடிக்கொண்டிருந்தாள். ஆனால் அறிவு மயங்கிப் பித்துப் பிடித்தவள்போல நடந்தபோதவள் "ஹா"என்றலறினள்."நாதா! இவ்வாறு நீங்கள் ஒருநாளும் விளையாடியதில்லையே—"என்று ஏதோ வருத்தமுற்றவள்போலப் பெருத்த குரலில் கூவினள்; கூக்குரலிட்டனள். ஆயினும், தன் வருத்தத்திற்குக் காரண மின்னதென அவள் அறியவில்லை. தன் நாதனையன்றிவேறெதையும் நினையாத சிந்தையளாகிய அவளுக்கு அவன் தன்னோடு விளையாடியதாகவே தோன்றியது. ஆனால் சங்கதி வேறு. அவள் தேடிய புதரில் கொழுத்த மலைப்பாம்பொன்று பெரும் பசியுடனிருந்தது. புதரில் தேடிக்கொண்டு வந்த தமயந்தியை அது விழுங்க ஆரம்பித்தது. சற்று நாழியானபிறகுதான் தமயந்தி தானிருக்கும் நிலையையுணர்ந்தாள். ஆயினும், அப்பொழுதும் அவள் நளனைப்பற்றிச் சிந்தித்ததுபோலத் தன்னைப்பற்றித் துக்கப்படவில்லை. இருந்தாலும் தனியே வனத்தில் அநாதையாய்ப் பாம்பின் வாய்ப்பட்டுத் தான் பட நேர்ந்தவிதியை நினைக்க அவளுக்குத் தனக்குந் தெரியாது துக்கம் வந்துவிட்டது. அப்போது,

வாளரவின் வாய்ப்பட்டு மாயாமுன் மன்னவநின்
தாளடைந்து வாழுந் தமியேனைத்—தோளாண்
விலக்காயோ? என்றழுதாள் வெவ்வரவின்
இலக்காகி நின்றாள் எடுத்து. [வாய்க்கிங்

மேலும் அந்நிலையிலும் அவள் "நான் கூப்பிடக்கூப்பிட ஏன் வரவில்லை? நாதா! நான் நிரபராதி. கொடும் பாம்பின் வாய்விழுந்திறக்கும் சமயமிது. இச்சமயம் என்னைக் கைவிடுவது உமக்குத் தருமமன்று. சாபந்தீர்ந்து நாடு நகரம் பெற்று என்னை நினைப்பீரே;அப்பொழுது எனது பிரிவு உமக்கு எவ்வளவு துன்பத்தை விளைக்கும்? ஐயோ! அப்போதெப்படி வருந்துவீர்— இப்போதும் பசித்துக் களைத்து வாடி வருந்தும்போது உமக்குத் துணை யார்? என் ஐயனே! என்னுயிர்த் தலைவனே! நான் பாம்பிற்கு உணவாய்க்கொண்டிருக்கிறேன். உமது திருமுகத்தைக் காணும் பாக்கியம் இனிப் பெற்றிலேன் போலும்! குழந்தைகளையும் என்னையும் விட்டுப் பிரிந்தென்ன கஷ்டப்படுகிறீரோ? என் செல்வக்குழந்தைகாள்! உம்மை இனி நான் எங்கு காணப் போகிறேன். அதற்கெல்லாம் நான் கொடுத்து வைக்கவில்லை. என் ஆண்சிங்க மன்னனை நான் காணாவிடினும் நீங்களேனும் காண்பீரோ? ஐயோ! —என் செய்வேன்? என் ஐயனே! இனி யான் பிழைப்பது அரிது. நான் இனி பிழைக்கேன்—" என்று பெருங்குரலில் அந்தக் காடும் நடுநடுங்கக் கதறினாள்; ஓலமிட்டாள். அக்காடு முழுதும் அவள் ஓலமே எதிரொலிக்கத் தமயந்தியும் பாம்பின் வாய்க்குள் மெள்ள மெள்ளப் போய்க்கொண்டே இருந்தாள். அப்பொழுதும்,

"அடையுங் கடுங்கானில் ஆடரவின்வாய்ப்பட்
டுடையுமுயிர் நாயகனே! ஓகோ—விடை எனக்குத்
தந்தருள்வாய்"என்னாத்தன் தாமரைக்கை கூப்பி
செந்துவர்வாய் மென்மொழியாள் தேர்ந்து.[னாள்

நிற்க. அப்பெருங்காட்டில் தமயந்தியின் அழுகை ஒலியைக் கேட்ட ஒரு வேடன் "இது பெண்குரல்; என்ன கஷ்டமோ தெரியவில்லை" என்று சொல்லிக்கொண்டு வரும்போது, பொழுது புலர்ந்து சூரியன் கிளம்பியிருந்ததால், பாம்பின் வாயில் தமயந்தி அகப்பட்டுத் தத்தளிப்பதை அவன் கண்டான். உடனே தனது ஆண்மையும் அனுதாபமுந் தூண்டக் கனவேகமாக ஓடிவந்து அப்பாம்

பின் வாயைப் பிளந்து தமயந்தியைக் காப்பாற்றினான்; தமயந்திக்குண்டாயிருந்த ரணங்களுக்குஞ் சிகித்ஸை செய்தான்; ஆறுதல் மொழிசொல்லி அவளைச் சிறிது ஆஹாரமும் உட்கொள்ளும்படி செய்தான். சிறிது துயர மாறியதும்,

'ஆருயிரும் நாணும் அறியாமல் ஐயா! இப்
பேரரவின் வாயிற் பிழைப்பித்தாய்; —தேரின்
இதற்குண்டோ கைம்மாறு?' எனவுரைத்தாள்
விதர்ப்பன்றான் பெற்ற விளக்கு. [வெண்பா

தமயந்தியின் மொழிகளை அவன் கேட்டான். அவளது இனியகுரல் அவன் உடலைத் தம்பிக்கும்படி செய்தது. அவளது அழகு அவனை மயக்கத்திலாழ்த்தியது. தனது மனத்தில் அவளது அழகு பதித்த ஆவல் தூண்ட அவளை "மாசற்ற மணியே! இக்கடும் கானகத்தில் தனியே வரக்காரணம் யாது? நீ யார்? இந்தக் கஷ்டம் உனக்கெப்படி நேர்ந்தது?—" என அந்தச் செம்பங்கி வில்வேடன் கேட்டான். தமயந்தியும் நடந்தவற்றையெல்லாம் ஒன்று விடாமல் சொன்னாள். ஆனால், அவள் அரைத்துணியுடன் உடம்புதெரிந்தும் தெரியாதும் நெளிந்து வெட்கத்துடன் விளங்கியகோலத்தில், தனியே அவ்வனத்தில் அவள் துணையற்றுக் கிடப்பதுடன், இனியமொழியுடன் பேசுவதைக் காணக்காண அவ்வேடன் மனத்தில் தகாத எண்ணங்களெல்லாம் தாமாகவே உதிக்க ஆரம்பித்தன. அழகு மிகுந்து திரண்டு மாசற்ற உருவங்கொண்ட அவளை நோக்க நோக்க அவன் மனம் காமப்பித்தில் ஆழ்ந்துகொண்டே இருந்தது; அதற்கொப்ப அவன் வாயில் ஆசை மொழிகளும் ஊறித்ததும்பத் தலைப்பட்டன. ஆயினும் அவனுக்குத் தனக்கும் தெரியாமல் தன் எண்ணத்தால் தனக்குக் கேடேவருமென்றும் தோன்றியது. இருந்தாலென்ன? காமப்பித்தில் பட்டவர்க்குச் சித்தப்பிரமையில் அல்லாமல் உண்மைக்கருத்தில் ஈடுபடமுடியுமோ? ஆகவே, அவன் மயக்கப் பேச்சுகள் விருத்தியடைந்தன. தமயந்தியும் அவனது எண்ணமின்னதென ஒருவாறு உணர்ந்தாள். அவனும் தன்னைச் சேரும்படி அவள் முன் சைகை செய்தான். என் செய்வள்?

வேடன் அழைப்ப விழிபதைத்து வெய்துயிரா
ஆடன் மயில்போல் அலமரா—ஓடினாள்
தாறெலாமாகச் சுரிகுழல்வேற் கண்ணினீர்
ஆறெலா மாக அழுது.

அவள் ஓட, அவள்பின் வேடனும் ஓட ஆரம்பித்தான். தமயந்தி நடுநடுங்கினள்; தயங்கினள். மஹாபதிவிரதையாகிய அவள் கோபித்துக்கண்களில் தீப்பொறிபறக்கச் சீறினள்; அவன் கெட்ட எண்ணத்தை விடும்படி வேடனைத் தூண்டினள். ஆனால் அவன் கேட்கவில்லை. ஆக அவள் மனத்தில் கோபக் கனல் கொழுந்துவிட் டெரிந்துகொண்டே இருந்தது; அது மண்டிமண்டிப் படர்ந்து கொண்டே யிருந்தது. ஆயினும் தன்னைப் பாம்பின் வாயிலிருந்து விடுவித்தவனாகையால், அவனைப்பற்றித் தவறாக எண்ணக் கூடாதென்று எண்ணி நயமொழிகளால் அவனுக்கிங்கிதம் எவ்வளவோ உரைத்தாள்; நன்மை வழியைத் தேட எத்தனையோ உபதேசித்தாள். என்ன செய்தாலென்ன? பால் வார்த்து வளர்த்தாலும் பாம்பின் விஷம்போகாதென்றபடி அவனுடைய கெட்ட எண்ணம் சிறிதும் குன்றாதே விளங்கியது. ஆற்றில் கரைத்த பெருங்காயம்போலத் தன் மொழிகள் வியர்த்தமானதைக்கண்ட தமயந்தி துக்கத்திலாழ்ந்து சிந்தை நொந்து கலக்கமுற்றாள்.

"பெண்களுக்குக் கற்பினும் பெரும்பொருள் வேறொன்றும் கிடையாது. அதைக் காப்பதில் எதையும் கை நழுவவிடலாம்" எனத் தன் மனத்துள் திடமாக நிச்சயித்தாள்; அவ்வாறு நடக்கவும் தீர்மானித்தாள். வேடனும் இதற்குள் அவளிருக்குமிடம் அணுகிவிட்டான்; ஆயினும் அவளிடம் நெருங்கமுடியாது திகைத்தான்; வெருண்டு வெருண்டு அவளை உறுத்து உறுத்து நோக்கினான்: அவனால் அவளை நெருங்க முடியவில்லை. அவனது செயலைக் காணக்காணத் தமயந்திக்கு வந்த கோபத்திற்களவே இல்லை. அது அளவு கடந்து கொழுந்து விட்டுப் படர்ந்து எரியலாயிற்று. அப்பொழுது தமயந்தியைப்பார்த்தால் ஓர் வீரமங்கை எனவே தோற்றும். அவளுக்குந் தெரியாமல் கற்பின் வேகந்தூண்ட வீரந் ததும்பித் ததும்பிப் பொங்கிப் பின்வரும் மொழிகள் ஆவேசத்துடன் அவள் வாயிலிருந்து வெளிவந்தன:—

"நளன் என்னும் நாதனன்றி என் தலைவன் வேறு ஒருவனும் இல்லை என்பது ஸத்யம்! மற்றெவனையும் யான் மனத்தாலும் வாக்காலுங்கூட நினைத்ததுங்கிடையாது; இது உண்மை. ஹே! வன தேவதைகாள்! தெய்வங்காள்! முச்சுடர்காள்! என் மொழிக்கும் நடைக்கும் நீங்களே சாட்சி! கைதொட்ட நாள் முதல் குற்றமறியா நள மன்னவனைத் தவிர்த்து வேறெவரையும் காதலிற் காணுதும், மனத்திலும் எண்ணுதும் இருந்தது உண்மையானால், இவ்வற்ப வேடன் படுவனாக! பாவி யழிவனாக! தரையோடு தரையாப்பட்டுச் சாம்பராவனாக! உத்தமிமொழி வீணாகாது நிலைக்குமாக!"

இம்மொழிகள் அழுத்தம் திருத்தமாகவும், நன்றாகவும், உச்சஸ்வரத்தில், எழுத்தின் பின் எழுத்து ஒலித்திசைக்கும்படி அவள் சொன்னாள். அவற்றைச் சொல்லி முடிப்பதற்குள் அங்கு பெருந்தீ கண்டாற்போலப் பேரொளி வீசியது. அதே சமயம் வேடனும் தரைமேல் நீறாய்க் கிடந்தான்.

"பெண்ணிற் பெறுந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்?"—திருக்குறள்.



# புத்த விஜயம்

(172-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஞா.—அபயம், அபயம்.

இ.—சரி, நல்லவேளை, சாமி! இந்தம்மா இருக்கட்டும். இருங்கொ. போனவங்காணே, கூட்டிக்கிட்டு வரே. (போகிறான்.)

ஞா.—இவர்களால் இக்கோலம் பூண்டேன். இப்பொழுதுதான் எனக்கு உயிர்வந்தது.

வே.—சில வேடர் மூலமாய் இம்மாறுவேடங் கொண்டு இங்கே சேரலானேன்: கண்மணீ! உன் மனம் எவ்விதம் துடித்ததோ?

ஞா.—என தின்னுயிர்க் கேள்வ! இங்கொன்றும் வேண்டாம், ஒரு வினாடியும் தாமதமாகாது.

(பத்மாமணி, பத்மாமணி என்ற சத்தம்)

வே.—இதென்ன! என்னுடைய போர்ச்சேவக உடையுடன் வருகிறது யார்?

ஞா.—நல்லகாலம், தொனி பக்த வல்லியினுடையதாவென்று சந்தேகப்பட்டேன். முகமும் அவளுடையதைப்போன் றிருக்கிறது.

வே.—இது ஜாலந்தான். நான் வேடரிடம்களைந்து கொடுத்த சட்டை, தலையங்கி முதலியவெல்லா மணிந்து வருகிறாளே!

ஞா.—பார்ப்போம், நெருங்கட்டும்.

வே.—ஆமாம், இது மாறுவேடமே.

ஞா.—அவள்தான் பக்தவல்லியே. எனது தோழி.

வே.—என்னைப்போலத் தந்திரமாக வருகிறாளே.

(வீரகேசரி வருகிறான்.)

ஞா.—சரி. (உள்ளே போகிறார்.)

வே.—அம்மணி! வருக!

வீரகேசரி.—அம்மணியா? இங்கே அம்மணியில்லை; சுத்த வீரமணிதானுண்டு.

வே.—எல்லாந்தெரியும். இந்த உடையேது? பரண் கட்டி வசித்துக் கொண்டிருக்கும் வேடர்தானே கொடுத்தார்கள்?

வீ.—நான் போர்ச்சேவகனென்று கண் தெரியவில்லையோ? நீ பெண்போ லிருக்கிறாய்; என்ன இவ்வளவு தைரியமாய்ப் பேசுகிறாய்!

வே.—அப்படியானால் நாமதேயமென்னவோ?

வீர.—வீரக்கழல் அணிந்த வீரகேசரி நான். உன் பெயர்?

வே.—வேஷை யென்பார்கள்.

ஞா.—(நகைத்துக்கொண்டு வெளிவந்து) எல்லாம் வேஷமே. நீங்களேன் கலகம்பண்ணுகிறீர்கள்? பக்தவல்லீ! என் கண்ணே!

வீர.—அன்னையே! இதென்ன!

ஞா.—உன்னைப்போலதான்.

வே.—நீ சொல்லியபடியேயாயிற்று. உனது பாங்கியா?

வீர.—அம்மணி இதார்?

ஞா.—என் கண்ணாளன்.

வீர.—கண்ணாளா? ஆ! அதெப்படி?

ஞா.—முறைப்படி.

வே.—காலமாய்விட்டது, பிறகு எல்லாம் இதை விட்டுக்கிளம்புவோம். இந்த ஆபத்து நீங்கட்டும்

ஞா.—போனமூடர்கள் எட்டிப்பார்க்கக் கூடவில்லை. நாலுபக்கமும் ஞாபகமாய் உற்று நோக்கிக் கொண்டிருக்கவேண்டும். நான் உள்ளேபுகுந்து நமக்கு வேண்டியதான நவரத்தினங்களை எடுத்து வருகிறேன். இவை களவுசெய்த பொக்கிஷம். (உள்ளேபோய் மறுபடியும் கொண்டுவருகிறாள்.)

வே.—இன்னும் என்னென்ன விபத்தோ?

வீர.—கடவுளிருக்கிறார். இதிலிருந்து தப்பித்துக் கொள்வோம். (போகிறார்கள்.)

நான்காம் களம்.

இடம்: கடலோரம் — காலம்: முற்பகல்.

பாத்திரங்கள்: பத்மாமணி, சற்குணப்பிரியன், பக்தவல்லி, சுசீலன், தீர்த்தன், சேனபதி.

சுசீலன்.— குலங்குணமிவற்றில் அதி யுசிதவாசனம் வகித்தவனும் என் ஆப்தனுமான சற்குணப்

பிரியன் இராச்சியத்தை விட்டு நீங்கின காலமாக இதுவரையிலும் யாதொரு சமாசாரமும் வெளியாகவில்லை. அரசனுக்கோ தன் மகன் ஓடிப்போனதில் நானே காரணஸ்தனென்றும் அபிப்பிராயம் பிறந்திருக்கிறது. அது விஷயமாக மந்திரியாகிய என் தந்தையிடம் முன்போலப் பிரீதி காட்டவில்லையென்பதும் அரண்மனை உத்தியோகஸ்தருக்குத் தெரிந்த விஷயந்தான். அதுவும் என்காதிற் பட்டிருக்கிறது. தான் இராஜனுடைய அன்புக் குறைவைச் சம்பாதித்ததற்கு நான் மூலமென்று என்பேரில் கொஞ்சம் அதிருப்திகாட்டலானார். சற்குணப்பிரியனின் பிரிவாற்றாமையோ சகிக்க முடியாததாயிருக்கிறது. இனி வசிக்கலாமெனின் உயிரற்ற பிணமே. அவன் உயிர்; நானோ தேகம். என்னாற் பயனென்னை? ஆழியே! உன் வாயென்னை யழைத்துக் கொள்ளட்டும். எனது வாழ்நாள் முடியட்டும்.

பக்.—வேண்டாம், வேண்டாம்.

சுசீலன்.—எங்கிருந்து இச்சத்தம்?

பக்.—வேண்டாம், சுசீலரே! வேண்டாம்.

சுசீ.—சுசீலனா? இது யாரோ.

பக்.—இங்கு வரவேண்டும்.

சுசீ.—(பார்க்கிறான்.) என்ன சௌந்தர்யம்! குயிலின்குரலோ! என்ன அநுதாபம்! அன்புருவோ! வாத்ஸல்யம் மிகுந்தல்லவா இங்ஙனம்கூறுகிறாள். இந்த ரதிதேவியை நான் முன்னொருதடவையேனும் பார்த்ததில்லையே. அதிக ஆதரவோடல்லவோ கூப்பிடுகிறாள். இவ்வணங்கை ஓரிடத்திலும் சந்தித்ததில்லையே. [வருக.]

பக்.—இங்குதான் உமது அதிர்ஷ்டம். வருக,

சுசீ.—இவ்வளவு தைரியமும் உறுதிமொழியும் விளையாட்டாகாது. ஆயினும் சிறிது ஆலோசித்தே எக்கருமத்தையும் புரியத் துணியவேண்டும்.

பத்.—சுசீலரே! இது சரியன்று.

சு.—ஒன்றென்று நினைத்தோம். கூட ஒன்று சேர்ந்தது. இதனுடைய உட்கருத்தறிந்தாலன்றி அவரிடம் போகக்கூடாது.

சற்குணப்பிரியன்.—(சுசீலனை யணுகி) சுசீலா! இதோ இருக்கிறேன்.

சு.—மித்திரா! உன்னையே தேடிவந்து ஓரிடமும் காணாமல் பின்னை எவ்விடம் போவதென்றறியாது பித்தனானேன்; மன்னா! நீ தோன்றினையென்முன். மகிழ்ச்சியும் நல்வாழ்வும் இன்றே யடைந்தேன், இனி இனிதெந்த நாளும்—

பக்.—அம்மணி! எனது தந்தையும் அவருடன் கூடயாரோ ஒருவரும் வருகிறார்கள். இதற்கென்ன செய்வது? கப்பல் பாய் விரித்தோடும் தருவாயாயிற்று? இந்த இடையூற்றைப் போக்குவதெப்படி? மறைந்துபோயொளிந்து விடலாமா?

பத்.—அது சரியல்ல. அவருடைய புத்திமதிப்படி நடப்பதுவே உத்தமம். பெற்றவர்கள் மனம் நமது செய்கையாலே கசிந்துருகும். ஏதோ கோபவேளையிற் கூறியிருப்பார்கள். பிறகுதான் அந்தக் கோபத்தின் பலனான இதைப்பற்றிக் கேட்டபொழுது ஆறாத் துயரமடைந்திருப்பார்கள். அன்னிய தேசம் போவதென்பது இலேசான காரியமன்று. அங்கே என்னென்ன கஷ்டநஷ்டங்கள் நேரிடுமோ அவைகளை நம்முடைய தன்மைகளெவ்வாறு அநுபவித்து சகிக்கும். நாமும் ஏதோ கோபத்தினாலும்—

பக்.—வந்துவிட்டார்கள்.

(தீர்த்தனும் சினபதியும் வருகிறார்கள்.)

தீர்த்தன்.—போனது போகட்டும். இனியாவது வந்துசேருங்கள்.

சற்.—தந்தையே நமஸ்கரிக்கின்றேன்.

சினபதி.—புத்திரா! வாழக்கடவாய் (பத்மாவை நோக்கி) அம்மணி! உங்களிருவரையும் தேடத் தீர்த்த மந்திரி வந்திருக்கிறார்.

தீர்.—உங்களிஷ்டப்பிரகாரம் மணம்புரிந்து கொள்ளுங்கள். எல்லாவற்றையும் பொறுத்துவிட்டதாக அரசன் சொல்லச் சொன்னார்.

சற்கு.—இது தெய்வ சம்மதமே. [நல்ல காட்சி.]

சின.—தம்பதி சகிதமா யிருக்கிறீர்கள், இதுவே [பத்மாமணி சற்குணப்பிரியனுக்கும், பக்தவல்லி சுசீலனுக்கும் மாலையிடுகிறார்கள்.]

சினபதி, தீர்த்தன் (இருவர்).—மங்களம், மங்களம்.

(எல்லாரும் போகிறார்கள்.)

---

இரண்டாம் அங்கம்—ஆறும் காட்சி.

இடம்: பள்ளியறை — காலம்: இரவு.

பாத்திரங்கள்: யசோதரை, கௌதமர்.

யசோதரை.—(படுக்கையிலிருந்தெழுந்து) நாதா! நாதா! —சுகமான தூக்கமோ? எழுப்பிப் பார்ப்போம். என் மாணிக்கமே! கண்ணுறாளா?

கௌ.—(விழித்து) யசோதரா? என்ன? என்ன?

யசோ.—உமது பவள வாயால் முத்துவார்த்தைகளைச் சொல்லித் தேற்றுவீர்.

கௌ.—(எழுந்து) ஏரா! என்ன நேர்ந்தது. கண்மணி! ஏன் திடுக்கிட இப்படி எழுப்பினாய்?

யசோ.—நாதா! ஐயோ!

கௌ.—ஏன் வருந்துகிறாய்? என்ன நடந்தது?

யசோ.—பிராணேசா! எனக்குப் பீதியாயிருக்கிறது. நீங்களில்லாவிட்டால் அச்சத்தால் மூர்ச்சித்திருப்பேன். ஆ! என்ன செய்வேன்.

கௌ.—வெருண்டு போகும்படி நிகழ்ந்ததென்ன? பயப்படாதே. நானிருக்கிறேன். பிரிய வதனீ!



யசோ.—பயங்கரமான மூன்று தோற்றங்களைக் கண்டேன், நாதா!

கௌ.—இதற்கா இவ்வளவு துடிதுடிப்பு?

யசோ.—முதலில் மலைபோன்ற கொம்புகளுடனிருக்கும் காளையொன்றைப் பார்த்தேன். பிறகு சோபையுடைய இரத்தினமொன்றைத் தன்னுடைய நெற்றியில் வைத்துக்கொண்டு ஓர் மேய்ப்பவன், வீதிவழியாக நடந்து அரண்மனை வாயிலின் அருகாமையில் வந்துகொண்டிருந்தான். "அவனைத் தடுக்காவிட்டால் நகரின் மாட்சிமை நாசமடையும்" என்ற வாக்குப் பிறந்தபோதிலும் ஒருவராலுங்கூடவில்லை. அப்பொழுது நான் ஓங்கியழுதேன். கைகளைச் சேர்த்துக்கொண்டு அவனைத் தடுக்க முயன்றேன். வாயிலை யடைக்கவும் கட்டளையிட்டேன். ஆனால் அவன் கூவிக்கொண்டு பலாத்காரமாகப் புகுந்துவிட்டான்.

கௌ.—பிற்பாடு?

யசோ.—இரண்டாவது, உலகின் அதிபதிகள் போன்று சுப்பிரதீப நேத்திரங்களுடன் நாலுபேர்கள் எண்ணிறந்த தேவகணங்கள் புடைசூழ நமது நகரை நண்ண, தேவராஜனின் கொடி கம்பித்துக் கீழேவிழுந்தது. அதற்குப் பதிலாகச் சிறந்த துவசமொன்று தோன்றினது. மேம்பாடுள்ள மாணிக்கக்கற்கள் பதிக்கப்பட்டு ஒளிபொருந்தி விளங்கினது. கீழ்க்காற்று வீசியபொழுது அதன் மடிப்புகளில் எழுதப்பட்ட வாக்கியங்கள் யாவரும் வாசிக்கும்படியாகத் தெரிந்தன. செப்பரிய நிறங்கொண்ட பூமாரிபெய்தது.

கௌ.—இதெல்லாம் நன்னிமித்தங்களே. இவைகளுக்கேன் இத்தனை அச்சங்கொள்ளவேண்டும்?

யசோ.—இது மாத்திரம் அசுபமாயிருக்கிறது. கடைசியில் "காலம் நெருங்கி விட்டது காலம் நெருங்கிவிட்டது" என்ற சத்தமே என்னைத் துக்கத்தில் ஆழ்த்தியது. மூன்றாவது உம்மைத் தேடியபோது நமது அமளியில் அழுத்தப்படாத தலையணையும் வெறுங் கயிறும் கிடந்தன. உமது முத்துப்பட்டிகை எனது மார்பிலிடப்பட்டிருந்து கடிக்கும் பாம்பாய்விட்டது. கால்சதங்கை கழன்றது, கடகம் விழுந்தது, தலைப்பூ வாடினது, இந்த மெத்தையும் தரையோடு சேர்ந்தது, திரையோ கிழிந்தது பின்னர் அந்தக்காளை கதறிற்று. விசித்திர விருதுக்கொடியும் காற்றிலசைந்தது, மறுபடியும் "காலம் கிட்டினது" என்ற சத்தம் வந்தது. இத்தோடு நானும் விழித்துக் கொண்டேன். இதன் தாத்பரியமென்ன?

கௌ.—எவ்விதம் வந்தாலும் வேண்டாமென்று சொல்ல முடியுமோ?

யசோ.—உமக்கும் எனக்கும் யாதொரு தீங்காவது நம்முள் பிரிவாவது நேரிடக் கூடாது. இதைத் தவிர வேறென்ன பொருளைக் குறிக்கும்?

கௌ.—உனது சோகத்தைத் தணித்துக்கொள், யசோதரமணியே! என்ன இடுக்கண் வரினும் உன்னைக் கைவிடுவேனென்று கனவிலுங் கருதாதே, உன்மேலுள்ள அன்பு அளவற்றது.

யசோ.—அரசே! நீரே எனக்குப் புகலிடம்; கப்பலுடைந்து கலங்குகையில் ஓர் தெப்பமீந்த தேவே!

கௌ.—இத்தனை காலமாக உலகத்தின் துக்கத்தைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பதை நீ அறிவாய். அவர்களுக்கு இங்ஙனமாயிருந்தால் உனக்கு எவ்வளவென்று ஊகித்துக்கொள். எவ்விதத் துன்பங்கள் நேரிடினும் இதை மாத்திரம் மறந்துவிடாதே. எல்லாரிலும் உன்பாலே அதிகக் கருத்தூன்றியிருக்கிறேன்.

யசோ.—மன்னா! உம்மை யான் பிரியேன்.

கௌ.—கஷ்டங்களை நாம் அநுபவிக்கிறதனால் உலகத்திற்கு நன்மையுண்டாக்கலாமென்பதை நினைத்து உன்னைத் தேற்றிக்கொள்வாய். (அணைத்துக்கொள்கிறார்) வருத்தமடையாதே. காந்தாமணீ! மற்றைய உயிர்களை அதிகமாய் நேசிக்கிறதினால் உன்னை எல்லாவற்றிலும் மிகுதியாகவே நேசிக்கிறேனென்றெண்ணு. நன்றாகத் தூங்கு. நான் உன்னைக் காத்துக்கொண்டிருக்கிறேன். (படுத்துக்கொள்ளுகிறாள்.)

கௌ.—(ஜன்னல்வழியாய்ப் பார்த்து) ஆ! ஆ! இவ்விரவு எவ்வளவு ரம்மியமாயிருக்கிறது! தாரகையும் சந்திரனும் சேர்ந்து பிரகாசிக்கிறார்கள். இதுதான் நமக்கேற்ற தினமோ? எல்லாம் ஒருங்கு வாய்த்திருக்கின்றனவே! தேவகீத மாதிரி செவியிற் படுகின்றதே! இது சாதாரணமான தினமன்று (தியானித்து) இதுதான் நல்ல சமயம். புறப்படவேண்டும், உலகம் வருந்துகிறது. அதைக் கவனிக்காமல் இராஜபோகங்களை யநுபவித்தல் தன்னயமே. இதனால் என்ன ஆனந்தம் உண்டாகும்? ஏனையோர் துக்கிக்க யான் மாத்திரம் சுயநய வின்பங்களைத் துய்த்தலறமோ? வருத்தக் குறிகளைக்கண்டு கண்களும், ஏக்கவார்த்தைகளைக் கேட்டு செவிகளும் களைத்துப்போய்விட்டனவோ? இவைகளை நீக்க எவருமில்லையோ? போர்க்கோலம் பூண்டு, சதுரங்க பலத்துடன் செருக்களஞ் சென்று உயிர்வதை செய்யேன். தாழ்ந்தோருடன் கலந்து அவர்களுக் குதவிபுரிவேன். துன்ப நிவாரண நெறியைக் காண்பிக்க முயற்சி பண்ணுவேன். பிரார்த்தனையினால் பயனென்? கருமத்திற்குத் தக்க பலனே உண்டாகும். ஆதலால் வீண் செய்கைகளையும் பிரயோஜனமற்ற வார்த்தைகளையும் நீக்கி நல்வழியில் நடத்துவேன். காரணத்தைப் பிடிக்காமலே காரியத்தோடு மன்றாடுகிறார்கள், காரியத்தை மாற்றமுடியாது. இதை யறியாமை பிறவிக்கடலை நீந்தமுடியாததற்குக்

காரணம். நிர்வாணத்தைக் கண்டுபிடித்து யமனை வெல்லுவேன். எல்லாவற்றையும் துறத்தல் வேள்வி. யானே அதைச்செய்வோன். இச்சித்த பலன் துக்கநிவாரணம். (யசோதரையை நோக்கி) அன்பிற் சிறந்தாய்! விப்பிரயோகத்தால் வியாகூல மடையாதே. மற்றவர்களுடன் உனக்கும் மீட்சியுண்டு, இராகுலா! உன் தாயுடன் இரு என் காதலின் பயனே! உனக்கும் ஆசீர்வாதமுண்டு, நீயும் நீதியை யுணர்வாய். இனி கணமும் தரியேன். இது சத்தியம். உண்மையைக் காணுநாள் வரையிலும் இங்கு திரும்பமாட்டேன். (மூன்று தடவை போக யத்தனிக்கிறார்) இனி நிற்கவா? குழந்தையை எடுத்து முத்தமிடலாமா? (உற்றுப் பார்க்கிறார்) முடியாது. யசோதரையை யெழுப்பாமல் இவனைக் கொள்ளமுடியாது. அவள் விழிப்பாளானால் நமது காரியம் ஹானியடையும். விட்டு விட்டே போகவேண்டும் (திரும்பிப்பார்த்துக் கொண்டே போகிறார்;)

## பிரபஞ்ச வர்த்தமானம்

### NEWS AND NOTES

**விலைவாசிகளின் ஏற்றம்**

ஐரோப்பிய யுத்தம் காரணமாக நமது நாட்டில் சிற்சில பொருள்கள் முன்னைய விலையைக் காட்டிலும் பன் மடங்கு அதிகமாக விற்கப்படுவது அனுபவ ஸித்தம். அந்நிய நாடுகளிலிருந்து வரும் பொருள்களின் விலை ஏறியிருப்பது நியாயமே. நமது நாட்டிலேயே உண்டாகி, இங்கேயே செலவாகும் பொருள்களின் விலையேறுவதற்குக் காரணம் அவற்றை விற்பவர்களின் பேராசையே என்பதை நாம் சொல்லவேண்டுமா? உதாரணமாக நமது நாட்டில் உற்பத்தியாகும் வஸ்திரங்களின் விலையேறியதை விசாரித்த வங்காளக் கவர்ன்மெண்டார், வியாபாரிகளின் பேராசையே அதற்குக் காரண மென்பதைக் கண்டறிந்தனர். நிற்க, வட இந்தியாவில் சிற்சில விடங்களில் உணவுப் பொருள்கள் மிகவும் கிராக்கியானது பற்றி, அங்குள்ள ஸ்தல அதிகாரிகள் இந்தத் துர்த்தசையை அகற்றப் பிரயத்தனப் படுகின்றன ரென்பதைக் கேட்கச் சந்தோஷிக்கிறோம். லாகூர் முனிஸிபாலிடியார் வியாபாரிகளின் அதிக்கிரமத்தினால் வருந்திய ஏழைகளின் உபகாரார்த்தமாக, உப்பு, கோதுமை, விறகு, நெருப்புப்பெட்டி முதலிய முக்கிய சாமான்களை வாங்கிவைத்துக்கொண்டு, கொள்விலைக்குக் கொடுக்கின்றனர். லாகூர் முனிஸிபாலிடியாரின் மாதிரியை மற்றைய முனிசிபாலிடியாரும் பின்பற்றுகின்றனர் என்று சமாசாரம் எட்டுகின்றது. இப்படிப்பட்ட துர்த்தசை நமது மாகாணத்திலும் காணப்படுகிறது. பஞ்சாப் முனிஸிபாலிடிகள் செய்ததைப் போல நமது மாகாண முனிஸிபாலிடிகளும் செய்து, புண்ணியத்தையும் ஏழை ஜனங்களுடைய ஆசீர்வாதங்களையும் கட்டிக்கொள்ளக் கூடாதா? இதற்கெனக் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கும் பிரமுகர்களையே நாம் ஜனோபகாரிகள் என்போம். முனிஸிபாலிடிகள் தங்கள் தங்களுடைய தொழிலை விட்டு, வியாபாரத் துறையில் இறங்குவது நியாய விரோதமெனச் சிலர் ஆக்ஷேபிக்கலாம். ஆனால் மேற் கூறியபடி சந்தர்ப்பங்களிற் கேற்ப வியாபாரம் செய்வது ஜனசவுகரியத்தைக் கொடுக்குமாதலால், அதை நாம் மனப்பூர்வமாகக் கொண்டாடுவோம்.

* * *

**சென்னைப் பள்ளிக் கூடங்களில் சரீரதண்டனை.**

சென்னை வித்தியா இலாகா அதிகாரிகளால் வெளியிடப் பட்டிருக்கும் புதிய விதிகளில் சரீர தண்டனையைப் பற்றிய விபரம் கவனிக்கற் பாலது. இதுவரையில், பொதுவாகப் பிரம்படி எல்லா வகுப்புப் பிள்ளைகளுக்கும், சிற்சில குற்றங்களுக்குமட்டும் ஆறுவது பாரத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கும் ஏற்பட்டிருந்தது. இப்போது ஏற்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் அப்படிப்பட்ட தண்டனை, கவர்ன்மெண்டாரால் ஏற்கப்பட்ட பள்ளிக்கூடங்களில் ஆறுவது பாரத்தில் படிக்கும் மாணாக்கர்களுக்கு விதிக்கப்படமாட்டா தென்பதைக் கேட்கச் சந்தோஷிக்கிறோம். பிரம்படி பிள்ளைகளுடைய மனத்தை வன்மையாக்குமன்றி அவர்களைச் சீர்திருத்தாது. காலக்கிரமத்தில் இத்தண்டனை அடியோடேயே எடுத்துவிடப்படுமென ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

* * *

# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி X | பிங்களஹு தைமீ : : 1918-ஹு பிப்ரவரிமீ | பகுதி 8

## தேசியக் கல்வி

### NATIONAL EDUCATION

[ஸ்ரீமான் வெ. முத்துசாமி ஐயர், எம். ஏ., எல். டி.]

**காப்பு வெண்பா**

தேசியக் கல்விச் சிறப்புரைக்கச் சின்மயமாய்த்
தேசோமயமாய்த் திகழ்சீசா—மாசாரும்
சிந்தை யுடைய சிறியேற்கு நல்லறிவு
தந்தருள்க உள்ளம் தழைத்து.

**கல்வியின் பெருமை**

**அகவற்பா**

அலகிலாக் கருணை யாண்டவன் சிருஷ்டியில்
அலைகடல் சூழு மம்புவி மீது
பலபல நிறமும் பலபல திறமும்
பலபல மதியும் பலபல நிதியும்
படைத்துள ராகும் பல்வகை மாந்தர்
படிப்படி வேறு பட்டுள ரெனினும்,
ஐம்பொறி யுணர்வோ டமையா தறிவெனும்
செம்மையே சீசன் திவ்வியாம் சக்தினை
ஆறும் உணர்வா யவரவர் உறத்து
ஏறவோ தாழவோ இயற்கையிற் பெறுவர்.
இந்த அறிவினுக் கிருப்பிட மாகும்
சிந்தையை மாந்தர் செவ்வழி செலுத்தி
மாசார் திநெறி மறந்தும் நினையாது
ஆசா ரொழுக்கம் தாய்ந்து தெளிந்து,
ஈசுர பத்தி இன்னருள் வாய்மை
தேசுறு நற்புகழ் திருந்தா சாரம்
இவைமுதல் நன்மைகள் எய்துதல் தானே
புவிமிசைக் கல்வியாப் புகலுவர் மேலோர்.
கல்வியின் பெருமையைக் கணக்கிட லரிதே!
பல்விதம் பகரினும் பகரற் பாலதோ?
கல்வியே அறமாம்; கல்வியே பொருளாம்;
கல்வியே இன்பம்; கல்வியே வீடு.
கற்றோர் தாமே கண்ணுடை யவர்கள்;
மற்றோர் முகத்து மாயகத்தை புண்ணே.
[illegible]
[illegible]
[illegible] இனிதின் அளிக்கும்.—
[illegible]

ஆதி நாள்முதல் அரும்புகழ் தொகுத்துப்
பூத வுடலம் போயின பின்னும்,
என்றும் நிலையா யிலங்குவோர் யாரே
என்றே நாமிங் கெண்ணு மிடத்து,—
வால்மீகி வியாசர் வரகம்பர் ஔவை
போல்மேவு புண்ணியப் புலவரே யன்றோ?
வேறுள ராகும் வீரரை அரசரைக்
கூறிடிலாகும் அதிமதிக் குறைவே.

**பண்டை இந்தியாவில்**

**கல்வி நிலைமை**

**நொண்டிச்சிந்து**

இப்படிச் சிறப்புடைய—கல்வியில்
இந்தியா மிகவும் முந்தியிருந்த
ஏற்றம் உரைகுறியும்—எனினும்
ஒரு சில விவரம் உரை செய்தால்
உபயோகமே யாகும்—வேத
சாஸ்திரங்கள் ஈசன் ஸ்தோத்திரங்கள்
சாத்விக குணம் விளக்கும்—அரிய
நீதி நூல்கள்பல போத நூல்கள்
நிகரில் தத்துவ நூல்கள்—இன்னும்
கற்பனை யலங்காரம் பொற்புறக் கொள்
கதைநயம் உயர் நீதி—முதலாம்
சொற்பொருள் நலங்கள் பற்பலவாம்
சுவைமிகு காவியங்கள்—இதி
காச புராணங்கள் மாசில் சிற்பம்
கணிதம் சோதிடம் வைத்யம்—இவைபோல்
கலைகள் பலவற்றை மலை விளக்காக்
காட்டும் பல நூல்கள்—வேறு
நாட்டுள்ளோர் காட்டு முரட்டரென
நாட்டும்படி யிருந்த—ஆதி
காலமுதலாய் நமது சீல நாட்டில்
கன ரிஷி முதலோரால்—நல்ல
குரு சிஷ்ய முறையில் பரம்பரையாய்க்
கூறி வைத்தவை கோடி—(இப்படி)

## தற்கால நிலைமை

### கும்மி மெட்டு

இப்படிப் பற்பல வித்தை மலிந்து
இந்தியா முன்னாள் செழித்திருக்க
இடையிலனேக மஹமதியர்கள்
இந்நாட் டிற்புகுந் தாண்டார்கள்.

அந்த இடையிட்ட காலத்திலே நல்ல
இந்தியக் கல்வியும் தர்மங்களும்
மதத் வேஷத்துடனுட் கலகங்களால்
மங்குதலுற்றன கொஞ்சம் கொஞ்சம்.

இவர்க்குப் பின் வந்த ஐரோப்பியர்களில்
இங்கிலீஷ்கார் கையேற்ற முற்று
இந்தியாவை யிப்போதாள்வதில் நமக்கு
எய்திடு நன்மை பலவு முண்டு.

அந்த நன்மைகளில் ஒன்றெனை நன்றாய்
ஆங்கிலக் கல்வியைக் கூறிடலாம்.
ஆங்கிலத்தாலே நாம் தன் மறுப் பொற்றுமை
அறிவு விசாலம் அடைகின்றோம்.

ஆயினு மிந்தியர் முப்பத்தைந்து கோடி
ஆனவர்க்கெல்லாந் துரைத்தனத்தார்
ஆங்கில முறையிற் கல்வி பயிற்றுதல்
அசாத்தியத் தோடனுவசியமுமாம்.

மேலுங்கவனித்துப் பார்க்கில் நமது
மேலாம் கவர்ன்மெண்டார் எல்லார்க்கும்
பொதுவாய்ப் புத்திக் குரிய தொன்மையே
புரிந்து வருவத சாத்தியமாம்.

அதற்கும் ராஜாங்கத்தார் அரசிறைப்பொருளில்
அதிகம் எடுக்க முடியாது.
ஏனெனிற் காவல் மராமத் சுகாதாரம்
இவை பிறவற்றுக்கும் பொருள்வேண்டும்.

ஆதலாற், கல்வி விஷயமாக நம்
அரசாங்கத்தார் செய்வதெல்லாம்
இந்திய ஜனத்தொகைக் கீடு நோக்கில் அது
என்றென்றும் போதாமல் தானிருக்கும்,

அன்றியும் கல்விக் கனுகூலம் பல
அரசாங்கத்தார் செய்தாலும்
ஆசாரம் பாஷை யனுஷ்டானம் மதம்
ஆன இவை வித்தியாசத்தினால்

நம்முடையிந்தியா நாட்டுக்கிசைந்த
நலம் முழுவதும் நண்ணுது.
ஆகையால் இந்தியக் கல்வி சிறக்க
ஆசையோ டிந்திய கனவான்கள்,

வேண்டும் பணம் மிகச் சேகரித்துத் தக்க
விற்பன்னர் தம்முடன் யோசித்துத்
தேசியக்கல்வி நம் தேசமெங்கும் வெகு
தேஜஸ்ஸுடனே பரவி வர

ஆன முயற்சிகள் அறிஞர்கள் பற்பலர்
ஆழ்ந்து நினைத்துச்சொல்லும் வண்ணம்
ஆத்திரத் தோடிந்திய புத்திரர் நாம் செய்யின்
அடியிற்கண்ட பலன்கள் உண்டாம்.

## தேசியக் கல்வியின் பயன்

### ஆநந்தக் களிப்பு

தேசியக் கல்வியால் நாளும்—நல்ல
செல்வம் வர்த்தகத்துடன் சேர்ந்தெங்கும் நீளும்;
தொழில்கள் பலபல செழிக்கும்—நாட்டில்
தொன்மை வளமின்னும் தோன்றிச் செழிக்கும்;
நாடெங்கும் அஞ்ஞானம் நீங்கும்—தூய
நல்லவரிடம் அபிமானமே ஓங்கும்;
ஒத்துழைப்பென்பது கூடும்—இப்போது
உள்ள மதத்வேஷம் ஊரை விட்டோடும்;
கல்விக்குச் செலவு குறையும்—வெறுங்
காசுக்கென்றுழைத்திடும் ஆசையும் மறையும்;
தேசாபிமானம் சொலிக்கும்—என்றும்
சிறுமை சேர் தன்னயப் பேயும் ஒளிக்கும்;
தாய் பாஷைக்கு நல்ல காலம்—இந்தத்
தலமெங்கு ஓங்குமே புண்ணிய சீலம்;
சொற்ப வர விருந்தாலும்—தோன்றும்
தூய கருத்தே உளத்தி லெக்காலும்;
நீசபுத்தி மிக மங்கும்—உண்மை
ராஜபத்தி மேலும் நலமுறப்பொங்கும்;
ஈச விச்வாசம் இலங்கும்—எங்கும்
நேசம் பெருகவே நேர்மை துலங்கும்;
இந்திய மாதாவின் கீர்த்தி—வளர
மைந்தர்கள் நாமிது செய்வதே நேர்த்தி;
அருமையாம் தேசிய வித்தை—இதனை
ஆதரிப்பதில் வேண்டும் மனத்தினில் சிரத்தை;
இந்த நன் முயற்சிக்கே உதவி—செய்பவர்க்
கிந்து மாதேவி யருள்வள் நற்பதவி.

### வாழ்த்துரை

வாழி தேசிய வித்தையே—நாட்டில்
வாழி யதனால் வளம்பல மெய்யே
வாழி நம் மிந்தியா வாழி—நாளும்
வாழியன்னை புகழ் வழி வழி யூழி
வாழி நம் ஜார்ஜ்மன்னன் வாழி—மிக
வாழியவர் செங்கோல மென்மேலும் வாழி
வாழிசர் வேச்வரன் கருணை—என்றும்
வாழிநம் முள்ளத்தில் அவர் நாம ஸ்மரணை.

முற்றிற்று.



விவேக போதினி

தொ. 10] பிங்களஸ்ரீ தைமீ [ப. 8

## கிருஷ்ணவதாரச் சிறப்பு

### THE GREAT WORLD MASTER

உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றென்றே கண்கள் நீர்மல்கி

மெய்ம்மறந்து பக்தி பரவசத்தில் ஆழ்ந்து விளங்கினர் ஆழ்வாராதியர். 'கண்ணன் கழலிணை' 'எண்ணும் திருநாமம்' என்று தினமும் தியானித்து எத்தனைபேர் பேரானந்தம் அடைகின்றனர்? இவ்வுலகில் கவிகளும் ஞானிகளும் பக்திமான்களும் ஒருங்கே பருகக்கூடிய பெருஞ்சமுத்திரமாக விளங்குவது கண்ணபிரானது திவ்யசரித்தரம் போல் வேறொன்றும் கிடையாதென்பதை யாவரே மறுப்பர்? எத்தனை காவ்யங்கள், நாடகங்கள், சரித்திரங்கள், கீதங்கள், பாடல்கள், சர்ச்சைகள், தரங்கங்கள், அவரையே நாயகனாக உடையன? உலகத்தில் எந்த மனுஷ்யன் தனது நடை நொடி பாவனைகளால் ஜனங்களது கற்பனையைக் கடந்துநின்றான்? எவனுடைய செயல்கள் என்றும் அறிய முடியாது கிடக்கின்றன? எவனுடைய காரியங்கள் ஒன்றோடொன்று முரண்வதாகக் காணப்பட்டாலும் ஆழ்ந்துநோக்கில் அத்யத்புதமாக விளங்கும்? எவனுடைய சமத்காரம் கல்பனு மதியைக் கடந்து அளவிடமுடியா அன்பையும் அருளையும் வெளியிடும்? எவனுடைய ஸங்கல்ப பாவத்தை அறிவது அகோசரமாக விளங்கும்? எவன் தனது காரியங்களால் லோக ஹிதத்தையே நாடி நடந்தவன்? எவன் காலத்தின் இயற்கை விகாரங்களைக் கருதாது மனங்குன்றாது, கீழ்ந்தவற்றை உயர்த்துவதற்குப் பாடுபட்டு, அதற்காகத் தனக்கேற்படும் அவமான முதலானவற்றைநாடாதிருந்தவன்? எவன் தன் செயலை எல்லாம் தன்னை நினையாது நடத்தி ஆத்மத்யாகம் செய்தவன்? எவன் உலகைக் கேவலம் ஜடவழியிலிருந்து மேலேறும்படி பரமோபதேசஞ் செய்ததன்றி அவ்வுபதேசத்தைத் தனது ஜீவிய ஒழுங்காலேயே காட்டியவன்? எவன் தனது பார்வையால் குன்றிய மனதையும் திடம்பெரும்படி செய்து கிளைக்கச் செய்தவன்? எவன் நமதிடையே மிக்க நெருங்கியிருந்தும் நம்மால் அறியமுடியா திருந்தவன்? எவன் எளியவர்க்கினியனாயும் பாமரர்க்குச் சிறுவரிலும் சிறியனாகவும் தவழ்ந்து, அகந்தையோர்க்கு ஆபத்தாக இருந்தவன்; எவன் தனது செயலின் தெய்வீகத்தால் தனது தெய்வீகப் பிரபாவத்தை வெளியிட்டு ஜனங்களது பூஜ்யதைக்கு ஆளானவன்? எவன் தனது அன்பின் பெருக்கால் எல்லா மனத்தையுஞ் சூறைகொண்டு அழியாப் பெருமைபெற்று மானுஷா தெய்வமாக விளங்கினான், விளங்குகிறான், என்றும் விளங்குவான்?—இவற்றிற் கெல்லாம் ஆயர்பாடியில் பிறந்தாடித் தவழ்ந்து விளங்கிய ஸ்ரீ கிருஷ்ணபெருமான் என்பதே விடையாகும் அன்றோ? ஆம். ஸ்ரீ கிருஷ்ணரது சரித்திரம் நமது மனத்தை வெருட்டக்கூடிய பல முரண்பட்ட விஷயங்களடங்கிய கதை என்று சில வேளைகளில் நமக்குப் படும். சிலவேளை அவரைச் சாரசோர சிகாமணியாகக் கொண்டாடுகிறோம்; மற்றொரு ஸமயம் அவரே ஒழுக்கங்களுக்கெல்லாம் தலைமையாக இருப்பதாகக் காண்கிறோம்; ஒருவேளை ச்ருங்காரவிடனாக விளங்குகிறார்; மற்றொரு ஸமயம் மஹாஸந்யாஸம் பூண்ட வேத வித்தாகத் தோன்றுகிறார்; ஒருக்கால் மஹாவிடனாகத் தோற்றுகிறார்; மறுஸமயம் உத்தம கிருஹஸ்தர்போல காட்டிக்கொள்கிறார் ; ஒருவேளை குறும்பு நிறைந்து வெறுக்கும்படி நடந்துகொள்கிறார்; அடுத்தபடி மஹாத்மாக்களைப்போலச் சாந்த நிலையமாக விளங்குகிறார்; ஒரு சமயம் உறவு பாராட்டினவரிடம் மறுபடி அவ்வாறு விளங்குவதில்லை; சிலவேளை பயப்பட்டவர் போல நடக்கிறார்; ஆனால் எல்லாரையும் ஹதம் செய்யவே ஏற்பாடு செய்கிறார்; சண்டையிடுவது

அதர்மம் என்பர். ஆனால் தூரதாகச் சென்றாலும் வாதுக்கே வழியிடுகிறார்—இவை மாத்திரமன்று, மீண்டும், ஆட்களிடம் அவர் நடந்துகொண்ட விதங்களையும் சமாதானமாக்குவது எளிதல்ல. கர்ணனிடமிருந்து அவன் ஆயுதம் முதலிய எல்லாவற்றையும் மாயவழிகளால் பிறர் கொள்ளும்படி செய்துவிட்டு, பிறகு அவனுக்குத் தனது விச்வரூபத்தைக் காட்டி மனச்சமாதானஞ் செய்கிறார்; வேறொரு சமயம் சத்யபாமைக்கு நன்மை செய்வதுபோல ருக்மிணிக்கு நன்மை செய்கிறார்; அர்ஜுனனுக்கு இன்றியமையா உயிர்த்தோழனாக விளங்கினாலும், அவன் மகனழியவே வழிதேடுகிறார்; பாண்டவஸகாயராக இருந்தாலும், அவர் மக்களழிவிற்கு ஆதாரமாக இருக்கின்றனர்; தன் தமையனிடம் வெகுபக்தியாக யிருப்பதாகக் காட்டிக்கொண்டாலும், அவர் காரிய மெதையும் ஈடேறாதிருக்கவே ஏற்பாடு செய்கிறார்.—இவ்விஷயங்களில் அவர் மனோதர்மத்தைக் கேவலம் ஜனங்களால் அறிய முடியுமா? இவ்வாறு இருப்பது கேவலம் மனிதனாக இருந்தால் முடியுமா? அவர் லீலை அநந்தம்போல் அவர் உருவமும் அநந்தம்; அந்தப்புரத்தில் பல்லாயிரம் மனைவியரிடம் தனித்தனி யுருவங்கொண்டு வெவ்வேறு தர்மநிலையில் விளங்கும் அவர் செயலும் அநந்தம்.

ஆனால் அவர் செய்யும் ஒவ்வொரு கிருத்தியங்களிலும் செப்பமுடியா தெய்வீக வாச்சரியம் விளங்கிவந்தது. அவர் பால்யம் வைசித்ரிகம் வாய்ந்தது. சிறு குழந்தை போலவர் வளர்ந்தாலும், அவர் தெய்வீக வாசனை எங்கும் வீசிக்கொண்டேதா னிருந்தது; அதர்ம இருளையொழிக்க உதித்த அருட் சூரியனாகவே அவர் மதிக்கப்பட்டனர். அவ்வாறே முன்னமேயே அறிந்திருந்த கம்ஸனும் ஸந்தேகமற உணர்ந்தும், அகந்தை ஒழியும்படியாக நேர்ந்தது. காலத்தின் கோலத்தால் தரும முறை பிறழ்ந்து அகந்தையும் கொடுமையும் மேனிலை அடைந்த காலத்து, அவர் வரவு தெய்வீகமாக விளங்கியது. அவர் செயல் ஒவ்வொன்றும் மனத்தைக் கவரும் தன்மையுள்ளது. இத்தெய்வீகப் பரிவேஷவைபவத்தின்முன்வந்து அம்மோஹன உருவில் ஈடுபடாதிருக்க எவர்க்கும்முடியாது. மொத்தத்தில் அவர் செய்தகாரியம் எவையும் லோக ஹிதார்த்தமாகவும், ஜனங்களது மனோபாவப் பெருக்கிற்கும் பாரமார்த்திக உயர்விற்குமே ஆதாரமாகவும் இருந்தன. கேவலம் பக்தர்களைப்போல் தமது வாழ்க்கையை உயர்த்திக்கொள்ள வழி தேடுவதல்லாது, எல்லாரும் வழிபட்டுய்ய மார்க்கங்களைக் காட்டியும், அதில் எவ்வாறு ஈடுபட வேண்டுமென்று அனுபவ ரீதியாகவும் வழி காட்டியுள்ளார்.

உலகத்தில் தர்மம் குன்றி அதர்மம் ஏறும்போது எம்பெருமான் தாமே தமது அருட்பெருமையின் வைபவத்தால் ஜனங்களிடம் தோன்றி அவர்களை உயர்த்த வருவதாகக் கூறியுள்ளார். அவர்களே பரம்பொருளின் அவதாரமெனக் கொண்டாடப்படுபவர். கண்ணனைப் போன்ற அவதாரங்கள் பல்லாயிரம் வருடங்களிற் இடையிலன்றிஎலாது. அவர்களது வரவு பழமைப்பட்டு ஸாரமற்றுப் போன லோக தர்மங்களைப் புனருஜ்ஜீவனம் செய்வதன் பொருட்டே யாகும். கிருஷ்ணாவதார மஹிமை அவரது அன்பின் பெருக்கேயாம். அவரது வாழ்க்கையும், வழியும், நன்னெறிக் கோட்பாடும் யாவர்மனத்துக்கும் இன்பந்தருவ. அவர் அன்பு பெறாதவர் எவரும் இல்லை. பாலர், விருத்தர், ஆண், பெண், பாமரர், பண்டிதர், அறிவுள்ளார், அறிவில்லார். எல்லாருள்ளும் அவரன்பையடையாதவர் இல்லை. அவரது வேணுகானம் எந்தன்மனத்தை உருக்கவில்லை? அவருடைய கீதாம்ருத தாரை யாவரது தாபத்தைத் தணிக்காதிருக்கும்? அவரது வாழ்க்கை வழிஅன்பின் பெருக்கையும், த்யாகத்தின் பெருமையையும், ஸ்வாதந்திரியத்தின் உயர்வையுமே வெளியிடும். அவரது அனுபவங்கள் இந்திய நாட்டுப் பாரமார்த்திகப் பொக்கிஷமாகும். அவர் வெளியிட்ட உபதேசங்கள் இவ்வரிய ஆரிய நாடு வெளியிட்ட உத்கிருஷ்டமான ஆத்மஞானப் பெருக்கின் உச்சியில் விளங்குவ. அவரது அவதார ரஹஸ்யங்கள் கேவலம் மனிதனது ஹிருதயத்தைமாத்திரங் கவர்வனவல்ல; அவனது மனத்தை யிழுத்து அதை அடக்கும் வழியையும் யூட்டும். கோகுலத்தில் தொட்டிலாடி யவரளித்த ஆனந்தம், பிருந்தாவனத்தில் காளைப்பருவகாமனாகிவிளங்கி யாவர் மனதையு மிழுத்த காந்தசக்தி, ராதையைத் தன் வயப்படுத்தி அவள் மனத்தி லீடுபடும் அன்பு, சண்டைப் பிரசண்டமாக நடக்கும் போரிடைச் சஞ்சலப்படும் உயிரைத் தன்னிலை யடைந்து களித்து விளங்கும்படி அவர் தர்ம க்ஷேத்திரமாகிய குரு க்ஷேத்திரத்தில் அர்ஜுனனுக்கு உபதேசஞ் செய்யும் வாயிலாக எவ்வுயிரும் ஆத்மலாப மடையும் பொருட்டுப் பரமகாருண்யத்துடன் திருவாய் மலர்ந்த தெய்வீக கீதம், அதற்கு முன்னேயே 'எல்லா முன் செயலே கோவிந்தா! என்னாலாவது ஒன்றுமில்லை' எனத் தன் எளிமையையும் எம்பெருமானது வல்லமையையும் நன்குணர்ந்து இருகைகளையும் விரித்துத் தன்னைக் கூவிய திரௌபதியின் மான ஸம்ரக்ஷணம், அகந்தையே உருவெடுத்து விளங்கிய கஞ்சனைக்கொன்று பந்தத்திற் கிடந்த வஸுதேவ தேவகியவர்களின் ஸ்வதந்தரத்தைத் தந்தது, பல்லாயிர முருவாகப் பல்லாயிர மனைவியரிடம் பலவேறு வினையுடன் ஒரே சமயத்தில் விளங்குவது—இவைபோலும் அநந்தம் செயல்கள் கண்ணன் தெய்வீகத்தைத் தாமே வெளியிடும். கண்ணனே இந்நாட்டுக் காப்புக் கடவுள் என்று சொல்ல இச்செயல்களே இடந்தரும். அவரை நினையாத வீடுமில்லை; அவரைக் கொண்டாடாத நினைவுமில்லை. அவரது வைபவப் பெருக்கை விஸ்தரிப்பது வீணாகாது. அனந்த வழியில் உருவகப்படுத்தப்படும் அந்தத் திவ்யமங்கள விக்ரஹத்தின் வாழ்க்கை வழியைக் கவனிப்பது நமது நாட்டாரது முதற்கடமையாகுமன்றோ?



**கலங்கரை விளக்கம்.**—அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஹட்டிராஸ் முனையிலுள்ள கலங்கரை விளக்கம் 200 அடி உயரம்; நியூயார்க் துறைமுகத்தில் நேவிஸிங்கு ஹைலாண்ட்ஸ் என்னுமிடத்திலுள்ள தீபஸ்தம்பத்திலிருந்து வரும் வெளிச்சம் வெகு பிரகாசமானது. இரண்டரைக் கோடி மெழுகுவர்த்திகளை ஒன்று சேர்த்துக் கொளுத்திவைத்தால் ஒக்கும் பிரகாசத்தை அது தருகிறது. சாதாரணமாக 22 மைல் தூரத்திலிருந்து அதைப்பார்க்கலாம். சிற்சில சந்தர்ப்பங்களில் 70 மைல் தூரத்திலிருந்தும் அதைப் பார்க்கமுடியும்.

* * *

**வழுக்கைத் தலையின் சிறப்பு.**—வழுக்கைத் தலையை யுடையவர்களை க்ஷயரோகம் பீடிப்பதில்லையாம். 5000 க்ஷயரோகிகளில் ஒருவர்கூட வழுக்கைத் தலையினராக இருந்ததில்லையென ஒரு வைத்தியர் கூறுகின்றார். ஆகவே வழுக்கைத் தலைக்கும் க்ஷயரோகத்துக்கும் பகைபோலும்.

## பூண்டி அரங்கநாத முதலியார்

## PUNDI RANGANADHA MUDALIYAR

உலகத்தில் பெருமை யுண்டாவதற்கு ஆதிகாரணமாயிருப்பவர் உபாத்தியாயர்களே என்பது வெளிப்படை. சிறுவர்களைச் சரியான பாதையில் ஓட்டி, அவர்கள் மனத்தைச் செவ்வனே திருப்பி, அவர்களுடைய குணத்தை இளமையிலேயே படியவைத்து, நல்ல உபதேச மொழிகளைப் பசுமரத்தாணிபோல அவர்மனத்தே பதியச்செய்து, அவர்களது வாழ்க்கையில் ஈடுபட்டுச் சமாளித்து, அவ்வவர்களது பெருமையாகிய பேரரண்மனை கட்டும்படிக்கு அஸ்திவாரம் இடுபவர் உபாத்திமார்களல்லது வேறு யார்? ஆயினும், எல்லா உபாத்தியாயர்களும் உபாத்தியாயர்களாகமாட்டார். "கல்லெல்லாமாணிக்கக் கல்லாமோ?" சிலரே தமது மனோபாவங்களாலும், அபாரபுத்தியாலும், ஆழ்ந்த ஞானத்தாலும், மாணாக்கர்களைக் காந்தம்போல் கவரும் தமது அன்பினாலும், போதனா சாமார்த்தியத்தினாலும், குன்றாத ஒழுக்கத்தினாலும் மற்றும் பல உயர்ந்த குணகணங்களினாலும், எல்லாவீட்டிலும் பழகும் முதுமொழியாகத் தமது பெயரை நிலைநாட்டுபவர்; அவருள் பூண்டி அரங்கநாத முதலியார் என்பவர் ஒருவராவர்.

### இளம்பருவம்

இவர் 1847௵ சென்னையில் பூண்டி சுப்பராய முதலியாரென்பவர்க்குக் குமாரராகப் பிறந்தவர். நல்லகுலத்தில் பிறந்த அவர்தந்தை ஆங்கிலம் போதுமானவரை கற்று, "நீர்ப்பாசனக்கால்வாய் கம்பெனி" என்னும் இரிகேஷன் கனால் கம்பெனியின் மானேஜராகச் சிறிது காலம் இருந்தனர். ஆகவே ஆங்கிலப் படிப்பின் நன்மையை முற்று முணர்ந்தவரானபடியால், தம் மகனுக்கும் இளம் வயதிலே தாமாக வீட்டிலேயே ஆங்கிலம் கற்பித்து வந்தார். 'விளையும் பயிர் முளையிலேயே' என்றபடி அரங்கநாதர் அவ்விளம் பிராயத்திலேயேதமதுபுத்தியையும், படிப்பிலிருக்கும் ஆத்திரத்தையும் வெளியிட்டனர். இதற்குள் அவர் தந்தை மதராஸ் ரயில்வேயின் ஹெட் அகவுண்டண்ட் உத்தியோகஸ்தராக அவனாசிக்கு மாற்றப்பட்டனர். அங்கு அவர் நெடுநாள் இருக்கவில்லை.

அவனாசியிலிருக்கும்போது சுப்பராய முதலியாருடைய வீடு, தீவட்டிக் கொள்ளைக்காரர்களால் தாக்கப்படவே, தமது ஆசை மகனுக்கு என்ன அபாயம் நேருமோ வென்று, அவனை ஒரு சிறு பலகையில் உட்காரவைத்துக் கூரையில் கட்டிவிட்டுத்தானும் தனது சிறிய மகளும் மாத்திரம் இருப்பதாகச் சொல்லி, அந்தத் திருடர்களது காலில் விழுந்து, தம்மைக் காப்பாற்றும்படி கெஞ்சினார். வீட்டிலிருந்த பொருள் முழுமையும் கொள்ளையிட்டுக்கவர்ந்த அந்தத் தீவட்டிகாரர்கள் திருப்தி பெறாமல் "நீ வேறு பொருள்கள் ஏதோ ஒளித்து வைத்திருக்கிறாய் கொண்டு வா தொடு" என்று மிரட்டி வெருட்டினார்கள். அப்போது அவர் நடுநடுங்கி தன் ஆசை மகனை மேலொளித்துவைத்திருந்ததை ஒப்புக்கொண்டார். உடனே அச்சிறுவன் கீழ்க் கொணரப்பட்டு உயிர்ப்பிச்சை கேட்கும்படியாக நேர்ந்தது. இச்சம்பவம் நேர்ந்ததும் சுப்பராய முதலியார் அடுத்த நாளே அவனாசியை விட்டுப்புறப்பட்டுத் தமது மனைவி மக்களுடன் சென்னையை யடைந்தனர்.

நிற்க, அரங்கனாத முதலியாருக்கு அவர் தந்தை கற்றுக் கொடுத்த படிப்பு விர்த்தியாய்க் கொண்டேவந்தது. ஆங்கிலமும் தமிழும்பிழையற எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டனர். அவர் வீட்டில் கற்ற ஆங்கிலப்படிப்பு உயர்தரமானதென்று சொல்ல முடியாதாயினும், அவர் தந்தையிடம் கற்ற தமிழ்ப்படிப்பு மிகச் சிறந்ததாயிருந்ததோடு கூட, அவர்க்கு அப்பாஷையில் நீங்காத அன்பையும், சிறந்த ஞானத்தையும் உண்டாக்க ஆதாரமாக இருந்தது. 1860 ௵,—அரங்கனாதருக்கப்போது வயது பதின்மூன்றுதானிருக்கும்,—இவ்வருஷம் அவர் பச்சையப்பன் கல்லூரியில் மூன்றாவது வகுப்பில் சேர்க்கப்பட்டனர். இந்த வகுப்பிற்கு இக்காலத்து நான்காவது பாரம் என்னும் வகுப்புச் சமானமுடையது. அக்காலத்திலும் இந்துக்களால் கௌரவமாக மதிக்கப்பட்ட இப்பள்ளிக்கூடம் ஹைஸ்கூல் வகுப்புகளைமாத்திரம் உடையதாயிருந்தது. அதை அதன் தலைமையிலிருந்து வெகு சிறப்புடன் நடத்திவந்த 'பேஸில் லவரி' என்னும் சீமான் இந்த ராஜதானி வித்யா ப்ரமுகர்களில் ஒருவராவர். அரங்கனாதரது சிறந்த வித்யா பயிற்சிக்குணங்களை லவரி அவர்கள் கண்டதும் அவற்கு வருஷம் 60 ரூபாய் உபகாரச்சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்தனர். மேலும் அரங்கனாதர் அவ்வருஷத்திய முடிவுப் பரிக்ஷையில் அதி அற்புதமாக ப்ரத்யுத்தரங்கள் எழுதியிருந்ததனால் அவரை மூன்றாவது வகுப்பிலிருந்து முதல் வகுப்பிற்கு மாற்றினார்கள். இந்த வகுப்பு மெட்ரிக்குலேஷன் என்று சொல்லப்படுவது.

இவ்வகுப்பில் லவரியாரது போதனைக்குட்பட்டு, அரங்கநாதர் தமது படிப்பை வெகு ஜாக்கிரதையாகக் கவனித்து வந்தனர். அவ்வகுப்பில் அநேக பரிசுகளையும் வெகுமதிகளையும் தாம் பெற்றதன்றி, ராஜா ஸர். டி. மாதவ ராவ் அவர்களால் ஆங்கிலத்திலும் கணக்கிலும் முதன்மையாக நின்றவர்க்குக் கொடுக்கும்படியாக நியமிக்கப்பட்டிருந்த சிறப்புப் பரிசையும் தாமே பெற்றனர். ஊறுங் கேணியில் ஊற்றுத் தானே சுரக்கும் அல்லவா?

அரங்கனாதருக்குத்தமது திடமானபடிப்பில் சிறந்த நம்பிக்கை யுண்டென்பதற்கு, அவரது சின்னாளிலேயே நடந்த சம்பவம் ஒன்றுசாக்ஷியம் பேசும். அதாவது: பெண்கல்வியைப்பற்றி ஒரு வியாஸம் எழுதும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டு அவ்விஷயத்தைப்பற்றி மிக உயர்வாக எழுதப்பட்டதாக மதிக்கப்படும் வியாசத்தை எழுதினவர்க்குச்சிறந்தவெகுமதி அளிக்கப்படுமென்று வெளியிடப்பட்டது. இவ்விஷயத்தைப்பற்றி அரங்கநாதரும் ஒரு வியாஸம் எழுதியிருந்தனர். இச்சிறுவர்களது வியாஸங்களை மதிப்பிட்ட சீமான்கள், அரங்கநாதரும் மற்றொரு குப்புராம சாஸ்திரி என்பவரும் எழுதிய வியாஸங்களே சிறந்தவையென்று மதிப்பிட்டனர். இவ்விரண்டு வியாஸங்களை, ஜான்புரூஸ் நார்டன், ஜே டி மெயின் என்னும் இருவரும் மீண்டுங் கவனித்து அவ்விரண்டில் எது உயர்ந்ததென்று மதிப்பிடும்படி கேட்கப்பட்டனர். மெயினவர்கள் அரங்கநாதரது சிறந்ததென்றாராயினும், நார்டனவர்கள் குப்புராம சாஸ்திரியாரவரது சிறந்ததென்று மிகப்பாராட்டினர். இவ்வாறு மதிப்பிடுவோர்க்குள் அபிப்பிராயபேதம் ஏற்படவே அவ்வியாஸங்கள் கனம் ஜஸ்டிஸ் ஹாலவே என்பவர்முன்மதிப்பிடும்படி அனுப்பப்பட்டன. அவர் அரங்கநாதர் எழுதியதே சிறப்புவாய்ந்ததென்று தீர்மானித்தாராயினும், எக்காரணத்தாலோ குப்புராம சாஸ்திரிக்கே பரிசளிக்கப்பட்டது. இது அரங்கநாதருக்கு மனச் சமாதானம் தராமையால், அவர் கடைசிவரையிலும் தமது வியாஸத்தின் உயர்வைச் சித்தாந்தப்படுத்தத் திடமாக வைராக்கியம் கொண்டதால், அக்காலம் கவர்னராயிருந்த ஹாரிஸ் பிரபுவின் ஆதரணையின்கீழ் அப்பள்ளிக்கூடத்து வருஷாந்திரக் கொண்டாட்டம் நடைபெறும்போது, கவர்னரிடமிருந்தே தமது வியாஸத்தைப்பற்றி நேர்மொழியாகத் தீர்மானமான அபிப்பிராயம் பெறும் நோக்கத்துடன், அரங்கநாதர் வியாஸமும் கையுமாக வெகு ஆத்திரத்துடன் முந்திய போது, அவரது எண்ணத்தை ஊஹித்து உணர்ந்த உபாத்தியாயர்கள் அவரைத் தடுப்பதற்குப் பட்டபாடு கொஞ்ச நெஞ்சமல்ல. அவ்வாறு செய்வதற்குமுன், அவர்கள், ஷை விஷயம் பள்ளிக்கூட அதிகாரிகளால் வெகு கவனத்துடன் நோக்கப்படும் என்ற உறுதிமொழி கொடுக்க வேண்டியதாயிற்று.



தமது இயற்கைக்கு ஏற்ப, அரங்கநாதர் பச்சையப்பன் கலாசாலையிலிருந்து மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கு 1862-ம் ௵ சென்று, அதில் ராஜதானியில் முதலாவதாகத் தேறி, ஹைஸ்கூல் என்று அந்நாளில்பேர்பெற்றுவந்த சென்னை ராஜாங்கக்கலாசாலையில் பச்சையப்பன் கல்லூரி தர்மகர்த்தர்களால் கொடுக்கப்பட்ட உபகாரச் சம்பளத்தின் ஆதரணையைக் கொண்டு சேர்ந்தனர். இங்கு அவர் முன்னிலும் படிப்பில் சிறந்தோங்கி வந்தனர். அவர் சேர்ந்தபோதுதான் அந்தக் காலேஜ் மிகச் சிறப்படைய ஆரம்பித்தது. அப்போது உபாத்தியாயர்களா யிருந்தவர்கள் மகா மேதாவிகளாயிருந்தும், அரங்கநாதரைப் பெருமை பாராட்டும்படி நேர்ந்தது. தமிழிலும் ஆங்கிலத்திலும் கணக்கிலும் தத்வத்திலும் இணையற்று விளங்கிய அரங்கநாதரது புத்தி விசாலத்தையும், மதிநுட்பத்தையும், தமது கண்பார்வையின் கீழ்ப்பட்ட எத்தகைய மூடபுத்தியையும் அதிநுட்பமாக மாற்றக்கூடிய சிறப்புற்றோங்கிய அக்கலாசாலைத் தலைவராகிய **தாம்ஸன்** துரையவர்கள் வெகு கவனத்துடன் நோக்கி வந்தனர்; சிறந்த மணம் வீசும் மலரைத் தரக்கூடிய இளம் விதையாக அவரைக் கவனித்தனர். இதற்குள், அரங்கநாதரது ஞானவிசாலம் பள்ளிக்கூடமன்றி வெளியிடங்களிலும் மணக்க ஆரம்பித்தது. அவரது ஞான விருத்தியை வெகு ஆவலுடன் உயர்ந்த ராஜாங்க அதிகாரிகளும் கவனம் கொள்ளுமாறு தூண்டியது. கணக்கில் மகா மேதாவியென்று பேர் பெற்றவராயினும், ஆங்கில மொழியை இம்மியும் பிசகாது, நாப்பழக்கத்திலும் கைப்பழக்கத்திலும், தன் மனதிற்கிசைந்தபடி அம்மொழி இடந்தருமாறும், அம்மொழியையே தாய் மொழியாகக்கொண்ட ஆங்கிலரும் அவர் வாயிலிருந்துவரும் வாக்கு அமிருத தாரையின் மதுரத்தைக் கண்டு மயங்குமாறும், ஆங்கில மொழியை அரங்கநாதர் ஆண்டுவந்தனர். படிப்பிற்சிறந்து விளங்கிய ஆங்கிலரும் அவர் பேசுவதைக்கண்டு அதிசயிப்பர்.

1862ம் ௵த்தில் காலஞ்சென்ற திருவாங்கூர் மஹாராஜா அவர்களால் பீ. ஏ. பரீக்ஷையில் முதல் வகுப்பில் முதலாவதாக நிற்பவர்க்கு அளிக்குமாறு நியமிக்கப்பட்ட ரூ. 300 பெறுமான தங்கப் பதக்கம், 1863—1864-ம் வருஷங்களில் பெறுவதற்கு யோக்கியாம்சம் பெற்றவர்கள் இல்லாமையால் கொடுக்கப்படாதிருந்தது, 1865-ம் ௵ அரங்கநாதருக்கு அளிக்கப்பட்டது. இம்மாதிரி அநேகம் பரிசுகளும் பதக்கங்களும் அவர் பெற்றதைக் கண்ட தாம்ஸன் துரையவர்கள் அரங்கநாதரிடம் அதிவாஞ்சையுற்று, அவரை பீ. ஏ. பரீக்ஷையில் தேறியதும் தமது பள்ளிக்கூடத்தில் உதவி உபாத்தியாயராக நியமிக்கும்படி ஏற்பாடு செய்தனர்.

தமக்குப் பிடித்த வேலையை தாம் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் அரங்கநாதர் தமது ஆங்கில நேயர்களது போதனைக்குட்பட்டனர் என்பதை அறிய வேண்டும். அவர்களுள் பெரும்பாலாரும் போதனா முறையிலேயே சம்பந்தப்பட்டவர். இவ்விஷயத்தை அவர் முற்றும் அறிவர். பலவிதமான உயர்ந்த சம்பளமுள்ள வேலைகளுக்கு அவர் பன்முறையும் அழைக்கப்பட்டனராயினும், கல்வி இலாகாவில்தான் தாம் ஜனங்களுக்கு மிகச் சிறந்த நன்மை செய்யக்கூடுமென்ற திடமான நம்பிக்கையே அவரைத் தாம் ஏற்றுக் கொண்ட உபாத்யாயத் தொழிலினின்று வெளி

வர மனம் இடந்தரவில்லை போலும்! விலையற்ற மணியாக விளங்கிய அவரது பெரும் புகழையும், ஊழியத்தின் பெருமையையும், சென்னை ராஜாங்கத்தார் கண்டு கௌரவிக்கப் பலநாள் சென்றதேனும், அவர் கல்வி உத்தியோகஸ்தராகக்காட்டிய பலவகைப்பட்ட திறத்தைக் கவனித்துப் புகழ அவர் பின் வாங்கவில்லை. ஆயினும் அவரைப் புரொபெஸர் என்னும் பதவியில் காயமாக்குவதற்குப் பதினைந்து வருஷங்கள் சென்றன. வெண்பதை நோக்குமிடத்து அரங்கநாதரது பொறுமையைப் பற்றி வேறு அத்தாக்ஷியும் வேண்டுமோ? கணக்கு உபாத்தியாயராக நியமிக்கப்பட்ட அரங்கநாதர் 1[illegible]2-ம் வரு சென்னை சர்வகலாசாலை அங்கத்தினராகவும், 1875-ம் வரு முதல் அவரது அந்தியகாலம் வரையும் ஒவ்வொரு வருஷமும் அந்த ஸர்வகலாசாலையின் ஸிண்டிகேட் என்னும் விவஹார சங்கத்து அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டு, அவ்விரண்டு சங்கங்களின் மந்திராலோசனைகளிலும் ஆழ்ந்த கவனம் செலுத்தி, யாவர் மதிப்புக்கும் பாத்திரராயிருந்தனர். ஜாதி மத பேதமின்றி, சமான மனத்துடன், யாவர் நன்மையையும் கவனிக்க அவர் மனம் இடந்தந்து, பொதுஜன உயர்வையே கவனித்து வந்தது. கல்வி சம்பந்தமான எந்தவகைய கமிட்டிகளிலேனும், கமிஷன்களிலேனும் அவரது அபிப்பிராயத்தைக் கவனிக்காதிருந்ததில்லை. அவரது தேர்ந்த கை சம்பந்தப்படாது அக்காலத்தில் எந்த ரிபோர்ட்டும் தீர்மானமான உருவம் கொண்டதே கிடையாது. 1[illegible]0-ம் வரு அவர் கவர்ன்மெண்டு தமிழ் டிரான்ஸ்லேடராக நியமிக்கப்பட்டு, அப்பதவிக்கே பதவியளித்தனர். 1892-ம் வரு அவர் சென்னை மாநகரின் ஷெரிப் என்னும் உயர்ந்த பதவியை அடைந்தனர். இதற்குப் பிரதானமாக ஸர் ஹென்ரி ஸ்டோக்ஸ் என்பவரே காரணபூதராக விருந்தனர்.

அரங்கநாதர் படிப்பிலும், போதனையிலும் சிறந்து விளங்கியதுபோல பொதுஜன விஷயத்திலும் ஆவல் நிறைந்து விளங்கினர். சென்னைநகர பரிபாலன சபையின் மந்திராலோசனையின் மிக்க ஊக்கம் பாராட்டி, பல முறையும் ஜனங்களது சுகஜீவன வாழ்த்து நன்மை பயக்கும்படி செய்தனர். அவரது நாஷ்டிகமும் வாக்ரசனையும், சாதுரியமுமே, 'காஸ்மோபாலிடன் கிளப்' என்னும் ஜனசேர்க்கைச் சங்கத்தில் அவரை காந்தமிக்க ரத்னமாக விருந்து யாவரது மனத்தையுங் கவரும்படி செய்தன. 1890-ம் வருஷம் அவர் சென்னை சர்வகலாசங்கத்துத் தேறிய மாணாக்கர்களுக்கு உபதேச உபந்யாசம் ஆகிய கான்வோகேஷன் அட்ரஸ் செய்தபோதவர் சொல்லிய புத்திமதிகள் பலராலும் கொண்டாடப்பட்டன. நியு இந்தியா என்னும் ஆங்கில பத்திரத்தின் நூலாசிரியரான, அக்காலம் சென்னை ஸிவில் ஸர்விஸிலிருந்த கார்ட்டன் துரையவர்கள் இவ்வுபந்யாசத்தைச் சென்னை மாணாக்கர்களேயன்றி ஆங்கில தேசத்தில் இருக்கும் அரிய மாணாக்கர்களும் கவனிக்கத்தக்கதெனச் சிலாகித்தனர்.

அரங்கநாதர் சிறிது காலம் இவ்வாறு தமது போதனா சாமர்த்தியத்தாலும், அற்புத சமத்காரத்தாலும், மாணாக்கர்களையும் நண்பர்களையும் பயன்படும்படி சந்தோஷிப்பித்துவந்தனர். ஆனால் இருந்தாற்போல் இருந்து ஜ்வரநோய் கண்டு நான்கு நாட்கள் படுக்கையிலிருந்து 1893-ம் வரு இவ்வுலகை நீத்து, இந்திய உலகையே துன்பத்தில் ஆழ்த்துவரென்று யாரும் நினைக்கவில்லை. உண்மையில் அவரது வியோகம் தேச நஷ்டமாகவே பாவிக்கப்பட்டது. அந்தியகாலம் வரையிலும் சென்னை ராஜாங்க வித்யாசாலையில் போதகாசிரிய நிலைமையிலிருந்து உழைத்து, அதனுடைய மந்திராலோசனை சபையின் இன்றியமையாச் சூழ்ச்சித் தலைவராகவிருந்து, கணிதம், தர்க்கசாஸ்திரம், நீதி, தத்வம், சரித்திரம் இவற்றின் போதனாசிரியராக இருந்து, அவர் செய்த உதவியை நீங்கின அக்கலாசாலை பன்மடங்கு துன்பமுறினும், அதைக்காட்டிலும் பொதுஜனங்கள் அவரது மரணத்தால் தாங்க முடியாத துயரமுற்றனர்.

அரங்கநாதர் இக்காலத்தவர்போல் ஆங்கிலத்தை மாத்திரம் கற்றுத் தாய்மொழியை அலக்ஷியம் செய்தவரல்லர். சிறுநாள் முதல் தன் தந்தை ஊட்டிய தெய்வத் தமிழின் மணம் ஊற்று ஊற அவருக்குத் தமிழில் சுவை மிகுந்துகொண்டே யிருந்தது. பண்டிதர்களையும் வெருட்டும்படியாகத் தமிழைக் கற்று அதன் சாரத்தைக் கிரகித்து, அதில் கவிபாடும் திறமை அவர்க்குண்டு. கச்சிக் கலம்பகமென்று



தமிழில் அவர் ஒரு காவியமியற்றியுள்ளார். இப்பிரபந்தம் அதிநயமாக எழுதப்பட்டிருப்பதுடன் முதலியார் அவர்களது ஆழ்ந்த தமிழ்ஞானத்தையும் விளக்கும். அவருக்கு ஆங்கிலத்தில் முக்கியமாக ஷேக்ஸ்பியர் கவியிடமே அத்தியந்த அன்பு. மற்று வாசக நூலாசிரியர்களில், லெகி, லெஸ்லி ஸ்டீபன், ஜான் மார்லி, ரஸ்கின் இவர்களே அவருக்குப் பிடித்தவர்கள்.

ஆசார விஷயங்களில் அவர் அதிகமாகத் தமது அபிப்பிராயத்தை வெளியிடாவிடினும் லோகவிருத்தியைத்தரக்கூடிய இயக்கங்களைத் தடுக்கக்கூடாதென்னும் திடமான அபிப்பிராயம் கொண்டவர். இவருக்குச் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜாக இருந்த காலஞ்சென்ற, ஸர் டி. முத்துசாமி ஐயரிடம் அளவுகடந்த அன்பு உண்டு; தற்கால இந்தியா பெற்றெடுத்த புத்திவந்தரில் உத்தமர் அவரே என்று அவரை அடிக்கடி புகழ்ந்து பாராட்டுவர். ஐயர் அவர்களுக்கும் முதலியாரவர்களிடம் அத்தியந்த வாஞ்சை. 1894-ம் வரு முதலியார் அவர்களது ஞாபகச்சின்ன விஷயமாக நடந்தசபையில் ஐயர் அவர்கள் சொல்லியதை இங்கு எழுதுவது இழுக்காகாது:—

"பலநாள் பழக்கமும், நெருங்கிய நேசமும், அவரது முன்வரும் தன்மையைப் என் மனத்தில் ஊன்றின. பொது விஷயத்தில் அவர் கொண்டிருந்த பக்தியும் சிரத்தையும். போதனா விஷயத்தில் அவர் காட்டிய ஊக்கமும், பொதுஜன விருத்தி விஷயயத்தில் அவர் எடுத்துக்கொண்ட சிரமமும் அளவிலடங்கா. அவர் முயற்சியும் மெய் வருத்தமும் அதிசயிக்கத் தக்கன. அவர் ஊக்கம் முழுதும் கடமையே நாடின. கடமைக்கு அடுத்தபடியாகப் படிப்பையே அவர் மதித்தார். அவர் கடைசி வரையிலும் மாணாக்க நிலைமையிலிருப்பதாகத் தன்னைப் பாவித்தவர். கரையோரம் உலாவும்பொழுது என்னை அவர் அந்நோக்கை வீணுக்குவதைப்பற்றி அடிக்கடி கண்டித்தது இன்னும் என் ஞாபகத்தைவிட்டொழியவில்லை."

மேற்கூறிய மொழிகள் அரங்கநாதருக்குப் படிப்பிலிருந்த ஆவலைக் காட்டும். அவர்க்குத் தமிழில் அதிகமாகப் பிடித்தது கம்பராமாயணம். அதன் பாடல்களை எடுத்து உபந்யாஸிப்பதென்றால் அவருக்கு வெகு சந்தோஷம். அக்காலம் பள்ளிப்பிள்ளைகள் தமிழைக் கவனியாததைப்பற்றி வெகுவாக உள்ளமழிந்தார். அந்தோ! இந்நாளில் இருந்தால் என் செய்வரோ?



## தற்கால ஸ்திரீகளின் அனுபவங்கள்

## EXPERIENCES OF MODERN WOMEN

[ஸ்ரீமதி சுந்தரம்மாள்.]

(190-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பன்னிரண்டு வருஷகாலமும் நாங்கள் உயிரும் உடலும்போலும், நகமும் சதையும்போலும், ஒருவரையொருவர் பிரியாமல் நேசமாயிருந்தோம். பிரஸவிக்க தகப்பனார் வீட்டிற்கு என்னை அனுப்பினார்கள். என் மைத்துனர்களுக்கு அஸூயை தோன்றி எனக்குப் பிள்ளை பிறந்தால் தங்கள் ஆஸ்திகள் குறைந்துபோய்விடுமென்றெண்ணி, என் புருஷரிடமும் மாமியாரிடமும் அபவாதமான வார்த்தைகள் சொல்லி வெறுக்கச்செய்துவிட்டார்கள். என் புருஷரும் அவ்வார்த்தைகளை நம்பிக் கவனமில்லாமலிருந்தார்.

என் தகப்பனார் வீட்டிற்கு வந்து கொஞ்சநாள்களில் முதல் பெண் பிறந்தது. ஆறுமாதம் தாயாரிடமிருந்தேன். என்னைப் பார்க்க ஒருவரும் வரவில்லை. ஏழாமாதம் குழந்தை இரண்டு நாள் ஜ்வரத்தி லிறந்துபோயிற்று. ஒரு வருஷம்கழித்துப் புருஷன்வீட்டிலிருந்து ஒரு வேலைக்காரி கடிதத்துடன் கூப்பிடவந்தாள். அக்கடிதம் என் மாமியாருடைய சொல்படி தாயாருக்கு எழுதப்பட்டிருந்தது. அவ்வுத்தரவின் பிரகாரம் நான் திரும்பிப்போனேன்.

என்னுடன் முன்பு பழகின மனிதர்களெல்லாம் வேறு மாதிரியா யிருந்ததுடன், என்னையும் வித்தியாஸமாய் நடத்தினார்கள். தேவியின் அனுக்கிரஹம் ஒரு நாளுண்டாகுமென்று எண்ணிப் பொறுமையாய்க் காலம் தள்ளும் நாளில், மறுபடி மூன்றுவருஷம் கழித்து கர்ப்பமானேன். இச்சமயம் ஜ்வரமும் வந்து என்னை வருத்தவே, ஒருவரும் என்னைத் தேடவில்லை. எத்தனைநாளோ ஆஹாரமன்னியில் பட்டினியாய் என்னறையிலிருந்திருக்கிறேன். இச்சமாசாரம் வேலைக்காரர்கள் மூலமாய் என் தகப்பனாருக்கெட்டவே, என் ஸகோதரனைப் பலதட்வை அனுப்பினார். கொஞ்சம் எழுந்திருக்கச் சக்திவந்ததும், மாமியார் புருஷன் உத்தரவின்பேரில் பிறந்தவீட்டிற்குப்போனேன். அங்கு சிகிச்சைசெய்தார்கள். நாலாவது மாதம் என் குமாரன் பிறந்தான். அவன் சிரஞ்சீவியாயிருக்கட்டும். என் தாயாருக்குப் பேரன்

பாசத்தினா விழப்பட்டது. என் பர்த்தா, ரவி பிறந்தது முதல் பார்க்கவேயில்லை. நான்போய் சிசுருஷை செய்துகொண்டிருக்கும் காலத்தில் கூட, தன்குமாரன் ரவியைப்பற்றி யாதொன்றும் கேட்கவுமில்லை. நானும் அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கவுமில்லை. ரவியும் வந்து பிதாவைப் பார்க்கப் பயப்பட்டான். என் புருஷர் எழுந்து நடமாட ஆரம்பித்த பிறகு பகலில் வேலைக்காரியுடன் போய், மாதமொருமுறை ரவியைப் பார்த்துவிட்டு வருவேன். நன்றாய்ப் படித்துக்கொண்டிருந்தான். புருஷருக்கு ஜ்வரம் மாதக்கணக்கில் சௌக்கியமான பொழுதிலும், வேறு வேறு சில்லரை வியாதிகள் வந்து தொந்தரவு செய்துகொண்டிருந்தன. ஒன்றரை வருஷத்தில் பழைய மனிதரானார். என் பேரிலும் பழைய பிரியம் உண்டாகாமற் போனாலும், வெறுப்பாய் ஒன்றும் சொல்லவில்லை. பதினெட்டு மாத வியாதிச் செலவிற்கு இரண்டாயிரம் ரூபாய் ஆனபடியால் கடனும் உண்டாயிற்று. 'நான் கூடிய சீக்கிரத்தில் கொடுக்கிறேன், உன் நன்றியை மறக்கமாட்டேன்' என்று அவர் சொன்னது நன்றாய் ஞாபகத்திலிருக்கிறது. ஆறுமாத காலமாய்த் தினம் கடிதாசிக்கட்டுகளுடன்கோர்ட்டுக்குப்போய்வருகிறார். வீட்டுச் செலவையும் தானேற்றுக்கொண்டார். ஒரு நாள் நான் அவரைப் பார்த்து, 'என்னைக் காப்பாற்றினால் மாத்திரம் போதாது. ரவியையும் கொஞ்சம் கவனிக்கவேண்டும். இனிமேல் படிப்பிற்குச் செலவு அதிகமாகும். அவன் தாதா இன்றோ நாளையோ வென்றிருக்கிறார். அவர்காலமாய் விட்டால் பென்ஷன் நின்றுபோய்விடும். பிறகு தாயார் பாடு என்னவாகுமோ? ஸகோதரர்கள் கவனிப்பார்களோ மாட்டார்களோ? ஆகையால் நீங்கள்பொறுப்பெடுத்துக்கொள்ள வேண்டியது உங்கள் கடமை' என்று சொன்னேன். பிறகு அவர் உத்தரவின் பேரில் ரவியையும் என் தாயார் வீட்டிலிருந்து கூட்டிக்கொண்டுவந்தேன். விளையாட்டுப்புத்தியுள்ள பிள்ளையாதலால் வந்த மறுவாரம் காற்றாடி விட்டுக்கொண்டிருக்கும் பொழுது, அதன் நூல் அங்குள்ள புஷ்பச் செடியின் மேற்பட்டுச் கொஞ்சம் சேதமாக்கிற்று. அச்செடி என் புருஷருக்குப் பிரியமானவஸ்துவிலொன்று. அவர் பார்த்துவிட்டு ரொம்ப கோபித்துக் கொண்டார். நானும் ரவியும் என்ன மன்றாடிக்கெஞ்சியும் பலனில்லை. வேண்டா மனைவி பேசினால் குற்றமென்கிற ஸங்கதியில் முடிந்தது. எங்களை வீட்டை விட்டுப் போகச்சொல்ல, மறுபடி தாய்வீடுசேர்ந்தோம். ஸகோதரிகளே உங்களுடைய பரோபகாரத்தைக் கேட்டுத் தஞ்சமடைந்தேன். நீங்கள் எனக்கு வழி காட்டினீர்கள். அதில்மாதம் முப்பது ரூபாய்வரும்படிவர, நானும் ரவியும்ஸுகமே காலம் தள்ளிக்கொண்டிருந்தோம். நான் தொழில் செய்வதைக் கேள்வியுற்று என் புருஷர் என்னையும் ரவியையும் தன்னிடம் வரும்படி வருந்திக்கேட்டுக்கொள்ள, நானும் ரவியும் வந்தோம். எங்கள் செலவை ஏற்றுக் கொண்டிருப்பதால் தையல் வரும்படியைக் கடனுக்குக் கொடுத்துக்கொண்டு வருகிறேன். இனி என்ன நடக்குமோ?" என்று பினா சொல்லும் பொழுது மணியும் எட்டு அடித்தது.

உடனே நாங்கள் வீட்டிற்குப் புறப்பட்டோம். 'என்னசுருக்கியும் என்கதையினால் உங்களைச் சிரமப்படுத்தி விட்டேன்' என்று அவள் சொல்லிக் கொண்டே விளக்கை எடுத்து வழிகாட்டிக் கதவை மூடிக்கொண்டாள். சீக்கிரம் வீடுவந்து சேர்ந்தோம். கவனமாய்க் கதை கேட்டதினால், வந்தவுடன் நித்திரையிலாழ்ந்தோம். மறுநாள்காலைமுதலிதுவரை, கனவா நினைவாவென்று ஸந்தேஹம் மாறிமாறித் தோன்றித்தொந்தரவு செய்வதின் பலன் எழுதலாமென்ற எண்ணத்தை உண்டாக்கிற்று.

# எலுமிச்சை சாகுபடி

## CULTIVATION OF LIME

[ஸ்ரீமான் ஜே. ஆர். ரங்கராஜு அவர்கள்.]

**மண்.**—வடிகால் வசதியுள்ளதும், செம்மண் சரள் கண்டமுள்ளதும், ஜலவசதியுள்ளதுமான தோட்டக்கால் நிலமே எலுமிச்சை சாகுபடிக்கு அதிசிலாக்கியமானது. படுகை மண்ணுள்ள நிலங்களிலும், கழிக்கால் நிலங்களிலும் வடிகால் வசதி போதுமானபடி ஏற்படுத்த கூடுமானால் அந்நிலங்களிலும் செடி பயிர் செய்யக்கூடும்.

**உற்பத்தி.**—இம்மரமானது பதியங்கள் போட்டும், ஒட்டுக் கட்டியும், விதைபோட்டும் உண்டாக்கலாம். இம்மூன்றுவகைகளில், எது அதிக சிலாக்யமாய் உண்டாகுமென்பது நிலத்தின் இயல்பையும், பயிரிடுவோரின் திறத்தையும், விற்கும் இடத்தையும் பொருத்ததாயிருக்கிறது. ஏனென்றால் விதை போட்டுக் கண்களுண்டாக்கி,நட்டு ஐந்து வருஷங்களாகிறவரையில் விதையிலிருந்து உற்பத்தி செய்த செடிகள் காய்க்காது. பதியம் போட்ட செடிகளாவது ஒட்டுக்கட்டிய செடிகளாவது வைத்த வருஷத்தில்கூட காய்க்கும். பதியங்களிலிருந்து எடுத்த கண்களும், ஒட்டுக்கட்டிய கன்றுகளும் சில வருஷங்கள் காய்த்து அப்பால் செத்துப்போம். ஆனால் விதையிலிருந்து பயிர் செய்த மரங்களோ பதியம் போட்டுண்டாக்கிய மரங்களைவிடக் குறைந்தது இரண்டுபங்கு வருஷங்களாவது ஜீவித்துப் பலன் தரும்.

பதியங்களாவது ஒட்டுகளாவது வியாபாரிகளிடமிருந்து வாங்கி வைத்துவிடலாம். ஏனெனில் அப்பழம் ஒரு வருஷத்தில் நல்லதா அல்லவாவென்று தெரிந்துவிடும். நல்லதல்லாவிட்டால் மாற்றக்கூடும். விதையிலிருந்து உண்டாக்கிய செடிகளோ காய்க்க சுமார் ஐந்து வருஷங்களாகுமாகையால் அதுவரையில் கஷ்டப்பட்டுப் பயிர்செய்து பழங்கள் நல்ல ஜாதியாயில்லாவிட்டால் என் செய்வது? எடுத்து வேறு வைப்பதானால் ஐந்து வருஷங்களின் வேலை வீணாகிறது. எடுக்காவிட்டால் இருக்கும் ஜாதியோடு திருப்தியடைந்திருக்க வேண்டும். ஆகையால் நாமே பழங்களை நேரில் பார்த்து விதை பாவிப் பயிருண்டாக்கி நடுவதுதான் சிலாக்யம். இப்படிச் செய்ய பொறுமையும் திறமையும் அவசியம்; அல்லது அனுபோகமாவது வேண்டும்.

பதியங்களாவது, ஒட்டுகளாவது செடிகள் விற்போரிடம் வாங்கலாம். ஆனால் விதைச் செடிகளோ நமக்கு நம்பிக்கையுள்ளவர்களிடமிருந்தாவது வாங்கவேண்டும்; அல்லது நாமாவது பயிரிடவேண்டும்.

**விதை தேர்ந்தெடுத்தல்.**—நமக்கு நல்ல ஜாதிப் பழமென்று தெரிந்த ஜாதிச் செடியில் இளஞ்செடியாயில்லாமலும் கிழச்செடியாயில்லாமலும் நடுத்தர வயதுடையதாயும் நமக்கு வேண்டிய ஜாதிப் பழமுடையதாயுமுள்ள செடியைத் தெரிந்தெடுத்து அச்செடியிலுள்ள பழத்தை அறுக்காமல், தானாக விழும்படி விட்டு, விழுந்த பழங்களில் பெரிதானதாயும் வளமானதாயும் பொறுக்கி ஓர் கூடையில் வைக்கல்போட்டு தண்ணீர் தெளித்து அதன்மேல் பழங்களை அடுக்கி, அதன்மேலும் வைக்கல் போட்டுத் தண்ணீர் தெளித்து வரவேண்டும். சுமார் 4,5 தினங்களில் பழங்கள் கொளகொளவென்று அழுகினது போலிருக்கும். அப்போது எடுத்துக் கத்தியால் அறுக்காமல் கையால்நசுக்கி எடுத்தால் விதைகளில் ஒன்றுகூடச் சேதப்படாமல் விழும். அப்படி எடுத்த விதைகளில் திரட்சியாயும் வளமாயுமிருக்கும் விதைகளை மட்டும் எடுத்துக்கொண்டு கேவலமானவைகளை எறிந்துவிடவேண்டும்.

அவ்விதைகளின் மேலுள்ள ஈரம் காயுமுன் நன்றாய் மக்கின ஆடுமாடுகளின் சாணமும் மண்ணும் கலந்தமண்ணில் இவ்விதைகளைத் தரை மட்டத்திலிருந்து ஒரு அங்குல ஆழத்திற்குள் ஒரு அங்குல இடைவிட்டும் விதைத்து மூடித் தண்ணீர் விட்டு வரவேண்டும். அகலமாயுள்ள பாட்டம் என்னும் தொட்டிகளில்விடுவது சிலாக்கியம். (மேற்சொன்ன தொட்டிகள் அகப்படாவிட்டால் பூமிமட்டத்திற்கு மேல் அரை அடி உயரமான பாத்திகள் செய்து அதில் நாற்றுப் பாவுவது நலம்.) தண்ணீர் எத்தனை நாளைக் கொருதரம் ஊற்றவேண்டுமென்பது அந்தந்த இடத்தின் சீதோஷ்ண பேதங்களைப் பொருத்திருக்கும். (மண் அதிகமாய்க் காயாமலும், ஈளைப்பற்றும்படி சேராக இருக்காமலும், நிதானமாய்த் தண்ணீர் ஊற்றிவரவேண்டும்.) செடிமுளைத்து மூன்று இலை பிடித்தவுடன் அத்துடன் முளைத்திருக்கும் புல் பூண்டு முதலியவைகளை ஜாக்ரதையாய் எடுத்துவிட்டு, சிறு குச்சியால் வேர் அறுந்துபோகாதபடி ஜாக்ரதையாய்க் கூச்சு களை போட்டுவிடவேண்டும். மண்ணிலுள்ள ஈரம் பூராவாய்க்காய்ந்து செடிகள் சற்று வதங்கும் வரையில்விட்டுத் தண்ணீர் விட வேண்டும். இந்தச் சமயத்தில் செடி கன்றுகளைப் பச்சை நிறமான புழுக்கள் நாசம் செய்யும். ஆகையால்பிரதிகாலையிலும்நாற்றைப்பார்த்துப் புழுக்கள் அணுகினால், அவைகளைக் கையால் எடுத்து நசுக்கிக் கொல்லவேண்டும். மூன்று நான்கு தினங்கள் பார்க்காவிட்டால் ஒரு இலைகூட இல்லாமல் செடி புழுக்கள் செடிகளை நாசஞ்செய்துவிடும். ஆகையால் இப்புழுக்கள் விஷயத்தில் அதிக ஜாக்ரதையாக இருக்கவேண்டும். செடிகள் 5, 6 அடி உயரம் வளரும் வரையில்கூட இப்புழுக்களால் துன்பம் உண்டு.

மேலே சொன்னபடி 15 நாட்களுக் கொருமுறை, களை போட்டுவந்தால் 3 அல்லது 4-மாதக் காலத்தில் 3 அங்குல உயரம் வளரும். அப்போது இன்னும் அதிகமாக நிலம்எருவிட்டுத் தயார்செய்து 4-அங்குலம் இடைவிட்டு செடி கன்றுகளைப் பதியம் போட்டு வெயில் விழாதபடி 1-வாரத்திற்குப் பந்தல் போட்டு வைக்கவேண்டும். ஒரு வாரத்திற்கப்பால் பந்தலை அப்புறப்படுத்தி விடலாம். பதியம்போட்ட பின்னும் புல் பூண்டு முளைக்காமல் களைவெட்டி வரவேண்டும். பதியம்போட்ட எட்டுமாதங்களுக்குள் சுமார் 6-அங்குல உயரம் வளரும். அப்போது கூடைகள் தயார்செய்து ஒவ்வொரு கூடையில் ஒவ்வொரு கன்று வீதம் போட்டுத் தண்ணீர் ஊற்றி வரவேண்டும். ஒரு வருஷம் கூடையிலிருந்த கன்றுகளைத்தான் நடுவது சிலாக்யம். தண்ணீர் ஓடும் கால்களிலும் செடி பதியங்களை நட்டு வளர்த்துப் பின் நடுவதும் உண்டு.

**செடிகள் வைத்தல்.**—செடிகள் வைக்க உத்

தேசித்திருக்கும் நிலத்தை நன்ருய் அலர உழுது தெள்ளு புழுதியாக்கி நிலைத்திற்குத் தக்கபடி 15 அல்லது 20 அடிக்கு ஒரு குழியாக மூன்று அடி ஆழம் மூன்றடி சச்சதுரமுள்ள குழிகளாய்த் தோண்டி ஒரு மாசம் குழியை அலரக் காயவிட வேண்டும். காய்ந்தபின் குழியின் கீழ், நாகதாளி போட்டு மக்கின ஆடுமாடுகளின், சாணி கலந்த மண்ணைத்தள்ளிச் செடிகள் நட்டுத் தண்ணீர் ஊற்ற வேண்டும். செடிகளுக்கு மத்தியில் காற்ருேட்டமில்லாமலிருந்தால்தான் நல்ல மாசுல் கிடைக்கும். இப்படிச் செடிகள் வைத்த ஒரு வருஷம் வரையில் இச்செடிகளின் இடைவெளியில் கத்திரி, வெண்டை, பாகல்முதலிய காய்கறிச்செடிகளையாவது, வாழைச் செடியையாவது பயிரிடலாம். ஒரு வருஷத்திற் கப்பால் இன்னும் ஒரு வருஷம் காய்கறி மட்டும் பயிரிடலாம். வாழைப் பயிரிடலாகாது. (இப்படிச் செய்தால் காய் கறி வாழைக்குப் பாயும் தண்ணீரிலேயே எலுமிச்சை செடியும் வளர்ந்துவரும். அதற்காக வேறு செலவில்லை. ஏறக்குறைய இந்த சமயத்தில் சுமார் 4 வருஷங்களாகும். அப்போது ஊடுபயிர் செய்வதை நிறுத்திவிட்டு நிலத்தை) செடிகள் ஒடியாதபடி ஜாக்ரதையாக உழுதாவது அல்லது நன்ருய்க் கொத்தியாவது விட்டு, பாத்திகளில் புல் பூண்டு இல்லாமல் வைத்திருக்க வேண்டும். மழைகாலம் தீர்ந்தவுடன் ஒடி நிலத்தை உழுதாவது கொத்தியாவது விட்டு, தண்ணீர் இறைக்காமல் சுமார் ஒன்று அல்லது ஒன்றரைமாதம் விட்டு வைக்கவேண்டும். அப்போது சுமார் ஐந்து வருஷங்களாகுமாதலால் செடிகளில் மொக்குகள் கட்டும். உடனே செடியைச் சுற்றிலும் ஒரு அடி விட்டுவிட்டு அப்பாலுள்ளமண்ணைத்தோண்டி அதில் எருப்போட்டு மூடி, பாத்திகட்டி ஈரம் காயாமலும் ஈர பற்ருமலும் இடத்திற்குத் தக்கபடி 2 நாளைக்கொரு தண்ணீரோ மூன்று நாளைக்கொரு தண்ணீரோ இறைத்துவந்தால் புஷ்பங்கள் பிஞ்சு பிடித்துப் பழுக்கும். எலுமிச்சம் செடியிலுள்ள காய்ந்த முனைகளை மட்டும் கத்திரியால் வெட்டிச் சாக்காடு பரவாதபடி செய்துவர வேண்டும்.

### ஒரு ஏக்கர் எலுமிச்சை செடிவைத்து உண்டாக்க செலவு

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஒரு ஏக்கர் நிலம் தெள்ளு புழுதியாக சீமைக் கலப்பை அல்லது நாட்டுக் கலப்பைகொண்டு உழவு உழ | 12 | 0 |
| 100-கெஜக் குழிகள் வெட்ட | 6 | 4 |
| முள் கம்பிகொண்டு ஒரு ஏக்கர் நிலம் சரியானபடி வேலி போட்டுக் கதவு அமைக்க | 100 | 0 |
| 100-எலுமிச்சம்கன்றுகள் நாம் சொன்ன மாதிரி நடும் பக்குவத்திற்குத் தயார் செய்யும்வரை கன்று ஒன்றுக்கு அணு 12 வீதம் | 75 | 0 |
| 50-வண்டி சாணி வாடகை உட்பட வண்டி 1-க்கு ரூ. 1—4—0 வீதம் | 62 | 8 |
| கன்றுவைத்த முதல் வருஷமும் இரண்டாவது வருஷமும் வேறு பயிர் செய்வதில் எலுமிச்சைக்குச் செலவில்லாமற் போவதில், மூன்ருவது வருஷம் கொத்தல் எருவிடல் தண்ணீர் பாய்ச்சல் முதலியன | 144 | 4 |
| மொத்த செலவு | 400 | 0 |

இதுவரையில் ஏற்பட்ட ரூ. 400 செலவையும் முதற் செலவாக வைத்துக்கொள்ள வேண்டும். (Initial outlay.)

அப்பால் வருஷா வருஷம் பின்வரும் சொல்லுகிறபடி செலவு செய்ய வேண்டும்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| கவலை வடிப்பதற்கு 1 ஜதை மாடுகளுக்கு வருஷத்திற் கேற்படும் செலவு | 125 | 0 |
| கவலை அடிக்க மாதம் ஒரு ஆளுக்கு ரூ. 7-ம், ஒரு பையன் தண்ணீர் மாற ரூ. 3-ம் ஆக ஒரு வருஷத்திற்கு | 120 | 0 |
| 50-வண்டி எரு வண்டி சத்தம் உள்பட | 62 | 8 |
| வருஷத்திற்கு 4 தரம் ஒரு ஏக்கர் நிலத்தைக் கொத்த ஏற்படும் கூலி | 60 | 0 |
| ஒரு ஏக்கர் தோட்டக்கால் நிலத்திற்கும் ஒரு கிணற்றிற்கும் குத்தகை | 25 | 0 |
| முதலில் செலவழித்த ரூ. 400-க்கு வட்டி | 24 | 0 |
| எதிர்பாராத செலவு | 33 | 8 |
| வருஷாந்திரச் செலவு | 450 | 0 |

### வரவு.

| | | |
|---|---|---|
| எலுமிச்சம் செடி வருஷத்திற்கு 2-காய்ப்புக் காய்ப்பதால் சராசரி 2 காய்ப்பிற்கும் சேர்ந்து செடி ஒன்றுக்கு 2,000 பழங்கள் வீதம் வைத்துக் கொண்டாலும் 2,00,000 பழங்கள் கொடுக்கும்* 100-பழம் சராசரி 8-அணு வீதம் விற்ருலும் | 1,000 | 0 |
| ஒரு ஏக்கரில் இலாபம் ரூ. | 550 | 0 |

* நாம் 100-எலுமிச்சம் பழம் ரூ. 1-8-0-க்கு விற்று வருகிருேம்.

மேலே சொன்னப்படி சரியானபடி பாடுபட்டு எரு விட்டுத் தண்ணீர் பாய்ச்சிப் பயிரிட்டால் நாம் சொன்ன இலாபத்திற்கு அதிகமாகக் கிடைக்குமல்லாது ஒருகாலும் குறையாது. என் அடுத்த சண்டுசக்கை எலுமிச்சைக்குச் சிறந்த எருவாகிறது. நன்ருய்ப் பயிர்செய்வதின் பயன் அறிய விரும்புவோர் நமது எலுமிச்சம்பழத்தையும் கடைகளில் விற்கும் எலுமிச்சம்பழத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்களுக்கே ஆச்சரிய முண்டாகுமென்பதில் ஆட்சேபனையில்லை.



## தாவர நூல்

### BOTANY

### ஜீவதாவர பேதம்

இப்போது நமக்கு ஒன்று தெரிகிறதல்லவா? சாதாரணமாக உயிரில்லாதவைபோல விளங்கும் அசேதனமாக எண்ணப்படும் மரங்களும் புல் பூண்டுகளும், நமது மயக்கத்தினுல் உயிர் அற்றனவாக நம்மால் எண்ணப் படுகின்றன அல்லவா? ஆனுல் உண்மையில் உயிருள்ளன என்பதை நாம் அறிகிருேம். இப்போது அவை நம்மைப்போல் உசுவாஸ நிச்சுவாஸம்விடும் பிராணிகளென்று எளிதில் காணலாம். மேலும் மனிதனைப்போலவே இளமை, மூப்பு, சாக்காடு, முதலிய மாறுபாடுகளுக்கும் உட்பட்டனவென்றும் காண்போம்.

தாவரங்களின் வளர்ச்சியை நாம் கண்ணுரக்காண்கிருேம். ஒரு தட்டில் ஜலம் நிறப்பிவிட்டு, அகல வாயுள்ள சீசாவில் ஊற்று நீரை நிரப்பி, அதனுள் கொஞ்சம் நீர்ப்பாசியை நுழைத்து, பிறகு அதன் வாயை மூடிய விண்ணமாக உள்காற்றில்லாதிருக்கும்படி கவிழ்த்துக்கொண்டு, தட்டு நீரின்மேல் ஜாக்ரதையாக வைத்து, சீசாவையும் தட்டையுமாக சூரிய வெளிச்சத்தில் வைப்போமானுல், நாம் சில விஷயங்களை அறியலாம். நாம் இப்போது அப்படிச் செய்வோமாக, நாம் என்ன காண்கிருேம்? முதலில் வைத்தபொழுது அந்த சீசாவில் ஏதாவது காற்று இருந்ததா? இல்லை. நாம் வைத்து எவ்வளவு நேரமாயிற்று? சுமார் இரண்டு மணி இருக்கும். இப்போது அந்தச் சீசாவினுள் இருக்கும் பாசியைப் பார்த்தால் நாம் என்ன காண்கிருேம்? சிறுசிறு நீர்க்குமிழ்கள் அதன்மேல் கிளம்பி, வரவரச் சீசாவின் மேல் பாகத்தை அடைவதைப் பார்க்கிருேம்.

இப்போது செய்த விதம் சூர்ய வெளிச்சமில்லாதபோது செய்தால் இவ்விதம் நீர்க்குமிழிகள் கிளம்புவதில்லை. இது ஒரு வேடிக்கையல்லவா? இதன் உண்மை என்னவென்று தெரிகிறதா உங்களுக்கு? சொல்லுகிறேன் கேளுங்கள். ஊற்று நீரில் கரியமிலவாயு என்பது அடங்கியுள்ளது. இந்தக் கரியமிலவாயுவில் கரியென்னும் பதார்த்தம் அடங்கியிருக்கிறது. கரி என்ன வென்பது நீங்கள் அறிந்திராதிருப்பீர்களா? நம் வீட்டில் விறகு எரித்த பிறகு நாம் பெறுகிற கரிதான். இந்தக்கரி தாவரப்பிராணிகளின் வளர்ச்சிக்கு வேண்டிய முக்கியமான ஆகாரம். ஆனுல் கரியைக்கொண்டிருக்கின்ற வஸ்துக்களிலிருந்து அதைப் பிரித்து உட்கொள்ளும் சக்தி, தாவரங்களுக்குச் சூரிய வெப்பம் இருக்கும்போது தான் உண்டு. இன்னுமொரு விஷயம். கரியமிலவாயுவென்பது கரியென்னும் பதார்த்தமும் பிராணவாயு என்னும் காற்றும் ஒக்கக்கலந்த கூட்டுப்பொருளாகும். ஆகவே நீர்ப் பாசியை முன்னே சொன்னபடி வெய்யிலில் வைத்தபொழுது, ஊற்று நீருக்குள்ளிருந்த கரியமிலவாயுவைப் பிரித்துத் தனக்கு வேண்டிய கரியை உட்கொண்டு, பிராணவாயுவைத் தனியே விட்டுவிடுகிறது. இப்பொழுது தெரிகிறதல்லவா உங்களுக்கு? அந்த விடுவிக்கப்பட்ட காற்றுத்தான், சிறுசிறு நீர்க்குமிழிகளாகப் பாசி மேலிருந்து கிளம்பி, அந்தச் சீசாவின் மேற்புரத்தில் சேர்ந்தது. இதனுல் நாம் தாவரங்களும் வெளிப்புறத்திலிருந்து தனக்கு வேண்டிய வஸ்துக்களைக் கிரஹித்துத் தனக்கு வேண்டாதவற்றை வெளிவிட்டு விடுகிறதென்று அறிகிருேம். உண்மையில் சூரிய வெளிச்சத்தில் தாவரங்கள் காற்றை உட்கொண்டு தமக்கு வேண்டிய கரிபதார்த்தத்தையுட்கொண்டு பிராணவாயுவை வெளியிடுகின்றன.

மொத்தத்தில் தாவரங்களும் நம்மைப்போல காற்றை உட்கொண்டு, காற்றை வெளிவிடுகின்றன. ஆனுல் பேதம் இதுதான். நாம் பிராணவாயுவை உட்கொண்டு, அவ்வாயு நம் உடலிலுள்ள கரியுடன் கலந்து வெப்பமுண்டாக்கி, கரியமிலவாயுவாக வெளிவருகிறது. தாவரங்கள் கரியமிலவாயுவை உட்கொண்டு, கரியைத் தமது வளர்ச்சிக்காக ஏற்று, பிராணவாயுவை வெளியிடுகின்றன. இவ்வாறு அவை சூரியப் பிரகாசம் இருக்கும்பொழுது தான் செய்ய முடியும். ஆனுல் நாம் எப்பொழுதும் சுவாசித்துக்கொண்டேயிருக்கிருேம்.

இதிலும் ஒரு விசேஷம் கண்டீர்களா? மனிதன் பிராணவாயுவைத்தான் உட்கொள்ளுகிருன்; கரியமிலவாயுவை உட்கொள்வானுனல் அவனுயிருக்கு வேறு விஷம் வேண்டுவதில்லை. கடவுளுடைய மகிமை இங்கு கவனிக்கத்தக்கது. அவர் தாவரங்களைப் பிராண வாயுவை வெளியிட்டு மனிதனுக்கு உபயோகமாகும் படியாகவும், மனிதன் முதற்கொண்ட ஜீவஜந்துக்களைக் கரியமிலவாயுவை வெளியிட்டுத் தாவரங்களுக்கு உபயோகமாகும்படி செய்துள்ளார். அவர்க்கு நாம் எவ்வளவு நன்றியறிதலோடிருக்கவேண்டுமென்பதை அறிகி

1915-ம் ஃபிப்ரவரி மீ சென்னை அக்ரிகல்சர் தோட்டத்தில் நடந்த பொருட்காக்ஷியில் நமது எலுமிச்சம்பழம் போட்டிக்காக வைக்கப்பட்டிருந்தது. அதைப் பரிசோதிக்க வந்த துரைகளில் ஒருவர், நமது எலுமிச்சம்பழம் இருந்த பருமனையும், அதிலிருந்து கிடைத்த சத்தையும் பார்த்த உடன் இது எலுமிச்சம்பழமே யல்லவென்றும் இது வேறே ஓர் அபூர்வ ஜாதிப்பழமென்றும் அறியாமையால் சொன்னுர். ஆகையால் சரியானபடி செய் நேர்த்தி செய்து பயிர்செய்தால் கண்டோர் ஆச்சரியப்படும்படி நாம் செய்வதோடு தக்க லாபமும் பெறலாம். நமது எலுமிச்சந் தோப்பிலிருந்து வருடத்திற்குச் சுமார் 1,500 ரூபாய் கிடைக்கிறது. சந்தேகப்படுவோர் பழக்காலத்தில் வந்துபார்த்தால் தான் அவர்களுக்கு உண்மை விளங்கும்.

தீர்களா? 'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமு மாற்ற லரிது' என்ற திருவள்ளுவர் வாக்கைக் கவனியுங்கள்.

நிற்க, தாவரங்களுக்கு முக்கியமாக வேண்டியவை சூரியவெப்பமும் நல்லகாற்றுமென்பது வெளிப்படையாகும். நமக்கும் தாவரங்களுக்கும் அவ்விரண்டும் இன்றியமையாதன.

இனி, நாம் வேறு சில விஷயங்களைக் கவனிப்போம். தாவரங்கள் நம்மைப்போல் உயிருள்ளவைகள் என்பதை அறிந்தோம். நமது உடம்பு பெரிய இயந்திரம்போல்வேலைசெய்து நமது ஜீவனை வளரும் படி செய்கிறதல்லவா? அந்த மாதிரி தாவரங்கள் வளருவதற்கு என்னென்ன வழிகளிருக்கின்றன? நாம் கையினுதவியால் உண்பதுபோல அவை தமக்குவேண்டியவற்றை எதனுல் சேகரித்து உட்கொள்கின்றன? அவற்றின் அமைப்பு என்ன? இவை முதலியவைகளைப் பற்றி உமக்கு அறிய ஆவலிருக்கும். சொல்லுகிறேன் கேளுங்கள். தாவரங்களின் உருப்புகள் பின்வருமாறு:—

1. வேர்.—இது அவற்றிற்கு ஊன்றுகோலாயிருந்து பூமிக்குள் ஓடி, உணவைச் சேகரித்துத் தரும்.

2. அடிமரம்.—இதிலிருந்து தான் கிளைகள் புறப்பட்டு இலைகளைத் தாங்கிவிளங்குகின்றன.

3. கிளைகள்.—இவை இலைகளைத் தாங்கி தாவரங்களின் வளர்ச்சிக்கு வேண்டிய உதவிபுரிகின்றன.

4. இலைகள்.—இவை, சூரியப் பிரகாசத்தின் தமது பசுமை வர்ணத்தால், காற்றிலுள்ள கரியைப் பிரித்துத் தாய் மரத்திற்குச் சேகரித்துக் கொடுத்து, விடுவிக்கட்படும் பிராணவாயுவை வெளிவிடுகின்றன.

5, பூக்கள்.—இவைகள்பூத்துமுதிர்ந்து, இதழ்கள் உலர்ந்துதிர்ந்ததும் தாய்மரத்தின் விதைகளை, விருத்திசெய்து கொடுக்கின்றன.

6. விதைகள்.—இவை தாய்மர இனத்தைப் பிறப்பிக்கும் முளைகளையுடையன; இனவிருத்தியின் மூலங்களாயிருப்பன.

இவ்வாறும் தாவரங்களின் கோசங்களாகும். இவற்றின் காரியா காரியங்களைப் பின் கவனிப்போம்.

அவற்றைக் கவனிப்பதன் முன், தாவரங்களை எவ்வாறு சாஸ்திர நிபுணர்கள் பிரிக்கிறுரென்பதைச் சற்றுக்கேளுங்கள். சிலபேர் அவற்றின் ஆயுள்பரியந்தத்தைக் கணக்கிட்டுப் பின் வருமாறு வகுப்பார்கள்:—

1. வத்ஸராதிகள்.—இவை ஒரு வருஷத்திற்குமேல் இரா. உதாரணம் அவரை, கடுகு, நெல் முதலிய தானியங்கள்.

2. த்வை வத்ஸராதிகள்.—இவை இரண்டு வருஷங்களுக்கு மேல் இரா. முதல் வருஷத்தில் இவை பூக்கா; பிஞ்சும் விடா; இரண்டாவது வருஷத்தில் பூத்து, விதை முதிர்ந்ததும் வதங்கிவிடும். உதாரணம்: வெங்காயம், உள்ளிப்பூண்டு, முள்ளங்கி முதலியன.

3. பல வத்ஸராதிகள்:—பல வருஷம் தழைத்தோங்கும் தாவரங்களெல்லாம் இந்த ஜாதியைச் சேர்ந்தன. பருவா பருவங்களில் தழைத்து, பூத்து, காய்த்து இதேமாதிரியாக வருஷா வருஷமும் விளங்கிவரும் மரங்களும் இந்த ஜாதியைச்சேர்ந்தன. இவை இலையுதிர்காலங்களில் வெறுங்கொம்புகளாக நின்று, அடிவேரில் உணவைச் சேகரித்துவைக்கும். மழைக்காலஞ்சென்று வசந்தகாலம் வரும்பொழுது வேரிலிருக்கும் உணவின் ஆதரவினுல் மேல்பாகங்கள் தழைத்துத் தளிர்க்கும். வத்ஸராதிகளும், த்வை வத்ஸராதிகளும் ஒரே ஒரு முறை பூத்து, காய்த்து அத்துடன் அழியும். பல வத்ஸராதிகள் அவ்வாறின்றி, ஒவ்வொருவருஷத்திலும் அவ்வப்பருவங்களில் தழைத்து பூத்து, காய்த்து, செழித்துப் பலவருஷங்கள் உயிருடன் உலார்ந்து நீடித்திருக்கும்.

தாவரங்களை வேறு விதமாகவும் பிரிப்பார்கள். புல், பூண்டு, கொடி, செடி, மரம் என்பன அவை.

1. புல்பூண்டு.—இவை பூமியோடு இருந்து என்றும் பசுமையாய் விளங்குவன; மெல்லிய கிளைகளும் மிருதுவான பாகங்களு முடையன.

2. கொடி.—இவையும் பூண்டுகளைப்போல் இருப்பனவே. ஆனுல் வேறு உரமானவஸ்துக்களைச் சுற்றிப் படர்ந்து ஏறும்.

3. செடி.—இவை பூமியிலிருந்து அதிக உயரம் வளரா. இவற்றின் அடிப்பாகம் சிறியதாகவேயிருக்கும்; எத்தனை வருஷங்களானுலும் பெருக்கா. அறியத்தக்கது.

4. மரங்கள்.—இவைதாவரங்களுள் பெரியவை கனத்த அடிப்பாகமும், பலத்த கிளைகளும், அடர்ந்த தழைகளும் பொருந்திவிளங்கும் பல வத்ஸராதிகள்.

புல் பூண்டு கொடிசெடி இவையெல்லாம் வத்ஸராதிகள், த்வை வத்ஸராதிகள், பல வத்ஸராதிகள் எனவும் பிரிக்கப்படும். அவற்றை எல்லாம் விரித்து இப்பொழுது உரைப்பது அனுவசியம்.


போதினிச் சந்தாதார்க்குக் குறைந்த விலை

| | | |
|---|---|---|
| ஸ்ரீமத் பாகவத விணுவிடை ... | 2 | 0 |
| சங்கமிதி அல்லது செல்வராஜன் | 0 | 12 |
| சற்குண சந்திரன் ... ... | 0 | 10 |
| மரகதவல்லி ... ... ... | 0 | 10 |
| முரளீதரன் ... ... ... | 0 | 10 |
| ஐரோப்பிய மஹா யுத்தம் ... | 1 | 4 |
| இயற்கை அற்புதங்கள் ... ... | 0 | 8 |
| பஞ்சாதந்திரம் ... ... ... | 0 | 10 |
| ஸ்ரீ ராமாயண ஸாரம் ... ... | 1 | 0 |
| லோபி (ஓர் நாடகம்.) ... ... | 0 | 6 |
| புலவர் சரித்திரத்திரட்டு ... | 0 | 8 |

மானேஜர் "விவேகபோதினி," மயிலாப்பூர்.




# மாதவிகங்கணம்

[ஸ்ரீமான் வெ. கா. ராமநாதன், பீ.ஏ., பி.எல்.]

(204-ம் பக்கத் தொடர்ச்சி.)

## அத்யாயம்—5.

### புண்ய க்ஷேத்ரம்;

'பிள்ளைமனம் பித்து, பெற்றமனம் கல்லு.'

யமுனு நதீ தீரத்திலுள்ள மதுராபுரி என்பது ஹிந்துக்களால் முக்தி தரும் நகரங்களெனக் கருதப்படும் காசி, காஞ்சி, அவந்தியாதி ஸப்த நகரங்களுள் ஒன்றுகும். அந்நகரத்தின் அமைப்பும் அதன் வனப்பும் ப்ராபல்யமான அதன் பூர்விக சரித்ரமும் உலகத்தில் வெகு ஸ்வல்ப நகரங்களுக்கே உண்டெனச் சொல்லலாம். ஆதிகாலந்தொட்டு அது மஹா சிறப்புற்று விளங்கிவருகின்றது. சுமார் பதினன்கு நூற்றுண்டுகளுக்கு முன்னர், இப்பரதகண்ட தரிசனுர்த்தம் வந்தவர்களாகிய சீனயாத்ரிகர்கள் இப்பட்டணத்தைப்பற்றி ப்ரபலமாய்ப் புகழ்ந்திருக்கின்றனர். பூர்வகாலத்தில் இந்நகர் அதன் வித்யாதானத்துக்கும் பண்டித சிரோமணிகளுக்கும் பேர்போனது. இன்றைக்கும் வட இந்தியாவில் யாத்ரைசெய்யும் யாத்ரிகர்கள் ஸ்ரீக்ருஷ்ண பகவான் அவதார ஸ்தலமென எண்ணப்படும் மதுராபுரியைத் தர்சிக்கத் தவறுவதில்லை. ஸ்ரீக்ருஷ்ண பகவானுடைய திவ்ய சரித்ரத்தைக் கருணம்ருதமாய்க் கேட்டு அவர் செய்த லீலைகளை அத்யந்த பக்தியுடன் போற்றும் ஹிந்துக்கள் அவர் நாமதேயத்தைக் கேட்டமாத்ரத்தில் மெய்ம்மறந்து தம் மனதை மதுராபுரியின்மீது செலுத்துகின்றனர்.

ஸர்வமத ஸமரஸக் கொள்கை அதிகமாய் அவலம்பிக்கப் பெறும் ஹிந்துமதமெனும் வ்ருக்ஷத்தில் அடிக்கடி சிறு சிறு நூதன மதக் கிளைகள் பல உற்பத்தியாகின்றன. அவ்வாறு ஜனித்த கிளை மதங்களுள் அதிக நாள் ஜீவித்திருப்பதும் ஏறக்குறைய ஹிந்து மதத்தினரெனக் கூறப்படும் அனைவராலும் பக்திபூர்வமாய்ப் பின்பற்றப்படுவதும் இந்த க்ருஷ்ணர் மதம் அல்லது வைஷ்ணவ மதம் என்பது தான். பூர்வகாலத்தில் ஹிந்து ஸாஹித்ய பூஷணங்களாகிய காளிதாஸர், பாரவி என்பவரிருவரும் சிவபெருமானுடைய வரப்ரஸாதம் பெற்றவர்கள். காஷ்மீரம் முதல் ஒரிஸ்ஸா வரையில் காணப்படும் ப்ரஹ்மாண்டமான புராதன தேவாலயங்களில் சிவபெருமானைத் தான் ஜனங்கள் இன்னும் பூஜித்து வருகின்றுர்கள். சிவபெருமானேதான் இன்றைக்கும் காசிநகரிலும் த்வாரகாபுரியிலும் வழிபடுங் கடவுள். மொத்தத்தில் பல வகுப்பினர்கள் இன்னும் அவரைத்தான் பூஜித்துவருகிறுர்கள். ஹிந்துக்களுள் மேல்ஜாதியெனப் படுவோருள் பலர், சைவ மதத்தினர்களாவர். ஆனுல் பாமர ஜனங்கள் அனைவரும் க்ருஷ்ணரைத்தான் கண்கண்ட தெய்வமாகக்கொண்டாடுகிறுர்கள். சென்ற ஆயிரம் ஆண்டுகளுக்குள் இந்த க்ருஷ்ணமதம் பரதகண்டமுழுவதும் வெகு தீவிரமாய்ப் பரவலாயிற்று. தற்காலம் க்ருஷ்ணபகவானைப் போற்றுத ஹிந்துவே கிடையாதெனச் சொன்னுலும் சொல்லலாம்.

மானிட ஜாதி அவலம்பிக்கும் பல்வேறு மதங்களைப் பரிசீலனை செய்யும் மஹாபுருஷர்கள் அனைவரும் இந்த்ய சரித்ர ஆரம்ப காலந் தொடங்கி இப்ப்ரதகண்டத்தில் இவ்வாறுக என்றைக்கும் இரண்டு மதங்கள் பின்பற்றப்பட்டுவருவதை எளிதில் உணரலாம். இன்னும் ஸரியாய்ப் பரிசீலனை செய்யப்படுமானுல் இவ்வித மதத்வயம் இப்ப்ரத கண்டத்தில் மாத்ரமேயன்றி இதரநாடுகளிலும் அவலம்பிக்கப்படுவதைக் காணக்கூடும். ப்ராசீன பாரத வர்ஷத்தில் வேதமந்த்ரங்களும், எக்யங்களும் ஆர்யர்களெனப்படும் மேல்வர்ணத்தாருக்கே உரியவாயிருந்தன. அம்மதம் பாமரஜனங்களுக்குக் கிட்டாமையினுல் புத்தர் முதலிய புண்ய புருஷர்கள் அவதரித்துப் பாமர ஜனங்களுக்கு எளிதில் பொருள்படக்கூடிய நூதன மதபோதனைகள் செய்து வந்தனர். பௌத்தாதி மஹாத்மாக்களின் அவதார காலத்துக்குப் பின்னர், சுமார் ஆயிர வருஷபர்யந்தம், மேல் ஜாதியார்கள் பூர்வ வைதிக கர்மங்களை யனுஸரித்தவர்களாயும் ஸாமாந்ய ஜாதியாரனைவரும் பௌத்தமதத்தினை யவலம்பித்துப் பௌத்தமத உத்ஸவாதிகளில் குதூஹலங் கொள்ளலாயினர். இவ்வாறு வெகு காலம் வரைக்கும் மேல்வர்ணத்தாரும் ஸாமாந்ய ஜனங்களும் ஒற்றுமைப்படாமல் வேறுபட்டிருந்தனர். இம் மதத்வய வேறுபாட்டை யனுஸரித்தே தற்கால ஹிந்துமதமும் ஏற்பட்டுளது. குமரில

பட்டர், சங்கராசார்யர் இம்மஹான்கள் அதிகமும்முரமாய் உபதேசித்த மேல்வர்ணத்தார் மதம் நாளடைவில் சைவமதமாய் விளங்குவதாயிற்று; ஸந்யாஸ ஆசிரமம் கோட்பாடுகளையும் நானாவித உத்ஸவாதிகளையுங் கொண்டு விளங்கிய ஸாமாந்ய ஜனங்களின் மதம் வரவர ஸ்ரீராமர், ஸ்ரீக்ருஷ்ணபகவான் முதலிய அவதாரங்களைத் தெய்வமாகக்கொண்டு வைஷ்ணவ மதமாய்த் தழைத் தோங்குவதாயிற்று. இவ்வாறாகப் பௌத்தமதம் காலக்ரமத்தில் வைஷ்ணவ மதத்தில் ஐக்யமுற்று ஹிந்துஸ்தானத்தினின்றும் மறைவதாயிற்று. ஆயிரம் ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்குமுன் நடந்த ஹிந்து பௌத்த ஸம்வாதம் மத்யகாலத்து எண்ணிறந்த புராணாதிகளில் சைவ வைஷ்ணவ விவாதமாய் மாறியது.

கற்றறிந்த வித்வத் சிரோமணிகளுக்கே பொருள்படும் தத்வார்த்த நுட்பங்களுக்கும், அவ்வித தத்வசாஸ்த்ர ஞானமிராத பாமர ஜனங்களுடைய நம்பிக்கைகளுக்கும் எவ்வளவோ வித்யாஸமுண்டு. இவ்வித வித்யாஸம் மானிட ஸ்வபாவத்திலேயே ஆழ வேரூன்றி யிருக்கிறது. நிர்மலமான சைவமதஸித்தாந்தத்தைக் கவனிப்போமாகில் அது நிர்விகற்ப சாஸனங்களால் இப்ரபஞ்சத்தை இயக்கும் நிர்க்குண ப்ரஹ்மத்தின் மதமாகும்; வைஷ்ணவ மதத்தை ஆராய்வோமாகில் அது ஜீவராசிகளின் மீது அத்யந்த அன்புவைத்து, அவற்றின் ப்ரார்த்தனைகளைச் செவிகொடுத்துக் கேட்டு அவற்றின் குறைகளையும் மனோவருத்தங்களையும் தீர்த்துவைத்து ஆதரவாய்க் காத்துரக்ஷிக்கும் ஸகுண ப்ரஹ்மத்தின் மதமாகும். ப்ராசீன இந்திய ஸ்தோத்ரங்களனைத்தும் சிவபெருமானைக் குறித்துப் பாடப்பட்டன. தற்கால ஹிந்துமத ஸ்தோத்ரங்கள், பாடல்கள், கீர்த்தனங்கள் யாவும் க்ருஷ்ண பகவானையும் அவருடைய பாலலீலைகளையும் புகழ்ந்து பாடுவன. பூர்வத்தில் குமரிலபட்டரும் சங்கராசார்ய ஸ்வாமிகளும் அத்வைத தத்வத்தினைப் போதித்தனர்; பிற்காலத்திய மதாசார்யர்கள், ராமாநுஜர்முதல், கபீர் சைதந்யர் ஈறாக ஸகுண ப்ரஹ்ம உபாஸனையை உபதேசித்து ஜனங்களை ஐக்யமுறச் செய்தனர். வங்காளம், ஹிந்துஸ்தானம், உத்தர இந்தியா, தக்ஷிண ப்ரதேசம் முதலிய ஸர்வ ப்ராந்த்யங்களிலும் ஜனங்கள் மேற்கூறிய மதாசார்யர்களின் போதனையைக் கேட்டு விஷ்ணுவே ஸர்வஜனங்களும் அணுகிப் பூஜிக்கக்கூடிய பரம்பொருளெனத் துணிந்து மதுராபுரியில் மானிடக்குழந்தையாய் அவதாரமெடுத்த ஸ்ரீக்ருஷ்ணபகவானைக் குறித்துத் தத்தம் பாஷையினில் மனம் குளிரப் பாடலாயினர்.

ஸூர்யோதய காலம், வானத்தில் மப்புமந்தார மொன்று மில்லாமல் நிர்மலமாயிருந்தது. அடிவானத்தினின்று அப்போதுதான் மேல்நோக்கிக் கிளம்பும் கதிரவனது செங்கிரணங்களால் வானமெல்லாம் தாமிரவர்ணமாய் ப்ரகாசித்தது. வங்காளத்திலிருந்து படகுகள் வந்து நங்கூரம் போட்டுக் கொண்டிருந்தன. சற்றுக்கெல்லாம் ஸூர்யன் வெளிக்கிளம்பி மதுராபுரியின் மாடகோபுரங்களையும் ஸ்தூபிகளையும் ஜ்வலிக்கச் செய்தது. கோடிக்கணக்கான ஜனங்கள் ஸ்நானஞ் செய்வதற்காக யமுனாநதிக்கு வந்துகொண்டிருந்தனர். சிலர் ஏற்கெனவே நதியில் ஸ்நானஞ் செய்துவிட்டு ஜபதபங்கள் செய்துகொண்டிருந்தனர். ப்ராஹ்மணர்கள் பலர், ஜலத்தில் ஸூர்யமுகமாய் நின்று தமது யக்ஞோபவீதங்களைக் கையில் பிடித்துக்கொண்டு, மூவாயிர ஆண்டுகளாக உச்சரிக்கப்பட்டு வரும் காயத்ரீ மஹாமந்த்ரத்தை உச்சரித்துக்கொண்டு அர்க்ய ப்ரதானஞ் செய்துகொண்டிருந்தனர்.

ஸ்த்ரீகள் தமது முகவாடையைத் தள்ளி ஸூர்யபகவானைப் பார்த்து த்யானஞ் செய்துகொண்டே நதியில் அமிழ்ந்தமிழ்ந்து எழுந்தனர். நாலா திக்குகளிலிருந்தும் யாத்ரிகர்கள் வந்து ஆற்றங்கரையில் திரள்திரளாய்க் கூடியிருந்தனர். அப்போது அப்புண்ய ஸ்தலத்திலுள்ள ஆலயங்களினின்று மணியோசை கேட்கவாரம்பிக்க யாவரும் பரபரவென்று ஸ்நானஞ் செய்தெழுந்து ஜபதபங்களை முடித்துக்கொண்டு ஆலயங்களை நாடிச் செல்லத் தொடங்கினார்கள்.

ஹேமலதையும் அவள் தாயாரும் சைவலினியும் கதிரவன் கிரணங்களால் தேஜோமயமாய் ப்ரகாசிக்கும் அம்மதுராபுரியின் கோபுரங்களையும், ஸ்தூபி, சிகரங்களையும் மாடமாளிகைகளையும் ஆச்சரியத்துடனும் பக்தியுடனும் பார்த்து ப்ரமித்துக்கொண்டிருந்தனர்.



அடிக்கடி ஸ்வப்நத்தில் கண்டுகொண்டிருப்பதும் வாயால் பாடிப்பாடிக் களிப்புற்றுக் கொண்டிருப்பதுமான அந்த க்ருஷ்ணபகவானுடைய ஜன்மபூமியை முதல் முதல் தர்சித்தவுடன் அவர்களுக்குத் தம் பால்யபருவமும் அக்காலத்தில் தாங்கள் பலமுறை கேட்டுச் சிரவணானந்த மடைந்திருக்கும் க்ருஷ்ண லீலாம்ருதமும் நினைவுக்கு வந்தன. அந்தப் பால க்ருஷ்ணன், கோபாலக்ருஷ்ணன், கோபிகா க்ருஷ்ணன், கோவர்த்தனோத்தாரண க்ருஷ்ணனுடைய லீலைகளை நினைத்துக் கொண்டவுடன் அவர்களுடைய முகங்களில் ஒருவித ப்ரகாசமும் ஸந்தோஷமும் உண்டாயிற்று; கண்களினின்று ஆனந்தபாஷ்பஞ் சொரிந்தன; தேகம் புளகாங்கித மெய்தியது; மயிர்க்கூச்சமுண்டாயிற்று; ஸ்துதி செய்யக்கூட நாவெழவில்லை; அவர்களுடைய மனதில் அவர்களையு மறியாமலே ஒருவிதப் பேரானந்தம் குடிகொண்டது. க்ருஷ்ணபகவானையடைந்து அவருடைய பாதாரவிந்தங்களில் ஸேவை செய்துகொண்டிருக்கும் பரமோன்னத பதவியை என்றைக்குப் பெறுவோமென்ற ஏக்கங் கொண்டனர். அப்புண்ய க்ஷேத்ரக் காட்சியைக் கண்டவுடன் எவருக்கும் உள்ளடங்கியிருக்கும் பக்தி வெளிக்கு வருவது ஸஹஜந்தானே. இவ்விதம் மதிமயங்கி உடல்மறந்து நின்றது சற்றுநேரமே. முன்னிலும் பலமாய்க் கோவில் மணிகள் சப்தித்தன. உடனே அவர்கள் மூவரும் நதியிலிறங்கி ஸ்நானஞ் செய்யலாயினர்...

ஸதீஷன் முன்னதாகவே சென்று ஆலயத்தில் அர்ச்சனைக்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து வைத்திருந்தான். ஜபதபங்கள் அனைத்தையும் முடித்துக்கொண்டு இன்னும் வேண்டிய ஸாமான்கள் சிலவற்றையும் வாங்கிக்கொண்டு நால்வரும் ஆலயத்துக்குட் ப்ரவேசித்தனர். அப்போது அபிஷேகம் நடந்து கொண்டிருந்தது. மூலஸ்தானத்தில் பக்தர்கள்—முக்யமாய் ஸ்த்ரீகள்தான்—விசேஷமாய் நிறைந்திருந்தனர். அவர்கள் கொண்டு வந்த பத்ர புஷ்பங்களும், மலர்மாலைகளும் மலைமலையாய்க் குவிந்து கிடந்தன. இதர பூஜா த்ரவ்யங்களும் நிவேதன பண்டங்களும் தட்டு மேல் தட்டாய் வந்துகொண்டிருந்தன. சிலர் பொன்வெள்ளி நாணயங்களால் ஸ்வாமியின் பாதங்களை மறையும்படி செய்துவிட்டனர். அர்ச்சகர் ஸஹஸ்ர நாமார்ச்சனை செய்து கொண்டிருந்தார். தூபதீபங்களின் புகை எங்கும் பரவியது. கடைசியில் அர்ச்சனை நிவேதனங்களெல்லாம் முடிவுபெற்றன. கோயில் மணிகளும் அடித்து ஓய்ந்துவிட்டன. யாத்ரிகர்கள் அனைவரும் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்தனர். அர்ச்சகர் அனைவரையும் ஆசீர்வதித்து ப்ரஸாதங்கள் கொடுத்தனுப்பினார்.

அப்புண்ய ஸ்தலத்தில் எண்ணிறந்த ஆலயங்கள் உண்டு. அவற்றை யொன்றொன்றாய்ப் போய்ப் பார்ப்பதிலேயே காலைப் பொழுதெல்லாம் கழிந்துவிட்டது. வீட்டுக்கு வந்து போஜனம்செய்ய பதினைந்து நாழிகைக்கு மேலாயிற்று. ஸாயங்காலம் அருகாமையிலுள்ள ப்ருந்தாவன க்ஷேத்ரத்தைத் தர்சிக்கச் சென்றனர்.

மதுராபுரி க்ருஷ்ணருடையஜனனஸ்தலம். அவருடைய பாலலீலைகள் யாவும் ப்ருந்தாவனத்தில் நடைபெற்றன. மனுஷ்யனாய்ப் பிறந்து மனுஷருக்குள்ள குற்றங் குறைகள் யாவும் பொருந்திய க்ருஷ்ணர் பால்யத்தில் அதிக துஷ்டத்தனங்கள் செய்தவர். யௌவனத்தில் மனம்போனபடிக்கெல்லாம் வேண்டுமட்டும் ஆட்டம் பாட்டங்களெல்லாம் ஆடித்திரிந்தவர். அவர் செய்த துஷ்டகார்யங்களைப் பற்றியும் ஸாஹஸ வேலைகளைப் பற்றியும் நாம் எத்தனை கதைகள் கேள்விப்படுகிறோம். மாட்டுக் கொட்டிலில் ஜனனமானது; நிஷ்கண்டகனாகிய கம்ஸனுடைய சிசுவதா ஆக்கினையினின்று தப்பிப்பிழைத்தது; ப்ருந்தாவனத்தில் இடையர்கள் வீடுதோறும் நுழைந்து புறப்பட்டுப் பாலையும் வெண்ணெயையும் திருடித் தின்றது; அவர்கள் அவனைப் பிடித்து உரலிலும் மரங்களிலும் கட்டிப்போட்டது; மாடு மேய்த்தது; மாட்டுக்கார பயல்களுடன் கூடி விளையாடியது; அங்கே புல்லாங்குழல் ஊதியது; கோபிகா ஸ்த்ரீகளையெல்லாம் பெண்டு ஆண்டது; காளிங்க மர்த்தனம்; உடன் மலையைத் தூக்கிக் குலுக்கியது; கம்ஸவதம்; மனுஷ்ய ப்ரக்ருதிக்கு அநுகுணமான இவ்வித ஆட்டம் பாட்டங்களைப் பற்றியும் அத்புத வீரச் செயல்களைப் பற்றியும் ப்ரதி க்ராமங்களிலும் புருஷர்

பெண்டீர், பாலர் யாவரும் ப்ரீதியாய்ப் பாடியாடிக் களித்து க்ருஷ்ணலீலாம்ருத ஸாகரத்தில் ஆழ்ந்து மெய்ம்மறந்து போகின்றனர். க்ருஷ்ணரை விஷ்ணுவின் அவதாரமென்று ஒருபுறம் பக்தி செய்து கொண்டிருக்க, இன்னொருபுறம் இதர மனுஷர்களைப்போல் அவர்செய்த தப்புத்தவறுகளையும் பட்ட கஷ்ட நிஷ்டூரங்களையும், அவருடைய மனுஷ்ய ப்ரயத்னங்களையும், அவர் பெற்ற ஜயங்களையுங் கண்டு ஜனங்களெல்லோரும் அவரைத் தம்முளொருவரென அவரிடம் அத்யந்த அன்பும் நேசமும் பாராட்டிவருகின்றனர்.

ஹேமலதை, அவள் தாயார், சைவலினி மூவரும் அநுதினமும் தவறுவல் ப்ருந்தாவனஞ் சென்று க்ருஷ்ணலீலை ஸம்பந்தமான ப்ரதி ஸ்தலங்களையும் தர்சித்துவந்தனர். அவர்களுடன் ப்ரதிதினமும் செல்ல ஸிரீஷனுக்கு அவகாசமில்லை. நரேந்த்ரனைப் பற்றி விசாரிப்பதிலேயே அவன் காலமெல்லாம் ஸரியாயிருந்தது. அதற்காக அடிக்கடி ஆக்ராவுக்குப் போய்வந்துகொண்டிருந்தான்; ஒன்றும் பயன்படவில்லை. 'சக்ரவர்த்தி யவர்கள் அவனுக்கு விசேஷ மர்யாதை செய்தார்கள்; ராஜகார்ய நிமித்தமாய் அவன் மீவார் சென்றிருக்கிறான்' என்று மட்டும் சொன்னார்களே யொழிய அவன் எப்போது திரும்பி வருவானென்ற விஷயம் ஒருவராலும் சொல்லக்கூடவில்லை. ராஜா மான்ஸிங்கு வங்காளம் போய்விட்டார். ஸிரீஷனுக்கு ஆக்ராவில் அவர்மட்டுமன்றி இன்னும் அநேகஹிந்து மஹம்மதிய ப்ரபுக்களின் பரிசயம் ஏற்பட்டிருந்ததால் நரேந்த்ரன் திரும்பி வருமட்டும் எத்தனை தினங்களானாலும் அந்நகரில் தங்கியிருப்பதாய் அவன் நிச்சயித்தான்.

ஆக்ராவில் அவனுக்குப் பரிசயம் ஏற்பட்ட ப்ரபுக்களில் சிலர் ஷெர்ஆப்கனின் சுற்றத்தினர்கள். அவர்களெல்லாம் அவனை அதிக மர்யாதையுடன் வரவேற்றுபசரித்தார்கள். தேவிபுர ஜமீன்தாரரைப்பற்றி ஷெர்ஆப்கன் அவர்களுக்கு முன்னரே கடிதமெழுதியிருந்தான். ஷெர்ஆப்கனின் மனைவி மிஹ்ருந்நிஸாவும் தன் நண்பர்களுக்கு ஹேமலதையின் குணவிசேஷங்களைப்பற்றி அதிகப் புகழ்ச்சியாய் எழுதியிருந்தனள். அந்த உத்யோகஸ்தர்களுடைய ஸ்த்ரீ ஜனங்கள் ஹேமலதையினிடம் அதிக அன்பு பாராட்டினர்; அவர்கள்கூட இருந்து ஆக்ராநகர்க் காட்சிகளனைத்தையும் அவளுக்குக் காண்பித்தனர். ஷெர்ஆப்கன் ஸஹோதரியே அவளை அன்றையதினம் நவ்ரோஸ் பண்டிகைக்கு அழைத்துச் சென்றனள்.

மீவாருக்குச் சென்ற ராஜ தூதர்கள் கார்யம் ஸித்திபெற்றதெனச் செய்தி வந்தது. மீவாருக்கும் ஆக்ராவுக்கும் ஸமாதானம் ஏற்பட்டுவிட்டது. நரேந்த்ரன் சில தினங்களில் வந்துவிடுவானென்று யாவரும் கூறலாயினர். வெகு நாளாய்க் காணாத தன் பாலஸ்நேஹிதனை எப்போது காணப்போகிறோமென்று ஸிரீஷன் மனம் பதைத்தது. ஹேமலதை வாய்விட்டுப் பேசவில்லையானாலும் அவளும் எப்போது நரேந்த்ரனைக் காணப்போகிறோமென்று ஆவலுடன் காத்திருந்தாள். அவளையுமறியாமல் அவள் மனம் ஸந்தோஷத்தால் பொங்கிற்று.

வங்காளம் திரும்பிச் செல்ல ஏற்பாடுகள் ஆய்க்கொண்டிருந்தன. தாயாரும் மகளும் ஒருவரைவிட்டொருவர் பிரியவேண்டிய ஸமயம் நெருங்கியது. ஹேமலதை கெஞ்சினாள்; ப்ரார்த்தித்தாள்; கண்களினின்று ஜலம் வடித்தாள். ஒன்றும் பயன்படவில்லை. அவள் தாயார் கொண்ட வ்ரதம் சிறிதும் மாறவில்லை. தான் என்னதான் ப்ரார்த்தித்தாலும் தன் தாயார் என்னமோ தன் எண்ணத்தை மாற்ற மாட்டாளென்று ஹேமலதை உணர்ந்திருந்த போதிலும் தாயாரைவிட்டுப் போவதென்றால் எளிதில் மனம் ஸஹிக்குமா? நாட்கள் நெருங்கின. ஹேமலதையின் துக்கம் அதிகரித்தது. எவ்வளவோ அடக்கமுயன்றும் முடியாமல் கடைசியில் ஹேமலதை வாய்விட்டு அலறலானாள்.

"அம்மா, அப்பாவும் போய்விட்டார். நீயும் என்னை இப்படி நிர்க்கதியாய் விட்டுப் போகலாமா? உன்னை இங்கே விட்டுவிட்டு நான் எப்படி ஊருக்குச்செல்வேன்? எனக்கு அங்கே துணை யார்? உன்னை விட்டுவிட்டுப் பணமும் பாக்யமும் எனக்கு எதுக்கு?" என்று விம்மியழலானாள் ஹேமலதை.

"குழந்தாய், நீ ஏன் நிர்க்கதியாகிறாய்! ஈச்வரன் உனக்கு ஒரு குறைவும் செய்ய மாட்டார். உன் பர்த்தாவைப் பூர்ண ஹ்ருதயத்துடன் நேசித்து அவர் மனம் கோணாமல் நடந்துகொள். அவருக்கும் உற்ற துணையாய் விளங்கித் தேவிபுர குடும்பத்திலும் 'க்ருஹலக்ஷ்மி' என்னும் பேருக்கேற்ப வீட்டிலனைவரையும் ஸந்தோஷிப்பித்து அவர்களுடைய குறைகளைத் தீர்த்துப் பசியென்று வந்தவர்களுக்கு 'அட்டி' சொல்லாமல் அன்னமிட்டு ரக்ஷித்துவா. உன்கீழ் ஊழியஞ் செய்பவர்களையும் குடிகளையும் கடிந்து பேசாமல் அவர்களைப் பக்ஷமாய் ஆதரித்துவரவேண்டும். இதுதான் கற்புடைய மாதர் லக்ஷணம். புத்ர பௌத்ரர்கள் பெற்றெடுத்துப் பெரியவளான பின்பு அவர்கள்மீது ஸம்ஸார பாரத்தைச் சுமத்தி நீயும் என்னைப்போல் அஹோராத்ரம் பகவத் பஜனைசெய்யும் ஆச்ரமத்தை அநுஸரிக்கலாம். இதுதான் ஸ்த்ரீகளுக்கு நமது ஹிந்து மதபடி விதிக்கப்பட்டுள்ள தர்மம்."

ஹேமலதை துக்கம் இன்னும் ஆறவில்லை. "அம்மா, நாங்கள் அறியாதவர்கள்; உலக அநுபவ மில்லாதவர்கள். உன்னைப் போன்ற பெரியவர்கள் கூட இருந்து எங்களுக்குப் புத்தி சொல்லி வழி காட்டிவருவது அவசியம். எங்கள் கிட்டேயிருந்து தேவிபுர ஸம்ஸ்தான பரிபாலன விஷயமாய் எங்களுக்கு அடிக்கடி புத்திமதி கூறிக்கொண்டிருத்தலாகாதா? எங்களைவிட தேவிபுர விஷயங்களை நீ நன்றாயறிந்தவளன்றோ? அம்மா! நீ செல்வமாய் எடுத்து வளர்த்த நரேந்த்ரன் திரும்பிவந்து வீரநகரத் தலைவனாகிறானே. வீரநகரம் உனக்குப் பிறந்தகமன்றோ? அதையாவது ஞாபகம் வைத்துக்கொண்டு நரேந்த்ரனைப் பார்க்க வரக்கூடாதா? அம்மா! ஆண்டவன் க்ருபையால் உனக்குப் பேரன் பேத்திமார்கள் உண்டானால் அக்குழந்தைகள் உன்மீது விழுந்தெழுந்து விளையாட வேண்டாமா?" என்று ஹேமலதை தாயார் பாதங்களில் விழுந்து கதறினாள்.

ஹேமலதையின் தாயார் கண்களிலும் நீர் ததும்பியது. பலமுறை கண்களைத் துடைத்துக்கொண்டு பேச முயன்றும் அவளுக்கு அடிக்கடித் தொண்டை யடைத்துக்கொண்டது. "குழந்தாய், ஏன் என் மனதை இன்னும் கலக்கிறாய். இவ்வுலகத்தையே நான் மறந்துவிட்டேன். தேவிபுரம் வீரநகரம் எல்லாம் இப்போது எனக்குக் கனவு போலிருக்கிறது. ஏன் என்னை இன்னும் இம்மாயையில் இழுக்க முயல்கின்றாய். நாம் பரிபக்வமடையுங் காலம் வரையில் இம்மண்ணுலகில் ஸம்ஸார பந்தத்தில் ஈடுபட்டு உழலவேண்டுமென்று கடவுள் விதித்திருக்கிறார். வேண்டுமட்டும் இப்பிறவித் துன்பத்தில் கிடந்து உழன்றேன், படாத கஷ்டமெல்லாம் பட்டாய்விட்டது. இனி என் மனம் இப்பந்தத்தினின்றும் விடுபட்டது. ஈசுவரக் காட்சி யெனக்குக் கிடைத்துவிட்டது. இனி எனக்கு க்ருஷ்ண பரமாத்மாவின் அடிகள்தான் சதம். அதுதான் எனக்கு முக்தி. இந்த உடலினின்று நீங்கும் வரைக்கும் அவருடைய இருப்பிடமாகிய இம் மதுராபுரிதான் எனக்கும் இருப்பிடம். வேண்டாம் அழாதே என்கண்மணி, எல்லாம் பகவதாஞ்ஞை. அவருடைய திருவுள்ளப்படி நடக்கிறது."

இதுதான் ஹேமலதைக்குத் தாயார் செய்த உபதேசம். இவ்வுலகம் வெறும் மாயை, பகவானுடைய திருவடிகள்தான் என்றைக்கும் சதமானது என்றெண்ணும் எண்ணிறந்த ஹிந்து மாதர்கள் அடிக்கடி இவ்வாறுதான் தம் வாழ்நாட்களைக் கழிப்பார்கள்.

## ஸ்ரீராமாயண ஸாரம்

இது மிஸ்டர் வீ. சேஷகிரி சாஸ்திரி பீ. ஏ., யால் எழுதப்பெற்றது. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் முதல் ஐந்து காண்டங்களின் கதையை ஸாரமாகக் கொண்டது. எளிய நடையில் இருபாலார்க்கும் உபயோகமாகும்படி இனிய தமிழில், இடை இடையே கற்பனை பொதிந்து விளங்கும்படி எழுதப் பெற்றது. இதில் முதலில் எழுதப்பட்டுள்ள பிரவேசம் என்னும் பாகத்தில் ராமாயண நூலின் ஆதாரம், இயற்கை, மகிமை, படிப்பினை; குண விமர்சனம் முதலிய விஷயங்கள் அழகாய் யாவர் மனத்திலும் பதியும்படியாகக் காட்டப்பட்டுள்ளன. நூலும் செம்பாகுபதத்தில் கதா ஸாரம் தவறாதும் மன உத்ஸாகம் குறையாதும், படிப்போர் ஆவல் தட்டாதும் இயற்றப்பட்டிருப்பதுடன் நன்னடக்கையின் பிரபாவம் நன்கு வெளிவரும்படி வரையப்பட்டிருக்கின்றது. கம்பராமாயணச் செய்யுட்களைத் தலைமகுடமாகக்கொண்ட இப்புத்தகம் அழகிய படங்களுடன் விளக்கப்பட்டு நன்றாக அச்சிடப்பட்டுள்ளது. இதைப் பள்ளிக்கூடங்களில் பலவிதமாயும் உபயோகப் படுத்தலாமென்பது எமது திடமான நம்பிக்கை. கல்வி இலாகா அதிகாரிகள் பாடப் புத்தகங்களில் ஒன்றாக இதைச் செய்வது வெகு சிலாக்கியமாகும். இப்புத்தகத்தின் விலை ரூபா ஒன்றே. சென்னை மயிலாப்பூர் விவேக போதினி ஆபீஸுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும். —சுதேசமித்திரன்.

# புத்த விஜயம்

(212-ம் பக்கத் தொடர்ச்சி.)

இரண்டாம் அங்கம்

ஏழாங்காட்சி

இடம்: அநோம நதிக்கரை

காலம்: வைகறை

பாத்திரங்கள்: கௌதமர், சந்தகர்.

கௌ.—சந்தகா! மனிதனுக்குண்டான புத்திதான் கண்டகத்திற் கிருக்கிறதோ? அது குதிரையா யிருந்தாலும் என் கருத்தை அறிந்திருக்கிறது போலும். இந்த ஆற்றங்கரையண்டை வந்ததும் தானாகவே நின்றுவிட்டது.

சந்.—நமது கண்டகம் எல்லாவற்றையும் போன்றதன்று; மிகவும் கீர்த்திபெற்றதே யன்றி அற்பமானதன்று. இது தங்களுக்குத் தெரிந்த சங்கதியே.

கௌ.—சரி சந்தகா!

சந்.—இக்ஷுவாகு குலதீபமே!

கௌ.—உனது கடமையும் முடிந்தது.

சந்.—ஏது இப்படி உத்தரவு?

கௌ.—நீயும், கண்டகமும், இன்னும் சில வஸ்துக்களும் கபிலவஸ்துபதி சேரவேண்டும்.

சந்.—சாக்கியரேறே! எதற்கு? அடியேனுக்கறிவிக்கவேண்டும்.

கௌ.—என்னுடைய காரியத்திற்கு.

சந்.—தங்களுடைய காரியம் சிம்மாஸனமேறி குடியோம்ப லல்லவோ?

கௌ.—அதற்கு மேலான பதவி.

சந்.—சக்கிரவர்த்தி பதத்திற்கு மேலானதுண்டோ?

கௌ.—உளது. இன்றுதான் கிருதார்த்தனுனேன், உத்க்ருஷ்ட ஜீவியத்தின் ஆரம்பம் இந்நன்றுளோ. இனி யான் நான்காவது ஆச்ரமம்பெறவேண்டும்.

சந்.—அதற்குரிய காலம் இதல்லவே, கிருஹஸ்தாச்சிரமம் முடிவுபெறவில்லையே.

கௌ.—இந்த உலகத்தின் பரிதாபமான கதியை யுற்றபின் எந்த நிலைமையிலிருந்தாலும் உருக்கமுள்ள நெஞ்சம் சும்மாவிராது. தன்னுயிர்க்காபத்தேறும் நுகத்தில் அலங்கோலப்படுகின்ற உலகத்தைக் காப்பாற்ற முயன்றுகொண்டிருக்கும்.

சந்.—துக்கத்தை நீக்கப்போகிற தங்களுடைய நீக்கத்தால் சுத்தோதன வேந்தன் துக்கமதிக மடைவார். தங்களுடைய இல்லாள் எவ்வளவு துக்கத்தை யடைவார்கள்? குடிகளெவ்வளவு துக்கத்தை யடையும்? நானும் தங்களுடைய பிரிவைச் சகிப்பேனு? இவையாவும் நான் சொல்லியாக வேண்டியதல்ல.

கௌ.—சந்தகா! இவர்களுடைய துக்கத்திற்கும் உலகிலுள்ள துக்கத்திற்கும் வேற்றுமையுண்டு; ஒன்று பெரிதல்ல, மற்றொன்று அபாரமானது. ஆதலால் பின்னாலே கூறின துக்கத்தை நீக்கி விட்டபின்பு நீ சொன்னதை நீக்குவேன். இதைத்தவிர வேறு வழியில்லை.

சந்.—நம் நகர்முழுவதும் வியாகூலப்படுமே.

கௌ.—வாஸ்தவம், இராச்சியமுழுவதும் வேண்டுமென்றாலும் வைத்துக்கொள். மற்றொரு புறத்தைப் பார். உலகமுழுவதும் இருக்கிறதே.

சந்.—ஐயோ!

கௌ.—நான் இளவரசாயிருந்து பிறகு இராஜ்யபாரம் வகித்தால் நமது பிரஜைகள் கிலேசமடைய மாட்டார்கள்; யதார்த்தந்தான். ஆனால் உலகம் வருந்தும் இதுவும் நிச்சயந்தான். அப்படியின்றி நான் சந்நியாஸம்பெற்றுத் துக்கம், துக்கநிவாரணம் இவைகளையறிந்து நமது இராச்சியத்தையேயன்றி உலகத்தையும் ஆனந்திக்கப் பண்ணலாம். இதுவும் உண்மைதான். இவைகளிற் சிறந்ததெது கூறுவாய்?

சந்.—நானுவது தங்களைப் பின்பற்றிவாக் கட்டளையிடவேண்டும்.

கௌ.—நீ போய் என் பிதாவிடம் இச்செய்தியைப் பிரஸ்தாபம் பண்ணிவிட்டால் என்னைப்பற்றி வருத்தமடைந்து மனஸ்தாபப்படுவார். அவரிடம் போய் ஆறுதல் கூறுவா ரொருவருமில்லையே. உன்னைவிட்டுப் பிரிந்துபோகச் சிறிது வருத்தந்தான். ஆயினும் நான் கூறிய விஷயம் நடக்கவேண்டும்.

சந்.—தங்களிஷ்டப்படி செய்தியைச் சிரமேற்கொள்ளுகிறேன்.

கௌ.—இக்கண்டசரத்தை அரசனிடம் அளித்து என் கருத்தையும் தெரிவிப்பாய். (அந்த ஆபரணத்தைக் கொடுக்கிறார்.) துலக்கமெய்து. ஆயிரமடங்கு இளவரசினும் மேலான கௌரவத்தைச் சம்பாதித்து வருங்காலம் வரை என்னை மறந்திருக்குமாறு செய். என் கருத்து நிறைவேறுமெனில் உலகம் முழுமையு மென்னுடையதே. ஆகையால், சந்தகா! இந்தச் சர்வசிரேஷ்டமான சங்கதியைத் தெரிவிப்பாய்.

சந்.—என்னமுதே! உம்மையே மனத்தில் வைத்துக் கொண்டிருப்பேன்.

கௌ.—(சந்தகன் கையைப்பிடித்து) உன்னையும் மறக்கமாட்டேன். இருக்கட்டும்; கொஞ்சம் பொறுத்துக்கொள். போய்வருகிறேன்.

(போகிறார்.)



சந்.—(சோகிக்கிறான்.) ஹா! என்னுருயிரே! ஆதித்த வம்ச சிகாமணியே! என்று காண்பேன். எங்கள் இன்பத்திற்காதாரம் நீரல்லவோ? ஐயோ என் செய்வோம். ஆ! தலையைக் களைகிறாரே! இரு வாட்சி முதலிய புஷ்பங்கள் சூடப்பெற்ற அழகிய கூந்தல் கத்தியால் சேதிக்கப்படுகிறதே! இதைப் பார்க்கவும் நேரிட்டதே! ஹா! அந்தோ! துவராடையுடுத் தவனொருவன் கௌதமரை அணுகி வருகிறானே! இனி நான் இக்காட்சியைப் பார்க்கமாட்டேன். (எழுந்துபோகிறான்.)

---

மூன்றும் அங்கம்

முதற்காட்சி

இடம்: பாறையும் மரமும்

காலம்: காலை.

பாத்திரங்கள்: கௌதமர், பிம்பஸாரன், அமாத்தியர்.

1-வது அமாத்தியன்.—இவர் முனியைப்போல் கையிற் பிக்ஷாபாத்திரம் வைத்திருக்கிறார்.

பிம்பஸாரன்—அவரைக் கிட்டி விசாரிப்போம்.

(அருகே செல்லுகிறார்கள்.)

2-வது அமாத்தியன்.—இராஜ ரிஷியே!

பி.—பிக்ஷுவே! உமது லக்ஷணம் அரசர்க்குரியதாயிருக்கிறது. தேசாதிபதியா யல்லவோ நீர் இருக்கவேண்டும். உமக்காக வருத்தப்படுகிறேன்.

கௌ.—வள்ளால்! உனது பிரதாபத்தைக் கேள்வியுற்றிருக்கிறேன். செல்வத்தைச் சேகரிப்பவன் தனவந்தனென்று புகழப்படுகிறான். ஈகைக் குணமுடைமை ஐசுவரியத்தோடுசேர்ந்தால் தான் மெய்யான பொருளென்பது உண்டாகும். இராஜரீக முறையில் உண்மையாகவே சுகானுபவமுண்டு. ஆனால் மெய்ஞ்ஞானமடைய வேண்டுமென்பவன் எல்லாவற்றையும் நீக்கவேண்டுமல்லவா?

பி.—மெய்ஞ்ஞானந் தேடுதற் குரிய காலமிருக்கிறதே.

கௌ.—அறிவினர் இப்பொழுது உலக வழியிலிருந்துகொண்டு பிறகு மத சம்பந்தமானவைகளைப் பற்றி நினைப்பார்கள். எனக்கு அப்படியல்ல. உண்மையைத் தேடல் முதன்மை யுடைத்தது. மற்றவை பின்னாலே கொள்ளவேண்டும்.

1-வது, அ.—இராச்சியத்திலிருந்துகொண்டே உமது இஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளலாமே.

கௌ.—பட்டினியால் வருந்துவோன் ஆகாரத்தைப் பார்த்தவுடன் அவனைப் புசிக்கவேண்டாமென்றால் சும்மா விருப்பானோ?

பி.—நீர் அரச பரம்பரையைத் தழுவினவரல்லாதவராயிருந்தால் என்னுடன் அரசாளுமாறு வேண்டிக்கொள்வேன். நீரோ பார்த்திபனின் புதல்வனென்று கேள்விப்படுகிறேன்.

கௌ.—வியாதியிலிருந்து சொஸ்தமடைந்தபொழுது திரும்பவும் அதைவிரும்புவானோ? வலையிலிருந்து விடுபட்ட நான் அதை மறுபடியும் இச்சிப்பேனோ? சுவாதீனமா யிருக்கவேண்டிப் பந்தங்களை யறுத்தேன். பரமார்த்த ஞானமே எனக்குச் சிறந்த பொக்கிஷம். ஆனால் எனது சுற்றத்தை வெறுத்தேனென்று கருதவேண்டாம், அவர்களை நிராகரிக்கமாட்டேன். பாவம், விகுணம். துக்கம் இவைகளிலிருந்தும் விடுபட்டபின்னர், நான் தனித்திருந்து பயனில்லை. இப்பொழுதும் அவர்கள்மேலுள்ள எனது பிரியம் அற்றுப்போகவில்லை. தாழ்மையிலுள்ளவர்களுக்கு ஞானதேசிகனுயிருந்து அவர்களை உயர்த்துவேன். தலைமுறை தலைமுறையாக வல்லமையில் எனது மூதாதைகள் பின்வாங்கினவர்களல்லர். சிலமொன்றே தழைத் தோங்கவில்லை. எங்கு பார்த்தாலும் அறியாமையே பரவியிருக்கிறது. ஞானக் கண்களைத் திறக்க நான் இந்நிலைமை யடைந்திருக்கிறேன். எல்லாரும் பொருள், சிற்றின்பம் இவற்றினை மிக்க சாம்பிராச்சியமென்று எண்ணிப் போவாக் கொண்டு பித்தர்போலத் திரிகிறார்கள். இவர்களுக்கிதுவே மோக்ஷம். பகுத்தறிவே கிடையாது, ஆகையினால், அரசே! கதிரவன் மேற்கி லுதயமானாலும்; மேரு பர்வதம் சாய்ந்தாலும்; மதிபோன் மண்மீதில் விழுந்தாலும் நான் கடைபிடித்த உறுதிப்பாட்டினின்றும் சற்றேனும் விலகேன். தலையறுப்புண்டும் மரிப்பேன், தீயினிலேனுஞ் சாவேன். இதினின்றும் வழுவேன். எனக்காக நீ வருத்தப்படவேண்டாம். மதியீனமடைந்துமாண்டுபோகும் மண்ணுலகத்தாருக்காக வருந்து.

பி.—ஸ்ரீமனு! நீர் கோரினதை முடிப்பீராக. முடித்தபின் என்னை உமது சிஷ்யனாக ஏற்றுக் கொண்டருள் புரிவீர்.

(கௌதமர் போகிறார்.)

1-வது அ.—என்ன சாந்தம்! என்ன பொறுமை!

பி.—பிறப்பு, மூப்பு, பிணி, சாக்காடிவைகளை வேரறுக்கத் தீர்மானம் செய்த வேந்தன்.

2-வது அ.—இவர் துறவே மேலானது. உலகின்மேல் எல்லையிலாக் காருண்யம். நல்லொழுக்கத்தையே துணையாகக்கொண்ட தூயவன்.

பி.—இவர் மேலோனே. (திரும்புகிறார்கள்.)

---

மூன்றும் அங்கம்

இரண்டாம் காட்சி

இடம்: மாளிகை.

காலம்: பிற்பகல்

பாத்திரங்கள்: சுத்தோதனன், கௌதமி, சந்தகன், யசோதரை, இராஜ்யபுரோகிதர், பாங்கியர்.

சுத்தோதனன்—கௌதமனு! துறவறமா! ஹா!

சந்தகன்.—அதன்பிறகு நான் அங்கே யிருக்கவில்லை.

சு.—ஐயோ! என்கதி இவ்விதமாகவா முடியவேண்டும்? எனக்குப்பின் இராச்சியத்தை அவனிடமளித்து முடிசூட்டிக் காணவேண்டுமென்றவன் இச்செய்தியையா கேட்கவேண்டும்? ஹா! கௌதமா! நீ எங்கு சென்றாய்? இதுவா தகுதி? என்னைத் தள்ளிவிட்டாயே! இந்த வாழ்வு சம்மதமாக விருக்கவில்லையோ? என் புத்திர சிகாமணியே! ஸித்தார்த்தா!

1-வது இராஜ புரோகிதன்.—பூபதே! வியசனப்படவேண்டாம், நாங்கள் போய் இராஜ புத்திரனை விரைவிற் கொண்டுவந்து சேர்க்கிறோம்.

2-வது இராஜ புரோகிதன்.—மந்திரியுடன் சென்று தேடுகிறோம். தாங்கள் படும்பாட்டை அவரைக் கண்டுரைக்கிறோம்.

சு.—என்னருமைப் புதல்வன் என்று வருவானோ! ஆ! கௌதமா!

[சுத்தோதனனும் புரோகிதரும் போகிறார்கள்.]

கௌ.—ஹா! ஸித்தார்த்தா! இம்மாளிகை உனக்குக் கொலைக்களமோ? இராஜவுண்டி ஆலாலமோ? மன்னவன் மாற்றானோ? நீ எவ்வாறு துணிந்தாய்? நகர் முற்றிலும் பாழடைந்து விட்டதே? எங்களை அவமானப்படுத்தி விட்டாயே! காடோ வளநாடு? ஐயமேற்றவுணவோ அறுசுவையுண்டி? பட்டாடையும் பலபூணு மணியவேண்டியதற்குப் பதிலாகக் காவி வஸ்திரமுடுத்தாயே! உஷ்ணமும் குளிரும் உனது பாங்கான மேனியை வருத்துமே! என்னைக் கைவிட்டாயே!

1-வது பாங்கி.—காமனை வெல்லும் வனப்புடையோய்! ஆமோவிது? எல்லோரும் தத்தளிக்கிறார்களே!

2-வது பாங்கி.—சிங்க நடையுடையோய்! எங்களைப் பங்கமுறப் பண்ணினீரே! என்னாளும்மைக் காண்பதோ? (யசோதரை வருகிறாள்.)

யசோதரை.—(மூர்ச்சை தெளிந்து) இனியெனக் குயிர் வேண்டுமோ? தண்டாமரை போன்ற இணையடிக் கமலங்காள்! நீவிர் வீரகண்டாமணி யணிய வேண்டாவோ? திறல் கொண்ட துடைகாள்! நீவிர் சமர்க்களத்தே ஜயசீலஞ் சாதிக்க வேண்டாவோ! எழில் நிறைந்த இடுப்பே நீ என்னாள் பொன்னரைநாண் பூணுவதோ? தண்மை பொருந்திய மார்புகாள்! நீவிர் சாந்தம் பூசுவதெப்பொழுதோ? நீவிர் அலர் மலர்த்தா ரணிவதெக்கணமோ? நீவிர் மின்னலொளியுடைய பன்மணி பதித்த வாபரணங்களா விலங்குவ தென்றோமோ? உரமுடைய கரங்காள்! நீங்கள் மறுபடியும் என்னையணைவீரோ? வண்ணமார் திண்டோள்காள்! பொன்வரை யொப்பத் திகழ்ந்த வுங்களைப் பார்ப்பேனோ? செவ்வாய்க் கனியே! இதழ்படமுந்தச் சேர்வ தெந்நாளோ? இன்பந்தருந் தொனியைக் கேட்பேனோ? விண்ணவர் மகளிரை வெட்கமடையச் செய்யும் விழிகாள்! என்னுங்கள் மந்தகாஸப் பார்வையைக் காண்பேன்? நெற்றித்திலகத்தை நோக்குவ தெப்பொழுதோ? ஹா! நாயகா! கோதிக் குழலை முடியவேண்டியதற்கெதிரிடையாய் அது பூமியில் விழுந்து புரளுகிறதே! ஹா! நாதா! என்னைப் பாதுகாவாமற் பராவிக்க விட்டீரே! என்ன குற்றஞ் செய்தேன்? (புலம்பிப் போகிறார்கள்.)

---

மூன்றும் அங்கம்

மூன்றும்காட்சி

இடம் : மலைச்சாரல்

காலம் : நடுப்பகல்

பாத்திரங்கள் : கௌதமர், ஆடுமேய்ப்பவர்கள்.

கௌ.—தத்துவ ஞானிகளாம், இவர்கள் வீணாய்க் காலங்கழிக்கிறார்கள். உயர் கதியடையப் பிசகான மார்க்கங்களைக் கைப்பற்றி ஏமாந்துபோகிறார்கள். அகங்கார மொழியவில்லை, அதற்குள் ஞான நெறியில் நிற்கிறோமென்று பேசி, வாதஞ் செய்கிறார்கள். மமகாரமொழியு முன், மனோராச்சியம் பண்ணுவதிற் பயனென்? நான் நான் என்று சொல்லிக்கொண்டு எப்பிறப்பிலும் இந்த நான் அழியாதென்கிறார்கள். கொடுமை, கொடுமை. தேகத்தை இன்னும் சிலர்வதை செய்கிறார்களே! முட்களாலும், தழலாலும், சர்ப்பங்களாலும் தங்கள் உடம்பிற்கு வேதனையுண்டாக்கிக் கொள்ளுகிறார்கள். பிணங்களே அவர்களுக்கு நண்பர்பேர்லும். கந்தையும், சாம்பலும், இடுங்கின கண்களும், குறுகியவுடலும், பயங்கரமான முகமும் ஹா! என்ன கோரரூபங்கள்—யாக்கை அநித்தியம். அநுலதை இங்ஙனம் வாதிக்கிறதினால் லாபம் பெறுவார்களோ? ஒரு நாளில் கணக்கற்ற தடவை "சிவ, சிவ" என்று உச்சாடனஞ் செய்கிறார்கள். இது என்ன ஆனந்தத்தைக் கொடுக்குமோ தெரியவில்லை. உடம்பினிலல்லவோ உத்தம வஸ்துவைக்காணலாம். உடல் தண்டனை யடைந்தால் மற்றைய கரணங்கள் திராணியற்றுப் போய்விடும். இனி வரப்போகிறதை யுத்தேசித்து இப்பொழுது அதற்குச் சாதனமாயுள்ளதை யழித்துக்கொள்ளுகிறார்கள். இதனால் இவர்களுக்கும் ஏனையோர்க்கும் பலனொன்று முண்டாகப் போகிறதில்லை. நறுமணப்பூக்காள்! சிங்காரப் புஷ்பங்காள்! உங்களி லொவ்வொருவரும் பூர்ணவாழ்க்கையை யுடைத்தாயிருந்து இயற்கையின் விதியுடன் ஐக்கிய மாயிருக்கிறீர்கள் செழித்தோங்கிய தருக்காள்! உங்களுடைய வாழ்தலோ கவலையற்றது. நீங்கள்



விதிக்கு விரோதமாயொன்றும் பண்ணுகிறதில்லை. விலங்குகாள்! நீங்களும் இயற்கையறிவால் நியாயத்தைப் பேணி வருகிறீர்கள். ஆனால் மனிதனோ பகுத்தறிவைத் தப்பிதமா யுபயோகித்து இயற்கை விதிகளை யனுசரியாமற் தாழ்ச்சி யடைகிறான்.

(ஆட்டு மந்தை வருகிறது.)

ஆடுமேய்ப்பவன்.—டுர்யோ,டுர்யோ;—டுர்யோ!

கௌ.—ஐயோ! இந்தக் குட்டி நொண்டுகிறதே! உதிரம் பெருகுகிறது. என்ன வருத்த மடைகிறதோ?

[குட்டியைத் தோளில் போட்டுக்கொள்ளுகிறார்.]

இதன் தாயும்—அன்னையே! திகைக்காதே. உன் குட்டியைத் திருடி யெடுத்துக்கொண்டு போகமாட்டேன். ஒரு மிருகத்தின் வருத்தத்தைத் தீர்ப்பது உலகத்தை விட்டுத் தூரத்தில் நின்றுகொண்டு வெறுப்படைந்து குகைகளில் வசிப்பதினின் நடத்தையிலும் மேலானது. பிறர் வருந்துகையில் தான் துன்பமுற்றதாகப் பாவித்து அதை நீக்குவதே அறநெறி. (மேய்ப்பவரைப் பார்த்து) நண்பர்காள். எவ்விடம் மந்தை போகிறது?

மேய்ப்பவர்—இன்றிரவு யாகம் நடக்கப்போகிறது. எங்கள் மஹாராஜா அநேகம் ஆடுகளைக் கொண்டுவரக் கட்டளையிட்டிருக்கிறார்கள். அதற்காகப்போகிறோம்.

கௌதமர்—அப்படியானால் நானும் வருகிறேன்! (மந்தைபின் செல்லுகிறார்.)

---

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### ஐயமிட்டுண்

இம்மொழியின் கருத்துப்படி நடந்தால் பலனடையாதார் யாவர்? ஐயமிட்டுண். ஐயம் - பிச்சையை, இட்டு - கொடுத்து, உண் - சாப்பிடு. எது உனக்குக் கிடைக்கிறதோ அதில் இரப்போர்க்கும் கொஞ்சம் இட்டுண்ணல் இகபரமென்ற இருவழிக்கும் இணையற்ற செல்வமாகும். இதற்கு ஓர் சிறு கதை சொல்கிறேன்.

முன் ஒருகாலத்தில் மதுரைமாநகரை மதிமுகபாண்டியன் என்னும் அரசன் மனுமுறை தவறாது ஆண்டுவந்தான். இவன் மிகு பக்திமான்; ஆனபடியால் அரண்மனையிலும் தானே ஈசனைப் பூஜித்து ஆலயத்திற்கும் சென்று சுந்தரமூர்த்தியையும் மீனாக்ஷியம்மையையும் வணங்கித்தான் பிறகு போஜனம் செய்வது வழக்கம். இவன் முன்னோர்களும் நல்லபக்திமான்களாதலால் ஈசனருளால் தம் நாட்டின் தர்மாதர்மங்களின் எல்லையையறியத் தெய்வீகமான மணி ஒன்று பெற்று, அதைத் தங்கள் அரண்மனை வாயிலிற் கட்டிவைத்திருந்தார்கள். அதன் இயல்பு என்னையெனில், தேவர்களும் புகழத்தக்க சிறந்த தர்மம் நாட்டில் நடந்தால் அம்மணி சுபாவத்துடன் கம்பீரமாய்த் தானே ஒருதரம் சப்திக்கும். அதே மாதிரி, அதர்மம் நடந்தால் அம்மணி நாக்கைப் பின்புறம் வளைத்துக் கடூரமாய்ச் சப்திக்கும். இதையறிந்து அவர்கள் தர்மாதர்ம நிலையறிந்து நடந்துகொள்ள மிகுந்த சாதனமாயிருந்தது. ஆனால் அந்தமணி வெகு நாளாய் ஒருவிதமும் சப்தியாது அமைதியாய் நடுநிலைமையி லிருந்துவந்தது.

இதுநிற்க, அரண்மனையில் அரசன் ஏவல் செய்பவர் அநேகரில் பூஜைக்குப் பத்திரங்கள் எடுத்துவைக்கும் தொழிலி லமர்ந்திருக்கும் சிவப்ரியாள் என்ற வயதுசென்ற ஓர் அந்தணமாதும் இருந்தாள் இவள் மிகுந்த ஏழையும் அநாதையுமானவள். அநேக நாட்களாய் அரசனிடம் இத்தொழில் செய்பவள். இவள் மிகு நற்குண முள்ளவளான படியால் அரசன் சந்தோஷித்து இவளுக்கு அரண்மனையின் பின்புறத்திலேயே ஓர் சிறு வீடு வசிப்பதற்குக் கொடுத்திருந்தான். இதன்றி அரண்மனையில் தினம் ஒருபடி யரிசியும் இரண்டு பணமும் பெற இவளுக்குக் கட்டளை யேற்படுத்தி யிருந்தான். இதனிமித்தம் இவளை யொத்த பல வேலைக்காரர்களின் அசூயையும் இவளுக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால் இவள் இதைக் கவனிப்பதில்லை. பிராதக்காலத்தில் எழுந்திருக்கும் பொழுதே இறைவனாகிய சுந்தரேசுவரனையும் அம்மையையும் தியானித்து, 'ஆண்டவனே! எல்லாம் உன்செயலே. எல்லாம் நின் அருளே. எல்லா முன்பொருளே. உன் சித்தப்படி என்னை நல்வழியி லாட்டுவாய். என்னுடல் பொருளாவி மூன்றும் உனக்கே அர்ப்பிதம் செய்தேன். பயங்கரமான பாபங்களினின்றும் என்னை விலக்கிக் காப்பாற்றுவதுன் கடமை'

யென்று பன்முறை நமஸ்கரித்துத் தொழுதெழுந்து, நித்தியக்கடன்களை முடித்துக்கொண்டு ஆலயத்திற்குச்சென்று சுவாமியைத் தரிசித்து வணங்கி நாமஸ்மரணை செய்துகொண்டே ஒவ்வொருநந்தவனங்களிலும் சென்று பரிசுத்தமானமலர்களைப் பறித்துக் குடலைகளில் நிரப்பிக்கொண்டு, அரண்மனைபூஜாகிருஹத்தில் வைத்துவிட்டுத் தன் கூலியைப்பெற்று வீடு வந்துசேர்வாள். பிறகு அந்த ஒருபடியரிசியைப் பக்குவமாக்கித் தன் கொல்லையில் சொல்ப இடத்தில் போட்டிருக்கும் கீரையைப் பறித்து மசித்து, அந்தச் சாதத்தில் கலந்து, அதைப் பகவானுக்கு நிவேதித்து, நான்கு பாகமாக்கி, ஒன்றை அதிதிக்கும், ஒன்றைப் பசுவுக்கும், ஒன்றைத் தான் சாப்பிடும்பொழுது பாட்டியென்று இனிய குரலுடன் அழைத்தோடிவந்து கை நீட்டும் அரண்மனையில் சந்தனமரைக்கும் அந்தணன் பிள்ளையாகிய பாலகிருஷ்ணனுக்கும், ஒன்றைத் தனக்கும் வைத்துக் கொள்வாள். அந்த இரண்டு பணத்திலும் ஒருபணத்துக்குக் கோவிலுக்கு எண்ணெய்திரியும், கால் பணஞ்சூடமும், கால்பணம் பழமும் வாங்கிவிட்டு, அரைப்பணத்துக்கு அன்றுடம் வேண்டிய விறகு உப்பு முதலியவை வாங்கிக்கொள்வாள். புஜித்த பிறகும் சாயந்திரம் வரையில் நாமஸ்மரணம் செய்துகொண்டிருந்து, பிறகு கோயில்சென்று வலம்வந்து தீபமேற்றிக் கர்ப்பூரத்தையும் தட்டில்வைத்துவிட்டு வீடுவந்து சேர்வள். இவ்விதம் இவள் காலம் சென்றுவருகையில் ஓர் நாள் வழக்கம்போல் காரியங்களை முடித்துவிட்டு ஆனந்தபரவசமாய் இறைவனை வாழ்த்திக்கொண்டே தன் பங்கை எடுத்து அதில் ஓர் கவளம் உண்பதற்கு எடுக்கவே, வாசலில் வயோதிகமும் சொல்லவொண்ணு வியாதிகளும் அடைந்து இருகண்ணுமற்ற ஓர் புலையனொருவன் 'அம்மா! இருகண்ணு மற்றவன். பசி காதடைக்கிறது. உண்டு நான்கு நாளாகிறது' என்று கத்தும் குரல் செவியில் கேட்க, எடுத்த பிடியை இலையில் வைத்துவிட்டுத் 'தாருக்குழியாகிய இப்பாழ் வயிற்றிற்கு எவ்வளவு போட்டால்தான் திருப்தியும் அமைதியும் ஏற்படப்போகிறது. ஓர் நாளுமில்லை. நாமோ நேற்றுத்தான் புசித்தோம். கடவுளருளால் இந்திரியங்களும் நன்றாயிருக்கிறது. ஐயோ! வியாதியினாலும் மூப்பினாலும் பசியினாலும் அந்தகனான இவன் ஆத்மா எப்படி இருக்கிறதோ. இரப்போர்முன்னிருந்துண்ணுவது அழகன்று' என்று எண்ணுதலெல்லாமெண்ணி மனமுருகித்தன்பங்கு சாதத்தைக் கொண்டுவந்து அவன் கையில் 'ஈசா உனக்கே அர்ப்பிதமென்' றெண்ணி அன்புடனளித்துத் தண்ணீரும் வார்த்தாள் உடனே அரண்மனையிலிருந்த ஆராய்ச்சி மணியும் அண்டமதிர அடித்தது. இதைக்கேட்ட அரசன் ஆனந்தத்தால் பிரமித்து மந்திரிகளைக் கூவியழைத்து 'அமைச்சர்களே! வெகுநாட்களாய் அமைதியுற்றிருந்த இம்மணி இன்று கம்பீரமாய் ஒலித்த தர்மநாதத்தைக் கேட்டீர்களா? நம்நாட்டில் தேவர்களும் புகழும் திவ்யமான ஏதோ தர்மம் நடந்தது. அச்செய்கையைச் செய்த புண்ணியவான் எவரென்று அறிந்து அவரையிக்கணமே பட்டத்துயானையின்மேலேற்றி அழைத்துவாருங்கள்' என்றனுப்பினான். மந்திரிகளும்தெருவுக்கு அநேகம்பெயர்களை ஆராய்ந்தறிய அனுப்பித்தாங்களும்போனார்கள். ஆனால் ஒவ்வொரு தெருவிலும் சிலவீடுகளில் ஜனங்கள் சாப்பிட்டுவிட்டு வம்புகள் பேசிக்கொண்டும், சில வீடுகளில் தூங்கிக்கொண்டும், சில வீடுகளில் சர்வசாதாரணமாய் வழங்கும் சண்டைகளிட்டுக்கொண்டும், சில வீடுகளில் ஆடிக்கொண்டும், சில வீடுகளில் புஜித்து இம்மணி ஒலியைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். இதுசமயம் மந்திரி பிரதானிகளும் ஒவ்வொரு வீடாய் வந்து விசாரிக்கவே, அவர்களும் செய்தியறியாதவர்களாய் ஆச்சரியமுற்று அப்புண்ணியவானை எல்லாரும் காணவேண்டுமென்று ஆவலுடன் தேடிவந்தார்கள். ஊரில் ஒரு இடமுமின்றிக் கருத்துடன் ஆராய்ந்தும் ஒன்றும் அறியமுடியாது மனம் மயங்கி அரண்மனையின் பின்புறம்வரும்பொழுது, நம் சிவப்பிரியாள் வீட்டுவாசலிற் விகாரமான ஓர் புலையன் புசித்துக்கொண்டிருக்கவும் அவள் நின்று உபசரித்துக்கொண்டிருப்பதையும் பார்த்து அவளையும் விசாரிக்க அவள்வீட்டிற்குள் செல்லவே, திடீரென்று ஒருபிரகாசம் தோன்றி அதில் புலையனுரு மறைந்து அங்கு ஓர் அசரீரிவாக்குண்டாயது. அது என்ன வெனில்: 'சிவப்பிரியே! உன் நற்செயல் முவுலகும் புகழடைந்துவிட்டது; இனி உனக்குப்பிறவித்துன்பமில்லை.



நீ இதில் வருவாயாக' என்று உரைத்தது மந்திரிகளுக்கும், 'அமைச்சர்களே! வறுமையிலும் ஈகைத்தன்மையைச் செம்மையாய்நடத்திமனமென்னும் மதயானையை அடக்கிய இக்குணவதியைத் தாங்கள் உங்கள் பட்டத்து யானையால் முடியாது' என்று அன்புருவாய் ஆனந்தமாய் உள்ளங்கரைந்து மெய்மறந்திருக்கும் சிவப்ரியாளைச் சூழ்ந்தழைத்து மறைந்துவிட்டது இதைப் பிரமித்து நோக்கியிருந்த மந்திரி பிரதானிகளும் மற்றும் ஜனங்களும் அரண்மனைக்கோடிவந்து அரசனிடம் நடந்த செய்தியெல்லாம் சவிஸ்தாரமா யுரைத்தார்கள். இதைக்கேட்ட அரசன் இவ்வளவு புகழ்பெற்ற சிவப்ரியையையும் அச்சோதி சொரூபமான கடவுளையும் தரிசிக்கத் தனக்குக் கொடுத்துவைக்காத நிர்ப்பாக்யத்தை எண்ணி மனம்வருந்தி, அவளிருந்த இடத்தைச் சுற்றி வலம்வந்து நமஸ்கரித்து ராஜபதவிகளினாலும் ஜனக்கட்டுகளினாலும் ஒன்றும் பலனில்லையென்றறிந்து, அவ்வீட்டைச்சுற்றி அநேகம் அறச்சாலைகள் ஏற்படுத்தி அவற்றையெல்லாம் தானேநேரில் சென்று சரிவரநடத்தி, நாளடைவிலேயே தானென்பதும் தன்செயலென்பதும் தன்பொருளென்பதுமற்று பத்தியும் ஈகையும் பெருகி அருளுருவாகி ராஜ்யத்தை ஆண்டிருந்து முடிவில் நற்பதவியை யடைந்தான். கேட்டீர்களா ஈகையென்னும் இணையற்ற தோழன் செய்யும் நன்மைகளை! ஆகையால் முடிந்த அளவு தருமம் செய்து வாழ்வதே சிறப்பு.

சிறப்பீனுஞ் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்கு?—திருக்குறள்,

---

**Ramayana Saram.**—The book is written in *elegant Tamil* which could be easily understood by the average Tamil reading public. The story of the Ramayana is told in several chapters properly arranged and ought to *prove instructive reading*. One feature of this Book, not common to similar publications is the introduction covering about 30 pages in which the author gives the reader a good idea of the historic and intrinsic value of the Ramayana and more than this, we are also provided with an interesting sketch of the several personages in the Epic. Apart from its value as an epitome of the story, it will be also useful as a religious Text-Book in our Secondary Schools and so we commend it to the notice of the educational authorities.

—*The New India.*

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி 12.—இரங்கல்

வண்டமிழ்வா ணர்ப்பிழைத்த வான்குடிபோல்
[தீத்தழன்மீ
மண்டு கொடுஞ்சுடத்தோர் மாட்டிருந்து பண்டைய
வாழ்வெல்லாந் தானினைத்து மற்றழுதாள்
தாழ்வெல்லாந் தன்றலைமேற் றந்து. [மன்னிழைத்த

தமயந்தி மேலும் நடந்துகொண்டே இருந்தாள்; தனது கணவனை நாடித் தேடியலைந்துகொண்டே நடந்தாள்; அடர்ந்த காட்டினுள் தொடர்ந்துகொண்டே ஊக்கங் குன்றாது ஆத்திரத்துடன் போய்க்கொண்டிருந்தாள். அவள் தான் வனத்தில் நடப்பதாக நடுங்கவேயில்லை. உணர்வற்று நடந்தால் பயமெங்கு வரும்? ஆனால் அவள் மேன்மேலும் கடும் அரண்யத்துக்குள்ளேயே சென்று கொண்டிருந்தாள். அதில் கணக்கற்ற மரங்களும் மிருகங்களும் நெருங்கி விளங்கின. அது பரல்கல் நிறைந்த மலைப்பிரதேசம். நடப்பவரது காலைப் பரீட்சை செய்யக்கூடியது.

மந்தாரங் கச்சோலம் வாகைசே வெட்பாலை
சந்தார் பிடாவகுளஞ் சண்பகங்கூ விளநாகம்
நந்தாத வேங்கைஞெமை நமைவருக்கை
!முருக்கில்யா
சிந்தாத வழைபுன்னை சிந்துவாரஞ் செருந்தி
சிந்துரமா மாரவரசு செங்கடம்பே ழிலம்பாலை
குந்தமா தளைஞாழல் குங்குமமுந் திரிகையா
கந்திகளா விளாதென்னை கடுக்கைதேக் கோமை

முதலாகிய மரங்கள் நிறைந்து அடர்ந்த அம்மலைப் பாங்கு, திருடர்க்கு இடந்தருவதல்லாமல், அநேக கொடிய மிருகங்களுக்குந் தங்கப் பெருங் குகைகளும் பொந்துகளும் புதர்களும் பொதிந்து கிடந்தது. அந்தகாரம் நிறைந்து சூரியன் கதிர்கள் கண்டிராத அந்த அரண்யம், பள்ளத்தாக்குகளும், கரடு முரடான குன்றுகளும் தவழ்ந்து, பார்த்தவர் மனதை வெருட்டி மயக்கும். ஆயினும் தனது கணவனைத் தேடுமோசை தூண்டச் சற்றும் பயம் என்பதுணராது, தமயந்தி நடந்துகொண்டேயிருந்தாள். அவள் கண்கள் முன், துள்ளிவிளையாடு மீன்கள் நிறைந்து, திவலை எரித்து அலைவீசிக் குதித்தோடும் சிற்றாரும் தெரிந்தும் தெரியாது விளங்கியது; வானமுற

வளர்ந்த மரங்களும் அவள் மனதைக் கவரும் சக்தியற்றிருந்தன; மற்று ஓடும்புலிகளும் சிங்கங்களும் கரடிகளும் இவை முதலிய துஷ்ட மிருகங்களும் அவள் வழியிலிருந்தும் அவளை வெருட்ட முடியாது திகைத்தன; இரு பக்கமும் நோக்காது, கடிவாளத்துள் பட்ட குதிரை நேரே ராஜபாட்டையிலேயே யோடுவது போல, கணவன் என்னும் பரம்பொருளை நாடி கற்பெனும் உயர் வழியில் மற்றெவற்றினும் மனஞ் செல்லாது நடந்து கொண்டே தமயந்தி கிடந்தாள்.

வழியில் அவள் கண்ட கோர பிசாசங்கள் அநந்தம். துஷ்ட ஜந்துக்களும் அநந்தம் அவள் கண்டாள். கண்டதும் மனத்தை வெருட்டி மறைக்கும் மாயத்தோற்றங்களும் அவள் கண்டன அநந்தம். கானல் நீர்போல உண்மையற்ற உருவெளி உருவங்கள் அவள் கண்டன, அவற்றிலும் அநந்தம். ஆயினும் அவள் தனியாகவே அக்காட்டில் தன் நாதனை நாடி அலைந்து கொண்டிருந்தாள். அவள் சிறிதும் அஞ்சவேயில்லை. அப்படி அலைந்தும் தன் உயிர்க் காதலனைக் காணாது எண்ணாத வெல்லாம் எண்ணியெண்ணி ஏழைமனம் நொந்து நெஞ்சம் புண்ணாகித் துக்கமேலிட்டு அவள் பதைபதைத்துப் புலம்பிப் புலம்பி அழுதாள். நடக்க முடியாது அயர்ந்து, அம்மலையடிவாரத்துத் தனியாகக் கிடந்த ஒரு முரட்டுப் பாறைமீதுட்கார்ந்து, தலைமேல ஒருகை சாய்த்து, மடிமேல் மற்றொருகை வைத்து, வானத்தைக் கண்டவண்ணமாய், ஏக்கமே முகத்தகத்துக் குடிகொள்ள, கண்விண்டு, தான் கட்டிய அரைத்துணிக்கு அத்துயரிலும் தன் னழுகு பரிணமிக்கக் கிடந்து, பக்கத்திருந்த பாம்பும் புதரில் பார்த்து மயங்கி இரங்கும்படியாக, முகம்வாடி, சிந்தை நொந்து, துயர்க்களாகி, தேகத்தின்மேல் இருந்த ஞாபக மொழிந்து, இடி விழுந்தவள்போல ஒன்றும் தோன்றாது அவள் என்ன என்னவோ தனக்குள் பேசிக்கொண்டாள்; பித்தம் பிடித்தவள் போலத் தன்னைத்தானே ஏசிக்கொண்டாள்; பதறிப் பதறி நடுங்கினாள்; பேய்போல அலறினாள்; கூக்குரலிட்டழுதாள்; ஓலமிட்டாள்; தன் நாதனை நினைந்து நினைந்து கண்ணீர் மாலை மாலையாகச் சிந்தப் பெருங் குரலெடுத்துப் பிரலாபிக்கலானாள். என் செய்வது? வாய்விட்டலறினாலன்றி வயிற்றுள் அடக்கி வைத்திருந்த துயரம் எப்படி யடங்க முடியும்?

"சோலார் போரேறே! நிடதத்தார் கோமானே!
ஆர வரைமார்பா! அடியேன் உயிர்க்குயிரே!
காரிருள்வாய் யான்புலம்பக் கானகத்து [விட்டகன்றும்
சாரலையால் இன்னும்! இதுவோ நின் [தண்ணளியே!

ராஜாதிராஜனே! அழகே உருவெடுத்த என் ஐயனே! நீர் எங்கு சென்றீர்? யாகங்கள் எல்லாம் செய்து உண்மைக்கே உருவாய்வந்த தாங்கள் என்னிடம் பொய் சொல்வதாகுமோ! நரோத்தம! நீரோ மோஹன உருவுடையவர்; காந்தி நிறைந்தவர்; அநந்த கல்யாண குணம் படைத்தவர்; பகை யரசர் செருக்கைத் துடைத்தவர். அப்படியிருந்தும் என்னிடம் சொல்லியதை ஏன் கவனிக்கமாட்டீர்? அம்மொழிகளைச்சற்று ஞாபகபடுத்திக்கொள்ளும். நீங்கள் புத்தியிற் பெரியவர்; கல்வியிற் சிறந்தவர்; படித்தறிந்தவர்; வேத சாஸ்திரங்கள் ஆய்ந்துணர்ந்தவர்; எனக்குக் கொடுத்த வாக்கு மொழியை நிறைவேற்ற வேண்டுமல்லவா? உண்மையில் யான் உமது பிரியத்திற் கேற்றவளல்லவா? அன்னந்தூது வந்து செய்த காரியத்தை நாம் மறந்து விடவில்லையே! பின்னையேன் நான் கதறிக்கதறி இந்தக் கடுங்காட்டில் கத்தி யழைத்தாலும் பதில் கூறாது விளங்குகிறீர்? ஐயோ! நான் பயப்படுகிறேன். இவ்வன ராஜன் தனது பிலம்போன்ற வாயைப் பிளந்துகொண்டு, வந்து என்னை எங்கு விழுங்கி விடுவனோ என நான் அஞ்சுகிறேன். உமக்குத் தெரியவில்லையா? என்னை ஏன் காப்பாற்ற வரமாட்டீர்? 'உன்னைக் காட்டிலும் எனக்கிந்த உலகில் பிடித்தவர் ஒருவருமே கிடையாது' என்று பலமுறையும் என்னிடம் சொன்னீரே. இதுதானோ உமது கருணை? உமதுவாக்கை இப்போது காப்பாற்றும். என் தலைவரே! என் அன்பிற்குரியவரே! இருட்டில் வெருண்டு, காட்டில் அலைந்து, பீதியிற் கலங்கி, பித்துப்பிடித்துப் புலம்பு மென்னை நோக்கி ஒரு மறுமொழி சொல்லித் தைர்ய மூட்டக்கூடாதோ? நான் அநாதை; மேனி கறுத்து மனம்வாடி வதங்கிக் கலங்கி நிற்கும் ஒருத்தி; எளியை. ஆயினும் உமது மனைவி



யன்றோ? என் கூக்குரல் உமது காதிற்படவில்லை? நான் உம்மையன்றி வேறு யாரையுங் கருதாதவள். அழகிய நெடுங்கண்ணாய்! நீங்கள் என் மூலமுதற்பொருள் அன்றோ? கந்தை கட்டித் தவித்து உம்மையே தேடிப்பாடி யலையும் என்னை ஏன் காக்கவரவில்லை? நான்தான் தமயந்தி; உமது மனைவி! மயக்கம்வேண்டாம். நான் பரிதபிக்கிறேன்; இக்கொடுங்காட்டில் தனியாய்த் தவிக்கிறேன்; நெருப்பில் விழுந்த புழுப்போல் துடிக்கிறேன்; உம்மையே கூவிப் பேசுகிறேன். ஏன் தாங்கள் என்னைக் கவனித்து ஒரு மொழி மறுமொழியாக ஏன் திரும்பிப் பேசக்கூடாது? குலத்திலும், நலத்திலும் குணத்திலுஞ்சிறந்தவரே! புருஷ ச்ரேஷ்டரே! கொடும்புலி முதலிய மிருகங்கள் வசிக்கும் இந்தப் பாழும் காட்டில் உம்மை நாடி அலைகிறேன். என் கண் முன் ஏன் தோன்றாது என் பயத்தை விருத்திசெய்கிறீர்? நீர் எங்கு இருக்கிறீர்? எனக்குத் தெரியவில்லையே! என் செய்வேன்? நானோ ஒருத்தி; அபலை. யாரைப் போய் 'என் நாதரைக் கண்டீரோ?' என்று கேட்பேன். யார் உமது அங்கங்களை வருணித்துச் சொல்லித் தாங்க ளிருப்பிடத்தையுங் கூறக்கேட்டு உள்ளங்குளிர்வேன்?" எனமனம் துயருள் பாய்ந்து சிந்தாக்கிராந்தையாய் நைந்து கிடந்து,

'செய்தபிழை' ஏது என்னும்; 'தேர்வேந்தே' என்றழைக்கும்,
'எய்து துயர்க்கரைகாணேன்' என்னும்;—பையவே
என்னென்னு தென்மொன்னும் இக்கானின் விட்டு
மன்னென்னு வாடு மயர்ந்து. [டேகு

மேலும் தமயந்தி "இதோ இப்புலி இந்தக் காட்டிற் கரசரல்லவோ? ஹே! புலிச்ரேஷ்ட! நீரே இவ்வனத்தை ஆள்பவர். நான் நிஷதமன்னரின் தருமபத்தினி; என் பெயர் தமயந்தி. என் கோலமே என் கதையைச் சொல்லுமே! நான் என் தலைவரைத் தேடுகிறேன். நான் களைத்துப் பரிதபிக்கின்றேன். உம்மிடமன்றி வேறுயாரிடம் என் குறையைச் சொல்வேன்? யானோ ஒருத்தி. பிரஜைகளின் குறையைத் தீர்ப்பது அரசர் கடமையன்றோ? ஆக நீங்கள்தான் எனக்குத் தேறுதல் கூற வேண்டும். நீங்கள் என் நாதர் நளமஹாராஜரைக் கண்டீரோ? அவரைப்பற்றி உமக்கு என்ன தெரியும்? சொல்லும். அவரைப்பற்றி ஒரு சமாசாரமும் சொல்லாவிடில் என்னைச் சும்மாவிடாதிரும்; புஜித்துவிடும். அதுவே எனக்கு நன்மைதரும். அவ்வாறு செய்வது என் துன்பத்திற்கோர் முடிவுதரும்" என்று பேசிக்கொண்டே நடந்தாள். அப்பொழுதும் தனது நாதனை விளித்து அப்புலியைத் தான் நாடி வாய்விட்டுரைத்த மொழிகளை வெளியிட்டாள்; "அப்புலியும் என்னை லக்ஷியம் செய்யா தொழிந்தது" என்று மேலுந்தெரிவித்து, தான் நடந்து வந்த அம்மலையை நோக்கிப் பேசுவளானாள்.

"ஹே! குன்றத்தலைவ! மரங்களும் கற்களும் பதிந்து, கூழாங்கற்கள் தவழ்ந்து, சிறு கூபங்களும், சுனைகளும், சிற்றாறுகளும் நிறைந்து, அசையாக் கொடிபோல் ஆகாயம் வரையுயர்ந்து, உலகிலுன்னத நிலையில் விளங்கும் ஹே மலையரச! உமக்கு அநந்தகோடி நமஸ்காரம். நீவிர் யாவர்க்கும் புகலிடம் அன்றோ? முனிவர்க்கு முதல்வனைக் காண இடந்தரும் சாந்தி நிலையம் உமதன்றோ? நீர் முக்காலமு முணர்ந்தவ ராயிற்றே! உம்மைச் சரணடைகின்றேன். கொடிய 'விலங்கிற்கும் புள்ளிற்கும் கூட இடந்தந்து காக்கும் உம்மிடம் அடைக்கலம் புகுந்தேன். சற்றே யான் சொல்வதைக் கேளும். ஹே பர்வதராஜ! நான் ஒரு க்ஷத்ரியப்பெண்; நிஷத மன்னனுடைய மனைவி. என் தந்தை மஹாரதர்; ஆசாரசீலர்; உத்தமர்; விதர்ப்ப நாட்டரசர், சனங்களது ஸகல துக்கங்களைக் கவனித்துக் காப்பவர்; பொறையாளர்; தருமத்தைத் தழைக்கச் செய்பவர். என் மாமனார் வீரசேனர் புகழ்பெற்ற தீரர்; புகழே உருவெடுத்தவர்; தருமத் துறையிலேயே ஆடுபவர். அவர் மகன் நளமன்னவர் என் கணவர்; அழகிற் சிறந்தாற்போலக் குணத்திலுஞ் சிறந்துயர்ந்தவர்; படித்துணர்ந்து படித்தவரைப் போற்றுபவர்; புண்ய வழியிலோடிப் பாபத்தை அழிப்பவர்; வேதங்களைஓதி வேதியரைப் பூசிப்பவர்; தருமங்களுக்கெல்லாம் தலைவர்; ரணரங்க வீரர்; அடங்காவுண்மையர்; போரில் புறங்காட்டாத புண்ய ச்லோகர்; நல்லசீலர். கலியின் கொடுமையால் அவரைத் தேடி நான் அலைகிறேன். என் புருஷனைக் காணாது, ஒருத்தியேன், அநாதையாய் இப்பாழும் ஆரண்யத்துள், கவலையில் மூழ்கி, சிந்தனையிலாழ்ந்தேங்கித் தவிக்கிறேன். மலை

யரசு! உமது பல சிகரங்களென்னும் உயர்ந்த கண்களால் என் நாதனைக் கண்டீரா? அவர் அழகிற் கிருப்பிடமானவர்; ஸாமுத்ரிகா லக்ஷணப்படி ஸர்வாங்க லக்ஷணமமைந்தவர்; தாள் தொடும் தடக்கையுள்ளவர்; கருணாவிலாசம் நிறைந்த கண்களுடையவர்; என்மனத்தையே நாடும் மனமுடையவர்; கலியால் மெலிந்த கலை யுடையவர்; உண்மைக்கும் வன்மைக்கும் உறவானவர்; அவரே என் தலைவர்; நளமன்னவர். ஐய! நீங்கள் அவரைப் பார்த்தீர்களா? நான் கேவலம் பெண்; பேதை மடந்தை; இதுவரையும் கஷ்டமறிந்திராத காரிகை, ஏன் நான் கதறுவது உமது காதில் விழவில்லையோ? ஹே மலையரசு! உமது பெண் இப்படி அழுதால் இவ்வளவு சாந்தமாகவா இருப்பீர்? அவளைச் சாந்தப்படுத்துவது போல் நீங்கள் என்னை ஏன் சாந்தப்படுத்தவில்லை? உமது உடம்பு கற்பாறைகளால் அமைந்ததல்லவா? உமது நெஞ்சம் கல்லாய் அன்றி மற்றெப்படி இருக்கும்!'' என்று அம்மலையை நோக்கித் தமயந்தி பிரலாபித்துக் கொண்டே சென்றாள்.

அம்மலை என்ன செய்யும்? தமயந்தியின் துயரம் அதற்குத் தெரியுமா? அல்லது அவளை இன்னவாறு சாந்தப்படுத்த வேண்டுமென்பதாவது அது அறியுமா? தனது துயரப் பெருக்கால் தள்ளாடித்தள்ளாடி "என் தலைவனே! ஏன் இவ்வளவு பராமுகமோ? என்னிடத்தென்ன தவறுதலைக் கண்டீரோ? கலியின் கொடுமை எவ்வளவில் கொண்டுவைத்தது! கண்குழிந்து, முகங்நேக்கி, கலைநீங்கி, சிந்தை கலங்கி, வெருண்டு, நாகுழறி, உரைதடுமாறி, நடைமெலிந்தும் உம்மை யான் கூப்பிடுவது உமது காதிலேன் படவில்லை? என்முன் வராவிடினும் அந்த அழகிய திருவாயைத் திறந்து, உமது இனிய குரலில் 'அடி தமயந்தி' என்று ஆசையுடன் அழைக்கலாகாதோ? இனி எப்போதந்தக் குரலைக் கேட்கப் போகிறேன். ஹே நாதா! அந்தக் குரலாகிய அருணனை அனுப்பி, என் பயவிருளைப் போக்கி, தமது வரவை ஏன் எச்சரிக்கலாகாது. 'அளந்தது போகம் அவரவர்க் கற்றை நாளே' என்றபடி நான் இவ்வாறு அலைய வேண்டும் போலும்!

மன்னவனே இப்பிறப்பில் கண்டு மணந்திலனேல்,
இன்னமொரு பிறப்பி லாகிலும் ஏழையேன்,
தன்னைத் தனியே யிருத்துதவ மாற்றியுமன்
பொன்னன கலம் உள்ளுருகப் புல்லா தொழிவேனோ?

நீங்கள் பேசாதிருந்தாலும் யான் உம்மைப் பிரிந்திருக்கேன்; பிரிந்தாலுந்தரியேன். ஆகையால் உமது குரலை எழுப்பி எப்பொழுதும் போல என் என்னை அழைக்கா திருக்கிறீர்? உம்மை இக்கடுங்கானில் இனி எங்கு தேடுவேன்? எவரைக் கேட்பேன்? என் செய்கேன்?'' என்று நொந்துகொண்டே அம்மலை மீது வடதிசைநோக்கி நடக்கலானாள்; உடம்பு தெரியாது கள்குடித்தவள்போல நிலையற்று நடந்தாள்.

## அதிசயக் குறிப்புகள்

### CURIOUS FACTS

**சமாதானம் ஏற்பட்டால்.**—இப்போது நடக்கும் ஐரோப்பிய மஹாயுத்தம் முடிந்து சமாதானம் உண்டாகும்போது, ஒரு உடன்படிக்கை ஏற்படுமல்லவா? அவ்வுடன்படிக்கை சாதாரண தஸ்தவேஜுகளைப் போல் அச்சுயந்திரங்களைக்கொண்டு எழுதப்படாமல், முழுவதும் கையாலேயே எழுதப்படும். அனேக முத்திரைகள் இடப்பட்டு பச்சைப்பட்டுக் கயிற்றுல் கட்டப்படும். ஒவ்வொரு பிரதியும் "மஹாபரிசுத்தமும், ஒன்றானதுமான திரித்வத்தின் பெயரால்'' என்று தொடங்கப்படும். துருக்கி ராஜ்யம் சேருமாதலால், அதற்குக் கொடுக்கப்படும் பிரதியில் "ஸர்வேசுவரனுள் அல்லாவின் பெயரால்'' என்று ஆரம்பமிருக்கும். எத்தனை கட்சிக்காரர்கள் இருக்கின்றனரோ அத்தனை பிரதிகள் தயாராகும். அசல் பிரதிகளைப் பத்திரமாய்க் காப்பாற்றுவார்கள். அடிக்கடி வேண்டியிருக்கும் உபயோகத்துக்காக அச்சடிக்கப்பட்ட பிரதிகளை வைத்துக்கொள்வார்கள்.

ஒவ்வொரு அசல்பிரதியும் இங்கிலீஷ், பிரஞ்சு, இடாலியன், ஜர்மன், ருஷியன் முதலிய பாஷைகளில் குறுக்கே கோடுபோடப்பட்ட பத்திகளில் எழுதப்படும். தர்ஜுமாக்கள் வெகு சரியாகவிருக்கும்.

இந்த உடன்படிக்கைகளில் அந்தந்தத் தேசத்து அரசர்கள் கையெழுத்து வைப்பதில்லை. அதற்கென்று நியமனம் பெறும் உத்தியோகஸ்தர்கள் கைச்சாத்திடுவார்கள்.



**உலக முடிவு:**—லண்டன் நகரத்தில் குருவாக இருக்கும் எம். பாக்ஸ்டர் என்பவர், 1929-ம் ௵ மே௴ 2-ம் தேதியாவது, 1931-ம் ௵ ஏப்ரல்௴ 9-ம் தேதியாவது உலகம் முடிவடையுமென ஜோஸியம் சொல்கின்றனர். இப்படிப்பட்ட ஜோஸியங்களை நாம் பன்முறை கேட்டிருக்கிறோம். ஆனால் உலக முடிவு மட்டும் நேரவில்லை.

* * *

**அரசுபெறும் அதிர்ஷ்டம்.**—சாமர்த்தியத்தால் சில துணைவர்களைச் சேர்த்துக் கொண்டு, ராஜ்யங்களைக் கவர்ந்துகொண்டோ புதியதாக ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டோ, அரசரானவர்கள் சரித்திரங்களை நாம் கேட்டிருக்கிறோம். அவ்வாறன்றி, அதிருஷ்ட வசத்தால் அரசரானவர்களும் சிலர் இருக்கின்றனர். உதாரணமாக, நூறு வருஷங்களுக்கு முன்னால் கப்பலோட்டியான ஜேம்ஸ் புரூக் என்பவர், போர்னியோ தீவிலுள்ள ஸாரவாக் நாட்டுக்கு அரசரானார். இப்போது அங்கு அவரது மருமகன் சார்லஸ் புரூக் என்பவர் ராஜ்யபாரம் வகித்து வருகிறார்.

கோகோஸ் அல்லது கீலிங் தீவுகளுக்கு இப்போது அரசராக விருப்பவருடைய மூதாதையான ஜியார்க் குளினீஸ் ராஸ் என்பவர் ஒரு ஸ்காட்டிஷ் கனவான். 1825-ல் அவர் அங்கு சென்றபோது அத்தீவில் உள்ள ஜனங்களுக்கு அதிபதி ஒருவருமில்லாததைக் கண்டு, தாமே அவர்களுக்கு அரசரானார். இவரில்லாத சமயத்தில் வேறொருவர் 'ஹேர்' என்பவர் அங்கு வந்து நாட்டைக் கைக்கொண்டதும், ராஸ் அரசர் சண்டைபோடாமல் அவருடன் சேர்ந்து ராஜ்யபாரம் வகித்தனர். ஆனால் கொஞ்சகாலத்துக் கெல்லாம் ஹேருக்கு இந்த வாழ்க்கை புளித்துப்போயிற்று. போகவே ராஸ் சுயேச்சாதிகாரி யானார். அது முதல், ராஸ் வம்சத்தாரிடம் அவ்வ்ராஜ்யம் இருந்து வருகிறது.

சைன்யத்தில் சமையக்காரனாக விருந்த டாமஸ் ஓநீல் என்பவர் பஸிபிக் ஸமுத்திரத்திலுள்ள 'யாப்' தீவின் அரசியுடன் கொஞ்சகாலம் வாழ்ந்து, பின்னர், ஸென்ட் டேவிட்ஸ் என்னும் தீவுக்கு அரசராயிருந்தனர். ஆனால் அவர் கதி இன்னவாயிற்றென்று தெரியவில்லை. சமுத்திரத்தில் மூழ்கிவிட்டார் போலும்.

* * *

**தேசபக்தி.**—தேசபக்தியால் அபூர்வ காரியங்களைச் செய்த ஸ்திரீ புருஷர்கள் அனேகரிருக்கின்றனர். 1870-ம் வருஷத்தில் ஜர்மானியருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் சண்டை நடந்தது. பிதிவியர்ஸ் என்றவிடத்தில் ஜர்மானியப் போர்வீரர்கள் நுழைந்து, அட்டூழியம் செய்யத் தொடங்கினர். அங்கு இருந்த தந்தி யாபீஸில் "டோபு'' என்ற பதினெட்டு வயதுள்ள நங்கை அதிகாரியாக விருந்தாள். ஜர்மானியப் போர்வீரர்கள் அவளை வெருட்டிவிட்டு வேறொரு அறையில் போட்டுப் பூட்டிவைத்தனர். அவ்வறையின் வழியாகத் தந்திக்கம்பிகள்போய்க்கொண்டிருந்தன. டோபு விடத்தில் தந்தியைக் கேட்கும் சிறுயந்திரம் ஒன்றிருந்தது. உடனே அதன் உதவியால், அவள் ஜர்மானியர் அடிக்கும் சங்கதிகளையெல்லாம் தெரிந்துகொண்டு, தனது ராஜாங்கத்தாருக்குத் தெரியப்படுத்தினாள். இந்தக் குற்றத்துக்காக அவள் ஜர்மானியரால் மரண தண்டனை விதிக்கப் பெற்றாள். ஆனால் அத்தண்டனையை நிறைவேற்று முன்னால் ஜர்மானியருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் சமாதானம் உண்டானபடியால், 'டோபு' உயிர்பெற்றாள். இந்த அரிய வேலைக்காக அவள் 1878-ம் வருஷத்தில், பிரஞ்சு பிரஸிடெண்டான மார்ஷல் மாக் மோஹன் என்பவரால் வெகுவாகச் சன்மானிக்கப்பட்டாள்.

* * *

**கழுத்துப்பட்டை:**—மேற்றிசை நாகரீக உடைகளில் கழுத்துப்பட்டை (Collar) என்பது ஒன்று. நம்மவர்களுக்கும் அது பழக்கத்தில் வந்துவிட்டது. உயரமான கழுத்துப்பட்டையைப் போட்டுக்கொள்வதால் நரம்பைப்பற்றிய தலைவலி வருகிறதென்றும், அப்படிப்பட்ட சமயங்களில் அவைகளை எடுத்துவிட்டால், தலைவலி நின்று விடுகிறதென்றும் ஒரு பிரஞ்சு வைத்தியர் கண்டுபிடித்திருக்கிறார். இவ்வித கழுத்துப்பட்டைகள் கழுத்தை நெருக்குகின்றன வென்றும் அதனால் தலைவலியும் கிறுகிறுப்பும் உண்டாகின்றன வென்றும் அந்த வைத்தியருடைய அபிப்பிராயம். அப்படியிருந்தும் கழுத்துப் பட்டையில் நம்மவர்க்குப் பித்து இன்னும் ஒழிந்தபாடில்லை.

* * *

**நியாயாதிபதிகளுக்கு விடுமுறை நாட்கள்.**—இங்கிலாந்தில் மாதம் ஒன்றுக்கு 6000 ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறும் நியாயாதிபதிகள் வேலை செய்யும் நாளும், வேலை செய்யாத நாளும் இன்னவையெனக் குறிக்கிறோம்:—

| | | |
|---|---|---|
| கிறிஸ்துமஸ் பண்டிகை | ... | 21 நாள் |
| ஈஸ்டர் | ... | 12 ,, |
| விட்ஸன் | ... | 10 ,, |
| பெரிய விடுமுறை | ... | 72 ,, |
| ஞாயற்றுக்கிழமைகள் | ... | 36 ,, |
| நியாயாதிபதிகள் வேலைசெய்வது | ... | 214 ,, |
| ஆக | ... | 365 ,, |

நமது நாட்டில், நியாதிபதிகள் சனிக்கிழமை வேலை செய்வதில்லை. கோடை ரஜாவும் அதிகம். ஆகவே, ரஜா விஷயத்தில், இங்கிலாந்து நியாயாதிபதிகளைக் காட்டிலும் நம்மவர்கள் பாக்கியசாலிகள். மற்றைய உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும் நியாயாதிபதிகள் பொதுவாகப் பாக்கியசாலிகள் என்பதைத் தனியாகச் சொல்லவேண்டியதில்லை.

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS AND NOTES

**பிரயாகைக் கும்ப மேலா**

பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை (கும்பகோணத்தில் நடக்கும் மஹாமகத்தைப்போல) பிரயாகையில் நடக்கும் கும்ப மேலா உற்சவம் நாளது மாதம் வெகு விமரிசையாய் நடைபெற்றது. பதினைந்து லக்ஷத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் திரிவேணியில் ஸ்நானம் செய்தனரென்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. ரயில் வசதி சரியாக இராதகாலத்திலும் இப்படிக் கூட்டங் கூடியதினின்றும் இவ்வுற்சவத்தின் மகிமை ஒருவாறுதெரியவரும். அனேகமாயிரம் ஸாதுக்களும் வந்திருந்தனராம். போலீஸ் பந்தோபஸ்துக்குக் குறைவில்லையாயினும் அலஹாபாத் "ஸேவ ஸமிதி" மூலமாக 750 "வாலண்டியர்கள்" செய்த அரியவேலை புகழ்ச்சிக்குள்ளடங்குவதன்று. இந்த ஸேவ ஸமிதியின் தலைவர் ஸ்ரீமான் பண்டித மதன மோஹன் மாலவியா ஆவார். கூட்டத்தை அடக்கியதிலும், காணமற் போனவரைத் தேடிக் கண்டுபிடித்ததிலும், இரவுபகலாகத் தண்ணீரிலேயே நின்று ஸ்நானஞ்செய்யும் குழந்தைகளும் ஸ்திரீகளும் தண்ணீரில் மூழ்கிப்போகாமல் காத்திருந்ததிலும், அபலைகளுடைய மானத்தைக் காப்பாற்றியதிலும், நோயாளிகளுக்கு வைத்தியம் செய்ததிலும் இந்த ஸேவஸமிதியின் வாலண்டியர்களுடைய செய்கையைப் புகழ்வதற்குப் ஆயிரம் நாக்கள் வேண்டும். ரயிலுக்குப் போகும் பிரயாணிகளுக்கு டிக்கட்டுகள் வாங்கிக்கொடுப்பதிலும், அவர்களுக்கு 'ஆகாரம்' குடிதண்ணீர் முதலியவற்றைப் பெற்று உதவியதிலும், பொதுவாக வேறுவிதசௌகரியங்களைச் செய்து கொடுத்ததிலும் இவர்கள் செய்த உதவி அளவுபடுவதன்று. இவ்வுதவியை பொதுஜனங்களும், கவர்ன்மெண்டாரும் போதுமானபடி கொண்டாடி, அங்கீகாரம் செய்ததே இவர்களுக்குப் பெரிய ஸன்மானமாயிற்று. இப்படிப் பல்விதத்திலும் பெருமையை அடைந்த ஸமிதியாருக்கு நாமும் நமது மனமார்ந்த வந்தனங்களைச் செலுத்துகின்றோம்.

* * *

**ஸர் ஸுந்தர லால் மரணம்**

அலகாபாத்தில் பிரபல வக்கீல்களில் ஒருவரும் அங்கு ஹைகோர்ட்டு ஜட்ஜாக இருந்தவரும், மஹாகியாதி பெற்றவருமான ஸ்ரீமான் ஸர் ஸுந்தரலால் காலமாயினர் என்பதைக் கேட்க வருந்துகிறோம். இந்த ஸ்ரீமான் நியாயவாதியென்று மட்டும் புகழ் பெறவில்லை. உயர்தரக் கல்வி விஷயமாகவும் அவர் பாடுபட்டது முதன்முதலில, அலஹாபாத் சர்வகலாசாலையின் உப சான்ஸலராகவும் பின்னர் காசி ஹிந்து சர்வகலாசாலையின் உப சான்ஸலராகவும் நியமிக்கப் பட்டதினின்றும் வெளியாகும். காலஞ்சென்ற ஸ்ரீமானுக்கு வயது அறுபதுக்கு மேலாயிற்று. திடீரென்று ஹிருதயம் நின்றொழிந்ததினால் நேர்ந்த மரணத்தைக்கேட்டு, நமது நாடு முழுவதும் துக்கிக்கும். இம்மஹானுடைய குடும்பத்தாருக்கு நாமும், நமது அபிமானிகளும், அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

* * *

**குழந்தைகளின் பாது காப்பு.**

தேசத்திலுள்ள சிறுவர் சிறுமியர்களுடைய தேகாரோக்கியத்துக்கு ஏற்ற பிரயத்தனங்களைச் செய்வது ராஜயாதிகாரிகளுடைய முதற் கடமைகளில் ஒன்றாகும். இதற்கனுகுணமாக இங்கிலாந்து தேசத்தில், சிசு மரணத்தைத் தடுக்கவும் சிறுவர்களுடைய தேக திடனை விருத்தி செய்யவும் வெகு விரிவான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பள்ளிக்கூடங்களில், அறிவைப் புகட்டக்கூடிய கல்வியோடு தேகதிடனை விருத்திசெய்யும் பயிற்சியும் அவசியம் வேண்டுமென்று திட்டம் செய்யப்பட்டிருக்கிறது. நமது நாட்டிலும் பள்ளிக்கூடங்களையொட்டி தேகப் பயிற்சிக்கான விளையாட்டிடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை நாம் அறிவோம். என்றாலும் சிறுவர்களுடைய தேக திடனைப்பற்றி அதிகமாகச் சிரத்தை எடுத்துக் கொள்ளப்படவில்லை. பரீக்ஷைப் பீதி பாட வகைகள், உபதேசிக்கும் முறை முதலியன போன்ற சில துர்த்தசைகள் நமது இளஞ்சிறார்களுடைய தேகதிடனைக் குறைத்துவிடுகின்றன. பொதுவாகவே, மற்றைய நாடுகளில் காட்டிலும் நமது நாட்டில் மனிதருடைய ஆயுள் பிரமாணம் குறைவானதென்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். அப்படியிருக்க, தற்கால நிலைப்படி பள்ளிக்கூடத்தைவிட்டுவரும் சிறுவர்களும் அங்கு படிக்கும் சிறுவர்களும், சோளக்கொல்லைப் பொம்மைகளைப்போல, திருஷ்டிக் குறைவால் மூக்குக் கண்ணாடிகளையும் இடக்குறைவால் எலும்பு மாத்திரமும் உடையவர்களாக இருந்தால் க்ஷேமமடைவது எப்படி? நமது பள்ளிக்கூடங்கள் சம்மந்தப்பட்டமட்டில், பிள்ளைகளுடைய தேகாரோக்கியத்துக்கும் அபிவிருத்திக்கும் ஏற்ற சில முயற்சிகளைச் செய்யவேண்டியது அவசியம். ஒவ்வொரு பள்ளிக்கூடத்தையும் ஒட்டி விளையாட்டிடங்கள் ஏற்படவேண்டும். அல்லாமல் ஒவ்வொரு பெரிய பட்டணங்களிலும் விளையாடுமிடங்கள் ஏற்படுமானால், தேசக்ஷேமம் விருத்தியாகுமென்பதற்குத் தடையில்லை. இவ்விட வசதி செய்து கொடுத்துவிடுவதோடு திருப்தியடையாமல் சிறுவர்கள் அங்குச் சென்று தேகப்பயிற்சி செய்யும்படியும் கட்டாயப் படுத்தப் படவேண்டும்.


# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி X } பிங்கள ௵ மாசி ௴ : : 1918-௵ மார்ச் ௴ { பகுதி 9


# நெஞ்சொடு நிகழ்த்தல்

## IN TUNE WITH THE INFINITE

நெஞ்சகமே நானோநீ நீயோநா னென்றிருந்தும்
வஞ்சகமா யுன்னை மறந்தேனே—தஞ்ச
முனக்கு நானென்பதுவு முண்மையே யுண்மை
யெனக்குநீ வேறா யிராய்.
—சொரூபசாரம்.

மாயையென் றொருத்தி தன்பால் மனனெனு மைந்தன் தோன்றித்
தூய நல் அறிவன் தன்னைத் தோற்றமின் றுக்கி வைத்தான்
தாயொடு தந்தை மக்கள் தாரமென் றிவர்பால் வைத்த
நேயமும் அவன்றன் னாலே நிகழ்ந்திடு நினைவு கண்டாய்;
அந்த நல் அறிவன் தன்னை அறிந்தவர் அறிஞர் ஆவர்.
—வில்லிபாரதம்

நாட்டமென் றேயிரு சற்குரு பாதத்தை நம்பு பொம்ம
லாட்டமென் றேயிரு பொல்லா வுடலை யடர்ந்த சந்தைக்
கூட்டமென் றேயிரு சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீர்
ஓட்டமென் றேயிரு நெஞ்சே வுனக்குப் தேசமிதே.
—பட்டணத்தார்.

உற்றா திருந்தென்ன பெற்றா ரிருந்தென்ன வுனக்குதவி
சற்று மிலையிலைச் சொன்னேன் சொன்னேனிது சத்தியமாய்ச்
செத்தாலும் வைத்தடி வாங்காமல் நிற்கச் செயம் பெறலாம்
கற்றார்குணங்குடிகொள்வாய்**மனக்கண்மணியே.
—குணங்குடி மஸ்தான்சாயபு.

மானிட ராக வரலரி தோர்மண் டலத்தினெறி
மானிடராக மிலாத வராதன் மலரயனூர்
மானிட ராக மத்தாலன்ப ராய வரங்கத்துளெம்
மானிட் ராக மலரடிக் காட்செயும் வாழ்வரிதே.
—திருவரங்கத்தந்தாதி

தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டி நாற்றி நரம்
பாலார்க்கை யிட்டுத்தசை கொண்டு மேந்த வகம் பிரிந்தால்
வேலாற்கிரிதுளைத்தோனிருதாளன்றி வேறில்லையே.
—கந்தாலங்காரம்.

உலையாப் பொறியும் புலனடங்கி யொன்று மனத்தி லுன்னதே
தலையாகிய போரநந்தத்தலைப்பட்டதனிரதன் மூழ்கி
அலையார் யோக மம்புவிடுநேரமரைமாத்திரையேனும்
நிலையாம் நீ போர் வீட்டைவர் நிலத்தில் பிறவாறிர வாறே—நிஷ்டானு பூதி.

வாழ்வர்கண்டீர் நம்முளைவர் வஞ்சமனை வாழ்க்கை
யாவரானு மிகழப்பட்டிங் கல்லலில்வீ ழாதே
மூவராயு மிருவராயு முதல்வரவ ரேயாந்
தேவர் கோயிலெதிர் • கொள்பாடி யென்பதடை
வோமே—சுந்தரமூர்த்திகள்.

பற்ற லாம் பொருளே பரம் பற்றினால்
உற்ற மாதவர்க் குண்மையை நல்குமே
மற்றும் வேறுள மார்க்க மெலா மெடுத்
தெற்று வாய்மன மேகதி யெய்தவே
—தாயுமானவர்.

தேறு நெஞ்சின னுய்த்தன செயலலால்
வேறு கண்டறியா மெய்யறிவினு
லூறிலிந்த வுடம்புடன் வேறு பெற்
றேறி நின்றவனே யின்பமெய் துவான்
—பகவற்கீதை.

# விவேக போதினி

தொ. 10] பிங்களஹு மாசிமீ [ப. 9


## ஸ்ரீகிருஷ்ணாவதார மஹிமை

### THE GREAT WORLD MASTER

ஸ்ரீகிருஷ்ணபகவானது வாழ்க்கைக் கட்டுள் அவாவுடன் ஆழ்வதன்முன்பு, இரண்டொரு விஷயம் யாவர் மனத்திலும் எழாதிராது. கண்ணபிரான் விஷ்ணுவின் அவதாரமாகக் கொண்டாடப்படுவது உலகப்பிரஸித்தம். அவதாரம் என்றால் என்ன? அதன் சிறப்பு எதனால்? ஸ்ரீ கிருஷ்ணர் அவதாரமானால் அவரை அவதாரமாகக் கொண்டாடக் காரணங்கள் எவை?—இவ்வினாக்கள் எல்லாம் ஸ்ரீ கிருஷ்ணரைப்பற்றி எண்ணுபவர்களுடைய மனதில் தோன்றுவன நியாயமே. மனதைக் கவலையுள் ஆழ்த்தக்கூடிய அவ்வினாக்களைச் சற்றுக் கவனிப்போமாக.

முதலில், அவதாரம் என்னும் பதம் "கீழ் இறங்குவது" எனப் பொருள்படும்; அதாவது மேல் நிலையிலிருந்து கீழ்நிலையில் தோன்றுவதாம். இரண்டற்று விளங்கும் எம்பெருமான், தமது இணையற்றுயர்ந்த பரம நிலையிலிருந்து, தமது கருணைப் பெருக்கின் முதிர்ச்சியினால், தாழ்ந்த நிலையில் தோன்றுவதற்கே நாம் இப்பதத்தை உபயோகப்படுத்துகிறோம். அவ்வாறு கடவுள் தாழ்ந்த நிலையில் தோன்றுவது தமது பக்தனைக் காக்கவோ அல்லது உலகில் ஏற்பட்ட அதர்மங்களை ஒழித்துத் தர்மத்தை நிலைநாட்டவோ தானாகும். இந்த அபிப்பிராயங்களுக்கு நமது வேதங்களே ஆதாரங் காட்டுகின்றன. ருக் வேதம் "பிறப்பற்று விளங்கினும், பல உருவத்துடன் அவர் தோன்றுகிறார்" என முறையிடுகிறது; அவர் தமது இச்சாமாத்திரத்தில் வேண்டிய உருக்கொள்ளுவரென்பதே இதன் பொருளாகும். வேதங்களிலேயே நேர்படச் சில அவதாரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. கேனோபநிஷத்தில் அஸுரர்களைக் கடவுளது அநுக்கிரஹத்தின் மூலமாகவென்று, அதன் காரணமாகக் கர்வங்கொண்டு மயங்கிக் கடவுளை மறந்து, தம்மைத் தாமே கடவுள் என மதித்துத் தருக்கிக்கிடந்த தேவதைகளின் முன்பு, ஒர் வயோதிகர் உருவமாகக் கடவுள் தோற்றித் தமது விசித்ரச் செயலின் பெருக்கால் அவரது மௌட்யத்தை ஒழித்து அறிவூட்டிய விஷயமும், சதபாத பிராஹ்மணத்தில் தேவர்களை வென்று அவர்க்குச்சிறிதுமிடந்தராது எல்லாந்தமக்கேகொண்ட அஸுரர்கள்முன்பு, தேவர் வேண்டுகோளுக்கிரங்கி வாமன உருவுடன் விஷ்ணுபகவான் தோன்றித் நமக்குப் படுக்கச் சிறிது இடங் கேட்டு அவ்வாறே அவ்வஸுரர் தர, வரவரத் தான் வளர்ந்து நெடிய வுருவாகி உலகமுழுதையுங் கொண்டு தேவர்க்கீந்ததும் காணப்படுகின்றன. ஆகக், கடவுள் தம்மை வழிபடுவோரது குறையைத் தீர்க்கவும், அதர்மத்தை யொழித்துத் தர்மத்தை நிலைக்கச்செய்யவும், தமது உயர்ந்த அந்தஸ்திலிருந்து, கருணைப் பெருக்கின் பெருமையால், தாழ்ந்த உருவங்கொள்ள மனமிரக்கங் கொள்கிறார் என்பதற்கு வேதமே ஆதாரமாக இருப்பது வெளிப்படையாகும்

குணமற்று விளங்கும் கடவுள் உலகைக் காத்தல் நிமித்தம் தமது அவஸரத்தில் ஸகுணமாகக் காணப்படுகிறார். அவரது அளவற்ற மாயையால் ஏற்படுவதே அதுவாகும். பிர்க்ருதியாகிய உலகமானது மாயையால் ஏற்படுவது. மாயைக் கடவுளின் இச்சாமாத்திரத்தில் ஏற்படுவது. ஆகக் கடவுள் விரும்பினால் மாயை அழிய, இவ்வுலகம் உருவற்று விளங்குமென்பது நிச்சயம். நிர்க்குணராக விளங்கும் கடவுள் உலகில் அவதரித்தால் அவர் நம்மைப் போலத் தோன்றினும், ஸாதாரண மனிதனுடைய அல்லது வேறுஜீவஜந்துவின் உருவமாக ரூபங்கொள்ளினும், அவ்வுருவங்கள் கருமவாஸனையால் ஏற்பட்டவையன்று; அவரது இச்சாமாத்திரத்தில் ஏற்பட்டவையேயாகும். அவ்வாறு அவர் உருவங் கொள்வது ஏதோ ஒர் அவஸர நிமித்தமேயாம். இவ்வாறு அவஸரங்களில் தோன்றும் உருவங்களுக்கே அவதாரமெனப் பெயர் என வேதங்களிருந்து நாம் அறியலாம்.



ஜனங்களது மனதைக் கவர்ந்து கடவுளிடம் ஈடுபடச் செய்யும் எண்ணத்துடன் புராணங்கள் மேற்சொன்ன வேதத்தினுட்கண்ட நோக்கத்தை மேலும் விரித்து வெளியிடும். எங்கும்விளங்கும் பரம்பொருள், உலகிலுள்ள பல்லுயிரும், நன்னெறியில் நடந்து, அதனால் மேல்நிலை அடைவதன் நிமித்தம் போருள் ஆண்டு வெளியிட்ட தர்ம மார்க்கத்திலிருந்து, காலா காலங்களில் குணபேத ஏற்றத்தாழ்வின்காரணமாக, உலகில் அதர்மம் மேலிட்டுத் தர்மங்குன்றி விளங்கும் ஸமயங்களில், பரம காருண்யத்தினால் தூண்டப்பட்ட எம்பெருமான் அச்சமயத்திற் கேற்ற உருவத்துடன் உலகில் தோன்றி அதர்மத்தை ஒழித்து, தருமத்தைக் காத்து, அதை நிலைநிறுத்துவதே அவதாரங்களின் பெருமையும் செயலும் என அவை வெளியிடும். இவ்வாறு தோன்றும் அவதாரங்கள் அவ்வவ்வவஸரங்களுக் கேற்றவாறு கொண்டாடப்படும். முக்கியமாக அவ்வவ்வவதாரங்கள் தமது தெய்வீகத்தில் உள்ள உணர்ச்சியின்படியே அவை அம்சம் பூர்ணம் என இரண்டாகப் பாவிக்கப்படும்.

கடவுளின் குணத்தில் சில அவஸரங்கள் மாத்திரம் தோன்றுவதே அம்சாவதாரமாகும். இவ்வவதாரத்துள்ளும் வேற்றுமையுண்டு. அதற்கு அவ்வவற்றின் தெய்வீக உணர்ச்சியின் ஏற்றத்தாழ்வே காரணம். உதாரணமாகப் பலராமரினும் ராமர் உயர்வாகக் கொண்டாடப் படுவதேயாம். இவ்வாறன்றி இவ்வவதாரங்களை அவஸரம், தீர்க்க அவஸரம் என இரண்டுவிதமாகப் பிரிப்பது முண்டு. ஏதோ ஓர் கார்யத்தின் நிமித்தம் தமக்குப் பிடித்த உருவுடன் தோன்றி, கார்யமுடிந்ததும் மறைந்துவிடும் அவதாரங்களே அவஸராவதாரங்களாகும். மற்று மானிட உருவங்கொண்டு, தமது ஆயுள்பர்யந்தம் ஜனங்களிடை வாழ்ந்து தர்ம மார்க்கத்தை வெளியிட்ட அவதாரங்களே தீர்க்க அவஸரங்களாகக் கொண்டாடப்படுவன. சிவபெருமான் பக்தர்களுக்காகத் தோன்றிய அவஸரங்களும், விஷ்ணுமூர்த்தி மீன், ஆமை முதலிய உருவங் கொண்டதும் அவஸராவதாரங்களாகும்; இராமாவதார முதலியன தீர்க்க அவஸரங்களாம். பரம்பொருளின் உணர்ச்சி நீங்காது விளங்கும் அவதாரங்களே பூர்ணாவதாரமெனப்படுவது. ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் பூர்ணாவதாரமென்பது நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

வைஷ்ணவ சித்தாந்திகள் அவதார மஹிமையைக்கொண்டாடுமிடத்து "பரமபதமாகிய வைகுண்டமென்னும் அழியா உலகில் நித்ய ஸூர்யக்கூட்டங்களால் அமோஹமாகப் பூஜிக்கப்படும் பரமபதநாதன், ஜீவர்கள் உஜ்ஜீவித்து மோக்ஷ ஸாம்பிராஜ்யமாகிய நித்யஸூர்யருள் நிலைக்கும்பொருட்டுத் தமது பரமகாருண்யகுணப்பெருக்கால் அவதரிப்பது ஸஹஜம். அவ்வாறு தோன்றும்போது அவர் தாமே நேரே வரினும் வரலாம்; அல்லது அவரது அம்சமாத்திரமாகத் தோன்றினாலும் தோன்றலாம்; அல்லது அவருடன் சேஷித்துச் சேதனமாக விளங்கும் ஆபரணாதிகளும் எம்பெருமானது லீலையின் பெருக்கால் தோன்றினும் தோன்றலாம். ஆனால் தாமே வருங்காலத்து, அவரைச் சூழ்ந்திருக்கும் நித்யஸூரிகள், தேவதைகள் இவரெல்லோரும் இவ்வுலகில் ஏற்ற உருக்கொண்டு பரமபதநாதரது திருஅவதாரகாலத்து உதவிசெய்ய வருவர் என்பது திண்ணம்" என வெளியிடுவர்: இவ்வாறு வந்த அவதாரங்கள் இராமலக்ஷ்மண பரத சத்ருக்னுள் நம்மாழ்வாராதிய ரெனவும் அவர் கூறுவர்.

அவதார புருஷர்களுக்கும் நமக்கும் உள்ள வித்யாஸமென்ன என்பது நாம் கவனிக்க வேண்டிய விஷயம். முன்னமேயே அவர் சரீரம் நமதுடல்போல் அல்லாமல், முக்குணக் கலப்பற்று, அல்லது மிகக் குறைவாகப் பெற்றதாய், கருமவாஸனையால் ஏற்படாது, கடவுளின் இச்சாமாத்ரத்தால் ஏற்பட்டதென்று நாம் கவனித்தோம். ஆகவே அவதாரங்கள் அப்ராக்ருத திவ்ய சரீரங்கள் கொண்டவை; அவற்றுள் விளங்கும் ஆத்மா, கர்ம ஸம்பந்தப்படாததாகும் எனவே அவற்றின் தோற்றமும் மறைவும் எல்லாம் இருந்தாலும், நமக்கிருப்பதுபோ லல்லாது உருவால் மாத்திரம் தோன்றுவனவேயன்றி உண்மையிலன்று. அவரது வாழ்க்கை பலவிதத்திலும் உலக வாழ்க்கைக்கு மாறுபட் டிருப்பினும்

ஆழ்ந்து நோக்கும்போது வேறாக விளங்கும். அவர் செயல் முழுதும் தெய்வீகம் பாய்ந்து அவர் கலந்து விளங்கிய ஜனங்களையே மயக் கித்திகைக்கச் செய்யும். இத் தெய்வீகப் பெரு மையே பூர்ணாவதாரத்தின் சிறப்பாகும்.

ஸ்ரீ கிருஷ்ணரது வாழ்க்கையில் தெய்வீகம் விளங்காத காலமெது? அவர் பிறந்தபொழு தே காவலாளர்கள் மெய்ம்மறந்து அயர்ந்து கிடக்கவில்லையா? அவர் தாய் தந்தையரது பந் தங்களாகிய தளைகள் தாமே பிரியவில்லையா? யமுநாநதி வேகங் குன்றிக் குழந்தைக் கிருஷ் ணனைக்கொண்டு செல்ல வஸுதேவர்க்கு வழி விடவில்லையா? குழந்தையாக விளங்கியகாலத் தெத்தனை அஸுரர்களைத் தொட்டிலிலிருந்தே ஒழித்தனர்? கர்வங்கொண்டு விளங்கிய இந்தி ரனை அடக்க விரலால் மலை யெடுத்துத் தடுக் கும் தெய்வீகம் யாரிடத்தது? தாய் வெருட்ட வாயைப் பிளந்து அண்டமெல்லாம் காட்டி அவள்கண் விண்டிடும்படி செய்த கதை நாம் அறியோமா? தர்மரக்ஷணார்த்தமாக அவர் காளியன் தலைமே லாடியது வியப்பிலும் வியப் பன்றோ? கௌரவ ஸபையிலும், யுத்தரங்கத்தி லும் மற்றிடத்தும் அவர் வானுற உயர்ந்து தமது விச்வரூபத்தைக் காட்டித் தமது தெய் வீகத்தை வெளியிட்டதை யாரறியார்? கூ வென்றலறிய திரௌபதிக்கு அளவற்ற வஸ் திர விருத்தியையும், உணவற்ற அக்ஷய பாத் திரத்துள் அன்னம் வளரும்படியும் செய்த அவரது தெய்வீகத்தை மறுக்கவும் முடியுமா? மேலும் ஸ்ரீ கிருஷ்ணர் தமது தெய்வீகத் தன் மையின் உணர்ச்சியை வெளியிட்டுக்கொண் டே, தனித்து உயிர் தத்தளித்துத் தன்னைக் காணும் ஆவலில் அலையும் ஆப்தர்கள், தம்மை யுணர்வதன்பொருட்டு, யுத்தரங்கத்தில் அர்ஜு னன், கணக்கற்ற காம்ய ஆசைகளிலுழன்று, உலகில் ஜனங்கள் ஈஷணங்களில் ஈடுபட்டுத் தம்முள்தாம் ஐம்புலன்களால் ஏற்படும் போ ரிடைப் பட்டுத் தத்தளிப்பதைப்போல, நின்ற காலத்து, அவனுக்குபதேசிப்பதுபோல,

மாயையைன் றுருத்த தன்பால்
மனமொழி மைந்தன் றோன்றித்
தாயருள் வழியன் றன்னைத்
தோற்றமின் றுக்கி வைத்தான்
றூயாம் தந்தை மக்கள்
தாரமென் றிவர்பால் வைத்த

நேயமு மவன்ற னூலே
நிகழ்ந்ததோர் நினைவு கண்டாய்.
குயின்றனவும் பொறியாய் நின்று
குறித்தவைம் பொருளுந் தானே
பயின்றமுக் குணங்க ளோடு
மறுவகைப் படைக ளோடும்
பயின்றர சாளு மந்த
மனமெனும் பகைவ னுங்குத்
துயின்றபோ தொளித்து நின்ற
தோன்றலுந் தோன்றுங் கண்டாய்.
அந்தநல் லறிவன் றன்னை
யறிந்தவ ரறிரு ராவார்
தந்தையால் வகுக்கப் பட்ட
சராசரப் பொருள்க டோறும்
வந்தவான் றீம்பால் நெய்போ
லுயிர்க்குயி ராகி வாழும்
பந்தம துணர்ந்து நேரே
பார்க்குங்காற் பகையார் நண்பார்.
உம்பரு முனிவர் தாமும்
யாவரு முணரா வொன்றை
யிம்பரின் றுனக்கு நானே
யிசைவுற வுணர்த்தா நின்றே
னைம்பெரும் பூதத் தாலும்
அமைத்தன வுடலம் யார்க்கும்
நம்பனு மொருவ னுள்ளே
ஞானியாய் நடத்து கின்றான்.
என்னைநீ புகலக் கேண்மோ
வெங்குமா யாவு மாகி
மன்னிய பொருளும் யானே
மறைக்கலா முடிவும் யானே

என யாவர்க்கும் உபதேசஞ்செய்யும் பரமா சார்யனாக விளங்கினர். ஆகவே அவரது வாழ்க்கை வழியைக் கவனித்து அவர் உபதே சங்களை வழிபடுவது ஆத்மலாபந்தரும் என் பது திண்ணம். ஆனால் அவரை உபாஸிக்கு மிடத்து "அவர் நம்மைப்போன்ற ஒரு மனி தனே. அவரது தொழில்களில் சில நமது புத் திக்கு யுக்தமாகவும், சில அயுக்தமாகவும் இருக்கின்றன" என்று அலக்ஷியஞ் செய் யாது அம்முரண்பட்டவைகளாகக் காணப் படும் செயல்களின் உண்மைப் பொருளைக் காண்பதே நமது கடமையாகும். அவ்வாறு செய்வதே நாம் மேனிலை அடைவதற்குப் பெரும் ஏணியாகவிருந்து பின் அந்நிலையடைந் ததும, அவதாரங்களாகப் பாவிக்கப் படுவன மனத்தை யுயர்த்தி அடங்க வழிகாட்டவந்த தோற்றங்களே என அறிந்து, அவ்வரிய நோக்கத்திலாழ்ந்துவிளங்கச் செய்யுமென் பது அநுபவஸித்தம்.



# இந்திய பூர்வ அரசியல்

## ANCIENT HINDU POLITY

[ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணிய ஐயர், எம். ஏ.]

"படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு."—திருக்குறள்.

சேனை, நாடு, பொருள், மந்திரி, நட்பு, கோட்டை என்ற ஆறு அங்கங்களையு முடை யவன் மன்னருள் ஆண்சிங்கம்போல்வானு வான். அவற்றுள் ஒன்று இல்லாவிடினும் அரசநீதி செல்லாதென்பதை யுணர்த்தவே ஆறுமுடையான் என்றார். இந்த ஆறு அங்கங் களில் அமைச்சுநீக்கி மற்ற ஐந்து அங்கங்களை யும் காத்துப் பெருக்கும் இயல்புடையனாத லின் அமைச்சன் அரசியலுக்கு முக்கிய அங்கமாகிறான்.

ஒரே சக்கரத்தையுடைய வண்டியானது எவ்வாறு அசையாதோ, அவ்வாறே உதவி யின்றி அரசநீதி செல்லாததலால், அரசன் அமைச்சர்களை நியமித்து அவர்களது அபிப் பிராயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டு மென்றும், இரண்டே கண்களையுடைய இந் திரனை ஆயிரங்கண்களுடையான் என்பதற் குக் காரணம் அவனது மந்திராலோசனை சபையில் கண்களனைய ஆயிரம் ரிஷிகளுளர் என்பதே என்றும் கௌடில்யரது அர்த்த சாஸ்திரத்திற் கூறப்பட்டிருக்கிறது.

தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவ நாய னாரும் அமைச்சருக்குக் கண்களை உவமையா கக் கூறுகிறார்.

"சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்."—திருக்குறள்.

மந்திரிகளைக் கண்களாகக்கொண்டு தனது ராஜ்ய பாரத்தை நடத்தலால் அரசன் மந்திரி களை ஆராய்ந்து தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டும். தானே ஆலோசனை செய்யவல்ல வனாயினும் அளவிறந்த தொழில்களால் ஆகு லமெய்தும் அரசனதுபாரம், அதுவே தொழி லாய அமைச்சராலல்லது இனிது நடவாமை பற்றி அவரைக் கண்ணாகக்கூறினர்.

இவ்வாறுஅரசியலுக்கு முக்கிய அங்கமான அமைச்சரை எவ்வாறு தெரிந்தெடுத்துக் கொள்வதென்பதைப்பற்றி நமது பூர்வ இராஜ நீதிசாஸ்திர நிபுணர் பலர் பலவித அபிப்பிரா யப்பட்டிருக்கிறார்கள். பரத்வாஜ முனிவர், "அரசன் தன்னுடன் பள்ளியில் படித்த தோழர்களையே அமைச்சர்களாக நியமித்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், அவனுக்கு அவர்களது யோக்கியகுணமும் சக்தியும் நே ரில் தெரியுமாதலால் அவன் அவர்களை நம்ப லாம்" என்று கூறுகிறார்.

ஆனால் விசாலாக்ஷர், "அது சரியல்ல. ஏனெனில், அவர்கள் அரசனது விளையாட்டுத் தோழர்களாகவு மிருந்திருப்பார்க ளாதலால் அவர்கள் அவனை இகழலாம். ஆதலால் யாரு டையஇரகசியங்கள், தனக்கும் அவர்களுக்கும் பொதுவானவையானபடியால் தனக்கு நன் றாய்த் தெரியுமோ, அவர்களையே அரசன் அமைச்சர்களாக நியமித்துக் கொள்ள வேண் டும். ஏனெனில் அரசனுக்குள்ள வழக்கங் களையும் அவகுணங்களையுமுள்ள அவர்கள் அரசன் தங்களது இரகசியங்களை வெளி யிட்டு விடுவானேயென்ற பயத்தால் அவனு க்கு ஒருநாளும் தீங்கிழைக்க மாட்டார்கள்" என்று அபிப்பிராயப்படுகிறார்.

பராசரர், "இத்தகைய பயம் பரஸ்பர மாத லால், அரசனும் அவர்கள் தனது இரகசியங் களை வெளியிட்டுவிடுவார்களோவெனப்பயந்து அவர்கள் நற்கருமம் செய்யினும் தீய கருமஞ் செய்யினும் அவர்களது இஷ்டப்படியே நடக் கக்கூடும். ஆதலால் தனக்குப் பிராணபத்து நேர்ந்த காலத்தில் யார் தன்னிடத்து விசுவா சம் பாராட்டி உதவிபுரிந்து தங்களுடைய இராஜ விசுவாசத்தை ரூபித்தார்களோ அவர் களையே அரசன் அமைசர்களாக நியமித் துக்கொள்ள வேண்டும்" என்று சொல்லு கிறார். பிசுனர், "அது சரியல்ல. ஏனெனில் அத்தகைய நடத்தை விசுவாசத்தைக் காட்டு மேயன்றிப் புத்தி சாதுர்யத்தை உணர்த் தாது. ஆதலால், யார் பொருளீட்டும் தொழில் செய்ய நியமிக்கப்பட்டபொழுது வழக்கமான இறையையோ அதைக் காட்டிலு மதிகமான இறையையோ வசூலித்துத் தங்களது திற மையை ரூபித்திருக்கிறார்களோ அவர்களையே அரசன், அமைச்சர்களாக நியமிக்கவேண்டும்" என்கிறார்.

கௌண பதந்தர், "அவ்வாறு செய்வதும் சரியல்ல. ஏனென்றால், அப்படிப்பட்டவர்கள் மற்றும் அமைச்சருக்கின்றியமையாத குணங் களுடையவரா யிருக்கமாட்டார்கள். ஆதலால்

யாருடைய தகப்பனாரும், பாட்டனாரும் அமைச்சர்களா யிருந்தார்களோ அவர்களையே அரசன் அமைச்சர்களாக நியமிக்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள் முந்திய சம்பவங்களையறிந்திருப்பார்களாதலாலும், அரசனுடன் ஸ்திரமான சம்பந்தமுள்ளவர்களாயிருப்பார்களாதலாலும், ஒருக்கால் அரசனால் அவமதிக்கப்பட்டாலும் அவனைக் கைவிடவே மாட்டார்கள். இத்தகைய விசுவாசம் வாயில்லாப் பிராணிகளிடத்தும் காணப்படுகிறது" என்கிறார்.

வாதவியாதி என்பார், "அதுவும் சரியல்ல. ஏனெனில் அரசனைத் தங்களுக்கு முழுவதும் உட்படுத்திக்கொண்டிருப்பார்களாதலால் நாங்களே அரசனது அதிகாரத்தைச் செலுத்தத் தொடங்குவார்கள். ஆகையால் இராஜ தந்திர சாஸ்திரத்தில் வல்லவராயுள்ள புதிய மனிதர்களையே அரசன் மந்திரிகளாக நியமித்துக் கொள்ளவேண்டும். அத்தகைய புதிய மனிதர்களே அரசனை உண்மையாகவே அரசு நடத்துபவனாக மதிப்பவர்களாயும் அவனையவமதிக்கத் துணியாதவர்களாயும் மிருப்பர்" என்று சொல்லுகிறார்.

பாகுதந்தீ யென்னும் சீமாட்டி, "அதுவும் சரியல்ல. ஏனெனில் இராஜதந்திர சாஸ்திரத்தைப்படித்தறிந்ததனால் உண்டாயஞானத்தை மட்டுமே உடையோனையும், அச்சாஸ்திர சம்பந்தமான அனுபவம் சற்றுமில்லாதவனையுமுள்ள ஒருவன் தொழில் செய்யப்புகின், அவன் அபாயகரமான பிசகுகளைச் செய்யக் கூடும். ஆதலால் உயர்குலத்தில் பிறந்தோராயும் அறிஞராயும் மனத்தூய்மையுள்ளவராயும், தைரியமும், இராஜபக்தியு முள்ளவர்களாயு மிருப்பவர்களையே அரசன் அமைச்சர்களாய் நியமித்துக் கொள்ளவேண்டும்; ஏனெனில் அமைச்சுத் தொழிலுக்கு நியமனங்கள் முற்றிலும் யோக்கியதையையே பொருத்தனவா யிருக்கவேண்டும்" என்று கூறுகிறாள்.

அக்காலத்தில் இராஜ தந்திர சாஸ்திரத்தில் நிபுணரான கௌடில்யர் என்ற சாணக்யர் மேற்கூறிய பாகுதந்தீ யென்ற சீமாட்டியின் கோட்பாட்டையே அங்கீகரித்துப் பின் வருமாறு கூறுகிறார். "இது எல்லா விஷயத்திலும் திருப்திகரமாயிருக்கிறது. ஏனெனில் ஒரு மனிதனுடைய திறமையானது அவன் தொழில்செய்வதில் ஏற்கெனவே காட்டியுள்ள திறமையிலிருந்தே ஊகிக்க வேண்டியதாயிருக்கிறது. வேலைக்குப் பொறுக்கி யெடுக்கப்பெற்றவர்களின் திறமை தாரதம்யத்தையும் வெவ்வேறு அமைச்சர் செலுத்த வேண்டிய அதிகார வரம்புகளையும் அவர்கள் எந்தெந்தக் காலங்களில் எவ்வெவ் விடங்களில் தொழில் செய்ய வேண்டுமென்பதையும் கவனித்து, அவர்களை அவ்வவ் வமைச்சர்களாக நியமிக்க வேண்டும். ஆனால் அவர்களை மந்திரிகளாய் நியமிக்கக்கூடாது."

"சுயதேசப் பிறப்பு, உயர்குலப் பிறவி, செல்வாக்கு, கலைஞானம், முன்னறிவு, ஞானம், நல்ல ஞாபகசக்தி, தைரியம், சொல்வன்மை, தந்திரம், புத்திநுட்பம், பெருந்தன்மை, பொறுமை, குணத்தூய்மை, பக்ஷம், இராஜபக்தி, நல்லொழுக்கம், தேகபலம், ஆரோக்யம், சலனமின்மை இக்குணங்களும், வெறுப்பு, சத்துருத்துவம் இவைகளைப் பிறர் மனத்திலுண்டாக்காத குணங்களுமே அமைச்சர்களின் இன்றியமையாத குணங்களாகும்."

—அர்த்த சாஸ்திரம்.

மேற்கூறிய குணங்களை ஒருவனுடைத்தாயிருக்கிறானா இல்லையா வென்பதை நெருங்கிய நண்பர்கள், நம்பத்தக்க அயலார்கள், பண்டிதர்கள் இவர்களை விசாரித்தும், அவனைத் தொழில் செய்யவிட்டுப் பரீக்ஷித்தும், அவனுடன் நெருங்கிப் பழகியும் தெரிந்து கொள்ளவேண்டும். இவ்வாறு தெரிந்தெடுத்த பின்னரும் அவர்களது மனவியல்பைத் தந்திரங்களினால் ஆராய்ந்தறியவேண்டுமென்று பெரியோர் விதித்துளர். இதைக் குறித்து அர்த்தசாஸ்திரத்தில் கௌடில்யர் பின் வருமாறு கூறுகிறார்:— "முக்கிய மந்திரிகள், முதன்மைப் புரோஹிதர் இவர்களின் உதவியைக் கொண்டு, அரசன் சாதாரணமான இராஜாங்க உத்தியோகங்களி லுள்ளவர்களுக்குப் பலவித ஆசைகளைக்காட்டி அவர்களது குணங்களைப் பரீக்ஷித்தறிந்துகொள்ளவேண்டும்.

## அறவுபதை (உபதை=தந்திரம்)

ஜாதியிலிருந்து விலக்கப்பட்டுள்ள ஒருவனுக்கு வேதங்களைக் கற்பிக்கும்படியாவது ஜாதியிலிருந்து விலக்கப்பட்டதாகி வெளித்தோற்றமுடைய ஒருவனால் ஆரம்பிக்கப்பட்ட



ஓர் யாகத்தைப் புரோஹிதராயிருந்து நடத்தி வைக்கும்படியாவது தான் கட்டளையிட்டு அவ்வாறு செய்ய மறுத்ததற்காக அரசன் ஓர் புரோஹிதனைவேலையிலிருந்து நீக்கவேண்டும். அவ்வாறு வேலையிலிருந்து நீக்கப்பெற்ற புரோஹிதன் அமைச்சர்களொவ்வொருவரிடத்திலும் தனது பள்ளித் தோழர்களாக நடிக்கும் உளவர்களை விடுத்துப் பின்வருமாறு சொல்லித் தூண்டச் சொல்லவேண்டும்:— "இவ்வரசன் நீதியற்றவனா யிருக்கிறான். ஆதலால், நாம் நீதி வழுவாத மற்றொரு அரசனையாவது, இவ்வரசனது, குடும்பத்தைச் சேர்ந்த மற்றொரு அரசனையாவது, சிறையிலடைக்கப்பட்டுள்ள ஓர் அரசனையாவது, இவனது குடும்பத்தைச் சேர்ந்தவனையும் சுயநன்மை பாராட்டுபவனையுமுள்ள அடுத்த தேசத்தரசனையாவது, வனசரர்த் தலைவன் ஒருவனையாவது, அரசு புரிந்தறியாத ஓர் புதிய மனிதனையாவது நமது நாட்டுக்கு அரசாக்கிக் கொள்வோம். அவ்வாறு செய்வதில் எங்களெல்லாருக்கும் இஷ்டம். உன்னுடைய அபிப்பிராயமென்ன?" இதற்குச் சம்மதிக்க மறுக்கும் அமைச்சர் சுத்தமானவராக மதிக்கப்படுவர்.

## பொருளுபதை

சேனைத் தலைவனொருவனை வாங்கத்தகாத பொருள்களை வாங்கிக்கொண்ட குற்றத்திற்காக வெளித்தோற்றத்துக்கு வேலையிலிருந்து நீக்கவேண்டும். அவன் மந்திரிகள் ஒவ்வொருவரிடத்தும் தனது பள்ளித்தோழர்களாக நடிக்கும் உளவர்களை விடுத்து, "மிக்க பொருள் கிடைக்குமாதலால் இவ்வரசனைக் கொன்று விடுவோம். அவ்வாறு செய்வதில் எங்களெல்லோருக்கும் இஷ்டம்; உனது அபிப்பிராயமென்ன?" என்று சொல்லி அவர்களைத் தூண்டச் சொல்லவேண்டும். அவர் அதற்குச் சம்மதிக்காவிடில் சுத்தமானவராக மதிக்கப்படுவர்.

## இன்பவுபதை

அரசனது அந்தப்புரத்தில் மிகவும் நன்கு மதிக்கப்படும் ஓர் தவமகளாக நடிக்கும் ஓர் உளவு ஸ்திரீயை விடுத்து ஒவ்வொரு அமைச்சரிடத்தும் பின்வருமாறு சொல்லி மயக்க முயலும்படி சொல்லவேண்டும்:— "இராணி உன்மீது அடங்காக் காதல்கொண்டு நீ அவளது அறைக்குட் செல்வதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்திருக்கிறாள்: அன்றியும் உனக்கு மிகுந்த பொருள் கிடைப்பதும் திண்ணம்." அவர் அதற்குச் சம்மதிக்காவிடில் சுத்தமானவராகக் கருதப்படுவர்.

## அச்சவுபதை

ஓர் யாகம் செய்யுங் கருத்துடன் ஒரு அமைச்சன் மற்ற அமைச்சர்களெல்லோரையும் தன்னுடன் அழைத்துச் செல்லவேண்டும். அதனால் ஏதோ அபாய முண்டாகுமெனப் பயப்படுவதுபோல், அரசன் அவர்களெல்லோரையும் கைது செய்யவேண்டும். அரசனது பள்ளித் தோழனாக நடிக்கும் ஓர் உளவன் மேற்கூறியவாறு பொருளும் ஸ்திதியும் பறிக்கப்பெற்ற அமைச்சர்களொவ்வொருவரிடமும் சென்று தானும் சிறையிலிடப்பட்டு வருந்தியதாகச் சொல்லி, "அரசன் அறிஞர் செல்லாத நெறியிற் செல்லத் தொடங்கி யிருக்கிறான். ஆதலின் நாம் அவனைக் கொன்று வேறொருவனைச்சிம்மாசனத்தில்ஏற்றுவோம். உமது அபிப்பிராயமென்ன?" என்று கேட்க வேண்டும். அவர் அதற்கு உடன்படாவிடில், அவர் சுத்தமானவராக மதிக்கப்படுவர்.

இவ்வாறு நான்கு உபதைகளினால் அமைச்சரது குணத்தைப் பரீக்ஷிப்பதில், அரசன் தன்னையாவது தனது இராணியையாவது இலக்காக வைக்கக்கூடாதென்றும், பிறரை இலக்காக வைத்து உளவர்களின் மூலமாய் அமைச்சரது குணத்தை யாராய்ந்தறிய வேண்டுமென்றும் கௌடில்யர் அபிப்பிராயப்படுகிறார்.

மேற்கூறிய விஷயங்கள் அர்த்தசாஸ்திரத்திலிருந்து தெரியவருகின்றன. திருவள்ளுவநாயனாரும் இவ்வுபதைகளைப்பற்றி ஒரு குறளினால் தெரிவிக்கிறார்.

"அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்." —திருக்குறள்.

மேற்கூறிய குறளுக்குப் பரிமேலழகர் பின்வருமாறு உரை செய்கிறார். "அரசனாற்றெளியப்படுவான் ஒருவன் அறமும் பொருளும் இன்பமும் உயிர்ப்பொருட்டான்வரும் அச்சமும் என்னும் உபதை நான்கின் திறத்தான் மனவியல்பு ஆராய்ந்தால் பின்பு தெளியப்படும். அவற்றுள், **அறவுபதையாவது** புரோ

ஷிதரையும் அறவோரையும் விட்டு, அவரால் இவ்வரசன் அறவோன் அன்மையின் இவனைப்போக்கி அறனும் உரிமையு முடையான் ஒருவனை வைத்தற் கெண்ணினம், இது தான் யாவர்க்கும் இயைந்தது. நின் கருத்து என்னையெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது சேனைத் தலைவனையும் அவனோ டியைந்தாரையும் விட்டு, அவரால் இவ்வரசன் இவறன்மாலையன்: ஆகலின் இவனைப் போக்கிக் கொடையும் உரிமையு முடையான் ஒருவனை வைத்தற் கெண்ணினம், இது தான் யாவர்க்கு மியைந்தது; நின் கருத்தென்னை யெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இன்ப உபதையாவது தொன்று தொட்டு உரிமையோடு பயின்றாள் ஓர் தவமுதுமகளை விட்டு அவளால் உரிமையுள் இன்னாள் நின்னைக் கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்கவேண்டு மென்று என்னை விடுத்தாள், அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமேயன்றிப் பொருளுங் கைகூடுமெனச் சூளுறவோடுசொல்லுவித்தல் அச்சவுபதையாவது ஒரு நிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனால் ஏனையோரை அவன் இல்லின்கண் அழைப்பித்து, இவர் அறை போவான் எண்ணற்குக் குழீஇனாரென்று தான் காவல் செய்து, ஒருவனால் இவ்வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச்செய்து நமக்கினிய அரசனொருவனை வைத்தல்,எண்டை யாவர்க்குமியைந்தது, நின் கருத்தென்னையெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இன்னான்கினும் திரிபில்லாய வழி எதிர் காலத்துந் திரிபிலனெனக் கருத்தளவையாற் றெளியப்படு மென்பதாம்."

இவ்வாறு உபதைகளினால் பரீக்ஷிக்கப்படும் அமைச்சர்களில், அறவுபதையினால் பரீக்ஷித்துத் தெரிந்தெடுத்த அமைச்சர்களைச் சிவில் கிரிமினல் நியாயசபைகளில் நியமிக்க வேண்டும். பொருளுபதையினால் மனத்தூய்மையை ஆராய்ந்தறியப்பெற்ற அமைச்சர்களை இறை வசூல் செய்யுந்தொழிலில் நியமிக்கவேண்டும். இன்பவுபதையினால் ஆராய்ந்து தெரிந்தெடுக்கப்பெற்ற அமைச்சர்களை அரண்மனைக்குள்ளும் வெளியிலும் உள்ள உத்தியோகஸ்தர்களை மேல்பார்ப்பதற்கு நியமிக்கவேண்டும். அச்சவுபதையினால் பரீக்ஷித்துப் பொறுக்கியெடுக்கப்பெற்றஅமைச்சர்களை அவசரமாய்ச் செய்யவேண்டிய தொழில்களில் நியமிக்க வேண்டும். நான்கு உபதைகளினாலும் பரிசோதிக்கப்பட்டதில் எவ்வமைச்சர்கள் தூயவரெனத் தெரிந்தெடுக்கப் படுகிறார்களோ, அவர்களை முக்கிய மந்திரிகளாக நியமிக்கவேண்டும். மேற்கூறிய உபதைகளில் ஒன்றினாலாவது பலவற்றினாலாவது பரிசோதித்தவிடத்துத் தூய்மையற்றவராகக் காணப்படும் அமைச்சர்களை உலோக சுரங்கங்களிலும் மரங்கள் உதவும் காடுகளிலும், யானைகள் உதவும் காடுகளிலும், தொழிற்சாலைகளிலும் நியமிக்கவேண்டும்.

---

## கனம் காஜுலு லக்ஷ்மி நரசு செட்டியார், ஸி. எஸ். ஐ.

## THE HON'BLE MR. GAZULU LAKSHMI NARASU CHETTI, C. S. I.

'மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

என்பது பெரியோர் வாக்கு. உபகாரஞ் செய்யும் பெரிய தகைமையுடைய பேரறிவாளரிடத்துச் செல்வமானது சேருமானால், அந்தச் செல்வமானது தனது பாகங்களாகிய வேர், பட்டை, இலை, காய், பூ, சாறு முதலிய எல்லா உறுப்புகளும் (வியாதிக்கு) மருந்தாகவிளங்கித் தப்பாது உதவிசெய்யு மரத்துக்குச் சமானமாகி, கொடுப்பவன், தனது நிலைமை, குறை, காலபலம் இவைகளை நோக்காது நேர்படவாவது, மறைந்து விளங்கியாவது அதைக் கொடுத்துத் தவறாது ஆதரித்து, வாங்குபவன் எதற்காகப் பெறுகிறானோ அக்காரியம் சிறிதுங் குன்றாது ஈடேறும்படி செய்யுமென்பதே அதன் பொருளாகும். அதாவது, சுருங்கச் சொல்லுமிடத்து, பெரியோரிடத்துப் பணம் பிறரது வறுமைக்கும் செம்மைக்கும் உதவும் தப்பா மருந்தென்பதேயாம். ஆகவே பரோபகாரத்தின் பெருமையைப்பற்றி விரித்துக் கூறுதல் மிகையேயாகும். எனினும் பரோபகாரமென்பது பிறரது வறுமையை ஒழிப்பது மாத்திரமாகாது. விரிந்த எண்ணத்துடன் நோக்கின், தனது ஜனக்கூட்டத்தின் ஸௌகர்யங்களைக் கவனித்து அதன் நிலைமையை யுயர்த்துவதும் பரோபகாரமே. ஏனென்றால்,

> ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்
> செத்தாருள் வைக்கப் படும்

அல்லவா? ஆகவே உலக இயல்பை யுணர்ந்து, அவ்வியல்பிற்குச் சரியாக மனச்சம்மதமாக நடப்பவன்தானே உயிருடன் விளங்குபவன்? அதுன்மை; ஆயின் அதனால் கேடு வருமே எனலாமன்றோ? பரோபகாரத்தைக் கைக்கொள்வதால், வலியற்றோரைக் காக்கவரும்; வலியுடையாரது பகை ஏற்படும்; திரவிய நஷ்டம் நேரும்; மனத்துக்குக் கவலை உண்டாகும். ஆகையினாலே அதைக்கொண்டு வழிபடுவது அசாத்யமென்று சொல்லக்கூடும். இதற்கே வள்ளுவனாரும்,

> 'ஒப்புரவி னால்வருங் கேடெனின், அஃதொருவன்
> விற்றுக்கோட் டக்க துடைத்து'

என எச்சரித்தனர். இவ்வாறு செய்வது கஷ்டத்தைத் தருவதேயானாலும், அக்கஷ்டத்தைத் தன்னையே அடிமையாகும்படி விற்றேனும் பெற்றுக்கொள்ளலா மென்றே அவர் சொல்லினர்; ஏனெனில் அவ்வாறு வருங்கேடு புகழையே தருவதால்தான். இக்கோட்பாடுகளுக்கிணங்கி வாழ்ந்தவர் காஜுலு லக்ஷ்மி நரஸு செட்டியார். அக்கோட்பாடுகளை வழிபட்டு அவர், தாம் வாழ்ந்த அமளிகுமளியாக இருந்த நாளில் தமது நாட்டிற்கின்றியமையா பக்தனாக விளங்கினர்.

### கல்வி

இவர் சென்னைப்பட்டினத்தில் பேரியமேடு என்னும் பாகத்தில் 1806-ம் ஹு பிறந்தவர். இவர் தந்தை ஸித்துலு செட்டியார், நீலி வியாபாரி; நல்ல அந்தஸ்தில் இருந்தவர்; ஏழ்மை என்பதின்னதென் றறியாதவர். ஆகவே தமது மகனுக்கு ஏற்றவிதம் கல்வி கற்பிக்கப் பின் வாங்காத நிலைமையினர் என்பது ஏற்படும். ஆனால் அந்த நாளில் ஆங்கிலம் பயிற்றும் கல்விச்சாலைகள் இந்நாட்டி லில்லாமையைப்பற்றியவரைத் தூறேற்றுவதில் பிரயோஜனமில்லை; அவரைத் தூற்றுவதற்குக் காரணமுமிராது. முதல் முதல் ஆங்கிலக் கல்வியைப் பரவச்செய்யப் பிரயாசை எடுத்துக் கொண்டவர்கள் பாதிரிமார்களே; தமது காரியலாபத்திற்கென்றே அவர் அவ்வாறு செய்ததுவுமாகும். நிற்க, அந்நாள் பொதுஜன ஸங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட நேடிவ் அஸோஸியேஷன் ஸொஸைடீ ஸ்கூலில் நமது நரஸு செட்டியார், படிக்கும்படி அமர்த்தப்பட்டனர். இங்கு அவர் ஆங்கிலத்தை எழுதவும் படிக்கவும் கணக்குப் போடவுமான ஆரம்பப்படிப்பில் அப்யஸிக்கப் பெற்றனர். முக்கியமாக ஸித்துலு செட்டியாருக்குத் தனது மகன் தனது வியாபாரத்தைக் கவனிக்கத்தக்க படிப்பும், கொடுக்கல்வாங்கல் விற்பனை இவற்றில் தேர்ச்சி பெறவும் கணக்குகளைப் பிழையற வைக்கவும் கற்கவேண்டுமென்பதே கருத்தும் கவலையும். இப்படிப் படித்தகாலத்திலும் நமது லக்ஷ்மி நரஸு செட்டியார் அவரது முதிர்ந்த நாட்களில் விளங்கியது போலவே அடக்கமுடியா ஸ்வாதந்தரியத்துடனும் தனக்கெனக்கொண்ட மனப்போக்குடனும் விளங்கினர் என்பது பாம்புக்குட்டி சிறிதாயினும் அதன் விஷமில்லாமலிருக்கமுடியுமா என்பது போலன்றோ?

### முதல்தொழில்

பள்ளியை விட்டதும் சிறியசெட்டியார் தம் தந்தையின் மளிகையில் வேலையை ஏற்று வியாபாரதந்திரங்களைக் கற்கத் தலைப்பட்டனர். அவ்வபூர்வ தந்திரங்களைக் கருத்திற் கொண்டதும் மகனுந் தந்தையுமாக "ஸித்துலு அண்ட் கம்பெனி" என்னும் விலாஸத்துடன் வியாபாரத்தைப் பலக்கச்செய்தனர். இவர்கள் வியாபாரம் முக்யமாகச் சென்னை சைகுட்டைகளில் தான். இந்தக்குட்டைகளில் அப்பொழுதுவியாபாரமதிகம். இவ்வியாபாரத்தில் செட்டியாரவர்கட்கு நல்ல லாபம் கிடைத்தது. இவ்வாறு வியாபாரம் நடந்துவரும் நாளில் ஸித்துலு செட்டியார் இறந்துவிட லக்ஷ்மிநரஸு செட்டியாரே வியாபாரத் தலைவரானார். அப்பொழுது அமெரிக்கா நாட்டில் உட்கலகங்கள் ஏற்பட்டு அவ்விடத்துப் பருத்தி வியாபாரம் தலைசாய நேர்ந்தது. அந்த நல்ல ஸமயத்தைக் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளவேண்டும் என்று ஆவல்கொண்டு, பலநாடுகள் அவ்வியாபாரத்தில் தலையிட்டு லாபம் அடையத் தலைப்பட்டன. முக்கியமாக, எகிப்து இந்தியா நாடுகளே இவ்வாறாக முயற்சித்தன. இவ்வதிர்ஷ்டகாலத்தை மேற்கொண்டு லக்ஷ்மி நரஸு செட்டியார் பஞ்சு வியாரம் செய்ய விபரீதமான ஏற்பாடுகள் செய்தனர்; இதில் வெகு

சீக்கிரத்தில் அவர் அளவற்ற லாபம் அடையலானூர்.

## மதராஸ் நேடிவ் அஸோஸியேஷன்

இவ்வாறு லக்ஷக்கணக்காகப் பணம் சேகரித்ததும், செட்டியாருக்குத் தமது வியாபாரத்திலிருந்த அவா குறைய ஆரம்பித்தது. அதற்குக் காரணம் அவர் மனத்துள்ளூறப்பொதிந்து விளங்கிய பேரெண்ணமே ஆகும். தமது நாட்டாரது சுதந்தரங்களை மேன்மைப்படுத்த உழைக்கவேண்டுமென்ற அந்த எண்ணம் ஊற ஊற, அவர் தமக்குந் தெரியாமல் அதில் ஈடுபடலானூர். ஹிந்துக்கள் அக்காலத்தில் ஆங்கிலத்தில் சிறிதும் ஞானம் இல்லாதிருந்ததனுல், தம்மை யாளும் ஆங்கில ராஜாங்கத்தின் இயற்கையைச் சிறிதும் அறிய முடியாது விளங்கினர். ஆகவே, இங்கு விளங்கிய தேச நிர்வாககர்களே தம்மை ஆள்பவரென்று அந்நாள் கஷ்டத்திலழுந்திய எளிய அறிவற்ற ஹிந்துக்கள் எண்ணியிருந்தனர். மேலும், அவர்கள் மேற்சொன்ன நிர்வாககர்கள், இங்கிலாந்திலிருந்த போர்ட் (கூட்டுச்சபை) ஒன்றுக்குத் தமது நடபடிக்கைகளுக்கு உத்தரவாதமானவர் என்றும், அவ்வாறு தம்மை ஆளும் நிர்வாககர்கள் செய்யும் அடாத செய்கைகளைப்பற்றித் தாம் மேற்சொன்ன போர்டுக்கு மனு செய்து தமது குறைகளைச்சொல்லி, அவற்றைத் தீர்க்கும்படி முறையிட்டுக்கொள்ளலாம் என்பதைப் பற்றியும் அறிந்தவரல்லர். இவ்வாறு செய்துகொள்ளலாம் என்ற உண்மையை அறிந்தவர் சிலரே; அவருள் லக்ஷ்மிநரஸு செட்டியார் ஒருவர். இவர் ஜனங்களது குறைகளைக் காலாகாலத்தில் நியாயமான வழிகளில் வெளியிடுவதற்காகப் பொதுஜன சங்கம் ஒன்று மதராஸ் நேடிவ் அஸோஸியேஷன் என்னும்பேரால் ஏற்படுத்தினர். தாமே அதற்கு அக்ராஸனுதிபதியாயிருந்துவந்த அந்த சங்கத்துக்கு அநேக தனவந்தர்களும் வியாபாரிகளும் நல்ல அந்தஸ்திலிருந்து பூஜ்யர்களாகவிளங்கிய பலரும் அங்கத்தினர்களாகச் சேர்ந்து அநேக முறை சபைகள் கூட்டி ஜனங்களது குறைபாடுகளைப்பற்றி ஆலோசித்து, அவற்றை ஒழிக்கும்படியாகச் சீமைக்கு மனு அனுப்பி மிக உபயோகமாண வேலை செய்திருந்தார்.

## கிரேஸன்ட் பத்திரிகை

முதல்முதல் செட்டியாரவர்கள் எதிர்க்க வேண்டி வந்த மூகாந்தரத்திற்கு ஐரோப்பிய பாதிரிமார்களே காரணம். மேல்நாட்டில் கல்வியையும் காவியத்தையும் பரவச்செய்துவந்த அவர், இந்நாட்டில் அக்காலத்து ஹிந்துக்களைத் தம் மதத்தில் சேர்க்க முயற்சிசெய்து வந்தனர். ஹிந்துக்கள் சிலரே ஆங்கிலம் அறிந்திருந்ததாலும், ஆங்கில ஞானம் கவர்ன்மெண்டு சாலைகளில் எந்த வேலையில் அமர்வதற்கும் அதியவசியமாயிருந்தபடியினூலும், தமது சிறுவர்களை ஆங்கிலத்தில் பயிற்சி பெறுவதற்காகப் பாதிரிமார்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிவந்தனர். அவ்வாறு அனுப்பப்பட்ட சிறுவர் பலரையும் அப்பாதிரிகள் அச்சிறுவர்களின் இளம் வயதையும் பாராது, மதாந்தரப்படுத்தி வந்தனர். இவ்விராஜதானியில் அந்நாளில் அதிகாரமும்செல்வாக்கும் பெற்றிருந்த பல ஆங்கிலரும் இப்பாதிரிகளின் விருப்பத்தை ஈடேற்றுவதற்கு ஒற்றுமைத்து வந்தனர். உதாரணமாக, திருநெல்வேலியில் அக்காலத்தில் கலெக்டராகவிருந்த தாமஸ் என்பவர் அந்த ஜில்லாவில் கிறிஸ்தவ மதத்தைப் பரவச் செய்ய பாதிரிமார்களுடன் ஒத்துழைத்ததை எல்லாரும் அறியும்படி செய்தனர்; சென்னை சதர் கோர்ட் (இப்போது ஹைகோர்ட்) ஜட்ஜாக வந்திருந்த ஸர் வில்லியம் பர்டன் என்பவர் பாதிரிகளிடம் தாம் காட்டிய அனுதாபங்களைப்பற்றி ஒரு ரகஸ்யமும் பாராட்டாது, தமது நியாய பீடத்திலிருந்து அடிக்கடி ஹிந்துகளுக்கு கிறிஸ்தவ மத போதனம் செய்து வந்தனர். அக்காலத்துக் கவர்ன்மெண்டின் முக்கிய காரியதரிசியும் மேற்சொன்ன கலெக்டரின் நெருங்கிய உறவினருமான மிஸ்டர் ஜே. எப். தாமஸ், ஹிந்துக்களைக் காட்டிலும் ஹிந்துக்களாயிருந்து கிறிஸ்து மதாந்தரமானவர்களுக்கு விசேஷம் பாராட்டிக் கவர்ன்மெண்டில் உத்தியோகம் கொடுத்து வந்தனர். செங்கல்பட்டு ஜில்லா ஜட்ஜாகவிருந்த மோர்ஹெட் என்பவர் ஒரு நாளில் தாம் விசாரிக்கவேண்டியிருந்த கேஸுகளைப் பின் தேதிகளுக்குத் தள்ளிப்போட்டுக் கச்சேரியை ஒரு பாதிரியின் கிறிஸ்தவ பிரசங்கத்துக்காகத் திறந்துவிட்டுத் தமது வேலையில் தாம் கொண்ட பொறுப்பை வெளியிட்ட



னர். மேலும் அக்காலத்துக் கிறிஸ்தவமதத்திற்காகத் தாக்ஷணியம் பாராட்டாது விளங்கிய சதர்கோர்ட் ஜட்ஜ் ஒருவரைக் கவர்ன்மெண்டார் தமது கிறிஸ்தவ மதத்தில் ஏற்பட்ட பக்ஷபாதத்தினுல் தாம் செய்யும்படி சொன்ன அநீதமான உத்தரவை நிறைவேற்ற அவர் மறுத்ததற்காக வேலையைவிட்டு நீக்கிவிட நேர்ந்திருக்குமானுல் பாதிரிமார்களது செல்வாக்கைப்பற்றி நாம் சொல்லவும் வேண்டுமா? இவ்விஷயமாக வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஜட்ஜானவர் ஹிந்து ஸபை ஒன்றின் முன் சொன்ன மொழிகள் கவனிக்கத்தக்கன. அவை வருமாறு:—

"கவர்ன்மெண்டாரவர்கள் பக்ஷபாதமற்ற நியாயம் நடைபெறுவதற்கு முற்றும் விரோதமான முறைகளை அனுஷ்டிக்கும்படி சதர் கோர்ட் ஜட்ஜ்களைக் கட்டாயப்படுத்தும்படி செய்யும் யத்தனமானது தடைபெருதிருந்தானுல், அடுத்தபடியாகக் கிறிஸ்துவமதத்தை விரும்பா ஹிந்துக்களைச் கிறிஸ்துவமதத்தைச் சேரும்படியாக ரகஸ்யம் ஒன்றும் பாராட்டாமலே தூண்டலாம். மேற்சொன்ன அபிப்பிராயங்களை மார்குவிஸ் ஆப் ட்வீட்டேல் தமதல்ல வென்று வெளிப்படுத்திருப்பினும், கவர்ன்மெண்டில் மேற்படி அபிப்பிராயங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரக்கூடிய மனோதைர்யமும் செய்வன்மையுமுள்ள கக்ஷிகள் இருக்கின்றனவென்பது அனுபவ பூர்வமாக நாம் அறிந்தவிஷயம். கவர்ன்மெண்டார் சதர்க்கோர்டாரிடம் காட்டிய நடவடிக்கையானது அவர்கள் உத்தரவை மறுக்கும்படியாகச் செய்தது. தன்னுடைய உண்மைப்பொறுப்பையுணர்ந்த ஜட்ஜ் எவனும் அத்தகைய உத்தரவை நிறைவேற்றச் சம்மதிக்கான். ஜட்ஜானவன் எத்தகைய சமயங்களிலும் நியாயஸ்தலச் செம்மையைக் காக்கவும் அந்த இடமானது அநீதத்திற்கு உதவியாகாமல் விளங்குமாறு தடுக்கவும் கடமைப்பட்டுள்ளவன் என்று பன்முறையும் கவர்ன்மெண்டாருக்கு எச்சரிக்கை செய்யும்படியாக இருந்ததென்ருல், கவர்ன்மெண்டார் தமது ஆணை மறுக்கப்படும் என்பதை முன்னதாகவே அறியாதவரல்லர்."

பாதிரிகளின் ப்ரசங்க வழிகளும், கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்கள் இலைமறைவு காய் மறைவு என்று பாராட்டாது அவற்றை ஆதரித்ததும், இந்திய சமூகத்தாரது மனத்தைக் கோபத்திலாழ்த்தி அதி உக்ரமாக ஜ்வலிக்கும்படி செய்தன. ஆங்கில ஆட்சியார் இந்திய ஜனங்களது மத விஷயங்களில் நுழைவதில்லையென்ற வாக்குதத்தமானது இத்தகைய செயல்களால் தவறிவிட்டதென்றே நமது செட்டியாரவர்கள் நினைத்தனர்; இதைத் தடுப்பதற்குத் தம்மால் முடிந்தவரையும் ஒரு கைபார்த்துவிடுவதாக அவர் கங்கணம் கட்டிக்கொண்டனர். அப்பொழுது நாராயணஸ்வாமி நாயுடு என்பவரால் நடத்தப்பட்டு வந்த நேடிவ் சர்குலேடர் (பொதுஜன ப்ரசாரிணி) என்னும் சமாசாரப் பத்திரிகையைச் செட்டியாரவர்கள் வாங்கி க்ரெசென்டு (மதியம்) என்னும் பெயரோடு அச்சமாசாரப் பத்திரிகையை மிஸ்டர் ஹார்லி என்பரைப் பத்திராதிபராகக்கொண்டு நடத்தி வந்தனர். 1844-ம் ஹூ அக்டோபர் மீ 2-ம் தேதி முதல் முதல் தலைகாட்டிய அப்பத்திரிகை ஹிந்துக்களின் நிலைமையை உயர்த்துவதற்காகவே வெளிவந்தது; பாதிரிமார்களது பத்திரிகையாகிய ரேக்கார்டு பத்திரிகையின் கோளாறுகளை மாற்றுவதற்காகவுமே. சிலநாள்க்ரஸண்டுபத்திரிகை அலக்ஷியம் செய்யப்பட்டாலும், வரவர பல கஷ்டங்களிலும் சிறப்புற்றோங்கி நிலைபெற்று மதிப்பிற்குப்பாத்திரமாயிற்று. மறுக்க முடியாது வெளிப்பட்ட இப்பத்திரிகையின் அபிப்பிராயங்களைக்கண்டு நியாய வாதிகளும் நிர்வாக உத்யோகஸ்தர்களும் அச்சமுற்றுப் பாதிரிகளுக்குத் தெரியாமல் உதவி செய்ய ஆரம்பித்தனரென்று சொல்லப்படுகிறது. சமாசாரப் பத்திரிகைகள் பெற்றிருந்த சிறு சுதந்திரங்கள்கூட கவர்ன்மெண்டார் இப்பத்திரிகைக்குக் கொடுக்கவில்லை. இப்பத்திரிகையைப் பற்றிய விளம்பரம் ஒன்றைப் போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில அமைக்கும்படியாக அனுப்ப, அதைக் கவர்ன்மெண்டார் மாமூல் விளம்பரத் தன்மைக்கு வேறுபட்டதாகச் சொல்லி மறுத்துவிட்டனர். அக்காலங்களில் கவர்ன்மெண்டு கெஜட்டில் சமாசாரப் பத்திரிகைளைப்பற்றிய விளம்பரங்களை அமைப்பது வழக்கம்.

நிற்க, கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்கள் ஹிந்துமதத்திலிருந்து கிருஸ்துவர்களாக மாறியவர்களுடைய நிலமுதலிய சுதந்திரங்களைக்

காக்கச் சட்டமேற்படுத்த முயற்சித்தனர். அச்சட்டத்தின்படி ஹிந்து பாலியர்கள் கிருஸ்து மதத்திற்கு மாறுவதால், தமது பிதுரார்ஜித சுதந்தரங்கள் 'சிறிதும் குன்றாது' விளங்க ஒரு ஏற்பாடு செய்திருந்தனர். இதைக் கண்ட ஹிந்து சமூகத்தினர் லக்ஷ்மிநரஸு செட்டியாரது ஆதரவின் கீழ் 1845௵ சென்னையில் மகா சபைகூடி மேற்படி சட்டத்தைப் பொதுஜன விரோதமாக மறுத்து, இவ்விஷயத்தைப்பற்றி ஒரு மனு தயாரித்து ஆங்கில கவர்ன்மெண்டிற்கு அனுப்பினர். இம்மனுவை அவர் கவனித்துச் சென்னை கவர்ன்மெண்டாருடன் பல முறை கலந்து, மேற்சொன்ன ஏற்பாடு சட்டத்திலிருந்து எடுத்துவிடப்படும் என்று செட்டியாரவர்களுக்கு விடையளித்தனர்.

இந்த விஷயம் பலிக்காது போனதும் பாதிரிமார்கள் தமது கவனத்தைச் சென்னை ஸர்வகலாசாலை விஷயமாகச் செலுத்த வாரம்பித்தனர். மதவிஷயஸம்பந்தமில்லாமல் விளங்கும்படி ஏற்படுத்தப்பட்ட இக்கலாசாலையில் பரீக்ஷிக்கும்படி வருஷாவருஷம் வந்த சிறுவர்களைப் பரீக்ஷிக்கும்படி நியமிக்கப்பட்ட பாதிரிகளும் அவர்களிடம் பக்தியோடு விளங்கிய நேசரும் பன்முறையும் சிறுவர்களைக் கிறிஸ்துவமத சம்பந்தமான விஷயங்களைக்கேட்டு, அவர்களைக்கவர்ன்மெண்டு த்யோகங்களுக்கு லாயக் அற்றவரென்று வெளியிட்டிருந்தனர். இவ்வாறு நடந்துவந்ததைப்பற்றி ஜனங்கள் கண்டித்த காலத்து "ஹோலி பைபில்" என்னும் கிருஸ்துவ மதநூலைப் பாடபுஸ்தகமாக ஏற்படுத்துவதேஅக்கஷ்டத்தை ஒழிக்குமென தெரிவிக்கப்பெற்றனர். இதைக்கேட்ட நமது செட்டியார்பர்சையப்பன் மண்டபத்தில் 1846 ௵அக்டோபர் ௴ 7உயன்று தமது தலைமையின்கீழ் ஹிந்து மஹாசபையொன்று கூட்டிச் சீமையில் இந்திய இராஜாங்க நிர்வாகத்தைக் கவனித்துவந்த கனந்தங்கிய கோர்ட் ஆப் டைரெக்டரவர்களுக்குத் தமது குறைகளைச் சொல்லி அவற்றை ஒழிக்கவேண்டும் என ப்ரேரேபிக்கப்பட்டது. அவர்களே ஒரு மனு தயார் செய்து, அதில் கவர்ன்மெண்டார் இந்து மதவிஷயங்களில் நுழைவதில்லையென்ற வாக்குதத்தையும், சென்னை கவர்னராக மார்குவிஸ ஆப் ட்விட்டேல் இருந்தகாலத்து அவ்வாக்குதத்தம் நடத்தப்பட்டவிதத்தையும், பாதிரிகளுடைய மதாந்தரப்படுத்தும் கோட்பாடு, அவ்விஷயத்தில் கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர் அவாவுடன் கலந்து உழைத்தவிதம், ராஜதானி யுட்புறத்தில் ஆங்கில வித்தை பரவுதற்காகப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தும் விஷயங்களில் கவர்னரவர்கள் காட்டிய கவனக்குறைவு, உள்நாட்டாரைப் போட்டிப் பரீக்ஷைகளில் நேருறிருக்கும்படியாகப் பாதிரிமார்கள் செய்த ப்ரயத்தனங்களைத் தடுக்காதது, இந்தியர்களைக் கவர்ன்மெண்டு சாலைகளில் அமர்த்திக்கொள்ள அவ்வவ்விடத்து அதிகாரிகள் காட்டிய வெறுப்பு, கச்சேரிகளில் நியாயமுறை மாறாட்டம், இன்னும் இவைபோன்ற அக்காலத்து இந்தியர்களால் குறைகளாகக் கொண்டாடப்பட்ட விஷயங்களைப்பற்றியும் கண்டிருந்தனர். மேற்படி சபையானது வெகுஅமைதியுடனும் நிதானத்துடனும் நடந்தேறியதாயினும் அதனுடைய நடவடிக்கைகள் ராஜத்துரோகம் உண்டாக்கக்கூடியனவென்று சிலரால் காட்டப்பட்டதுமுண்டு. மற்று மேற்சொன்ன மனுவில் அச்சபையிலிருந்தவர்களைக் கையொப்பமிடாதிருக்கும்படி அக்காலத்துச் சென்னை ஷெரீப் ஆக இருந்த கனவான் நயவழியில் தூண்டிய போதிலும் பன்னீராயிரத்துக்கு மேல் அம்மனுவில் கையொப்பம் இருந்ததென்றால், அதன் உண்மையைப்பற்றி விரிவாக உரைக்கவும் வேண்டுமோ? சென்னை கவர்ன்மெண்டார் மூலமாகக் கோர்ட் ஆப் டைரெக்டர்களுக்கு அனுப்ப, அம்மனு மேற்படி கவர்ன்மெண்டாரது காரியங்களைச் சரிவர அறியாமை, ராஜீய பத்திரங்களில் சிலபாகங்களை மாத்திரம் மாறுட்டமாக வெளியிட்டதினாலேய இவையெல்லாம் என்னும் ஷராக்களுடன் சென்னை கவர்ன்மெண்டாரால் கோர்டாருக்கு அனுப்பப்பட்டது. மேற்படி மனுவினோடு சென்னை கவர்னரவர்கள் கண்டிருந்த சில விஷயங்களை உத்தேசித்து மேற்படி மனுவின் மேல் கோர்ட் ஆப் டைரெக்டர்கள் ஒருவித நடத்தையும் நடத்தவில்லை. ஆக மீண்டும் 1853-௵ பைபில் நூலைக் கவர்ன்மெண்டுப் பள்ளிகூடங்களில் பாடபுத்தகமாக ஏற்படுத்த ப்ரயத்தனம் செய்யப்பட்டதாயினும், ஜான் புரூஸ் நார்டன், லக்ஷ்மிநரஸு செட்டியார்



இவர்கள் ஏகோபித்துச்செய்த வேலையின் பலனாக அப்பிரயத்தனம் தலைசாய்ந்துவிட்டது.

நிற்க. 1852-ம் ௵ இங்கிலீஷ் பார்லிமெண்ட் அங்கத்தினராகிய டான்பீஸெய்மூர் என்பவர் இந்தியாவுக்கு விநோதார்த்தமாக வந்தனர். அடிக்கடி சீமைக்கு அனுப்பிய மனுக்களின் மூலமாக அங்கு நமது செட்டியார் பெயர் பிரஸித்தமாயிருந்ததால், ஸெய்மூர் அவர்கள் சென்னைத் துறைமுகத்தில் இறங்கினதும், செட்டியார் அவர்களைப் பற்றி விசாரிக்க, அவரால் வரவேற்கப்பட்டுச் சென்னையில் இருக்கும் வரையும் அவரது விருந்தினராகவேயிருந்தனர். அவர் ஒருவரை ஒருவர் கண்டதும் பரஸ்பர நேசமும் மரியாதையுமே அவர்மனத்துதித்தன. ஸெய்மூரவர்கள் செட்டியாருடன் தென்னிந்தியாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்து கூடலூர், கும்பகோணம், கோயம்புத்தூர் முதலியஇடங்களில் சென்று நேராக ரயத்துக்கள் ஜனங்கள் இவர்கள் வரியதிகமாக விதிக்கப்படுவதால் படும்பாதையையும் விதித்த வரியைக் கட்டத்தவறிய ஜனங்கள் அடையும்பெருந்துயரையுங்கண்ணாலேயே கண்டனர்; அவர்கள் தலைவெடிக்கும் வெய்யலில் நின்று முதுகிற் பாறை தாங்கிப் படும் கஷ்டத்தையும், சிலர் கையில் தூண்டாப் பிணிக்கப்பட்டு மரங்களில் வெளவால் போலத் தலைகீழாகத் தாலூகா கச்சேரிக்கெதிர்த்த கிளைகளில் வரிசெலுத்தத் தவறியதற்காகத் தொங்குவதையும், அக்காட்சியைத் தனது கச்சேரிமுன் தாசில்தார் மேஜீஸ்ட்ரேட் சிறிதுங்கவலைப்படாது நோக்கிக்கொண்டிருப்பதையுங் கண்டனர். இவ்விஷயங்களை யெல்லாம் ஸெய்மூர் அவர்கள் தமது குறிப்புப் புத்தகத்துள் குறித்துக்கொண்டனர். உத்தியோகஸ்தர்கள் செய்யும் அக்ரமங்களைக் கண்டவற்றையும் அவற்றைப்பற்றிக் கேட்ட விஷயங்களையும் தாம்குறித்துக்கொண்டதன்றி அவர் ஜனங்களை உபத்ரவப்படுத்த உபயோகப்படுத்தும் ஆயுதங்களின் தொகுதி ஒன்றையும் ஸெய்மூர் சேகரித்துக்கொண்டனர். சில நாளானதும் அவர் தம்மூர்க்குப் பிரயாணமானார்.

சீமைக்குச் சென்றதும் ஸெய்மூர் அவர்கள் நமது விஷயங்களைப்பற்றிக் கவனம் பாராட்டாதிருக்கவில்லை. 1854-ம் ௵ அவர் பார்லிமெண்டில் காமன்ஸ் ஸபைமுன் எழுந்து இந்தியாவில் உத்யோகஸ்தர்கள் குற்றவிஷயமான கிரிமினல் வியவஹாரங்களிலன்றி ஸாதாரண ஸிவில் தரப்பில் ரெவினியூ வியவஹாரங்களில்கூடப் பிரதிவாதிகளைச் சித்திரவதைக்குட்படுத்துவதைத் தாம் நேராகக் கண்டிருப்பதாக உறுதியுடன் வெளியிட்டார். அவரது மொழியை ஸபையிலிருந்த பலரும் பலமாக ஆக்ஷேபித்தனராயினும், அப்பொழுது இந்திய போர்ட்டின் தலைவராக இருந்த ஸர் ஸி. வுட் என்பவர் அவ்விதமான கோளாறுகளைப்பற்றி தாம் கேள்விப்படாத காரணத்தினாலேயே மறுக்க முடியாதென்று சொல்லி, அவ்விஷயமாக விசாரணை செய்வதாகவும் ஒப்புக்கொண்டனர். அடுத்த மாதத்திற்குள்ளாக மேற்சொன்ன விஷயங்களைப்பற்றி விசாரிக்க ஒரு கமிஷன் ஏற்படுத்தப்பட்டு, இந்தியாவில் ஐந்தாறு மாதங்கள் வரை அதன் விசாரணைகள் நடந்தன. இக்கமிஷன்முன் கொடுக்கப்பட்ட சாக்ஷியங்கள் சீமை கவர்ன்மெண்டுக்கு அனுப்பப்படும் பொழுதே, லக்ஷ்மி நரஸு செட்டியாரும் பல்லாயிரம்பேர் கையொப்பமிட்ட மனு ஒன்று இவ்விஷயமாகத் தயாரித்துச்சீமைக்குஅனுப்ப, 1856-ம் வருஷம்ஆல்பமார்ல் பிரபுவால் அது லார்டு சபைமுன் சமர்ப்பிக்கப்பட அதன் மூலமாகச் சென்னையில் நடந்து வந்த சித்திரஹிம்சை அச்சபையால் கண்டிக்கப்பட்டது.

இது நடைபெறுவதற்கு நான்கு வருஷம் முன்னதாகவே நமது செட்டியாரது ஆதரவைக்கொண்டு மதராஸ் நேடிவ் அஸோஸியேஷன் சபையார் தென்னிந்திய ஜனங்களது குறைகளை விவரித்த ஒரு நீண்டமனுவைப் பார்லிமெண்ட் மகாசபைக்கு அனுப்பியிருந்தனர். அதில் அமிதவரியால் ஏற்படும் கஷ்டங்கள், அதைவசூலிப்பதில் ஏற்படும் உபத்திரவங்கள், நியாயஸ்தலங்களில் உண்டாகும் காலதாமதம், செலவு இவைகளைப் பற்றியும், பாதையமைப்பு, வாராவதி நீர்ப்பாசன வேலைகள், கல்வி அபிவிர்த்தி இவைகளைப்பற்றிய குறைகளும் ஜனங்களின் நன்மைக்கும் சுகாதாரத்திற்கும் ஏற்ற ஸ்தலஆட்சியைப் பற்றியும் கவர்ன்மெண்டார் கவனிப்பதன்றி இந்தியாவிலிருக்கும் ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் நிர்வாஹகர்கள் ராஜாங்க பார்லிமெண்ட் சபையினால் அடிக்கடி பரிசீலனை செய்யப்பட வே

ண்டு மென்றும் கண்டிருந்தது. இம்மனு 1853-ம் வருஷம் பிப்பரவரி மீ 25 தேதியன்று எல்லன்பரோ பிரபுவால் லார்ட்ஸ் மகா சபை முன் சமர்ப்பிக்கப்பட்டது. இதேசமயம் ஆங்கில நகராகிய மான்செஸ்டர் பட்டணத்துக் குடிகளால், அதுவரையும் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரது ஆட்சியின் கீழிருந்த இந்திய நாடானது ஆங்கிலபார்லிமெண்டுக்கு நேர் பொறுப்பாயுள்ள சபையோடுகூடிய மந்திரிக்கு உட்பட்டு ஆங்கில அரசர்க்கு நேரே உத்தரவாதமாக இருக்கவேண்டு மென்னும் விஷயமாகக் கொண்டுவந்த மனுவை ஆல்பமார்ல் பிரபு சமர்ப்பித்த காலத்து, அம்மகா சபையை நோக்கி, தம்மிடம் மேற்சொன்ன சென்னை மனுவில் கண்ட விஷயங்களை ருஜுப்படுத்தக் கூடிய இரண்டு கடிதங்கள் உள்ளனவென்றும், அதை யெழுதியவர்கள் உயர்ந்த அந்தஸ்தும் சிறந்த படிப்பும் உள்ள சுதேச கனவான்களானதால் அவர்கள் தமது குறைகளை அச்சபையிலிருக்கும் எந்த பிரபுவும் சரிவர சொல்லக்கூடிய விதமாகவே வெளியிடக் கூடியவரென்றும் சொன்னார். இவ்வாறு குறிப்பித்த கடிதங்களுள் நமது செட்டியார் எழுதிய கடிதம் ஒன்று என்பது நாம் கவனிக்கத் தக்கது. அதில் அவர் ஒரு கமிஷன் மாத்திரம் சீமையிலிருந்து சென்னைக்கு அனுப்பப்படுமாயின் மேற்படி மனுவிற்கண்ட விவரங்களின் உண்மையைத் தம்மால் நிலைநிறுத்த முடியுமென்று வற்புறுத்தியிருந்தனர். இவ்விஷயங்களைப்பற்றி தாமும் அநேக கடிதங்கள் மேற்சொன்ன விதமாகவே பலசெல்வாக்குள்ள பிரமுகர்களிட மிருந்து பெற்றிருப்பதாகப் புகழ்பெற்ற ஜான்பிரைட் அவர்களும் வெளியிட்டனர். இவ்வாறு இருக்கும் பொழுதே நமது செட்டியார் மீண்டும் 1855-ம் வருஷம் மற்றொரு மகா மகஜர் ஒன்று தயாரித்து 14000-க்கு மேல்பட்ட கையொப்பங்களுடன் அதைச்சீமைக்கு அனுப்பி இந்தியாவிலிருக்கும் ஆங்கில பூப்பிரதேசங்களின் ஆட்சி, ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரிடமிருந்து ஆங்கில அரசிக்கு நேர்படும்படி மாற்றப்படவேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். இந்த மனு ஆல்பமார்ல் பிரபுவால் 1855-ம் வருஷம் லார்ட்ஸ்ஸபை முன் ஸமர்ப்பிக்கப்பட்டது. இத்துடன் சென்னையில் நமது செட்டியார் செய்த இயக்கத்தின் பலத்தாலும் பம்பாய் வங்காள ராஜதானிகளில் இதற்கு முன் செய்து வந்த வேலைகளினாலும் ராஜாங்க அமைப்பில் அநேக மாறுபாடுகள் ஏற்பட்டன. அவையாவன, கோர்ட் ஆப் டைரெக்டர்களுடைய கணக்கு முப்பதிலிருந்து பதினெட்டானது; அப்பதினெட்டில் ஆறு பேர்கள் ஆங்கில அரசராலேயே நியமனம் செய்யப்படுவது, சிவில் சர்விஸ் உத்தியோகங்களைப் போட்டிப் பரீக்ஷை வைத்து அவற்றுள் தேறுபவர்களைக் கொண்டு நிறப்புவது, ராஜதானி நகரங்களில் விளங்கிய ஸதர்கோர்ட்களை ஹைகோர்டுகளுடன் ஐக்கியமாக்கியது என்பனவேயாம். மேலும் செட்டியார் அவர்கள் மேற்கொண்ட இயக்கமானது அடுத்தவருஷங்களிலும் விசாரிக்கப்பட்டதின் பயனாகவும், 1857 வருஷம் நடந்த சிப்பாய்க் கலகத்தின் பயனாகவும் 1858 வருஷம் இந்திய நாடானது ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரின் ஆட்சியிருந்து கனம்பொருந்திய ஆங்கில அரசி விக்டோரியா ராணியாரின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டது.

மேற்சொன்ன மாறுதல்களுக்கப்பால் மதருஸ் நேடிவ் அஸோஸியேஷன்சபையின் அக்ராஸநாதிபதி ஹோதாவில் நமது செட்டியார் அக்காலம் ராஜாங்க அமைப்பில் ஏற்பட்ட மாறுபாடுகளில் ராஜாங்கத்தார் அதுவரையும் மதவிஷயங்களில் நுழையாது நடந்தவிதமே நடக்கவேண்டுமென்றொருமகஜர் அனுப்பினர். இம்மகஜர் இங்கிலாந்து தேசத்தில் வெகு ஆவலுடன் கவனிக்கப்பட்டு அம்மகஜரில் கண்ட விருப்பங்களும் அங்கீகரிக்கப்பட்டன. இராஜாங்க மாறுபாட்டினால் ஏற்பட்ட உத்தியோகஸ்தர்கள் மாற்றங்களினால்பல நன்மைகள் ஏற்பட்டன. புது நோக்கத்துடன் வந்த உத்தியோகஸ்தர்கள் நமது செட்டியாரது தன் மறுப்பையும், தர்மசரிதையையும், ஊக்கம், முயற்சி, உண்மை நோக்கம் இது முதலாகிய உத்தமகுணங்களையும், பொது ஜனங்களின் துயரத்தை நீக்கி அவர் நிலைமையை யுயர்த்தத் தமது பொருளும் சுகமும் கருதாது அவாவுடன் உழைப்பதையும் கண்டு, தாய் நாட்டிற்காக அவர் செய்த பெரு ஊழியங்களுக்காகப் பெருமை பாராட்டி 1861-ம் வருஷம் அவர்க்கு இந்திய தாரகா நேசன் என்று பொருள்படும் ஸி. எஸ். ஐ. என்னும் கௌரதா பட்டத்தை



அளித்தனர். இது சர்வஜன சம்மதமானதென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. கிரஸன்ட் என்னும் பத்திரிகையை நடத்தி, பொதுஜனங்களுடையகுறைகளை அதன்வாயிலாக நன்கு வெளியிட்டு ராஜாங்க நிர்வாஹகர்களுடைய வேலைகளின் தாரதரங்களைச் சிறிதும் பக்ஷபாதமின்றிக் கண்டிதமாய் விமர்சனம் செய்து, அதன்மூலமாக ராஜத்துரோகியாகப் பாராட்டத் தகுந்த சந்தேக ஆளாகி போலீஸாரால்வெகு ஜாக்ரதையாகக் கவனிக்கப்பட்டு வந்த அவற்கு இப்பட்டம் களித்தளித்தது அவரது பெருமையையும் நடத்தையின் உயர்வையும் ஒழுக்கத்தின் நிலைமையையும் வெளியிடுமல்லவா? இப்பட்டமளித்த இரண்டு வருஷத்திற்கெல்லாம் நமது செட்டியார் சென்னை சட்டசபையின் அங்கத்தினருள் ஒருவராக ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்டது யாவராலும் புகழப்பட்டதென்று நாம் சொல்லவேண்டியதில்லை. மேற்படி விஷயமாக ஜான் புரூஸ் நார்டன் அவர்கள் 1864 வருஷம் பச்சையப்பன் மண்டபத்தில் பேசியபோது செட்டியாரைக்கவர்ன்மெண்டார் நியமித்தது சர்வஜனங்களும் மனமொப்பித் தேர்ந்தெடுக்கக்கூடிய ஆளைத்தான் என்று புகழ்ந்தது இங்கு கவனிக்கத் தகுந்தது.

1854-ம் வருஷத்திலேயே லக்ஷ்மி நரஸு செட்டியார் பச்சையப்ப முதலியார் தருமங்களைக் கவனிக்கும் தர்ம கர்த்தருள் ஒருவராக நியமிக்கப்பட்டு அந்தத் தருமங்கள் குறையொன்றும் வாராது நடை பெறும் பொருட்டுத் தமது உயிரும் உடலும் கொடுத்து உதவியதற்குத் தென்னிந்திய மாணவர் எவரும் கடமைப்பட்டவராவர். நமது செட்டியார் நமது ராஜாங்க விஷயங்களன்றிச் சுதேச சமஸ்தானங்களைப் பற்றிய விஷயங்களையும் கவனித்துவந்தனர். மைசூர் ராஜ்யத்தின் தலைவனாயிருந்த திப்பு சுல்தானுடன் நமது துரைத்தனத்தார் யுத்தம் செய்தபோது கனம்பொருந்திய ஹைத்ராபாத் நைஜாமிடம் பெற்ற உதவிக்காக, மைசூர் சமஸ்தானத்துக்கு ஹிந்து அரசனை அரசாக்காத பக்ஷத்தில்அந்தச் சமஸ்தானத்தைப் பங்கிட்டு நைஜாமுக்கும் ஒருபாகம் கொடுப்பதாக உடன்படிக்கை ஏற்பட்டிருந்தது. ஹிந்து வம்சத்தில் தோன்றி முன் அரசாகவிளங்கிய உடையார் வம்சத்தார்க்கு அச்சமஸ்தானத்தைக் கொடுப்பதில் ஆங்கிலத் துரைத்தனத்தார்க்கு அசிரத்தையிருப்பதாக நமது செட்டியார்க்குப் படவே அவர்; மைசூர்சென்று, கிருஷ்ணராய உடையாரைக் கண்டு அவரை ஸ்வீகாரமாக ஒருமகனை ஏற்கும்படி தூண்டி அவரது ஹக்கை நிலைநாட்டும்படியும் அவரது ஸ்வீகாரபுத்திரனை ஆங்கில அரசர் ஏற்கவற்புறுத்த வேண்டினர். இதல்லாமல், செட்டியார், நிஜாமுடைய புகழ்பெற்ற மந்திரியாக விளங்கிய கனம் ஸர் ஸாலர் ஜங் பஹதூரையும் கண்டு, மைசூரை உடையார் வம்சத்தார்க்கு ஆங்கிலஅரசு ஒப்புவிக்காதபக்ஷத்தில் அதில் ஒரு பாகத்தை நிஜாம் நாட்டிற்கு உடன்படிக்கைப்படி அளிக்கும்படி கட்டாயப்படுத்தும்படியும் தூண்டினர். இந்த காரியத்திலிருந்தே செட்டியார்க்கு வாய்மை, தர்மம் இவற்றிலிருந்த அவா வெளியாகும். அவர் செயல் இத்துடன் நிற்கவில்லை. தஞ்சாவூர்ராஜ்யம் அழிந்ததும், அக்கடைசி மன்னரது மனைவிகளை நல்லநிலைமையில் வைக்கவும், கர்நாடிக் நேபாப்கள் தமது உரிமைகளைத் துறந்ததும் கடைசி நேபாபாக இருந்தவரின் வம்சத்தாரது துயரைப்போக்கவும் அவர்உழைத்தனர்; இவ்வற்றில் எல்லாம் அவர்க்கு ஜான் ப்ரூஸ் நார்ட்டன் பேருதவிசெய்தனர் என்பது நாம் பெரிதும் கவனிக்கத்தகுந்த விஷயம்.

## அந்தியகாலம்.

செட்டியாரது அந்தியகாலம் அவ்வளவு சுகமானதல்ல. அவர் அளவற்றுப் பணம் இறைத்து நடத்திவந்த க்ரேஸென்ட் பத்திரிகை அவரது செல்வத்தை விழுங்கிக்கொண்டே வந்தது. முதல் குறைவுபட்டதால் அப்பத்திரிகை நிறுத்தப்பட்டது. மற்று அவர் தமது வியாபாரத்தைத் தன் மகனிடம் பார்த்துக் கொள்ளும்படிவிட, அவன் அதை க்ஷீணதசைக்குக் கொண்டுவந்து திரவியநஷ்டத்தில் ஆழ்த்திவிட்டான். எனவே, மனோவியாதியால் அந்தியகாலத்தில் பீடிக்கப்பட்ட செட்டியார் 1868 வருஷம் மானிட உடலை நீத்துப் புகழுடல்தாங்கித் தருமதேவதைகள் பணி கொள்ள மறுமையாளச் சென்றனர். மொத்தத்தில் செட்டியார் கவிவாக்கில்

முன்புகழ் திசைநிறீஇ முடிவு முற்றிய
பின்புகழ் நுதிநிலைப் பார்க்கும் பேரறம்

*இன்பம்வர் துறுமெனின் இனிய தாயிடைத்*
*துன்பம்வர் துறுமெனின் துறக்க லாகுமோ?*

எனக்கேட்ட கேள்விக்கு விடையளித்தனர் எனவே சொல்லலாம். அவரது மரணம் வெகுகாலம் வரையும் யாவர் மனத்தையும் துயருள் ஆழ்த்திக்கொண்டிருந்தது. அவர் ஞாபகச் சின்னமாக சென்னை ராஜதானிக் கலாசாலையில் ஸம்ஸ்க்ருதம் கற்க உபகாரச் சம்பள நிதி ஒன்று ஏற்படுத்தப் பட்டதன்றி, அவர் உருவப்படம் ஒன்றும் வர்ணத்தில் எழுதப்பெற்றுப் பச்சையப்பன் மண்டபத்திற் சமைக்கப்பட்டிருக்கிறது. இப்படத்தை இன்றும் அம்மண்டபத்துள் அவாவுடன் காணலாம். மற்றுச் செட்டியார் எல்லாக் குணங்களிலும் ஸத்வத்தையே பற்றி நின்றதால் அவரது குணங்களைப்பற்றி விரித்தல் அனாவசியம். ஆனால் அவரது மரணத்தைப், பற்றி 186?-ம் ஸ்ரீ ஜான் ப்ருஸ் நார்ட்டன் பேசிய மொழிகள் இன்றும் நமதுமனத்தில் பசுமரத்தாணிபோலப் பதியுமாகையால் இங்குவரையாதொழிதல் பெருங்குற்றமாகும். அவர் கூறியவற்றுள் சில மொழிகளாவன:—

"இப்பெருமையும் நற்குணமும்வாய்ந்த புருஷன் இறந்தது ஜனங்களுக்குநேர்ந்த பொது நஷ்டமாகும். மிகவுயர்ந்த வல்லபங்களுற்று, வெகுநன்றாகப்படித்து நல்ல உத்க்ருஷ்டமான நோக்கங்களுடன் திகழ்ந்து, அசைக்க முடியாதபடி உண்மையைப்பற்றி, கூரிய சக்தி வாய்ந்து விளங்கிய தேசபக்தரின் உண்மை அமைப்பாக விளங்கியவர். அவர் பேசி மனதை வெருட்டுபவரல்லர்; ஆனால் நியாயமான சாந்த மார்க்கங்களியே மனதைக் கவர்ந்து அறிவைத் தன்பால் இழுக்குந் தன்மை வாய்ந்தவர். எந்தக்காலத்தில் வேலைகள் செய்வதானது இப்போதைப்போ லல்லாது பேராபத்தில் இல்லாவிடினும் பெருங்கஷ்டங்களில் ஆழ்த்தக்கூடியதோ அக்காலங்களில் அவர் தமது அறிவு பொருள் ஆவி யாவும் தந்து தமது தேசத்தாரது நன்மைக்கே ஸமர்ப்பித்தனர்."

அவ்வாறு ஸமர்ப்பித்து எளிமையிலும் பெருமையுற்று விளங்கிய அவரைப் பின்பற்றுவது ஏழைச்சொல் அம்பலமேறுமோ என்ற வாக்கிற் கிடந்தராதபடி யிருக்குமென நமது திடமான நம்பிக்கை.

# கந்தபுராணக் குறிப்புகள்

## GLEANINGS FROM KANDAPURANA

[159-பக்கத் தொடர்ச்சி.]

### III சிவபிரான் திருநாமங்கள்

1. அடையார் புரமெரி செய்திடு மமலன்
2. அந்தி போலு மவிர்சடைப் பண்ணவன்
3. அந்தியி னிறமுடை யண்ணல்
4. அந்தி வண்ணத் தமலன்
5. அந்திவார் சடைக் கண்ணுதற் கடவுள்
6. அந்திவார் சடைக் கண்ணுத னின்மலன்
7. அமல நாயகன்
8. அம்மென் கொன்றை அணிமுடிக்கொண்டவன்
9. அம்மையோர் பாகமதுடைய நம் பரமன்
10. அரன்
11. அல்லுறழ் கண்டன்
12. அல்லுறழ் மிடற்றெம் மடிகள்
13. ஆதி
14. ஆல கண்டத்தன்
15. ஆல மாமிடற்றண்ணல்
16. ஆல மார் கண்டன்
17. ஆல மிடற்றினன்
18. ஆலாலத்தை அயின்ற நம்பன்
19. ஆறணி சடையினன்
20. ஆறணி செஞ்சடை அண்ணல்
21. ஆறு சூடிய ஆதி
22. ஆறுசேர் சடை ஆண்டகை
23. ஆறேற்றிடு சடிலத்தவன்
24. ஆற்றினைச் சடை வைத்தவன்
25. இமையா முக்கண் அண்டர் தம் பெருமான்
26. இருளுறு மிடற்றினன்
27. ஈசன், ஈசனார்
28. ஈமத்தே நடம்புரியுங் கண்ணுதலோன்
29. உமாபதி
30. எயின் மூன் றட்டருள் தூயோன்
31. எயின் மூன்று மட்ட பராபரன்
32. எறிபுனற் சடை யிறைவன்
33. ஏறமர் கடவுள்
34. ஏறுடை யமல மூர்த்தி
35. ஏனம் புக்குமுன் றேடருங் கழலினன்
36. ஐங்கன் மேய ஒருவன்
37. ஓங்கார முதற் பண்ணவன்
38. கங்கைச் சடையான்
39. கங்கை முடித்தான்
40. கங்கைவார் சடைமுடிக் கடவுள்
41. கடலுடைக்கடுவை யுண்டோன்
42. கடுத்தயங்கிய மிடற்றிறை
43. கண்ணாதர்
44. கண்ட நஞ்சுடைய அண்ணல்
45. கண்ணுதல்
46. கண்ணுத லிறைவன்

(இன்னும் வரும்)



# நமது சிறு கதை

## OUR SHORT STORY

(164-ம் பக்கத் தொடர்ச்சி)

(ஸ்ரீமதி சீதம்மாள்.)

ஸோமனும் பதில் வந்தன மளித்தான். பிறகு 'உங்களுக்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டான்.

'என் எஜமானி ஜோடுகளைப்பற்றிய விஷயமாக என்னை அனுப்பினாள்'.

'ஜோடுகளைப்பற்றி என்ன?'

'என்னவெனில், என் எஜமானனுக்கு இனிமேல் ஜோடுகள் வேண்டியதில்லை. அவர் இறந்து போய்விட்டார்.'

'இது நம்பத்தக்கதா?' என்றான் ஸோமன்.

'இவ்விடம் விட்டுத் திரும்பி வீட்டிற்குப் போவதற்குள் வண்டியிலேயே இறந்துபோய்விட்டார். வீடுபோய்ச் சேர்ந்ததும் வேலைக்காரர்களெல்லோருமாகச் சேர்ந்து அவருடைய சவத்தை வண்டியிலிருந்து இறக்கினோம். அவர் இறந்துபோய் நாழியாய் விட்டதினால் தேகம் விறைத்துப் போயிருந்தது. வண்டியிலிருந்து இறக்க நிரம்பவும் கஷ்டப்பட்டோம். என் எஜமானி 'ஜோடு தைக்கக் கொடுத்த பிரபு இறந்துபோய்விட்டதால், அத்தோலை ஜோடு தைக்காமல், சவத்திற்குப் போடுவதற்கு மெல்லிய பாதரட்சைகளாகத் தயார் செய்து சீக்கிரம் கொடுக்க முடியுமானால், செய்யும் வரையில் காத்திருந்து வாங்கிவா' வென்று சொன்னாள். இதுதான் நான்வந்த சமாசாரம்.'

உடனே மைக்கேல், தான் செய்த பாதரட்சையையும், மீந்த தோலையும் சேர்த்துக் கட்டி வேலைக்காரனிடம் கொண்டு வந்து கொடுத்தான். அவ்வேலையாள் அவற்றை வாங்கிக்கொண்டு ஸோமன் மைக்கேல் இருவருக்கும்வந்தனம்செய்துவிட்டுப் போய்விட்டான்.

VIII

மைக்கேல் வந்து ஆறுவருஷங்களாயின; அவன் ஸோமனோடுதான் வசித்துவந்தான்; கிஞ்சித்தும் பேதமில்லாமல் இருந்துகொண்டிருந்தான். அவன் ஓரிடத்திற்கும் போவதில்லை. காரியார்த்தமாகப் பேசுவதைத்தவிர், வேறு ஒன்றும் எவரோடும் பேசுவதில்லை. இவ் வாறு வருஷங்களில், அவன் வந்த தினத்தன்று மித்ரியானா உணவளித்தபொழுது ஒருதடவையும், கனவான் ஜோடுதைப்பதற்காக வந்தபொழுது ஒரு தடவையுமாக இரண்டுதரம் அவன் சிரித்ததேதவிர வேறு ஒரு பொழுதும் அவன் நகைக்கவேயில்லை.

ஸோமன் தன் வேலைக்காரனிடம் அதிக திருப்தியடைந்தான். மைக்கேல் எங்கே தன்னிடத்தை விட்டுப் போய்விடுவானோவென்ற பயத்தால், அவனைப் பற்றிய சமாசாரத்தையோ அல்லது எங்கிருந்துவந்தானென்பதையோ, ஒன்றும் கேட்கவேயில்லை.

ஒருநாள் அவர்களெல்லோரும் வீட்டிலிருந்தார்கள். மித்ரியானா அடுப்பண்டையில் ஏதோ வேலைசெய்துகொண்டிருந்தாள். குழந்தைகள் ஓர் விசுபலகையின்மேல் ஏறிக்கொண்டு ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தன. ஸோமன் ஒரு ஜன்னலில் உட்கார்ந்து தைத்துக்கொண்டிருந்தான். மைக்கேல் மற்றொரு ஜன்னலின் பக்கம் உட்கார்ந்து ஜோடுகளை ஒவ்வொன்றாய் இணைந்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுது, அக்குழந்தைகளில் ஒரு பையன் மைக்கேலிடம் ஓடிவந்து, ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டே அவனுடைய தோளைத் தட்டி, "மாமா, மாமா, ஒரு ஸ்த்ரீ இரண்டு சிறிய பெண்களோடு வருகிறாள் பார்! அவள் நம் வீட்டிற்கு வருவாள் போலத் தோன்றுகிறது. அச்சிறுபெண்களில் ஒரு பெண்ணுக்குக் கால் ஊனம்போலிருக்கிறது. நொண்டி நொண்டி நடக்கிறது" என்றான்.

பையன் இவ்வார்த்தைகளைச் சொன்னவளவில் மைக்கேல் தன் வேலையை விட்டு ஜன்னல் பக்கம் திரும்பித் தெருவை நோக்கினான். தெருவில் என்ன நடந்த போதிலும் ஒரு பொழுதும் கவனியாதவன், இப்பொழுது பார்ப்பதைக் கண்டதும் ஸோமன் மிகுந்த ஆச்சர்யத்தை யடைந்து, தானும் வெளியே பார்த்தான்.

நல்ல உடைகளையணிந்த ஒரு ஸ்த்ரீயானவள் இரண்டு பெண் குழந்தைகளுக்கு நல்ல கம்பிளியுடைகளைத்தரித்துத் தன்னோடு கூட்டிக்கொண்டு, தன் வீடு நோக்கி வருவதைப் பார்த்தான். அப்பெண்களில் ஒரு பெண்ணுக்கு இடதுகால் ஊனமாயிருப்பதால், நொண்டி நடந்ததைத்தவிர, மற்ற அவயவங்களில்

இரண்டு பெண்களும் ஒரே மாதிரியாக அவருள் ஒருவரையொருவர் வித்யாசங்கண்டு பிடிப்பதே மிகவும் துர்லபமாயிருந்தது. அந்த ஸ்த்ரீ அவ்வீட்டின் வாயிற்படியண்டை வந்ததும், வீட்டின் கதவு சாற்றியிருந்ததினால், கதவைத் திறந்து அவ்விரண்டு பெண்களையும் முன்னால் போகவிட்டுத் தானும் நுழைந்தாள். உட்புகுந்ததும் அவள், "நல்ல ஜனங்களே! உங்களுக்கு வந்தனம்" என்றாள்.

உடனே ஸோமன், "அம்மணி, தயவு செய்து உள்ளே வாருங்கள். உங்களுக்கு நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்றான். அந்த ஸ்த்ரீ மேசையின் பக்கத்தில் உட்கார்ந்தாள். அவ்விரண்டு சிறிய பெண்களும் இடம் புதிதாயிருப்பதால், அவ்விடமிருக்கும் ஜனங்களுக்குப் பயந்து, அவளுடைய முழங்கால்களைப் பிடித்துக்கொண்டு நின்றன. அந்த ஸ்த்ரீயானவள் ஸோமனை நோக்கி "வஸந்த காலத்தில் இச்சிறுமிகள் அணிந்துகொள்வதற்கு, மெல்லிய தோலால், சிறிய ஜோடுகள் செய்யச் சொல்வதற்காக வந்தேன்" என்றாள்.

"நல்லது அம்மணி, நான் செய்து தருகிறேன். இதற்குமுன் நாங்கள் இம்மாதிரியான சிறிய ஜோடுகள் செய்ததில்லை. ஆனாலும் நன்றாகச் செய்துதருகிறேன். விளிம்புகட்டின ஜோடாகவோ, அல்லது மேலில் வளைவுள்ளதாகவோ, உள்ளே நார் கொடுப்பன முதலிய எந்த விதம் தேவையோ, அவ்விதம் செய்து தருகிறேன். இதோ இருக்கும் மைக்கேல், ஜோடுதைப்பதில் மிகவும் தேர்ச்சியடைந்தவன்" என்று அவனைச் சுட்டிக்காண்பித்தான். அப்பொழுது, மைக்கேல் தன்வேலையை நிறுத்திவிட்டு அச்சிறு பெண்களையே குறிப்பாகப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்க்க, ஸோமன் மிகுந்த ஆச்சர்யத்தையடைந்தான். உண்மையில் அச்சிறுபெண்கள், கறுத்து நீண்ட விழிகளோடும், பசும்பொன் போன்ற நிறமும், கண்ணாடியைப் போல் பளபளப்பான கன்னங்களும், பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருப்பதோடுகூட அதற்கேற்றாற்போல் நல்ல உடைகளும் தரித்துக்கொண்டிருக்கிறார்கள். என்றாலும், மைக்கேல் முன்னால் எப்பொழுதாவது இக்குழந்தைகளை அறிந்திருப்பானோ, அல்லது ஏன் இவ்விதம் பார்க்கிறானென்பது, ஸோமனுக்கு விளங்காததனால், மனதில் மிகவும் கலவரப்பட்டுக்கொண்டே அந்த ஸ்த்ரீயோடு, விலை முதலியன பேசித் தீர்மானிப்பதற்குப் போய்விட்டான். விலைமுதலியன பேசிமுடிந்ததும், ஜோடு தைப்பதற்கு வேண்டிய அளவுகளையெடுக்க ஆரம்பித்தான். அந்த ஸ்த்ரீயானவள், நொண்டியாயிருக்கிற பெண்ணைத் தன் மடிமீது எடுத்து வைத்துக்கொண்டு 'இச்சிறு பெண்ணின் இரண்டு கால்களின் அளவுகளையும் எடுத்துக்கொள்ளுங்கள். நொண்டியாயிருக்கிற காலுக்கு ஒரு ஜோடும், பாக்கி மூன்றும் ஒரே அளவாகச் செய்தால் அக்குழந்தைக்கும் சரியாகப்போய்விடும். இவர்களிருவர்களின் கால்களும் ஒரே அளவுதான். இவர்கள் இரட்டையர்களாகப் பிறந்தவர்கள்!' என்றாள். ஸோமன், நொண்டிப் பெண்ணின் காலளவை யெடுக்கும் பொழுது, அந்த ஸ்த்ரீயைப் பார்த்து, "அம்மணி, இக்குழந்தைக்கு இக்கஷ்டம் எப்படி சம்பவித்தது? ரொம்பவும் அழகாயிருக்கிறதே; பிறவியே இப்படியா?" என்று கேட்டான்.

"இல்லை, பிறவியல்ல. இக்குழந்தையின் தாய் இறக்குந் தறுவாயில் தெரியாமல் இதன் கால்மேல் புரண்டுவிட்டாள். அதனால் கால் ஊனமாய்விட்டது" என்றாள். இந்த மாதிரி பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் மித்ரியாள் உள்ளேயிருந்து வந்தாள். இவ்வார்த்தைகள் அவள் காதில் விழவே, அக்குழந்தைகளுக்கு இவள் என்ன உறவாயிருக்கவேண்டுமென்பதையறிய ஆவல்கொண்டவளாய், அந்த ஸ்த்ரீயை நோக்கி, 'ஆனால் நீங்கள் இக்குழந்தைகளின் தாயில்லையா?' என்று கேட்டாள்.

"இல்லை அம்மா; நான் இக்குழந்தைகளின் தாயுமல்ல. அல்லது ஒருவிதமான பாந்தவ்யமுடையவளுமல்ல. எனக்கு ஓர்விதமான உறவுமில்லாத அன்னியர்களுடைய குழந்தைகள். ஆனால், இவர்களைச் சொந்தக் குழந்தையைவிடப் பன்மடங்கதிகமாய் வளர்க்கிறேன்."

"இவர்கள் உங்களுடைய குழந்தைகளல்லாமலிருந்தும், இவ்வளவு ஜாஸ்தி வாஞ்சையாயிருக்கிறீர்களே?"

"இக்குழந்தைகளுக்கு என் ஸ்தனத்தின் பாலையே உண்பித்து வளர்த்திருக்கிறபொழுது நான் எப்படி அன்பில்லாமலிருக்கமுடியும்? எனக்கு ஓர் ஆண்குழந்தையிருந்தது. ஆனால் அவனை, கடவுள் தன்னிடம் எடுத்துக்கொண்டு போய்விட்டார். நான் இப்பொழுது இக்குழந்தைகளிடம் அன்பு கொள்கிறது போல அக்குழந்தையிடம் நான் அன்பு கொள்ள இல்லை."

"ஆனால் இக்குழந்தைகள் யாருடையன?"

அக்குழந்தைகளின் வரலாற்றை ஆதியோடந்தமாக அந்த ஸ்த்ரீ சொல்லலானாள்:—

"கிட்டத்தட்ட ஆறுவருஷங்களுக்குமுன், இக்குழந்தைகளின் பெற்றோர் இருவரும் ஒரே வாரத்தில் இறந்துபோய் விட்டார்கள். தகப்பனைச்செவ்வாய்க் கிழமையன்று தகனம் செய்ததும், தாயார் வெள்ளிக்கிழமை இறந்துபோய்விட்டாள். இவ்வனாதைக் குழந்தைகள் தகப்பனிறந்த மூன்றாவதுநாள் பிறந்தன. பிறந்ததினமே தாயாரும் இறந்துபோய்விட்டாள். என் புருஷனும், நானும் அக்கிராமத்தில் அவர்களினுடைய பக்கத்துவீட்டில் வசித்துக்கொண்டிருந்தோம். வீட்டின் பின்புறம் இருவர்களுடைய பாகமும் சேர்ந்தாற்போலிருந்தது. இவர்களுடைய தகப்பனார் தனிமையாகத் தன் மனைவியோடு, காட்டிலிருந்து விறகு வெட்டி விற்று ஜீவனம் செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் விறகுவெட்டக் காட்டிற்குப் போயிருந்தபொழுது அவர்மேல் ஒருமரம் விழுந்துவிட்டது. தேகத்தின்மேல் விழுந்ததினால் வயிறு நசுங்கிப்போய்விட்டது; ஜீவன் போகுமுன் வீடுகொண்டுவந்து சேர்ப்பதே மிகவும் கஷ்டமாய் விட்டது.

"அதே வாரத்தில் அவனுடைய மனைவி இரட்டையர்களான இக்குழந்தைகளைப் பிரசவித்தாள். அவள் எளியவளாயும், ஒத்தாசைக்கு ஒருவருமே யில்லாமலும், தனிமையாக இருந்தாள். ஒருவரும் துணையில்லாமல் அனாதையாகப் பிரசவித்து, அனாதையாகவே இறந்தாள். அடுத்தநாட் காலையில் அவளைப் பார்ப்பதற்காக நான் போனேன். ஆனால் நான் குடிசைக்குட் பிரவேசித்தபொழுது, ஐயோ! பரிதாபம்! அவ்வெளிய ஸ்த்ரீ இறந்து பிரேதமாகக் கிடந்தாள். இறக்குந்தருவாயில், இக்குழந்தையின் காலின்மேல் தெரியாமல் புரண்டுவிட்டாள். அதனால் இக்குழந்தையின் கால் நசுங்கி நொண்டியாகப் போய்விட்டது. உடனே அக்கிராமவாசிகள் அக்குடிசைக்குட் வந்து கூடி, அப்பிரேதத்திற்குச் செய்யவேண்டிய கிரியைகளைச்செய்து தகனஞ்செய்தார்கள். அக்கிராமவாசிகள் மிகுந்த நல்லவர்கள்.

"இக்குழந்தைகளிரண்டும் அனாதையாகத் தனிமையாய்க் கிடந்தன. அவைகளுக்கென்ன தெரியும்? என்ன செய்யும்? அச்சமயத்தில் குழந்தையுள்ள ஸ்த்ரீ நான் ஒருத்திதான் அவ்விடமிருந்தேன். நான் மூத்தகுழந்தையை ப்ரசவித்து இரண்டு மாதங்கள் ஆயிருந்தன. அதனால் இக்குழந்தைகளை நான் எடுத்துக்கொண்டுவந்தேன். அக்கிராமவாசிகளெல்லோரும் ஒன்று சேர்ந்து, மென்மேலும் இக்குழந்தைகளைப் பற்றியே யோசித்தார்கள். அவர்களுக்கு இன்ன செய்வதென்று தெரியவில்லை. கடைசியில் அவர்களெல்லாரு மொன்றுசேர்ந்து என்னிடம் வந்து 'கமலினி, இக்குழந்தைகளை நீயே காப்பாற்று, பின்பு நாங்கள் வேறு ஏற்பாடு செய்கிறோம்' என்று சொன்னார்கள். நான் அதற்குச் சம்மதித்து வளர்த்துவந்தேன். இந்த நொண்டிக்குழந்தை பிழைக்காதுபோல் தோன்றினதினால், அதற்கு என் பாலை உண்பிக்காமல், இந்தச் சரியான பெண்ணுக்கு மாத்திரம் என்னிடம் பால் உண்பித்தேன். ஆனால் பிறகு எனக்குள் ஒன்றுதோன்றிற்று. என்னவெனில், ஐயோ பாவம், இக்குழந்தை என்னத்தை அறியும்? ஏன் இது மாத்திரம் இப்படிக் கஷ்டப்படவேண்டும்? இருந்தாலும்சரி, இறந்தாலும்சரி, நாம் வளர்ப்பதைச் சரியாக வளர்க்கவேண்டுமென்று இரக்கங்கொண்டு சரியாக ஆகாரம் கொடுக்க ஆரம்பித்தேன். அதனால், என் சொந்தபிள்ளை இவ்விரண்டு குழந்தைகள் ஆகமூன்று குழந்தைகளுக்கும் என் ஸ்தனத்தின் பாலையே கொடுத்து வளர்த்தேன்.

"நான் சிறியவளாயும், நல்ல திடசரீரியாயும், சாப்பாட்டிற்கும் சந்துஷ்டியாயிருந்ததனாலும், கடவுளின் அருளினாலும், இக்குழந்தைகளுக்குப் போதுமானவளவு பால் என்னிடத்திலிருந்தது. சில சமயங்களில் இரண்டு குழந்தைகளுக்கும் ஒரே தடவையில் பால் கொடுப்பேன். பிறகு மற்றொன்றுக்குக் கொடுப்பேன். இப்படியாக, கடவுளினுடைய கிருபையினால் மூன்று குழந்தைகளும் வளர்ந்துகொண்டு வந்தன. ஆனால் என் சொந்

தக் குழந்தை இரண்டாவது வயதில் இறந்து போய்விட்டது. நானும், என் புருஷனும் நன்றாக வாழ்ந்துகொண்டிருந்தும், எங்களுக்கு வேறு குழந்தைகளொன்றும் உண்டாகவில்லை. இப்பொழுது என்புருஷன் ஓர் வியாபாரியிடம் ஒரு யந்திரத்தில் வேலைசெய்துகொண்டிருக்கிறார். நல்ல வருமானம் வருகிறது. நாங்கள் நிரம்பவும் சௌக்யமாக வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம். எங்களுக்குப் பிறகு ஒரு குழந்தையும் பிறக்காததனால் இவ்விரண்டு குழந்தைகளுங்கூட இல்லாவிட்டால் நான் எப்படி தனிமையாக விருப்பேன். இவர்களை அன்போடு கவனியாமல் நான் எப்படி இருக்க முடியும்? என் வாழ்நாட்களுக்கு, இவர்கள்தான் சந்தோஷம் கொடுக்கிறார்கள்!" என்று சொல்லிக்கொண்டே, ஒரு கையால் அந்த நொண்டிப்பெண்ணின் கையைப்பிடித்துக்கொண்டு, மற்றொருகையால் தன் கன்னங்களின்மேல் விழுந்தகண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

மித்ரியானு, பெருமூச்சுவிட்டுக் கொண்டே "ஒரு குழந்தை தாய் தகப்பனின்றி ஜீவித்திருக்கலாம். ஆனால்கடவுளின் கிருபையாலன்றி ஒரு பிராணியும் ஜீவித்திருக்க முடியாது" என்று சொல்லுகிற பழமொழி உண்மையாகத்தானிருக்கிறது என்று சொன்னாள்.

அவர்கள் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கிறபொழுது, சடேரென்று ஒரு மின்னல் போன்ற ஜோதி, மைக்கேல் உட்கார்ந்திருந்த மூலையிலிருந்து வந்து அவ்வீடு முழுவதும் பிரகாசமாயிற்று. அவர்களெல்லாரும் அவன் உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கினார்கள். அவன் சிரித்தவண்ணமாக, முழங்கால்களைக் கைகளால் கட்டிக்கொண்டு மேனோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

X

அந்த ஸ்த்ரீ அப்பெண் குழந்தைகளோடு போனதும், மைக்கேல் தன் வேலையைவிட்டு, தன் மேலங்கியைக் கழற்றி வைத்துவிட்டு, விசுபலகையிலிருந்து எழுந்துவந்து, ஸோமனுக்கும், அவனுடைய மனைவிக்கும் தலைவணங்கி சொல்லலுற்றான்: "எஜமானர்களே! நான் போய் வருகிறேன். கடவுள் என்னை மன்னித்துவிட்டார். நான் ஏதாவது தப்பு செய்திருந்தபோதிலும் அதற்காக உங்களையும் மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றான்.

அவர்கள் மைக்கேலைச்சுற்றி, ஓர் திவ்ய தேஜஸ் சூழ்ந்திருப்பதைக் கண்டார்கள். அவன் தேகம் ஆத்யந்தம் பளபளவென்று கண்கூசும்படி ப்ரகாசமாக ஜ்வலித்தது. உடனே ஸோமனும், அவன் மனைவியும் எழுந்து மைக்கேலுக்குத் தலைவணங்கினார்கள். மேலும் ஸோமன் "நீங்கள் சாதாரண மனிதரல்லவென்று மாத்திரம் அறிகிறேன். உங்களை இருவென்று சொல்லவோ, வேறு ஏதாவது கேள்வி கேட்கவோ முடியவில்லை. தயவுசெய்து இதுமாத்திரம் சொல்லுங்கள். என்னவென்னில், நான் உங்களை முதலில் கண்டு வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வரும்பொழுது மிகவும் சிந்தாக்கிராந்தனாக விருந்தீர். அன்றிரவு என் மனைவி அன்னமிட்டபொழுது, உம்முகத்தில் சிரிப்பு உண்டாயிற்று. அப்பொழுது உம்முகம் கொஞ்சம் பிரசன்னமாயிற்று. பிறகு அக்கனவான் ஜோடுதைக்க உத்தரவிட்டபொழுது நகைத்தீர். அப்பொழுது முகம் முன்னினும் அதிகம் பிரசன்னமாக விளங்கியது. இப்பொழுது இந்த ஸ்த்ரீ இச்சிறுமிகளைக் கூட்டிக்கொண்டு வந்ததும் சிரித்தீர். இத்தடவையோ உம்மிடமிருந்து சூரிய காந்தியைப்போன்ற அவ்வளவு ஜோதி உண்டாகிறது. இத்தகைய ஜோதி தம்மிடமிருந்து வரக்காரணமேன்? இம்மூன்று தடவைகளில் தாங்கள் சிரித்த காரணம் யாது? இவைகளையெல்லாம் தயவுசெய்து சொல்லவேண்டும்" என்று வணக்கமாய்க்கேட்டான்.

அதற்கு மைக்கேல் "அப்பா, ஸோமா, என்னிடமிருந்து ஏன் ஜோதி உண்டாகிறதென்றால், கடவுள் என்னைத் தண்டித்ததிலிருந்து அனுக்ரஹித்து மன்னித்துவிட்டார். நான் ஏன் மூன்று தடவை சிரித்தேனென்றால் கேட்பாய். பூமியில் மானிட தேகமெடுத்து, மூன்று தத்துவங்களை அறிந்து வரும்படி என்னைக் கடவுள் இவ்விடமனுப்பித்தார், நான் அம்மூன்றையும் இப்பொழுது அறிந்து கொண்டேன். அவைகளில் ஒன்றை உன் மனைவி என்னிடம் கருணைகூர்ந்து உணவளித்தபொழுது அறிந்தேன். அதனால் அப்பொழுது சிரித்தேன். இரண்டாவது தத்துவத்தை அக்கனவான் ஜோடுதைக்க உத்தரவிட்டயொழுது அவனிடமிருந்து அறிந்தேன். அதனால் மறுபடி சிரித்தேன். இப்பொழுது இச்சிறுமிகளைப் பார்த்ததிலிருந்து, மூன்றாவதும் கடைசியதுமான தத்துவத்தை அறிந்து கொண்டேன். அதனால் இப்பொழுது சிரித்தேன்" என்றான்.



உடனே ஸோமன் மைக்கேலைப் பார்த்து, "என்னத்திற்காகக் கடவுள் உம்மைத் தண்டித்தார்? அம்மூன்று தத்துவங்கள் யாவை? அவற்றையெல்லாம் நாங்களும் அறியும்படி விவரித்துச் சொல்லலாமோ?" என்று விநயமாகக் கேட்டுக்கொண்டான். "ஆகா, அதற்கென்ன?" என்று மைக்கேல் பதில் சொல்லி மேலும், "நான் ஓர் தேவன்; கடவுள், அவருக்குக் கீழ்ப்படியாமலிருந்ததற்காக என்னைத் தண்டித்தார். அதென்னவெனில், ஒரு ஸ்த்ரீயின் காலம் முடிந்து விட்டபடியால் அவளுடைய 'ஆத்மா'வைக் கொண்டு வரும்படி கடவுள் எனக்கு உத்தரவளித்தார். நான் உடனே பூலோகத்திற்குப் பறந்து வந்தேன். அங்கோரிடத்தில், ஒரு ஸ்த்ரீ, இரண்டு பெண் குழந்தைகளை, அப்பொழுதுதான் பிரசவித்து உடம்பு மிகவும் அசௌக்யமாய்த் தனிமையாகப் படுத்துக் கொண்டிருந்தாள். அக்குழந்தைகள் தாயின் பக்கத்தில், கால், கைகளை ஆட்டிக்கொண்டு படுத்துக்கொண்டிருந்தன. அந்த ஸ்த்ரீ அக்குழந்தைகளை அணைத்துக் கொள்ள முயன்றாள். ஆனால் அவளால் முடியவில்லை. அவள் என்னைப் பார்த்தவுடன், தன் ஆத்மாவுக்காகக் கடவுள் அனுப்பியிருக்கிறாரென்பதை யறிந்து, மிகவும் துக்கத்தோடு பிரலாபித்து, என்னைப் பார்த்து அஞ்சலிசெய்து 'ஹே தேவதூத! என் புருஷர் ஓர் மரம் விழுந்ததனால் இறந்து போய்விட்டார். தகன க்ரியை முதலியவைகள் இப்பொழுதுதான் நடந்தன. என்னுடைய இவ்வனாதைக் குழந்தைகளை யெடுத்து வளர்க்க, எனக்கு ஸஹோதர ஸஹோதரிகளோ, அல்லது உற்றார் பெற்றார்களோ, வேறு ஒருவிதமான பந்துக்களும் இல்லாததினால், என் ஜீவனைக் கொண்டு போகாதேயுங்கள்! என் குழந்தைகளுக்கு விவரம் தெரியுமட்டும் அல்லது நடக்கும்வரையிலாவது வளர்ப்பதற்காக என் ஜீவனை விட்டு வைத்திருங்கள். குழந்தைகள் தாய் தகப்பனில்லாமல் ஜீவித்திருக்கமுடியாது' என்று இரந்து கேட்டுக்கொண்டாள். இவ்வார்த்தைகளைக் கேட்டவளவில் நான் மனமிரங்கி அவள் வேண்டுகோளுக்கிணங்கி ஒரு குழந்தையை அவள் மார்பின் பக்கம் விட்டு, மற்றொரு குழந்தையை அவளுடைய கைகளில் கொடுத்துவிட்டு, ஸ்வர்க்கத்திற்குத் திரும்பிவந்து கடவுளை வணங்கி, 'ஓ ஸ்வாமி, நான் அந்த ஸ்த்ரீயின் ஆத்மாவைக் கொண்டு வரவில்லையென்று சொல்லி, அங்கு நடந்த யாவற்றையும் சவிஸ்தாரமாகச் சொன்னேன்.

உடனே கடவுள், 'ஹே மூடா, மறுபடியும் போய் அந்த ஸ்த்ரீயின் ஆத்மாவைக் கொண்டு வா. நீ இன்னும் மூன்று தத்துவங்களை அறிந்து கொண்டுதான் இங்கு வர முடியும். அவையாவன:—(1) மனிதனுடைய ஆத்மாவில் என்ன வசிக்கிறது? (2) மனிதனுக்கு எது கொடுபடவில்லை? (3) மனிதர்கள் எதனால் ஜீவிக்கிறார்கள்? என்னும் இச்சமாசாரங்களை நீ மானிடதேகமெடுத்து அனுபவபூர்ணமாய் அறிந்துகொண்ட பிறகு, தெய்வ சரீரத்தை மறுபடியும் அடைந்து ஸ்வர்க்கத்திற்குத் திரும்பிவரக் கடவாய்' என்று ஆஞ்ஞாபித்தார். அதனால் நான் அந்த ஸ்த்ரீயினுடைய ஆத்மாவை எடுத்துக்கொண்டு போவதற்காகப் பூலோகத்திற்கு மறுபடியும் பறந்து வந்தேன். அவளுடைய மார்பிலிருந்த குழந்தைகள் அவளைத் தழுவிக்கொண்டிருந்தன. அவளுடைய தேகம் படுக்கையின்மேல் புரண்டதனால், பக்கத்திலிருந்த குழந்தையினுடைய கால் நசுங்கி விட்டது. நான் அவளுடைய ஆத்மாவைக் கடவுளிடம் சேர்ப்பிப்பதற்காக ஸ்வர்க்கத்திற்குப் புறப்பட்டேன். ஆனால் எனக்கு உயரப்பறக்கும் தெய்வசக்தி குறைந்து மூர்ச்சையாகக் கீழே விழுந்தேன். அவளுடைய ஆத்மா அந்தர்த்யானமாக மறைந்து விட்டது.—" (இன்னும் வரும்.)

**ஸ்ரீராமாயண ஸாரம்**:—இது மிகச் சிறந்த நூலாகக்காணப் படுகின்றது. எளியநடையில் மிக இனிமையாக எழுதப் பட்டுள்ளது. கல்லூரி மாணக்கர்களுக்கும் பிறருக்கும் இது பெரிதும்பயன்படுமென்பது எமது உறுதியாதலின் இதனை அவரெல்லாம் வாங்கி வாசித்தற்குரியர். கல்வி இலாகா அதிகாரிகள் இதையும் பாடபுத்தக மாக்குவது நலமாகும்.—தேசபக்தன். **இதன் விலை ரூபா. 1.**
விவேக போதினி ஆபீஸ், மயிலாப்பூர், சென்னை.

# புத்த விஜயம்

(237-ம் பக்கத் தொடர்ச்சி.)

மூன்றாம் அங்கம் ; நாலாங்காட்சி

இடம் : யாகசாலை—காலம் : இரவு

பாத்திரங்கள் : கௌதமர், பிராமணர், குரு, பிம்பஸாரன்.

(பிராமணர் மந்திரங்கள் ஜபித்து, ஹோமம் வளர்க்கிறார்கள்.)

**பிம்பஸாரன்.**—ஸ்வாமீ ! என்ன தேவை ?

**பிராமணர்.**—நெய் கொண்டுவாருங்கள்.

**பிம்ப.**—காத்திருக்கிறார்கள்; சீக்கிரம்.

**பிரா.**—ஸமித்தும் கட்டைகளும் வேண்டியது. (கௌதமர் வருகிறார்.)

**குரு.**—(கையிற் கத்தியுடன்) தெய்வங்காள்! இந்தப் பலி பிம்பஸார மஹாராஜனிடமிருந்து வருகிறது. இதைக் கிருபைசெய்து ஏற்றுக்கொள்ளவேண்டும். மகிபதியின் பாவங்கள் இந்த மிருகத்தோடே தொலைந்து போகட்டும். அக்கினி அவைகளைப் பஸ்மமாக்கக்கடவது. இதோ வெட்டுகிறேன்.

**கௌ.**—வேந்தே ! அவர் வெட்டாதிருக்கட்டும். (ஆட்டைக் கட்டினின்றும் விடுதலை செய்கிறார்.)

**பிரா.**—இதென்ன ! பங்கமடைந்து விட்டதே!

**கௌ.**—அறவினை யென்பது கொல்லாமையே. ஓருயிர் தொடக்கமாக மக்கட்கதி யீறாயுள்ள சீவ ராசிக ளனைத்திற்கும் நம்மால் இம்சை சொற்பமேனும் உண்டாகக்கூடாது. "அஹிம்ஸா பரமோ தர்ம:" வருத்தக்கூடாதென்றால் கோறல் மகத்தான தோஷமாகிறது. நமக்கு நோவேற்பட்டிருப்பின் துயரம் அளவற்றது. ஐயோ ! பாவம் ! இந்த மிருகத்திற்குப் பேசுந்திறமையிருக்குமாயின் நியாயப்பிரமாணத்தைக்கூறி நம்மைப்போல் நீதத்தையடையப் பிரார்த்திக்கும். கொடிய விலங்கினமா யிருந்தால் மனிதர்கையி லகப்படுவதரிது. இப்பேர்ப்பட்ட பரிதாப நிலைமையிலுள்ள உயிர்களைக் கொடூர மிருகங்களாகிய சிங்கம், புலி இவைகளினின்றும் பரிபாலித்து வருகிறதல்லவோ மானிட ஜன்மமெடுத்ததின் அறிகுறி ? உயிர் மாய்த்தல் தானமுந் தருமமுமாகுமோ ? இதனாலா உங்களுக்கு வானவர்நாடு வழிதிறக்கும்? இதுவோர் சன்மார்க்கம்? தூய்மை நிறைந்த இருதயங்களை இத்தீச்செயலால் வடுப்படச்செய்கிறீர்களே ! இதுவோ நீதிசாஸ்திரம் ?

அருள், அநுதாபம், சமாதானம், சாந்திமுதலான சற்குணங்களைப் படைத்ததின் பயனிதுதானோ ? உயிரை வாங்குதல் யாவராலுங்கூடும் ; அதை யளித்தல் நம்மாலியலாது. ஒருவன் மரண நிலைமையிலிருக்கும்பொழுது அவனுக்கு வேண்டிய ஒத்தாசை புரிந்து சௌக்கியமாக்கினால்வியாதியஸ்தன் எவ்வளவு நன்றிபாராட்டக் கடமையுள்ளவன் ? இருவருக்கும் இதனால் வெகு சந்தோஷமுண்டாகும். அதைப்போல நீங்களும் ஜோதிமயமான சுகுணங்களைக் காட்டுங்கள். நீங்கள் தேவதைகளை நோக்கி உங்கள் மேற் தயை கூரவேண்டுமென்று மன்றாடுகிறீர்கள். நீங்கள் இரக்கமற்றிருந்தால் உங்களுக்கு எவ்விதம் இரக்கங் காட்டப்படும் ? நன்மை செய்தால் நன்மை யடையலாம். தீமைசெய்தால் தீமையேவரும். இது வாயால் விரைவிற் சொல்லப்படக்கூடும். அநுஷ்டானத்திற் கொண்டுவருபவர் சிறுபான்மை யோரே. தெய்வீக நிலங்களை வெளிக்காட்டுங்கள். மனிதனுக்கு முக்கியமாக மூன்று கதிகளுண்டு: விலங்குகதி, மக்கட்கதி, தேவகதி என்பவைகளே. இவைகளை யிப்போதேயடைகிறான். தெய்வீகத்தன்மையை மறந்து, கொடுமை, பகைமை, பொய்ம்மை, வேணவா, காமம், சுயநயம் முதலான மிருகத்தன்மை சம்பந்தமானவைகளைச் சார்ந்து மற்றவர் ஞாபகமின்றித் தனக்கே நன்மைகளைத் தேடிப் பிறனுடைய நன்னிலைமையைப் பார்க்கச் சகியாதவன் பிரதம இனத்தைச் சேர்ந்திருக்கிறான். பிறகு சதுர்வித புருஷார்த்தங்களை யுணர்ந்து, சாமானியமாயிருந்து மேலான நிலைமையை மறந்து, ஆனால் இழிவான தன்மையையடைய இஷ்டமில்லாதவனாகித் தன்னுடைய சுகத்தைத் தேடிப் பின்பு அன்னியருக்கும் உதவிபுரியவேண்டுமென்ற எண்ணத்துடனிருப்பவன் சாதாரணமாயுள்ள மத்திபனாயிருக்கிறான். கடைசியாக, தெய்வீக நிலைமை இவ்விரண்டையுங் கடந்திருக்கிறது. அதிலுள்ள உணர்ச்சி மேன்மையுடையது. இந்த உணர்ச்சியிற் பொருந்தியிருக்கிறவனுக்கு உலகத்தாரின் ஆனந்தத்தில் அவனுடைய பேரின்பமிருக்கிறது; நான் என்கிற நினைப்பு மறைந்திருக்கிறது; மற்றவரைப்பற்றிய சிந்தையே முன்னிற்கின்றது; தன் தேகத்தாலும், பொருளாலும் மற்றுமெத்தாலும் பரோபகாரஞ் செய்வான், அவனுக்கு வியசனமே கிடையாது. தனக்கேதாவது வருத்தம் நேரிட்டாலும் அதையொரு காரியமாக மதியான். சாந்தம், பொறுமை, பரிதாபம், அன்பு, அருள், சத்திய விரதம் இவைகளே அவனிடம் குடிகொண்டிருக்கின்றன. ஆதலால் அந்தத் தெய்வீக சதானந்த பரிபக்குவத்தை யடையுங்கள். கோடானு கோடி பசுக்களுக்கும் யாகங்களுக்கும் இது மேலானது. இது உங்களுக்கென்ன தீங்கிழைத்தது? மிகவு முபயோகமாயுள்ளதே. கொலையினாற் பாவங்க ளபிவிருத்தியாகுமே யொழியக் கொஞ்சமாகிலுங்குறையுமோ ? இது சட்டத்திலிட்ட வாக்கே. நாங்க மற்ற வாயில்லா இப்பிராணியைக் கொலைசெய்வதனாலா உஜ்ஜீவனமடைவது ? இவ்வளவோடே நிறுத்துங்கள். எல்லாவுயிர்களுடன் சமாதானத்தோடிருங்கள். நீங்கள்பிரஜாபதிகள். இவை பிரஜைகள், உலகம் உங்களுடைய இராச்சியம். உயிரோம்பி



அன்பு கூர்ந்து பூமிமுழுவதையும் ஜயங்கொள்ளலாம். இதுதான் பிறவாவின்பம் பெறுதலின் மார்க்கம்.

**குரு.**—ஹரா ! (ஒதுங்குகிறான்.)

**பிம்பஸாரன்.**—நாளைய தினம் இச்செய்தியைப் பறையறைவிக்க வேண்டும். எங்கும் பரவட்டும். இதுவரையும் நடந்த கொலையும் உதிரப்பெருக்கும், துன்பமும் போதும், போதும் ; இனி யெவரும் ஓர் துளி இரத்தமுஞ் சிந்தப்படாது; புலாலையும் உண்ணக் கூடாது; எங்கும் ஐக்கியமும் சமாதானமுமே பெருக வேண்டும்; இரக்கமுள்ளவர்களுக்கே இரக்கம் பாராட்டப்படும்.

(கௌதமரைப் பார்த்து) நாயகமே ! வேளையிலாகாரமின்றிக் காடுமலையுங் கடும்புனலுங் கடப்பது காரணமாய்த் தங்கள் மிருதுவான அங்கத்திற்குப் பங்கம் நேரிடும், இரக்ஷகா! இங்கேயிருந்து ஞானத்தை யாவர்க்கும் போதிப்பீர். எனதரண்மனையில் போக நுகர்ச்சி செய்துகொண்டிருக்க வேண்டுகிறேன்.

**கௌ.**—இதெல்லாமாய் விட்டதென்று அறிந்தும் பலவந்தப் படுத்துவதிற் பிரயோஜனமில்லை. நான் சபதங் கூறியிருக்கிறேன். அதை நிறைவேற்றியே தீருவேன். தேவகன்னிகைகள் மயக்கினாலும் அவர்கள் வலையிற் படமாட்டேன்.

(பிம்பஸாரன் மூன்று தடவை கௌதமரைப் பிரதக்ஷிணம் பண்ணுகிறான்.)

**பி.**—என்னைக் காத்தவனே ! அறவோனே ! ஞானத்துறைவோனே ! பிரிய சாகரனே ! (நமஸ்கரிக்கின்றான்

**கௌ.**—போய்வருகிறேன். (போகிறார்.)

---

மூன்றாம் அங்கம் ; ஐந்தாங்காட்சி.

இடம் - ஓர் சோலை ; காலம்: மாலை.

பாத்திரங்கள்: கௌதமர், நடனமகளிர்கள், ஸுஜாதை, ராதா.

(ஜொலிக்கின்ற ஆடையாபரணங்களணிந்த நாட்டியப் பெண்கள் ஆடல்பாடல்களுடன் களித்துக் கொண்டு போகிறார்கள்.)

**கௌதமர்.**—இவர்கள் பாடுகிறதைப்போலவே வாழ்வாகிற வாத்தியத்தில் இரக்ஷிப்பு என்ற கீதத்தை வாசித்து ஜனங்களுக்கு அந்தமில் பேரின்பம் பயக்க முயற்சி பண்ணுகிறேன். பலஹீனம் என்னை மேற்கொள்ளுகிறது. இப்பொழுது எவரேனும் ஆதரிப்பாரோ? (ராதா வருகிறாள்.)

**ராதா.**—வன தேவதையே! பக்தரான எங்களுக்குப் பிரத்தியக்ஷமோ? ஆஹா! முகாரவிந்தம் ஒளி வீசுகிறது.

**ஸுஜாதை.**—(துதித்துக்கொண்டு வந்து) ராதா! பெருக்கியாய் விட்டதா? விருக்ஷத்திற்குத் தாலி கட்டினையா?

**ரா.**—ஸுஜாதா! இதோபார்! இஷ்டதெய்வம் மரத்தடியில் முழந்தாளைக்கட்டிக்கொண்டிருப்பதைத் தரிசி.

**ஸு.**—(வணங்கி) எனக்கு நல்ல காலம் விடிந்தது, தங்கள் கடாக்ஷத்தாலேயே இக்குழந்தை நீங்கள் வரமளித்ததின் பலன். ஸ்வாமீ! என்னுடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். நேருக்கு நேரே காட்சி கொடுத்தது என் பூஜாபலமே. இதோ என்னிடமுள்ள நிவேதன அன்னத்தை அங்கீகாரஞ் செய்து கொள்ளுமாறு பிரார்த்திக்கிறேன்.

(பாலுடன் கலந்த சோற்றைப் பிக்ஷாபாத்திரத்திற் போடுகிறாள்; கௌதமர் புசிக்கிறார்.)

**ஸு.**—தாங்கள் தேவதையென்பது, மெய்தானா?

**கௌ.**—நீ கொண்டுவந்த தென்ன?

**ஸு.**—ஓர் பசுவின் பாலைக் கறந்தேன். இந்தப் பசு ஆறு பசுவின் பாலால் வளர்க்கப் பட்டிருக்கிறது. இந்த ஆறும் பன்னிரண்டால் இப்பன்னிரண்டும் இருபத்து நாலால், இவ்விதமாக முதலில் நூறு பசுக்களைப் பெரிய மந்தையிலிருந்து தெரிந்தெடுத்தேன். எனக்கு மகன் பிறந்தால் இவ்வாறு செய்வதாகப் பிரார்த்தனை செய்து கொண்டு வந்தேன். அப்பேர்ப்பட்ட பசுவின் பாலை நல்ல அரிசியுடன் சமைத்தேன். அதைப் பூர்ண சிரத்தையோடு கொண்டுவந்தேன்.

**கௌ.**—(குழந்தை தலையில் கைவைத்து) வாழக் கடவாய்! வாழ்க்கையின் பாரம் இவன்மேல் மிகப் பளுவாயிராம லிருக்கக்கடவது! அம்மணி! நான் உன் சகோதரனேயொழியத் தேவதையன்று. இளவரசனாயிருந்து உண்மையை யாராய்ச்சி செய்யத் துறவடைந்து ஆறு சம்வற்சரமாக அலைந்து திரிகிறேன். அருந்தவம் புரிந்து தேகத்தின் வலிமை குன்றினதே யன்றி, என்கோரிக்கை முடியவில்லை. இப்பொழுது உணவின்றி மெலிந்து உனது அன்னத்தாற் களைதீர்ந்தேன். உனது நாமமென்னை ?

**ஸு.**—ஸுஜாதை. **கௌ.**—ஸுஜாதா! எனக்குச் சகோதரியாயிருந்து காப்பாற்றினாய். இருண்டு வந்த கண்கள் சோர்வுதீர்ந்து தெளிவடைந்தன. இனி துலக்கத்தை யடைய ஆயத்தமாயிருக்கிறேன். இதனாலே பாவங்களெல்லாம் மாண்டு ஜீவன் மேலான பதவியடையப் போகின்றது. வாழ்ந்து கொண்டிருக்க மாத்திரமா ஜீவன் இனியதா யிருக்கிறது? உலகத்தில் வாழ்வு உயர்வடைகிறதா ? நீ யெவ்விதமறிகிறாய் ? அன்பு போதுமானதா யிருக்கிறதா?

**ஸு.**—வேறொன்றும் நானறியேன். என்னுடைய பர்த்தாவும் இந்தக் குழந்தையின் புன்சிரிப்பும்

என்வாழ்வை மேன்மைப் படுத்துகின்றன. அவற்றை வழிபட்டுக் குடும்ப வேலைகளைச் சூரியோதய முதல் படுக்கப்போகும்வரை சந்தோஷத்துடன் செய்து முடிப்பேன். கணவனுக்கு ஊழியஞ் செய்வதில் எனக்கு ஆனந்தம். இரவில்ஆலயத்திற்குப்போவேன். வேதசாஸ்திரம் ஓதிலேன். ஒன்று மாத்திரம் தெரிந்திருக்கிறேன். நன்மையும் தீமையும், செய்கிறவனுக்குத் திரும்பி வருகின்றன. கோபம், பொய், களவு முதலானவைகள் பகைமை, கெடுதி, நாசம் இவற்றையும், பட்சம், சத்தியம், அமைதி, பேராவலின்மை இக்குணங்கள் நட்பு, வெற்றி, சாந்தி, திருப்தி இவைபோன்ற மாண்புடைய நிலங்களையும் பிரதி பலன்களாக உண்டாக்குகின்றன. இந்த நியாயத்தை யுணர்ந்து, நம்பி, இதையே அடைக்கலமாகக் கொண்டிருக்கிறேன்.

கௌ.—உனதுவார்த்தை வேதத்தை விட அதிகமாக ஞானத்தைப் போதிக்கிறது. உன்னுடைய கோட்பாடுகள் சுருக்கமாயிருந்தாலும் மெய்யானதாயும், சுத்தமாயும், போதுமானதாயுமிருக்கின்றன. நீ சன்மார்க்கத்தில் நின்றொழுகி வருகிறாய். உனது களங்கமற்ற மனது சாந்தியடையக்கடவது. ஸுஜாதா! நீ என்னை வணங்கினாய். உன்னுடைய ஞானத்திற்காக இப்பொழுது உனக்கு வந்தனம் பண்ணுகிறேன். நீ துன்பமின்றி இன்பத்துடன் வாழக்கடவாய்!

ஸு.—நீர் காரியசித்தி பெறுவீராக! (போகிறார்கள்;

---

மூன்றாம் அங்கம்: ஆறாங்காட்சி.

இடம்: தபோவனத்திற் போதிவிருக்ஷம்.

காலம்: இரவு.

பாத்திரங்கள்: கௌதமர், மாரன், காமம், வெகுளி, மயக்கம், மாயா யசோதரை.

(கௌதமர் போதி விருக்ஷத்தினடியில் தியானத்திலிருக்கிறார்; மாரன் தன் கணங்களுடன் வருகிறான்.)

மாரன்.—கௌதமரே! போதும் நிறுத்தும். இதை விட உன்னத பதவியில் உம்மை வைக்கிறேன். என் பின் வாரும். இவ்வளவு வருத்தமேன்? சுகமாய் ஜீவித்துக் கொண்டிருக்கலாம். எவராவது தன்னையே தான் கெடுத்துக் கொள்வதுண்டோ? அற்பமான ஞானத்தைத் தேடவேண்டாம்; என்னுடைய காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தாலே வேறொன்றும் ஆவசியகமானதன்று. என் வார்த்தையைத் தள்ளாதேயும். உம்மை ஆனந்தப் படுத்துகிறேன். எழுந்திரும்.

காமம்.—நல்ல வேடிக்கை! இப்படிச் செய்வாருண்டோ? மனையாளில்லையா? மாளிகையில்லையா? போக்ய வஸ்துக்களில்லையா? அவற்றையெல்லாம் விட்டுவிட்டுப் பிச்சைக்காரனாகவா வேண்டும்? இப்படியேன் செய்ய வெண்ணங்கொண்டீர்? சௌந்தரியமுள்ளவரா யிருக்கிறீர். இது தகுந்ததோ? மனைவியோடு மருவிக் காதலன் காதலியாக நிகழ்ந்திருப்பதை வெறுக்க வேண்டாம்.

கௌ.—மாதரின் சுகம் இன்னதென்பதை யறிவேன். நீ சொல்லி என்னைக் கவர்ந்துபோக நினைக்காதே. என்னை அசைக்க முடியாது. போ.

வெகுளி.—என்ன! உமது உற்பத்தியிடமோ சூரிய வம்சம். நீர் அடைந்திருக்கிறதோ அற்பமான பிக்ஷுவின் கதி. இதை நினைத்துப் பாரும். இவைகளை முனிந்து எறிந்துவிடும். இராஜ நிலைமைக்கு இவ்வனம் கேவலத்திலிருந்து பொறுமையோடிருப்பது ஏற்குமோ? கோபாக்கினி பிறக்க, கண்களிரண்டும் சிவந்து இதற்கா வந்தோமென்று சீற வேண்டாமா?

கௌ.—நீயா எனக்கு என் பிறப்பு, வளர்ப்பைப் பற்றி உபதேசம் பண்ணுகிறாய்? நீ என்ன செய்வாய்? வீணே கத்தாதே; உறைவிடம் போய்ச் சேர.

மயக்கம்.—துவராடையும் பிக்ஷா பாத்திரமும் நித்தியமாகுமோ? ஏன் வருத்தந் தேடிக்கொள்ள வேண்டும். ஞானமென்பது உண்மையோ? அது இன்மை. அறிவென்பதென்ன? எல்லாம் தோற்றமே. இவைகள் கிட்டாது, நிழலைப்பிடிக்க முடியுமோ? போம், போம். திரும்பிப்போய் மற்றவர் போல நடவும். அவர்களைப்பற்றிப் புறங்கூற நீர் அதிகமாய்ப் படித்தீரோ? நடந்ததுதான் சரியென்றிரும்.

கௌ.—உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? சத்துருவே! அகன்று செல்.

(மாரன் தன் கம்பைச் சுழற்றுகிறான்) (மாயா யசோதரை வருகிறாள்.)

மாயா யசோதரை.—நா! நாதா! என்னை விட்டுப் பிரிந்தீரே. நான் சகிப்பேனா? என்னுடன் அரண்மனையில் ஸுகித்து வாழாமல் இப்படி வேஷம் பூண்டீரே! இதில் என்ன மோட்சமடைந்தீர்? என்கூட விருப்பதே பேரானந்தம். இங்கில்லாமல் வேறெங்கே தேடிப்பிடிக்கப் போகிறீர்? வீணே கனவிலே யிருக்கிறீர்?

கௌ.—உனது வேஷத்தை யறிந்தவன் நான். என்னிடம் குறும்பு பண்ணாதே. உன்னுடைய மாயைபோலவே உலக விஷயங்களு மிருக்கின்றன. நீயும் அவைகளும் சூனியமே; ஓடிப் பிழைப்பாய். (மாரன் முதலியோர் போகிறார்கள்.) புத்தர் தியானத்திலிருந்து உண்மை யறிகிறார்.)

(ஜோதி கிளம்புகிறது.)



புத்தர்.—யுகாந்தரங்களிலேயுள்ள எனது பிறப்புகளை யறிந்தேன். இச்சைகளையும் அகங்காரத்தையும், அதனாலுண்டாகும் பிறவிகளையு முணர்ந்தேன். சீலமும் சீலத்தின் அந்தத்தையும் தெரிந்துகொண்டேன். துக்கம், துக்கோற்பத்தி, துக்க நிவாரணம் முதலியவைகள் தெளிவாகத் தோன்றின. அவித்தை யென்னுந் திரைச்சீலை துலக்கத்தை மறைத்துக் கொண்டிருந்தது. இப்பொழுது அது விழுந்ததும், ஞானத்தை நேரில் காண்கிறேன். வீண் செய்கைகளின் காலம் முடிந்தது. இனி நீதியே அரசாளப் போகின்றது. உலகத்திற்கு க்ஷேமம் பிறந்தது. அழியாத இளைப்பாறுதலைக் கண்டேன். உயிர்கள் துக்கம் நீங்கி ஆனந்தமடையப் போகிறார்கள்.

(தேவர்கள் ஆகாயத்திற் கீதம் பாடுகிறார்கள்.)

## சிறுவர்களுக்கான பக்கங்கள்

### CHILDREN'S PAGES

ஒப்புரவொழுகு: ஓதுவ தொழியேல்

ஒப்புரவொழுகு; ஒப்புர - உலகோர் ஒப்புக் கொள்ளும்படியான வழியில், அதாவது உலக விரோதமின்றி, ஒழுகு-நட என்பது இதன் கருத்து. ஆனால் உலகத்தில் எல்லாருக்கும் சரிவர நடத்தல்என்பது ஒருவருக்கும் இயலாது. இங்கு உலகோர் என்பது நல்லோராகிய மேலோர் என்று கருத்தடைய வேண்டும். தீயோர் பிறந்தும் பிறவாதவராதலால், அவர் நட்பைத்தள்ளி நல்லோர்க்குச் சமாதானமாய் அவர் அநுசரிக்கும் மார்க்கத்தில் நடப்பது சிறப்பு. ஓதுவதொழியேல்; ஓதுவது - படிப்பதை, ஒழியேல்-விலக்காதே. சொல்பம் கற்றவுடன் அகங்கரித்து எல்லாம் தெரிந்துவிட்டதாய் எண்ணிக் கர்வங்கொண்டு கற்பதை நிறுத்திவிடுவது வெகு மூடத்தனமும், அவமானமுமாகும். எல்லையில்லா கல்விக்கடலை யறியவறிய அறிவு விசாலமும் அநுபவ ஞானமும் ஆனந்த நிலைமையும் வாய்க்கும். இதற்கு ஓர் சிறுகதை சொல்கிறேன் கேளுங்கள்:

கூடலூர் என்ற ஊரின் சிறு பள்ளிக்கூடத்தில் சுந்தரன் சுகுணன் என்ற இரு சிறுவர்கள் நேசமாய்ப் படித்துக்கொண்டு வந்தார்கள். அவர்களில் சுந்தரனுக்குக் கொஞ்சம் சொத்துண்டு. ஆனால் அவன் புத்தியில் படிப்பு ஏறவில்லை. சுகுணனோ வெகு ஏழை; சில தனவான்களி னுதவியால் படித்துவந்தான். வெகுபுத்திமானும், நற்குணமுள்ளவனுமானபடியால் படிப்பைவிடாது கடவுளருளாலும் கனவான்களுதவியாலும், தனது கல்வியை மேன் மேலும் விர்த்திசெய்துகொண்டே வந்தான். இவனுடன் படித்த சுந்தரனோ முதல் வகுப்பிலேயே மூன்று வருஷம் இணைபிரியாதிருந்தான். சுகுணனோ இதற்கு மூன்று மடங்கு மேல் போய்விட்டான். இப்பொழுது இவர்களுக்கு இடம் மாறியபொழுதும் சிநேக மட்டிலுண்டு. எப்பொழுதாவது இவர்கள் இருவரும் சந்திக்கும் சமயத்தில் சுகுணன் சுந்தரனைநோக்கி "நீ இவ்விதமிருப்பது அழகன்று; நன்றாய்ப் படிக்கவேண்டும். 'ஈட்டிய பொருளின் எழுத்தே யுடைமை சிறுமையிற் கல்வி சிலையிலெழுத்தே' என்றபடி இவ்வயதில் சற்றுச் சிரமப்பட்டால் மிக்க நன்மையை யடையலாம். இக்காலத்தை வியர்த்தமாக்கிவிட்டால், அப்புறம் வெகு சிரமம்" என்று நல்வார்த்தையாய்ச் சொல்வான். ஆனால்இவ்வார்த்தைகள் சுந்தரன் செவியி லேறாது, "சுகுணா! எனக்கும் படிப்புக்கும் வெகு தூரமென்று நினைக்கிறேன். வந்திருக்கும் சொல்ப படிப்பே போதும். ஏதோ சுவாமி கொடுத்த சொத்துக் கொஞ்ச மிருக்கிறது. அதை வைத்துக் கொண்டு 'ஒப்புரவொழுகு' என்றபடி உலகோர் மெச்சக் காலந்தள்ளி விடுகிறேன். இனிப் படிப்பதாக உத்தேசமில்லை" யென்று அவன் உளறினான். சுகுணன் இதைக்கேட்டு மிகுந்த பரிதாபத்துடன் அவனை நோக்கி "நண்பா! நீ யுரைப்பது முற்றிலும் சரியன்று. அரைப்படிப்பு அனர்த்தத்துக் கேது வென்பது சரியாயிற்று. அந்த ஆத்திச்சூடியை முதலில் நீ பூர்த்தியாய்ப் பார்த்துக் கிரஹிக்காத படியால் உனக்கு இவ்விபரீத புத்தி வந்தது. முயற்சியினால் ஆகத் தகாத காரியமும் உண்டா? இப்புத்தியுடன் ஒப்புரவொழுகு என்றபடி காலந்தள்ள உன்னால் ஒரு பொழுதும் முடியாது. இதற்கு முன்வரும் வாக்கியமாகிய 'ஊக்கமது கைவிடேல்' என்பதும், பின் அடுத்து வரும் வாக்கியமான

'ஓதுவ தொழியேல்' என்பதும் உன் கண்ணில் படவில்லையா? நல்ல நூற்களை ஓதி நல்லோரை யடுத்து நல்லறிவை யடையாது உன்னால் 'ஒப்புரவொழுகு' என்றபடி நடக்கமுடியாது. வீணே அவ்வெண்ணத்தைவிட்டு ஊக்கத்துடன் கல்வி பயில் எனவே, மூடச் சுந்தரம் மனதில், மூர்க்கமான அடமுண்டாகி "ஏ சுகுணா! நீ உன் புத்தியினாலும் யுக்தியினாலும் ஒப்புரவொழுகு. நான் என் பணத்தினாலும் குணத்தினாலும் அப்படி நடக்கிறேன். இது இரண்டில் எது சிரேஷ்டம் என்பதை பார்த்தே விடுவது" என்று நில்லாது வேகமாய்ப் போய்விட்டான். வீட்டிற்குச் சென்று நான்கு நாழிகை நேரம் ஓரிடம் உட்கார்ந்துயோசித்து 'உலகொப்பநடப்பதென்றால் யார் வந்தபொழுதும் சிரித்து விளையாடிக்கொண் டிருந்தால் இன்பமாய்விடுகிறது! இதில் என்ன சிரமம்?" என்று எண்ணி முடித்து, அன்றுமுதல் யார் வந்தபொழுதும் எப்பேச்சுக்கும் எச்சமயத்திலும் சிரித்து விளையாடுவான். இதனால் எல்லோர்க்கும் இவனிடம் மிகு அருவெறுப்புண்டாகி, "இது என்ன ஒன்று மறியாதமூடப் பைத்தியமாயிருக்கிறது. நல்லது பொல்லாது, பெரியோர் சிறியோ ரென்பது மில்லாமல் எப்பொழுதும் பல்லைக்காட்டிக் கொழுப்பெடுத்த குதிரைபோல் குதிக்கிறது. இந்தச் சனி எதிரில் வராதிருத்தலே மிகு நலம்" என்று திட்ட ஆரம்பித்தார்கள். இதைப் பார்த்த சுந்தரன் 'இவ்வழி சரியன்றுபோலிருக்கிறது. சரி, இனி கொஞ்சம் முடுக்காகவே இருக்க வேண்டும்' என்று எண்ணி யாரைக் கண்டாலும் சிடு,சிடு என்று எரிந்து பேசுவான், இதைப்பார்த்த ஜனங்களும் 'இதென்ன? இச்சிடுமூஞ்சி நல்லவர் பொல்லாதவர் அறியாது வேட்டை நாய்போல் விழுந்து பிடுங்கிவிடும் போலிருக்கிறது" என்று இவனைக் கண்டாலே தூர விலகிப்போக ஆரம்பித்தார்கள். இதைக் கண்ட சுந்தரன் 'சரி; இதுவும் சரிப்படவில்லை. எல்லோர் மனதையும் உருக்கும்படி அழுது பார்ப்போம்' என்று யாரைக் கண்டாலும் அழ ஆரம்பித்தான். இதைப் பார்த்த எல்லோரும் 'ச்சீ! இது என்ன மூதேவி பிடித்த அழுமூஞ்சி! இதை அணுகினாலும் அக்காள் வாசம் வந்துவிடும்போ லிருக்கிறது. இவ்விடியாமூஞ்சி முகத்தைப் பார்த்தாலும் ஒரு காரியத்திற்கும் ஆகாது' என்று சொல்வதைக் கேட்ட சுந்தரன் 'இது என்ன, குணங்களால் சரிவரவில்லை, இனி பணப்ரயோகந்தான் செய்ய வேண்டும்' என்றெண்ணி மிகவும் முகஸ்துதி செய்பவர்களும் போக்கிரிகளும் அற்பத்தனமுமான குடியர் கூத்தாடுவோர் சூதாடுவோர் வேசிகமனஞ் செய்வோர் முதலியவர்களுடைய நட்பு மிகுந்து அவர்கள் வழியும் இவனுக்குப் பழகி 'இதுதான் சரியான வழி. உலகோரனைவரும் நம்மைப் புகழ்கிறார்கள். நம் கீர்த்தி எங்கும் பரவியிருக்கும். நாடகமாடும் நாராயணனும், கள்ளுக்கடை கந்தசாமியும், ஜட்காவண்டி ஐயராமனும், நட்டுவ நடராஜனு முதல் நம்மைக் கண்டாலெழுந்திருக்கிறார்கள். நாலுவழியில் திண்டாடிக் கடைசியில் நல்லவழியை அடைந்தோம். இவ்வழி யனுசரிக்க ஏழையான சுகுணனால் முடியாது. அவன் திண்டாட வேண்டியதுதான்' என்று மதோன்மத்தனாய்க் களிப்புறும் நாளில், அறியாதழித்த செல்வமும் சீக்ரமே அழிந்துவிட்டது. அப்புறம் இவனை அண்டுவார் யாருமில்லை. உடம்பிலும் வியாதி நிறைந்து சோத்துக்கும் திண்டாட்டமாகிவிட்டது. எல்லார் முகத்திலும் விழிக்க வெட்கமும் துக்கமும் மிகுந்து, தன் அருமைச் சிநேகிதனான சுகுணனைக் காணத் தீர்மானித்துப் புறப்பட்டுப் போனான். சுகுணனோ நல்லோருதவியாலும் நல்லானருளினாலும் பரீக்ஷை எதிலும் முதலாய்த்தேறி ஜில்லா கலெக்டர் வேலையிலமர்ந்து பெரியோர்களுக்குக் கண்ணுக்குக் கண்ணாய் நடந்து நல்லோனாய் எங்கும் புகழ்பெற்று விளங்கியிருந்தான். இவன் இருப்பிடம் அடையாளம் தெரியாது சுந்தரம் அலைந்து கடைசியில் எல்லோரையும் விசாரித்து அவன் பங்களாவுக்குச் சென்று, அதன் அழகைக் கண்டு பிரமித்து 'அந்தோ! நண்பனான சுகுணனின் நன்மொழிகளை அந்நாளில் தறியெறியாது மேன்மேலும் கல்வியை விர்த்தி செய்திருப்பேனானால், இப்பொழுது நானும் இப்பதவிக்கு வந்திருப்பேனே; வீணாய் மானிடப் பதராகிவிட்டேன். இப்பொழுது தோன்றும் நற்புத்தி அப்பொழுது தோன்றவில்லையே' என்று ஏக்கத்துடன் நின்று எண்ணிக்கொண்டிருக்கும் பொழுது, மேல்மாடியிலிருந்து தற்செயலாய் வாசலை எட்டிப்பார்



த்த சுகுணன் சுந்தரனின் பரிதாப காட்சியைப் பார்த்து மனதிளகி அந்த நிலைமைக்கு அவனது நடத்தை அவனைக் கூட்டிவிடும் என்று அறிந்தவனாதலால், அதில் ஒன்றும் ஆச்சரியப்படாது, சேவகனைக் கூப்பிட்டு அவனை மாடிக்கு அழைத்துவரும்படி சொன்னான். அவ்வண்ணமே அவன் அழைத்துவரச் சுகுணன் கம்பீரமும் அருளும் நிறைந்த முகத்தைப் பார்க்கவும் சுந்தரன் வெட்கித் துக்கம் தாங்காது அவனைக் கட்டிக்கொண்டு கோவென்றழுதான். சுகுணனும் அவனைத் தேற்றி 'இனி அழுதும் நொந்தும் பயனென்ன? இதெல்லாம் செய்து பிரயோஜனப்படும் கல்வியின் காலம் உனக்குப் போய்விட்டது. இனி அது ருசிக்காது. இதோ உன் அல்பப் படிப்பே அறிவைக் கெடுத்து உன்னை இந்நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டது. இப்பவும் எனக்கு வேலை யொழிந்த சமயங்களில் கற்றுணர்ந்த பெரியோர்களைப் பார்த்துப் பழகுவதும் அறிவு விளக்கும் நூல்களைப் படித்து ஆனந்திப்பதுமே எனக்கு மிகவும் பிரியம். இதனாலேயே மற்ற எல்லாக் குணமும் புகழும் தானே உண்டாகும்' என்று முடிவில் அவன்கஷ்டத்தை பார்க்கச் சகியாது நேசித்த முறைக்காக மாதம் அவனுக்குப் பத்து ரூபாய் சாப்பாட்டுக்கு அளித்து, "இதைக்கொண்டு இனியாவது ஒழுங்காய்ப் பிழை' யென்று அவனை அனுப்பிவிட்டான். பார்த்தீர்களா நற்சகவாசத்தின் மகிமையை!

> நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
> நல்லார் சொற் கேட்பதுவுநன்றே நல்லார்
> குணங்களுரைப்பதுவுநன்று அவரோ
> டிணங்கி யிருப்பதுவு நன்று.

ஆகையால் ஒப்புரவொழுகு ஓதுவதொழியேல் என்ற இருவாக்கியத்தின் கருத்தும் வழியு மிவ்விதமென்று இக்கதையால் விளங்கலாம்.

---

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி 13.—நகருறல்

> மதவேழந் தாக்க வணிகரலர் தூற்றப்
> பதவேழ மென்றேகி பாழ்ங்கான் — அதர்விட்
> டருவுயிரின் கண்டுற்றாள் அம்போதின் வண்டார்
> நருவுயிர்க்குஞ் சேதி நகர்.

நடக்க முடியாது தமயந்தி நடந்துகொண்டிருந்தாள்; தனது துயர்க்கு முடிவுமுண்டோ என்று சிந்தித்து அடிமேல் அடி வைத்துப் போய்க்கொண்டிருந்தாள். இவ்வாறு பசி தாகமறியாது மூன்று நாள் அவள் வழிநடந்தாள். அவள் கண்முன் அப்போது ஓர் ஆச்ரமம் தோன்றியது. அற்றார்க்கு அவனே அடைக்கலம் என்பதுபோலத் தனது தாழ்ந்த நிலைமையில் தன்னிடம் கடவுள் தயை கொண்டு நிர்மானுஷ்யமான அந்தக் காட்டுள் துணையாக அவரைக் காட்டியதாக அவள் எண்ணினாள். அவ்வாச்ரமம் மிகப் பரிசுத்தமானது. இரண்டு பக்கங்களிலும் தருப்பைகள் வளர்ந்து பக்கத்திருந்த ஆற்றின் அலையில் வளைந்து சிரித்து விளையாடி முத்தமரும்பிக் கொண்டிருந்தன. மான் கூட்டங்களும், சிறு கன்றுகளும் அங்கு துள்ளித் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்தன. பக்கத்திலிருந்த மரங்களில் தேன் கசிந்து பழுத்து விளங்கிய கனிகளை உருசி பார்த்து மந்திகள் பூமியில் எறிந்து பந்தாடிக்கொண் டிருந்தன. அவ்வாச்ரமத்துள் இருந்த முனிவர்கள் ஐம்புலன்களை அடக்கியாண்ட அறிஞர்கள்; ஆசார சீலர்கள்; உதிர்ந்த சருகுகளைத் தின்று ஜீவஹிம்ஸை செய்யாத புண்யசீலர் ;

> 'அந்தணர்' என்போர் அறவோர்மற்றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான்

என்றவாறு 'அருள்பிரபாவம்' நிறைந்து அன்பே எவரிடத்தும் பூண்டு விளங்குபவர். அம்முனிவரது முகத்தைக்கண்டதும் தமயந்திக்குச் சற்றே மனச்சமாதானம் ஏற்பட்டது. ஆகவே, அவள் தனது இயற்கை நாணமும் நன்னடக்கையும் முன் தொடர, நாயக வாஞ்சையும் பிரிவும் பின்பிடித்துத் தள்ள, அம்முனிவர் ஆச்ரமத்துள் நுழைந்து அவர் காலில் வீழ்ந்து நமஸ்கரித்தாள்; வணக்கத்துடன் வெட்கிக் குனிந்து நின்றாள்.

"அம்மணி! உன் வரவு நல் வரவாகுக!" எனச்சொல்லி அம்முனிவரர்கள் அவளது க்ஷேமலாபங்களை விசாரித்தனர். தமயந்தியும் மிக்க வணக்கத்துடன் "பெரியோர்களே! தங்களது பசுக்களும் தவத்திற்குதவும் அக்கினி முதலிய பொருட்களும் ஸுகமே விளங்குகின்றனவோ? தமது தவத்திற்கிடையூறு இல்லாமல் தேவகிருபையை முன்னிட்டு எல்லாம் ஸரியாக நடக்கின்றனவா?" என்று அவரை வினவினாள். அவர்களும் 'எல்லாம் ஸுகமே' எனச்சொல்லி அவட்குச் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்து "உட்காரும்; தயவு செய்து உட்காரும்; உமது வரவால் நாங்கள் கிருதார்த்தர்கள் ஆனோம். அம்மணி! தாங்கள் யாரோ தெரியவில்லை. உமது திருமுகத்தில் லக்ஷ்மி கடாக்ஷம் தாண்டவமாடுகிறது. நீங்கள் இம்மலையில் வசிக்கும் தேவதையா? அல்லது இவ்வனத்தின் தேவதையா? இவ்வாற்றின் அதிஷ்டான தெய்வமா? ஏன் தங்கள் முகமும் சரீரமும் அழகே திரண்டு மாசற்று விளங்க, மனங்குன்றி விளங்குவதாகத் தோன்றுகிறீர்? உமக்கு என்ன குறை? ஏன் துக்கப்படுகிறீர்? உங்களுக்கு ஒரு நாளும் குறை வாராது. உமக்கென்ன வேண்டும்? தயவு செய்து உண்மையைச் சொல்லும்" என்று கேட்டார்கள்.

"அந்தணப் பெரியோர்களே! நான் இவ்வன தேவதையுமல்லள்; மலை தேவதையுமல்லள்; நதி தேவதையும் அல்லள்; கேவலம் மானிடப்பெண்; கணவனைத் தேடியலைந்து பரிதபிக்கும் எளிய மடந்தை; விதர்ப்ப நாட்டரசர் மகள்; நிஷதமன்னவர் மனைவி. என் தலைவர் மகா உத்தமர்; மேதாவி; போரிற் புறங்கொடுக்காத வீரர்; பக்தியிற் சிறந்தவர்; பல பராக்கிரம சீலர்; தனுர்வேத வல்லவர்; அழகு, குணம், ஒழுக்க மூன்றிலு முயர்ந்தவர்; வாக்குத் தவறாதவர்; காலத்தின் கொடுமையால் சூதாடிக் கொடியவரது வஞ்சனையால் நாடு நகரம் பொருள் முதலியயாவும் தோற்றுஎன்னுடன்காடே சரண் புகுந்தனர். அவரைக் காணாது தேடித்தேடி இக்காடு முழுதும் பயப்படாது சிறிது இடமும் விடாது தேடியலைந்தேன்; ஆயினும் அவரைக் காணவில்லை; இக்கடும் அரண்ய முழுதும் இரவும் பகலுமாகத் தேடியும் இன்னுங் காணவில்லை. புலி முதலிய கொடிய விலங்குகளும் என்னிடம் உறவு பாராட்டி விளங்குகின்றனவேயன்றி, என்னை உட்கொண்டு என் கஷ்டத்திற்கோர் முடிவேற்படுத்தவில்லை? நள மன்னவரைக் காணும் பாக்கியமும் எனக்குக்கிடைக்குமோ? அப்புருஷ சிங்கத்தைக் காணாது உயிரோடு நான் எப்படி இருப்பேன்? அவரன்றி என்னுயிர் வேறு ஏது? உயிரற்ற உடல் எப்படி வாழும்?" என்றாள் தமயந்தி.

இவ்வுரைகளைக் கேட்ட அம்முனிவரர்கள் சற்றே நிதானத்துடன் கண்மூடித் தியான நிலையிலிருந்து பின் தமயந்தியை நோக்கிக் "குழந்தாய்! நீ குறையற்றவள்; மஹா பதிவிருதை. உனக்கு நன்மையே உண்டாகும்.

> வாட்ட மொழிநி. நிற்பிரிந்த
> வடிவேல் களைச் சின்னாளில்
> நாட்டம் களிப்பக் கண்டு, முன்போல்
> நலம்பெற் றிருத்தி.

இனிய குரலாய்! மனத்துயர் ஒழிப்பாய். சிந்தை அழியேல். உமது துயரத்திற்கு முடிவுகாலம் வந்துவிட்டது. எவ்விடத்தில் நஷ்டமடைந்து கஷ்டமடைந்தீரோ, அவ்விடமே, சுபமங்களமுடையாய்! உமது கணவருடன் சத்துரு பயமின்றி, எல்லா ஸம்பத்துக்களுடன் அரசாளும் வைபவத்தில் விளங்கப் போகிறீர். அதன்பின் உமக்கோர் குறையும் வராது. நெருப்பிலிட்ட தங்கம்போல அப்போது மாசற்று விளங்குவீர். ஆகையால் தாங்கள் கவலையுறக் காரணமில்லை" என்றனர். தமயந்தியும் அவர் கால்களில் வீழ்ந்திறைஞ்சி அவரது ஆசியைப் பெற்றனள்.

தமயந்தி சற்றே மயங்கிக் கிடந்தாள். என்ன ஆச்சர்யம்! இரவும் பகலும் தூக்கமில்லாமல் ஒழியாது அலைந்து கஷ்டத்திற்கே ஆளாகிச் சிந்தை மெலிந்தவள், எவ்வாறு தனக்கும் தெரியாமல் அவ்வாறு மயங்கிக் கிடந்தாள்! ஏன் அவ்வளவு வியப்படைந்தாள்? வியப்புக்கு என்ன காரணம்? தனக்குந்தெரியாமல் தனக்கு மயக்கம் வந்ததே அவள் வியப்புக்குக் காரணம்போலும்! அவள் "எதிரிலிருந்த முனிவர்கள் எங்கே? அவர்கள் எங்கே போனார்கள்? ஏன் அவர் இருந்தவிடம் தெரியாமல் மறைந்தனர்?"—ஒருவேளை இவ்வெண்ணங்களே காரணமாக விருக்குமோ? தமயந்தி எண்ணுகிறாள்:—



"இது கனவோ? நினைவோ? நாம் கண்டதும் உண்மையோ? அம்முனிவர்கள் எங்கு சென்றார்கள்? எதிரிலிருந்த ஆச்ரமம் என்னவாயிற்று? ஏன் மறைந்து போயிற்று? அருகே ஓடிய புதுநீர் ஓடை இப்போது ஏன் காணப்படவில்லை? மான்களும் பிணைகளும் துள்ளி விளையாடக் கன்றுகள் தாவித் தாவிக் குதித்தோடிப் பார்த்தவர் தம் மனதைப் பறிக்கும்படி ரமணீயமாக விளங்கிய அத் தபோவனம் என்ன மாயமாயிற்று! கரையோரம் பறவைகளெல்லாம் கூடிக் குலாவி உண்டும் சுகித்தும் உறவு கொண்டாடியும், மரங்கள்மேல் உட்கார்ந்து விளையாடியதைக் கண்ட காட்சியும் பொய்யா? ஆச்சர்யம்! ஆச்சர்யம்! இதுவும் இயற்கையில் ஒரு மாயம்போலும்."

இத்தகைய எண்ணங்களை வெளியிட்டுத் திகைத்து நின்ற தமயந்தி, மீண்டும் தனது பழைய ஞாபகம் தூண்டச் சிந்தையுற்று மனம் நொந்து அருகிலிருந்த அசோகமரம் ஒன்றை நோக்கி "ஏ அசோகமே! நீ சோகமற்று இருப்பதுபோல என்னையும் விசோகமாக்குவது எக்காலம்? பயமற்ற மரஅரசே! தன்னந்தனியே செல்லும் என் நளமன்னவனை நீ கண்டதுண்டா? பாதித் துணியுடுத்த சோகத்திலும் அழகு குன்றாது வீரக்கழலின் நாதம் விளங்க யானைபோல் அடிமேலடி வைத்துச் செல்லும் என் கணவரைக் கண்டதுண்டா? நீரோ அசோகர். என்னையும் அவ்வாறு செய்ய ஒரு மறுமொழி உரைக்கீரா?" என்று வாய்விட்டழுதுகொண்டே அந்தப் பாழுமிடத்தில் பிரதக்ஷிணமாக நடந்தாள்.

அக்கால், அவள் கண்ட மரங்கள் அநந்தம்; கடந்த நதிகளும் அநேகம்; கடந்துசென்ற சோலைகளும், காடுகளும், பள்ளத்தாக்குகளும், குன்றங்களும், ஒன்றல்ல பல; அவள் கண்டகாட்சிகளும் கணக்கிலடங்கா. திவலை திவலையாக நீர் தெளிக்கும் அருவிகள்; மின்னற் கொடிபோல் பளபளத்து இடம்பெயர்ந்தோடும் சிற்றாறுகள்; வெளியே தெரிந்தும் உள்ளே தெரியாது அந்தகாரம் குலாவித் தவழும் குகைகள்; மரம் நெருங்கி, யிருளடைந்தும், கொடு விலங்குகள் ஓலமுடன் எதிரொலிக்கும் பாழும் அரணியங்கள்; சிறியதும் பெரியதுமாக அடங்கியும் உயர்ந்தும் கரடுமுரடுமாகவும் மனதை வெருட்டும் பாறைகள் நெருங்கி மதோன்மத்தமாக விளங்கும் மலைமுடிகள்; பல வர்ணங்களமைந்து, நெடுஞ்சிறகுகள் தவழ்ந்து, கண்டவர் மனதைக் கவரும் சிறந்த அழகும் இனிய குரலும் கொண்டு விளங்கும் பக்ஷி ஜாலங்கள்; திரண்டு கூட்டங்கூடித் தமது சித்திர அமைப்பின் சிறத்தால் அநந்தவர்ணப் பொலிவை வெளியிடும் தட்டாரப் பூச்சிகள்! மனிதனது தாழ்மையை நினைத்து அவனைப் பரிகசித்து விளங்கும் அநேக குரங்குக் கூட்டங்கள்;—இவை முதலிய காட்சிகள் அவள் கண்டன அநந்தம். ஆயினும், அவள் அவற்றைக் காணாதே தன் கணவனையே தேடிச் சென்றாள்.

தமயந்தி ஏன் இடையே மயங்கினள்? வெகுதூரம் சளைக்காது நடந்தவள் இப்போது ஏன் நிற்கிறாள்? ஏனவள் ஒருவிதமாகப் பயப்படுகிறாள்? எதற்காக அவள் தன் காதைக் கொடுத்து அவ்வாறு கேட்கிறாள்? அவள் செயலுக்கு ஒருவேளை அவளெதிரில் சற்றுப் பொழுதானதும் தோன்றிய பெரும் வியாபாரக் கூட்டமே காரணமாயிருக்கலாம். யானை, தேர், குதிரை முதலிய பரிவாரங்களுடன் பக்கத்திலிருந்த நதியைக் கடந்துகொண்டு அவள் இருக்குமிடம் சார்பாக அக்கூட்டம் வந்துகொண்டிருந்தது. அதைக் கண்டதும் தமயந்தியும் ஜனங்களுள் ஜனமாகக் கலந்து செல்ல அதனுள் நுழைந்தாள்.

சித்த விகார முற்றவள்போலும், உருவ மெலிந்து, பாதித்துணியால் தன் மானத்தைக் காத்து, துக்கத்தால் வாடி இளைத்து, புழுதி மண்டி நிறமாறி உடலொடுங்கிக் கவலைஆழ்ந்த கண்ணோடு வந்த அவளைக் கண்ட ஜனங்களுள் சிலர் பயந்து ஓடினர்; சிலர் பேயென்றவளை மதித்துக் கத்திக் கதறிக் குளறினர்; சிலர் அலறினர். சிலர் அவளைக்கண்டு நகைத்துப் பரிகசித்தனர். சிலர் வைதனர். மற்றுஞ் சிலர் அவள் நிலைமையைக்கண்டு மனம் வாடினர்; இரக்கங் கொண்டனர். அவரைக் கண்டதும் தமயந்திக்குத் தனக்குந் தெரியாது கண்களில் மாலை மாலையாக நீர் ஆறாகப் பெருகியது என் செய்வாள்? அவள் என்ன அடக்கியும் அடங்காது அவள் துயரம் விம்மி விம்மி மேற்கிளம்பியது. அக்கூட்டத்தலைவன் அவளது

நிலைமையைக் கண்டு மனமிரங்கி அவட்கு வேண்டிய உபசாரஞ் செய்தான்;

"எக்குலத்தாய்? யார்மடந்தை? யார்துணைவர் யாதுன்பேர்
நெக்குருகி நீயழுதற் கென்னி மித்தம்?"

என்றவன் அவளை மேலுங்கேட்டான். அவளும்,

"முன்னை வினையின் வலியால் முடிமன்னன்
என்னைப் பிரிய இருந்தானில்—அன்னவனைக்
காணு தழுகின்றேன்" என்றாள்.

மேலும் தனது விஷயங்களை எல்லாம் விஸ்தரித்துச்சொன்னாள்; தனது கணவனை அவர் கண்டதுண்டாவென்று கேட்டாள். அக்கூட்டத்துத் தலைவனாகிய சுசி என்பவன் "அம்மணி! நாங்கள் இக்காட்டில் புலி முதலிய விலங்குகளை அல்லாமல் வேறு மனுஷ சஞ்சாரத்தையே கண்டதில்லையே. இக்கொடும் வனத்தில் மருந்துக்கும் ஒரு மனிதன் அகப்படுவது அபூர்வமாயிற்றே! நீங்கள் இருப்பது தகாது" என்று விடையளித்தான்; அவள் கேட்கத் தாம் சேதி நகர்க்குச் செல்வதாகவும் சொன்னான்.

வணிகர்கூட்டம் பிரயாணங்கொண்டு வழி நடக்கலாயிற்று; தமயந்தியும் தனது கணவனைத் தேடுமாசையால் அவரோடு தானும் வழி நடந்தாள். அவ்வாறு அவர் பலநாள் நடந்திருப்பர். பின் அக்காட்டில் அழகிய இடமொன்றில் தங்கினர். அது ரமணீயமான பிரதேசம்; வழிப்போக்கர்க்கு உதவிக்கென்றே அமைந்ததுபோலும்! பழங்களும் புஷ்பங்களும் நிறைந்த மரங்களும், அருகே நல்ல ஓடையுமுள்ள அவ்விடத்தில் சற்றுத் தங்கி, வழிநடந்ததால் ஏற்பட்ட இளைப்பை ஆற்ற அவ்வணிகர் எண்ணங்கொண்டனர்; தமது வாகனங்களை எல்லாம் அவிழ்த்துக் களைப்பாறும்படி அங்கு நிழலமர்ந்த இடங்களில் கட்டி அவ்விரவை அவ்விடத்திலேயே கழிக்க நிச்சயித்தனர். இரவு நெருங்கியதும் களைப்பில் அயர்ந்த அவர், உடம்பு தெரியாது ஆழ்ந்த நித்திரைக்காளாயினர்.

அப்பொழுது நடு நிசியிருக்கும். வியாபாரிகள் அயர்ந்து நித்திரையில் ஆழ்ந்து கிடந்தனர். மதம்பிடித்த யானை ஒன்று அப்பொழுது வெகு வேகமாகப் பிளிறிக்கொண்டு, வரும் வழியில் இருக்கும் மரங்களை எல்லாம் பக்கங்களில் வீசி எறிந்து, கடும் வேகமாகத் தமயந்தி இருக்கும் இடத்தை நோக்கிவந்தது. அதன் சப்தம் உச்சிமலையிலிருந்து முறிந்து கனவேகத்துடன் வரும் பெரும்பாறைகள் பக்கத்திருந்த அந்த ஆழ்ந்த ஆற்றினீரில் வீழ்வதுபோல் இருந்தது. அதைக் கேட்டவர் காது செவிடு படுவதல்லாது, மனதும் பயத்தில் மயங்கி நடுங்கும். வெறியுடன் வந்த அந்த யானை வியாபாரிகள் கூட்டத்தைத் துகைத்துத் துயரில் ஆழ்த்தியது. 'ஆ!' 'ஆ!' என்றலறிக் கொண்டவர் இங்குமங்குமாக ஓடத்தலைப்பட்டும், அந்த யானை தவறாது அவரை மடக்கி மடக்கி எதிர்த்து வதைக்க ஆரம்பித்தது. தனது முன்கரத்தால் அருகிலிருந்த தாமரை ஓடையிலிருந்த நீரை எங்கும் வீசி, துதிக்கையால் எல்லோரையும் அறைந்து சாய்த்துத் தனது பாரி தந்தத்தால் அவர் உடலிலிருந்து இரத்தம் பீறும்படி குத்தி, அங்கிருந்த பலரையும் காலால் தேய்த்துவிட்டது. தப்பித் தவறி ஓடிப் புதரில் ஒளித்துப் பிழைத்தவர் சிலரே. பயத்தால் ஓடிய வர்த்தகர் அவ்விருளில் ஆள்தெரியாது ஒருவரையொருவர் முட்டிக்கொண் டலறிவிழுந்தனர். சிலர் பயத்தாலேயே உயிர் நீங்கினர். பயத்தின் வேகத்தால் சிலர், மர உச்சிகளில் தொத்திக்கொண்டு தமது நிலையை ஸமாளிக்க முடியாது கீழ் வீழ்ந்து இறந்தனர். உயிரை விடுபவர் சிலர் அப்பொழுது ஓலமிட்ட சப்தம் யமனையும் நடுங்கிடச் செய்யுமென்ப திழுக்காகாது.

ஒருபக்கம் "ஓடிப் பிழையுங்கள்" என்ற சப்தம்! மற்றொருபக்கம் "யானை! யானை! ஜாக்ரதை! ஜாக்ரதை!" என்ற சப்தம். ஒருபக்கம் ஜனங்கள் ஓட்டம்; மறுபக்கம் உயிர்போயும் போகாது தவிப்பவரது பெரும் இரைச்சல்; மற்றொரு பக்கம் பணத்திற்காக அழுவாரது ஓலம். இவ்வாறிருக்கும் ஸமயத்தில் உடம்பு தெரியாது அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த தமயந்தி கண்விழித்துக்கொண்டு எதிரில் நடக்கும் கோரக்காட்சியைக் கண்டு நடுநடுங்கினாள்; பேசவும் நாவெழாது அவ்வலங்கோலத்தைக்கண்டு திகைத்தனள். அவர் சொல்லும் பலவித நிந்தைமொழிகளும் அப்போது அவள் காதில் வீழ்ந்தன. சிலர் தமது துரத்ருஷ்டத்தையும் தமக்கு நேரிட்ட கஷ்



டத்தையும் சொல்லிச்சொல்லிக் கூக்குரலிட்டனர். சிலர் தமது பரிதாப நிலைமையை எண்ணி எண்ணி ஏங்கினர். சிலர் "என்ன அநியாயம்! இன்றோர் பித்தம் பிடித்த பெண் நம்மிடம் புகுந்தாள். அவள் பேயே போலிருந்தாள். அவள் வந்ததும் நமக்கு இவ்விதத் துன்பம் நேர்ந்தது. அவளது மாயத்தால்தான் இப்பாழும் செயல்கள் எல்லாம் நடந்திருக்கவேண்டும். அம்மதயானையை ஏவியவள் அவளாகத்தான் இருக்கவேண்டும். அதற்குச் சந்தேஹமே கிடையாது. இல்லாவிடில் அந்தயானை அவளிடம் ஏன் நெருங்காமலிருக்கவேண்டும்? நாம் அவளைச் சும்மாவிடலாகாது. கல்லாலும், மண்ணாலும், கையிலகப்பட்ட வஸ்து எதனாலும் அவளை விலாவொடியப் புடைத்துக் கொல்லவேண்டும். பெண் என்று தாக்ஷண்யம் பாராட்டாது அவளை அழிப்பதே கடமை" என்று ஆரவாரமிட்டுக் குதித்தனர்.

இப்பழிமொழிகளைக் கேட்ட தமயந்தி காதில் விரல் வைத்து, "ஆ தெய்வமே! இராமேச்வரம் போனாலும் சனைஸ்சரன் விடாதென்பர். நமது துரத்ருஷ்ட நிழல் நம்முடனேயேதான் வரும். என் செய்வது?" என்று சிந்தித்த வண்ணமாகப் பக்கத்து அடர்ந்து விளங்கிய சோலையுள் பதுங்கிஒளிந்துகொள்ள ஓடினாள். தன்மேல் வீண்பழி சுமத்தி அவர் நிந்தனைமொழிகள் கூறியதை நினைக்கநினைக்க, நெஞ்சமழிந்து, கெட்டியாகப் பேசவும் நடுங்கி அவள் பின்வருமாறு சிந்தித்தாள்:—

"என்ன ஆச்சர்யம்! பழியொரு பக்கம் பாவமொரு பக்கமென்பது உண்மையாயிற்று. நமக்கேதோ பெருங்கஷ்டம் வருங்காலம் போலிருக்கிறது.

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தாமுந் துறும்'

அல்லவா? நான் சிறிதும் பாவஞ்செய்யவில்லை. இதைத் திரிசுத்தியாகச் சொல்லமுடியும். அப்படியிருந்தும் இப்பழியை என்மேல் ஏன் சுமத்துகிறார்கள்? முன்செய்த வினையின் பயனே இதுபோலும்! என்ன கஷ்டம்? நாடு நகரமிழந்தேன்; காட்டை யடைந்தேன்; நாயகனால் தனியே காட்டில் நள்ளிருளில் விடப்பட்டேன்; குழந்தைகளிடமிருந்து பிரிந்தேன்; வேடன் பாம்பு இவைகளிடமிருந்து தப்பி இப்பழிக் காளேயினேன்; இன்னும் உயிர் விடாது அலைந்து திரிகிறேன்."

இவ்வாறு அவள் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது கிழக்கில் சூரியனுதித்தபடியால், எஞ்சி நின்ற வியாபாரிகள் நடந்த கோரத்தைக் கண்ணுற்றுத் துக்கமடைந்து அவ்விடத்தைவிட்டுத் தமது சேரிடத்தை நோக்கிப் புறப்பட்டனர். தமயந்தியும், "நான் செய்த பாவம், நான் சேர்ந்த இடத்திலிருப்பவரையும் தொந்தரை செய்யவேண்டுமா? அவர்களைக் கொன்ற யானை என்னை ஏன் கொல்லவில்லை? யான்செய்த பாபசேஷம் இன்னுமொழியவில்லை போலும்! ஒரு வேளை தெய்வாபராதம் ஏதேனும் செய்தேனோ? நான் ஸ்வயம்வரகாலத்து என்னை மணக்க விரும்பிய தேவதைகளது விருப்பத்தை மறுத்ததால் இக்கஷ்டங்கள் நேர்ந்தனவோ? என்னவோ?—அதுதான்; அதுதான்; திண்ணம் அதுதான் என்று நினைக்கிறேன். அவர்கள்தான் என்னை இவ்வாறு கஷ்டப்படுத்துகிறார்போலும்! கணவனை விட்டென்னைப் பிரித்துப் பழியேற்றுகின்றனர் போலும்! அவரே அவ்வாறு செய்தால், நான் கேவலம் ஒரு எளிய மானிடப்பெண், திக்கற்றுத் திகைத்தலையும் ஒருத்தி, என்ன செய்ய முடியும்! அவர்களிடம் எனக்குக் கோபங் கிடையாது. அவராகவே என்னைக் காக்கவேண்டுமேயல்லாது அவர்க்கு நான் என்ன சொல்லமுடியும்? பெரியோரைப் பூஜிப்பதல்லாது வேறென்ன செய்வது தகும்?" என்று மனம் புண்ணாகச் சிந்தித்துக் கொண்டே இருந்தாள்.

இதற்குள் எஞ்சிநின்ற வியாபாரிகளுடன் சில பிராமணர்களும் பிரயாணமாகப் போவதைக் கண்டு தானும் தளர்ந்த நடையில் அவரைப் பின்பற்றலானாள். அவள் மைய மைய அவருடன் பலநாள்நடந்து சேதிநகரை யடைந்தாள்; காட்டிற் கட்டிக்கொண்டு விளங்கிய அப்பாதித் துணியுடனேயே அந்நகருள் பிரவேசித்தாள். அதுவன்றோ தாழ்ந்த நிலைமைக்கும் பெருமை தருவது!

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS AND NOTES

**சேலத்தில் மதுபான விஷயம்**

சில நாள்களுக்கு முன்னால் சேலம் முனிஸிபாலிடியார், மதுபான விஷயமாக ஒரு தீர்மானம் கொணர்ந்து ஜில்லா கலெக்டருடைய அங்கீகாரத்துக்கு அனுப்பியதை, கவர்ன்மெண்டாரும் ஆமோதித்துவிட்டன ரென்பதைக் கேட்கச் சந்தோஷிக்கிறோம். இதுவரையில் அந்நகரில் 14-சாராயக்கடைகள் இருந்தன. அவைகளில் 12 கடைகளை அடியோடேஎடுத்துவிட்டார்கள். பாக்கியுள்ள இரு கடைகளும் நகருக்கு வெளியே இருக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கடைகளில் ஸ்திரீகள் (லைசென்சு பெற்றவனுடைய குடும்பத்தாரைத் தவிர) விற்பனை செய்யக்கூடாதென்பது மற்றொரு விதி. காலையில் $9\frac{1}{2}$ மணிக்குமுன்பு கடை திறக்கப்படக்கூடாதென்பது இன்னொரு விதி. மேலும், சந்தை கூடும் செவ்வாய்க்கிழமைகள், மாரியம்மன் உற்சவம் நடைபெறும் மூன்று நாள்கள், பொங்கல் சமயத்தில் நான்கு நாள்கள், தீபாவளியின்போது இரண்டுநாள்கள், யுகாதிநாள், முகரம் பண்டிகையின் கடைசி நான்கு நாள்கள் ஆகிய இந்நாள்களில் கடைகளைத் திறந்து வைக்கப்படக்கூடாதென்பது கண்டிப்பான பின்னும் ஒரு விதி. சாராயக்கடைகளுக்கு மட்டுமன்றி கள்ளுக்கடைகளுக்கும் இப்படிப் பட்டவிதி விலக்குகளும் ஏற்பட்டுள்ளன. நகரமாந்தரின் அபிவிருத்தியின்பொருட்டு இந்த அபூர்வ காரியத்தைச் செய்த சேலம் முனிஸிபாலிடியாருக்கு நாம் மனமார்ந்த வந்தனம் செலுத்துகின்றோம். இவ்விஷயத்தில் அங்குரார்ப்பணம் செய்த பெருமை சேலம் முனிஸிபாலிடிக்குச் சொந்தம் என்பதை அபிமானிகள் அறியவேண்டும். அதை மற்றைய முனிசிபாலிடிகளும் அனுசரித்து வேண்டியவிதிகளைச் செய்வார்களானால் குடியினால் உண்டாவதாகக் கேள்விப்படும் துர்த்தசைகளில் பெரும்பாலன நமது நாட்டைவிட்டு அகன்று போய்விடும். ஆயினும் அந்த நன்னாள் என்று வருமோ?

* * *

**மதுபான நிவர்த்தி**

சென்ற மாதம் நடந்த ராஜப்பிரதிநிதியின் சட்டசபையில், நமது மாகாண மெம்பரான கனம் ஸ்ரீமான் B. N. சர்மா அவர்கள், இந்நாட்டில், மதுபானமும் மயக்கந் தரும் மருந்துச்சரக்குகளும் விலைக்கு விற்கப் படக்கூடாதென்பதற்கு ஓர் பிரேரேபணை கொணர்ந்தனர். உடனேயே இவ்விரண்டும் நின்றொழிய வேண்டுமென்பது ஸ்ரீமானவர்களின் கட்சியல்ல; கிரமம் கிரமமாக அவைகள் குறைக்கப்பட வேண்டு மென்பதே அவருடைய நோக்கம். சபையில், 20 மெம்பர்கள் இதை ஆமோதித்தும் 33 மெம்பர்கள் நிராகரித்தும் அபிப்பிராயங் கொடுத்ததனால் தீர்மானம் நிறைவேறாமல் போய்விட்டது. ஹிந்து, பௌத்த, ஜைன, முஸல்மான், ஸிக்கியாதி தர்மசாஸ்திரங்களில் மதுபானம் விலக்கப்பட்டிருக்கிறது. மற்றைய வகுப்பினரிலும் மதுபானத்தை யபேக்ஷிப்பவர்கள், தாழ்ந்த வகுப்பினராகவே இருக்கின்றனர். ஆகவே, மதுபானத்தை நிவர்த்திப்பது சுலபசாத்தியமே யாகும். அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் சில நாடுகளில் இவ்விதமான சட்டம் ஒன்று செலாவணியாகிறதென்பதை நாம் அறிவோம். நிற்க சட்ட சபையில், கனம் ஸர் ஹாமில்டன் கிராண்டு என்பவர், இவ்விதச்சட்டம் "ஏற்கனவே துக்கப்படும் ஜனங்களுக்கு இன்னும் அதிகமான துக்கத்தைத் தரும்" என்றார். இதை நாம் ஒப்பவில்லை. ருஷியா தேசத்தில் 'வாட்கா' என்ற மதுபானம் நிறுத்தப்பட்டிருக்கிறது. பிரான்ஸ் தேசத்தில் "ஆப்ஸின்தி" என்ற பானம் நிறுத்தப்பட்டிருக்கிறது. என்றாலும், இந்த இருதேச ஜனங்களும் துக்கப்படுவதாகத் தெரியவில்லை. ஆகவே இவ்விதமான சட்டம் நமது நாட்டுக்கும் நன்மையையே தரும் என்பதற்கையமில்லை.

---

கல்விக்கான திரவிய சகாயம்.—இம்மாகாணத்திலுள்ள ஜில்லா போர்டுகளில் 11 போர்டும், முனிஸிபல் சபைகளில் 16 சபைகளும் தங்களுக்கு உட்பட்ட நடுத்தரப் பாடசாலைகளுக்கு வேண்டிய உபகரணங்களைத் தேடிக்கொள்ளும் பொருட்டு அவைகளுக்கு இவ்வருஷத்தில் 37,500 ரூபாய் விநியோகஞ் செய்யும்படி மாகாண கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

[Supplement to the 'Viveka Bodhini'







'விவேக போதினி' அனுபந்தம்]

# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.


தொகுதி X } பிங்கள௵ பங்குனிமீ : : 1918-௵ ஏப்ரல்மீ { பகுதி 10


## நெஞ்சொடு நிகழ்த்தல்

### IN TUNE WITH THE INFINITE

1. ஒளிநாக் கொடுவான் சுடர்புகழ
வொளிநாக் கொடுபன் மணிபுகழக்
களிநாக் கொடுபல் புள்புகழக்
கமழ்நாக் கொடுகா மலர்புகழத்
தெளிநாக் கொடுநீர்ப் புனல்புகழத்
திளமே புகழப் படுவோய்நீ
அளிநாக் கொடுநான் உனைப்புகழ
அறியா மூகை யறிந்தாயோ!
—தேம்பாவணி.

2. செம்மை யாகிய சிந்தையர் சீரியோர்
வெம்மை யென்பதை வீட்டி விளங்கினோர்
தம்மை யுந்துறந் தேதலை நின்றவர்
இம்மை தன்னினும் இன்பத்தை மேவுவார்.
—கந்தபுராணம்.

3. மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவினைக்—கைவாய்
கலங்காமல் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்.
—நாலடியார்.

4. கோவணமொன் றிச்சிப்பக் கூடினவே பந்த
மெலாம்
தூவணஞ் சேர் மேனியாய் சோமேசா—மேவில்
இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.
—சோமேசர் முதுமொழி வெண்பா.

5. பற்றென்னும் பாசத் தளையும் பலவழியும்
பற்றறு தோடு மவாத்தேருந்—தெற்றெனப்
பொய்த்துரை யென்னும் பகையாகு மிம்மூன்
வித்தற வீடும் பிறப்பு. —திரிகடுகம். [றும்

6. எட்டுத்திசையுமொன்றாய் இன்புமாய் நின்றவுன்
விட்டுப் பிரியவிடம் வேறோ பராபரமே. [னை
—தாயுமானவர்பாடல்.

7. பெண்மை வியவார் பெயரு மெடுத்தோதார்
கண்ணொடு நெஞ்சுறைப்ப நோக்குறார்—பண்
பாடல் செவிமடார் பண்பல்ல பார்ப்படார் [ணொடு
வீடில் புலப்பகையி னார். —நீதிநெறிவிளக்கம்.

8. அழியுமிக் காயமும் கழியுமுன் னிளமையும்
அன்புறுங் கிளைஞரும் இன்புறும் போகமும்
மொழியுமிச் செல்வமும் ஒன்றாக உன்னில், ஆ
வுடையானை யகனெஞ் சுணர்வுற தொழிவதே.
—அஞ்ஞவதைப்பரணி.

9. ஆமினி மூப்பு மகன்ற திளமையுந்
தாமினி நோயுந் தலைவரும்—யாமினி
மெய்யைந்து மீதூர வைகாது மேல்வந்த
வையைந்து மாய்வ தறிவு.
—புறப்பொருள் வெண்பாமாலை.

10. நாய்நம தெனநரி நமதெ னப்பிதா
தாய்நம தெனநமன் தனதெ னப்பிணி
பேய்நம தெனமன மதிக்கும் பெற்றிபோ
லாய்நம தெனப்படும் யாக்கை யாரதே?
—திருவிளையாடற்புராணம்.

11. யானென தென்னும் அவாவறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும். —திருக்குறள்.

# விவேக போதினி

தொ. 10] பிங்களஹூ பங்குனிமீ [ப. 10


## ஸ்ரீ கிருஷ்ண லோகாகமனம்

### THE DESCENT OF THE LORD

மீன்மை'கோல நெடு நரசிங்க மாகிஇலம்
விரகால் அளந்த குறளாய்
ஆனது சிறுமழு வல்வில்லது வெல்லுநானை
யலமுற்ற செங்கை யவராய்
வானுடர் வந்துதொழ மன்னுடர் யாவரையும்
மடிவிக்க வந்த வடிவாய்
நானுவி தங்கொள்பரி யானாகி நின்றருளும்
நாராயணாய நமவே!

வானளப்பினும் அளக்காவிடினும் வளங் குன்றாது தனது மக்களைக் காக்கும் நாடு நம் இந்தியநாடே என்பதை யாரும் மறுக்கமுடியாது. மற்றுப் பொருள்வளமும் அருள்வளமும் இணைந்து குலாவும் இவ்வாரிய நாடு, பல நாட்களுக்குமுன் பற்பல சிறு நாடுகளாகப் பகுக்கப்பட்டு ஐம்பத்தாறு நாடுகள் கூடிய ஐக்ய நாடாகி, காலா காலத்தின் வீர நிலையின்படி பெருமை மிக்க மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. அத்தகைய நாடு ஒன்றுக்கு, வடமதுரை முக்கிய பட்டணமாக விருந்தது. அந்நாட்டை ஆண்டவர் யதுவம்சத்தைச் சேர்ந்தவர்; இவர் முச்சுடருள் ஒருவராகிய சந்திரர் என்னும் மூல புருஷரிடமிருந்து தோன்றிய வம்சமாகிய சந்திர வம்சத்தைச் சார்ந்தவர். ஒரு ஸமயம் வடமதுரையில் இவ்வம்சத்தில் தோன்றிய சூரசேனன் என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவனுக்கோர் மகள்; அவள் பெயர் தேவகி. அவள் நல்ல வயதடைவதன் முன்னமேயே அரசன் இறந்துவிட்டபடியால், சூரசேனன் தம்பி உக்ரசேனன் அரசாட்சியை நடத்தலானான். இவனே தேவகியை வளர்த்து அவள் யுக்த வயதடைந்ததும் அவளை போஜ வம்சத்துத் தோன்றிய குணசீலராகிய வஸுதேவருக்குக் கொடுத்துக் கல்யாணஞ் செய்வித்தனன்.

கல்யாணம் ஆனதும் வஸுதேவர் தமது மனைவியுடன் தம்மூர் அடையஆவல் கொண்டனர்; தாமும் தம் மனைவியுமாகப் பொன்தேர் ஏறித் தம்மூர்போகப் புறப்பட்டார். அவ்வாறு அவர் புறப்படுவதைக் கண்ட உக்ரசேனன் மகன் கம்ஸன் தன் தங்கையிடங் கொண்ட உவகை மிகுதியால், தேவகி வீற்றிருந்த பொன் தேரைத் தானே ஓட்ட ஆவல் கொண்டு, அதன்மேல் ஏறி, குதிரை லகானைக் கையிலேற்று, பல்லாயிரம் வீரர் தம்மைச் சுற்றிவர வெகுகம்பீரமாக அத்தேரையோட்டிக்கொண்டிருந்தான். உக்ரசேனன் தனது மகளுக்கென்று அதி அத்புமாகச் சீரெடுத்திருந்தான். அச்சீர்களும் புடைசூழ்ந்துவரத் தேர் வெகு வேகமாகப் பூமிதேவியின் முதுகைத் தாவிக்குதித்தோடிக்கொண்டிருந்தது. தனது தங்கையிடம் கொண்ட அன்பு தூண்டக், கம்ஸன் யாரும் வியக்கும்படியாக உடம்பு தெரியாது அந்தத் தேரை நடத்திக் கொண்டிருந்தான்.

இங்கு நாம் சில விஷயங்களைக் கவனிப்பது தவறாகாது. கம்ஸன் மகாதுஷ்டன் என்பது உலகப்ரஸித்தம். அவன் தந்தையே அவனைக் கண்டு நடுங்குவன். ஊரில் எங்கும் நியாயம் அவன் காலத்தில் நடந்ததே கிடையாது. அவனது ஆட்சியால் வைதிகர்கள் தமது நிலை மாறிக் கேவலமான நிலைமையில் விளங்கினர்; கர்மானுஷ்டானங்களை மிகப்பாராட்டி அதன் அர்த்தங்களை உணராது தாமே எவற்றிற்கும் மூலாதாரமென நம்பித் தருக்கிக் கிடந்தனர். இதரர்களோ, தர்மகர்மங்களை இகழ்ந்து அதிகாரித் தன்மையை எண்ணாது எல்லாம் எவரும் செய்யலாமென எண்ணங்கொண்டு வாழ்ந்தனர். நியாயமானவழியி லீடுபட்டுச் செயல் புரியும் ஜனங்கள், அவ்வழியில் நடக்கமுடியாது மயங்கிக்கிடந்தனர். மற்று அநீதமுறையைக் கையாண்டு வந்தவர் தமது கொடுமையை யாவரும் வழிபடும்படி செய்துவந்தனர். குகையுள் அடைபட்ட காற்றுப்போல ஞானிகள் தமது எண்ணங்களை வெளியிட முடியாது, என்று தமது நிலை மாறுமென ஏங்கிக்கொண்டிருந்தனர். “இக்காலம் சொல்லவுங் கொடிது. மறைவின்றி நாம் உண்மை யுரைப்பது இயலாது. ராஜ தர்மம் நிலைமாறியதெனக் கூறுவதெப்படி? காற்றுங் கோட்சொல்லும் எனப் பயப்பட வேண்டியிருக்கிறது. இதற்கு ஓர் முடிவும் உண்டோ” ? என்று ஜனங்கள் தம்முள் தாம் அந்தரங்கமாகப் பேசிக்கொள்வார். தமது அபிப்ராயங்களைச் சுவேச்சையாய் வெளியிட அவர்க்குத் தைர்யமே கிடையாது. எங்கு பார்த்தாலும் ஸந்தேஹமும் பயமுமே குடிகொண்டிருந்தன. இருளில் தடவித்தடவி நடப்பவரைப்போலவே ஸாதுக்கள் அக்காலத்தில் விளங்கியதன்றி, தமது அபிப்ராயங்களைச் சொல்லவு முடியாது விழுங்கவு முடியாது, தாமரையிலையில்பட்ட நீர்த்துளிபோலத் தத்தளித்தனர். மற்று உலகில் ஜனஸங்கியையோ அளவுகடந்து விருத்தியாகி இருந்தது. அதனால் லோகவாழ்க்கை சுகமாக நடைபெறுவது முடியாதிருந்தது. ஜனத்தொகுதி அதிகமாவதை அடக்குவதெப்படி? அவ்வாறு அதிகமாவதால், ஜனங்களுக்குள் ஏற்பட்ட வாழ்க்கைப் போட்டியிலிருந்து பொது ஜனங்கள் பிழைப்பது எப்படி? எந்த நியாயவழியால் அதைத் தடுப்பது ? இவ்விதக் கேள்விகள் ஜனங்களது மனத்தை அக்காலத்திலும் வெருட்டி யிருக்குமன்றே? சிசுபாலன், தந்தவக்ரன், கம்ஸனாதி அரசர்கள் தமது பலத்தின் பெருக்கால், ஜனங்களைத் தம் வழிக்குவரும்படி செய்ததன்றி, ராஜதர்மங் குன்றும்படி ஆண்டு வந்தனர். எனவே அவரது ஆட்சியை வெறுத்தவர், தமது எண்ணத்தை வெளியிட முடியாவிடினும், எப்பொழுதும் லோக ஹிதத்தை நாடிய பெரியோர், இத்தகைய கொடுமையொழிவதற்கு ஓர் மஹா புருஷன் வருவன், அப்புருஷன் தனது அபார சக்தியால், சாதி மயக்கம், நீதிமயக்கம் இவற்றைச் செம்மைப்படுத்துவதன்றி, சிதைந்து குன்றி நிலைமாறி விளங்கிய பொதுஜன வாழ்க்கையையும் சீர்திருத்தி, பொதுஜன அமைப்பைச் சரியான அஸ்திவாரமிட்டுச்சரிப்படுத்தி இந்தியபாரமார்த்திகக் கட்டடத்தை, மங்கித் தெரியாதுவிளங்கும்படி கவிந்து கிடந்த லோகாயத இருளை அறப்போக்கி, தனது பெருமை என்னும் அழியாப் பேரொளியில் அது தவழ்ந்து கதிர் விடுமாறு செய்து, அதனுள் வாழும் ஜீவன் ஸர்வ வியாபியாய், யாவர்க்கும்எளியனாய், அறிவுமுற்றுக்குமாதரவாய் விளங்குமாறு செய்வனென நம்பியிருந்தனர். இத்தகைய எண்ணம் எல்லோர் மனத்திலும் விளங்கினும் அதை வெளியிடத் தைர்யங்கொள்ளத் தக்கவர் அப்பொழுது எவர் இருந்தனர்? சிந்தையை யடக்கிச் சும்மாயிருக்கும் சிலரே, உண்மையை வெளியிட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் அவரது நோக்கங்கள் பரிகாஸாஸ்பதமாகவே இருந்தன. எனினும் அவ்வெண்ணங்கள் பிறந்த இடந்தெரியாமலே பொது ஜனங்களின் மனத்தில் உலாவிக் கொண்டிருந்தன. பலர் நகைப்புக்கும், வெறுப்புக்கும் பாத்திரமான அவ்வெண்ணங்களைப் பரவ அத்தகைய நகைப்பும் வெறுப்புமே காரணங்களா யிருந்தன; பரிகாசமாகவே அவ்வெண்ணங்கள் பலர் வாயில் விழுந்தெழுந்து ஜனங்கள் மனத்தில் வரவர நிலைக்க ஆரம்பித்தன. ஆகவே எவரும் கடவுளது வரவை எதிர் நோக்கியே இருந்தனர். ஆனால் அவர் எவ்விடம் தோன்றுவர், எவ்வாறு தோன்றுவர் என்று அறிய யாவரும் ஆவலா யிருந்தனர்.

நிற்க. அதிகாரக் கள்ளில் ஆழ்ந்து, லோகத்தில் கிடைக்கக்கூடிய ஸர்வ சக்தியோடுங்கூடி, தங்களுக்கு அழிவென்பதே இருக்க முடியாதென்றும், தங்களை எதிர்க்கக் கூடியவர் உலகில் இருக்க முடியாதென்றும், மனவுறுதியுடன் தருக்கி விளங்கிய கம்ஸனாதியர், முதலில் இவ்வெண்ணங்களைப் பரிகாஸமாகவே பாராட்டி வந்தனர். ஆனால் அவ்வெண்ணங்களை எண்ண எண்ணச் சிறிது கவலைகொண்டனர். இவ்வெண்ணங்கள் எப்படி அவர் காதில் எட்டியது என்று ஒருவேளை கேட்டால், உளவர்கள் பெருமையை இங்கு விஸ்தரிக்க அவசியமில்லை என்றே சொல்லலாம். இத்தகைய எண்ணங்கள் தனது மனத்தை மயக்கிக்கொண்டிருக்குங் காலத்தில்தான் கம்ஸன் தேரை ஓட்டிக்கொண்டிருந்தான். வெகு ஆரவாரமாக அவன் தேரை நடத்திக் கொண்டு வரும்பொழுது ஓர் பெரும் சப்தம் அவன் காதில் அரைபட்டாற்போல்ப் பட்டது. அது ஸாதாரண மனிதக் குரலின் சப்தம் அல்லவென்று அவன் எண்ணியது அதிசயமாகாது. பஹுஜனவாக்கு வேதவாக்கு என்று சொல்லக் கேள்வியுண்டு. அதுபோல் அச்சப்தம் “அடே மூடா! எவளை நீ இப்பொழுது இவ்

வளவு ஆதரவோடு தேர்மேல் ஏற்றி, அதை வெகு கோலாகலமாக நடத்துகிறாயோ, அவளது வயிற்றிற் தோன்றும் எட்டாவது பிறப்பு உன்னைக் கொல்லவரும் கூற்றுவன் தெரி" என அமானுஷிகமான குரலில் எச்சரித்ததாக அவன் எண்ணினன். முன்னமேயே மயக்கத்துடன் குமுறிக்கொண்டிருந்த கம்ஸனுக்கு இதைக் கேட்டதும் எரியுந்தீயில் நெய் பெய்தாற்போலப் பயம் தூண்டக் கோபம் அதிகரித்தது. மேலும் தனது உயிர்க்கே வினையாகத் தன் தங்கை மூலாதாரமாக இருக்கக்கூடுமென்று அவன் ஒருநாளும் எண்ணவில்லை. என் செய்வான்? தேவகியின் எட்டாவது மகன் தனக்கு யமனாவன் என்று கேட்டதும் மூண்ட கோபாவேசத்தில் அரையிலிருந்த வாளையுருவி, மதிமயங்கி, செய்வதின்னவென யறியாது, தேவகியின் தலைமயிரை மறுகையால் பிடித்துக் கொல்ல யத்தனித்தான். "இவளிருந்தாலன்றோ இவளுக்கு மகன் பிறக்கும்; இவளிறந்தால் நமக்கு யமனுமில்லை" யென்றே அவன் எண்ணி அவ்வாறு செய்தான் போலும்!

கம்ஸனது செயலை அடாது எனச் சொல்ல முடியாது. எதிர்ப்பவர் தமக்கில்லை யென விளங்கும் எவர்க்கும் தம்மை எதிர்க்கக் கூடியவன் ஒருவன் உண்டென்று கூறினால், கோபம் வருவது ஸகஜமன்றோ? அதிலும் தனது தங்கையே தன் அழிவுக்குக் காரணமாக இருக்கக்கூடும் என்று கேட்டால், அவன் கோபம் வளர்வதும் அதிசயமன்று. மற்றுத் தனக்குச் சொன்ன வார்த்தையில் நம்பிக்கையில்லாம லிருந்தாலாவது ஒருவாறு அது அடங்கும். எச்சரித்த குரல் அமானுஷிகமாக இருந்ததுடன் நம்பும்படியாகவும் இருந்தது. மற்றுத் தன்னுயிரினும் உயர்வாக எதையும் பொதுவில் எவரும் பாராட்டார். ஆகவே கம்ஸன் தன் உயிரைப்பற்றிக் கவலை கொள்வது ஒன்றும் இயற்கைக்கு மாறாகாது. எச்சரிக்கையைக் கேட்டதும் அவன், தன்னைக் கொல்லக்கூடிய மனிதனும் இருக்கிறானே என்ற எண்ணந் தூண்டக் கோபத்துள் ஆழ்ந்தனன். அதை விலக்குவதே தனக்கு முதல் வேலை என்று எண்ணிய அவனுக்குத் தன்னழிவிற்குத் தன் தங்கையின் மகனே காரணமெனக் கேட்டால், காரணத்தைத் தோன்றாதிருக்கும்படி செய்யவே முதல் எண்ணந்தோன்றும். ஆகவே அவன் தேவகியைக் கொன்றுவிட்டால் தன்னையழிக்க வருபவன் தோன்ற முடியாதென்று நிச்சயித்துக் கத்தியை ஓச்சினான். இவ்வளவும் அவன் எண்ணித்தான் செய்தான். ஆனால் அவ்வெண்ணங்கள் வெகு வேகமாக மேன்மேல் தோன்றினபடியால், அசரீரி வாக்குக்கும் அவன் கத்தியை ஓங்கியதற்கும் இடையே சிறிதும் காலதாமதம் இல்லாதது போலத் தோன்றிற்று.

பிறகு, தேவகியைக் கம்ஸன் கொல்ல யத்தனித்ததைக் கண்ட வஸுதேவர் கம்ஸனைத் தேற்றினர்; தங்கையைக் கொல்வது தரும விரோதமெனச் சொல்லினர்; அவ்வாறு செய்வது அவன் அவளிடம் கொண்ட அன்பிற்கு மாறானது என விளக்கினர்; தமக்குப் பிறக்குங் குழந்தைகளை எல்லாம் அவனிடம் ஒப்புவிப்பதாக உறுதிமொழி கூறினர்; அவற்றை அவன் ஏதேனும் செய்து கொள்ளலாமென்று ஒப்பினர்; தேவகியைக் கொல்லாது விடும்படி பிரார்த்தித்தனர்; மணக்கோலத்தில் பிணக்கோலம் வேண்டாமென வேண்டினர். அதற்குக் கம்ஸன் சம்மதிக்கவே வசுதேவர் தமதிடம் சேர்ந்தனர்.

வசுதேவர் தமக்குப் பிள்ளை பிறந்ததும், அதைக் கம்ஸனிடம் ஒப்புவிக்கும்படி அனுப்பினர். அவரது வாய்மையைக் கண்டதிசயித்த அவன், அதைக் கொல்லாது அவரிடமே சேர்ப்பிக்கும்படி உத்தரவிட்டான். இவ்வாறே அவன் வசுதேவர்க்குப் பிறந்த ஆறு குழந்தைகளையும் கொல்லாது விட்டுவந்தான். இதற்குள் நாரதர் என்னும் தேவரிஷி அவன் முன் தோன்றி "அக்குழந்தைகளெல்லாம் தேவாம்சமுடையவை. அவைகளைக் கொல்லாது விடுதலுன் துன்பத்திற்கே இடந்தரும். தேவதைகளும் தைத்யர்களைக் கொல்லப் பூலோகத்தில் பிறந்திருக்கின்றனர். ஜாக்ரதை! ஜாக்ரதை!" எனச் சொல்லி மறைந்தனர். இம்மொழிகளைக் கேட்டதும், கம்ஸனுக்கு முன் அசரீரவாக்கு ஞாபகத்திற்கு வந்தது. அவன் கண்முன் என்னவென்னவோ தோற்றங்கள் தோன்றின. தன் தந்தையும் தங்கையுமே தனது அழிவிற்கு உடந்தையாயிருப்பதாக எண்ணினன். காலா காலங்களில் ஏற்பட்ட ஸமயோசித புத்தி யவனைத் தடுக்காதிருந்தால் அவர்களை அவன் உடனே கொன்றிருப்பான். ஆயினும் அவன் தனது வருங்காலம் எவ்வாறு இருக்குமோ என்று பயந்து கிடந்தான். அவன் கவலை அதிகரித்தது; பயம் திட்டப்பட்டது; கோபம் மேல் தோன்றியது, அகந்தை உடந்தையாக அவனைக் கொடுஞ்செயல் புரியத் தூண்டியது. வசுதேவரது ஆறு குழந்தைகளையும் அவன் கத்திக்கிரை யாக்கினான்: அவரையும் தேவகியையும் தளையிட்டுக் கடுங்காவலில் வைத்தான்; தன் மனம் மயங்க, கண் தீப்பொறி தெறிக்க, இதயந்துடிக்க, பின் என் செய்வதென்று திகைத்துக் கையிசைந்து கொண்டு கவலையில் கிடந்தான்.

இங்கொரு கேள்வி பிறக்கலாம். கம்ஸனைக் கெட்டவழியில் போகாது தடுக்க ஒருவருங் கிடையாதோ? உலகில், அவனுக்குப் புத்தி சொல்லக்கூடிய ஒருவருமில்லாமலா போயிற்று? அப்போது சாந்த நிலையிலமர்ந்து விளங்கிய ஆசிரியர் எங்கு போயினர்? அக்கால உலகில் வேதியரில்லாமல் போயினரா? அல்லது கம்ஸனுடைய கொடுந்தொழிலைப் பாராட்டாது அவனைத் துதித்து வயிற்றை வளர்ப்பதையே அவர் ஜீவியமாகக் கொண்டனரா? இவற்றிற்கெல்லாம் பதில் கிடையாதோ? ஒன்றுதான் பதில். நல்லதைச் சொன்னால் நாடி நடப்பவர் யார் என்னும் மறுகேள்வியால்தான் அவற்றிற் கெல்லாம் விடை யளிக்கலாம். மற்றுக் "குழந்தைகளை, ஒருபாபமுஞ்செய்யாத சிசுக்களை, உலக ஞானம் சிறிதுமற்று விளங்கி ஒரு தீங்குமியற்றா இளம் குருத்துக்களைக் கொல்லும்படி ஒரு துஷ்டனிடம் ஞானத்தில் சிறந்து விளங்கும் நாரதர் எவ்வாறு சொல்லலாம்? அது கொடுமையை விருத்தி செய்யவேயல்லவா? அதற்காகவா பெரியோர்கள் உழைப்பது? அது நியாயமா?" எனலாம். ஆனால் முன்னமேயே அவர் உரைத்தபடி தேவகி வயிற்றில் தோன்றிய ஆறு குழந்தைகளும் தேவர்களே ஆவர். அவர் கடவுளது வரவுக்குத் தக்க ஸமயத்தை யுண்டாக்கவே உலகத்தில் உதித்தவர். அதர்மம் தாங்கமுடியாத நிலையை உலகில் உண்டாக்கினால்தான் கடவுள் வரவுக்குக் காலமேற்படும்; அப்போதுதான் கொடியவன் கொடுமையின் உச்சியில் விளங்கிக் கடவுளது தண்டனைக்கும், அடுத்தபடி அவரது அனுக்ரஹத்திற்கும், பாத்திரனாவன். இன்றேல் முடியாது. ஆகவே நாரதர் கம்ஸனைக் குற்றமொன்றுஞ் செய்யா இளஞ் சிசுக்களைக் கொலைசெய்து அவனைக்கடவுளது தண்டனைக்காளாகும்படி செய்தனர். தவறிய அரசனைத் தண்டிக்கக் கடவுளே அருநர் என்பது சொல்லவும் வேண்டுமோ?

சிறையில் தேவகியும் வசுதேவரும் துன்பத்துள் ஆழ்ந்து கிடந்தனர். "நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின். காமீசன் கழலருமை வெவ்வினையிற் காண்மின்" என்ற கவிவாக்கு எங்கேனும் பொய்த்ததுண்டா? பந்தத்திலிருந்தாலன்றி சுவேச்சையின் பெருமை தெரிய வருமா? ஆனால் எவனொருவன் வேறெங்கும் செல்லா மனத்தோடு தன்னைத் தியானஞ் செய்து தன்னையே சரண்புகுந்து கிடக்கிறானோ அவனது ஸுகதுக்கங்களுக் கெல்லாம் கடவுளே பொறுப்பேற்றுக்கொள்கிறாரல்லவா?

అనన్యాశ్చింతయంతో మాం యేజనాః పర్యుపాసతే।
తేషాం నిత్యాభియుక్తానాం యోగక్షేమం వహామ్యహం॥

என ஸ்ரீகிருஷ்ணபகவான் வெளியிட்டதே இதற்குச் சான்றாகும். ஆனால் நிரபராதிகளுடைய துயரம் ஏறஏற அவர்கள்கடவுளுடைய கிருபைக்கு ஏற்றவராவர். அதற்கேற்பப் பயத்தால் தூண்டப்பட்ட கம்ஸன், தேவகி வஸுதேவர்களைக் கடுங்காவலில் வைத்து நிர்ப்பந்தித்துக்கொண்டே வந்தான். அவர்களும் தாங்கள் ஒருகுற்றமுஞ் செய்யாது சிறையில் ஒடுங்கி தமது துயர் என்று நீங்குமோவென ஏங்கிக்கிடந்தனர்; தமது துயர்தீராதென்றும் ஒருவாறு நிச்சயித்து விட்டனர். "எல்லாம் அவன் செயலே, நம்மால் ஆவது ஒன்றுமில்லை" எனத்தேர்ந்து எக்கஷ்டம் வரினும் திடச்சித்தத்துடன் தாங்குவதே தமது தர்மமென எண்ணிச் சும்மா இருந்தனர். இவ்வாறு துயருழந்து கிடக்கும் நாளில் ஓர்நாள், அச்சிறைச்சாலையிலும் தமக்குந் தெரியாது அவர் மனங் களித்தனர். அப்போது தேவகி ஏழாவது கர்ப்பந் தரித்திருந்தாள். அவள்முன் பெருஞ்சோதிபோல் ஒன்று தோன்றியதாக எண்ணினாள். ஆனால் உடனே அவள் தனக்குந் தெரியாத் துயருத்துடன் நெஞ்சம் புண்ணாகி மயங்கினாள். அவள் கர்ப்பமும் வெளித்தோற்றங்

கள் இல்லாமலே கலந்துவிட்டது; அதை யுணர்ந்த தேவகி மனம் வருந்தினாள்.

தேவகி தன்முன் ஜோதிபோன்ற உருவம் தோன்றியதாக ஏன் எண்ணினாள்? ஏன் அவள் அப்போது முதலில் களிப்புற்று பின் வருந்த வேண்டும்? இவ்விஷயம் தேவகி வஸுதேவர்களுக்கே விளங்கவில்லை. அவர் தமது பயத்தில் பரம்பொருளைப் பலமுறையும் உள்ளன்போடு துதித்தனர்; தம்மைக் காக்குமாறு வேண்டினர்; தமது கஷ்டத்தை ஒழிக்கும்படி கண்ணீர் விட்டுக் கதறினர். அப்போது கடவுளின் ஸாந்நித்யம் அவர் உடல் முழுவதும் பரவி, தேவகியிடத்தும் கலந்து விளங்கியது; கடவுளின் மானிட உருவத்தைத் தாங்கத் தகுந்த தெய்விகம் அவள் தேகத்திற் குடிகொண்டது. ஆனால் எங்கும் பரந்த எம்பெருமான் தமது யோக மாயையை விளித்துத் தேவகியின் வயிற்றுள்ளிருந்த ஏழாவது கருவைப் பெயர்த்துக் கோகுலத்திலிருந்த நந்தகோபனது மனைவி யசோதையின் கருவில் அமைக்கும்படிசெய்தனர். அவ்வாணைக் குட்பட்டு அந்த யோகநித்திரையாள், தேவகியின் ஏழாவது கருப்பத்தைப் பெயர்த்து, அக்கருவை யசோதை கர்ப்பத்துள் பதித்தாள். இந்த மாயையின் செயலே தேவகிமுன் தோன்றிய ஒளிக்கும், அவளுக்குண்டான களிப்புக்கும் துயருக்கும் காரணம்போலும்!

சிலநாள்கடந்ததும், தேவகி எட்டாவது கர்ப்பந் தரித்தாள்; தனக்குந் தெரியாமல் உடல் பூரித்தாள்; உள்ளங் களித்தாள். தேவகி வசுதேவரது மனத்துள் தவழ்ந்து விளங்கிய எம்பெருமான் அவரது மனத்திலிருந்த பயவிருளை முற்றும் ஒழித்திருந்தனர். எனவே அவர் நிஷ்களங்கமான மனத்துடன் பரமசாந்தநிலையில் விளங்கினர். ஆயினும் அச்சிறையிலேயே இருந்தனர். இருந்தாலென்ன? உடலுள் அடைப்பட்டு நிற்கும் ஆத்மா தனது நிலையை உணரப்புகின் அதற்குச் சிறை ஒரு தடையாகுமா? நிற்க, தேவகியின் மேனி வரவரத் தேஜஸ்ஸுடன் விளங்குவதைக்கண்ட கம்ஸன் என்னென்னவெல்லாம் எண்ணினான். அவளிடம் விஷ்ணு தன்னைக் கொல்லக் குடிகொண்டுவிட்டானென்றே, அவளது தேக ஸௌந்தர்யத்தைக் காணக் காண அவன் மனத்தில் பட்டது. அவ்வெண்ணம் அவன் மனதை முற்றுங் கவர்ந்து கவலையில் ஆழ்த்தியது. அதை எண்ண எண்ண அவன் மனந்திடுக்கிடும்; உடல் பதைக்கும்; இதயந் துடிக்கும்; இடையே கோபமரும்பும்; மீசைதுடிக்கும்; கண்சிவக்கும்; ரத்தம் கொதிக்கும்; ஆனால் தன்னைக் கொல்ல ஒருவன் வருவான் என்ற எண்ணம் அவனைக் கவர்ந்து அறிவற்றுத் தூண்போல ஒன்றுஞ் செய்யத் தோன்றாது கிடக்க மயக்கும். ஆயினும் அவன் ஆத்திரம் பொங்கப் பொங்க ஆவேசங் கொண்டு தேவகியைக் கொல்லவென்றே கிளம்புவன். ஆனால், மீண்டும் எண்ணி எண்ணிப் பின்வாங்குவான். "அவளைக் கொல்வது பழிக்கு இடந்தரும். அதை ஏன் செய்யவேண்டும்? நம்மை எவன் கொல்லமுடியும்? அப்படிக் கொல்லப் பிறப்பவனைக் கருவிலிருந்து வெளிவந்ததும் என் கத்திக் கிரையாக்கிடுவேன். இதில் என்ன கஷ்டமுண்டு? குழந்தையைக் கொல்வதென்ன கஷ்டமா?"—இவ்வாறு அவன் எண்ணிச் சிறைச்சாலையில் அல்லும் பகலும் இடைவிடாது காத்துத் தேவகியின் வயிற்றிலிருந்து எட்டாவது குழந்தை பூமியில் விழுந்ததும் தனக்குணர்த்தும்படி வேண்டிய ஏற்பாடுகள் செய்தான்; அவ்விதம் செய்யத் தப்புவோரைக் கடுந்தண்டனைக் குட்படுத்துவதாகக் கண்டிப்பான உத்தரவிட்டான். அவர்களும் பயத்திற் கீழ்ப்பட்டு நடுநடுங்கி அவ்வாறே செய்துவந்தனர். இவ்வழிகளெல்லாம் கடவுளின் வரவை ஏற்பதற்கென்றே செய்யப்பட்டனபோலும்!

பந்தத்திலிருந்து விடுபடவேண்டும் என்ற எண்ணம் பந்தத்தி லிருக்கும்போதுதான் தோன்றும். வீட்டினுள் அடைபட்டால்தான் அதிலிருந்து வெளிப்படவேண்டுமென்ற எண்ணமும் உதிக்கும். தேவகி வசுதேவரது சிறைவாசம் ஆத்மாவின் உடல் வாசத்தையே நிகர்க்கும். ஐம்புலன்களால் அடக்கப்பட்டுத் தானிருக்குமிடத்துத் தன் செயல் நடக்கமுடியாது தத்தளிக்கும் பந்தத்துட்பட்ட ஆத்மாவைப்போலவே அவ்விருவரும் தமது சுதந்தரங்களெல்லாம் அற்று அங்கு விளங்கினர். ஆகவே அவர்க்குக் கதி மோக்ஷம் வேண்டுமென விருப்பமுண்டாவது அதிசயமாகாது. ஆனால் அம்மோக்ஷகால மேற்படுவதற்குத் தக்க



ஆயத்தம் வேண்டாமா? உலகமும் கடவுளது வரவை ஏற்கத் தக்க ஆவல் கொள்ள வேண்டாமா? அதற்கு உலகில் உள்ள கொடுமை மீதூர்ந்து, யாவர் மனத்தையும் கரைத்துக் காலத்தமைப்பை மாற்றி நன்மையுண்டாக்கக்கூடிய மஹானது வரவை எதிர்பார்க்க வேண்டாமா? உலகில் அதர்மம் அதிகரித்துவிட்டது; நீதிமுறை பிறழ்ந்து விளங்கியது; உண்மை நிலையற்று அநீதக் கவிப்புள் மயங்கிக் கிடந்தது; யாவர் மனத்தும் கடவுள் வரவு எதிர்பார்க்கப்பட்டது; கம்ஸனும் தேவகியின் எட்டாவது குழந்தையைக் கத்திக் கிரையாக்கக் காதல்கொண்டு அவளைக்கொல்லாது விடுத்தான். ஆக அவனும் அவரது வரவையே எதிர்பார்த்திருந்தான் அல்லவா?

தேவகியும் தனக்குள் தானேயாக மனங் குமுறிக்கொண்டிருந்தாள். "நான் பிறவாதிருந்தாலென்ன? பிறந்துமணக்காதிருந்தாலென்ன? மணந்தும் மலடியாயிருந்தாலென்ன? எத்தனைக் குழந்தைகள் ஒன்றன் பின் ஒன்றாக என் கண்முன் நாசமுற்றன? இது நீதமா? கடவுளின் செயலா? கடவுள் இருப்பதும் மெய்யா? அவர்க்குக் கருணையில்லையா? இனிக் குழந்தை ஏதேனும் பிறந்தால், என்னை அவன் கொன்றாலும் கொல்லட்டும், அதைக்கொல்ல விடேன். இது நிச்சயம்! என் கண்முன் என் குழந்தைகள் கால்வேறு கைவேறாகச் சின்னாபின்னமாகச் சேதிக்கப்படுவதினும் என்மணக்கோலத் தன்றே என்னைக் கொன்றிருப்பின் எவ்வளவு நலமாயிருந்திருக்கும்? என் பாபம் அக்குழந்தைகளையும் பற்றியதுபோலும்! ஹா! அம்மணி! எல்லா உயிருக்கும் இடங்கொடுத்துக் காக்கும் என் அன்னையே! உனக்கு என் குழந்தைகள் மாத்திரம் பிறந்ததும் இறக்க வேண்டுமென்ற விருப்பமோ? ஹா! பூமியே! நீ யாவர்க்கும் தாயாயிற்றே! என்மீது சற்றுத் தயவு செய்யும். எனக்கோர் மகனே பிறப்பன். அல்லது மகளாயினும் என்ன? உன்னுள் அந்தர்க்கர்ப்பமான இடத்தில் அக்குழந்தையை ஒளித்துக் காப்பாற்றும். அது அவன் கையில் பட்டு என் கண்முன் கொல்லப்படுவதைக் காட்டிலும், எங்கிருந்தாலென்ன? என் குழந்தை யென்றிருந்தால் போதும் சற்றுத் தயவு செய்யும். என் வேண்டுகோளுக் கிணங்கி யென்னைக் காப்பாற்றும். அது வளர்ந்து தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளக்கூடிய வரையும் உம்மிடமே இருக்கட்டும். உம்மையே அடைக்கலம் புகுந்தேன். இதை நீங்கள் தான் செய்யவேண்டும்." எனத் தன் கண்ணீர் சோரக் கதறினாள். அவள் மனுவை யார் கவனிப்பது? கடவுள் கவனித்தனரா அல்லது கவனிப்பரா? ஆனால் அவள் கதறியபோது அங்கு எங்குமில்லாப் பேரொளி ஒன்று வீசியது. அதன் பிரகாசத்தை முன்னங் கண்டதுமில்லை; இனிக்காணப்போவது முண்டா?

## ராவ். பகதூர் தண்டலம் கோபால் ராவ்

## RAO BAHADUR T. GOPAL RAO, B.A.

"எச்சமென ஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சை மற்றல்ல பிற"

என்ற கவி வாக்கு, யாவரும் கவனிக்கத் தக்கது. அழியாப் பெருமையையும் பொருளையும் தரக்கூடிய கல்வியை மக்கட்குத் தரத்தக்க ஆசிரியர் இன்றியமையாச் சாதனமாகும். அந்தச் சாதனம் போதனா முறையின் ஒழுங்கை நன்குணர்ந்து, படிப்பவரது மூளையின் பலத்தையும், தாம் சொல்லும் பொருளின் விதத்தையும், ஒன்றற்கொன்று இணையின்றி ஒப்புமாறு விளங்க வேண்டுமென்பது யாவரும் மறுக்க முடியாது. அத்தகைய திறன்வாய்ந்த போதகாசிரியர்கள் தம் மாணாக்கர்களது மனத்தை முற்றும் கவர்ந்து அவரது அன்பிற்கு என்றும் பாத்திரராவர். ஏனெனில், அவரது வாழ்க்கைக்கும், பொருளுக்கும், பெருமைக்கும், அவரே அஸ்திவாரமிட்டவராவதால், அத்தகைய ஆசிரியர் உத்தமோத்தமராவர். அவர் ஞாபகம் என்றும் நீங்காது விளங்கும். இது சரதம். எனவே தென்னிந்திய போதகாசிரியருள் சிறந்து விளங்கிய **தண்டலம் கோபாலராயரது** பெயர் இத்தென்னாட் டில்லங்கள்தோறும், பழமொழிபோல வழங்கிவருவது அதிசயமாகாது.

இவர், காவிரி நீர்பாயும் கும்பகோணத்தருகு, கணபதி அக்கிரஹாரம் என்னும் சிற்றூ

ரில் 1832-௵ பிறந்தவர்; மஹாராஷ்டிர வம்சத்தைச்சார்ந்தவர். இவர் பாட்டனுர் ஜீவன்ஜீ என்று அழைக்கப்பட்ட ராமசந்திர பண்டிதர், தஞ்சாவூ ராசரிடம் வேலையிலிருந்து பின் ஆங்கில ஆக்ஷியில் தாசில் உத்தியோகம் பெற்றிருந்தவர். இவர் மகனுர் ராகவபந்த் என்பவர்; அவரைப் பாவாஜி பண்டிதரென்று அழைப்பது வழக்கம். இவர் தஞ்சாவூர் ராஜ்யத்தில் புகழ்பெற்ற சரபோஜி அரசரது ரிவினியூ கச்சேரியில் வேலையிலிருந்தவர். இவரது ஐந்து மக்களுள் தண்டலம் கோபால ராயரே இளையவர். கோபால ராயரது குழந்தைப் பருவத்தில் முதல் மூன்று வருஷம், கணபதி அக்ரஹாரத்திலேயே கடந்தன. பிறகு அவர் திருவையாற்றில் சிலநாள் வளர்ந்துவந்தனர். ஆனல், ராஜா ஸர் டி. மாதவராயரின் தகப்பனாராகிய திவான் ரங்கராயரது வேண்டுகோளுக்கிணங்கிப் பாவாஜியின் குடும்பம் திருவாங்கூர் சென்றதும் கோபால ராயரும் அங்கே குடும்பத்துடன் வளர்ந்து வந்தனர்.

திருவாங்கூரி லிருக்கும்பொழுது கோபால ராயர் தன் தந்தையினிடமிருந்து மஹாராஷ்டிரத்திலும் ஸம்ஸ்கிருதத்திலும் வல்லவராகும்படியான கல்வி பயக்கப்பெற்றூர். ஆனல் அவர் ஆங்கிலத்தில் பிரதம சிக்ஷைகளுக்கு இங்கிலீஷ் தேவாஜிராய ரென்பவரே காரணம். வல்லவன் கையில் புல்லுமாயுத மென்பதுபோலக் கோபாலராயர் இவ்வல்ப ஆரம்பத்தையே அஸ்திவாரமாகக்கொண்டு தமது உழைப்பின் பெருமையால், பள்ளிக்கூடத்திலாவது, கலாசாலையிலாவது, சிறிதும் கற்காது, அப்பாஷையில் அபார ஞானத்தையடைந்தனர். நிற்க, அவர் தந்தை இறந்துவிட, கோபாலராயர் திருவாங்கூரை விட்டுத் தஞ்சைநகர் அடைந்தார்.

தஞ்சையில் வந்ததும் கலெக்டர் கச்சேரியில் குமாஸ்தாவாக அமர்ந்தனர். அவர்க்கப்பொழுது வயது பதினேழுதான். ஆனல் இரண்டு வருஷத்திற்குள்ளாகவே அவர் அக்கச்சேரியின் பப்ளிக் வொர்க்ஸ் இலாகாவின் மானேஜரான பொறுப்பான பதவியையடைந்தனர். இவ்வேலையில் மூன்று வருஷம் அவர் நெருப்புப்போலச் சுத்தமாக இருந்து கவர்ன்மெண்டாருக்கு மிக உபயோகமான ஊழியம் செய்து வந்தனர். அக்கால உதவி கலெக்டராயிருந்த ஹாலவேயார் ராயரது சிறந்த ஊழியத்தைப் புகழ்ந்து பேசியுள்ளார்; பிற்காலங்களிலும் அவரது பெருமையை அவர் பாராட்டா திருந்ததில்லை. இந்த ஹாலவே துரையவர்களே பின்பு வெகு பிரக்யாதி பெற்ற ஹைகோர்ட் ஜட்ஜியாக விளங்கியவர்.

கலெக்டர் கச்சேரியில் நமது ராயர் நெடுநா ளிருக்கவில்லை. 1854-௵ அவர் கும்பகோணத்திலிருந்த ஸர்க்கார் பள்ளிக்கூடத்து உதவி போதகராகத் தமது வேலையைக் கல்வியிலாகாவுக்கு மாற்றிக் கொண்டனர். அங்கு உபாத்தியாயராக இருக்கும்பொழுது, 1857-௵ சென்னை ஸர்வகலா சங்கம் ஸ்தாபிக்கப்பட அச்சங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட மெற்றிகுலேஷன் பரீக்ஷைக்கு நமது ராயர் அவ்வருஷமே சென்று அதில் தேர்ச்சி பெற்று, 1859-௵ அச்சங்கத்தாரால் புதிதாக ஏற்படுத்தப்பட்ட பி.ஏ. பட்டப் பரீக்ஷைக்கு அதே வருஷம் சென்று, அதில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றதன்றி, அவ்வகுப்பில் அவர் ஒருவரே நின்றமைக்காக எல்லோருடைய புகழ்ச்சிக்கும் பாத்திரரானுர். அப்பொழுது நமது ராயர் தினம் ஸராஸரி ஆறு மணி நேரம் உழைக்கும் உபாத்தியாயரா யிருந்ததால் அவர் முதல்வகுப்பில் தேர்ச்சி பெற்றது அஸாதாரணமாகவே கொண்டாடப்பட்டது. அவர் பரீக்ஷைக்குச் சென்றதை யாவரு மறியார். ஆனல் அவரது தேர்ச்சியைப் பற்றி ராஜ ப்ரதிநிதி சட்டசபையின் அங்கத்தினரான போர்ப்ஸ் துரை, ஹாலவே துரை இவர்களின் அளவிட முடியாப் புகழ்ச்சி கிடைத்ததென்ருல், அவரது உழைப்புக்கும், புத்திக்கும், சக்திக்கும் வேறு அத்தாட்சியும் வேண்டுமோ?

கோபாலராயரது எஞ்சிய நாட்கள் வித்யாயிலாகாவிலேயே செலவிடப்பட்டன; அவற்றிலும் அதிக பாகம் கும்கோணம் ஸர்க்கார் கல்விச் சாலையிலேயே செலவிடப்பட்டன. இக்கலா சாலையின் அக்காலத்துப் பெருமைக்கு இருவரே காரணபூதர்; அவர் போர்ட்டர் துரையும் கோபாலராயருமேயாம். கணக்கு ஆங்கிலம் இவற்றின் போதனையை முக்கியமாகக் கவனிக்கவேண்டிய வேலை நமது ராயரது பங்கிற்கே விழுந்திருந்தது. தென்னிந்தியாவில் உயர்தரப் படிப்பிற்கு முக்கிய ஆதாரமாக விளங்கி



அதன் அபிவிருத்திக்காக உயிரையுங்கொடுத்து உதவிவந்த இ. பி. பௌவெல் துரையவர்கள் கோபால ராயரது வேலையைக்கண்டதிசயித்து அதற்கிணை யெங்கும் கண்டதில்லை யென்று புகழ்ந்து பேசி யிருப்பாரானுல் அதைப்பற்றி நாம் விரித்துக் கூறல் மிகையன்ருே? 1870-ம் ௵-த்தில் ராயர் வித்தியா இலாகா இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டனர். இவ்வேலைக்கு முதல் முதலாக நியமிக்கப்பட்ட இந்தியர் இவரே. இவ்வேலையில் மூன்றுவருஷம் தமது மனச்சாக்ஷிக்கு விரோதமாகாமல் உழைத்து வெகு தீர்மானமாக நடந்து, பள்ளியிற் கல்வியைச் சீர்திருத்த உழைத்து அதிகார வர்க்கத்தினர் கொண்டாடும்படி விளங்கினர். ராயரவர்கள் இவ்வேலையில் பரீக்ஷார்த்தமாக நியமிக்கப்பட்டிருந்தபோதிலும், அவரது சேவை இந்தியர்களை அப்பதவிகளில் நியமிப்பதால் ஏற்படும் நன்மைகளை நன்கு விளக்கியது. இப்பதவியி லிருக்கும்பொழுது அவர் செய்த ஊழியத்தின் சிறப்பைப் பாராட்ட வென்று சென்னை சர்வகலா சங்கத்து அங்கத்தினருள் ஒருவராக அவர் தெரிந்தெடுக்கப் பெற்றனர்.

1872-ம் ௵ அதற்கடுத்த இரண்டு வருஷங்களிலும் கும்பகோணம் ஸர்க்கார் கலாசாலை நமது ராயரது அதிகாரத்தின் கீழே இருந்தது. அவ்வருஷங்களில் பரீக்ஷைகளில் மாணுக்கர்களின் தேர்ச்சி அவர்முன் பிரின்ஸிபாலாக இருந்த போர்ட்டர் துரையாரதுகாலத்திலிருந்ததைக் காட்டிலும் மிகச் சிறப்புற்றோங்கி விளங்கிற்று. இவ்விஷயத்தைக் கவனித்த வித்யாயிலாகா அதிகாரி "இவ்விராஜதானியில் இரண்டாவதாக (அமைப்பிலும் பெருமையிலும்) விளங்கும் கலாசாலையின் தலைமையை வகிக்கத்தக்க திறமையை வெகு திறமாகக் கோபாலராயரவர்கள் இதனுல் ஏற்படுத்தியுள்ளார்" எனத் தாம் கவர்ன்மெண்டாருக்கெழுதிய அக்கலாசாலையைப் பற்றிய ரிபோர்ட்டில் கண்டிருந்தனர். ஆனல் இந்தச் சிபாரிசு நடைபெருதே யிருந்தது. கோபால ராயரும் கடைசிவரையும் இவ்வேலையில் காயம் செய்யப்படாமலே இருந்தனரென்பது விசனிக்கத்தகுந்த விஷயமே.

ஆயினும் 1878-ம் வருஷம், அவர் "க்ரேடட் ஸர்வீஸ்" என்னும் உயர்தர உத்யோகப் பதவியில் எடுத்துக்கொள்ளப்பட்டுச் சென்னை இராஜாங்கக் கலாசாலையில் சரித்திரப் போதகாசிரியராக நியமிக்கப்பெற்றனர். இப்பதவிக்கு அவரை முன்னமேயே நியமிக்காதது பொது ஜனங்களின் மனவருத்தத்தைத் தந்திருப்பினும், இந்திய ராஜாங்கத்தார் நமது ராயரது போதனு விஷயமாக உழைத்த பெருமையைப் பாராட்டி "ராவ் பஹதூர்" என்னும் பட்டத்தை அவர்க்களித்தனர்.

ராயரது வாழ்க்கையின் கடைசி நாட்கள் இக்கலாசாலையி லிருக்கும் பொழுதே ஆரம்பித்த தெனலாம். 1883-ம் ௵ அபாரமான உழைப்பின் காரணமாக அவர்க்குச் சுரம் கண்டது. அதனுல் அவரது தேகதிடம் வரவரக் குறைவதை யுத்தேசித்து அவர் ஆறு மாதம் ரஜா வாங்கிக்கொண்டு விச்ராந்தி பெறும்படி கும்பகோணஞ் சென்றனர். ஆனல் அவர் மீண்டுவந்து வேலையை ஒப்புக் கொள்ளும்படியான தேகதிடனைப் பெறவேயில்லை. 1886-௵ அவர் வெகு காயலாவாகச் சென்னைக்குக் கொணரப்பட்டு, அவ்வருஷம் மேமீ 11-ம் நாள் இவ்வுலகைவிட்டுத் தம்மினத்தாரை மாத்திரமல்லாது படித்தறிந்த பலரையும் துன்பத்துள் ஆழ்த்தினர்.

கோபால ராயரது மரணத்தைப்பற்றிக் கவர்ன்மெண்டாரிடம் பிரஸ்தாபிக்கும்போது வித்யாயிலாகாத் தலைவராகிய புகழ்பெற்ற டங்கன் துரையவர்கள் கண்டவற்றுள் சிலவற்றை யிங்கு எழுதுவது இழுக்காகாது. அவை வருமாறு:—

"கோபால ராயர் இவ்விலாகாவில் முப்பது வருஷங்களும் மேல் ஏழு வருஷங்களிற்கு மேலும் உழைத்துள்ளார். அக்கால் அவர் ஸர்க்கார் தரப்பிலும் பொதுஜனங்கள் பாங்காகவும் சிறந்த வேலை செய்திருக்கின்றனர். அவர் கணிதசாஸ்திர நிபுணராயினும் ஆங்கில பாஷையில் மிகப் பேர்பெற்றவராகவே கொண்டாடப்பட்டனர். அப்பாஷையைப் போதிப்பதில் அவர் ஐரோப்பியப் போதகாசிரியர்களைக் காட்டிலும் முதன்மையாக விளங்கினர். சென்னை இராஜாங்க கலாசாலையிலும், ஸர்வகலாசாலையிலும் அவரோடு நன்கு பழகியுள்ளேனுகையால், அவரை இழந்ததால் கல்வியின் பிரசாரத்திற்கு ஏற்பட்டநஷ்டத்துன் பெருக்கை நான் மதிப்பிடச் சக்திவாய்ந்துள்ளேன்"

மேலே கூறியவிதமே டங்கன் துரையார் ராயரது மூத்த மகனுக்கும் ஓர்கடிதம் வரைந்திருந்தனர். அதில் அவர் தமக்கும் ராயருக்கும் ஏற்பட்டிருந்த அந்யோந்ய நேசத்தைப்

பற்றி விஸ்தரித்திருந்தனர் என்பது இங்கு கவனிக்கத் தகுந்த விஷயம். பிறக, கோபால ராயரது வேறு அன்பர்களும் இவ்வாறே அவரது குணங்களைப் பாராட்டி எழுதியிருந்தனர். ராயபகதூர் ரங்கநாதமுதலியாரும், ஸர் திருவாரூர் முத்துஸ்வாமி ஐயரவர்களும் எழுதிய கடிதங்களில் அவரை வெகுவாகக் கொண்டாடியிருந்தனர். முதலியாரவர்கள் ராயரது மரணம் தென்னிந்தியப் பொதுஜனங்களுக்கேற்பட்ட பொதுத்துன்பமாகப் பாராட்டினர். இவ்விஷயமாக, புகழுற்று விளங்கும் தென்னிந்தியக் கல்வி யபிவிருத்திக் குழைத்து மதிப்புக்குகந்த வில்லியம் மில்லர் அவர்கள், கிருஸ்துவக் கலாசாலை மாதாந்தப் பத்திரிகையான கிரிஸ்டியன் காலேஜ் மாகஸினில் எழுதியபோது "ஐரோப்பியராலும் இந்தியராலும் ஸமமாக இப்போது காலஞ்சென்றவரைப்போல நன்கு மதிக்கப்படும் உத்தம பதவியை வகித்தவர் தென்னிந்திய கல்விகற்ற மக்களுள் சிலரே; மேலும் வரும் ஸந்ததியாரது மனதைக் குவித்துள்ளன்பையூட்டத் தகுந்தவர் அவரினும் சிலரே என்பது யாவர்க்கும் இழிபுதாதென்பது திண்ணம். அவர் வேலையிலேயே கவலையுள்ளவர்; கர்வமென்பதறியாதவர்; ஒருவர் விஷயத்திலும் நுழையாதவர். எனினும் அவரிடமிருந்த சக்தி யாவரையுங் கவர்ந்து செம்மைப்படுத்தி அவ்வாறே நின்று விளங்கச் செய்யுந் தன்மையது. அவர்க்கு வேலையே பிரதானம். அதைச் செய்வதில் பிறரது துதி அல்லது வசை இவற்றை யவர் கருதார். எண்ணித் துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவ மென்பதிழுக் கென்பதே அவர் சித்தாந்தம். அவரைப் பின்பற்றி நடப்பது தென்னிந்திய கல்விமான்களுக்கு அத்தியாவசியமாகும். சிலர் மேதாவியாகிய கோபாலராயர் மிகவுயர்ந்த பதவியை யடையாதிருந்ததாகச் சிறிது மனக்கலக்க முறலாம். ஆனால் இது எமது அபிப்பிராயமன்று. ஓடும் நீர் தான் அங்கங்கும் சென்று தனது பெருக்கால் பூஸாரத்தைச் சீர்படுத்திப் பலனுண்டாக்குவது. ஆனால் அவரிடமிருந்து கற்ற மாணாக்கர் பலநூற்றுள் சிலரேனும் அவரது குணத்தையும் நடையையும், அவர் வேலையில் கொண்ட அழியா ஊக்கத்தையும், அல்ப வியவஹாரங்களையும் லக்ஷ்யங்களையுங் கவனியாது பாரி புத்தியுடன் விளங்கும் பெருந்தன்மையையும், ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் தீரயோசித்து அதற்கேற்ற காரணங்களுடன் கொப்பத் தீர்மானங் கொண்டு நமது காலஞ்சென்ற ஆசார்யரது குணங்களை செவ்வனே வழிபடுவாராயின் ராயரது வாழ்க்கை பலன் பெற்றதென்றே சொல்லலாம். அது மிகத் தகுந்ததேயாம். எனவே அவரது வாழ்க்கை பெருமைக்கே ஏற்றது. உலகத்தில் தம் பெருமையை டமார மடிக்கும்படியாக வாழ்பவரது வாழ்க்கையினும், இடந்தெரியாதிருந்து நல்லவேலைசெய்த நமது ராயரது வாழ்க்கையே கௌரவிக்கத் தகுந்ததாம்" என வரைந்து ராயரது ஞாபகார்த்தமாக ஒரு சின்னமும் ஏற்படுத்தப்பட வேண்டுமெனவுந் தூண்டினர்.

தென்னிந்திய ஜனங்களால் நமது ராயரது ஞாபகம் போதகாசாரியனாகவே கொண்டாடப்படுகிறது. அவரது போதனையின் பெருமையைப்பற்றிக் கும்பகோணம் நகர ஸபா மண்டபத்தில் போர்ட்டர் துரையவர்கள் பேசியபோது,

"அவர் ஆழ்ந்து அறிந்து போதிக்கும் தன்மையர். அவர் சொல்லுவது எவற்றையும் முற்றுமுணர்ந்து செம்மையே சொல்வர்; செய்வதெவற்றையும் செவ்வனே செய்வர். அவர்பாடம் சொல்லித் தரும்போது மூலத்தைக் கற்பிப்பதுடன் நிற்பதில்லை. ஆனால் அதனோடு ஸம்பந்தப்பட்ட பல்வேறு விஷயங்களைப் பற்றியும் பேசி மாணாக்கர்களது ஞானத்தை விருத்திசெய்வர். இதனால் அவர் மாணாக்கரது குணங்களையும் நடையுடை பாவனைகளையும் சீர்படுத்தியது சொல்லவேண்டியதேயில்லை. யாவரையும் எடுத்துப் போடும்படியாக ஸமயோசிதமான மேற்கோள்களைக் கூறியும், மனத்தைக்கவரும் அதிசயமான வாழ்க்கைக் கதைகளைச் சொல்லியும், யாவரையும் வசப்படுத்தக்கூடிய சரித்ரங்களை விரித்துரைத்தும், பெரியாரது பிரௌடவாக்கை அடிக்கடி ஒன்றன்பின் ஒன்றாக வெகு வேகமாகச் சொல்லிப் பாடத்தைப் பலரும் கவனிக்கும்படி செய்வர். ஒருசமயம் உலகின் மேதாவியான அரிஸ்டாடல் என்பவரது சிறப்புவாய்ந்த மூளையின் பெருமையைப்பற்றிப் பேசுவர்; அடுத்தஸமயம் ஷெல்லி என்னும் ஆங்கில கவிவாக்கைக் கொண்டாடுவர்; அடுத்தபடி கவியும் தத்வதர்சனியுமான வெட்ஸ்வர்த் என்னும் ஆங்கில பெருமானின் பெருமையை எடுத்துரைப்பர்; உடனே அவர், சக்தித்தவ விசேஷத்தைப் பற்றி பிரஞ்சு சாஸ்திரியான பாஸ்கல் என்பவரது கணக்கை பிரசாரஞ் செய்வார். இது ஆனதும் ரோமகிரேக சரித்ராம்சங்களை விளங்க உரைப்பர். இத்தனையும் ஒன்



றன்பின் ஒன்றாகச் சர வருஷமாக அவர் வாயிலிருந்து வெளிப்படும். மற்றொரு சமயம் இந்திய கல்விமான்களது குணங்களைப்பற்றிப் பேசிப்பாடத்தைத் தாளிப்பர். அவர் தமது மாணாக்கர்களை உயர்த்த எவ்வெவ் வழிகளுண்டோ அத்தனையும் வழிபட்டு அவ்வரை உயர்த்த உழைத்தனர்."

எனக் கூறினர். இளமைப் பருவத்தில் கோபால ராயருக்குச் சித்திரம் வரைதலில் அவாவுண்டு. அவர் தம் தந்தையிடமிருந்து கற்ற மஹாராஷ்ட்ர பாஷையில் அன்பு அவர்க்கு இறக்குமளவும் ஒழிந்ததில்லை. அந்தியகாலத்தில் தான் அவர் ஆங்கில கவியாகிய கோல்ட்ஸ்மித் இயற்றிய ஹேர்மிட் என்னும் காவியத்தை மாராடியில் பாவினத்தில் மொழிபெயர்த்தனர். அது இன்றும் வாக்குச் சுத்தத்திற்கும் மூலத்தைச்சிறிதும் வழாதபெருமைக்கும் கொண்டாடப் படுவதாகச் சொல்லப் படுகிறது. மஹாராஷ்ட்ர பாஷையைப் பேசுவதில் அவர் மஹா நிபுணர். அவர் பேசுமிடங்களிலெல்லாம் மஹாராஷ்டிர அல்லது ஸம்ஸ்க்ருத ச்லோகங்களைச் சொல்லி அலங்கரிப்பர். அவர் பேசுவதே பிறர்க்கு ஞானமூட்டும் ஸாதனமாகஇருந்ததென்று அவரைத்தெரிந்தபலராலும் கொண்டாடப்பட்டதென்றால் நாம் அதை சொல்வதிழுக்காகாது. அவரது அபார ஞாபகசக்தியே இதற்கு ஆதாரம் போதும்! ஆயினும் அவர் அதிகமாகப் பொதுக்கூட்டங்களில் பேசியதில்லை. ஆனால் அவர் ஆங்கிலத்தில் பேசுவதைக் கேட்பது யாவர் மனதையும் இழுக்கும் வன்மையது. அவர் எது சொல்லினும் தீரயோசித்தே சொல்வர். எனவே அவர் சொல்வதெதுவும் யாவரும் மதிக்கத்தகுந்த பெருமையுடன் விளங்கின. இத்தகைய பெருமையுடன் அவர் விளங்கினும் பிறரிடங் கற்கக்கூடாதெனக் கருவித்தவர் அல்லர்.

கோபாலராயர் புத்தியில் சிறப்புற்று விளங்கியதுபோலவே நெறியிலுமுயர்ந்தவர். அவர் பிறரது பேதப்பட்ட அபிப்பிராயங்களையும் மரியாதையுடன்மதிப்பவர். எனினும் அவர்பேசுவது சிலஸமயங்களில்வெகுகண்டிதமாகவிருக்கும். குணதோஷத்துடன் விளங்குபவர்: அதனால் அவர் முன்வர நடுங்குவர். ஆயினும் அவரது தாளாண்மைக் குணம் அவரிடம், அவரையே தமது பெருந்துணையாக மதிக்கும் பலரையுங் கூடும்படிசெய்தது. இதில் அதிசயமுமுண்டா?

நிற்க, ராயரவர்கள் ஆசாரச்சீர்திருத்தங்களில் அவாக் கொண்டவரல்லர். ஆனால் இவ்விஷயமாக அவர் கொண்ட சில அபிப்பிராயங்கள் மதிக்கத் தகுந்தன. பெண்கல்வி, இளவயதில் கல்யாணஞ் செய்யாமை, நிர்பந்தவைதவ்யம், சாஸ்திரவிருத்தமாக ஒரு வர்ணத்துக்குள்ளே பலபிரிவுகளாகவிளங்கும் பேதங்களின்ஒழிவு, இவற்றைப்பற்றி விரைவில் சீர்திருத்தங்கள் அமையவேண்டுமென அவர் எண்ணினர். இளம் பிராயக் கல்யாணங்களே இந்திய ஸமூஹத்தைக் கெடுத்ததென அவர் பன்முறையுங் கூறியுள்ளனர்; அதிலும் பிராமணர்களது தேகதிடன் குறைந்ததற்கதுவே முக்ய காரணமென்று அவர் பசுமரத்தாணிபோல் யாவர் மனத்திலும் பதியுமாறு சொல்லியிருக்கின்றனர்.

ராயரது நாமம் இத்தென்னாட்டு மக்கள் வாயில் நடமாடுவதெதன் பெருமையால் என்று இப்பொழுதுயாவருமுணரலாம். அவரது வாக்ரசனையும், சொல்வன்மையும், அபாரஞானமும் தடதடவென்று கொட்டு மேற்கோள்களும், ஸமயோசிதமாக அவர் இடையிடையேவெளியிட்ட சாதுர்யமொழிகள், சிறுகதைகள், வாழ்க்கைஅநுபவங்கள், சரித்ரஸம்பவங்கள் இவைகளும், அவரை அபாரமான போதகா உருவமாக யாவர் மனத்திலும் பதித்தன என்பது மறுக்கவுமுடியுமா? அத்தகைய உபாத்யாயர்களே உலகத்துச் சிறுவர்களை உண்மைப் பெரியவர்களாக்கும் வன்மையுள்ளவர்களாதலால் அவர் உலகுக்கே ஆதாரமாகின்றனர். எனவே, கோபாலராயரது உருவத்தை மீண்டும் மானிடவுருவில் காண்பது எளிதன்றா? ஆயினும் போதகாசிரியரும் மாணாக்கர்களும் பிறரும் அவரை வழிப்பட்டுப் பெறக்கூடிய பலன் பல உளஎன்று நாம் சொன்னால் அதைத் தவறென்று சொல்வார் எவருண்டு? நம்மறிவுக்குப் புலப்படாமை ஒருவேளை நமது புத்திமயக்கோ?

---

**மாதவல்லி.**—மிகச்சிறந்த தமிழ் நாவல். யாவராலும் பாராட்டப்பட்டது. விலை அணா 8, விவேக போதினிச் சந்தாதார்க்கு மாத்திரமே அணா 6. வேண்டுவோர் விவேக போதினி மானேஜருக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

# தாவர நூல்

## BOTANY

### தாவர வாழ்க்கை

இன்று காலை சுகமாக இருக்கிறது. வெய்யிலும் நன்றாய்க்காய்கிறது. நாம் கண்டுகொண்ட விஷயங்களை மீண்டும் கவனிப்போம். இப்போது நமக்குத் தாவரங்கள் நம்மைப்போல உயிருள்ள பிராணிகளென்பது ஒருவாறு தெரியும். அவற்றின் வளர்ச்சிக்கு வேறு பொருள்கள் உணவாக வேண்டுமென்பதும் நாம் ஊகித்தறிந்தோம் ஆனால் இதை எளிதில் காட்டலாம். முக்கியமாகத் தாவரங்களின் வளர்ச்சிக்குச் சூரியஉஷ்ணமும் நீரும் அத்யாவசியகம். நாம் தானியவித்துக்களைச் சும்மா காற்றில் பல நாள் வைத்திருந்தாலும் அவை முளை விடுவதில்லை. ஆனால் ஜலத்தில் அவற்றை ஊறப்போட்டு வைத்தால் முளைவிட்டுக் கொஞ்ச நாளானதும் விதையின் தோல் வெடித்து அதிலிருந்து முளை இலைகள் தோன்றுகின்றன. நீரில்லாவிட்டால் செடிகள் வாடுவதையும், விடாவிடில் உலர்வதையும் நாம் காண்கிறோம். ஆகவே தாவரங்களின் வளர்ச்சிக்கு நீர் வேண்டும் என்பது ஏற்படும். மேலும் நீரின் சேர்க்கையால் விதைகள் கெட்டியாகஇருப்பதொழிந்து, மெதுவடைந்து அளவில் அதிகப்படுவதையும் நாம் பார்க்கலாம். அவ்வாறு வளரும்போது அவற்றின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் இடைஞ்சல்களை ஒழிக்க அவைகளுக்குச் சக்தி உண்டென்பதையும் நாம் கவனிக்கவேண்டும். ஒரு கண்ணாடிச் சீசாவில் தானியவிதைகளை நிறைத்து, நடுவில் சிறு துவாரமுள்ள பிரடையால் அதன் வாயைமூடி, ஜலத்தில் அந்தச் சீசாவை அமிழ்த்து வைத்துப் பிறகு ஐந்து அல்லது ஆறுமணி நேரமானதும் எடுத்துப் பார்த்தால், அது உடைந்து கிடக்கும். இது ஏன் தெரியுமா? நீரை உண்ட தானியங்கள் அளவில் பெருத்து, அந்தச் சீசாவின் பக்கத்தில் அழுத்துவதால், அந்தத் தாக்கைத் தாங்க முடியாது, அச்சீசாவின் பக்கங்கள் விரிந்து உடைந்து விடுகின்றன. இந்தச் சோதனையைச் செய்யும்போது சீசாவைச்சுற்றிக் கயிற்றாலோ கம்பியாலோ கெட்டியாகக் கட்டிவைப்பது நலம்; இதனால் சீசாவின் பக்கங்கள் வெடித்துக் கீழே துண்டுதுண்டாக விழாதபடி தடுக்கலாம். அவ்வாறு செய்வது நமது பரிசோதனைக் குபயோகமாகவிருக்கும்.

அதுகிடக்கட்டும். நாம் எரியும்கட்டையைச் சற்றுக் கவனிப்போம். அது முதலில் தணலாய்ப் பின் எரிந்து கடைசியில் வெள்ளைப்பொடியாக விழுகிறது. இந்த வெள்ளைப்பொடியில் சிறிது பாகம் ஜலத்தில் கரையும்; சிறிது கரையாது. இந்தப் பொடியைக் கலந்த ஜலத்தைச் சற்றுத் தெளிந்ததும் எடுத்துக் கொள்ளுங்கள். இதை நாம் பரீக்ஷைசெய்யப் புகுவதன் முன், நமக்கு இரண்டு ஸாமான்கள்வேண்டும். அவை விஷ்ணுக்ராந்தமோ அல்லது ஏதாவது நீலமாகஇருக்கும் புஷ்பமோ அதுவும், எலுமிச்சைப் பழமுமே. எலுமிச்சைப் பழத்தை ஒரு கத்தியால் அறுத்து, அதன் ரஸத்தை ஓர் கண்ணாடித்தட்டில் பிழிந்துகொள்வோம். இப்போது நம்மிடமிருக்கும் விஷ்ணுக்ராந்த மலரில் ஒன்றை அதில் போட்டால் நாம் என்ன விசேஷம் காண்கிறோம்? விஷ்ணுக்ராந்த புஷ்பம் தனது நீல நிறம் மாறி, செவப்பாக ஆகிறதல்லவா? இவ்வாறு நிறமாறிய புஷ்பத்தை நாம் பரீக்ஷைக்காக எடுத்து வைத்திருக்கும் நீரில்போட்டால், அதன் நிறம் செவப்பாயிருப்பதொழிந்து அதன் இயற்கை நிறமான நீலமாகமாறும். மீண்டும் இந்தநீலமாக மாறிய புஷ்பத்தை எலுமிச்சை ரஸத்தில் போட்டால் செகப்பாக மாறுவதை நாம் காண்கிறோம். அப்படிச் சிவந்த புஷ்பத்தை நாம் வைத்திருக்கும் ஜலத்தில்போட மீண்டும் அதன் நிறம் நீலமாக மாறும். எலுமிச்சை ரஸத்தில் போட்டபொழுது நீலமான புஷ்பம் செகப்பாக நிறமாறுகிறது; பரீக்ஷைக்காக எடுத்து வைத்த ஜலத்தில் செவந்த புஷ்பத்தைப் போட்டால் நீலமாக மாறுகிறது. ஆனால் செவந்த புஷ்பத்தை எலுமிச்சை ரஸத்தில் போட்டால் அது வர்ணமாறாமல் விளங்குகிறது. நீலமான புஷ்பத்தைப் பரீக்ஷிக்க வைத்திருந்த நீரில் போட்டபொழுது நீல நிறமாறாது விளங்கும். ஸாதாரண நீரில எந்நிறப் பூவைப் போட்டாலும் நிறமாறுவதில்லை. இந்தச் சோதனைகளிலிருந்து நாம் பல விஷயங்களைக் கண்டுகொள்ளலாம். எலுமிச்சை ரஸம் புளிப்பென்பது உமக்குத் தெரியும். இந்தப் புளிப்புத் தன்மை கொண்ட பதார்த்தங்கள் இயற்கை



நீலநிறத்தைச் செகப்பாகமாற்றுங் குணமுள்ளவை. ஆகையால், நாம் எலுமிச்சை ரஸத்தில் விஷ்ணுக்ராந்தி மலரைத் தோய்த்ததும், அது நிறம் செகப்பாக மாறியது. சில பதார்த்தங்கள் இயற்கைச் செகப்பு நிறத்தை நீலமாகமாற்றும் குணமுடையன; அவற்றிற்கு க்ஷார பதார்த்தங்களெனப் பெயர். நாம் பரீக்ஷிக்கும் பொருட்டு வைத்திருந்த நீரில், எலுமிச்சை ரஸத்திலிட்டுச் செகப்பாக மாறின விஷ்ணுக்ராந்தி மலரைத் தோய்த்ததும் நீலமாக மாறினதால், அந்நீரில் க்ஷார பதார்த்தம் கலந்திருக்க வேண்டுமென்பது இதனால் வெளிப்படையாகும். ஆகவே நாம் எரித்த விறகிலிருந்து எரியாது விடப்பட்டவற்றுள் க்ஷார பதார்த்தங்கள் இருக்கின்றன என்பது ஏற்படும்.

க்ஷார பதார்த்தங்கள் லோஹ ஸம்பந்தமான உப்புகள். இவ்வுப்புகளைத் தாவரங்கள் எங்கிருந்து எடுத்துக் கொள்கின்றன என்பதை நாம் இப்பொழுது கவனிக்க வேண்டுமல்லவா? இதோ இந்தச் சீசாவில் சில உப்புகளைக் கரைத்த நீரைக் கொட்டுகிறேன்; பாருங்கள்! இதில் அயம், பொட்லுப்பு, சுண்ணாம்பு, இந்துப்பு, எலும்பு இவற்றின் ஸம்பந்தமான உப்புகளே கரைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சிறு நாயுருவிச் செடியை வேர் அறாதபடி எடுத்து அதன் வேரை, மேற்சொன்ன சீசாவைச் சரியாக மூடக்கூடிய பிரடையின் துவாரத்தில் நுழைத்து, வேரைச் சீசாவில் நுழைத்துப் பிரடையையும் மூடிவைத்தால், எத்தனை நாளானாலும் செடிவாடாமல் வளர்ந்துகொண்டேயிருக்கும். இதற்குக்காரணம், வேர்கள் அந்தச் சீசாவில் உள்ள நீரிலுள்ள உப்புக்களிலிருந்து தமது தாய்ச்செடிக்கு வேண்டிய உணவுப் பொருள்களைச் சேகரித்துக் கொடுப்பதும், இலைகள் காற்றிலிருந்து கரிமுதலிய பொருள்களைக் கரியமிலவாயுவை உட்கொண்டு கொடுப்பதுமேயாம். தாவரங்களுக்கு நீர் விட்டல்லவா வளர்க்கிறோம்? நாம் விடும் நீர் மண்ணுள் சென்று அவற்றிற்குப் பாய்கின்றபோது வேர்கள் அந்நீருள் கலந்திருக்கும் உப்புகளைச் சேகரித்துத் தாவரங்களின் வளர்ச்சிக்குத் தருகின்றன என்பதை நாம் கவனிக்கவேண்டும். தாவரங்கள் உட்கொள்ளும் உப்புக்களைத்தான் நாம் பரிசோதனையின் பொருட்டு நீரிற் கலந்து சீசாவில் விட்டது.

ஆகவே, நாம் இப்பொழுது தெரிந்து கொண்டதாவது: தாவரங்கள் வேர்கள் மூலமாக, நிலத்திலிருந்து தமக்கு வேண்டிய உப்புகளை எடுத்துக் கொள்கின்றன; காற்றிலிருந்து கரியமிலவாயுவை யுட்கொண்டு அக்காற்றைச் சூர்ய வெளிச்சத்தில் கரியும் பிராணவாயுவுமாகப் பிரித்துக் கரியைத் தமது வளர்ச்சிக்காக எடுத்துக்கொண்டு பிராணவாயுவை வெளிவிடுகின்றன; தாவரங்களின் வளர்ச்சிக்கு நீரும் நல்லகாற்றும் அத்யவசியமானவை என்பனவே யல்லவா? இப்பொழுது மற்றொன்று நாம் அறியவேண்டும்: அதற்குமுன் சிலவற்றைக் கவனிப்போம்.

நம் உடம்பு ஏன் எப்பொழுதும் உஷ்ணமாக இருக்கிறது தெரியுமா? உடம்பு சில்லிட்டு விட்டால் நமக்கென்ன எண்ணம் ஏற்படுகிறது? இவற்றிற்குப் பதில் சொல்லுங்கள். நமது உடம்பு எப்பொழுதும் கத கத வென்று உஷ்ணமாகவே இருக்கிறது. அதன்இயற்கைச் சூடு குறைந்து சில்லிட்டுமானால், அதில் உயிரில்லை என்று நாம் அறிகிறோம். செத்துப்போன மனிதனுடைய சரீரத்தைத்தொட்டால்அல்லித்தண்டுபோலச் சில்லிட்டு இருக்கும். இதனால் நமது உயிர் நிலைத்திருப்பதற்கு உஷ்ணம் இருக்கவேண்டும் என்றேற்படுகிறது. இந்த உஷ்ணம் எப்படி ஏற்படுகிறது? நாம் காற்றிலிருந்து உட்கொள்ளும் பிராணவாயு மூக்கின் வழியாக ஈரலுள் சென்று, அங்குவரும் ரத்தத்துடன்சென்று, உடல் முழுவதும் பரவி, அதனுள் உள்ளபதார்த்தங்களுடன் ஸம்யோகம் அடைகின்றது. அவ்வாறு ஸம்யோகமாய் இரண்டறக் கலக்கும்பொழுது, உஷ்ணமுண்டாவதனால்தான், நமது உடம்பு உஷ்ணமாக விளங்குவது. இரண்டுபொருள்கள் ஸம்யோகமாகும்போது உஷ்ணமுண்டாகு மென்பது இயற்கை தர்மம். இதை நாம் எளிதில் காணலாம். கொஞ்சம் புதிதாய்க்கொண்டுவந்த சுண்ணாம்புக்கல்லின்மேல்ஜலத்தைவிட்டால், அந்த ஜலம் வரவர உஷ்ணமதிகமாய்க் கடைசியாக நமது கையால் தொடமுடியாத அளவு உஷ்ணம்பெறுகிறது. ஜலத்தை மேல்விடுவதன் முன் சுண்ணாம்புக்கல்லும் சில்லென்றிருந்தது. நாம் அதன்மேல் விடுவதற்காக எடுத்த நீரும் சில்லென்றுதான் இருந்தது. அப்படியிருக்க நாம்

அந்தச் சில்லென்றிருந்த சுண்ணும்புக்கல்லின் மேல் குளிர்ந்த நீரைவிட்டால் உஷ்ணம் ஏன் ஏற்படவேண்டுமென்று நீங்கள் கேட்கலாம். அதற்கு நீருடன் சுண்ணும்பு ஸம்யோகமாவதே காரணம். இம்மாதிரியே விறகு எரியும்போது விறகிலுள்ள கரிபதார்த்தங்கள் காற்றிலுள்ள பிராணவாயுவுடன் கூடுவதனால் அளவுகடந்த உஷ்ணம் ஒரே இடத்தில் ஏற்படுவதால் நாம் எரியும் தணலைப்பார்க்கிறோம். நமது உடலில் உள்ள கரிபதார்த்தங்களும் பிராணவாயுவுடன் இவ்விதமே ஸம்யோகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவ்வாறு நடக்கும் ஸம்யோகதர்மம் உடல் முழுதும் பரவியிருப்பதால், நாம், விளக்கில் தீபமெரிவதைப் போலச் சுடரைக்காணுமல், தேகமுழுதும் உஷ்ணம்பரவி விளங்குவதைக் காண்கிறோம். இந்த உஷ்ணம் குறைந்தால் என்னவென்று நாம் அறிகிறோம் தெரியுமா? நம் உடலுள் நடக்கும் ஸம்யோகதர்மம் ஸரிவர நடைபெறுவதில்லை என்றுடனே உணர்கிறோம். மேலும் அவ்வுடலானது சில்லிட்டு விட்டால் அதில் இந்த ஸம்யோக தர்மமில்லாமையால் உஷ்ணமேற்படாதிருத்தலும் உமக்கு இப்பொழுது தெரியும். இதனால்தான் உடலிலிருந்து உயிர்நீங்கியதும் அவ்வுடல் சில்லிட்டு விளங்குகிறதென்பது உமக்கு விளங்கும்.

இதேவிதம்தான் தாவரங்களுள்ளும் கரியமில வாயு பிரவேசித்து, அதன் சேர்க்கைப் பொருள்கள் வெய்யலிருக்கும்போது தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு, தாவரங்களுக்கு வேண்டிய கரியைத் தர, அக்கரி அத்தாவர பதார்த்தங்களுடன் ஸம்யோகப்பட்டு இரண்டறக் கலக்கிறது. இதனால் உஷ்ணமுண்டாகாமலிருக்கவில்லை. ஆனால் இந்த உஷ்ணம் நம்மால் ஸ்பரிசிக்க முடியவில்லையே என்று நாம் கேட்கலாம் அல்லவா? தாவரங்களின் பெருஞ்சரீரத்தில் பரவுவதாலும், அவ்வுஷ்ணம் நமது சரீர உஷ்ணத்திற்குக் குறைவுபட விளங்குவதாலும், சில்லிட்டு இருப்பதுபோல் தோன்றுகிறது. இப்பொழுது ஒரு ஸந்தேஹம் உமக்குத் தோன்றலாம். பகல் வேளையில் சூரியவெளிச்சத்தில்தான் தாவரங்கள் கரியமிலவாயுவின் சேர்க்கைப் பொருள்களைப் பிரித்துத் தமக்கு வேண்டிய கரியை உட்கொள்கிறது; ஆனால் இராக்காலங்களில் அவற்றிற்குக் காற்றில்லாமல் எப்படிப் பிழைக்கமுடியுமென்று நீங்கள் வினவலாம். அதுஸரியான கேள்விதான். இரவில் தாவரங்கள் நம்மைப் போலவே காற்றிலுள்ள பிராணவாயுவை உட்கொண்டு கரியமிலவாயுவை வெளியிடும். இதனால்தான் நமது பெரியோர்கள் இரவில் மரத்தடியில் படுக்கக்கூடாதென்ன ஆணையிட்டிருக்கிறார்கள் போலும்! மூத்தோர் சொல்வார்த்தை யமிர்தம் என்பதுண்மையே யன்றோ? தாவரங்கள் தாங்கள் உட்கொண்ட கரியைத் தமது வளர்ச்சியின் நிமித்தம் எடுத்துக்கொள்ளும் பொழுது, அவ்வாறு உட்கொண்ட கரி அளவுக்கதிகப்படுவதால் மிகுந்துவிடும். இக்கரி தாவரங்களிலேயே இருப்பது அவற்றின் வளர்ச்சிக்குக் கெடுதி செய்யும். ஆகையால் கருணைக்கடலாகிய கடவுள், நமது அன்பின் பெருக்கால் தாவரங்கள் இரவில் ஸாதாரணக்காற்றை உட்கொள்ளும்படி செய்திருக்கிறார். இக்காற்றிலுள்ள பிராணவாயு தாவரங்களில் எஞ்சிநிற்கும் கரியுடன் கலந்து கரியமிலவாயுவாக ஸம்யோக தர்மத்தில் மாற்றப்பட்டு, அவைகளால் வெளியிடப்படுகின்றது. மேலும் இவ்வாறு ஸம்யோகம் நடப்பதால் தாவரங்களின் உஷ்ணம் குறைவுபடாது இரவில் காக்கப்படுகின்றது என்பதை நாம் அறியவேண்டும். இத்தகைய உஷ்ணம் விளங்கும்வரை தாவரங்கள் பிழைத்துத் தழைத்து விளங்கும்; அந்த உஷ்ணம் குறைவுபட்டால் தாவரங்களும் உயிர்குன்றி விளங்கும்; இந்த உஷ்ண முற்றும் அறும்போது தாவரங்கள் உயிரற்றுப் பட்டுவிடும்.

மேற்சொன்னவாறு தாவரங்கள் வளர்ச்சி பெறுவதற்கு அவற்றின் அங்கங்களே உதவிசெய்வன. அவை எவ்வாறு உதவிசெய்கின்றன, அவ்விதம் உதவிசெய்ய அவற்றின் அமைப்பென்ன என்பவற்றைப்பற்றி இனி நாம் கவனிக்கவேண்டும். அவற்றைக் கவனிக்கக் கவனிக்க இயற்கையின் பெருமை வெளியாகும். அவ்வாறு இயற்கையைப் பொலிவித்த,

"தனக்குவமையில்லாதான் தாள் சேர்ந்தார்க்
மனக்கவலை மாற்றலரிது" [கல்லாம்

என்ற அறிவும் அப்போதே விளங்கும்!



# இந்திய பூர்வ அரசியல்

## ANCIENT HINDU POLITY

### அமைச்சர்களின் சபை

[ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள், எம். ஏ.]

இராஜ்ய பரிபாலனத்துக்குரிய முக்கியமான காரியங்கள் அமைச்சர்களின் சபையில் ஆலோசிக்கப்பட்ட பின்பே தொடங்கப்பட்டன வென்பதற்கு எண்ணிறந்த சாக்ஷியங்கள் புராண இதிகாசங்களிலும் இராஜ தந்திர சாஸ்திரங்களிலும் காணப்படுகின்றன. ஸ்ரீராமபிரானுக்கு முடிசூட்டக் கருதிய தசரதர் அமைச்சர்களது சபை கூட்டி அவர்களது அபிப்பிராயத்தை அறிந்து கொண்டார். ஸ்ரீராமபிரானுடன் போர்புரியத் தொடங்குமுன் இராவணனும், பாண்டவருடன் போர்புரியத் தொடங்குமுன் துரியோதனனும் அமைச்சர்களது சபைகூட்டி ஆலோசித்தார்களென்று தெரியவருகிறது. பாண்டவர்களுக்கு இராஜ்யத்தைத் திருப்பிக் கொடுக்காமலிருக்கும் மார்க்கத்தைத் தேட, அவர்களுடைய அக்ஞாத வாசத்தின் இறுதியிலும் விராடராஜனது ஆனிரையைக்கவரப் புறப்படுமுன்னும், நிறைமீட்கவந்த அர்ச்சுனனுகிய பேடியுடன் போர்புரியத் தொடங்கு முன்னும் துரியோதனன் அமைச்சர்களது சபை கூட்டி ஆலோசனை செய்தானென்றும் மகாபாரதத்திலிருந்து தெரியவருகிறது. மேற்கூறிய சாக்ஷியங்கள் இராஜ்ய பரிபாலனத்துக்குரிய முக்கியமான விஷயங்களைப்பற்றி அரசன் அமைச்சர்களது சபையில் ஆலோசனை செய்தானென்று விளக்குகின்றன.

அமைச்சர்களின் சபையே அரசனது நியாய சபையாக உபயோகிக்கப்பட்டு வந்ததென்று தெரியவருகிறது. இதைக் குறித்து சுக்கிர நீதியில் பின் வருமாறு கூறப்பட்டிருக்கிறது:—

"அரசன் கோபத்தையும் பொருளாசையையும் தன்னிடமிருந்து விலக்கிக் கொண்டு, பிரதான நியாயாதிபதி, அமைச்சர்கள், பிராமணர்கள், குருஇவர்களை உதவியாக வைத்துக்கொண்டு, தர்ம சாஸ்திரங்களிற் கூறியுள்ள விதிகளுக் கேற்க வியவகாரங்களைக்கவனமாய்த்தீர்க்கவேண்டும். அவன் தனியாக இரு கக்ஷிக்காரர்களுக்குள்ள வழக்கைத் தீர்க்கவாவது அவர்களிடம் வாக்குமூலம் வாங்கவாவது கூடாது. விவேகியான அரசனுவது அவனது சபையாராவது வியவகாரங்களை இரகசியமாய்த் தீர்மானிக்கக்கூடாது. * * * சபையாரது உதவியின்றி அரசன் செய்யும் காரியங்கள், அவனை நரகத்துக்கும் நாசத்துக்கும் கொண்டுபோய்ச் சேர்ப்பது மன்றி, அவனது சத்துருவின் சேனையின் பயத்தை விலக்கி, அவனது பிராணனுக்கும் செல்வத்துக்கும் ஹானியை உண்டுபண்ணும்."

இவ்வாறு இராஜ்யபரிபாலனத்துக்குரிய முக்கிய காரியங்களைப்பற்றி ஆலோசிப்பதற்கும், நியாயசபையாக விருந்து நீதி செலுத்துவதற்கும் உபயோகிக்கப்பட்ட அமைச்சர்களின் சபைக்கும் அரசனுக்கும் உள்ள சம்பந்தம் எவ்விதச் சட்டத்தினுலும் நிஷ்கரிஷை செய்யப்படவில்லை. வெவ்வேறு அரசர்கள் வெவ்வேறு விதமாகத் தங்கள் சபையை மதித்து வந்தனர். அன்றியும், சில சபைகளில் பெரும்பான்மையோர் க்ஷத்திரியர்களாகவும் சில சபைகளில் பெரும்பான்மையோர் பிராமணர்களாகவும் இருந்தனர். எல்லாம் அரசனது குணத்தைப் பொறுத்திருந்தன. துரியோதனனது சபையில் பிரதான மந்திரிகளாயிருந்த பீஷ்மர் துரோணர் விதுரர் மூவரில் பீஷ்மரும் விதுரரும் இராஜவம்சத்தைச் சேர்ந்தவர்கள். துரோணர் க்ஷத்திரிய தர்மத்தைக் கைக்கொண்ட பிராமணர். திருதிராஷ்டிர மகாராஜர்வும் தருமபுத்திரரும் மந்திரிகளையாவது பிராமணர்களையாவது சபை கூட்டி அவ்விஷயத்தைப்பற்றியும் ஆலோசித்ததே யில்லை. சூதாட்டத்தில் தனது இராஜ்ய முழுவதையும் பந்தயமாகக் கட்டுமுன், தருமர் யாருடனும் ஆலோசனை செய்யவேயில்லை. துரியோதனனேவெனில், தனக்கு இஷ்டப்பட்டபொழுதும் தனக்கு லாபகரமா யிருக்கும்பொழுதும் மட்டுமே தனது அமைச்சர்களைக்கூட்டி அவர்களுடன் ஆலோசனை செய்கிறுன். பொருள்வேண்டுங் காலத்தில் மட்டும் அவன் ஆசார்யர்களை அழைத்து அவர்களுடன் ஆலோசிக்கிறுனே யல்லது வேறெப்பொழுதும் அவர்களைச் சபைக்கு அழைப்பதேயில்லை. மகாபாரத யுத்தத்துக்கு முன் இருதிறத்தாரும் தனித்தனி சபைகூடி ஆலோசித்த காலையில், அச்சபைகளிலுள்ள மன்னர்கள் ஆங்கிருந்த குருக்கள்மார்களை புத்திமதி கேட்கவேயில்லை; அன்றி

யும், துரியோதனன் இஷ்டமின்றிச் சபைக்கு வந்ததுமன்றி, சபையோர் போர்புரிவது உசிதமல்லவென்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்த பின்னும் போர்புரிய வேண்டுமென்று தான் செய்த தீர்மானத்தை மாற்றவில்லை. இவ்விஷயங்களைக் கவனிக்குங்கால், அரசனுக்கும் அமைச்சர் சபைக்குமுள்ள சம்பந்தம் அரசனுடைய குணத்தைப் பொறுத்ததாயிருந்ததென்றெண்ண வேண்டியிருக்கிறது.

மகாபாரதத்தில் ஆதிபர்வத்தில் குலகுருவானவர் வேதசாஸ்திரங்களில் மட்டுமன்றி தண்டநீதி சாஸ்திரத்திலும் நிபுணராயிருப்பதுடன், தனது ஸ்தானத்தினால் மிகுந்த செல்வாக்குடையவராயு மிருப்பாராதலால் அவரது கட்டளைகளின்படியே அரசன் தவறாது நடந்து கொள்ளவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. குலகுருவானவர் தமக்கு விதித்துள்ளபடி தன்னடக்கமுள்ளவராயும் அதிகார ஆசையற்றவராயும் எப்பொழுதும் இருந்துவிட்டால், அரசனுக்கும் நாட்டிற்கும் யாதொரு கேடும் சம்பவிக்காது என்பது திண்ணம். ஆனால் உலகத்தில் யார்தாம் தமக்கு விதிக்கப்பட்டுள்ள விதிப்படி தவறாது நடக்கின்றனர்? குருவானவர் நெறி வழுவிய கதையொன்று ஆதிபர்வத்திலேயே ஓர் எச்சரிக்கையாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இராஜகிருகத்தைப் பிரதான பட்டணமாக வைத்துக் கொண்டு அரசுபுரிந்துவந்த மகத தேசத்து அரசனொருவன் இராஜ்ய பரிபாலனத்துக்கு முற்றிலும் தனது அமைச்சர்களையே நம்பியிருந்ததாகவும், அவனது அமைச்சன் மகாகார்ணியென்றவன் இராஜ்யத்துக்கு ஸர்வாதிகாரியாகவாகி, தனக்கு உண்டான அதிகாரச் செருக்கினால் பட்டத்தைக் கைப்பற்ற முயன்றதாகவும், ஏதோ விதிவசத்தினால் மட்டும் தனது காரியத்தைச் சாதித்துக் கொள்ள அவனுக்கு முடியாமற் போனதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

மேற்கூறிய அரசனைப்போலவே எல்லர் அரசர்களும் எப்போதும் பிராமணர்களுக்கு அடங்கி நடக்கவில்லையென்பது விராடபர்வத்தில் துரோணர் அர்ச்சுனனது பராக்கிரமத்தையெடுத்துரைத்து அவனுடன் போர்புரியாது ஹஸ்தினபுரத்துக்குப் போவதே உசிதமென உரைத்தபோது துரியோதனன் சொன்ன பின்வரும் மறுமொழியிலிருந்து விளங்குகிறது. "போதகர்கள் அறிஞர்களென்பதும் சற்குணமுள்ளவர்களென்பதும் சகலஜீவராசிகளிடத்திலும் மிகுந்த அன்புவாய்ந்தவர்களென்பதும் உண்மையே. ஆனால் ஆபத்துக் காலங்களில் அவர்களை யோசனை கேட்கக் கூடாது. இனிய உபசரிப்புகள் செய்ய வேண்டிய அழகிய ஸ்தலங்களிலும் சபைகளிலும்தான் அவர்களிருப்பது தகுதி."

அமைச்சர்களின் சபையைப்பற்றிப் பின்வரும் விஷயங்கள் அர்த்தசாஸ்திரத்திலிருந்து வெளியாகின்றன:—

இராஜ்ய பரிபலனத்துக்குரிய சகல காரியங்களும், நன்கு ஏற்படுத்தப்பெற்ற சபையில் ஆலோசிக்கப்பட்ட பின்பே தொடங்கப்பட வேண்டும். சபையில் ஆலோசிக்கப்படும் சங்கதி இன்னதென்று வெளியே தெரியக் கூடாது. அங்கு ஆலோசனைகள் செய்யப்படுங்கால் பக்ஷிகளும் சபையைப் பார்க்காதபடி ஏற்பாடு செய்யவேண்டும். ஏனெனில், இரகசியமாய் நடந்த யோசனைகளைக் கிளிகளும் மைனாப்பறவைகளும், நாய்களும், மற்றுஞ்சில இழிவான ஜந்துக்களும் வெளிப்படுத்தியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் ஆலோசனைகள் வெளிப்படா வண்ணம் தகுந்த ஏற்பாடுகள் செய்துகொள்ளாமல் அரசன் சபையில் ஆலோசனை செய்யத்தொடங்கக்கூடாது. இரகசியமாய்ச் செய்த ஆலோசனைகள் வெளியேறினவா வென்பதைப் பிறவரசர்கள் அவர்களின் தூதர்கள், மந்திரிகள், இவர்களின் முகத்திலும் நடத்தையிலும் ஏற்படும் மாறுபாடுகளைக் கவனித்து அறிந்துகொள்ளலாம்.

சபையில் ஆலோசிக்கப்பெற்ற ஓர் காரியத்தைத் தொடங்குங்காலம் நெருங்கும் வரையில் சபையில் ஆலோசிக்கப்பெற்ற சங்கதி இன்னதென்று வெளியிடாமலிருப்பதுமன்றி, அச்சங்கதியை ஆலோசித்த உத்தியோகஸ்தர்களைக் காக்கும்படி சிலரை நியமிக்கவும் வேண்டும். அஜாக்கிரதை, கட்குடி, மயக்கம், நித்திரையிற் பேசுதல், காமம் முதலிய கெட்ட பழக்கங்கள் அமைச்சர்களிடமிருப்பதே இரகசிய ஆலோசனைகள் வெளியாவதற்குக் காரணமாகிறது.



# நமது சிறு கதை

## OUR SHORT STORY

(265-ம் பக்கத் தொடர்ச்சி.)

(ஸ்ரீமதி சீதம்மாள்.)

### XI

இதைச் சொல்லிக்கொண்டு வரும்பொழுது ஸோமனும் மித்ரியானும், தாங்கள் அன்னமிட்டு வஸ்திரமளித்தது யாருக்கென்றும், தங்களுடன் வசிப்பவன் இன்னானென்றும் அறிந்ததும், பக்தி பூர்வகமான பயத்தோடும், சந்தோஷத்தோடும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள். அந்தத் தேவன் மறுபடியும் சொல்ல ஆரம்பித்தான்: 'நான் வஸ்திரம் முதலியன ஒன்றுமில்லாமல் வயலில் தனிமையாக விருந்தேன். மானிடனாகுமுன், பசி குளிர் முதலியவைகளை நான் அனுபவித்ததில்லை. இப்பொழுதோ! குளிரால் தேக முழுவதும் விறைத்து, இன்னது செய்வதென்று தெரியாமல் தயங்கிக் கொண்டிருந்தேன். வயலின் பக்கத்திலிருக்கிறோமென்பதை யறிந்து சுற்றிப்பார்த்ததும், அங்கு ஓராலயம் கட்டப்பட்டிருப்பதைப் பார்த்தேன். அங்குபோய்த் தங்கியிருக்கலாமென்று எண்ணி அவ்விடம் போனதும் அவ்வாலயம் பூட்டப்பட்டிருப்பதைக் கண்டேன். உள்ளே போக முடியாவிட்டாலும் இவ்வாலயத்தின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தால் குளிர்ந்த காற்று வீசுவது கொஞ்சம் குறையுமென்று எண்ணி, அவ்விடமே உட்கார்ந்தேன். மாலைப்பொழுதானதும், குளிரினால் தேகமெல்லாம் வலியுண்டாகி, பசியும் அதிகரித்தது. இச்சமயத்தில் தெருப்பக்கம் ஓர் மனிதன் வரும் காலடி சப்தம் கேட்டது. அம்மனிதன் ஒரு ஜோடி ஜோடுகளைக் கையில் தூக்கிக் கொண்டு, தனக்குத்தானே பேசிக்கொண்டு போவதைப் பார்த்தேன். நான் மானிட தேகமெடுத்தபிறகு முதல் தடவை இப்பொழுது தான் அநித்தியமான மனிதனுடைய முகத்தைப் பார்த்தேன். அவன் முகம் எனக்குப் பார்க்கப் பயங்கரமாயிருந்ததனால், என் முகத்தைத் திருப்பிக்கொண்டேன். அம்மனிதன் குளிர்காலத்தில் எவ்விதமாய் உடுப்புப் போட்டுக்கொள்ளுகிறது, மனைவி மக்களுக்கு எவ்விதம் ஆகாரம் சம்பாதிப்பது என்று தனக்குத்தானே பேசிக்கொண்டு போவதைக் கேட்டேன்.

"இதைக் கேட்டதும் நான் எண்ணலானேன். என்னவெனில்: நானோ குளிரினாலும், பசியினாலும், வருத்தப்பட்டுக்கொண்டு இறக்குந்தருவாயி லிருக்கிறேன். இங்கே ஒரு மனிதன் தான் எப்படி உடை தரித்துக்கொள்ளுகிறது; குடும்ப சம்ரக்ஷணை எப்படி நடத்துகிறது என்று எண்ணமிட்டுக்கொண்டு போகிறான்; அவன் எனக்கு ஒத்தாசை செய்ய மாட்டான்போ லிருக்கிறது என்று எண்ணினேன். அம்மனிதன் என்னைப்பார்த்து முகத்தைக் கடுத்துக்கொண்டு போனபொழுது, எனக்கு அவன் முன்னிலும் அதிக பயங்கரமாகத் தோன்றினான். அவன் என்னைக்கடந்து அடுத்த பக்கம் போனதும் நான் நிராசையானேன்; ஆனால் அக்ஷணமே அவன் திரும்பிவரும் சப்தத்தைக் கேட்டு நான் நிமிர்ந்து பார்த்தேன். அதே மனிதன்தானென்று நன்றாய் அறிந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில், முன்னால் அவன் முகத்தில், துவேஷம், வெடுவெடுப்பு முதலிய ராக்ஷஸ குணங்கள் தோன்றிக்கொண்டிருந்தன. இப்பொழுது அவன் முகம் பிரசன்னமாக தெய்வீக குணமான அன்போடு இருந்தது. நான் அவனிடத்தில் கடவுள் இருக்கிறாரென்பதை நன்றாக அறிந்தேன். அவன் என்னிடத்திற்கு வந்து, எனக்கு வஸ்திரம் முதலியவை யளித்துத் தன்னோடு வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போனான். அவ்வீட்டிற்குட் பிரவேசித்ததும் ஒரு ஸ்த்ரீ எங்களைப் பார்த்துப் பேசவாரம்பித்தாள். அவள் சொன்ன சொற்களில் கொஞ்சமேனும் தெய்வகுணமான அன்பு, இரக்கம், முதலியன வில்லாமல் இராக்ஷஸ குணமான த்வேஷமே யிருந்தது. அவள் சொன்ன சொற்களி லிருந்த த்வேஷத்தை என்னால் சகித்தற்கரிதா யிருந்தது. அவள் என்னை அக்குளிரில் வெளியே துரத்திவிடுவதற்கு இஷ்டப்பட்டாள். அவள் அப்படிச் செய்திருந்தால் அக்ஷணமே இறந்து போய்விடுவா னென்பது எனக்குத் தெரியும்.

"உடனே அவளுடைய புருஷன் கடவுளைப் பற்றி அவளிடம் பேசினதும், அக்கணமே அவளுடைய மனம் வேறுபட்டு, மிகவும் பரிவோடு எனக்கு உண்டியளித்தாள். அப்

பொழுது அவளுடைய முகத்தில் த்வேஷம் கிஞ்சித்து மில்லாமல், தெய்வீகமான அன்பு நிரம்பியிருந்ததனால் அவளிடத்தில் கடவுள் குடிகொண்டிருக்கிறாற்போலத் தோன்றிற்று. தோன்றினது மாத்திரமல்ல. ஈச்வரனே இருப்பதைப் பார்த்தேன். அப்பொழுது எனக்குக் கடவுள் அறிந்துவரும்படி ஆனை யிட்ட தத்துவங்களில் முதலாவதான 'மனிதர்களுடைய ஆத்மாவில் என்ன வசிக்கிறது?' என்ற தத்வம் ஞாபகத்திற்கு வந்தது. உடனே நான் மனிதர்களிடத்தில் 'அன்பு என்பது வசித்துக்கொண்டிருக்கிறது: அதாவது மனிதனுடைய ஆத்மா அன்பினுருவே' என்னும் முதலாவது தத்வத்தை அறிந்து கொண்டேன். உடனே இதை யறிவதற்குக் கடவுள் வழி காண்பித்ததற்காகச் சந்தோஷத்தினால். முகமலர்ச்சி யடைந்தேன். பிறகு அவனோடு ஒரு வருஷங் கழித்தேன். அப்பொழுது ஒரு தினம் மனிதன் ஒருவன் வந்து, ஒருவருஷம் தையல் விடாமலும், வளையாமலும், மிகவும் நாகரீகமாக இருக்கக்கூடிய ஜோடு தைக்க வேண்டுமென்று உத்தரவுசெய்தான். நான் அவனைப் பார்த்தவளவில் அவன் தோளின் பின்புறமாக என்னுடைய தோழனான ஓர் காலதூதன் நிற்பதைப் பார்த்தேன். என்னைத் தவிர வேறொருவரும் அத்தேவனைப் பார்க்கவில்லை. ஆனால் நான் மாத்திரம் அக்கனவானின் ஆத்மாவை அஸ்தமிக்குமுன் அவன் எடுத்துக்கொண்டு போய்விடுவானென்பதை யறிந்தேன். அதனால் என் மனதிற்குள் இம்மனிதனே அஸ்தமிக்குமுன் மரணமடையப்போகிறான்; இதை யறியாமல் ஒரு வருஷத்திற்கு முஸ்திப்பு செய்து கொள்ளுகிறானே என்று நினைத்தேன். இதை நினைத்ததும், கடவுள் அறிந்துவரும்படி ஆஞ்ஞாபித்த இரண்டாவது தத்வமான 'எது மனிதனுக்குக் கொடுபடவில்லை?' என்பது ஞாபகத்திற்கு வர, உடனே 'மனிதனுடைய அறிவுசிற்றறிவு!' என்பதை யுணர்ந்தேன். இரண்டாவது தத்வத்தை யறிந்ததற்காக மற்றொரு தடவை களிகூர்ந்தேன். ஆனால் நான் எல்லாவற்றையும் அறிந்துவிடவில்லை. மூன்றாவது தத்வமான 'மனிதர்கள் எதனால் வசிக்கிறார்கள்?' என்பது பாக்கியிருந்தது. அதை யறிவதற்காகக் காத்துக்கொண்டு உங்களோடு வசித்துக்கொண்டிருந்தேன். ஆறாவது வருஷத்தில் அந்த ஸ்த்ரீயும் இரட்டையர்களும் வந்தார்கள். அப்பெண்களைப் பார்த்ததும் அவர்களை முன்னாடிப் பார்த்தது ஞாபகத்திற்கு வந்தது. அவர்கள் எப்படி ஜீவித்திருக்கிறார்களென்று அவர்களுடைய கதையைக் கேட்டதும் நான் அக்குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக அவர்களுடைய தாயார் தன் ஜீவனை விட்டுவைத்திருக்கும்படி இரந்து வேண்டிக்கொண்டாள். அவள் தாய் அல்லது தகப்பனில்லாமல் குழந்தைகள் ஜீவித்திருக்க முடியாதென்று சொன்னதை நானும் நம்பினேன்! ஆனால் ஒரு அன்னிய ஸ்திரீ அவர்களைப் போஷித்துக் காப்பாற்றி வளர்க்கிறாள் அல்லவா என்று எண்ணினேன். மேலும் அவளுடைய சொந்தக் குழந்தையா யில்லாதிருந்தும் அந்த ஸ்திரீ அவர்களின்மேல் கொண்ட அளவுகடந்த அன்பையும், பக்ஷத்தையும், அவர்களுக்காகக் கண்ணீர் விட்டதையும் பார்த்தபொழுது, அவளிடத்திலும் கடவுளிருக்கிறதைப் பார்த்தேன். உடனே 'மனிதர்கள் எதனால் ஜீவிக்கிறார்கள்?' என்பதன் அர்த்தத்தை அதாவது 'பரஸ்பர அன்பினாலேயே உலகம் நடைபெறுகிறது' என்பதை யுணர்ந்தேன். கடவுள் அறிந்து வரும்படி ஆஞ்ஞாபித்த கடைசி தத்வமான மூன்றாவது தத்வத்தையும் நான் அறிந்துவிட்டேன். அதனால் என்னுடைய சாபம் விமோசனமானது என்று சந்தோஷித்தனாய் இப்பொழுது முகமலர்ச்சி யடைந்தேன்" என்று கூறிக் கொண்டிருக்கும்பொழுதே அப்பொழுதிருக்கும் அவனுடைய மானிடதேகம் மறைந்துபோய், தெய்வ சொரூபமாகப் பார்ப்பவர்கள் கண்கூசும்படி ஜ்வலித்தான்.

XII

அப்போதவன் குரலோ, வரவர தாட்டியாக, கிட்ட இருந்து பேசுவதுபோலில்லாமல் அசரீரி வாக்குப்போல இருந்தது. பின்னும் அத்தேவன் சொல்லலுற்றான்:—

'எல்லா மனிதர்களும், தமக்குத் தாமே எடுத்துக்கொள்ளும் கவலையினால் ஜீவிக்கவில்லை; ஆனால் பரஸ்பர அன்பினாலேயே ஜீவிக்கிறார்களென்பதை யறிந்துகொண்டேன். அத்தாயாருக்குத் தன் குழந்தைகள் ஜீவிக்க என்ன தேவையோ அதை அவளால் அறியக்கூடவில்லை.' அக்கனவானால் தனக்கு என்னதேவையோ அதை அறியக்கூடவில்லை. மாலையில், தான் டம்பமாகத் தரித்துக் கொள்ள ஜோடுவேண்டுமோ, அல்லது தன்னைப் பிரேதாலங்காரம் செய்யப் பாதரக்ஷைவேண்டுமோ, என்பதை யறிய முடியாததுபோல, எல்லா மனிதர்களுக்குமே தமக்கு என்ன தேவையோ அவற்றை யறியும்படியான அறிவைக் கடவுள் அவர்களுக் களிக்கவில்லை. நான் மானிடதேகத்துடனிருந்தபொழுதுஜீவித்திருந்தது என்னுடைய கவலையினாலல்ல; அச்சமயம் வழியேபோகிற ஒருவனுடைய மனதில் அன்பு, கருணை உண்டாய் என்மேல் அவனும், அவனுடைய மனைவியும் இரக்கம் கூர்ந்து அன்பு பாராட்டினதினால்தான். தாய் தகப்பனற்ற அவ்வனாதைக் குழந்தைகள் வளர்ந்தது அவர்கள் தாயின் கவலையினாலல்ல, ஆனால் அக்குழந்தைகளுக்கு ஓர்வித பாந்தவ்யமுமில்லாத, ஒரு அன்னிய ஸ்திரீயினுடைய மனதில் அன்பு, ஆசை, அபிமானம், கருணை முதலியவைகள் இருந்ததனால்தான் 'கடவுள் மனிதர்களுக்கு ஜீவனையும், ஆசையையும் அவர்கள் ஜீவித்திருப்பதற்காக அளித்திருக்கிறாரென்று நான் முன்னால் எண்ணியிருந்தேன். ஆனால் இப்பொழுது அதைவிட அதிகம் அறிந்துகொண்டேன். 'மனிதர்கள் தம் இஷ்டம்போல் ப்ரத்யேகமாய் வசிப்பதற்குக் கடவுள் இஷ்டப்படவில்லை. அதனால்தான் அவரவர்களுக்கு என்னென்ன வேண்டியது என்று அறிய சக்தியை மனிதர்களுக்குக் கடவுள் அளிக்கவில்லை. ஆனால் அவர் இஷ்டப்படுகிற தென்னவென்றால் மனிதர்களெல்லோரும் சேர்ந்து ஒற்றுமையாக வாழவேண்டுமென்பதே. அதனால்தான் பொது நலத்திற்காக எதெது தேவையோ அதை மாத்திரம் அறியப்படுத்துகிறார். 'மனிதர்கள் தாங்கள் தாங்கள் எடுத்துக்கொள்ளும் கவலையினால் ஜீவித்திருக்கிறோமென்று எண்ணினாலும், உண்மையில் அவர்கள் ஜீவித்திருப்பது அன்பினால்தான் என்பதை இப்பொழுது நன்றாயறிந்துகொண்டேன். யாரிடத்தில் அன்பும், பரோபகார சிந்தையும் இருக்கிறதோ, அவர்களிடத்தில் ஈச்வரன் குடிகொண்டிருக்கிறார். ஈச்வரன் அன்பேயாதலால் அவர்களிடத்திலேயே வாசமாக விருக்கிறார்.

இவ்வாறு சொல்லி விட்டு அத்தேவன் ஈச்வர ஸ்துதி செய்யலுற்றான். அந்தக் குரலினால் அவ்வீடு முழுவதும் கிடுகிடென்று ஆடிற்று. அவ்வீட்டின் மேற்கூரை திறந்து, கீழேயிருந்து அக்னிபோன்ற ஓர் ஜோதி விண்ணோக்கிச் சென்று மறைந்தது. ஆச்சர்யத்தினா லுண்டான பிரமை தெளிந்து ஸோமன் பார்த்தபொழுது அவ்வீடு ஒரு மாறுதலுமில்லாமல் முன்போலவே யிருந்தது; ஆனால் அவனுடைய குடும்பத்தாரைத் தவிர வேறு ஒருவரும் அவ்விடமில்லை.

முற்றிற்று.

குறிப்பு.—இதுவும், இதற்குமுன் வெளிவந்த மனிததர்மம் என்னும் சிறு கதையும் **டால்ஸ்டாய்** என்னும் பேர்பெற்ற ரஷ்ய கிரந்த கர்த்தர் இயற்றிய கதையின் மொழிபெயர்ப்பாகும்: இப்போதெழுதியது ஓர் பெண்பாலால் எழுதப்பட்டமையால் மீண்டும் அதைப் பிரசுரித்தனம். அது பெண் கல்வியை ஆதரிப்பதன் பொருட்டேயாம். (ப-ர்.)



# புத்த விஜயம்

(269-ம் பக்கத் தொடர்ச்சி.)

நான்காம் அங்கம்

முதற்காட்சி

இடம் : உபவனத்தில் ஓர் தடாகம்

காலம் : பிற்பகல்

பாத்திரங்கள் : யசோதரை, இராகுலன், பாங்கியர்.

(யசோதரையும் இராகுலனும் வருகிறார்கள்.)

ரா.—அம்மா! இதோ பாருங்கள். தடாகத்தில் அன்னங்கள் விளையாடுகின்றன. தாமரைப்பூக்கள் வெள்ளையும் சிவப்பும் ஓரங்களிலும் மத்தியிலும் அழகாயடர்ந் திருக்கின்றன. நாரைகள் பயிலுவது எனக்கு விநோதம் உண்டாக்குகிறது.

யசோ.—அப்பா! இராகுலா! ஆமாம், அவைகள் நன்றாகவே யிருக்கும். நீ விளையாடிக்கொண்டிரு.

ரா.—ஆ! ஆ! அம்மா! சீக்கிரம் வாருங்கள். மச்சங்கள் பளபளப்பாயும் பலவர்ணங்களையுடையதாயுமிருக்கின்றன. அவைகள் ஓடி விளையாடுவது எவ்வளவு ஆனந்தம்!

ய.—சிறு பையன் வருத்தமென்பதை யறியான்.

மேலும் இராஜபோகத்தில் வளர்ந்து வருகிறான். பாலகனுக்குத் துக்கமென்பது தெரியாது.

இரா.—நீங்கள் வரவில்லையானால் அங்கே யிருங்கள். இந்தக் காட்சியை இழந்து போகிறீர்கள். நான் மீன்களுக்கு அரிசி போடப் போகிறேன்.

ய.—விளையாடிக் கொண்டிரு. இப்பொழுதே இவனுக்கு நடந்ததை யறிவிக்க லாகாது. பாலிய முதலே துக்ககரமான நினைப்புகளும் சந்தோஷமற்ற தோற்றங்களுமே மனத்திற் பதிந்துவிடும். ஐயோ! கண்ணுக்கினிய காட்சிகள் எனது நிலைமைக்கு ஏற்றவைகளோ? பூஞ்செடிகளும் வாவியுறையும் பட்சிகளும் தென்றலும் எனக்கு அதிகமாக விரகதாபத்தை உண்டுபண்ணுகின்றன. இவைகளைக் கண்டால் தலை குனியவேண்டியதாயிருக்கிறதே. ஹா! இப்படியாய் விட்டதே!

இரா.—தாயே! ஓடி வாருங்கள். இதுதான் கடைசி. பிறகு இதைப் பார்க்கக் கிடையாது. விரைவில் நடந்து வரவேண்டும். போய் விடும்.

(பாங்கியர் வருகிறார்கள்.)

ய.—வாருங்கள்.

பாங்கி.—அன்னையே! அஸ்தினாபுரி வர்த்தகர்கள் தேசாந்தரம் போய்ப் பலவித சாமான்கள் கொண்டுவந்திருக்கிறார்களாம். தந்தத்தினாலான சித்திர வேலைகள், பித்தளை வெள்ளிப் பாத்திரங்கள், தங்க வேலைசெய்த ரவுகைகள், அந்தந்த விடங்களிலுள்ள பட்சி ஜாதிகள், இலங்கைத் தீவுசுகள் திரவியமுதலான பொக்கிஷங்களுடன் இங்கு தங்கலானார்களாம்.

ய.—இவைகளா லென்ன? நீங்கள்போய்ப் பார்த்து அதிசயமடையலாம்.

பா.—இல்லை. நமக்காக வேண்டிய பொக்கிஷமும் கொண்டுவந்திருக்கிறார்கள். நமது இளவரசர்....

ய.—என்ன! அப்படியா? சொல், சொல்.

பா.—இளவரசரான ஸித்தார்த்தரைக் கண்டார்களாம்.

ய.—எனது அந்தப்புரத்திற்கு அவர்களை வரும்படியாகச் சொல்லுங்கள். விலையுயர்ந்த வெகுமான மளிக்கிறேன். (பாங்கியர் போகிறார்கள்.)

இராகுலா! விளையாடியாய் விட்டதா? போதுமானது. திரும்புவோம் வா.

இரா.—இதோ வருகிறேன் அம்மா!

(இருவரும் போகிறார்கள்.)

நான்காம் அங்கம்
இரண்டாங் காட்சி
இடம் : அந்தப்புரம்
காலம் : முன்மாலை.
பாத்திரங்கள் : யசோதரை, திரிபுஷன், பாலுகன்.

யசோதரை திரைக்குள் இருக்கிறாள்; திரிபுஷன், பாலுகன் இருவரும் வருகிறார்கள்.

யசோதரை.—வாருங்கள், உட்காருங்கள்.

இருவரும்.—வந்தனம்.

ய.—எனது நாதனைக் கண்டீர்களா?

திரிபுஷன்.—ஆம், அவரை வணங்கியிருக்கிறோம். அவர் புத்தர்.

ய.—அப்படியா?

திரி.—மற்றைய தத்துவஞானிகளிடம் வருஷங்களாகச் சிஷ்யனாயிருந்து அவர்களுடைய போதனைகளில் திருப்திகொள்ளாமல் வனங்களில் உண்மை யாராய்ச்சியின்பொருட்டு அலைந்துகொண்டிருந்தார். பிறகு போதிவிருக்ஷத்தி னடியில் உட்கார்ந்து சமாதியி லிருந்தார். ஞானதரிசனம் பெற்றார்.

பாலுகன்.—இராஜபுத்திரி! ஸித்தார்த்தர் புத்தரான இரவில் நடந்த காட்சிகள் அநேகம். மாரனுடைய உக்கிரத்தால் எங்கும் குழப்பமும் அந்தகாரமும் நிறைந்திருந்தன. இரத்தினகிரியைச்சார்ந்த பிராந்தங்களிலுள்ள பேர்கள், அவர் புத்தராகையில் எங்கும் ஜோதிமயமா யிருந்ததும், காட்டிலுள்ள மிருகங்களெல்லாம் சமாதானத்தோடிருந்ததும், பகைத் திறமுடையோர்கள் யாவரும் நட்பாளர்களானதும், கொலைஞரும் திருடரும் கொடுந்தொழில் விட்டதும், ஜனங்கள் ஆனந்த சாகரத்தில் மூழ்கினதும், இச்செய்தியை நோக்க ஆதவன் உதித்ததுமாகிய நிமித்தங்கள் யாவும் நிகழ்ந்தனவென்று கூறுகிறார்கள்.

திரி.—பிறகு தன் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ண ஆரம்பித்தார்.

ய.—பின்னர் நடந்ததைச் சொல்லுங்கள்.

பாலு.—அநந்தரம் புத்தர் காசிநகர் சென்று அங்கே சிஷ்யரான பலரைக் கூட்டிக்கொண்டு மனிதன் தன் கருமங்களால் மோட்சத்தையாவது நரகமென்பதையாவது சிருஷ்டித்துக் கொள்ளுகிறான், கெட்டசெய்கையின் பலனும் துன்பங்களே நரகம், காமக்குரோதங்களை யடக்கினவனுக்கு நற்பதம் செய்கையிலிருக்கிறதல்லவா வென்று இவைபோன்றவைகளை ஜனங்களுக்குப் போதித்து வருகிறார்.

திரி.—பிரயாகைக்குச் சமீபமான சோலையில் ஒருநாள் அவர் திருமுக மண்டலத்தைத் தரிசித்தோம். திருவாயினின்றும் வந்த வார்த்தைகள் எங்களுக்கு அமுதமாயிருந்தன. அவருடைய போதனா சக்தியைக் கண்டு ஸ்தம்பாகாரமாய் விட்டோம். ஒருவராவது அவரிடம் அதிருப்திகொண்டவரல்லர். எல்லோரும் அவரைக் கொண்டாடுகிறார்கள். கூடிய சீக்கிரத்தில் இங்கே வருவார்.

ய.—இப்பேர்ப்பட்ட விஷயத்தை எனக்கறியப்



படுத்தினதற்காக நான் எவ்வாறு உங்களுக்கு உபகாரஞ் செய்யப்போகிறேன்?

பாலு.—போகிறோம். இவ்விடம்வர எங்களுக்கு உத்தரவளித்ததற்குப் பாத்திரவான்களானதே எங்களுக்கு வெகு சந்தோஷம். (போகிறார்கள்.)

யசோதரை, (வெளியேவந்து)—ஆட்களை விட்டுத் தேடச்சொல்லவேண்டும். அத்துடன் இச்சங்கதியும் அவரிடம்போய்ச் சேரவேண்டும். குமுதமலர் தண்ணவனைக்கண்டு விரிய ஆவலுடனிருப்பதுபோல் இராகுலன் மாதாவான அடியாள் யசோதரை எந்த நேரமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். அடியாளும் அந்தப் பரமானந்தத்திற் சற்றேயிருந்து தூய்மை யடையக் கிருபை பண்ணவேண்டும். மேலும் சுத்தோதன மஹாராஜனும்முதுமையடைந்துவிட்டார். மரண காலமும் கிட்டியிருக்கிறது. அவரும், நகர ஜனங்களும், அடியாளும் அதிகக் கவலையுடன் வரவை நோக்கிக் கொண்டிருக்கிறோம். நடக்கும் பார்க்கலாம். (போகிறாள்.)

நான்காம் அங்கம்
மூன்றாங் காட்சி
இடம் : ஊர்ப்புறத்திலோர் கூடாரம்
காலம் : காலை

பாத்திரங்கள் : யசோதரை, சுத்தோதனன், புத்தர். (யுத்தவீரர் அணியணியாய் நிற்கிறார்கள். நகர் முழுவதும் வந்து காத்துக்கொண்டிருக்கிறது. புத்தர் வருகிறார். யசோதரை கூடாரத்துக்குள்ளிருந்து வெளியே வருகிறாள்.)

யசோதரை.—(புத்தரின் காலைப் பிடித்துக்கொண்டு) நாதா! என்னை யாட்கொண்டோய்! ஸித்தார்த்தரே! கௌதமரே! என்னை யேற்றுக்கொண்டருளவேண்டும். தாரணிபோற்றுந்தேவே! உத்தர கோசல தீபமே! என்னைத் தேவரீர் கடாக்ஷத்திற்கு பாத்திரமாக்கவேண்டும்.

(சுத்தோதனன் வருதல்.)

சுத்தோதனன்.—(மிகுந்தசினத்துடன்) இப்படியா உன்னுடைய கதி யாகவேண்டும்? இந்தக் கோலத்துடனா இராச்சியத்தில் வரவேண்டும்? இப்படி வருகிறதையா நானும் பார்க்கவேண்டும்? பிக்ஷை கொடுக்கிறதற்குப் பதிலாகவா பிக்ஷை யெடுக்கிறாய்? நம்மன்னர்கள் போற்றும் மன்னனின் மைந்தனா? இராஜபுத்திரன் இருப்பது இவ்விதந்தானோ? யுத்தவீரர்கள் சூழ்ந்து வர, ஆபரணங்களணிந்த அசுவத்தின் பேரில் மகத்துவத்துடன் வரும்போது ஜயபேரிகை முழங்கப் பிரஜைகள் வாழ்த்தப்பார்த்தா லல்லவோ என் வாழ்க்கைக்குப் பேறுண்டாகும்? இதுவரையிலும் கைம்பெண்போ லிருந்து இப்பொழுது நல்லாடையுடுத்திக்கொண்டிருக்கும் யசோதரை இந்தப் பிச்சைக்காரனையா எதிர்கொண்டு அழைக்கிறாள்?

புத்.—இது என்னுடைய குலாசாரம்.

சுத்.—உன்னுடைய குலாசாரமா?

புத்.—ஆம்.

சுத்.—உன்னுடைய குலத்திலே தொன்றுதொட்டு ஸிம்மாசனாதிபதிகளே இப்படி யொருவருமில்லை.

புத்.—மனித பரம்பரையைச் சொல்லவில்லை. புத்தர்களின் மறையைக் குறித்துக் காட்டினேன். அவர்களில் யானொருவன். அவர்கள் நடத்தைக்கு மாறாக நானொன்றும் பண்ணவில்லை. இப்போது நிகழ்வது புதியதன்று. சிறந்த நிதியைச் செய்கடன் முடிக்க வேண்டி என்னை அன்புடன் வளர்த்த உம்மைக் கனப்படுத்தக் கொண்டுவந்தேன்.

சுத்.—நிதியா! என்ன நிதி? சங்கநிதி பதுமநிதிகளைப் பார்க்கிலுமா?

புத்.—ஆமாம்.

சுத்.—அதென்ன?

புத்.—சாந்தி. விமலம்.

சுத்.—எவ்வாறு?

புத்.—சொல்லுகிறேன்.

(அரசன் கையைப் பிடித்துக்கொண்டு போகிறார்கள்.)

நான்காம் அங்கம்
நான்காங் காட்சி
இடம்: பூங்காவனத்திலோர் மண்டபம்
காலம்: பின்மாலை.
பாத்திரங்கள்: புத்தர்

[சுத்தோதனின் வலதுபக்கம் புத்தரும், சாக்கியப் பிரபுக்கள் சூழவும், புத்தர் முழந்தாட்களுக்கிடையே இராகுலனும் பாதத்தில் யசோதரையும், பின்னாலே பிக்ஷுக்களுமிருக்கிறார்கள். புத்தர் உபதேசம் பண்ணுகிறார்.]

ஓம். சகோதர சகோதரிகாள்!

மனிதன் அரசனாக இருக்கவேண்டுமென்று அதற்கு வேண்டிய சாதனங்கள் யாவும் அவனிடமளிக்கப்பட்டிருக்கின்றன. தன்னுடைய கடமையைச் செய்து முடித்தானானால் எல்லாமும் அவன் முன்னே நிற்கும். தன்னறிவைச் சம்பாதிக்க வேண்டும். அப்படியின்றி மனிதன் அதென்ன அதெப்படியந்ததென்று புறநிலைமைகளை விசாரிப்பதில் காலங் கழிப்பதினால் உண்மை யறிகிறானில்லை. அதனாலேயே துன்பமடைகிறான். வீணே விதியென்று குற்றஞ் சாட்டுகிறான். தான் படைத்த கருவிகளைக் கொண்டு இராஜாங்கத்திற் கதிபதியாயிருக்கலாம். அவைகளைத் தப்பிதமாகப் பிரயோகப்படுத்திக் கொண்டு தன்னையடிமையாக வாக்கிக்கொள்கிறான்

கருமங்களைச் செய்யுமுன் அவன் எஜமானன். செய்தபிறகு அவைகளின் பலன்களைக் கீழ்ப்படித் தேற்றுக் கொள்ளவேண்டும். பலன் காரியம், கருமம், காரணம், இன்ப துன்பங்கள் காரியம், இவைகளை மாற்றவேண்டுமென்றால் மூலகாரணமானதை மாற்றவேண்டும். மூலம் பகுத்தறிவினாற் சுபாசுபத்தையுணர்ந்து பிரியமானதைத் தெரிந்தெடுக்கும் சக்தி. ஆனாலும் மனிதன் நல்லொழுக்கத்தினால் உள்ளத்திலும் தீயவொழுக்கத்தினால் தாழ்ச்சியிலு மிருக்கிறான்.

முதலில் மனிதன் தன்னிடத்திலுண்டான களங்கத்தை நீக்கிச் சுத்தம்பண்ணினபின் ஜோதியை நிரப்பவேண்டும். துக்கத்தை யறிந்து அதை நீக்கக் கடவன். துக்கம் உலகத்தி லிருக்கிறது. இது வாஸ்தவம்; ஜனனம் துன்பம், பிறந்தவுடன் அழுகையேயன்றிச் சிரிப்பன்று., வியாதி துன்பம், பிணியாளன் சந்தோஷப்படுகிறானில்லை, வருத்தமே யடைகிறான். மூப்புத் துன்பம், விருத்தனுடைய அங்கங்கள் தளர்ந்து மெலிந்து போகின்றனவே யொழியப் பாலிய தைரியத்துடனிருக்கின்றனவோ? மரணம் துன்பம் இவை துக்கம், இரண்டாவது துக்கோற்பத்தி சிற்றின்பத்தில் அழியாவானந்தத்தையும், உடலோடு இறவாதிருத்தலையும், எல்லையிலாத பொருளையும், செல்வாக்கையும் தேடுகிறார்கள். இவைகளை உண்மைப்படுத்தி நிறைவேற்றிக்கொள்ளல் முடியாத காரியம். இது, இன்மையிலிருந்து வஸ்துவைப் பார்த்தெடுக்க முயலுதல் போலிருக்கிறது. இந்த ஆசைதான் துக்கத்திற்குக் காரணம். மூன்றாவது துக்க நிவாரணம். இந்த ஆசையினின்றும் விடுபட்டவுடனே வேர் களையப்பட்ட மரமேபோல் நாசமடைகின்றன துன்பங்கள் யாவும். மேற்புறத்திலுண்டான கொந்தளிப்பாகிய காமகோப தன்னயங்களை யெல்லாம் நீக்கிவிட்டால் ஆழத்திலிருக்கும் அமைதியைக்கண்டானந்தித்துத் திருப்தி கொண்டிருத்தலே துக்க நிவாரணம். நான்காவது துக்க நிவாரண மார்க்கமானது நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன் முயற்சி நற்கடைப்பிடி நல்லுளத்தோர் தலைப்பாடிவைகளையுடைய அஷ்டாங்க மார்க்கத்தைக் கொண்டு முடிவுபெறும்.

இந்த மார்க்கத்தில் நிற்கிறவர்கள் இதற்கு மேலுள்ள பதவிகளைக் கண்டடையவேண்டி எஞ்சிய பாவங்களை நீக்க முயற்சி செய்யும்பொழுது தோன்றும் முதற் பருவமாவது தார்க்குணங்களிலிருந்து விடுபட்டுச் சுவாதீனனாய் அஷ்டாங்க மார்க்கத்திற் குறைவின்றி நின்றொழுகிப் பரிசுத்த மடைவதே. இரண்டாவது பருவத்தில் மயக்கம், மனச்சலிப்புகள் இவைகளின்றிச் சாந்தியடைந்ததும். மூன்றாவது பருவம் வருகிறது. அதில் உயிர்களனைத்தையும் அன்புடனாதரிக்குந் தன்மை யுண்டாகவே பந்தம் துண்டிக்கப்படுகிறது. நான்காவது நிகரற்ற பரிசுத்தவான்களுடைய தசை. இதுதான் புத்தர்களுடையது. இங்கே ஆத்மகோசம், பொய் மார்க்கம், சங்கை, பகை, காமம், நீடிய ஆயுளை இப்பூமியிலேயே யடையவிரும்பல், மோட்ச வேட்கை, தற்புகழ்ச்சி, பிழை, கர்வம் இக்குற்றங்கள் தோல்வியடைகின்றன. இந்த நிலைமைக்கப்பாலே பரிநிருவாணமான பரிபூரணானந்த மிருக்கின்றது.

ஆகையினால் ஆரம்பத்தில் வதை செய்யாமலும், பொய் சொல்லாமலும், மதுபானம் பண்ணாமலும், விபசரியாமலும், பிறர் பொருளைத் திருடாமலுமிருந்துகொண்டு சீலவிரதர்களாக விருந்து மேன்மையடையுங்கள்.

மதத்திற் குரியவை இயற்கைக் கடுத்தவை போலவே யிருக்கிறது. மனிதன் விதைவிதைக்கும் கிருஷிகன்; நல்வினையும் தீவினையும் தானியமும் களையும். நிலம் மநுக்குலம்; கருமபலன் அறுவடை. நல்லறுவடைக்கு அன்பும் இரக்கமும் தண்ணீர்; இயற்கைக்கு விரோதமான அற்புதங்கள் வீணே. ஆகையால் ஸாதாரண தருமமார்க்கத்தை யநுசரித்து நீங்கள் அடையற்பாலதான சுத்த பரிபூரண அடைக்கலக்காணியைப் பெற்றுஜ் ஜீவிப்பீர்களாக. ஓம்.

சுத்தோதனன்.—(புத்தர்முன் வணங்கி நின்று) சங்கத்திலுள்ளவர்களில் மிகக் கடையனாகிய என்னை யாட் கொண்டருளவேண்டும், ஞானதேசிகா!
(அனைவரும் நமஸ்கரித்து ஆசிபெறுகின்றனர்).

---

ஸ்ரீகாசி ஹிந்து யூனிவர்ஸிடியில் தொழிற்படிப்பு வசதிகள்:—ஸ்ரீகாசியில் ஹிந்து யூனிவர்ஸிடியின் நிர்வாக சபையார் ஒரு விசேஷ மீடிங் கூடிய போது, குவாலியர் சமஸ்தான மன்னர் அக்கிராசனம் வகித்தார். மேற்படி சர்வகலாசாலையில, தொழிற்படிப்பு வசதிகள் செய்து கொடுக்கும் பொருட்டு அடியிற் கண்டவர்கள் திரவியசகாயம் செய்திருக்கிறார்கள்:— ஜோதிப்பூர் மகாராஜா ஏற்கெனவே கொடுத்த 2 லட்சம் ரூபாயோடு வருஷா வருஷம் 24 ஆயிரம் ரூபாய் கொடுத்துவரச் சம்மதித்திருக்கிறார் பாடியாலா மகாராஜா இப்போது 5 லட்சமும் பின்னிட்டு வருஷாவருஷம் 24 ஆயிரம் ரூபாயும் கொடுப்பதாய்ச் சொல்லியிருக்கிறார். மின்சாரம், இயந்திர வேலைகள் ஆகியவற்றில் அப்பணத்தைக்கொண்டு சிறுவர்களுக்குப் பயிற்சி செய்விக்கப்படும். யூனிவர்ஸிடி சான்ஸலராகிய மைசூர் மகாராஜா அவர்கள் ஏற்கெனவே 2 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்; அடுத்த 20 வருஷங்களுக்கு வருஷமொன்றுக்கு 12 ஆயிரம் ரூபாய் வீதம்கொடுக்க இசைந்திருக்கிறார். ஆகவே இந்த இனங்களில் வருஷா வருஷம் இனி கிடைக்கக்கூடிய 60 ஆயிரம் ரூபாயையும் வைத்துக்கொண்டு தொழிற்படிப்பு வசதிகள் சுலபமாய்ச் செய்து கொடுக்கலாம்.



# மாதவீகங்கணம்

[ஸ்ரீமான் வை. கா. ராமநாதன், பீ.ஏ., பி.எல்.]

(233-ம் பக்கத் தொடர்ச்சி.)

நான்காம் பாகம்

## அத்யாயம் 6. — ஸ்வர்ணாலயம்

"அக்கா, இதுதான் மஹா ப்ரஸித்திபெற்ற மதுராபுரி ஸ்வர்ணாலயம்; வெண்ணிலவில் ப்ரகாசிக்கும் இந்த ஸ்தூபிகள் எவ்வளவு உயரமா யிருக்கின்றன, பாருங்கள். இன்றிரவு நாம் நெடுநாளாய்க் காணாத ஒரு நண்பரை ஸந்திப்போமென்று அப்பால பாடகன் சொன்னானே, ஞாபகமிருக்கிறதா உங்களுக்கு?"

"ஆம், நன்றாய் ஞாபகமிருக்கிறது. ஹேமலதே, அந்த ஜம்ஷீத் அதிக விசித்ரமான பையன். அவன் நமக்குச் சொன்ன விஷயங்களெல்லாம் சொன்னவாறே நடக்கவில்லையா? நரேந்த்ரரை நாம் பார்த்து ஒன்பது வருஷ காலத்துக்குமே லாயிற்று. அவர் விஷயமாய்க் கூட அவன் ஏதோ ஸங்கதிகள் சொல்லவில்லையா?"

"ஆமாம், சொன்னான்" என்றாள் ஹேமலதை.

"ஆக்ராவுக்கு வந்திருந்த வங்கவீரரைத் தான் பார்த்திருப்பதாகவும், அவருடைய முகத்தைப் பார்த்தவுடன் அவருடைய ஜீவ்ய சரித்ரம் தனக்குக் கரதலாமலகம்போல் தெரிந்ததாகவும் அச்சிறுவன் சொன்னான். நரேந்த்ரருக்கு இல்லற வின்பம் அதிகமாயிராவிட்டாலும் வெளிநாடுகளில் சுற்றித்திரிவதில் அதிக ஸந்தோஷ முற்றிருக்கிறாரெனவும், தம் ஊர் வங்காளத்தில் தமது ஜமீனை இழந்துவிட்டபோதிலும் ஆக்ராவில் பேரும் ப்ரதாபமுமடைந்து அனைவரால் மெச்சப்படுவாரென்றும் அவ்வாலிபன் கூறவில்லையா?"

"அக்கா சைவலினீ ஆக்ராவில் அவர் எவ்வளவோ கீர்த்திபெற்றிருக்கிறார். டில்லி பாதுஷா அவர்களே அவரைச் சிலாகித்துப் பேசுகிறார்களாம்."

"ஆக்ராவிலிருந்தபோது சிறிதுகாலம் அவருக்கேதோ அபகீர்த்தி ஸம்பவித்து அவ்வபகீர்த்தியும் நொடியில் மறைந்ததாகவும் சொன்னானல்லவா? இனி நரேந்த்ரருக்கு நல்லகாலம் பிறந்துவிட்டது; கூடிய சீக்ரத்தில் அவர் வீரநகரம் வருவாரெனவும் அச்சிறுவன் கூறினான்."

"ஸஹோதரீ, அந்த ஜோஸ்யமும் நிறைவேறிவிட்டது. வீரநகர விஷயமாய்ப் பாதுஷா அவர்களே உத்தரவு பிறப்பித்தாய்விட்டதாம்."

"இனி நம்முடைய கையில்தான் கார்யமிருக்கிறது. அவரைக்கண்டு அவரை வீரநகரத்துக்குத் திரும்பிவரச்செய்வது நம்முடைய கடமையாகும். ஹேமலதே, அது நீதான் செய்து முடிக்கவேண்டிய கார்யம். என் ஸஹோதரன் அவ்ரைப்பற்றி ஆக்ராவில் எத்தனையோ ப்ரபுக்களையும் உத்யோகஸ்தர்களையும் பார்த்துப் பேசிவந்தான். நரேந்த்ரன் இன்றைக்கோ நாளைக்கோ வந்துவிடவேண்டும். அப்பால பாடகன் சொன்னானே, நெடுநாளாய் நாம் காணாத நண்பரை இன்றிரவு நாம் ஸந்திப்போமென்று! அது நரேந்த்ரநாதரைப்பற்றித்தான் போலும்."

ஹேமலதை மௌனமாயிருந்தாள்.

"தம் முன்னோர்களுடைய ஸமஸ்தானத்தைப் பறிகொடுத்தது முதற்கொண்டு அவர் எத்தனையோ நாடுகளெல்லாம் சுற்றித்திரிந்தார்; படக்கூடாத கஷ்டங்களை யெல்லாம் வேண்டுமட்டும் அநுபவித்தாயிற்று. ஆனால் இப்போது நல்லகாலம் பிறந்துவிட்டது; ஜமீனும் கைவசமாயிற்று. இனியும் தேசஸஞ்சாரம் செய்துகொண்டிருப்பது தகாது. ஹேமலதே. இன்றிரவு நாம் அவரை நிச்சயமாய் ஸந்திப்போம். ஸந்தித்தால் நீ அவருடன் உரையாடி அவர் மனதைக் கலைத்து அவரை நம்முடன் ஊருக்கு அழைத்து வருவாயோ.?"

"அக்கா, உங்கள் ஸஹோதரரே அவருடன் பேசுவார்" என்று மெதுவாய்ச் சொன்னாள் ஹேமலதை.

"அவர் பேசுவார். அதைப்பற்றி யென்ன? நீயும் பேசவேண்டும். ஹேமலதே, பால்யம் முதற்கொண்டு நீயும் அவரும் ஒன்றாய் ஆடி விளையாடி வந்தவர்களன்றோ? ஸிரீஷனுக்குப் பரிசயமாவதற்கு முன்பே நீ அவரை யறிவாயன்றோ? அவரும் உன்னிடம் அத்யந்த ஸஹோதர வாஞ்சை வைத்திருந்தார். குழந்தைகளா யிருந்தபோது, நீயும் அவரும் புறப்பட்டு வீரநகர வனங்களுக்குச் சென்று இருட்டி வெகு நேரமாயும் திரும்பிவராமல் உங்கள்

நாயார் கவலைப்பட்டதில்லையா? அந்நாட்களை யெல்லாம் மறந்துவிட்டனையோ?"

"அக்கா, மறந்துவிடுவானேன்? நன்றாய் நினைவிருக்கிறது."

"நரேந்த்ரர், விரீஷனிருவரும் உன்னைப் படகில் ஏற்றிக்கொண்டு கங்காநதியில் விநோதமாய்ச் செல்வதும், ஒவ்வொரு ஸமயம் படகு த்ருஷ்டியிலிருந்து மறைந்தவுடன் உன் தகப்பனார் வருத்தமுறுவதும், எல்லாம் மறந்து போயிற்றோ?"

"அக்கா, எல்லாம் நன்றாய் ஞாபகமிருக்கிறது. அதைப்பற்றியெல்லா மென்ன? அந்த நாட்களையும் அவ்விஷயங்களையும்பற்றி இப்போது ப்ரஸ்தாபிப்பானேன்? அவைகளெல்லாம் திரும்பிவரப் போகின்றனவா?"

"திரும்பிவரப்போவதில்லை, வாஸ்தவந்தான். ஆனால் அவ்விஷயங்கள் ப்ராணன் போகிறவரைக்கும் ஞாபகத்துக்கு வந்து கொண்டுதானிருக்கும். ஸஹோதரீ, நீ அப்பொழுது சிறு குழந்தையே யாதலால் அவைக ளெல்லாம் உனக்கு அவ்வளவாய் நினைவிராது."

"அக்கா, ஒன்றையும் மறக்கவில்லை; எல்லாம் நினைவிலிருக்கின்றது. இருந்தாலும் அந்நாட்களைப்பற்றி இப்போது பேசவேண்டாம்."

"ஸரிதான். ஆனாலும் இன்றிரவு எனக்கென்னவோ அவைகளெல்லாம் ஒன்றின்மேலொன்றாய் ஞாபகத்துக்கு வருகிறது. இந்த நதியையும், நிலவையும், நமது படகையும் பார்த்தவுடன் எனக்கு வீரநகரத்தில் நாம் இருப்பதாகவும் உன்னையும் விரீஷனையும் எதிர்பார்த்துக்கொண்டு ஆற்றங்கரையில் மணலைக் காலால் தள்ளிக்கொண்டு நரேந்த்ரன் நீங்கள் வரும்வழியாய் நடந்து போவதாகவும் தோன்றுகிறது. இதைப்போல நிலவு நாட்களில் நீங்கள் மூவரும் ஆற்றுமணலில் விளையாடிக்கொண் டிருப்பீர்களே!"

"அக்கா, ஒன்றும் மறக்கவில்லை. நாமென்ன குழந்தைகளா, எப்போதோ நடந்ததைப் பற்றியெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிறதற்கு?"

"ஹேமலதே, எப்போதோ நடந்தானாலென்ன? அவைகளெல்லாம் இப்போது மறுபடியும் நடக்கலாகாதா? நரேந்த்ரர் வீரநகரத்துக்குத் திரும்பிவருவார்; நாமும் தேவிபுரத்திலிருந்து அவரைப் பார்க்க அடிக்கடி வரமாட்டோமா? அதே நந்தவனத்தில் மறுபடியும் புஷ்பம் கொய்து அதே ஆலயத்துக்குச் சென்று ஸ்வாமிக்கு நாம் அம்மலர்களைச் சூட்டோமா? அந்த ஆற்றங்கரையும் மணலும் இப்போது எங்கேபோய்விட்டது? மறுபடியும் அந்நிலவு நாட்கள் வராவா? நாமனைவரும் மறுபடியும் ஒன்றுகூடி அங்கு செல்லலாகாதா?"

"சைவலினீ, கடந்தது என்றைக்குந்திரும்பி வராது?"

"ஸஹோதரீ, என்றைக்கும் நாம் உத்தேசித்தது அவ்ரியம் கிட்டுமென்ற நம்பிக்கையுடனே நாம் அனைவரும் இவ்வுலகில் வாழ்ந்திருக்கிறோம். ஸந்தர்ப்பங்கள் எவ்வாறு மாறுபாடடைந்தாலும் நமக்கு ஏற்பட்டுள்ள வேலைகளை நாம் செய்துகொண்டே யிருக்கவேண்டும். ஹேமலதே, உன்னைக் கண்டால் எனக்குப் பரிதாபமாய்த்தானிருக்கிறது. வீட்டுக்குப் போனால் உனக்கு இப்போது முன்போலிராது. வாஸ்தவந்தான், தகப்பனாரும் போய்விட்டார்; உயிரோடிருக்கிற தாயாரும் அருகிலில்லாமல் தூரதேசம்போய்விட்டாள். இனி நம்முடனிருப்பவர்களைக் குறித்துப் பகவானை த்யானிப்போம். ஹேமலதா, நரேந்த்ரரை நம்முடன் ஊருக்கு அழைத்து வருகிறேனென்று நீ வாக்தானம் செய்யவேண்டும். அவர் உன்னிடத்தில் எவ்வளவோ ஸஹோதர ப்ரேமைவைத்திருக்கிறார். நீ சொன்னால் அவர் தடை சொல்லமாட்டார்."

"அக்கா, என்னாலே கூடியமட்டும் நான் சொல்லிப் பார்க்கிறேன். இருங்கள்! ஏதோ படகு வரும் ஓசை கேட்கிறது."

இருவரும் நின்று கவனித்தார்கள். பட்டம் பகலாயும் அந்நிலவில் இருவரும் உற்றுப்பார்த்தனர். தூரத்தில் ஒருசிறுபடகு அதிவேகமாய் வந்து கொண்டிருந்தது. மாலுமிகளெல்லாம் நல்ல திடகாத்ரர்களாகக் காணப்பட்டனர். படகின்முனையில் போர்வீரனுடைதரித்த ஓர் உயரமான உருவம் தென்பட்டது. அதன் முகத்தின்மீது பூர்ண சந்த்ரனின் வெளிச்சம் நன்றாய்ப் பட்டுக்கொண்டிருந்தது. ஹேமலதை மயிர்க்கூச்செறிந்தாள். மறுபடியும் தன் படகின் சாளரவழியாய் அப்படகினை எட்டிப் பார்க்கலானாள்.



"அவர்தான் அது!" என்று ஹேமலதை தன் கரங்களை மார்பின்மீது வைத்து இறுகக் கட்டிக்கொண்டாள்.

படகு இவர்கள் நின்றவிடத்தை அணுகியது. அதன் வேகம் வரவரக் குறைந்து கொண்டே வந்தது. படகு ஸ்வாலயத்தைச் சேர்வதற்குள் அதிலிருந்த போர்வீரன் கரையில் குதித்து ஆலயத்துட் சென்றான்.

"ஹேமலதே, அவர் நரேந்த்ரநாதர்தானா? ஸந்தேஹமில்லையா? அவர் முகம் எனக்கு ஸரியாய்த் தெரியவில்லை."

"அவர்தான்" என்று சொல்லி ஹேமலதை தன் கண்களைக் கையால் மறைத்துக் கொண்டாள்.

"ஸஹோதரீ, அவர் நரேந்த்ரர்தான் என்று உனக்கு நிச்சயமாய்த் தோன்றினால் கோயிலுக்குள் போய் அவருடன் பேசிக்கொண்டிரு. நான் ஜபங்களை முடித்துக்கொண்டு உங்களை வந்து பார்க்கிறேன்."

"அக்கா, அவரைப்பார்த்து ஒன்பது வருஷ காலமாகிறது. அவரிடம் சென்று தனித்துப்பேச எனக்குத் தைர்யமில்லை. நீங்களும் கூட வாருங்கள்."

அவரைத் தனித்துப் பார்க்கத் தைர்யமில்லையா? நீயோ பால்யமுழுவதும் அவருடன் சேர்ந்து வளர்ந்தவள்; அவரும் உன்மீது எவ்வளவோ ஸஹோதர ப்ரேமையுடையவர். உன் தமயனைப் பார்க்கவா உனக்குத் தைர்யமில்லை! ஆஹா, என்ன பயம்!"

"உங்களுக்கு மாத்ரம் அவர் ஸஹோதரரில்லையா? நீங்களே முதல் முதல் அவருடன் பேசுங்கள். எனக்குத் தனியாய்ப்போய்ப் பேசத் தைர்யமில்லை."

"ஹேமலதே, இது என்ன அறியாமை? குழந்தையைப்போல் பேசுகிறாயே! அதெல்லாம் முடியாது. நீதான் போகவேண்டும்; போய் அவருடன் பேசவேண்டும். அவர் நம்மை நாடியே வந்திருக்கிறாரெனச் சொல்வேன். நீ போய் 'நாங்கள் இரண்டொரு தினங்களில் வங்காளம் செல்லப்போகிறோம்; நீயும் எங்களுடன் வந்து உனது வீரநகரத்தைக் கைக்கொள்ளவேண்டும்' என்று சொல்லிக் கூட அழைத்துவரப் பார்."

"அக்கா, நான் சொல்வது தெரியவில்லையா உங்களுக்கு? மன்னிக்கவேண்டும். நான் மாத்ரம் தனியாய் அவருடன் பேசிக்கொண்டிருக்கலாமா? அக்கா, தயைசெய்து நீங்களே முதலில் போய்ப் பேசுங்கள். வேண்டுமானால் நானும் உங்கள் பின்னால் வருகிறேன்."

"ஹேமலதே, நீ என்ன இன்றைக்கு இவ்வளவு பைத்யக்காரியா யிருக்கிறாய்? உன்னை நான் மஹாபுத்திசாலியென எண்ணியிருந்தேனே. என்னைப் போன்ற விதந்துக்கள் ஸாயங்கால ஜபங்களைச் செய்து முடித்துக்கொள்ளாமல், கோவிலுக்குள் அடிவைக்கக் கூடாதென்பது உனக்குத் தெரியாதா? என் ஜபதபங்கள் முடிய ஒரு மணி சாவகாசம் பிடிக்குமே!"

"அப்படியானால் ஜபதபங்களை முடித்து ஒருமணி பொறுத்துத்தான் இருவரும் போகலாமே."

"அப்படிக்கில்லை அம்மா. கோயிலில் அர்ச்சனையானவுடன் அவர் போய்விடுவார்; நம்மைக் காணாவிட்டால் அவருக்கு அப்புறம் கோயிலில் என்ன வேலை? ஸஹோதரீ, நீ என் வார்த்தையை ஒருபோதும் தட்டியவளில்லையே. இன்றைக்கு மாத்ரம் ஏன் இப்படித் தடங்கல் செய்கிறாய்? வேண்டாம். நான் சொல்வதைக் கேள். நீ போய் அவருடன் பேசிக்கொண்டிரு. என் ஜபங்கள் முடிந்தவுடன் நானும் வந்து உங்களுடன் கூடிக் கொள்கிறேன்."

ஹேமலதையின் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது. மறுபடியு மொரு முறை மார்பின்மீது கைவைத்துப் பார்த்துக் கொண்டாள். சந்திரிகை துல்யமாய் ப்ரகாசித்துக் கொண்டிருந்தது. ஹேமலதை படகினின்று கீழே குதித்துப் பரபரவென்று ஆலயத்துக்குள் ப்ரவேசித்தாள். கோபுர வாயிலைக் கடந்தவுடன் கர்ப்பக்ருஹத்திலுள்ள விராட்விக்ரஹம் தென்பட்டது. ஹேமலதை திடீரென நின்றுவிட்டாள். அவ்விடத்திலேயே கோடிக்கணக்கான பக்தர்கள் நடந்து நடந்து மழமழப்பாயிருந்த கருங்கல்படிக்கட்டில் நமஸ்காரஞ் செய்து மானஸீகமாய்ப் பகவானை ஸ்மரிக்கலானாள். இம்மண்ணுலகத்துக் கஷ்ட நிஷ்டூரங்கள், தூண்டுதல்கள், சோதனைகள் முதலியவற்றால் தன் மனம் பேதிக்காமலிருக்கும்படி அநுக்ரஹஞ் செய்யவேண்டுமென்று ஸர்வ தயாபரரான ஈச்வரனை அந்தரங்க பக்தியுடன் ப்ரார்த்தித்தாள். கோயில் மணிகள்



162050

சட்டித்தன. முதல்கால பூஜை ஆரம்பமாயிற்று. நரேந்த்ரனும் இன்னும் சில பக்தர்களும் ஸ்வாமி ஸந்நிதியில் அஞ்சலிபந்தராய் நின்றுகொண்டிருந்தனர். அர்ச்சகர் மந்தரங்கள் உச்சரித்துக்கொண்டு பக்தர்களுடைய சிரஸில் சுத்தோதகம் ப்ரோக்ஷித்தனர். இன்னொரு அர்ச்சகர் சில புண்ய ச்லோகங்களைச் சொல்லிக்கொண்டிருந்தனர்.

இவ்வாறு அர்ச்சனை முடிவுபெற்றுக் கற்பூரஹாரத்தியாயிற்று. ஸ்வாமி ப்ரஸாதங்களைப் பெற்றுக்கொண்டு ஜனங்கள் ப்ரதக்ஷிணஞ் செய்து நமஸ்கரித்துவிட்டு வீடு நோக்கிச் செல்லலாயினர். ஹேமலதை மனதை ஒருவாறு தைர்யப்படுத்திக்கொண்டு ஒரு ஸ்தம்பத்தின் நிழலில் நின்றுகொண்டிருந்தாள். அப்போது அவளுடைய ஹ்ருதயம் பரமபவித்ரமான ஸ்திதியை யடைந்திருந்தது. அந்நிலையை வர்ணிக்க யாரால் முடியும்?

---

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி: 14-வேற்றுரு

காரு குறைந்தமையான் வாகுகனென் றன்னுரு
மாக அயோத்தி நகரமடைந்து—மாகனைத்
தேர்த்தொழிற்கு மிக்கான் நீயாரென் றன்செம்ம
டார்த்தொழிற்கு மிக்கானைப் பார்த்து. [நளத்தால்

பாதித் துணியோடு நளன் கனவேகமாகப் பித்துப் பிடித்தவன்போலக் காட்டிற்குள்பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தான்; தனதுயிரின் மேல் சிறிதும் கவலையின்றி நடந்துகொண்டேயிருந்தான். அவனென் செய்வான்? கலியின் வேகம் தூண்டத் தூண்ட, அவன் தன்னறிவின்றித் தான் செய்வதின்னதென்று அறியாது நடந்துகொண்டேயிருந்தான். அந்நடுநிசியில் பாழ் மண்டபத்தில் தமயந்தியை, அறுத்த துகிலோடு தனியேவிட்டு, அவளிடம் பேரன்பு மிக்க அவன், விதிவிட்ட வழியாகக் காட்டினுள் சென்றால், அவனது மயக்கத்தை நாம் எற்றெனச் சொல்வது? கேடுவரும் பின்னே, மதிகெட்டுவரும் முன்னே என்றது பழமொழியன்றோ? அதனுண்மைக்கு நளனே சான்றாவன்போலும்! இது எவ்வளவு உண்மை என்பதைப் பின் காண்போம்.

நளன் மயங்கி அலைந்துகொண்டேயிருந்தான்; தான் செல்லும் வழியும் அறியாது நடந்துகொண்டேயிருந்தான்., கண் தெரியாது அக்கொடுங் காட்டினுட் திகைத்துச் சென்றுகொண்டேயிருந்தான். பக்கத்து மலைப்பிரதேசங்களிலிருந்த கல் முள் நிறைந்த பாதைவழியே நடப்பினும், தான் அவ்வாறு நடந்ததாக அவன் எண்ணவில்லை; புலியுங் கரடியும் எதிர்வந்து தன்னை வெருட்டுவதையும் அவன் காணவில்லை. சிங்கமும் யாளியும் இணையற்றுச் செய்த கர்ச்சனைகளின் ஒலி அவன் காதில் விழவில்லை. ஏதோ ஏக்கம் கொண்டவன்போல அவன் நடந்துகொண்டிருந்தான். பெருங்குற்றம் ஏதோ செய்தவன்போல அவன் உள்ளம் நடுங்க, குறி ஒன்று மில்லாது அக்காட்டின் எதிர்ப்பட்ட வழியாகத் தோன்றும் பாதையின் வழியே ஓடிக்கொண்டிருந்தான். நெடுநேரமிவ்வாறு அவன் ஓடினான். இடையே தனியே தான் தமயந்தியைப்பற்றிச் சிறிதும் சிந்தியாதிருந்தும் அவனுக்கும் தெரியாது, அடிக்கடி பின்னோக்கிப் பார்ப்பான்; திகைப்பான்; நடுநடுங்குவான்; துள்ளிவிழுவான்; அழுவான்; அலறுவான்; ஏங்குவான்; ஆயினும் ஏதோ தன்னைப் பிடித்துத் தள்ளுவதுபோல எண்ணி அலண்டு அப்புறம் போவான்; சிறிது நடப்பான். நடக்க முடியாது நின்று "ஆ" என வாய் திறந்து, திகைத்து விழிப்பான்; நாலா பக்கங்களையும் பார்த்து அலறுவான்; கலக்க முறுவான். என் செய்வான்? நின்ற நிலையில் நிற்காத மந்திபோல, க்ஷணசித்தம் க்ஷணபித்தமாக அவன் விளங்கி, மீண்டும் ஏதோ எண்ணம் தூண்டுவதுபோல எண்ணி, அடிமேலடி வைத்து அப்பாதையில் அளவிடுவான்; மெய்ம்மறந்து காலை வீசிவீசிக் குதிப்பன்; சிரிப்பன்; திகைப்பன்; வாயுளறிக் கண்விரண்டு நிற்பன்; பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டேதோ எதிரில் தன்னைவந்து தாக்குவதாக ஓடுவன்; இடையே ஆடி வசைமொழிகளைக் கோத்துப்பாடுவன்; தள்ளாடித் தரைமேல் வீழ்ந்து துடிப்பன்;



உடல் முழுவதையும் முறித்துக்கொண்டு, முகம் சுளிப்பன்; கண்ணீர் ஓடக் கதறுவன்; தனக்கும் தெரியாதேதோ எண்ணம் தன்னை வாட்டுவதாக நினைத்துக் கவலை கொள்வன்; கெட்ட கனவுகண்டவன்போலத் துள்ளிவிழுந் தலறி எழுந்தோடுவன். இவ்வித சித்த விகாரத்துடன்தான் நளன் அக்காட்டில் நடந்துகொண்டிருந்தான். அவன் செயலைக் கண்ட எவரும் அவனைத் தன் சொந்த புத்தியுடன் விளங்குவதாகச் சொல்லமாட்டார்.

இவ்வாறு அந் நளமன்னவன் கலியின் வேகமும் தன்மங்கிய அறிவும் தன்னை வாட்டிப் போராட நடந்துகொண்டேயிருந்தான் எதிரில் படர்ந்து மண்டி எரிந்து அவ்விடத்தைக் கவர்ந்துவந்த பெருங்காட்டுத் தீயே மதிமயங்கி நடந்தவனைத் தன்பால் இழுத்தது போலும்! அத்தீயிலிருந்து, "மன்னா! உனக்கபயம்! மன்னா உனக்கபயம்!" என்னும் சப்தமே முதன்முதல் 'பயம் வேண்டாம்! பயம் வேண்டாம்!" என்று கூவிக்கொண்டு நளனை அத்தீயருகு வரச் செய்தது. அவன் அவ்வாறு நெருங்கும்போது, "மன்னவரே! ராஜச்ரேஷ்டரே! பழியறியாப் பார்த்திபரே! புண்ய சீலரே! நளமன்னவரே! உம்மையே சரணென வடைந்தேன். காக்கவேண்டும்! காக்கவேண்டும்!" என்று அத்தீநடுவில் அகப்பட்டுக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த பிராணி, பெருத்த குரலில் வேண்டியழைத்தது. அச்சத்தம் வரும் இடத்தை நோக்கிவந்த நளமன்னவன், தன்னைக் கூவிச் சரணடைந்த பிராணி ஓர் பாம்பெனக்கண்டான்; அது அதனுடலைப் பின்னிச் சுருட்டிக்கொண்டு விளங்குவதன்றித் தன்னை நோக்கும்பொழுதே நடுநடுங்கிக் காலில் வீழ்வதுபோலக் கெஞ்சுவதையும் கண்டான். குவிந்த கையுடன் வணக்கங்காட்டி அப்பாம்பு நளனை நோக்கி, "என் தலைவரே! நான் கார்க்கோடகன்; நாகர்களது தலைவன்; தவத்திற் சிறந்த நாரத முனிவர்க்கு ஓர்கால் செய்த தவறால் இக்கதி எனக்குற்றது. நான் அவரை மோசம் பண்ணினேன். ஆக அவர்க்குக் கோபம் பெருகிற்று; என்னைச் சபித்தார். 'அசையாது மரம்போல் இங்கு விழுந்து கிடப்பாயாக! நெடுநாளான பின், நளமன்னவர் இவ்வழியே வருவர்; உன்னை இவ்விடம்விட்டுப் பெயர்த்து வெளியே விடுவர். அப்பொழுதுன் சாபம் அகலும்' என என்னை அவரிட்ட சாபத்தின்பயனாக நான் அசையமுடியாது தத்தளிக்கின்றேன்; எட்டி ஒரு அடியும் வைக்கமுடியாது இவ்வனலில் தவிக்கின்றேன். நல்லவரே! உமக்கு நன்மையே உண்டாகும். யான் சொல்வதைக் கேளும். உமக்கு ஒரு நாளும் கேடு உண்டாகாது. நன்மை விதைத்தால் நன்மையே விளையும். இச்சமயம் என்னைக் காப்பாற்றும். உமக்கு என்றென்றும் நான் ஊழியஞ் செய்யும் உயிர்த்தோழனாவேன். நான் பெரும் நாகன்; வல்லமை மிக்கவன்; கார்க்கோடகன் என்பேர். எனக்கு நிகர் வேறொருவருமில்லை. உப்பிட்டவரை உள்ளளவும் நினைப்பதே என்முறைமை. ஆகையால், அஞ்சேல்; கவலையுறேல்; மயக்கத்தை ஒழியும்; என்னை இப்பாழும் தீயிலிருந்தெடுத்து அப்புறப்படுத்தும். தயவுசெய்யும். சீக்கிரம்! சீக்கிரம்! நான் வருந்துகிறேன். இதோ என்னை எளிதில் எடுக்கும்படியாக இலேசாக ஆகிறேன். வாரும்; வந்தென்னை எடுத்துக் காப்பாற்றும்" எனச் சொல்லி வேண்டிற்று. மேலும் அது ஒரு கட்டைவிரல் அளவாக நீளத்தில் குறுகி உருவம் குன்றிவிளங்கியது.

இவ்வாறு அப்பாம்பிறைவன் சொன்ன மொழிகளைக் கேட்ட நளமன்னவன் சற்றே தன் மயக்கம் ஒழிந்து தன்னுணர்ச்சி யடைந்து, அப்பாம்பிருக்குமிடம் நோக்கிச் சென்று, அதைத் தன் கையால் எடுத்து, அக்காட்டுத் தீயின் வாடை வீசாத பக்கமாகக் கொண்டுபோய் நல்ல காற்று நடமாடுமிடம்பார்த்து, அதைக் கீழ்விட யத்தனித்தான். அச்சமயம் அக்கார்க்கோடகன் நளனை நோக்கி "ஐயா நளமன்னவரே! தாங்கள் ஒன்றுமுதலாக எண்ணியெண்ணி காலடிவைத்துச் சிறிது தூரஞ் செல்லுங்கள். அப்போது உமக்குப் பெரும் பாக்கியமொன்று தருவேன்" என்று சொல்ல, நளனும் மண்ணின் மீது ஒன்று முதலாக எண்ணிக்கொண்டு 'தச' என்று கணக்கிட்டுப் பத்தாவது அடிவைத்தான். அப்பொழுது அப்பாம்பு தன் பற்களால் விஷம் பாயும்படியாக நளனைத் தீண்டிற்று. உடனே நளன் உருவமாறி உருமுற்றுங் கறுத்து விளங்கினான். அதைக் கண்ட நளன் அதிசயித்துச் சிந்தையுற்றுத் திகைத்துக் "கால வித்தியாசமே இதுவும்! நன்மைக்குத் தீமை செய்வதும் காலத்தின் கோலமேயோ? இப்பெருங்காரியத்

தைத்தான் இந்நாகன் பெரும் பேருதவியா கப் பேசினன் போலும்!" எனத் தனக்குள் தானே எண்ணமிட்டுக்கொண்டு அசைவற்று நின்றான்.

நளமன்னவனது உள்ளெண்ணத்தை முற்று முணர்ந்த கார்க்கோடகன் நளனைத் தேற்ற மனங்கொண்டு பின்வருமாறு மொழியலுற் றான்: ஐயா! நான் அறிவற்றவனல்லன்; படித் தறிந்தவனே!

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்;
' செய்ந்நன்றி கொன்ற மகற்கு' [உய்வில்லை

என்பதை நான் அறியாதவனென்று எண்ண வேண்டாம். உம்மை யான் கடித்தது உமது நன்மையின் பொருட்டே; உமக்குத் துன்ப மூட்டும் எண்ணத்துடனன்று. உம்முள் புகுந்து உம்மைத் துன்பத்துள் ஆழ்த்தி இவ் வளவு கஷ்டப்படும்படியாக எவன் உமது உடலுள்ளேயே இருந்து உமக்கு வேர்ப் புழு வாக விளங்கிக்கொண் டிருக்கிறானோ, அவனை யே நான் கடித்தவிஷம் வாட்டும். அவனை உம் மைப் போலவே துக்கப்படும்படி செய்து, உமது துக்கத்தை அவன் தீர்க்கும் வரையும் இவ்விஷத்தா லேற்படும் துக்கத்தை அவன் அனுபவித்துக்கொண்டே யிருப்பான். வை ரத்தை வைரத்தால் வெட்டுகிறோம்; முள்ளை முள்ளால் வாங்குகிறோம்; இரும்பை இரும் பால் வெட்டுகிறோம். விஷத்துக்கு மாற்று விஷமே யல்லவா? ஆகமறைந்து, உம் உடலுள் பிரவேசித்து, விஷம்போ லுமக்குக் கெடுதி யே செய்துவருபவனும், சிறிதும் தவறு செய்யாத ஒரு பாபமும் அறியாத தாங்கள் இவ்வளவு தூரம் துக்கம் அனுபவிக்கும்படி செய்தவனும் எவன் இருக்கின்றானோ அவ ன், யான் என் பற்களால் உம்முள் பாய்வித்த கொடும் விஷத்தின் வேகத்தினால், அதனா லேற்படும் தாபத்தைப் பொறுக்கமுடியாது உம்மை விட்டுப் புறப்படுவான். உம்மைக் கடித்தது, அவனை உம்முடல் விட்டோட்டச் செய்த உபாயமேயாகும். ஆகவே, சிந்தியேல்! உமக்கினி விஷஜந்துக்கள் ஒரு தீங்கும் இயற் றா; இயற்றினும் பயன்படா. மற்றுப் பகைவர் களிடம் இனி உமக்குப் பயமென்பதில்லை. பிராமணர்களும் முனிவர்களும் எவ்விடத்தும் உமக்கு நன்மையே புரிவர்; உம்மிடம் அன்பு கொண்டே விளங்குவர். ஏதோ உமதுடம்பு கறுத்துவிட்டதென்று கவலையுறேல்; உம்மை ஜனங்கள் அறியாதிருக்கும்பொருட்டே அவ் வாறு செய்தேன். அரசருளேறே! உமக்குக் கவ லைக்குச் சிறிதுங் காரணமில்லை. நீர் போன விடமெல்லாம் ஜயமே உமக்குவரும்; எப்போரி லும் வெற்றி உமதேயாகும். உமது கஷ்டமெல் லாம் இனிப் பஞ்சுபோல் பறந்துவிடும். அவை மீண்டும் உம்மையணுக இம்மியும் இடமிராது. ஆகவே, துயருறேல். நான் சொல்வதைக் கே ளும். வாகு குறைந்தமையால் வாகுகன் என் று பேர் கொண்டு 'யான் தேர்ப்பாகன்' என்று சொல்லிக்கொண்டு அயோத்திமாநகரை யடை யும். அவ்வழகிய ஊரில் அரசு செலுத்துபவன் ருதுபர்ணன். அவன் சூதாட்டத்தில் வெகு கெட்டிக்காரன். நீரோ அசுவ சாஸ்திரத்தில் வல்லவர். ஆகவே அவர்க்கு உமது ஞானத் தைப் பயிற்றுவித்தால், உமக்கு அவர் சூதா ட்டத்தின் மர்மங்களைச் சொல்லிக் கொடுப் பர். மேலும் சூரிய வம்சத்தில் பிறந்த அவர் உம்மிடம் உண்மை அன்பு பாராட்டும் நன்ப ராவர். அவரிடமிருந்து கவறாடல் கற்று உமது ஸம்பத்தை மீண்டடையும். உமது துக்கத் தை இனி யொழியும். உமது நாடு மக்கள் அனைத்தும் உம்மை வந்து சேரும். நான் சொல்வது ஸத்யம். இதை நம்பும். ஆனால் உடல் கறுத்து விட்டதே என்று மயங்கா திரும். உமக்கெப்போது உமது பழைய உருவம் வேண்டுமென்று தோன்றுகிறதோ, அப்போது இந்த உடையை அணிந்து கொள் ளும். உடனே உமது இயற்கை உருவம் திரும்பிவிடும். ஐயம்வேண்டாம். இதோ! இவ் வுடையைப் பெற்றுக்கொள்ளும். பத்திய விரதரே! உமக்கு மங்களமே உண்டாகுக!"

இவ்வாறு கார்க்கோடகன் சொல்லித் தேவ லோகத்து உடை இரண்டையும் கொடுத்து ஆசீர்வதித்து, இருந்தவிடம்தெரியாது மறைந் தான். ஆவலுடன் வாயாங்காத்து அசைவ ற்று அம்மொழிகளைக் கேட்டுவந்த நளமன்ன வன், அந்நாகராசன் கொடுத்த வஸ்திரங்களை அன்புடன் பெற்று அஞ்சலித்த வண்ண மாகவே மதிமயங்கிக் கிடந்தான். தனது நினைவு அவனுக்குவரச் சற்று நேரமாயிற்ற யினும், அயோத்திக்கு நடக்கும் ஆத்திரத்தி லேயே இருந்தனன். ஆனால் வழி, காடுகளின் மூலமாகவே இருந்தமையால், அவன் பலநாட்



கள் நடக்க வேண்டியதாயிற்று. நடக்கும் பொழுதவன் பல முறையும் தன் தனிமை யைப்பற்றி வருந்தினும், அவனிடம் தமயந்தி யைப்பற்றிய நினைவு மங்கியே யிருந்தது. ஆனால் எதிரிலிருந்த காட்சிகள் அவள் நினை ப்பை ஞாபக மூட்டக்கூடியனவா யிருந் தால், அவளது கதியை எண்ணி ஏங்குவானு னாலும், தனக்குந் தெரியாம லஞ்ஞாபகமொழி ந்து விளங்குவான்.

இவ்விதம் சில நாட்கள் நடந்ததும், நளனு க்கு வரவரத் தமயந்தியின் ஞாபகம் மனத்தி லூற ஆரம்பித்தது. அவ்வெண்ணம் ஊறவூற அவன் மனம் அனல்பட்ட மெழுகுபோலத் துயருள் ஆழ்ந்துவிடும். அப்போதவன் மயக்க முற்றுத் தன்னைத் தானே நிந்தித்துக்கொள் வான். "ஹா! மனிதப்பதரே! நீயும் பிழைத் திருந்தாய்! 'காதலியைக் காரிருளில் கானகத் தே கைவிட்ட பாதகனே!' அவாவுடன் கற்பு நிலை கோணாது உன்னையே நம்பிக் கஷ்டத் திலும் காட்டிலும் உன்னையே நிழல்போல் தொடர்ந்த உத்தமிக்குப் பொய்யுரைத்து நள் ளிரவில் விட்டு வந்த கள்வனே! உனக்கு உள்ளமென்ற ஒரு பொருளும் உண்டோ? வஞ்சக! கிடைத்தற்கரிய கற்புடைய மனைவி யைப் பிரிந்து, இன்னும் பிழைத்திருக்கிறாய்! இவ்வாறு இருப்பதினும் இறப்பதே நல மன்றோ?" என்று எண்ணித் தனது மனந் தன்னை வாட்டத் தமயந்தியிருக்கும் இடத்தை நாடச் சிறிதே எண்ணமிட்டுப் பின்புறம் நடக்கப் பார்ப்பன். ஆனால் இதற்குள் அவனுக் கும் தெரியாது அவ்வெண்ணம் ஒழிந்து தம் பித்து அவன் நிற்பன். பின் கார்க்கோடகன் சொன்ன மெய்ம்மொழியிலீடுபட்டு அயோத் திக்கு வழிதேடி நடந்துகொண் டிருந்தான்.

மலைகளின் வழியே நளன் நடந்து கொண் டிருந்தான். அப்போதங்கு கண்ட காட்சிகள் அனைத்தும் அவனுக்கு அவன் மனைவியின் பிரிவையே ஞாபகமூட்டின. வாயைத் திறந்து வானத்தைப் பார்த்தவண்ணமாகப் பாடும் சாதக பட்சியின் இனிய குரலைக் கேட்டால் அவன் மனம் தமயந்தி எவ்விதம் நளனைக் காணாது வாய்விட்டலறிக் கத்துவளோ என் பதை எண்ணும். மான்களைப் பார்க்கும்போ தெல்லாம் அவள் தனக்கின்பமூட்ட விளையா டிய விளையாடல்களெல்லாம் அவனுக்கு ஞாப கம் வரும். சிற்றோடைகளில் தாமரையிலையில் தவழ்ந்து விளையாடும் அன்னப் பேடுகளைப் பா ர்க்கும்போதெல்லாம் அவன் அலறிவிழுவன். கோகிலங்களின் இனிய கீதம் தமயந்தியின் மெல்லிய குரலையே அவன் காதுள்படச் செய் யும்; அவ்வாறு பட்டதும் அவன் பதைபதை த்துத் துடித்து உள்ள மழிவன். பூக்களும் கனி களும்காய்களும் தாங்கி வளைந்து விளங்கும் மரங்களைப் பார்த்தால், அவள் தன்னுடன் இ னிக்க நகைத்துக் கொஞ்சி மலரும் பழமுங்கா யுங் கொடுத்து, வணக்கத்துடன் பூக்கொம்பு போலஅருகிலிருந்து உறவாடி மரியாதைசெய் ததை அவன்எண்ணி எண்ணி நெஞ்சம் நைவ ன். தனியேவ்வழியில்நடந்தபொழுது அப்பரல் பாதையில் இருந்த கல்லும் முள்ளும் தைக்க, 'அந்தோ, அவள் இப்பாதையில் எவ்வாறு நடப்பள்? பஞ்சினு மெல்லிய அவள் பாதங் கள் இப்பரல்கற்களின்மேல் எவ்வாறு பதிந்து ஊன்றும்? என் செய்தாளோ? ஒருவேளை—' என்றெண்ணிக்கொண்டே ஏக்கங்கொள்வன்; மதியற்று விளங்குவன்; தமயந்தியைப்பற்றிய நினைவற்றுத் தயங்குவன்; எதைப்பற்றி எண் ணினனென்பதும் அறியாது வாட்டமுற்று நடப்பன்.

இவ்வாறே சித்த விகாரத்துடன் நளன். நடந்துகொண்டிருந்தான். அவன் மனம் அப் பொழுது ஒரு பரந்த நீர்வெளிபோல விருந்த தெனவே சொல்லலாம். அதில் தமயந்தியைப் பற்றியநினைவு என்னும் மீன் கூட்டம் அடிக்க டி அடியிலிருந்து நீர மட்டத்தின்மே லெழும் பிச் சிறிது நாழிகை குதித்துத் துள்ளி விட் டுப் பின் உள்ளே ஆழ்ந்துவிடும். ஆயினும் அப்பரப்பு, சாந்தமற்று, கலியின்வேகம், கார்க்கோடகனுடைய ஆணை, நளனது மங்கிய அறிவென்னும் இம்முக்காற்றில் அலைபட்டுச் சிற்றலைகளை வீசிக்கொண்டே யிருந்தது. என் செய்வது? பலபேர் கையில் விழுந்தால் ஒரு மனிதன் என்ன செய்யமுடியும்? ஆயினும் கார்க்கோடகனிட்ட ஆணை வரவர மனத்தை முற்றுங்கவர்ந்ததால் நளன் அயோத்தியை நாடி நடந்துகொண்டே இருந்தான். கடைசி யாக மலைநாடு கடந்து கடலோரம் வந்து, கட லின் பெருமையையும் அதன் காம்பீர்யத்தை ப்பையும் கண்டதிசயித்து அக்கடற்கரைக்

காட்சியில் பாய்ந்து சற்றே தன்னை மறந்து விளங்கினன்.

எப்படி இருந்தாலென்ன? உலையில் துருத்தி ஊதிக்கொண்டிருந்தால் நெருப்புப் புகைந்து விம்மிக் கொழுந்திட்டுப் படராதிருக்குமா? அக்கரையில் விளங்கிய இளம் பறவைகள் தன்னைக்கண்டதும்,

ஆவி யன்னதோர் அணங்கினை யனையிருள் நீத்த
பாவி யேன்முகம் நோக்குதல் பழிக்கும் என்றோ
மேவு சேக்கையில் குருகினம் பெடையொடும் வெருவிச்
சேவல் கோட்டகள் ஏகுவ தெனமனந் திகைத்தான்;

இயற்கையாக அவை பறந்தோடுவதை எண்ணாது, தனது குற்றத்தையே நினைத்து நினைத்து உயிர்மாழ்கினன். மேலும் அவன் தன் னெதிரில் இருந்த காட்சிப் பெருக்கில் ஈடுபட்டுக் கடலையே நோக்கிய வண்ணமாக இருந்தான்; அதன் செய்கைகளைக் கண்டு கொண்டே மெய்ம்மறந்து கிடந்தான். ஆனால் இவ்வானந்தம் நெடுநேரம் அவன் மனத்தில் நிலைக்கவில்லை. புகைந்து புகைந்து அவன் மனத்துள் விளங்கும் குற்ற உணர்ச்சி மேன் மேலுந் தூண்ட, எதிரிலிருந்த அவ்வலை வீசி ஓலமிடும் கடலைப்பார்த்து,

"போவாய்; வருவாய்; புரண்டு விழுந் திரங்கி,
நாவாய் குழைவு நடுங்குறுவாய்;—தீவாய்
அரவகற்றும் என்போல, ஆர்கலியே! மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று?"

என்று கேட்பன்; மனமேங்குவன்; பல்லை நறநறவெனக் கடித்துத் தன்னைத்தானே வெறுப்பன்; தனது செயலின் நினைப்புக் காற்றசைப்ப, நெஞ்சிடையே மூளும் கனல் புகைய, உள்ளம் வெந்து அயர்வன். என் செய்வான்? எதை நோக்கினும் அவனது தவறே அவன் மனத்துக் குடிகொண்டு அவனை வாட்டியது. அதை ஒழிக்க நினைப்பினும் ஒழியாது விளங்கும்; மற்று அதை ஒழிக்காது நினைப்பின் என் செய்யாது? அக்கடலின் பொருள்களின் தனது மனைவியின் ஸர்வாங்க லக்ஷணங்களின் உவமங்களைக்கண்டு, அவை அவளது அங்க உறுப்புகளென்றே மயங்கி "அந்தோ! என் பிரிவைத் தாங்காது, என் தலைவி, வெகு உத்தமி, சாந்தசீலை, கனவிலும் கணவனைக்கருத்திலும் பிரியாக்காதலி, உள்ளம் வாடி, உயிரை வெறுத்து இக்கடலில் வீழ்ந்து இறந்துவிட்டனள். இது நிச்சயம், நிச்சயம். இனியான் பிழைத் திருந்தென்ன? அவளைக் காணும் பாக்கியம் எனக்கெங்கிருக்கும்? ஒருவேளை இவ்வருணன் அவளிடம் அன்பு பாராட்டி அவளைச் சுகமே காப்பாற்றி வைத்திருப்பினும் வைத்திருக்கலாம். ஆக, நான் இக்கடலுள் மூழ்கி அவளைக் காண்பேன்" எனக்கூறிக்கொண்டு அக் கடலில் மூழ்கச் சென்றான். ஆயினும் அங்கு சென்றதும் அவன் அதுவரை எண்ணிய தின்னதென அறியாது திகைத்து மீண்டும் கரை ஏறி, ஏதோ கெட்டுப்போன பொருளைத் தேடச் செல்பவன் போலப் பரபரப்புடன் அயோத்திக்குச் செல்லும் வழியாக ஓடத் தலைப்பட்டான்.

இவ்வாறு மயக்கத்துடனே நளன் ஒன்பது நாள் நடந்து அயோத்திமா நகரைக் கண்டு பத்தாம்நாள் அதனுள் பிரவேசித்தான். அவனோடு தென்றற் காற்றுங்கூட உலாவி வந்தது. ஆயினும் அவன்,

கவ்வு சோலையின் தண் நகைமுகி ழாமொமைச் சிறந்த
தெய்வ காவமலர்ப் போதகம் பூந்துகள் திமிர்ந்து
கவ்வை வெவ்விடைத் துளிதழ் தென்றல் அஞ்சன்
னையுரு தொறும், மெய்யதைத் தாருயிர் தளர்ந்தான்.

அப்படி அக்காற்றின் ஸ்பர்சம், அவன் மனத்தை வாட்டியபோதிலும், அவனுக்குத் தெரியாமல் அவனை மயக்கி அவனது நடந்த இளைப்பை மாற்றிக்கொண்டேயிருந்தது. அவ்வூருள் அடிவைத்ததும் அவன் மனங்களித்து விளங்குவதாக அவன் நினைந்துகொண்டே நடந்தான்.

அவ்வயோத்தியா நகரம் பெரும் பட்டணம். அதன் அமைப்பும் காவலும் அரணும் எவ்விதத்திலும் சிறந்தவை. அதன் பெரும் தெருக்கள் பலவும் கடந்து, அதன் மன்னன் ருதுபர்ண மஹாராஜன் வாழும் மறுகிடை வந்தனுகினன். அம்மறுகை அடைந்ததும் நளமன்னவன் ருதுபர்ணனுடைய அரமனை வாயிலுட் புகுந்தான்.

பஞ்ச ரத்தினம்:—இராம சீதை, ருக்மிணி, தமயந்தி, சகுந்தலை, சாவித்திரி இவர்களின் சரித்திரம் அழகாக எழுதப்பட்டுள்ளது. இதன் விலை அணா 8. போதினி சந்தாதாரர்க்கு மாத்திரம் விலை அணா 6.

மானேஜர்:—"விவேக போதினி" ஆபீஸ்,
மயிலாப்பூர், சென்னை



# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### சக்கிலியும் வர்த்தகனும்

பூர்வத்தில் ஓர் சக்கிலியிருந்தான். அவன் நாடோறுங் காலைமுதல் மாலைவரையிலும் உழைத்துப் பாடுபடுகிறவனாயிருந்தும், தன் ஸ்திதியில் மனரம்மிய முள்ளவனாய் எப்பொழுதும் சந்தோஷத்துடன்பாடிக்கொண்டு காலங்கழித்து வருகிறவனாயிருந்தான். அவனுக்கு அடுத்த வீட்டில் திரண்ட ஐசுவரிய முள்ள வர்த்தகனொருவ னிருந்தான். இவன் இராப்பகல் பணமேக்கமும்கவலையுங்கொண்டு மன அமைதியைப் பறிகொடுத்து, பொருள் சேர்க்கும் வழியையே சிந்தித்துக் கொண்டிருந்தான். ஒருநாள் இவ்விரண்டுபேரும் ஒருவரை யொருவர் சந்திக்கும்படி நேரிட்டது. அப்போது வர்த்தகன் சக்கிலியைப்பார்த்து, 'ஆ! என் நல்ல சிநேகிதனே! நீ படும்பாட்டினால் வருஷம் ஒன்றுக்கு எவ்வளவு பணம் சம்பாதிப்பா'யென்று கேட்க, சக்கிலி சிரித்துக் கொண்டு, 'ஐயா! வருஷம் ஒன்றுக்கு எவ்வளவு சம்பாதிப்பாயென்று கெட்கிறீர்? அவ்விதக் கணக்கு எனக்குத் தெரியாது. அன்றாடகம் உழைத்து அன்றாடகஞ் சாப்பிட்டுவருகிறேன். இவ்விதமாய் நான் காலந்தள்ளிவர எப்படியோ வருஷமும் முடிந்து போகிறது. வருஷம் ஒன்றுக்கு எனக்ககப்படுகிறது இவ்வளவென்று நான் பார்க்கிறதுமில்லை. எனக்குத் தெரியவுந்தெரியாது. அன்றாடக உழைப்பினால் அன்றாடக போஜனம் நடந்துவருகிறதென்றுமாத்திரம் எனக்குத் தெரியுமென்றான்.

இதைக்கேட்ட வர்த்தகன் சக்கிலியைப் பார்த்து "அப்படியானால் நாளொன்றுக்குத் தான் எவ்வளவு சம்பாதிப்பாயென்று எனக்குச் சொல்வாயா?' என்று கேட்க, சக்கிலி 'ஐயா. ஒருநாளைக்குச் சற்று அதிகமாயகப்படும். ஒரு நாளைக்குச் சற்று குறைச்சலாயகப்படும். ஆகிலும் அப்போதைக்கப்போது அகப்படும் வரும்படியைக்கொண்டு நானும் என் சமுசாரமும் ஜீவனம் பண்ணி வருகிறோம்" என்றான். அப்போது வர்த்தகன் 'நல்லது சிநேகிதனே! இனிவருங்காலத்தில் உனக்கு யாதொரு குறைவும் நேரிடாதபடிக்கு உனக்கு இந்த நூறு பொன்காசைத் தருகிறேன். இதைப் பத்திரப்படுத்திவைத்து, உனக்கவசியம் நேரிடுங்காலத்தில் நீ இதை உபயோகப்படுத்தலா'மென்றான். சக்கிலி அந்த நூறு பொன்காசைப் பார்த்தபோது, உலகத்திலுள்ள திரவியத்தையெல்லாம் கண்டதுபோல அவனுக்கிருந்தது. அவன் அந்தப் பணத்தைச் சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டு தன் வீட்டுக்குத் திரும்பி வந்து, அதை வெகு கவலையோடு பத்திரமாய்ப் பூமியில் புதைத்து விட்டான்.

அவனை ஐசுவரியம் அடுத்தநிமிஷமுதல் அவனுடைய சந்தோஷமும் பாடல்களும் பறந்து போய்விட்டன. நித்திரை அவன் கண்ணை விட்டு விலகிக் கொண்டது. தீராக்கவலை, சந்தேகம் வீண்பயம் முதலியவை அவன் மனதைப் பிடித்து அரித்துக்கொண்டேயிருந்தன. இதனால் பகல் முழுவதும் அவன் கண் புதையலிருக்குமிடத்தை நோக்கிக் கொண்டே இருக்கும். இரவிலோ பூனை எலி முதலிய வற்றால் ஏதாகிலும் அரவமுண்டாகுங்கால் அவன் திடுக்கிட்டு எங்கே திருடர்கள் தன்பொக்கிஷத்தைக் கொள்ளையிட்டுக் கொண்டுபோக வந்திருக்கிறார்களோ வென்று சமுசயித்து வெகு திகிலடைந்திருப்பான். இவ்வாறு அவன் வெகு நாளாய்த் தன் பணத்தினிமித்தம்பெரிய வேதனை யடைந்து கொண்டு வந்ததால், அவன் அலுத்துப்போய்த் தன் முன்னிலைமையையும்பின்னிலைமையையும்ஒத்துப்பார்த்துத் தன்னிடத்தில் ஐசுவரியம் வந்ததோடு தனக்கிருந்த மனச்சமாதானமுஞ் சந்தோஷமும் நீங்கிவிட்டனவென் றுணர்ந்து, உடனே தன் அயல் வீட்டுக்காரனாகிய ஐசுவரியமுள்ள வர்த்தகனிடத்தில் ஓடிப்போய் 'ஐயா, நான் பட்டபாடு போதும். நீர் கொடுத்த நூறு பொன்காசையும் திரும்பக் கொடுத்துவிடுகிறேன், அதை நீரே வைத்துக்கொள்ளும். நீர் என்னிடத்திலிருந்தெடுத்துக்கொண்ட நித்திரையையும் மனரம்மியத்தையு மாத்திரம் எனக்குத் திரும்பக் கொடுத்து விடும்' என்றான்.

பொருளே கவலைக்கெல்லா மிடந்தரும்.

## பிரபஞ்ச வர்த்தமானம்

### NEWS AND NOTES

*இங்கிலாந்தில் ஸ்திரீகளின் உத்யோகம்.*

நமது நாட்டைக் காட்டிலும் இங்கிலாந்தில் கல்வி யபிவிருத்தி பெருமடங்கு அதிகமென்பதையும் அங்கு கல்வி கற்ற ஸ்திரீகளின் ஸங்கியையும் ஜாஸ்தி யென்பதையும் ஏற்கனவே பன்முறை எடுத்துக் கூறியிருக்கிறோம். இப்போது நடக்கும் யுத்தத்தின் காரணமாக, திடகாத்திரரான புருஷர்கள் ரணரங்கத்துக்குச் சென்றதனால் அவர்களுடைய உத்தியோகங்களை ஸ்திரீகள் வகிக்க வேண்டியிருக்கிறது. இப்போதும் மூன்று வருஷங்களுக்கு முன்னும் இருந்த ஸ்திரீ உத்தியோகஸ்தர்களின் சங்கியை:—

| 1914ஸு | | 1917ஸு |
|---|---|---|
| 9,500 | பாங் - நாணயக் கம்பெனியில் | 63,700 |
| 65,000 | ஸிவில் உத்யோகம் | 163,000 |
| 496,000 | வியாபாரம் | 820,(00 |
| 1,400 | கப்பல்செய்தல்' | 16,500 |

இவ்வாறு ஒன்றுக்கு ஒன்பதாக ஸ்திரீகள் உத்யோகங்களை வகிக்கக்கூடிய சக்திக்குக் காரணம் அவர்களுடைய கல்வியபிவிருத்தியே. அதே மாதிரி நமது நாட்டிலும் ஸ்திரீகளும் உத்யோகங்களை வகிக்கவேண்டியிருந்தால், பெரும்பான்மையான உத்யோகங்கள் காலியாகத்தா னிருக்கும். இங்கு ஸ்திரீகளின் கல்வி வரவர அபிவிருத்தியாகிற தென்றாலும் இங்கிலாந்திலுள்ள முன்னேற்றத்தை அது எட்டிப்பிடிக்க இன்னம் எத்தனையோ வருஷங்கள் ஆகவேண்டும்.

மற்ற, அங்கு ஸ்திரீகளும் வக்கீல் உத்யோகங்களை வகிக்கலா மென்பதற்கான சட்டமொன்று பிரபுக்களின் ஸபையில் மூன்று முறை ஒப்பேறிவிட்டது. சாமான்யர் சபையிலும் அது ஒப்பேறினால், ஸ்திரீ வக்கீல்கள் நியாய ஸ்தலங்களில் பேசுவதைக் காணலாம், லண்டன் கவுண்டிகவுன்ஸிலில் K. வாலஸ் என்ற ஸ்ரீமதி ஒருத்தி 'டிப்டி சேர்மென்' என்ற ஸ்தானத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாளென்பதைக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

* * *

*ஹிந்து மஹா நாடு.*

சென்ற மாஸம் அலகபாத்தில் கூடிய இந்திய "ஹிந்துமஹா ஸபை" யில் செய்யப்பட்ட தீர்மானங்களால் அந்த மஹா ஸபையாரும் காலத்துக் கேற்ப "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற கொள்கையை அனுஷ்டிக்கின்றனரென்பதைக் கேட்டு மகிழ்கிறோம். ஜாவா, பலி, ஸுமாத்ரா முதலிய தீவுகளிலும் பர்மா, சீனா, ஜப்பான் முதலிய நாடுகளிலும் உள்ள ஹிந்துக்களுடைய சந்ததியார்களை ஸகோதரர்களெனக் கருதுவதாயும் அவர்களுடைய முன்னேற்றத்துக்காக அந்நாடுகளுக்குத் தர்ம பிரசாரகர்களை அனுப்பவேண்டு மென்பதாயும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. ஹிந்து தர்மத்தை விட்டு, மற்றைய தர்மங்களுக்கு ஜனங்கள் போவதைத் தவிர்க்க வேண்டு மென்பதற்காகவும் இன்னொரு தீர்மானம் செய்யப்பட்டது. மற்றைய தர்மங்களில் புகுகிறவர்கள் இந்தியஜன ஸமூகத்தில் தாழ்ந்த ஜாதியார்களே யாதலால், அவர்களுடைய அந்தஸ்தை உயர்த்தி, அவர்களைத் "தீண்டாதவர்கள்" என்னும் கோஷ்டியில் வைப்பதை நிவர்த்தித்து விட்டால், கிறிஸ்தவமுஸல்மான் மார்க்கத்தை அவலம்பிக்கும் ஹிந்துக்களின் சங்கியை வெகுவாகக் குறைந்துவிடும். இவ்விஷயமாக, தாழ்ந்த ஜாதியாரை உயர்த்தும் சங்கத்தார் இச்சென்னை நகரில் கொஞ்சகாலமாக உழைத்து வருவதை நாமறிவோம். என்றாலும் "உயர்ந்த" ஜாதியான் ஒவ்வொருவனும் தன்னாலியன்றவரையில் "தாழ்ந்த" ஜதியானுக்குக் கௌரவம் கொடுத்துஅவனுடையஅந்தஸ்தை உயர்த்துவானானால், நாடு க்ஷேமமடையுமென்பதற்கு ஐயமில்லை. நாம் இப்படிச் சொல்வது "நடுக்காட்டில் கத்திய குரலாய்" முடியுமோ?

---

**சந்தாதாரர்க்கு மாத்திரம் குறைந்த விலை.**

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீராமாயண ஸாரம் ... | 1 | 0 | 0 |
| புலவர் சரித்திரதிரட்டு | 0 | 8 | 0 |
| பீமலா அல்லது திவான் மகள் | 0 | 6 | 0 |
| பஞ்சாத்திரம் ... | 0 | 8 | 0 |
| மரகதவல்லி ... | 0 | 8 | 0 |
| ருக்மிணி ... ... | 0 | 8 | 0 |

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர்.

---

# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி X } காளயுக்திஸு சித்திரைமீ : : 1918-ஸு மேமீ { பகுதி 11

## முதிர் வேனில்

### THE SCORCHING SUMMER

மண்கொதிப்ப வறல்கொதிப்ப
வளிகொதிப்ப வெண்ணுவா
ரெண்கொதிப்ப நறுநீழ
லியைமனைவிட் டகலார்க்குங்
கண்கொதிப்பக் கரங்கொதிப்பக்
கால்கொதிப்பக் கர்பகஞ்சார்
விண்கொதிப்ப வவ்வேனில்
வெம்பருவ மேவியதால்.

குலவுதனை விழுங்குவகை
கொண்டகோட் டினமாகி
யிலகரவ நாடனைத்து
மிதுசமய மெனப்பரிதி
பலகதிரும் புகுத்துடற்றப்
பண்ணியசெவ் வழிபோலு
நிலமகட னுடல்வெடிப்ப
நேர்தோன்றும் பெருங்கமர்கள்.

நலக்கதிர்செய் நம்பகையை
நான்மறையோ ரிதுகொண்டே
விலக்குவர்நாங் கொண்டிருப்பின்
மேவாதெப் பகையுமெனப்
புலத்தமைத்துக் கவர்ந்தான்போற்
பொய்கைகுளங் கானதிமுன்
னிலத்தமைத்த நீரெல்லா
நெடும்பரிதி கவர்ந்தனனால்.

தெள்ளுபுனன் மைசமிக்குத்
திரிமருப்பி னிரலையெலா
கள்ளரிய பேய்த்தேரின்
பின்றொடர்ந்து நலிந்திடுமால்
வள்ளலென வெளிக்காட்டி
வஞ்சிக்கு முலோபர்கள்பி
னெள்ளுருவறு மைப்பிணியோர்
தொடர்ந்துதொடர்ந் திளைப்பதுபோல்.

புறங்கொடாத் திறல்வீரர்
பூம்போர்வை நெகிழ்த்தகற்றிப்

பிறங்குசாந் தாற்றிவிடு
வளிக்களித்துப் பெரிதுவப்பா
ரறங்கொண்மா தருங்கணவ
ரங்கையன்றித் தடவுதலின்
மறங்கொள்குயஞ் சிவிறிவிடு
வளிதடவ வம்பவிழ்ப்பார்.

காலோடை வாவிகுள
முதலாய கணக்கிலவன்
மேலோடும் புனல்வறப்ப
வவற்றுறைமென் பறவைகணற்
பாலான வொருவனிடம்
பற்றியினி துண்டகிளை
யேலாத்துன் பவனுறுங்கா
லிரிவதென விரிந்தனவால்.

வாவிகாள் குளங்காணீர்
வற்றினீர் முன்னளித்த
மேவியவின் சுவைப்புனலால்
வீங்கினேமி துபொழுது
பாவியவைப் புனலளிப்பேம்
பற்றுமெனக் கால்வதுபோல்
பூவியன்மக் களுடம்பு
பொங்குவெயர் நீர்காலும்.

நண்ணருமிக் கொடும்பருவ
நகை தருவெள் ளொளிகாட்டி
யெண்ணுமனங் கரைந்துருக
விந்தியமு முடனுருகத்
துண்ணெனும்வெந் தீவெப்பந்
தொகுமைந்தர்க் குறுத்துதலால்
வண்ணமணி நகைத்துவர்வாய்
மடநலார் தமைப்பொருவும்.

வாங்குகட லகம்புகுந்து
வடவைவதி வதையறிந்தா
மோங்குகடல் சுவற்றவென
வுலகுரைத்த லதுபொய்யே
தேங்கியவிப் பருவத்தாற்
செறிவெப்பிற் காற்றுமை
யாங்குகுளி ரிடந்தேடி
யஞ்சியொளித் ததுபோலும்.

விவேக போதினி

தொ. 10] காளயுக்தி௵ சித்திரைமீ [பு. 11

# ஸ்ரீகிருஷ்ண லோகாகமனம்

## THE DESCENT OF THE LORD

களிநி லாவெழில் மதிபுரை முகமும்
கண்ணனே திண்கை மார்பும் திண்டோளும்
தளிமலர்க் கருங் குழல்பிறை யதுவும்
தடங்கொள் தாமரைக் கண்களும் பொலிந்த
இளமை யின்பத்தை யின்றென் றன் கண்ணால்
பருகு வேற்கிவள் தாயென நினைந்த
அளவில் பிள்ளைமை யின்பத்தை யிழந்த
பாவி யேனென தாவி நில்லாதே.—
—பெருமாள் திருமொழி.

"நீ யல்லால் எமக்குச் சரணில்லை. நீயே உண்மைக் கெல்லாம் உறையிடம். நீயே முச்செயல்புரிந்து முக்காலமும் விளங்கும் மூலப் பொருள். இம்மாய உலகை ஒரு பெரு மரமெனச் சொல்லலாம். ப்ரகிருதியென்னும் அடிமரத்திலிருந்து, ஸத்வரஜஸ்தமோ குணங்களென்னும் வேர்களை வீழ்த்தி, அறம்பொருள் இன்பம் வீடென்னும் நான்கு ரஸங்கள் ஊற, ஐம்பொறிவாயிலிற் பாய்ந்து, காமாதி ஷட்வர்க்கங்களை வெளியிட்டு, தோல் நரம்பாதி எழுவகை தாதுக்களாகிய பட்டைகள் போர்த்து, ஐம்புலன்கள், மனம், அறிவு, அகங்காரமென்னும் எட்டுக் கிளைகளை விட்டு, பிராணாயாமப் பிரத்யாஹார இலைகளுடன் தவழ்ந்து, இன்பதுன்பமென்னு மிரண்டு பலன்கள் காய்த்து விளங்கும் அம்மரத்தில், ஜீவாத்மா, பரமாத்மா வென்னும் இரண்டு பக்ஷிகளன்றோ நாடி விளங்குவன? நீயே செயல்களுக்கெல்லாம் ஆதாரம். ஆக்கி, அழித்து, அழிப்பவனும் நீதான். மாயையால் அறிவு மங்கியவர் பார்வைக்கு உன் உண்மை நிலை விளங்குவது எளிதல்ல. உன் உருவெல்லாம் அறிவே யாகும். இந்நிலையற்றவுலகில் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தமாக வேண்டிய உரு நீ கொள்வாய். செந்தாமரைக் கண்ண! உனது பாத பங்கஜமென்னும் ஓடையில் பதிந்து பரம ஞானியர் பவக்கடலைக்கடக்காநிற்கின்றனர். உத்தமர்க்கு நீயே உறவு. கருணைக்கடலே! உன்னை நினையாது, எல்லாம் தம்மாலேயே நடக்கின்றனவென்று அகந்தையோடு தர்க்கிப்பார் எவரும் ஞானமுணர்ந்தவ ராகார்; அவித்யையிலே அவர் மூழ்கி விளங்குவர். அந்நிலையாருது அறிவெப்பொழுதும் மங்கியே கிடக்கும். எனவே, அவர் அதோகதி அடைவர். உன்னைச் சரணடைந்தார்க்கு ஒரு துயரு முறாது. லோக ரக்ஷணார்த்தமாகவே, நீ மானிட உருவங் கொள்கின்றனை. அதனாலன்றோ ஜனங்கள் உன்னை வேதத்தாலும், ஜபதபங்களாலும், யோக வழிகளாலும் வணங்குகின்றனர். நன்மையே உருவெடுத்த இவ்வடிவம் உனதல்லதேல், அவித்யையால் ஏற்படும் பேதபுத்தியை யறப்போக்கி விளக்கும் பரமஞானமும் உனதல்லவாகும். குணத்தாலன்றி உருவால் உன்னை அறியொணாது. காண்பானும் காண்பிப்பவனும் அவ்விரண்டிற்கும் சாக்ஷியாக விளங்குபவனும் நீயே அன்றோ? எனினும், தர்மகர்மவழியி லீடுபட்டவர் உன்னைக் கண்டானந்த மடைகின்றனரே! நடந்தாலும், இருந்தாலும், நவின்றாலும், கண்டாலும், கேட்டாலும், உண்டாலும், எச்செயல் புரிந்தாலும் உன் நாமஸ்மரணையி லீடுபட்டார் பிறவாழி கடந்திட்டார் அன்றோ? உனது அடிச்சுவடுகள் இனி இப்பூமிமேல் பட்டு அதைப் புனிதமாக்கி அதன் பாரத்தை யொழிக்கும்; உன் கருணைப் பிரவாஹத்திலதைக் குளிப்பிக்கும்; வானையும் அருள் கொண்டு காக்கும். எல்லாம் உனது திருவிளையாடல்! என்றும் பயமற்றவனே! நீ இவ்வுலகிடைச் சிறிதும் நஷ்டனை கொண்டவனல்ல. மத்ஸ்யாதி அவதாரங்கொண்டு முன்னெம்மைக் காத்தனை. இப்போதும் அவ்வாறே செய்வாய். ஹே! யதுபுங்கவ! யாதவ வீரே! உன்னை வணங்குகிறோம்! கொண்டாடுகிறோம்! உனக்கனந்த கோடி நமஸ்காரம்!"

இவ்வாறு நாரதர், தமது மஹதி யென்னும் யாழை மீட்டி எம்பெருமானது வரவை எச்சரித்துத் துதித்துத் தேவகானஞ் செய்துகொண்டிருந்தனர். அப்பொழுதே உலகெங்கும் அளவுகடந்த பேரொளி பிறங்கியது. அதைக் கண்ட எவர் மனமுங் கிளைக்கா திராது. கம்ஸன் கண்முன்னும் அவ்வொளி பளபளத்த வண்ணமாகவே இருந்தது. ரோஹிணியுடன் குலாவிக் கொண்டிருந்த சந்திரனும் அக்காந்திமுன் இருக்குமிடந் தெரியாதிருந்தான். அவ்வொளியின் பெருக்கில் மற்றச் செயல் முழுதும் தம்பித்து உலகம் மயங்கிக் கிடந்தது. அது ஒரு க்ஷணநேரம். அடுத்தநிமிஷம், கம்ஸன் தன்னிலை யடைந்து, எண்ணாத வெல்லாமெண்ணிக் கலங்கிய மனத்துடன் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தான்; அவன்தான் என்ன எண்ணியதாக நினைத்தறிய முடியாது மயங்கியிருந்தான்; அவ்வொளிதன்னை வெருட்டவந்ததாக நினைத்தான்; பார்க்கப்பார்க்கக் கண்கூசிய அவ்வொளியைக் காணத் திகிலடைந்தான்; மனம் வெருண்டான்; ஆயினும் இன்னது செய்வதெனத் தெரியாது திகைத்தான். இடையே தன் கண்முன் பற்பல தோற்றங்கள் தோன்றுவன போலப் பட்டதாயினும், தன் எண்ணங்களால் தோன்றிய தோற்றங்களென அவற்றை எண்ணித் தன்னைத் தானே தேற்றிக் கொள்வன். வேறென்ன செய்வன்? கலங்கிய நித்திரையுடன், படுக்கையில் அவன் புரண்டுருண்டுகொண்டு பல்வேறு சிந்தைக்காளாகிச் செயலற்றிருந்தான். அதன் மயக்கால் அவன்முன் இருப்பனவாவது, நடப்பனவாவது தெரியவில்லை. மனமில்லாவிடில் உருவமெப்படி ஏற்படும்?



ஸாயங்காலம் முழுதும் சூரியன் என்றுமில்லாப் பிரகாசத்துடன் விளங்கி, வரவரத் தன்னைப் பிரதிபலித்து அலை எறிந்து எழுச்சியுடன் விளங்கிய யமுனையாற்றை நோக்கித் தனது வர்ணம் பலவிதமாகச் செழித்துத் தோன்ற நெகிழ்ந்து கொண்டிருந்தான். அந்நீரில் ஆடி விளையாட அவனுக் கானந்தம் எழுந்ததுபோலும்! அன்றேல், அவனுக்குப் பூமியைத் தாவி வெகுவேகமாக வரக்காரணமெது வோ? யாவரும் காணாக் காட்சியை யவன் கண்டனனோ? காலங்கடந்த பேரொளியுருவம் இளமுருவங் கொண்டு, மானிட இதயத்தொடுதுடித்து; அன்புமடைபாயவக்திருப்பதையவனொரு வேளை எவரு மறிவதன்முன் அறிந்து, அதைக் கண்டு அஞ்சலி செய்யவென்றே யமுனைநீரில் குளித்தனனோ? என்னவோ? எப்படி யிருப்பினும், தன் காலகதி பற்றியீர்க்க அவன் மனச்சமாதான மில்லாது அந்த யமுனையுள் குடபால் பாய்ந்து குளித்து விட்டான். மங்கிய மேகம் படர்ந்து, மாலை தோன்றி, அவ்வழகிய ரோஹிணி என்னும் நக்ஷத்திரத்திடை மதியந் தோன்றித்தவழ்ந்திருந்தது. ஆயினும் காலமாக வாகக் கருமேகக்கூட்டம் குலாவி, அந்தப் பிரதேசத்தைஇருளில் ஆழ்த்தி, ஒளியின்றி விளங்கும்படிச் செய்தது. நடுநிசி வேளையாயிற்று. பெருமிடி முழக்கத்துடன் கனத்த மழை பெய்ய, சஞ்சாரமென்பதற்று, அந்தகாரம் எங்கும் குடிகொண்டது. பலநாள் உலகில் குடிகொண்ட பாவத்தொகுதியை அறப்போக்கிப் பூமியைப் புனித மாக்கவென்றே அம்மழை நெடுநேரம் இடைவெளி சிறிதுமின்றி அவ்வாறு பெய்ததுபோலும்! வானத்தைக் கிழித்து வெளிவந்த மின்னொளியன்றி வேறு ஒளியங்கில்லை; மழையின் ஆரவாரமும் இடி முழக்கும் அல்லாது வேறொலியும் அங்கில்லை. அப்பொழுதுதான் தளையிற்பட்டுத் தன் துயரைப் பங்குகொண்ட தன் தலைவனன்றி வேறு துணையின்றி விளங்கிய தேவகியும், தன் காராக்ரஹத்தில் ப்ரஸவ நோயிடைப்பட்டுச் சிறுவலிக்கும் பெருவலிக்கும் ஆளாகிக் கீழ்மூச்சும் மேல்மூச்சுமாக அங்கந் தளர்ந்து, தன் நாதனை அருகே வரும்படி வேண்டி, அன்புடன் கடவுளின் வரவை ஏற்க அவரைத் துதிக்கவென் றுரைத்தாள். அவ்விருண்ட வறையில் தளையிற்பட்ட கைகளைத் தலைமேற் கூப்பி மனமொடுங்கி, சுத்தமான அந்தக்கரணத்துடன் அவ்விருவரும் மூல முதற்பொருளாகிய மூவாமருந்தை, புறஞ்செல்லா மனத்துடன் பற்றறத் துதித்தனர். அவ்விருவரும் ஏகோபித்துத் துதித்த ஒலியுடன், தெரியாது வெளிவந்த தேவகியின் பிரஸவவேதவலியும், வானத்துக் கவிந்த மேகக்குலத்தில் பூத்த மின்னிடியின் ஒலியும், இவற்றின் மயக்கை எட்டிப் பார்க்கவென்று எழும்பி வழிந்த யமுனைப் பெருக்கின் ஒலியும் மயங்கி விளங்கின. அவை அந்த அந்தகாரத்தையே தெய்வீகத்தில் ஆழ்த்தியதென்ப திழுக்காகாது. ஞானாநந்த வெள்ளந் ததும்பி அருளலைவீசித் தன்னிடைப்பட்டவரை யெல்லாம் பவித்திரமாக்

திக்கையேற்றும் பேரொளிதான்-அப்பொழுதங்கு அகண்டாகாரமாக ஏகோபித்துப் பரந்து திரண்டு. காணக்கூடாக் கதிரொளியாகப் படர்ந்ததுவோ! அவ்வொளியேதான் கம்ஸனையும் மயக்கத்தில் ஆழ்த்தியதன்றே!

தேவகியின் பிரஸவ வலி அதிகமாகவாக வஸுதேவர்க்குப் பயம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. எனினும், இவ்வொளியைக் கண்டதும் அவர் அறிவற்றுச் செயலற்றுத் திகைத்து ஐம்புலன்களின் வியாபாரங்களற்று விளங்கினர். அதே ஸமயம் தேவகியின் துயரமும் நீங்கி இதயங் களித்தது. அவள்முன் கண் காணாச் சேர்வையாகப் பல்லாயிரஞ் சூரியவொளியு மொக்கக் கலந்தாலும் ஒப்பாகா ஜோதி வடிவம் தோன்றியது. அதைச் சுற்றிலும் படர்ந்திருந்த பருதி வட்டம் அவ்விருட்டறையின் இருளை யறப்போக்கியது. அவ்வடிவம் வரவரப் பரந்து மானிட மஹாபுருஷ உருவத்துடன் திகழ்ந்து, நீர்கொண்ட மேனியென்ன வன்னந்திரண்டு, கௌஸ்துப மணிந்து,-நான்கு கையும் ஆஜாநு பாஹுவாக வளர்ந்து, சங்கம், சக்ரம், வில், வாள், கதை என்னும் பஞ்சாயுதங்களோடு திகழ, அரையில் பீதாம்பர முடுத்து, வனமாலை யணிந்து, சிகபிஞ்ச மௌளியாய், வாகுவலயந் தாங்கி, கருணை விலாஸம் பொங்குங் கண்கள் காதிற் பதிந்த குண்டலங்களை வளைந்து தாக்க, வாய்ப் பவழக்கொடிகளிடை மின்னற்கொடிபடர்ந்து இளநகை யரும்பிட் டொளிர்க்க, ஸர்வபூதங்களுக்கும் சின்னுயிராக விளங்கும் வாயுவைத் தன்நாசிகள்வாய்வாங்கிவிடுத்து, எதிரேயிருந்த தேவகி வஸுதேவரது உள்ளங் களிக்க வந்த பும்ஸ மோஹன உருவமாகத் தோற்றியது. அதைக் காணுந்தோறும் அவரிருவரும் உள்ளம் பூரிப்பர்; ஆர்ப்பர்; கொக்கரிப்பர்; கூத்தாடுவர்; நெக்கு நெக்குருகிப் புளகாங்கிதமாவர். அவர் நிலைமை எத்தகைய தென்பது? சுத்த மனத்தாராகிய அவ்விருவரும் தம்முன் தோன்றியது பரம காருண்ய மூர்த்தியாகிய ஆதிமூலமென உணர்ந்து, அஞ்சலி பத்தராய் அதைத் துதித்துப்போற்றி அணைந்தனர். கட்டி முத்தமிட்டெனத் தன் கையை எடுத்த தேவகி, அதில் விலங் கொன்றுமில்லாமலிருப்பதைக் கண்டதிசயமுற்று, இதுவும் எம்பெருமான் மாயைதானென எண்ணி அவரது பரம காருண்ய குணத்தில் ஈடுபட்டு விளங்கினள்.

அச்சமயம் உலகமே அன்புகொண் டெம்பெருமான் வரவைப் பாடிக்கொண்டிருந்ததெனலாம். கருமேகக் கூட்டங்கள், பூமிதேவியின் அங்கம் குளிரத் தாரைதாரையாக நீர் பெய்து, இடிமுரசறைந்து, மின்னல் விளக்கிட்டுக் கடவுட் குழந்தைப் பிறப்பைக் கொண்டாடின. தேன் வண்டுகள் தமது ரீங்காரமிட்டுப் புஷ்பக்ரஹங்கள் தோறும் நாடி, மகரந்தப்பொடியை வாரிக்காற்றிற் பரவச் செய்தன. காடுகள் முழுதும் பட்சி ஜாலங்களின் இனிய கீதம் இருந்தாற்போல விருந்து எழும்பியது. இளந்தென்றற் காற்று அவற்றுடன் குலாவி விளையாடி, வாடிய மனதைக் களிக்கச் செய்தது. சுத்தாத்மாக்களின் இதயம் தமக்கேதோ நல்ல லாபம் கிடைத்ததென எண்ணியவாறு கிளுகிளுத்துத் துடித்து அன்பைப்பெருக்கிற்று. மேகக்கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு நக்ஷத்திரங்களும் கடவுட்குழந்தையைக் காணவெனக்கிளம்பித் தம் சிற்றொளியால் அதன் சிற்றுருவின் பெருமையைவிளக்கின. எங்கும் ஓர்விதமான நன்மணம் கமழ்ந்தது. பிறப்பற்ற பரம்பொருள் தம் இச்சைப் பெருக்கின் 'வானுடர் வந்து தொழ மண்ணுடர் யாவரையுமடிவிக்க' உருக்கொண்டபொழுது தேவதுந்துபிகள் முழங்கின; காந்தாம்பாடி கந்தருவர் களித்தனர்; தேவ மாதர் களித்தாடினர்; சித்தசாரணர் தேவகீதம் பாடித் துதித்தனர்; வித்யாதரர்கள் பூமாரி பெய்தனர்; மற்றுந் தேவர்கள் பல்லாண்டிசைத்துச் சோபனம் பாடினர்.

இக்கோலாஹலத்திடையே வஸுதேவர் தம் கண்முன் தோன்றிய திவ்யமங்கள விக்ரஹத்தைக் காணுந்தோறும், அன்புநெக்குருகி, உடல்பரவசமாய் "என் ஐயனே உன்னை யான் முற்றும் மறந்தேன்; பிறவாழி கடந்தேன். ப்ரக்ருதியின் புருஷன் நீயேயல்லவா? உன்னை வர்ணிப்பது என் தரமா? அது வாக்கிலடங்காதன்றே! ஆக்கி அளித்து அழிக்கும்பொருளாய் நின்றனைவற்றுள்ளும் கலந்தும்கலவாதுபோல் விளங்கினவற்றிற்கும் ஆதாரமாகி விளங்குகின்றனை. என் அப்பனே! நீ அவதாரர்களாகிவிளங்கும்லோகத்தசர்களையழிக்கவென்றே இவ்வேழையின் சிறுகுடிலில் அவதரித்தனை, அதுவே



எனது பாக்யம். அக்கன்னெஞ்சக் கொடியனை கம்ஸன் உன் முன்னோரைக் கத்திக்கிரையாக்கினன். அந்தோ! உன் பிறப்பின் விஷயமும் அப்பொழுதே அவன் காதிலெட்டியிருக்கும்—" எனத் தன்முன் தோன்றிய, உருவிடம் வெளியிட்டுக்கொண்டிருந்தனர்.

அதுகாறும் அம்மங்களவடிவின் அமைப்பை அடிமுதல் முடியின் காறும் பார்த்துப் பார்த்துப் பரமானந்த முற்ற தேவகி,

தோள்கண்டார் தோளே கண்டார்
தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்
தடக்கைகண் டாரும் அஃதே
வாட்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முழுதுங் கண்டார்?

என்ற கேள்விக் கிடந்தராது, அதன் ஸர்வாங்க லக்ஷணத்தி லீடுபட்டுத்

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கனணி நிறமுங் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கைக் கண்டேன்
என்னாழி வண்ணன்பா லின்று"

என உள்ளம் களித்தனள்; அதன் அழகை வர்ணித்தனள்; "நன்மைக்கெல்லா மிருப்பிடமாகிய நீயே எனக்கு அடைக்கலம். உன்னையல்லால் உண்மையில்லை; உறவுமில்லை. உன்னைக் கண்டால் காலபயம் பறந்தோடிவிடும். உன்னை யான் கைக்கொள்ளத் தன்யனானேன். என்பிறப் பீடேறிற்று. உன் பிறப்பால் என் பிறப்பற்றது. இது உன் திருவிளையாடல்போலும்! தியானமூர்த்தமாக விளங்கும் இம்மங்களவுருவை எவரும் எளிதில் காணும்படியாக வைத்துக்கொள்ளற்க; உன் பிறப்பை அக்கொடும் கம்ஸன் அறியாதிருப்பனாக! என் வயிற்றிருந்து வந்ததாகவும் அவன் அறியானாக! அந்தோ! கம்ஸன் என்றால் என் வயிறு கலங்குகிறது; நெஞ்சம் பதைக்கிறது; எனக்கென்னவென்னவோ திகில் உண்டாகின்றது. இந்நான்கு கரமும் பஞ்சாயுதமுங் கொண்ட மங்கள உருவை மாற்றிடுக! அண்டமனைத்தையும் கர்ப்பத் தடக்கிய ஆதிபுருஷன் நீயன்றே! அப்படியிருக்க, என் கர்ப்பத்துத் தோன்றினையென்றால் உலகம் சிரியாதோ" எனச் சொல்லித் தன் தெய்வீக மகனைத் துதித்தனள்.

இவ்வாறு துதித்த தேவகியைத் தேற்றி அவளது முற்பிறப்பின் வைபவத்தை எடுத்துரைத்துத் தன் தாய்தந்தைய ரிருவரையும் நோக்கி "இனி தாமதியாது நான் சொல்வதைச் செய்யும். எனது யோக மாயையே, உமது எழாவது மகனைக் கர்ப்பத்திருந்து என் ஆணைப்படி கலைத்து, எனக்குத் தாயான ரோஹிணி தேவியிடம் சேர்ப்பித்து, மகனாக பிறக்கச் செய்தது. மற்று இந்த யமுனைக்கு அக்கரையிலிருக்கும் நந்தகோபர் மனைவிக்கு அந்த மாயையே பெண்ணாக அவதரித்துள்ளாள். எனவே, தாமதியாது நீங்கள் சிசுரூபமாகும் என்னைக்கொண்டு அக்கரை கடந்து, நந்தகோபர் மனைவியாகிய யசோதை பிரஸவித்துள்ள இளஞ்சிசுவாகிய யோகமாயையை எனக்குப் பதிலாய் எடுத்துக்கொண் டிங்குவந்துவிடும். இதில் பயமொன்று மில்லை. எல்லாம் நன்மையேயாய்முடியும். கவலையொழிக! சீக்ரம்! சீக்ரம்!" என எச்சரித்துக்கொண்டு அங்கு தன் உண்மைஉருவுடன்விளங்கிவந்தஎம்பெருமான், அவர் கண்முன்னேயே இளஞ் சிசுஉருவாய், க்வா க்வாஎனக் கத்தஆரம்பித்தனர். அக்குழந்தை 'வரவு உலகிற்குண்மை யுறவன்றா?

## ராய்பகதூர் பங்கிம் சந்திர சட்டோபாத்யாயர், ஸி. ஐ. ஈ.

## RAI BAHADUR BANKIM CHANDRA CHATTERJEA, C. I. E.

கைப்பொருள் கொடுத்துங் கற்றல்
கற்றபின் கண்ணு மாகும்;
மெய்ப்பொருள் விளைக்கும்; நெஞ்சின்
மெலிவற்கோர் துணையு மாகும்;
பொய்ப்பொருள் பிறகள்; பொன்னும்;
புகழுமாக் துணைவி யாக்கும்;—
இப்பொருள் எய்தி நின்றீர்
இரங்குவ தென்னை யென்றான்.

—சீவகசிந்தாமணி

இவ்வுபதேச மொழிகள் எக்காலத்திற்கும் பொருந்தும், கல்விப்பெருக்கால் மனித ஜன்மத்திற் குண்டாகும் அளவற்ற நன்மையைப்பற்றி விரித்துரைத்தல் மிகையாகும். படித்தவரால் உலகிற்கேற்படும் நன்மைகளை விஸ்தாரஞ் செய்வதும் அநாவசியம். ஆயினும் அத்தகையாரதுவாழ்க்கையைக்கவனிப்பது, நமது அறியாமையைப் போக்கும். கல்வி

யால் பிரக்யாதிபெற்று வங்கபாஷைக்கே புதிய உயிர் தந்து அதைக் கற்றோனைவருங் கவனிக்கச் செய்தவருள் பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயர் ஒருவர்.

இவர் 1838-ம் ௵ பிறந்தவர். இவர் தந்தை யாதவசந்த்ர சட்டோபாத்யாயர் டெப்டி கலெக்டர் உத்யோகஞ் செய்துவந்தவர். பங்கிம் பாபு முதல் முதல் ஹூக்ளி கலாசாலையில் படித்துப் பிறகு கல்கத்தா இராஜாங்கக் கலாசாலையில் படித்தனர். வங்காளத்தில் ஏற்படுத்திய கல்கத்தா ஸர்வகலாசாலையில் முதல் முதல் பி. ஏ. பட்டம் பெறும் பாக்யம் இவரதே. இவர்க்கு ஆதிமுதல் பத்ரிகை நடத்தும் வியவஹாரத்தில் அதிக அவா உண்டு. பி. ஏ. பரீக்ஷைக்குப் போகுமுன்பே பத்திரிகைகளுக்கு எழுதுவதல்லாமல், அக்காலம் ஈச்வரசந்த்ர குப்தர் என்பவர் நடத்திவந்த 'ப்ரபாகர்' என்னும் பத்ரிகை ஆபீஸில் பத்ரிகைகளை நடத்தும் விஷயங்களில் அநுபவம் பெற்றிருந்தார். எனினும் அவர் பி. ஏ. பரீக்ஷை தேறியதும், டெப்டி கலெக்டராக நியமிக்கப்படலே, அவர் விருப்பத்திற் கிடையூறு வந்ததுபோலும்! என்றாலும் சிறு நாள் கற்ற நூல் பழக்கமும், ப்ரபாகர் பத்ரிகைச் சாலையில் பெற்ற அநுபவமும் அவரைச் சும்மா இருக்கவிடவில்லை.

இதற்கு அக்காலத்து வங்காளத்து நிலைமையே காரணம். மதுஸூதன தத்தர் தமது பாவினங்களின் பெருமையாலும், கவி சமத்காரத்தாலும் வங்கபாஷையின் யாப்பு நிலையை நவீனமாக்கிப் புதுமையாகச் சிருஷ்டித்தெங்கும் புகழ் பெற்றனர். அச்சனங்களுள்ளும் பாஷாபிவிருத்தியைப் பற்றிப் பெருங்கவலையும் சிரத்தையு முண்டாயிற்று. வங்கபாஷைக்கே ஒருவித இளமையும் யௌவனமும் இருந்தாற்போல இருந்து உண்டாயிற்று. இக்காலத்தில் விளங்கிய பங்கிம் பாபுவுக்குத் தாமும் நூலெழுதி அழியாப் புகழடைய வேண்டுமென்ற பேராவலுண்டான திசயமாகாது. ஆனால் மதுஸூதனருடன் போட்டி போடத்தக்க கவனசக்தியில்லையென்பது பங்கிம்பாபு நங்குணர்ந்தவராதலால், ஆங்கில நாட்டில் பைரன் மஹாகவி தோன்றியதும், ஸர் வால்டர் ஸ்காட் என்னும் கவிமான் தன்கவிக் கடையைக் கட்டிவிட்டு அத்யத்புதமான நவீனங்களெழுதும் நூலாசிரியர் ஆனதுபோலப் பங்கிம் பாபுவும் வங்கபாஷையில் அணித்தரமான நவீனங்களெழுதக் கங்கணங்கட்டிக் கொண்டனர். சிலவேளைகளில் அவர் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் எழுதிய நூல்களைப் பாஷாந்தரப்படுத்த அபீஷ்டப்பட்டனராயினும் அது ஈடேறுவது கஷ்டசாத்யமல்லவெனக் கைவிட்டனர்.

இவ்வாறவர் நிச்சயித்ததும், இந்திய சரித்திரங்களையே ஆதாரமாகக் கொண்டு தமது முதல்முதல் நூலாகிய துர்க்கேசநந்தினி என்றும், இன்றும் வங்கபாஷையில் மிகச் சிறந்த கிரந்தமாகக் கருதப்படும், நூலை வெளியிட்டனர். அதன் உயர்ந்த பாவப்போக்கும், விசித்திர அமைப்பும், அலங்கார பாவனாகர்ப்பமும், கவி சாதுர்யவைபவமும், நடையின் அழகும், படிப்பார்தம் மனதைக் கவரும் பான்மையும், இவற்றை வங்கபாஷையின் வசனநூல்களைச் சர்ச்சை செய்யும் எவரும், புகழாதிரார் என்பது திண்ணம். எனினும், இப்புத்தகம் எழுதியதும், பங்கிம் பாபு, பலர் வாயில் நுழைந்து வெளிவர வேண்டியிருந்தது. அவர் வழக்கம் போன்ற வசனரசனை வழிகளைவிட்டுத் தமக்கெனவே புதிதான சிலவழிகளை ஏற்படுத்தும் தைர்யம் கொண்டதே அதற்குக் காரணமேயன்றி வேறல்ல. கட்டிய வீட்டிற்குப் பழுது சொல்வது வெகு கஷ்டமா? எனினும் பங்கிம் இவர்களது மொழிகளைச் சிறிதும் கவனியாது தன் காரியத்தின்மேலே கண்ணாயிருந்தார்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையுமேற் கொள்ளார் செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்."

என்பது கவிவாக்கன்றோ? எனினும் பங்கிம் வங்கபாஷையையே புதிப்பிக்கும் சாதனமாக்கித் தன்னைப் பரிஹஸித்தவரும் போற்றும் படியான நிலைமையடைய அவர் அடங்கா முயற்சி யிடந்தந்தது.

துர்க்கேசநந்தினியை மதிப்பாசிரியர் அக்காலத்து வெகு அன்புடன் ஏற்கவில்லை. அதன் சைலி வெகு தீவிரமானதென்றும் கதையின் ஒழுங்கு அத்புத கல்பனையாகவும், அதில் இடையிடைத்தோன்றிய அபிப்பிராயங்கள் இயற்கைக்கு மாறானதென்றும் அவர் கண்டித்தனர். எனினும் தீர நெஞ்சம் படைத்த பங்கிம் பாபு அந்நவீனத்தைப் போன்ற சைலியிலே



யே புது புதுத் துறைகளின் வாயிலாக பல நவீன நூல்கள் இயற்றினர். குழந்தை பிறக்கும்போது அதனுடன் தோன்றுங்கல்மஷங்கள் தாமே யகல்வனபோலப் பங்கிம் பாபுவின் புகழும் களங்கமற்று மேலோங்க ஆரம்பித்தது. அடங்கா ஊக்கத்துடன் அவரெழுதிய அற்புத நவீனங்கள், படித்தறிந்த பெரியோரது வெறுப்புக்கு முதலில் பாத்திரமாயிருந்தனவேனும், வர வர அவரே அவற்றின் சௌலப்யத்தைக் கண்டு பன்முறையும் படித்துப் பரவச மடைவதாயினர். இச்சமயமே பங்கிம்பாபு கபால குண்டலா என்னும் அதிசயோத்தி நிறைந்த அற்புத நூலை வெளியிட்டனர். அதன் உற்பாத கற்பனையும், வெண்பொருளின் பொருள் மிகுதியும், தட்டற்று ஒழுகும் நடையும், அவரை வங்கபாஷா சிருஷ்டித் தலைவராக மதிக்கச் செய்தன. அடுத்ததும் அவரெழுதிய மிருநாளினி என்னும் நூலில் உலக வழியின் அநுபவங்களை வெகு விசித்திரமாக அபார அநுபவத்துடன் வெளியிட்டனர். இயற்கையுடன் பேசும் இசைவன்மை கொண்ட நாவலனாக இச்சமயம் பங்கிம் பாபுவை யாவரும் மதித்தனரென்பது மறுக்க முடியாத விஷயமாகும்.

இவ்வாறு பலநூல்களை எழுதியதும், பங்கிம் பாபுவுக்கு வங்க பாஷையைச் சிறந்த சாஸ்திர நுட்பங்களையும், ஜனங்களின் மனதைத் திருத்தி நிஷ்களங்கராக்கச் செய்யும் போதனைகளையும் ஏற்குங் கருவியாக்கி, தனது அநுபவஸ்தானத்திலிருந்து வெளியிட்டுப் பொது ஜனங்களைச் சீர்திருத்த வேண்டும் என்ற பேரவா உண்டாயிற்று. இவ்வவாவே அவரை 1872-ம் ௵ வங்கதர்சன் என்னும் மாதாந்தப் பத்ரிகையை வெகு சிறப்புடன் நடத்தச் செய்தது. அதன் வாயிலாகப் பங்கிம் பலவித கதைகளையும் போதனைகளையும் பிரசுரித்து வங்காளிகளின் லௌகிக ஸமஷ்டி விஷயங்களைப் பன்முறையும் கண்டித்துச் சரியான வழியில் ஓடச் செய்ததன்றி, இலக்கியம், தத்துவம், விஞ்ஞானம், முதலிய அரிய விஷயங்களைப்பற்றிய முதல் தரமான சர்ச்சைகளையும் வெளியிட்டனர். அதன் பக்கங்களில் வெளிவந்த 'பிஷ ப்ருக்க' அதாவது 'விஷ விருக்ஷம்' என்னும் நவீனம் பொது ஜனங்களால் வெகு ஆதரவுடனும், அன்புடனும், அளவற்ற மதிப்புடனும் ஏற்கப்பட்டது. இக்கதையில் வங்காளிகளின் ஜனஸமூக வாழ்க்கையின் தன்மை வெகு நுட்பமாக விளக்கப்பட்டிருந்ததே பாமரரஞ்சகத்திற்குக் காரணம் போலும்! இந்நூல் ஆங்கிலத்திலும், மற்றும் மேனாட்டுப் பாஷைகளிலும் பாஷாந்தரப் படுத்தப்பட்டதென்பது அதற்கிழுக்காகாது. அதைஆங்கிலத்தில் மதிப்பிட்ட ஜேம்ஸ் டார்மேஸ்டேடர் என்பவர் வங்கபாஷையின் முதல் கற்பனை நூலாசிரியரால் இந்நாட்டிலிதுவரையும் அக்கால ஜனங்களின் பரம்பர நடைநொடி பாவனைகளைப்பற்றி வெகு கண்டிதமாக எழுதப்பட்ட நவீனமாக அதைக் கொண்டாடினர். அந்நவீனத்தை ஆங்கிலத்தில் பாஷாந்தரப்படுத்திய மிஸ்ஸஸ் நைட் என்னு மாதரசி, அந்நூல் ஆங்கில நாட்டில் வெளிவரத்தக்க யோக்யதை ஏற்றதாகத் தன் உள்ளக் கருத்தை வெளியிட்டனள். இவ்வபிப்பிராயங்களெல்லாம் பங்கிம் பாபுவின் சிறந்த ஞானத்திற்கும், கதை எழுதும் திறத்திற்கும் அவரது அநுபவப் பெருக்கிற்குமே சான்றாகும்.

பங்கிம்பாபு எழுதிய நவீனங்கள் கணக்கில் அடங்கா. அவரெழுதிய சந்திரசேகரன் சீர்கெட்ட மனத்தை வழிப்படுத்தும் பெருமையை வெளியிடும். சீதாராமன் என்னும் நூல் அவரது சரித்திர ஞானத்தைத் தெற்றென விளக்கும்; ஆனந்தமடம் அளவற்ற ஆவலையூட்டி எம் மனத்தையும் பரிக்கும்; வந்தேமாதரம் என்னும் பதங்களைச் சிருஷ்டித்த பெரும்பே றிந்நவீனத்திற்கே உரியது. மற்றும் அவர் எழுதிய நூல்கள் அநந்தம். அவற்றுள் முக்யமானவை கிருஷ்ணகாந்தரது உயில், தேவீ சௌதுராணி, ராஜஸிம்ஹன் முதலியன. நாவல்களன்றி சில ஹாஸ்யநூல்களும் பங்கிம் பாபு இயற்றியுள்ளார். லோக ரஹஸ்யம், கமலகாந்தனது தஸ்திரம் என்னும் நூல்களில் வங்காளிகளின் சில துர்வழக்கங்களைப் பரிகசித்துக் கண்டித்தனர்.

வரவர பங்கிம்பாபுவுக்கு லோகாயத ஞானங்களில் வெறுப்பேற்பட்டதற்கு அவர் விருத்தாப்பியமே காரணம். எனவே, அவர் தமது வயோதிக காலத்தில் தமது வியவஹாரங்களையெல்லாம் பாரமார்த்திக வழியிலியே செலவிட்டனர். இக்காலங்களில் அவர் வேதங்

களைப் பன்முறையும் படித்துக் களிக்கொண்டு அவற்றிலாழ்ந்து பரவசமெய்தினர்; ஹிந்து மதத்தின் மங்கிய சாயையை ஒழித்து அது நிஷ்களங்கமாகப் பிரகாசிக்கச் செய்ய அவாக்கொண்டனர். ஸ்ரீகிருஷ்ணபகவானே அவரது மனனமூர்த்தமாக விளங்கியதிங்கு மதிக்கத்தக்கது. அவரைப் பங்கிம்பாபு உலகத்திற்கு உண்மைவழிகாட்ட வந்த உத்தமோத்தமராகக் கருதிப் பூஜித்தனர். அவரது சரிதையையும் அதிவிஸ்தாரமாக எழுதிவெளியிட்டனர். இந்நூலே பங்கிம் பாபு எழுதியவற்றுள் முதற்றரமான தெனின், அவரது மற்றைய நூல்களுக்கிழுக்காது. ஸ்ரீகிருஷ்ண சரித்ரத்திலன்றி, தர்ம தத்துவம் என்னும் நூலினும் வைதன தர்மத்தின் மெய்ஞ்ஞானப் போக்கையும் விஞ்ஞானத்தோடு ஒற்றுப்பாடுடன் விளங்கும் வைபவத்தையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

பங்கிம்பாபு வங்காளியிலன்றிச் சம்ஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் நல்ல மேதாவி. முதன் முதன் ஆங்கிலத்திலேயே அவர் நூல் எழுத அவாக்கொண்டு அப்போது நடைபெற்றுவந்த இண்டியன் பீல்ட் என்னும் பத்திரிகையில் ராஜமோஹனன்மனைவி என்னும் நவீனத்தை ஆங்கிலத்திலேயே எழுதினார். ஆனால் அன்யபாஷையில் முதன்மையடைவது அசாத்யமெனக் கண்டு பின் எழுதுவதை விட்டனர்போலும்!

சர்க்கார் வேலையில் உழைத்தும், தமது வேலையிடங்கொடுத்த எஞ்சிய வேளைகளில் ஊக்கங்கொண்டு, மனங்குன்றாது, தன் தாய்பாஷைமேல் பேரன்பு வாய்ந்து, வெகு திலாத்துடன் பிறரது கண்டனம் புகழ்ச்சி இவற்றைக் கவனியாது, தன் மனஸ்ஸாட்சியின்படி வங்கபாஷையைப் பிரௌட ஶைலி பெறும்படி யாக்கிய பெருமை பங்கிம் பாபுவினதல்லது மற்று யாரதென முடியும்? அவரது ஞானமே குயுக்தியில் பாயாது, வங்காளிகளின் மனச்சலனங்களை யொழித்துப் பரமசாந்தி யடையும்படி செய்த தென்றால், அவரது நடை, நொடி, பாவனைகளைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? வங்காளிகளில் சிலர் புதிதாக ஏற்படுத்திக்கொண்ட பிரஹ்ம ஸமாஜத்தின் கொள்கைகளைப் பங்கிம்பாபு ஏற்றவரல்லர் என்பது இங்கு குறிப்பிடத்தகும். அவர் உத்தம பாரதபுத்ரன்; உண்மை ஹிந்து. அவரைப் புதல்வனாகப் பெற்ற இந்தியைக்குக் குறை எப்படி யிருக்கமுடியும்?

1894-ம் வரு இந்தியதேவி பங்கிம்பாபுவின் பாஞ்சபௌதிகத்தை யொழித்துத் தன் கருவில் புனர்கர்ப்பங்கொண்டு, அவரது புகழுடம்பைவெளியுலாவக் களிகொண்டனள். பங்கிம் பாபு தமது ஸர்க்கார் வேலையில் நன்குழைத்த தன் பெருமையை விரிக்கவேண்டியதில்லை. அவர் சிறிதுகாலம் டெப்டிமாஜிஸ்ட்ரேட் ஆகவும், கலெக்டராகவும் இருந்தனர். அவரது ஊழியத்தின் பெருமையையும் அவரது வங்கபாஷாப்ரவீண யோக்யதையையும் மதித்துக் கவர்ன்மெண்டார் அவர்க்குத் "ராய்பஹதூர்" "ஸி. ஐ. ஈ" என்னும் பட்டங்களை அளித்தனர்.

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை."

---

# இந்திய பூர்வ அரசியல்

## ANCIENT HINDU POLITY

அரசன் அமைச்சர் சபையில் ஆலோசனை செய்வதைக்குறித்துப் பாரத்வாஜர், "இரகசியமான விஷயங்களைப்பற்றி அரசன் தனக்குத்தானே யோசனை செய்துகொள்ளவேண்டும். ஏனெனில் மந்திரிகளுக்கு மந்திரிகளிருப்பார்கள். அவர்களுக்கும் சில மந்திரிகளிருப்பார்கள். அவ்வாறு மந்திரிகள் வரிசையாகவிருப்பது இரகசியங்கள் வெளியாவதற்கு ஏதுவாகும். ஆதலால் அரசன் கருத்துக்கொண்ட அக்காரியங்கள் வேறெருவருக்கும் தெரியக்கூடாது. காரியங்களை நிறைவேற்ற நியமிக்கப்படுபவருக்கு மட்டும் அவைகளைத் தொடங்கும் பொழுதோ அல்லது முடிந்த பின்னரோ அவைகளைப் பற்றித் தெரிவிக்க வேண்டும்" என்று கூறுகிறார்.

இவரது கோட்பாட்டைக் குறித்து விசாலாக்ஷர் பின் வருமாறு ஆக்ஷேபிக்கிறார்:— "ஒருவர் தனக்குத் தானே செய்துகொள்ளும்



யோசனை ஒருபோதும் பலிக்காது. ஓர் அரசன் செய்யக் கருத்துக்கொண்ட ஓர் காரியத்தின் தன்மை கண்ணுக்குப் புலப்படுங் காரணங்களைக் கொண்டும் புலப்படாக் காரணங்களைக் கொண்டும் ஊகிக்கப்பட வேண்டியதாகவிருக்கிறது. கண்ணுக்குப் புலப்படா விஷயங்களை ஊகித்தறிவதும், புலப்படுவனவைகளைக்கொண்டு தீர்மானஞ்செய்வதும், ஓர் பகுதி புலப்படுவதிலிருந்து முழுவதையும் ஊகித்தறிவதும் அமைச்சர்களுக்கே சாத்தியமாகும். ஆதலினால் அரசன் விசாலமான புத்தியையுடையவர்களுடன் கூட ஆலோசனை செய்ய வேண்டும் அவன் ஒருவரையும் இகழாமல் எல்லாருடைய அபிப்பிராயங்களையும் கேட்டறிந்து கொள்ளவேண்டும். விவேகியானவன் குழந்தை வாயிலிருந்துவரும் விவேகமான மொழிகளையும் உபயோகித்துக்கொள்ளுவான்,

மேலே விசாலாக்ஷர் கூறுவதை, பராசரர் சரியென ஒப்புக்கொள்ளவில்லை. அவர் அபிப்பிராய மென்னவெனில்:— "மேற்கூறியவாறு செய்வதானது பிறரது அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ளுவதாகுமே யொழிய, விஷயத்தை இரகசியமாக வைத்து கொள்ளுவதாகாது. அரசன் தனது அமைச்சர்களையழைத்து, தான் செய்யக்கருதிய காரியத்தைப் போன்ற மற்றொரு காரியத்தைக் குறிப்பிட்டு 'இதுதான் ஆகவேண்டிய காரியம். இவ்விதமான சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வாறு நேர்ந்தால் என்ன செய்வது?' என்று சொல்லிஅவர்களது அபிப்பிராயங்களை அறிந்துகொண்டு அவர்கள் தீர்மானிக்குமாறு நடந்துகொள்ளவேண்டும். இவ்வாறு செய்யின், பிறர் அபிப்பிராயங்களை அறிந்துகொள்ளுவதுடன் சங்கதியை இரகசியமாக வைத்துக்கொள்ளவும் கூடும்."

இதுவும் சரியல்லவென்று பிசுனர் ஆக்ஷேபிக்கிறார். அவரது அபிப்பிராயமென்னவெனில்:—"வெகு காலங்கழித்து நடைபெறப்போகிற காரியத்தைப் பற்றியாவது நிறைவேறினதாயாவது நிறைவேறாததாயாவது உள்ள ஓர் காரியத்தைப்பற்றியாவது தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படி மந்திரிகளை அரசன் கேட்டால், அவர்கள் அவ்விஷயத்தைப்பற்றி நன்றாய் ஆலோசனை செய்யமாட்டார்கள், அல்லது தங்கள் அபிப்பிராயத்தை அரைமனத்துடன் தெரிவித்துக்கொள்ளுவார்கள். ஆதலால், தான் செய்யக்கருதிய காரியத்தைக் குறித்துப்புத்திமதி யளிக்க எவர்கள் தகுந்தவராகக் கருதப்படுகிறார்களோ அவர்களுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும். அவ்வாறு ஆலோசனை செய்தால் புத்திமதி பெறுவதுடன் சங்கதியை இரகசியமாக வைத்துக் கொள்ளவும் கூடும்."

இதற்கு கௌடில்யர் ஆக்ஷேபித்துப் பின்வருமாறு கூறுகிறார்:— "மேற்கூறியவாறு புத்திமதி கேட்பதற்கு முடிவென்பதே ஏற்படாது. அரசன் மூன்று அல்லது நான்கு மந்திரிகளுடன் கலந்து ஆலோசிக்கவேண்டும். ஓரே ஒரு மந்திரியுடன் கலந்து ஆலோசித்தால் மிகவும்சிக்கலான விஷயங்களில் முடிவான தீர்மானஞ்செய்வதரிது. தனித்தமந்திரியானவன் கட்டுப்பாடில்லாமல் தன்னிஷ்டப்படி நடந்துகொள்வான். அரசன் இரண்டு மந்திரிகளுடன் கலந்து ஆலோசித்தால், அவர்களிருவரும் கூடி அரசனை அடக்கிவிடலாம். அல்லது அவர்களிருவருக்கும் ஒத்துமையின்றி சச்சரவுகள் ஏற்படுவதனால் அரசனுக்கு அபாயமுண்டாகும். மூன்று அல்லது நான்குமந்திரிகளுடன் கலந்து ஆலோசிப்பதனால் பெரிய தீங்கு ஒன்றும் ஏற்பட மார்க்கமில்லாததுமன்றி திருப்திகரமான பலன் சித்திக்கவும் கூடும். நான்குக்கு மேற்பட்ட மந்திரிகளுடன் ஆலோசனை செய்தால், ஒரு முடிவான தீர்மானஞ்செய்வதும் கஷ்டம்; சங்கதி இரகசியமாக வைத்துக்கொள்ளுவதும் அரிது. இடம், காலம், காரியத்தின் தன்மை இவைகளை உத்தேசித்து உசிதமெனத் தோன்றினால், அரசன் ஒன்று அல்லது இரண்டு மந்திரிகளுடனாவது தனக்குத் தானாகவாவது ஆலோசனை செய்துகொள்ளலாம்.

ஒவ்வொரு மந்திராலோசனை சபையிலும் காரியங்களைச்செய்யும் மார்க்கத்தை ஆலோசிப்பதையும் ஏராளமான ஆட்கள்பொருள் இவைகளைச் சேகரிப்பதையும், காலம் இடம் இவைகளை நிச்சயிப்பதையும், அபாயங்களைத் தடுக்க ஏற்பாடுகள் செய்துகொள்ளவேண்டியதையும் கடைசியாக ஜயமடையவேண்டிய மார்க்கத்தைத் தீர்மானிப்பதையும், ஆக இவ்வைந்து விஷயங்களையுமே முக்கியமானவைகளாகக் கருதவேண்டும்.

# ஜீவசரிதம்

## BIOGRAPHIES

"Universal history, the history of what man has accomplished in this world, is, at bottom, the history of the great men who have worked here."—*Carlyle.*

"He is great who is what he is from nature and who neverreminds us of others."—*Emerson.*

இல்லறத்திலேயே மனதைச் செலுத்தி, சிற்றின்பங்களிற் சதாகாலமு மூழ்கி, அன்றன்று இலகுவாய் உண்டுறங்கிக் காலத்தைப் போக்க வேண்டுமென்ற ஒரே எண்ணங்கொண்டு, தம் இனத்தார்களின் கஷ்ட நஷ்டங்களைப் பற்றிக் கொஞ்சமேனுங் கருதாதும், அல்லது அங்ஙனஞ் சிந்தித்தபோதிலும் அவைகளை அகற்றுவதற்குரிய விதிகளைத் தேடியறிந்து செய்யாதும், ஆழ்ந்த கல்வியினால் ஞானத்தைப் பெறாதும், ஜீவித்து வரும் ஆயிரக்கணக்கான பேதையர்களின் மத்தியில் பற்பல வீண் அல்லது கொடிய சிந்தனை செயற்களினின்று தம் மனதை அகற்றி. ஸ்வய நலத்தைச் சிறிதேனும் தம் மனத்தில் வசிக்காது, இதரர்கள் சுகித்திருப்பதற்குரிய வழிகளை ஆராய்ந்தறிந்து வெளிப்படுத்திவரும் விவேகிகளின் எண்ணிக்கை மிகச் சிறிதே. காலையிலிருந்த விடத்தில் மாலையிலிராது அலைந்தோடிக்கொண்டும், மனதிற்குத் தோன்றிய விடங்களிற் றங்கி, இலகுவாய்க் கிடைக்கப்பட்டவைகளைப் புசித்து, மழை, பனி, வெயில், துஷ்ட மிருகங்களினின்று தப்பிப் பிழைப்பதற்குரிய உபாயங்களைத் தேடியறியாது வருந்தியும், தம் ஒப்புயர்வற்ற மானிடத் தன்மையை அறிந்து, ஒழுங்குடன் நடவாது, விலங்குகளுக்குங் கீழானவர்களாய்ப் பட்டை, காய், கிழங்கு, வேர் முதலானவைகளைத் தின்று, மரக்கிளைகளிலும், குகைகளிலும், பள்ளத்தாக்குகளிலும் தங்கி உறங்கிப் பலஹீனர்களுடன் சண்டைசெய்தும், ஒளிந்தும், மறைந்தும், பலாத்காரமாகப் பெண்டிர்களைப் பிடித்துக் குரூரமாக நடத்தியும் வாழ்ந்துவரும் அநாகரீகர்களினிடையில், சிற்சில அறிஞர்கள் தோன்றி, அவ்வநாகரீகர்களுக்குத் தொழில்களைக் கற்பித்தும், சன்மார்க்கங்களைப் போதித்தும், சமாதானமும், ஒற்றுமையும், க்ஷேமமும் இப்புவியின்மீது பரவி நிலைத்திருக்கும்படி அநேக நீதி நூல்களை வெளிப்படுத்தி, தவறுபவர்களைக் கண்டித்து நல்வழிப்படுத்த அரசர்களையும், புஜபலபராக்கிரமசாலிகள் நிறைந்த சைனியங்களையும் ஏற்படுத்தி, இவர்களுக்கும் பிரஜைகளுக்கும், பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும், யஜமானர்களுக்கும் ஊழியக்காரர்களுக்குமுள்ள இணக்கத்தையும், அவரவர் அநுசரிக்கவேண்டிய முறைகளையும் ஒழுங்காக வரையறுத்துக் கூறியும் இருந்து வருபவர் மிகச் சிலரே. இம்மெய்யறிவினோர்களை எல்லா விடங்களிலும், எல்லாக் காலங்களிலும் காண்பது அரிது. இவர்களுடைய நல்லெண்ணம் நற்காரியங்களைப்பற்றி விரிவாகக் கூறும் இலக்கியங்களே ஜீவசரிதங்களென அழைக்கப்பட்டு வருகின்றன. அஞ்ஞானமென்ற காரிருளாற் சூழப்பட்டதும், அதர்மமென்னும் பேயினால் குடிகொள்ளப்பட்டதுமான இப்பாழுலகை, ஞானமென்ற ஜோதியினாற் பிரகாசிக்கச் செய்தும், அறமென்ற போராற்றுத் தெண்ணீரால் அப்பேயை அடித்துத் துரத்தி ஓர் உத்யானவனமாக மாற்றியும் இவ்வுலகினர்க்கு நன்மை புரிந்து வரும் வித்வத் சிரோமணிகளே மகாத்மாக்களெனவும், கடவுளின் அவதாரங்களெனவும் இதரர்களால் அழைக்கப்பட்டுங் கௌரவிக்கப்பட்டும் வருபவர்கள்.

யாவரையும் சதாகாலமும் துன்புறுத்தும் பசி, தாகம், வறுமை, பிணி முதலான வேதனைகளைப் பொறுத்து, இச்சீரியர்கள் மேலெழும்பியது எங்ஙனம்? இதரர்களுக்கு நற்போதனைகளைப் புகட்டுவதற்கும், நற்செயற்களைச் செய்வதற்கும் தூண்டிய அல்லது உதவின கருவிகள் யாவை? இவ்வினாக்களே இவ்வியாசத்தில் விரிக்கப்புகுந்த விஷயங்களாகும்.

சிறந்த புன்மாக்களை நல்வழிப்படுத்த எண்ணி மேற்செல்லும் பொழுது, ஆசாபங்கம், மனக்கொந்தளிப்பு, பயம், வறுமை-பிணி முதலானவைகளால் எதிர்க்கப்பட்டு, இவைகளைக் கடந்து மேற்செல்லுவதற்கு வேண்டிய சக்தியில்லாது, வியாகூலத்தினாற் கொள்ளப்பட்டுக் கைக்கொண்ட காரியங்களை விட்டுவிடுபவர்களையும், அல்லது அரைகுறையாகச் செய்து முடிப்பவர்களையும் நாம் நன்கு அறிவோம். ஆனால், வழியில் நேரும் இடையூறு இடுக்கண்களை அப்புறப்படுத்தி, விபரீத



புத்தி, மருள்மயக்கம், அகங்காரம், பிடிவாதம், பேராசை, படபடப்பு, முதலானவைகளாற் கவரப்படாது தன்னைப் பாதுகாத்தும், நேர்மை, தூய்மை, பொறுமை, ஊக்கம் முதலானவைகளையே மேற்கொண்டு உழைத்துக் கடைசியில் ஜயம்பெற்ற புத்திமான்கள் இருந்திருக்கிறார்கள்; இன்னமுமிருக்கிறார்கள். தூயமனமும், இருதயமுமுடையவர்க்கு எக்காரியமும் சித்திக்கும்; எவ்வெண்ணமும் நிறைவேறும்; எவ்விருப்பங்களும் பூர்த்தியாகும். பொய், சந்தேகம், செருக்கு முதலானவைகளைத் துறந்தவனுக்கு அசாத்திய காரியங்கள் சாத்தியமாக முடியும்; பயம், பக்தி, அன்பு, அருள், விடாமுயற்சியாகியவைகளைச் சிரோ பூஷணமாகக்கொண்டு உழைப்பவன் எதற்கும் அஞ்சவேண்டுவதில்லை. மெய்யறிவினோர் இக்குணங்களை நிரம்பவுடையவராதலால் ஜயம் பெற்று வருகிறார்கள். இச்சுசீலர்களின் ஜீவசரிதங்களைப் படித்தல் நன்மை பயக்காதிருக்குமோ? காலம், இடம், பாஷை, குலம் முதலிய அற்ப விஷயங்களைத் தூரத்தள்ளி, இம்மெய்ம்மையர்களின் சித்தாந்தங்களையும், உபதேசங்களையும் மிக்க சிரத்தையுடன் ஆராய்ந்தறிதல் உத்தமமானதல்லவோ? இத்தகையர்களில்லாது இவ்வுலகம் மேன்மேல் வளராது; நீதியும், ஞானமும் பரவா; நற்குண நன்னடத்தைகள் நிலையா; இன்பமும் சுகமும் தனமும் அபிவிர்த்தியாகா; போர் மேலாகும்; கொலை, களவு, காமக்குரோதாதிகள் அதிகரிக்கும்; துராத்மாக்கள் பெருகுவார்கள்; ஞானமென்ற கதிரவனும், அறமென்ற திங்களுமில்லாது இவ்வுலகினர்கள் வருந்துவார்கள்; பிணியும் வறுமையும் இன்னுமிவை போன்ற பற்பல சஞ்சலங்களும் வியாபித்து நிற்கும்.

துன்ப வேளைகளிலும், அபாய காலங்களிலும் எத்தகைய ஆலோசனைகள் செய்து, எவ்வித உபாயங்களினால் அவைகளை அப்புறப்படுத்தி இவர்கள் ஜயமடைந்தார்கள்? எங்ஙனம் ஞானமென்ற ஜோதியைப் பரவச்செய்தார்கள்;—தர்மக்கொடியை நாட்டினார்கள்? இத்தகைய விஷயங்களை நாம் அறியவேண்டியது. அவசியமே. சகலரும் ஞானிகளாவது அசாத்தியமானபோதிலும் ஒவ்வொருவனும் கல்வியறிவைப் பெற்றுத் தன்னாற் கூடியவரையிலும் பிறர்க்கு நன்மை செய்யக்கருதி உழைத்துவருதல் எளிதாகும். இதற்கு வேண்டிய மதியூகமும், மனோதிடமும், தேக சக்தியும் ஒவ்வொருவனுக்கும் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால், அவைகளைத் தக்கவழிகளிற் செலுத்தி உழைத்து வருவோமானால் நாமும், நம்மைச் சேர்ந்தவர்களும் இனித்துச் சுகித்திருக்கலாம்.

கொலை, களவு, கட்காமக் குரோதங்களடங்கிய வலையிற் சிக்கி அலப்புறும் புன்மாக்களை அவ்வலையினின்று விடுவித்து நற்கதியடையச் செய்யும் புண்ணியாத்மாக்களையும், அபரிமிதம் சுதந்திரம் ஒற்றுமை க்ஷேமம் முதலானவைகளைப் பரவச் செய்துவரும் வேந்தர்களையும், கல்வி ஞானம் அறம் ஆகிய இவைகளை மேன்மேலோங்கி வளரச் செய்துவரும் ஞானிகளையும் நாம் வழிபடுவோமாக. இவர்களைப் போன்ற சிலா விக்கிரஹங்கள் செய்து, இவைகளைத் தினந்தோறும் நாம் ஆராதித்துத் துதித்து வரவேண்டுவதில்லை. ஆனால், நாம் இப்பெரியோர்களை நம்முடைய மேல்வரிச் சட்டமாகக்கொண்டு, இவர்களுடைய சித்தாந்தங்களையும், போதனைகளையும் நன்குணர்ந்தறிந்து அவைகளை அநுசரித்து ஒழுகுதலே மிக்க அவசியமானது. இது நமக்கு நன்மையை உண்டு பண்ணுவதுடன், அவர்களை வழிபடுவது போலுமாகும்.

சிதாகாசத்தில் இரவியும், அம்புலியுமாக விளங்கும் இஞ்ஞானிகளின் ஜீவசரித இலக்கியங்களைப் படித்தல், நம்மிடமிருக்கும் தீயசிந்தனைகளும் அருவருக்கத் தக்க சொற்களும் இழியசெயற்களும் நம்மைவிட்டு அகன்று, நற்சிந்தனைகளும், மதுரமொழிகளும், சத்கருமங்களும்உதித்து மேன்மேலோங்கி வளர்ந்து, நம்மையும் நம்மினத்தாரையும் இம்மைப் போகங்களையும் அநுபவிக்கச்செய்து, வீடு பேற்றின்பத்தையும் அடையச் செய்யும். நல்லினச் சேர்க்கையினால் நம்முடைய குற்றங்கள் அல்லது தோஷங்களும் மூடத்தனமும் தாமாவே நம்மிடமிருந்து நீங்கியபின், நம்மிடமுள்ள சற்குணங்கள் மேற்கிளம்பிச் செழிப்புடன் விருத்தியாவதால், நாமும் உண்மை ஞானிகளாகவும், மெய்யறந் தங்கியவர்களாகவும் ஆவோம்.

# விவசாயச் சிறப்பு

## THE IMPORTANCE OF AGRICULTURE

கடல்சூழ்ந்த இந்நெடு நிலத்தின்கண் வசிக்குஞ் சமஸ்த ஜீவகோடிகளும் உயிர்பெற்று வாழ்வதற்குரிய இன்றியமையாப் பொருள் உண்டியேயாம். இவ்வுணவை யடைந்துய்யும் பொருட்டு, மனிதனை யன்றி விலங்கு முதலிய ஜீவப்பிராணிகளும் பாடுபட்டுழைக்க வேண்டியது ஆவசியகமெனல் சொல்லாமல் விளங்குகின்றது. இத்தகைய பாடுபடுந் தொழிலுக்கே கிருஷி (முயற்சி) அல்லது வியசாயம் என்றும் பெயர். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதக் கலப்பாலுண்டாவது பயிர். அப்பயிர் பல வகைப்படும். சில அடியில் வருமாறு:—

நன்செய்ப் பயிர் (நெல்), புன்செய்ப் பயிர் (தானியம்), தோட்டப்பயிர் (காய்கறி), விருக்ஷவர்க்கப் பயிர் (முக்கனி முதலிய பழவகை), மூலவர்க்கப் பயிர் (கிழங்கு தினுசுகள்), தைலவர்க்கப்பயிர் (எள்ளு, ஆமணக்கு முதலியன), நார்வகைப்பயிர் (சணல், கற்றாழை), வியாபாரப்பயிர் (அவுரி, பருத்தி முதலியன), கொடிவகைப்பயிர் (மிளகு, வெற்றிலை முதலியன), புட்பவகைப் பயிர், புல்வகைப் பயிர் முதலிய பலவகைப் பயிர்களும் பயிர்த்தொழிலி லடங்கும்.

ஒருவர் கிருஷிசாஸ்திர பாண்டித்திய மடைய வேண்டில், அவனுக்குப் பூகோள, ககோள, பௌதிக, ரஸாயன, வைத்திய, ஜோதிட, ஜீவவர்க்க, தாதுவர்க்க, விருக்ஷவர்க்கப் பிரகிருதிசாஸ்திராதி பல நூற் பயிற்சியும் ஆவசியகமாகும்.

கிருஷித்தொழிலுக் காதாரமாயுள்ளன:— நிலம், நீர், மழை, கால்நடை, கருவி, உழவு, எரு, விதை முதலியனவாம். அன்றியும், வெய்யிலும் காற்றும் பயிர் செழித்தோங்கி வளருவதற்கு வேண்டிய பொருள்களேயாம். பனியும் பிரயோசனமே.

மற்றெல்லாத் தொழில்களினுஞ் சிறந்து, நாடு நகரங்களைச் செழிப்பித்து, கோயில் குளங்களைச் சிறப்பித்து, மாடமாளிகைகளை யலங்கரித்து, அஷ்டைச்வரியங்களுக்கும், எண்ணின்கு தருமங்களுக்கும், அன்னதானாதி புண்ணிய காரியங்களுக்கும், ஆஸ்பதமாய் நின்றதும் பயிர்த்தொழிலேயாம். அன்றியும்:—

> "மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
> தானம் தவம்முயற்சி தாளாண்மை—தேனின்
> கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
> பசிவந்திடப் பறந்து போம்."

என்னும் முதுமொழிப் பாடலின்படி பசியைக் குணவளிக்கும் கிருஷியேலேயே பரமார்த்த மாயதாயின், இனி ஏனைய சாமானியத் தொழில்கள் இத்தொழிலாம் நற்றொழில்முன் எத்தகையவாமெனால் உய்த்துணர்க.

இத்தகைய மேம்பாட்டினையுடைய கிருஷித்தொழிலுக் குரிய குடிவள மோங்கினாலன்றோ கோனுயர்ந் தோங்கும்? குடிகளால் செலுத்தப்படும் பகுதிப்பணத்தாலன்றோ அரசன் பொக்கிஷம் நிரம்புவது? இவ்வழியிற் சேகரித்த பொருள்களல்லவா பொது நன்மைக் குரிய பாதைகள், பாலங்கள், வித்தியா சாலைகள், வைத்திய சாலைகள், அன்ன சத்திரங்கள், மடாலயங்கள் முதலியன செழித்தோங்குவன வாயின? பலவாய்ப் பாருவானேன்? கஷ்டஜீவியாகிக் கிருஷிகனுடைய கஷ்டார்ஜிதத்தைப் பங்கிட்டுக்கொள்ளாத ஜீவப்பிராணி உலகின்கண் ஒன்றுளதோ? ஆதலால் சமுசாரி ஒருவனுக்குச் சமயத்தில் சகாயஞ் செய்வதால் அவனிடப்பட்ட நுணச்சல்லியத்தினின்றும் மீண்டவனாவான்; அப்படிச் செய்யாதவர்களோ அக்கடனைத் தீர்க்கக் கடமைப்பட்டவர்களாயிருப்பர். 'உழுவோரெல்லாம் உழுவோன் தலைக்கடையில்.'

காரியமிப்படியிருக்க எத்தொழிலினுஞ் சிறந்த இத்தொழிலைக் கல்வி கற்றவர்களுஞ் செல்வமுற்றவர்களும், "பண்ணையாட்கள் பாடுபட்டுழைக்குந் தொழில் பயிர்த்தொழில்," என நமது நாட்டுக் கனதனவான்கள் பராமுகஞ் செய்து, கருதாமற் கழித்தனர். இத்தேசத்துத் தொழில் இத்தன்மையில் இருக்கத் துவர, அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஐரோப்பா முதலிய அன்னிய தேசங்களில் கிருஷித் தொழில் மதிபூண்ட மகாராஜாக்களின் பிரபேபனையினால் ஆண்டாண்டுதோறும் புதுப்பிக்கப்பட்டுச் சீர்திருந்திவருவது மேனாட்டுப் பத்திரிகைகளால் நமக்குத் தெரிந்ததோர் விஷயமே.



இதற்குத் திருஷ்டாந்தமாக, கிருஷி யபிவிருத்திக்கென்று லண்டன் நகரத்துச் சீமானொருவர் தம் திரண்ட ஆஸ்தி முழுவதையுந் தத்தஞ்செய்த பரோபகாரத்தைக் கேள்வியுற உண்டாகுஞ் சந்தோஷத்திற் களவுண்டோ! இத்தகைய கீர்த்திவாய்ந்த புண்ணிய புருஷோத்தமர்களின் நன்கொடையாலன்றோ ஏழைக் குடியானவர்களின் குடித்தனமீடேறவேண்டும்?

இந்நாட்டுத் தனவந்தர்கள் வர்த்தகத்தில் நோக்கம் வைத்துழன்று பொருள் சேகரிக்கும் பிரயாசத்திற் காற்கூறுயினும் பயிர்த்தொழிலிற் கண்வைக்கத் தலைப்படுவாராயின் நமது நாட்டுக்கு இப்போதுண்டாயிருக்கும் கடும்பஞ்சம் நேர்ந்திருக்கமாட்டாது. ஏழைக் குடியானவனால் என்ன காரியம் நிறைவேற்றவியலும்? எலும்பொடிந்துக்கொண்டுழன்று பாடுபடும் கிருஷிகளுக்குச் சமயோசித சகாயமுண்டாயின் நாட்டுவளஞ் சிறந்து விளங்கத் தடையேது!

இதற்குத் திருஷ்டாந்தமாக, சீன தேசத்துச் சக்கிரவர்த்தி நிலமுழுதற் கென்றோர் நன்னாள் தொடங்கி தன்கீழ் மந்திரி பிரதானி சேனைத்தலைவராதி உத்தியோகஸ்தர்களும் தன் செய்கையைப் பின்பற்றி நிற்க, கழனியிற் றன்கையால் பொற்கலப்பை யூன்றி யுழுது குடித்தனக்காரர்களும் மற்றுமூரிலுள்ள கனவான்களுக்குமோர் உற்சாகத்தை யுண்டுபண்ணுவாராம். அக்கற்பனையை நமது நாட்டரசர்களும் தனவான்களும் கைக்கொண்டொழுகுவாராயின், வேளாண்மை செழித்தோங்கத் தடை யாது? "எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்" என்றபடி செல்வச் சீமான்கள் இவ்வாறு தம்மாற்கூடிய புத்தி யோசனைகளும், பொருளுதவியும் செய்யத் துணிவார்களாயின், இத்தேசத்தில் பஞ்சம் தலைகாட்டாதொழியத் தடையுமுண்டோ!

ஆங்கிலேய நாட்டிற் பெரிய மிராசுதாரர்களில் அநேகர் ஒன்று சேர்ந்து கிருஷிகாரிய நிர்வாகச் சங்க மொன்றுண்டாக்கி விவசாய விருத்திக்குரிய சதுர் உபாயங்களை யோசித்து அவற்றை யடிக்கடி பயிரிடுங் குடிகளுக் குணர்த்தி வருவதனால் அத்தேசம் இடைவிடாச் செழிப்பினை யுடையதாய் விளங்குகின்றது.

நமது நாட்டில் வருஷப்பிரதி வருஷம் ஜனசங்கியை அதிகப்பட்டு வருவதனால் அதற்குத் தக்கபடி பிரஜைகள் உண்டுய்யச் சாகுபடி நிலமும் விருத்தியடைய வேண்டிய தவசியமாதலின், இனி இந்நாட்டிற் கரம்பு நிலம் கண்ணிற் படலாகுமா? ஏதோ சில வருஷ காலங்களாகத் தெய்வ சங்கல்பத்தினால் சம்பவித்த காலவித்தியாசத்தாலும், காலமழையின்மையாலும், செய்கால் நிலம் இடைவிடாமற் பயிரிட்டு வருவதனாலும், கால்க்கிரமத்தில் பூசாரங் குறைந்து வந்தது. இனி, கிருஷிகரின் நன் முயற்சியினால் எரு முதலிய இந்திரிய வஸ்துக்களைச் சேர்ப்பதனாலும், வெவ்வேறு மண்வகைகளை நிலத்தின் நிலைமைக்குத் தக்கபடி கலந்து பண்படுத்துவதனாலும், ஏனைய சமயோசித சதுர் உபாயங்களினாலும், அக்குறைவுகளை நிறைவுசெய்து கொள்ள வேண்டும்.

முற்காலத்தில் நீர்வளம், நிலவளம் குன்றாது செழிப்புற்றோங்கிய இந்நாட்டுச் செல்வம், பன்முறை அயல் நாட்டரசரால் கவரப்பட்டமையாலும், கலிகாலக் கொடுமையினால் அனாவிருஷ்டி அடிக்கடி நேர்ந்தமையாலும், சொற்ப விளைவும் அன்னிய தேசங்களுக்கனுப்ப மரக்கல, இருப்புப்பாதை மார்க்கங்களேற்கனவே யேற்பட்டிருத்தலாலும், ஆங்கிலேய வரசாட்சியிற் புறநாட்டு வணிகச் சங்கத்தாரின் வர்த்தகத்தொழி லதிகரித்தமையாலும், துரைத்தனத்தாரால் பாரமான சண்டைச் செலவுகளுண்டானமையாலும், ஜனங்கள் ப்ளேக் முதலிய கொள்ளை நோய்களினால் மடிந்தவர்போக மற்றவர் பயந்து தத்தம் நிலைபெயர்ந்தோடிப் பின்வாங்க நேர்ந்தமையாலும், இந்தத் தேச வாஸிகள் தற்சமயம் கஷ்டத்திற்குட்பட நேரிட்டிருக்கின்றதாயினும், விவசாயத்திற் கின்றியமையாச் சூரிய வெப்பமும், ஜலஞ்சுறந்து வற்றாத ஜீவநதிகளின் இடையறா நீர்ப்பாய்ச்சலும், எக்காலோடிமிக்க விளைவை விளைவிக்கத்தக்க பூசாரமும் இயற்கையி லமையப்பெற்ற நம் நாட்டுச் செல்வம் அற்பமுயற்சியினாலேயே பழமைப்படி நன்னிலைமைக்கு வரும்படி தெய்வ கடாக்ஷமுண்டாகத் தடையிரா தாகையால் "முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்."

# அலை எழும்புவ தேன்?

## WHY THE TIDES RISE AND FALL ?

சமுத்திரத்தில் அலைகள் பெரிது பெரிதாய் எழும்பி, ஒன்றன்பின் ஒன்றாகப் புரண்டு வந்து கற்கட்டடமான கரைகளில் பளீலென்று மோதவும், கரையோரங்களிலுள்ள மணல்களின்மேல் மெதுவாய்ப் பாயவும் அநேகர் கண்டிருக்கலாம். அதைக் காண்கிறவர்கள் அநேகர் கடலில் அலை எழும்பிவருகிறதென்றும் சொல்லுகிறார்கள். ஆயினும் கடலில் அலை உண்டாவதேனென்று அதைப்பற்றி யாராவது ஆச்சரியப்பட்டதுண்டா? அதற்குக் காரணம் என்னவென்று யாராவது விசாரித்ததுண்டா? அதன் காரணங்களை இங்கு எடுத்துக் காட்டுவோம்.

அலை உண்டாவதற்குச் சந்திரனே முக்கிய காரணமாயிருப்பதால், அமாவாசைச் சந்திரனுக்கும், பருவத்துச் சந்திரனுக்கும் உள்ள வேற்றுமை இன்னதென்பதை முதலில் ஒருவாறு தெரிந்துகொள்வது நலம்.

சந்திரனுக்குச் சுயமாய் ஒளிகிடையாதென்பது அனேகர்க்குத் தெரிந்த விஷயமே. சந்திரன்மேல் சூரியனுடைய ஒளி பிரகாசித்தால் மாத்திரமே அது பளபளப்பாய்ப் பிரகாசிக்கின்றது. சந்திரகோளத்திலுள்ள ஜனங்களும் தம்முடைய சிறுவர்களுக்கு இப்பூமியைப்பற்றி இதே மாதிரியான கதைகளை சொல்லிக்கொண்டிருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. நாம் இருக்குமிடம் நமக்கு இப்படிச் சாதாரணமாயிருந்தாலும், சந்திரனிலுள்ளவர்களுக்குவெகு பளபளப்பாய்த்தோன்றும்; ஏனெனில், சூரியனுடைய ஒளி பூமியைச் சுற்றியிருக்கிற வாயுமண்டலத்திலுள்ள மேகங்களில் பிரகாசித்து அங்கிருந்து சந்திரனிடத்தில் பிரதிபலிப்பதனால் அப்படி ஆகிறதென்று அவர்கள் ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொள்வார்கள்.

வெண்மையாயும் வட்டமாயும் இருக்கிற சலவைக்கல் ஒன்றை எடுத்து அதில் ஒரு பக்கம் முழுதும் கறுப்புவர்ணம் பூசிவிட்டால், அதைப் பூர்ணமாய்ப் பிரகாசிக்கின்ற சந்திரனுக்கு ஒப்பாகச் சொல்லலாம். எப்படியெனில், சூரியன் தனக்கு எதிரேயிருக்கின்ற கோளத்தின் ஒரு புறத்தை மட்டுமே பிரகாசிக்கச் செய்வானாதலால், சூரியனுக்கு நேராயிருக்கின்ற சந்திரனுடைய பக்கம் மாத்திரமே பளபளப்பாய்த் தோன்றும். மறுபுறம் இருண்டுதான் இருக்கும். அந்தச் சலவைக்கல்லின் வெண்மையான பாகம் முழுதும் நமக்கு நேராயிருக்கும்போது பூர்ணிமைச் சந்திரன் போலவும், அதை மெதுவாகத்திருப்பி வெண்மையான பாகம் கொஞ்சங் கொஞ்சமாய் மறையச்செய்தால் அப்போது பஞ்சமி அஷ்டமி தசமி முதலான தினங்களில் தோன்றுகிற சந்திரன் போலவும், வெண்மையான பாகம் முழுதும் மறைந்துபோனால் சூரியனுக்கும் நமக்கும் மத்தியில் நிற்கிற சந்திரன்போலவும், அதாவது அமாவாசைச் சந்திரன் போலவும் அந்தக் கல் விளங்கும்.

திருதியை, சதுர்த்தி முதலிய தினங்களில் ஆகாயம் நிர்மலமாய் இருக்கையில் சந்திரனைப் பார்த்தால், பளபளப்பாகப் பிறைச்சந்திரன் தோன்றுவது மாத்திரமேயன்றி, சந்திர பிம்பம் முழுதும் வட்டமாய்மங்கலாகத் தோன்ற நாம்கண்டிருக்கிறோமாதலால், அதைக்கொண்டே; அமாவாசையன்றுகூடச் சந்திரன் ஒளியில்லாமல் இருண்ட வடிவமாய்க் காணப்படுமென்பதை நாம் நன்றாய் அறிந்து கொள்ளலாம். அமாவாசையன்று சந்திரன் எங்கும் போய்விடுவதில்லை. சூரியன் பக்கத்திலிருப்பதால் நமது கண்ணுக்குப் பிரகாசிப்பதில்லை. அதற்குத் தகுந்த கருவியைக்கொண்டு பார்த்தால் நன்றாய்த் தோன்றும்.

சந்திரன் அந்தந்தக் காலத்தில் வெவ்வேறு விதமாகத் தோன்றுவதெல்லாம் அதன் இடம் வேறுபடுவதனாலேயே ஒழியவேறல்லவென்று இதனால் தெரிகின்றதல்லவா? சந்திரன் பூமியைச்சுற்றி ஓடிக்கொண்டிருப்பதனால், ஒரு பக்கத்தில் கறுப்பு நிறம் பூசிய சலவைக் கல்லிற் காட்டிய திருஷ்டாந்தம் போலவே, ஒவ்வொரு வேளையில் அதாவது இப்பூமிக்கு ஒருபுறத்தில் சூரியனும் அதற்கு நேரான மற்றொரு பக்கத்தில் சந்திரனும் இருக்கிற காலங்களில் சூரியன் அதன்மேற் பிரகாசிக்கிற பாகம் முழுதும் நமக்குத் தெரிகின்றது; அதைத் தான் பூர்ணிமாவாசை யென்கிறோம். சந்திரன் சூரியனுக்கும் பூமிக்கும் நடுவே வருகிற காலத்தில் அந்தப்பக்கம் நமது கண்ணுக்குத் தெரிவதேயில்லை; அப்போது அமாவாசை என்கிறோம்.



சந்திர பிம்பத்தை நாம் நுட்பமாகப் பரிசோதித்துப் பார்ப்போமானால் ஒரு புறத்தில் பளபளப்பாயும், மறுபுறத்தில் இருண்டுமிருக்கிற மலைகளும், அம்மலைகளில் கணவாய்களும் காணப்படும். அம்மலைகளெல்லாம் இத்தாலி தேசத்திலுள்ள விஸுவியஸ் என்னும் எரிமலைபோன்ற எரிமலைகளாகத் தோன்றுகின்றன. இப்பூமியிலுள்ள எரிமலைகளெல்லாம் லாவா என்னும் ஒருவகை எரிகல் திராவகத்தை வெள்ளமாய்ப் பெருக்குவதுபோல் அவையும் பெருக்கிக்கொண்டுதான் இருக்கும்.

அலை உண்டாவதற்குக் காரணம் இன்னதென்பதை இங்கு விசாரிப்போம். நியூடன் கண்டுபிடித்த ஆகர்ஷண சக்தியென்னும் இழுப்புக்கவர்ச்சியைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொண்டாலொழிய அது தெளிவாய்ப் புலப்படாது. ஆகர்ஷணசக்தியாவது இந்தப் பிரபஞ்சத்தில் எந்தப் பொருளும் அததன் பிரமாணத்திற்கேற்றபடி மற்றெந்தப் பொருளையும் தன் இடத்திற்கு இழுக்கின்றது. சூரியன் பூமிக்கும் தனக்கும் இருக்கிற தூரத்திற்கேற்றபடி பூமியை இழுக்கின்றது. அப்படியே பூமி தன் பரிமாணத்துக்குத் தக்கபடி சூரியனை இழுக்கின்றது. இப்படியே பூமியும் சந்திரனும் ஒன்றையொன்று இழுத்துக்கொண்டிருக்கின்றன. சூரியன் சந்திரன் முதலிய மற்ற கிரகங்களும் இவ்வாறே தாம் ஒன்றுக்கொன்று இழுத்துக்கொண்டிருக்கின்றன. இதனால் சந்திரன் அததன் தூரத்திற்கும் பரிமாணத்திற்கும் ஏற்றபடி எல்லாவற்றையும் இழுக்கிறதென்று தெரிகிறதல்லவா? இந்தப் பூமியைவிட அதன்மேல் இருக்கிற நீர், சந்திரனுக்குச் சமீபமானதாலும், நீர் நிலத்தைப் போல அவ்வளவு கடினமன்றாதலாலும், சந்திரன் பூமியைவிடச் சமுத்திரத்தையே அதிகமாய்த் தன் இடத்திற்கு இழுக்கின்றது. அதனால் உண்டாகிறகாரியமென்னவெனில், சமுத்திரத்துக்கு நேராய் உயரச் சந்திரன் வரும்போதெல்லாம் சமுத்திரத்தில் அலை எழும்புகின்றது. அப்படியே சந்திரனுக்கு நேரான பக்கத்துக்குப் பின்புறத்தில் நீரைவிட நிலமே சந்திரனுக்குச் சமீபமாயிருப்பதால் அங்கே பூமிதான் அதிகமாய் இழுக்கப்படுகின்றது. அதனால் அந்தப்புறத்தில் எப்போதும் ஜலம் கொஞ்சம் உப்பலாயே இருக்கும். இப்படியாகப் பூமி தன்னைத் தானே ஒருதரம் சுற்றுவதற்குள், அதாவது இருபத்து நான்கு மணி நேரத்தில், பூமியில் சந்திரனுக்குச் சமீபமாயும் வெகு தூரமாயும் இருக்கின்ற இரண்டு பக்கங்களில் ஜலம் மேலெழுகின்றது; மற்ற இரண்டு பக்கங்களிலும் தாழ்கின்றது.

இவற்றைச் சந்திரன் எப்படி இழுக்கிறதோ அதே விதமாகவே சூரியனும் இழுக்கின்றது. அதனாலேதான் அமாவாசைத் தினங்களில் சக்திரன் சூரியன் இரண்டும் ஒரேபுறமாய் நின்றுசமுத்திர ஜலத்தை இழுப்பதனால், ஜலம் விசேஷமாய்ப் பொங்கி அலைகள் மிகப் பெரிதாய்க் கிளம்புகின்றன. அப்படி ஜலம் அதிகமாய்ப் பொங்கிவந்து கடற்கரையோரத்திலுள்ள பல வீடுகளை அழித்துவிடக்கூட நாம் கேட்டிருக்கிறோமல்லவா? அப்படியில்லாமல் சூரியன் ஒருபுறத்திலும் சந்திரன் ஒருபுறத்திலும் நின்று இழுக்கிறகாலங்களில் அலைகள் விசேஷமாயில்லாமல் அடங்கியே இருக்கும்.

இன்னும் விசாரிப்போமானால், சமுத்திரத்தில் அலை கிளம்ப ஆரம்பிக்க நாளுக்கு நாள் ஒருமணி நேரம் ஏன் அதிகமாகச் செல்லுகிறதோ அதற்கும் காரணம்இன்னதெனத் தெரிந்துகொள்ளலாம். சந்திரன் ஸ்திரமான கிரகமல்ல; ஏறக்குறைய இருபத்தெட்டுதினங்களில் பூமியைச் சுற்றி ஒருதரம் ஓடுகிறதென்பது நமக்குத் தெரிந்த விஷயமே. இன்றிரவு இராத்திரி பத்து மணிக்கு இச்சென்னைக்கு நேராய்ச் சந்திரன் வந்தால், பூமி தினம் ஒரு சுற்று சுற்றிக்கொண்டிருந்ததனால், சந்திரன் அதே பாகத்தில் நிலையாயிருக்கிற பக்ஷத்தில் மறுநாள் பத்துமணிக்கே சந்திரன் சரியாய் இச்சென்னைக்கு நேரே வந்து சேரும். அப்படியில்லாமல், அதே காலத்தில் சந்திரனும் கொஞ்சம் தூரம் ஓடுகிறதாகையால், பத்துமணிக்குச் சரியாய் வருவதில்லை; பத்தடித்துச் சுமார் ஐம்பது நிமிஷத்திற்குப் பிறகு சந்திரன் சென்னைக்கு நேராய் வருகின்றது.

அதாவது மறுநாள் பதினொன்று அடிக்கச் சுமார் பத்து நிமிஷத்துக்கு முன்னே அலை எழும்புகின்றது. இப்படிச் சந்திரனும் சூரி

யனும் ஜலத்தை இழுக்கிறதென்றால் அது இப்பூமியை விட்டு ஏன் ஆகாயத்தில் எழும்பிப் போய் விடவில்லையெனக் கேள்வி பிறக்கலாம். ஜலம் பூமியின் மேலே இருப்பதால் சூரியன் சந்திரன் முதலியவற்றைப் பார்க்கிலும் பூமியே ஜலத்தை அதிகமாய் இழுக்கின்றது. அதனாலேதான் ஜலம் பூமியைவிட்டுப் போய்விடும்படியான காலம் நேரிடவில்லை.

## கிரிநார் பர்வதம்

## MOUNT GIRINAR.

நம் பரதகண்டத்தின் மேற்குச் சமுத்திர கரையில் ஸௌராஷ்டிர மென்று பெயர் பூண்ட ஒரு தேசமிருக்கிறது. அதற்கு இக் காலத்தில் காத்தியவார் யென்று பெயர். இதில் வடபாகம் முடிவில் துவாரகையும், அதற்கு சுமார் 60 மைலுக்கு தெற்கில் சுதாமாபுரியும் (குசேலர் பட்டணம்) பிறகு கிரிநாரும், தெற்கு முடிவில் ஸோமனாத மென்கிற பிரபால க்ஷேத்திரமு மிருக்கின்றன. கிரிநார் ஆதிகாலத்தில் முசுகுந்த சக்கிரவர்த்தியின் ஸித்திராஸ்தானமாக யிருந்தது. அனேக யோகிகளும் மகாத்மாக்களும் வாஸஞ் செய்யுமிடம் என்று ஐதிக்யமிருக்கிறது. ஆகையால் வெகு பைராகிகள் அடிக்கடி இவ்விடம் வருகிறார்கள்.

இந்த பர்வதம் 3,500 அடி உயரம். சுமார் 2,000 வருஷங்களுக்கு முன் அசோகன் என்று பெயர் பூண்ட புத்தராஜன் பாடலிபுரத்தில் அரசாக்ஷி செய்யுங்கால் தெற்குப் பாகத்தில் பிரஸித்தியான ஸௌராஷ்டிர தேசத்திற்கு ஒரு அதிகாரியையும் அனுப்பித் தன் ஞாபகத்திற்காக ஒரு சிலாசாஸனமும் இவ்விடத்தில் பதிப்பித்தார். பிறகு வந்த ஸ்கந்த குப்தராஜாவும் ருத்திராதனனும் அதே சிலையில் தங்கள் சாஸனங்களை யெழுதினார்கள். இந்தப் பர்வதத்திற்கு ரைவதபர்வத மென்றும் ஸம்ஸ்கிருதத்தில் பெயர். ஸ்ரீகிருஷ்ணன் வெகு காலம் அவ்விடத்தில் காலக்ஷேபஞ் செய்ததாகத் தெரிய வருகிறது. முசுகுந்த சக்கிரவர்த்திக்கும் தர்சனங்கொடுத்த விடமென்று புராணங்கள் கூறுகின்றன.

இந்தப் பர்வதத்தில் ஒரு சிகரத்தில் ஜைனர்களுடைய க்ஷேத்திரங்களும், மற்றொரு பக்கத்தில் மகமதியர்களுக்கும், மூன்றாவது சிகரத்தில் குரு தத்தாத்திரேயருடைய ஸ்தானமும், அடுத்தவிடத்தில் கோரக்ஷ யோகியினுடையதும், மற்றொருவிடத்தில் தேவியினுடையதுமாக அமைக்கப்பட்டிருகிறது. ஆகையால் அனேக மதஸ்தர்கள் அடிக்கடி யாத்திரைக்காக இவ்விடம் வருகிறார்கள். முசகுந்தன் குகையும் அசோகன் முதலானவர்கள் சாஸனக் கல்லும் மலையின் அடிவாரத்திலிருக்கின்றன.

காத்தியவாரில் முக்கிய இடங்கள் எல்லாம் ரயிலினால் சூழப்பட்டிருக்கிறபடியினால், இவ்விடத்திற்கும் ரயில் ஜூனாகாட் ஸ்டேஷனென்னும் பெயரால் வழங்கப்படுகிறது. சில காலத்திற்குமுன் பக்தர்கள் எல்லாரும் சேர்ந்து வெகு ரூபாய் செலவு செய்து கல்படி கட்டியிருக்கிறார்கள். சிலர் டோலியிலும் மலையேறுகிறார்கள். தூரம் மைல் மூன்று. யாத்திரைக்காரர்கள் பிரபால மென்கிற ஸோமனாதத்தில் ஆரம்பித்துக் கிரிநார் வழியாகத் துவாரகையில் யாத்திரையை முடிக்கிறார்கள்.

பிரபாஸம்: கிருஷ்ணன் யாதவர்களுடன் நிரியாணஞ் செய்தவிடம். பன்னிரண்டு ஜ்யோதிர்லிங்கங்களில் முதல் ஜ்யோதிர்லிங்க க்ஷேத்திரம்; கிரிநார்: முசுகுந்த குகை; ஸுதாமாபுரி (போர்பண்டர்) குசேலன் கிராமம்; துவாரகை கிருஷ்ணன் வாஸஞ் செய்தவிடம்.

### நமது சந்தா நேயர்களுக்கு

போதினியின் பத்தாவது ஆண்டு அடுத்த சஞ்சிகையுடன் முடிவடைகிறது. இக்கொயம் காகிதப் பஞ்சகாலத்தில், பத்திரிகையை நடத்துவதில் நமக்கேற்படும் சிரமத்தை எழுதிமுடியாது. ஒரு ராத்தல் வெள்ளை காகிதம் இரண்டணா விற்றது, இப்போது சுமார் பன்னிரண்டணா விதம் விற்கிறது. எமது வெளிநாட்டு சந்தாதாரர்களில் பலர், தமது சந்தாவை அனுப்பாமலிருப்பது நமக்கு மிகுந்த கஷ்டத்தை யுண்டாக்குகிறது. தனித்தனியே அவர்களுக்குக் கடிதம் எழுதுவதில், மிகுந்த பொருட் செலவும், சிரமும் ஏற்படுகின்றன. ஆகையால், நம் நேயர்கள் இனிமேலாவது ஆலஸ்யமாயிராது, தங்கள் பாக்கியை உடனே அனுப்பச் செய்வதுடன், போதினியைத் தமது நண்பர்களுக்கும் பிரசாரசெய்து, அவர்களையும் இப்பத்திரிகையை ஆதரிக்கச் செய்வாரென நம்புகிறோம்.

பத்திராதிபர்.



## நமது சிறிய கதை

## OUR SHORT STORY

### கஷ்ட ஜன்மம்

அல்லது

### அம்மாளு அம்மாள்

ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி ஐயர் பென்ஷன் பெற்றுக்கொண்டு வந்து, மூன்று வருஷங்கள் ஆயின. கிரமப்படி ஐம்பத்தைந்து வயது வரையில் வேலைசெய்து முழுப் பென்ஷன் பெறுவதற்கு ஐயரவர்கள் பாக்யம் செய்திருக்கவில்லை. நமது ஜனஸமூகத்தில் அநேகர்களை அகால மரணத்துக் குள்ளாக்குகிற நீரிழிவுதான் ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி ஐயரை, அவருடைய நாற்பத்து மூன்றாவது வயதில், மாதமொன்றுக்கு ரூ. 63-7-2 பென்ஷனோடு, வீட்டுக்கு அனுப்பியது. இன்னும் பன்னிரண்டு வருஷம் எப்படியாவது வேலைபார்த்துவிட்டால், குறைந்தது "அஸிஸ்டெண்ட் கமிஷனர்" ஆகிவிடலாம் என்றே, ஐயரவர்கள் எண்ணியிருந்தார். அவருடைய தர்மபத்னியாகிய ஸ்ரீமதி செல்லம்மாளுக்குத் தன் புருஷர் கேவலம் ஸால்ட் இன்ஸ்பெக்டராகவே பென்ஷன் பெறுவது வெகு வருத்தத்தைக் கொடுத்தது. ஆயினும் என்ன செய்வது? ஐயரவர்களால் அடிக்கடி 'ஸர்கியூட்' போக முடியவில்லை. மேலதிகாரியான டிப்டி கமிஷனர், ஐயரவர்களை டாக்டரிடம் அனுப்பினார். ஐயரவர்களுடைய மனவருத்தத்தைக் கொஞ்சங்கூடக் கவனிக்காத டாக்டர், 'அவர் வேலைக்கு லாயக்கில்லை' என்று சர்டிபிகேட்டு கொடுத்துவிட்டார்.

ஐயரவர்கள், தரங்கன்பாடி ஸால்ட் ஸர்க்கில் ஆபீஸில் குமாஸ்தாவாக விருந்து கிரமமாக மேலே கிளம்பியவர். ஆபீஸில் நுழைந்த காலம் முதற்கொண்டு அவருக்கிருந்த முக்கிய எண்ணம் யாதெனில், தமது குடும்பத்தில் தலைமுறை தத்துவமாக இருந்து வந்த தரித்திரப்பேய் அகலவேண்டுமென்பதுதான். இவ்வெண்ணம் முற்றுப் பெறுவதற்கு ஸால்ட் டிபார்ட்மெண்டில் சந்தர்ப்பங்கள் பல ஏற்படும் என்ற கொள்கைதான் ஐயரவர்களை அந்த டிபார்ட்மெண்டில் புகச் செய்தது. அதிகம் சொல்வானேன்? ஐயரவர்களுக்கு 'ஸர்வீஸ்' அதிகரிக்குந் தோறும் அவருடைய மேல் வரும்படியும் அதிகரித்தது. என்றாலும் அவர்மீது ஒருவித புகாரும் ஏற்பட்டதேயில்லை. மேலதிகாரிகளைத் திருப்திபடுத்தியும் கீழ் உத்தியோகஸ்தர்களைத் தட்டிக்கொடுத்தும் ஆபீஸுக்கு வரும் லைஸென்ஸ்காரர்களைப் பிரியத்தோடு உபசரித்தும் காரியத்தைச் சாதித்துக்கொண்டு போவதில் ஐயரவர்களுக்கு மிஞ்சியவர் ஒருவரும் இருந்திருக்கமாட்டாரென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி ஐயர் கி. பி. 1893ஆம் ஏப்ரல்மீ 9உ பென்ஷன் பெற்றுக்கொண்டார். அன்றைய தேதியில் அவருக்கிருந்த ஸ்தாவரஜங்கம சொத்துக்களின் மதிப்புச்சுமார் நாற்பத்தேழாயிரம் ரூபாயாகும். இந்தச் சொத்தை அனுபவிக்க, ஒரே ஒரு புத்திரியைத்தவிர வேறுசந்தானம் அவருக்கு இராமற் போனது அவருடைய துரதிருஷ்டமே. ஐயரவர்களும் அவரது பத்னியும் செய்யாத விரதமில்லை; ஆடாத தீர்த்தமில்லை; போகாத க்ஷேத்திரமில்லை ; என்றாலும், ஸந்தான கிருஷ்ணனுக்கு இவர்கள்மீது இரக்கம் வரவில்லை.

ஸ்ரீமான் ஐயரவர்களுடைய புத்திரியின் பெயர் பார்வதி என்பது. ஆனால் அவளுக்கு "அம்மாளு" என்ற செல்லப் பெயர் வழங்கி வந்தபடியால்ஊரார் அனைவரும் அவளை அந்தச் செல்வப் பெயராலேயே அழைத்தனர். நல்ல இடத்தில் அம்மாளுவைக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டுமென்று ஐயரவர்களும் செல்லம்மாளும் சல்லடை போட்டுச் சலித்தனர். ஐயருக்குப் பிடித்த வரன் அவருடைய பத்தினிக்குப் பிடிப்பதில்லை. செல்லம்மாளுக்குப் பிடித்த வரன் ஐயருக்குப் பிடிப்பதில்லை. செல்லம்மாளுடைய பிறந்தகத்து வழியில் ஒரு பந்துவுக்கு அதிமேதாவியான பையன் ஒருவனிருந்தான். அவனுக்கு அம்மாளுவைக் கொடுத்துவிடலாம் என்று ஐயர் எண்ணினார். ஆனால் இதற்கு இடையூறு செய்தவள் செல்லம்மாளே. "அவனுக்கு என்ன இருக்கிறது? உண்ணச் சோறில்லை; உடுக்கத் துணியில்லை. நன்றாய்ச் சொன்னீர்கள்!" என்று அவள் ஐயர் வாயை அடக்கிவிட்டாள்.

இப்படி இரண்டு வருஷங்கள் கடந்து விட்

டன. மூன்றாவது வருஷத்திய கல்யாண காலத்தில், நிச்சயம் விவாகம் நடத்தி விடுவதென ஐயரவர்கள் தீர்மானித்தனர். ஏனெனில் பெண்ணுக்கு வயது பன்னிரண்டு ஆய்விட்டது. அப்போது, பாளையங்கோவிலில் பெரிய மிராசுதாரரென்று மதிக்கப்பட்ட தர்மராஜ ஐயருடைய ஒரே புத்திரனை ராமையாவுக்கு அம்மாளுவைக் கொடுக்கலாம் என்ற யோசனை நமது ஐயரவர்களுக்கு உதித்தது. ஜோஸியர்கள் ஜாதகப் பொருத்தம் வெகு நன்றாக இருக்கிறது என்று சொல்லி விட்டார்கள். அவ்வருஷமே ஜூன் மாதத்தில் வெகு விமரிசையாக விவாகம் நடந்தேறியது. ஐயரவர்களுடைய விசாரத்தில் பெரும் பாகம் நீங்கியது.

* * *

தர்மராஜய்யருடைய பேராசையும் கெட்ட நடத்தையும், ஸ்ரீமதி அம்மாளுவின் சாந்தி கல்யாணத்துக்குப் பின் வெளியாயிற்று. சொத்து முழுவதையும் கிருஷ்ணஸ்வாமி ஐயர் ராமையாவுக்கே எழுதிவைத்துவிடுவாரென்று தர்மராஜய்யர் நினைத்திருந்தார். கிருஷ்ணஸ்வாமி ஐயர் யாரோ ஒரு பையனை ஸ்வீகாரம் செய்துகொள்ளப் போவதாகச் சமாசாரம் எட்டியவுடன், தர்மராஜய்யரின் மன நிலைமை வெளியாயிற்று "பார்க்கிறேன் ஒரு கை," என்று தர்மராஜய்யர் மார் தட்டினார். "ஸ்வீகாரப் பையனுக்கு சொத்து இல்லையென்று அடிப்பதற்கு மூன்று கோர்ட்டு வரையிலும் போகிறேன். பார்" என அவர் வீரங்கூறிக் கொண்டார். அது முதற்கொண்டு, ஸ்ரீமதி அம்மாளுவுக்குத் துர்த்தசை ஆரம்பித்தது. எடுத்ததற்கெல்லாம் தர்மராஜய்யர் கிருஷ்ணஸ்வாமி ஐயர்மீது ஏதாவது புகார் சொல்லிக் கடிகடிப்பார். நாம் அதிகம் சொல்லவேண்டியதில்லை. ஸ்ரீமதி அம்மாளு கண்ணுங் கண்ணீருமாகப் புருஷன் வீட்டில் காலத்தைக் கழித்துவந்தாள். சாந்திகல்யாணம் ஆகி நான்கு வருஷங்களாயின. என்றாலும் அவள் ஒரு தடவை கூடத் தனது பிறந்தகத்துக்குப் போகவில்லை. தர்மராஜய்யர் அனுமதி கொடுக்க வேண்டாமா?

தர்மராஜய்யருக்குக் கிருஷ்ணஸ்வாமி ஐயர் மீது கோபம் வந்ததற்குக்காரணம் தர்மராஜய்யர் திடீரென்று மரணமடைந்த பிறகுதான் தெரிந்தது. வெயிலில் போய் வந்தவுடன் ஒரு செம்பு குளிர்ந்த ஜலத்தைத் தர்மராஜய்யர் குடித்தார். அது காரணமாக ஜுரம் வந்து ஜன்னிபிறந்து தர்மராஜய்யர்பரமபதமடைந்து விட்டார். அவர் இறந்த பிறகு கணக்குப் பார்க்கையில் அவருடைய சொத்துக்கள் முழுமையும் கடனுக்காக அடைவைக்கப்பட்டிருப்பதாய்த் தெரிந்தது. ஐம்பதினாயிரம் அறுபதினாயிரம் ரூபா கடன்வாங்கி அவர் என்ன செய்தாரோ தெரியவில்லை. தான் கடன்காரனாய்ப் போனாலும் ஸம்பந்தி கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய சொத்துக்களைக்கொண்டு அக்கடனைத் தீர்த்து விடலாமென்று தர்மராஜய்யர் நினைத்திருந்தார். கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஸ்வீகாரம் செய்துகொண்டால் இவ்வெண்ணம் நிறைவேறாமல் தனது யோக்யதை வெளியாய் விடுமென்பதே தர்மராஜய்யருடைய மனோவிசாரம்.

ஸ்ரீமதி அம்மாளுவுக்கு உண்டான கஷ்டங்களுக்கு அளவில்லை. ராமையா, தனது பிதாவைப்போலவே இருந்தான். அவன் அவளை அடிப்பதும் வைவதும் குரூரமாக நடத்துவதுமாகவிருந்தபடியால், சிற்சில வேளைகளில் தற்கொலை புரிந்துகொள்ளலாமா என்றுகூட அவள் நினைத்ததுண்டு. என்றாலும் நல்ல காலம் பிறக்கும் என்ற நம்பிக்கை அவள் மனத்தில் குடிகொண்டிருந்தபடியால், தனது கஷ்ட நிஷ்டூரங்களை வெளிக் காட்டாமல் பொறுமையுடனேயே இருந்தாள்.

'பட்டகாலிலே படும்" என்பது பழமொழி. போதாக்குறைக்கு, கிருஷ்ணஸ்வாமி ஐயரும் திடீரென்று இறந்துவிட்டார். போவதற்குமுன், அவர் தமது சொத்துக்களில் பேர்பாதியைத் தன் பெண்ணுக்கும், பேர்பாதியைத் தனது மனைவிக்குமாக உயில் எழுதி வைத்துவிட்டார். இஷ்டமிருந்தால், தன் மனைவி, யாரேனும் ஒரு பையனை ஸ்வீகாரம் செய்துகொள்ளலா மெனவும் அவர் அதிகாரம் கொடுத்திருந்தார். அவருடைய சொத்து முழுவதும் தனக்கு வரவில்லை யென்று, ராமையா கடுகடுத்துக் கொண்டிருந்தான்.

ராமையாவினுடைய பிதாவின் கடன்காரர்கள் பணத்துக்காக வியாஜ்யம் செய்து, அவருடைய நிலங்கள் முழுவதையும் ஏலம் போட்டுக் கொண்டுபோய்விட்டார்கள். சொற்பத் துணிக்கு, அவனுடைய மனைவியின் சொத்துதான் இருந்தது. அதற்குச் சற்றேனும் திருப்தியடையாமல், அவளுடைய பிதாவின் சொத்து முழுவதும் தனக்கு வராமலிருந்ததற்குப் பெரிதும் வருந்தினான். இன்னும் நாலைந்து மாதங்கள் கழித்து, அவனுடைய பிதாவின் வேறு கடன்காரர்கள் சிலர், கோர்ட்டில் டிக்ரி பெற்று, ராமையாவை வாரண்டில் பிடித்து விட்டனர். ஜெயிலுக்குப் போகவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. "கண்டாரிகழ்வனவே காதலன் தான் செய்திடினும், கொண்டானையல்லால் அறியாக் குலமகள்" ஆன அம்மாளு தன் கணவனுக்கு வந்த பெரும் ஆபத்தை நீக்கும்பொருட்டுத் தனக்குக் கிடைத்த தன் பிதாவின் சொத்தை விற்றுக் கடன்காரர்களுக்குப் பணத்தைக் கொடுத்து, ராமையாவைச் சிறைத்துன்ப அவமானங்களினின்றும் மீட்டினாள்.

பிதுரார்ஜிதம், ஸ்ரீதனம் இரண்டும் போன பிறகும் ராமையா நல்வழிக்கு வரவில்லை. சகவாச தோஷத்தால் அவன் மறுபடியும் கடன்காரனாகிக் கஷ்டப்பட்டபடியால் அம்மாளு தன் தாயாரிடம் போய் அழுது அவளுடைய பாகச் சொத்தில் பெரும் பாகத்தை விற்றுக் கடனுக்குக் கொடுக்கும்படி செய்தாள். தன்னுடைய பெண்ணின் தரித்திரதசையும் கஷ்டமும், தனது வைதவ்யமும் செல்லம்மாளை உருக்கிவிட்டன. ஆகவே அவளும் காலகதியை அடைந்துவிட்டாள். ஐயோ! பாவம்! பொறுமையே, உருவெடுத்துவந்த அம்மாளுவுக்கு இவ்வளவு கஷ்டங்களா? புருஷன் படிப்பற்றவன். வேலை செய்து சம்பாதிக்கத் திறமையற்றவன். சொத்தோ வெகு சொற்பம். அதைக்கொண்டு காலம் கழிப்பது வெகு சிரம சாத்தியமாயிற்று. சுருக்கிச் சொல்லுங்கால், அம்மாளுவுக்கு மானம் போகாமலிருப்பதற்கு மட்டும் உடையும், பிராணன் போகாமலிருப்பதற்குமட்டும் உணவுமே இருந்தன. செல்வம் சகடக்கால் போல வரும் என்பதற்கு இது ஒரு உதாரணம். இப்படி ஐந்து, ஆறு வருஷங்கள் கழிந்தன.

* * *

"அவனுக்கு என்ன இருக்கிறது? உண்ணச்சோறில்லை; உடுக்கத்துணியில்லை" என்று செல்லம்மாளால் அபிப்பிராயப்படப்பட்ட 'நாராயணன்' என்ற பையன் எல்லாப் பரீக்ஷைகளிலும் தேறி எம். ஏ., எம். எல். பட்டம் பெற்றுச் சென்னையில் பிரபல வக்கீல்களில் ஒருவனானான். உதாரகுணமும், உற்றார் உறவினர்களை ஆதரிக்கும் சுபாவமும் அவனிடம் வெகுவாக விளங்கின. செல்லம்மாள் இறந்துபோன சமாசாரக்கடிதம் வந்ததும், நாராயணையரிடம் அக்கடிதத்தை அவன் பிதா கொடுத்து "அப்பா! உனக்கு ஒரு முழுக்கு உண்டு; ஸ்நானம் பண்ணு" என்றார். அப்போதுதான் செல்லம்மாளின் பெண், கஷ்ட ஜீவனம் செய்யும் சமாசாரம் நாராயணன் காதுக்கு எட்டிற்று. மேலும் அப்படிக் கஷ்டப்படும் பெண்மணி தனக்கு மனைவியாக வரவிருந்தவள் என்பதையும் கேட்ட உடனே, அவனுடைய துக்கம் பெருகிற்று ஆகவே, அவளைச் சவுகரியமான ஸ்திதியில் வைக்க வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. அதற்கு இசைவாக அவனுடைய குமாரன் சுப்பிரமணிக்கு உபநயன முகூர்த்தம் கிட்டிய சந்தர்ப்பத்தில் எல்லோருக்கும் கடிதம் எழுதுவதைப்போலல்லாமல் ராமையாவுக்குப் பிரத்யேகமாக ஒரு கடிதம் எழுதிக் கல்யாணத்துக்கு அம்மாளுவுடன் கட்டாயம் வர வேண்டுமென்று அழைத்தார். செலவுக்குப் பணம் இல்லாமல் எங்கே அவர்கள் வராமலிருந்து விடுவார்களோ என்று சந்தேகித்த நாராயணய்யர் அவர்களுடைய வழிச் செலவுக்கென்று இருபத்தைந்து ரூபா அனுப்பினார். ஆகவே ராமையாவும் அம்மாளுவும் அவசியம் வர வேண்டியதாயிற்று. எழும்பூர் ஸ்டேஷனுக்கு நாராயணய்யரே நேரில் தமது கோச்சு வண்டியுடன் சென்றிருந்து அவர்களை அழைத்துவந்தார். அம்மாளுவை நோக்கிய போதெல்லாம் அவளுடைய கஷ்ட தசையும் அவளது அடக்கம் முதலிய நற்குணங்களும் முகத்தில் தெரிவதைக்கண்ட நாராயணய்யர், அவளை நல்ல ஸ்திதியில் கொண்டுவைத்து விடுவதென்ற சங்கல்பத்தை நினைத்துக்கொள்வார். உபநயனம் கழிந்தவுடன், ராமையாவையும் அம்மாளுவையும் ஊருக்கு அனுப்பாமல், சென்னையிலேயே இருக்கச் செய்து, ராமையாவுக்கு, ஒரு பெரிய வியாபாரியிடம் வேலை செய்து வைத்தார் நாராயணஐயர். இப்படிச் செய்துவைத்த வேலை நல்ல

வேலையாகவே இருந்தபடியால், ராமையா வரவரச் சமர்த்தனென்று எஜமானனுடைய பிரியத்தைப் பெற்று, கொஞ்சம் கொஞ்சமாக விருத்தி யடைந்தான். என்னதான் இருந்தாலும், ஸ்ரீமதி அம்மாளுவுக்கு இங்கு, பிறர் வீட்டில் சாப்பிட்டுக்கொண் டிருப்பது மனச் சம்மதமாகவில்லை. தன்னையும் தனது கணவனையும் தனியாக வேறொரு ஜாகையில் அமர்த்திவிடும்படி அவள் அடிக்கடி நாராயணய்யரைக் கேட்டாள். "என்ன, அம்மாளு! அதற்குள் என்மீது அதிருப்தி வந்துவிட்டதா?" என்றுதான் நாராயணய்யர் கேட்டார். ராமையாவின் சம்பளத்தையும் லாபத்தையும் அவன் பேரிலேயே பாங்கியில் போடும்படி நாராயணய்யர் திட்டஞ் செய்திருந்தனர். இரண்டு மூன்று வருஷங்களுக்கெல்லாம் ராமையாவுக்குச் சொந்தமாகச் சுமார் நாலாயிரம் ரூபா சேர்ந்துவிட்டது. அதனுடன் கூட அவனுக்குத் தெரியாமல், வருஷா வருஷம் இரண்டாயிரம் ரூபா அவன் பேரிலேயே நாராயணய்யர் போட்டுவந்தனர். இப்படியாகத் தெய்வம் கொஞ்சம் கண் திறந்தது. என்றாலும், ஸ்ரீமதி அம்மாளு இதனால் சுகமடையவில்லை. கர்ப்பமாகவிருந்து ஒரு பெண்குழந்தையைப் பெற்றதும், அவளுடைய தேகாரோக்கியம் வரவரக் குறைந்தது. மரணத்தருவாயில் இருக்கும்போது, தனது பழைய கஷ்டங்களையெல்லாம் நினைத்து நினைத்துக் கண்ணீர் விட்டாள். அல்லும் பகலும் அவள் அருகிலேயே இருந்த நாராயணய்யர், "அம்மாளு! ஏன் அழுகிறாய்? உனக்கு என்ன குறை?" என்று கேட்டார்.

"அத்தான்! நீர்கூட என்ன இப்படிக் கேட்கிறீர்? நான் பட்ட கஷ்டங்களை எழுதினால் ஒரு பாரதமாகுமே. பெண் பிறந்து இப்படிக் கஷ்டப்பட்டவர்கள் என்னைத் தவிர வேறு யாரேனு மிருப்பார்களா?" என்றாள்.

"பயப்படாதே. கஷ்டம், சுகம் எல்லாம் மாறி மாறி வரும். இதற்கெல்லாம் அழலாமா? ராமையா வைத்தியனைக் கூப்பிடப் போயிருக்கிறான். சீக்கிரம் உனக்கு உடம்பு குணமாகி விடும்" என்றார் நாராயணய்யர்.

"அத்தான்! என் உடம்பு நிலைமை எனக்குத் தெரியும். வைத்தியருக்கு வீணாகப் பணம் கொடுக்கவேண்டாம்.—ஒரே ஒரு விருப்பம் எனக்குண்டு. சொல்லட்டுமா?"

"உடனே சொல்லு; நிச்சயம் பூர்த்தி பண்ணி வைக்கிறேன். எதாக விருந்தாலும் சொல்லு"

"அத்தான்! கேட்க சங்கோசமா யிருக்கிறது. இருந்தாலும் சொல்கிறேன்.—உமக்கு என்னைக் கல்யாணம் செய்து கொடுப்பதாக இருந்தார்களே, அது தெரியுமா, உமக்கு?"

"தெரியும்; உத்தமியான உன்னோடு வாழும் பாக்கியம் எனக்கில்லாமற் போய்விட்டது. அதைப்பற்றி என்ன?"

"அத்தான்! உமக்கென்ன குறை? செல்வம் வரவர நிறைகிறது. உமது சுகதுக்கங்களைப் பங்கிட்டுக்கொள்ள வந்த கல்யாணியோ குணக்கடல். அவளுடைய ஆதரவு மட்டும் இல்லாமல்போனால் நான் இவ்வளவு காலம் ஜீவித்திருப்பதேது?"

"அம்மாளு, கல்யாணியைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கவேண்டாம். நீ சொல்ல விரும்பியதைச் சொல்லு."

"அத்தான்! என் ஜன்மந்தான் இப்படி வீணாய்ப்போய்விட்டது. என் குழந்தை இருக்கிறதே. அதையாவது நீர் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுவீரா?"

"அம்மாளு! நேற்று ராத்திரி நானும் கல்யாணியுமாகப் பேசிக்கொண்டிருக்கும்போது, உன் குழந்தையைச் சுப்புவுக்குக் கல்யாணம் செய்து கொள்ளலாமென்று அவள் சொன்னாள். இந்த இளங்குழந்தையிலா பண்ணுகிறது என்று நான் பரிஹாசம் பண்ணினேன். உன் குழந்தையைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம்."

"அத்தான்! உம்முடைய வார்த்தையை நான் நம்புகிறேன். என் குறை தீர்ந்துவிட்டது.... யாரது, கல்யாணியா?"

"ஆமாம், உடம்பு எப்படியிருக்கிறது?" என்று கல்யாணி அங்கு வந்துநின்று கேட்டாள்.

"சம்பத்தியம்மாளே வரவேணும். உடம்புக்கு என்ன? எல்லாம் ஒரு நாழிகைக் காரியம்" என்றாள் அம்மாளு.

"அம்மாளு! நீ என்ன இப்படி அதைரியப் படுகிறாய்."

"கல்யாணி! எனக்கு என்ன அதைரிய



இனிமேல்? ஒரு குறை யிருந்தது. அதைத் தான் நீங்கள் தீர்த்துவைப்பதாகச் சொல்லி விட்டீர்கள். எனக்குப் பிறகு என் குழந்தையை இங்கேயே வைத்துக்கொள்' என்றாள்.

இதற்குள் வைத்தியனைக் கூப்பிடச் சென்ற ராமையா தன்னந்தனியனாக வந்து "வைத்தியர் எங்கேயோ போயிருக்கிறாராம்; மூன்று மணிக்கு வருவாராம்" என்றான்.

"வைத்தியருக்குச் சிரமம் கொடுக்க வேண்டாம்" என்று அம்மாளு சொல்லிவிட்டு, தன் கணவனை ஜாடைகாட்டிக் கிட்ட அழைத்து, அவன் காதுகளில், "நான் போகிறேன்; கருணையே அவதாரமெடுத்தாற் போன்றிருக்கிற அத்தானும் கல்யாணியும் குழந்தையைப் பார்த்துக்கொள்வார்கள். நீங்கள் வேண்டுமானால் வேறே கல்யாணம் செய்துகொண்டு சுகமாக இருங்கள்" என்றாள்.

"அன்பே! உனக்குப்பிறகு அந்த யோசனையும் கூடவா?" என்றான் ராமையா. தன்னால் அவள் வெகுவாகக் கஷ்டப்பட்டதை நினைத்ததும் அவன் கண்களில் நீர் ததும்பிற்று.

"கல்யாணி! ஞாபகமிருக்கட்டும், குழந்தை விஷயம்" என்று சொன்னாள் அம்மாளு. அந்த க்ஷணத்திலேயே அவள் கண்கள் மூடின. இருபத்தாறு வருஷங்களாகச் சரணமடைந்திருந்த தேகத்தை நழுவவிட்டு, அவள் ஆத்மா, கூட்டைவிட்டுப் பிரிந்துபோகும் பக்ஷிபோலப் பறந்துபோய்விட்டது.

---

# புத்த விஜயம்

(269-ம் பக்கத் தொடர்ச்சி.)

நான்காம் அங்கம்: ஐந்தாங் காட்சி

இடம்: அரண்மனை—காலம்: பகல்

பாத்திரங்கள்: யசோதரை, இராகுலன், புத்தர், சாரீபுத்திரன்.

**ய.**—இராகுலா!

**இரா.**—அன்னாய்

**ய.**—உனது தகப்பனிடமிருந்து சுதந்தரிக்கத்தக்க பொருள்களை யெல்லாம் சீக்கிரமே பெற்றுக் கொள்.

**இரா.**—என் தகப்பன் யார்? நான் பார்த்திலேனே.

**ய.**—நீ பார்க்க வில்லையா? அதோ (ஜன்னல் வழியாய்க் காட்டுகிறாள்) பார்த்தாயா?

**இரா.**—ஆமாம். எனக்குத் தெரியுமே. அன்று நான் இவருடன் கூடவிருந்தேன்.

**ய.**—அவரே உன் தகப்பனார்.

**இரா.**—(வெளியேவந்து) தந்தையே! — ஸ்ரீமனு உம்மைப்பற்றி நினைப்பதுவு மானந்தமே.

**புத்.**—(திரும்பி) பிள்ளாய்! நீ உத்தமனாகக் கடவாய்! (டோகிறார்.)

**இரா.**—(பின்னே சென்று) பிதாவே! எனதுரிமைப் பொருள்களைக் கொடும்.

**புத்.**—என்ன! உனக்கு யாது வேண்டும்?

**இரா.**—பிதாவினிடமிருந்து புதல்வனுக்கு வரும் பாத்தியமான சொத்து.

**புத்.**—சாரீபுத்திரா!

**சாரீபுத்திரன்.**—ஸ்வாமி!

**புத்.**—என் குமாரன் பிதுர்வழியாகப் புத்திரனடையும் பொருளைக் கேட்கிறான். துக்கத்தையும் அழிவையுமுடைய செல்வத்தைக் கொடுக்க எனக் கிஷ்டமில்லை.

**சாரீ.**—மாரனை வென்ற வீர!

**புத்.**—இராகுலா! பொன்னும் பட்டும் என்னிடமில்லை. ஞானசம்பத்தை யடைய விரும்பினால் உனக்குக் கொடுக்கிறேன். ஆனால் நீ அதைப் பாதுகாத்து விருத்திக்குக் கொண்டுவர வேண்டும். அஷ்டாங்க மார்க்கங்கள் முதலிய உண்மைகள் அற்பமானவையன்று. அடையக் கூடிய நல்லொழுக்கப்பயிற்சியில் முயன்று கொண்டிருக்கும் சங்கத்தைச் சேர இஷ்டமுண்டானால், அப்படியே செய்வாய்.

**இரா.**—அதற் கிடையூறொன்றும் கிடையாது. உமது மொழிக்கு மாறாகப் பேசேன்.

**புத்.**—சாரீபுத்திரா! நமது இராகுலனையும் சங்கத்திற் சேர்த்துக்கொள்.

**சாரீ.**—போதிசத்துவ! எல்லாருக்கும் புகலிடம் நீரே. துக்கமும், துக்கோற்பத்தியும், துக்க நிவாரணமும், துக்க நிவாரண மார்க்கமும், உண்மையும் உண்மையின் நிலையும், உண்மை யடைதலும், உண்மை யடையும் மார்க்கமும், இன்னும் மாந்தர் அறியவேண்டிய சத்தியங்களனைத்தையும் உலகிற்குப் போதிக்க ஜனசமூகமும் புத்த தர்ம சங்கங்களைத் தழுவப் பரிநிருவாண நெறியைப்பற்றலாயிற்று. அத்துடன் இக் கபிலாபுரிக்கும் விஜயம் செய்து இராஜவம்சத்தையும் நன்னெறிப் படுத்தினீர். இப்பொழுது

"கோமுறைகோடாக்கொற்றவரேறே முறையேயோ!
தாமரையாள்வாழ் தங்கடிமார்பா முறையேயோ!
தாமதி வாறேன் வருமரு மைந்தா முறையேயோ
நிமைசெய் தாய்போர்செங்கைகுறைத்தாய்முறை
யேயோ"

எனக் கதறிக்கொண்டிருந்தான். இதற்குள் அந்தகுலபாண்டியன் மணியோசை கேட்டு எதிரில் வருவதைக்கண்டதும் அப்பிராமணன் மேலும் "அரசே! மநு நீதி சரியரயின் இக்கொலை வேடனால் கடம்பவனத்தில் என் மனைவி கொலையுண்பாளா? இப்பாவி குற்றத்தைச் செய்திருந்தும் ஒப்பவில்லையே! இது முறையோ? என்ன அக்ரமம்! இது தானோ நீ பாரசாளும் வழி? உமது அநீதியால் உலகெங்கும் புகழொடு விளங்கிய பாண்டி நாட்டிற்கே பழியுண்டாயிற்றே! நீ பிறந்தன்றோ பாண்டியர் புகழ்க்கு என்றும் அழியா மறுவுண்டாயிற்று? இது தகுமா—?" எனப் பரபரப்புடனும் ஆத்திரத்துடனும் எள்ளும் கொள்ளுமாக வெடித்தான். இக்கடு மொழிகளைக் கேட்ட அவ்வரசன் "அந்தணர்த் தலைவா போற்றி! கோபம் வேண்டாம்; நடந்ததைச் சொல்லும்; சொக்கேசர் அருளைக் கொண்டு உண்மையைக் காண முயல்வேன். ஏதோ என்னால் ஆனது செய்வேன். என் நீதி தவறிற்றென்பது தானே விளங்கவில்லையா? எப்போதிக் கொடுந்தொழில் நடுப்பகலில் நடந்ததோ, அப்போதே எனது ராஜ தருமம் குன்றியதென விளங்கிற்றல்லவா? எனவே, யான் மீண்டும் சிம்மாசனத்தில் உட்கார அருகனல்லேன்; இச் செயலின் உண்மை முற்று முணர்ந்து நீதியைக் காணும் வரையும் யான் அதில் உட்காரத் தகுந்தவன் அல்லன்; அதுவரையும் சொக்கேசன் ஆணை! யான் அதன்மேல் உட்காரேன். நீங்கள் வருந்தாதிரும்; தயவுசெய்து சற்றே கோபத்தைத் தணியும்" எனச் சொல்லி அப் பிராமணனைத் தேற்றியதும், வந்த வேடனை நோக்கி "அப்பா! நீ இக் கொடுஞ் செயலைப் புரிந்தது உண்மையானால் ஒப்புக்கொள்; அது நம்மெல்லோர்க்கும் நன்மை தரும்" எனக் கேட்டான். அவனும் "ராஜாதிராஜனே! என் ஐயனே! உமது தரும ராஜாங்கத்தில் இவ் வினை நடந்ததென்றே யான் வியக்கிறேன். யானோ நிரபராதி. இவ் வையனது மனைவியைக் கொன்றேனல்லன்; கொன்றவரையுங் கண்டேனல்லன். எங்கள் மரபினர்க்குந் தாங்கள் வேறு, சொக்கேசர் வேறல்ல. கடவுள் முன் சொல்வதுபோலச் சொல்கிறேன். சொல்வது பொய்யல்ல" எனச் சொன்னான்.

இவற்றையெல்லாங் கேட்டதும் அரசன் மந்திரிகளைத் தருவித்து, தன்முன் இருப்பவர் களுடைய விஷயங்களைக் கூறி, அவற்றின் உண்மையைக் காண விசாரித்தான். ஆனால் சரியான சாக்ஷியில்லாமையால், அவர் உண்மையறிய முடியாது தயங்கினர். வேடன் முகத்தில் சிறிதும் கொலைக்குறியில்லாது விளங்கிற்று. பார்ப்பனன் சொல்லில் அவநம்பிக்கை கொள்ளவும் ஆதாரமில்லை. அவர் தான் என்ன செய்வார்கள்? ஆதலால்

"மாதவ ஞமிக் காவல போயோ, பிதேயோ,
செய்தவர் யாரேயிக்கொலே வேட்டஞ் செய்தோர்மா
வெய்த விலக்கிற் றப்பிய சோல்தான் ஏறுண்டிம்
மைதவழ் கண்ணாள் மாய்ந்தனளோயோ அறியேனால்"

என அவ்வரசன் சங்கையுற்று, பிராமணனை "இதன் உண்மை, நாலால் அறியமுடியவில்லை; தெய்வத்தால்தான் தேறமுடியும். ஆகவே யான் நீர் ஆராய்ந்து உமது மனக்கவலையை மாற்றுவேன். இதற்குள் உமது மனைவியின் ஈமச் சடங்கை நடத்தும்" என ஆணையிட்டுச் சிந்தாக்ராந்தனாய்ச் சுந்தரேசபெருமானை நினைத் தவண்ணமாகத் தன் அவைவிட்டு நடந்தான்.

இதற்குள் சாயங்காலவேளை நெருங்கிற்று. அரசனும் தன்முன் வந்த குறையின் உண்மையைக் காணமுடியாது கவலைகொண்ட மனத்தனாய்ச் சொக்கேசர் கோயில் புகுந்து "என் ஐயனே! இந்த அநீதிக்குக் காரணம் எதுவோ? உமது திருவருளிருக்கும் இது நடத்தலாகுமா? இதன் உண்மை இத்தெனை என்றால் அறியுந் திறந்தந்தன்று. அதை அறியுமாறுசெய்யீரோ?" என வேண்டிப் பன்முறையும் மெய்ப் பரவசனாய் அவரை வேண்டினான். சொக்கேசனையே மனக்கோயிலில் இருத்திய மன்னன், பிறகு மீண்டதும் கவலையிலேயே ஆழ்ந்து கிடந்தான். மகுடம் புனைந்து அரசாள்பவர்க்கு மனச்சமாதானம் எப்போதாவதுண்டா? நிற்க அரசன் அன்றிரவு முழுவதும் தூங்கவில்லை; படுக்கையிற் புரண்டுகொண்டே கவலையிலாழ்ந்து கிடந்தான். அப்போது அவன்முன் இருந்தாற் போலவிருந்து ஏதோ கனவு கண்டாலென விருந்தது; ஏதோ மொழிகள் அவன் காதுள்படுவதாக எண்ணினான்; வெகு ஆவலுடன் அம்மொழிகள் வருவனவாகத் தோன்றிய திசையில் தன் செவிகொடுத்துக் கேட்கலானான். அப்போது,



"திருநகரின் புறம்பொருகார் குலவணிகத் தெருவில் கன்
ஒருமனையின் மணமுடிதங் கத்தமனோ டொருங்கு நீ
வருதியுன துளந்தேற மாற்றமெல்லாம் தோற்றதும் என்
திருவிசும்பின் அகடுகிழித் தெழுந்ததாலொருவாக்கு."

இம்மாதிரி வாக்கு அவன் பன்முறையும் கேட்டதுண்டு. எனவே அவனுக்கு இவ்வாக்கைக் கேட்டதும் மனவாட்டம் மாறியது. காலையிலெழுந்ததும், அவ்வாக்கிற் கொப்பத்தானும் மந்திரிகளும் மனைவியிழந்த பிராமணனுமாக மாறுவேஷங்கொண்டு செட்டி வீதியில் கல்யாணம் நடக்கும் வீட்டுள் நுழைந்து அங்கோர் மூலையில் பதுங்கியிருந்தனர்.

அவ்வீட்டில் அப்போது கல்யாணத்திற் கென்றாகவேண்டிய சடங்குகளெல்லாம் ஆயிருந்தன. தாலிமாத்திரந்தான் கட்டவேண்டிய ஸமயம். மனையில் கல்யாணப் பெண்ணும் மகனும் உட்கார்ந்திருந்தனர். அதே ஸமயம் அரசன் முதலியோர்முன், யாருங்காண முடியாத சில வார்த்தைகள் ஆகாய வீதியில் நடந்தன. சொக்கேசர் கிருபையே அவர்கள் அம்மொழிகளைக் கேட்பதற்குக் காரணம். நிற்க, அங்கு ஒருவன் "எடா! இவனுக்கு நோய் ஒன்றுமில்லையே. ஒரு காரணமுமில்லாமல் உயிர் கொள்வதெப்படி?" என்று கேட்க "அன்று அந்தக் காட்டில் ஆலமரத்திலிருந்த அம்பை விழும்படி செய்து அப் பார்ப்பினி யுயிரைக் கொண்டதுபோல, அதோ அவர் வாத்தியம் படிப்பதைக் கேட்டு இக்கன்று வெருண்டு தாம்பறுத்துக்கொண்டு மணமகனை முட்டும்படிசெய்து, அவன் உயிரைக் கவரலாம்" என மற்றொருவன் பதில்சொல்வதைப்பார்ப்பணன் கேட்டதும், பதைபதைத்து "பாவியேன்! பாவியேன்! வீணே அவ்வேடனைப் பழித்தேனே" என மனந்துடித்தான். எனினும் அரசன் அவனைத் தேற்றிப் "பழியொரு பக்கம் பாவமொரு பக்கமிருப்பது ஸஹஜமே" எனச் சொல்லி அவனுக்கு வேண்டிய பொருள் கொடுத்து வீட்டிற்கனுப்பினான். வேடனையும் விடுவித்து அவனைச்சிறையிலிட்டதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவனுக்கு வேண்டியவற்றை யளித்துத் தனது நீதியின் பெருமையை நிலைநாட்டினான். பின் இவ்விஷயங்களைப் பொதுஜனங்க ளறியுமாறு பறையறைவித்துச் சுந்தரேசுவரரது பேருளைக் கொண்டாடத்திருவிழா ஒன்றும் நடத்தினான்.

மேற் சொன்னவற்றிலிருந்து, நாம் காணும் வெளித்தோற்றங்களுக்கும்நம்மால் அறியமுடியாத மறைவான காரணங்களிருக்கின்றனவென்பது வெளிப்படையாகும். நாம் ஒவ்வொரு காரியத்தையும்காலத்தின் கோலமென்கிறோம்; விதியின் வழியென்கிறோம்; கருமானுஸாரம் என்கிறோம். ஆனால் இவ்வாறு சொல்வதால் நாம் அக்காரியங்களின் காரணங்களைக்காணாது அவற்றைக் காண்பதைத்தள்ளிவைக்கிறோமே யல்லாது வேறில்லை. பிறப்பு இறப்பு இவ்விஷயங்களைக் காண மானிட அறிவிற்கு நோக்கம் சிறிதளவே தெரியும். அதற்குமேல் அதற்குத் திருஷ்டி கிடையாது. எவ்வளவுதான் சொன்னாலும் பிறப்பும் இறப்புமொன்றோடொன்று ஸம்பந்தப்பட்டவை. "பண்டிதர்கள் நான் கொல்கிறேன், கொல்லப்பட்டேன் என்று என்றும் சோகப்படுவதில்லை" எனும் கீதை. "கொல்பவன் 'யான் கொன்றேன்' எனினும், கொல்லப்பட்டவன் கொல்லப்பட்டேன் எனினும் இருவரும் மூடரே" என்பது உபநிஷத்தின் தீர்மானம். உண்மையில் ஒருவரை ஒருவர் கொல்லமுடியாது; இதுதான் மரணத்தின் உட்பொருளாகும். இவ்வுண்மை தெரியாமைதான் பல கொடுமைக்கும் காரணமன்றோ?

---

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி: 11. வேற்றுரு (தொடர்ச்சி.)

"அரசற் கலறமின்! அரசற் கறைமின்!
வாயிலின் வந்துளான் மறம்பெறும் வாக்தட
மாவுள முணர்ந்து மயக்குந் திறத்தான்

பரித்தடந் தேரூர் அருந்தொழி லதாஅன்றி
அறுசுவை யுண்டி அனலின்று அட்டிடுந்
திறம்பெறு செம்மையன்; செல்வம் ஈட்டலின்

அமைதி யூட்டலின், ஆர்வினைத்தொழிலின் எம்
வேலது முடிக்கும் வன்மையன்; ஆண்மையன்;
ஓவியஞ் சிற்பம் யாவுள இயற்றுவன்;
காமர்செய் கைத்தொழில் கலைஞன்; காருதி
பெயரால் வாகுகன் பெருமையால் செடியோன்
மயர்வற இப்பதம் செயலினன்; வாய்மையன்
வாயிலி ரூனென மன்னர்க் குரைத்தி,
வாயி லோயே! வாயி லோயே!—மன்னரூர்
பணிவினை தன்னெதிர் பார்த்து ளானென"

எனக் கூறித் தனது குதிரையோட்டும் வல்லமையையும், தேர்விடுஞ் சக்தியையும், சமைக்குந்திறத்தையும் கூறித் தனது வரவை ருதுபர்ண மகாராஜனுக்குத் தெரிவிக்கும்படி சொன்னான்.

வாயில் காப்போரும் அவ்விதமே சபையிலிருந்த தமதரசாகிய ருதுபர்ணரிடம் வெளியிட்டனர். அரசனது அனுமதியின்பேரில் வாகுகன் ராஜஸபையுட்செல்ல, அவனை ருதுபர்ணமன்னன் ஏற்றவிதம் மரியாதைசெய்து, மேல் வருமாறு சொன்னான்:—

"ஐயா! வாகுகரே! உமது பெருமையைப்பற்றிக்கேள்விப்பட்டு நான் பெரிதும் மகிழ்கிறேன். பெரியோர்கள் வந்தால் அவர்க்கிடங் கொடுத்துப் போற்றுவதே எம் முன்னோர் வழி. தயவுசெய்து தாங்கள் இங்கேயே இருக்கவேண்டும். உமக்கு ஒரு குறைவு மில்லாமல் பார்த்துங் கொள்வேன். உமது சாமர்த்தியம் முழுவதையும் நீர் வெகு சீக்கிரத்தில் இந்த ராஜஸபை முன்னேயே காட்டலாம். ஆயினும் என்மனம் இப்பொழுது குதிரைகளைப் பழக்கியாளுவதிலேயே செல்லா நிற்கின்றது. அத்தொழிலை இப்பொழுது தயவுசெய்து ஒப்புக்கொள்ளும். எனது குதிரைகளைப் பழக்குபவர்களுக்கெல்லாம் தலைவரா யிங்கிரும். அவருள் முதன்மையரான ஜீவலன், வார்ஷ்ணேயன் இவ்விருவரும் உமது கைக்குளடங்கிய குதிரைக்காரர்களா யிருப்பார்கள். உமக்குச் சம்பளம் நாளொன்றுக்கு ஆயிரம் பொன். அதைத்தோரை யான் என்றும் விடுவதில்லை. ஆகையால் வாகுகரே! ஜீவலன், வார்ஷ்ணேயன் இவ்விருவர்களுடன் சுகமே இங்கரிலேயே இரும்."

இம்மொழிகளைக் கேட்டதும் நளமன்னவன் அவ்வாறே ஒப்புக்கொண்டு அவ்வூருள் குதிரைபழக்குபவர்களுடைய தலைவனாக ஜீவல வார்ஷ்ணேயர்களுடன் வேலைக்கமர்ந்து வாழ்ந்து மிக்க மரியாதைக் காளாயினான்.

அப்படி வாழ்ந்து வந்தபோதிலும், அவன் தமயந்தியைப் பற்றியே கவலைகொண்டு விளங்கினான். ஒவ்வொரு சாயங்காலமும்

"நிசியே யுயிர்கள் துயில்மத் தெருந்து
செடியோ யெனக்கை முதியா
விசையா நடந்து வருந்திக் களைத்து
விளைகொந்து மேனி மெலிய
பசியா லயர்ந்து நீர்க்கே தவித்துப்
பழியுறு வெம் பாவை துயரின்
பிசையுத் தனையன் னொன்றோ னொன்னே
எனினைக்கு மிழியின் மிகவே"

என்னும் ஓரேபாட்டைச் சொல்லிச் சொல்லி மனமிரங்குவான். இம்மாதிரி சொல்லிக்கொண்டிருப்பதைக்கேட்ட ஜீவலன் ஒரு நாள் "வாகுகரே! அவளைப்பற்றி இவ்விதம் தாங்கள் ஒவ்வொரு நாளும் வருந்துகிறீர்? ஏன், என்னுடன் சொல்லலாமானால்சொல்லும். நீர் துக்கப்படுவது யாரைப்பற்றி? அவள் யாருடைய மனைவி? அவளைப்பற்றி நீர் ஏன் துக்கப்படுகிறீர்? எனக்குக் கேட்க ஆவலாயிருக்கிறது. தயவுசெய்து, தவறில்லாத பக்ஷம், எனக்குத் தெரியும்படி சொல்லும்" என நளமன்னவனை நோக்கிக் கேட்டான்.

இம்மொழிகள் எரியுந் தணலில் நெய் சொரிந்தாற்போல நளனுடைய சோகத்தை அதிகப்படுத்தியபோதிலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாது "உமக்குச் சொல்லாமல் என்ன? எல்லாம் ஒரு பைத்தியக்காரன் செய்தி. அவனுக்கு மரியாதை மிக்க மனைவியிருந்தாள்; அவளது கணவன் மயக்கங் கொண்டவன்; அவன் பேச்சு நம்பக்கூடியதல்ல. அந்தப் பித்தன் ஏதோ காரணம் அவளை விட்டுப்பிரிய நேரிட்டது. அவன் இரவும் பகலும் அவளை நினைத்து இந்தப் பாட்டைப் பாடிக்கொண்டிருப்பான். மதிமயங்கிய அவன் ஊரூராய் அலைந்து காட்டிலுமலைய நேரிட்டது. அப்பொழுதவனுடைய நல்ல மனைவி அவனையே பின்பற்றி அவ்வன் கஷ்டத்தில் அகப்பட்டு வந்தாள். ஆனால் அந்தத் துரதிருஷ்டன் அவளை நடுக்காட்டில் விட்டுவிட்டு இருந்தாற்போல பிரிந்து அறந்துபோய்விட்டான். கொடிய மிருகங்கள் வசிக்கும் அக்காட்டில் அவள் கதி என்னவாயிற்றோ? அவள் அங்கு உயிர் தப்பிப் பிழைக்கிறாளோ இல்லையோ யான் அறியேன்" என்று பதில் சொல்லித் தனது துயரத்தையே மறைவாக வெளியிட்டான். பின் எப்



பொழுதும் போல நெடுமூச்சுவிட்டுத் தனது மனைவியைப் பற்றியே நினைத்து, கவலையிலாழ்ந்து, மெய்தளர்ந்து, மனமுருகி, நைந்துகொண்டே கிடந்தான்.

இவ்வாறு நளமன்னவன் தமயந்தியைப் பற்றிய நினைவு தன்னுடலைவாட்ட ருதுபர்ண மஹாராஜனுடைய அரண்மனையில் வேற்றுருவமைந்து ஒருவருமறியாதபடி வாழ்ந்து வந்தான்.

### தமயந்தி: 15—சூளுரை.

உன்றவன் தன்னை யொருவகையா காடியே
தந்து விடுமாவுந் தாழ்குழலாய்—என்றனுடன்
இங்கே இருக்க இனிதென்றாள் ஏந்திழையைக்
கொங்கேயுந் தாராள் குறித்து.

தமயந்தி சேதி நகர்த் தெருவில் நடந்து கொண்டிருந்தாள்; மெய்ம்மறந்து, நடைதளர்ந்து, கலைசோர்ந்து, மேனியிளைத்து, அடர்ந்த நெகிழ்ந்தவிழ்ந்த கூந்தல் காற்றில் பின்புறமாகத் தவழ்ந்து படர, ஒளிமங்கிய கண்கள் அவளது துக்கத்து நிலையைப் பளிங்கு போல் காட்ட, பித்தம் பிடித்தவளென்று எல்லாரும்ஸங்தேகங்கொள்ளுமாறு, கருத்தின்றி, நடப்பதும் தெரியாமல், அடிமேல்அடிவைத்து நடந்துகொண் டிருந்தாள். அவளது பாதித் துணியணிந்த கோலத்திலும் சாந்தமும்பொறுமையும் குலாவி விளங்கின. ஆயினும் அவள் பித்தம் பிடித்தவள் போலவே நடந்துவந்தாள். ஊர்ஜனங்கள் கண்ணால் அவளைத் தொடர்ந்து மனமிரங்கினராயினும், அவ்வூராரது குழந்தைகள் விளையாட்டாக உத்ஸாகத்துடன் கூட்டங் கூடிகொக்கரித்து அவளைத் தொடர்ந்து வந்தனர். படித்தவன் பின் பத்துப்பேர், பைத்தியக்காரன்பின் பத்துப்பேர் என்பது பழமொழியன்றோ? சிறியரும் பெரியருமாகச் சிறுவர்கள் அலைபோல்தொடர்ந்துவரத் தமயந்தி அவ்வீதிகளில் தனக்குந் தெரியாது சென்றது, வெற்றிகொண்ட மன்னன் விஜயப் பிரதாபத்துடன் வீரர்கள் புடைசூழ ஆரவாரத்துடன் நகரப் பிரவேசஞ்செய்வது போல இருந்ததெனச் சொல்வதிழுக்காகாது. சிறூர்க்கூட்டங்களிட்ட பேரொலி வீட்டிலிருந்தார் யாவரையும் தெருவில் வந்து தமயந்தி செல்லுங் காட்சியைக் காணச் செய்யுமென்பது நாம் சொல்லவும் வேண்டுமோ? "யாரோ விஜயமங்கை போலக் காண்கிறாள். உடுத்திருக்குமாடை மெல்லிதெனினும் அவள்முகத்தில் அவ்விதம் கவலைகுடிகொள்ளக் காரணமென்ன?" எனத் தமக்குள் தாம்பேசிக்கொள்வர்சிலர். சிலர் "இவளைப்பார்த்தால் மஹாலக்ஷ்மிபோல் காண்கிறாள். உடுத்திருக்கும் ஆடையோ கிழிந்திருப்பினும் எளியதன்று. ஒருவேளை நல்ல பதவியிலிருந்து. காலக்கொடுமையால் தாழ்மையடைந்தனள் போல் தோன்றுகிறாள்" என்பர். "இவள் ஓர் தெய்வமடந்தை. இவள் முகம் அவள் ஏதோ கவலையுடன் விளங்குவதைக் குறிக்கின்றது போலும்!" என்பர் வேறுசிலர். "வறுமையிற் செம்மையேஅவ்வள் முகத்திலே தாண்டவமாடுவது. எப்புண்யவதியோ! தனது வரவால் நமதூரைப் புனிதமாக்கினள். அவள் நன்மை பெறுவாளாக!" என்று அவளிடம் அன்புபாராட்டி ஆசிகூறினர் மற்றுஞ் சிலர். இவ்வாறு பலர் பலவிதங் கூறத் தமயந்தி திகைத்து நாலாபக்கங்களிலும் உற்றுநோக்கிய வண்ணமாகவே மெல்ல நடந்து, இவள் யாரென யாவரும் வியக்குறும்படி அரசர் வசிக்கும் ராஜவீதியுள் பிரவேசித்தாள்.

அத்தெருவில் உயர்ந்து எழுநிலை மாடமமைந்து கோபுரந்தவழ்ந்து பார்ப்பவரது மனதைப் பரிக்கும் ராஜக்ரஹத்தின் மேன் மாடியில் சேதிநாட்டரசனுடைய தாய் பலருடன் பேசிக்கொண் டிருந்தாள். அவளப்பொழுது அன்று காலை தான் கண்ட கனவைப் பற்றிப் பிரஸ்தாபித்து அதன் பலன் எதுவாகவிருக்கலாமோவெனக் கேட்டாள். "அதன் பலன் இன்னுஞ் சிறிது நேரத்தில் தானே தெரியவரலாம்" என்றவள் எதிரில் இருந்த வயது முதிர்ந்த ஒரு ஸ்த்ரீ சொல்லிக் கொண்டிருக்கும்போது, அவ்வந்தப்புரம் கிடு கிடுத்திடும்படி பெரு மிரைச்சல் அவர் காதுள் வீழ்ந்தது. அந்தச் சத்தத்திற்குக் காரணமெதுவாக விருக்கலாமென்று காண, அம்மன்னவன் தாய் முன் வந்து மாடியிலிருந்த விதமே தெருவிலென்ன விசேஷமென எட்டிப் பார்த்தாள். பார்த்ததும், அவள் தமயந்தியின் வரவைக் கண்டு, தனது தாதியை அழைத்து "நீ கீழிறங்கிப்போய் அதோ வருகிறாளே அவளைச் சீக்ரம் என்னிடம் அழைத்துவா" எனச்சொல்லி அனுப்பினாள். மேலும்,

"பொன்னம் பாவை யுடல் முழுதும்
புகையுன் டென்னச் சவிமழுங்கும்

மின்னுவண் மருங்குல் சில்லோதி
அணங்கோ? அரசர் மடமகளோ?

அப்பெண்ணை இச்சிறுவர் கூட்டம் தொந்தரை செய்கிறது. மேலும் அவள்,

அற்ற துகிலும் அழுதொழுகு கண்ணீரும்
உற்ற துயரும் உடையளாய்

விளங்குகிருள்; பார்த்தால் தாமரையிலையில் வசிக்கும் லக்ஷ்மிபோல் காண்கிருள். அவளது அழகிய வடிவம் இவ்வரண்மனைக்கே அழகூட்டும் அல்லவா? உடையால் அவள் பைத்தியக்காரியைப்போல இருந்தாலும், நடையால் அவள் உத்தம மடந்தை; உலகிற்கே உயர்வுதரக் கூடியவள். இது உண்மை. அவள் தேர்ந்த கைப்பழக்கத்துடன் செதுக்கப்பட்ட சித்திரப் பாவைபோல் இருப்பதன்றி, பரந்த அவள் கண்கள் காதுவரையோடி, மேகத்தில் பாய்ந்து வளைந்த சந்திரனைப்போல வளைந்த நெற்றியின் கீழ்ப்படிந்து வளைந்த புருவங்கள் கவிக்க விளங்கி, பதுமத்தில் அரவிந்தம் பூத்ததென்றெவரையு மயங்கச்செய்யும் அன்ருே? அவளது கோலம் அவளது துக்கத்தையே வெளியிடும்; எனினும் படிந்த புழுதியிலும் அவள் மேனி காந்தியுடன் விளங்குகிறது. பார்வையும் சரண்புக இடந்தேடுவதையே காட்டுகின்றதுவன்ருே? அற்ருர்க்கு அரசனே கதி. அவளை இங்கே இருக்கச் செய்வதே நமக்கு உரிமையாகும்'' என்று மேலுங் கவலையுடனவள் கூறினுள். அவ்வாறு கூறும்பொழுதெல்லாம் அவளுக்குந் தெரியாது அவள் மனத்துள் துயரமெழும்பும்; அது இன்னதெனத் தெரியாது மயங்குவள். அதனுடன் தமயந்தியிடம் ஒருவித பட்சமும் அன்பும் அவளிடம் தெரியாமலேயே குடிகொண்டன.

இதற்குள் தமயந்தியை அழைத்துவரச் சென்ற தாதி அவளுடன் சேதிக் கரசியிடம் வந்து சேர்ந்தாள். தமயந்தியைக் கண்டதும் சேதி மன்னவன் தாய், அவளது அழகைக் கண்டு வியப்புற்று ஒன்றும் பேசாது சற்று நேரம் சும்மாயிருந்தாள். பிரமை சற்று நீங்கியதும் மெல்லிய குரலில் பின் வருமாறு சொன்னுள்:—

"உம்மைக் கண்டால் துயரே உருவெடுத்தாற்போலப் படுகிறது. அம்மணீ! தாங்கள் யார்? உமது மனத்தில் என்ன கவலை குடிகொண்டு உம்மை இவ்வாறு வாடச்செய்தது? புழுதி நிறைந்து விளங்கினும், மேகத்திடை மின்னல் ஒப்ப உமது மேனி விளங்குகிறது. இவ்வளவு இளஞ்சரீரத்திற் கேற்காக் கவலை ஒன்று உம்மை வாட்டுகிறதென்று திடமாகச் சொல்லக்கூடும். தாங்கமுடியாத் துயரம் ஏதுவோ உம்மை வருத்துகிறது. அது நிண்ணம். நகையற்றிருப்பினும் உமது இளநகையே உமக்குப் பெருமாபரணமாக விளங்குகிறது. உமது அழகின்முன் ஆபரணங்கள் எதற்கு! இயற்கை யழகின்முன் செயற்கையழகு எங்கேனும் நிலைத்ததுண்டா? உமது உருவத்தை மானிட உருவமென எவராலும் நம்பமுடியாது. நீங்கள் தெய்வமோ? அறமங்கையோ? நாம் அறியோம். ஆயினும் உமக்கு மானிட உதவி வேண்டுமெனவே எனக்குந் தோன்றுகிறது. அவ்வெண்ணம் சரியோ தவறே அறியேன். பிழை ஏதேனும் இருந்தாலும் பொறுத்தருளும். ஏதோ நான் கேட்கிறேன். வேறொன்றும் மாருக எண்ணற்க. தாங்கள் யார்? ஏன் இவ்வாறு விளங்குகிறீர்? உம்மைக் கண்டால் அச்சம் தோன்ருது அன்பே வளர்கின்றது. ஆகவே கேட்டேன். தயவுசெய்து விடை யளிப்பீரென நம்புகிறேன்."

இம்மொழிகளைக் கேட்ட தமயந்தி "நான் தேவதையுமல்ல; அறமங்கையுமன்று; கேவலம் ஓர் மானிடப்பெண்தான் என நம்பும். என்னை என் கணவர் வனத்தில் தனியே விட்டேக, அன்னவரைத் தேடி அலைகிறேன்; காணுது ஏங்குகிறேன். யான் உயர்குலத்துப் பிறந்த நல்ல வேலைக்காரி; பிறர்வீட்டில் வேலை செய்வதையே தொழிலாகக்கொண்டு வயிறு வளர்ப்பவள்; ஆயினும் ஒருநாளும் என்னிஷ்டத்துக்கு மாருக நடவேன். தனியாகவே யான் இருப்பேன்; பிறரோடு கூடேன்; வேலைச் சமயங்களில், இன்றியமையாத காலத்தில், பேசுவதைத் தவிர்த்து எப்பொழுதும் எவரோடும் பேசேன்; கணவனையன்றி மற்றெந்த மனிதனையுங் கண்ணுல் பார்க்கேன். கந்த மூல பலங்களே என் உணவு. மற்றவற்றில் எனக் கிச்சையே கிடையாது. இரவில் எப்பொழுதும் ஸஞ்சரிக்கேன். அப்படி எங்கேனும் நடந்து செல்லும்படி நேர்ந்தால் சாயங்காலவேளையில் எங்கு தங்கும்படி நேருமோ அங்கேயே யான் நின்று விடுவேன். மற்று என் கணவரோ உத்தம குணங்களுக்கெல்லாம் உறைவிடமாவர்; என்னையன்றி மற்ற மாதரைக் கருத்திலும் எண்ணுதவர்; என்னிடம் பேரன்பு வாய்ந்தவர்; என்னைவிட்டொருநாளும் நீங்காத உத்தமர். இருவருமாகவே காட்டில் வந்தோம். அவரை நிழல் போலவே யான் தொடர்ந்து வந்தேன். ஆயினும் என்ன? 'அளந்தன போக மவரவர்க் கற்றை நாளே' எனச் சொல்லக் கேட்டதுண்டேயன்றி நம்பினது ஒருநாளுமில்லை. எப்படி இருந்தாலென்ன? வருவன தாமே வருமன்ருே? என் துரத்ருஷ்டத்திற்கு யாரை நொந்தென்ன பிரயோஜனம்? என் தலைவர் ந—என்ன இது? ஏன் நாக்குழறுகிறது? நெடுநாழியாக நடந்த இளைப்பில் என் நா உலர்ந்துவிட்டது போலும்! நிற்க. என் தலைவர்க்குச் சூதில் அதிகப் பிரியம், தெய்வ சங்கல்பம். அவர்க்குச் சூதாட்டத்தில் தோல்வி ஏற்பட்டுவிட்டது. அத்தோல்வியைத் தாங்கப் பொருது அவர் காட்டுக்கோடிவிட்டனர். என் செய்வேன்? அவரைத் தொடர்ந்து ஓடினேன். அவர் பித்தம்பிடித்தவர்போல ஒற்றைத் துணியன்றி வேறொன்றுமின்றி, ஓடிக்கொண்டிருந்தார். அப்போதும், கண்கொட்டாது அவரைப் பார்த்த வண்ணமாகவே, நானும் அவரைத் தொடர்ந்தேன்; அவர் சென்ற காட்டுக்குள் எல்லாம் அவரைப் பின்பற்றினேன். அங்குப் பசியாலும் தாகத்தாலும் வருந்திய அவர்க்கு உதவிசெய்யச் சென்றேன். அப்போது அவர் புத்திமயங்கித் தான் அணிந்திருந்த ஒற்றைத்துணியையும் இழந்து தன்மேல் ஞாபகமின்றிப் பித்துப்பிடித்தவர்போல அலைந்தனர்; யானும் அவரைப் பின்தொடர்ந்து அவர்நிழல்போலவே இருந்தேன். என் துணியிற் பாதி அவரும் பாதி நானுமாகக் கட்டிக்கொண்டே எங்கும் ஸஞ்சரித்தோம். ஒரு ஸமயம் இருவரும் ஓரிடத்தில் படுத்து அயர்ந்து நித்திரை செய்தோம், என்ன புத்திதோன்றியதோ என்னவோ, அவர் தூக்கத்தில் நடுவில் எழுந்து என் துணியில் பாதியைக் கிழித்துக்கொண்டு எங்கோ ஓடிவிட்டார். அன்று முதல் அவரைத் தேடி யலைகிறேன்; பரிதபிக்கிறேன்; சிந்தை நைகிறேன். என் தலைவரை இதுகாறும் யான் காணவில்லை. இரவும் பகலுமாகத் தேடியும் பிரயோஜனமில்லை. அவரோ வெகு நல்லவர்; புண்யசீலர்; உத்தமர்; நன்மையே செய்பவர்; அடைந்தோரைக் காப்பவர்; குற்றமொன்றும் அறியாதவர்; அழகிற் கழகு செய்பவர்; என்னுயிர்க்குயிரானவர்; அவரைக் காணுது அலைகிறேன். என் செய்வேன்?" எனத் தன் கண்களிலிருந்து ஆருகப்பெருகிய நீர் தன் மேனிமேற் படிந்து, தங்கிய புழுதியைப் போக்கிப் புனிதமாக்க, எளிய குரலில் வாடிய மனத்தொடு கேட்டார் மனங்கரையுமாறு சொன்னுள்.

இம்மொழிகளை வெகு ஆவலுடன் மன்னவன் தாய் கேட்டாள். கேட்கும்போதே அவள் என்னவென்னவோ எண்ணினுள். இடையிடையே தன் கைகளைப் பிசைத்துக்கொண்டு திகைத்து விளங்கிய அவளது கண்களில் நீர்த்துளிகள் கசிந்துருகித் தாரை தாரையாகத் தெரியாமலே வழிந்துகொண்டிருந்தன. எனினும் தன் கண்களைத் தன்னுணர்வில்லாமலே துடைத்துக்கொண்டு "நல்லவளே! உன்னைக் காணும்போதே எனக்குந் தெரியாமல் அங்கலாப்புண்டாகிறது. உனது மொழிகள் என் அன்பைத் திறந்து மடைபாயும்படி செய்கின்றன. உனது உத்தமகுணங்களெல்லாம் உன்னைக் காணும்போதே வெளியாகின்றன. அகத்தைக் காட்டுவது முகமேயல்லவா? பதம் பார்க்கப் பதக்கரிசி வேண்டுமோ என்ன? நீ பெண்ணில் பெருந்தகையாள். நீ யிருக்குமிடம் லக்ஷ்மி வசிப்பள். உன் கைபட்டதெல்லாம் தங்கமாகும். நீ கஷ்டப்படுவதற்கு என் மனஞ்சிறிதும் ஒப்பாது. நீங்கள் என்னிடம் இங்கேயே யிருக்கலாம். எமது உளவர்களை அனுப்பி உமது கணவரைத் தேடிக் கண்டுபிடிக்கச் செய்கிறேன். பயம் வேண்டாம். தாங்கள் இங்கேயே தய்வுசெய் திரும். எமதாட்கள் மூலை முடுக்கெதுவும் விடாது எல்லா யிடத்தையும் நாடித் தேடுவர். அதில் ஸந்தேஹமில்லை. எனக்கோ உம்மைப் பார்க்கப் பார்க்கப் பரவச முண்டாகிறது. நீர் இங்கேயே அவசியம் தங்கவேண்டும்; உமதிஷ்டப்படி இருந்தென்னைக் களிப்பிக்கவேண்டும். உம்மை யாதரிப்பது எமக்கோர் பெரும் பாக்கியம். தாங்களோ கற்பி லருந்ததிபோ லுள்ளீர். எமது மொழியை நிராகரிக்காது காப்பீரென்பது என் திட நம்பிக்கை. ஒருவேளை உமது கணவரே இங்கே வந்து சேர்ந்தாலும் சேரலாம். அவரைத் தாங்களிங்கிருந்துகொண்டே காண

லாம். அவ்வாறு செய்வது உத்தமம்; அது உமக்கும் சுகம் பயக்கும்; எமக்கும் களிப்பைத் தரும். உமதிருக்கை இவ்வரண்மனைக்கே பெருமை யுண்டாக்கும். இது நிச்சயம். எனவே, தாங்களிங்கே எம்மோடொருவராக வசிக்க மறுக்கீர் என்பது என் திடமான நம்பிக்கை" என வேண்டினுள்.

தமயந்தியும் "அம்மணீ! தாங்கள் வீரர்களைப் பெற்றெடுத்த தாய். உமக்கு நான் பன்னிப் பன்னிச் சொல்லவேண்டியதில்லை. தாங்களே எனக்குத் தாய்போலு மிருக்கலாம். உம்மிடம் சொல்வதில் எனக்கொரு குறைவுமில்லை. தங்களுடைய வாக்கைத் தடுக்கத் தகுந்தவள் எளியேன் அல்லள். ஆயினும், நான் சொல்வதைத் தாங்கள் கவனிப்பீரென நம்புகிறேன். நான் தற்சமயம் கணவனிடமிருந்து பிரிந்து விளங்குகிறேன். எனவே நானிங்கிருப்பது பல நிபந்தனைகளுக்கு இடந்தரும்; உமக்குப் பெருங்கஷ்ட முண்டாக்கும். அதற்கெல்லா மிடந்தரத் தேவையில்லையே" என்றனள்.

"என்ன கஷ்டம்! என்ன நிபந்தனை! கஷ்டமிருந்தால் எனக்குக் குறையொன்றும் வந்திடாது. நிபந்தனைகளா? பெண்கள் நிபந்தனைகளுக் குட்பட்டவர்கள் தானே! அப்பேர்ப்பட்ட நிபந்தனைகள் என்ன உமக்கிருக்கின்றன?"

"நிபந்தனைகள் என்றால் கணவனைப் பிரிந்தவள் தன்னைக் காக்க ஏற்படுத்திக்கொள்ளும் மனநிலை முறைகளே! வேறென்ன? அதற்குத் தாங்கள் இணங்கும் பக்ஷத்தில் உம்முடன் யானிருக்கச் சிறிதும் வெறுக்கேன்."

"வெறுக்காதிருக்கலாம்; எப்போது மப்படியேயிருக்கலாம். உமது நிபந்தனைகளின்னவென எனக்கு வெளிப்படையாகச் சொன்னால், அதற்கேற்றவண்ணம் நான் தாங்களிருக்கத் திட்டங்கள் செய்வேன். இது உண்மை, நம்பும். அவற்றைச் சற்றே வெளியிடல் உமக்கும் எமக்கும் நலந்தருமல்லவா?"

"நான் கணவனைப் பிரிந்து கஷ்டப்படுபவள் என்பது தாங்கள் அறிவீர். எனவே யான் இங்கிருக்க வேண்டுமென்பது உமது விருப்பமானால், தாங்கள் நான் சொல்லிக்கொள்ளும் விஷயங்களை மறுக்காது ஒப்பவேண்டும். முதலில் நான் எச்சில் அன்னம் புசிக்கேன்; எவருடைய காலையுங் கழுவேன்; அன்னியன் எவனுடனும் பேசேன். என்னுடன் பேச விரும்புவதாக எவனாவது சொன்னால் அவனைத் தாங்கள் உடனே தண்டிக்க வேண்டும். மீண்டும் அவன் மனத்துணிவுடன் அப்படிக் கேட்டால் அவனைச் சிரச்சேதம் செய்துவிடவேண்டும். புருஷ வாசனை என்பது எனக்காகாது. ஆயினும் என் கணவனைத் தேடப்போகும், புலன்களை யவித்த பெரியவருடன் மாத்ரம் பேசுவேன். இது தான் என் விரதம். நான் சொல்லியபடி செய்ய உமக்கிஷ்டமுண்டானால் நான் உங்களுடன் நிச்சயமாக வசிப்பேன். இதற்கெல்லாம் ஒப்ப உமது மனம் இடந்தராத பக்ஷத்தில் உம்முடனிருக்க எனக்குச் சம்மதமில்லை."

"ஹா! இந் நிபந்தனைகள்தானா! அம்மணீ உமது விரதம் எனது விரதமாக நடக்க நான் சித்தமாக விருக்கிறேன். நீ பெரியவள்; புகழ்க்குரியவள்; இங்கிருக்கத் தகுந்தவள். உன் பாத தூள்பட்ட விடமெல்லாம் பரிசுத்தமாகும். உன்னைக் கண்டும் பிறரை யெண்ணுவது இயலாது. அம்மணீ! தாங்கள் எது சொன்னாலும் அப்படியே நான் செய்வேன். இது உண்மை. அது எனக்குச் சந்தோஷம்.

> பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
> திண்மையுண் டாகப் பெறின் ?

கற்புடை மனைவிதானே கடவுளையும் கடந்து நிற்பவள்?

> தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யு மழை.

அல்லவா? பத்தினிக்கடவுளாகிய தாங்களிங்கிருப்பது எனக்கும் என் மகனுக்கும் அவன் நாட்டிற்குமே பெரும்பேறுண்டாக்கும். தாங்களினி இங்கில்லாதிருக்க விரும்புவீரேல் அது எனக்குப் பெருந்துன்பந் தரும்" என்று அச்சேதியன் தாய் தனது எண்ணத்தைவெளியிட்டதும், தமயந்தியும் அங்கிருக்க ஒப்பினுள்.

அவ்வாறவள் ஒப்பியதும், அந்நாட்டரசன் தாய் தன் மகளைக் கூப்பிட்டு "ஸ்ரீ நந்தே! இவ்வுத்தமி நம்மிடம் வேலைக்காரியாக இருக்க இஷ்டப்படுகிறாள். ஆனால் உருவில் லக்ஷ்மியையே நிகர்க்குமிம்மாது உனக்குச் சமான வயதுடையவள். தேவதையே போன்றவள். உனது பாங்கியாகக்கொண்டு, தோழியருடன் சேர்ந்து விளையாடும் செல்வத்தைச் சிறிதும்



மனக்கவலையின்றிப் பெறுவாயாக! அவளது இஷ்டத்துக்கு மாறாக ஒன்றும் செய்யாதிருப்பதே உனக்குப் பெருமையும் முறைமையுமாகும்" எனச்சொல்லி ஸ்ரீநந்தையிடம் தமயந்தியை ஒப்புவித்தனள். காவலில் வைக்கப்பட்ட செல்வமென்ன அவள் அந்நாட்டு ராஜவம்சத்தினரால் கவனிக்கப்பட்டனளென்பது நாம் சொல்வது மிகையேனும், அது சொல்லாமல் வெளிப்படையாவ தெப்படி? அக்காவலினும் தமயந்தியின் தற்காவல் சிறந்தென்பதற்கு

> 'சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
> நிறைகாக்குங் காப்பே தலை'

என்ற வள்ளுவரது வாக்கே சான்றாகும் அன்றோ?

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS AND NOTES

**பிரபுக்களின் ஸபை.**

இங்கிலாந்து தேசத்தில் ராஜ்ய அங்கங்களில் ஒன்றாக விளங்கும் பிரபுக்களின் ஸபையின் சீர்திருத்தத்திற்காக பிரைஸ் (Lord Bryce) பட்டவர்த்தனருடைய தலைமையின்கீழ் ஏற்பட்ட ஸங்கத்தாருடைய ரிபோர்ட்டு வெளியாகி யிருக்கிறது. இப்போது சுமார் அறுநூறு அங்கத்தினர் அடங்கிய பிரபுக்களின் ஸபை, இந்தப் புதிய ஏற்பாட்டின்படி சுமார் 330 அங்கத்தினராகச் சுருங்கும். இதுவரையில் இருந்தது போலில்லாமல் அச்சபையில் பட்டவர்த்தனர் அல்லாதவருங்கூட இனி மெம்பர்களாக விருக்கலாம். பட்ட வர்த்தனருடைய ஸங்கியை முதன்முதலில் எண்பத்தொன்றில் தொடங்கி வரவரக் குறைந்து கடைசியில் முப்பதுக்கு வரும். 246 மெம்பர்கள் சாமான்ய ஸபையங்கத்தினரால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களைத் தவிர, சட்டப் பிரபுக்களும் ராஜகுடும்பத்தைச் சேர்ந்த சிலருமே இனி பிரபுக்களின் ஸபையில் வீற்றிருக்க அருகராவார். அயர்லார்ந்து நாட்டுக்காகத் தனியாக 27 மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ள ஒருவிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் பிரபுக்களின் ஸபையங்கத்தினர், பன்னிரண்டு வருஷங்கள் வரையில் தான் ஸபையில் வீற்றிருக்கலாம். மொத்தஸங்கியையில் மூன்றிலொருவர் நான்கு வருஷங்களுக்குமேல் இருக்கக்கூடாது. சான்ஸலர் பிரபுவே, ஸபைக்கு அதிகாரியாக (Speaker) இருப்பார். ஸாமான்ய ஸபைக்கு லாயக்கில்லாத சில வைதீக உத்தியோகஸ்தர்கள் இந்தப் புதிய பிரபுக்களின் ஸபைக்கு லாயக்குள்ளவர்களாவார்கள். அதற்கு அருகரல்லாத பட்டவர்த்தன ரெல்லாரும் ஸாமான்ய ஸபைக்கு அருகராவார். பிரபுக்கள் ஸபையங்கத்தினருக்குச் சம்பளம் கொடுக்கவேண்டியதெனத் தீர்மானமானால் ஸாமான்ய ஸபையங்கத்தினருக்குக் கொடுக்கப்படுவதைப்போலவருஷமொன்றுக்கு 400 பவுன் கொடுபடவேண்டும். இந்த இரண்டாவது ஸபைக்குப் பணவிஷயமான மசோதாவைக் கொணரும் சுதந்தரமில்லை. இரு ஸபைக்கும் அபிப்பிராய வித்யாஸம் ஏற்படுங்காலையில், மத்தியஸ்தர்மூலமாக அந்த வித்யாஸத்தைத் தீர்த்துக்கொள்ளவும் ஏற்பாடு ஆகும்.

* * *

**நிக்கல் காகிதம்.**

இப்பொது நடந்து வரும் ஐரோப்பிய யுத்தங்காரணமாக நமது நாட்டிலும் பிற நாட்டிலும் காகிதப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதைஅபிமானிகள் அறிந்திருப்பார்கள். இப்போது, இதற்கு ஒரு பரிகாரமாக, அமெரிக்கா சாஸ்திரஞ்ஞரும், போனோகிராப் முதலியவற்றைக் கண்டுபிடித்தவருமான டாமஸ் எடிஸன் என்பவர் நிக்கல் என்ற உலோகத்தால் காகிதம் செய்யக்கூடு மென்பதை வெளியிட்டிருக்கின்றனர். (நம் நாட்டில் வழங்கிவரும் ஒரு அணா நாணயமும், இப்போது புதிதாக வழக்கத்தில் வந்த இரண்டணா நாணயமும் நிக்கல் நாணயத்தா லானவை). ஒரு அங்குல கனத்தில் 20,000 கடிதாசுகள் செய்யலா மென்றும், அவைகள் துணிக் கடிதாசுகளைப்போல மசியை ஏற்றுக் கொள்ளுமென்றும் அவர் கூறுகின்றனர். மேலும் நிக்கல் கடிதாசு தண்ணீரால்நனையாது. நெருப்பால்கெடாது. சாதா

ரணக் குடிதாசப் புத்தகங்களைக் காட்டிலும் பருமனிலும் கனத்திலும் குறைவாகவே இருக்குமாம்.

* * *

பசுவின் பால்.

இங்கிலாந்தில் ஒரு பால்காரன், தண்ணீர் கலந்திருந்த தெனச் சொல்லப்பட்ட பாலைவிற்றதற்காக, மாஜிஸ்ட்ரேட்டால் அபராதம் விதிக்கப்பட்டான், தான் கறந்தபடியே பாலைக்கொண்டுபோனதாயும் பாலானது ஜலம் போலவிருந்ததன் காரணம், கறக்கும்போது வெடிகுண்டின் அதிர்ச்சி யுண்டான தெனவும் அவன் தெரிவித்துக் கொண்டான். இதை மாஜிஸ்ட்ரேட் ஒப்பவில்லை. என்றாலும் இவன் சொன்ன காரணம் சரியானதாக விருக்குமென்று 'லான்ஸெட்' என்றபத்திரிகை கூறுகிறது. வெருண்ட பசுக்கள் பாலைச் சரியாகக் கொடுப்பதில்லை யென்பதை நாம் கண்டும் கேட்டுமிருக்கிறோம். ஆனபடியால்தான் "ஆடிக்கறக்கும் மாட்டை ஆடியும், பாடிக்கறக்கும் மாட்டைப் பாடியும் கறக்கவேண்டு" மென்னும் பழமொழி வழங்கி வருகிறது. பலர் காணவரும் காட்சிச்சாலைகளில் கொண்டு வரப்படும் பசுக்கள் சரியாகப் பால் தராக் காரணமிதுவே.

* * *

யுத்த ஞாபகச் சின்னம்.

ஐரோப்பிய யுத்தத்தில் இந்திய நாடும் இந்தியர்களும் செய்த உதவிகளை ஞாபகப் படுத்துவதற்காக, டில்லி நகரில் ஒரு ஞாபகச் சின்னசாலை ஏற்படுத்துவதெனக் கவர்ன்மெண்டார் தீர்மானித்திருப்பதைக் கேட்டு நாம் சந்தோஷிக்கிறோம். இது, நமக்கு மட்டுமன்றி, நமக்குப் பின்வரும் அனேக தலை முறைகளுக்கும், ஆனந்தத்தையும் பெருமையையும் தரக்கூடிய தென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. சண்டைநின்று, சமாதானமுண்டாய், அனேக காலத்துக்குப் பிறகு, இந்தச் சண்டையின் ஞாபகமே ஜனங்களுக்கு இல்லாது போகுங்காலத்தில், நமது நாடுசெய்த உதவியைப்பற்றித் தெரிந்து மகிழ்வதற்கு இது பெரிய சாதகமாகும். ஞாபகச் சின்னங்கள், புஸ்தகங்கள், வெற்றியைத் தெரிவிக்கும் பொருள்கள், படங்கள், விசேஷ சமாசாரங்கள் அடங்கிய கடிதங்கள் முதலிய எல்லாவற்றையும் வைத்திருப்பவர்கள் அவைகளை யுத்தகமிடியாருக்கு இனாமாகவோ இரவலாகவோ, கொடுக்கச் செய்யவேண்டுமென்று கோரப்படுகிறார்கள்.

* * *

இங்கிலாந்தில் அரசிறை.

சென்ற மாதம் பார்லிமெண்டில் தர்க்கிக்கப்பட்ட அரசிறை ரிபோர்ட்டு இதுவரையில் ஒரு போதும் வசூல் செய்யப்படாத பெருந்தொகையை வசூல் செய்வதற்கு அதிகாரம் பெற்றுள்ளது. அதாவது 842,050,000 பவுனாகும். இந்திய நாணயத்தின்படி இந்தத்தொகை 1263 கோடி ரூபாவாகும். இந்த ரிபோர்ட்டிலுள்ள சில அம்சங்களைக் கவனிக்கவேண்டியது அவசியமாகிறது. பெருமித வாழ்க்கையில் உள்ளவர்கள் உபயோகப்படுத்தும் பொருள்களின்மீது புதிதாக வரி வசூலிக்கப்படும். பிரான்சு தேசத்தில் இப்படிப்பட்ட வரி ஏற்கெனவே வசூலிக்கப்படுகிறது. இதன்கீழ் மோடார் வகையரா வாஹனங்கள், பொன் வெள்ளி கல் நகைகள், கேவலம் இன்பப்பெருக்கிற்காக உதவும் வாத்யப் பெட்டி, கடியாரம் முதலிய சாமான்கள், பட்டாடைகள், கம்பளங்கள், விளையாட்டுப் பொருள்கள் முதலிய இவற்றின்மீது, அவைகள் குறிக்கப்பட்ட தொகைக்கு மேற்பட்ட விலையுள்ளனவாக இருக்கும்போதும் வரி வசூலிக்கப்படும். இன்னொரு முக்கியமான அம்சமென்னவெனில், தபால் சார்ஜ் ஒரு பென்னி அதமத்திலிருந்து $1\frac{1}{2}$ பென்னியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதற்கு ஒருவாறு பரிகாரமாகக் கனம் அதிகமான பொருள்கள் மீதுள்ள தபால் சார்ஜ் கொஞ்சம் குறைக்கப்பட்டுள்ளது. பத்திரிகைகளின் மீதுள்ள தபால் சார்ஜில் வித்தியாசம் ஏற்படவில்லை. இதே மாதிரி, நமது இந்தியாவிலும், தபால் விகிதத்தை அதிகப் படுத்தலாமென்று சிலர் சொல்வதை நாம் கேட்டோம். அதனால், அரசிறைப்பணம்ஜாஸ்தியாவது சந்தேகம். ஆனால் ஜனங்களுக்குச் சிரமம மட்டும் அதிகமாவது நிச்சயம். இந்தியாவிலிருந்தும் அதிகமான பணம் வசூலிக்கவேண்டுமானால், இங்கிலாந்தில் ஏற்பட்டதைப்போல, பெருமித வாழ்க்கைப் பொருள்களின்மீது தீர்வை விதிப்பதை நாம் மனப்பூர்வமாக அங்கீகரிப்போம்.

21 AUG 1918 MADRAS

[ "விவேக போதினி அனுபந்தம்" ]

[ Supplement to the 'Viveka Bodhini' ]





# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி X } காளயுக்திஸ்ரீ வைகாசிமீ :: 1918-ஸ்ரீ ஜூன்மீ { பகுதி 12

## நாம்

## OURSELVES

இறைவன் அருளாலும், நம் சந்தா நேயர்களின் இடையறா அன்பு நிறைந்த ஆதரவின் பெருமையாலும், இச்சஞ்சிகையுடன் நமது போதினிக்குப் பத்தாவது ஆண்டு நிறைவு பெறுகின்றது. முதல் ஏழு வருஷங்களில், சிறுவயதில் ஏற்படும் பாலபீடைகளை, நம் போதினி காணவில்லையேனும், அதன்பின் இவ்வாண்டு நிறைவுவரை அது கண்ட பல சல்லியங்களிலிருந்தும், கீழ் நிலையடையாது, தவறிப் பிழைக்கும்படிச் சந்தா நேயர்களே பொறுப்பேற்றிருந்ததற்கு மனமாற யாம் அவர்க்கு வந்தனமளிப்பதன்றி. வேறு என்ன கைம்மாறு செய்யமுடியும்? கவி வாக்கிற். கிணங்க,

'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது'

அன்றா? ஏதோ யாம் தமிழபிமானத்தை முற்கொண்டு, பல கஷ்டங்களிற்கும் உட்பட்டு நம் முயிருள்ளளவும் அவ்வரிய பாஷையை விருத்தி செய்யவென, நம்மால் செய்யக்கூடியவற்றுள் ஒருவாறு தமிழ்த்தாயிடம் கொண்ட எள்முனை யவ்வளவு அபிமானத்தைப் பனைத்துணையாகக்கொண்டு நம்மை யாதரித்து வந்த தமிழபிமானிகளுக்கும், நமது சந்தா நேயர்களுக்கும், நமது போதினிக்கு உழைக்குமாறு நம்மை அவ்வப்போது ஊக்கங் குன்றாது விளங்கத் தூண்டிய பல ஆப்த நண்பர்களுக்கும், விஷயதானஞ் செய்து நம் போதினியை உலாவும்படி செய்த பெரியோர்களுக்கும், இப்போதினி, இப்போது தான் நுழையவிருக்கும் புதியவாண்டினுள் ப்ரவேசிக்கு முன், அவர்களிடம் தான் கொண்ட நன்றியறிதலை வெளியிடாதிருப்பது பெருந் தவறாகும்.

பலவகைத் துன்பத்திலிருந் திருப்பினும், புலி பசித்தாலும் புல்லைத் தின்னா தென்றபடி இப்போதினி தற்காலம் உலாவிவரும் பலவகைத்த மாதாந்தப் பத்திரிகைகளுள் முதற்றரமானதென மதிக்கும்படி தகுந்த விஷயங்களையே பிரசுரித்து வந்திருக்கின்றது. பத்ரிகைகளுக்குத் தற்கால மேற்பட்டிருக்கும் காகிதப்பஞ்சத்தால் விளையும் பெருங்கஷ்டத்தைப்பற்றி நாம் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை என்பது நமது சந்தா நேயர்களே அறிந்த விஷயம். மற்று அச்சுக்கூடங்களுக்கு வேலைப் போட்டியாலும், வாழ்க்கைப் பொருள்களின் விலையேற்றத்தாலும் ஏற்பட்டிருக்குந் தொல்லைகளும் அநந்தம். எனவே, பத்ரிகைகளை நடத்துவோருக்கு, அதிலும் பொறுக்கி யெடுத்து உத்தமமான விஷயங்களையே திரட்டி வெளியிடும் மாதாந்தப் பத்ரிகைகளை நடத்துவோர்க்கு, அவற்றைச் சரிவர நடத்துவது தற்காலம் பகீரதப் பிரயத்னமாக விருக்கின்றதெனச் சொல்வது மிகை யாகாது. நல்ல விஷயங்களைக் கோவையாக நல்ல தமிழில், சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு எழுதிவித்து, குறைந்த சந்தாத் தொகைக்கு உலகிற்களிக்க வேண்டுமென்பதே எமது ஆவலாகும். இதை நம் போதினியைப் படித்த எவரும் தெரிந்துகொண் டிருக்கலாம். அதிகமான விஷயத்தை வெளியிடவேண்டு மென்னும் ஆவலையே முக்கியமாகக்கொண்டு போதினிச் சஞ்சிகைளின் பக்கங்களின் வரிக்கும் வரிக்கும் இடையே போதுமான இடம் விட அச்சுக்கூடத்தாரால் அமைக்கப்படும் ஈயத்தகடுகளை அமைக்க விடாது, அதிகமான அச்சுக்கூலி கொடுத்து இப்போதினியை அச்சிட்டு வருகின்றனமென நாம் சொல்லிக் கொள்வது தற்புகழ்ச்சிக்

கன்று; எமது நோக்கத்தை வெளியிடவே யாகும். எனினும், இரண்டு வருஷங்களாக இப்போதினியின் ஸஞ்சிகைகள் சற்றுப் பொழுதுபட வெளிவருவதாக நமது நேயர்களுள் சிலர் எமக்குக் கடிதமெழுதிய துண்டு. இவ் விஷயத்தில் அவர்களது மன்னிப்பிற்கே யாம் பாத்திரர்களாக விரும்புவது எமக்குக் குறையேனும், இப்போது சிறிது காலமாகச் சஞ்சிகைகள் அதி சீக்ரமாக வெளிவருவதே இவ் விஷயத்தில் யாம் எடுத்துக் கொள்ளும் பெரும் பிரயத்னங்களுக்குச் சான்றாகும்.

தலைக்குவந்தது தலைப்பாகையுடன் ஒழிந்ததென்றபடி, பல ஆபத்துக்களிலிருந்து தப்பிய நம் போதினி இனி ஸரியே வெளியுலாவுமென்பதை யாம் செயலாற் காட்ட வேண்டுமேயன்றிப் பேச்சாற் சொல்வதில் பிரயோஜனமில்லை. நமக்கினி வருவது நல்லகாலமே யல்லாது வேறன்று; சந்தா நேயர்களின் நல்லெண்ணமென்னு மாதவிற் றவழ்ந்து விளங்கும் எமக்கு ஒரு நாளுங் குறை வாரதென்பது எமது திடமான நம்பிக்கை.

பத்திரிகைகளைப் படிப்பதால் ஏற்படும் நன்மைகளைப்பற்றி விஸ்தரிப்பதற்கு இங்கு இடமல்லவெனினும், தேசத்தின் நாகரீகத்தை விருத்திசெய்து, ஜனங்களது மனத்துள்ள மாசை நீக்கி, உயர்ந்த பாவங்களைப் புகட்டுஞ் சாதனம் பத்திரிகைகளே; அவற்றுள்ளும் வீண் விஷயங்களில் நுழையாது, சற்றுக் கவனத்துடன் படிக்கும்படியாக மனத்திற் குணவளிக்கும் சாதனங்கள் மாதாந்தப் பத்திரிகைகளேயாம். இத்தகைய பத்திரிகைகள் பொது ஜனாதரவினாலேயே நிலைப்பன வானபடியினால் நமது நேயர்கள், இதுவரையும் நம்மை யாதரித்து வந்தது போல, அன்புடன் நம்மை இனியும் யாதரிப்பர் என்பது எமது திடமான நம்பிக்கை. மேலும், அவர் இம்மட்டோடு நில்லாது, தமது நண்பர் முதலியோரையும் நமது போதினிக்குச் சந்தாதாரராகும்படி செய்வது விச்வாஸ தர்மமாகும். இவ்வேண்டுகோளுக்கிணங்கி யவர் நடப்பது, காகிதப்பஞ்சம் முதலிய பல கஷ்டங்களையும் ஒருபொருட்டாக் கணிசியாது ஊக்கத்துடன் உழைக்க எமக்குச் செய்யும் பேருதவி யாகும். இதற்காக நமது வந்தனத்தை வெளியிடும் வள்ளுவர் வாக்கை யவர் செவிசாய்த்துக் கேட்கவேண்டுமென்பதே எமது பேரவா:

> எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

---

## மனம்

### MIND

1. துயிலை யின்பெனச் சொல்லுத லிந்தியத்
தியலு நெஞ்ச மிலாமையி னாலன்றோ
பயிலு நெஞ்சம் பரக்கு திரிதருஞ்
செயலி லில்லை சிறிதுஞ் சுகமரோ.

2. மனமொ ருத்தன் வசப்படு மேலவன்
பினைவ ருத்தும் பிறப்பை யடைந்திடான்
மனமொ ருத்தன் வசப்படா தோடுமே
லனிபி றப்பிடை நாளுஞ் சுழலுமே.

3. அரவி னைக்கு மரும்பொரு ளின்பொடு
பெறுவ தற்கும் பெருங்கல்வி கற்றுயர்
விரலி னுக்கு நல்வீரந் தனக்குமொன்
றுறவி னுக்குந் துணைமனமென்பவே.

4. நல்ல செய்து நரரை யுயர்த்தவு
மல்ல செய்தங் களற்றிடை யாழ்ப்பவும்
வல்ல திந்த மனமல தையவோ
இல்லை யென்னா வியம்பு மறையெல்லாம்.

5. மக்கள் மானிட ரென்று மனத்தினால்
மிக்க மேன்மை விளங்கின ரில்லெனிற்
பொக்க மேவும் பொறிகளோ ரைந்துரு
லொக்கு மாவினை பொத்துயர் வுற்றிடார்.

6. கெடுக்க வல்லதுங் கெட்டவர் தங்களை
யெடுக்க வல்லது மிம்மன மென்றதை
யடக்க வல்லவ ரைய பவக்கடல்
கடக்க வல்லவ ருவர் கடிதரோ.

7. ஓடும் பொன்னு முரசவும் பகையுமோர்
கேடுஞ் செல்வமுங் கீர்த்தியு நிந்தையும்
வீடுங் கானமும் வேறற நோக்குதல்
கூடுந் தன்மை கொளுமன நன்மனம்.

8. மன்னு காமம் வெகுளி மயக்கமென்
றின்ன கூடி யெறிவளி முற்சட
ரென்ன வாடு மியன்மனந் தீமனந்
தன்னை யாருந் தடுக்கத் தகாதரோ.



விவேக போதினி.
தொ. 10] காளயுக்தி௵ வைகாசி௴ [ப. 12

## உண்மை வெளிப்பாடு

### THE REVELATION

> தஞ்சமெனக் கொண்ட தழைகோ குலஞ்செழிக்கக்
> கஞ்சமலர்க் கண்ணன் கரந்துறைய-கஞ்சவஞ்ச!
> என்றனைக் கோற லெதற்கோ யிழிகுணத்தாய்!
> உன்றனைக் கொல்வான் உகந்து.

கனவேகமாக மழை பெய்துகொண்டேயிருந்தது. புதுப் புனலை வாரிக்கொண்டு யமுனையாறு கடவுட் குழந்தையைக் காணு மாவலுடன் பெருகிற்றெனும்படி புறண்டுருண் டோடி எழும்பிக் குதித்தலை வீசி எழுச்சியுடன் விளங்கிற்று. அச்சமயமே, வஸுதேவரும் தமது தெய்வச் சிறுவனைக் கரத்திலெடுக்க ஆவல் கொண்டனர். உடனே அவர் கையில் பூட்டியிருந்த விலங்குகள் தாமே முறிந்தன. குழந்தையை வாரியெடுத்து, அணைந்து உச்சி முகர்ந்தனர். அவர்க்கு அப்போது தமது ஞாபகமே யில்லை; தாம் ஓர் சிறையில் வாஸஞ் செய்ததாகவுந் தோன்றவில்லை. ஒருவித உத்ஸாகம் அவரைத் தன் வயப்படுத்திச் சிறிதும் பயமற்று விளங்கச் செய்தது. அதன் அபாரசக்தியி லீடுபட்டதும் அவர்க்குச் சற்றுமுன்னே கேட்ட மொழிகள் மனத்தில் ஆழ்ந்து வேலைசெய்ய வாரம்பித்தன. உடனே அவர் அக்குழந்தையை அணைத் தெடுத்துக்கொண்டு யமுனையைக் கடக்க எண்ணங்கொண்டனர். அப்போதே அவர் காலிலிருந்த விலங்குகளின் நாக்குகள் அகன்று பிரிந்து கீழேநெகிழ்ந்து விழுந்தன. வஸுதேவர்க்குத் துணுக்கம் வந்தது. அங்கிருந்தகாவலாளர்கள் கும்பகர்ணனும்வெட்கும்படி மயங்கிக்கிடந்தது, அவர் மனத்துக்குப் பெரும் ஸமாதானத்தை மாத்திரந் தரவில்லை; அவரை க்ஷணநேரமும் தாமதியாது யமுனையைக் கடக்கும்படி தூண்டியது. அவர் சிறைச்சாலைக் கதவைத் தொட்டனர். அது உடனே திறந்துகொண்டது. வெளியில் வந்தனர்; ஆனால் பயத்துடன்தான் நடந்தார்; எனினும், விசையாகத்தான் நடந்தனர். 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளவேண்டு' மென்பது யார்க்குத்தான் தெரியாது!

ஊர் நிச்சப்தமாக அடங்கியிருந்தது. இடியு மழையும் இருந்துகொண்டே யிருந்தது. ஆனால் வஸுதேவர்க்குத் தெரியாமல் ஆதிசேஷன் குழந்தையையும் தந்தையையும் மழையிலிருந்து காத்துவந்தனன். அப்போது மழைபெய்து கொண்டிருந்தா லென்ன? அத்தெய்வக்குழந்தைக்கு யமுனையாற்றைக் கடக்கக் கிடைத்த கருவிகளின் மஹிமை யென்ன! அன்புபரந்த வஸுதேவரது உடலே அவ்வாற்றைக் கடக்கும் பெருந்தோணி யன்றே! அதில் தவழ்ந்த மார்பே அக்குழந்தையை ஜாக்ரதையாக இருத்த ஏற்பட்ட பத்ரமான அறை போதும்! அதற்கு வஸுதேவரது இடது கரமே கூரையாகவிருந்து, மழைத்துளிகளின் கூட்டத்தைத் தடுக்க நேர்ந்ததென்பதல்லாமல், வலதுகரம் ஆற்றின் நீரைத் துளாவி, ஆழத்தைக் கண்டு தோணியைச் செலுத்துஞ் சுக்காணியுந் துடுப்புமாக விருந்தது! வஸுதேவர் அவ்வாற்றை எவ்வாறு கடந்தனர்? புதுவெள்ளந் ததும்பி எழும்பிக் குதிக்கும் அவ்வாற்றை எப்படித் தாண்டினர்? அவ்விளஞ் சிசுவை எடுத்துக்கொண்டு ஒருவேளை நீந்தினரோ? அப்படியானால் எவ்வளவு நேரம் அப்படிச் செய்தனர்? இவ் வெண்ணங்களெல்லாம் நமக்குத் தோன்றலாம். அவர் இவற்றைப்பற்றி எல்லாம் எண்ணவேயில்லை. வண்டியிற் கட்டிய குதிரை இருபக்கமும் பார்க்காது நேரே ராஜபாட்டை வழியாக நடப்பதுபோல், அவர் அவ்வாற்றில தழாவி அடிமேலடி வைத்துச் சளைக்காது நடந்துகொண்டே யிருந்தனர். காலிற்பட்ட ஜலம் தெரித்து ஒலியெரிக்க, அதைக் கண்ட அவ்விருளில் மேகத்திலிருந்து இடை இடையே எட்டிப் பார்க்கும் மின்னற் கொடிகள் சிரிக்க, அவர் நடந்து கொண்டிருந்தனர். எதிர்க்கரை மணல் அவர்காலிற் பட்டது; அவர் உள்ளமும் கிளைத்

தது; அவர் நடை மேன்மேலும் சீக்ரகதி பெற்றது; அவர் அப்பொழுதே கோகுலத்தை அடைந்தனர்.

என்ன ஆநந்தம்! அச் செல்வக் குழந்தையைக் கண்ணில் ஒற்றிக்கொள்வர்; மார்பில் அணைந்து முத்தமிடுவர்; உச்சிமுகப்பர்; காதற் கண்ணீர் விடுவர்; உள்ளம் குளுகுளுத்துக் குதிப்பர்; எவ்வாறு தாம் அவ்வாழ்ந்த யமுனையைக் கடந்தனரெனத் திகைப்பர். அஹோ வைசித்ரிகம்! படகினாலே கடக்கமுடியா யமுனையைத் தன் நடையாலே பெருவெள்ளத்தில் கடந்தால் அது தெய்விகமோ, வைசித்ரிகமோ, எதுவோ—அவர்க்கே மயக்கமுண்டாயிற்று. ஆயினும், இவ்வெண்ணங்களில் தனது சிந்தையைச் செலுத்தாது, அவர் அந்நடு ஜாமப்பொழுதில், ஊர்முழுதும் இருள் மூடி அந்தகாரம் குடிகொண்டு உணர்வென்பது சிறிதும் விளங்காத அந்த ஸமயத்தில், இளஞ் சிசுவை, அன்று பிறந்த இளங் குருத்தை, மார்பில் அணைந்து நந்தகோபனது வீட்டை நாடி—வேறுவிஷயத்தில் செல்லாமனத்துடன் நடந்தனர்.

நித்திராதேவி அப்போது உலகில் தனியரசு செலுத்திக்கொண்டிருந்தனள். அவள் அரசாட்சி அன்று என்றைக்கும்போலல்லாமல் மிகு தீவரமாக நடைபெற்றது. அவளது மயக்கச் செங்கோல், அன்று சிறிதும் கோணாது ஓங்கி விளங்கியது. உலகிலுள்ள ஸர்வபூதங்களும் மயக்கவழியி லிடுபட்டுத் தமது பக்தியை நித்ராதேவியிடம் செலுத்தி உன்மத்தமாக விளங்கின. அம்மயக்கம் வஸுதேவரிடமாத்ரம் அண்ட முடியவில்லை. அறிவிருக்குமிடத்தில் மயக்கம் அண்டுமோ? தெய்விகம்பெற்ற விடத்தில் பேய்கள் நிலைக்குமா?

கண்ணைமூடிக்கொண்டே வஸுதேவர் நடந்தனர். அவர் எதிரில் ஓர்பெரும் அரண்மனையிருந்தது. அதனுள் நுழைந்ததும், நந்தகோபன் மனைவி பிரஸவ அறையுள் நுழைந்தார். அங்கு அப்பொழுது பிறந்து அழுதுகொண்டிருந்த, இளங்குழந்தையைக் கண்டதும் அவர்க்கிருந்தாற்போல விருந்து, அதனிடம் அளவற்ற அன்புவளர்ந்துவிட்டது. தான் கொண்டுவந்த குழந்தையை யங்கு விட்டுவிட்டு, அங்கிருந்த இளஞ்சிசுவைக் கையில் வாரியெடுத்துக்கொண்டு, ஏதோ திருடிவிட்டு ஓடுபவன்போல, அவர் பரபரப்புடன் யமுனையைநோக்கி யோடினர்; அப்பெண்குழந்தையை அணைத்துக்கொண்டவர் முன்போலவே சிறிதும் தடையின்றி யமுனையைக்கடந்து தமது சிறையை அடைந்தனர். ராமேச்வரம் சென்றாலும் சனைச்சரன் விடுவதில்லை யன்றோ?

சிறை திறந்தவண்ணமாகவே யிருந்தது. காவலாளர் மயங்கியே கிடந்தனர். தேவகி, வஸுதேவரது வரவையே எதிர்பார்த்திருந்தனள். அவர் உள்ளே நுழைந்ததும், தம் கையிலடக்கிவந்த மாயப்பெண் பொக்கிஷத்தைத் தன் மனைவியிடம் கொடுத்து மனங்களித்தனர். அதேஸமயம் அக்குழந்தை யழுதது; தேவகி வஸுதேவர்களின் விலங்குகள் அவர் கால்களில் பதிந்ததும் தாமே பூட்டிக்கொண்டன. காவலாளர்கள் விழிப்புக்கொண்டனர். 'அந்தோ' என்றலறிக்கொண்டு, அவர் கம்ஸன் முன் ஓடினர்; தேவகி பிரஸவித்ததாகச் சமாசாரம் அவனிடம் எட்டவைத்தனர்; கம்ஸனும் அளவுகடந்த கோபத்துடன், கையில் வாள் வந்திப் பயங்கரமாகக் கர்ஜித்து அட்டஹாஸம் பண்ணிக்கொண்டு அச்சிறையுள் நுழைந்தான்.

சற்றுமுன்தான் அவன் கிருஷ்ணன் பிறந்ததாகக் கனவு கண்டனன்; தனக்கு அந்தகன் உலகில் உருவுகொண்டதாக அவன் உணர்ச்சியுற்றிருந்தான். அவ்வுணர்ச்சியில் அவனுக்குண்டான ஆத்திரம் சிறிதும் அடங்கவேயில்லை. அவ்வாத்திரம் பொங்க, அரைக்கண் மூடி, அவன் படுக்கையில் புரண்டுகொண்டிருக்கும்போதுதான் காவலாளர்கள் சமாசாரத்தை அவனுக்கெட்டவிட்டது. எதிரில்போய்ச் சொல்லுவதற்கவர்க்குப்பயமிராமலிருக்குமா? யாரும் கிடுகிடுத்து அதிர்ந்தொடுங்கி மயங்கிவிழும்படியாகக்கேட்டார் அஞ்சும்படி கூச்சென்றலறி, வாயில் வந்த மொழிகளைக் குளறிக்கொண்டவன் படுக்கையிலிருந்து, தான் கட்டியிருந்தவஸ்திரத்தைக்கூடச் சீர்படுத்திக்கொள்ள எண்ணாது, தன் வாளை எடுக்க ஓடினான். அப்போதவன் மீசை துடித்தது; பற்கள் நறநறவென வொலித்தன; கண்கள் நெருப் பெரித்தன; மார்பு படபடத்தது; நெஞ்சங் கொதித்தது;—அவன் ஆத்திரம் பொங்கிவழிந்தது. ஆஹா! என்ன அதிசயம்! மதுராபுரி மன்னன், ராஜாதிராஜன், சிறந்த பிரப்ரதாபன்,



மஹாபலசாலி—இத்தகைய கம்ஸன், பிறந்து இரண்டு நாழிகைகூடக் கண்டிராத எளிய ஒரு சிறு குழந்தையைக் கொல்லக், கத்தியும் கையுமாக அவ்வளவு அளவுகடந்த ஆத்திரத்துடன் பூமி நடுங்கும்படி அடிவைத்து மிகுவேகமாக நடக்கவேண்டிய அவஸரமென்ன வந்துவிட்டது? இல்லாவிட்டால் என்ன பிரமாதம் விளைந்துவிடும்? கோளறிவுங் குற்ற குணமுமே குடிகொண்டு, சிசுக்கொலை செய்யும் அந்தப் படுபாவி அத்தெய்வக்குழந்தையின் உயிரைமாத்திரங் குடிக்கவென் றங்குவரவில்லை. அவனுக்கு மனித ரத்தந்தெரிப்பதில் வரவர உண்டான பெரும் இச்சையினால், வேண்டியிருக்குமானால், தனது தங்கையின் ரத்தத்தைச் சிந்திக் குடிக்கவுஞ் சித்தமாகவே யிருந்தான். அந்தகாரத்து அதிஷ்டான தேவதையோ, கொடுங்கனவிற் கண்ட பயங்கர உருவத்தின் சாயா உருவமோ, காலனுடைய அன்பற்ற கிங்கரனோ, பேய் பிரமராக்ஷஸிவற்றின் பாழுமூழியனோ, அதர்ம கோலாஹலனோ, தர்மத்தைவேரோடு பிடுங்கவந்த பகையாளியோ, ஸ்வயநயத்தைக் கருதி உற்றார் உறவினரென எண்ணாது கண்ணிருந்தும் அந்தகர்களாக விளங்கும் பாபிகளின் தலைவனோ என்று யாவரும் மயங்கி நடுங்கும்படி, அவன் கனவேகமாகத் தேவகி பிரஸவித்திருந்த அறையுள் சிறிதும் லஜ்ஜையென்பதற்று நுழைந்தான்.

திடுக்கிட்டு எழுந்த தேவகி, அலறி அப்படியே கீழே மயங்கி விழுந்தனள்; அவள் மார்போடணைத்துக் கொண்டிருந்த குழந்தையும் அவளோடேயே தவழ்ந்திருந்தது. கடுகடுத்த முகத்துடன் கம்ஸன், ஓங்கிய கத்தியின் ஒளி கண்டாரது கண்ணைக் கூச்சிடச்செய்ய, படபடப்புடன் சில கடுமையான மொழிகளைச் சொல்லிக் குழந்தையைத் தரும்படி கேட்டான். தேவகி சும்மா வாய் மூடியிருந்தாள். மீண்டும் அதட்டிக் கேட்டான். அப்போதும் அவள் அசைவற்றுச் சும்மா விருந்தாள். கம்ஸனுடைய கோபத்தனல் கொழுந்துவிட்டெரிய வாரம்பித்து விட்டது. உடனே அவன் ஸ்வயநலத்தால் தூண்டப்பட்டுத் தன் தங்கை என்கிற முறையைக் கடந்து, தான் செய்வதடாது என்பதையுங் கணிசியாது, அவள் கைகளை உதறிக் குழந்தையைப் பலாத்காரமாகக் கவர முயன்றான். ஆயினும், அவள் இடந்தரவில்லை. அவளுக் கவ்வளவு பலம் எங்கிருந்து வந்தது?

“அண்ணா! அடாது அடாது இந்தக் கோபம். என்னவானாலும் நான் உன் தங்கை. இக்குழந்தை ஆண் சிசுவல்ல; ஒரு பெண். இதைக் கொல்வது தகுமா? இதைக் கொல்லாது விட்டால் உனக்கொரு கெடுதியும் வந்திடாது. என் குழந்தைகளை யெல்லாம் பாழாக்கிவிட்டனை. இதையேனும் என் முகம் பார்த்துச் சிறிது கருணையாண்டு கொல்லாது விடலாகாதா?” எனத் தேவகி அவன் காலில் வீழ்ந்து வேண்டிக்கொண்டனள். அக் கடுநெஞ்சன் அச்சொற்களைக் காதிலேன் வாங்குவன்? வாயில் உளறிக்கொண்டு வெகுக்கொடுமையாகத் தேவகியின் கையிலிருந்த குழந்தையைப் பறிக்க யத்தனித்தான். என்றாலும், பிடிவாதத்துடன் தேவகி, குழந்தையைமார்போடு மார்பாக அணைத்துத் தன் விலங்கணிந்த கைகளால் மூடிக்கொண்டு அதை எடுக்கமுடியாதபடி தன்பொல்லாத் தமையனுடன் ஸாகஸஞ் செய்தாள். எனினும், கம்ஸனுடைய முறட்டுப் பலத்தின்முன் எது நிற்கும்? அக்குழந்தையை அவன் பிடித்திழுத்துப் பிடுங்கிக்கொண்டான். தேவகி கத்தினாள்; கதறினாள்; “அண்ணா! அண்ணா! காலஞ்செல்லும்; வார்த்தை நிற்கும். நான் உன் தங்கை என்பதைக்கூடக் கவனிக்கக் கூடாதா? இது நியாயமாகுமா? இக்குழந்தையோ பெண்; ஒருநாளும் ஆயுத மெடுத்தாளப் போவதில்லை. உன் பயத்திற்குச் சிறிதும் இதனிடம் இடமில்லை. முறைமையால், உனக்கினிய மருமகளாவள். அண்ணா! என் அண்ணா! நீ வெகுநல்லவனாச்சுதே! ஸ்த்ரீஹத்தி பெரும் பாவமன்றோ? அதிலும், இது இன்னும் உலகைக் கண்டறியா இளஞ்சிசுவல்லவா? இதைக் கத்திக் கிரையாக்குவது உன் பாரிபுத்திக்குப் பெருமை தருமா? அண்ணா! என்குழந்தைகள் பலவற்றையும் பாழாய்க் கத்திக்கிரையிட்டாய். அதுவெல்லாம் தெய்வசங்கல்பமென்று சும்மாவிருந்தேன்; பொறுத்தேன். இப்பெண்ணை மாத்திரம் எனக்காகக் கருணைபுரிந்து கொல்லாதிரும். என் அப்பா! நான் கஷ்டத்திற்கே பிறந்தேன். என்றாலும் உன் தங்கை; உன்னுடன் பிறந்தவள். உன்னாலேயேநான் பெற்ற குழந்தைகளை எல்லாந் துறந்தேன். உன்னைச் சந்தோஷப் படுத்தவல்லவா எல்லாவற்றிற்கு

மாளாகிச் சும்மாயிருந்தேன்? இப்பாழானவளைச் சந்தோஷப்படுத்துவது உனக்காகாதா? அண்ணா! அண்ணா! உன் குழந்தையை யாராவது கொல்வதாயிருந்தால் என்ன பாடு படமாட்டாய்! எனக்கு மாத்திரம் என் குழந்தை வேம்பா? நீயே யோசித்துப் பார். உனக்குத் தெரியாத தல்லவே. இக்குழந்தையை மாத்திரங் கொல்லாதே. உன் காலைப்பிடித்துக் கொள்கிறேன். இக்குழந்தையை மாத்திரம் எனக்காக விட்டுவிடு" என்று வாய்விட்டலறிக் கொண்டிருந்தாள். செவிடன் காதில் சங்கூதினால் என்ன பலன் கிடைக்கும்?

ஒன்றும் கேளாதவன்போலவே அப்படு பாவி கம்ஸன் தேவகியைக் கடுமையாகப் பலவிதமாய் மிரட்டிவிட்டு, அக்குழந்தையை எடுத்துக்கொண்டு போய்விட்டான். மூர்ச்சித்துத் தேவகி மயங்கித் தரைமேல் வேரற்ற மரம்போல் வீழ்ந்துவிட்டாள்.

வெகு கோபாவேசத்துடன் பரபரத்துக் கடுகடுத்து ஓடிய அக்கம்ஸன், அந்தக் குழந்தையைப் பாறை யொன்றின்மேல் மோத இரண்டுகால்களையும் பிடித்துக் கொண்டோச்சினான். ஆனால் அக்குழந்தை அவன் கைப்பிடியிலடங்காது திமிறிக்கொண்டு மேலெழும்பிப் பறந்துபோய் ஆகாய வீதியில் நிலைத்துப் பேரொளிசூழத் திகழ்ந்து, எட்டுக் கரங்களும், அவற்றில் வில், வாள், வேல், சங்கம், சக்ரம், சூலம், அம்பு, கேடயம் இவை தாங்கி, பல அழகிய மாலைகளும் பூச்சுகளும் ஆபரணங்களும் பட்டுப்பட்டாடைகளும் அணிந்து, தேஜோமயமாகவிளங்கிற்று; அவ்வுருவை அப்போது கண்டவர் யாவரும் ஆனந்தக் கூத்தில் ஆழ்ந்தனர். ஆகாய வீதியில் தன் உன்மையுருவுடன் விளங்கிய ஆதிபராசக்தியைக் கண்டதும், வித்யாதர கின்னர கந்தர்வர்கள் புகழ்ந்துபோற்றித் துதித்தனர்; அப்ஸரர்களெல்லாம் ஆனந்தக் களிப்புற்றாடினர். அதைக் கண்ட கம்ஸன் மேல்பார்த்த வண்ணமாகத் திகைத்துக் கண்விண்டு கிடந்தான். அவனைப் பார்த்த அப்பராசக்தி யிருக்குமிடத்திலிருந்து வெகுநயமான இனிய குரலில் யாவரும் கேட்கும்படி பின்வருமாறு ஒரு அசரீரிமொழி யுண்டாயிற்று:—

"அடா! துஷ்டா! உன்னைக் கொன்று நீ என்னடாபெறப்போகிறாய்? உன்னைக்கொல்ல வந்த யமன் வேறெங்கோ உனக்குத் தெரியாமல் வளர்ந்து வருகிறான். அதை யுணராது வீணாகக் குழந்தைகளைக் கொன்று அப்பாபத்தை ஏன் கட்டிக்கொள்கிறாய்?"

இம்மொழிகள் கம்ஸன் காதுள் நுழைந்து வேலைசெய்யாம லிருக்கவில்லை. அவன் தன் பாபச் செயல்களை எண்ணிப் பச்சாத்தாபமுற்று, தேவகி வஸுதேவர்களின் பந்தங்களை யொழித்துச் சிறை வாசத்திலிருந்து வெளிப்படுத்தி, அவர் பாதங்களில் வீழ்ந்து, தான் செய்துவந்த தவறை மன்னிக்கும்படி வேண்டினான்.

நீர்வரும் இன்னல் தம்மைச்
 செய்யினும் செய்ய பின்னைப்
போருளாளர் தத்தம்
 செய்கையிற் பிழைத்த துண்டோ?

என்ற வண்ணம் தேவகி வஸுதேவர் கம்ஸனைத் தேற்றி யவனைச் சமாதானப்படுத்தினர். பொறுமையால் கெடுதி எக்காலத்திலேனும் நேர்ந்த துண்டா?

---

# மஹாராஜா ஸர் லக்ஷ்மேச்வர் ஸிங் பஹதூர்

## MAHARAJAH SIR LAKSHMESVAR SINGH BAHADUR

"அருணி நீர்மைதந் தந்தே பெரியவாம்
 பேராதி வாளன் திரு"

என்னும் வள்ளுவர் வாக்கிற் கிணங்க வாழ்ந்தவருள் இப்போதிருக்கும் தர்பங்கா மஹாராஜாவின் தமையனும், அவர்க்குமுன் மஹாராஜாவுமாக இருந்த, மஹாராஜா ஸர் லக்ஷ்மேச்வர் ஸிங் பஹதூர் அவர்கள் ஒருவரெனச் சொல்வது இழுக் காகாது. இப்பெருங் கொடையாளி 1856ம் வருஷம் பிறந்தவர். இவர் தந்தை மஹாராஜா மஹேசர்வர ஸிம்மர் 1860-ம் வருஷம் இறந்துவிடவே, லக்ஷ்மேச்வரர், வழக்கப்படி கோர்ட் அப் வார்ட்ஸாரின் பாதுகாப்பின்கீழ் வந்தனர். அங்கு அவரும் அவர் தம்பியும் மக்நாடன் என்னும் ஆங்கிலரின் கீழ்ப் படிக்க நேர்ந்தது. பின் அவர்கள் யுக்த வயதை யடைந்ததும் ஸமஸ்தானத்துத் தலைமையை வஹித்தனர். அச்சிறு நாளிலேயே லக்ஷ்மேச்வரது சக்தியும், ஒழுக்கமும், நடவடிக்கையும் பெரிதுங்கொண்டாடப்பட்டன.



அவர் தமது ஜமீந்தாரியை ஒப்புக்கொண்டதும், ஜனங்களது ஸுகதுக்கங்களைக் கவனித்து, அவர்க்கேதேனும் துன்பமேற்பட்ட காலத்தில் அதைத் தனதாகப்பாவித்து, நிவர்த்தி செய்ய வழிதேடுவர். இம்மாதிரி யவர் செய்த தாந்தம், அவர்க்குத் தர்மசிந்தனை ரத்தத்திலேயே கலப்பாயிருந்ததென்றால் யாரும் மறுக்கார்.

"தாமின் புறுவ துலகின்புறக் கண்டு
 காமுறுவர் கற்றறிந் தார்"

என்னுங் குறளையே தமது வாழக்கைத் தர்மமாக அவர் கொண்டு விளங்கினர். அவர்செய்த தருமங்கள் கணக்கில் தெரிந்தவை இரண்டு கோடி ரூபாய்களுக்கு மேற்படும்; தெரியாதவை கணக்கிலடங்கா. 1874-ம் வருஷம் வங்காளத்தில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தில் ஏழைஜனங்களின் துயரத்தைப் போக்க அவர் 45 லக்ஷ ரூபாய்க்குமேல் உதவி செய்தனர். மேலும் 1897-ம் வருஷம் நேர்ந்த பஞ்சத்தில் அவர் தமது ஜமீந்தாரியில் கட்டமுடியாது தத்தளித்த ரயத்துகளின் தீர்வையை வசூலிக்காது, நிலத்தீர்வையைத் தள்ளிவிட்டனர். இவ்வாறு செய்ததில் அவர் ரயத்துகளுக்கென்று செய்த பேருதவி பதினைந்து லக்ஷ ரூபாய்க்கு மேற்படும். ஆங்கில நாட்டில் அமைக்கப்பட்டுள்ள இம்பீரியல் இன்ஸ்டிட்யூட் என்னும் ஸ்தாபனத்திற்கு அவர் உதவிய நன்கொடை ரூ. 50,000.

லக்ஷ்மேச்வரர் உதாரகுணத்தில் சிறந்திருந்ததைப் போலவே பொதுஜனவிஷயங்களிலும் பெருங்கவலைகொண்டு விளங்கினர். அவர் பன்முறையும் வங்காளச் சட்டசபையின் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். அவ்வக்காலங்களிலெல்லாம்அவர் நிந்தாக்ஷிண்யமாய்ப் பொதுஜனங்களின் சௌகர்யத்தையே வாதித்து வந்தனர். அவ்வாறு அவர் செய்யும் விதத்தைக் கண்டாலே அவரது உண்மை நோக்கம் நன்கு வெளிப்படும். தேச ஊழியத்தில் அவர்க்குப் பேரவா உண்டு. 1895-ம் வருஷம் அவரை ஷை சட்ட சபையின் அங்கத்தினராக நியமித்தகாலத்து, அவர்க்கு உடம்பு அசௌகரியம் ஏற்பட்டபோதும், அதைக் கவனியாது, தான் எவருடைய பிரதிநிதியாக விருந்தனரோ அவரது சுகாசுகங்களை அச்சபைமுன் வாதிக்கச்சென்று, தள்ளாமையையுங் கவனியாது வாதித்தன ரென்றால், அவர் தமது வேலையிற் கொண்ட பொறுப்பையும் ஊக்கத்தையும் அது வெளியிடுமன்றோ? மற்று அவர் இந்தியச் சட்ட சபையில் வங்காளச் சுவான்தார்களைப்பற்றிய மசோதா சட்டத்தைப்பற்றி வெகு திறமையான அபிப்பிராயங் கொடுத்தது, இந்திய ராஜப்பிரதிநிதியவர்களே புகழும்படியாக விருந்தது.

லக்ஷ்மேச்வர் மஹாராஜா, தமது தாய் நாட்டிடை அத்யந்த ஆசைகொண்டவர். அதன் நிலைமையை உயர்த்தஅவர் தமது பொன், பொருள், ஆவி எவையும் உதவியுள்ளார். இந்திய ஜாதீய மஹாநாடு என்னும் இந்திய நாஷனல் காங்கிரஸ் ஸபையின் அமைப்புக்குஇவர் உழைத்தது மாத்திரமன்றிப் பலமுறையும் தாராளமான உதவிசெய்தனர். அச்சபையின் 1896-ம் வருஷத்திய கூட்டத்திற்கு அவர் விஜயஞ்செய்தபோது, அங்கிருந்தவரெல்லாரும் எழுந்து அவர்க்கு மரியாதை செய்ததே, அவரிடத்து ஜனங்கள் கொண்ட பேரன்பிற்குச் சான்றாகும். ஆனால் பலநாளும் அவர் இவ்வாறு வந்து, பொது ஜனங்களை உத்ஸாகப்படுத்தி, அவரது ஊக்கத்தைத் தூண்டி ஓங்கச்செய்ய அவர் கொடுத்திருக்கவில்லை.

இதற்குள் சிறியோர் என்றும், பெரியோர் என்றும் பாராமல் கொடுந்தொழில் புரியும் யமகிங்கரர்க்கு அவரது உயிரின் மேல் பசப்புண்டாய், அதிபால்யமான வயதிலேயே 1898 வருஷம் டிசம்பர்மீ 17 உ அவரை தர்ம சபையில் வாதிக்கவென அழைத்துச் சென்றனர். அவரது மரணத்தால் தேசத்திற்கு நேர்ந்த கஷ்டத்தை எண்ணி வங்காள கவர்ன்மெண்டார் தனி கெஜட் ஒன்று வெளியிட்டு, அதில் அவரது பொதுஜன சிரத்தை, ராஜபக்தி, உதாரம் முதலிய குணங்களைப் பற்றிக் கொண்டாடினர். லக்ஷ்மேச்வரது மரணம் எவ்விடத்தும் கவனிக்கப்பட்டது. எவ்வித பத்ரிகைகளும் அவரது வாழ்க்கையைக் கொண்டாடுதலன்றி மற்றொன்றும் பேசியதில்லையெனின், அவரது நிஷ்களங்கச் சுபாவத்தைப்பற்றி விரித்தல் மிகையாகும். 1898-ம் வருஷம் நடந்த இந்திய காங்கிரஸில் இவர் மரணத்தைப்பற்றி அவ்வருஷக் [illegible] கிராசனாதிபதியாகிய ஆனந்தமோஹன போஸ

வர்கள் தாமே பேசிப் பொதுஜனங்களுக் கேற்பட்ட துக்கத்தை வெளியிட்டனர். வெகுப் பிரக்யாதியுடன் விளங்கிய சீமானும், சரித்திராதி நூலாசிரியரும், ராஜதர்ம ப்ரவீணருமான காலஞ்சென்ற ராமேச சந்திர தத்தர், லக்ஷ்மீசரைப்பற்றிப் பேசியதை இங்கு குறிப்பது இழுக்காகாது. அதன்ஸாராம்சமாவது:—

"இக்காலத்துத் தேசாபிமானிகள், பொது நன்மைக் குழைப்பவர், பொதுமரியாதைக் குட்பட்டவர் ஆகிய பிரபுக்களுள் லக்ஷ்மீசரே உச்சியில் விளங்குபவர். அவர் வங்காளச் சட்டசபையிலும், இந்திய சட்டசபையிலும் வாதிப்பதைக் கண்டவரெல்லாம் அவரது நிர்ப்பயமாக அபிப்பிராயங்களை வெளியிடும் வன்மையையும், தமது தேசத்தவரின் உரிமையை எடுத்துக்காட்டக் கொண்ட அடக்க முடியா ஆத்திரத்தையும், மாறுத ராஜவிச்வாசத்தையும் ஒருங்கே விளங்கக் காண்பர். வங்காளப் பிரமுகர்களில் முன்வைத்த கால்களைப் பின்வாங்கியவர் உண்டு; பொது நலத்தை ஸ்வயநலத்தைக் கருதி நட்டாற்றில் விட்டது முண்டு; தன்னலத்தை முற்கொண்டு தேசத்திற்குத் துரோகஞ் செய்தது முண்டு. எனினும், தர்பங்கா மஹாராஜாவின் வாழ்க்கை களங்கமற்றது; சந்தேகத்திற்குச் சிறிது மிடந்தராதது. பிறர் வேஷதாரிகள் போல நடித்துத் தாம் மேற்கொண்ட விஷயங்களைக் காற்றி லெறிந்து மனச்சமாதான மொழியாது புறங்காட்டிய காலத்தில், இவர் தேசஊழியத்தில் உண்மை அன்புடன் விளங்கியவர். நிலச்சுவாந்தாராயிருப்பினும், அவர் தமது குடிகளை அதிக பட்சத்துடன் நடத்திவந்தனர். அதற்குச் சர்க்காரே சான்று பகல்வர். அவரது தேசாபிமானத்தை, ஜனங்களது படிப்பை விருத்திசெய்யக் காங்ரெஸ் ஸபைக்கு அவர் செய்த உதவியே வெளியிடும். அவர்க்குப் பயமென்பதே கிடையாது; அவர்க்கு உண்மையிலேயேதான். 'யதார்த்தவாதி பஹுஜன விரோதி'யாயிருக்க வேண்டியிருக்க, அவ்வாறவ ரில்லாதிருந்தது ஆச்சரியமாகும். அவரது நடையைத் தவருக மேலதிகாரிகள் எண்ணாததற்கு அவரது உண்மை அபிப்பிராயங்களை அவர் நன்கு உணர்ந்ததே காரணம் போலும்! பொது ஜனங்களும் மேலதிகாரிகளும் அத்தியந்த அன்புடன் அவரை மரியாதை செய்தனர்."

லக்ஷ்மீசருக்கு மகவில்லாமையால் அவரது தம்பியாகிய ராமேச்வர் அவர்க்குப் பிறகு தர்பங்கா மஹாராஜா வாயினர். இவர் தமது தமையனாரது சிராத்த தினத்தன்று பற்பல இந்திய பிரதேசங் கவர்ன்மெண்டாரிடம் ஒப்புவித்த 50,000 ரூபாய்களை ஏழைகளுக்கு விநியோகிக்கும்படி செய்தனர். தமது தமையனிடங் கொண்ட அன்பை அவர் வெளியிட்ட வழி மெச்சத் தகுந்ததன்றோ?

லக்ஷ்மீசரது ஞாபகத்தைக் கொண்டாடவென்று பொது நிதியொன்று ஏற்படுத்தி, பளிங்கு உருவச் சிலை யொன்று 1904-ம் வருஷம் கல்கத்தாவில் டெல்ஹௌஸி சதுக்கத்தில் சமைக்கப்பட்டது. அதை அவ்வருஷம் மார்ச்மீ 25 உ யன்று அக்காலத்து வங்காளத்து லெப்டினண்ட் கவர்னராக விருந்த ஸர் ஆண்ட்ரு ப்ரேசர் முறைப்படி திறந்து வைத்தனர்.

அதைக் காணுந்தோறும், வள்ளுவரது

'ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்'

என்னுங் குறள் தானே விளங்குமன்றோ?

# கல்வி

## LEARNING

"Happy is the man that findeth wisdom; for the merchandise of it is better than the merchandise of silver, and the gain thereof than fine gold." —*Solomon.*

"A good book is the precious life-blood of a master spirit, embalmed and treasured up on purpose to a life beyond life." —*Milton.*

"God be thanked for books. They are the voices of the distant and the dead, and make us heirs of the spiritual life of past ages. In the best books great men talk to us, give us their next precious thoughts and pour their souls into ours." —*Channing.*



"களர்நிலத்துப் பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றுணர்ந்தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்." —நாலடியார்.

**அறிவின் சிறப்பு.**—அறிவே உயிர்களின் உற்பத்திக்குக் காரணமாகின்றது. இயற்கைப் பொருள்களின் அமைப்பையும், குணாதிசயங்களையும், செயல்களையும் நன்கறிந்து நானாவித கஷ்டநஷ்டங்களால் வருந்தாது இருப்பதற்கும், சகிக்கக்கூடாத துன்பங்களைப் பொறுப்பதற்கும், அபாயகரமான வியாதிகள் நம்மை அணுகாதபடி பாதுகாத்து வருவதற்குமுரிய சக்தியை அளித்து உதவுவது அறிவேயாகும். பற்பல பயங்களினின்று தப்புவதற்கும், மனதில் சதாகாலமு மெழும்பும் காமக் குரோதாதிகளை அடக்கிப் பிறர்க்கு நன்மை செய்வதற்கு வேண்டிய உண்மை விதிகளைத் தெரிவிப்பதும் அறிவேயாகும். இல்லறம் துறவறம் இவைகளிரண்டையும் சரிவர நடத்தி முக்தியெய்துதற்கு மிக்க மேலான துணை அறிவேயாகும். நாடுகளை ஜயிப்பதற்கும், பிரஜைகளை நன்கு பரிபாலிப்பதற்கும், துராத்மாக்களைத் தண்டித்துச் சீரியர்களைக் காப்பாற்றிப் போஷிப்பதற்கும் நிகரற்ற அறிவன்றி இன்றியமையாத கருவி மற்றொன்று முண்டோ?

இகபர விஷயங்களைப்பற்றித் தீர்ந்த அல்லது பரிபூரண அறிவே ஞானமென்பது. ஞானத்தை எவரும் அநியாயமாய் அபகரித்து விடமுடியாது. ஞானவொளியால் அஞ்ஞான விருளைப் போக்குதல் எளிதாகும். ஞானக்னியை அஞ்ஞானமென்ற பேய் நெருங்கக்கூடத் துணியாது. அறிவை அதிகரித்து ஞானம் பெறாதவன் உயிரில்லாப் பொருள்களுக்குங் கீழாகிறான். ஜீவனை மேன்மேல் ஓங்கி வளரச் செய்து, ஆன்மாவைப் பிரகாசிக்கச் செய்வது ஞானமே. ஞானமில்லாது, அநாகரீகன் நாகரீக னாகான், மிடியன் தனவந்த னாகான், பாமரன் கல்விமா னாகான், அயோக்கியன் சன்மார்க்க னாகான். கல்வி, பகுத்தறியுங் குணம், விடாமுயற்சி, செருக்கு வஞ்சகம் அழுக்காறுக ளின்மை, தீவிரச் சிந்தித்தல், சிரத்தை, உண்மையை யறியவேண்டுமென்ற ஆசை முதலியவைகளே அறிவை விருத்தி செய்து ஞானத்தைப் பெறுவதற்குரிய கருவிகளாம்.

மடியும், மிடியும், கொலை, களவு, கட்காமங்களும் எங்கும் வியாபித்து நிற்பதைப் பாராய்! குற்றம், அகிருத்தியம், துக்கம் என்ற நீர்த்துளிகளால் நிரம்பிய வாழ்வென்னும் ஆறு பெருகியோடுவதைக் காணாய்! சகல துன்பங்களுக்கும், கஷ்டநஷ்டங்களுக்கும் தாயான தேவை, அல்லது வறுமை, சகலரையும் பீடித்து வருத்துவதை நோக்காய்! கொடுங்கோன் மன்னர்களையும், செருக்குற்ற தனவந்தர்களையும், பசியுற்ற எளியர்களையும், பிணியுற்ற மாந்தர்களையும் சகிக்கக்கூடாத துச்சர்களையும், தேகசுகமும் ஞானவின்பமு மில்லாது பரிதவித்து நிற்குங் குழந்தைகளையும் பாராய்! ஆசைகாட்டி மோசஞ் செய்யும் வேசையர்களின் மோகவலையிற் சிக்கிப் பற்பல லீலைகள் செய்து, பொருளை யிழந்து இளமையிற்றானே முதுமையை யடைந்து மயங்கி அலமந்து வாடிநிற்கும் பேதையர்களைப் பாராய்! பொய்ச் சாந்து பூசப்பட்ட இன்ப சுகங்களையும், ஐசுவரியத்தையும், சாமான்யர்களின் அருவருக்கத்தக்க நிலைமையையும் சற்று உற்றுப்பாராய்! அரைவயிற்றுக் கஞ்சி கூட இல்லாது, நாள்தோறும் காலை முதல் மாலைவரையிலும் உழைத்து, இம்மைப் பயன்களைச் சிறிதேனும் பெற்று அனுபவிக்காது, கண்மூடிச் செல்லும் ஆயிரக்கணக்கான துர்பாக்கியர்களின் கதியை நினைத்துப் பாராய்! இதைவிட வேறு நரகம் எங்குளது? ஆசாபாசங்கள், மனக்கொந்தளிப்பு, தரித்திரம், நோய், இடுக்கண், கொலை, களவு, குடி, காமங்களென்ற பேரலைகள் நிரம்பப்பெற்ற வாழ்வென்னுங் கடலைக் கடந்து, அபரிமிதம், ஜயம், சுகம், இன்பங்கள் நிறைந்த நற்கரையைச் சேர்வது எங்ஙனம்? பாமரர்களுக்கும், கயவர்களுக்கும் உய்வுண்டோ? உண்மையாக இவ்வுலகம் பாழுலகமோ? இவ்வுலகம் உலகாதிகளைப் படைத்துக் காத்துவருவது துக்கம் என்ற தேவனோ? கருணாகரக்கடவுளால் இப்பிரபஞ்சமும் பிரபஞ்சாதிகளும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்பதும், நாட்குநாள் நித்தியானந்தமே இப்புவியின்மீது பரவி நிலை நிற்குமென்பதும் மனத்தோற்றமோ? கவிகளினதும், தத்வஞானிகளினதும் கற்பிதமோ? முற்கூறிய இன்னல்கள் இங்கு தோன்றியிருந்து வருவதற்குக் காரணம் என்ன? அவைகளைப் போக்குவதற்

குரிய வழிகள் உளவோ? இவ்வியாசத்தில் விடுக்கப் புகுந்த விஷயங்கள் இவ்வினுக்களே யாகும்.

அஞ்ஞானம், அவிவேகம், அல்லது மதியின்மையினுற்ருன் முற்கூறிய தோஷங்கள் இவ்வுலகில் தோன்றி நிற்பது. ஞான சஞ்சீவியினுல் மாந்தர்களின் பிணிகளைப் போக்கலாம்: ஞானமென்ற ஆராவமுதத்தினுல் மனிதர்களின் விருப்பங்களைப் பூர்த்திசெய்யலாம்: ஞானஜோதியினுல் பாமரர் பண்பிலார்களின் மனதையும் இருதயத்தையும் தெளிவித்து உண்மையைப் புகட்டிப் பிரகாசிக்கச் செய்யலாம்: ஞானமென்ற வற்ருவூற்றுத் தண்ணீரால் ஆசை, லோபம், அகந்தை, வஞ்சகம், பொய் முதலானவைகள் நிரம்பிய பாலைவனமாகிய இக்கொடிய வுலகை, அன்பு, அருள், ஈவு, இரக்கம், பச்சாத்தாபம் முதலியவைகள் நிறைந்த ஓர் இனிய உய்யானவனமாக மாற்றிவிடலாம். படுகுழியிலாழ்ந்து அலறும் பாபிகளைச் சுசீலர்களாகச்செய்வதும்ஞானமே: அவித்தையென்ற பேயினுற் பீடிக்கப்பட்டு அலப்புறும் அறிவீனர்களைத் தெளிவித்து இம்மைப்போகங்களை அனுபவிக்கச் செய்வதும் ஞானமே: வஞ்சகர்களை நேர்மையாளர்களாக ஆக்குவதும், பொய்யர்களை மெய்யர்களாகச் செய்வதும், கொடுங்கோன் மன்னர்களைச் செங்கோலரசர்களாக மாற்றுவதும் ஞானமென்ற சஞ்சீவியே: கயமையின் தாயாகிய அறியாமை என்ற விருக்ஷத்தை முறித்து வீழ்த்துவதும் ஞானமென்ற காற்றே: அபாயகரமான புல்பூண்டு சாருகளை ஒதுக்கித்தள்ளிச் சன்மார்க்க மென்ற இனிப்பும் வனப்பு மிகுந்த செடியை மேன்மேல் வளரச்செய்வதும் ஞானமென்ற நீரே: சுருங்கச்சொல்லுமிடத்து, பிணிமூப்பு சாக்காடுகளை வென்று இனித்துச் சுகித்திருக்கச் செய்வதும் ஞானமே! இத்தகைய ஞானத்தைத் தக்க கல்வியினுல் பெறலாம்.

கல்வியின் உபயோகங்களும், நற்புத்தகங்களின் குணுதிசயங்களும்:—கல்வி வித்தாகும்; ஞாபகம் வேர்களாகும்; சிந்தனைகள் மலர்களாகும்; செயற்கள் கனிகளாகும்; அதாவது இவ்வுலகாகிய பூமியில் உயிராகிய விதையை நட்டுக் கல்வியறிவென்னும்பேராற்றின் நீரைப்பாய்ச்சி வந்தால், உயிராகிய விதை முளைத்து மேற்கிளம்பி ஓர்செடியாகி, கிருபை, பொறுமை, பரிசுத்தம், ஆயாசமின்மை, உலோபமின்மை, நிராசை என்னும் தளிர்களைத் தழைத்து ஞாபகமென்ற வலிய பட்டையினுற் காக்கப்பட்டு, நாளடைவில் நற்சிந்தனை நற்சொற்களடங்கிய ஞானமென்ற நல்விய புஷ்பம் மலர்ந்து, இறுதியில் இதனின்று நற்செய்கையாகிய அறம் என்ற செங்கனி உண்டாகி அவ்வுயிரைப் பிரகாசிக்கச் செய்யும்.

இன்னமும், தேகமே முத்தியடைவதற்குத் தக்க கருவியாயும், வேறு தேகத்தாலடைவது அரிதாயுமிருப்பதால், இதனைப் பாதுகாத்தல் அவசியமாகும்; அன்றியும்புருடனுறுப்பீனமோடுங் கூடிப்பிறந்து, கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தலரிது. அதனினும் வித்துவானுய் ஆத்ம விவேகம் வந்து மோக்ஷம் யாது என்கிற எண்ண முண்டாவதரிது. இம்மோக்ஷம் ஞான நிஷ்டையை அவலம்பிப்பதாலும், ஞானம், ஆழ்ந்த கல்வி, சாது சங்கங்களினுலு முண்டாகும் மொழிய, வேறெச்சாதனங்களினுலுமாகாது. மேலும், நாசரவிதனுன பரமான்மாவைத் தெரிந்துகொள்ளாத மனிதன் மானிடனுய்ப் பிறந்தும், வாணுளை வீணுளாகக் கழித்து வீணே பிறந்து பூமிக்குப் பாரமாயிருந்து தற்கொலை செய்துகொண்டிறந்தவனுவன். ஆதலால், பரமான்மாவைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கு ஞானம் இன்றியமையாதது. அல்லது அதைத்தெரிதலே ஞானம். இஞ்ஞானத்தைக் கல்வியினுல் பெற்று விருத்திசெய்ய வேண்டும். மனதை மேலெழும்பச்செய்வதும் இருதயத்தைச் சுத்திசெய்வதும், உயிரையும் ஆன்மாவையும் பிரகாசிக்கச்செய்து, தேகிக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் நன்மை பயப்பதுமான அரியபெரிய விஷயங்களடங்கிய மெய்யறிவாளரின் புத்தகங்களைப் படித்தலால் கல்வியறிவைப் பெறலாம்.

பற்பல பாஷைகளில், சிறுவர் சிறுமியரும், பெரியோரும், எழுத்து வாசனையுள்ள கூலியாட்களும் படித்தறிதற்கான வசன நூற்கள், எளிய நடையில் எழுதப்பெற்று, நாட்குநாள் மலிந்து பெருகிவருகின்றன. கல்விமான்களான ஆண்பெண்பாலினர் வாணுள்முழுதும் படித்து வந்தாலும், படித்து முடியா அளவாகப் பலதிறப்பட்ட இலக்கியங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளில், அவரவர்



தங்கள் மனப்போக்கினுக் கேற்றவைகளைத் தேர்ந்தறிந்து படிப்பதொன்றுமே, அவர்களுக்குக் கஷ்டமான காரியமாக இருக்கின்றது. ஆதலால், கோடிக்கணக்காக வெளிவரும் புத்தகங்களில் எவ்வெவற்றைப் படித்தறிந்தால் ஞான முதிர்ச்சி யடையலா மென்பதை இங்கு எழுதுவோம்.

ஓர் புத்தகசாலைக்குள் நுழைந்து அங்கிருக்கும் கணக்கற்ற இலக்கியங்களைப் பார்! நீயும் மெய்யறிவினுகும் பொருட்டு, மாந்தர்களுக்குப் பொதுவான இடையூறு இடுக்கண்களைப் பொறுத்து, ஸ்வயநன்மையைச் சிறிதேனும் மனத்தில் வகிக்காது உழைத்துவந்த பேரறிவாளர்களால் தெரிவிக்கப்பட்ட விஷயங்களடங்கிய பற்பல நூற்களின் திரட்சியைப் பாராய்! வான் முகட்டைத் தடவி நிற்கும் மலைகளின் மீதும், கடும் புயலும், புரண்டோடும் அலைகளும் நிறைந்த கடலின்மீது ஓடியும், துஷ்டமிருகங்களும் விஷச்செடிகளும் நிறைந்துள்ள கானகங்களுக்குள் பிரவேசித்தும், கொதிக்கும் பாலை வனங்களுக்கும், பனியும் குளிரும் நிரம்பிய விடங்களுக்கும் போயும், அவ்விடங்களில் தாம் கண்டவை கேட்டவை அநுபவித்தவைகளை யெல்லாம் ஒருங்கு திரட்டி, நீயும் அவைகளைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான பெரும் புத்தகங்களைக் காணுய்! அடாது செய்து படாதுபடும் புல்லறிவாளனே! தர்ம சாஸ்திரங்களை யெடுத்துப் படித்துச் சன்மார்க்கனுவாயாக! மெய்யுணர் வில்லாது அவதிப்படும் பேதையனே! இலக்கிய விலக்கணங்களையும், தத்வ சாஸ்திரங்களையும் விரித்துப் படிப்பாயாக! அளவளாவி வியாபித்து நிற்கும் ஆகாயத்தின்கணுள்ள சந்திர சூரியர்களையும், நக்ஷத்திரங்களையும், இதர அற்புதங்களையும் அறிய விரும்புவாயாகில் வான சாஸ்திரங்களையும், உயிர்தோன்றி வளரும் மர்மத்தைத் தெரிந்துகொள்ள வேண்டில் சிசு உற்பத்தி சாஸ்திரங்களையும், மருள் மயக்கத்தினின்றும், விபரீத ஞானத்தினின்றும் தப்பி மெய்ஞ்ஞானியாக விரும்பினுல் வேதாந்த சாஸ்திரங்களையும், ஆரோக்கியமாக இருக்கக் கருதுவாயாகில் சரீர சாஸ்திரங்களையும், வைத்திய சாஸ்திரங்களையும், நாகரிகத்தின் உற்பத்தி, வளர்ச்சி, முதலானவைகளைப் பற்றி அறியக் கருதினுல் சரிதங்களையும் படித்து நன்மை பெறுவையாக! இந்நூற்களில் உன் மனதிற் கிசைந்தவைகளை ஆராய்ந்து படித்துச் சுசீலனுவாயாக! கல்வியறிவைப் பூச்சிகளும், புழுக்களும் அரிக்கா; காலமும், இடமும் தாக்கி யழிக்கா; அக்னி எரிக்காது; நீர் நனைத்து அழுகச் செய்யாது; இதைக் கள்வர்கள் கவர்ந்துவிட முடியாது. கல்விமானே அரசர்க் கரசனுக விளங்குபவன்; அறந்தங்கியவன்; தனத்தைக் குவிப்பதற்கும் அதைத் தக்க வழிகளிற் செலவு செய்வதற்குமுரிய வழிகளை அறிந்தவன்; இவனே யாவரையும் இன்புறுத்திச் சுகித்திருக்கச் செய்யக் கூடியவன். இத்தகைய மகாத்மாக்களை எல்லாக் காலங்களிலும் யாவரும் கண்டறிவது துர்லபம்; ஆதலினுற்ருன், அவர்களுடைய ஜீவசரிதங்களும்போதனைகளும் சித்தாந்தங்களும் ஒருங்கு திரட்டப்பட்டு, என்று மழியாது நின்று நிலவுவதான புத்தகங்களாக எழுதப்பட்டுக் காப்பாற்றப்பட்டு வருகின்றன. இப்புத்தகங்களைவிட மிகச் சிறந்த பொக்கிஷம் வேறு எங்குளது? பெற்ருேர்களைவிடப் பன்மடங்கு அதிகச் சிரத்தையுடன் சிறப்புள்ளவைகளைத் தெரிவிப்பதும், மனைவியர் ஊழியக்காரர்களைவிட அதிக அன்புடனும் பணிவுடனும் வேண்டிய வேளைகளில் உன்னுடனிருந்து உன்னைத் திருப்தி செய்வதும், நண்பர்களைவிட மிக்க மேலான மாக்ஷிமை தங்கியதும், காலையிலோ, மாலையிலோ துக்க வேளைகளிலோ சந்தோஷ நேரங்களிலோ எப்பொழுதும் உன்னேடிருந்து உன் சஞ்சலங்களைத் தீர்ப்பதும், மனோவுற்சாகத்தை அதிகரிப்பதும், ஞாபக சக்தியைப் பலப்படுத்துவதும், உன் எண்ணம், வாக்கு, காரியங்களைக் குற்றமற்றதாகச் செய்வதுமான புத்தகங்களின் மகிமையைச் சற்று ஆலோசித்துப் பாராய்! ஆயிரக்கணக்கான புத்தகங்களில், எவற்றை நாம் தெரிந்தெடுத்து படிக்கவேண்டு மென்பதை இப்பொழுது எழுதுவோம்.

இத்தேகத்தின் குறுகிய ஆயுளில் பாதி தூக்கத்திலும், மற்றப் பாதியில் பால பருவத்தில் அஞ்ஞானத்தா லழுந்தப்பட்டும், நல்ல யௌவன பருவத்தில் நாரியர்களால் வருத்தமடைந்தும், மூப்புப் பருவம் வந்தவுடன் சமுசாரத்தினுல் தளர்ந்து மரண மடைந்து

விடுகிறேம். இனி சக்காலத்தில் கற்று,
ஞானம் பெற்று முத்திக்கு வழிதேடுவது?
ஒழிவு நேரங்களோ கொஞ்சம்; அறிய வேண்
டிய விஷயங்களோ அநந்தம்; படிப்பதற்
குரிய நூற்களோ அளவற்றன. ஆதலால்
எத்தகைய புத்தகங்களை எங்ஙனம் நாம் படித்
துக் கிரஹிப்பது என்பதை முதலில் ஓர்ந்த
றிய வேண்டும். ஆயிரக்கணக்கான கிரந்தங்
களிருப்பினும், அவைகளினின்று ஒவ்வொரு
வரும் அவரவர் மனதிற்கிசைந்த இலக்கியங்
களைத் தெரிந்தெடுத்து வாசித்தலே முறை
மையும், நன்மை பயக்கக்கூடியதுமாம். வீண்
கதைப் புத்தகங்களையும், இன்றிருந்து நாளை
மறைந்து போகும்புத்தகங்களையும் படிப்பதை
விட, அறிவை அதிகரிப்பதும், ஞாபக சக்தி
யைப் பலப்படுத்துவதும், அறநெறிகளைப்புகட்
டுவதுமான நூற்களை வாசித்தலே மிக்க மே
லானது. புகழுக்காகவும், பணத்திற்காகவும்
புத்தகமெழுதுவோர் பலருளர். மானிடராசி
யின் முதிர்ச்சியையும், இன்ப சுகங்களையும்
உத்தேசித்து நூற்களை வெளிப்படுத்துவோர்
மிகச் சிலரே.முதல் வகுப்பினர் ஆழ்ந்த கருத்
துக்களில்லாத குறைகுடங்கள்; பின்வகுப்பி
னர், பொருட்சுவையும், சொற் சுவையும்
நிரம்பிய நிறைகுடங்கள். முதல் வகுப்பி
னர், பற்பல புத்தகங்களிலுள்ள விஷயங்களை
எடுத்து ஒருங்குசேர்த்துத் தம்மிஷ்டப்படி
அவைகளை மாற்றியும், குறுக்கியும், பெருக்கி
யும் எழுதுபவர்கள். ஆதலால், நாள் செல்லச்
செல்ல இத்தகையர்களின் (காகிதங்களின்
திரட்சியான) புத்தகங்கள், மகிமை குறைந்து,
மடிந்து விடும். ஆனால், பின்வகுப்பினரின்
சிறந்த இலக்கியங்கள், தீர்ந்த ஆலோசனை,
ஆழ்ந்த கல்வி, பரந்த பயிற்சிகளுடன்
யாவர்க்கும் இன்றியமையாத அரிய பெரிய விஷ
யங்கள் எழுதப்பட்டிருப்பதால் நாட்குநாள்
பெருகிவரும். ஞானம் எல்லையற்றதாதலால்
அது பற்பல அங்கங்களாக வகுக்கப்பட்
டுளது. அவைகளில் உனக்கிஷ்டமானவை,
அல்லது நீ எளிதில் நன்றாகக் கிரஹிக்கக்
கூடியவைகளையே ஆராய்ந்தெடுத்து, அவை
களைப்பற்றி நீ மேன்மேல் அறியவிரும்பினால்,
கல்விமான்களிடஞ் சென்று, அவ்விஷயங்
களைப்பற்றிப் பூரணமாகவும், தெளிவாகவும்
எழுதப்பட்டிருக்கும் சிறந்த கிரந்தங்களின்
பெயர்களை அவர்களிட மிருந்து கேட்டறிந்து
படித்தலே உத்தமமானது.

இனி, நூற்களைக் கிரஹித்து ஞாபகத்தி
லிருத்துவதற்குரிய விதிகளையும் மிகச் சுருக்க
மாகச் சொல்லி இவ்வியாசத்தை முடிப்போம்.

"கற்க கசடறக் கற்பவை ; கற்றபி
னிற்க வதற்குத் தக."

படிக்கும்பொழுது கவனிக்கவேண்டிய விதி
களெல்லாம் இவ்விரண்டு வரிகளிலும்அடங்கி
யிருக்கின்றன. இதைவிடச் சிறந்த விதி வேறு
எங்குமில்லை! மேலோட்டமாய் அநேக புத்த
கங்களை வாசிக்காது, பொறுமையுடனும், சிரத்
தையுடனும் ஏகாந்தியானமாய் ஒவ்வொரு
சொல், வாக்கியங்களின் அமைப்பையும், பொ
ருளையும் தீவிர ஆலோசித்தறிய வேண்டும்;
நூலாசிரியரின் உள்ளக்கருத்தை ஆராய்ந்து
அறியவேண்டும். எளிதில் விளங்காதவைக
ளைப் பன்முறை படித்துவரவேண்டும். அவை
களைச் சரியாகத் தெரிந்து கொண்ட
பின்தான் மேற் செல்லவேண்டும். ஒரு புத்
தகத்தை இங்ஙனம் படித்து முடித்தபின்,
தன் மனதை ஒரே நிலையில் நிறுத்தித் தான்
படித்தவைகளைப்பற்றி மீண்டும் ஆத்திரச்
சிந்திக்கவேண்டும். பின், அவைகளைத் தன்
சொந்த நடையில் எழுதி அப்பியசித்து வர
வேண்டும். இவ்விதஞ் செய்துவந்தால், நாள
டைவில், ஆழ்ந்த கருத்தும், இனிய நடை,
அல்லது சொற்களும் பொருந்திய பேரறி
வாளனாகலாம்.

---

## ஒளியின் அதிசயங்கள்

## WONDERS OF LIGHT

கோடைகாலங்களில் நிர்மலமான ஆகாயத்
தில் சூரியன் நன்றாய்ப் பிரகாசிக்கையில், மரங்
களின் அரிநிழலிலே சூரியகிரணங்கள் தரை
யில் குண்டுகுண்டாய்த் தோன்றக் கண்டிருப்
பீர்களோ! அவை அப்படிக் குண்டு குண்டாகத்
தோன்றுவது அற்புதமல்லவா? இலைகளின்
மத்தியிலும் ஒன்றுக்கொன்று குறுக்கும்
நெடுக்கும் கோணலாய் வளர்ந்திருக்கும் கிளை



களின் மத்தியிலுமிருக்கிற ரந்திரங்கள், ஒரு
போதும் வட்டமாயிராவாகையால், அவற்றின்
வழியாய் வருகிற கிரணங்கள்மட்டும் வட்ட
மாய் எப்படித் தரையில் அமையமாட்டும்?
மிகவும்உரப்பானஒருகடிதத்துண்டிலே,ஒன்று
சதுரமும், ஒன்று முக்கோணமும், ஒன்று எட்
டுக்கோணமும், இப்படி இன்னும் பல கோ
ணங்கள் உடையதுமாய்ப் பலவித சிறுசிறு ரந்
திரங்கள் செய்து, அந்தத் துண்டை வெளியி
லே பிடிப்போமானால், அதன் வழியாய் விழு
கிற சூரிய கிரணங்கள் அதன்கீழ்க் கொஞ்சம்
தூரத்தில்பிடித்த மற்றொருகடிதத்தில் வட்ட
மாகவே தோன்றும். இப்படியே நமது வீட்
டுக் கூரைகளிலுள்ள ரந்திரங்களின் வழியாய்ச்
சூரியனொளி வட்டம் வட்டமாய் வீட்டுத்தரை
யிலே தோன்ற அநேகர் பார்த்திருக்கலாம்.
சூரியன் சரியாய் உச்சத்திலிருந்தால் நல்ல வட்
டமாகத் தோன்றும்; ஒருபுறமாய்ச் சாய்ந்திருந்
தால் கொஞ்சம் நீண்ட வட்டமாகத் தோன்
றும். வீட்டுக் கூரையிலுள்ள ரந்திரங்க
ளெல்லாம் வட்டமாகவே யிருக்கின்றனவா?
அது ஏனோ அப்படித் தெரிகின்றது? அது
ஒரு அதிசயமா வென்கிறீர்களோ? அப்படிச்
சொல்வது நியாயமா? அதற்கும் ஒரு காரண
மிருக்கவேண்டு மல்லவா?

அந்தக் கடிதத்துண்டை வீட்டுக்குள் கொண்
டுவந்து, அதன் துவாரங்களின்வழியாய் விளக்
கொளி பிரகாசிக்கச் செய்து பார்ப்போம்.
அந்த விளக்கொளியின் புள்ளி இப்போது
எந்த வடிவமா யிருக்கும்? அவ்வொளி பதி
யுமிடம் அந்தக் கடிதத்துண்டுக்கு அதிக
சமீபத்தி லிருந்தாலல்லது அது வட்டமாயுந்
தோன்றாது, சதுரமாயுந்தோன்றாது, முக்கோ
ணமாயுந் தோன்றாது, மற்றெந்த வடிவமாயுந்
தோன்றாது. பின்னென்ன வென்னில், அவ்
விளக்கொளி எந்த வடிவமா யிருக்கிறதோ,
அதேவடிவமாய்த் தெரியும்; ஆனால்தலைகீழாகத்
தெரியும். அரைக்கால் அங்குலம் அகலத்திற்கு
அதிகப்படாத சிறு ரந்திரமுள்ள கடிதத்துண்
டை விளக்கினின்றும் நாலைந்து அங்குல தூர
த்தில் பிடித்து அங்கிருந்து நாலைந்து அங்குல
தூரத்தில் ஏதாவது ஒரு உருவத்தைப் பிடித்
தால் அதில் அவ்விளக்கின் வடிவம் நன்றாய்த்
தெரியும். அதிக தூரத்தில் பிடித்தால் தெளி
வாய்த் தெரியாது.

இதைக் கொண்டே அரிநிழல், கூரைச்
சந்து முதலானவிடங்களில் வட்டமாய்த்
தெரிவதற்குக் காரணமின்னதென்று, கண்டு
கொள்ளலாம். அவைகளில் ஒவ்வொன்றும்
சூரியனுடைய பிரதிமை யாதலால், அவை
அப்படித் தோன்றுகின்றன. சூரியன் வட்ட
மாயிராமல் வேறுவிதமா யிருந்தால், அவை
யும் அப்படியே தோன்றும். அவை அப்படி
வட்டமாய்த் தோன்றாத காலமும் சிலவுண்டு.
கிரகண காலங்களில், சூரியனுக்கும் நமக்கும்
இடையே சந்திரன் வந்து, சூரியனுடைய பள
பளப்பான மேனியில் ஒரு பாகம் உடைந்து
போனதுபோல அதை மறைத்துச் சூரி
யனை மொக்கையாக நமக்குக் காட்டுகின்றது.
அதனால் அப்போது சூரியனுடைய நிழலொளி
களும் மொக்கையாகவே தெரியும்.

அப்படியாயின், சந்திரன் ஒரு விதமா யிரா
மல் நாள்தோறும் வெவ்வேறு வடிவமாகத்
தோன்றுவதனால், மேற்சொன்ன கூரைச்
சந்து முதலானவிடங்களில் தோன்றுகிற சந்
திரனொளி ஒரு நாள் வட்டமாகவும், ஒரு நாள்
அரைவட்டமாகவும், இப்படிப் பலவிதமாய்த்
தோன்றுமா வென்கிறீர்களோ? அன்றன்றைக்
குச் சந்திரன் வடிவம் எப்படியிருக்கிறதோ
அப்படித்தான் தோன்றும். ஆனால் சந்திர
னுடைய நிலவு, நிழலொளி தெளிவாய்த் தெரி
யும்படி, அவ்வளவு பிரகாசமா யில்லையாதலால்
அதை நன்றாய்க் கண்டுபிடிப்பது கடினம்.
ஆயினும் ஆகாயம் அழுக்கற்றிருக்கிற இரவு
களில் சந்திரன் ஏறக்குறைய பூரணமாய்ப்
பிரகாசிக்கும்போது பார்த்தால், ஒருவாறு
தெரியும். பூமத்தியத்திற்குச் சமீபமான
விடங்களில் சந்திரன் இன்னும் பிரகாசமாயி
ருக்குமாதலால், அவ்விடங்களிலேபோய்ப்பார்
த்தால் இது இன்னும் தெளிவாய்த் தெரியும்.
வடதேசங்களில் சந்திரன் ஒளி மிகவும்
இருண்டிருக்கின்றதனால், அத்தேசத்தவர்
பிரத்யக்ஷமாய்க் கண்டறியக் கூடாமல், சிறிய
ரந்திரங்களின் வழியாய் வருகிற சந்திரனொளி
எந்த வடிவமா யிருக்குமோ வென்று சந்
தேகித்துக்கொண் டிருக்கிறார்கள்.

மிகப் பிரகாசமான உருவங்கள் ஒரு சிறு
துவாரத்தின்வழியாய்த் தம் பிரதிமையை ஏன்
இப்படித் தோற்றுவிக்கின்றன வென்கிறீர்
களோ? அந்தக் கடிதத்துண்டை முன்போல

விளக்கின்முன் மறுபடியும் பிடித்துப் பார்ப்போம். அந்த ஜ்வாலையின் ஒவ்வொரு உறுப்பும் தன் கிரணங்களைக் கூடுமானவரையில் எல்லாப் பக்கங்களிலும் பரவச் செய்கின்றது. எப்படியெனில், ஜ்வாலையின் நுனி தன் கிரணங்களைக் கீழும் மேலும் பக்கங்களிலும் வியாபிக்கச் செய்கின்றது. அவற்றுள் அநேகம் அந்தக் கடிதத்தினால் தடுக்கப்பட்டுப்போக, கீழ்முகமாய்ப் போகிற கிரணங்களுள் இரண்டொன்று மாத்திரம் அதன் ரந்திரத்தின் வழியாய்ப் புகுந்து, அதற்குப் பின்புறத்திலுள்ள உருவத்தில் அந்த ரந்திரத்திற்குக் கொஞ்சம் தாழ்வாக விளக்கொளியின் நுனி போல் அமைகின்றது. இவ்விதமாக அதன் அடிப்புறமும் நாலாமூலையும் தன் கிரணங்களைப் பரப்புகின்றதனால், அதனுடைய மேலே போகின்ற கிரணங்கள் இரண்டொன்று அதன் வழியாய்ச் செல்லமாட்டும். அவைகள் அந்த ரந்திரத்திற்கு மேலாக அதன் அடிபோல் அமைகின்றன.

அதனால் அந்த உருவத்தில் விளக்கின் சாயை தலைகீழாக நமக்குத் தெரிகின்றது.

இந்த அற்புதத்தை இன்னும் தெளிவாய்க் கூட மற்றோரிடத்தில் நாம் காணலாம். கதவில் சிறிய துவாரமுடையதான ஒரு இருட்டறையிலே போய் உட்காருவோம். அந்தத் துவாரம் ஒரு அங்குலத்துக்கு அதிக அகலமுள்ளதா யிருக்கக்கூடாது. அங்கே பார்த்தால் அந்த ரந்திரத்தின் வழியாய் வெளிப்புறத்திலுள்ள காட்சிகளெல்லாம் எதிர்ச்சுவரில் நமக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் எல்லாம் தலைகீழாகவே தோன்றும். மரங்களெல்லாம் தலைகீழா யிருக்கும்; மனிதர்கள் தலைகீழாக நடந்துபோவார்கள்; வீடுகள் தலைகீழாய்த் தோன்றும்; ஆகாயத்தில் எறியப்படுகிற பந்துகள் பூமிக்கு வந்து திரும்பியும் உயரப்போகக் காண்போம். இவை ஆச்சரியங்களல்லவா? ஆகாயம் தெளிவாயிருக்கிறபோது இதை யாவரும் பரீக்ஷித்து அறிந்துகொள்ளலாம்.

# ஆரோக்கிய சாஸ்திரம்

## THE SCIENCE OF HEALTH

முன்னர் நம் போதினியில் சிரஸின் அமைப்பு, அதிலுள்ள உறுப்புகளின் நிலைமை, உபயோகம் இவைகளைப்பற்றிச் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டன. தலையானது கழுத்தின் மூலமாய் முண்டம் எனப்படும் மத்தியதேகத்தின்மேல் வைக்கப்பட் டிருக்கிறது. இம்மத்திய தேகத்திற்கு ஆதாரம் முதுகெலும்பு. இவ்வெலும்பானது விறைப்பான ஒரே எலும்பா யிராமல், முள்ளெலும்புகள் என்று சொல்லப்படும் அநேகம் துண்டெலும்புகள் மெத்தி பந்தங்களுள்ளனவாய் ஒன்றன்மே லொன்று பொருத்தப்பட்டு உண்டாயிருக்கிறது. அதனால் நாம் முதுகைப் பலவிதமாய் வளைக்கக் கூடியதா யிருக்கிறது. இத்துண்டெலும்பு முழுமையும் அடர்த்தியா யிராமல், ஸாதாரணமாய்த் துவாரமுள்ள உருண்டை ப்ரதேசமுள்ளதாயும், அதன் பக்கத்தில் முட்கள் போன்ற மூன்று அங்குர முடையதாயு மிருக்கிறது. இவ்வெலும்புகளிலுள்ள துவாரம் ஒன்றின் மேலொன்று யிருக்கும்படி வைக்கப்பட் டிருப்பதால், முதுகெலும்பு நீளம் முழுவதும் குழாய்போ லிருக்கிறது. நூல் சுற்றுவதற்காக தையற்காரன் உபயோகப்படுத்தும் உருளையின் ஓர் பாதியில் மூன்று மரத்துண்டுகளைப் பொருத்தி, உருளையின் துவாரம் ஒன்றின்மே லொன்றிருக்கும்படி. பல உருளைகளைச் சேர்த்து வைத்துப் பார்த்தால், மேற் சொன்ன முதுகெலும்பின் அமைப்பு ஒருவாறு தோன்றும். இவ்வெலும்பின் குழாய் ப்ரதேசத்தில் மூளையி லிருந்துண்டாகும் நரம்புத்தண்டு இருக்கிறது. இதிலிருந்து அங்கங்கே அநேகம் நரம்புகள் பிரிந்து நமது சரீரத்தில் பரவி நாம் நடமாடவும், ஐம்புலன்கள் மூலமாய், ரூப, ரஸ, கந்தாதிகளை உணரவும் சக்தியைத் தருகின்றன.

முதுகெலும்பிலிருந்து சில எலும்புகள் கிளம்பி, பக்க வாட்டாக பிரிந்து மார்பெலும்புடன்சேர்ந்து, மார்புக்கூடுண்டாகிறது.

மத்திய தேகத்தின் அந்தரானத்தில், பல உறுப்புகள் வெகு விசித்திரமாய் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வுறுப்புகள் வெவ்வேறு இடமும் செயலு முள்ளவை. மேற்சொன்ன அந்தரானமானது தட்டுப் பலகைபோன்ற



தசைநார் ப்ரதானமான விதானத்தால் (Diaphragm) இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. மேற்பகுதிக்கு மார்புக்கூடு என்றும். கீழ்ப்பகுதிக்கு வயிறு என்றும் பெயர். மேற் சொன்ன விதானமானது தட்டையா யில்லாமல், மேற்பக்கம் வில் வளைவா யிருக்கிறது. இதன் வளைவுபோலக் குறைந்து மேற்பகுதி விசாலமாகவும், அதற்கனுகுணமாய் வயிற்று ப்ரதேசம் ஸ்வல்பமாகவும் கூடும். இதன் உபயோகம், நாம் சுவாஸம் விடுவதைப் பற்றி விஸ்தரித்துச் சொல்லும் பொழுது நன்கு விளங்கும்.

மார்புக்கூட்டில், சுவாஸகோசம் அல்லது நுரை ஈரலும், ஹ்ருதயமும், வயிற்றுள் தீனிப்பை பித்தப்பை அடங்கிய, கல்லீரல் மண்ணீரல்களும், பெருங்குடல் சிறுகுடல் மூத்திரகோசங்கள் மூத்திரப்பை முதலிய உறுப்புகளும் அடங்கி யிருக்கின்றன.

சுவாஸகோசமும், ஹ்ருதயமும் நுட்பமாயமைக்கப்பட்டு, எளிதில் கெடக்கூடியனவா யிருப்பதால், அடி முதலியவற்றால் தாக்கப்படாமலிருக்கும் பொருட்டு எலும்புகள் பொருந்தியேற்பட்டிருக்கும் கூடுபோன்ற ப்ரதேசத்தில் அமைக்கப்பட் டிருக்கின்றன. வயிற்றிலுள்ள அவயவங்கள் அவ்வளவு ஸூக்ஷ்மமானவையல்லாமையால், இப்பகுதியின் முன்புறமும், விலாப்பக்கங்களிலும் எலும்புகள் ஏற்படவில்லை.

மேற்சொன்ன உறுப்புகள், ஸ்தூலமாய் நான்கு விதத்தொழில்களைச் செய்யக்கூடியவை என்று சொல்லலாம்.

சுவாஸ கோசங்கள்.—வாயின் பின் புறமிருந்து தொடங்கி கழுத்தின் முன்பக்கத்தில் காணப்படும் காற்றுக்குழாய் வழியாய் நாம் உட்கொள்ளும் காற்றானது ப்ரவேசித்து, நுரையீரலின் குழாய்களின் வழியாய் இரண்டாகப் பிரிந்து, மார்பினுள் இருபுறமுமிருக்கும் கடற்பஞ்சுபோன்ற நுரையீரலுள் பரவுகிறது.

மேற்சொன்ன நுரையீரலின் குழாய்கள், வரவரச் சிறு குழாய்களாய்ப் பிரிந்து, கடைசியில் ஒவ்வொரு குழாய் நுனியிலும் திராக்ஷக்குலை போன்ற காற்றுப்பை யிருக்கிறது. மயிற்போன்ற மிகச் சிறிய ரக்ததந்துக் குழாய்கள் வலைப்பின்னலாய் இப்பைகளைச் சுற்றிக்கொண் டிருக்கின்றன. சுவாஸ கோசங்கள் தசைநார் சேர்ந்து உண்டாயிருப்பதால், விரிந்து சுருங்கும் தன்மை இவைகளுக்குண்டு. மார்புக் கூட்டின் அடிப்ரதேசத்திலிருக்கும் விதானம் கொஞ்சம் வளைவு குறைந்து தட்டையாவதால், மார்புக்கூடு அகன்று சுவாஸ கோசங்கள் விரிவதற்கு இடமுண்டாகிறது. நாம் உட்கொள்ளும் நல்ல காற்றானது மேற்சொன்ன பைகளில் புகுந்து பரவும்பொழுது, இக்காற்றிலும், காற்றுப் பைகளைச் சுற்றியிருக்கும் ரக்ததந்துக் குழாய்களிலுமுள்ள ரக்தத்திலும் சில மாறுதல்களுண்டாகின்றன. இந்த ரக்தமானது தேக முழுவதும் சுற்றி, அங்கங்கே உண்டாகும் கரியமிலவாயு முதலிய மல பதார்த்தங்களுடன் கூடி யிருப்பதால், தனது ஸ்வாபாவிகமான சிவப்புநிறம் மாறி, நீலவர்ணமுள்ளதா யிருக்கிறது. இவ்வித ரக்தத்திலுள்ள கரியமிலவாயு ப்ரதானமான அசுத்தங்கள், ரக்ததந்துக் குழாய்கள் காற்றுப்பை இவைகளின் மெல்லிய சுவர்களினூட புகுந்து, சுவாஸ கோசத்துக்குள் வர, இதிலுள்ள காற்றிலடங்கிய ப்ராண வாயுவின் ஓர் அம்சம் ரக்தக் குழாயில் ப்ரவேசிக்கிறது. இதனால் ரக்தம் சுத்தமாகி, மறுபடியும் தேகமெங்கும் ஓடிப் பரவித் தேக போஷணைக்கு வேண்டிய ப்ராணவாயுவை எல்லா அங்கங்களுக்கும் கொடுக்கிறது. கரியமிலவாயு முதலியவற்றால் அசுத்தமடைந்த காற்றும், சுவாஸகோசம் சுருங்க, நாம் சுவாஸம் விடுவதால் வெளிவருகிறது.

நல்ல காற்றை உட்கொண்டு, ப்ராணவாயு சரீரமெல்லாம் பரவும்படிசெய்து தேகத்தில் அப்போதைக்கப்போ துண்டாகும், கரியமிலவாயு, நீராவி முதலியவற்றை ரக்தத்திலிருந்து வெளிப்படுத்தி ரக்தத்தைச் சுத்தமாக்குவது சுவாஸகோசங்களின் தொழிலாகும். சுவாஸத்தை உள் வாங்கி வெளி விடுவதில் சம்பந்தப்பட்ட உறுப்புகளும், அவைகளின் தொகுதிகளும் சுவாஸாசய அமைப்பு எனப்படும்

(2) ரக்த ஓட்டம் ஸம்பந்தமான ஹ்ருதயம் அதன் தொகுதிகள், ரக்தபாசனமுறை அமைப்பைச் சேர்ந்தவை. நல்ல உணவும், சுத்தக் காற்றும் தேக போஷணைக்கு அத்யாவச்யகமென்பது தெரிந்த விஷயமே. பெரிய அவயவங்களும், சிறு அங்கங்களும், தங்கள் தங்கள் விருத்திக்குரிய பதார்த்தங்களையும், ப்ராணவா

யுவையும் அடைந்தா லொழிய வளரமாட்டா. ஆனால், நாம் இவைகள் ஒவ்வொன்றுக்கும், தனித்தனியே அந்தந்த ஸ்தானத்தில் அதற்குரிய ஆகாரத்தைக் கொடுப்பதில்லை. நாம் வாயின் வழியாய் உட்கொள்ளும் ஆகாரம், பானம் முதலியவை, வயிற்றில் சென்று, பிறகு சுமார் 26 அடி நீளமுள்ள குடல் வழியாய் ஸஞ்சரிக்கும்போது, உணவிலுள்ள சத்துப் பதார்த்தங்கள் ஜீர்ணமாகி, வயிறு, குடலைச் சுற்றியிருக்கும் தந்துக்களுள் சென்றும் ரக்தம் ஓடுமிடமெல்லாம் போகும்போது, எலும்பு, நரம்பு, தசைநார், மாம்ஸம் முதலிய ஒவ்வொரு கோசத்திற்கும் வேண்டிய பொருள்களை அவையவை எடுத்துக் கொள்ளுகின்றன. உணவுப் பொருள்களின் ஸத்துக்களையும், ப்ராண வாயுவையும் தேகத்தில் அங்கங்கே கொண்டுபோய்க் கொடுப்பதற்கு வேண்டிய ரக்த ஓட்டத்துக்குக் காரணமான ஏற்பாடு வெகு விசித்ரமே. இந்த ரக்த ஓட்டம் ஸித்திப்பதற்கான முக்கிய உறுப்பு ஹ்ருதயமே. இது மிகவும் நுட்பமானதும், வெகு ஜாக்ரதையாய்ப் பாதுகாக்கப்படவேண்டியதுமான பாகம். அநேகமாய் போலான தசைகளா லமைக்கப்பட்ட ஓர்விதப் பை. இதனுள் நான்கு அறைகளுண்டு. மேலிரண்டுக்கும் ஆரிகிள் என்றும், கீழ் அறைகள் இரண்டுக்கும் வென்ட்ரிகள் என்றும் பெயர். வலது பக்கமுள்ள ஆரிகிள், வென்ட்ரிகள், அதுபோலவே இடது பக்கமுள்ள ஆரிகிள், வென்ட்ரிகிள்களுக்கும் மத்தியில் துவாரமுண்டு. இந்தத் துவாரத்தின் வழியாய், ரக்தம், மேலிருக்கும் ஆரிகிளிலிருந்து, கீழே வென்ட்ரிகிளுக்குச் செல்லும்படிக்கும், கீழிருந்துமேலே ஆரிகிளுக்குப்போகமுடியாமலிருக்கும் விதம், தசைநார் ப்ரதானமான ஓர்வித கதவால் ஒவ்வொரு துவாரமும் மூடப்பட்டுள்ளது. ஹ்ருதயப் பையானது, ஓர் நிமிஷத்துக்குச் சாதாரணமாய் 70 தடவை சுருங்கி விரியும் தன்மையுள்ளது. சுருங்கும்போது இதிலுள்ள ரக்தமானது வென்ட்ரிகிளிலிருந்து புறப்படும் ரக்தக்கால்கள் வழியாய் ப்ரவஹிக்கிறது. வலது வென்ட்ரிகிள் இடது வென்ட்ரிகிளிலிருந்து பிரியும் ரக்தக்கால்களுக்கு முறையே பல்மோனேரி ஆர்ட்டேரி என்றும், அயோடா என்றும் பெயர். இக்கால்கள், வரவரச் சிறிய கால்களாகவும், அவைகள் கடைசியில் மயிர் போன்ற மிகச் சிறிய குழாய்களாய் முடிந்து, மறுபடியும் இச்சிறு குழாய்கள் வரவரப் பெருத்து, கரு ரக்தக் கால்களாகி ஒன்றோடொன்று சேர்ந்து முடிவில் இரண்டு பெரும் குழாய்களாகி இரண்டு நாளங்களாகவும், மார்புள்ளிருக்கும் ரக்த தந்துக்கள் மீண்டும் கூடி, தனியாக ஓர் நாளமாயும் ஹ்ருதயத்துள் சேர்கின்றன. அயோடா வழியாய் வெளிப்படும் ரக்தம் சுத்தமானது. ப்ராணவாயு விசேஷமாயுள்ளது. இக்குழாய் இரண்டு கிளையாய்ப் பிரிந்து, ஒருகிளை தலை, கழுத்து கைகள் இவைகளுக்கும், மற்றொன்று வயிறு, கால்கள் இவைகளுக்கும் ரக்தத்தைத் தருகின்றது. அநேக நாடிகள் வழியாயும், ரக்த தந்துக்களிலும் ஓடி, அங்கங்கே ப்ராணவாயு முதலிய சுத்த வஸ்துக்களை அவயவங்களுக்குக் கொடுத்து, அவைகளிலுண்டாகும் கரியமிலவாயு முதலிய அசுத்தங்களை எடுத்துக்கொண்டு நாளங்கள் வழியாய் ஹ்ருதயத்துக்கு மீண்டும் அசுத்த ரக்தத்தைக் கொண்டுவருகிறது. தலை, கழுத்து, கைகளிலிருந்து வரும் ரக்தம், ஒரு ரக்தக்கால்வாய் வழியாயும், வயிறு, கால்கள் இவை முதலியவற்றிலிருந்து வருவது மற்றொரு ரக்தக் கால்வாய் மார்க்கமாயும் வலது ஹ்ருதயத்தின் மேலறையில் ப்ரவேசித்து, நிரப்பும். அவ்வாறு நிறைந்ததும், அவ்வறை சுருங்கும்போது, ரக்தமானது வலது ஹ்ருதயத்தின் கீழறையுள் புகுந்து, அங்கிருந்து ஹ்ருதயத்துள் பாயும் ரக்தக் கால்வழியாய்ச் சுவாஸ கோசங்களைச் சுற்றிலுமுள்ள தந்துக்களில் ஓடும் பொழுது, ஏற்கெனவே சொல்லியபடி, கரியமிலவாயுவைக் கழித்துச் சுவாஸ கோசங்களிலுள்ள ப்ராணவாயுவின் மூலமாய்ச் சுத்தமடைந்து, மீண்டும் ஹ்ருதயத்துள் சென்று கலக்கும் ரக்தக் கால்களின் மூலமாய் ஹ்ருதயத்தின் இடது மேலறையில் ப்ரவஹிக்கிறது. அது நிரம்பி, இடது கீழறையுள் வந்து ரக்தம் பாய, மேற்சொன்னபடி மறுபடியும் ரக்த ஓட்டம் தேகமெங்கு மேற்படுகிறது.


சந்தாதாரர்க்கு மாத்திரம் குறைந்த விலை

| | | | |
|---|---|---|---|
| ஐரோப்பிய மஹா யுத்தம் | ... | ரு. 1 | 4 |
| ஸ்ரீராமாயண ஸாரம் | ... | 1 | 0 |
| [illegible] | ... | 0 | 12 |
| மாதவஸ்ரீ | ... | 0 | 8 |
| [illegible] | ... | 0 | 8 |




# மாதவீகங்கணம்

## நான்காம் பாகம்

### அத்யாயம்-7

### மாதவீகங்கணம்

(302-ம் பக்கத் தொடர்ச்சி.)

நரேந்த்ரன் கோயிலைவிட்டு, சந்த்ரன் துல்யமாக ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் வெளியிடத்துக்கு வந்துகொண்டிருந்தான். அப்போது மெல்லிய குரலாய் ஹேமலதை 'நரேந்த்ரா' என்று விளித்தாள்.

நரேந்த்ரனுக்குத் தூக்கிப் போட்டது. திரும்பிக் கம்பமறைவில் நின்றுகொண்டிருந்த உருவத்தைப் பார்த்தான். அவனுடைய கண்கள் அந்நிலையிலேயே நின்றுவிட்டன; தேக முழுவதும் ஒருவித நடுக்கமுற்றான். பால்யத்தில் ப்ரதிதினமும் பார்த்துக்கொண்டிருந்த விக்ரஹம், தூரதேசங்களில் நிதமும் இரவில் கனவில் கண்டுகொண்டிருந்த பரமஸந்தோஷகரமான விக்ரஹம், இப்போது ஆகாரத்தில் வளர்ந்து அழகிற் சிறந்து நவயௌவன நிலையி லிருப்பதைக் கண்ணுற்றான். பால்யம் முதல், தான் க்ஷணமும் மறந்தறியாத அந்த ஸ்படிகத்தை யொத்த லலாடமும், மனதிலுள்ளதைப் பளிங்குபோல் காட்டும் கருணை பொழியும் நேத்ரங்களும் அவனை மதிமயங்கச் செய்தன. நரேந்த்ரன் தன்னை யறியாமலே உடல் பூரித்து மெய்ம்மறந்து தான் கனவிலும் நினைவிலும் மறந்தறியாத அப்பெண்மணியை ஆலிங்கனஞ் செய்துகொள்ளவேண்டுமென்று கரங்களை நீட்டினான்.

ஹேமலதை திடுக்கிட்டு நடுநடுங்கிப் போனாள்; ஓர் அடி பின்வாங்கி நின்றாள். நரேந்த்ரனுக்கு உடனே தன்னிலை ஞாபகத்திற்கு வந்தது; தனக்கும் தன் முன் நிற்கும் நாரீமணிக்கும் இடையிலுள்ள தாண்டவொண்ணாத ஆற்றின் தன்மையை உணரலானான். தான் நின்றிருக்கும் ஸ்தலத்தையும், தான் செய்யவிருந்த அடாத கார்யத்தையுங்கண்டு வெட்கமுற்றுத் தலைகுனிந்தான். ஹேமலதை அவனுடைய பரிதாப நிலையைப் பார்த்ததும் பார்க்காதவள் போலச் சாந்தமாய்ப் பேசலானாள்.

“நரேந்த்ரா, பல ஆண்டுகளாய்விட்டன நாம் பிரிந்து. இன்றைக்கு மறுபடியும் ஸந்திக்கிறோம். பால்யத்தில் நாம் அத்யந்த நேசர்களாய்க் கூடி விளையாடிப் பல கனவுகள் கண்டு, மனப்பால் குடித்துக் கொண்டிருந்த நாட்களெல்லாம் போய்விட்டன. இப்போது நாம் பெரியவர்களாய் விட்டோம். இனிமேல் நடக்கவேண்டிய காரியத்தைக் கவனிக்க வேண்டும். போர்முகம் போர்முகமாய் அலைந்து திரிந்து விஜயலக்ஷ்மியை நாடிச் சென்ற நாட்களெல்லாம் முடிந்துவிட்டன. இனி நீ உன் ஜமீன் வ்யவஹாரங்களைக் கவனிக்கக் காலம் வந்து விட்டதால் நீ உன் ஸ்வதேசத்துக்குத் திரும்புதல் அவசியம். நான் ஸத்ய ஹரிச்சந்த்ரரான ஒரு புண்ய புருஷரை மணம்புரிந்து அவருடைய தர்மபத்னியாய் வாழ்ந்து வருகிறேன். இப்போது இருக்கும் விதமே ஆயுள் முழுவதும் அவருடைய தர்மபத்னியாய் அவர் மனமொப்ப நடந்து கொள்ளும்படி ஈசன் திருவருள் புரிவாராக” என்றாள்.

இம்மொழிகளுக்கு நரேந்த்ரன் என்ன பதில் சொல்கிறது? ஹேமலதையின் சாந்த வார்த்தைகள் அவனுடைய ஹ்ருதயத்தைப் பிளந்தன. தன் காதற் கிழத்தியும் தன் ப்ராணநசப் பொருளுமாகிய அந்நாரீமணி அழகே திரண்டு உருவெடுத்து வந்த தேவகன்னிகை போல் எதிரே நின்று கொண்டிருந்தனள். நின்றென்ன? தான் மனதாலும் ஸ்மரிக்கக் கூடாத நிலையில் அவள் இருந்தனள். அவளை இனி முகமெடுத்துப் பார்ப்பதுகூடத் தர்ம விரோதமான காரியமாய்விட்டது அவள் இப்போது பிறிதொரு புருஷனின் மனைவியாய விட்டனள்.

“ஹேமலதே, இப்ரபஞ்ச யாத்திரையில் எனக்கேற்பட்டுள்ள கடமைகளை நான் நன்கறிவேன். அவற்றை மறக்காமல் சரிவரச் செய்துமுடிக்க என்னாலானவரை ப்ரயத்னப் படுகிறேன். ஆனால் பழையகால ஞாபகம் மாத்ரம் என்றைக்கும் என்னை விட்டகலாது.”

“நரேந்த்ரா, பழைய ஞாபகங்களை யாரால் தான் மறந்துவிட முடியும்? முடியாது, உண்மைதான். ஆனால் உன்னைப்போல ஜன்மமெடுத்தவர்கள் அவைகளை அதிகமாய்ப் பாராட்டக்கூடாது. ராஜா மான்ஸிங் உன்னைப் போன்ற சௌர்யவானை கிடையாதென அவ்

வளவு புகழ்ச்சியாய்ப் பேசியிருக்கிறார்; டில்லி பாதுஷாகூட என்னை அதிகமாகக் கௌரவித்திருக்கிறார்கள். உனக்கென்ன குறை? அடிக்கடி உனது கீர்த்தி ப்ரதாபங்களைக் கேள்வியுற்று நானும் பலமுறை அகமகிழ்ந்திருக்கிறேன்."

"ஹேமலதே, ப்ரதாபத்துக்கென்ன? வெகு எளிதில் கிடைத்து விடுகிறது. அது கேவலம் பஹுடம்பரமானது. நீ என்னிடம் வைத்திருக்கும் மதிப்புக்குத் தகுந்தவனாக வேண்டுமென்று நான் எவ்வளவோ ப்ரயத்னப்படுகிறேன். ஸிப்பாய்த் தொழில் என்ன ஒரு தொழிலா? அது மஹா துக்ககரமான தொழிலாகும். எவ்வளவு உத்தம குணமுடையவனாயிருந்தாலும் அந்த போர்வாழ்க்கையில் அவனுக்கு க்ரூர நடவடிக்கைகளும், கெட்ட குணங்களும், அநாகரீக அப்யாஸங்களும் அதிசீக்ரத்தில் படிந்து விடுகின்றன. நான் ஒருவன் மாத்ரம் எவ்வாறு மற்றவர்களைவிட யோக்யனாயிருத்தல் கூடும்? போர்க்கோலம் பூண்டு நான் எத்தனையோ துஷ்க்ருத்யங்களெல்லாம் செய்திருக்கிறேன். ஹேமலதே, இவ்வுலகில் நான் பாப கர்மங்கள் எத்தனையோ செய்திருக்கக்கூடும். அவைகளையெல்லாம் க்ஷமித்துப் பகவான் என்னை ஆட்கொள்வாராக. இம்மலையத்தனை பாபங்களுக்கிடையில் கடுகளவு புண்யம் நான் செய்ததறிவேன். ஈச்வரஸாக்ஷியாய்ச் சொல்வேன். ஒன்பது வருஷகாலமாய் நான் நாடோடியாய் ஊரூராய்த் திரிந்தேன்; எவ்வளவோ கஷ்டங்களுக்குட்பட்டேன்; பலமுறையும் என்னுடைய திடசித்தம் தளர்ந்தும் கோழை நெஞ்சமுடையவனானேன். எத்தனையோ துன்பங்கள் நேரிட்டன. இவ்வளவுக்குமிடையிலும் நான் பால்யத்திலே என் ப்ராணனாய்ப் பாவித்து நேசித்துவந்த அந்தப் புனிதையின் ஞாபகம் கணமும் என்னைவிட்டகன்றதில்லை. அப்புண்யவதியின் நினைவே இத்தனை காலமாய் என்னை ரக்ஷித்துவந்த மஹா மந்த்ரமாயிருந்தது."

"நரேந்த்ரா, உன்னுடைய ஸத்யமும், உதார குணமும், பெருந்தன்மையுமே உன்னை இதுவரைக்கும் ரக்ஷித்து வந்தது. அவைகளே உனக்கு நற்றுணையாய் விளங்கியவை. உன்னைச் சிறு பையனாயிருக்கும்போதே நான் அறிவேனன்றோ? அப்போதே இக்குணங்கள் உன்னிடமிருப்பதை நான் உணர்ந்தேன். இப்போது நீ பெரியவனாய் விட்டாய். அக்குணங்கள் உன் முகத்தில் ப்ரதிபலிக்கின்றன. நரேந்த்ரா, உன் ஸ்வபாவத்துக்கு அநுகுணமாய் உனது பிறப்பு, வளர்ப்பு, நீ உதித்த குலத்தின் பெருமை யிவைகளுக்குரிய கடமைகளை நீ நிறைவேற்றுவது அவசியம்."

"ஹேமலதே, எனது பிறப்பு, வளர்ப்பு, குலம் யாவும் மேன்மையானவைதான். என்னைப் பெற்றெடுத்த தாயார் மரித்தவுடன் அந்தக் குறை தெரியாதபடி உன் தாயார் என்னை எவ்வளவோ செல்வமாய் வளர்த்து வந்தவள், அடிக்கடி அவைகளைப்பற்றி வற்புறுத்தி யுரைப்பாள். அப்புத்திமதி எளிதில் மறக்கற்பாலதோ?"

"என் தாயார் இந்நகரில்தான் இருக்கிறாள். என் தகப்பனார் பரமபத மடைந்துவிட்டார். ஆகலால் இனி தன் ஆயுட்காலமுழுவதும் இவ்விடத்திலேயேயிருந்து திருவடி ஸேவை செய்துகொண்டு தன் காலத்தைக் கழிப்பதாக அவள் உத்தேசித்திருக்கிறாள். நரேந்த்ரா, இவ்வுலகில் நான் ஏகாகியாய்விட்டேன். தகப்பனாரும் போய்விட்டார்; தாயாரும் என்னை விட்டகன்றாள்" என்று ஹேமலதை பெருமூச்செறிந்தாள்.

"நரேந்த்ரா, ஆனால் என் பர்த்தா இருக்கிறார் எனக்கு ஆறுதல் கூற. அவர் மஹா உதாரகுணமுடையவர். இந்தத் துக்க ஸமயத்தில் எனக்குத் தேறுதல் சொல்லிக் காப்பாற்றச் சைவலினி அக்காவும் என்னோடிருக்கிறாள். சைவலினியைப்போன்ற ஆதரவான துணை ஒருவருங் கிடையாது. அவளுக்கு என்னிடம் எவ்வளவு ப்ரேமை. அவளைப் பெற்ற தாயாரென்றே சொல்லவேண்டும். நரேந்த்ரா, எங்களுடன் நீயும் வங்காளம் வந்து எங்களை விட்டுப் பிரியாம லிருக்கவேண்டும்."

நரேந்த்ரன் பதிலொன்றும் சொல்லவில்லை. அப்பேர்ப்பட்ட சாந்த ப்ரக்ருதியான நாரீமணி கண்களில் நீர்ததும்ப தன்னை வருந்தியழைக்க, வரமாட்டேனென்று சொல்வது எவ்வளவு க்ரூரமான கார்யம்; இல்லை, அவளுடன் வங்காளம் செல்வதென்றால் நரேந்த்ரனுக்குத் தைரியப்படவில்லை. இந்தத் தர்மஸங்கடத்தினின்றும் தப்ப வழி தெரியவில்லை. கடைசியில் மனதை ஒருவாறு திடப்படுத்திக்



கொண்டு "ஹேமலதே, நீ உன் க்ருஹத்தில் உனக்கேற்பட்டுள்ள கர்மங்களைச் செய்துகொண்டு ஸுகமாயிரு. என்னைப்பற்றிக் கவலைப்படாதே. நான், என் தலைவிதி ப்ரகாரம் எங்கேயாவது சென்று காலங்கழிக்கிறேன்" என்றான்.

"நரேந்த்ரா, எங்கேயாவது ஏன் போகவேண்டும்? போதுமே; வேண்டுமட்டும் போர்த்தொழில் புரிந்தாயிற்று. இனியாவது ஊர் திரும்பி ஸமஸ்தான வ்யவஹாரங்களைக் கவனிக்கவேண்டாமா? வீரநகரத்தில் உன் பந்துமித்ரர்களும், உனது ப்ரஜைகளும் நீ எப்போது வரப்போகிறாயென்று ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்களே."

"ஹேமலதே, வீரநகரம் என் க்ருஹமா? அந்த ஸமஸ்தானம் இப்போது என் கீழிருக்கிறதா இல்லையாயென்ற விஷயமே எனக்குத் தெரியாதே."

"நரேந்த்ரா, வீரநகரம் உன் க்ருஹந்தான், உன் ஸமஸ்தானந்தான். நீதான் அதற்கு அதிபதி. என் புருஷர் வீரநகரத்தைத் தன் சொந்த ஜமீன்போல் பரிபாலித்து வைத்திருக்கிறார்; சக்ரவர்த்தியவர்களும் உன் பித்ரார்ஜித ஜமீனை உன்னிடம் ஒப்புவிக்கும்படி கட்டளை பிறப்பித்திருக்கிறதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்."

"சக்ரவர்த்தியவர்கள் என்றைக்கும் மஹா தயாளகுணமுடையவர்; உதாரசீலர். அவர் என்னிடம் எவ்வளவோ தயை வைத்திருக்கிறார். உன் பர்த்தாவும் அதிசப் பெருந்தன்மை யுடையவர். என்னுடன் பிறந்த ஸஹோதரர்கள்கூட என் விஷயமாய் அவ்வளவு சிரத்தை யெடுத்துக் கொள்ளமாட்டார்கள்? உன் பர்த்தா என்னிடம் அவ்வளவு அன்புவைத்து என் நன்மைக்காக எவ்வளவோ உழைத்துவருகிறார். ஒரு காலத்தில் அவரை நான் வேறாக நினைத்ததுண்டு. அதைக்கூடப் பாராட்டாமல் பெருந்தன்மையாய் மறந்துவிட்டு என் க்ஷேமத்தைக் கோரிப் பாடுபட்டு வருகிறார். அவருடைய அன்புக்கும் உதாரகுணத்துக்கும் பாத்ரனாய் நடந்துகொண்டு அவர் செய்த உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரம் செய்யத் தருணம் வாய்க்கவேண்டுமெனக் கடவுளை ப்ரார்த்திக்கிறேன்" என்று சொல்லி ஷிரீஷனுடைய மனைவியுடன் இன்னும் அதிகமாய் ஒன்றும் சொல்ல முடியாதவனானான். ஒருகாலத்தில் அஸூயையாலும் கோபாவேசத்தாலும் உன்மத்தனாய்த் தான் கீழே தள்ளிக் காலால் மிதிக்க எண்ணங்கொண்ட மனுஷன் இப்போது தனக்கு ப்ராண ஸ்நேஹிதனாயும் பரமோபகாரியாயுமிருப்பதை நினைத்துக்கொள்ள நரேந்த்ரனுக்குத் தன்மீதே எவ்வளவோ அருவருப்புண்டாயிற்று.

"அப்படியானால் இப்போது அவருக்கு ப்ரத்யுபகாரஞ்செய்யத் தடையில்லையே? எங்களுடன் புறப்பட்டு வங்காளம் வா. தம் நண்பன் ஊருக்குத் திரும்பிவந்து தம்முடனிருப்பதைக் கண்டு அவர் எவ்வளவோ மனம்பூரிப்பார். நானும் என் ஸஹோதர ப்ரேமையை மறவாமல், உனக்கு வேண்டிய ஸௌகர்யங்களை அமைத்து வைக்கிறேன்" என்னும்போது ஹேமலதையின் குரல் நடுக்கமுற்றது.

நரேந்த்ரன் மனத்தில் என்னென்னவோ வாய்விட்டுச் சொல்லவேண்டுமென்று தோன்றிற்று. ஆனால் எதிரிலிருப்பது ஷிரீஷனின் மனைவி. அவனால் ஒன்றும் சொல்லக்கூடவில்லை. 'ஸஹோதரீ, யோசித்துச் சொல்லுகிறேன்.'

"நரேந்த்ரா, யோசனையென்ன? நான் சிறு பெண்ணாயிருந்தபோது ஏதாவது கேட்டால் 'யோசித்துச்சொல்கிறேன்' என என்றைக்காவது நீ சொன்னதுண்டா? இன்றைக்கு மாத்ரம் ஏன் இவ்வாறு சொல்கிறாய்? அப்போதைக்கப்போது நீதான் மாறிவிட்டாயோ அல்லது நான்தான் வேறு ஹேமலதையாகிவிட்டேனோ?"

"ஹேமலதா, நமது பால்ய நாட்களுக்கும் இப்போதைக்கும் விஷயங்கள் மாறி இல்லையா?" என்று நரேந்த்ரன் வெறுப்பாய் விடையளித்தான்.

ஹேமலதையின் கண்கள் நீர் நிறைந்தன. ஐயோ, நாம் அவள் மனதைப் புண்படச் செய்தோமே என்று நரேந்த்ரன் பச்சாத்தாபமுற்றான். இருந்தாலும் அவள் வேறு எவ்வாறு தன் கருத்தை வெளிப்படுத்துவது?

"ஒன்பது வருஷங்களுக்குப் பின் இன்றைக்குத்தான் நான் உன்னைப் பார்த்தேன். ஹேமலதே, உன் மனதை நான் வருத்துவது தர்மமன்று. இருந்தாலும் உன் வார்த்தைகளுக்கு இணங்கி நடப்பதால் எனக்கு நேரக்

கூடிய மனோவருத்தமும் நான் செய்யவேண்டிய பரித்யாகமும் இத்தன்மையவென்று நீ உணராமல் பேசுகிறாய்."

"ஸ்திரீகள்கூட பரித்யாகம் இத்தன்மையதென்று சிறிது அறிந்திருத்தல்கூடும்' என்று மெதுவாய்ப் பதில் சொன்னாள் ஹேமலதை.

"ஹேமலதே, இன்றிரவு நான் உன்னிடம் சொல்லக்கூடாத விஷயங்கள் சில உண்டு. அதவா சொன்னாலும், அவை உனக்கு பொருள்படமாட்டா. நீ என் மேல் ஸஹோதர ப்ரேமையுடன் சேர்ந்து வருகிறாய். அதைவிட மேலான மனோவிகாரமும் அதன் தன்மையும் அவ்வித மனோவிகாரத்துக்கு ஏற்படும் ஆசாபங்கமும், ஆசாபங்கத்தால் விளையும் மனத்துயரமும் ஒன்றும் நீ உணரமாட்டாய். உன் நிர்மல சித்தம், நிஷ்களங்கமான ஹ்ருதயம் ஒருபோதும் என் மனம் படும் பாதையைப் பட்டறியாது. ஸ்தரீகளுடைய கோல்பமான ஹ்ருதயம் ஒருபோதும் அவ்வித பாதையை ஸஹிக்காது. ஹேமலதே, நீ தேவிபுரம் சென்று உன் வேலைகளைப் பார்த்துக்கொண்டு ஸுகமாயிரு. நான் அங்கே வரமாட்டேன். எங்கேயாவது கண் மறைவாய்ப் போய் என் துர்விதியைத் தொலைக்கிறேன்."

"நரேந்த்ரா, ஸ்திரீகளின் ஸ்வபாவம் உனக்குத் தெரியாது. எவ்வளவு பாதையானாலும் ஸ்தரீகள் வாய் திறவாமல் பொறுத்துக்கொண்டிருப்பார்கள்" என்று ஹேமலதை சாந்தமாய் மொழிந்தாள்.

"ஹேமலதே, என்னைத் துன்புறுத்தாதே. எனக்குப் பைத்யம்பிடித்துவிடும். நீ உலகமே தெரியாதவள். அதிக ஆவலுடன் பாராட்டிவந்த மனோரதம் நிறைவேறாமல் ஆசாபங்கமுற்று வாழ்வை வ்யர்த்தமெனக் கருதும் புருஷனுடைய மனோவேதனையின் தன்மை உனக்குப் புலப்படாது. உன் அறியாமையினால் நீ இவ்வாறெல்லாம் பேசுகிறாய்."

"ஸ்த்ரீஜாதிக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. வெளிக்குத் தெரியாமல் அவர்கள் எத்தனையோ மனோவேதனைகளை அநுபவிக்கிறார்கள். நரேந்த்ரா, அனைத்தும் நான் அறிவேன்."

"எல்லாம் தெரிந்திருந்துமா நீ இப்படிப் பேசுகிறாய்? வீரநகரத்து அரண்மனை உத்யானவனம், ஆற்றங்கரை முதலிய பரிசயமான ஸ்தலங்களைப் பார்த்துக்கொண்டே பழைய நாட்களுடைய ஞாபகங்கள் அடிக்கடி மனதில் தோன்ற, போனதை நினைத்து இரவும்பகலும் மனமாழ்கி ஸதா துன்பஸாகரத்தில் அழுந்திக் கிடக்கவேண்டுமென்றா நீ என்னைத் திரும்ப வங்காளம் வரச்சொல்கிறது? ஹேமலதே, நீ உன் புருஷருக்கு வேண்டிய சுச்ருஷைகளைச் செய்துகொண்டு நீங்களிருவரும் இப்பாவியை நினைக்காமல் ஸுகமாய் இருங்கள். ஊருக்கு வந்து அந்த ப்ரதேசங்களை மறுபடியும் கண்டு ஸஹிக்க எனக்குத் தைர்யமில்லை. நான் எங்கேயாவது தூரதேசத்தில் வஸித்துக்கொண்டிருந்து தலை நரைத்து மூப்புவந்து, ஆதிகால ஞாபகங்கள் அனைத்தும் கனவுபோல் மறந்தொழிந்தபின் ஸாத்யப்பட்டால் ஒருவேளை அப்போது வந்து உங்களுடன் இருக்கிறேன். அவ்வாறு வ்ருத்தாப்யமடைந்து தேகந்தளர்ந்து பலமற்று தள்ளாடித் தள்ளாடிவரும்போது நீ ஸஹோதர வாஞ்சையுடன் என்னை ரக்ஷிக்கலாம். நானும் அந்த்ய காலத்தில் என் பந்துமித்ரர்களுடனிருந்து மனஸ்ஸந்துஷ்டியாய் ப்ராணனை விடலாம்."

"ஸஹோதரா! நரேந்த்ரா! நீயேன் இவ்வளவு துக்ககரமாய்ப் பேசுகிறாய்? உனக்கேன் இவ்வளவு விசாரம்? நான் ஸ்த்ரீஜாதிதான்; இருந்தாலும், நான் சொல்வதைச் சற்று கவனித்துக் கேள். நீ இப்போது அநுபவிக்கும் பாதைகளைவிட அதிகமாகப் பாதைகள் அநுபவித்தும் இந்த ப்ரபஞ்சத்தில் தங்களுக்கு விதித்துள்ள கடமைகளைச் சற்றும் மனம் தளர்வடையாமல் செய்துவரும் ஸ்த்ரீகள் அநேகம்பேர் இருக்கின்றனர். நரேந்த்ரா, நாம் ஒவ்வொருவரும் இவ்வுலகில் செய்யவேண்டிய ப்ரத்யேக கர்மங்களை விதித்து நமக்கு ஏற்பட்டுள்ள கடமைகளை நாம் ஸரிவரச் செய்துமுடிக்கவேண்டுமென எதிர்பார்க்கும் ஈசன் ஒருவன் இருக்கிறானென்பதே எனது பூர்ண நம்பிக்கை. அதை அறியாமல் சதமற்ற மநுஷ ஜன்மமெடுத்த நாம் நம் அல்ப ஆசாபாசங்களையும், அபேக்ஷைகளையும், வீண் கோரிக்கைகளையும், ஆசாபங்கங்களையும் பெரிதாக நினைத்து 'எண்ணாரி யெண்ணாரி ஏழை நெஞ்சம் புண்ணாகி' வருந்துகிறோம். இந்த அறியாமையை நீக்கி நமக்கு இப்ரபஞ்ச வாழ்க்கையில் விதிக்கப்பட்டிருக்கும் கர்மங்களைத் தைர்யமாய்ச் செய்துகொண்டுபோனால், நமது ஜீவ்யகாலம்



பயனுள்ளதாய்க் கழியலாகும். நமது கர்மங்களை ஸரியாய் நடத்திவந்தோம் என்ற ஒரு நம்பிக்கை பிறந்து நமக்கு உத்ஸாகத்தைக்கொடுக்கும். மரணகாலத்தில் நமது வேலையை முடித்தோமென்ற தைர்யத்துடன் ஸந்துஷ்டியாய் உயிர் நீங்கலாம். இதுதான் வீரத்தனமானது; யாவராலும்அங்கீகரிக்கப்பட்டமார்க்கம்;பகவானுக்கும் ப்ரியமான வழி. நரேந்த்ரா, இன்னும் யோசனை யென்ன? தவக்கமேன்? விசாலமான ஜமீனும், அஹோராத்ரம் தமது ஸுகதுக்கங்களில் உன்னையே தம் ரக்ஷகராக எண்ணியிருக்கும் லக்ஷக்கணக்கான ப்ரஜைகள் உன் வரவுக்காகக் காத்திருக்க, நீ அவர்களையெல்லாம் புறக்கணித்துவிட்டுப் போவது தர்மமாகுமா? சுத்தவீரனுக்கு ஏற்றதா உன் யோசனை? இவ்வாறு தயங்குவதற்கெல்லாம் காரணமென்ன? பூர்வம் எப்பொழுதோ ஒரு வ்யர்த்த எண்ணம் உன் மனதிலுதித்ததென்பதா? இவ்வளவு தைர்யமில்லாத மனிதனா நீ போர்வீரனென்ற பெயர் வைத்துக்கொண்டாய்" என்று ஹேமலதை சற்று நின்றாள். ஆனால் நரேந்த்ரன் யாதொன்றும் பதில் சொல்லாததால் அவள் திரும்பவும் பேசலானாள்.

"நரேந்த்ரா, நீ இதுவரைக்கும் புரிந்த போர்களெல்லாம் இனிப் புரியவேண்டியிருக்கும். யுத்தத்துக்குக் கிஞ்சித்தும் ஈடாகாது. இப்ரபஞ்சவாழ்க்கை யெனும் அமர்க்களத்தில் முன்னின்று, தைர்யமாய்ப் பொருது வாகைமாலை சூடுவதைப் பார். அந்த்யகாலம் ஸமீபிக்கும்போது ஸுகமோ, துக்கமோ ஆயுளெல்லாம் அநுபவித்து ஒன்றுக்கும் சலித்துப்பின் வாங்காமல் நாம் நம் கடமைகளைச் செய்து முடித்தோம் என்ற த்ருப்தியுடன் ப்ராணத்தை விடுவதுதான்ஆண்மை. நரேந்த்ரா, நமது ஸ்வப்நங்களும்,வ்யர்த்தகோரிக்கைகளும் கணக்கில் வரமாட்டா. நமது கர்மங்களே நம்மைப் பின்பற்றிவரும். நிஷ்ப்ரயோஜனமான நமது வ்ருதா கோரிக்கைகள் இப்ரபஞ்சத்தில் கைகூடினாலென்ன, கைகூடாவிட்டாலென்ன? சிற்சில சமயங்களில் கஷ்டத்துக்குமேல் கஷ்டமாய் வந்து நம்மை நிர்ப்பந்தித்தாலென்ன? நமது ஆசைகள் பங்கமுற்றால், என்ன முழுகிப் போய்விட்டது? நமக்கு விதித்துள்ள கர்மங்களை நாம் குறையின்றி நிறைவேற்றினால் அதுவே அவருக்குப் பரமசந்தோஷம். நாம் அலைந்து களைத்து நிற்கும்போது நாமறியாமல் அடிக்கடி அவர் நமக்கு உதவிபுரிந்துவருவார். நரேந்த்ரா, ஒன்றுக்கும் பயப்படாதே. கோழை நெஞ்சுபட்டுப் பின்வாங்காதே. நமது கார்யத்தை நாம் செய்யப் புகுந்தால், தைர்யம் தானே வரும். அவ்வாறு நீ உன் கர்மத்தைச் செய்துவந்தால் உன் ப்ரிய ஸஹோதரியாகிய நான் உள்ளம் பூரிப்பேன். நீ செய்யவேண்டிய கார்யங்கள் எத்தனையோ இருக்கின்றன! தைர்யத்தைக் கைவிடாதே. ஆண்மையைக் கைக்கொள்." என்று சொல்லி முடிக்கும்போது ஸ்வர்ணாலயத்தினின்று அர்த்தராத்ரிமணியோசை கேட்டது. ஆவேசங்கொண்டவள்போல் விளங்கும் அவள் வதனமண்டலத்தில் சந்த்ர காந்தி ப்ரகாசமாய் வீசியது. இப்ரபஞ்ச நாடகத்தில் தனக்கு விதிக்கப்பட்ட கர்மங்களைக் குறைகூறாது நிறைவேற்றிவரும் அம்மாது சிரோமணியின் கண்கள் நெருப்புபோல் ஜ்வலித்துக்கொண் டிருந்தன. ஒன்பது வருஷ காலம் ரணகளத்தில் அஸஹாய சூரனாய் விஜயம்பெற்று வந்தவன் நரேந்த்ரன். அப்பேர்ப்பட்டவன் இப்போது கஷ்டத்துக்குப் பயந்து புறங்காட்டியோடும் நிலைமையி லிருந்தான். ஆண்மையெல்லாம் பறந்துபோய் அலித்வம் அடைந்தவன்போ லிருந்தான். அத்தகைய பயங்கொள்ளிக்குத் தைரியம் புகட்டி மறுபடியும் ஆயுதம் கைக்கொண்டு யுத்தத்துக்குப் புறப்படுவென்று அந்நாரீமணி வீராவேசம் உண்டுபண்ணினாள். அவன் கண்களையெடுத்து மேலேபார்க்க, த்ருவ நக்ஷத்ரம் தென்பட்டது. அப்போது மனுஷ்யனுடைய கடமையைப்பற்றியும் உண்மையைப்பற்றியும் பேசும் ஒரு சரித்ரம் அவன் ஞாபகத்துக்கு வந்தது.

தத்க்ஷணமே அவன் மெதுவாய் "ஸஹோதரீ, ஹேமலதே உன் ஆஞ்ஞை ப்ரகாரம் நடக்கிறேன். உங்களுடன் வங்காளம் வந்து என் தொழில்களைப் பார்த்துவரப் போதுமான திடசித்தம் ஈசன் அருள்புரிவாராக'என்றான்.

"நரேந்த்ரா,நீ இப்போதுதான் வீரநகரத்து வம்சத்துதித்த ஆண்மகன்போல் பேசினாய். பால்யமுதல் ஸகலகார்யங்களிலும் நீ எனக்குத் துணையாய் விளங்கிவந்தாய். இம் மண்ணுலகில் எவ்வளவோ கஷ்டதுக்கங் கண்டறிந்த இந்தப் பெண் ஜன்மம், தன் கடமை

களைச் செவ்வனே செய்துமுடிக்க உனது துணையும் வேண்டும்."

இருவரும் மௌனமாயிருந்தார்கள். வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் ஹேமலதை மனதுக்குள்ளேயே அநுபவித்த அவஸ்தையையும் அவற்றை யவள் கடைசியில் வெற்றிகொண்டதையும் ஒன்றையும் அறியான் நரேந்த்ரன்.

"இத்தனை நாழி சைவலினி தன் ஜபங்களை முடித்துக்கொண் டிருப்பாள். அவள் வருவதற்குமுன் நான் உன்னிடம் சொல்லவேண்டிய விஷயம் இன்னொன்றுண்டு. வீரநகரத்தில் நாம் கடைசிமுறை ஸந்தித்தோமே, அது உனக்கு ஞாபகமிருக்கிறதா?"

நரேந்த்ரன் ஞாபகப்படுத்திக்கொண்டான்.

"அந்தப் பனிகாலம், ஸூர்யோதய ஸமயம், குளிர்காற்று, பனிமூடிய தடாகம், வ்ருக்ஷங்களால் சூழப்பட்ட காட்டுக்கோவில்—எல்லாம் ஞாபகமிருக்கிறதா?"

அவனுக்கு நன்றாய் நினைவிருந்தது.

"நாம் வைத்து வளர்த்த மாதவீலதை, அதனில் புஷ்பித்த நறுமண மலர்கள்?"

நரேந்த்ரனுக்கு எல்லாம் ஞாபகத்துக்கு வந்துவிட்டது.

"அப்படியானால் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் உன் ஞாபகார்த்தமாய் நீ எனக்களித்த இந்த அடையாளம் கவனமிருக்கிறதா?" என்று ஹேமலதை தன் மெல்லிய கரங்களை நீட்டினாள். அவளை விட்டு வருவதற்கு முன், அவள் கரத்தில் தான் கட்டிய மாதவீகங்கணத்தை நரேந்த்ரன் கண்ணுற்றான். அது இப்போது உலர்ந்து ஒடிந்து துண்டுதுண்டாய்ப் போய்க்கிடந்தது அத்துண்டுகளையெல்லாம் ஒன்று சேர்த்து நூல்கொண்டு தைத்து வைத்திருந்தது. இன்றிரவு ஆலயத்துக்குப் புறப்படுமுன் ஹேமலதை அக்கங்கணத்தை யெடுத்துத் தன் கையில் தரித்து வந்தனள்.

"நரேந்த்ரா! இது நீ அளித்த பரிசு. இந்தக் கங்கண விஸர்ஜனம் செய்வதற்கும் நீயே உரியவன்" என்னும்போது ஹேமலதையின் குரல் நடுக்கமுற்றது.

"இக்கங்கணம் என் ஞாபகார்த்தமாய் உனக்குக் கொடுக்கப்பட்டது. ஹேமலதே, ஏன் அதை அவிழ்க்கச் சொல்கிறாய்? என்னை நீ மறந்துவிட்டனையோ?" என்று ஏக்கத்துடன் கேட்டான் நரேந்த்ரன்.

"ஸஹோதரா, இந்த ப்ராணன் இருக்கு மட்டும் உன்னை மறப்பது அஸாத்யமான கார்யம். இருந்தாலும் இந்த அடையாளத்தைக் கண்ணுறும்போதெல்லாம் என் மனம் ஸமாதான மற்றுப்போகிறது. இது என் கையிலிருக்குமட்டும் என் மனம் ஒருபோதும் சாந்தநிலையடையாது. பல தடவைகளில் வீட்டு வேலைகள் பார்த்துக்கொண் டிருக்கும்போது இதனால் என் கண்களில் நீர் ததும்பலாயிற்று. நரேந்த்ரா! கழற்றிவிடு. இனி நான் அதைத் தரித்திருக்க லாகாது. நான் என் நாதரின் தர்ம பத்னி."

ஒருவரும் பேசவில்லை. ஆனால் இருவரும் விஷயத்தை அறிந்துகொண்டனர். நரேந்த்ரன் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. அவன் பெருமூச்செறிந்தான். மெதுவாய் அம்மாதவீகங்கணத்தை அவிழ்த்து யமுனா நதிக்கு அர்ப்பணஞ் செய்யும்போது நரேந்த்ரனுடைய கண்களிலிருந்து ஜலம் ப்ரவஹிக்கலாயிற்று.

யமுனாநதியில் விழுந்து அலைகளால் தள்ளிக்கொண்டு போகப்பட்ட அம் மாதவீகங்கணம் கண்ணுக்கு மறையுமட்டும் ஹேமலதையும் நரேந்த்ரனும் கரையில் நின்றுகொண்டு அதைக் கண்கொட்டாமல் பார்த்தவண்ணமாயிருந்தனர்.

(மாதவீகங்கணம் முற்றுப்பெற்றது.)

# தேகப் பயிற்சியினு லுண்டாகும் பயன்

## BENEFITS OF PHYSICAL EXERCISE

மானிடதேகம் முயற்சிக்கென்று செய்யப்பட்டிருக்கிறது. முயற்சி யில்லாவிடில் சரீர சுகம் நிலையாது. தொழிலற்று அசைவற்றுச் சும்மா கிடக்கும் கெடிபாரம் முதலிய இயந்திரங்கள் சீக்கிரத்தில் துருப்பிடித்துப் பழுதாய்ப் போய்விடுகிறதுபோலவே, மானிடதேகமும் போதுமான அளவு சரீரப் பயிற்சியற்றிருக்குமானால், அது வரவரப் பலவித தே



ளாறுகளுக்குட்பட்டு நானாவகை வியாதிகளையடையும்.

காடு மலைகளில் அலைந்து திரிந்து வேட்டையாடி ஜீவனம் பண்ணுகிற வேட்டைக்காரனானவன் உறுதியான சரீரத்தையுடையவனையும் பூரண சுகமுள்ளவனையு மிருப்பான். ஓயாமல் காற்றிலும் புசலிலும் அடிபட்டு, இரவும் பகலும் கப்பல்களில் உழைத்து ஜீவனஞ்செய்கிற மாலுமியானவன் சுகமும் திட்சரீரமுமுள்ளவனு யிருப்பான். நிலத்தை உழுது பயிரிட்டு, நெற்றியின் வெயர்வை வடியுந்தக்கதாய் உழைத்து ஜீவனம் பண்ணுகிற விவசாயத் தொழிற்காரன் பூரணதேக சுகத்தையும் அதன் எண்ணிறந்த இன்பங்களையும் அநுபவிப்பான். ஆனால் படிப்பு எழுத்து முதலிய மனோமுயற்சிகளையே செய்துவருகிறவனுடைய வேலையானது சரீர சுகத்தில் மிகவும் பிரதிகூலமுள்ளது. படிப்பு முதலியவற்றிலேயே காலஞ் செலவழித்துவருகிற மாணுக்கருடைய தொழிலைப்போல், சரீர சுகத்திற்கு இடியூறுகளை உண்டுபண்ணத்தக்க தொழில் வேறொன்று மில்லை. ஆகையால் மாணுக்கர் ஏற்றவிதமாய்த் தேகசுகத்தைப் பேணிக்கொள்ளாவிட்டால், அவர்கள் வெகு சீக்கிரத்தில் தங்கள் சுகத்தை இழந்துவிடுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

நல்ல தேகமுயற்சியினால் புத்திக்கு ஆதாரமான மூளையானது பலத்தையும் சுகத்தையுமடையும்; மனஸ்தத்துவங்கள் பலப்பட்டுக் கூர்மையுள்ளவைகளாகும்; கடினமான மனமுயற்சிகளைச் செய்கிறவர்கள் தங்கள் முயற்சிகளில் சித்திபெறவேண்டுமென்றால், அவர்கள் நாடோறும் ஒழுங்காய்ப் போதுமான தேகமுயற்சிகளைச் செய்து வரவேண்டும். புத்தி கூர்மையும் திறமையுமுள்ள அநேக வாலிபர்கள் தங்கள் தேகத்தைப்பற்றிக் கவலைப்படாமல், தங்கள் படிப்பு முயற்சிகளையே வெகு வைராக்கியத்துடன் நடத்தி வந்ததனால், அவர்கள் கொஞ்ச காலத்திற்குள் பலவித பலவீனங்களை யடைந்து, படிப்பில் தாங்கள் ஆசித்திருந்த சித்தியைப் பெறாமல் பலவகை வியாதிகளுக்குள்ளாகிச் சிலர் அகால மரணத்தையும் அடைந்திருக்கிறார்கள். இவர்கள் ஏற்ற காலத்திலேயே தேகசுகத்திற்கு அநுகூலமான சரீர முயற்சி முதலிய நல்ல யத்னங்களைக் கையாடியிருந்தால் சுகத்தையும் ஜீவனையும் வெகுகாலம் அநுபவித்துக்கொண்டு, கல்வியிலும் வல்லவர்களாகிப் பெரும் பயன்களை அடைந்திருப்பரென்பதற்குச் சந்தேகமில்லை.

வியாபாரம், எழுத்து, கணக்கு முதலிய வேலைகளைச்செய்கிறவர்கள், போதுமான அளவு தேகப்பயிற்சி செய்யாமல், நாடோறும் வெகு நேரமாகத் தங்கள் அறைகளுக்குள்ளிருந்து வேலை பார்த்துக்கொண்டு வருகிறபடியால், அச்சமயங்களில் அவர்களுடைய சுவாச இயந்திரத் தொழில் சரியாய் நடக்காமல், அவர்கள் நியாயமாய்ச் சுவாசிக்கவேண்டிய ஆகாய அளவில் பாதியையாகிலும் அவர்கள் சுவாசிக்க இடமிராது.

இதனால் அவர்கள் தேகத்தினின்று வெளிபே நீங்கவேண்டிய கரியமிலவாயு என்னும் விஷவாயுவுக்குத் தடைகள் நேரிடும். அதனால் அவர்களுடைய இரத்தம் விஷமாக்கப்படுவதுந்தவிர, தேகமெங்கும் நடக்கவேண்டிய இரத்தவோட்டம் தளர்ந்துபோம். ஆகையால் அவர்களுடைய நாடியோட்டம் தாமதமும் பலவீனமுமுள்ளதாகும். அவர்களுடைய கை கால் முதலிய உறுப்புகள் குளிர்ந்தும், உணர்ச்சி குறைந்தும் போயிருக்கும். இக்காரணங்களினிமித்தந்தான் மேலே காட்டிய தொழில்களையுடையவர்கள் சாயந்திரங்களில் தங்கள் வேலைகளை விட்டெழுந்திருக்கும்போது, சகிக்கக்கூடாத பலவீனம், ஆயாசம், மனச்சோர்வு, வெறுப்பு முதலியவற்றை அடைகிறார்கள். அப்பால் அவர்கள் தங்கள் வீடுகளுக்குப் போனபின்பு, தங்கள் பலவீனத்தையும் ஆயாசத்தையும் நீக்குவதற்கு நல்ல போஜனஞ் செய்வது அவசியமென்று அவர்கள் உணர்ந்தாலும், அப்படிச் செய்வதற்கு அவர்களுக்கு நல்ல பசியிராது. மேலும் அவர்கள் சாப்பிடுகிற போஜனமும் நன்றாய் ஜீரணமாகாது. ஆகையால் இவர்கள் விவேகமாய் நடப்பார்களாகில், மேற்சொல்லிய தீமைகளெல்லாவற்றையும் அவர்கள் வெகு லகுவாய் நீக்கிக் கொள்ளலாம். எப்படியெனில், அவர்கள் தங்கள் மனமுயற்சியுள்ள வேலைகளைச் சாயந்தரம்வரைக்கும் ஓரேமட்டமாய்ச் செய்யாமல், மத்தியில் சற்றுநேரம் வெளியே போய், கூடுமானால் சுத்தமான ஆகாயமுள்ள இடங்களில் கொஞ்சம் நடந்து திரிந்துவிட்டு,

மீளவும் தங்கள் வேலைகளில் பிரவேசிக்கலாம். அப்பால் அவர்கள் சாயந்தரத்தில் வேலைகளை முடித்தபின்பு, சுத்த ஆகாயமுள்ள இடங்களுக்குப் போய், போதுமானமட்டும் உலாவுதல் முதலிய தேகமுயற்சிகளைச் செய்துவிட்டு வீடுகளுக்குத் திரும்பினால் முன் அவர்களுக்கிருந்த சோர்வு ஆயாசம் பலவீனம் முதலிய யாவும் மாயமாய்ப் பறந்துவிடும். சற்றுநேரத்திற்குமுன் சகிக்கக்கூடாத பாரமாகவும் கசப்பாகவும் தோன்றின ஜீவனானது, சுத்த ஆகாயத்தினாலும், தேகமுயற்சியினாலும் இன்பமுள்ளதாக மாறிவிட ஆச்சரியப்படத்தக்க வண்ணமாய் அவர்களுக்கு உற்சாகமும் சந்தோஷமு முண்டாகும். மேலும் அவர்களுக்கு நல்ல பசியும், போஜனத்தை ஜீரணிக்கத்தக்க சக்தியும் நல்ல நித்திரையு முண்டாகும்.

## கந்தபுராணக் குறிப்புகள்

### GLEANINGS FROM KANDAPURANA

[260-ம் பக்கத் தொடர்ச்சி.]

#### சிவபிரான் திருநாமங்கள்

47. கண்ணுதலுடைய தோர் கடவுள்
48. கண்ணுதலாயகனார்
49. கண்ணுதல் விமலன்
50. கண்ணுதற் சிற்பரன்
51 கண்ணுதற் றூயன்
52. கண்ணுதற் பகவன்
53. கண்ணுதற் பரன்
54. கண்ணுதற் புனிதன்
55. கயற்புரை கண்ணுமை கணவன்
56. கரந்தை சூடுவான்
57. கலை குலாம் பிறைமுடிக் கடவுள்
58. கழியுடல் புயமேற்கொண்ட கண்ணுதல்
59. கறுத்திடு மிடறுடைக் கடவுள்
60. கறை மிடற்றுடை மூர்த்தி
61. கறை மிடற்றான்
62. கறைமிடற் றெம்பிரான்
63. கறைமிடற்றுக் கண்ணுதலோன்
64. கற்றைவார் சடையான்
65. காண்டகு நுதல்விழிக் கடவுள்
66 காரார் களத்தோன்
67. காருளார் கண்டத் தெந்தை
68. காருறழ் கந்தரக் கடவுள்
69. கார்க் கண்டத்துக் கண்ணுதலையன்
70. கார் தருகண்டத் தெந்தை
71 கார்த் திலங்குறு கந்தர முக்கண் மூர்த்தி
72. கார் கொரு மிடற்றவன்
73. காவியம்மலர் கடுத்த கந்தரத் தேவு
74. குழந்தை வெண்பிறை மிலைச்சினோன்
75. குழவித் திங்கட் கற்றைவார் சடைக் கடவுள்
76. கூற்றின் கூற்றுவன்
77. கூற்றுயி ருண்டதாட் குழகன்
78. கூற்றுவற் கடந்த மேலோன்
79. கூற்றை வென்ற முதல்வன் [வன்
80. கூனலம் பிறைதவழ் குடுமிச்செஞ்சடை வான
81. ஞானப் பொடி புனையு நாதன்
82. சங்கரன்
83, சடிலமேன் மதியங்குறை வைத்திடு மாதி
84. சிந்துவான்மதி தோய் வேணிச் செல்வன்
85. சிவபெருமான்
86. சூலி
87. சேங்க ணேறுடைச் செல்வன்
88. செஞ்சடிலத் தனிக் கடவுள்
89. செஞ் சடை யெம் பெருமான்
90, செந்தழ லுருவத் தண்ணல்
91. செந்தீ வண்ணத் தமலன்
92. செம்புலி யதளினான்
93. சென்னி மேலாற்றினை வைத்திடு மமலன்
94. தண்டத்தினை யகக் கடந்த தனி யாற்றல்
95. தண் டேனிதழியான் [கொண்முற்றவன்
96. தண்ணிலா வேணியான்
97. திங்கள் புனைந்தான் [அண்ணல்
98 திங்களு மரவுங் கங்கை யாறொடு முடித்த
99. தில்லைத் திருநடஞ் செய் தேவு.
100. தீபுண்டாகுங் கண்ணுதல் கொண்ட சிவன்
101. துப்புறழ்சடையினான்
102. தூமதிச் சென்னியான்
103. தூமதி வேணி யண்ணல்
104 தேனிவ ரிதழியந்தேவன்
105. தையல் பாகயன்
106. தோற்றுவித்துலகெலாந் தொலைக்கு மெம்பி
107. நஞ்சணி மிடற்றினன் [ரான்
108. நன்சிறை எகினம் ஞான நாடுவான்
109. நன் னான் மதி மிலைச்சு நாயகன்
110. நாட்டம் ஒரு மூன்றுடை நாயகன்
111. நாட்ட மூன்றுடை நாதன்
112. நான் முகத்தவனு மாலுந் தேடரும் பரன்
113. நீண்ட செஞ் சடையெம் மையன்
114. நீ ருடை முடியினான்
115 நீல கண்டன்
116. நீலங் கண்டமதடைத்த தேவு
117. நீறேற்றிடு மொய்ம்பன்
118. நெடு நஞ் சேறு கண்டன்
119. நெடு மாலுணரான்
120. நெற்றியங் கண்ணுடை நிமலன்
121. நெற்றியங் கணிமலன்



## சிறுவர்களுக்கான பக்கங்கள்

### CHILDREN'S PAGES

#### முழுமுடன்

இடையன்பட்டி யென்னு மூரில் இடையர் இருவரிருந்தனர்; அவ்விருவரும் ஸகோதரர்கள். அவர்களில் பெரியவன் லக்ஷ்மீகடாக்ஷத்தினால் மிகுந்த பணம் ஸம்பாதித்தான். பிறப்பினால் இடையனானபோதிலும், அவ்வூரில் அவனே பெரும் பணக்காரன். அவனுடைய மந்தையை மேய்க்க இருபது இடைப்பையன்கள் வேண்டியிருந்தது. அவனிடமிருந்த ஆடுகள், எருமைகள், பசுக்கள் முதலிய எல்லாவற்றையும் ஒரே நாளில் விற்றால் 50 ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கும். இதற்கெல்லாம் காரணம் மூத்தவன் உழைப்பாளியாய் இருந்து தன் காரியங்களைக் கவனித்து வந்ததே.

இளையவன் முழுச் சோம்பேறி. சிறுவனாயிருக்கும்போது செல்வப்பிள்ளையாகவே வளர்ந்து வந்துவிட்டான். தகப்பனார் இறந்ததும், தன் தமையனிடமே சாப்பிட்டுக்கொண்டு உறங்கிக் காலம் கழித்தான். கொஞ்ச காலத்தில் கலியாணமு மாயிற்று. அவன் மனைவி, தன் மைத்துனனிடத்தில் இருக்கப் பிடிக்கவில்லை யென்றும், தனிக் குடித்தனம் போகவேண்டு மென்றும், தன் கணவனைத் தூண்டினாள். தம்பியின் குணத்தை அறிந்த தமையன் மிகுந்த வருத்தத்துடன் பிதிரார்ஜித சொத்துக்களைப் பாகஞ்செய்து, புது வீடு ஒன்று கட்டுவித்து, அதில் தம்பியைக் குடியிருக்க அனுப்பினான். தம்பி சிலநாள் ஸுகமாகவிருந்தபோதிலும், அவனுடைய அஜாக்ரதையினால் மந்தையிலுள்ள மாடுகள் பலவித நோய்களால் மாண்டுபோயின. கடைசியில் வீடுமாத்ரம் நின்றது. என்னசெய்வதென்று பெண்டாட்டியிடம் யோசித்தான். "உமது அண்ணனுக்கு அதிர்ஷ்டம் வந்திருக்கிறதென்று எல்லோரும் சொல்கிறார்களே. அதனால்தான் இவ்வளவு ஸௌகர்யம் அவருக்கு. உம் அதிர்ஷ்டம் உம்மிடம் வந்தால், நமக்கென்ன குறை?" என்றாள் அவள்.

இதைக் கேட்டதும், தம்பிக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. தன் தமையனைக் காண்பவர்கள் எல்லோரும், "அவன் அதிர்ஷ்டம், அவனை அவ்வளவு பணக்காரனாக்கிற்று. அதிர்ஷ்டம் அவனிடம் இருக்கும் வரையில் அவனுக்குக் குறையென்ன?" என்று சொல்வதைக் கேட்டிருக்கிறான். கஷ்டப்படுபவர்கள் எல்லாரும் "எனக்கு அதிர்ஷ்டமில்லை, எப்பொழுது வருமோ?" என்று சொல்வதையுங் கேட்டிருக்கிறான். "ஸரி, நாம் நம் அதிர்ஷ்டத்தைத் தேடிப் பிடித்துக் கொண்டுவர வேண்டியதுதான். அதுவே வராவிட்டால், நாமாவது அதைக் கட்டாயக் கட்டிப் பிடித்துக்கொண்டு வரவேண்டும்" என்று தீர்மானித்து விட்டான். தன் மனைவியிடம் செலவு பெற்றுக்கொண்டு தன் அதிர்ஷ்டத்தைக் கட்டிப்பிடித்துவர அவன் புறப்பட்டான்.

ஊரைவிட்டு வெளியே போகும்போது தன் தமையனுடைய பசுக்கள் மேய்ந்து கொண்டிருப்பதைக் காணவே, அவற்றின் அருகே போனான். அந்த மந்தையைக் காத்துக்கொண்டிருந்தவனுடைய முகம், தம்பிக்குப் புதிதாகத் தோன்றியது. "இவன் யாரோ தமையனுடைய பசுக்களைத் திருட வந்திருக்கிறானோ என்னவோ" என்று நினைத்து 'யாரப்பா நீ?' என்று கேட்க, 'நான்தான் உன் தமையன் அதிர்ஷ்டம்' என்ற பதில் கிடைத்தது. 'ஓஹோ' இவன் நம்மண்ணாவின் அதிர்ஷ்டமானால், நம் அதிர்ஷ்டம் இவன் தம்பியா யிருக்கவேண்டும். இவனைக்கேட்டால் நமக்குக் கஷ்டமில்லாமல், நம் அதிர்ஷ்டத்தைப் பிடித்துக்கொண்டு வந்துவிடலாம்" என்று அவனுக்குத் தோன்றிற்று.

"என் அதிர்ஷ்டம் எங்கே—உன் தம்பி அல்லவா அவன்?" என்று கேட்டான் இளையவன்.

"என் தம்பி சோம்பேறி, தூங்கிக் கொண்டிருக்கிறான். அதோ தெரிகிறதே, அந்த மலையின் உச்சியில் ஓர் குகையிருக்கிறதே அங்கே தூங்குகிறான்" என்று மூத்தவனின் அதிருஷ்டதேவதை கூறிற்று.

"ஸரி, நான் போய்வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போகும் வழியில், ஒரு காடு. இடையனானதால் இளையவன் தைர்யமாய் உள்ளே நுழைந்தான். அங்கு இருட்டாயிருந்தது. போகும் வழியில் உறுமிக்கொண்டு கிழப்புலி ஒன்று எதிர் வந்து நின்றது. இ...

யன் கொஞ்சமும் பயப்படவில்லை. புலியும் கிழமானதால் வலி குறைந்து, பட்டினியாய்க் கிடந்தது. இடையன் அதட்டினதைப் பார்த்து அது பயந்து போயிற்று.

'என் ராஜ்யத்தில் உத்தரவில்லாமல் உன்னை யார் வரச்சொன்னது?' என்று புலிராஜன் கேட்டது.

'என்னதிர்ஷ்டத்தைத் தேடிக்கொண்டு போகிறேன். எனக்கென்ன பயம்? யார் ராஜ்யம் ஆனால் எனக்கென்ன?' என்றான் இடையன்.

"ஏதடா! இது? அதிர்ஷ்ட தேவதையைத் தேடுகிறானும் இவன், நம் அதிர்ஷ்டம் என்னவோ தெரியவில்லையே!" என்று புலி நினைத்து, 'அடே, மனுஷா, நான் ஆஹாரத்திற்கென்ன செய்வதென்று உன்னதிர்ஷ்டத்தைக் கேட்டு வருவாயானால், உன்னைக் கொல்லாது விடுவேன்" என்று புலி சொல்ல, ஸரியென்றவன் ஒப்பிக் காட்டைக் கடக்கலானான்.

போகுமிடமெல்லாம் இடையன் தன் கதையைச் சொல்லிக்கொண்டே போவான். சிலர் இவனைக் கேலி செய்தார்கள். என்றாலும், இடையன் அவற்றைக் கொஞ்சங்கூட கவனிக்கவில்லை. வழியில் ஒரு நகரத்திற்குள் நுழைய வேண்டியிருந்தது. அந்த ஊரை ஓர் அரசகுமாரி ஆண்டுவந்தனள். அவள் ஆணுடைதரித்து அரசாண்டபோதிலும் அவ்வூர் ஜனங்கள் அவளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவில்லை. 'ஓர் பெண்பிள்ளைக்கு நாம் அடங்குவதா?' என்பது அவர்கள் எண்ணம். இது அரசகுமாரிக்குத் தெரியாது. எல்லாரும் தன்னை ஆணென்று நினைக்கிறார்களென்றே அவளுக் கெண்ணம். அரசகுமாரி, அதிர்ஷ்டத்தைத் தேடிக்கொண்டவ்வூர்வழியே போகும் இடையன் ஸமாசாரமறிந்து, அவனைத் தன்முன் அழைத்து வரச்செய்து, அவன் வந்ததும் "என் பிரஜைகள் ஏன் எனக்கு அடங்கி நடப்பதில்லை என்பதைக் கேட்டுவா" என்று சொல்ல இடையன் அதற்கு ஸம்மதித்தான்.

அங்கிருந்து அவன் புறப்பட்டுச் சிலநாட்களாயிற்று. இடையே அவன் ஓர் கிராமத்தில் தங்கினான். அவ்வூரில் ஓர் பெரிய தோட்டம். அந்தத் தோட்டத்துச் சொந்தக்காரன் இந்த இடையன் விஷயத்தை அறிந்ததும், அவனிடம் சென்று, "ஐயா! நீர் உம்மதிர்ஷ்ட தேவதையைக் காணும்போது என்னை மறக்காதிரும். ஏனென்றால் எனக்கோ அகண்ட தோட்டமிருக்கிறது. பல கிணறுகளும் வெட்டியிருக்கிறேன். ஆனால் நான் என்ன கஷ்டப்பட்டும் ஒரு பூவாவது புஷ்பிப்பதில்லை; காயென்ற பேச்சும் கிடையாது. இதற்குக் காரணம் இன்னதென்று நீர் கேட்டுவர வேண்டும். அப்படிச் செய்வீரானால் என்னாலான உதவி உங்களுக்குச் செய்கிறேன்" என்றான்.

இதைக்கேட்ட இடையன் "ஆஹா ஸரி" யென்று தலையசைத்துக்கொண்டு வழிநடக்கலானான்.

சில நாட்களானபின், மிகக் கஷ்டப்பட்டு மலையினுச்சியை யடைந்து, அங்கு தென்பட்ட குகையை யடைந்தான். அங்கு உள்ளே நுழைய கும்பகர்ணனைப்போலக் குறட்டைவிட்டுத் தூங்கும் ஒருவனைக் கண்டான். தூங்குவதாகக் கேள்விப்பட்ட தன் அதிர்ஷ்ட தேவதை இதுதான் என்று நினைத்துக் கொண்டு, தட்டியெழுப்ப முயன்றான். இவன் தட்டியெழுப்ப யெழுப்ப, குறட்டை விடுவது தான் அதிகமாயிற்று. கடைசியாய்த் தூக்கத்திலேயே "யாரடா இது, என்னை எழுப்புவது?" என்று கேட்க "உன்னைத் தேடி. இவ்வளவு தூரம் வந்தேனே. என் அதிர்ஷ்டம் நீதானே?" என்று கேட்டான் இடையன்.

"ஆமாம். ஆனால் நான் இன்னம் எத்தனையோ நாள் தூங்கவேண்டுமே. இப்போதே என்ன அவசரம்?" என்று சொல்லிக்கொண்டே தூங்கிவிழ ஆரம்பித்தான். "ஏதடா இவ்வளவு கஷ்டப்பட்டும் நம் காரியம் வீணாய்ப் போகும்போலிருக்கிறதே' என்று நினைத்து "ஐயா! ஸ்வாமி! அதிர்ஷ்டதேவதையே! உம்மைக்கண்டு, நமது குறைகளைப் பற்றிக் கேட்டுப் பதில் சொல்லும்படி பலபேர்கள் சொல்லியிருக்கிறார்களே! அவர்களுக்குப் பதில் சொல்லவேண்டாமா?" என்று மீண்டும் உரத்துக் கேட்டான்.

இடையனுடைய (தூர்) அதிர்ஷ்டம் தூக்கத்திலேயே "சொல்லிக்கொண்டே வா! நான் பதில் சொல்லுகிறேன்" என்றது.

இடையன் முதல் முதலில் தோட்டக்காரனுடைய குறையைச் சொன்னான். "அடே



அந்தத் தோட்டத்தில் ஸ்ரீ ராமர் காலத்துக் காசுகள் நிறைந்த பானைகள் நான்கு புதைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை வெகு காலமாகத் தோண்டி எடுப்பார் இல்லாமையால் அந்தப் பணத்தைப் பூதம் காக்கின்றது. பணம் அவ்விடத்தை விட்டுப்போகும் வரைக்கும் அந்தத் தோட்டத்தில் பலனை கிடைக்காது. உடனே தோண்டி, பணப் பானைகளை எடுத்தால் தோட்டம் பலன் தரும்" என்று தூங்கி வழிந்து அத்தேவதை பதில் கூறியது. அரசகுமாரியின் குறையைத் தெரிவித்ததும், 'நீ ஒரு பெண்பிள்ளையென்று எல்லோருக்கும் தெரியும். அதனால்தான் உன் ஜனங்கள் உனக்குக் கீழ்ப்படிவதில்லையென்று சொல்' என்றது அவ்விடையனுடைய இஷ்டதேவதை.

மூன்றாவது, கிழப் புலிராஜனுடைய கதையைச் சொன்னான். "முழுமடையனை நீ மனதாறத் தின்ன வேண்டுமென்று ப்ரஹ்மா எழுதியிருக்கிறார்" என்று சொல். எனக்குத் தூக்கம் அடக்கமுடியவில்லை என்று சொல்லும்போதே அத்தெய்வம் குறட்டைவிட ஆரம்பித்தது. இடையனுக்கும் தான் வந்தது எதற்கென்பது மறந்துபோயிற்று. தான் கேட்ட கேள்விகளுக்குப் பதில்கிடைத்ததும் உடனே திரும்பிவிட்டான். தன்னதிர்ஷ்டத்தை (தேவதையை) நேரே கண்டுவிட்டதால் என்ன கேட்பதென்று அவனுக்கே தெரியவில்லை போலும்!

மலையிலிருந்து கீழே இறங்கி வந்ததும், அவ்விடையன் முதன்முதல் தோட்டக்காரனைக் கண்டான். அவன் ஆவலுடன் ஓடோடியும் வந்து "என் கதி என்னவென்று சொல்லிற்று தெய்வம்?" என்று கேட்டான். இடையன் தான் அறிந்த பதிலைத் தெரிவித்தான். இதைக் கேட்ட தோட்டக்காரன் "தம்பீ! நீயும் என்னோடேயே நின்றுவிடு. மற்றவர்கள் ஒருவருக்கும் நம் ரகஸ்யம் தெரியவேண்டாம். புதையலில் பாதி உனக்குக் கொடுத்துவிடுகிறேன்" என்றான். "போ! போ! என் அதிர்ஷ்டத்தை நான் நேரே கண்டபிறகு எனக் கென்ன குறைவு? நான் இனி உன்னிடம் நிற்பேனா!" என்று சொல்லிவிட்டுத் தோட்டக்காரனுடைய வேண்டுகோளுக் கிரங்காமலே அவன் போய்விட்டான்.

சிலநாட்களுக்கெல்லாம் அரசகுமாரியிருக்கும் நகரை அடைய, அவளும் அதே கேள்வி கேட்டாள். இவனும் தன்னதிர்ஷ்ட தேவதை கூறியதைக் கூற, அவள் "ஸரி, அப்படியானால் நீ என்னைக் கல்யாணம் செய்துகொள். நாமிருவரும் சேர்ந்து அரசாளலாம்" என்று வற்புறுத்தினாள். "போ! போ! உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளவா! ஊரில் ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு படும் பாடு போதாதா! உன்னோடு பேசினேனென்று அவள் காதில் பட்டாற்போதும்! நம் பாடு மட்டையடியாகும்! போதும்! போதும்! அந்தப் பேச்சு வேண்டாம்" என்று சொல்லிவிட்டு, அவள் என்ன வேண்டியும் நிற்காமல் போய்விட்டான்.

கடைசியாகத் தன்னூரண்டை வரும்போது காட்டைக் கடக்கவேண்டி வந்தது. மத்யானம் 12 மணியிருக்கும். உள்ளே நடுக்காட்டில் நுழைந்ததும், கிழப்புலி ஓடிவந்தது. தன்னெதிர் வந்தது யார் என்று அறிந்ததும், தன் பசியை அடக்கி, போய்வந்த ஸமாசாரமென்னவென்று அது கேட்டது. இடையனும், 'இந்தப் புலியாவது நம்மை இரு என்று சொல்லாமல் அக்கறையுடன் தன் கதையைக் கேட்கிறதே' என்று ஸந்தோஷப்பட்டு ஒன்றும் விடாமல் சொன்னான். தனக்கு என்ன கதியென்று அந்தப்புலி கேட்க "முழுமடையனை நீ மனதாறத் தின்ன வேண்டுமென்று சொல்லிற்று என் அதிர்ஷ்டதேவதை" யென்றான், இடையன்.

"ஆஹா, இருந்தாலும் மனிதர்கள் உன்னைப் போலல்லவா இருக்கவேண்டும்? என்ன பொறுமை! என்ன சாந்தம்!" என்று சொல்லிக்கொண்டே, 'அடே மனுஷா, லக்னம் என்னவென்று தெரியவில்லை. ஆகாயத்தில் உச்சத்தில் என்ன நட்சத்திரம் இருக்கிறது பார்' என்றது கிழப்புலி பகல் பன்னிரண்டு மணிக்கு. நக்ஷத்ரம் என்னவென்று பார்க்கத் (தூர்) அதிர்ஷ்டத்தை நேரே கண்ட இடையனும் தலை நிமிர்ந்தான். ஐயோ பாவம்! "உன்னைவிட முழுமடையனை நான் இதுவரையில் பார்த்ததில்லை" என்று கூறி, அப்புலி அவன் மீது பாய்ந்து கொன்று தன் பசிப்பிணியைத் தணித்தது.

சோம்பற்குணம் தீமை பயக்கும்; அதிலும்

தன் விஷயத்தைக் கவனியாது பிறாது விஷயத்தையே கவனித்தல் தன்னழிவிற்கு ஹேதுவாகும், என்பவற்றை இக்கதையி லிருந்து உய்த்துணரலாம்.*

* தோட்டத்திலிருந்து பொக்கிஷத்தை எடுக்க வேண்டுமென்ற அதிர்ஷ்டதேவதை கூறியதின் பொருள் சிலருக்கு விளங்காமலிருக்கலாம். தோட்டத்திற்குப் புல் விளையும்படி நீர்பாய்ச்சுவதிலும், நன்றாய்க் கொத்தி, புல் முதலிய பூண்டுகளைப் பிடுங்கி, நீர்பாய்ச்சுதலே நல்லதென்பது இதன் அர்த்தமாகும்.

# ஸ்த்ரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி:—16 - விசாரம்

*தன்மக ளாவ தறியாத் தமோரும் [மலரக் பொன்வடி வின் மேலெழுதுபோய்வீழ்ந்தாள்—பொன் கோதிப்போய் மேதி குருகெழுப்பும் தன்பழனஞ்சூழ் சேதிக்கோன் தேவி திகைத்து.*

நளன் சூதாடி நாட்டையிழந்து நெடுநாளாயிற்று. ஆயினும், அவனைப்பற்றியாவது தமயந்தியைப் பற்றியாவது சிறிதும் ஸமாசாரம் தெரியாமல் வீமராஜன் வருந்தினன். தனது மகளை நினைத்துக் கொண்டால், அவனுக்குத் தூக்கமே வராது, நெடுமூச்சுவிட்டுக் கவலையில் ஆழ்வான். அவன் மனைவியின் நிலையை விரித்துச் சொல்லவும் வேண்டுமோ? பெற்றவளுக்கல்லவா பிள்ளை அருமை தெரியுமென்பது பழமொழியன்றோ? எனவே, அவ்விருவரும் தமது மகள் மருமகன் இவரது ஸமாசாரத்தை விசாரித்துச் சொல்பவர்க்கு அளவற்ற பொருள் கொடுப்பதாக வெளியிட்டு அந்தணர்களை வெளிநாடுகளி லெல்லாம் நளதமயந்தி இருவரையும் தேடும்படி அனுப்பியிருந்தனர். அவர்களும் பல திசைகளிலும் சென்று அவ்விருவரையுந் தேடினர். நாடு நகரம் வனம் வனாந்தரமுதலிய இடங்களிலெல்லாம் அலைந்தன ராயினும், அவரால் நளனைக்காண முடியவில்லை; தமயந்தியையுங் காணவில்லை. எனினும் அவர் விடாமுயற்சியுடன் தமது அரசரது வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

நிற்க, சேதிநகர்க்குத் தமயந்தி வந்து சில காலமாயிற்று. ஆயினும் அவள் நளனைப் பற்றி ஒன்றுமறியாதே கவலையி லாழ்ந்து கிடந்தாள். ஓர்நாள் அவ்வூர் அரசன் வீட்டில் புண்யஹாவாசனம் நடந்தது. அச்சமயம் தமயந்தி ஸுநந்தை (ஸ்ரீநந்தை) யோடு அவளுக்கு வேண்டிய காரியங்களையெல்லாம் செய்துவந்தாள். அப்போது தமயந்தியை முன்னமறிந்தவர் காணும் பக்ஷத்தில் அவளை அறிவது வெகு கஷ்டமாயிருக்கும் என்பது நாம் சொல்லவேண்டியதில்லை. அவளது ஒப்பற்ற மேனி பனிமூடிய ஊர்போலும், கருமேகத்தில் மறைந்த சூரியன் போலவும் உருமாறிக் கிடந்தது. அவளது விசால நேத்திரங்களின் காந்தி கவலையின் கொடுமையால் ஒடுங்கிக் கிடந்தது. மற்றவள் அங்கங்களெல்லாம் அளவும் திரட்சியுங்குன்றி இளைத்து வாடி வதங்கியிருந்தன. அவளது அழகைக் கவிந்து மூடிய மாசும் அவளிடம் ஓர் சோபையுற்றுத் தனக்கென்று மில்லா ஒரு பளபளப்பை யடைந்திருந்தது.

அச்சமயம் இருந்தாற்போலவிருந்து அவள் முன் தோன்றிய பிராஹ்மணர் ஒருவர், அவளைப் பன்முறையும் உற்றுப்பார்த்துச் சிந்திக்கச் சிந்திக்க அவர் கண்களில் நீர் தாரைதாரையாகத் தானே வடிய அசைவற்று நின்றார். இப்பிராஹ்மணர் சுதேவர் என்பவர். நளனையும் தமயந்தியையும் தேடித்தேடி யலைந்து, சேதிநகரை யடைந்து, அரசன் வீட்டில் புண்யஹாவாசனமெனக் கேள்விப்பட்டங்குவந்து, தமயந்தியின் வடிவத்தைக் கண்டதும், அவர் பலவித சிந்தைக் காளாகித் தமக்குள் தாமே பேசிக்கொள்வர்; எண்ணமிடுவர். தம், முன் தோன்றியது தமயந்தியாகத்தான் இருக்க வேண்டுமென ஒருநம்பிக்கை அவர்க்கு உண்டாகி விட்டது.

"இவளோ நான் முன்னங் கண்டிருந்த உத்தமி. உலகெலாம் ஒருங்கே பூஜிக்கத்தக்க இப்பெருமாட்டியைக் காணப்பெற்றது என்பாக்ய விசேஷந்தான். ஆஹா! அவளது முந்திய நிலை என்ன? இப்போதைய நிலை என்ன? இது கடவுளுக் கேற்குமா? அவளழகைக்கண்டு உவாமதியும் எதிர்வா அஞ்சுவன். அவளது காந்தி, மங்கி மங்கி யொருகால் அழியுமன்றோ? அழகு சுமந் திளைத்தா ளாயினும், தனது ரூபலாவண்யத்தால் சூரியனையுங் காலில் விழச்செய்யும் பேரழகினள் இவள். இவள்முன் ரதிதேவியும் வெட்கி வெளிவர நாணுவள். இவளது பரந்து வளர்ந்த வாளொத்த கண்கள் தாமரையிதழை யொக்கு மெனினும்; அதைப்போல எளிதில் வாட்டமுறாது; எல்லார்க்கும் எப்பொழுதும் கருணைபொழிந்து ஆநந்த மூட்டும்; பார்த்தார்க்குப் பாக்கியப் பெருக்கை யளித்துக் களிப்பூட்டும். தெய்வ சங்கல்பத்தை யார் கடக்க முடியும்? அதனா லல்லவா இவள், விதர்ப்பாபுரமென்னும்செந்தாமரைஓடையிலிருந்து பிடுங்கப்பட்ட அழுக்கும் சேறும்பாய்ந்த தாமரைக் கொடிக்கொப்பாகி, கிரஹணபீடையில் பட்ட சந்திரனை நிகர்த்து, தன் நாதனைக் காணாது தவித்துத் துயரத்தில் மூழ்கி, நீரற்ற நதிபோலும், மதியற்ற வானம்போலும், நிலையற்ற மரம்போலும், மணற்பட்ட மீன்போலும், நிலைகுலைந்து, தணல்பட்ட புழுவைப்போலும், பரிதாபமும் பேயுங் கண்டா லிரங்கும்படியான நிலைமையில் விளங்குகிறாள்? இவள் இளமை என்ன? இவள் அழகென்ன? இவள் குணமென்ன? இவளிருக்கவேண்டிய பதவி என்ன? ஹா! என்ன கொடுமை! இதுவும் காலத்தின் கோலம் போலும்! பொன்னாலும் மணியாலும் சமைக்கப்பட்ட மாளிகையிலிருந்து, ஸர்வஸுகங்களும் தவழ்ந்து, பரிசனங்கள் உபசரிக்க இருக்கவேண்டிய இவள், அவை முற்றுந் துறந்து, மூன்றாம் நாட் பிறை கருமேகத்துள் பாய்ந்து, தெரிந்தும் தெரியாமல் மயங்கிச் சிறு ரேகையாக விளங்குவதுபோல, ஒடுங்கி நடுங்கித் தோழிப்பெண்ணாய் உயிர்வைத்திருப்பதெல்லாம் தன் கணவனைக் காணவேண்டுமென்ற பேரவாவினா லன்றோ! உத்தம மங்கையர்க்கு மணவாளனன்றி மற்று நகையுமுண்டோ? எனவே, அவனைக் காணாதவ்யு மிவள், எந்த நகையை, யணிய விரும்புவள்? மனச்சார்தியற்றவளுக் கெப்படி அழகு நிலைக்கும்? இவளைக் காணாது அவ்வுத்தமராகிய நளமன்னவர் என்ன கஷ்டப் படுகிறாரோ? உயிரோடு இருக்கிறாரோ? அல்லது ஒருவேளை துக்கத்திற்கே யாளாகி நலிந்து விட்டனரோ?"

இவ்வாறு அந்தப் பிராஹ்மணர் எண்ணமிட்டுக் கண்ணீர் ஆறுகப் பெருக்கிச் சிந்தைநொந்து மேலும் "அந்தோ! இவளைப் பார்க்கும் போதே என்மனம் கஷ்டமடைகின்றது. அவளது கஷ்டங்களைக் கேட்டால் என் செய்யும்? சூரியனைக்கண்ட பனிபோல இவள் துயரம் எப்போதகலும்? இக்கஷ்டத்திலிருந்து அவள் எப்போது கரை யேறுவளோ? ஹா! நளமன்னவரே! உம்மை நினைக்கும்போதே என் மனம் நைகிறது. நீர் உமது உத்தம பத்நியைக் கண்டால் உமது நாடு உமக்கு வரும் என்பது திண்ணம்! ஒத்த நலனும் குணமும் ஒழுக்கமுங் கொண்ட உம்மிருவர்க்குந் தேறுதலுண்டாக்குவது தர்ம சம்மதமானது; செய்யத் தகுந்தது; செய்யாவிடில் பாவத்தைத் தருவதன்றோ? அஹோ! துயரென்ப தறியாது வளர்ந்து இப்போது கண்ணீர் உகுத்து, கவலைக் கடலில் ஆழ்ந்து வெளிவரமுடியாது தத்தளிக்கும் இவ் வுத்தமிக்குக் கைகொடுத் துதவி செய்து, இதோ! சாந்தப் படுத்துகிறேன்" என்று எண்ணிக்கொண்டே அவர் தமயந்தியுடன் பேசத் தைர்யங்கொண்டு அவளை நோக்கிப் பின்வருமாறு சொன்னார்:—

அம்மணீ! உம்மைப் பார்த்தால் எனக்குத் தமயந்தியின் ஞாபகம் வருகிறது. தாங்கள் தமயந்தியென்றே நம்புகிறேன். நான் ஸுதேவன் என்னும் பிராஹ்மணன்; உமது தமையனுர்க்கு உயிர்த் தோழன். உமது தந்தையின் உத்தரவுக்கிணங்கி உம்மைத் தேடிக்காண இங்கு வந்தேன். அவ்விடம் யாவரும் ஸௌக்யமே. உமது செல்வக் குழந்தைகளிரண்டும் சுகமே விளங்குகின்றன. உம்மைக் காணாது உமது உறவினர் எல்லோரும் உயிரற்றவர் போல இருக்கிறார்கள். உம்மைத் தேடக் கணக்கற்ற அந்தணர் எட்டுத் திசைகளிலும் அலைகின்றனர். நான் உம்மைக் காணும் பாக்கியம் பெற்றேனாயினும், உம்மைக் கண்டதும் என் நா பேசவும் எழும்பாது தத்தளிக்கிறேன்.

அதற்குமேல் ஸுதேவரால் பேச முடியவில்லை. அவர் தொண்டையுலர்ந்து விக்குவதன்றி, கண்களில் நில்லாது நீர் வழிந்தோடிக்கொண்டிருந்தது.

அவரைக்கண்ட தமயந்திக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. அவள் கண்களிலிருந்து குடங்குடமாக நீர் கொட்டிய தென்றால் மற்றுஞ் சொல்லவும் வேண்டுமோ?

மங்கை விழிநீர் மறையோன் கழல்கழுவ [கக்
அங்கவன்றன் கண்ணீர் அவளுடன்மேற்—பொங்
கடல்போலுங் காதலார் கையற்ருர் தங்கள்
உடல்போலு மொத்தா ருயிர்.

இவ்வாறு தமயந்தியும் ஸுதேவரும் ஒருவருடன் ஒருவர் பேசிக் கண்ணீர் விடுவதைக் கண்ட ஸுநந்தை நடந்தவற்றைச் சேதிபன் தாயிடம் போய்ச் சொன்னாள்; அவரிடமிருந்து அவள் யாராக விருக்கலாம் என்பதை யறியலா மென்றுந் தூண்டினாள். அவளும் அவ்வாறே பரபரப்புடன் வந்து ஸுதேவரைக்கண்டு தன்னிடம் வேலைக் கமர்ந்தவளது விருத்தாந்தத்தைச்சொல்லுமாறு கேட்டாள். அவரும் தமயந்தியின் விஷயங்களை விரிவாக உரைத்து, "அறைக்கினும் சந்தனம் தன் மணம் அறுதன்று? மாசு மூடி விளங்கியிருந்தாலும் இவ்வுத்தமி நீறு மூடிய நெருப்பு ஒப்பாள். பத்தரை மாத்துப் பொன்னென்றால் அதுவே நாணும். இவ்விளைத்த வடிவிலும் அவளது மேனி குன்றாது தெய்வீகத்துடன் விளங்குவதனால் மாத்ரமன்று அவளை யான் தமயந்தியென்று கண்டு கொண்டது; மற்று அவளது புருவங்களுக் கிடையே விளங்குஞ் சிறு மறுவினாலேயேதான். அது இப்போது அழுக்கில் சற்றே மங்கிவிளங்கினும், குழந்தைப் பருவத்திலிருந்து பார்த்திருந்த இக் கண்களுக்கு அது நன்கு புலப்பட்டது. இவளைக் கண்டதும் காணாமற்போன என் குழந்தையைக் கண்டாற்போல நான் களிப்படைகிறேன். மேலும் அவ்வுத்தமியின் ஒழுக்கத்தைக் காணக்காண யான் ஆநந்த ஸாகரத்தில் ஆழ்கிறேன்" எனக்கூறித் தமக்குந் தெரியாது கண்ணீர் விட்டுக் கசிந்துருகினர்.

ஸுதேவர் சொல்வதை வெகு ஆவலுடன் கேட்டுவந்த ஸுநந்தை தமயந்தியின் நெற்றிப் புருவங்களுக் கிடையிருந்த அழுக்கைச் செம்மையாகத் துடைக்க அங்கு மேகத்தைக் கிழித்துக்கொண்டு வெளிவரும் பிறைச் சந்திரன்போல அம்மறு வெளிப்பட்டது. அம்மறுவைக்கண்ட சேதிபன் தாய் துடிதுடித்து "ஆ! என்ன மோசம் போனேன்! அடி தமயந்தி! எவ்வாறு நீ என்னை ஏமாற்றினை! நீ என் தங்கை மகளன்றோ! குழந்தாய்! இவ்வீடு வேறு, உன் தந்தை வீடு வேறு, என்று எண்ணாதே. நான் உன்னைப் பிறந்தபொழுதன்றிப் பார்த்ததில்லை. இல்லாவிடில் முன்னமே அறிந்திருக்க மாட்டேனோ? என் செல்வமே! என்செல்வமுழுதும் எனக்கெப்படிச் சொந்தமோ அப்படியே உனக்கும். நீ வெகு உத்தமி. தெரியாமையால் என்ன தவறு நடந்திருந்தாலும் மனத்தில் வையாதே எனச் சொல்லிப் பன்முறையுந் தமயந்தியைத் தழுவி முத்தமிட்டுக் களிப்புற்று உடல் பரவசமானாள்.

தமயந்தியும் தன் பெரியதாயின் பேரன்பைக் கண்டு களித்து, "இன்னாளென என்னை அறியா நாளிலேயே எனக்கு வேண்டிய எல்லாச் சுகங்களும் ஏற்படுத்திக் காப்பாற்றிய உம்மிடம் அபசார மெப்படியிருக்க முடியும்? இன்ன மிங்கிருந்தால் முன்னிலு மதிகமாகச் சுகம் பெறுவேனென்பதற்குச் சந்தேகமில்லை. என்றாலும் என் மனம் என் குழந்தைகளைக் காணாமல் பதைக்கிறது. தந்தையைக் காணாது துக்கப்படும்அக்குழந்தைகள்என்னையுங் காணாதேன் ஏங்கவேண்டும்? எனக்கேதேனும் உதவிசெய்ய உமக்கு விருப்பமிருந்தால் என்னை என் தந்தையூராகிய விதர்ப்பத்திற் கனுப்பிக் கொடுங்கள். என் குழந்தைகள் அங்குதான் இருக்கின்றன" என்று வேண்டிவணங்கினாள். சேதிபன் தாயும் அதற்கிணங்கி, தன் மகன் அனுமதியுடன் தயயந்தியை ராஜ மரியாதையுடன் விதர்ப்பத்திற் கனுப்பிக் கொடுத்தாள். கன்றையும் பசுவையுங் கூட்டிவைப்பது குடிமுறையன்றோ?

---

## பஞ்சரத்தினம்

**(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)**

**மரகதவல்லி** என்னும் உயர்தர நாவலின் ஆசிரியரான ஸ்ரீமான் **ப. சி. கோவிந்தஸாமி ராஜா** அவர்கள் எழுதியது. மணாளனைத் தவிர மற்றெவரையும் மனத்திலும்நாடாத ருக்மணி, நமனிடமிருந்து நாயகன் உயிரை மீட்டுவந்த சாவித்திரி, காதகர் கையிற் சிக்கிக் கஷ்டப்பட்ட காலத்தும் கற்பைக் காத்துவந்த ஸீதை, தந்தை வீட்டில் எல்லாச் சம்பத்திருந்தும் காதலன் பிரிந்த துக்கத்தால் தரையே படுக்கையாகவும், கந்தையே ஆடையாகவும் மெலிந்து காலங்கழித்து வந்த தமயந்தி, கள்ளமென்பதை எள்ளளவும் உணராத தன்னைக் கூடிப்பிரிந்து ஆண்டுகளாயும் கணவன் வருமளவும் காத்திருப்பதே கடனெனக் கொண்ட சகுந்தலை முதலிய ஐந்து புண்ணியவதிகளின் சரிதங்கள் கொண்டது. விலை அணா 8. போதினிச் சந்தாதாரர்க்கு மாத்திரம் அணா 6.



# ஹாஸ்யத் துணுக்குகள்

## WIT AND HUMOUR

**மாஜிஸ்ட்ரேட்.**—குற்றவாளியே! எருக்கஞ்சேரி மிட்டேதாரின்மீது நீர் கல்லெறிந்ததாகக் குற்றப் பத்திரிகை வாசிக்கக் கேட்டீரே. அதற்கு நீர் என்ன சொல்லுகிறீர்?

**குற்றவாளி.**—சொல்லுவதென்ன? அவனைக் கொன்றாலும் பாவமில்லை.

**மாஜி.**—ஓய்! வீண்வார்த்தை வேண்டாம்.

**குற்ற.**—மன்னிக்கவேண்டும், இனி வீண் வார்த்தை பேசுவதில்லை.

**மாஜி.**—நீர் குற்றவாளியா, இல்லையா?

**குற்ற.**—நியாயாதிபதியாகிய தாங்களல்லவோ அதை விசாரித் தறியவேண்டும். வீண் வார்த்தை என்னத்துக்கு?

* * *

**நியாயாதிபதி.**—அம்மா! நீங்கள் வைத்தியருக்குப் பாக்கி கொடுக்கவேண்டியதுண்டா?

**பெண்பிள்ளை.**—ஐயா! திடீரென்று அவிந்துபோன என் கண்களை, சொஸ்தமாக்கினால் பணங் கொடுப்பதாகப் பேச்சு. வைத்தியர் சொஸ்தமாச்சு என்கிறார். நானும் வீடு முழுதுக்குஞ் சுற்றிப் பார்த்தேன். வீடுநிறைய நிரம்பிக் கிடந்த மேஜை நாற்காலி, பீரோ முதலான சாமான்களில் ஒன்றுகூட என் கண்ணுக்குத் தெரியவில்லை. என்னமா சொஸ்தமாச்சு இன்னு சொல்லரது?

**வைத்தியர்.**—வீட்டிலே ஏதாவது இருந்தானா கண்ணிலே படும்? எல்லாவற்றையுந் தான் மருந்துச் செலவுக்கு வித்துக் கொடுத்தாச்சே.

* * *

**மார்வாடி.**—என்னையா அநியாயமாயிருக்கு. உமக்கு இன்னாட்டு வட்டியில்லாமல் அஞ்சுரூபாய் நோட்டைத்தூக்கிக்குடுத்தேன். நாலே நாள்ளே அதையே திருப்பித்தறேன் இன்னு சொன்னீர். ஆச்சு மாசம் நாலாச்சே. இதான் நாணயமோ!

**கடனாளி.**—என்னையா நாணயக்கட்டையைக் கண்டுவிட்டீர்! என்னென்னமோ ஏகதேசமா பேசுகிறீமே? இதோ பார்த்நீரா இந்த டயரியை, பாரும். நீர் கொடுத்த அஞ்சு ரூபாய் நோட்டின் நம்பர் 10007. எத்தனையோ நோட்டு என் கைக்கு வந்து போய்க்கொண்டிருக்கிறது. இந்த நம்பர் நோட்டு இன்னும் என்கைக்கு வரவில்லை. வந்தவுடனே திருப்பிக் கொடுத்து விடுகிறேன். அதையே திருப்பித் தருகிறேன் என்று சொல்லிவிட்டு, பேச்சு மாறலாமா? அந்த நம்பர் நோட்டு வந்த தக்ஷணம் கொடுத்து விடுகிறேன்.

* * *

**வெள்ளையன்:**—அம்மா! மாடு என்னம்மா என்னெ கண்டுட்டு இப்படி வெறிக்கிது. குபீர், குபீர் இன்னு தாண்டக்கம் போடுதே.

**சேஷி.**—ஆமுடா, நோக்கு சொல்ல மறந்து போச்சே.—அடே வெள்ளையா! காது கேக்குதோ இல்லியோ—இத்தனெ நாளா நம்ப காப்பன் கறந்தான். சரி, சரி மாட்டை காப்ரா படுத்தாதே. மாடப்பெறேலே தாரு இருக்கு. சுருக்கா மோஞ்சிலே தடவிக் கொண்டு கற. ஆகட்டும் சீக்கிரம்.

* * *

**வித்வான் சம்சாரம்.**—ஏன்னா ஒங்களைத் தானே! நீங்களும், மலயாளம், திருவாங்கூர் கொச்சி, புதுக்கோட்டை, எல்லா ராஜாக்கள் கிட்டேயும், சம்மானம், சால்வை எல்லாம் வாங்கிக்கிண்டு வந்துாட்டயள். ஒங்களைவிட ஸமுஸ்கிரதத்துலே வித்வான்கடையாது இன்னாட்டும் பேரு வந்துடுத்து. ரெம்பநாளா எனக்கு ஒரு சந்தேகம். அது என்னன்னா **தோஷம்** என்கிற வார்த்தைக்கும் **சந்தோஷம்** என்கிற வார்தைக்கும் என்ன வித்தியாசம். செத்தே நீங்க சொல்லுங்கோளேன், பார்க்கலாம்.

**வித்வான்.**—அடியே! நீ கேட்டயே இந்தக் கேள்வி அயன் கேள்வி. இதுக்கு வியாக்கியானம் இல்லாமல் அர்த்தம் சொல்லி வித்தியாசத்தைச் சொல்லமுடியாது. கவனமாய்க் கேள். ஒன்னே நானா கணத்துலே புடிச்சுத் தள்ளினாக்கே அது **தோஷம்**. நீயா விழுந்தூட்டயோ எனக்கு **சந்தோஷம்**. சர்தானா? ரெண்டுக்கும் வித்தியாசம் புரிஞ்சுதா?

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS & NOTES

**தங்கநாணயம்.** இம்மாதம் 14 வ வெளிவந்த இந்தியா கெஜட்டின் விசேஷப் பிரசுரமொன்றில், கவர்ன்மெண்டார் மோஹரா வென்னும் தங்கநாணயம் அடித்துச் செலாவணியாக்குவதாக வெளியிட்டிருக்கின்றது. உருவத்திலும் இடையிலும் மாத்திலும் மற்றெல்லா விதத்திலும் இம்மொஹராக்கள் இப்போதைய பவுன்களுக்குச் சமானமாகவேயிருக்குமாம். இப்புது நாணயம் ரூ 15-க்குச் சமானமாகச் செலாவணி பெறும். இந்நாணயங்கள் இந்தியாவிலேயே அடிக்கப்படும். தற்காலம் யுத்த விஷயமாகக் கோதுமை வாங்குவதிலேற்படும் நிர்ப்பந்தங்களை ஒழிப்பதற்கெனவே இக்காசைக் கவர்ன்மெண்டார் அடிக்கிறாரெனினும், இந்தியரூபாய் மூலதனத்தைச் சமநிலைப்படுத்தவே இம்முறை அவர்களால் வழிபடப்பட்டதென்பது அறியத்தக்கது.

தங்க வெள்ளி நாணயங்களை யுருக்குவது பெருங் குற்றமெனினும், இதுவரை இந்திய ராஜாங்கத்தார் இவ்விஷயமாய்க் கண்டிப்பான முறைகளை அனுஷ்டிக்கவில்லை யாயினும், இப்பிரசுரத்தில் கவர்ன்மெண்டார், தங்க வெள்ளி நாணயங்களை உருக்குவதைத் தடுப்பதற்கெனக் கண்டிதமான முறைகளைக் கைக்கொள்வதாக எச்சரித்திருப்பதை யாவரும் கவனிக்கவேண்டும். ஆனால் அத்தகையமுறைகளை அனுஷ்டிக்கும்படியான பிரமேயமில்லாம லிருக்குமென அவர் எதிர்பார்ப்பதைப் பொது ஜனங்கள் கவனித்துத் தகுந்தவிதம் நடந்துகொள்வாரென்பது திண்ணம். அவ்வாறு செய்வதே தற்போது செய்யும் யுத்தத்திற்கு நம்மவர் செய்யக்கூடிய பேருதவியாகும்.

* * *

**யுத்தப்பட[illegible]** ஜர்மானிய வீரம் குறைந்து கொண்டேவருகிறது. அமெரிக்காவிலிருந்து துருப்புகள் வந்தது முதல்,ஜர்மானியர் பின்வாங்கிக்கொண்டே இருக்கின்றனர்.பிரான்ஸிலும் ஜர்மானியர் முன் னேற முடியவில்லை. ஆஸ்டிரியர்களோ பெருந் தோல்விய டைந்து வருகின்றனர். நேசக் கட்சியார்க்கு ஜயம் வருவதற் கிவை முதற் குறிகள்போலும்!

* *

**இந்தியக் கப்பற் றொழில்.** ம்யூனிஷன் போர்டாரால் தனியாகக் கப்பற்றொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தப்பட்டு, பிளான்கள் திட்டங்களெல்லாம் போடப்பட்டு,கப்பல்தொழில்வேலை இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக டைம்ஸ்பத்ரிகை வெளியிடுகிறது. முதல் முதல் 1,600 டன்வரைக் கனமுள்ள கப்பல்கள் இப்போது இச்சாலையில் செய்யப்படுகின்றன. மெஸபொடோமியாவில் வேலைக்குவேண்டி யிருக்கும் இருப்புக் கப்பல்களை முழுதும்தாமே உதவிசெய்ய இச்சாலை ஏற்றுக்கொள்ளுமெனக் கேள்வி.

* *

**மாட்டுச் சாணம்.** அனுபவபூர்வமாக மாட்டுச்சாணம் சிறந்த எருவெனவும், ஒவ்வொருமாட்டிடத்திருந்தும் 15 டன் இடை எரு ஒருவருஷத்தில் கிடைக்குமெனவும் மதிக்கப்படுகிறது. இவ்வளவு எரு வீணாக்கப்படுவது நியாயமா? மாட்டின் சாணம் பாதி மேயும்போதும், பாதி வேலை செய்யும்போதும், கவனிக்கப் படாமல் போய் விடுகிறது. மேலும் இவ்வுரத்தை அதிக நாள் படவைத்தால் அதன் சத்துக் குன்றிவிடும். ஐந்து மாதத்திற்கு மேற்பட்டால் சத்தில் பாதி போய்விடுகிறது. தரைமேல் உடனுக்குடனே பரப்பிவைப்பதே இவ்வெருவைக் காக்கும் விதமென்க.

* * *

**நடுத்தரப் பள்ளிக்கூடங்கள்** ஸ்தல ஆட்சிச் சங்கங்கள், நடுத்தரப்பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி விருத்திசெய்யும் விஷயமாகச் சில ஸௌகர்யங்கள் ஏற்படுத்தியிருப்பது கவனிக்கத் தகுந்தது. கவர்ன்மெண்டார், இம்முறை அனுஷ்டித்தது, மேல்வரும் நன்மையையே குறிக்குமென நம்புகிறோம்.

மேலும், நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகள் பெருங்கூட்டமாகச்சேர்க்கப்பட்டுக் கஷ்டப்படுவதைப்பற்றி ஜனங்களது கோரிக்கையைச் செவிகொடுத்துக் கவர்ன்மெண்டார் பலபோர்ட் பள்ளிக்கூடங்களிலும் புதிய வகுப்புகள் ஏற்படுத்தும்படியாகவும், குறைந்த வகுப்புகளைப் பூர்த்திசெய்யும்படியாகவும் உத்தா விட்டிருப்பது கவனிக்கத் தகுந்தது.

* *

16.10.50
NO2-16